தமிழரசு
1.4.1994 & 16.4.1994 ரூ.6

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

2/9 381

எனக்கு என்று ஒரு கணிப்பு உள்ளது. அதுதான் நான் மாவட்டங்களுக்குச் செல்லும்பொழுது, காண்கின்ற மக்களின் முகங்கள். அவற்றில் காணப்படும் ஆர்வம், அன்பு, மகிழ்ச்சி, ஆகிய உணர்வுகளே, எனக்கு உள்ள ஆதரவு என்ன என்பதைத் தெளிவாக எடுத்து உணர்த்துவதாக நான் கருதுகின்றேன். நான் ஒவ்வொரு முறை சுற்றுப் பயணம் செல்லும் பொழுதும், சந்திக்கின்ற மக்களின் கண்களில் வீசுகின்ற ஒளியினைக் கொண்டே, அவர்களின் நெஞ்சங்களை என்னால் எடைபோட முடிகிறது. நாளுக்கு நாள், நான் செல்லும் இடங்களில் எல்லாம், மக்களின் எழுச்சி கூடிக்கொண்டே வருவதை நான் காண்கின்றேன். நாங்கள் வளர்ந்துகொண்டு வருவதையும் நான் உணர்கின்றேன்.

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2025
பங்குனி: 18 மற்றும் சித்திரை-3
மலர்:24 இதழ்:19, 20
1-4-1994 மற்றும் 16-4-1994
விலை: ரூபாய் ஆறு

இந்த இதழில்...

மேதகு தமிழ்நாட்டு ஆளுநர் டாக்டர் எம்.சென்னாரெட்டி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை ... 2

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சட்டமன்றப் பேரவையில், மேதகு ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்து ஆற்றிய உரை ... 16

தஞ்சை மாவட்டம்: நலத்திட்ட உதவிகள் வழங்கி மாண்புமிகு முதல்வர் உரை... 53

நிதி நிலை அறிக்கை: 1994-95 — மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை .. 59

அரசு மனநலக் காப்பகம் 200-ஆம் ஆண்டு விழா: —மாண்புமிகு முதல்வர் உரை ... 109

நிதிநிலை அறிக்கை:1994-95
-சிறப்பிதழ்-

ஏழை எளியோர்க்கு முழுமையான பாதுகாப்பளிக்கும் அரசு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 16.3.1994 அன்று, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,

1994 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என்னுடைய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாடு, 1993 ஆம் ஆண்டில் அனைத்துத் துறைகளிலும் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது. ஏழை எளியோர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரின் வாழ்க்கைத் தரம் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஏற்றம் காண இம்முன்னேற்றம் உறுதுணை புரிந்துள்ளது. மேலும் பல வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம், தமிழ்நாடு அனைத்து வகையிலும் தொடர்ந்து சீராக முன்னேற்றம் அடையும் என்று நான் நம்புகிறேன்.

3. 1993 ஆம் ஆண்டில், சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பதற்கு உயரிய முன்னுரிமை அளிக்கப்பட்டது. இவ்வரசு, ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னர், இங்கு நிலவிய சட்டம்–ஒழுங்கு நிலைமையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். கண்டிப்பான விழிப்புப் பணி, உறுதியான மற்றும் கடுமையான நடவடிக்கை, இடைவிடாத கண்காணிப்பு, பல்வேறு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்த செயல்பாடு ஆகியவற்றின் பயனாக, வெளிநாட்டுப் போராளிகளினாலும், தீவிரவாதிகளினாலும் ஏற்பட்ட அச்சுறுத்தல் வேருடன் களையப்பட்டது. முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், நேரடியாக, நிலைமை குறித்து அடிக்கடி ஆய்வு செய்து வந்தார். முதலமைச்சர் அவர்களும், மத்திய உள்விவகார இணை அமைச்சர் அவர்களும் 1994ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடத்திய கூட்டு ஆய்வு, மத்திய, மாநில அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான பயனுள்ள நடவடிக்கையாக அமைந்தது. தமிழ்நாடு, அமைதியும் நல்லிணக்கமும் நிலவுகின்ற மாநிலம் என்ற பெருமைக்குரிய நற்பெயரைக் கட்டிகாத்து, மேலும் பெருமை சேர்ப்பதே அரசின் இடையறா முயற்சியாக இருக்க வேண்டும்.

4. இம் மாநிலத்தில் எழுந்த ஒவ்வொரு நிலைமையையும், தொடர்ந்து தன் கட்டுக்குள் கொண்டு வந்த மாநில காவல்துறையினர், சிறு சிறு நிலைமைகளைத் திறம்படக் கையாண்டனர். மாநில காவல் படையினர் புதிய கண்ணோட்டத்துடனும், குறிக்கோளுடனும் திறம்படச் செயல்படும் வகையில் இப்படையை முற்றிலும் நவீனமாக்கும் மாபெரும் பணியில் இவ்வரசு ஈடுபட்டுள்ளது. ரூ.80.45 கோடி செலவில், தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான விரிவானதொரு திட்டம் தயாரிக்கப்பட்டு, நிதியுதவி வேண்டி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. 1991–92 ஆம் ஆண்டில், மத்திய அரசு, ரூ.10 கோடி அளித்தபோதிலும், மேற்கொண்டும் நிதியுதவி எதுவும் கிடைக்கப் பெறவில்லை. ரூ.12 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய கடலோரப் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காக இவ்வரசு மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளது. இதற்கிடையில், ரூ.10 கோடி செலவில் காவல் படையை நவீனப்படுத்தும் மாநிலத் திட்டம் ஒன்று இவ்வாண்டில் தொடங்கப்பட்டுள்ளது. பரந்தமைந்த தகவல் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள், ஆயுதங்கள், பயிற்சி வசதிகள் ஆகியவற்றிற்கு வகை செய்யும் இப் பல்நோக்குத் திட்டம் காவல் படையின் செயல் திறனைப் பெரிதும் மேம்படுத்தியுள்ளது. 29 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில், 16 காவல் நிலையங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன. எஞ்சிய காவல் நிலையங்கள் 1994 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களுக்குள் செயல்படத் தொடங்கிவிடும். முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் கருத்தில் உதித்த புதியதொரு கோட்பாட்டின்படி அமைந்த அனைத்து மகளிர் காவல் நிலையம் மிகவும் வெற்றிகரமான முயற்சி என்பது மெய்ப்பிக்கப் பட்டுள்ளதுடன், பரவலான பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. இவ்வரசு, காவல் படையின் திறமையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும். அதே வேளையில், மனிதாபிமானத்துடனும், கருணையுடனும் பிரச்சினைகளை அணுகுவதற்கான பயிற்சிகளையும் அவர்களுக்கு அளிக்கும்.

5. இவ்வரசு நீதித்துறைப் பணி நிலைமைகளை மேம்படுத்துவதில் மிகவும் உறுதியாக உள்ளது. ரூ.7 கோடி மொத்த செலவில், சேலத்திலும், இராமநாதபுரத்திலும் புதிய நீதிமன்ற வளாகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீதித் துறைக்கு வேண்டிய இன்றியமையாத வசதிகளை செய்து கொடுப்பதற்கான ஒரு திட்டத்தை மாநிலத் திட்டத்தில் சேர்ப்பது குறித்த முயற்சிகளை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டார். இத்திட்டப் பணிக்கு தற்போது ஒப்புதல் கிடைத்துள்ளது என்பதையும், ரூ.3.66 கோடி செலவில் நீதித் துறைக்குத் தேவையான பல்வேறு வசதிகளை செய்து கொடுப்பதற்கான திட்டம் ஒன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் அறிவதில் அவை உறுப்பினர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைவர். மத்திய அரசு, 1994–95 ஆம் ஆண்டில், இதுபோன்றதொரு திட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் என்று நான் நம்புகிறேன். நீதித் துறை அதிகாரிகளுக்காக சென்னையில் ரூ.6.68 கோடி செலவில் பெரும் வீட்டுவசதி திட்டம் ஒன்று இவ்வாண்டில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் ரூ.1.5 கோடி செலவில் சென்னை உயர்நீதி மன்றத்தில் குளிர்சாதன வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. ஸ்ரீலங்கா கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து, முதலமைச்சர் அவர்கள், பிரதமர் அவர்களுக்கு குறைந்தது ஐந்து முறை கடிதம் எழுதியுள்ளார். இது மிகவும் கவலைஅளித்து வருகின்ற ஒரு பிரச்சினை ஆகும். அண்மையில் 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாளன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக மத்திய அரசு உடனடியாக ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்பு கொண்டு, அச்சம்பவத்தில் மரணமடைந்த, மீனவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்க வகை செய்ய வேண்டுமென, அவர் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து, மத்திய அரசு, ஸ்ரீலங்கா அரசுக்கு தன்னுடைய கவலையைத் தெரிவித்ததுடன், இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நிதானத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளதாகவும் 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாளன்று பாரதப் பிரதமர் பதிலளித்துள்ளார். முதலமைச்சர் அவர்கள் நேரடியாக நிலைமையைக் கண்காணித்து வருகிறார். மீனவர்கள்பால் எங்களுக்கு முழு பரிவு உண்டு. இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்குமாறு இவ்வரசு மத்திய அரசை தொடர்ந்து கேட்டுக் கொள்ளும்.

7. சமூக நீதி மேம்பாட்டுக்கு பெரிதும் தொடர்புடைய சமூகக் கொள்கையின் மற்றுமொரு முக்கிய அம்சம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்காக வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் இட ஒதுக்கீடு செய்யும் திட்டமாகும். தற்போதைய இட ஒதுக்கீட்டுக் கொள்கையை இவ்வரசு தொடர்ந்து செயல்படுத்த இயலும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தம் கொண்டு வருமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு இம்மாமன்றம் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9 ஆம் நாளன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத் தொடரில் ஒருமனதான தீர்மானம் நிறைவேற்றியதை அவை உறுப்பினர்கள் நினைவு கூரலாம். 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று முதலமைச்சர் அவர்கள் கூட்டிய அனைத்து கட்சிக் கூட்டத்தில், 31 B அல்லது 31 C பிரிவின்கீழ் சட்டம் இயற்றுவது உட்பட, தற்போதைய இட ஒதுக்கீடு திட்டத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி அரசைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த அவை, மாநில அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர் ஆகியோருக்கு மொத்தம் 69 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் புதிய வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. இச் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

8. தமிழ்நாட்டு மக்கள் மீது இந்தி ஒருபோதும் திணிக்கப்பட மாட்டாது என்று மறைந்த பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் உறுதி மொழி அளித்தார். நமது மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த இருமொழிக் கொள்கையை, இவ்வரசு தொடர்ந்து பின்பற்றி வருகிறது. மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும், 1981 ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் இந்த உறுதிமொழியை மீண்டும் உறுதிப்படுத்தினார். மத்திய அரசு இந்த உறுதி மொழியைக் கட்டிக் காக்கும் என நாம் நம்புகிறோம்.

9. தமிழ்நாட்டின் திரைப்படத் தொழில், ஆயிரக்கணக் கானவர்களுக்கு, வேலைவாய்ப்பு அளிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையீட்டாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஆகியோர்களுக்கிடையே 1993 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிக்கலான பிரச்சினை, திரைப்படத் தொழில் முழுவதையுமே ஸ்தம்பிக்கச் செய்ததுடன், தொழிலாளர்களின் பிழைப்புக்கும் பேரிடர் ஏற்படுத்தியது. முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடன் 1993 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாளன்று ஆறு மணி நேரத்திற்குத் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, பல உதவித் திட்டங்களை அறிவித்து, சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைத்து திரைப்படத் தொழிலை மீண்டும் தொடங்குவதற்கு அவர் உறுதுணையாகத் திகழ்ந்தார்.

10. தமிழ்நாட்டின் கோயில்களின் புனரமைப்பு, பராமரிப்பு, நிருவாகம் ஆகியவற்றில் ஒரு புதிய மறுமலர்ச்சி காணப்படுகிறது. 1991 ஆம் ஆண்டில், முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடங்கிய முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி, கோயில்களைப் புனரமைத்து, பராமரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 48 கோயில்களுக்கு, புனரமைப்புப் பணியை மேற்கொள்வதற்கும் 512 கோயில்களில் நாள் ஒன்றுக்கு குறைந்தது ஒருகால பூஜை நடத்துவதற்காக சிறப்பு நிதி ஏற்படுத்துவதற்கும் இந்நிதியிலிருந்து மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில், மேலும் 2500 கோயில்களில் அன்றாட பூஜை நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் இத்திட்டம் நீட்டிக்கப்படும். இம்மாநிலத்தின் தென்மாவட்டங்களில் தொடர்ந்து ஏற்பட்ட கோயில் திருட்டை ஒழிப்பதில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 227 கோயில்களில் திருட்டு நடந்ததற்குப் பொறுப்பான கும்பலை, மாநில காவல் துறை வெற்றிகரமாகக் கைது செய்துள்ளது. ஆக்கிரமிப்புகளைத் தடுக்கும் பொருட்டு, இஸ்லாமியர் இடுகாட்டைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கும், முள்கம்பி வேலி போடுவதற்கும் மானியமாக ரூ.5 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில், இந்நோக்கத்திற்காக அளிக்கப்பட்ட கடன்கள், மானியமாக மாற்றப்பட்டுள்ளன. மாநில வக்ஃபு வாரியத்திற்கு புத்துயிர் அளிக்கும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11. காவிரி ஆறு, தமிழ்நாட்டு மக்களின் உயிர்நாடியாகும். தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் அடிப்படைப் பாசனத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, கருநாடக அரசு குறிப்பிட்ட அளவு நீரைத் திறந்து விடுவதற்கு காவிரி நீர்த்தகராறு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு வகை செய்கிறது. நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி, தன் பொறுப்புகளை நிறைவேற்ற கருநாடக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருந்ததால், இப்பிரச்சினை குறித்து, மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கவும், நடுவர் மன்றத் தீர்ப்பை நிறைவேற்றுமாறு கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க வலியுறுத்தியும், முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 1993 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18 ஆம் நாளிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார். நெருக்கடியான இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டு மக்கள் முதலமைச்சர் அவர்களுக்கு அளித்த பேராதரவை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். மத்திய நீர் வளத்துறை அமைச்சர் அவர்கள் உண்ணாவிரதமிருந்த முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார். இடைக்காலத் தீர்ப்பைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு, மத்திய அரசு இரு குழுக்களை, அதாவது, செயற்பாட்டுக் குழு, கண்காணிப்புக் குழு ஆகியவற்றை அமைக்கும் என்று அவர் அறிவித்தார். இது தொடர்பாக மத்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. காவிரியாற்றில் போதுமான நீர் இருப்பது, மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு, குறிப்பாக வேளாண்மைத் துறைக்கு மிக இன்றியமையாததாகும். வரும் பருவத்தில் கருநாடக அரசு இடைக்காலத் தீர்ப்பின் விதி முறைகளைச் செயற்படுத்தும் என்று நாம் நம்புகிறோம்.

12. கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து, தமிழ்நாடு, புயல், வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தைத் தொடர்ந்து, ரூ.390.53 கோடி நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. எனினும், மத்திய அரசு, இடர் நிவாரண நிதியின் கீழ், உதவியாக ரூ.29.25 கோடி மட்டுமே அளித்தது. ஆனால், மாநில அரசுக்கு, ரூ.77.26 கோடி செலவு ஏற்பட்டது. மீண்டும், 1992 இல் ஏற்பட்ட கடுமையான புயல், வெள்ளத்தைத் தொடர்ந்து ரூ.530.40 கோடி நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. இடர் நிவாரண நிதியின்கீழ், முன் பணமாக வழங்கப்பட்ட ரூ.14.63 கோடி

உட்பட, ரூ.43.88 கோடி நிதியுதவி மட்டுமே வரப் பெற்றபோதிலும், மாநில அரசுக்கு மீண்டும் ரூ.94.97 கோடி செலவு ஏற்பட்டது. 1993 ஆம் ஆண்டில் நவம்பரிலும், டிசம்பரிலும் ஏற்பட்ட இரு கடும் புயலினால் இம் மாநிலம் பாதிக்கப்பட்டது; 277 பேர் உயிரிழந்தனர். 2.30 இலட்சம் ஹெக்டேரிலிருந்த வேளாண்மைப் பயிர்கள் சேதமடைந்தன. 5.32 இலட்சம் குடிசைகள் நாசமடைந்தன. சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள், பாசனப் பணிகள் ஆகியவற்றிற்குக் கடுமையான சேதங்கள் ஏற்பட்டன. முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனடியாக நேரில் சென்று பார்வையிட்டு, நிவாரண, மறுவாழ்வுப் பணிகளை நேரடியாக மேற்பார்வை செய்தார். ரூ.666 கோடி நிதியுதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. மாநில அரசு, நிவாரணப் பணிகளுக்காக ரூ.75.37 கோடி அனுமதித்தது. இடர் நிவாரண நிதியின்கீழ் மத்திய அரசிடமிருந்து வரப் பெற்ற உதவித் தொகை, 1994–95 ஆம் ஆண்டிற்குரிய தொகையிலிருந்து முன்னதாக வழங்கப்பட்ட ரூ.14.63 கோடி உட்பட ரூ.29.25 கோடியாகும். கடுமையான நிதி நெருக்கடியும், நிதி ஆதாரப் பற்றாக்குறையும் இருந்த போதிலும், அரசு, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது. குன்னூருக்குச் செல்லும் முக்கிய நெடுஞ்சாலையை எல்லைச் சாலைகள் நிறுவனம் பழுது பார்த்து சீரமைத்ததும், தேசிய நெடுஞ்சாலை 5 ல் குசத்தலை ஆற்றின் குறுக்கே உள்ள தற்காலிக இணைப்புப் (Bailey Bridge) பாலப் பணிகளை விரைவாக முடித்ததும், வெள்ள நிவாரணப் பணிகளை மிக விரைவாகவும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் மேற் கொண்டதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதியுதவி ஏதும் நமக்கு வரப் பெறாத போதிலும், வெள்ள சீரமைப்புப் பணிகளைப் பெருமளவில் நாம் மேற்கொண்டுள்ளோம். இடர் நிவாரண நிதி ஏற்பாடு நிறைவளிப்பதாய் இல்லை என்பது குறித்து இவ்வரசு பத்தாம் நிதிக்குழுவிற்கு விரிவான அறிக்கை அனுப்பியுள்ளது. 1995–96 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படும் முறை மேலும் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறோம்.

13. தொண்ணூறாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இம் மாநிலத்தில் திட்ட ஒதுக்கீட்டில் தேக்க நிலை நிலவியதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தமிழ் நாட்டை உயரியதொரு வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல இவ்வரசு சிறப்பு முயற்சிகளை மேற் கொண்டுள்ளது. 1991–92 ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1605 கோடியாக இருக்க, திட்ட சாதனையின் அளவு, அதைவிட ரூ.120 கோடி அதிகமாக, அதாவது ரூ.1725 கோடியாக இருந்தது; 1992–93 ஆண்டில் ஆன திட்டச் செலவு, ரூ.1935 கோடி ஆகும்; இது ஏற்பளிக்கப்பட்ட ரூ.1766 கோடி ஒதுக்கீட்டைவிட ரூ.169 கோடி அதிகமாகும். 1993–94 ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட ரூ.2101 கோடி ஒதுக்கீட்டு அளவினை எய்தி முடிக்கும் நிலையில் இம் மாநிலம் உள்ளது. 1994–95 ஆம் ஆண்டிற்காக, மிகவும் அதிகமான, அதாவது, ரூ.2750 கோடி திட்ட ஒதுக்கீட்டைப் பெறுவதில் முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வெற்றி பெற்றுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது, 1993–94 ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டைவிட 30.89 சதவீதம் அதிகமாகும். 1994–95 ஆம் ஆண்டிற்கான இந்த ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டின் காரணமாக, தமிழ் நாட்டின் நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டு அளவு, தேசிய நபர்வாரி சராசரி திட்ட ஒதுக்கீட்டு அளவைவிட கணிசமாக அதிகரிக்கும் என்பது மேலும் நிறைவு அளிப்பதாக இருக்கிறது. தமிழ் நாட்டின் நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டு அளவு, தேசிய சராசரி அளவிற்கும் குறைவாக இருந்த நிலையிலிருந்து மீண்டு, தேசிய சராசரி அளவையும் விஞ்சி, 3 ஆண்டு காலத்திற்குள் உயர் வளர்ச்சிப் பாதையில் கொண்டுவரப்பட்டிருப்பது உள்ளபடியே மிகச் சிறந்த சாதனை ஆகும். மிகப் பெரிய அளவில் நிதி நெருக்கடி நிலவிய சூழ்நிலையில், பல மாநிலங்கள், ஏற்கெனவே அவை ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவுகளைக் குறைக்க வேண்டியிருந்த நிலையில் இருந்தபோது, தமிழ் நாடு, தொடர்ந்து ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவினை மிஞ்சி, மற்ற மாநிலங்களுக் கெல்லாம் ஓர் ஒளிரும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. நமது மாநிலத்திற்குரிய 1994–95 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு பற்றி, மத்திய திட்டக் குழு துணைத் தலைவர் முதலமைச்சருடன் விவாதிக்கையில், இச்சாதனை சிறப்பான பாராட்டுதலைப் பெற்றுத்தந்தது.

14. 1993 ஆம் ஆண்டில் புயலாலும், வெள்ளத்தாலும் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டபோதிலும், இவ்வரசின் முழு ஆதரவுடன் உழவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, உணவு தானிய உற்பத்தி, முன் எப்போதுமில்லாத அளவாக 100 இலட்சம் டன்னை எட்டும் என்று நம்புகிறோம். 84.50 இலட்சம் டன் என்ற அரிசி உற்பத்தி அளவு இன்னொரு புதிய சாதனையாக இருக்கும். கரும்பு உற்பத்தி 251.10 இலட்சம் டன் ஆக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. பருத்தி உற்பத்தி அளவு, 6 இலட்சம் பொதிகளாக இருக்கும். எண்ணெய் வித்துக்களின் உற்பத்திகூட, 17 இலட்சம் டன் என்ற புதிய சாதனை அளவை எட்டும். மேலும், 2000 ஹெக்டேர் பரப்பில் எண்ணெய்ப் பனைகளை நடவு செய்திருப்பது, ஒரு புதிய சாதனை ஆகும். உயர் மதிப்புள்ள பயிர்களையும், தோட்டக்கலைப் பயிர்களையும் சாகுபடி செய்வதன் மூலம், வேளாண்மைப் பணியைப் பலதிறப்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே நேரத்தில், தரிசு நிலங்கள் பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்று பெரிய அளவில் தொடங்கப்பட்டுள்ளது. நெல் மற்றும் கரும்பு போன்ற விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு அதிக விலைகள் கிடைத்ததனால், உழவர்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

15. மின்சக்தித் துறையின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. தமிழ்நாட்டில் மின் வெட்டுகள் இல்லை; மகிழ்ச்சியான இந்த சூழ்நிலை தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் தொடங்க தொழிலதிபர்களுக்கு ஊக்கம் அளித்துள்ளது. இந்த நிலை எதிர்காலத்திலும் தொடர்ந்து நிலவுமாறு பார்த்துக் கொள்வதே இவ்வரசின் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையாகும். தமிழ்நாட்டின் மின் கட்டமைப்புத் திறனைக் கணிசமாகப் பெருக்க, பல புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜெயம்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்க மின் உற்பத்தித் திட்டத்தை, இணைத் துறையில் செயல்படுத்துவதற்குரிய ஒப்பந்தம் ஒன்று, 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முடிவுற்றது. இது, 1500 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட, ரூ.7500 கோடிக்கும் அதிகமான முதலீட்டுடன் கூடிய ஒரு மாபெரும் திட்டமாகும். விரிவான தொழில் நுட்ப சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்குரிய நிதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. 120 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட வாயுவை அடிப்படையாக கொண்ட பேசின் பாலம் மின் உற்பத்தித் திட்டம், 1994ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம், ஜப்பான் நாட்டின் 'வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதி' (OECF) நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் பெருகுவதோடு, சென்னைப் பகுதியில் மின் வழங்கலின் தரம் மேலும் சீரடையும். உலகிலேயே முதன் முதலாக, கடல் நீர் வெப்பத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவுவதற்கான உடன்படிக்கை முடிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும். ரூ.800 கோடி மதிப்பீட்டு செலவில், 100 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் வெற்றிபெறுமாயின், இது நம்மிடத்திலுள்ள பெரும் கடல்வளத்தைப் பயன்படுத்துவதில் குறிப்பிடத் தக்க சாதனையாக அமையும். மத்திய அரசின் ஒப்புதலின் அடிப்படையில், நெய்வேலியில், தனியார் துறையில், 250 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்று நிறுவப்பட உள்ளது. இம் மின்நிலையத்திற்கு, ஏறத்தாழ ரூ.1200 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 1997–ல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த பத்தாண்டில், மின்சக்தித் துறையில் தமிழ்நாடு தொடர்ந்து கணிசமான முன்னேற்றம் காணும் வகையில் முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல நடவடிக்கைகளை, அவை உறுப்பினர்கள் வரவேற்பர் என நான் உறுதியாக நம்புகிறேன். கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கு நிதியுதவி செய்வதில் பங்கேற்க இவ்வரசு ஏற்கெனவே ஒப்புக் கொண்டுள்ளது. இத் திட்டம் தொடர்பான பணிகளை தொடங்குவதைப் பற்றி, விரைவிலேயே ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டுமென இவ்வரசு வலியுறுத்தும்.

16. சிங்கப்பூருடனான வர்த்தக ஏற்பாடு குறித்த கோட்பாட்டுக்கு தூண்டுகோலாக அமையக்கூடிய "சென்னை தொழில் பூங்காத் திட்டம்" இவ்வரசால் கவனமாகத் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு பெரும் செயல் திட்டமாகும். இப்பூங்காத் திட்டம், பன்னாட்டு முதலீட்டாளர்களைக் கவர்கின்ற வகையில், மாநில அரசு, சிறப்பு நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டது. மத்திய அரசுடன் விவாதித்த பிறகு, புதிய தொழில் பூங்காத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய சில அம்சங்கள், திருத்தப்பட்டுள்ளன. திருத்தியமைக்கப்பட்ட அணுகுமுறையின் அடிப்படையில், சென்னை தொழில் பூங்காத் திட்டம் தொடங்கி வைக்கப்பட தற்போது தயார் நிலையில் உள்ளது. இத்திட்டத்தை விரைவில் தொடங்கி செயற்படுத்த இவ்வரசு முயற்சிக்கும். சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த மட்டில், கன்னியாகுமரி, திருநெல்வேலி–கட்டபொம்மன், தஞ்சாவூர், திருவண்ணாமலை–சம்புவராயர், செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங்களில் 5 புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதன் மூலம், தமிழ்நாட்டின் சாதனைக்கு மேலும் வலுவூட்ட முடியும். இப்புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள், மத்திய அரசுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டு விட்டன. மத்திய அரசு அறிவித்த புதிய திட்டத்தின்கீழ், கும்மிடிப்பூண்டியில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஒன்றினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரைவுப்படுத்தப்பட்ட தொழில் வளர்ச்சியை மேலும் வலுப்படுத்துவதற்காக, மாநில அளவில் எடுக்கப்பட வேண்டிய சீர்திருத்தப் பணிகளின் அவசியத்தை உணர்ந்து, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில், மாநில அளவில் தேவைப்படும் பல்வேறு ஒப்புதல்களை விரைவிலேயே அளிப்பது, சிறந்த தொழில் உறவு நிலை, போதிய அடிப்படை வசதிகள் ஆகியவை அடங்கும். தமிழ்நாட்டில் தொழில் உறவுகள் மிகச் சிறப்பாக உள்ளன. வேலை நிறுத்தம், கதவடைப்பு முதலிய காரணங்களினால் ஏற்படக்கூடிய மனித உழைப்பு நாட்களின் இழப்பு, 1992 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1993–ல் 15.56 சதவீதம் குறைந்துள்ளது. தொழில் உறவு நிலைமைகளில் தெளிவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நிதியுதவி நிறுவனங்கள் கடன் கொடுக்கும்போது, வட்டாரத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் வகையில், அனைத்திந்திய நிதியுதவி நிறுவனங்கள் வட்டார அடிப்படையில் சீரமைக்கப் பட வேண்டுமென தேசிய வளர்ச்சிக் குழுவில் முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார். தென்னகத்தில், இதுபோன்ற நிதியுதவி நிறுவனம் ஒன்றை நிறுவ. சென்னை மிகப் பொருத்தமானதோர் இடமாகும். மத்திய அரசு இக்கருத்தினை ஏற்றுக் கொள்ளுமென நம்பப்படுகிறது. தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து முதலமைச்சர் அவர்கள், திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளார். தென் மாநிலங்கள் இத்திட்டத்திற்கு கூட்டாக நிதியுதவி செய்யலாமென்றுகூட அவர் யோசனை தெரிவித்துள்ளார். இதற்குக் கொள்கையளவில் ஒப்புதலளிக்கப்பட்டதைத் தவிர, வேறு குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இத்திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டியதன் அவசியத்தை இவ்வரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

17. 1993 ஆம் ஆண்டின் பெரும்பகுதி, சென்னை மாநகரில் நிலவிய கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை பற்றி அவை உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஒவ்வொரு வாரமும் நிலைமையை நேரடியாக ஆய்வு செய்து, ஒருங்கிணைந்த செயல் திட்டங்களை செயற்படுத்த புதிய முயற்சிகளை மேற்கொண்டார். தண்ணீர்ப் பற்றாக்குறையின் கடுமையைத் தணிக்க, நடவடிக்கைகள் பெருமளவில் எடுக்கப்பட்டன. வழங்கப்படும் தண்ணீர் அளவினைப் பெருக்குவதற்கும், கிடைக்கின்ற தண்ணீரைக் கவனமாகத் திட்டமிட்ட முறையில் விநியோகிப்பதற்கும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கான முழுத் திட்டமும் ரூ.64 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. கடும் தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரணமாக ஒரு கட்டத்தில் சென்னையை விட்டே வெளியேற வேண்டிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருந்த சென்னைவாழ் மக்கள், கடுமையான தண்ணீர்

பிரச்சினையை மிகச் சிறந்த முறையில் சமாளித்த இவ்வரசை, குறிப்பாக, முதலமைச்சர் அவர்களை ஏகோபித்த குரலில் பாராட்டியுள்ளனர். முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு நிலவிய இதுபோன்ற தண்ணீர்ப் பற்றாக்குறை சென்னையில் இனிமேலும் ஏற்படாதிருக்கவும், இத்தகைய தண்ணீர்ப் பற்றாக்குறையின்போது, போதிய மாற்று ஆதாரத்திற்கு வகைசெய்யவும் வேண்டி, இவ்வரசு, புதிய வீராணம் திட்டத்தைத் தீட்டி, நிதியுதவிக்காக உலக வங்கிக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டம் தொடர்பான மதிப்பீட்டை, உலக வங்கி, 1994ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அயராத முயற்சிகளின் பயனாக, சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதிநீரைக் கொண்டுவரும் தெலுங்கு–கங்கை திட்டத்தைச் செயல்படுத்தும் பணியானது, ஆந்திரப் பிரதேச அரசால் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது. தெலுங்கு–கங்கை திட்டம், 1995 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் முடிவடையுமென ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சர் உறுதியளித்துள்ளார். இத் திட்டத்தோடு இணைந்ததும் ரூ.751 கோடி செலவாகக் கூடியதுமான குடிநீர் வழங்கல், விநியோகம் மற்றும் கழிவு நீரகற்றுதல் திட்டத்தையும் செயல்படுத்த உலக வங்கியின் உதவி கோரப்பட்டுள்ளது.

18. புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக, மத்திய அரசால் தொடங்கப்பட்ட பெரும் பொருளாதார மாற்றங்கள் பற்றி அவை உறுப்பினர்கள் அறிவர். நிலைப் படுத்தல் அமைப்பு ரீதியிலான சரிக்கட்டல் நடவடிக்கைகள், விலைவாசி வீதங்களில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. வழங்கல் விலைகளை அதிலும் குறிப்பாக, பொது விநியோக ஏற்பாட்டு முறையில் வழங்கப்படும் அரிசியின் வழங்கல் விலையையும், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையையும், நிலக்கரி சரக்குக் கட்டணவீதங்களையும் மத்திய அரசு அடிக்கடி அதிகரித்ததானது, மாநிலங்களுக்கு இக்கட்டானதொரு நிலைமையை உருவாக்கியுள்ளது. ஏழை எளிய மக்களை/காப்பதே எப்போதும் இவ்வரசின் தலையாய கடமையாக இருந்து வந்துள்ளது. மத்திய அரசு, அரிசியின் வழங்கல் விலையை அதிகரித்தபோது, அரிசியின் விலை வீதங்களைத் திருத்துவதைத் தவிர மாநில அரசிற்கு வேறு வழியில்லாமற் போயிற்று. பொது விநியோக ஏற்பாட்டு முறையில் வழங்கப்படும் அரிசியின் விலை வீதங்களைத் திருத்தியமைத்த பிறகும், நாட்டிலேயே தமிழ் நாட்டில் தான் அரிசி விலை மிகவும் குறைவாக உள்ளது. பொது விநியோக ஏற்பாட்டு முறையானது, விரிவாக்கப்பட்டு இத்திட்டத்தின் பயன் தமிழ் நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் 27 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இலட்சக் கணக்கான மக்களின் நீண்ட காலக் குறைகள், இத் திட்டத்தினால் களையப்பட்டுள்ளன. விலையை நிலைப்படுத்துவதற்கான இன்னொரு நடவடிக்கையாக, இவ்வரசு, 1993 ஆம் ஆண்டு மே திங்கள் 1 ஆம் நாளிலிருந்து ஏகபோகக் கொள்முதலை நீக்கி, நெல் மற்றும் அரிசியை தடையின்றி எடுத்துச் செல்வதற்கு அனுமதித்துள்ளது. அதே சமயத்தில், உறுதி செய்யப்பட்ட ஆதரவு விலை உழவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், இணைக் கொள்முதல் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் சீரான விலையில் அரிசி கிடைக்க இவை பெரிதும் உதவியுள்ளன.

19. புதிய பொருளாதாரக் கொள்கை கொண்டு வரப்பட்ட நிலையில், ஏழை எளியோர் மற்றும் ஒடுக்கப்பட்டோரைப் பாதுகாப்பதற்காக, விரிவான முனைப்புத் திட்டம் ஒன்றை/செயல்படுத்திய மாநிலங்களில் தமிழ்நாடு மாநிலமும் ஒன்றாகும். ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தலை அறிந்துள்ள இவ்வரசு, இதனைப் போக்க விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த விரிவான திட்ட ஏற்பாட்டின் கீழ், உணவுக்கு உத்தரவாதம், சத்துணவு, தொடக்கச் சுகாதார வசதி, மருந்துப் பொருள்கள், பொதுவான தொடக்கக் கல்வியைப் பெற சிறப்பான அடிப்படை வசதிகள், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், ஏழை எளியோருக்கு வேலைவாய்ப்பு உருவாக்குதல், அடிப்படைக் குடிநீர் வசதி, வீடு வசதியற்றோருக்கு வீட்டு வசதி மற்றும் இருப்பிட வசதி செய்து கொடுத்தல், தெரிந்தெடுக்கப்பட்ட நலிந்த பிரிவினர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டின்

சமூக நலப் பிரிவின் செலவினம், தேசிய சராசரி அளவிற்கும் மேல் கணிசமாக உயர்ந்துள்ளது. ஏழைஎளியோருக்கு குறைந்தளவு வாழ்க்கைத் தரத்தையாவது ஏற்படுத்திக் கொடுப்பது தமிழக அரசின் முக்கிய நோக்கமாகும், நிதி இடர்ப்பாடுகள் நிலவி வந்துள்ளபோதிலும், ஏழை எளியோர் நலனுக்காக ஒதுக்கப்படும் தொகைகள், குறைக்காமல் அதிகரிக்கப்படுவதை இவ்வரசு உறுதிப்படுத்தியுள்ளது. பெருமளவிலான பொருளாதார மாற்றங்களினால் ஏற்படக்கூடிய மோசமான பாதிப்புகளிலிருந்து ஏழை எளியோர் பெரும்பாலானோரின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் இவ்வரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

20. குழந்தை நலனுக்காக விரிவான திட்டம் வகுத்த முதல் மாநிலம் தமிழ் நாடாகும். முதலமைச்சர் அவர்கள், 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கி வைத்த, "டாக்டர் ஜெ. ஜெயலலிதா குழந்தைகள் நலனுக்கான 15 அம்சத் திட்டம்", குழந்தைகளின் ஒட்டு மொத்த நலனைக் கருத்திற்கொண்டு, ஆழ்ந்தாராய்ந்து வகுக்கப்பட்ட ஒரு முழுமையான திட்டமாகும். பல்வேறு திட்டங்களின் கீழ் பல துறைகளின் கூட்டு இடையீடுகள் ஒருங்கிணைந்த ஒரு திட்டமாகும். குறிப்பிட்ட இலக்கைச் சுட்டிக்காட்டி இவ்விலக்குகளை எய்த, மக்களை ஒருங்கு திரட்டுவதே இதன் நோக்கமாகும். குழந்தைகளின் உய்வு என்ற நிலையைக் கடந்து அவர்களின் திடகாத்திரமான வளர்ச்சி, மேம்பாட்டை நோக்கி தமிழ்நாடு பீடுநடை போடுகிறது. புதிய குழந்தை மேம்பாட்டுத் திட்டம். யூனிசெஃப், உலக வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து பாராட்டுதலைப் பெற்றுள்ளது. அமைதியின் தூதுவர் அன்னை தெரசா அவர்கள், பெண் குழந்தை, மகளிர், ஆதரவற்றோர், முதியோர் ஆகியோரின் நலனுக்காக இம் மாநில அரசு ஆற்றியுள்ள திறமையான பணிக்காக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைப் பாராட்டியுள்ளார். மேலும், அவர்கள் இருவருமே ஒரே நோக்கத்திற்காகப் பாடுபடுவதாகவும், ஒரே உன்னத இலட்சியத்தை எய்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். "தொட்டில் குழந்தை" திட்டத்திற்கு தன் மகிழ்ச்சியைத் தெரிவித்த அவர் இம்மாநிலத்தின் பெண் குழந்தைகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்று பாராட்டியுள்ளார். புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம் பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் 6 மாதம் முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இம்மாநிலம் முழுவதற்கும் 1994 ஆம் ஆண்டில் நீட்டிக்கப்படும்.

21. தமிழ்நாடு, குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் சிறப்பாக முன்னேறியுள்ளது. பிறப்பு வீதம் ஆயிரம் மக்கள் தொகைக்கு 21. இறப்பு வீதம் ஆயிரம் மக்கள் தொகைக்கு 9 என்னும் தேசிய இலக்கை கி.பி.2000 ஆம் ஆண்டுக்குள் அடையவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்க, இம்மாநிலத்தில் 1992 ஆம் ஆண்டிலேயே பிறப்புவீதம் ஆயிரத்திற்கு 20 ஆகவும் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 6.8 ஆகவும் குறைந்திருப்பது மன நிறைவளிப்பதாக உள்ளது. மீண்டும். குழந்தை இறப்பு வீதம் கி.பி. 2000 க்குள் ஆயிரம் பிறப்புகளுக்கு 60 ஆக குறைக்கப்படவேண்டும் என்று தேசிய இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்க. தமிழ் நாடு 1992 ஆம் ஆண்டிலேயே இவ்வீதத்தை ஆயிரத்திற்கு 48 ஆக குறைத்துள்ளது. சுருக்கமாக சொல்வதனால், கி.பி..2000 ஆம் ஆண்டு வாக்கில் எய்தப்படவேண்டிய தேசிய இலக்கை தமிழ்நாடு ஏற்கனவே மிஞ்சிவிட்டது. நிகர பிறப்பு விகிதம் ஒன்றாக குறைக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் கிடைத்த வெற்றியும் சுகாதார தரங்களில் ஏற்பட்ட முன்னேற்றமும் உண்மையிலேயே பாராட்டத் தக்கதாகும். இத்தகைய குறிப்பிடத் தக்க சாதனையை எய்தியதன் மூலம் தமிழ் நாடு, மற்ற மாநிலங்களுக்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. மகளிர், குழந்தைகளுக்காக சுகாதார முகாம் நடத்தும் புதிய திட்டத்தின் கீழ், இதுவரை 1315 சுகாதார முகாம்கள் நடத்தப் பட்டுள்ளன. இம் முகாம்கள் குறிப்பாக கிராமப்பகுதிகளில் மகளிர், குழந்தைகளின் நோய்க்கான காரணங்களை அறிவதிலும், சிகிச்சையளிப்பதிலும் குறிப்பிடத்தக்க சாதனையை எய்தியுள்ளன. தொடக்க சுகாதார நிலையங்களுக்குத் தேவையான அனைத்து துணைப் பணிகளுக்கும் வகை செய்ததன்மூலம் அவை தரமுள்ளவையாக மேம்படுத்தப் பட்டுள்ளன. தொடக்க சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர்கள் இருப்பதை உறுதி செய்வதற்கு தனி முயற்சிகள் எடுக்கப் பட்டுள்ளன.

22. தேசிய இலக்கிற்கான காலக்கெடுவிற்கு முன்னதாக, 1998 ஆம் ஆண்டிற்குள்ளாகவே "அனைவருக்கும் கல்வி" என்ற இலக்கை எய்துவதற்கான திட்டத்தை இவ்வரசு வகுத்துள்ளது. இத்திட்டம் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதையும், இடையில் படிப்பை விட்டுவிடாமல் எட்டாம் வகுப்பு வரை அனைவரும் கல்வியைத் தொடர வேண்டும் என்பதையும் உறுதி செய்ய விழைவதால், இது ஒரு பெரும் பொறுப்பான பணியாகும். இளம் குழந்தைகளின் நலன், அனைவருக்கும் தொடக்கக் கல்வி, படிப்பறிவின்மையைக் குறைத்தல், கல்வியைத் தொடருவதற்கு வகைசெய்தல் போன்ற பணிகளை விரிவு படுத்தி மேம்படுத்தும் விரிவான திட்டமொன்று வகுக்கப் பட்டுள்ளது. இம் மகத்தான சமூக நலத்திட்டத்தில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வேலையற்ற இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்விளைஞர்கள், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி விட்ட குழந்தைகளுக்கு வகுப்புகளை நடத்தும் முக்கியப் பணியில் ஈடுபடுவர். மேலும், குடியினால் விளையும் கேடுகளை மக்களிடையே பரப்பும் பணியும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னையில், அறிவியல் நகரம் ஒன்று அமைக்கும் புதிய திட்டமொன்றும் தொடங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், சென்னை மாநகரில் செயல்படுகிற பல்வேறு அறிவியல் நிறுவனங்கள், பல பொதுவான திட்டங்களைச் செயற்படுத்தும் பணியில் ஒன்றாக ஈடுபடுத்தப் படும். அறிவியல் கருத்துக்களை கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை ஊக்குவிக்கவும், அறிவியல் துறையில் ஆராய்ச்சிப் பணியைப் பெருக்கவும் முயற்சி மேற்கொள்ளப் படும். அறிவியல் நகர அதிகாரி ஒருவர். இத்திட்டத்தை மேற்கொள்வார். உயர்கல்வியில் சிறந்த ஒருங்கிணைப்பு செயல்பாட்டுக்கு உறுதி செய்ய, முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களினால், 1993 மார்ச் திங்களில், மாநில உயர்கல்வி மன்றம் தொடங்கப்பட்டது.

23. ஏழை மக்களுக்கு இலவச சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டம், ஏழைகளின் நலனைக் காப்பதுடன் கைத்தறி நெசவாளர்களுக்கு ஆதரவாகவும் செயல்பட்டு, இரு நோக்கங்களையும் எய்தியுள்ளது. நிதி இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டு, 62.99 இலட்சம் மகளிருக்கு இலவச சேலைகளும், 62.67 இலட்சம் ஆடவருக்கு இலவச வேட்டிகளும் வழங்கப் பட்டுள்ளன.

24. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய அம்சம், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சியேயாகும். ஆதி திராவிடர்-பழங்குடியினருக்கான சிறப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் தமிழ் நாடு முன்னணியில் உள்ளது. சமூக நீதிக்காகப் பாடுபட்ட அஞ்சா நெஞ்சம் கொண்ட டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களின் நினைவாக சென்னையில், பொருத்தமான நினைவகம் ஒன்று கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. தொடக்கத்தில், இவ்வரங்கம் கட்ட ரூ. 1 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்பட்டது. இந்த நினைவகத்திற்கான விரிவான திட்ட வரைபடங்கள், வடிவமைப்புகள் முதலியன தற்போது ரூ. 5 கோடி செலவிற்கு தயாரிக்கப் பட்டுள்ளன. டாக்டர் பி. ஆர். அம்பேத்கார். பெயரில் புதிய பேருந்து போக்கு வரத்துக் கழகமொன்று தொடங்கப் பட்டுள்ளது. கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில், ஆதி திராவிட வகுப்பினரிடையே தொழில் முனைவோரை உருவாக்குவதற்கு, இருபெரும் தொழிற் பேட்டைகளை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பின்னலாடைகள் தயாரிப்பதற்காக மேற்சொன்ன தொழிற்பேட்டைகளில் 200 பிரிவுகள் அமைக்கப்படும். இப்பெருந்திட்டம், ஆதி திராவிடர்-பழங்குடியினரிடையே, தற்சார்புடைய தொழில் முனைவோரின் புதிய தலைமுறையினரை உருவாக்கும்.

25. பண்டைய தமிழ்ப் பண்பாட்டுக்கும், கல்வி வளர்ச்சிக்கும் புகழ்பெற்ற தஞ்சை மாநகரில், 1995 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டினை நடத்த முடிவு செய்துள்ளதாக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இம்மாநாடு, தமிழ் நாட்டில் 1981 ஆம் ஆண்டில் கடைசியாக நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்பும், கலை முக்கியத்துவமும் வாய்ந்த தஞ்சை மாநகர், தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. மிகச் சிறப்பாகவும், நினைவு கூரத்தக்க வகையிலும் இம்மாநாட்டினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

26. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் முயற்சியாலும், உறுதியாலும் சென்னையில் புதிய ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் ரூ.40 கோடி செலவில், மிகக் குறுகிய கால அளவில் அதாவது ஏழரைத் திங்கள் கால அளவில் கட்டி முடிக்கப்பட்டது என்பதை அவை உறுப்பினர்கள் அறிவர். ஒளிர்கிற பிரம்மாண்டமான இவ்விளையாட்டரங்கம், 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் பன்னாட்டு அழைப்பு தடகளப் போட்டிகளும், 33 ஆம் திறந்த வெளி தேசிய தடகளப் போட்டி விளையாட்டுகளும் நடைபெறும் களமாக அமைந்தது. இத்தடகளப் போட்டியில் 31 நாடுகள் பங்கேற்றன. இப்போட்டியில் பங்கேற்க, 91 பன்னாட்டு தடகள வீரர்களும், 900 ஏனைய விளையாட்டு வீரர்களும் வருகை புரிந்தனர். விளையாட்டுகளுக்கு, இவ்வரசு அளித்தது போன்று முன் எப்போதுமே இத்துணை முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. அண்மையில் புனேயில் நடைபெற்ற தேசிய விளையாட்டுகளில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகித்துள்ளது என்பது வருங்காலத்திற்கு ஒரு நற்சகுனமாக அமைந்துள்ளது. 1995 டிசம்பர் திங்களில் சென்னையில், தெற்கு ஆசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப் பட்டு வருகின்றன. விளையாட்டுகள் நடத்துவதற்கு இயலும் வகையில், போட்டி விளையாட்டு வசதிகளையும்; ஏனைய அடிப்படை வசதிகளையும் மேம்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்று வகுக்கப் பட்டுள்ளது. பெருமைக்குரிய தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக இத்திட்டம், தக்க சமயத்தில் செயற் படுத்தப்படும்.

27. மிகச் சிறந்த நிருவாகச் செயல்பாட்டிற்கு இவ்வரசு, அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடு அநேக பரிசுகளை ஈட்டித்தந்துள்ளது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பாராட்டத் தக்க பணியை, நான் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். அவை, 1992–93 ஆம் ஆண்டிலும், 1993–94 ஆம் ஆண்டிலும் பரிசுகளை வென்றுள்ளன. அவை, பல்வேறு சாதனைகளுக்கான தேசிய அளவிலான 7 பரிசுகளில் 5 பரிசுகளைப் பெற்றுள்ளன. சமூக நலத்திட்டத்தின் கீழ், உடல் ஊனமுற்றோருக்கும், மகளிருக்கும் வேலை வாய்ப்பளித்ததற்காகவும், குழந்தைகள் நலப்பணிகளை மேற்கொண்டதற்காகவும், தமிழ்நாடு 22 பரிசுகளை வென்றுள்ளது. வேளாண்மை விரிவாக்கப் பணியிலும், உயிரினக் கழிவு உரங்கள் தயாரிப்புப் பணியிலும் மிகச் சிறந்த சாதனை புரிந்ததற்காக, மத்திய அரசும், தேசிய உற்பத்திப் பணிக்குழுவும் அளித்த தகுதிச் சான்றிதழ்களை வேளாண்மைத் துறை பெற்றுள்ளது. கிரானைட் கற்கள் ஏற்றுமதிக்காக தமிழ்நாடு கனிம நிறுவனம், சிறப்பு ஏற்றுமதிப் பரிசு ஒன்றைப் பெற்றுள்ளது. பல்வேறு அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் சாதனைகள் அனைத்து வகையிலும் சிறந்து விளங்கச் செய்வதும், அவை தேசிய அளவில், மேன்மேலும் பல வெற்றி வாகைகளைச் சூடும் வகையிலும் அவற்றை ஊக்குவிப்பதுமே இவ்வரசின் குறிக்கோளாக இருக்கும்.

28. இவ்வரசு, ஏழை எளியோருக்கு பல்வேறு நன்மைகளைச் செய்துள்ளது. இவை, உரியவர்களைச் சென்றடைய வேண்டுமென்பதை உறுதி செய்வதே மிகமுக்கியமானதாகும். மக்களாட்சியில், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் இயன்ற விரைவில் பரிசீலிக்கப்பட்டு, சாத்தியமான இடங்களில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்வதும் அவசியமானதாகும். 1992 ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்தே, முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னையில் பொதுமக்களிடமிருந்து நேரடியாகவே மனுக்களைப் பெற்று அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட தேதிகளில் எண்ணற்ற மக்களுக்கு உதவிகள் வழங்கினார். இரண்டாம் நிலையில், முதலமைச்சர் அவர்கள் மாவட்டத் தலைமையிடங்களுக்குச் சென்று, ஏழை எளியோருக்கு நேரடியாகவே உதவிகளை நல்க முடிவு செய்தார். முதலமைச்சர் அவர்கள் இதுவரை, 13 மாவட்டங்களுக்குச் சென்றுள்ளார். ரூ.201 கோடி மதிப்புள்ள பல்வேறு உதவிகள் 3,00,377 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்த இத் திட்டம், இவ்வரசின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். பொதுமக்களின் குறைகளை தக்க நேரத்தில் களைவதோடு, பயன்கள் உரியவர்களைச் சென்றடைவதை இந்த ஏற்பாடு உறுதிசெய்துள்ளது.

29. அடிப்படை நிலையிலுள்ள ஜனநாயக அமைப்புகள் சரிவர இயங்க வேண்டுமென்பது அரசியலமைப்புச் சட்ட வழிகாட்டிக் கோட்பாடுகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நிலைகளில், சிறந்த, திறமையான உள்ளாட்சி அமைப்புகளின் நீண்ட வரலாறு உள்ளது. நாட்டின் பல்வேறு மாநிலங்களிலுள்ள உள்ளாட்சி அமைப்பு குறித்து வழிகாட்ட நீக்கு போக்கான அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டியது அவசியமென்று மாநில அரசு எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 73 மற்றும் 74 ஆம் திருத்தங்கள் மாநிலங்களில் பல்வேறு நிலைகளிலுள்ள ஜனநாயக அமைப்புகளின் செயல்பாட்டினை ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை அமைப்பு முறைக்குத் தற்போது வகைசெய்துள்ளன. 73 மற்றும் 74 ஆம் திருத்தங்களின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய தேவையான சட்டம், சட்டப்பேரவையின் இந்த வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுமென்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

30. இந்த அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் குறித்து 1992 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் நாளன்று அறிவித்தது. எனினும், 1992 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், தேர்தல்கள் நடத்துவதற்கு உயர்நீதி மன்றம் தடை விதித்தது. இவ்வழக்குகள் உயர்நீதிமன்றத்தின் ஈராயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த உடனேயே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு இவ்வரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

31. தமிழ்நாடு, பொருளாதார வளர்ச்சியில் முக்கியமானதொரு நிலையை எட்டியுள்ளது. மத்திய அரசு அறிவித்த தாராளமயமான கொள்கை, நடவடிக்கைகள் ஆகியவற்றின் தாக்கம் மாநிலங்களில் தென்படத் தொடங்கியுள்ளது. இத்தாராளமயமாக்கலின் பயன்கள், மாநிலத்தை சென்றடைவதை உறுதி செய்வதுடன், மக்களின் வாழ்க்கைத்தரம் உயருவதற்கும் தமிழக அரசு உதவிசெய்யும். மாநிலத்தின் அமைதியான, சீரான வளர்ச்சிக்கு சட்டம்–ஒழுங்கைத் தொடர்ந்து பராமரிப்பது மிக முக்கியம் என்பதால், இவ்வரசு மிகவும் மன நிறைவளிக்கும் முறையில், சட்டம்–ஒழுங்கைத் தொடர்ந்து பராமரிக்கும்.

32. புதிய வளர்ந்துவரும் பெரும் பொருளாதாரக் கூறுகளோடு, இத்தனை ஆண்டுகளாக, எதிர்நோக்கி வந்த மிகவும் கடுமையான நிதி நெருக்கடி நிலையிலும் இவ்வரசு, ஏழை எளிய மக்களுக்கும், உதவி தேவைப்படுகின்ற நிலையில் உள்ளவர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு அளித்து வந்துள்ளது. ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுக்கு மிகையாக செலவழித்தது, தொடர்ந்து ஏற்பட்ட கடுமையான நிதி நிலையை சாமர்த்தியமாகச் சமாளித்தது, சட்டம்–ஒழுங்கு நிலைமையை மனநிறைவளிக்கத் தக்கவகையில் பேணிக் காத்தது ஆகியவற்றுடன், பெரும் பொருளாதார வளர்ச்சியினால் ஏற்பட்ட முக்கிய பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் அரசு துணிவுடன் சமாளித்துள்ளது. தமிழ்நாடு புதிய திட்டங்கள், திட்டப்பணிகள் ஆகியவற்றை வெற்றிகரமாகச் செயற்படுத்தியதற்காக உலக வங்கி, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், யூனிசெப் போன்ற பல பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து சிறந்த பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

33. இம் மாநிலத்தில் அமைதியும் நல்லிணக்கமும் வழுவின்றி பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய இவ்வாக மிக உன்னிப்பான கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும். தேசிய முதலீடுகளில், தனக்குரிய உரிமையான பங்கையும், மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதி ஆதாரங்களைப் பெறுவதிலும், அதே நேரத்தில் தேசியத் திட்டப் பணிகளில் முழு அளவில் பங்கேற்பதிலும் இவ்வாக உயரிய முக்கியத்துவம் அளிக்கும்.

34. பல துறைகளில், துணிவுடனும், மிகுந்த கற்பனைத் திறனுடனும் இவ்வரசு எடுத்த நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். வளர்ச்சிக்கும், ஏழை மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் வகைசெய்யும், விரைவான பொருளாதார மேம்பாட்டிற்கு தமிழ்நாடு ஒரு முன்மாதிரியாகத் திகழ்வதை உறுதி செய்ய, நாம் அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்வோம். இம் மாமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள், எதிர்காலத்தில் மாநிலத்தை வளமடையச் செய்வதற்குப் பெரிதும் உதவுமென்று நான் முற்றிலுமாக நம்புகிறேன். இம்மாமன்றத்தில் நீங்கள் முன் வைக்கும் விவாதங்கள் சமநிலையுடையனவாகவும், ஆக்க பூர்வமானவையாகவும், சீரிய நோக்குடையனவாகவும் அமையும் என்பதிலும் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

வணக்கம்.

பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டம்

ஆதித்திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற் காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் பழங்குடியினர் மேம்பாட்டு துணைத் திட்டமும் அடங்கும்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் வனப் பிரிவின் கீழ் 1993-94-ஆம் ஆண்டில் கொல்லிமலை, ஜவ்வாது மலை, சித்தேரி மலை, கல்ராயன் மலை மற்றும் பச்சைமலை ஆகிய பகுதிகளில் சந்தனமரம், புளியமரம், பலாமரம், மூங்கில் மரம், கடுக்காய் மரம், தேக்கு மரம் போன்ற மரவகைக் கன்றுகளை நட்டு காடு வளர்க்கவும் சாலையோர மரங்களை ஏற்படுத்த வும் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்காகவும், மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர்வளச் செலவு ஆகியவற்றுக்காகவும் மொத்தம் ரூ.149.25 இலட்சம் தொகை ஆதி திராவிட நலத்துறை மூலம் ஒதுக்கீடு ஆணையிட்டு உள்ளார்.

இதன்படி சுமார் 317 எக்டேர் நிலப்பரப்பில், மேலே குறிப்பிட்ட மரக்கன்றுகள் புதியதாக நடப்படும். 45 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலையோர மரங்கள் நடப்படும். இதற்கு ரூ.35 இலட்சம் செலவிடப்படும்.

சேலம் மாவட்டம் கொல்லி மலை, பச்சை மலை, கல்ராயன் மலை, அருணூத்து மலை ஆகிய பகுதிகளில் ஓடையின் குறுக்கே 4 சிறிய நீர்த் தேக்கங்களும், 2 கசிவுநீர்க் குட்டைகளும் ஏற்படுத்தப்படும். இதற்காக ரூ.2 இலட்சம் செலவிடப்படும். வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், ஏலகிரி மலையில் வனவிலங்குகளின் குடிநீர்த் தேவைக்காக ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு குளம் அமைக்கப்படும், மீதமுள்ள தொகை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்காகவும், நீர்வளச் செலவுக் காகவும் பயன்படுத்தப்படும்.

சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்



இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)
1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு
2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்
4 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமி ஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்
3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா
10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்
600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE)
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்
- 1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) 1% ஊக்கத்தொகை
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
- அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

மேலும் 2%

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003. தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை, சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர், சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை, சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்து

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

ஆற்றிய உரை (22.3.1994)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மக்கள் நலன் போற்றும் எங்களது அரசின் சார்பாக, பாரம்பரியம் மிக்க இந்தப் பேரவையில், மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது, கடந்த 4 நாட்களாக விவாதம் நடைபெற்றுள்ளது. இந்த விவாதத்தில் பங்கேற்று, சீரிய கருத்துக்கள் பலவற்றை எடுத்துரைத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், எனது உளமார்ந்த நன்றியினை முதற்கண் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

$5\frac{1}{2}$ கோடி அன்புள்ளங்களின் அமோக ஆதரவோடு, தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற எங்களது அரசு, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை, விரைந்து நிறைவேற்றி வருகின்ற இவ்வேளையில், மக்களின் ஆதரவு இந்த அரசுக்குப் பல்கிப் பெருகி வருகின்ற இவ்வேளையில், நிகழ்த்தப்பட்டுள்ள மேதகு ஆளுநர் அவர்களின் உரை, தமிழகத்துப் பெருமக்களுக்கு, எங்களது அரசின் இலட்சியங்களையும், கொள்கைகளையும், மற்றுமோர் முறை, எழுச்சியோடு எடுத்தியம்பும் நல்வாய்ப்பினைப் பெற்று விளங்குவதை எண்ணி, நான் அகமகிழ்கிறேன்.

'மக்கள் சக்தி' என்ற ஒன்றினை மட்டுமே, உந்து சக்தியாகக் கொண்டு, கடந்த $2\frac{3}{4}$ ஆண்டுகளாக இயங்கிவருகின்ற, எங்களது அரசின் போற்றத்தக்க செயல்பாடுகளையும், சாதனைகளையும் மேற்கொள்ள இருக்கும் பணிகளையும், கோடிட்டுக் காட்டும் வண்ணம், இந்த ஆண்டு மேதகு ஆளுநர் அவர்களின் உரை அமைந்துள்ளது.

மக்களாட்சித் தத்துவத்தின் மாட்சிமை என்றென்றும் போற்றப்படும் பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தமிழகம், நல்லவைகளை எப்போதும் போற்றி மகிழும்; அல்லவைகளை விரைந்து அகற்றும் என்பதை, சரித்திரம் நமக்குப் பலமுறை எடுத்துக் கூறியுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், ஆளுநர் உரையின் மீது, தங்களுடைய அறிவார்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நடுநிலையாளர்களை எப்போதுமே, அதிக அளவில் பெற்று விளங்கும், பெருமையைக் கொண்ட இந்தப் பேரவையில், எங்களது கொள்கைகள் வரவேற்புகளையும் பெற்றன; வசை மொழிகளையும் பெற்றன! எங்களது அரசின் செயல்பாடுகளுக்குப் பாராட்டுக்களும் வழங்கப்பட்டன; வெற்று ஏச்சுக்களும் அளிக்கப்பட்டன; கனிவோடு பூக்கள் மழையும் பெய்தன; கண்டனக் கணைகளும் தொடுக்கப்பட்டன; நல்ல செயல்களை நாடு என்றென்றும் போற்றும், என்பதை நாங்கள் அறிவோம். பாராட்டுகளும், புகழுரைகளும், எங்களை எந்த அளவிற்கு நிலைகுலைய வைக்காதோ அதேபோல, நிந்தனைகளும், ஏச்சுக்களும், எங்கள் மனவுறுதியை மாற்றி விடாது. மாறாக, மேலும் திண்மையைத் தருகின்ற உரமாக அமையும். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று, அனுதினமும், அன்புக்குரிய தமிழகத்துப் பெருமக்களின் நல்வாழ்வுக்காக, உழைத்து வரும் எங்களது அரசின் செயல்பாடுகளைப் பாராட்டி மகிழ்ந்தவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது பணி இன்னும் சிறக்கவேண்டும் என்பதற்காக, எங்களது நிறைகளைப் புகழ்ந்து குறைகளைச் சுட்டிக் காட்டிய நடுநிலையாளர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநரின் உரையில், புதியதாக ஒன்றுமே இல்லையே, என்று அங்கலாய்ப்பவர்களுக்கும் எங்கள் அரசின் செயல்பாடுகளை குறை கூறுவதையே, தங்களது முழு நேரத் தொழிலாக்கிக் கொண்டு பணியாற்றுபவர்களுக்கும், நன்மை செய்யும் வண்ணம் தான், மேதகு ஆளுநரின் உரையில், எடுத்துரைக்கப்பட்ட எங்கள் கொள்கை அமைந்துள்ளது என்பதை, ஆணித்தரமாக எங்களால் கூற முடியும்.

இங்கிலாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் Edward Stanley என்பவர் சொல்லியிருக்கிறார்.

"The Duty of an Opposition is very simple...
to oppose everything, and propose nothing."

அதாவது, எதிர்க்கட்சியினர் கடமை என்பது மிக மிக எளிதானது; எளிமையானது. என்ன அந்தக் கடமை? எல்லாவற்றையும் எதிர்ப்பது. அரசு எதைச் செய்தாலும் கண்மூடித்தனமாக எதிர்ப்பது; அதே சமயத்தில் ஆக்கப்பூர்வமான எதையும் சொல்லாதிருப்பது.

இப்படிச் சொன்னவர் 1852 லும், பின்னர், 1858 முதல் 1859 வரையிலும், மீண்டும் 1866 முதல் 1868 வரையிலும் மூன்று முறை இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர். இது நமக்கு எதைக் காட்டுகிறது? உலகத்தில் உள்ள எந்த நாடாக இருந்தாலும் சரித்திரத்தில் எந்தக் காலகட்டமாக இருந்தாலும், அரசியல் ஒன்றுதான்; அரசியல் வாதிகளும் ஒன்றுதான்.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னால் இங்கிலாந்து நாட்டு அரசியலில் என்ன சூழ்நிலை நிலவியதோ, அதே சூழ்நிலைதான் இன்று நம் நாட்டிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டு அரசியலிலும் நிலவுகின்றது. எனவே நாம் எதைச் செய்தாலும், எத்தனைத் திறமையாகச் செயல்பட்டாலும், நம்மைப் பாராட்டாமல் எதிர்க்கட்சியினர் குறை கூறுகிறார்களே என்று ஆளும் கட்சியினர் எவரும் வருத்தமோ, வேதனையோ கொள்ளத்தேவையில்லை. எதிர்க்கட்சியின்பணி எதிர்ப்பது தான் என்ற உலகளாவிய அளவில் காலம் காலமாக இருந்து வந்துள்ள கொள்கையின் அடிப்படையில்தான் இவர்களும் செயல் படுகிறார்கள் என்றுதான் நாம் இதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார், 'சிந்தனையின் சிகரம்' பேறிஞர் பெருந்தகை அண்ணா, 'மனித நேயப் புனிதர்' புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகியோர் வகுத்துச் சென்ற நல்ல பாதையில், நாளும் வெற்றி நடை போடும் எங்களது அரசு, அவர்கள் காட்டிச் சென்ற வழியை என்றென்றும் கடைப்பிடித்துத் தமிழகத்தின் புகழ், தரணி எங்கும், என்றென்றும், ஒளி வீசிடும் வண்ணம் செயல்படும், என்ற உறுதிமொழியை, என் அன்புக்குரிய தமிழகத்துப் பெருமக்களுக்கு, இந்த மாமன்றத்தின் வாயிலாக வழங்கி, மேதகு ஆளுநருடைய உரையின் மீதான, என்னுடைய பதிலுரையைப் பேரவையின் முன்பு வைக்க விரும்புகின்றேன்.

காவல்துறை
நவீனமயமாக்கல் - மனிதாபிமான இயக்கமாக்கல்

"உறுபசியும் ஓவாப் பிணியும், செறுபகையும் இல்லாத நாடே சிறந்த நாடு" என்று ஆன்றோர்கள் கூறினார்கள். பசிப் பிணியைப் போக்கி, பல்வளம் பெருக்கி, நாட்டின் வளம் காணும் முன், அந்த நாட்டின் பொது அமைதியும், தனி மனிதப் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுவது மிகவும் அவசியம் ஆகும். இவைகளைப் பாதுகாத்துப் போற்றிய பின்புதான், ஏனைய சேவைகளைப் பற்றி, எந்த அரசும் கவலைப்பட முடியும். எனவேதான், பொது அமைதியை நிலைநாட்டும் பணிக்கு, நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடன், முன்னுரிமை வழங்கினோம். தமிழகம் அப்போது இருந்த சூழ்நிலை, மீண்டும் என் மனக் கண் முன்னே பிரதிபலிக்கின்றது. அமைதி குறைந்து, அச்சம் மிகுந்து, தீவிரவாதிகளின் கொடுஞ்செயல்களாலும், கொலை பாதகங்களாலும், நாடு அமளிக் காடாக இருந்தது. ஒரு ஆயுதக் கலாச்சாரம், நமது பண்பாட்டின் ஆணி வேரையே, தகர்த்துக் கொண்டிருந்தது. பத்மநாபா படுகொலை, பட்டினம்காத்தான் துப்பாக்கிச் சூடு, முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை, போன்ற அடுக்கடுக்கான அடாவடித் தனங்கள், தமிழக மக்களை அச்சமடையச் செய்திருந்தன.

விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தால், அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகம், அமளிக் காடாக காட்சியளித்தது. பிரச்சனைகளின் தீவிரத்தையும், நமது பலம், பலவீனம் இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து, பயங்கரவாத சக்திகளை அடக்கி ஒடுக்கினால்தான், தமிழகத்தின் பொது அமைதியை, மீட்டுத் தர முடியும் என்பதை உணர்ந்து, அதற்கான திட்டங்களில் தீவிரமாக இறங்கினோம்.

எனது உயிருக்கு ஆயிரம் அச்சுறுத்தல்கள்; தனிப்பட்ட முறையில் நான் தீவிரம் காட்டி, விடுதலைப் புலிகளை ஒடுக்க முற்பட்ட போது, என் மீது அன்பு கொண்டவர்கள், என் உயிருக்குத் தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சினார்கள். மக்கள் நலனே என் உயிரை விட முக்கியம் என்று, அமைதியை நிலைநாட்டும் பணியில், காவல் துறையைத் தலைமை ஏற்று இயக்கினேன். தீயவர்களை அடக்குவதிலும், ஒடுக்குவதிலும், அச்சுறுத்தி விரட்டுவதிலும், பிடித்துச் சிறையில் அடைப்பதிலும், ஒரு புதிய சரித்திரத்தை உண்டாக்கினோம். அப்போதே நம் காவல் துறையை வலுவுள்ள, திறன்மிக்க அமைப்பாக மாற்ற வேண்டுமானால், காவல் துறையினர் உபயோகித்து வந்த, பழங்காலத்து ஆயுதங்கள், கருவிகள், தொழில் நுட்பங்கள், செயல் திறன்கள், செய்முறைகள் ஆகியவற்றை நவீனப்படுத்த வேண்டும், என்று திட்டம் தீட்டினேன்.

வல்லவர்களைத் தேர்ந்து எடுக்க, 'தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்' Tamil Nadu Uniformed Services Recruitment Board என்ற அமைப்பினை ஏற்படுத்தினோம். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்களை, இத்தேர்வாணையம் தேர்வு செய்து, தற்போது அவர்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பெருகி வரும் காவல் துறையின் சவால்களைச் சமாளிக்க, சிறப்புப் பாதுகாப்புப் படை Special

Security Group; மற்றும் சிறப்புப்பணிப் படை Special Task Force ஆகியவற்றையும் அமைத்தோம். தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில், அயல்நாட்டவர்களின் ஊடுருவல்களைக் கண்காணிக்கவும், தவிர்க்கவும், அவர்களுடன் சேர்ந்து, சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களைக், கண்டறியவும் கடலோரப் பாதுகாப்புப் படை, Coastal Security Force என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்கி இருக்கிறோம். காவல் துறை அதிகாரிகளுக்கும் மற்றும் காவலர்களுக்கும், தகுந்த பயிற்சியை அளித்து வருகின்றோம்.

காவல் துறையை நவீனப்படுத்த வேண்டும், என்ற தணியாத வேட்கையின் காரணமாக, ஏ.கே. 47 துப்பாக்கிகள் 7.62 தானியங்கித் துப்பாக்கிகள்; 9 எம்.எம். கைத்துப்பாக்கிகள் தேவையான தோட்டாக்கள் இயக்குவதற்குப் பயிற்சிகள், ஆகியவற்றைக் கொடுத்தோம். உடனுக்குடன் செய்தி அனுப்பும் தொடர்புத் துறையில், Analog System என்ற முறையை மாற்றி, Digital System என்ற முறையை, நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். நான் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்ற போது, அப்போது இருந்த 1075காவல் நிலையங்களில், 33 காவல் நிலையங்களுக்கு மட்டும்தான் ஜீப்புகள் வழங்கப்பட்டிருந்தன. மற்ற காவல் நிலையங்களுக்கு ஜீப் வழங்கப்படவில்லை. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகள் 9 மாதங்களில் 663 காவல் நிலையங்களுக்கு ஜீப்புகளை வழங்கி இருக்கிறோம் என்றால், எங்கள் செயல் திறனை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன். அது மட்டுமல்ல; 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள், தற்பொழுது தமிழகத்திலுள்ள 1117 காவல் நிலையங்களுக்கும் கண்டிப்பாக ஜீப்புகள் வழங்கப்பட்டு விடும். அதற்குரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சியில் சமபங்கு வகிக்கின்ற, பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் இன்னல்கள் இடையூறுகள், ஆண்வர்க்கத்தின் அடக்குமுறை மனப்பான்மையால் எழுந்த. பாலியல் பிரச்சினைகள் ஆகியவற்றில் இருந்து நமது மகளிருக்கு விடுதலை அளிக்கவும் 21-ம் நூற்றாண்டுக்கு, நமது காவல் துறையைத் தயார் செய்வதற்காகவும் மாவட்டத் தலை நகரங்களிலும், மாநகரங்களிலும், 29 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, உருவாக்குவதற்கு ஆணையிட்டேன். இதுவரை 16 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, நானே சென்று திறந்துவைத்திருக்கிறேன் என்றால், அந்தப் பணியில் எனக்குள்ள ஈடுபாட்டை, அது விளக்கும் என்று கருதுகிறேன். சட்டப்படி பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தையும், பாதுகாப்பையும், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வழங்கும்வண்ணம், அவற்றைச் செயல்படுத்தி வருகின்றோம்.

அகில இந்திய அளவில், வேறு யாருக்கும் நமது காவல் துறையினர் இளைத்தவர்கள் அல்ல; செயல் திறனில் சளைத்தவர்கள் அல்ல என்பதை, மீண்டும் நிரூபித்துவருகின்றோம். புதிய பணியிடங்களை ஏற்படுத்தினோம். காவல் துறையினரிடையேயுள்ள பணிச் சோர்வை நீக்க, அவர்களின் நலனுக்காக, பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். விரைவில் காவல் துறையைக் கம்ப்யூட்டர் மயமாக்க, நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அத்துடன் காவல் துறையை, ஒரு மனிதாபிமானமிக்க இயக்கமாக மாற்றுவதற்கு, நடவடிக்கைகளை எடுத்துவருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்ற நிகழ்வுகள் குறைந்துகொண்டு வருகின்றன. குற்றங்களைக் கண்டுபிடிப்பதில், தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கான புள்ளிவிவரங்களை நேற்றுத்தான் இந்த அவையில் வெளியிட்டேன். பாதுகாப்புப் பணியில் ஒரு மாபெரும் வளர்ச்சியைக் கண்டிருக்கிறோம். ஆனால் அவற்றை எல்லாம் மறந்துவிட்டு, ஒரு சில விரும்பத் தகாத நிகழ்ச்சிகளையும், சிலரின் கவனக் குறைவினால் ஏற்பட்ட

சம்பவங்களையும் மிகைப்படுத்தி, இங்கே சில உறுப்பினர்கள் குறைப்பட்டுக் கொண்டது, விவாதத்திற்கு வேண்டுமானால் பயன்படுமே தவிர, உண்மை நிலையை உரைக்கின்ற உரைக்கல்லாக இருக்க முடியாது. ஆளுநரின் உரை, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு, சிறப்புடன் பராமரிக்கப்படுவதைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. ஆனால் அரசியல் உள்நோக்கத்தோடு சிலர், உள்ளேயும் வெளியேயும், மக்கள் மத்தியில், விடுதலைப் புலிகள் ஊடுருவிவந்திருக்கிறார்கள், என்ற விஷ விதையைத் தூவி, கட்டாந்தரையிலே பயிர் விளைவிக்க முயற்சி செய்து வருகிறார்கள். மக்கள் மனதிலே பீதியை உண்டாக்க நினைக்கும் இவர்களின் எண்ணங்கள், எந்தக் காலத்திலும் ஈடேறாது என்பதை, ஆணித்தரமாகக் கூறிக்கொள்கிறேன்.

இதுவரை யாருமே சிந்திக்கமுடியாத அளவிற்கு, காவல் துறையை நவீனப்படுத்த, பல திட்டங்களை நாங்கள் தீட்டி, மத்திய அரசிடம் 80 கோடியே 45 இலட்சம் ரூபாய், நிதியுதவியைக் கேட்டோம். ஆனால் மத்திய அரசு கொடுத்தது என்னவோ, 10 கோடி ரூபாய்தான். திடீரென்று ஒரு நாள், ஊட்டிக்கு வந்த மத்திய உள்துறை அமைச்சர், திரு. சவான், மேலும் 30 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னதாக செய்தித் தாள்களில் செய்திகள் வந்தன. இந்த அறிவிப்பு வந்து ஏறக்குறைய $1\frac{3}{4}$ ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்று வரை, அது அறிவிப்போடு இருக்கிறதே தவிர, அந்த அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குள் சில உள்ளூர்க்காரர்கள், செய்தித் தாள்களைப் பார்த்துவிட்டு, பாராட்டுதல்களையும் நன்றியையும் அள்ளி அள்ளி வீசினார்கள். காவல் துறையை நவீனப்படுத்தும் மாபெரும் பணி, இதனால் தடைப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, நாங்களே மேலும் இதற்காக, 10 கோடி ரூபாயை ஒதுக்கி, இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். மத்திய அரசு இத்திட்டத்திற்கு, முழு நிதியுதவியை வழங்கவேண்டும் என்று, மீண்டும் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் ஊடுருவி இருப்பதாகக் கூறப்படும் செய்தி பற்றிய குறிப்பு

எங்களது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தால், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த சட்ட ஒழுங்கு பிரச்சினைகளைச் சரிப்படுத்தினோம். விடுதலைப் புலிகளைத் தமிழ் மண்ணிலிருந்து வெளியேற்றி, பொது அமைதியை நிலைநாட்ட, நாங்கள் எடுத்த நடவடிக்கைகளை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளை, ஒரு சிலர் தங்கள் சுயநலத்திற்கு, தைரியமாக உலவ விட்டதால், நமது நாட்டின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும், ஊறு விளையும் அளவிற்கு, தேச விரோதச் செயல்கள் தமிழகத்தில் நடைபெற்றன. தமிழகக்காவல் துறையைக் கொண்டு, சமூக விரோத சக்திகள், தீவிரமாக அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, கட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

அது மட்டுமின்றி, விடுதலைப் புலிகள் இயக்கம், இந்திய அரசால் தடை செய்யப்பட்ட இயக்கமாகவும், சட்ட விரோதமான இயக்கமாகவும் அறிவிக்கப்பட வேண்டும் என, மத்திய அரசினை வலியுறுத்தியது எங்களது அரசுதான் என்பதை, இந்த மாமன்றம் நன்கு அறியும். தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதி முழுவதிலும், 33 முக்கிய இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு அவை ஆயுதப் படையினரால் கண்காணிக்கப்பட்டு தீவிரவாதிகள் கடல் வழியாகத் தமிழ்நாட்டுக்குள் நுழைவது, கட்டுப்படுத்தப்பட்டது. கடற்கரைப் பகுதிகளில் ஒயர்லெஸ் கருவிகளுடன், அதிரடிப் படையினர் முக்கிய இடங்கள் முழுவதையும் பாதுகாத்துவருகின்றனர். இந்தியக் கப்பற்படையின் 7 பிரிவுகள், நமது மாநிலத்தின் கடலோரப் பகுதியில், தீவிரமாகக் கண்காணித்து வருகின்றன. தீவிரவாதிகள் தமிழகத்திற்குள் நுழைதல் மற்றும் தமிழகத்தில் இருந்து அத்தியாவசியப் பொருட்கள், கடத்தப்படுதல் போன்ற செயல்கள், தமிழகக் காவல் துறை Central Reserve Police Force - CRPF; இந்தியக் கப்பற்படை; கடற்கரைப் பாதுகாப்புப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, ஆகிய பல்வேறு பாதுகாப்புத் துறைகளின், ஒருங்கிணைந்த முயற்சிகளால், பெரும் அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் காரணமாக, ஏராளமான அளவுக்கு, அத்தியாவசியப் பொருட்களான டீசல், பெட்ரோல், இன்ஜின் ஆயில் போன்றவை; ஜெலட்டின் குச்சிகள் பல்வேறு வகையான துப்பாக்கிகள், தோட்டாக்கள், கையெறி குண்டுகள் செய்தித் தொடர்பு சாதனங்கள் ரசாயனப் பொருட்கள் ராக்கெட்டுகள் பெரும் அளவில் வெடி மருந்துகள், மற்றும் நீர் மூழ்கிக் கப்பல் போன்ற தளவாடங்களும், கருவிகளும், கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி, நாங்கள் பதவியேற்ற காலத்திலிருந்து, 1993 ஆம் ஆண்டு இறுதி வரை, விடுதலைப் புலிகளும், தீவிரவாதிகளின் ஆதரவாளர்களும், 36 பேர், தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் 101 பேர் TADA சட்டத்தின் கீழும், சிறையில் அடைக்கப்பட்டனர் என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பல்வேறு தருணங்களில், பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள், உடனுக்குடன் கண்டுபிடிக்கப்பட்டு, மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, இம் மாதம் 11.3.1994 அன்று, துறையூர் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடிய, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான மூன்று பேர் 24 மணி நேரத்திற்குள்ளாகத் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு, தமிழகக்காவல் துறையினரால், மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர் என்பது காவல் துறையும், தமிழக அரசும், எந்த அளவிற்குத் திறம்பட இயங்கிக்கொண்டிருக்கிறது, என்பதைத்தான் காட்டுகிறது. தமிழகக் காவல் துறையினர், தீவிரவாதிகள் விஷயத்தில், எத்தனை விழிப்புணர்வுடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சாட்சி.

தமிழ்நாட்டில், விடுதலைப் புலிகள் உட்பட, அனைத்துத் தீவிரவாதிகளையும் கட்டுப்படுத்துவதைப் பொருத்தவரையில், நான் இந்த நேரத்தில் ஒரு முக்கியமான கருத்தை, இந்த மாமன்றத்தின் வாயிலாக எடுத்துரைக்க விரும்புகின்றேன். புரையோடிக் கிடந்த பயங்கரவாதத்தை, முற்றிலுமாக ஒடுக்கிய பெருமை, தமிழக அரசைச் சாரும் என்று, அனைவராலும் எங்களது அரசு பாராட்டப்பட்டு வந்தாலும் தீவிரவாதத்தை ஒடுக்கும் கடமை, மாநில அரசோடு மட்டும் நின்று விடுவதில்லை என்று, தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நாட்டின் பல்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் தீவிரவாத இயக்கங்களின் பயங்கரவாத செயல்பாடுகளில் இருந்து, நமது நாட்டைக் காக்கின்ற மாபெரும் கடமை, அந்தந்த மாநிலங்களுக்கு மட்டுமே இருக்கின்றது; மத்திய அரசுக்கும், அதற்கும், எந்தவிதத் தொடர்பும் இல்லை; என்பது போன்ற ஒரு அதிகார மனோபாவத்தை, மத்திய அரசு கொண்டுள்ளதாக நான் கருதுகின்றேன்.

ஒரு மாநிலத்தின் சட்டம் ஒழுங்கினைக் காப்பது, மாநில அரசின் கடமை என்பதை நாம் ஒப்புக்கொள்ளும் அதே நேரத்தில், அந்தச் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை, வெளிநாட்டுத் தீவிரவாத இயக்கங்களுடைய ஈடுபாட்டினால், மிகவும் பிரச்சினைக்குரியதாக மாறி, பூதாகரமாக உருவெடுக்கும்போது, அத்தகைய சூழ்நிலையில், மாநில அரசு மட்டுமே அதனைக் களையவேண்டும்; மத்திய அரசு, வெறுமனே ஆணைகளை மட்டும் பிறப்பித்துக்கொண்டு, செயல் அளவில் உதவி ஒன்றும் புரியாமல் வாளாவிருக்கும், என்ற நிலைமை நிலவும் போது, நிச்சயமாக அது நாட்டின் பாதுகாப்புக்குச் சற்றும் உகந்தது அல்ல என்பது, எனது ஆணித்தரமான கருத்து.

ஆகவே, தமிழ்நாட்டில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை, மேலும் தீவிரப்படுத்த, மத்திய அரசு, நாங்கள் காவல் துறையை நவீனப்படுத்தக் கோரியுள்ள நிதியினை,

உடனடியாக வழங்க வேண்டும் என்றும் கடலோரப் பாதுகாப்பிற்காக, அனுப்பி வைக்கப்பட்ட முன்மொழிவை, நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, வேம்பார் மற்றும் பூம்புகாரில், இரண்டு புதிய கடற்படை முகாம்கள் அமைக்கப்பட வேண்டும்; கடலோரக் காவலுக்குத் தேவையான சாதனங்களுக்காக, 12 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க வேண்டும்; நவீன ஆயுதங்களுக்கு சுங்க வரி விலக்குத் தரப்பட வேண்டும்; மேலும் இலங்கையிலிருந்து வருபவர்களுக்கு விசா அளிப்பதில், தீவிர கட்டுப்பாட்டினைக் கொண்டுவர வேண்டும்; அயல்நாட்டவர்ச் சட்டம் 3(2) (ஜி) -ன் கீழ் சந்தேகத்திற்குரிய அயல்நாட்டவரை சிறைப்படுத்தும் அதிகாரத்தை, மாநில அரசுக்குத் தரவேண்டும். இறுதியாக இவ்வாண்டு மே மாதம், காலாவதி ஆகவுள்ள விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் உத்தரவை, மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும்.

நான் இங்கே எடுத்துக் கூறிய கோரிக்கைகள் அனைத்துமே, புதியவை அல்ல. ஏற்கெனவே பலமுறை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. கடிதம் மூலமாகவும் இக் கோரிக்கைகளை, மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன். பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் உள்துறைச் செயலாளர் ஆகியோரிடம், நேரிலும் வற்புறுத்தி இருக்கிறேன்.

ஆயினும் இதுவரை மத்திய அரசு இவைகளை நிறைவேற்றித் தரவில்லை. இதன் தொடர்பாகச் சில கருத்துக்களை இப்போது இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இப்பொழுதுதான் நான் சொன்னேன். சட்டம் ஒழுங்கைக் காப்பது, தீவிரவாதிகளை ஒடுக்குவது, நாட்டின் செக்கியூரிட்டியைப் பாதுகாப்பது என்பது மாநில அரசின் பொறுப்பாக மட்டும் இருக்கமுடியாது. மத்திய அரசின் பங்கும் அதில் இருக்கின்றது என்று குறிப்பிட்டேன். மத்திய அரசின் அதிகார மனோபாவத்தைப் பற்றி, அதிகாரத் தோரணையைப் பற்றி ஏற்கெனவே நான் குறிப்பிட்டுச் சொன்னேன். ஒரு உதாரணத்தை உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், அந்தச் சமயத்தில் மத்திய உள்துறை இணை அமைச்சராக இருந்த திரு. ராஜேஷ் பைலட் அவர்கள் திடீரென்று எந்த முன்னறிவிப்பும் இன்றி "நான் சென்னைக்கு வருகிறேன். சட்டம் ஒழுங்கு மிகவும் சீர்கேடு அடைந்துவிட்டது. சட்டம் ஒழுங்கைப் பற்றி நான் முதலமைச்சரோடு விவாதிக்கவேண்டும்." உடனடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரையும் அழைத்து, கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று சில மணி நேர அவகாசம்தான் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்ய எங்களுக்கு அளிக்கப்பட்டது. இருப்பினும் கூட்டத்தைக் கூட்டினோம். அமைச்சரும் நாங்களும் பேச்சுவார்த்தை நடத்தினோம். அப்பொழுது ராஜேஷ் பைலட் அவர்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டார். அப்பொழுது நாங்கள் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தையும் பட்டியல் போட்டுக் காட்டினோம். மேலும் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்த வேண்டுமானால், பலப்படுத்த வேண்டுமானால் நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்டார். அதுவும் நான் கேட்டதற்கு இணங்க-நான் கேட்டதற்குப் பதிலாக இந்தப் பதில் கேள்வி வந்தது. சட்டம் ஒழுங்கைக் காப்பது, விடுதலைப் புலிகளை ஒடுக்குவது எங்கள் பொறுப்பு மட்டும்தானா? உங்களுக்கு இதில் பங்கில்லையா என்று கேட்டேன். நாங்கள் என்னென்ன செய்யவேண்டுமென்று கேட்டார். அப்பொழுது சொன்னேன் இப்பொழுது நான் பட்டியல் போட்டுக் காட்டினேனே இந்தக் கோரிக்கைகள் அத்தனையையும் அப்பொழுதே அவரிடம் எடுத்து வைத்தேன். குறிப்பாகச் சொன்னேன். இப்போது 7 நேவல் டிடாச்மென்ட்ஸ் இருக்கின்றன. அவற்றின் பணியைச் சிறப்பாகச் செய்கின்றன. இந்த 7 நேவல் டிடாச்மென்ட் இருக்கின்ற பகுதியில் விடுதலைப் புலிகளால் ஊடுருவ முடியவில்லை. ஆனால் அதற்கு வடக்கேயும், தெற்கேயும் இருக்கிற கடற்கரை பாதுகாப்பற்றுக் கிடக்கிறது.

ஆகவே வேம்பாரில் ஒன்றும், பூம்புகாரில் ஒன்றும் ஆக இரண்டு புதிய நேவல் டிடாச்மென்ட்களை நீங்கள் அமைத்தால்தான் கடலோரப் பாதுகாப்பு பணியைச் சரியாக நிறைவேற்றமுடியும் என்று சொன்னதற்கு இதோ இப்போதே செய்கிறேன், என்று சொல்லி எனக்கு முன்னாலேயே தொலைபேசியை எடுத்து கால் போட்டு கடற்படை அதிகாரியிடம் என் எதிரிலேயே பேசி உடனடியாக இந்த இரண்டு பிரிவுகளை அமையுங்கள் என்று உத்தரவிட்டார். மாதங்கள் பல உருண்டோடிவிட்டன. ஒன்றும் நடக்கவில்லை. பின்னர் இதேபோன்று இந்த ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி திடீரென்று முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் ராஜேஷ் பைலட் அவர்கள் இங்கே தொடர்பு கொண்டு மீண்டும் விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசவேண்டும், சட்டஒழுங்குப் பாதுகாப்பைப் பற்றிப் பேசவேண்டும், கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றார். எங்களுக்கு இருந்த மற்ற அலுவல்களையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு மீண்டும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன். கூட்டத்தில் என்னென்ன செய்திருக்கிறீர்கள் என்று அவர் கேட்டார்.

திரும்பவும் நான் செய்ததையெல்லாம் பட்டியல் போட்டு விவரமாகச் சொன்னேன். கடந்த கூட்டத்தின்போது உங்களுக்கு நான் இன்ஸ்டிரக்ஷன்ஸ் கொடுத்தேனே அதற்கான 'பாலோ அப்' என்ன என்று கேட்டார். நான் சொன்னேன், எங்கள் பணியை நாங்கள் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் சொன்னீர்களே அதற்குத்தான் 'பாலோ அப்' எதுவும் இல்லை" ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் நாங்கள் எதைச் செய்யவில்லை என்றார். அந்த நேவல் டிடாச்மென்ட் விஷயமே அவருக்கு மறந்துவிட்டது. அவருக்கு நினைவூட்டினேன். அய்யா கடந்த முறை நீங்கள் வந்தபோது 2 புதிய நேவல் டிடாச்மென்ட்ஸ் வேண்டுமென்று கேட்டேன். நீங்கள் எங்கள் முன்னால் டெலிபோன் கால் போட்டு ஒரு கடற்படை அதிகாரியிடம் பேசினீர்கள். ஆனால் ஒன்றுமே நடைபெறவில்லை என்றேன். அதற்கு ராஜேஷ் பைலட் அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? கடந்த முறையாவது ஆகஸ்ட் மாதத்தில் அவர் வந்தபோது இதோ நான் செய்கிறேன். உடனடியாக நிறைவேற்றுகிறேன் என்று பதிலுரை தந்தார். உத்தரவாதத்தினை வழங்கினார். ஆனால் இந்த முறை அவர் 'நீங்கள் சொன்னதை நான் டெல்லிக்குச் சென்று அங்கு தெரிவிக்கிறேன்' என்றுதான் சென்னாரே தவிர, செய்கிறோம் உங்களுக்கு உதவி புரிகிறோம் என்று அவர் சொல்லவில்லை.

மேலும் கேட்டேன், ஏற்கெனவே உள்துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி அறிக்கைகள் எல்லாம் விட்டார். நேரில் வந்தபொழுது ராஜேஷ் பைலட் அவர்களும் கேள்வி கேட்டார். அவ்வப்பொழுது சிறையிலிருந்து சிலபேர் தப்பிவிடுகிறார்களே, இலங்கைத் தமிழர்கள் தப்பிவிடுகிறார்களே இதற்கு நீங்கள் ஏன் செக்யூரிட்டி மெஷர்ஸ் டைட்டன் செய்யவில்லை என்று கேட்டார். அப்பொழுது நான் சொன்னேன். சிறையிலிருந்து அவர்கள் தப்பிச் செல்லவில்லை. சிறப்பு முகாம்களிலிருந்து அவர்கள் தப்பிச் சென்றிருக்கிறார்கள் என்று சொன்னேன். அதற்குக் காரணம் என்ன? இப்போதுள்ள மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பின்படி Foreigners Act- ன் 3 (2) E பிரிவின்கீழ் அதிகாரம் மட்டும் தான் மாநில அரசுக்கு வழங்கப்பட்டு உள்ளது. இந்த 3 (2) E பிரிவின்கீழ் நாம் என்ன செய்யமுடியும். இப்படிப்பட்ட 'Suspected militants' or இப்படிப்பட்ட 'Suspected Extremists' களை, தீவிரவாதிகளைச் சிறையில் அடைக்கமுடியாது. பாதுகாப்பான ஒரு இடத்தில் இருங்கள் என்று சொல்லலாம். இதுதான் நமக்குள்ள அதிகாரம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருங்கள் என்று தான் சொல்லலாமேதவிர சிறையில் அடைக்கமுடியாது. "We cannot control their movements otherwise" அதனால்தான் திரும்பத்திரும்ப கடந்த $2\frac{1}{2}$ ஆண்டுகளாக ஒவ்வொரு முறையும் 3(2)'G' ன்கீழ் எங்களுக்கு அதிகாரத்தை 'Delegate' செய்து கொடுங்கள் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். திரு. ராஜேஷ் பைலட்டோடு நடத்திய இரண்டு கூட்டங்களிலும் நான்

கேட்டேன். இப்போது அண்மையில் டெல்லி சென்றபோது பிரதமரிடத்திலும் இதுபற்றிப் பேசினேன். உள்துறை அமைச்சரிடமும், உள்துறை இணையமைச்சரிடமும், மத்திய உள்துறைச் செயலாளரிடமும் பேசினேன். திரும்பத் திரும்ப அவர்கள் உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள் என்கிறார்கள். மீண்டும் மீண்டும் நான் சொல்கிறேன். விசா அளிப்பதில் கட்டுப்பாடு விதியுங்கள், கண்டவர்களையும், தமிழகத்திற்கு வர அனுமதிக்காதீர்கள். இல்லையென்றாலும் அவர்களைச் சிறையில் அடைக்க எங்களுக்கு அதிகாரத்தைத் தாருங்கள். சிறையில் அடைக்கும் அதிகாரத்தை எங்களுக்குக் கொடுக்காமல் ஏன் இவர்களைச் சிறையில் அடைக்கவில்லை, ஏன் இவர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்று கேட்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

எல்லாவற்றுக்கும் மேலாக எல்.டி.டி.ஈ.யை - விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்று அறிவிக்க வேண்டுமென்று போராடி அந்தத் தடை உத்தரவைப் பெற்றது நாங்கள் தான். ஆனால் அந்தத் தடை உத்தரவு இந்த ஆண்டு மே மாதத்தில் காலாவதியாக உள்ளது. நான் மீண்டும் மீண்டும் இவர்களைச் சந்திக்கும் போதெல்லாம், பிரதமரிடமும், உள்துறை அமைச்சரிடமும், உள்துறை இணை அமைச்சரிடமும், மத்திய உள்துறைச் செயலாளரிடமும் 'மே மாதத்தில் காலாவதியாகும் இந்த உத்தரவை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துத் தாருங்கள்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறேனே தவிர, இதற்கு மத்திய அரசு இந்த நிமிடம்வரை செவி சாய்க்கவில்லை. எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் நேற்றுப் பேசினார்களே, "நீங்கள் விழிப்போடு இருங்கள் மத்திய அரசு தனது பொறுப்பை எப்போதும் செய்யும் என்று - மத்திய அரசின் பொறுப்பு என்னவாயிற்று? இப்பொழுது நான் பட்டியல் போட்டுக் காட்டினேனே இந்தக் கோரிக்கைகள் எல்லாம் திரும்பத்திரும்ப - திரும்பத்திரும்ப மத்திய அரசிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். பாதுகாப்புக்காக அயல்நாட்டிலிருந்து சில துப்பாக்கிகளை, இயந்திரங்களை, கருவிகளை, ஆயுதங்களை இறக்குமதி செய்ய அனுமதி கொடுத்தார்கள். ஆனால் அதற்கு சுங்கவரி மிகவும் அதிகமாக இருக்கிறது என்று சொன்னோம். இந்தத் துப்பாக்கிகளை எதற்கு வரவழைக்கிறோம்? விளையாடுவதற்காகவா அல்லது 'LUXURY' பொருளா? இந்த ஆயுதங்களுக்கு எல்லாம் சுங்கவரி விலக்கு 'EXEMPTION' கொடுங்கள் என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். ஆனால் இதுவரையில் மத்திய அரசு இந்தக் கோரிக்கைகளுக்கு எல்லாம் செவிசாய்க்கவில்லை.

ஆனால் திரும்பத் திரும்ப எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், காங்கிரசில் உள்ளவர்களும் மற்ற எதிர்க்கட்சியினரும் பேசுவார்கள். சட்டம் ஒழுங்கை நீங்கள் சரியாகப் பாதுகாக்கவில்லை. சட்டம் ஒழுங்கை நீங்கள் நிலைநாட்டவில்லை. விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருக்கிறது. உங்கள் கடமையைச் செய்யத் தவறிவிட்டீர்கள். உங்கள் கடமையை நீங்கள் சரியாகச் செய்யுங்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நீங்கள் விழிப்புடன் இருங்கள் என்றெல்லாம் கூறுகிறார்கள். மீண்டும் சொல்கிறேன் - நாங்கள் விழிப்போடுதான் இருக்கிறோம். எங்கள் கடமையைச் சரியாகச் செய்துகொண்டுதான் இருக்கிறோம். ஆனால் மத்திய அரசுதான் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றத் தவறிவிட்டது என்பதை ஆணித்தரமாக இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இக்கோரிக்கைகளை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று, இந்த மாமன்றத்தின் மூலமாக மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதிலும், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை அடக்குவதிலும், முழுமையான அளவில் வெற்றி கண்ட எங்களது அரசு; தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு, ஊறு விளைவிக்கும் எந்தச் சக்தியையும், எப்போதும் இரும்புக் கரம் கொண்டு அடக்கும், ஒடுக்கும் என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில், தொய்வு ஏற்பட்டுள்ளது என்று, சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரசாரம் செய்து வருவது, குறிப்பாக எதிர்க்கட்சி தலைவர் பிரசாரம் செய்து வருவது எந்த அளவிற்கு ஆதாரமற்றது என்பதைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

திருமதி ரங்கம்மாள் காவலர்களால் கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்படும் புகாரின் மீதான குறிப்பு

திருக்கோயில்களின் புனரமைப்பிற்கு நடவடிக்கை எடுத்து, கோயில் பாதுகாப்புப் படை ஒன்றையும் ஏற்படுத்திய எங்கள் அரசு, கோயில்களில் சிலைத் திருட்டு நடத்திவந்த கும்பலைப் பிடித்துள்ளது. 227 கோயில்களில், பல குற்றங்களைப் புரிந்த, இந்தப் பயங்கரக் கும்பலை, எங்கள் காவல் துறை பிடித்துள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடுக்கு அருகில் உள்ள, தென்னமநாடு என்னும் கிராமத்தில் வசிக்கும், திருமதி ரங்கம்மாள், ஒரத்தநாடு காவல் நிலையத்தைச் சேர்ந்த மூன்று காவலர்கள், தன்னைக் கற்பழித்ததாகப் புகார் கொடுத்துள்ளார். புகார் கொடுப்பதற்கு முன்பாக, திருமதி ரங்கம்மாளின் கணவர் திரு. சேகர், 25.2.1994 அன்று மாலை 4 மணியளவில், பூச்சி மருந்து உட்கொண்டு, தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தியின் அடிப்படையில், தென்னமநாட்டைச் சேர்ந்த 150 பேர், சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். திருமதி ரங்கம்மாள் தனது புகாரில், 22.2.1994 அன்று இரவு, தான் ஒரத்தநாடு காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு 3 காவலர்களால், தான் கற்பழிக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக தனது கணவர் சேகர், தற்கொலை செய்து கொண்டதாகவும், கூறியுள்ளார். காலம்தாழ்த்திக் கொடுக்கப்பட்ட புகார் என்றாலும், ஒரு பெண்மணி தனது கற்பிற்குப், பங்கம் நேர்ந்து விட்டதாக கொடுத்த மனு, உடனடியாக எடுத்து விசாரிக்கப்பட்டுள்ளது. காவலர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதால், இப்புகார் தஞ்சாவூர் கோட்டாட்சித் தலைவருக்கு, உண்மையைக் கண்டறிவதற்காக, அனுப்பி வைக்கப்பட்டது. அவரும் தற்போது விசாரணை ஒன்றை நடத்தி வருகிறார். இதற்கிடையில், தன்னைக் கற்பழித்ததாக, திருமதி ரங்கம்மாள் அடையாளம் காட்டிய, ஒரத்தநாடு காவல் நிலையக் காவலர்கள் மூன்று பேர், தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று அந்தக் காவல் நிலைய காவல் துறை உதவி ஆய்வாளரும், இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளார். தஞ்சாவூர் கோட்டாட்சித் தலைவர் விரைவில் விசாரணையை முடித்து, அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவரது அறிக்கை கிடைக்கப் பெற்றதும், தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருமதி ரங்கம்மாள் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்றதாக கிடைத்த புகாரின் அடிப்படையில், அவரை காவல் துறையினர் பிடித்து, 23.2.1994 அன்று காலை 6 மணியளவில், காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்ததாகவும், வழக்கு பதிவு செய்யப்பட்டு, பின்னர் 9 மணியளவில், ஒரத்தநாடு குற்றவியல் நீதிமன்ற நடுவரால், ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டதாகவும், தெரிய வருகின்றது. திருமதி ரங்கமாளின் கணவரின் தந்தையான, அதாவது திருமதி ரங்கம்மாளின் மாமனாரான திரு சந்திரன் என்பவர், 25 லிட்டர் சாராயம் வைத்திருந்ததாக, வழக்குத் தொடரப்பட்டு 15.11.1993 அன்று, ஒரத்தநாடு குற்றவியல் நடுவரால், 3 மாத கடுங்காவல் தண்டனை, அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது என்றும் திருமதி ரங்கமாளின் கணவர் சேகர் மீது, கள்ளச் சாராயம் காய்ச்சியதாக வழக்குத் தொடரப்பட்டு, ஒரத்தநாடு குற்றவியல் நீதிமன்றத்தில், 9.2.1994 அன்று, 400 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

எங்கள் அரசைப் பொருத்தவரை, எந்தவொரு பெண்மணிக்கும், ஒரு தீங்குகூட நேரக் கூடாது; பாலியல் ரீதியாகக் குற்றங்கள்

இழைக்கப்படக் கூடாது என்பதில், உறுதியாக இருக்கிறோம். எனவேதான், திருமதி ரங்கம்மாள் கொடுத்த புகார், தஞ்சாவூர் கோட்டாட்சித் தலைவரால், விசாரிக்கப்பட்டுவருகிறது. தவறு நடந்திருந்தால், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, எங்கள் அரசு என்றும் தயங்கியதில்லை இனியும் தயங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பதில்

நேற்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இந்த மாமன்றத்தில் பேசும்போது, தனக்கே உரித்தான குறைகூறும் பாணியில் சில மர்ம மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள் என்றெல்லாம் கூறிவிட்டு இலங்கையின் தளபதி, அதுவும் தலைமைத் தளபதி, தனது உயிருக்கு ஆபத்து என்று, தமிழ்நாட்டுக்கு ஓடிவந்து ஓராண்டுக் காலம் இங்கே தங்கி இருந்திருக்கிறார் என்றும் - தமிழே தெரியாத, இலங்கை நாட்டினுடைய தளபதி அவர், என்றெல்லாம் கூறினார். ஆனால், அந்தத் தளபதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகத், தான் கருதவில்லை என்றும் ' சாதுரியமாகப் பேசியுள்ளார்.

இந்த அவையின் மாட்சிமை களங்கப்படும் வண்ணம், எதிர்க்கட்சித் தலைவருக்குரிய கடமைகளைக் காற்றிலே பறக்கவிட்டு, அவர் உண்மைக்குப் புறம்பான செய்தியை இந்த அவைக்குச் சொல்லியிருக்கிறார். அவர் குறிப்பிட்டதைப் போல, இலங்கை நாட்டின் தளபதி எவரும், இங்கு வந்து தங்கியிருக்கவில்லை. இலங்கை காவல்துறை துணைத் தலைவர், அதாவது Deputy Inspector General of Police, D.I.G. திரு. Premadasa Udugampola, என்ற சிங்களவர் தான், சென்னையில் சில காலமாகத் தங்கியிருந்துவிட்டு, 17.6.1993 அன்று இலங்கைக்குத் திரும்பச் சென்றுள்ளாரே தவிர,

எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதுபோல, இலங்கை நாட்டின் தளபதி வந்து தங்கியிருந்து செல்லவில்லை. ஒரு காவல் துறை அதிகாரிக்கும், படைத்தளபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கு வித்தியாசம் தெரியாதா?

எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களின் குறுக்கீட்டுக்கு அளித்த விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இரண்டு மணி நேரத்திற்கு மேலாகப் பேசி என்னுடைய பதிலுரையை நேற்று நான் இந்த அவையில் அளிக்கமுடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினார். அதனால்தான் விடுமுறை என்று அறிவிக்கப்பட்ட இன்று என்னுடைய பதிலுரையை நான் நிகழ்த்திக்கொண்டிருக்கிறேன். இந்த நேரத்தில்கூட தேவையில்லாமல் அவர் குறுக்கிட்டு, மீண்டும் அவையின் நேரத்தை ஆக்கிரமித்துக் கொள்வதை நான் அனுமதிக்கமுடியாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று தெளிவாக இந்த அவையிலே சொன்னார்கள். இங்கே இருந்த அனைவரும் கேட்டோம். இலங்கை நாட்டின் தளபதி ஒருவர் இங்கே வந்திருந்தார் என்றுதான் அவர் சொன்னார். அவர் குறுக்கிட்டுப் பேசியபோது அவர் ஒரு 'Intelligence Chief' என்று சொன்னார். 'He is not an intelligence Chief. He is not a' 'தளபதி'. He is only a D.I.G. அவர் ஒரு ஸ்பெஷல் டாஸ்க் போர்ஸ்க்குத் தலைமை ஏற்றார் என்று சொல்கிறார். இங்கு சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க நாம் ஒரு 'Special Task Force' அமைத்திருக்கிறோம். அதன் தலைவராகக் காவல்துறையின் கூடுதல் டி.ஜி.பி. திரு. தேவாரம் அவர்கள் இருக்கிறார். அதனால் தேவாரம் அவர்களை நாம் தளபதி என்று சொல்லமுடியுமா?

ஒரு அரசு ஊழியர் இங்கு வந்து செல்வதற்கும், அண்டை நாட்டினுடைய படைத் தளபதி, இங்கு வந்து செல்வதற்கும், வித்தியாசம் இல்லையா? இரண்டுக்கும் வித்தியாசம் புரியாமல்,

இந்த அவையையே திசை திருப்பும் முயற்சியில் அல்லவா, நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ஈடுபட்டு விட்டார்? இப்படி தவறான தகவலைத் தருவதால், இந்த அவையின் மாண்பு பாதிக்கப்படாதா? என்று கேட்க விரும்புகிறேன்.

D.I.G. திரு. Udugampola அவர்கள், இலங்கை நாட்டில், ஜெயவர்த்தனே ஆட்சி நடைபெற்றுக் கொண்டு இருந்தபோது, Jana Vimukti Peramuna - JVP என்ற, சிங்கள ஆதரவு தீவிரவாத இயக்கத்தை ஒடுக்குவதில், மிகுந்த தீவிரம் காட்டியவர், என்று தெரியவருகிறது. இவருக்கும், இந்த அரசாங்கத்திற்கும், என்ன தகராறு ஏற்பட்டது என்பதைப்பற்றி எல்லாம், இங்கே விவாதிப்பது வேறு ஒரு நாட்டின் உள் விவகாரத்தில், தலையிடுவது போல ஆகிவிடும் என்ற காரணத்தினால் மற்ற விவரங்களைப் பற்றி இங்கு விவாதிப்பது, ஏற்புடையதாக இருக்காது என்று கருதுகிறேன். எனவே, நமக்குத் தொடர்புடைய விவரத்தை மட்டும் எடுத்துரைப்பது தான், நியாயமானது ஆகும். இலங்கையில் தொடர்ந்து இருந்தால், தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தின் காரணமாக அவர் தனது உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காகத் தமிழ் நாட்டிற்கு வந்திருக்கிறார். அவர் யாரிடமும் இங்கே தொடர்பு வைத்திருந்ததாகத் தெரியவில்லை. பின்னர் இலங்கை அரசியலில் மாறுதல்கள் ஏற்பட்ட பின்பு இலங்கைக்குத் திரும்பினால், தனது உயிருக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்ற சூழ்நிலையில், அவர் இலங்கைக்குத் திரும்பிச் சென்றிருக்கிறார். திரும்பும்போது, சென்னையில் உள்ள இலங்கை நாட்டுத் தூதரகத்தில், Emergency Certificate ஒன்றைப் பெற்று, விமானம் மூலமாகத்தான், 17.6.1993 அன்று இலங்கைக்குச் சென்றுள்ளார். இந்த விவரம் இந்த அரசிற்கு நன்றாகவே தெரியும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக செயல்பட்ட ஒரு காவல் துறை அலுவலர், அதுவும் Deputy Instpector General of Police தகுதியில் உள்ள ஒரு அலுவலர் பயங்கரவாத சக்திகளிடம் இருந்து, தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தமிழ்நாட்டில்

வந்து தங்கியிருந்திருக்கிறார் என்பது தீவிரவாத சக்திகளின் நடமாட்டம் தமிழ்நாட்டில் இல்லை என்பதைத்தானே உறுதிபடுத்துகிறது? எனவே எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதெல்லாம், அவரது அதீத கற்பனையில் எழுந்த அச்சம் என்றுதான் பொருள் கொள்ள வேண்டி இருக்கின்றது. சரியான தகவலைத் தரும் பொறுப்பு, ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு உள்ளது என்பதை, மீண்டும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் என்பதெல்லாம் வெறும் கற்பனை! யாரும் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவி வரமுடியாத வண்ணம், நாங்கள் விழிப்புடன்தான் இருக்கிறோம்! குறைந்த பட்சம் இந்த அவைக்குத் தருகின்ற தகவல்கள் சரியானவைதானா என்று, நீங்கள் விழிப்போடிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மகாராஷ்டிராவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப் பட்டோருக்காக நிதி சேர்த்தல்

கடந்த ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில், மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பல பகுதிகளில், மிகவும் பயங்கரமான நிலநடுக்கம் ஏற்பட்டதை, இந்த மாமன்றம் நன்கு அறியும். குறிப்பாக, லத்தூர் மற்றும் உஸ்மானாபாத், ஆகிய இரு மாவட்டங்களிலும், இந்த நிலநடுக்கத்தால், ஆயிரக்கணக்கானோர் உயிர் இழந்தும் பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமுற்றும், வீடுகளை இழந்தும், தவிக்கின்ற சோக சூழ்நிலை நிலவியது. இந்தத் துயர சம்பவத்தால், துயருற்று வாடும் மஹாராஷ்டிரா மாநில மக்களுக்கு, ஆறுதல் கூறும் வகையிலும் மஹாராஷ்டிரா அரசு, உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உதவிடும் வகையிலும் 'தமிழ்நாடு முதலமைச்சரின், மகாராஷ்டிரா நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான, நிவாரண நிதி", என்ற துயர் துடைப்பு நிதி ஒன்றினை, நான் துவக்கினேன்.

முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, 10 இலட்சம் ரூபாயை, மகாராஷ்டிரா மாநில முதலமைச்சருக்கு அனுப்பிவைத்தேன். என்னுடைய சொந்த நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, 5 இலட்சம் ரூபாயையும் வழங்கி இந்த நிவாரண நிதியினைத் துவக்கி வைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட, தாராளமாக நிதி உதவி புரிய, என் அன்புக்குரிய தமிழகத்துப் பெருமக்களுக்கு, வேண்டுகோள் விடுத்தேன்.

இந்தியாவின் எந்த மூலையில் வாழ்ந்தாலும், அவர்கள் நமது சகோதரர்கள் என்ற உணர்வினை, பாரம்பரியமாகக் கொண்டு வாழுகின்ற தமிழ்நாட்டு மக்கள், அதே தேசிய உணர்வுடன் மகாராஷ்டிரா மாநிலத்தில் சற்றும் எதிர்பாராத வகையில், துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளான, சகோதர, சகோதரிகளின் நிலையைக் கண்டு, துடிதுடித்து, அவர்களின் மறு வாழ்விற்கென, என் வேண்டுகோளிற்கிணங்கி, அள்ளி அள்ளி வழங்கினார்கள். ஈகையின் உறைவிடம் அல்லவா தமிழ்நாடு? வேறு எந்த மாநிலமும் அளித்திடாத அளவிற்கு மிகக் குறுகிய காலத்தில், 2 கோடியே 87 இலட்சம் ரூபாயைத் தமிழ்நாடு அளித்தது. தமிழக அரசு சார்பாகவும், எனது சார்பாகவும், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களும், மகாராஷ்டிரா மாநில முதலமைச்சர், திரு சரத்பவார் அவர்களை நேரில் சந்தித்து, நாம் திரட்டிய நிதியை நேரில் வழங்கினார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து திரட்டப்பட்ட நிவாரணத் தொகையை, அன்போடு பெற்றுக்கொண்ட மகாராஷ்டிரா மாநில முதலமைச்சர், திரு சரத்பவார் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் தன்னலமற்ற தியாக உணர்வையும், உன்னதமான அன்பினையும், மனமாரப் பாராட்டினார். தமிழ்த் தாயின் பெருமை, தரணி எங்கும் பரவிடவும் தமிழ் மண்ணின் நேச கீதம், நாடு எங்கும் ஒலித்திடவும் தேசிய உணர்வில் நாம் மற்றவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதை உணர்த்தவும் இன்னலுற்ற மகாராஷ்டிரா மாநில மக்களுக்கு வாரி வழங்கிய, என் அன்பிற்குரிய தமிழகத்துப் பெருமக்கள் அனைவருக்கும், இந்த மாமன்றத்தின் வாயிலாக, எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளம், புயலால் நிகழ்ந்த பாதிப்புகளுக்கான நிவாரணப் பணிகள்:

கடந்த 1993 ஆம் ஆண்டில், நவம்பர், டிசம்பர் ஆகிய இரு மாதங்களிலும், பெருமழை மற்றும் புயல் ஆகியவற்றின் காரணமாக, தமிழ்நாட்டின் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டது. 1991 ஆம் ஆண்டு முதல், தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகத் தமிழ்நாடு பாதிக்கப்பட்டதால், பாதிப்பின் தீவிரம் அதிகமாக இருந்தது. 277 பேர் உயிர் இழந்தனர். 3156 கி.மீ. சாலைகள் பாதிக்கப்பட்டன. 2130 பாலங்களிலும், ஏரிகளிலும், உடைப்புகள் ஏற்பட்டன. 1,06,304 குடிசைகள், முழுமையாகப் பாதிக்கப்பட்டன. 4,26,038 குடிசைகளில், பகுதிப் பாதிப்பு ஏற்பட்டது. இவை மட்டுமல்லாமல், 2,30,981 எக்டேர் நிலங்களில் உள்ள பயிர்கள், சேதம் அடைந்தன.

கடந்த ஆண்டுகளில் நிகழ்ந்த புயல், பெருமழை, ஆகியவற்றால், ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில், அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, மாநில நிர்வாகத்தைத் தயார் நிலையில் வைத்திருந்த காரணத்தால்தான் புயலாலும், பெரு மழையாலும் ஏற்படக் கூடிய பொருட் சேதமும், உயிர்ச் சேதமும், வெகுவாகக் குறைக்கப்பட்டது என்பதை, இந்த நேரத்தில், தெரிவிப்பது, எனது கடமை என்று கருதுகிறேன்.

வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளையும், சேதம் அடைந்த பகுதிகளையும், பல மாவட்டங்களில் நானே விரைந்து சென்று, பார்வையிட்டதோடு நிவாரணப் பணிகளையும் துரிதப்படுத்தினேன். திருச்சி, மதுரை, குன்னூர், திண்டுக்கல், பன்றிமலை, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளை, ஹெலிகாப்டர் விமானம் மூலமும் பார்வையிட்டேன். பல்வேறு இடங்களில், பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்தேன். மதுரை நகரில் செல்லூர் பகுதி, கூடல் நகர், வண்டியூர் கண்மாய், ஆகிய பகுதிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை, நானே நேரில் வழங்கினேன். அவர்களுக்கு, பாதுகாப்பான தங்கும் இடங்களை ஏற்படுத்திக் கொடுத்து, அங்கேயே பல்லாயிரக்கணக்கானோருக்கு, உணவுப் பொட்டலங்கள் தயார் செய்து வழங்கவும், நிவாரண உதவிகளை வழங்கவும், ஏற்பாடு செய்தேன்.

பெருமழை, வெள்ளம் ஆகியவற்றால் ஏற்பட்ட சேதங்கள், 666 கோடி ரூபாய் என்று கணக்கிட்டு, மத்திய அரசின் உதவியை நாடி, விவரங்களை அனுப்பினோம். நானே நேரில் சென்று, மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்து, தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாகி வருவதால், தமிழ்நாட்டில் ஏற்பட்ட சேதங்களின் கடுமையை எடுத்துரைத்தேன். ஆனால் எப்போதும் போல, மத்திய அரசு தனது அனுதாபத்தை மட்டும் தெரிவித்துக்கொண்டு, வெறும் 29 கோடியே, 25 இலட்சம் ரூபாயை அளித்தது. அந்தத் தொகையில் 14 கோடியே 63 இலட்சம் ரூபாய், 1994-'95ஆம் ஆண்டுக்கு, இயற்கை இடர்ப்பாடு நிதியின் முன் பணமாக வழங்கியது. ஆக மொத்தம், கிடைத்த நிதி, 14 கோடியே 62 இலட்சம் ரூபாய் மட்டுமே. இருப்பினும், இயற்கை சீற்றத்தால், உயிர் இழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும், 10,000 ரூபாயை, நிவாரண உதவியாக வழங்கினோம். பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணையும், வேட்டி, சேலை ஆகியவற்றையும் இலவசமாக வழங்கினோம். குடிசைகளும், வீடுகளும் பாதிக்கப்பட்டோர்களுக்கு, உதவித் தொகைகள் வழங்கினோம். நிவாரணத் தொகையாக வழங்கப்பட்ட உதவித் தொகை மட்டும், 15 கோடியே 97 இலட்சம் ரூபாய் என்பதை, இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1480 பாசனக் கிணறுகளும், 675 பம்புசெட்டுகளும், மிகவும் பாதிப்புக்குள்ளாயின. 2 இலட்சத்து 30 ஆயிரம் எக்டேர் நிலங்களிலுள்ள பயிர்கள், பாதிப்புக்குள்ளாயின. பாதிக்கப்பட்ட பயிருக்கு நிவாரணமாக, 12 கோடியே 94 இலட்சம் ரூபாயைத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்து, விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், ஆகியவற்றை வழங்கியது.

கடலோர மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட, 3481 கட்டு மரங்கள், மற்றும் 645 வல்லங்களை, செப்பனிட்டு, மீண்டும் மீனவர்கள் தங்களுடைய தொழிலைத் துவங்குவதற்கு, எங்கள் அரசு, 46 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயை, நிவாரணமாக ஒதுக்கியது. பழுதடைந்த சாலைகள், மற்றும் பாசன வசதிகளைப் பழுது பார்க்க, 25 கோடி ரூபாயைத் தமிழக அரசு வழங்கியது.

நீலகிரி மாவட்டம் குன்னூருக்கு அருகில், பரலியாறு மரப்பாலம் அருகே ஏற்பட்ட, மிகப் பெரிய நிலச்சரிவினையும், நான் 14.11.1993 அன்று, ஹெலிகாப்டர் மூலமாகப் பார்வையிட்டேன். உயிர் இழந்த குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களுக்குத் தலா, 10,000 ரூபாயும் வழங்கினேன். நிலச்சரிவினால் அழிந்துபோன, ½ கிலோ மீட்டர் தூர மலைப்பாதையைப் போர்க்கால அடிப்படையில் புதிதாக உருவாக்கித் தர, நானே முன் நின்று கூட்டம் நடத்தி, அதிகாரிகளுக்கு ஆணையிட்டேன். அதன் விளைவாக, **Border Roads Organisation; Central Roads Research Institute; Geological Survey of India**, ஆகிய நிறுவனங்களின் உதவியோடும், தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு, ½ கிலோ மீட்டர் தூரத்திற்கு, முற்றிலுமாக அழிக்கப்பட்ட குன்னூர் மலைப் பாதையை இரண்டு மாதங்களிலேயே முழுவதுமாகச் சீர் செய்து,

போக்குவரத்துக்கு உகந்ததாக மாற்றி, சாதனை சரித்திரத்தை, எங்களது அரசு படைத்துள்ளது என்பதை, மிக்க பெருமிதத்தோடு, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரி மலைக்குச் செல்லும், முக்கியமான இந்தப் பாதையைச் சீர்செய்ய, ஒரு ஆண்டுக்கு மேலாகும் எனப் பலர் நினைத்த போது, போர்க்கால அடிப்படையில், இதனை மிகக் குறுகிய காலத்தில், சீர்செய்து காட்டினோம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலும், மற்றும் சில கடலோர மாவட்டங்களிலும், வீடு இழந்தவர்கள், புதிதாக வீடு கட்டிக்கொள்ளவும் சேதம் அடைந்த வீட்டைச் சீர்செய்து கொள்ளவும் 9 கோடியே 47 இலட்சம் ரூபாய், தமிழக அரசின் சார்பில், மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு உதவி செய்யாவிட்டாலும், கடுமையான நிதி நெருக்கடியிலும், எங்கள் அரசு, புயல், வெள்ள நிவாரணப் பணிகளுக்கு 75.37 கோடி ரூபாயை ஒதுக்கி, நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது. துயருற்ற மக்களின் இன்னல்களைக் களைவதற்காக, எங்கள் அரசின் உதவிக் கரம், எப்போதும் தயாராக இருக்கின்றது என்பதை, இது எடுத்துக் காட்டுகின்றது.

வளர்ச்சிப் பணிகள் திட்ட ஒதுக்கீடு

தொய்வடைந்திருந்த வளர்ச்சிப் பணிகளுக்கு, நாங்கள் பதவியேற்ற பின்பு, ஒரு புதிய எழுச்சியைக் கொடுத்துள்ளோம். இங்கே இந்த மாமன்றத்தில் பேசிய, சில மாண்புமிகு உறுப்பினர்கள், வளர்ச்சிப் பணிகள் நல்ல முறையில் நடைபெறவில்லை என்பதைப் போன்ற, ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்த முனைந்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, அவர்களுக்கு எல்லாம், இந்த அரசு, மக்களின் அரசு, எந்த அளவுக்கு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது என்பதைத் தெளிவாக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1989 -90 ம் ஆண்டின் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை, 1360 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் 1994-95 ஆம் நிதியாண்டில், திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகை, 2750 கோடி ரூபாய் ஆகும். கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், திட்ட ஒதுக்கீடு, இரண்டு மடங்காகி உள்ளது என்பது, ஒரு சாதனை இல்லையென்றால், வேறு எதைத்தான் சாதனை என்று சொல்வது? வளர்ச்சிப் பணிகளுக்கு நாங்கள் கொடுக்கின்ற முன்னுரிமையையும், முக்கியத்துவத்தையும், இது உணர்த்தவில்லையா? தமிழக மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைத் தரம், உயர வேண்டும் என்பதில், இந்த அரசு முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது என்பதை, இது கோடிட்டுக் காட்டவில்லையா?

தனி நபர் வாரியான, திட்ட ஒதுக்கீட்டு விவரத்தை, இந்த மாமன்றத்தின் முன் வைப்பது, எனது கடமை எனக் கருதுகிறேன். 1990-91ம் ஆண்டில், தேசிய அளவில் தனி நபர் சராசரி திட்ட ஒதுக்கீட்டுத் தொகை, 326 ரூபாயாக இருந்தபோது, தமிழ்நாட்டில் தனி நபரின் சராசரி அளவு, 300 ரூபாயாக இருந்தது. அதாவது, தேசிய சராசரி அளவைவிட, தமிழ்நாட்டின் சராசரி அளவு குறைவாக இருந்தது. ஆனால் 1994-95ம் ஆண்டில், தனி நபர் திட்ட ஒதுக்கீட்டில், தேசிய சராசரி, 433 ரூபாயாகக் கணக்கிடப்பட்டுள்ள போது, தமிழ்நாட்டின் சராசரி தொகை, 492 ரூபாயாக உயர்ந்துள்ளது. தேசிய சராசரியை விட, நமது மாநில சராசரி இப்போது உயர்ந்துள்ளது என்பதை, மிக்கப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, தமிழ்நாட்டின் நபர் வாரித் திட்ட ஒதுக்கீடு, உயர்ந்து இருப்பது மட்டுமன்றி, தேசிய அளவுடனும், மற்ற மாநிலங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நமது திட்ட ஒதுக்கீடு, எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்பது கண்கூடு.

நாட்டில் பெரும்பாலான மாநிலங்கள், தங்களுடைய திட்ட ஒதுக்கீட்டை, நிதி நெருக்கடி காரணமாக, குறைத்துக்கொண்டு வரும் ஒரு சூழ்நிலையில், தமிழ்நாடு ஒவ்வொரு ஆண்டும், தனது ஒதுக்கீட்டை முழுமையாக நிறைவேற்றுவதோடு, திட்ட ஒதுக்கீட்டையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எத்தகைய நிதி நெருக்கடியிலும், இந்த அரசு, வளர்ச்சிப் பணிகளில் முதலீடு செய்து வருவதை, வெளிப்படையாகப் பாராட்ட மனமில்லாதவர்கள்கூட இது ஒரு சாதனை என்பதை, ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும் என்று கருதுகிறேன்.

1991-92 ஆம் ஆண்டு, 1,725 கோடி ரூபாய், திட்டங்களுக்குச் செலவிட்டு, ஒதுக்கீட்டுத் தொகையான 1,605 கோடி ரூபாயை மிஞ்சினோம். 1992-93ஆம் ஆண்டில், ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டத்தொகை, 1,766 கோடி ரூபாய் தான். ஆனால் எங்களுடைய திட்டச் சாதனையோ, 1,935 கோடி ரூபாய். நடப்பு ஆண்டில், ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுத் தொகை, 2,101 கோடி ரூபாய் ஆகும். இவற்றை முழுமையாகச் செயல்படுத்தி, 2,140 கோடி ரூபாய் அளவிற்கு, திட்ட செலவினங்கள் எட்டும் என்பதை, பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1994-95ம் நிதியாண்டிற்கு ஏற்பளிக்கப்பட்ட தொகை, 2,750 கோடி ரூபாய் ஆகும். சென்ற ஆண்டு திட்ட ஒதுக்கீட்டை விட, இது 30.89 சதவீதம் அதிகம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்கள், 8 வது திட்ட ஒதுக்கீட்டை முடிக்க இயலாமல், தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், நாம் இத்திட்ட ஒதுக்கீட்டை முடிப்பதில், திறம்பட முன்னேறியுள்ளோம் என்பது, தமிழக மக்கள் அனைவரும், மகிழ்ச்சி கொள்ளவேண்டிய ஒரு செய்தி ஆகும்.

தமிழ்நாடு, வளர்ச்சிப் பணிகளில் காட்டிவருகின்ற ஆர்வத்தை, மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர், திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள், மனந்திறந்து பெரிதும் பாராட்டியுள்ளார்.

உலக வங்கியின் நிர்வாக இயக்குநர், திரு. Ernest Stern, 1993 -ம் ஆண்டு பிப்ரவரி மாதம், சென்னைக்கு வந்தபோது, தமிழக அரசு, உலக வங்கித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதை, நேரில் கண்டு பாராட்டியுள்ளார்கள். UNDP, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் நிர்வாகி, Dr. James Gustave Speth அவர்கள், முக்கியமான சமூக நலப் பணிகளில், தமிழ்நாடு ஏற்படுத்தியுள்ள சாதனைகளையும் சமுதாய, பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த, தமிழக அரசு எடுத்துவரும் முயற்சிகளையும், வெகுவாகப் பாராட்டியுள்ளார். உலக வங்கியின் துணைத் தலைவர், திரு. Ismail Serageldin, வளர்ச்சிப் பணிகளுக்கு இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகள் குறித்து, தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார். சர்வதேசக் குழந்தைகள் நிதி நிறுவனம், UNICEF இந்தியப் பிரதிநிதி, Dr. John Rhode அவர்கள், தமிழக அரசு, மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக மேற்கொண்டுள்ள, 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டம், மற்றும் மகளிர் நலத் திட்டங்கள் ஆகியவற்றை, முன்னோடித் திட்டங்கள் என்று வெகுவாகப் பாராட்டியுள்ளார். அண்மையில் சென்னைக்கு வருகை புரிந்த, ஜப்பான் நாட்டுப் பொருளாதாரத் தூதுக் குழுவும், இந்த அரசின் பொருளாதார நடவடிக்கைகளையும், தொழில் ஊக்குவிப்பு முயற்சிகளையும், பாராட்டியுள்ளது.

இங்கே வளர்ச்சிப் பணிகளே நடைபெறுவதில்லை என்றெல்லாம் சிலர் பேசினார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் தகவல் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே உலக வங்கி தொழில் வளர்ச்சிக்காக எந்த மாநிலத்திற்குக் கடன் கொடுக்க விரும்புகிறதென்றால் அது தமிழ்நாட்டுக்குத்தான். எனக்கு நேரடியாக வந்த தகவல் ஒன்றைக் கூறுகிறேன். அண்மையில் ஒருவர். - அவர் இந்தியர்தான். உலக வங்கியை அணுகி ஆந்திர மாநிலத்தில் தொழில் துவங்கக் கடனுதவி கோரியுள்ளார். அதற்கு உலக வங்கியின் துணைத்தலைவர் அளித்த பதில் "ஆந்திராவில் புதிதாகத் தொழில் தொடங்குவதென்றால் கடன் வழங்க முடியாது. தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதானால் நாங்கள் கடன்

கொடுக்கிறோம். ஏனென்றால் நாங்கள் வரும்போது தமிழ்நாட்டில் தான் முதலமைச்சரே எங்களுடன் அமர்ந்து விவாதிக்கிறார்கள். தமிழ்நாட்டில் தொழில்வளர்ச்சித் திட்டங்கள், அதன் செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு விவரத்தையும் முதலமைச்சர் அறிந்து வைத்து இருக்கிறார். எனவே தமிழ்நாட்டில் தொழில் துவங்கக் கடன் கொடுத்தால் எந்த விரயமும் இல்லாமல் அந்தத் தொழில் நிறைவேறும். எனவே தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்குவதற்கு நாங்கள் கடன் கொடுக்கிறோம்" என்று கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் முன்னேற்றத்தையே, எங்கள் முழு மூச்சாகக் கொண்டு, செயல்பட்டு வரும் நாங்கள், இந்த வளர்ச்சிப் பணிகளில், மேலும் தீவிரம் காட்டி செயல்படுவோம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி விலை உயர்வு

இந்த ஆண்டு 1.2.1994 முதல், பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வழங்கப்படும் அரிசியின் விலை, சாதாரண ரகத்திற்கு, கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாயும் சன்ன மற்றும் மிகச் சன்ன ரகத்திற்கு, கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் 25 காசுகளும், உயர்த்தப்பட வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு, தமிழக அரசு ஆளாகியது. மத்திய அரசு, எல்லா முக்கியமான பண்டங்களின் விலைகளை உயர்த்தும்போது அமைதியாக இருப்பவர்கள் அதன் விளைவாக மாநில அரசு, விலை உயர்த்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகும் போது, மாநில அரசை மட்டும் குறைகூறி வருகின்றனர். இது எந்த விதத்தில் நியாயமானது என்பது எங்களுக்கு இன்னமும் விளங்கவில்லை.

குறிப்பாக, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும், அரிசியின் விலையை உயர்த்தக்கூடாது என்பதில், எங்களுக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் மத்திய அரசு, 1.2.1994 முதல், இந்த அரிசியின் விலையை, கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் முதல், ஒரு ரூபாய் 30 காசுகள் வரை உயர்த்தியது. இந்தியாவிலேயே தமிழக அரசு தான், ஏழை எளிய மக்கள் அனைவரும் பயன்பெறும் வண்ணம், மிகப் பெரிய அளவில், பொது விநியோகத் திட்டத்தை செவ்வனே செயல்படுத்தி, அதன் காரணமாக ஏற்படுகின்ற நஷ்டத்தை ஈடு செய்வதற்காக, ஒரு பெரும் தொகையை மானியமாக வழங்கி வருகின்றது.

மத்திய அரசு, இதற்கு முன்பு, பல முறை கணிசமான அளவிற்கு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். அரிசியின் விலையை உயர்த்திய போதும் கூட தமிழக அரசு, அந்த அளவிற்கு அரிசியின் விலையை உயர்த்தவில்லை. ஏனென்றால், அந்த விலையேற்ற சுமையை, ஏழை எளிய மக்கள் தாங்க முடியாது என்ற நல்லெண்ணத்துடன், எங்களது மானியத்தின் அளவை அதிகரித்துக்கொண்டே போனோம். ஆனால் 10 அல்லது 15 காசுகள் என்ற அளவில், விலையேற்றம் இருந்த காலம் மலையேறி ஒரு ரூபாய், ஒரு ரூபாய் 25 காசுகள் என்கின்ற அளவிற்கு, மத்திய அரசு விலை உயர்வு செய்த போது, அதனால் ஏற்படுகின்ற இழப்பை, தமிழக அரசு தாங்கிக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில்தான், அரிசி விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானோம்.

தமிழக அரசு, 450 கோடி ரூபாய் அளவில், பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வழங்கப்படும் அரிசியின் விலைக்காகக் கொடுத்து வரும் மானியத் தொகையை, தொடர்ந்து தாங்கிக்கொண்டு வருகின்றது. மத்திய அரசு, அரிசி, டீசல், பெட்ரோல், நிலக்கரி போன்றவற்றின் விலைகளை உயர்த்தும்போது, அதனால் ஏற்படுகின்ற சுமை, மாநில அரசுகளின் மீது, முழுமையாக இறக்கி வைக்கப்படுகின்றது. எனவேதான், இது போன்ற முக்கியமான முடிவுகளை, மத்திய அரசு எடுக்கும் முன்பு, மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்கவேண்டும் என்று, நான் வற்புறுத்தி

வருகின்றேன். தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டங்களில் கூட, இந்தக் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைத்தேன்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்களின் விலையேற்றம், அதனால் பயன்பெறும், நலிந்த பிரிவைச் சார்ந்த மக்களின் வாங்கும் சக்தியைப் பொறுத்து அமையவேண்டும் என்பதில், எங்களுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. இனிமேலாவது மத்திய அரசு, இது போன்ற பொருட்களின் விலையை உயர்த்தும்போது, இன்று எங்களைக் குறை கூறுகின்ற உறுப்பினர்கள், மத்திய அரசின் திசை திரும்பி, அந்த விலையேற்றத்தினைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று, கேட்கின்ற தைரியம் படைத்தவர்களாக உருவாக வேண்டும் என்பதே, எனது தணியாத ஆசை. எனது ஆசை நிறைவேறுமா என்பதை, நான் பொறுத்திருந்து பார்க்கிறேன்.

பல மாநிலங்களில், பொது விநியோக முறையின் கீழ், வழங்கப்படும் அரிசியின் விலை, தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் வழங்கப்படுவது போன்று, மானிய விலையில் வழங்கப்படுவது இல்லை. ஆந்திரப் பிரதேசத்தில் கூட, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு மட்டும்தான், குறைந்த விலையில் அரிசி வழங்கப்படுகின்றது. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும்தான், எந்த விதமான பாகுபாடுமின்றி, ஒரு கோடியே 49 இலட்சம், குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, 15 முதல் 16 இலட்சம் டன்கள் வரை, அரிசி வழங்கப்பட்டு வருகிறது என்பதை எடுத்துரைப்பது, எனது கடமை என்று கருதுகிறேன். தொடர்ந்து தமிழகத்தில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ், சீரான முறையில், அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படும் என்பதையும் தற்போது இருக்கின்ற மானியச் சுமையைத் தொடர்ந்து ஏற்போம் என்பதையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி

எங்களது அரசு பொறுப்பேற்றுக் கொண்ட உடனேயே, தமிழ்நாட்டின் விரைந்த வளர்ச்சிக்காக, 'புதிய தொழில் கொள்கை' ஒன்றை உருவாக்கி, அதனை உடன் செயல்படுத்தத் தொடங்கியது. தொழில் முனைவோரின் தேவைகளும், எதிர்பார்ப்புகளும், என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் பதவி ஏற்ற உடனேயே, முக்கியமான தொழில் அதிபர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டி, அவர்களுடைய பல்வேறு கருத்துக்களையும் கேட்டறிந்தேன். அதையொட்டி அமைந்த தமிழகத்தின் 'புதிய தொழில் கொள்கையானது', நமது மாநிலத்தில் விரைந்த தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த, வழி வகை செய்துள்ளது. குறிப்பாக, மின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் பெரிய தொழில்களை நிறுவுதல் புதிய தொழிற் பேட்டைகளை உருவாக்குதல் மற்றும் அவர்களுக்குத் தேவையான ஊக்கச்சலுகைகளை வழங்குதல், ஆகிய நடவடிக்கைகளை, எங்களது அரசு முனைந்து செயல்படுத்தியது.

1991 ஆம் வருடத்திற்கு பிறகு, நமது நாட்டில் நிலவி வந்த, தனியார் துறை ஊக்குவிப்புக் கொள்கை, ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை, மற்றும் இதர பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றை ஒட்டி அமைக்கப்பட்ட, தமிழகத்தின் 'புதிய தொழில் கொள்கை', 1992-93 ஆகிய கடந்த இரண்டு ஆண்டுகளில், நாம் எதிர்பார்த்த பயன்களைக் கொடுத்துள்ளது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அதன் விளைவாக, பன்னாட்டு நிறுவனங்கள், நமது நாட்டைச் சேர்ந்த தனியார் தொழில் முதலீட்டாளர்கள் ஆகியோர், தமிழ்நாட்டில் முதலீடு செய்யப் பெரிதும் விரும்புவதை, இந்த மாமன்றம் நன்கு அறியும். அந்த வகையில், வெளிநாட்டுத் தொழில் நிறுவனத்தின் பங்கேற்போடு, 7,500 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்படும் ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் உற்பத்தித் திட்டம், 376 கோடி ரூபாய் மதிப்பில் பேசின் பிரிட்ஜ்

எரிவாயு மின் சுழலி மின் உற்பத்தித் திட்டம், உலக அளவிலேயே முதல் முதலாகத் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட, 800 கோடி ரூபாய் மதிப்பில், கடல் நீர் வெப்பத்திலிருந்து மின் உற்பத்தித் திட்டம் மற்றும் தமிழகத்தின் பல இடங்களில், கடந்த 2½ ஆண்டுகளில் துவக்கப்பட்ட, மின் உற்பத்தித் திட்டங்கள் ஆகிய அனைத்தும், தமிழகத்தில் 5000 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தியை, விரைவில் ஏற்படுத்தித் தரக்கூடிய, பிரகாசமான சூழ்நிலையைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியுள்ளதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய கவனத்திற்கும், கொண்டுவர விரும்புகின்றேன். ஏற்கெனவே, தமிழ்நாட்டில், மின்சார உற்பத்தியில் தட்டுப்பாடு ஏதுமில்லை. மேலும், இந்தப் புதிய திட்டங்களினால், கூடுதல் மின் உற்பத்தி உருவாகும் போது தமிழ்நாடு, மின்சார உற்பத்தியைப் பொருத்த வரை, ஒரு Surplus மாநிலமாக, உபரி மாநிலமாக, வெகு விரைவில் உருவாகும் என்பதை பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எங்களது அரசு பதவியேற்ற 1991 ஆம் ஆண்டிலிருந்து, 1993ஆம் ஆண்டு இறுதி வரை, தமிழ்நாட்டில் மின் திட்டங்கள் நீங்கலாக, மொத்தம், 9,150 கோடி ரூபாய் மதிப்பில், புதிய தொழில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதே காலகட்டத்தில், தனியார், கூட்டு, மற்றும் பொதுத் துறைகளில், புதிய தொழில் திட்டங்களில், 9,900 கோடி ரூபாய் முதலீடு செய்ய, உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி, தமிழக அரசு, தொழில் துறை வளர்ச்சியில், எந்த அளவுக்குத் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்கும் என்று நம்புகிறேன்.

'தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO மட்டும், கடந்த 30 மாத காலத்தில், சுமார் 9,000 கோடி ரூபாய் மதிப்புள்ள, 20 புதிய தொழில் திட்டங்கள் தொடங்க, ஆதரவு அளித்துள்ளது. இது தமிழகத்தின் தொழில் துறை, என்றுமே காணாத ஒரு மிகப் பெரிய சாதனையாகும்! அதுமட்டுமன்றி, மேலும், 4,000 கோடி ரூபாய் முதலீட்டில், 36 புதிய தொழில் திட்டங்களை, இந்த நிறுவனம் கண்டறிந்து அவைகளை 1994-95ஆம் ஆண்டு, இணை மற்றும் கூட்டுத் துறையின் கீழ், தமிழ்நாட்டில் நிறுவ, உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்பதை, மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பெருந்துறை, கங்கைகொண்டான், ராணிப்பேட்டை, நிலகோட்டை மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில், 'தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்', TACID தொழில் வளர்ச்சி மையங்களை நிறுவி வருவதுடன்; திருப்பூர், மணலி ஆகிய இடங்களில், அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தருகின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியையும், இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழகத்தில், மிக விரைந்த தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த, எங்களது அரசு எடுத்துவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அனைத்தும், தமிழகத்தைத் தொழில் துறையில், ஒரு முன்னோடி மாநிலமாக்கும், என்று உறுதியாக நம்புகிறேன்.

தடையற்ற தொழில் வளர்ச்சியே இன்றைய தேவை

தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சியில், முதன்மை வகிக்கும் மாநிலமாக மாற்றுவதற்கு, எங்கள் அரசு எடுத்துவரும் முயற்சிகளைப் பற்றி, நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். நமது முயற்சிகள் அனைத்தும், இப்போது பயன் அளிக்கத் தொடங்கி உள்ளன. 1988-89 ஆம் ஆண்டில், அனைத்து நிதி நிறுவனங்களும் அளித்த, 1,157.5 கோடி ரூபாய் நிதி உதவியை வைத்துப் பார்க்கும் போது, தமிழ்நாடு, ஐந்தாவது இடத்தில் இருந்தது. எங்கள் அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக, 1992-93 ஆம் ஆண்டில், நிதி நிறுவனங்கள் வழங்கியுள்ள, 2,270.5 கோடி ரூபாய் நிதி உதவிகளின் அடிப்படையில், அகில இந்திய அளவில், நாம் மூன்றாவது இடத்தை எட்டியுள்ளோம் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டை, அகில இந்திய அளவில், முதன்மையான இடத்தை வகிக்கும் மாநிலமாகக் கொண்டு வர வேண்டும், என்ற உன்னதமான இலக்கை நோக்கி, விரைந்த தொழில் வளர்ச்சிக்கு, முக்கியத்துவம் அளித்துவருகிறோம். அந்த இலக்கை நாங்கள் அடைவதில் இருக்கின்ற சவால்களையும், இங்கே சொல்லியாக வேண்டும்.

உலகப் பொருளாதாரம், எந்த விதமான மாறுபட்ட சூழ்நிலையில், இன்று இயங்கி வருகிறது, என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். இது உலகமயமாக்கல் யுகமாகும். This is a age of Globalisation of Economics. போட்டியில்லாத, பாதுகாக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தைகள், இனி இருக்காது, தொழில்கள் முன்னேற வேண்டுமானால், உலகச் சந்தையில் போட்டியிட வேண்டி இருக்கின்றது. தற்போது உள்ள உள்ளூர் சந்தைகளைத் தக்க வைத்துக் கொள்வதோடு, உலகச் சந்தையில் ஒரு பெரும் பகுதியைக் கைப்பற்றவும் நாம் முயற்சிக்கவேண்டும். அப்போது தான், வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தின், வேலை வாய்ப்புத் தேவைகளை, நாம் நிறைவேற்ற முடியும்.

தொழில்களை விரிவுபடுத்துவதைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் தொழிலதிபர்கள், தொன்றுதொட்டு, மிகுந்த ஒரு எச்சரிக்கை உணர்வுடன், பாதுகாப்பான அணுகுமுறையைப் பின்பற்றி வந்துள்ளனர். தற்போது உள்ள சந்தைகள் Markets மற்றும், அவற்றிலே கிடைக்கின்ற ஆதாயங்கள் Profits ஆகியவற்றில், நிறைவைக் காணுகின்றனர். புதிய வளமான துறைகளைப் பின்பற்ற, அவர்கள் போதிய முயற்சிகளை எடுக்கவில்லை. தொழில் முனைவோரிடம், பிரச்சினைகள் ஏதாவது எழுந்தால், அரசிடம் இருந்து சலுகைகளைப் பெற்று, சமாளிக்க வேண்டும் என்கின்ற போக்கே, காணப்படுகின்றது. உலக அளவில் போட்டியிட வேண்டிய தருணம், நெருங்கிவிட்ட காரணத்தினால் தான், அவற்றைப் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொழில்கள், இனியும் கிணற்றுத் தவளைகளாக இருக்கமுடியாது.

இவை சிறிய அளவிலும், ஒரு குடும்பத்தின் அடிப்படையிலும், தொடர்ந்து இருக்குமேயானால், உலகெங்கும் வீசி வருகின்ற மாறுதல் என்ற புயலில், அடித்துச் செல்லப்படக் கூடிய அபாயம் உள்ளது, என்பதைத் தெரிவிப்பது, என் கடமை என்று கருதுகிறேன். எந்தப் பிரச்சினைக்கும், அரசுதான் தீர்வு காண வேண்டும், என்கின்ற ஒரு காலம் மலையேறி விட்டது.

தொழில் வளர்ச்சி:

அரசின் அறைகூவல்

எனவே, தமிழ் நாட்டிலுள்ள தொழில்கள் விழித்தெழுந்து, தங்களுடைய தடைகளை உதறித் தள்ள வேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு வகைகளில், தங்களுடைய தொழில்களை, விரிவுபடுத்த வேண்டிய தருணம் இதுவே. இல்லையென்றால், பெருமளவிலான வெளிநாட்டு முதலீடுகளின் காரணமாக, பொருளாதாரத்தில், அவர்களுக்கு எல்லாம் இடம் இல்லாமல் போய்விடும். எனவே இனியும் காலம் தாழ்த்தாது, தடைகளை கடந்து, தொழில்களை இணைத்து, விரிவுபடுத்தி, உலகளவிலும் உலக தரத்திலும், முன்னேற வேண்டும் என்பதே, நான் அவர்களுக்கு விடுக்கும் அறை கூவல் ஆகும்.

'மின் உற்பத்தியில் புதிய சாதனை'

தமிழகத்தின் விரைந்த தொழில் முன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், அடிப்படைத்தேவை மின் உற்பத்தியும், சீரான உயர் அழுத்த மின் விநியோகமும், என்பதை அறிந்த நாங்கள் முறை சார்ந்த, மற்றும் முறை சாரா துறைகளில், மின் உற்பத்திக்குப் புதிய ஆக்கமும், ஊக்கமும் கொடுத்துவருகின்றோம். அதுமட்டுமின்றி, நாங்கள் ஆட்சிப்

பொறுப்பேற்ற பின்பு, மின் வெட்டைப் படிப்படியாகக் குறைத்து, பின்னர் 26.3.92 முதல் அடியோடு மின்வெட்டை நீக்கினோம். ஒவ்வொரு மாவட்ட அளவிலும், உயர் அழுத்த மின்சாரத்தை வழங்குவதற்கு, தனித் தனியே திட்டங்கள் தீட்டி, செயல்படுத்தி வருகிறோம் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய அளவில், 4,317 மெகாவாட் மின்சாரத்தை, மின் வாரியம் தயாரித்து வருகின்றது. நமது அனல் மின் நிலையங்களில், சென்ற நிதியாண்டில், 1,163 கோடி யூனிட்டுகள், உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, 1,286 கோடி யூனிட்டுகள் உற்பத்தி ஆகும், என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, அனல் மின் நிலையங்களில் மட்டும், கடந்த ஆண்டை விட கூடுதலாக 123 கோடி யூனிட்டுகள், இந்த ஆண்டு உற்பத்தி ஆகும் நல்ல சூழ்நிலைகள் உள்ளன.

1992-93 ஆண்டில் மட்டும், புனல் மின் நிலையங்களில், மின் உற்பத்தி, 27.8 சதவிகிதமும் அனல் மின் நிலையங்களில், 20.2 சதவிகிதமும், அதிகரித்துள்ளன. அதேபோன்று, இந்த நிதியாண்டில் பிப்ரவரி மாதம் முடிய, உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின்சாரம், கடந்த ஆண்டு உற்பத்தியைவிட, 5.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 225 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்கு, 8 புதிய திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளதோடு, தனியார் துறையில், 24 மெகாவாட் திறன் கொண்ட, காற்றாலை பண்ணைகளும் தொடங்கப்பட்டுள்ளன என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கூடுதலாக, 865.5 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, இந்த எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வட சென்னை அனல் மின் திட்டம் பேசின் பாலம் எரிவாயு மின் சுழலி திட்டம் காற்றாலைப் பண்ணைகள் சாத்தனூர் புனல் மின் திட்டம் கீழ்பவானி புனல் மின் திட்டம் ஆகியவற்றின் பணிகள், வேகமாக நடைபெற்று வருகின்றன.

இந்தியாவிலேயே, காற்றாலைகளை இயக்கி, முறைசாரா மின்சாரம் தயாரிக்கும் துறையில், தமிழகம் இன்று முன்னணியில் இருந்து வருகின்றது. கடல் நீரிலுள்ள வெப்ப நிலைகளின் மாறுதலைப் பயன்படுத்தி, 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும், 'மிதக்கும் மின் நிலையத்தை', **Sea Solar Power incorporated** என்ற அமெரிக்க நிறுவனம், 800 கோடி ரூபாய் முதலீட்டில், சிதம்பரனார் மாவட்டம் குலசேகரப்பட்டினம் அருகில், அமைக்க உள்ளது. உலகிலேயே இது போன்ற முறை சாரா மின் உற்பத்தியில், இது ஒரு முன்னோடி முயற்சி என்பது, தமிழ்நாட்டினர் அனைவரும், பெருமை கொள்ளக்கூடிய ஒரு செய்தியாகும்.

மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, நாம் முயற்சிகள் எடுத்துக் கொள்ளும் அதே நேரம், மிகப் பெரிய மூலதன முதலீடு, இத்துறைக்குத் தேவைப்படுவதால், தனியார் துறையினரைப் பங்கு பெறச் செய்து வருகின்றோம். தனியார் மற்றும் கூட்டுத் துறையின் மூலம், 3,100 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, 5 திட்டங்கள், 12,600 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள, திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம், கடலூர் அனல் மின் திட்டம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி மின் திட்டம், ஸ்ரீமுஷ்ணம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம், குலசேகரப்பட்டினத்தில் கடல் அலையில் இருந்து மின் உற்பத்தித் திட்டம் போன்ற திட்டங்கள், நமது மின் தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்யும். நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட, தூத்துக்குடி அனல்மின் திட்டம் நிலை 4, வட சென்னை அனல்மின் திட்டம் நிலை 2, மற்றும் நிலை 3 ஆகிய திட்டங்களைத் தனியார் துறையிடம் ஒப்படைக்க, கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று, காவிரிப் படுகையில் கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி, 'பிள்ளைப்பெருமாள் நல்லூர் எரிவாயு மின்சுழலித் திட்டமும்',

தனியார் துறையிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசு இத்தனை நிதி நெருக்கடியிலும், மின் உற்பத்தித் துறையில், ஒரு புதிய எழுச்சியை உண்டாக்கி வருகிறது. அதே நேரத்தில், மத்திய அரசு, தமிழ்நாட்டில் மின் திட்டங்களைச் செயலாக்குவதில், மெத்தனம் காட்டி வருவது, எங்களுக்கு எல்லாம் பெருத்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. நெய்வேலியில் 3வது சுரங்கம் வெட்டும் பணி, மற்றும் அத்துடன் இணைந்த மின் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்க, மத்திய அரசு ஆவன செய்யவேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றோம்.

அதேபோன்று, கூடங்குளம் அணுமின் திட்டத்திலும், தனது பங்கிற்கான நிதியைச் செலுத்துவதற்குத் தமிழக அரசு இசைவு தெரிவித்துள்ள நிலையில், மத்திய அரசு, திட்டத்தைச் செயலாக்க, விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்னக எரிவாயுத் திட்டத்தை, மத்திய அரசு செயல்படுத்த வேண்டும் என்று, நான் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளேன். எனினும், கொள்கை அளவில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்றதோடு நிற்கிறது. அதற்குத் தேவையான ஆயத்த நடவடிக்கைகளை இதுவரை மேற்கொள்ளவில்லை. ஓமன் நாட்டிலிருந்து வரக்கூடிய எரிவாயுவைப் பயன்படுத்தி, தென்னக எரிவாயுத் திட்டம், செயல்படுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. ஓமன் நாட்டிலிருந்து எரிவாயு பெறப்பட்டு, இத்திட்டத்தினைச் செயல்படுத்த இயலுமா என்று, இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.

எனவே தான், **Bombay High**-ல் தற்போது உபரியாக, வீணாகிக் கொண்டிருக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி, இந்தத் தென்னக எரிவாயு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று, மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீண்டகால அடிப்படையில் வேண்டுமானால், ஓமன் நாட்டிலிருந்து பெறக் கூடிய எரிவாயுவை, இத்துடன் இணைப்பதுபற்றிப் பரிசீலிக்கலாம். ஆனால் இத்திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டுமானால், **Bombay High**-ல் ஒவ்வொரு நாளும் வீணாகிக் கொண்டிருக்கும், 2.2 கோடி கன மீட்டர் எரிவாயுவை, தென் மாநிலங்கள் பயன்படுத்திக்கொள்ள, அனுமதிக்க வேண்டும் என்று, நான் மீண்டும் இங்கே வலியுறுத்த விரும்புகின்றேன்.

நிதி ஆதாரம் இல்லையென்று, மத்திய அரசு, இத்திட்டத்தைக் கைவிட்டுவிடக் கூடாது என்பதற்காகத் தான், தென் மாநிலங்கள், இத்திட்டத்திற்கு வேண்டிய நிதி பங்கீட்டை, ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளன என்று, உறுதி அளித்துள்ளேன். இனியும் மத்திய அரசு, இத்திட்டத்தினை கிடப்பில் போடுவது, நியாயமாகப்படவில்லை. **HBJ** இணைப்பு எரிவாயு திட்டம், மிகவும் முனைப்பாக செயல்படுத்தப்பட்டு பல மாநிலங்களுக்குப் பயன் தரக் கூடிய வகையில், அமைக்கப்பட்டுள்ளது. இதே போல, தென் மாநிலங்களுக்கு, இந்த திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இதைத் தொடர்ந்து மத்திய அரசு தட்டிக் கழித்தால், தென் மாநிலங்களுடைய நலனை, புறக்கணிப்பதாகத் தான் எடுத்துக்கொள்ள முடியும். எனவே மத்திய அரசு, தென் மாநிலங்களின் உணர்வைப் புரிந்துகொண்டு, தென்னக எரிவாயுத் திட்டத்திற்கு, பச்சைக் கொடியைக் காட்ட வேண்டும் என்று, மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை

தமிழ்நாடு, உணவுப் பொருட்கள் உற்பத்தியில், செய்துள்ள சாதனைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவது, எனது கடமை என்று கருதுகிறேன். 1990 ஆம் ஆண்டு, 75 லட்சம் டன்னாக இருந்த, உணவுப் பொருட்களின் உற்பத்தி, கடந்த 1993 ஆம் ஆண்டு, 90 இலட்சம் டன்னாக உயர்ந்தது. இந்த ஆண்டின் இறுதியில், உணவுப் பொருட்களின் உற்பத்தி, 100 இலட்சம், அதாவது ஒரு கோடி டன் அளவை அடைந்து, உணவு உற்பத்தியின்

வரலாற்றில், ஒரு சாதனையைப் படைக்கும் நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின், புனிதப் பெயரை தாங்கியுள்ள, "எம்.ஜி.ஆர். நெல்" என்ற, இந்த வீரிய ரக நெல்தான், முதன் முதலாக இந்தியாவிலேயே கண்டுபிடிக்கப்பட்ட, வீரிய ஒட்டு ரக நெல் ஆகும். குறுகிய காலப் பயிரான, இந்த வீரிய ஒட்டு ரக நெல்லைத் தமிழ்நாட்டிலுள்ள 20 இலட்சம் எக்டேரில், நெல் பயிரிடப்படும் பரப்பளவில், ஒரு கணிசமான அளவுக்குப் பயிரிடப்பட்டால், நெல் உற்பத்தி மேலும் பெருகும் என்ற கருத்தை, ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, அரிசி உற்பத்தியில், மேலும் புதிய சாதனைகள் படைக்க, சாத்தியக் கூறுகள் உள்ளன என்பதைத் தெரிவிப்பதில், பெருமிதம் அடைகின்றேன்.

'டங்கல்' ஒப்பந்தம் என்று கூறப்படும், பன்னாட்டு வர்த்தக ஒப்பந்தம், General Agreement on Tariffs and Trade - GATT கடந்த டிசம்பர் 1993 இல் அறிவிக்கப்பட்டு, 1994 ஏப்ரல் மாதத்தில், கையெழுத்து இடப்படவுள்ளது. இந்த ஒப்பந்தத்தினால், ஏற்படுகின்ற பாதிப்புகள் என்ன என்பது, இன்னும் மாநிலங்களுக்குத் தெளிவாக்கப்படவில்லை. குறிப்பாக, அரசியல் சட்டத்தின்படி, மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள, விவசாயத் துறை, இந்த ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட உள்ளது. இதனால், விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய விதைகளின் விற்பனையில், ஒரு பாதிப்பு ஏற்படக்கூடும், என்று அஞ்சப்படுகிறது. சுதந்திரமாக ஒரு விவசாயி, மற்றொரு விவசாயிடமிருந்து, விதைகளைப் பெறுவதில், கட்டுப்பாடுகள் ஏற்பட்டு விடுமோ, என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. இதனால், உயரிய விதை ரகங்கள் பெறுவதில், பெரும் சிக்கல்கள் ஏற்படக் கூடும், என்று கருதுவது தவறாகாது.

குறிப்பாக, பன்னாட்டுப் பெரும் நிறுவனங்கள் Multi National Corporations, இந்தப் புதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில், உயர்ந்த ரக விதைகளை, அதிக விலைக்கு விற்கும் வாய்ப்புகள் ஏற்படலாம். இதனால் நமது விவசாயிகள், பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய சூழ்நிலைகள் உள்ளன. இந்த ஒப்பந்தம், விவசாயிகள் பெற்று வருகின்ற மானியங்கள் மீது, கட்டுப்பாட்டையும் கொண்டுவர வாய்ப்புகள் உள்ளன. உரங்களின் மீதான மானியம், இலவச மின்சாரம் போன்ற சலுகைகளுக்கு, ஆபத்து ஏற்படலாம். மொத்தத்தில், மாநில அரசுகளின் வசமுள்ள விவசாயத் துறையில், பல மாறுதல்கள் உருவாகலாம் பல மாற்றங்கள் உருவாகலாம். எனவேதான், மத்திய அரசு மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டி, இவற்றைப்பற்றிக் கலந்தாலோசித்து, முடிவு எடுக்கவேண்டும் என்று, பாரதப் பிரதமருக்கு இரண்டுமுறை கடிதம் எழுதியுள்ளேன்.

மருந்துகள் பெறுவதிலும், புதிய கட்டுப்பாடுகளை, இந்த ஒப்பந்தம் கொண்டுவரக் கூடும். எனவே மருந்துகள், அதிக விலையில் விற்கக் கூடிய ஒரு அபாயம் உள்ளது. நமது நாட்டிலுள்ள தேசிய நிறுவனங்கள், மருந்து உற்பத்தியில் தானாகவே முன்னின்று, குறைந்த விலையில் மருந்துகளை, ஏழை எளிய மக்களுக்கு விற்கின்ற தற்போதைய சூழ்நிலைக்கு, ஒரு குந்தகம் ஏற்படும், என்கின்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் புதிய ஒப்பந்தத்தினால், வளரும் நாடுகளில் உள்ள, தனி மனிதத் திறமை, வளரக் கூடிய வாய்ப்புகள் குறையக் கூடும், என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம்முடைய நாட்டின் உரிமைகளை, பன்னாட்டு நிறுவனங்கள், ஒரு சர்வாதிகாரப் போக்கில், பயன்படுத்திக் கொள்ளக் கூடிய, ஒரு சூழ்நிலை இருப்பதாலும் நம்முடைய நாட்டிலுள்ள அறிவாற்றலுள்ள விஞ்ஞானிகள், மற்றும் தொழில் நிபுணர்களின் திறமையான பணிகளுக்கு, பாதிப்புகள் ஏற்படக் கூடும் என்று கருதுவதாலும் இந்த 'டங்கல்' ஒப்பந்தத்தில், மத்திய அரசு கையெழுத்து இடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சில மாநில அரசுகள், உச்ச நீதி மன்றத்தில், வழக்குத் தொடுக்கத் தீர்மானித்துள்ளன. தமிழக அரசும், அந்த வழக்கில் தன்னை இணைத்துக்கொண்டு, வாதாட முடிவு செய்துள்ளது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகளிர் மேம்பாடு

மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில், தமிழ்நாடு முன்னணியில் இருக்கின்றது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் முதன் முதலாக, குழந்தைகளின் நலன்களைப் பாதுகாக்க குழந்தைப் பருவ காலம் முழுவதையும் கண்காணித்து, மேம்பாடு அடையச் செய்யும் வகையில், 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம், உருவாக்கப்பட்டுள்ளது. **It is a blue print for the welfare of the child.** குறிப்பாக, இளங் குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம், இதய நோயினால் துன்புறும் ஏழைக் குடும்பத்துக் குழந்தைகளுக்கு, ஒரு வரப்பிரசாதமாய் அமைந்துள்ளதை, நல்ல மனம் படைத்தவர்கள், நாடு முழுவதும் பாராட்டிவருகின்றனர்.

மகளிர் மேம்பாடு, உண்மையிலேயே எத்தகைய முறையில் அமைய வேண்டும் என்பதை வரையறுத்து, 2000 ஆம் ஆண்டில், என்னென்ன இலக்குகளை அடையவேண்டும் என்பதைத் தெளிவாக்கும் வகையில், எங்களது அரசு தயாரித்த, 'தமிழக மகளிர் முன்னேற்றக் கொள்கை'யை, கடந்த 9.3.94 அன்று, அன்னை தெரசா அவர்கள், தனது திருக்கரங்களால் வெளியிட்டார்கள். அகில இந்திய அளவில், யாரும் எண்ணிக் கூட பார்க்காத, ஒரு மாபெரும் திட்டத்தைச் செயலாக்க, நாம் என்ன முயற்சி எடுத்து வருகிறோம் என்பதை, உலகின் பல முனைகளிலிருந்து வந்திருந்த, அறிஞர் பெருமக்கள் பாராட்டினார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டுள்ள பொருள்கள் அனைத்தும், தமிழக அரசாலும், 'மகம்' என்று அழைக்கப்படும், தமிழ்நாடு மகளிர் முன்னேற்றக் கழகத்தாலும், செயல்படுத்தப்பட்டு, மகளிருக்கு உரிய சமூக நீதியினையும், பொருளாதார முன்னேற்றத்தையும், விரைந்து வழங்குவதில், இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும், தமிழகம், ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கப்போகிறது என்பதில், எனக்கு ஒரு சிறிதும் ஐயம் இல்லை.

எங்களது அரசு, மகளிர் முன்னேற்றத்திற்காக, பல சமுதாய நலத் திட்டங்களை அமல்படுத்தி வருகின்றது. ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கான, அரசு தொட்டில் திட்டம் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் ஆகிய இவை அனைத்தும், தமிழ்நாட்டில் மகளிரிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, பின்தங்கிய மகளிரின் பொருளாதார வாழ்வில், ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கும் காலம், வெகு தூரத்தில் இல்லை.

மாநில அளவிலான 'மகளிர் ஆணையம்', Women's Commission ஒன்றை நிறுவி உள்ளோம். அரசுப் பணிகளிலும், இதர வேலை வாய்ப்புகளிலும், மகளிருக்கு 30 சதவிகித இட ஒதுக்கீட்டை, ஏற்படுத்தித் தந்துள்ளோம். மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கும், நலனுக்கும், புரட்சிகரமான குறிக்கோள்களையும் அறிவித்து, அதற்காக உரிய வழிமுறைகளை வகுத்து, விரைந்து எங்களது அரசு பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதையும், இந்த மாமன்றத்தின் வாயிலாக, என் அன்புக்குரிய, நான் வணங்கும் தெய்வங்களாகிய, தமிழகத்துத் தாய்மார்களுக்கு தெரிவித்துக்கொள்வதில், பெருமிதம் அடைகின்றேன்.

இலவச சேலை, வேட்டி வழங்கும் திட்டம்

தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம், நான் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது, உடுத்துவதற்கு ஒரு நல்ல ஆடை கூட இல்லாமல், பலர் வறுமையில் வாடுவதைப் பார்த்திருக்கிறேன். அத்தகைய ஏழை எளிய மக்களுக்கு, கடந்த

3 ஆண்டுகளாக, எங்கள் அரசு தொடர்ந்து, இலவச சேலை, வேட்டிகளை வழங்கி வருகிறது. நிலமற்ற ஏழை விவசாயிகள், நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற, நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்கள் ஆகியவர்களில், 60 இலட்சம் பெண்களுக்கும், 60 இலட்சம் ஆண்களுக்கும், மொத்தமாக 1 கோடியே 20 இலட்சம் பேருக்கு, இலவச சேலை, வேட்டி, எங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. பண்டிகை நாட்களில், அவர்கள் புத்தாடை அணிந்து, மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என்பதற்காக, தமிழக அரசின் அத்தனை நிதி நெருக்கடியிலும், நாங்கள் தொடர்ந்து இந்தத் திட்டத்தைச் செயலாற்றி வருகிறோம்.

இந்த ஆண்டு வழங்கப்பட்ட சேலைகளும், வேட்டிகளும், தமிழ்நாடு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமாகவும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். நமது தேவை முழுவதும், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், பெற முடியாத சூழ்நிலையில், ஆந்திர மாநிலத்தின் கைத்தறி நிறுவனமான, 'ஆப்கோ' மற்றும் கர்நாடக மாநிலக் கைத்தறி வளர்ச்சி நிறுவனம் மூலமாகவும், 16 இலட்சம் சேலைகள், மற்றும் 11.5 இலட்சம் வேட்டிகள், மத்திய அரசின் ஒப்புதலுடன், அரசு நிர்ணயித்த விலைக்கு, கொள்முதல் செய்யப்பட்டன. தனியார் துறையில் இந்த முறை, ஒரு சேலை, வேட்டி கூட வாங்கப்படவில்லை. அதேபோல, தர நிர்ணயத்திலும், எந்தவிதமான குறையும், யாராலும் சுட்டிக் காட்டப்படவில்லை. இந்த ஆண்டும், இத்திட்டத்தைச் சிறப்புடன் செயல்படுத்துவோம் என்பதை, மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்தில் தனிக்கவனம்

நலிந்த மக்களின் நல் வாழ்க்கையும், ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்தையுமே, எங்கள் அரசின் தலையாய பணியாக மேற்கொண்டு, கடந்த $2\frac{3}{4}$ ஆண்டுகளுக்கு மேலாக,ச் செயலாற்றி வருகின்றோம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்களின் வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு, பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம். இனிவரும் காலங்களில், மேலும் பல புதிய திட்டங்களை தீட்டிச் செயலாக்கி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்களின் வாழ்க்கையில், ஒரு புதிய முன்னேற்றத்தை உண்டாக்குவோம்.

சென்ற ஆண்டு, ஆளுநர் உரையின் மீதான என்னுடைய பதிலுரையில், ஆதிதிராவிடர் மக்கள் தொழில் துறையிலும் முன்னேற வேண்டும் என்பதற்காக, கோயம்புத்தூர் மற்றும் பெரியார் ஆகிய மாவட்டங்களில், இரண்டு தொழிற்பேட்டைகளை உருவாக்குவோம், என்று தெரிவித்து இருந்தேன். அதன்படி கோயம்புத்தூரிலும், திருப்பூரிலும், 200 தொழிற்கூடங்களைக் கொண்ட 2 தொழிற்பேட்டைகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு என்றே வெகு வேகமாக உருவாகிவருகின்றன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று உலகளவில், புகழ் பெற்று விளங்கும், பின்னலாடைத் தொழில், இந்த இரண்டு தொழிற்பேட்டைகளிலும் மேற்கொள்ளப்படும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மக்களிடமிருந்து, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை பரிசீலனையும் செய்யப்பட்டு, தகுதியானவர்கள் பட்டியல் விரைவில் வெளியிடப்படும்.

நிலமுள்ள மற்றும் நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த, 10000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள், பயன்பெறும் வண்ணம், வங்கிகளின் நிதியுதவியோடு, 46 கோடி ரூபாய் செலவில், பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம், 'தாட்கோ' நிறுவனத்தின் மூலமாக, செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சமுதாய மக்களிடையே இத்திட்டம், மகத்தான வரவேற்பைப் பெற்று இருக்கிறது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினராக, பல்லாண்டுக் காலமாக விளங்கி வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்கு, சமூக நீதி கிடைக்கப்பெற வேண்டும் என்பதை, முதற் கொள்கையாகவும் அவர்கள் அனைவரும் கல்வி பயின்று, அதன் மூலமாக, சமுதாய வளர்ச்சியை அடையவேண்டும் என்பதை, 2வது கொள்கையாகவும் அவர்கள் தங்கள் சொந்தக் கால்களில் நிற்கும் வண்ணம், புதிய பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுத் தருவதை, 3வது கொள்கையாகவும் எங்களது அரசு கொண்டு விளங்குகின்றது என்பதை, இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த மூன்று கொள்கைகளின் அடிப்படையில்தான், இந்த வகுப்பு மக்கள் முன்னேற்றம் அடைய, பிரத்தியேகமாக புதிய 10 அம்சத் திட்டம் ஒன்றை, எங்களது அரசு அறிவித்து, செயல்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தின் மூலமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின், அடிப்படைத் தேவைகள் அனைத்தும், பூர்த்தி செய்யப்படுகின்ற சீரிய நிலை, விரைந்து எட்டப்பட, வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, 'குறைந்தபட்சம் ஒரு நீர் ஆதாரமாவது இல்லாத குக்கிராமமோ, அல்லது ஆதிதிராவிடர் குடியிருப்போ, தமிழகத்தில் எங்கும் இருக்கக் கூடாது', என்ற உன்னத நிலையை அடைய, எங்களது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

கல்வித் துறையைப் பொருத்தமட்டில், இந்த வகுப்பு மக்களின் மாணவ மாணவியருக்காக, கல்வி உதவித் தொகை, 91-92ம் ஆண்டு, 14 கோடி ரூபாயாகவும் 92-93ம் ஆண்டு 15.3 கோடி ரூபாயாகவும் 93-94ம் ஆண்டு 18.8 கோடி ரூபாயாகவும், உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், மனமார வரவேற்பீர்கள் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன்.

இம்மக்கள், ஒளிமயமான வாழ்க்கையைப் பெறவேண்டும், என்கின்ற கண்ணோட்டத்துடன், முன்னேற்றத் திட்டங்களை முழுமையாக வகுத்து, முனைப்புடன் செயல்படுத்துவோம் என்பதையும் இம்மக்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் கட்டிக் காப்பதில், தயக்கம் காட்ட மாட்டோம் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நீதி காத்த சாதனை

தமிழகத்தின் உயிர் மூச்சான, இட ஒதுக்கீட்டு முறை தொடர, எங்கள் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுத்துரைப்பது, எனது கடமை என்று கருதுகிறேன். இட ஒதுக்கீட்டுக் கொள்கையில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே, முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வரும் தமிழ்நாடு, பிற்படுத்தப்பட்டோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும், பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. தமிழ்நாட்டின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் பரிணாம வளர்ச்சியைப் பரிசீலனை செய்யும் போது, இட ஒதுக்கீட்டின் அளவு, பிற்படுத்தப்பட்ட, மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் தேவைக்கு ஏற்ப, மேல் நோக்கி வளர்ந்துள்ளதேயன்றி, எந்த ஒரு நிலையிலும், ஒதுக்கீட்டு அளவு குறைக்கப்படவில்லை என்பது, வரலாற்று உண்மை ஆகும்.

'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகியோர் கட்டிக் காத்த, சமூக நீதிக் கொள்கைப் பாதையில், சற்றும் தொய்வின்றி நடை போட்டு வரும் நாங்கள் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, என்றென்றும் தொடர்ந்திட வேண்டும் என்பதற்காக, இந்திய அரசியல் சட்டத்தில், உரிய திருத்தம் கொண்டு வருவதற்கு, இதே மாமன்றத்தில், தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றினோம்.

1951ல், தந்தை பெரியார் தலைமையில், கிளர்ந்தெழுந்த

தமிழகத்தின் உணர்வுகள், அப்படியே மங்காமலும், மறையாமலும், தமிழக மக்களிடையே இன்னமும் உள்ளன, என்பதை உணர்த்தும் வகையில், 16.11.93 அன்று, பொது வேலை நிறுத்தம் மேற்கொண்டோம். தமிழகம் முழுவதும் ஓரணியில் நின்று, இட ஒதுக்கீட்டு உரிமையைப் பாதுகாக்க, ஒருமித்த குரலில் வாதிடத் துவங்கியது. பின்னர், பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக நீதி காக்கும் இயக்கங்கள், ஆகியவற்றின் பிரதிநிதிகளை அழைத்து, இப்பிரச்சினை தொடர்பாக விவாதித்தோம். பல தரப்பு மக்களின் பேராதரவுடன், பின்னர் இதே சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாட்டில், 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடர, ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு இந்தியக் குடியரசுத் தலைவருக்கு, ஆளுநரின் வழியாக அனுப்பிவைக்கப்பட்டது. அரசியல் சட்டத்தில், தகுந்த திருத்தங்களை மேற்கொண்டு, இந்தச் சட்டம் அமல்படுத்தப்படும் போது, தந்தை பெரியார், 1951ல், எந்த உணர்வுகளுக்காகப் போராடினாரோ அந்த உணர்வுகளுக்கு மீண்டும் வடிவம் கொடுத்த பெருமை, நமக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும், சமூக மறுமலர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, ஆதிதிராவிடர், மலை ஜாதியினர், பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு, எந்த வகையிலும் ஊறு நேரா வண்ணம், அவர்களது உரிமைகளைக் கட்டிக் காப்பதில் நாங்கள் தொடர்ந்து கண்ணும் கருத்துமாக இருப்போம்.

மக்கள் நல்வாழ்வுத்துறை

சுற்றுப்புறச் சுழல் மற்றும் வனத்துறை

எங்கள் அரசு தொடர்ந்து, சுற்றுப்புறச் சூழலில், ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக, வனத்துறை முன்னேற்றத்திற்கும், முக்கியத்துவத்தை அளித்துவருகின்றோம்.

1993-94ஆம் ஆண்டு, இத்துறைக்கு, 82 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, காடுகளின் வளர்ச்சியிலும், சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பிலும், தனிக் கவனம் செலுத்தினோம்.

வனம் காத்து வளம் சேர்ப்பதை, ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற, சென்ற ஆண்டு தமிழ்நாட்டில், வனச்சோலைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு, 77 ஆயிரம் எக்டேர் பரப்பளவில், பல்வகையான மரங்கள், 10 கோடி ரூபாய் மதிப்பில் நடப்பட்டன. சென்னை மாநகரில் மட்டும், ஒரு இலட்சம் புதிய மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. சுவீடன் நாட்டின், பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின், Swedish International Development Agency- யின் உதவியோடு, நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு, 77 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த, எங்களது அரசு வழி வகை செய்துள்ளது என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக வங்கியின் நிதி உதவியோடு, 8 கோடி ரூபாய் மதிப்பில், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 42 கோடி ரூபாய் மதிப்பில், 7 ஆண்டுக் கால காடு வளர்ப்புத் திட்டம், DANIDA உதவியுடன், 150 எக்டேர் பரப்பளவில், 71 இலட்சம் ரூபாய் மதிப்பில், 11 அரிய மூலிகைப் பண்ணைகள், 5½ கோடி ரூபாய் செலவில், சென்னையில் அமைய உள்ள, சுற்றுப்புறச் சூழல் பயிற்சி நிலையம், போன்ற திட்டங்கள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில், நமக்கு ஒரு தனி இடத்தைத் தேடித் தரும், என்பதை உறுதியாக நம்புகிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறை

வசதி படைத்தோருக்கே மருத்துவ வசதி,' என்கின்ற நிலையை மாற்றி, பட்டிதொட்டிகளில் வசிக்கும் பாமர மக்களின் இருப்பிடங்களுக்கே, மருத்துவ வசதிகளைக் கொண்டு

செல்வதே, எங்கள் நோக்கம் ஆகும். மாநகரங்களில் உள்ள உயர் மருத்துவ வசதிகள், கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். இந்த உயரிய கொள்கைகளின் அடிப்படையில், மருத்துவத் துறைக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்து, பல முன்னோடி திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம்.

தமிழக அரசு நடத்திய மருத்துவ நல முகாம்களில், ...க்கணக்கான மக்கள், மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு, நோய் உள்ளது என்பதைக் கண்டறிந்தவர்களுக்கு, மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. '15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தின்' ஓர் அம்சமாக, இருதய நோயால் பாதிக்கப்பட்ட, நலிந்த பிரிவினைச் சார்ந்த குழந்தைகள் அனைவருக்கும், அறுவை சிகிச்சையும், மருத்துவ வசதியும், இலவசமாக வழங்க, அரசாங்கமே முழுப் பொறுப்பேற்று, இம்முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது என்பதை மிகுந்த மன நிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உடல் நலம் மட்டுமின்றி, குழந்தைகளின் மன நலமும், பேணிக் காக்கப்படவேண்டும் என்பதற்காக, மனநலப் பரிசோதனை, இலவசமாக எங்களது அரசால் மேற்கொள்ளப்படும் என்றும், அதற்குரிய திட்டம் வெகு விரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது போன்றதொரு தொலைநோக்கு பார்வையுடன், எதிர்காலச் சந்ததியினருக்கு, ஒளிமயமான வாழ்வை, நோயற்ற வாழ்வை, அமைத்துத் தருவதில், எங்கள் அரசு தொடர்ந்து தீவிரம் காட்டும்.

பார்வைக் குறைவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு, 64 கோடி ரூபாய் மதிப்பில், உலக வங்கியின் நிதி உதவியுடன், திட்டம் ஒன்றை விரைவில் செயல்படுத்த உள்ளோம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், நோயாளிகள் தங்குமிடங்கள், சிகிச்சைக்குத் தேவையான கருவிகள், மற்றும் தளவாடங்கள், இத்திட்டத்தின் கீழ் அமைத்துத் தரப்படும். 7 ஆண்டுகளில், தமிழகத்தில் உள்ள அனைத்து விதமான பார்வைக் குறைவு நோய்களும், மருத்துவ சிகிச்சை மூலம் தீர்க்கப்படுகின்ற வாய்ப்பு, நமது மாநிலத்திற்குக் கிடைத்துள்ளது. தமிழகத்தில், Cataract னால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும், இத்திட்டத்தின் கீழ், இலவசமாக அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டு Cataract அறுவைச் சிகிச்சை செய்யாத காரணத்தினால் பார்வைக் குறைவு உள்ளவர்கள், நமது மாநிலத்தில் இல்லவே இல்லை என்றதொரு, அருமையான சூழ்நிலையை உருவாக்குவோம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்மைக் குறை கூறியோ, வசை பாடியோ செய்தியை வெளியிடும் பத்திரிக்கைகள் இதுபோன்ற சிறப்பான திட்டத்தைச் செய்தியாக வெளியிட்டு ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள்

1998ஆம் ஆண்டிற்குள், 'அனைவருக்கும் கல்வி' என்பதே, தமிழக அரசின் உயரிய இலக்கு ஆகும். தமிழகத்தின் எதிர்காலத் தலைமுறையைத் தயார் செய்ய வேண்டும் என்பதற்காக, சிறுவர், சிறுமியர் அனைவருக்கும், விடுதலின்றி, தொடக்கக் கல்வியை வழங்க வேண்டும் என்பதற்காக, திட்டங்கள் தீட்டிவருகின்றோம். 15 வயது முதல், 35 வயதிற்கு உட்பட்டவர்களிடையே, எழுத்தறிவின்மையைப் போக்கி, குறைந்தபட்ச எழுத்தறிவுக் கல்வியை, அறிவொளி இயக்கத்தின் மூலம், போதித்து வருகின்றோம். எழுத்தறிவுக் கல்வியின் மூலமும், தொடக்கக் கல்வியின் மூலமும், நமது சமுதாயத்தில் பெண்கள், சம உரிமையும், சமூக நீதியும் பெறுவார்கள், என்று நம்புகின்றோம்.

தென்னார்க்காடு வள்ளலார், தர்மபுரி, திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய 3 மாவட்டங்களில், அனைவருக்கும் விடுதலின்றி, தொடக்கக் கல்வி வழங்குவதற்காக, 120 கோடி ரூபாய் மதிப்பில், 'தொடக்கக் கல்வி மேம்பாட்டுத் திட்டம்' ஒன்றினை, எங்களது அரசு தயாரித்து, உலக வங்கியின் நிதி உதவிக்காக, அனுப்பிவைத்துள்ளது.

எழுத்தறிவில், அகில இந்திய அளவில், இரண்டாவது இடத்தை பெற்றுள்ள நாம், புதிய சாதனைகளை உருவாக்கும் நாள், வெகுதூரத்தில் இல்லை. பள்ளிக்குச் செல்லாத, மற்றும் பள்ளியில் இருந்து நின்றுவிட்ட குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு அடிப்படைக் கல்வியை வழங்குவதற்கும் மது விலக்குக் கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்கும், 1 இலட்சத்து 50 ஆயிரம், படித்த வேலையற்ற இளைஞர்களைப் பயன்படுத்தி, நாம் செயல்படுத்தி வரும் திட்டம், வெகு விரைவில், மனித வள மேம்பாட்டில், தமிழ்நாட்டிற்கு ஒரு உன்னதமான இடத்தைப் பெற்றுத் தரும், என்று நம்புகிறோம்.

தமிழ் நாட்டில், விளையாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள். விளையாட்டில் திறமை படைத்த சிறுவர்களையும், சிறுமியர்களையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தத்து எடுத்து, அவர்களின் திறமையை வளர்த்து வருகின்றது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள, தெற்கு ஆசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு, மேலும் பல விளையாட்டு அரங்கங்கள், தமிழ்நாட்டில் கட்டப்படும். விளையாட்டுத் துறையில், தமிழகத்துக்கு என ஒரு தனி இடத்தை, நிச்சயமாக எங்கள் அரசு பெற்றுத் தரும்.

காவிரி நதி நீர்ப் பிரச்சனை

தமிழ்நாட்டின் உயிர் மூச்சுப் பிரச்சனைகளில் ஒன்றான, காவிரி நதி நீர்ப் பிரச்சனையில், இந்த அரசு மேற்கொண்டு வரும், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் அனைத்தையும், மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின், இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டியும் இந்த சிக்கலான பிரச்சினைக்கு, ஒரு நல்ல தீர்வு ஏற்பட வேண்டும் என்று எண்ணியும் நான் உண்ணாவிரத அறப்போராட்டத்தை மேற்கொண்டதன் விளைவாக, மத்திய அரசு, இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதாக, வாக்குறுதி அளித்தது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, நான் தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தியதன் காரணமாக, நிலை வல்லுநர்கள் குழு, Standing Committee of experts ஒன்று, உருவாக்கப்பட்டுள்ளது.

இது ஒரு தொடக்கமே தவிர, இடைக்கால ஆணையின்படி, நமது மாநிலத்திற்கு வழங்கப்பட வேண்டிய, 205 TMC அடி நீரை, அந்தந்த மாதத்திற்குரிய, கால அளவிற்குள், தமிழகத்திற்கு கிடைத்திட, வழி வகை செய்வதே எங்கள் குறிக்கோள். கர்நாடக நீர்த்தேக்கங்கள், முழுமையாக நிரம்பி, ததும்பி வழிந்தால்தான், மேட்டூருக்கு நீர் விடப்படும் என்கின்ற நிலை, மாறவேண்டும்.

நம்மைப் பொறுத்த வரையில், பாண்டிச்சேரிக்கு நாம் அளிக்க வேண்டிய, 6 TMC நீரை, தங்கு தடையின்றி அளித்து வருகிறோம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடுவர் மன்றத் தீர்ப்பு, எல்லோரையும் கட்டுப்படுத்தும். கர்நாடக மாநிலம், வரும் ஆண்டுகளில், நமக்கு உரிய முழு அளவு தண்ணீரை, அந்தந்த மாதங்களில் குறிப்பிட்ட அளவிற்கு, நமக்குத் திறந்து விடும் என்று நம்புகிறேன். நமது உயிர் மூச்சு பிரச்சினையான காவிரி நதி நீர் பிரச்சினையில், தமிழக அரசு எடுத்து வரும் அனைத்து ஆக்கப்பூர்வமான முயற்சிகளுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், உறுதுணையாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

நமது தரப்பில் நியாயம் இருப்பதால்தான், இயற்கை அன்னை நம் மீது, கருணைப் பார்வையை திறந்து இருக்கிறாள். தொடர்ந்து பெய்த அடை மழையால், வறண்டு கிடந்த நீர்நிலைகள் அனைத்தும், இன்று நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. இயற்கை அன்னையின் அருள், நமக்கு பரிபூரணமாகக் கிடைக்கப் பெற்றிருந்தாலும், இயற்கையிலேயே காவிரியில், நமக்குக் கிடைக்க வேண்டிய நீரைப் பெறுவதற்கு, நாங்கள் தொடர்ந்து தேவையான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை, உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரக் குடிநீர்ப் பிரச்சினை

1993 ஆம் ஆண்டு, சென்னை மாநகரில் நிலவிய, கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க, எங்கள் அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்ட, பல்வேறு நடவடிக்கைகளையும், பிரச்சினையைத் திறம்பட அணுகிய முறையையும், நான் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொண்ட ஆர்வத்தையும், ஆளுநர் அவர்கள், தனது உரையில் சுட்டிக் காட்டினார்கள். தமிழகத்திலுள்ள மக்கள் அனைவரும், பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பெறவேண்டும், என்கின்ற உயரிய இலக்கினைக் கொண்டு, நாங்கள் பொறுப்பேற்ற நாள் முதல், செயல்பட்டு வருகின்றோம். தமிழகத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும், குறைந்த பட்சம், ஒரு குடிநீர் ஆதாரத்தையாவது ஏற்படுத்தி தரவேண்டும் என்பதில், நாங்கள் காட்டி வரும் தீவிரத்தை, இம்மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், நனகு அறிவார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை மாநகரில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்ட போது, ரயிலிலும், டேங்கர் லாரிகளிலும், நெய்வேலி, ஈரோடு போன்ற பல இடங்களிலிருந்து, குடிநீரைக் கொண்டு வந்து, சுத்திகரிப்பு செய்த பின்பு, குடிநீர் விநியோகம் செய்தோம். எத்தனைக் கோடி செலவானாலும், சென்னை மாநகரத்து மக்கள், குடிநீர் வசதியைப் பெற வேண்டும் என்கின்ற, எங்களது ஆத்மார்ந்த எண்ணத்தைத் தான், இது காட்டுகின்றது. பரந்த மனதோடு, எங்கள் சாதனையைப் பாராட்டிப் பேசியவர்களுக்கு, எங்கள் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

அன்றாடப் பிரச்சினைகள் மட்டும் தீர்த்து வைத்துவிட்டு, நிம்மதியாக உட்கார்ந்து கொள்பவர்கள் அல்ல நாங்கள். தொலைநோக்கு பார்வையுடன், எதிர்காலத்தில் சென்னை மாநகர மக்கள், மீண்டும் இது போன்றதொரு சிக்கலான சூழ்நிலைக்கு, ஆளாகி விடக்கூடாது என்ற எண்ணத்தில் 'புதிய வீராணம் குடிநீர்த் திட்டத்தை', 750 கோடி ரூபாய் செலவில் தீட்டி, நிதி உதவிக்காக, உலக வங்கிக்கு அனுப்பி உள்ளோம். அடுத்த மாதம், திட்ட மதிப்பீட்டு ஆய்வினை, உலக வங்கி மேற்கொள்ள உள்ளது. வீராணம் ஏரியை ஆழப்படுத்துதல், கரைகளைப் பலப்படுத்துதல், போன்ற மேம்பாட்டுப் பணிகள், மே மாதம் முதல் தொடங்கப்படும். அக்டோபர் மாதம் வீராணம் ஏரியிலிருந்து, குடிநீர்க் குழாய்கள் பதிக்கும் பணி, ஆரம்பிக்கப்படும். 1995 இறுதிக்குள், இத்திட்டத்தினை நிறைவேற்றியே தீருவோம்.

நமது மாநிலத்தின் ஆளுகைக்கு உட்பட்ட, ஒரு நீர் ஆதாரத்தைக் கொண்டு, சென்னை மாநகருக்கு, குடிநீர் ஏற்பாடு செய்து தருவது தான், சாலச் சிறந்தது என்று, நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அதே நேரத்தில், சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டுவரும், 'தெலுகுகங்கா' திட்டத்தையும், விரைந்து எவ்விதத் தொய்வும் இன்றி, செயல்படுத்தி வருகிறோம். 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள், தெலுகுகங்கா திட்டம், முழுமையாக முடிவடைந்து விடும் என்று, எதிர்பார்க்கின்றோம். இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்படும் போது, எத்தகையதொரு சூழ்நிலையிலும், சென்னை மாநகரத்திற்குக் குடிநீர்த் தட்டுப்பாடு, தண்ணீர் பஞ்சம், என்கின்ற பிரச்சினை எழாது என்பதை, நான் அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியும். சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, எங்களுக்கு முன்பிருந்த அரசுகள், மேற்கொள்ளாத திட்டங்களை, நாங்கள் மேற்கொள்வதை, அரசியல் மாச்சரியங்களைக் கடந்து, இந்த

நடைமுறைப்படுத்தி, மத்திய அரசு மாநிலங்களுக்கு, அதிக நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று, வற்புறுத்த விரும்புகிறேன்.

மத்திய அரசின் வரவுசெலவுத் திட்டமும், பண வீக்கமும்

1994-95 ஆம் நிதி ஆண்டிற்கான, மத்திய அரசின் வரவு செலவு திட்ட அறிக்கை பற்றி, ஏற்கெனவே நான் என்னுடைய விரிவான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். இப்பொழுது எனக்கு எழுந்துள்ள அச்சம், இந்த நிதி நிலை அறிக்கையிலுள்ள பற்றாக்குறை, பண வீக்கத்தை ஏற்படுத்தி, விடுமோ என்பதுதான். ஏனென்றால், மாநில அரசுகளுக்கு, அத்யாவசிய பொருளாதார நிலையைக் கட்டுப்படுத்தக் கூடிய, எந்த வித அதிகாரமும் இல்லை. அதன் முழு பொறுப்பும், மத்திய அரசையே சாரும். எனவே, பொருளாதார நிலையை, கட்டிக் காக்க வேண்டிய முழுப்பொறுப்பு, மத்திய அரசுக்கு முழுமையாக உள்ளது. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, பொருளாதார நிலைமைகளை மாற்றி அமைக்கும் அதிகாரங்கள், அதாவது, Macro Economic Indicators, மத்திய அரசிடம்தான் உள்ளது. ஆனால் பண வீக்கத்தினால், விலைவாசி உயர்வு ஏற்படும் போது மக்கள் படும் இன்னல்களைத் தீர்க்க, நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் மக்கள் மத்தியில் விளக்கம் தர வேண்டிய கட்டாயமும் மாநில அரசுகளுக்கு ஏற்படுகிறது.

பண வீக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விலைவாசி உயர்வைக், கட்டுப்படுத்த வேண்டிய மத்திய அரசு, தனது அதிகாரத்தின் கீழ் உள்ள பல பொருள்களின் விலையை, கணிசமான அளவு உயர்த்துவதால், மாநில அரசுகள், வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக, நலிந்த பிரிவினைச் சேர்ந்த, ஏழை எளிய மக்கள், அன்றாடம் பயன்படுத்தக் கூடிய, உணவு, எரிபொருள், உடை, வீட்டு வசதி, ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும், ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக் கூடிய, அத்தியாவசியப் பொருள்களின் மீதான விலைவாசியை, மத்திய அரசு கட்டுப்படுத்த வேண்டும் என்ற கருத்தினை, நான் வலியுறுத்திப் பேசியுள்ளேன்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவுத் தானியங்களின் விலையை, மத்திய அரசு தொடர்ந்து, பல முறை உயர்த்தியுள்ளது. அதே போல், டீசல், மண்ணெண்ணெய், ஆகியவற்றின் விலையையும் உயர்த்தியுள்ளது. மத்திய அரசின் கொள்கையினால், நூல் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் ஏழை நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு, துணிகளின் விலை அதிகரித்துள்ளது. அனைவருக்கும் வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருவோம் என்று, மத்திய அரசு பல நேரங்களில், பிரகடனம் செய்து வந்தாலும் தேசிய வீட்டு வசதி வங்கி, National Housing Bank என்ன செயலாற்றிக் கொண்டிருக்கின்றது என்று, யாருக்கும் இதுவரையில் புரியவில்லை.

ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள், மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு, தமிழக அரசு ஆதரவு கொடுத்து வருகிறதா, இல்லையா, என்றெல்லாம் கேட்டார்கள். நம்மைப் பொருத்த வரையில், ஏழை எளிய மக்கள், நலிவடைந்த பிரிவினர் பாதிக்கப்படாமல், பொருளாதாரக் கொள்கைகளை, மத்திய அரசு வகுத்துக் கொள்ள வேண்டுமென்று, வலியுறுத்தி வருகிறோம். ஆனால் நமது கோரிக்கையை, மத்திய அரசு ஏற்றுக்கொண்டதாக, அதன் அணுகுமுறையில் தெரியவில்லை.

மக்களின் அடிப்படைத் தேவைகளையும், இன்றியமையாத தேவைகளையும் ஆய்ந்து அறிந்து, அவற்றைப் பூர்த்தி செய்யும் முயற்சிகளில் ஈடுபடும் கடமை, மாநில அரசுகளுக்கு உண்டு. எனவே, ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் கொள்கைகளை, மத்திய அரசு செயல்படுத்தி வரும் இந்தக் கட்டத்தில், மாநில அரசு எதுவும் செய்யாமல், வாளா இருக்க முடியாது, கடுமையான நிதி நெருக்கடியிலும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும், அரிசியின் விலையை, ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காக, அதிக அளவில் மானியச் சுமையைத் தாங்கும் ஒரே அரசு, எங்கள் அரசு தான் என்பதை நிச்சயமாக எங்களால் சொல்ல முடியும். அதேபோல, பொது மக்களின் நலன் கருதி, பேருந்துக் கட்டணத்தைக் குறைவாக வசூலிக்கும் மாநிலமும், தமிழ்நாடுதான் என்பதை, என்னால் ஆணித்தரமாகக் கூற முடியும். 45 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து, ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வண்ணம், 1 கோடியே 20 இலட்சம் பேருக்கு மேல், இலவசமாக வேட்டி சேலை வழங்கி வருவதும், இந்த அரசு தான். ஏழை எளிய மக்களுக்காக சுமார் ஒரு இலட்சம் வீடுகள் வழங்கும் எண்ணத்தில், பல வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

எங்கள் அரசு, ஏழை எளியவர்கள், புதிய பொருளாதாரக் கொள்கையினால் பாதிக்காத வண்ணம், அவர்களது நலனைக் கட்டிக் காத்து வருகிறது. இதனால் அதிக நிதி நெருக்கடியையும், கூடுதல் நிதி பளுவையும், சமாளிக்க முடியாத ஒரு சூழ்நிலை, உருவாகியுள்ளது. மத்திய அரசின் பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டத்தினால், மீண்டும் பணவீக்கம் ஏற்படாமல் தடுக்க, மத்திய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசின் அளவில், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாத அளவுக்கு, அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவிட்டோம். எனவே, மீண்டும் பொருளாதார சூழ்நிலையில் தொய்வு ஏற்பட்டு, பண வீக்கம் ஏற்படுமானால், அதன் முழுப் பொறுப்பையும், மத்திய அரசே ஏற்க வேண்டும். மத்திய அரசு கவனத்துடன், விலைவாசிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்று, மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

முடிவுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! எங்கள் அரசு, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாக முன்வைத்து, செயல்பட்டு வருகின்றது. தேர்தல் காலத்தில் நாங்கள் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும், ஒன்றன்பின் ஒன்றாக, நிறைவேற்றி வருகின்றோம். எங்கள் செயல்பாட்டில், சில உறுப்பினர்கள் குறைகளைக் கண்டாலும் குற்றங்களைச் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொண்ட பணியை, எந்தவிதமான தொய்வும் இன்றி, தொடர்ந்து செயலாற்றுவோம் என்பதை, இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். Constructive Criticism, உபயோகமான கருத்துக்கள், எந்த மூலையில் இருந்து வந்தாலும், அதை எங்கள் அரசு வரவேற்கின்றது. நல்ல கருத்துக்களைப் பரிசீலித்து, நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

பாராட்டப்பட வேண்டிய அம்சங்களை, மனம் திறந்து பாராட்டுங்கள். உண்மையிலேயே குறை இருந்தால், அதைத் தாராளமாகச் சுட்டிக்காட்டுங்கள். ஆனால் நாங்கள் செய்ததை எல்லாம், எப்படியாவது குற்றம் கூற வேண்டும் குறை கண்டுபிடிக்க வேண்டும் என்பதையே கொள்கையாகக் கொண்டு செயல்பட்டால் நம்மை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த மக்களுக்கு, என்ன நன்மை செய்கிறோம் என்பதையும் சிந்தியுங்கள், என்று எடுத்துரைக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

"The important thing for Government is not to do things which individuals are doing already, and to do them a little better or a little worse; but to do those things which at present are not done at all"- என்று சொல்லியிருக்கிறார். John Maynard Keynes என்ற ஆங்கிலப் பொருளாதார நிபுணர். இவர் 1883 -லிருந்து 1946-வரை வாழ்ந்தவர்.

அவர் என்ன சொல்லியுள்ளார் என்றால் "ஒரு அரசாங்கத்தின்

மாமன்றத்திற்கே உரித்தான பாரம்பரியத்துடன், மாண்புமிகு உறுப்பினர்கள், மனம் திறந்து பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன்.

பொதுமக்கள் குறை தீர்க்கும் பணி

ஆளுநர் அவர்கள், தனது உரையில் குறிப்பிட்டது போல, பொது மக்கள் குறை தீர்க்கும் பணியில், இந்த அரசு, பல புதிய முறைகளைக் கையாண்டு, பொதுமக்கள் மத்தியில், ஒரு நல்ல கருத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மக்கள் தான் இறுதி எஜமானர்கள்' என்ற மக்களாட்சித் தத்துவத்தில், அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ள நாங்கள், மக்கள் குறை தீர்க்கும் பணியை, புனிதப் பணியாகக் கருதுகின்றோம். 1992ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நாள் என்று ஒதுக்கி, நானே அம்மாவட்டத்து மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, மனுக்களைப் பெற்று, விரைவில் அந்த மனுக்களின் மீது, விசாரணை மேற்கொள்ள வழிவகை செய்தேன். அதன் விளைவாக, எண்ணற்ற ஏழை எளியவர்கள், பயன் பெற்றுள்ளார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போது, எனக்கு மகிழ்ச்சி கலந்த ஒரு திருப்தியும், மக்களுக்கு நேரடியாகத் தொண்டாற்ற முடிந்த, ஒரு மன நிறைவும் ஏற்படுகினறது.

பின்னர், இரண்டாவது கட்டமாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நானே சென்று, திட்டப் பணிகளைத் துவக்கி வைக்கும் அதே விழாவில், பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு, அரசு நலத்திட்ட உதவிகளை, ஒரே நேரத்தில், என் முன்னிலையிலே வழங்குவதற்கு, ஏற்பாடு செய்து வருகின்றேன். அதன் அடிப்படையில் இது வரை, 13 மாவட்டங்களைச் சேர்ந்த, 3,00,377 பயனாளிகளுக்கு, 201 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல்வேறு நலத்திட்ட உதவிகள், வழங்கப்பட்டுள்ளன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய முதலீட்டிலான திட்டங்களைச் செயல்படுத்தி, அதன் மூலம் நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்ய, நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில் நாங்கள் தனிப்பட்ட முறையில், அரசு நலத்திட்ட உதவிகள், நலிந்த பிரிவினரைச் சேர்ந்த மக்களுக்கு, சென்றடைவதிலும், மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றோம் என்பதைத்தான், இது காட்டுகின்றது. எங்கள் அரசின் மக்கள் பணியின், மகத்தான சாதனை இது என்பதை, இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

சாதாரணமான ஒரு அலுவலகமாக இயங்கி வந்த, முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு, இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவரை, தனி அலுவலராக நியமனம் செய்ததோடு கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்தியும் கம்ப்யூட்டரைப் பொருத்தியும் பெறப்படுகின்ற மனுக்கள் மீது, எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைக், கண்காணித்து வருகின்றோம். மாவட்ட அளவில், பொது மக்களின் மனுக்களை விசாரணை செய்து, அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கென்றே, ஒரு துணை ஆட்சியரையும், அவருக்குரிய உதவியாளர்களையும், நியமனம் செய்துள்ளோம்.

மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர், பொது மக்களிடமிருந்து பெறுகின்ற மனுக்கள் மீதும், இந்தத் தனிப் பிரிவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், ஒரு புதிய அம்சமாகும். இவ்வாறு பொது மக்களின் குறை தீர்க்கும் பணியில், தமிழக அரசு, எனது நேரடி பார்வையில், ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகள் பராமரிப்பு மற்றும் மேம்பாடு

சென்ற ஆண்டு இறுதியில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட பெருமழை மற்றும் வெள்ளத்தால், பரவலாக நெடுஞ்சாலைகளும், சாலைகளும், பாலங்களும், பாதிக்கப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர் திரு தம்புசாமி அவர்களும், வேறு சில உறுப்பினர்களும், நெடுஞ்சாலைகளை விரைவில் செப்பனிட வேண்டும், என்று கேட்டுக் கொண்டார்கள்.

451 நீர்நிலைகளில் உடைப்புகள் ஏற்பட்டன. 30 தரைப் பாலங்கள், 757 சிறிய பாலங்கள், 19 பெரிய பாலங்கள், பழுது அடைந்துள்ளன. 3156 கிலோமீட்டர் அளவுக்கு, சாலைகள் பாதிக்கப்பட்டன. இதன் மராமத்து பணிகளுக்கும், மேம்பாட்டுப் பணிகளுக்கும், தமிழக அரசு உடனடியாக, 15 கோடி ரூபாயை வழங்கியது. மேலும், வெள்ளச் சேதங்கள் ஏற்படுவதற்கு முன்பிருந்த நிலைக்கு, சாலைகளையும் நீர்நிலைகளையும் கொண்டு வர வேண்டும் என்றால், அதற்கு 50 கோடி ரூபாய் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டது. அதில் ஒரு கோடியே 77 இலட்சம் ரூபாய், உடனடியாக மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு, மராமத்துப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இருப்பினும், தமிழ்நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகள், பாலங்கள், ஆகியவற்றின் தரத்தை, மேம்படுத்த வேண்டும் என்பதற்காக, 850 கோடி ரூபாய் மதிப்பில், புதிய திட்டம் ஒன்றைத் தீட்டினோம். உலக வங்கியின் நிதி உதவி கோரி, அனுப்பப்பட்ட இந்தத் திட்டம், மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கடந்த பிப்ரவரி மாதம், உலக வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2320 கிலோ மீட்டர் அளவிலான சாலைகளுக்கும் 3438 பாலங்கள் போன்ற கட்டுமானங்களுக்கும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் நிறைவேற்றப்படும்போது, தமிழ்நாட்டில் உள்ள சாலைகள், ஒரு புதிய பொலிவினைப் பெறும் என்பதில், எனக்கு நம்பிக்கை உண்டு.

அது மட்டுமின்றி, தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சாலைகள் மற்றும் நீர்ப்பாசன ஆதாரங்களைச் செப்பனிடுவதற்கும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கும் 31 கோடி ரூபாய் நிதி உதவியை, உலக வங்கியிடமிருந்து கோரியிருந்தோம். அண்மையில், 31 கோடி ரூபாய், உலக வங்கியினால் ஒப்பளிக்கப்பட்டுவிட்டது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், விரைவில் துவங்கும்.

சாலைகள் பராமரிப்பில், எங்கள் அரசு, தனிக் கவனம் செலுத்தி வருகிறது. 1990-91 ஆம் ஆண்டில், 4800 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளைப் புதுப்பிக்க, 73.50 கோடி ரூபாய் மட்டுமே, ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் 1993-94 ஆம் ஆண்டு 7,585 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள், 140 கோடி ரூபாய் செலவில், புதுப்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, 7912 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள், புதுப்பிக்கப்பட்டு வருகின்றன என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

Central Road Fund எனப்படும், மத்திய சாலை நிதித் தொகுப்பிலிருந்து, மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் நிதி ஒதுக்கீட்டு அளவை, உயர்த்தவேண்டும் என்று, 1988 ஆம் ஆண்டிலேயே, நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை, இங்கே சுட்டிக் காட்டுவது, எனது கடமை என்று கருதுகிறேன். ஆனால் 1988 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், கிணற்றில் போட்ட கல்லாக இருக்கின்றது. மத்திய அரசு இதன் மீது, ஒரு நடவடிக்கையும் எடுக்காதது, பெரும் வியப்பைத் தருகின்றது. இத்தீர்மானத்தைப் புறக்கணிக்காமல்,

பறக்கவிடப்படுகிறது. மக்களின் முன்னேற்றம் பற்றிய சிந்தனைகள், நமது சிந்தையை விட்டு மறைந்து விடுகின்றன. எனவே, பொதுவாழ்வில் ஈடுபடுவோர், மக்கள் நலன் ஒன்றையே இலக்காக வைத்து, செயலாற்ற வேண்டும் என்பதை, மீண்டும் இந்த மாமன்றத்தின் மூலம், தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் நலன் கருதி, தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியே, நமது குறிக்கோள் என்று இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று எனது தனிப்பட்ட முறையிலும், இந்த மாநிலத்தின் முதலமைச்சர் என்ற முறையிலும், அன்பான வேண்டுகோளை, இந்த மாமன்றத்தின் முன் வைக்க விழைகின்றேன்.

"போற்றுவோர் போற்றட்டும்! புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும்! மக்கள் பணி செய்து கிடப்பதே எங்கள் கடமை", என்ற சித்தாந்தத்துடன், தொடர்ந்து மக்கள் நலனுக்காகப் பாடுபடுவோம் செயலாற்றுவோம், என்று மீண்டும் எடுத்துரைத்து இந்த விவாதத்தில் கலந்துகொண்டு, தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.

மக்கள் ஆதரவே மகத்தானது!

தமிழக மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து, அவர்களின் பேராதரவைத் தந்து, அவர்களுக்கு உழைக்கும் வாய்ப்பை எனக்கு நல்கி இருக்கிறார்கள். மக்கள் ஆதரவே, மகத்தானது என்பதை உணர்ந்திருப்பவள் நான். மக்கள் பணியே மகேசன் பணி என்று கொண்டிருப்பவள் நான். எனவே எனக்கு உங்கள் ஆதரவு உள்ளவரை எந்தச் சக்தியாலும் எங்களை நெருங்க முடியாது, அசைக்க முடியாது.

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.

மாவட்டத் தலைநகர்களில்:

அறுவைச் சிகிச்சைக் கருவிகளைத் தூய்மைப்படுத்த நவீன வசதி!

தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகர்களில் இயங்கும் அரசு மருத்துவமனைகளில் நுணுக்கமான அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள வசதியாக, நுண்கிருமிகள் பாதிக்காத அளவிற்கு அறுவைச் சிகிச்சைக் கருவிகளைத் தூய்மைப் படுத்த நவீன வசதி Centralised Autoclave Sterilisation System தேவை என்பதை அறிந்த, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்த நவீன வசதியை ஐந்து மாவட்ட மருத்துவமனைகளில் ஏற்படுத்தித் தர ரூபாய் 15 இலட்சம் அனுமதித்து ஆணையிட்டுள்ளார்.

தமிழகத்தில் முதன்முறையாக, மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இந்த வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது. காஞ்சிபுரம், தருமபுரி, கடலூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடியிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளில் இந்த வசதியை உடனடியாக ஏற்படுத்தித் தர மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்தித் திணிப்பு முயற்சியை முறியடிப்போம்; இருமொழிக் கொள்கையைப் பாதுகாப்போம்!

தஞ்சாவூர் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

தஞ்சாவூரில் 11.3.94 அன்று நடைபெற்ற அரசு விழாவில், 130 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், அரசின் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 30,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்குப் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை.

'சுழன்றும் ஏர்பின்னது உலகு' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப, உலகத்திலுள்ள அனைத்துத் தொழில்களுக்கும், அச்சாணியாக விளங்குகின்ற சிறப்பினைப் பெற்ற, உழவுத் தொழிலை மேற்கொண்டுள்ள, விவசாயப் பெருங்குடி மக்கள் வாழும் தஞ்சைத் தரணிக்கு வந்து, உங்களையெல்லாம் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

தஞ்சை மாவட்டத்தின் தன்னிகரற்ற வளர்ச்சியை, உறுதி செய்கின்ற வகையில், இன்று 133 கோடி ரூபாய் மதிப்புள்ள, திட்டங்களைத் துவக்கி வைத்தும்; அடிக்கல் நாட்டியும்; 30,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தஞ்சைப் பகுதி மக்களது வாழ்க்கையோடு, பின்னிப் பிணைந்த உயிர் மூச்சுப் பிரச்சினை, காவிரி நதி நீர்ப் பிரச்சினை, 'வான் பொய்ப்பிலும் தான் பொய்யா'க் காவிரி என்று, ஆண்டாண்டுக் காலமாக வற்றாமல் ஓடி; தமிழக மக்களின் ஜீவநாடியாகவும்; தமிழகக் கலாச்சாரத்தின் ஆணி வேராகவும்; தமிழ் நாகரிகத்தின் அடையாளச் சின்னமாகவும், விளங்கிவந்த காவிரி நதியில் , 'நீரைத் திறந்து விடுங்கள்' என்று, அண்டை மாநிலத்தைப் பார்த்து, வேண்டுகோள் விடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம், என்பதை எண்ணிப் பார்க்கும்

முக்கியமான கடமை, மற்றவர்கள் ஏற்கெனவே செய்து கொண்டிருக்கின்ற பணியை, அவர்களைவிட சிறப்பாகவோ அல்லது மோசமாகவோ செய்வது அல்ல. ஆனால் இதுவரை யாருமே செய்யாத பணிகளை, மேற்கொண்டு செய்வதுதான், அரசாங்கத்தின் முக்கியக் கடமை" என்ற கருத்தின் அடிப்படையில்தான், என் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

எத்தனையோ உதாரணங்கள் என்னால் சுட்டிக்காட்ட முடியும். என்றாலும், ஒரு சில முக்கியமான விவரங்களை, இந்தப் பேரவையின் முன்பு எடுத்து கூறுவது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஆண்டாண்டுக் காலமாகப் பெண் குழந்தைகள், கருவெடுத்து உருவான பின்பு, கொல்லப்படுகின்ற கொடிய பழக்கம், மாநிலத்தின் பல இடங்களில் நிலவி வந்ததை, எங்களுக்கு முன்பிருந்த அரசுகள் அறிந்திருந்தாலும் முதன்முறையாக அரசாங்கமே, தனது உதவிக் கரத்தை நீட்டி, உதவி செய்ய முன் வந்தது, எங்கள் ஆட்சியில் தானே? 'தொட்டில் குழந்தை திட்டத்தைக்' கொண்டு வந்து, அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு, நாங்கள் எடுத்த நடவடிக்கை, இதுவரை எந்த அரசாங்கமும் எடுக்காத நடவடிக்கை அல்லவா?

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளும் பாலியல் ரீதியாக இழைக்கப்படுகின்ற அநீதிகளும் வரதட்சணைக் கொடுமைகளும் பல்லாண்டுகளாக இந்தச் சமுதாயத்தில், புரையோடிப்போன விஷயங்கள்தான். ஆனால், பெண்களின் உண்மையான பிரச்சினைகளை ஆராய்ந்து இந்தச் சமுதாயக் கொடுமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கும் சமூக நீதி வழங்க வேண்டும் என்று, நமக்கு முன்பிருந்த அரசுகள் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. எங்களது ஆட்சிக் காலத்தில், எல்லா மாவட்டத் தலைமை இடங்களிலும், மாநகரங்களிலும், 29 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்திட, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அகில உலகத்திற்கே இந்த விஷயத்தில், நாம் முன்னோடியாக இருக்கிறோம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பாகிஸ்தான் நாட்டுப் பிரதமர் பேநசீர் பூட்டோ, ராவல்பிண்டியில் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைத்ததாக, ஒரு செய்தியினைச் செய்தித் தாள்களில் பார்த்திருப்பீர்கள். அண்டை மாநிலமான கர்நாடகத்திலும், இரண்டு நாட்களுக்கு முன்பு, அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. ஆக, தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு மட்டுமின்றி, மற்ற நாடுகளுக்கும் முன்னோடியாக இருக்கிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்குவதற்கு, இரண்டு நீர்த்தேக்கங்கள், 1870-ஆம் ஆண்டில், ஆங்கிலேயர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்றாவது நீர்த்தேக்கம், 1940-ல் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது சென்னை மாநகரம், மிகச் சிறிய நகரம் அதன் தேவைகள் மிகவும் குறைவு. இன்று கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு, மக்கள் தொகையும் கூடியுள்ளது பிரச்சினையும் பெருகியுள்ளது, குடிநீர்த் தேவையும் அதிகரித்துள்ளது. ஆனால் இன்றும் அதே மூன்று குடிநீர் ஏரிகள் மட்டும் தான், சென்னைக்கு குடிநீர் வழங்கி வருகின்றன. சென்னை குடிநீர்ப் பிரச்சனையை, உறுதியான முறையில் தீர்த்து வைப்பதற்கு, எந்தவொரு நல்ல திட்டமும் செயல்படுத்தப்படவில்லை என்று தான் கூறுவேன். எனவேதான், 'புதிய வீராணம்' திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளோம்.

காவல் துறை எத்தனையோ வருடங்களாகச் செயல்பட்டு வருகின்ற ஒரு துறை. மக்கள் நலனையும், பொது அமைதியையும் பாதுகாக்கும், ஒரு முக்கியமான துறை. ஆனால் ஹைதர் காலத்து ஆயுதங்களையும், செயல்முறைகளையும் கொண்டு, பல காலமாக இயங்கி வந்தது. இதுவரை அந்தக் காவல் துறையை, ஒரு குறுகிய காலத்திற்குள் நவீனப்படுத்த வேண்டும் என்று, யாருமே சிந்தித்து நடவடிக்கை எடுக்கவில்லை. காவல் துறையை நவீனப்படுத்துவதில், நாம் அகில இந்திய அளவில், மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கிறோம் என்பதை, ஆணித்தரமாக என்னால் கூறமுடியும்.

அதேபோல, பூமியில் புதைந்து கிடந்த லிக்னைட் டெபாசிட்டுகள் எத்தனையோ காலம் வீணாகிக் கிடந்தது. ஆனால் மத்திய அரசு, நெய்வேலியில் உள்ள இந்தப் பழுப்பு நிலக்கரியை, ஓரளவுக்குத் தான் பயன்படுத்த முடிந்தது. முதன் முறையாக மாநில அரசு, லிக்னைட் நிலக்கரியைப் பூமியில் இருந்து எடுக்கின்ற, சுரங்கப் பணியையும், அத்துடன் மின்சாரம் தயாரிக்கின்ற பணியையும், முதன்முறையாக அகில இந்திய அளவிலே திட்டம் தீட்டி, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, செயல்படுத்திவருகிறது என்றால், அது தமிழகத்தில் மட்டும் தான்.

மக்கள் குறை தீர்க்கும் பணியில், ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், இத்தனை ஈடுபாடு கொண்டு, மனுக்களை நேரில் பெற்று, நடவடிக்கைகள் எடுப்பதும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஒரே நேரத்தில், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதும் இதுவரை எந்தவொரு அரசாங்கமும் செய்யாத ஒரு பணி என்பதை, நிச்சயமாக என்னால் கூற முடியும்.

அருமையான கலைச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்ட, ஆயிரக்கணக்கான புராதனக் கோயில்கள், தமிழகத்தில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கேட்பாரின்றி, எவ்விதமான பராமரிப்பும் இன்றி, சீரற்றுச் சிதிலமடைந்து கிடந்தன. எங்கள் ஆட்சி மலர்ந்த பின்பு, அத்தகைய சரித்திரச் சிறப்பு வாய்ந்த கோயில்கள், சீரமைக்கப்படுகின்றன; பூஜைகள் நடைபெறுகின்றன; புனரமைப்பு பணிகள் நடைபெறுகின்றன. இந்தக் கோயில்களை சீர்திருத்த வேண்டுமென்று, எங்களுக்கு முன்பிருந்த மாநில அரசுகள், நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அதற்கென்று ஒரு நிதியை நாங்கள் ஏற்படுத்தி, அத்திருக்கோயில்களைப் புனரமைத்து, ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். தமிழகத்தில் நடைபெறுகின்ற புனரமைப்புப் பணிகளையும், திருப்பணிகளையும் பார்த்து, மற்ற மாநிலங்களும் புராதன கோவில்களைப் பராமரிப்பதில், தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளன என்றால் நாம் மற்ற மாநிலங்களுக்கு, முன்னோடியாக இருக்கிறோம் என்று தானே பொருள்?

எனவே, பொருளாதார மேதை Keynes அவர்கள் கூறியதைப் போல, இதுவரை யாருமே செய்யாத பணிகளை, எங்களது அரசு செய்து வருகிறது என்பதை, நான் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பல சந்தேகங்களுக்கு, எனது பதிலுரையில் தெளிவான விளக்கங்களை அளித்திருந்தாலும் தமிழக அரசின் பல்வேறு செயல்பாடுகளைப் புள்ளி விவரங்களோடு எடுத்து விளக்கியுள்ளேன். தமிழக மக்களின் பேராதரவினைப் பெற்றுள்ள இந்த அரசு, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்பச் செயல்பட்டு, தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு வழி வகுக்க, தொடர்ந்து பாடுபடும் என்பதை, மீண்டும் ஒரு முறை, இம்மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொது வாழ்க்கையில் ஈடுபடுவோர், பல நேரங்களில், தாங்கள் கொண்ட கொள்கை அடிப்படையில், மாறுபட்ட கொள்கை படைத்தோருடன், கருத்துப் போர்களில் ஈடுபட வேண்டி வரலாம். அது இயற்கை. நான் அதை நன்கு அறிவேன். இந்தக் கொள்கைப் போர், கருத்துப் போருக்கு அடிப்படையாக, மக்கள் நலன் மட்டும் தான் இருக்க வேண்டும் என்பது, எனது அசைக்க முடியாத நம்பிக்கை. கொள்கை அடிப்படையைத் தவிர்த்து, மக்கள் நலனைத் தாண்டி, அரசியல் மனமாச்சரியங்கள், பூதாகரமாக உருவெடுக்கும்போது அங்கே நாட்டின் நலன் காற்றிலே

போது, என் மனம் வேதனைப்படுகின்றது.

தமிழக மக்களின் உரிமைகளைச் சரியான நேரத்தில் காப்பாற்றாமல், சிலர் கோட்டைவிட்ட காரணத்தால், இன்று நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தண்ணீருக்குப் போராடவேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். காலத்தே காப்பாற்றப்படாததால், இழந்துவிடுகின்ற உரிமையை, மீட்டுப்பெறுவது என்பது, எத்தகையதொரு பிரச்சினைக்குரியது என்பதை, காவிரிப் பிரச்சினை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. சரித்திரம் நமக்குக் கற்றுத் தந்த பாடமாகத்தான், இதனை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நடந்ததைப் பற்றிக் கவலை கொள்வதில், எந்தப் பயனும் இல்லை என்பது, நன்றாகத் தெரியும். நானும் அப்படிக் கவலைப்பட்டு, சோர்ந்துவிட மாட்டேன்! ஆனால் விவசாயத் தேவைக்குப் போதுமான குறைந்தபட்சக் காவிரி நதிநீரைப் பெற, நாம் நடத்திய போராட்டங்கள் தான், எத்தனை, எத்தனை? அனுபவித்த துன்பங்கள்தான் எத்தனை?, எத்தனை?

தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநீதியால், தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு, ஒரு நல்ல தீர்வு காணவேண்டும் என்று எண்ணி, உண்ணாவிரத அறப் போராட்டத்தை நான் மேற்கொண்ட போது, தன்மானம் மிக்க தமிழக மக்கள் அனைவரும், ஓர் அணியில் திரண்டு, எனது பக்கம் நின்றார்கள். தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினைக்குத் தீர்வு காண, நான் மேற்கொண்ட அறப்போராட்டத்தை, முழுமையாக ஆதரித்த பலதரப்பட்ட மக்களின் பேரன்பையும், பேராதரவையும், இன்று நினைத்தாலும், என் மனம் நெகிழ்ந்துபோகிறது. அன்று உங்கள் பேராதரவுடன் நான் மேற்கொண்ட அறப்போராட்டத்தின் விளைவாக, மத்திய அரசு, காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின், இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் முகத்தான், ஒரு குழுவை அமைத்தது. அதன்மூலம், தமிழ்நாட்டுப் பகுதிக்குப் காவிரியில் வரும் நீரின் அளவு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. உங்கள் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும், அக்கறை கொண்டிருக்கும் நாங்கள், எப்போதும் விழிப்போடு இருந்து, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி, நமக்குக் கிடைக்கவேண்டிய பலன்கள் அனைத்தையும், பெற்றுத் தருவதில் தயங்கமாட்டோம்.

நமது தரப்பில் நியாயம் இருப்பதால் தான், இன்று இயற்கை அன்னைகூட, நமது பக்கம் இருக்கிறாள். தொடர்ந்து பெய்த அடைமழையால், வறண்டு கிடந்த எல்லா நீர்நிலைகளும், நிரம்பி வழிந்ததும், ஆறுகள் கரைபுரண்டு ஓடியதும் தான், இதற்கு எடுத்துக்காட்டு. காவிரியில் நமக்குரிய நீர் மறுக்கப்பட்டாலும், இயற்கை அன்னையின் அருளோடு, தஞ்சைப் பகுதியில் வேளாண்மை உற்பத்திக்கு, எந்தவித பாதகமும் இன்றிப் பாதுகாத்து வருகிறோம்.

மழை நமக்கு வரப்பிரசாதமாக இருந்தாலும், இயற்கைச் சீற்றங்களால், இந்தப் பகுதியில் ஏற்பட்ட சேதங்களையும், மக்களின் உடைமைகளுக்கும் உயிருக்கும் ஏற்பட்ட பாதிப்புகளையும், நான் நன்கு அறிந்து இருந்த காரணத்தால்தான்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களையும், உதவிகளையும் வழங்குவதில், நானே நேரிடைக் கவனம் செலுத்தினேன். பல பொதுச் சொத்துக்களுக்குத் தொடர்ந்து, இயற்கைச் சீற்றங்களினால் ஏற்பட்ட பாதிப்புகளையெல்லாம், நேர் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான், இன்று இந்த மாவட்டத் தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு, அடிக்கல் நாட்டியுள்ளேன்.

தொன்மையான வரலாற்றைக் கொண்ட, அருங்கலைகளின் இருப்பிடம்தான், இந்தத் தஞ்சைத் தரணி. இந்த மாவட்டத்தின் மக்கள் தொகையில், அடிப்படை எழுத்தறிவு கூட பெறாமலுள்ள, 4 இலட்சம் மக்களுக்கு, எழுத்தறிவுக் கல்வியை வழங்குவதற்காக, 'அறிவொளி இயக்கத்தை' இந்த மாபெரும் விழாவில் துவக்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எழுத்தறிவு பெறுபவர்களில் பெரும்பாலோர், பெண்கள். இந்த மாவட்டத்தின் பெண்கள் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், இந்த அடிப்படை எழுத்தறிவுக் கல்வி, ஒரு புதிய எழுச்சியை உண்டாக்கும் என்பது, எனது மகிழ்ச்சியை இரட்டிப்பு ஆக்குகின்றது. இந்த அரிய பணியில், சேவை மனப்பான்மையுடன் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, செயலாற்ற இருக்கும், அறிவொளி இயக்கத்தின் தொண்டர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்று தமிழ் நாட்டில், மனிதவள மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும், நாம் எடுத்துவரும் பல்வேறு முயற்சிகள், மிக விரைவில் நல்ல பயன்களைத் தரும் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகியோர் காட்டிய புனித பாதையில், இலட்சியப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் நாங்கள், அவர்களின் அடியொற்றி, தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் மகிழும் வண்ணம், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, அடுத்த ஆண்டு, தஞ்சை மாநகரில் நடத்த உள்ளோம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்

மொழியின் மேன்மையினையும், சிறப்பினையும், பாங்குற எடுத்துரைக்க உலகின் பல பாகங்களிலிருந்து அறிஞர் பெருமக்கள் பெருந்திரளாகத் தஞ்சையில்கூடி, தமிழன்னைக்கு ஆராதனை செய்வார்கள்.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்கள், ஒருபுறம், தமிழ் மொழியின் இலக்கணத்திற்கும், இலக்கியத்திற்கும் சிறப்புச் சேர்க்க; ஆய்வரங்கங்களிலும், கருத்தரங்குகளிலும், பங்கு கொள்வார்கள். மறுபுறம், தமிழ் மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியமிக்க கலை நிகழ்ச்சிகள், பல இடங்களில் நடைபெறும். கலை நிகழ்ச்சிகளை நடத்தவும்; மொழி பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும்; தஞ்சாவூரில் புதிய கலை அரங்கங்கள் நிர்மாணிக்கப்படும். உலகின் பல்வேறு பாகங்களிலிருந்து வரும், அறிஞர் பெருமக்கள் தங்குவதற்கு விடுதிகளும், நட்சத்திர ஓட்டல்களும் உருவாகும் என்பதையும், பெருமகிச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சை மாநகருக்கு, இந்த மாநாடு பலவிதத்தில் பொலிவினையும், ஏற்றத்தினையும் தரும் என்பதில், எனக்கு ஐயமில்லை.

'தமிழ் எங்கள் உயிர்' என்று, மூச்சுக்கு முன்னூறு தரம், தேர்தல் காலத்தில் பேசித் திரிபவர்கள், இதுவரை இந்த மாநாட்டை நடத்தவில்லை! பகட்டுத்தனம் ஏதுமின்றி, தமிழ்மொழி நலன்காக்க, மக்களின் பேராதரவுடன் ஆட்சிக் கட்டிலேறிய நாங்கள், உலகத் தமிழ் மாநாடு நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். சொல்லில் நயம் இருப்பது போல, உண்மையும் இருக்கவேண்டும். எங்கள் சொல்லிலும் செயலிலும், உண்மையும் இருக்கிறது; மக்களுக்கு நன்மையும் இருக்கின்றது. தமிழ்த் தாயின் பெருமையை, உலகெங்கும் பரப்ப முற்படும் அதே நேரம், இந்தித் திணிப்பு முயற்சி, எந்த ரூபத்தில் வந்தாலும், எதிர்த்து நிற்போம், முறியடிப்போம், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இரு மொழிக் கொள்கையை, இரண்டு கண் எனப் போற்றிப் பாதுகாப்போம்.

மாறிவரும் உலகப் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்ப, நமது பொருளாதாரத்தையும், மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதில், எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது. அதே நேரத்தில், Dunkel ஒப்பந்தத்திலுள்ள சில ஷரத்துக்கள், நமது விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழை எளிய மக்கள், ஆகியோரின் நலனுக்கு எதிராகவுள்ளதை, எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. குறிப்பாக, விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுவரும் உர மானியம், நிறுத்தப்படக் கூடாது. விவசாயிகளுக்குப் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவில், இலவச மின்சாரத்தை வழங்கி வரும், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு - உங்கள் அரசு - விவசாயிகளுக்குக் கிடைக்கும் மானியங்களை அடியோடு நிறுத்துவதை, ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

எனவே தான், Dunkel ஒப்பந்தத்தில் நாம் ஏற்கக்கூடிய, மற்றும் ஏற்க இயலாத ஷரத்துக்களை, மத்திய அரசு, மாநில முதலமைச்சர்கள் கூட்டம் ஒன்றைக் கூட்டி, விவாதிக்கவேண்டும்; பின்னர் முடிவெடுக்க வேண்டும் என்று, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு, இருமுறை கடிதம் எழுதியுள்ளேன். மாநிலங்களின் நிலையையும், கருத்துக்

களையும், கேட்டறிந்து, மத்திய அரசு முடிவு செய்தால்தான், விவசாயிகளின் நலன்காக்க முடியுமென்பதை, மீண்டும் இந்தக் கூட்டத்தில் வற்புறுத்த விரும்புகிறேன். உர மானியத்தை நிறுத்திவிடக் கூடாது என்று, மத்திய அரசை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு மாநிலத்திற்கும் எனப் பிரத்யேகமாக உள்ள, வேளாண் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளாமல், ஒட்டுமொத்தமாக முடிவெடுப்பது, பல விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைப் பாதிக்கும் என்பதே எனது கருத்து.

வேளாண்மைக்கும், தொழில் வளர்ச்சிக்கும், மின்சாரம் அடிப்படைத் தேவை என்பதை உணர்ந்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரத்யேகமாகத் தேவைப்படுகின்ற, மின்சார வசதிகளைச் செய்து கொடுக்க, நாங்கள் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். துணை மின் நிலையங்கள் அமைப்பதோடு, உயர் அழுத்தத்தில் மின்சாரம் கிடைக்கச் செய்வதும், சீராக மின்சாரத்தை விநியோகிப்பதும்தான், இத்திட்டங்களின் நோக்கமாகும். இன்று, தஞ்சாவூர், கும்பகோணம், பாபநாசம், மற்றும் அய்யம்பேட்டை ஆகிய இடங்களில், 4 துணை மின் நிலையங்களை 3 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில், துவக்கி வைத்துள்ளேன்.

திருக்கானூர்பட்டியில், 25 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில், திறன் மிகுந்த ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கும்; மதுக்கூர், வீர அமரசன் பேட்டை ஆகிய இடங்களில், 2 சிறிய துணை மின்நிலையங்களை, 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கவும், சற்று முன்பு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

தஞ்சை மாவட்டம், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட மாவட்டமாக இருப்பதால், வேளாண்மை விளை பொருட்களை, விரைந்து கொண்டு செல்ல, சாலைகளைப் பராமரிப்பதும், புதிய சாலைகளை அமைப்பதும், அவசியம் என்பதை உணர்ந்து, 6 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில், பல பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீர் செய்வதற்கும்; புதிய கிராமச் சாலைகள் அமைப்பதற்கும், ஏற்பாடுகள் செய்துள்

ளோம் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்ட வாழ், ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு, 1,680 தொகுப்பு வீடுகளை, 3 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடித்து வழங்கியுள்ளோம். ஆதி திராவிட மக்கள், மற்றும் பழங்குடி மக்கள், நல்ல வீட்டு வசதியினைப் பெறவேண்டும், என்கின்ற ஈடுபாட்டின் காரணத்தால்; எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாமல், என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடிய, கான்கிரீட் தளம் அமைந்த வீடுகள் மட்டும்தான், கட்டித் தர வேண்டும் என்று நான் அதிகாரிகளுக்கு உறுதியாக ஆணையிட்டுள்ளேன்.

நலிவடைந்த மக்களின் வாழ்க்கை, நிரந்தரமாக முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதில், நான் கண்ணும் கருத்துமாக இருக்கிறேன்.

அதேபோன்று, ஒவ்வொரு கிராமத்திற்கும், குடிநீர் வசதியைச் செய்துதர வேண்டும், என்ற கொள்கை அடிப்படையில், செயல்பட்டு வருகின்றோம்.

இன்று, 132 குடிநீர்த் திட்டங்கள், 4 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில், இந்த விழாவில் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க, இந்தத் திட்டங்கள் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கு, நாம் மேற்கொள்ளும் திட்டங்கள் அனைத்தும், வெகு விரைவில் பலனைத் தந்து, தஞ்சை மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு, வழி வகுக்கும் என்பதை நினைக்கும்போது, மனம் மகிழ்ச்சி அடைகிறது.

ஒரு மாநிலத்தில், தொழில் வளர்ச்சி அடையவும்; வளர்ச்சிப் பணிகள் நல்ல பலன்களைத் தரவும்; பொது அமைதியும், தனி மனிதப் பாதுகாப்பும், அடிப்படைத் தேவைகள் ஆகும். 1991-ஆம் ஆண்டு, உங்கள் பேராதரவுடன், நாங்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறியபோது நிலவிக்கொண்டிருந்த இருண்ட சூழ்நிலைகளை அகற்றி, தமிழகத்தை மீண்டும், ஒரு அமைதிப் பூங்காவாக உருவாக்கினோம்.

காவல் துறையைச் சமுதாயத்திற்கு அரும் பணிகள் ஆற்றக் கூடிய ஒரு இயக்கமாக உருவாக்குவது எங்கள் கடமை என்பதை உணர்ந்தோம். ஆனால் பெருகி வரும் மக்கள் தொகையாலும் மாறி வருகின்ற பொருளாதாரச் சித்தாந்தங்களாலும், ஏற்படுகின்ற புதிய சவால்களைச் சந்திக்க, காவல் துறை நவீனப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தோம்.

காவலர்களுக்குப் பணிச் சோர்வு ஏற்படாமல், அவர்கள் உற்சாகத்துடன் செயலாற்றவும்; சிறப்பாகப் பணி புரிய, அடிப்படைப் பயிற்சிகளை வழங்கவும்; திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தினோம். அதே நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாவலர்களாகக் காவல் துறையினர் விளங்க; காவல் துறையை, ஒரு மனிதாபிமானமிக்க துறையாக, உருவாக்க வேண்டும் என்று விரும்பினோம். என்னைப் பொருத்தவரை, காவல் துறை, சட்டத்தை மீறுபவர்களுக்குச் சிம்ம சொப்பனமாக இருக்கவேண்டும்; நலிவுற்ற, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, உதவும் கரமாகவும் காக்கும் கரமாகவும் விளங்க வேண்டும். அத்தகைய ஒரு காவல் துறையை, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் பல்வேறு கொடுமைகளிலிருந்து, அவர்களைக் காப்பாற்றவும்; அவர்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களை, மனம்திறந்து மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கும்; மாவட்டம் தோறும், "அனைத்து மகளிர் காவல் நிலையங்களை" அமைத்து வருகின்றோம். தமிழக அரசு, பெண்களின் சமுதாய உயர்விற்குத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திவரும் அதே நேரத்தில்; அவர்களுக்கு உரிய சமூக நீதியையும் வழங்க, இது போன்றதொரு அமைப்பும் தேவை என்பதை, நாங்கள் உணர்ந்துள்ளோம். தஞ்சை மாவட்டத்திற்குரிய, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, இன்று பிற்பகலில் திறந்துவைக்க உள்ளேன். நானே நேரடியாகத் திறந்து வைக்கும், 16-வது அனைத்து மகளிர் காவல் நிலையம் இது.

இக் காவல் நிலையத்தில் பணிபுரிய உள்ள பெண் ஆய்வாளரும், மற்ற பெண் காவலர்களும், தங்கள் பிரச்சினைகளை எடுத்துரைக்க வரும் தாய்மார்களை, மனுதாரர்கள் என்று கருதாமல்; அவர்களைத் தங்களது சகோதரிகள் என்று கருதி, மனிதாபிமானத்தோடு, அவர்களுக்கு உதவிபுரிய வேண்டும், என்று எதிர்பார்க்கின்றேன். அவ்வாறு அவர்கள் செயல்படுவார்கள் என்பதிலும் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், தஞ்சாவூர் தரணி வாழ் மகளிரின், வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பாடுபடும் என்கின்ற, எனது நம்பிக்கையைத் தெரிவித்து; இப்பகுதி வாழ் மக்கள், இந்தக் காவல் நிலையத்தை, முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று, அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சைத் தரணியில் நடைபெறும் இந்த விழாவைப் பிரம்மாண்டமாக, ஒரு மாநாடு போல ஏற்பாடு செய்த, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களுக்கு, எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவர்; புரட்சித் தலைவர் இயக்கம் ஆரம்பித்த நாளிலிருந்து, அவருக்கு உறுதுணையாக இருந்து; பின்னர் அவரது அமைச்சரவையிலும் இடம் பெற்றுத் திறம்படப் பணியாற்றி; நம் அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்றவர். புரட்சித் தலைவருக்குப் பின்னால், இயக்கத்தில் பிளவு ஏற்பட்ட, ஒரு சோதனையான கால கட்டத்தில், இயக்கத்தைக் கட்டிக் காக்க, நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு எல்லாம், உறுதுணையாக உறுதியுடன் இருந்தவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள்.

1988-ஆம் ஆண்டு, நாம் சோதனைகளுக்கு மேல் சோதனையாகச் சந்திக்க வேண்டிய ஒரு நிர்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டோம். அத்தகைய பிரச்சினைகளுக்குரிய நேரங்களில், அசைக்க முடியாத நம்பிக்கையுடன், எனக்குப் பக்கபலமாகவும், ஆதாரமாகவும், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள் இருந்ததால்தான், அந்தச் சோதனைகளினால் ஏற்பட்ட துன்பங்களையெல்லாம், என்னால் தாங்கிக் கொள்ள முடிந்தது என்றால், அது மிகையாகாது. எனவேதான், அவர் ஒருவரைப் பற்றி பேசும்போது மட்டும், 'அண்ணன்' என்றுதான் என் வாயில் தானாகவே வரும். அந்த அளவிற்கு ஒரு பாசப் பிணைப்போடும், இயக்கப் பற்றோடும் தலைமைக்குத் தொண்டாற்றும் புனித எண்ணத்துடனும் செயல்படுபவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள்.

கடமை

◎ கடமை ஒவ்வொன்றும் புனிதமானதே. அதனைப் பயபக்தியுடன் செய்வதே உயர்ந்த தெய்வ வழிபாடு ஆகும்.

—சுவாமி விவேகானந்தர்

1988-இல், நான் கிராமம் கிராமமாகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். ஒரு வாரம் அல்ல; இரண்டு வாரம் அல்ல; ஒரு மாதமும் அல்ல. இடைவெளியில்லாமல், 5½ மாதங்கள் நான் மேற்கொண்ட அந்தச் சுற்றுப் பயணத்தில், கண் துஞ்சாமல், மெய் வருத்தம் பாராமல், தலைமைக்கு எந்த விதமான பிரச்சினையும் ஏற்படக் கூடாது என்பதற்காக, என்னுடனே எல்லா இடங்களுக்கும், என்னுடன் துணையாகப் பயணம் செய்தவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள். அந்தச் சுற்றுப் பயணத்தின் போது, ஒவ்வொரு நாளும், பிற்பகல் 4 மணிக்குப் புறப்பட்டு, கிராமம் கிராமமாகச் சென்று; சாலையின் இருமருங்கிலும், வெள்ளமெனத் திரண்டு நிற்கும் மக்களைச் சந்தித்து; அவர்களின் ஆதரவைத் திரட்டுவேன்.

இரவு எல்லாம் விடியவிடியப் பயணம் செய்து, மறு நாள் காலைதான், தங்கும் இடத்திற்குத் திரும்பி வர வேண்டிய சூழ்நிலை இருக்கும். ஒவ்வொரு மாவட்டத்திலும், 5 அல்லது 7 நாட்கள், நான் பயணம் செய்யும் போது, அந்த நாட்களில் மட்டும், மாவட்டத்தின் செயலாளர், உடன் வருவார். அடுத்த மாவட்டத்திற்குச் செல்லும் போது, இந்த மாவட்டத்தினுடைய மாவட்டச் செயலாளர் தங்கிவிடுவார்; அடுத்த மாவட்டத்தின் நிர்வாகிகள் என்னுடன் வருவார்கள். அது தான் நடைமுறை. நான் சுற்றுப் பயணம் செய்த போது, எல்லா மாவட்டங்களுக்கும், எந்த வித்தியாசமும் இன்றி, எல்லா நாட்களும், ஆரம்பத்திலிருந்து கடைசி வரை, 5½ மாதங்களும், என்னுடன் பயணம் செய்தவர்கள், இருவர் மட்டுமே. அவர்களில் ஒருவர் எனது உடன் பிறவா தங்கை, திருமதி சசிகலா அவர்கள். மற்றொருவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள்தான், என்பதைக் குறிப்பிட்டுக் காட்டும் போது, அவர் என்மீது கொண்டுள்ள பாசத்தை நினைத்து, என் நெஞ்சம் நெகிழ்வு அடைகிறது. அவர் அன்று காட்டிய அன்பும், பரிவும், நினைக்கும் போதெல்லாம், என் நெஞ்சத்திற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

புரட்சித் தலைவருடன் வெகு காலமாக உடன் இருந்தவர், என்று பெருமை அடித்துக்கொண்டு, என்னுடன் வந்த ஒருவர், ஒரு முன்னாள் அமைச்சர், ஒரு நாள்கூட, பயணத்தின் கடினத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் தவித்தார்.

சுற்றுப் பயணத்தின்போது காரிலேயே வந்தார்; வண்டியை விட்டு இறங்கக்கூட இல்லை. இது முதல் நாள் நடந்தது. பின்னர் இரண்டாவது நாள், அவரால் உட்கார இயலவில்லை என்று, காரிலேயே படுத்துக்கொண்டுவிட்டார். மூன்றாவது நாள், தனக்கு உடல்நிலை சரியில்லை என்று, சாக்குப் போக்குச் சொல்லி, அந்த இடத்தைவிட்டு மொத்தமாக நழுவி விட்டார். சென்னைக்குத் திரும்பிச் சென்று விட்டார். சுற்றுப் பயணம் முழுவதுமாக முடியும் வரை, மறுபடியும் அவரைப் பார்க்கவே முடியவில்லை!

அப்படிப்பட்டவர்கள் மத்தியில், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள், எத்தகைய ஒரு நல்ல பண்புடைய மனிதர் என்பதை, நான் சொல்லாமலேயே நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

இயக்கத்தில் பிரச்சினை ஏற்பட்ட நாள் முதல் - ஏன் அந்த நேரம் முதல் - எனக்குப் பக்கபலமாகத் துணையாக நின்ற ஒரே மூத்த இயக்க நிர்வாகி, அண்ணன் எஸ்.டி.எஸ். தான் என்பதை, என்னால் ஆணித்தரமாகக் கூற முடியும். அவரைவிட வயதில் குறைந்தவர்கள் செய்ய இயலாத, கடுமையான பணிகளையும் மேற்கொள்ளும் திறமையும்; தொடர்ந்து சோர்வின்றி, சலிப்பின்றி, பணியாற்றக்கூடிய சக்தியும், அவருக்கு எங்கிருந்துதான் வந்தது என்பது, எனக்கு இன்றும் விளங்காத புதிராக இருக்கின்றது. எனது நன்மைக்காகவும், இயக்கத்தின் நன்மைக்காகவும், ஏதாவது ஒரு கருத்தை எடுத்துரைக்க வேண்டும் என்றால்; அதனால் எனக்குக் கோபம் ஏற்படும் என்றால் கூட; சற்றும் தயக்கமின்றி எடுத்துரைக்கக் கூடிய, ஒரே ஒரு இயக்க நிர்வாகி, அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள்தான். எனவேதான், அவர் துணையாக என்னுடன் வரும்போது, எனக்கு எப்போதும் மனதில், ஒரு தெம்பும் தைரியமும் ஏற்பட்டுவிடும்.

அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்களுக்கு, இப்போது 71 வயது ஆகின்றது. இந்த வயதில் கூட, இரவு முழுவதும் தூங்காமல்; ஓடியாடிப் பணியாற்றி; அனைவரிடத்திலும் இன்முகத்துடன் பழகி, வேலை வாங்கும் பாங்கினை, இதுவரை நான் வேறு எவரிடத்திலும் கண்டதில்லை. 1988-இல் மாவட்டப் பொறுப்பில் அன்று இருந்த ஒரு நிர்வாகிக்கு, இவரது வயதில் பாதிதான் இருக்கும். என்னுடன் வேனில் ஏறிச் சுற்றுப்பயணம் செய்ய ஆரம்பித்தார். நள்ளிரவு 12 மணி தாண்டியதும், அப்படியே அசந்து போய் வேனிலேயே தூங்க ஆரம்பித்துவிட்டார். ஒரு நாள் இரண்டு நாள் சுற்றுப் பயணத்தில் துணைவந்த போதே, இத்தகைய நிலைமை ஒரு இளைஞருக்கு ஏற்பட்டதென்றால்; 5½ மாத காலமும், தினமும், எனது சுற்றுப் பயணத்தில், துணையாக வந்த அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்களின் கடமை உணர்வை, நான் என்றென்றும் மறக்கமுடியாது.

அந்தச் சோதனையான காலகட்டங்களில் எல்லாம், எனக்கு

உறுதுணையாக, பக்கபலமாக, தளராத மனதுடன் இருந்ததில் இருந்து, எதிர்காலத்தில், எத்தகையதொரு சோதனையான கால கட்டம் வந்தாலும், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள் மட்டும், கண்டிப்பாக எனக்கு உறுதுணையாக , எப்போதும் இருப்பார்கள் என்கிற ஆழமான நம்பிக்கை, என் மனதில் ஏற்பட்டுவிட்டது.

இன்றும் ஒரு இளைஞரைப் போல, இயக்கப் பணிகளிலும், அரசுப் பணிகளிலும், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு; சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும், பம்பரம் போலச் சுழன்று சுழன்று பணியாற்றுபவர், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள். அவரைப் போன்ற நிலையில் உள்ளவர்களுக்கும், இளைஞர்களுக்கும், அவர் ஓர் எடுத்துக்காட்டு, அவர் அதிகநேரம் ஓய்வு எடுத்து நான் பார்த்ததேயில்லை.

ஒரு பணியைத் துவங்கும் போது, உற்சாகமாக இருப்பதும், பின்னர் நேரம் ஆக ஆக, சோர்வடைவதும்தான், பொதுவான மனித இயல்பு. ஆனால், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்களைப் பொறுத்தவரை, நேரம் ஆக ஆகத்தான், அவருக்கு உற்சாகமும், தெம்பும் கூடிவிடும். மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட ஆரம்பித்து விடுவார்.

புரட்சித் தலைவர் காலத்தில் இருந்தே, வருவாய்த் துறையை அவர் நிர்வகித்து வந்தவர். அந்தத் துறையைப் பற்றி, அக்கு வேறு ஆணி வேறாக, அத்தனை விவரங்களையும், நுணுக்கமாகத் தெரிந்து வைத்துள்ளார். அவர் ஒரு நல்ல நிர்வாகி; பண்பாளர்; திறமைசாலி.

அவர் இந்தத் தஞ்சைத் தரணியின் மைந்தர். இந்த மாவட்ட முன்னேற்றத்திற்கு, அயராது பாடுபட்டு வருபவர். இன்று 133 கோடி ரூபாய்க் கான, வளர்ச்சித் திட்டங்களைத் துவக்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும் இருக்கிறேன் என்பது, அவருக்கு எத்தகைய தொரு மகிழ்ச்சியை அளித்திருக்கும் என்பதை, நான் நன்கு அறிவேன். நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், எந்த நேரத்திலும், தகுந்த ஆலோசனையை வழங்குகின்ற முதிர்ச்சியும், நிதானமும் உடையவர். எனக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கும் போது, என்னிடம் சில முக்கியமான தகவல்கள் மற்றும் ஆலோசனைகளைச் சொல்வதற்கு, மற்றவர்கள் தயக்கம் காட்டுவார்கள்.

ஆனால், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், எந்தச் சூழ்நிலையிலும், நான் கோபமாக இருந்தால் கூட, எந்தத் தகவலையும் தயக்கமின்றி என்னிடம் கூறி விடுவார். அப்படியே நான் அவரிடம் கோபமாகப் பேசினாலும், அதை அவர் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல், நாட்டின் நன்மைக்கும், தலைமையின் நன்மைக்கும், தனது கடமையைச் செய்ததாக, எண்ணி அதைத் தாங்கிக் கொள்வார்.

அத்தகைய குணசீலரான அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், நீண்ட ஆயுளும், நல்ல நலமும் பெற்று; பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து; நாட்டுக்கும் இயக்கத்திற்கும் தொண்டாற்றவேண்டும் என்று, உள்ளார்ந்த அன்போடு வாழ்த்துகிறேன்.

இந்த விழா இத்தனைச் சிறப்புடன் நடைபெற, உறுதுணையாக இருந்து செயலாற்றிய, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் சகோதரர் எஸ். கண்ணப்பன் அவர்களுக்கும்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் சகோதரர் கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் சகோதரர் எஸ். ரகுபதி அவர்களுக்கும்; திருவோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அன்புச் சகோதரர் தங்கமுத்து அவர்களுக்கும்; அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அரசு அலுவலர்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில், இநந்த மாவட்டத்தைச் சேர்ந்த, 30,015 பேர்களுக்கு, 20 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, வழங்க உள்ளேன். இந்த உதவிகளை நானே ஒவ்வொருவருக்கும், நேரில் வழங்க வேண்டும் என்று விரும்பினாலும்; அவ்வாறு செய்ய இயலாது என்கின்ற சூழ்நிலையில், சிலருக்கு மட்டும் உதவிகளை என் கைகளால், நானே இந்த மேடையில் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அலுவலர்களும், பயனாளிகள், இருக்கின்ற இடத்திற்கே வந்து, என் முன்னிலையில், அரசு நலத் திட்ட உதவிகளை வழங்குவார்கள்.

இன்று அரசினுடைய உதவிகளைப் பெறுகின்றவர்கள், இதை ஒரு ஆதாரமாக வைத்துக்கொண்டு, கடுமையாக உழைத்துப் பாடுபட்டால்; ஒரு உன்னதமான எதிர்காலத்தை, அது உண்டாக்கித் தரும் என்று, நான் பூரணமாக நம்புகிறேன். உழைப்பிற்கு ஈடு இந்த உலகத்தில் ஏதும் இல்லை. ''சுறுசுறுப்பாக இயங்குபவர்களுக்குத்தான், இந்த உலகம் சொந்தம்' என்று, ஒரு அறிஞன் கூறியதை, இந்த நேரத்தில் நினைவுகூர்வது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். உதவிகளைப் பெறும் நீங்கள், வாழ்க்கையில் எல்லா நலன்களும் வளங்களும் பெற்று, சிறப்புடன் வாழ வேண்டும் என்ற, என் நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் என்னைக் காண்பதற்கும், என்னுடைய பேச்சைக் கேட்பதற்கும், பெருந்திரளாகக் கூடி, உங்களுடைய உள்ளார்ந்த அன்பினை எடுத்துக்காட்டிய, தஞ்சைத் தரணி வாழ் மக்களாகிய நீங்கள் அனைவரும், நீடு வாழவேண்டும் என்ற, எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகிறேன்.

தமிழ்நாடு அரசின்

நிதி நிலை அறிக்கை 1994-95

தமிழ்நாடு அரசு மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1994–95 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையில் வைத்து 1994 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 23 ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

1993–94 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1994–95 ஆம் ஆண்டிற்குரிய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், இந்த பேரவையின் மேலான ஒப்புதலைப் பெறும் பொருட்டுப் பேரவையின் ஆய்வுக்கு வைப்பதில், நான் பெருமிதமும் பெரு மகிழ்ச்சியும் கொள்கிறேன்.

"கொடை அளிசெங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி"

நன்கொடை வழங்குதல், முகமலர்ச்சியோடு இனியவற்றைக் கூறுதல், செங்கோல் ஆட்சி செலுத்துதல், தளர்வுற்ற குடிமக்களைப் பாதுகாத்தல் ஆகிய நான்கு பண்புகளையும் உடைய ஆட்சியாளர், ஆட்சியாளர்களுக் கெல்லாம் ஒளிதரும் விளக்கு போல் விளங்குபவர் ஆவர் என்பது வான்புகழ் வள்ளுவர் வாக்கு.

வள்ளுவப்பெருந்தகையார் வகுத்தருளிய இலக்கணத்திற்கு ஏற்ப, தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, நல்லாட்சி நடத்திவரும், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ஏழை எளிய மக்கள்

இன்புற நன்கொடை நலஉதவிகள் அளித்தல், குறையிரந்து வருவோர்க்கு முகமலர்ச்சியோடு இனியவற்றைக் கூறுதல், செங்கோல் ஆட்சியைச் செவ்வனே நடத்திவருதல், நலிவுற்றுத் தளர்ந்த குடிமக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் ஆகிய பணிகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றி வருகிறார் என்பதை நடுநிலை கொண்ட நல்லவர் எல்லோரும் நன்கு அறிவார்கள்.

2. இத்தகைய நற்பண்புகளைக் கொண்டு, தமிழ் நாட்டில் நல்லாட்சி நடத்த, அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, தமிழக மக்கள் என்றென்றும் தங்களுடைய முழு, நல்லாதரவை நல்கி வந்துள்ளனர். பேறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை – கோட்பாடுகள், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனித நேயம் மிகுந்த ஆக்க பூர்வமான திட்டங்கள் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான இவ்வரசு உறுதியாகப் பின்பற்றி வருகிறது.

3. தமிழ் நாடு அமைதி, சட்டம்–ஒழுங்கு, ஒற்றுமை ஆகியவற்றை நிலைநாட்டுவதில் மெச்சத்தகு வெற்றி பெற்றுள்ள மாநிலமாகத் திகழும் அதே வேளையில், பொருளாதாரத் துறையிலும் விரைவான ஒட்டு மொத்த வளர்ச்சி கண்டுதனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு முழுமையாகப் பேணிவரப்படுகிறது என்ற அடிப்படை உறுதியின் காரணமாக, இம் மாநிலம் அனைத்துத் துறைகளிலும் வெற்றி பெற்றுத் தன்னம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வது சாத்தியமாகியுள்ளது. வெளிநாட்டுப் போராளிகளினாலும், தீவிரவாதிகளினாலும் ஏற்பட்ட அச்சுறுத்தல், வேருடன் களையப்பட்டுவிட்டது. சீர்குலைவு சக்திகள், தலைதூக்க முடியாவண்ணம் தடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு இன்று, அமைதி நல்லிணக்கத்தைப் பொறுத்தவரை, இந்தியாவில் ஒரு பாலைவனப் பூஞ்சோலையாகத் திகழ்கிறது. இந்த முழுமையான நிலைமைதான், தமிழ்நாடு, முன்னேற்றப் பாதையில் பீடுநடை போடுவதற்கு உறுதுணை புரிந்துள்ளது.

4. 1991 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் இந்நாட்டைச் சூழ்ந்த தேசிய அளவிலான கடும் பொருளாதார நெருக்கடியைப் பற்றி அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். முன்பு எப்போதும் இருந்திராத அளவுக்கு ஏற்பட்ட இப்பொருளாதார நெருக்கடிக்கிடையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. இப்பெரிய நெருக்கடியைத் தொடர்ந்து, மத்திய அரசு வகுத்த புதிய பொருளாதாரக் கொள்கையில், நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் குறித்த சில அடிப்படைக் கொள்கைகளும் இடம் பெற்றுள்ளன. இக் கொள்கையில், பொருளாதார வளர்ச்சி குறித்த புதிய தொரு தொலை நோக்குக் கண்ணோட்டமும் காணப்பட்டது. வளமை, விரைவான பொருளாதார வளர்ச்சி குறித்த அதே கண்ணோட்டத்தையே நாமும் கொண்டுள்ளோம். இதனைக் கருத்திற் கொண்டுதான், இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைத்து, வேலை வாய்ப்பைப் பெருக்கவும், வளர்ச்சிப் பணிகளுக்கு வசதியான, தாராளமயமாக்கப்பட்ட சூழ்நிலையை உருவாக்கவும் கூடுதலான முதலீட்டைப் பெறும் கொள்கைகளுக்கு நாங்கள் ஆதரவு தெரிவித்தோம். அதே நேரத்தில், நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் நடை முறைகளைத் தொடர்ந்து ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை நமக்கு மிகவும் கவலை அளித்துள்ளது. ஏழை மக்களைப் பாதிக்கும் எந்தவொரு கொள்கை நடவடிக்கைகளையும் செயற்படுத்துவதில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தாம் பங்கெடுத்து பேசுகின்ற தேசிய, மண்டல மன்றங்கள் ஒவ்வொன்றிலும் வலியுறுத்தி வந்துள்ளார்கள். பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி போன்ற பல்வேறு பொருள்களின் விலைகளையும், டீசல், சமையல் எரிவாயு முதலியவற்றின் விலைகளையும், நிலக்கரி முதலியவற்றுக்கான இரயில்வே சரக்குக் கட்டணங்களையும் மத்திய அரசு சமீபத்தில் உயர்த்தியிருப்பது, மாநிலங்களுக்கு இக்கட்டானதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய விலைவாசி உயர்வின் விளைவுகளிலிருந்து ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான இவ்வரசின் முயற்சியாக இருந்துவந்துள்ளது.

5. மிகவும் இடர்ப்பாடான நிதி நிலைமையிலும் இவ்வரசு, அரிசி விநியோக உதவித் தொகைக்கான நிதியொதுக்கத்தை 1990–91 இல் ரூ.105 கோடி என்ற அளவிலிருந்து 1993–94 இல் ரூ.400 கோடியாக அதிகரித்துள்ளது. 1993 செப்டம்பரில் கொள்முதல் விலையையும், 1994 பிப்ரவரி முதல் தேதியிலிருந்து பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் வழங்கல் விலையையும் மத்திய அரசு அதிகரித்ததால், பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலையைத் திருத்துவதைத் தவிர இவ்வரசுக்கு வேறு வழியில்லாமற்போயிற்று. இவ்வாறு திருத்தம் செய்த போதிலும் கூட, உணவுப் பொருள் உதவித் தொகைக்கான நிதியொதுக்கம் 1993–94 இல் ரூ.400 கோடியிலிருந்து 1994–95 இல் ரூ.440 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்துடன், சேர்த்து விட்ட

நிலுவைகளைக் கொடுப்பதற்காக, 1994–95 ஆம் ஆண்டில் ரூ.75 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, 1994–95 இல் உணவுப் பொருள் உதவித் தொகைக்கான மொத்த நிதியொதுக்கம் ரூ. 515 கோடியாகும். இதுவரை இதற்காகச் செய்யப்பட்ட நிதியொதுக்கங்களிலேயே இது மிக அதிகமாகும். மத்திய அரசு, அரிசியின் விலையை உயர்த்தியதன் உடனடி விளைவுகளிலிருந்து ஏழை எளியோரைப் பாதுகாப்பதற்கு இவ்வரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

6. விலைவாசிகளை அதிலும் குறிப்பாக, ஏழை எளிய மக்கள் பயன் படுத்தும் இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகளை உன்னிப்பாகக் கண்காணித்து வரவேண்டியது மிகவும் அவசியமாகும். பணவீக்க வீதத்தைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். 1993–94 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிதிப் பற்றாக் குறையும், 1994–95 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் நிலையும், விலைகள் மீண்டும் உயர்ந்து பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்ற கவலையைத் தோற்றுவிக்கின்றன. நாடு தழுவிய பொருளாதார நிருவாகம் முழுவதும் மத்திய அரசிடமுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதே வேளையில், விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென நாங்கள் மத்திய அரசை வற்புறுத்துவோம்.

7. மத்தியிலே வலிமையான கூட்டாட்சி, மாநிலத்தில் வளமான தன்னாட்சி என்ற தத்துவத்திற்கேற்ப தேசத்தின் அரசாண்மை உரிமையை கட்டிக் காப்பதற்கான அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசிடமும் மக்கள் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் உரிய அதிகாரங்கள் அனைத்தும், மாநில அரசுகளிடமும் அமைய, அரசமைப்புச் சட்டம் பொருத்தமான முறையில் திருத்தப்பட வேண்டும் என்பதே நாங்கள் எப்போதும் வலியுறுத்திவந்துள்ள கொள்கையாகும். இந்த நிலையை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம். அண்மையில் நிலவும் பொருளாதாரப் போக்குகள், மத்திய, மாநில அரசுகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்த நமது எண்ணத்தை உறுதிப்படுத்துகின்றன.

8. மத்திய, மாநில அரசுகளுக்கிடையேயான நிதி உறவு, இணையான நிதி ஆதாரங்கள் மற்றும் கடமைகள் என்ற வலுவான கொள்கைகளின் மீதே நிலை கொண்டுள்ளன என்பது நம்முடைய தெளிவான கருத்தாகும். புதிய பொருளாதாரக் கொள்கை செயற்படுத்தப்பட்டு வருகின்ற இச்சூழ்நிலையில் சமூகத் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அரசின் செயல்பாடுகளில் தீர்மானமானதொரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. பண்டு தொட்டு, சமூகத் துறைகளில் மாநிலங்களின் பங்கே மேலோங்கி இருந்து வந்திருக்கிறது. தேசிய குறியிலக்குகளை முடிவு செய்வதிலும், அவ்விலக்குகளை எய்துவதற்கான வழி முறைகளை வகுப்பதிலும், மத்திய அரசு எடுக்கும் முயற்சிகளை வரவேற்கிறோம். அதே வேளையில், இத் துறைகளின் தேவைகளை நிறைவு செய்ய மாநிலங்களுக்கென போதிய நிதி ஆதாரம் இருக்க வேண்டியது அவசியம் ஆகிறது. இச்சூழ்நிலையில்தான், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநிலங்கள், இது போன்ற திட்டங்களைத் தாங்களே மேற்கொண்டு நிறைவேற்ற அவற்றுக்குப் போதுமான நிதி ஆதாரங்கள் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். வெளி நாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் என்ற போர்வையில், மத்திய அரசு பொறுப்பேற்கும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவது சரியல்ல. மாநிலங்களுக்கு போதிய நிதி ஆதாரம் கிடைப்பதை உறுதி செய்து, இத்துறைகளின் தேவைகளை தாங்களே நிறைவு செய்து கொள்ள அவர்களை அனுமதிப்பதுதான் சிறந்தது.

9. மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நிதி பங்கீடு செய்யப்படுவதில் அண்மைக் காலத்தில் காணப்படும் போக்குகள், நம்மை வெகுவாகப் பாதித்துள்ளன. நிதிக் குழுக்கள் பரிந்துரைத்தவாறு மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படும் நிதி ஆதாரங்களில் முக்கியமான மத்திய ஆயத்தீர்வையின் வளர்ச்சி வீதம் குறைந்து வருவது பெரிதும் கவலை அளிக்கிறது. வருமான வரியின் கீழ்க் கிடைக்க வேண்டிய வரி வரவுகள் முழுவதுமாகக் கிடைக்கப் பெறாததும் கவலையளிப்பதாக உள்ளது. வருமான வரியிலும், அடிப்படை ஆயத்தீர்வையிலும் மாநிலங்களுக்கான பங்கின்சதவீதத்தில் பத்தாண்டுகளாகத் தேக்கநிலை காணப்படுகின்ற சூழலில்தான் இந் நிலை உருவாகியுள்ளது. உண்மையிலேயே, இது மிகுந்த கவலையளிக்கின்ற ஒரு நிலையாகும். நிறுவன வரியில் மாநிலங்களுக்கு ஒருபங்கை ஒதுக்குவது பற்றி உடனடியாகக் கலந்தாலோசிப்பதன் அவசியத்தை இது எடுத்துக் காட்டுகிறது. இது மாநிலங்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வருகிறது. மத்திய மாநில உறவுகள் குறித்த சர்க்காரியா கமிஷன், நிறுவன வரியை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வது பற்றித் தெளிவான பரிந்துரை அளித்துள்ளது. அடுத்தடுத்து அமைக்கப்பட்ட நிதிக் குழுக்களும், மாநிலங்களின் இந்த வாதத்தில் உள்ள நியாயத்தை ஒப்புக் கொண்டாலும், அவற்றின் ஆய்வு வரம்பில் இது பற்றிக் குறிப்பாகத் தெரிவிக்கப்படாததால், மேற்கொண்டும் அவற்றால் ஏதும் செய்ய இயலவில்லை. உரிம முறைகளும் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு, தாராளமயமாக்கப்பட்ட நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதால், மாநில அரசுகள் உடனடியாகச் செயல்பட்டுத் தொழில்கள்

தொடங்குவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, அவை மேலும் முன்நோக்கிச் செல்லத் தேவையான ஆதரவுகளை நல்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு வருகின்றன. இச் சந்தர்ப்பத்தில் நிறுவன வரியில் ஒரு பங்கை மாநிலங்களுக்கு அளிப்பது மிகவும் பொருத்த முடையதாக இருக்கும். நிறுவன வரியை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வது குறித்து இப்போதேனும், மத்திய அரசு, பத்தாம் நிதிக்குழுவின் குறிப்பான ஆய்வுக்கு அனுப்பும் என்று நாங்கள் நம்புகிறோம்.

10. சரக்கு ஒப்படை வரி விதிப்பது தொடர்பான நிலை குறித்தும் நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இவ் வரிவிதிக்கப்படாதது கனிசமான அளவுக்கு மத்திய விற்பனை வரி ஏய்ப்பு நடைபெறுவதற்குக் காரணமாக உள்ளது சேவைத் துறைக்கும் வரி விதிக்க 1994–95 ஆம் ஆண்டு மத்திய வரவு–செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முயற்சியை வரவேற்கின்ற அதே வேளையில், இவ் வரி முழுவதையும் மத்திய அரசே, விதித்து, வசூலித்து தானே வைத்துக் கொள்ளும் என்பது கவலையளிப்பதாக உள்ளது. இது அரசியலமைப்புச் சட்டத்தின் மெய்க் கருத்திற்கு இசைந்ததாக இல்லை என்பதே நமது கருத்து. பொருள் விற்பனை அல்லது கொள்முதல் மீது வரிகள் விதிக்கும் உரிமையை அரசியலமைப்புச் சட்டம், மாநிலங்களுக்கு அளிக்கிறது. சேவை விற்பனை என்பது, பொருள் விற்பனையின் ஒரு திரிபே ஆகும். ஆகவே, சேவைகள் குறித்து வரி விதித்து வசூலிக்கும் அதிகாரம், மாநிலங்களுக்கே இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகும். இது மத்திய அரசுப் பட்டியலில் உள்ள எஞ்சிய பதிவுகளின் கீழ் வருகிறது எனக் கூற வாய்ப்புள்ளது. ஆனால், சேவை விற்பனையின் தன்மையைக் கொண்டு பார்க்கையில், இது வாதப் பொருத்தமுடைய கருத்தாக இருக்காது. தேசிய பொது நிதிக் கொள்கை நிறுவனம்(National Institute of Public Finance and Policy) நடத்திய ஆய்வில் சேவைகள் மீது வரி விதிப்பது குறித்த பிரச்சினை மிகவும் ஆழ்ந்து ஆய்வு செய்யப்பட்டது. சேவைகள் மீதான வரி, மத்திய விற்பனை வரியைப் போன்று மாநிலங்கள் விதித்து, வசூலித்துத் தாமே வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்தை மாநிலங்கள் வலியுறுத்தியுள்ளன. என்று நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இப்பொருளை, 1993 டிசம்பரில், மத்திய நிதியமைச்சரிடம் எடுத்துக் கூறி இருக்கிறார். அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், சரக்கு ஒப்படைவரி விதிப்பது குறித்து எடுக்கப்பட்ட முடிவை மீண்டும், மறு பரிசீலனை செய்வது பொருத்தமானதாக இராது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார். சரக்கு ஒப்படை வரி விதிப்பை மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் குறித்த பிற பிரச்சினைகளுடன் இணைப்பது பொருத்தமாக இராது. சரக்கு ஒப்படை வரி விதிப்பு குறித்து ஏற்கெனவே ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். சரக்கு ஒப்படை வரி விதிப்பதற்கு வகை செய்து நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் தேவையான சட்டம் இயற்றப்பட வேண்டுமென மீண்டும்நாங்கள் மத்திய அரசை வற்புறுத்துவோம்.

11. விரைந்து வளரும் பொருளாதாரத்தில், சேவைத் துறை(Services Sector)யின் பங்கு அதிகரிக்கும் என்பதும், வழக்கமாகவே சேவைத் துறையில் வளர்ச்சி வீதம் மிக அதிகமாக இருக்கும் என்பதும் யாவரும் அறிந்த ஒன்றே. இந்தியப் பொருளாதாரமும் இதற்கு விதிவிலக்கல்ல. திட்டங்கள், திட்டப்பணிகள், அரசின் முக்கியமான நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு நிதிவழங்க ஆதாரங்களைத் திரட்டுகையில், சேவைத் துறைகளிடமிருந்தும் வரி வசூலிக்க வேண்டியுள்ளது. காலப்போக்கில், நிதி சார்ந்த சேவைகள், முதலியன போன்ற ஒரே மாதிரியான வரி விதிப்பு அவசியமாகவுள்ள சேவைகளைப் பொறுத்த மட்டில், அவற்றுக்கு மட்டும் ஒரு மத்திய சட்டத்தின் கீழ் வரி விதிக்கலாம். ஆனால், மாநிலங்களே இவ்வரியை வசூலித்து தாமே வைத்துக் கொள்ளலாம். ஏனைய சேவைகள் குறித்த வரிகள், மாநிலங்களிடம் விட்டு விடப்படவேண்டும். இம்மாற்றங்களைக் கொண்டுவர, அரசியலமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியமாகும். இவ்வாறு, இது குறித்து பரிசீலிக்கப்பட்டு வரும்போதே, மத்திய அரசு, சில சேவைகள் குறித்து வரி விதித்து அதனால் கிடைக்கும் வருவாய் முழுவதையும் தானே வைத்துக் கொள்ள முயலுவது நமக்குக் கவலை தருவதாக உள்ளது. இப்பிரச்சினை முழுவதும் சரியான கண்ணோட்டத்தில் விவாதிக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். மத்திய அரசு, தன் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்வதான முயற்சியில், மாறாத, நிலையான நிதி ஆதார அடிப்படையினைக் கொண்ட மாநிலங்களின் நிலைமையைப் பற்றிக் கருத்தில் கொள்ளாதிருப்பது நமக்குக் கவலை அளிக்கிறது. தேசிய மொத்த வருமானத்திற்கு, 40 சதவீதத்திற்கும் அதிகமாக பங்கு அளிக்கும் சேவைத் துறை மீது விதிக்கப்படும் வரியில், மாநிலங்களுக்குப் பங்கு அளிக்க மறுக்க இயலாது.

பத்தாம் நிதிக்குழு

12. பத்தாம் நிதிக் குழு, 1994 ஆம் ஆண்டு ஜுன் திங்களுக்கு முன்னதாகத் தனது அறிக்கையை அளிக்க விருக்கிறது என்பதை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். பத்தாம் நிதிக் குழு விரும்பியவாறு, விரிவான அறிக்கைகள், மதிப்பீடுகள் மற்றும் பிற தகவல்களை நாம் அளித்துள்ளோம். பத்தாம் நிதிக் குழு, 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சென்னையில் அதன் கூட்டத்தை நடத்தக் கூடும். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள நிதி ஆதாரங்களிலும், மத்திய, மாநில அரசுகள் ஆற்ற வேண்டிய பணிகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், பத்தாம் நிதிக் குழு முக்கிய பங்கு ஆற்ற வேண்டியுள்ளது. வரி விதிப்பு நிலைமைகளில், இரண்டு தெளிவான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் காண்கிறோம். முதலாவதாக, மாநிலங்களுக்குத் தொடர்புடைய மத்திய வரிகள் மூலம் கிடைக்கக் கூடிய வருவாயின் வளர்ச்சியில், அதாவது அடிப்படை ஆயத் தீர்வைகளின் வளர்ச்சியில், போதிய வேகம் இல்லாமை மற்றும் வருமான வரியின் கீழ் கிடைக்கவேண்டிய வருவாய் முழுவதும் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமை ஆகியவை நமக்குப் பெரிதும் கவலையளிக்கின்றன. இரண்டாவதாக, மாநிலங்களால் நிறைவேற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் பொறுப்புகளில் குறிப்பிடத் தக்க, தீர்மானமானதொரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. சமூகத் துறைகளில் மாநில அரசுக்குள்ள கூடுதல் பங்கு, மற்றும் முன்னர் பொதுத் துறைக்கென்றே ஒதுக்கப்பட்ட துறைகளில் தனியார் துறையினருக்கு அதிகரித்துவரும் பங்கு ஆகியவற்றை இந்த வகையில் குறிப்பிட்டுச் சொல்லலாம். இப்போக்குகள், மாநிலங்கள் எதிர் நோக்கியுள்ள இடர்ப்பாடான நிதி நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளன. நமது முன் மதிப்பீடுகளை நாம் ஏற்கெனவே பத்தாம் நிதிக் குழுவிற்கு அனுப்பியுள்ள போதிலும், நிதிக் குழு நமது மாநிலத்திற்கு வருகை தரும்போது மாநிலங்கள் எதிர் நோக்கி வரும் சிக்கலான நிதி நிலைமை பற்றி அக்குழுவுக்கு அழுத்தமான முறையில் எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கும். ஒரு புறம், பல்வேறு இன்றியமையாப் பொருள்களின் நிர்ணய விலை வீதங்களை மத்திய அரசு விரைவாக உயர்த்தியதும் தேசியப் பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட பொதுவான பண வீக்கமும், செலவின வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில், மாநில அரசின் திறமைக்கு சவால் விடுவதாக அமைந்துள்ளன. மற்றொரு புறத்தில், மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட வழக்கமான நிதி ஆதாரங்களிலிருந்து கூடுதலாக நிதி திரட்டுவது மிகவும் கடினமாக இருக்கிறது. இதன் நிகர விளைவாக, மாநிலங்களுக்கு மிகக் கடுமையான நிதி இடர்ப்பாடு உருவாகியுள்ளது. செலவைக் கட்டுப்படுத்தும் எந்த ஒரு திட்டத்தையும் மத்திய காலக் கட்டத்தில் (Medium term) செயற்படுத்த இயலும். திருத்த நிதி ஏற்பாட்டில், மத்திய–மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பங்கீட்டைப் பொறுத்தவரை நிதி நெருக்கடியிலிருந்து மாநிலங்களை மீட்பதற்கான முன்னேற்றமான நோக்குத் திட்டமொன்றை பத்தாம் நிதிக் குழு வகுக்க வேண்டியது அவசியமாகும்.

13. குறிப்பாக, ஏற்பளிக்கப்பட்டு வருகின்ற ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் நமக்குப் பெரிதும் வேதனையளிப்பனவாக உள்ளன. ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள், தமிழ் நாட்டிற்கு மிகவும் ஏமாற்றம் அளிப்பனவாக அமைந்து விட்டன. திட்டத்தில் சேராத வருவாய்க் கணக்கில் தமிழ் நாட்டில் உபரி நிலைமை நிலவுவதாக ஒன்பதாம் நிதிக் குழு மதிப்பீடு செய்தது. ஆனால், பெரிய அளவில் பற்றாக்குறை ஏற்பட்டது என்பது தான் நிகழ்ந்த உண்மை. அடிப்படை ஆயத் தீர்வைகளில் அனைத்து மாநிலங்களுக்கும் கிடைக்கும் பங்கை இக்குழு தொடர்ந்து 45 சதவீதமாகவே வைத்தது. பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்கு நீங்கலாக, அனைத்து மாநிலங்களுக்குமான உண்மையான பங்கு 40 சதவீதத்திலிருந்து 37.53 சதவீதமாகக் குறைந்ததால் நிலைமை மிகவும் மோசமாயிற்று. மூன்றாவதாக, நிதிக் குழு தன்னுடைய மதிப்பீடுகளில், பண வீக்க நிலையை மிகவும் குறைத்துக் கணக்கிட்டுள்ளது. ஆனால், அனுபவநிலை அதற்கு முற்றிலும் மாறாக உள்ளது. மேலும், உபரி குறித்த தவறான மதிப்பீடு காரணமாகவும் அதனடிப்படையில், திட்ட வருவாய் மானியமாக கணிசமான தொகை மறுக்கப்பட்டதாலும் தமிழ்நாடு பாதிக்கப்பட்டுள்ளது. பத்தாம் நிதிக் குழு, அதன் ஆய்வு வரம்புகளைக் கொண்டு மாநிலங்களுக்கு நியாயம் வழங்குமென்று ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறோம். ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து அனைத்து மாநிலங்களும் எதிர் நோக்கிவரும் நிலைமை, மிகவும் சிக்கலானதாக உள்ளது. மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான திட்டம் பற்றிய புதிய ஒட்டுமொத்தமான கணிப்பேதான் மோசமான இந்நிலையிலிருந்து மாநிலங்களை மீட்க இயலும். மாநிலங்களைத் தன்னம்பிக்கையோடு 21 ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்லக்கூடிய நிதி ஆதார மாற்றுத் திட்டமொன்றை வகுப்பதில் பத்தாவது நிதிக் குழு புதிய வழிமுறைகளைக் கண்டறியுமென்று நம்புகிறோம்.

ஆண்டுத் திட்டம்

14. ஆண்டுக்காண்டு, ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத்திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் அதிக ஒதுக்கீடு பெற்றுத் திட்ட இலக்கிற்கும் மேலாகச் சாதனை புரியும் தனது ஆற்றலை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசு நிலைநாட்டியுள்ளது என்பதை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். எங்கள் சாதனை அளவு, உண்மையில் பாராட்டத்தக்க சிறப்பு வாய்ந்ததாகும். 1992–93 ஆம் ஆண்டில், சிறப்பு வகையின்கீழ் வராத 15 மாநிலங்களில், 8 மாநிலங்கள் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை முடிக்க இயலவில்லை. ஏற்பளிக்கப்பட்ட ரூ.1766 கோடி திட்ட

ஒதுக்கீட்டை முடித்ததோடல்லாமல், ரூ.1935 கோடி திட்ட ஒதுக்கீட்டுக்கு அதாவது ரூ.169 கோடி கூடுதல் ஒதுக்கீட்டளவிற்கு வகை செய்து தமிழ்நாடு தனிச் சிறப்புடன் திகழ்கிறது. மக்கள் உயரளவிற்குப் பயனடையும் வகையில், திட்டப் பணிகளையும் திட்டங்களையும் செயற்படுத்தும் நமது திறமைக்கு இந்த ஓர் உண்மை, எடுத்துக்காட்டாகும்.

15. 1993–94 ஆம் ஆண்டிற்கான ஏற்பளிக்கப்பட்ட ரூ.2101 கோடி திட்ட ஒதுக்கீடு, எய்தப்பெறுமென்று நாம் உறுதியுடன் நம்புகிறோம். உள்ளபடியே 1993–94 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு, தற்போது மொத்தம் ரூ.2140.30 கோடி நிதியொதுக்கீட்டிற்கு வகைசெய்கிறது. இத்திட்ட இலக்குச் சாதனையே மத்தியத் திட்டக் குழு, தமிழ்நாட்டிற்கு 1994–95 ஆம் ஆண்டிற்கு, மிகவும் அதிக அளவிற்கு அதாவது, ரூ.2750 கோடி திட்ட ஒதுக்கீடு செய்ய வகை செய்துள்ளது. இது, 1993–94 ஆம் ஆண்டு நிதியொதுக்கீட்டைவிட 30.89 சதவீதம் அதிகமாகும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இம் மாநிலத்திற்குப் பெற்றுத் தந்த இந்த மிக அதிகமான திட்ட ஒதுக்கீடானது பொது மக்களுக்குப் பலனளிக்கத்தக்க திட்டங்களையும் திட்டப் பணிகளையும் செயற்படுத்துவதில் தன்னம்பிக்கையுடன் நாம் முன்னேற இயலச் செய்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசின் கீழ், 1994–95 ஆம் ஆண்டில் ரூ.492.30 என்ற நபர் வாரித் திட்ட ஒதுக்கீடு, தேசிய நபர் வாரித் திட்ட ஒதுக்கீடான ரூ.433.20 யை விடக் கணிசமான அளவிற்கு அதிகரிக்கும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கடுமையான நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், இவ்வரசு, தேசிய சராசரி அளவிற்கு மிகவும் குறைவாக இருந்த நிலையிலிருந்து, தேசிய சராசரி அளவைவிட குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமாக திட்டத்தின் மூலம் முதலீடு செய்யுமளவிற்கு உயர்ந்துள்ளது மிகவும் சிறந்ததொரு சாதனையாகும். திட்டமிட்ட வளர்ச்சிக்கு உரியவகையில் முறையாக கவனஞ் செலுத்தியதன் மூலம் தமிழ்நாடு உயரிய வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடுகிறது என்றால் அதுமிகையாகாது. இதற்கென சில தியாகங்கள் செய்திருப்பினும் இச் சாதனையை நாம் மிக்க கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் பாதுகாக்க வேண்டும். இம்மாநிலத்தின் எதிர்காலம் பாதுகாக்கப்படுகிறது என்பதை நாம் உறுதி செய்வது நமது கடமையாகும். திட்ட ஒதுக்கீட்டிற்கு நிதியொதுக்குவதற்கான நிதி ஆதாரங்களைக் கண்டறியும்போது, முன்னுரிமை குறைவான செலவினத்தை நாம் அவசியம் நீக்க வேண்டியுள்ளபோது, இம் மையக் கருத்தை இம் மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்திற் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

காவல் துறை

16. மாநிலக் காவல் படை, பொதுமக்களுக்கு மனிதாபிமானத்துடனும், செயல் திறத்துடனும் பணிபுரியச் செய்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மேற்கொண்ட சிறப்பான முயற்சி குறித்து இம் மன்றத்தின் உறுப்பினர்கள் ஒரே குரலில் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பர். மாநிலக் காவல்படை, புதிய கண்ணோட்டத்துடன், மாறுபட்ட புதிய வழியில் செயல்படுகிறது என்பது மிகவும் மனநிறைவளிக்கத்தக்க ஒன்றாகும். இது, அவ்வப்போது எழுந்த சிறுசிறு நிலைமைகளைத் திறம்படக் கையாண்டது. மாநிலத்தின் விரைவான வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழும் அமைதியும் நல்லிணக்கமும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

17. காவல்படைக்கு, 1993–94 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.320.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க, 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.387.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், காவல் படையை நவீன மயமாக்குவதற்கியலும் வகையில், உயரளவு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.80.45 கோடி செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்ட நவீனமயமாக்குவதற்கான திட்டம் ஒன்றை நாம் மத்திய அரசிடம் அளித்துள்ளதை இம் மன்ற உறுப்பினர்கள் நினைவு கூரலாம். ஆயின், 1991–92 ஆம் ஆண்டில் நாம், ரூ.10 கோடி மட்டுமே பெற்றுள்ளோம். ஏனைய மாநிலங்களில் பெற்ற அனுபவம், தடுப்பு நடவடிக்கைகளை முன்னதாகவே எடுக்க வேண்டியதன் அவசியத்தை போதிய அளவிற்கு விளக்குகிறது. இக்காரணத்திற்காகவே, நாம், மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியுதவி கேட்டுள்ளோம். ஒரு நிலையில் மத்திய உள்துறை அமைச்சரும், கூடுதலாக ரூ.30 கோடி அனுமதிக்கப்படுமென்று உறுதியளித்தார். இத் தொகை இதுவரை அளிக்கப்படவில்லை. இத் தொகையை, 1994–95 ஆம் ஆண்டிலாவது வழங்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம். ரூ.12 கோடி செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்ட கடலோரப் பாதுகாப்புப் படை ஒன்றை ஏற்படுத்துவதற்கான தனித் திட்டமொன்றையும் நாம் அளித்துள்ளோம். இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்புதலளித்து, தேவையான உதவியை வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

18. நிதி இடர்ப்பாடுகளைச் சந்தித்து வருகின்ற போதிலும், மாநிலக் காவல் படையை நவீனமயமாக்குவதற்கு நாம் அதி முன்னுரிமை அளித்துள்ளோம். காவல் படையை நவீனமயமாக்கும் மாநிலத் திட்டத்தின்கீழ் 1993–94 ஆம் ஆண்டில், ரூ.10 கோடி செலவிடப்பட்டுள்ளது. 237 காவல் நிலையங்களுக்கு ஜீப்புகள் வழங்குவதற்கும், புதிதாக இரு காவல் படைப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்கும், நவீன ஆயுதங்கள், படைக்கலங்கள், இன்றியமையா அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்கு வகை செய்வதற்கும் இத்தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, மாநிலக் காவல் படையின் செயல்திறனை உயர்த்துவதற்குப் பெரிதும் உதவியாக இருந்துள்ளது. காவல் படையை நவீனமயமாக்கும் மாநிலத் திட்டத்தை 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர நாம் கருதியுள்ளோம். வாகன வசதிகள், தகவல்களை விரைந்தனுப்பும் திறமை, சாதன இருப்பு, சரியாகச் செயல்படும் ஆயுதங்கள்–படைக்கலங்கள் ஆகியவற்றின் நிலைகளை முழுமையாக உயர்த்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். நாட்டிலேயே தமிழ்நாடு காவல் படைதான் மிகச் சிறந்த காவல் படை என்பதை உறுதி செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

19. இவ்வரசு, வகுத்த பல்வேறு நலத்திட்டங்களின் பயனாய், மாநிலக் காவல் படையின் கட்டுப்பாட்டுணர்வு கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. காவல் துறை அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்கான புதிய பெருந்திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. 1000 காவலர் குடியிருப்புகள் 1993–94 ஆம் ஆண்டில் ரூ.12.5 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஒரே ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கையில் இதுவே அதிகமாகும். குடியிருப்புகள் கட்டும் இத்திட்டம், 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இதற்கென, வரவு–செலவுத் திட்டத்திலும் ரூ.5 கோடி சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், திட்டமிட்டவாறு, புதிதாக 10,000 காவலர்களைத் தேர்வு செய்து பணியில் அமர்த்தும் பணியை நிறைவு செய்துள்ளது. புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட காவலர்கள், பயிற்சியளிக்கப்பட்டு, தற்போது, பணியில் அமர்த்தப்பட்டு வருகின்றனர். இது, மாநிலக் காவல் படையைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு வலுப்படுத்தியதாகும். எந்தவொரு சூழ்நிலையையும் சமாளிக்கும் வகையில் காவல் படையின் திறன் கணிசமான அளவிற்கு உயர்த்தப்படும். சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், தற்போது 500 சப்–இன்ஸ்பெக்டர்களைத் தேர்வு செய்து பணியில் அமர்த்துவதில் ஈடுபட்டுள்ளது. இது, மாநிலக் காவல் படையின் திறனை மேலும் வலுப்படுத்தும். காவல் படையை முழுவதுமாக நிலை உயர்த்தி, மாநிலத்தில் அமைதியும், நல்லிணக்கமும் நிலவச் செய்யும் வகையில், அக்காவல்படையை, மனிதாபிமானத்துடனும், செயல் திறத்துடனும் கூடிய கருவியாக மாற்றுவதற்கு இவ்வளவு குறுகிய கால அளவில் இத்தகைய முயற்சிகள் இதற்கு முன்னர் எப்போதுமே மேற்கொள்ளப்பட்டதில்லை.

புயல்–வெள்ள நிவாரணம்

20. கடுமையான சூறாவளிப் புயல், வெள்ளங்கள் தமிழ்நாட்டை மீண்டும் மீண்டும் தாக்கிச் சேதம் விளைவித்துள்ளன. தொடர்ந்து 1991–ஆம் ஆண்டிலிருந்தே நமது நிதி ஆதாரங்களுக்குமேல், பெருமளவில் நிவாரண நடவடிக்கைகளையும் மீட்பு நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஒவ்வோராண்டும் நாம் விரிவான அறிக்கை அளித்திருந்தும், இடர் நிவாரண நிதி ஏற்பாட்டின்கீழ் மட்டுமே நிதியுதவி பெறப்பட்டது. இந்நிதியுதவி போதுமானதாக இல்லை. இதனால் கிடைத்த நிதியுதவியைக் காட்டிலும் அதிகமாக கணிசமான அளவு தொகையை செலவிட வேண்டியதாயிற்று. இதற்காகவே உலக வங்கிக்கு அனுப்புவதற்காக ரூ.2560 கோடி நிதியொதுக்கீடு தேவைப்படும் விரிவான திட்ட அறிக்கை ஒன்றை நாம் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளோம். உலக வங்கி இத்தகைய புயல் உடனடி மறுசீரமைப்புத் திட்டமொன்றிற்காக ஆந்திரப் பிரதேசத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளது. மகாராட்டிர மாநிலத்தில் நில நடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மறுசீரமைப்பதற்காக, மகாராட்டிர அரசுக்கு நிதியுதவி வழங்க, உலகவங்கி அண்மையில் ஒப்புக் கொண்டுள்ளது என்றும் தெரிய வருகிறது. மீண்டும் மீண்டும் ஏற்பட்ட புயல்களினால் சேதமுற்றதைத் தொடர்ந்து தமிழ் நாட்டின் நிலையும் மகாராட்டிர மாநிலத்தைப் போலவே கடுமையானதாக உள்ளது. தமிழ் நாட்டின் மறு சீரமைப்புத் திட்டத்திற்கு ஏன் ஒப்புதல் அளிக்க முடியவில்லை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. சரியான மறு சீரமைப்புத் திட்டத்தை நம்மால் மேற்கொள்ளவியலும் வகையில், மத்திய அரசு உலக வங்கியிடம் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி ஆவன செய்யும் என்று நம்புகிறோம்.

21. அண்மையில், 1993 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்களில் ஏற்பட்ட கடும் புயல்களும் வெள்ளங்களும் பல பகுதிகளைத் தாக்கி, பெருமளவிற்குச் சேதம் விளைவித்துள்ளன. பல்வேறு நிவாரண நடவடிக்கைகளுக்காக ரூ. 75.37 கோடி செலவுத் தொகையை ஏற்கெனவே நாம் அனுமதித்துள்ளோம். 1994–95 ஆம் ஆண்டிற்கான இடர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 14.63 கோடி முன்பணமாகப் பெற்றது உட்பட இதுவரை பெறப்பட்ட நிதியுதவி ரூ. 29.25 கோடியாகும். வெள்ளச் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக, வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.31 கோடி அனுமதிக்க உலக வங்கி அண்மையில் ஒப்புக்கொண்டுள்ளது. தமிழ் நாட்டிற்கு அளிக்கப்பட்ட இடர் நிவாரண நிதி ஏற்பாடு முற்றிலுமாக போதிய அளவிற்கு இல்லை என்பதையும், 1995–96 ஆம்

ரூ.387.72 கோடியாக உயர்த்தப்படும். இந்த வரவு–செலவுத் திட்டத்தில், புதிய வீராணம் திட்டத்திற்கு ரூ.110 கோடியும், கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டத்திற்கு ரூ.100 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய நகரங்களுக்கான குடிநீர் வழங்கல் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரமே இல்லாத குடியிருப்புகள் எதுவுமே இம்மாநிலத்தில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் இல்லாத 1239 குடியிருப்புகள் அனைத்திற்கும், 1994–95 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இராமநாதபுரம் மாவட்டம், நரிப்பையூரில் ரூ.10.75 கோடி செலவில், நாளொன்றுக்கு 1 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக மாற்றும் திறன்கொண்ட நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

* ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த பெண் குழந்தைகளிடையே கல்வியறிவைப் பெருக்கும் இரு புதிய சிறப்பு ஊக்கத் தொகைத் திட்டங்கள் வரும் ஆண்டில் தொடங்கப்படும். தருமபுரி, திருவண்ணாமலை–சம்புவராயர், விழுப்புரம்–இராமசாமிப் படையாட்சியார் மற்றும் தென்னார்க்காடு–வள்ளலார் மாவட்டங்களில் இரண்டாம் வகுப்புக்குப் பிறகு பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிடக் கூடிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு, மூன்றாம், நான்காம், ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சியடைவதன்பேரில், ஒவ்வொருவருக்கும் ரூ.500 சிறப்பு ஊக்க உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.1.50 கோடி செலவாகும். வரும் ஆண்டில் ஆறாம் வகுப்பிற்குச் செல்லும் கிராமப்புற ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் அனைவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ.100 வழங்கப்படும். இத்திட்டத்தினால், மாநிலம் முழுவதிலுமுள்ள 30,000 ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் பயன் பெறுவர். இத் திட்டத்திற்கு ரூ.3 கோடி செலவாகும்.

* தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, ரூ.13 கோடியாக உயர்த்தப்படும். இதனால், 1994–95 ஆம் ஆண்டில், 10,000 பேர் பயனடைவர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்கு, 1994–95 ஆம் ஆண்டில், ரூ.1 கோடி சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்படும்.

* கடல்வாழ் உயிரின வளர்ப்புத் துறையில், பாக் வளைகுடாவில் ரூ.13.88 கோடி செலவில் 150 ஹெக்டேர் பரப்பளவில் ஒன்றும், வ.உ.சிதம்பரனார் மாவட்டம் தருவைக்குளத்தில் ரூ.2.20 கோடி செலவில் 50 ஹெக்டேர் பரப்பளவில், ஒன்றுமாக இரண்டு திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

* 1994–95 ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் மகளிருக்கு, அவர்கள் பல்வேறு சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் மூலமாக தங்களுடைய வருமானத்தைப்பெருக்கிக் கொள்ள உதவி அளிக்கப்படும். புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா குழந்தை நலனுக்கான 15 அம்சத் திட்டத்திற்கு மேலும் வலுச் சேர்க்கும் குழந்தைநல துணைத் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில் ரூ.697.65 கோடி மொத்தச்செலவில் செயற்படுத்தப்படும். புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்திற்கு 1993–94 ஆம் ஆண்டில் ரூ.312 . 42கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக,1994–95 ஆம் ஆண்டில் ரூ.345. 36 கோடி ஒதுக்கப்படும்.

* இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்திற்காக, 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.46 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு உதவித் தொகையாக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

* அமைப்பு ரீதியில்லாத தொழிலாளர்களுக்கு சுகாதார வசதி அளிக்கும் புதிய திட்டமொன்று, தொடக்க சுகாதார மையங்கள் மூலமாகவும் வட்ட மருத்துவமனைகள் மூலமாகவும் செயற்படுத்தப்படும். வரவு–செலவுத் திட்டத்தில் இத்திட்டப் பணிக்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குடும்ப இடருதவித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, 50,000 பேர் பயன்பெறும் விதத்தில், ரூ.25 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

* 1994–95 ஆம் ஆண்டில், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு, மொத்தம் ரூ.220.59 கோடி நிதி ஒதுக்கப்படும். அனைத்து வேலை வாய்ப்புத் திட்டங்களும் சேர்ந்து, 1994–95 ஆம் ஆண்டில் உருவாக்கும் மொத்த வேலை வாய்ப்பு சாதனை அளவாக 10 கோடி உழைப்பு நாட்களாக இருக்கும்.

ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

24. என்னுடைய கடந்த வரவு–செலவுத் திட்ட உரையில், ஏழை எளியோர், வசதிவாய்ப்பற்ற மக்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாத்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, ஏழை மக்களுக்கான விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்ற கருத்தினை உங்கள் முன் வைத்தேன். புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக, மத்திய அரசு கொண்டுவந்த

நிலைப்படுத்தல்–பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் கொள்கையைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான இக் குறிப்பான திட்டத்தை, இம்மாநில மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். ஏழை எளியோர், வசதி வாய்ப்பற்றோர் ஆகியோரின் வாழ்க்கைத்தரத்தின் மேம்பாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசு, செலுத்தி வரும் உண்மையான கவனம், அக்கறை, சிறப்பு முயற்சிகள் ஆகியவற்றையே இது காட்டுகிறது. தேசிய அளவிலான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து, உருவான மிக இடர்ப்பாடான நிதிநிலைமையில், பெரும்பாலான மாநிலங்கள், ஏழை எளிய மக்களின் நலப்பணித் திட்டங்களுக்கான தங்களுடைய நிதி ஒதுக்கீடுகளை குறைக்க வேண்டியதாயிற்று. ஏழை மக்களைப் பாதுகாத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான நிதியொதுக்கீடு உயர்த்தப்பட வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கத்தில் ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு முன்எப்போதும் இருந்திராத அளவிற்கு ரூ.1599 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து இம்மாமன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர்.

25. நாம் வகுத்துள்ள ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கிய விரிவானதொரு திட்டமாகும்:-

உணவுப் பொருள் வழங்கலில் உத்திரவாதம்.

முதியோர், கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்குச் சத்துணவு.

ஏழை மக்களுக்கு தொடக்கச் சுகாதார வசதி மற்றும் மருத்துவப்பணிகள்.

அனைவருக்கும் தொடக்கக் கல்வி.

ஏழை மக்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டங்கள்.

இன்றியமையாக் குடிநீர் வசதி.

வீடில்லாதவர்களுக்குப் புகலிடமளித்தல்.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்.

நலிவடைந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள்.

26. 1994–95 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடு, 1993–94 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டைவிடப் பெருமளவு உயர்ந்துள்ளது. ஏழை மக்களின் பாதுகாப்பும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலுமே இவ்வரசின் நோக்கமாகும். சமூக நலத்துறைகளுக்கு அதிக அளவு நிதியொதுக்கீடு செய்வதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என்பதை இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் மேற்கொண்ட ஓர் ஆய்வு காட்டுகிறது. 1993–94 ஆம் ஆண்டில், தமிழ் நாட்டில் சமூகப் பணிகளுக்கான செலவு, மொத்தச் செலவுத் தொகையில் 41 சதவீதமாகும். சிறப்புவகை சாரா மாநிலங்களுக்கிடையே மிக அதிகமானவற்றுள், இது ஒன்றாகும். புதிய பொருளாதாரக் கொள்கையையொட்டி, பெருமளவிலான பொருளாதார வளர்ச்சியை எட்ட நாம் முயற்சித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், ஏழை மக்களின் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிடுவதில் மிகவும் பெருமைப் படுகிறோம். நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வகுத்தளித்த இத் தொலைநோக்குத் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திட்டங்களும் தமிழ்நாட்டின் இணக்கமான சமூக உறவுநிலையை மேலும் வலுப்படுத்தப் பெரிதும் உதவியுள்ளன.

நிதி நிலைமை

27. நான் கோடிட்டு காட்டியுள்ள திட்டப்பணிகளையும், திட்டங்களையும் மேற்கொள்ளத் தேவைப்படும் நிதி ஆதாரங்களைக் கண்டறிகின்ற கடுமையான பொறுப்பு குறித்து இப்போது எடுத்துக்கூறி, வரவு செலவுத் திட்டத்தை சமநிலைப் படுத்த விழைகிறேன். இந்த அரசு பதவி ஏற்றபோது நிலவிய மிகச்சோதனையான நிதி இடர்ப்பாடு மிகுந்த சூழ்நிலையை இம்மாமன்ற உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இம் மாநிலத்தின் நிதிநிலைமை கிட்டத்தட்ட சீர்குலையக்கூடிய நிலையில் இருந்தது. திட்ட ஒதுக்கீட்டைக் குறைப்பது தவிர்க்கமுடியாதெனக் கருதப்பட்டது. இந்த நிலையைக் கடந்து உறுதியான நிலையை எய்துவதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். அதைவிடவும் முக்கியமாக, 1991–92, 1992–93 ஆகிய இரு ஆண்டுகளிலுமே ஒப்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டையும் மிஞ்சி நாம் சாதனை

ஆண்டிலிருந்தாவது கணிசமான அளவிற்கு நிதியொதுக்கீட்டை அதிகரித்து வழங்க வேண்டும் என்பதையும் பத்தாம் நிதிக் குழு கவனத்தில் கொள்ள வேண்டும். இது தொடர்பாக, நாம் விரிவான அறிக்கையை ஏற்கெனவே பத்தாம் நிதிக் குழுவிற்கு அளித்துள்ளோம். பத்தாம் நிதிக் குழு, 1994 ஏப்ரல் திங்களில் சென்னையில் கூடும் போது, நமது கோரிக்கையை நாம் எடுத்துக் கூறுவோம்.

வளர்ச்சிப் பணித் திட்டங்கள்

22. புதிய 1994-95 ஆம் நிதியாண்டில் நாம் அடியெடுத்து வைக்கின்ற இவ்வேளையில், நம்மைக் கவலை கொள்ளச் செய்கிற பல கொள்கைப் பிரச்சினைகள் பற்றி நான் சுருக்கமாகத் தெரிவித்தேன். நேரமின்மை கருதி, நான், வேளாண்மை, உணவு பதப்படுத்தல், பாசனம், ஊரக வளர்ச்சி, கால்நடை வளர்ப்பு, மீனளம், வனவளம், தொழில்கள், எரிசக்தி, சாலைகளும் சாலைப் போக்குவரத்தும், சுற்றுச் சூழல், நகர்ப்பகுதி மேம்பாடு, சென்னை மாநகர் மேம்பாடு, வீட்டுவசதி, கல்வி, தமிழ் வளர்ச்சி-பண்பாடு, சுகாதாரம்-குடும்ப நலன், குடிநீர் வழங்கல், மகளிர் மேம்பாடு, குழந்தைகள் நலன்-சத்துணவு, ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், நெசவாளர் நலன், தொழிலாளர் நலன், கடன் திட்டம், வேலைவாய்ப்பு, அரசு ஊழியர் நலன் ஆகிய தலைப்பின் கீழ் வரும் முக்கியத் திட்டப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றை பற்றி என்னுடைய இவ்வுரையின் 'ஆ' பகுதியில் நான் விவரித்துள்ளேன். இவற்றை நான் இங்கே படித்ததாக எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துறைகளில் வருகின்ற வளர்ச்சித் திட்டங்களில் பல புதிய திட்டங்களும், ஆதரவு தேவைப்படுகின்ற வெவ்வேறு தொகுதியினருக்கான சிறப்புத் திட்டங்களும் இடம் பெற்றுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல புதிய முயற்சிகளை இம்மாமன்ற உறுப்பினர் பாராட்டுவர்.

23. இத்திட்டங்கள் பற்றிய விவரங்கள், என்னுடைய உரையின் 'ஆ' பகுதியில் இடம்பெற்றுள்ளன. இருப்பினும், சில பெரிய திட்டங்கள், திட்டப்பணிகள் பற்றிய விவரங்களை இங்கே சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

* உணவு தானிய உற்பத்தி, 100 இலட்சம் டன் என்ற சாதனை அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண்மையில் மூலதன முதலீட்டைப் பெருக்குதல், அதிக மதிப்புள்ள பயிர்களின் சாகுபடி, வேளாண்மை விளைபொருட்களின் ஏற்றுமதி, நீர்வரத்துப் பகுதி மேம்பாடு, புன்செய் நில மேம்பாடு, மனித வள மேம்பாடு ஆகியவை புதிய உத்வேகத்துடன் செயற்படுத்தப்படும் திட்டங்களாகும். 1994-95 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.76 கோடி செலவில் புதிய மனித வள மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தொடங்கப்படும்.

* ரூ.952 கோடி மொத்த திட்ட ஒதுக்கீட்டைக் கொண்ட நீர் ஆதாரத் தொகுப்பு திட்டம், ரூ.40 கோடி வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுடன் 1994-95 ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது. தீபகற்ப நதி நீர் மைய ஏற்பாட்டுத் திட்டம் மற்றும் குறிப்பாக பம்பா-அச்சன் கோயில்-வைகை இணைப்புத் திட்டத்தை கூடிய விரைவில் செயற்படுத்த வேண்டுமென இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. 4270 முன்னாள் ஜமீன் ஏரிகளை மேம்படுத்தும் பெரும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

* இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 73 ஆவது மற்றும் 74 ஆவது திருத்தங்களை உள்ளடக்கிய, புதிய சட்டங்கள், இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். அதிகாரப் பரவல் முறையிலமைந்த மாவட்டத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, ரூ.20 கோடியிலிருந்து, 1994-95 ஆம் ஆண்டில் ரூ.40 கோடியாக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

* வன வளர்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரை, 1994-95 ஆம் ஆண்டில், 1.5 இலட்சம் ஏக்கர் இத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். ரூ.300 கோடி செலவாகக் கூடிய பல்வகையின பாதுகாப்புக்கான தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் வெளிநாட்டு உதவியுடன் செயற்படுத்தப்படும்.

* 1 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டுடன் சென்னைத் தொழில் பூங்கா அமைக்கப்படும். தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை, விரைவில் செயற்படுத்த வேண்டுமென நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம். சென்னைக்கு அருகே, 1000 ஏக்கர் பரப்பில் புதிய வளர்ச்சி மையம் ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், அடிப்படை வசதிக் கட்டமைப்புக் கடன்-நிதியுதவிப் பணிகள் நிறுவனத்தின் ஆதரவுடன், ரூ.550 கோடி மதிப்பீட்டுச் செலவில் திருப்பூர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தும். தமிழ்நாடு செய்தித் தாள்-காகித நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம், ரூ.220 கோடி திட்ட ஒதுக்கீட்டில், 1994-95 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும். சென்னைக்கு அருகில், தோல் தொழிற்பேட்டை ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும்.

* தமிழ்நாட்டில் மின் தேவையளவிலும் மின் வழங்கல் அளவிலும் வெட்டு எதுவும் இல்லாதிருப்பது தமிழ்நாட்டின் மின்சார நிலைமையின் சிறப்பு அம்சம் ஆகும். இத்துறைக்கு, 1994-95 ஆம் ஆண்டில் ரூ.625 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இது, 1993-94 ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டை விட 16 சதவீதம் அதிகமாகும். 3 X 210 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையத்தின் முதல் நிலை, 1994-95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். ஒரு பிரிவு மின் மைய ஏற்பாட்டுடன் இணைக்கப்படும். 4 X 30 மெகாவாட் திறன் கொண்ட பேசின் பாலம் எரிவாயு அடிப்படையிலான மின் நிலையப் பணி தொடங்கி விட்டது. 1500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ரூ.7500 கோடி முதலீட்டுடன் கூடிய ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுதல்-மின் உற்பத்தித் திட்டம், இணைத்துறையில் செயற்படுத்தப்படும். ரூ.800 கோடி செலவில் 100 மெகாவாட் திறன் கொண்ட கடல் நீர் மின் உற்பத்தி நிலையம் ஒன்று அமைப்பதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பது, வற்றாத புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆதாரத்தைப் பயன்படுத்தும் மிகப் பெரியதொரு திட்டமாகும்.

* சாலை பராமரிப்புக்கான நிதியொதுக்கீடு, 1993-94 ஆம் ஆண்டை விட 1994-95 ஆம் ஆண்டில் கணிசமாக, அதாவது 26 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள சாலை அமைப்பின் தரத்தை முழுமையாக மேம்படுத்துவதற்காக, ரூ.880 கோடி செலவாகக் கூடிய, சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்று வரையப்பட்டு, நிதியுதவி வேண்டி உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 1000-க்கும் அதிகமான மக்கட் தொகை கொண்ட எல்லா கிராமங்களுக்கும் 1994-95 ஆம் ஆண்டில் அனைத்துப் பருவங்களுக்கும் ஏற்ற சாலை வசதி செய்து தரப்படும்.

* ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்று, வெளிநாட்டு உதவியுடன் மேற் கொள்ளப்படும். ரூ.112.50 கோடி செலவில் சென்னை மாநகர நீர் வழிகளை சுத்திகரிக்கவும், சுற்றுப்புறத் துப்புரவுக்கும் வகை செய்யும் திட்டமும் வெளிநாட்டு உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.150 கோடியாக இருக்கும். நகர்ப்பகுதி ஏழை மக்களுக்கான மாநில ஒருங்கிணைந்த திட்டம் என்னும் புதியதொரு திட்டம், 1994-95 ஆம் ஆண்டில், தொடங்கப்படும். இத் திட்டத்தின் கீழ் நகர்ப் பகுதியைச் சேர்ந்த 1 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும்.

* 'எழில்மிகு சென்னை 2000' என்னும் திட்டம், நம் நாட்டிலேயே அனைவரும் விரும்பி வருகை புரிகின்ற ஒரு நகரமாக சென்னையை உருவாக்கும் திட்டமாகும். இத் திட்டத்திற்கு, 6 ஆண்டுகளில் ரூ.4,000 கோடி முதலீடு தேவைப்படுகிறது. சென்னை மாநகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தத் தேவையான நிதியுதவி அளிக்க, பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் என்ற ஒரு நிறுவனம் அமைக்கப்படும். இக் கழகத்தின் மொத்த மூலதன ஆதாரத்தை ரூ.60 கோடியாக ஆக்க வரவு-செலவுத் திட்டத்தில், இந்நிறுவனத்திற்கான பங்கு மூலதன உதவியாக ரூ.15 கோடி ஒதுக்கப்படுகிறது.

* "அனைவருக்கும் குடியிருப்பு" வசதி என்பதே இவ்வரசின் கொள்கையாகும். 1994-95 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின் மூலமாக, 1.25 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படும்.

* தருமபுரி, திருவண்ணாமலை-சம்புவராயர், விழுப்புரம்-இராமசாமிப் படையாட்சியார் மற்றும் தென்னார்க்காடு-வள்ளலார் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ரூ.120 கோடி திட்டச் செலவில் 5 ஆண்டு கால அளவில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் தொடங்கப்படும்.

* ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு உலகத் தமிழ் மாநாடு, 1995 ஜனவரித் திங்களில் தஞ்சாவூரில் மிகச் சிறப்பான முறையில் நடத்தப்படவிருக்கிறது. தஞ்சாவூர் அரண்மனையும், மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மஹாலும் முழுமையாகப் புதுப்பிக்கப்பட விருக்கின்றன.

* பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்த்து, தொடர்ந்து படிக்க வைப்பதைக் கட்டாயமாக்கும் சட்டம் ஒன்று, சட்டப்பேரவையின் இக் கூட்டத் தொடரில் அறிமுகப் படுத்தப்படும். இச் சட்டத்தில் தண்டனை விதித்தல் இடம் பெறாது. இராமநாதபுரத்தில், 1994-95 ஆம் ஆண்டில் மகளிர் கல்லூரி ஒன்று தொடங்கப்படும்.

* 1994-95 ஆம் ஆண்டில், ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும், 32 படுக்கை வசதிகளாவது இருக்குமாறு வசதிகள் மேம்படுத்தப்படும். ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும், புதிய குழந்தை மருத்துவப் பிரிவும், பிறந்த குழந்தை (neonatal) மருத்துவப் பிரிவும் ஏற்படுத்தப்படும். உலக வங்கியின் உதவி பெறும், பார்வைக் குறைவைக் கட்டுப்படுத்தும் திட்டமும் எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாடுத் திட்டமும் தொடங்கப்படும்.

* குடிநீர் வழங்கலுக்கான திட்ட ஒதுக்கீடு, 1994-95 ஆம் ஆண்டில்

அம்சங்களையும் கருத்திற் கொண்டு அவற்றை ஒவ்வொன்றையும் தனித் தனியாக எடுத்துப் பரிசீலிக்கவிருக்கிறோம்.

38. ஐந்தாவதாக, அரசுச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கான பல விரிவான நடவடிக்கைகளை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்நடவடிக்கைகள் முனைப்பான மெய்யார்வத்துடன் செயற்படுத்தப்படும்.

39. நான் மேலே குறிப்பிட்ட பல நடவடிக்கைகள் மூலமாக, 1994–95 ஆம் ஆண்டில் ரூ. 95 கோடி அளவுக்கு சேமிப்பை ஏற்படுத்துவதே நமது நோக்கமாகும். இந்த இலக்கை எய்துவதற்குத் தேவையான அனைத்து ஆதரவும் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

வரிகள்

விற்பனை வரி

40. கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நாம் நீண்ட கால நோக்குடன் விற்பனை வரி விதிப்பு முறைகளில் மேற்கொண்ட மாபெரும் சீரமைப்புத் திட்டங்களை இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இச்சீரமைப்புகள் வரி வீதமுறையை எளிமைப்படுத்துவதில் ஒரு மிகப் பெரிய நடவடிக்கை என்று அனைவரும் பாராட்டியுள்ளார்கள். வரி வீதங்களை சீரமைத்தல், மேலும் சில மூலப் பொருட்கள், பயன்படு பொருட்கள் (Consumables) மற்றும் செறிவுப் பொருட்கள் (packing materials) இவற்றுக்கு சலுகை வரிவீதம் விதிக்கப்படுதல், மொத்த விற்பனை அளவு ரூபாய் ஒரு இலட்சம் வரை வரி விலக்கு வரம்பை உயர்த்தியது, இவையெல்லாம் ஒரு மிகப் பெரிய சீர்திருத்தம் என்று பாராட்டப்பட்டுள்ளது.

41. வரி வீதத்தைச் சீர்திருத்தி அமைத்தல், மற்றும் எளிதாக்குதல் ஆகியவற்றை தொடர்வதே நமது நோக்கமாகும். அடுக்கு வரி முறையைக் (Cascading of Taxes) குறைக்க வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். இதனடிப்படையில் பிரிவு 3 (3)ன் கீழான சலுகை வரி வீதத்தை மூலப் பொருட்களாக உபயோகிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட சில கனிம எண்ணெய்கள் மற்றும் பலதரப்பட்ட ஏழுக்கள் இவைகளுக்கு நீட்டிக்க முடிவு செய்து[illegible]ளோம். அதேசமயம் எரி பொருளாகப் பயன்படுத்தப்படும் டீசல் எண்ணெய் பிரிவு 3(3)ன் கீழான சலுகை வரி வீதத்தில் வராது. மேற்கொண்டவற்றை அமல்படுத்த, தேவையான சட்டத் திருத்தங்கள் கொணரப்படும்.

42. கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையின்போது, விற்பனை வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டு அதற்காக வரி ஏய்ப்பு அதிகமாக ஏற்படக் கூடிய சில இனங்களை அட்டவணை VI -ல் கொணர முற்பட்டோம் என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இந்நடவடிக்கை நல்ல பலனைத் தந்துள்ளது. எனவே கீழ் கண்ட இனங்களையும் அட்டவணை VI ல் இப்போது சேர்க்க முற்படுகிறோம்.

வரிசை எண்	பொருட்கள்	வரிவீதம்
1	முன்னதாகப் பதிவு செய்யப்பட்ட (ஆடியோ மற்றும் வீடியோ) கேசட்டுகள் மற்றும் காம்பேக்ட் டிஸ்க்கள்	3%
2	உடனடிக் காப்பித்தூள்	5%
3	வாசனையூட்டப்பட்ட பாக்கு, வறுக்கப்பட்ட அல்லது வாசனையூட்டப்பட்ட சீவல்	8%
4	எஃகு அலமாரிகள், அலுவலகச் சாதனங்கள் முதலியன	8%
5	பிஸ்கட், டாபிஸ்(Toffees) மற்றும் இதர பெயரிடப்பட்ட இனங்கள்	12%
6	சோப்புகள்	12%
7	பற்பசை, பற்பொடி	12%
8	வாசனைத் திரவியங்கள், நறுமணத்-திரவியங்கள் (Perfumes) கூந்தல் எண்ணெய் முதலானவை	16%
9	பெட்டிகள் (Suitcases) முதலானவை	8%
10	காய்கறி எண்ணெய் (Vegetable oil)	3%
11	வெட்டப்பட்ட மரம் (Timber)	8%
12	ஏலக்காய்	3%

மேற்கண்ட பொருட்களின் மீதான வரி வீதத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன். வரி ஏய்ப்பைத் தடுக்கும் முகத்தான் இப்பொருட்களை அட்டவணை VI ல் சேர்ப்பது ஒன்றே [illegible]ப்படும் மாற்றம் ஆகும்.

43. தளவாடச்சாமான்கள்(furniture) மீதான வரிவீதம் 8% ல் இருந்து 12% ஆக உயர்த்தப்படுவதோடு, அட்டவணை VI ல் தனியானதோர் இனமாக தளவாடச் சாமான்கள் சேர்க்கப்படும்.

44 [illegible] களில் ஒன்றாக, கட்டிட வேலை ஒ[illegible]ந்த பணிகளைப் பொறுத்த வரை அவர்கள் விரும்பினால் கூட்டமைப்பு வரி வி[illegible] முறைக்குள் (compounding) வரலாம் என்ற முறையைக் கொண்டு வந்தோம். கட்டிட வேலை ஒப்பந்தப் பணிகளுக்கு 2% கூட்டமைப்பு வரிவீதம் ஒன்றும் கொண்டு வந்தோம். 1993–94ம் ஆண்டுக்கு 30.6.93 வரை இப்புதிய திட்டத்தின் கீழ் சேரலாம் என்றும் காலவரை கொடுத்திருந்தோம். இக்கால வரையை நீட்டிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வந்துள்ளன. இக்கோரிக்கைகளை கருத்திற்கொண்டு 1993–94 மற்றும் 1994–95 ஆண்டுகளில் மேற்கண்ட திட்டத்தில் சேர்வதற்கான காலவரையை 30.6.94 வரை நீட்டிக்க முடிவு செய்துள்ளோம்.

45. கடந்த வருட வரவு செலவுத் திட்டத்தின் போது வரி விலக்கு பெறுகின்ற பொருட்கள் அனைத்தையும் பரிசீலித்து, வரிவிலக்குத் தகுதியில்லாத பொருட்களை அடையாளம் கண்டு அவற்றை வரி விதிப்பின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருந்தேன் என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். வரி வீதச் சீரமைப்பின் போது, வரி விதிப்புக்குட்பட்ட பொருட்களின் எண்ணிக்கையை அதிகரித்து, வரி விகிதங்களை முடிந்த அளவு குறைவாக வைக்க வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதிகமான பொருட்களுக்கு வரி விலக்கு அளிப்பதால் மேற்கண்ட நோக்கம் முறியடிக்கப்படுகிறது. எனவே நான் கடந்த வருடத்தில் இருந்து நாம் அமுலாக்கி வரும் எளிதாக்கப்பட்ட வரிவீதத் திட்டத்தின் ஒரு அங்கமாக, தேவையற்ற வரி விலக்கு நீக்க வேண்டும் என்பது மிகவும் அவசியமான ஒன்றாகிறது. திரு பி.விஜயராகவன், இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட உயர் மட்ட விற்பனை வரிச் சீரமைப்புக் குழு தனது அறிக்கையில் பெரும்பாலான பொருட்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட வரிவிலக்கு நீக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. சாதாரண உபயோகத்தில் உள்ள நெல், அரிசி, கோதுமை, உப்பு முதலானவற்றுக்கும் வரி விதிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. இப்பரிந்துரைகளை நாங்கள் மிகவும் கவனத்துடனும் தீவிரமாகவும் பரிசீலித்தோம். ஏழை மக்களை விலைவாசி உயர்வில் இருந்து பாதுகாக்க வேண்டுமென்று முடிவு செய்து, ஏழை எளியோர் முக்கியமாக உபயோகிக்கும் பல பொருட்களுக்கு வரி விலக்கைத் தொடர்ந்து நீடிப்பதென தீர்மானித்துள்ளோம். அட்டவணை III ல் சேர்க்கப்பட்டு கீழ்கண்ட பொருட்களுக்கு வரி விலக்கம் தொடரும்.

- அரிசி, கோதுமை, பால், உணவு உப்பு, மாமிசம், காய்கறிகள்,பழங்கள் முதலான பக்குவப் படுத்தலுக்குள்ளாகாத முதன்மை உணவுப் பொருட்கள்.
- சில விவசாய மற்றும் தோட்டக்கலை பொருட்கள்
- சில விவசாய இடுபொருட்கள்
- சில விவசாயச் சாதனங்கள்
- பந்தயக் குதிரை தவிர, பிற விலங்கினங்கள்
- மட்பாண்டங்கள் மற்றும் சில பனைப் பொருட்கள்
- குடும்ப நலப் பொருட்கள்
- இரத்தம் மற்றும் பிளாஸ்மா (Plasma) சில உயிர் காக்கும் மருந்துகள், சில நாட்டு மருந்துகள், உடல் ஊனமுற்றோருக்கான அனைத்து சாதனங்கள் மற்றும் செயற்கை உறுப்புகள்
- மரபு சாரா எரிசக்தி சாதனங்கள் (Non Conventional Energy Devices) மற்றும் நகரக் கழிவுகளைப் பயன்படுத்தும் கொதிகலன்கள்.
- சிலேட், சிலேட் பென்சில், மரத்தினாலான பென்சில்கள், சாக் கட்டிகள்
- துணிக் கழிவுகள்
- யூனிசெப் (UNICEF) வாழ்த்து அட்டைகள், காலண்டர்கள்

படைத்துள்ளோம். 1993–94 ஆம் ஆண்டில் மீண்டும் அதே சாதனையை படைக்கவிருக்கிறோம். 1994–95 ஆம் ஆண்டுக்கு ரூ.2750 கோடி என்ற உயரிய ஒதுக்கீடு நிர்ணயித்துள்ளோம். இந்தச் சாதனை அளவை எய்த நாம் மிகுந்த திறமையுடனும் உறுதியுடனும் செயலாற்ற வேண்டியிருக்கும்.

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்

28. 1993–94 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.6989 . 89 கோடி ஆகவும், வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவு ரூ.8300.87 கோடி ஆகவும், வருவாய்ப் பற்றாக்குறை (–)ரூ.1310.98 கோடி ஆகவும் இருந்தது. தொடக்க மதிப்பீட்டுப் பற்றாக்குறை (–)ரூ.275 . 94 கோடி, எல்லாக் கணக்குகளிலும் உள்ள பற்று வரவுகளின் நிகர விளைவு (–) ரூ.359.95 கோடி. புதிய வரிகள், மற்றும் சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நிகர மிச்சம் ரூ. 80 கோடி ஆகியவை அனைத்தையும் சேர்த்து மொத்தப் பற்றாக்குறை (–)ரூ.555.89 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

29. சரிக்கட்டப்படவேண்டிய பற்றாக்குறை மிக அதிகமாக இருந்ததால், திட்டஒதுக்கீட்டை எவ்விதத்திலும் குறைக்காமல், நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நாம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதாயிற்று. 1993–94 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.7215 . 13 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ8407.41 கோடி எனவும், வருவாய்க்கணக்கில் இறுதி பற்றாக்குறை (–) ரூ. 1192 .28 கோடி எனவும் காட்டுகிறது. தொடர்ந்து அதிகரித்துக்கொண்டேயிருக்கும் வருவாய்ப் பற்றாக்குறைப் போக்கினைக் கட்டுப்படுத்த நாம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். 1992–93 ஆம் ஆண்டின் இறுதியில் இறுதி இருப்பான ரூ.32 கோடியுடன் எல்லாக் கணக்குகளிலும் நடைபெற்ற பற்று வரவுகளின் நிகர விளைவான (–) ரூ.228.82 கோடியையும் சேர்த்து, 1993–94 ஆம் ஆண்டின் முடிவில், இறுதி பற்றாக்குறை (–)ரூ.196.82 கோடியாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுக்கு நிதியொதுக்குகின்ற அதே வேளையில் 1993–94 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கும் கீழாக ஒட்டுமொத்தப் பற்றாக் குறையைக் குறைப்பதில் நாம் வெற்றி கண்டுள்ளோம் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

30. 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்க்கணக்கில் வரவு ரூ.[illegible]4.37 கோடியாகவும், வருவாய்க்கணக்கில் செலவு ரூ.9083 .53 கோடியாகவும், இதனால் நிகர வருவாய்ப் பற்றாக்குறை (–) ரூ1239.16 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்படுகிறது. 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அனைத்துக் கணக்குகளின்கீழ் வரும் பற்று–வரவுகளின் நிகர விளைவு, (–) ரூ201.23 கோடி பற்றாக்குறையாக இருக்கும். 1993–94 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட இறுதி பற்றாக்குறை (–)ரூ.196.82 கோடியுடன், இதனையும் சேர்த்தால் 1994–95 ஆம் ஆண்டு இறுதியில் ஒட்டு மொத்தப்பற்றாக்குறை (–)ரூ.398.05 கோடியாக இருக்கும்.

31. அகன்று விரிந்து வரும் வருவாய்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கக் கூடுதலாகக் கடன் பெறுவதே நம்முடைய கடந்தகால உத்தியாக இருந்தது. இது மிகவும் இன்றியமையாத நடவடிக்கையாகும். இல்லை எனில், ஏழை மக்களின் நலப்பணித்திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை அல்லது திட்ட ஒதுக்கீட்டை நாம் குறைக்க வேண்டியதிருந்திருக்கும். திட்ட ஒதுக்கீட்டில் எவ்விதக் குறைவுக்கும் இடந்தரலாகாது என்றும் எந்த ஒரு சூழ்நிலையிலும் ஏழை எளியோருக்கான நலப்பணித்திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீட்டளவைக் குறைக்க நாம் அனுமதிக்கக்கூடாது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய கருத்தில் மிகத் தெளிவாக இருந்ததால் நாம் கடன் வாங்கும் உத்தியையே மீண்டும் பின்பற்றவேண்டியதாயிற்று. இக்கடன்கள், நம்முடைய கடன் பணிச்சுமையை மேலும் அதிகரித்துள்ளன. நமது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு அனுமதிக்கப்படும் நீக்கு போக்கற்ற பற்றாக்குறையான நிதி ஆதாரங்களைக் கருத்திற்கொண்டு செலவு வளர்ச்சி வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நீண்டகால உத்திகள் பற்றி நான் சென்ற ஆண்டு வரவு–செலவுத் திட்ட அறிக்கையை தாக்கல் செய்து ஆற்றிய உரையில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன்.

செலவுக் கொள்கை

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

ஒருவரது பொருள் போகும் செலவின வழி விரிவடையாது இருந்தால், அவரது பொருள் வரும் வருவாய் வழி சிறியதாக அமைந்து இருந்தாலும், அதனால் அவருக்குக் கேடு ஒன்றும் ஏற்பட்டு விடாது, என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் வாக்கு.

32. இந்த வாக்கை மனதிற் கொண்டு வகுக்கப்பட்டுள்ள செலவுக் கொள்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் முழு மனதோடு ஆதரிப்பர் என்பதில் எனக்கு ஐயமில்லை.

33. [illegible]ந்த ஆண்டில் நான் குறிப்பிட்ட செலவுக் [illegible]கை அறிவிப்பை நாங்கள் நடைமுறைப் படுத்தியுள்ளோம். இத்தருணத்தில் இம் மாமன்றத்தின் முன் சில விவரங்களைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். தமிழ் நாட்டில், இத்திட்டத்தில் சேராத வருவாய்க்கணக்கிலான செலவு, 1992–93 ஆம் ஆண்டு இறுதி வரையிலான கடந்த ஐந்தாண்டுகளில், ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 22.6 சதவீதம் என்ற வீதத்தில் உயர்ந்துள்ளது. அதே சமயத்தில், மாநிலத்தின் சொந்த வருவாய் 19.2 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை அதிகரிப்புக்கு இதுவே முக்கியக் காரணமாகும். இது கட்டுப்படுத்தப்படவேண்டும். செலவு வளர்ச்சி வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இப்பணியில் இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் முழு ஆதரவையும் அரசுக்கு நல்க வேண்டும். நடைமுறையில், பயனுள்ள செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவது கடினம் என்பதை நான் அறிவேன். பல்வேறு திட்டங்களுக்கு அதிக நிதி வேண்டி கோரிக்கைகள் வந்துகொண்டே இருக்கின்றன. ஏழை மக்களின் நலத்திட்டங்களுக்காக மட்டுமே நிதிபெறப்படுகிறது என்பதையும், அவர்களோடு ஒப்பிடுகையில் தேவை குறைவாக உள்ளவர்களுக்கு நிதி ஒதுக்கப்படாமலும் பார்த்துக் கொள்வதிலும் நாம் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். செலவுக் கட்டுப்பாடு தொடர்பாக முன்னுரிமை அளிக்க வேண்டிய் சில துறைகளைப் பற்றி இங்கே குறிப்பிட விழைகிறேன்.

34. மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் குறித்த புதிய கருத்து, அரசுப் பணிகளில் புகுத்தப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். இந்நோக்கத்துடன்தான் பல்வேறு துறைகளில் வீணான நடவடிக்கைகளைக் களைந்து அவற்றின் செயல் திறனை மேலும் உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு "விரைந்த வளர்ச்சிக்காக தொடக்கநிலையிலிருந்து வரவு–செலவுத் திட்டமிடும் முறையை" (ze-Bag) நாங்கள் கொண்டுவந்துள்ளோம். செலவைக் குறைத்து சீரமைக்கும் பொருட்டு, ஆட்சேர்ப்பு நிலையிலேயே புதிய நியமனங்களை நிறுத்தி வைக்கும் நடைமுறையை அறிமுகம் செய்தோம். இது வேலை வாய்ப்பு மறுப்பு எனத் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டதால், இந்தத் தடை திரும்பப் பெறப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக தேவையான இடங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட மாற்றங்களைச் செய்யவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். சம்பளங்கள், ஊதியங்கள், ஓய்வூதியங்கள் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் வெகுவாக அதிகரித்துள்ளது என்பதும், இந்த வகையில் நாம் சில திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதும் நாம் நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான பிரச்சினையாகும்.

35. இரண்[illegible]தாக, விலைகள் வெகுவாக அதிகரித்து[illegible]தால், நாம் அளித்துவருகின்ற பல்வேறு சலுகைகளுக்கு அதிக செலவாவதுடன் இச்சலுகைகள், வளர்ச்சிப்பணிகளுக்குப் பயன்படுத்தப் போதிய நிதி கிடைக்காமல் செய்து விடுகின்றன. இச்சலுகைகளை எந்த வகையிலும் திரும்பப் பெறாமல் உண்மையில் தேவைப்படுகின்ற, ஏழை எளிய மக்களுக்கு இச்சலுகைகள் கிடைக்கச் செய்ய நாம் முயற்சிக்க வேண்டும். நிதி ஆதாரப் பற்றாக்குறை நிலவும் இத் தருணத்தில் இச்சலுகைகள் உண்மையிலேயே தேவைப்படும் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேருவதை உறுதிப் படுத்த வேண்டியது மிக முக்கியமாகிறது. இத்தகைய திட்டங்கள் அனைத்தையும் பற்றி விரிவாக ஆய்வு செய்து, பயன்கள் உரியவர்களைச் சென்று சேருவதை உறுதிப்படுத்த உத்தேசித்துள்ளோம்.

36. மூன்றாவதாக, செலவுத்தொகை போதிய அளவில் திரும்ப வசூலாகாத அரசுப் பணிகள் பல உள்ளன. பொருத்தமான கட்டணங்களை விதிப்பதன் மூலம் அரசுக்கு ஏற்படும் நிகரச் செலவைக் குறைக்க முடியும். இதனை உயர் கல்வித்துறையிலும், மருத்துவப் பணிகளிலும், பாசனம் போன்ற சில பொருளாதாரப் பணிகளிலும் செய்ய இயலும். ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்படும் நலப்பணிகளுக்கு எவ்வித் பாதிப்பும் ஏற்படாமல் கட்டணம் செலுத்த இயலக்கூடியவர்களிடமிருந்து பொருத்தமான கட்டணங்கள் வசூலிக்கப்படும். அரசு ஆற்றும் மற்ற பணிகளுக்கும் இவ்வாறு கட்டணம் விதிக்கப்படும். இதன் மூலம் அரசின் நிகரச் செலவுச் சுமை குறையும். கட்டணங்கள், அபராதங்கள் மூலம் கிடைக்கும் வருவாயை நாம் அதிகரிக்க வேண்டும். அனுமதியற்ற நில அனுபோகத்திற்கு உயர் வீதங்களில் கட்டணம் விதிக்கப்படவேண்டும். ஏழைகளல்லாதோருக்கு அரசு ஆற்றும் அனைத்துப் பணிகளிலிருந்தும் கிடைக்கும் வருவாயை அதிகரிப்பதில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

37. நான்காவதாக, பொதுத்துறை நிறுவனங்களில் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்வதற்காக அளிக்கப்படும் நிதி ஆதரவை 1994–95 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்திவிட நாங்கள் முடிவு செய்துள்ளோம். கடந்த காலத்தில் அரசுக்கு ஏற்படும் நிதி பளுவையும் பொருட்படுத்தாது, நட்டத்தில் இயங்கி வந்த நிறுவனங்களுக்கு இத்தகைய நிதியுதவியை அளித்துவந்தோம். அதிகரித்து வரும் அரசின் கடன் பணிச்சுமையை கருத்திற்கொண்டு இனிமேலும் இவ்வாறு நிதியுதவி அளிக்க இயலாது. பொதுத்துறை நிறுவனங்களுக்கு ரொக்க இழப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதற்காக இந்நிறுவனங்களை நட்டத்திலிருந்து மீட்கும் திட்டத்தை (Turn around plan) ஏற்கெனவே செயற்படுத்தியுள்ளோம். சில பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்ந்து இழப்பில் இயங்கி வந்தால், அவற்றைத் தனியார் வசம் ஒப்படைக்க நாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும். இந்த அனைத்து

* சைக்கிள் ரிக்ஷா (மோட்டார் இல்லாதது)

* மின்சாரச் சக்தி

* பிளாட்டினம், தங்கம் மற்றும் வெள்ளி தவிர பிற பொருட்களால் செய்யப்பட்ட வளையல்கள்

* குங்குமம், கண் மை

* ரெடிமேட் தாலி

46. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களோடு செயற்கை வைரம், ஏற்கெனவே வரி செலுத்தப்பட்ட பேப்பரில் எடுக்கப்படும் ஜெராக்ஸ் நகல்கள், லேசர் நகல்கள், கனிமப் பொறியின் பிரிண்ட் அவுட்கள், மற்றும் மாநிலங்களுக்கிடையே விற்பனையாகும் தேங்காய் இவற்றுக்கும் வரி விலக்கு அளிக்கப்படும்.

47. வரவு செலவுத் திட்ட விவரங்களுடன் இணைந்த ஒரு தனி அறிவிக்கையில் வரி விலக்கத்தில் தொடர்ந்து இருக்கின்ற பொருட்களின் முழு விவரங்களும் தரப்பட்டுள்ளன.

48. வரி விலக்கம் நீக்கப்பட்ட பொருட்களின் விவரம் அட்டவணை ll கொண்டு வரப்பட்டு, அவற்றின் முழு விவரமும் அடங்கிய ஒரு தனி அறிவிக்கை மாமன்றத்தின் முன்னிலையில் வைக்கப்பட்டுள்ளது.

49. நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வரி விலக்குகள் மிகவும் சிக்கலான மற்றும் பல்வேறு வகைப்பட்டதாக இருப்பதால் இவை பின்னர் பரிசீலிக்கப்படும்.

50. கடந்த மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் மத்திய நிதியமைச்சர் அவர்கள் கூடுதல் மதிப்பு அடிப்படையில் (Value Added Tax) விதிக்கப்படும் வரி விதிப்பது குறித்து தேசிய பொது நிதிக் கொள்கை நிறுவனத்திடம் ஆலோசனை கேட்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். இம்முறைகளை அமலாக்குவதற்கு முன்னர் பல கருத்துகளை மிகவும் விரிவாக விவாதிக்க வேண்டியுள்ளது. எனவே, மேல் வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி, இவற்றை அடிப்படை வரியுடன் ஒன்று சேர்த்தல், கூடுதல் விற்பனை வரியை நுகர்வோர்களிடம் இருந்து வசூலித்தல் போன்ற அடிப்படை மாற்றங்களைச் செய்வதற்கு இது சரியான நேரம் இல்லை. உரிய நேரத்தில் மேற்கொண்டவை அனைத்தையும் ஒரு சேரப் பரிசீலிக்கலாம்.

ஆடம்பர வரி

51. சிகரெட் பிடித்தல் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் ஒன்றாகும். இது ஒரு ஆடம்பரம் மட்டுமல்ல, அபாயகரமான ஆடம்பரம். எனவே, பீடி தவிர்த்த புகையிலைப் பொருட்களின் மீது ஆடம்பர வரி விதிக்கத் தீர்மானித்துள்ளேன். புகையிலை சம்பந்தப்பட்ட வரவு ஒரு நிதியாண்டில் ரூபாய் ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கும் விநியோகஸ்தர்கள் மீது 5 சதவீத ஆடம்பர வரி விதிக்கப்படும். தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தில் தேவையான சட்டத் திருத்தங்கள் சட்டமன்றத்தின் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

கேளிக்கை வரி

52. கேபிள் டெலிவிஷன் முறை மிக விரைவாகப் பரவி வருவதால் கேபிள் டெலிவிஷன் முறையை கேளிக்கை வரி விதிப்பின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று விற்பனை வரிச் சீர்திருத்த உயர் மட்டக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதனை அரசு ஏற்றுக் கொண்டு, கேபிள் டெலிவிஷன் உரிமையாளர்களின் மொத்த வரவில் 40 சதவீதம் கேளிக்கை வரியாக விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

53. நமது மாநிலத்தில் புதிய திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்குப்பதற்காகவும், பிற மொழிகளில் தயாரிக்கப்பட்டு தமிழில் மொழி மாற்றம் செய்யப்படும் (dubbed) திரைப்படங்களோடு இங்கு தயாரிக்கப்படும் குறைந்த செலவிலான திரைப்படங்கள் போட்டியிட வழிவகை செய்யவும், நம் மாநிலத்தில் திரையிடப்படும் மொழிமாற்றத் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி விகிதத்தை அதிகரிக்க முடிவு செய்துள்ளோம். ஒவ்வொரு வரிப்படி முறை வீதத்திலும் 10 சதவிகிதம் கூட்டப்படும்.

54. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் இந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

ஆயத்தீர்வை

55. இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகள் சிலவற்றின் மீதான ஆயத் தீர்வையைச் சீரமைக்க உத்தேசித்துள்ளோம். மத்திய ரகம் (Medium brand) மற்றும் உயர் ரகம் (Premuim brand) இவை இரண்டுக்கும் ஒரே வீதத்தில் ஒரு புரூப் லிட்டருக்கு (Per proof litre) ரூபாய் 75/- என்ற வீதத்தில் ஆயத்தீர்வை விதிக்கப்படும். தற்போது ஆயத்தீர்வை மத்திய ரகத்துக்கு ஒரு புரூப் லிட்டருக்கு ரூ.70/- என்ற வீதமும், உயர் ரகத்துக்கு ஒரு புரூப் லிட்டருக்கு ரூபாய் 85/- என்ற வீதமும் நடைமுறையில் உள்ளது. மாற்றியமைக்கப்பட்ட ஆயத்தீர்வை ஏப்ரல் 1, 1994 முதல் அமலுக்கு வரும்.

மோட்டார் வாகன வரி

56. எடைக் குறைவான (Light) மோட்டார் வாகன வரி அமைப்பில் சில மாறுதல்களைச் செய்ய உத்தேசித்துள்ளோம். தற்போது நடைமுறையில் உள்ள வரி வீதங்கள் பின்வருமாறு:–

சுமையில்லாத எடை	இறக்குமதி செய்யப்பட்டது	இந்தியாவில் செய்யப்பட்டது: நிறுவனத்துக்கு சொந்தமானவை	மற்றவை
	(ஆண்டொன்றுக்கு ரூபாய்)		
700 கிலோ வரை	1200	800	400
700 கிலோவுக்கு மேல் ஆனால் 1500 கிலோ வரை	1500	1000	500
1500 கிலோவுக்கு மேல் ஆனால் 2000 கிலோ வரை	1800	1200	600
2000 கிலோவுக்கு மேல் ஆனால் 3000 கிலோ வரை	1950	1300	650
3000 கிலோவிற்கு மேல்	2250	1500	750

57. இந்த வரி வீதங்களைப் பின்வருமாறு மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுமையில்லாத எடை	இறக்குமதி செய்யப்பட்டது	இந்தியாவில் செய்யப்பட்டது: நிறுவனத்துக்கு சொந்தமானவை	மற்றவை
	(ஆண்டொன்றுக்கு ரூபாய்)		
700 கிலோ வரை	1500	1000	500
700 கிலோவுக்கு மேல் ஆனால் 1500 கிலோ வரை	1950	1300	650
1500 கிலோவுக்கு மேல் ஆனால் 2000 கிலோ வரை	2250	1500	750
2000 கிலோவுக்கு மேல் ஆனால் 3000 கிலோ வரை	2400	1600	800
3000 கிலோவிற்கு மேல்	2700	1800	900

58. சாதாரண வாடகை சீருந்து (மீட்டர் பொருத்தப்பட்டது) ஒன்றுக்கு காலாண்டுக்கு ரூபாய் 120 என்ற வீதத்தில் தற்போது வரி வசூலிக்கப்படுகிறது. இதனைக் காலாண்டுக்கு ரூபாய் 150 ஆக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

59. சுற்றுலா வாடகைச் சீருந்து மீது தற்போது காலாண்டுக்கு ரூபாய் 150 ஆக உள்ள வரி வீதத்தை காலாண்டுக்கு ரூபாய் 200 ஆக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

60. பெரிய வாடகை சீருந்தைப் (Maxi cab) பொறுத்த வரை காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 125 என்ற தற்போதுள்ள வரி காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 150 என்ற வீதத்தில் மாற்றியமைக்கப்படும்.

61. அகில இந்திய அளவிலான சுற்றுலா ஒப்பந்தப் பேருந்துகளுக்கு (Omni Bus) தற்போது காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 500 என்ற வீதத்தில் வரி வசூலிக்கப்படுகிறது. மற்ற சாதாரண ஒப்பந்தப் பேருந்துகளுக்கு விதிக்கப்படுவது போல அகில இந்திய சுற்றுலா ஒப்பந்தப் பேருந்துகளுக்கும் இனி காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 1000 வீதம் வரி வசூலிக்கப்படும்.

62. சரக்கு வண்டிகள் மீதான வரி வீதங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படும்.

சுமையுடன் கூடிய எடை	தற்போதைய காலாண்டு வரி	புதிய காலாண்டு வரி
	(ரூபாயில்)	
3000 கிலோவிற்குள்	520	545
3000 கிலோவிற்கு மேல் 5500 கிலோ வரை	845	885
5500 கிலோவிற்கு மேல் 9000 கிலோ வரை	1290	1355
9000 கிலோவிற்கு மேல் 12000 கிலோ வரை	1690	1775
12000 கிலோவிற்கு மேல் 13000 கிலோ வரை	1840	1930
13000 கிலோவிற்கு மேல் 15000 கிலோ வரை	2190	2300
15000 கிலோவிற்கு மேல்	2190 உடன் 15000 கிலோவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 250 கிலோ விற்கும் அதன் பகுதிக்கும் ரூபாய் 50 கூடுதலாக	2300 உடன் 15000 கிலோவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 250 கிலோவிற்கும் அதன் பகுதிக்கும் ரூபாய் 50 கூடுதலாக

63. பேருந்துகள் மீதான வரி வீதம் கீழ் கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

	இருக்கை ஒன்றுக்கு தற்போதைய காலாண்டு வரி	இருக்கை ஒன்றுக்கு புதிய காலாண்டு வரி
	(ரூபாயில்)	
விரைவுப் பேருந்துகள்	300	360
கிராமப்புறங்களில் இயங்குபவை	325	360
நகர்ப் பகுதிகளில் இயங்குபவை	260	275
மாநகரப்பகுதிக்குள் இயங்குபவை	50	60

தற்போதுள்ள மேல் வரி வீதங்களில் மாற்றம் ஏதுமில்லை.

64. அங்கீகாரம் பெற்றுள்ள கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு, தற்போது ஆண்டுக்கு ரூபாய் 1500 என்றுள்ள வரிவீதம் ஆண்டுக்கு ரூபாய் 2000 ஆக மாற்றியமைக்கப்படும். மேலும் அங்கீகாரம் பெறாத கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு தற்போது காலாண்டுக்கு ரூபாய் 110 என்றுள்ள வரிவீதம் காலாண்டுக்கு ரூபாய் 500 ஆக மாற்றியமைக்கப்படும். இதன் மூலம் அங்கீகாரம் பெற்றுள்ள கல்வி நிறுவனங்கள், அங்கீகாரம் பெறாத கல்வி நிறுவனங்கள் இரண்டுமே ஒரே வரி வீதத்தில் கொண்டுவரப்படும்.

65. முன்னர், ரிக் வைத்த வாகனங்கள் (Rig mounted vehicles) சரக்கு வாகனங்களாக கருதப்பட்டிருந்தன. ஆனால் மத்திய அரசு சமீபத்திய அறிவிக்கை ஒன்றின் மூலம் ரிக் வைத்த வாகனங்களைப் போக்கு வரத்துக்கல்லாத வாகனங்கள் (Non-Transport Vehicles) என வகை மாற்றம் செய்துள்ளது. எனவே, நாமும் தமிழ்நாடு மோட்டார் வாகன வரிச் சட்டம் 1974ன் முதலாவது அட்டவணையில், ரிக் வைத்த வாகனங்களை ஒரு தனி வகையாகக் கொண்டு வர உத்தேசித்துள்ளோம்.

அவற்றுக்குரிய வாகன சுமையுடன் எடை எதுவாக இருந்தாலும் வாகனம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூபாய் 2500 ஒட்டு மொத்த வரியாக விதிக்கப்படும்.

66. நான் மேலே அறிவித்துள்ள புதிய வரி வீதங்கள் ஏப்ரல் 1, 1994 முதல் அமலுக்கு வரும்.

மின் வரி

67. 1962 ஆண்டு தமிழ்நாடு மின்சாரம் (பயன்படுத்துதல் மீது வரி விதித்தல்) சட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படும் மின்சாரம் மீது வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மின் கட்டணத்தில் 4 சதவீதம் தற்போது வரியாக வசூலிக்கப்படுகிறது. இதற்கிடையில் கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்போது 1958ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் பொதுவான விற்பனை வரி வீதங்களைச் சீரமைத்து 1, 3, 5, 8, 12, 16, 20, 25, 50 சதவீதம் என மாற்றியமைத்தோம். அனைத்து வரி வீதங்களும் புதிய திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இம்மாற்றத்தோடு இணைந்து இருக்குமாறு மின்சார விற்பனை மீதான வரியும் 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக ஏப்ரல் 1, 1994 முதல் சீரமைக்கப்படும். குடிசை இணைப்புகள் உள்ளிட்ட அனைத்து வீடுகளுக்கான இணைப்புகளுக்கும், விவசாய இணைப்புகளுக்கும், சுய மின்சார உற்பத்திக்கும் தொடர்ந்து இவ்வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும், புதிய வரி வீதத்தை அமலுக்குக் கொண்டு வரத் தேவையான புதிய சட்டத்திருத்தம் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

விவசாய வருமான வரி

68. பலவிதமான தோட்டப்பயிர்களின் பயன் தரு ஆயுட்காலத்தில் (Economic life) அடிப்படையில் அப்பயிர்களைத் திரும்பவும் நடுவதற்காகும் செலவினங்களுக்கான வருமானக் கழிவின் வீதங்கள் விவசாய வருமான வரிச் சட்டம் பிரிவு 5 (எ)யின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. சமீபகாலத்தில் ஏற்பட்டிருக்கும் தொழில் நுட்ப மாறுதல்களினாலும், அதிக விளைச்சல் தரும் பயிர் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாலும், பல தோட்டப் பயிர்கள் தற்போது குறைவான பயன்தரு ஆயுட்காலம் உடையனவாகியுள்ளன. எனவே, பயிர்களைத் திரும்பவும் நடுவதற்காகும் செலவினங்களுக்காக அனுமதிக்கப்படும் வருமானக் கழிவினை பிரிவு 5 (எ)ன் கீழ் அடியிற் கண்டவாறு அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேயிலையைப் பொறுத்தவரை மொத்த பரப்பளவில் 2.5 சதவீதம் ஆகவும், இரப்பருக்கு 3.33 சதவீதமாகவும் ஏலக்காய்க்கு 10 சதவீதமாகவும் இது அமையும்.

69. விவசாய வருமான வரிச் சட்டம் பிரிவு 5 (ஒ) ன் கீழ் தற்போது கடனாகப் பெறப்பட்ட நடைமுறை முதலீட்டிற்கான (Working capital) வட்டிச் செலவினத்திற்காக அனுமதிக்கப்படும் அளவானது, விவசாய வருமானத்தின் 25 சதவீதத்தில் 9 சதவீதம் மட்டுமே. இதனை எளிமையாக்கும் பொருட்டு நடைமுறை முதலீட்டின் வட்டிச் செலவினத்தை முழுவதுமாக வருமானக் கழிவிற்கு அனுமதிக்குமாறு இப்பிரிவை மாற்றி அமைக்க முடிவு செய்துள்ளோம்.

70. தற்போது போனஸ், சேமநல நிதி, பணிக் கொடை மற்றும் தொழிலாளர்களுக்குத் தரப்படும் இதரச் சலுகைகளுக்கான செலவினத்தை அனுமதிப்பதில் சில கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன, இவ்வினங்களைப் பொறுத்த வரை, விவசாய வருமான வரிச் சட்டத்தின் அம்சங்கள், 1961ம் ஆண்டு வருமானவரிச் சட்டத்தில் உள்ளது போன்று இருக்குமாறு விவசாய வருமான வரிச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய உத்தேசித்துள்ளோம்.

71. இம்மாறுதல்கள், 1994–95 வரிவிதிப்பு ஆண்டிலிருந்து அமலுக்கு வரும்.

முடிவுரை

72. 1994–95 ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை (–)ரூ. 398.05 கோடியாக இருக்குமென நான் என்னுடைய உரையில் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தேன். செலவினங்களில் சிக்கனம், அரசு ஆற்றுகின்ற பணிகளிலிருந்து நல்ல வருவாய், ஏழை எளிய மக்களுக்கு நன்மை தரக்கூடிய திட்டங்களைச் சிறந்த முறையில் நிறைவேற்றி முடித்தல், ஆகியவை தொடர்பான நடவடிக்கைகள் மூலமாக நமக்கு ரூ.95 கோடி நிகர சேமிப்பாகக் கிடைக்கும். இங்கு நான் குறிப்பிட்ட பல்வேறு வரி விதிப்பு நடவடிக்கைகளின் பயனாக ரூ. 48 கோடி கிடைக்கும். இதனால், 1994–95 ஆம் ஆண்டுக்கான நிகர இறுதிப் பற்றாக்குறை (–)ரூ. 255.05 கோடியாக இருக்கும். 1993–94 ஆம் ஆண்டுக்கான இறுதிப் பற்றாக் குறையைக் கட்டுப்படுத்தி, அதன் மூலம், 1994–95 ஆம் ஆண்டுக்கான ஒட்டு மொத்த பற்றாக் குறையைச் சமாளிக்க முடியும் என்று நம்புகிறோம்.

73. விரிந்து கொண்டே செல்லும் வருவாய்ப் பற்றாக்குறை, திட்டத்தில் சேராத வருவாய்க் கணக்கின் கீழ் தொடர்ந்து நிலவி வரும் பற்றாக்குறையை ஈடு

செய்வதற்காக மானியங்கள் வழங்குகையில், பத்தாம் நிதிக் குழு தமிழ் நாட்டின் நிலைமையையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. தமிழ் நாட்டுக்கு நிதி வகையில் நீதி கிடைப்பதற்காக பத்தாம் நிதிக் குழுவுக்கு நம்முடைய நிலையை எடுத்துக் கூறுவதில் அனைத்து முயற்சிகளையும் நாம் மேற் கொள்வோம்.

74. மாநிலங்களுக்கு அதிகப் பங்கு கிடைக்கும் வகையில் அடிப்படை ஆயத் தீர்வையின் கீழ் வருவாய் வசூலை மேம்படுத்த மத்திய அரசு வரும் ஆண்டுகளில் நடவடிக்கைகள் எடுக்குமென்று நம்புகிறோம். 1994–95 ஆம் ஆண்டில், சில நிவாரணங்கள் அளிப்பதற்காக இவ்வரியின் கீழ் கிடைக்கும் பங்கு அதிகரிக்கும் என்றும் நம்புகிறோம். நகர்ப் பகுதி அடிப்படை வசதி, குடி நீர் வழங்கல், மின் சக்தி ஏனைய பணிகள் ஆகியவற்றிற்குத் தேவையான நிதி திரட்டுவதற்காகப் பத்திரங்கள் வெளியிடுவது பற்றிய எங்கள் விருப்பத்தை மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவரிடம் ஏற்கெனவே உணர்த்தியுள்ளோம். இந் நடவடிக்கைகளின் பயனாக நம்மால் கணிசமான அளவுக்கு நிதி திரட்ட முடியும் என்று நம்புகிறோம். இந்நடவடிக்கைகளின் வாயிலாகவும் புதிய திட்டம் சாரா பணிகளுக்கான செலவுகள் குறித்து மும்முரமான கட்டுப்பாடு நடவடிக்கைகள் வாயிலாகவும், 1994–95 ஆம் ஆண்டில் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அதே நேரத்தில் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.2750 கோடியையும் எய்த முடியும் என்றும் உறுதியாக நம்புகிறோம்.

75. தமிழ் நாட்டை வளமிக்க வளர்ச்சிப் பாதையில் மேலும் இட்டுச் செல்ல புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தமிழ் நாட்டு மக்கள் பெரும் வெற்றியை வழங்கினார்கள். தமிழக மக்கள், இவ்வரசு மீது வைத்துள்ள அளவற்ற நம்பிக்கை பொய்க்காத வகையில் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் அமைதியும் நல்லிணக்கமும் மீண்டும் நிலைநாட்டப்பட்டுள்ளன. வெளிநாட்டுப் போராளிகளினாலும் தீவிரவாதிகளினாலும் ஏற்பட்ட அச்சுறுத்தல் வேருடன் களையப் பட்டுவிட்டது. வரும் ஆண்டுகளிலும் இவ்வரசு இந்த உன்னதமான சாதனையைத் தொடர்ந்து எய்த இயன்ற அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்று தமிழக மக்கள் பெரிதும் நம்புகின்றனர். விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டம், ஏழை எளிய மக்களின் நிலையைப் பெரிதும் பாதுகாத்து, அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதை உறுதிப்படுத்தியுள்ளது. நமது திட்டமிட்ட வளர்ச்சி தமிழகத்தை உயர்ந்த வளர்ச்சிப் பாதையில் செல்ல உதவியிருக்கிறது. இது, திட்ட நிதி யொதுக்கீட்டை உயர்த்தி, அதை நிறைவேற்றுவதில் பெரும் சாதனை படைத்ததிலிருந்து தெரிய வரும். இந்த உன்னதமான சாதனையைத் தொடர்ந்து ஆர்வத்துடன் கட்டிக் காக்க வேண்டும்.

76. தமிழக மக்களுக்கு சிறந்த நல்ல வாழ்க்கைத் தரம் அமைத்துத் தருவோம் என்று சூளுரைத்துள்ளோம். நமது பயணத்தில் பல சோதனைகளையும் வேதனைகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களின் நலனுக்காக ஒவ்வொரு மன்றத்திலும் குரல் எழுப்பியுள்ளார்கள். அவருடைய தன்னலமற்ற விருப்பார்வச் செயல்பாடு, தொலைநோக்குப் பார்வை ஆகியவையே இவ்வரசு, ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது நிலவிய மிகுந்த இடர்ப்பாடான நிலைமையிலிருந்து மீண்டும் தமிழகம் வளர்ச்சிப் பாதையில் நடைபோட துணை புரிந்தன. தமிழகம் இன்று அமைதிப் பூங்காவாகத் திகழ்வதுடன் அதன் மக்களுக்கு சிறந்த வாழ்க்கையைப் பெற்றுத் தருவதற்கான உறுதியுடன் முன்னேற்றப் பாதையில் நடைபோடுகிறது. இவ்வரசு உறுதியாகப் பின்பற்றி வரும் நேர்மறை செயல் கொள்கையினால், ஏழை எளிய, வசதியற்ற மக்களின் வாழ்க்கையைப் பாதுகாத்து மேம்படுத்த முடிந்துள்ளது. இவ் வரவு–செலவுத் திட்டத்தில் நாம் தொடங்கியுள்ள மிகப் பல திட்டங்கள் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்தும் அதே வேளையில், தமிழ் நாட்டின் உயர் வளர்ச்சிச் சாதனையையும் தொடர்ந்து நிலை நிறுத்தும் என நான் உறுதியாக நம்புகிறேன். முன்னெப்போதும் இருந்திராத அளவிலான திட்ட ஒதுக்கீட்டைக் கொண்ட இவ் வரவு–செலவுத் திட்டம் நிலையான உறுதியுடன் கூடிய விரைவான வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. நாம் நிர்ணயித்துள்ள உயரிய குறி இலக்குகளை எய்தி முடிக்க அயராது பாடுபடுவோம்.

77. இந்த வரவு–செலவுத் திட்டம் பற்றிய விவாதத்தில் கலந்துகொள்ளும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அனைவரும், நீதி–நேர்மை–நாணயம்–உண்மை ஆகிய நெறிகளின் அடிப்படையில் ஆக்க நிறைவான பரிந்துரைகளைத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். விவாதத்தின்போது கடுஞ்சுட்டினைத் தவிர்த்துப், பேரொளியைப் பெருக்கிக் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

78. இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாகவும், செம்மையாகவும் உருவாக்க, அரும்பெரும் முயற்சிகளை மேற்கொண்டு, சீரிய உதவியையும், சிறந்த ஒத்துழைப்பையும் அளித்த நிதித்துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன், இ.ஆ.ப. அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து அரும் பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித்துறை மற்றும் ஏனைய அரசுத் துறைகள் ஆகியவற்றைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகியோருக்கும் என் உளங்கனிந்த நன்றியைப் பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

79. 1994–95 ஆம் ஆண்டிற்குரிய நிதி நிலை அறிக்கையை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்

இரா. நெடுஞ்செழியன்
நிதி அமைச்சர்.

சென்னை
1994 ஆம் ஆண்டு
மார்ச்சுத் திங்கள் 23 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2025
பங்குனித் திங்கள் 9 ஆம் நாள்

என் வாழ்நாள் கடமை!

செல்லுகின்ற திசைகளில் எல்லாம், நாட்டு மக்கள் என் மீது, காட்டி வருகின்ற அன்பும், பாசமும், பரிவும், ஆதரவும், நாளுக்கு நாள் பெருகி வருவதைப் பார்த்து, நான் நெகிழ்ந்து போகிறேன். அதே நேரத்தில், மகத்தான இந்த மக்கள் சக்தியின் உணர்வுகளுக்கு, நான் எப்படி கைம்மாறு செலுத்தப் போகின்றேன் என்பதை எண்ணி மலைத்து நிற்கிறேன். நான், உங்களைச் சந்திக்க வருகின்ற இதுபோன்ற வேளைகளில், கை நிறையத் திட்டங்களுடனும், உதவிகளுடனும் வந்தாலும், அவை, நான் எண்ணும் அளவிற்கு, உங்களுக்குச் செய்த கைம்மாறாகக் கருத முடியாது என்பதை நன்கு அறிவேன். எனவே தான், உங்கள் வளர்ச்சிக்கும், உயர்விற்கும், இனிய வாழ்விற்கும், அயராது பாடுபடுகின்ற பழக்கத்தினை, எனது அன்றாடப் பணியாக ஏற்றுக்கொண்டு, பாடுபட்டு வருகின்றேன். மேலும், இதனை என் வாழ்நாள் கடமையாகக் கருதி, தொடர்ந்து பணியாற்றி வருகின்றேன். இந்த எண்ணங்களுக்கு உருக்கொடுக்கிற வகையில்தான், இன்னும் புதிய புதிய திட்டங்களைத் தீட்டவேண்டும். மேலும் மேலும் நலப் பணிகள் தொடங்கப் பட வேண்டும், புதுப்புது உதவிகள் வழங்கப்பட வேண்டும், என்று என் உள்ளம் சிந்தித்துக் கொண்டே இருக்கின்றது.

உங்கள் அன்புச் சகோதரியான என்னிடத்தில், நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைக் கண்கூடாகக் காணும்போதெல்லாம் நான் கடந்து வருகின்ற தடைகளும், இடர்ப்பாடுகளும், தூள்தூளாக மறைந்து போய்விடுகின்றன. அவைகளைத் தூசாக, துச்சமாக மதிக்கும் மனத்தெம்பும், தைரியமும், எனக்கு தானே வருகிறது.

நாட்டு மக்கள், என் மீது இந்த அளவுக்கு ஆழமான, அழுத்தமான நம்பிக்கை கொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம், மக்களோடு மக்களாய், மக்களின் பிரதிநிதிகளாய், மக்கள் சக்தியை அறிந்து, மக்களின் நன்மைககு எனறே, மக்களின் நம்பிக்கைக்கு உரியோராய், மக்கள் நலப் பணியாற்றி வந்த தநதை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகிய மக்கள் சக்தியின் மகோன்னதத் தலைவர்களின் அடிச்சுவட்டில் இருந்து துளியும் பிறழாது, என் பொது வாழ்வுப் பாதையை அமைத்துக்கொண்டு, மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளேன், எனற மககளின் மாபெரும நம்பிக்கையே, என்னை இந்த அளவு உயர்த்தி உள்ளது.

இவ்வாறு அரசின் ஒவ்வொரு துறையிலும், புதுமைகளைப் படைக்கும் புரட்சிகரமான அரசாக, உங்கள் சகோதரியின் அரசு செயல்பட்டு வருவதை, நீங்கள் கண்கூடாகக் காண்கின்றீர்கள். சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும், உரிய உதவிகளைச் செய்ய, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களைப் பாதுகாக்க, எங்கள் அரசு என்றுமே தயங்கியதில்லை.

நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களையும், ஏழை, எளியோரின் பாது காவலர்களையும், எவராலும், என்றைக்கும், அசைக்க முடியாது என்ற திடமான நம்பிக்கை, எனக்கு இருக்கிறது.

'புரட்சித்தலைவியின் முழக்கம் - தொகுதி-2-லிருந்து.

நிதிநிலை அறிக்கை: 1994-95

பகுதி: ஆ

வேளாண்மை

1993 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்கள்களில், கடுமையான சூறாவளிப் புயல்களாலும் அதன்காரணமான வெள்ளங்களாலும், தமிழ்நாடு தாக்குண்ட போதிலும், இம்மாநிலம், **மொத்த உணவு தானிய உற்பத்தியில் 100 இலட்சம் டன் என்ற சாதனை அளவை எய்தும் நிலையில் உள்ளது. நமது உழவர்களின் இந்த உயர்ந்த சாதனையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.**

2. இரசாயன உரங்கள், மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றுக்கு உதவித் தொகை வழங்குவதைக் குறைத்துக் கொண்டு, வேளாண்மைப் பணிகள் சார்ந்த பொதுத் துறை நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் மேலும் அதிக அளவில் முதலீடுகள் செய்யவேண்டுமென்று தேசிய அளவில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடுபொருள்கள் வகையிலான உதவித் தொகைக்காக, பெருமளவில் தொகைகளை ஒதுக்குவதால், ஊரகப் பகுதிகளிலுள்ள உழவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நம்மால் முதலீடு செய்ய முடியாமற் போய்விடுகிறது என்பதாக ஒரு வாதம் எடுத்து வைக்கப்படுகிறது. அண்மைக்காலமாக, வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்கு அளிக்கப்படும் விலைகளை அதிகரிக்கின்ற போக்கு காணப்படுகிறது. தமிழ் நாட்டில், நெல்லுக்கான கொள்முதல் விலை, மோட்டா ரகத்திற்கு, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.270 லிருந்து ரூ.310 ஆகவும், நடுத்தர ரகத்திற்கு ரூ.280 லிருந்து ரூ.330 ஆகவும், மிக நேர்த்தி ரகத்திற்கு ரூ.290 லிருந்து ரூ.350 ஆகவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, **1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு, கொள்முதல் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. கரும்பைப் பொறுத்தவரையில், அரசின் பரிந்துரை விலை, மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.345 லிருந்து ரூ.450 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.** நமது மாநிலத்தைச் சேர்ந்த உழவர்கள், தம்முடைய உற்பத்திப் பொருள்களுக்குரிய விலைகள் உயர்த்தப்படுவதை, தம்முடைய கடும் உழைப்புக்குக் கிடைத்த சிறந்த பரிசாகக் கருதிப் பெரிதும் வரவேற்றுள்ளனர். இதனால், உழவர்கள், இடுபொருள்களுக்கான உதவித் தொகையை நம்பியிருப்பது குறைக்கப்பட்டுள்ளது. **வேளாண்மை மற்றும் தயாரிப்புத் துறைகளுக்கிடையேயான வர்த்தக நிலை சீரடைந்துள்ளது.**

3. மாநிலத்தில், வேளாண்மையின் வளர்ச்சி வேகத்தை விரைவுபடுத்துவதற்காகக் கீழ்க்காணும் முக்கியமான அம்சங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும். தரிசு நிலங்களைச் சாகுபடியின் கீழ்க் கொண்டுவருவதற்குரிய முயற்சி வலுப்படுத்தப்படும். அரிதாக உள்ள தண்ணீர் ஆதாரங்களைச் சேமித்து, அவற்றைத் திறமையாகப் பயன்படுத்தப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டை உயர்த்துவதன் மூலம், புன்செய் நிலச் சாகுபடி மேம்படுத்தப்படும். ஏற்றுமதி வாய்ப்புகளை மனதிற்கொண்டு, அதிக வருமானம் தரக்கூடிய பயிர் ரகங்களின் சாகுபடிக்கு ஊக்கம் அளிக்கப்படும். செலவுகளைக் குறைப்பதற்காகச், சுற்றுச்சூழலுக்கு உகந்த நடவடிக்கைகள் உட்பட, புதிய அறிவியல் தொழில்நுட்ப உத்திகள் மேம்படுத்தப்படும். வேளாண்மையில், மூலதன முதலீட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். மனிதவள மேம்பாட்டுக்கு உயரளவு முன்னுரிமை அளிக்கப்படும். வெவ்வேறு பயிர்களின் சாகுபடியையும், அதன் வாயிலாக உற்பத்தியையும் பெருக்குவதற்கான சிறப்பு முனைப்புத் திட்டங்கள் தீவிரப் படுத்தப்படும். **இந்தக் கொள்கையையே நாம் 1994–95 ஆம் ஆண்டில் மேலும் உற்சாகத்துடன் செயற்படுத்தவுள்ளோம்.**

4. அடுத்தபடியாக, 1994–95 ஆம் ஆண்டில், நாம் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டங்களின் சில முக்கியமான அம்சங்களைப் பற்றிக் குறிப்பிட விழைகிறேன். உழுது பயிரிடப்படாத தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், இதுவரை, 40,000 ஏக்கர் தரிசு நிலங்கள் சாகுபடியின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன. **1994–95 ஆம் ஆண்டில், மேலும் 25,000 ஏக்கர் நிலங்கள் சாகுபடியின் கீழ்க் கொண்டு வரப்படும்.**

5. நீர்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்டு வந்துள்ளது. **1994–95 ஆம் ஆண்டில், பல்வேறு நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், 2,14,250 ஏக்கர் நிலங்களைக் கொண்டு வரவிருக்கிறோம்.** காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் மாவட்டங்களில், ரூ.13.51 கோடி செலவில், 25,700 ஏக்கர்நிலங்கள் பயன்பெறும் வகையில் விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், வரும் ஆண்டில் தொடங்கப்படும். இரண்டாம் கட்டத்தில், திருநெல்வேலி–கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில், ரூ.41 . 72 கோடி செலவில், 1,06,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். **சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனத் திட்டம், மேலும் வலுப்படுத்தப்படும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ், 10,000 ஏக்கர் நிலங்கள் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், 1994–95 ஆம் ஆண்டிலிருந்து கரும்பிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.6.7 கோடியாக இருக்கும்.**

6. வேளாண்மை சார்ந்த ஏற்றுமதியைப் பெருக்க, நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளோம். தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியைப் பெருக்கி, *விளைபொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக, தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு முயற்சி இணையம் (TANHOPE) என்ற பெயரில், புதியதொரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. முந்திரி, காளான், வெங்காயம் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சியில் மேலான கவனம் செலுத்தப்படும்.* **விதைகளைப் பக்குவப்படுத்தல், மலர்ச்செடி வளர்ப்பு ஆகியன, தொழில்களாகக் கருதப்பட்டு, அவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான நிதியுதவி கிடைப்பது உறுதிப் படுத்தப்படும்.**

7. 'டங்கல் செயற்குறிப்பு' ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து எழுந்துள்ள புதிய சூழ்நிலையில், எதிர்காலத்தில் நமது உழவர்களுக்குப், புதிய, மேம்படுத்தப்பட்ட விதைகள் கிடைப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். நமது உழவர்களுக்கு நல்ல, மேம்படுத்தப்பட்ட விதைகளும், தொழில்நுட்பங்களும் தொடர்ந்து கிடைக்கின்ற வகையில், ஓர் உயர்நிலைக் குழு, தற்போது நடைபெற்றுவரும் ஆராய்ச்சிப் பணிகள் குறித்து மதிப்பீடு செய்து, குறிக்கோள் நோக்கிலான அணுகுமுறையுடன், நல்ல பயனளிக்கக்கூடியவற்றைப் பரிந்துரைக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். நம் நாட்டிலேயே முதல்முறையாக, 'எம்.ஜி.ஆர்.' **என்ற கலப்பின அரிசி ரகத்தினை உருவாக்கி, சாதனை படைத்த பெருமையைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பெற்றுள்ளது.**

8. உயிரினக் கழிவு உரங்களையும் ஒருங்கிணைந்த பூச்சிப் பரவல் தடுப்பு முறைகளையும் உழவர்களிடையே பிரபலப்படுத்தி, நம் மாநிலத்தில், சுற்றுச்சூழலுக்குகந்த, நீடித்த வேளாண்மை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கச் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். **ஒருங்கிணைந்த பூச்சிப் பரவல் தடுப்புத் திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10 இலட்சம் நிதிஒதுக்கப்பட்டுள்ளது. உயிரினக் கழிவு உர உற்பத்திப் பிரிவுகளை வலுப்படுத்தவும் வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.25 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.**

9. ரூ.28.74 கோடி மொத்தச் செலவில், 'டேனிடா' உதவியுடன், மகளிருக்கு வேளாண்மையில் பயிற்சி அளிக்கும் திட்டமொன்றை (TANWA-II) நாம் இவ்வாண்டில் தொடங்கியுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு ரூ.1 . 80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவடையும்போது, 7.44 இலட்சம் மகளிர் வேளாண்மைப் பயிற்சி பெற்றிருப்பர். உலக வங்கியின் ஆதரவுடன், மொத்தம் ரூ.76 கோடி செலவு ஆகக்கூடிய மனிதவள மேம்பாட்டுத் திட்டம் ஒன்றையும் விரைவிலேயே முடிவு செய்ய உள்ளோம். இத்திட்டமானது, வேளாண்மைப் பல்கலைக் கழகம், கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம், வனத் துறை, வேளாண்மைப் பொறியியல் மற்றும் மீனளத் துறையைச் சேர்ந்த *பணியாளர்களின் அறிவுப் பரப்பெல்லையை விரிவுபடுத்துவதோடு, திறமையை வளர்க்கவும் பெரிதும் உதவும்.*

10. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், உலக வங்கியின் **உதவியுடன், ரூ.310 கோடி செலவில், வேளாண்மைத் துறை மற்றும் ஊரகப் பகுதிகளுக்குப் பலனளிக்கக் கூடிய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. குறைந்த உற்பத்தித் திறனுள்ள பகுதிகளைக் கண்டறிந்து, இத்தகைய பகுதிகளில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான நேரடி விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக, 1994–95 ஆம் ஆண்டில், ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 1994–95 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.41 . 81 கோடியாக இருக்கும்.**

11. ரூ.11 கோடி செலவில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் செயற்படுத்தப்படும். எண்ணெய்ப் பனை வளர்ப்பு, இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டங்களில், 2500 ஏக்கர் நிலத்தில், எண்ணெய்ப் பனைகள் நடப்பட்டுள்ளன. **1994–95 ஆம் ஆண்டில், மேலும் 5000 ஏக்கர் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படும்.**

உணவு பதப்படுத்தல்

12. உணவு பதப்படுத்தலை முக்கியமானதொரு துறையாக நாங்கள் தெரிந்தெடுத்துள்ளோம். **5 முக்கிய உற்பத்திப் பொருள் தொகுதிகளைத் தெரிந்தெடுத்து, இத்துறையில் பெருமளவில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதே நமதுநோக்கமாகும்.** நம்முடைய உழவர்களுக்கு நல்ல விலைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, நாங்கள், விற்பனை வசதித் தொடர்புகளைப் பெற்றுத் தருவோம். இப்பெரிய, புதிய முயற்சியில் விரைவில் முன்னேற்றம் ஏற்படுவதை உறுதி செய்ய, மையக்குழு ஒன்று அமைக்கப்படும்.

13. உணவு பதப்படுத்தல் பணிகளை மேற்கொள்வதற்காகத் தருமபுரியில், சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு (Agri Business Consortium) ஒன்று ஏற்படுத்தப்படும்.

14. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான **போளூர் அரிசி ஆலையில் நெல் அவிப்பு முறையை மேம்படுத்தும் திட்டம் ஒன்றை**

ரூ.51 . 63 இலட்சம் செலவில் செயல்படுத்தவிருக்கிறோம். மற்றொரு முக்கிய நடவடிக்கையாகத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான அம்மன் பேட்டை அரிசி ஆலையின் திறனளவை நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்னிலிருந்து 200 மெட்ரிக் டன் ஆக விரிவுபடுத்தவிருக்கிறோம். இத்திட்டத்திற்கு ரூ. 3.19 கோடி செலவாகும். நெல் அவிப்பு முறையை மேம்படுத்தவும் இத்திட்டம் வகை செய்யும். இந்நடவடிக்கைகளினால் அரிசியின் தரம் உயருவதோடு நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசியின் அளவும் அதிகரிக்கும்.

பாசனம்

15. தமிழ்நாடு, அதன் மேற்பரப்பு நீர் வளத்தினை ஏறத்தாழ முழுமையாக ஏற்கெனவே பயன்படுத்தி விட்டது. நம்மிடம் மிகக் குறைந்த நிலத்தடி நீர்வளமே எஞ்சியுள்ளது. நாம் நமது நீர் ஆதாரங்களைப் பெருக்கியாக வேண்டியுள்ளது. காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை செயற்படுத்துமாறு கருநாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக, 1993 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூர்வர். அந்த நெருக்கடியான நேரத்தில், தமிழக மக்கள் தம்முடைய உணர்ச்சிப் பூர்வமான பேராதரவை முதலமைச்சருக்கு நல்கினர். மத்திய நீர்வளத் துறை அமைச்சர், முதலமைச்சரைச் சந்தித்து, நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயற்படுத்த, மத்திய அரசு இரண்டு குழுக்களை அமைக்குமென அறிவித்தார். வரும் பருவத்தில் கருநாடக அரசு, இடைக்கால ஆணையை நிறைவேற்றும் என நம்புகிறோம்.

16. தீபகற்ப ஆற்றுநீர் மைய ஏற்பாட்டுத் திட்டத்தின் செயற்பாட்டில் கணிசமான முன்னேற்றம் ஏற்படவில்லை. குறைந்தது, மேற்காகப் பாயும் ஆறுகளைத் திருப்பிவிடும் பணியையாவது மேலும் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். பம்பா–அச்சன் கோயில்–வைகை இணைப்புத் திட்டம் உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டும். தீபகற்ப ஆற்று நீர் மைய ஏற்பாட்டுத் திட்டத்தை ஒரு தேசியத் திட்டமாகக் கருதி, மத்திய அரசு, அதற்கு முன்னுரிமை அளித்து முதற்கட்டமாகப் பம்பா–அச்சன் கோயில்–வைகை இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றும் என்று நம்புகிறோம்.

17. 1994–95 ஆம் ஆண்டில், சிறு பாசனம் உட்பட, பாசனத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.125.56 கோடியாக இருக்கும். நம்மிடமுள்ள மேற்பரப்பு நீரைத் திறமையாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி நாம் பரிசீலிக்க வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டுதான், உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டத்தை நாம் வகுத்துள்ளோம். 1994–95க்கான நிதி நிலை அறிக்கையில், இத்திட்டத்திற்காக ரூ.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழு ஆண்டுகளில் நிறைவேற்றப்படவிருக்கும் இத்திட்டத்திற்கு, மொத்தம் ரூ.952 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள பாசன ஏற்பாடுகளைப் பழுதுபார்த்துச் சீரமைத்தல், இந்த ஏற்பாடுகளின் செயல்திறனை மேம்படுத்தல், பாசனத் திட்டங்களைப் பராமரிப்பதில், உழவர்களின் பங்கேற்பை அதிகரித்தல், நீர் வளத்தினைப் பாதுகாத்தல், உறுதிப்படுத்தப்பட்ட பாசன வசதிகளை நிலைப்படுத்துதல் ஆகிய பணிகளில் அதிக கவனம் செலுத்தப்படும். இத்திட்டத்தின் பயனாக, பொதுப் பணித்துறையின் பாசனப் பிரிவின் செயல்திறன் முழு அளவில் உயர்ந்து, உழவர்களுக்கு மேலும் சிறந்த முறையில் பணியாற்றக்கூடிய நிபுணத்துவம் பெற்ற ஓர் அமைப்பாக உருப்பெறும். இத்திட்டம், பின்வரும் பாசன ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்கும்:–

* பாலாறு அணைக்கட்டுப் பாசன ஏற்பாடு
* செய்யாறு அணைக்கட்டுப் பாசன ஏற்பாடு
* பொய்னி அணைக்கட்டுப் பாசன ஏற்பாடு
* கீழ்பவானி அணைக்கட்டுப் பாசன ஏற்பாடு
* வைகைப் பாசன ஏற்பாடு
* பரம்பிக்குளம் – ஆளியாறு பாசன ஏற்பாடு

18. உலக வங்கி, இத்திட்டத்திற்கு விரைவிலேயே அனுமதி அளிக்கும் என நம்புகிறோம்.

19. பாசன ஏற்பாடுகள் சரிவரப் பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய, நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. பெரிய பாசன ஏற்பாடுகளின் பராமரிப்புக்காக 1993–94 ஆம் ஆண்டில், ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.200 ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1994–95 ஆம் ஆண்டில், நாம் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.265 ஒதுக்கியுள்ளோம். பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பில் உழவர்களை முழு அளவில் ஈடுபடுத்தும் தொன்மையான நடைமுறையை மீண்டும் முனைப்புடன் பின்பற்ற முடிவு செய்துள்ளோம். நாம், நீர்ப் பயன்பாட்டுத் திறனை உயர்த்த விழைவதால், இது முக்கியத்துவம் பெறுகிறது. 'பி', 'சி', 'டி' வகை வாய்க்கால்களையும் அவற்றுக்குத் தொடர்புடைய கிளை வாய்க்கால்களையும் பராமரிப்பதற்காக

உழவர்கள் சங்கங்கள் ஏற்படுத்தப்படுவதை நாம் ஊக்குவிப்போம்.

20. 1,75,000 ஏக்கர் பரப்புக்குப் பாசன வசதி அளிக்கும் வகையில், பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தின்கீழ் வரும் நான்காவது மண்டலத்திற்குப் பாசன வசதிகளை விரிவுபடுத்த வகை செய்யும் சட்டம் ஒன்றை இயற்றியுள்ளோம்.

21. 8,342 ஏக்கர் பரப்புக்குப் பாசன வசதி அளிப்பதற்காக, 1994–95 ஆம் ஆண்டில், ரூ.27 கோடி மொத்தச் செலவில், வடக்குப் பச்சையாறு திட்டத்தைச் செயற்படுத்த விருக்கிறோம். 1994–95 ஆம் ஆண்டில், ரூ.37. 69 கோடி செலவில் அடவி நைனார் கோயில் பாசன திட்டப் பணிகளைத் தொடங்கவிருக்கிறோம். இத்திட்டத்தின் மூலம் 5,625 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். பெரியாறு வைகைத் திட்ட இணைப்புக் கால்வாய்ப்பணி, 1994–95 ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், 5,400 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

22. உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்டுவரும் தேசிய நீர் நிர்வாகத் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில் முழுமைபெறும். இத்திட்டத்தின்கீழ், 1993–94 ஆம் ஆண்டில், ரூ.7. 51 கோடி செலவில், தொழுதூர் பாசன ஏற்பாட்டிலும், ரூ.4.88 கோடி செலவில் சித்தாறு பாசன ஏற்பாட்டிலும் பணிகளை மேற்கொண்டுள்ளோம். ரூ.1. 23 கோடி செலவில் மஞ்சளாறு நீர்த் தேக்கத் திட்டப் பணிகள் விரைவிலேயே தொடங்கப்படவிருக்கின்றன. இத்திட்டத்தின்கீழ், திருக்கோயிலூர் நீர்த் தேக்கத் திட்டம், பிளவுக்கல் நீர்த் தேக்கத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டம் ஆகிய மேலும் மூன்று துணைத் திட்டங்களையும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்திற்கு, 1994–95 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.20 கோடி ஒதுக்கப்படும்.

23. பாசன ஏரிகள், மிக முக்கியமானதொரு பாசன ஏற்பாடாக விளங்குகின்றன. ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன், ஏரிகளை நவீனமயமாக்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்தவிருக்கிறோம். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு ரூ.22 கோடி ஒதுக்கப்படும். இதுவரை, 20,700 ஏக்கர் ஆயக்கட்டைக் கொண்ட 157 ஏரிகளில் நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1994–95 ஆம் ஆண்டில், 11,315 ஏக்கர் ஆயக்கட்டைக் கொண்ட 130 ஏரிகளில் நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

24. நான் சென்ற ஆண்டு, வரவு–செலவுத் திட்ட உரையில், முன்னாள் ஜமீன் ஏரிகளை, அவற்றின் ஆயக்கட்டு பரப்பளவின் அடிப்படையில், பொதுப்பணித் துறை அல்லது ஊராட்சி ஒன்றியங்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கான செயற்குறிப்புப் பற்றிக் குறிப்பிட்டேன். இதற்கான பணிகள் நடந்தேறி வருகின்றன. மொத்தத்தில், 4720 முன்னாள் ஜமீன் ஏரிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டினை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இந்த முன்னாள் ஜமீன் ஏரிகளைத் தரப்படுத்தி அவற்றின் நிர்வாக அமைப்பை மாற்றியமைக்கும் திட்டம் 2 ஆண்டு கால அளவில் முடிவடைந்துவிடும் என்று நம்புகிறோம். இத்திட்டத்தின் மூலம் 1. 96 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும்.

ஊரக வளர்ச்சி

25. விரைவு படுத்தப்பட்ட ஊரகப் பகுதி வளர்ச்சிக்கு, இவ்வரசு தலையாய முன்னுரிமை அளித்துவருகிறது. ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 1993–94 ஆம் ஆண்டில், ரூ.126.30 கோடியாக இருந்தது. 1994–95 ஆம் ஆண்டில் ரூ.160.53 கோடியாகக் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. மொத்தம் ரூ.390 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை, வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்துள்ளோம். இத்திட்டத்தின் மூலம், அனைத்து கிராமங்களிலும் குடியிருப்புப் பகுதிகளிலும் அடிப்படை வசதிப் பணிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாக, உருவாக்கப்பட்ட அனைத்து அடிப்படை சொத்துக்களும் நன்கு செயல்படும் நிலையில் வைத்து வரப்படுவதை உறுதி செய்வதற்காக, 1994–95 ஆம் ஆண்டில், தொடர் நடவடிக்கைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும்.

26. மாநிலத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள ஜனநாயக அமைப்புகளின் செயல்பாட்டுக்கான ஆதாரம் மற்றும் கட்டமைப்புகளுக்கு வகை செய்யும் 73 மற்றும் 74 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களின் முக்கியக் கூறுகளை உள்ளடக்கிய புதிய சட்டம் ஒன்று, பேரவையின் இக்கூட்டத் தொடரில் அறிமுகம் செய்யப்படும். உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்கள் பற்றி ஆய்வு செய்து, அவற்றுக்குப் போதுமான நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிக்க, இப்புதிய சட்டம் வகை செய்யும். உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமைகளை வலுப்படுத்த, ஏற்கெனவே நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதனுடன், நிதிவகையில் நலிந்த நிலைமையிலுள்ள உள்ளாட்சி மன்றங்கள் பயனடையும் வகையிலும், உரிய பராமரிப்பு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள இயலும் வகையிலும் உள்ளூர் செஸ் வரி இனை மானியத்தை ஒதுக்குவதற்கு, புதிய நெறிமுறை ஒன்றை வகுக்க, நாங்கள் முடிவு செய்துள்ளோம். அதிகாரப்பரவல் முறையில் அமைந்த மாவட்டத் திட்டத்திற்கு வரும் ஆண்டில் கூடுதலாக ரூ.20 கோடி ஒதுக்கப்படும். இதனால், மொத்த ஒதுக்கீடு, ரூ.40 கோடியாக உயரும். அடிமட்ட நிலையில் திட்டம் வகுத்து

43. ரூ.60 கோடி செலவில், 7,500 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடுவதற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் சிறப்புத் திட்டத்தைப் பற்றி இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத் திட்டத்தின் கீழ், ரூ.6.00 கோடி செலவில், புதிதாக இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில், ரூ.1.20 கோடி திட்டச் செலவில் 1,500 ஏக்கர் பரப்பு இத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும். இத் திட்டத்திற்குத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உதவி நமக்கு கிடைத்துள்ளது.

44. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், காகிதக் கூழ் மரங்கள் நடும் பரப்பை அதிகரிக்கச் செய்யும் திட்டமொன்றைத் தொடங்கியுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில் 12,500 ஏக்கர் பரப்பில், மரக் கூழ் மரங்கள் நடக் கருதப்பட்டுள்ளது. இதனோடு சேர்ந்து, 1994–95 ஆம் ஆண்டில் 15,000 ஏக்கர் பரப்பில், முந்திரி சாகுபடி மேம்பாட்டுப் பணியும் மேற்கொள்ளப்படும்.

45. நமது வன வளத்தைப் பாதுகாத்திட சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். பல்வேறு வனப் பாதுகாப்புப் பணிகளுக்காக, 1993–94 ஆம் ஆண்டில், ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில் இதை ஒத்த தொகை ஒதுக்கப்படும். வண்டலூரில் உள்ள மாநில வன ஆராய்ச்சி நிறுவனத்தை மேம்படுத்தவிருக்கிறோம். இந்நிறுவனத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தொழில்கள்

46. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1992 ஆம் ஆண்டில் நமது மாநிலத்திற்குரிய தனியானதோர் புதிய தொழில் கொள்கையை உருவாக்கியதைப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இக்கொள்கை, இம்மாநிலத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. தொழில் கொள்கையைத் தளர்த்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாநில அளவில், மேலும் சீர்திருத்தங்களை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு தற்போது சுட்டிக் காட்டியுள்ளது. நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கையின் முக்கியப் பகுதிகளைக் கண்டறிந்துள்ளோம். இம்மாநிலத்தில், நல்ல தொழிலுறவு நிலவச் செய்வதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். இந்நாட்டிலேயே சிறந்த அடிப்படை வசதிகளைக் கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என இந்தியப் பொருளாதார ஆய்வு மையம்(CMIE) மதிப்பிட்டுள்ளது. மின் வெட்டு என்பதே இல்லாத மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. இதே நிலையைத் தொடர்ந்து பராமரிப்பதே நமது உறுதியான முயற்சியாகும். மாநில அளவில்

இசைவு தேவைப்படுகிற அனைத்து இனங்களுக்கும் "ஒரு வழி இசைவு" (Single Window Clearance) ஏற்பாட்டைக் கொண்டுவரத் தேவையான சட்டங்களை நாங்கள் கொண்டுவந்துள்ளோம்.

47. சிங்கப்பூருடன் வர்த்தக ஏற்பாடு என்ற கோட்பாட்டின் வாயிலாக அமையவிருக்கும், "சென்னைத் தொழில் பூங்கா", விரைவில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும். இத்தொழில் பூங்கா, முழுமையடையும்போது 800 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இதனால், இம்மாநிலத்திற்கு ஆயிரம் கோடி அமெரிக்க டாலர், புதிய முதலீடு கிடைக்கவிருக்கிறது. இத்திட்டத்திற்கான தொழில் முனைவோர்களின் சிறு பட்டியலை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம். இத்தொழில் பிரிவு, விரைவில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்குத் துரிதமான ஒப்புதல் தருமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

48. தொழில் வளர்ச்சியை, தேசிய நோக்கில் கருதிப் பார்க்க வேண்டியுள்ளது. தொழில் வளர்ச்சியைத் தூண்ட, அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் முதலீடுகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. 1994–95 ஆம் ஆண்டில், இந்திய தொழில் துறை, போட்டி மனப்பாங்கில் அறைகூவலை ஏற்று விரைவான வளர்ச்சியடையும் என்று நாம் நம்பிக்கை தெரிவிக்கிறோம்.

49. தென்னக எரிவாயு கட்டமைப்பு ஒரு முக்கியமான திட்டமாகும். இது தென்பகுதியில் அதிலும் குறிப்பாக தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். கொங்கன் ரயில்வே திட்டத்தைப் போன்று, இத்திட்டத்திற்கு, ஏற்ற வகையில், நிதி முதலீடு செய்ய தென்மாநிலங்கள் தயாராக இருக்கும் என்று கருத்து தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடக்க முயற்சி மேற்கொண்டுள்ளார். இத்திட்டத்திற்கு ஓமானிலிருந்து எரிவாயு கொணர்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஓமானிலிருந்து எரிவாயு கிடைப்பது ஐயத்திற்கு இடமாகவுள்ளது. "பம்பாய் ஹை" பகுதியில் வீணாக எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எரிவாயுவின் அடிப்படையில் தென்னக எரிவாயு கட்டமைப்புத்திட்டம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துவோம். ஓமானிலிருந்து கிடைக்கும் எரிவாயுவுடன் பின்னர் இதனை இணைக்கலாம். இத்திட்டம் உடனடியாக நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படுவதை உறுதிசெய்ய மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

50. தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக்கழகத்தின் (TACID)

மூலதனப் பங்கிற்கு, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கை கொண்டான், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பணங்குடி ஆகிய இடங்களில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துவதில் விரைந்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காகும். இத்துடன், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டையிலும் தருமபுரி மாவட்டத்திலுள்ள பர்கூரிலும், சிறப்பு வளர்ச்சி மையங்களையும் எடுத்துக்கொண்டுள்ளது. தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் சிறப்பு முயற்சியாகச், சென்னைக்கு அருகே, 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய அளவிலான ஒரு புதிய வளர்ச்சி மையத்தை மேற்கொள்ள நாங்கள் கருதியுள்ளோம். அடிப்படை வசதி கட்டமைப்பு கடன் – நிதியுதவிப் பணிகள் நிறுவனத்தின் (ILFS) ஆதரவுடன், திருப்பூரில் அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தை தமிழ் நாடு அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் செயல் படுத்தும். இந்த வளர்ச்சித் திட்டத்தின் மதிப்பீடு ரூ.550 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

51. தமிழ்நாடு செய்தித்தாள் – காகித நிறுவனம், தன்னுடைய உற்பத்தித் திறனளவான, ஆண்டுக்கு 90,000 டன்னை இருமடங்காக அதாவது ஆண்டுக்கு 1.80 இலட்சம் டன் ஆக அதிகரிக்க, ரூ. 525 கோடி செலவில், பெரிய விரிவாக்கத் திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது. இத்திட்டம், 75 மில்லியன் அமெரிக்க டாலர் உலக வங்கியின் நிதியுதவி பெற்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 1994–95 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 200 கோடியாக இருக்கும். இம்மாபெரும் திட்டம் சுற்றுச்சூழலுக்கு எவ்வித கேடுமின்றி, வேளாண் கழிவுப்பொருட்களைக் கொண்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வரும் கோட்பாட்டுக்கு உதாரணமாகத் திகழ்வதாக உலக அளவில் ஏற்கப்பட்டுள்ளது. நடப்பு மத்திய வரவு செலவுத் திட்டத்தில் ஆயத்தீர்வை விலக்கு இத்தொழிற்பிரிவிற்கு திரும்பப் பெறப்பட்டுள்ளது துரதிருஷ்டமானதாகும். இத்தொழிற்சாலையின் பெரிய அளவிலான விரிவாக்கத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருவதால், ஆயத்தீர்வை விலக்கை தொடர்ந்து அனுமதிக்க வேண்டுமென, மத்திய அரசை நாம் வலியுறுத்திக் கேட்டுள்ளோம். இத் திட்டத்தின் அற்புதமான முயற்சியைக் கருத்திற் கொண்டு, மத்திய அரசு ஆயத்தீர்வை விலக்கைத் தொடர்ந்து அனுமதிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

52. சிறு தொழில்களின் விரைவான வளர்ச்சிக்கு, ஏற்ற சூழ்நிலையை உருவாக்க நாம் இடையறாத முயற்சி மேற்கொண்டு வந்துள்ளோம். புதிய பொருளாதார கொள்கையின்படி, சிறு தொழில்கள் விரைவாக வளர்ந்து, அதனால் புதிய வேலை வாய்ப்புகள் பெருகும். உரிய நேரத்தில் பணம் கிடைப்பதை உறுதி செய்வதற்கான திட்டம், குறிப்பாக பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து உரிய நேரத்தில் பணம் கிடைப்பதை உறுதி செய்வது, நல்ல பலனை அளித்துள்ளது. கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட 115 புகார் கோரிக்கைகளில், 111 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறைவழுத்த மின்வழங்கலின் கீழ் அனுமதிக்கப்பட்ட மின் அளவு 130 HP யில் இருந்து 150 HP ஆக அதிகரிக்கப்பட்டது, தொழிற் துறையால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், 1000 மகளிர் தொழில் முனைவோர்களைக் கண்டறிய, தொழில் முனைவோர் முன்னேற்றத் திட்டம் மேற்கொள்ளப்படும். 'சிட்கோ' 1994–95 ஆம் ஆண்டில், 200 தொழிற் கொட்டகைகள் கட்டும். 50 மேம்படுத்தப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்யும். திருப்பூருக்கு அருகில், முதலிபாளையத்தில், 156 தொழிற் கொட்டகைகள் கட்டி முடிக்கப்பட்டது பெரும் சாதனையாகும். பின்னலாடை உற்பத்தித் துறையில் மதுரைக்கு அருகில், 120 தொழிற் கொட்டகைகள் கட்டும் பணியையும் சிட்கோ முடித்து வருகிறது. இதே போன்றதொரு தொழிற்பேட்டை, கோவை மாவட்டத்தில் பல்லடம் வட்டத்தில், நிறுவப்பட்டு வருகிறது. கிண்டியில், டாக்டர் புரட்சித் தலைவி மின்னணுவியல் தொகுதியை நிறுவும் பணியையும் சிட்கோ மேற்கொண்டுள்ளது. இத் தொழிற் திட்டம் சுமார் 8000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வகையில் வேலை வாய்ப்பை நல்கும். சென்னைக்கு அருகில், தோல் தொழிற்பேட்டை ஒன்று புதிதாக நிறுவப்படும். இப்புதிய திட்டத்திற்கு, UNDP யிடமிருந்து தொழில் நுட்ப உதவி பெறப்படும்.

53. இம்மாநிலத்தில், தொழிற்சாலைகளை நிறுவுவதற்குத் தமிழக அரசு, தொழில் முனைவோரைக் கவரும் ஊக்கத் திட்டங்களை வகுத்துள்ளது. இந்நாட்டில், தொழிற்சாலைகள் அமைப்பதற்கு தமிழ்நாடு சிறந்ததோர் இடமாக அமைய, இவ்வரசு தொடர்ந்து முயன்று வந்துள்ளது. தள்ளி வைக்கப்பட்ட விற்பனை வரியை, வருமான வரிச் சட்டத்தின் 43–B பிரிவின் நோக்கத்திற்காகச் செலுத்தப்பட்டதாகக் கருத, சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர நாங்கள் முடிவு செய்துள்ளோம் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததை, இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இது குறித்து மத்திய அரசுடன் விவாதித்து, பெற்ற விளக்கங்களின் அடிப்படையில், திருத்தத் திட்டம் தொடர்பாக நாம் தற்போது ஆணை பிறப்பித்துள்ளோம். இது, தொழிற்சாலைகள் பெறத்தக்க தேவையான நலன்களைப் பெற இயலச் செய்யும். இம்மாநில அரசின் இந்த நடவடிக்கையைத் தொழிற்சாலைகள் வரவேற்கும் என்பதில் எனக்கு எவ்வித ஐயப்பாடுமில்லை. விற்பனை வரி தள்ளி வைக்கப்பட்ட முறை, தொழில் நிதியுதவி–சீரமைப்புக் கழகத்தால் (BIFR) பரிசீலிக்கப்பட்டு வரக்கூடிய, நலிவுற்ற தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும். தொடக்க நிலையில் தொழிற்சாலைகளில்

செயற்படுத்துவதற்காக, நிபந்தனையற்ற நிதி வழங்குவதில், இது மற்றுமொரு முக்கிய நடவடிக்கையாக அமையும்.

27. 1993 அக்டோபர் 1 ஆம் நாளிலிருந்து, மத்திய அரசின் உதவி பெறும் வேலைவாய்ப்புறுதித் திட்டம், 12 மாவட்டங்களைச் சேர்ந்த 57 ஊராட்சி ஒன்றியங்களில் தொடங்கப்பட்டுள்ளது. 1993–94 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு, ரூ.3 . 50 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டது. இந்நிதி ஒதுக்கீடு ,1994–95 ஆம் ஆண்டில் உயர்த்தப்படும். **வேலை வாய்ப்புறுதித் திட்டம் கொண்டுவரப்பட்டதைக் கருத்திற் கொண்டு, மாநில வேலை வாய்ப்புறுதித் திட்டம், ரூ.10 கோடி நிதி ஒதுக்கத்துடன், 1994–95 ஆம் ஆண்டில் 9 மாவட்டங்களைச் சேர்ந்த வேறு 50 வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப்படும் வகையில் பொருத்தமான முறையில் மாற்றியமைக்கப்படும்.**

28. சொத்துக்களைப் பராமரிப்பதிலும், அம் முயற்சியில் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆதரவு அளிப்பதிலும் நாங்கள் தனிக் கவனம் செலுத்த விருக்கிறோம். நம் மாநிலத்தில் 98,475 ஆழ் துளைப் பம்புகள், 36,325 வடிமுனைப் பம்புகள் மற்றும் 26,462 மின்விசைப் பம்புகள் உள்ளன. **இச்சொத்துக்களைப் பராமரிப்பதற்காக, நலிந்த ஊராட்சிகளுக்கு உதவ வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5.64 கோடி ஒதுக்கப்படுகிறது.** இத்தோடு, ஊராட்சிகளின் பொறுப்பிலுள்ள தெரு விளக்குகளைப் பராமரிப்பதிலும் தனிக் கவனம் செலுத்தப்படும். தெரு விளக்குகள், ஒழுங்காக எரிவதை உறுதி செய்வதற்குச் சிறப்பு ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

29. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பின் கீழுள்ள பாசன ஏரிகள், உரியவாறு பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய, ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு ஊராட்சி ஒன்றிய நிலையில், தனி உள்ளாட்சி நிதிக் கணக்கு தொடங்க, நாங்கள் அனுமதி அளிக்கவிருக்கிறோம். இதன்மூலம், ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பின் கீழுள்ள 23,761 பாசன ஏரிகள் அனைத்திலும் பராமரிப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளமுடியும்.

கால் நடை வளர்ப்பு

30. வளர்ச்சிக்கு முக்கியமானதொரு துறையாக, நாங்கள், கால்நடை வளர்ப்பைத் தேர்ந்தெடுத்துள்ளோம். **தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கால் நடை வளர்ப்புப் பணிகளுக்காக, 1994–95 ஆம் ஆண்டில் ரூ.6 . 05 கோடி ஒதுக்கப்படும்.** செயற்கை முறைக் கருத்தரிப்பு வசதிகளை மேலும் பெருக்கிட, முயற்சிகள் மேற்கொள்ளப்படும். **ரூ.74 இலட்சம் செலவில், சிவகங்கை, கடலூர், சைதாப்பேட்டை, ஆகிய இடங்களில், மூன்று உறை விந்து வங்கிகள் நிறுவப்படும். உறை விந்துத் தொழில்நுட்பம், மாநிலத்தில் உள்ள 2,770 செயற்கை முறைக் கருத்தரிப்பு மையங்கள் அனைத்துக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது** என்பதை அறிவதில் இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள். ஈச்சங்கோட்டை, ஓரத்தநாடு, ஒசூர் ஆகிய இடங்களில் உள்ள கால்நடை வளர்ப்புப் பண்ணைகள், நவீன மயமாக்கப்பட்டு வருகின்றன. செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணிகளில், பயனும் திறனும் மேலும் செம்மைப்படுத்தப்படும்.

31. கால்நடை இனப்பெருக்கம், முதிர்வுறாக்கரு மாற்ற உத்தி, தீவன மற்றும் தீவன விதை உற்பத்தி, நோய் அறிதல் மற்றும் தொற்று நோயியல் ஆகிய துறைகளில் வல்லுநர்களை ஈடுபடுத்தியுள்ளோம். இம்முயற்சிகளின் பயனாக, மேற்சொன்ன முக்கியமான பிரிவுகளின் பணியின் தரம் உயரும்.

32. கால்நடை நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. **400 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும். புதிதாக 10 கால்நடை மருத்துவமனைகள் தொடங்கப்படும். கால்நடை மருத்துவத்துக்குத் தேவையான மருந்துப் பொருட்களையும் மருந்துகளையும் வழங்குவதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 5.10 கோடி ஒதுக்கப்படுகிறது.**

33. பால் பண்ணை வளர்ச்சியில், நாம் மிக விரைந்த முன்னேற்றம் கண்டுள்ளோம். **பால் கொள்முதல் அளவு 1992–93 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 11. 83 இலட்சம் லிட்டராக இருந்து, 1993–94 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 14.11 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.** நாம் அடைந்துள்ள வெண்மைப் புரட்சி தொடர்ந்து நீடித்திட ஏதுவாகக் கூடுதல் மதிப்புடைய பொருட்களின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். சென்னைக்கு அருகே சோழிங்கநல்லூரில் ரூ.25 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வரப்படுவதும், நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்டதுமான பெரிய, புதிய பால் பண்ணை 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கட்டி முடிக்கப்படும். **வரும் ஆண்டில், 2 புதிய பால் குளிரூட்டு நிலையங்கள் தொடங்கி வைக்கப்படும். இதன் மூலம், பால் குளிரூட்டும் ஒட்டுமொத்தத் திறன் நாளொன்றுக்கு 3 . 72 இலட்சம் லிட்டர் பெருகுவது உறுதிப்படுத்தப்படும்.**

மீனளம்

34. இவ்வரசு, தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன், ரூ.15 . 88 கோடி மொத்தச் செலவில், ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனவர் வளர்ச்சித் திட்டம் ஒன்றைப் பெருமளவில் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், 6050 மீனவர்கள் பயனடைவர். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.3 . 12 கோடி ஒதுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தஞ்சாவூர், இராமநாதபுரம், வ.உ.சிதம்பரனார், செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர்., கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் பயனடைவர்.

35. 1994–95 ஆம் ஆண்டில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் உதவியோடு உள்நாட்டு மீனவ வளர்ச்சித் திட்டம் ஒன்று தொடங்கப்படும். ரூ.6 . 60 கோடி மொத்தச் செலவில் செயற்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர்., விழுப்புரம்–இராமசாமி படையாட்சியார், வட ஆர்க்காடு–அம்பேத்கார், திருவண்ணாமலை–சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஏரிகளில் மீன் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஆண்டொன்றுக்கு மொத்தம் 17 கோடி மீன் குஞ்சுகள் தேவைப்படுகின்றன. இத்தேவையை நிறைவு செய்யும் வகையில் மீன் குஞ்சு வழங்கல் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

36. தனியார் துறையில் செயற்படுத்தப்பட்டு வரும் கடல் வாழ் உயிரின நீடித்த வளர்ச்சிப்பணிகளுக்கு நாங்கள் ஆதரவு அளித்துள்ளோம். **பாக் விரிகுடா பகுதியைச் சேர்ந்த 600 கடல் மீனவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளிக்கும் நடவடிக்கையாக, இராமநாதபுரம் மாவட்டத்தில், ரூ.13 . 88 கோடி செலவில் 150 ஹெக்டேர் பரப்பில், கடல் வாழ் உயிரின வளர்ச்சித் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.** இது, தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் MPEDA நிறுவனங்களின் நிதியுதவியோடு செயற்படுத்தப்பட்டு வருகின்ற பெரியதொரு திட்டமாகும். **வ.உ. சிதம்பரனார் மாவட்டம், தருவைக்குளத்தில் 50 ஹெக்டேர் பரப்பில், ரூ.2 . 20 கோடி செலவில் கடல் வாழ் உயிரின வளர்ப்பு தொழிற்பேட்டை ஒன்று தமிழ்நாடு மீனவ வளர்ச்சிக் கழகத்தால் தொடங்கப்படும்.**

37. இவ்வரசு, எப்போதுமே, மீனவர் நலனுக்கு தலையாய முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. 1993–94 ஆம் ஆண்டில், ரூ.5 கோடி செலவில், **மீனவர்களுக்கு 2000 நிரந்தர வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படும். 1994–95 ஆம் ஆண்டில், மேலும் 2000 வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படும். 1993–94 ஆண்டில், மீன்பிடித் தொழிலில் வருமானம் இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு ஏற்படும் ஊதிய இழப்பை ஈடு செய்ய மாதம் ஒன்றுக்கு ரூ.270 வீதம் 4 மாதங்களுக்கு 1,11,000 மீனவர்களுக்கு ரூ.13 . 20 கோடி வழங்கப்பட்டுள்ளது. இது, மீனவர்களுக்கு பயனளிக்கின்ற ஒரு பெரும் பாதுகாப்புத் திட்டமாக விளங்கி வருகிறது.**

38. நாம் நமது தற்போதைய வனவளங்களைப் பாதுகாப்பதுடன், நமது வனப் பரப்பை மேலும் விரிவுபடுத்தவும் வேண்டும். நடப்பாண்டில், 1.36 இலட்சம் ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **1994–95 ஆம் ஆண்டில், 1. 5 இலட்சம் ஏக்கர் பரப்பை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர நாங்கள் கருதியுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், வனவளத்திற்கான மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.46 . 05 கோடியாக இருக்கும்.**

39. சுவீடன் நாட்டின் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (SIDA) நிதியுதவி பெறும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகள், 1994–95 ஆம் ஆண்டில் முடிவுறும். இத்திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.25 . 35 கோடி நிதியொதுக்கப் பட்டுள்ளது. **இத் திட்டத்தின் கீழ், 7. 5 இலட்சம் ஏக்கர் பரப்பு, சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டங்களின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. இடை முகப்புக் (Interface) காடு வளர்ப்புத் திட்டம் என்னும் புதிய திட்டமொன்றை, நாங்கள் தீட்டியுள்ளோம். இத் திட்டத்திற்கு சுவீடன் நாட்டின் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவி கிட்டுமென நம்புகிறோம். இத்திட்டத்திற்கு, ரூ.265 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.**

40. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்ற புதியதொரு திட்டத்தையும் நாங்கள் உருவாக்கியுள்ளோம். இத் திட்டத்திற்கு, ரூ.300 கோடி செலவாகும். உலக வங்கியின் உதவிக்காக இத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. தாவர வகைகளும், உயிரினங்களும் அழிக்கப்படாமலும், காடுகள் அழிக்கப்படாமலும் தடுத்து உயிரினப் பல்வகையினைப் பாதுகாப்பதற்கு இத் திட்டம், வகை செய்யும். இத்திட்டம், சுமார் 1. 83 இலட்சம் ஹெக்டேர் வனப் பகுதியிலும், 800 இடை முகப்புக் கிராமங்களிலும் செயல்படுத்தப்படும்.

41. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், காடு வளர்ப்புத் திட்டப் பணிகளுக்காக, 1994–95 ஆண்டில் ரூ.9 கோடி ஒதுக்கியுள்ளோம்.

42. நீலகிரி மாவட்டத்தில், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்ச் சிறப்புக் காடு வளர்ப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். 1994–95 ஆம் ஆண்டில், ரூ.3 கோடி செலவில், 1,375 ஏக்கர் பரப்பு இத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படும். 1994–95 ஆம் ஆண்டில், மேற்கு மலைத் தொடர் சரிவுகளில் 6,250 ஏக்கர் பரப்பில் ரூ.2.48 கோடி செலவில், காடு வளர்ப்பு மற்றும் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஏற்படும் நலிவைச் சரிப்படுத்த இது ஏற்றதாக அமையும். நலிவுற்ற தொழிற்சாலைகள சட்டத்திற் (SICA) கிணங்க நலிவுற்றவையாகக் கருதப்பட்ட அத்தகைய தொழில் பிரிவுகள் அனைத்திற்கும் இச்சலுகையை நீட்டிக்க வேண்டுமென்பதே எங்களது நோக்கமாகும். ஏற்றுமதியைப் பெருக்கும் நோக்கத்துடன், சென்னை ஏற்றுமதி வர்த்தக நடவடிக்கை மண்டலத்திலிருந்தும் முற்றிலும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட ஏனைய தொழிற் பிரிவுகளிலிருந்தும் உள்ளூர்ப் பகுதியில் செய்யப்பட்ட கொள்முதல்களுக்குச் செலுத்தப்பட்ட விற்பனை வரியை மூன்றாண்டுக் கால அளவிற்கு திருப்பிக் கொடுக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம். சென்னை ஏற்றுமதி வர்த்தக நடவடிக்கை மண்டலத்திற்குள் தொழிற் பிரிவுகளுக்கிடையே செய்யப்படும் விற்பனைக்கு, இறுதி விற்னை உள்நாட்டில் இல்லாத பட்சத்தில் , விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

எரிசக்தி

54. தமிழ்நாட்டில் மின் தேவை அளவிலும் மின் வழங்கல் அளவிலும், வெட்டே இல்லை என்ற மகிழ்ச்சிகரமான நிலை தொடர்ந்து நீடிக்கிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையம் தொடர்ந்து 6 முறை தேசிய உற்பத்தித் திறன் பரிசை வென்று, மீண்டும் பரிசைப் பெறும் நிலையில் உள்ளது. 1992–93 ஆம் ஆண்டில், 76 சதவீத மின் நிலையச் செயல்திறனை எய்தியுள்ளது. மேட்டூர் அனல் மின் நிலையமும், 1992–93 ஆம் ஆண்டில், 64.2 சதவீத மின் நிலைய செயல்திறனை எய்திஉற்பத்திப் பரிசைப் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளது. நிலக்கரி வழங்கலைத் தொடர்ந்து கண்காணித்ததால், அனல் மின் நிலையங்கள், போதுமான நிலக்கரி இருப்பு வைத்து தொடர்ந்து செயல்படவும் முடிந்துள்ளது.

55. 1993–94 ஆம் ஆண்டில் எரி சக்தித் துறைக்கு ரூ.538.50 கோடி திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க 1994–95 ஆம் ஆண்டில், திட்ட ஒதுக்கீடு ரூ.625 கோடியாக இருக்கும். மின்மைய ஏற்பாட்டின் திறனை அதிகரிப்பதில், உயரிய கவனமும் செலுத்தப்பட்டுள்ளது. 210 மெகாவாட் திறன்கொண்ட மூன்று பிரிவுகளைக் கொண்ட (மொத்தம் 630 மெகாவாட்) வடசென்னை அனல் மின்திட்டத்தின் முதல் கட்டப் பணி, 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 1994 ஆம் ஆண்டில், ஒரு பிரிவு மின்மைய ஏற்பாட்டுடன் இணைக்கப்படுமென நம்புகிறோம் . சென்னையின் உயரளவு மின்தேவையை நிறைவு செய்யும் துணை ஏற்பாடாக பேசின்பாலத்தில், ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட 4 பிரிவுகளை (மொத்த திறன் 120 மெகாவாட்) நிறுவும் பெரும் பணியை நாங்கள் தொடங்கியுள்ளோம். வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்தின் (ஜப்பான்) உதவிபெறும் இத்திட்டம், ரூ. 367 கோடி செலவில் நிறைவேற்றப்படும். இத்திட்டம், 1995 ஆம் ஆண்டில் முடிக்கப்படுமென நாம் எதிர்பார்க்கிறோம். மொத்தம் 20 மெகாவாட் திறன் கொண்ட புதிய காற்றாலைகள் 1994–95 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.

56. நாட்டிலேயே முதல் முறையாக இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அதாவது, சேத்தியாத் தோப்பு மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ.10.68 கோடி செலவில் கூட்டு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு அவை வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, மற்றும் அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ.18 கோடி மதிப்பீட்டுச் செலவில் மேலும் 3 கூட்டு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும். முடிவாக, மொத்தம் 250 மெகா வாட் திறன் கொண்ட கூட்டு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும் என எதிர்பார்க்கலாம்.

57. மாநிலத்தின் மின்சக்தி தேவைகள் குறித்துத் திட்டமிடுகையில், நாம் நீண்டகால நோக்கில் தேவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இம்மாநிலத்தில், மின்சக்தியின் நீண்டகாலத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பலபெருமுயற்சிகள் எடுத்து நாம் முன்னேற்றம் அடைவதில் வெற்றியடைந்து வந்துள்ளோம். ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரி வெட்டியெடுத்தல்–மின் உற்பத்தித் திட்டம், ரூ.7500கோடி செலவில் இணைத் துறையில் (Associate Sector) மேற்கொள்ளப்படும் ஒரு மிகப் பெரிய திட்டமாகும். இத்திட்டத்தினால், மின்மைய ஏற்பாட்டின் திறன் 1500 மெகாவாட் அதிகரிக்கும். இத்திட்டத்திற்கான நிதி மதிப்பிடுதல் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டம் விரைவில் தொடங்கப்படுமென எதிர்பார்க்கிறோம். நெய்வேலியில் தனியார் துறையில் மின்நிலையம் ஒன்றை அமைப்பதற்கு மத்திய அரசு ஏற்பளித்துள்ளது. பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 250 மெகாவாட் திறன்கொண்ட இத்திட்டம், 1997ல் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வடசென்னையிலும், தூத்துக்குடியிலும் 500 மெகாவாட் திறன்கொண்ட கூடுதல் பிரிவுகளை தனியார் துறையில் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளையும் ஆய்வு செய்து வருகிறோம். கடலூரில் 1000 மெகாவாட் ஆரம்பத் திறனும், 2000 மெகாவாட் முடிவான திறனும் கொண்ட அனல் மின்நிலையம் ஒன்று அமைக்கத் திட்டமிட்டுள்ளோம் . கடலூரில் அமைக்கக் கருதப்பட்டுள்ள இந்த மின் திட்டத்திற்கு, நிலக்கரி கடல் வழியாக கொண்டு வரவேண்டியிருக்குமாதலால், கடலூர் துறைமுக வளர்ச்சிப் பணியுடன் சேர்த்து இத்திட்டம் நிறைவேற்றப்படும். ஜப்பானிய பொருளாதார உயர்மட்டக் குழு அண்மையில் வருகை புரிந்தபோது, இறக்குமதி நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு, கடலோர அனல் மின் நிலையம் ஒன்றை நிறுவும் திட்டத்தில், முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யுமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்குழுவிடம் கேட்டுக்கொண்டார். இறக்குமதி நிலக்கரி மீதான சுங்கத் தீர்வையினை 85 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக மத்திய அரசு குறைத்ததையடுத்து இது பரிசீலிக்கப்படுகிறது. வருங்காலத்திலும், இம்மாநிலத்தில் மின்வெட்டு வராமலிருப்பதை உறுதி செய்வதற்காக, இந்த அரசு மேற்கொண்டுள்ள பல முயற்சிகளை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவர் என நம்புகிறேன்.

58. தமிழ்நாட்டில் பல்வேறு மத்திய மின் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் காலதாமதம் மிகவும் கவலை அளிப்பதாய் உள்ளது. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் பணியும், அதனோடு இணைந்த மின் உற்பத்தித் திட்டமும் செயல்படுத்தப்படுவது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தப்படுமேயானால், அதை வரவேற்போம். கூடங்குளம் அணு மின் திட்டத்தில் நிதி முதலீடு செய்து பங்கேற்பதற்கான விருப்பத்தை நாங்கள் ஏற்கெனவே தெரிவித்துள்ளோம். இத்திட்டத்தை, நிறைவேற்றுவது குறித்து, மத்திய அரசு விரைவில் முடிவெடுக்கும் என்று நம்புகிறோம். கருநாடக மாநிலத்தில், கய்கா அணுமின் நிலைய திட்டத்திற்கு, நிதி முதலீடு செய்து பங்கேற்பது குறித்த எங்களது விருப்பத்தையும் நாங்கள் தெரிவித்துள்ளோம். இம்மாநிலத்தில், மின் உற்பத்தித் துறையில் மீண்டும் முதலீடு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கும் என நம்புகிறோம்.

59. மின்சக்தி அனுப்புகை மற்றும் வழங்குதல் ஆகியவற்றில் ஏற்படும் இழப்பைக் குறைக்க, உறுதியான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இழப்பு தற்போது 17.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. தேசிய சராசரி அளவு 22 சதவீதமாகும். மின்கம்பித் தொடர்களில் ஏற்படும் இழப்பை 15 சதவீதத்திற்கும் கீழாகக் குறைக்க, தமிழ்நாடு மின்வாரியம், திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறது. 1994–95 ஆம் ஆண்டிற்கு, மின் அனுப்புகை–வழங்கல் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.198.60 கோடியாக இருக்கும்.

60. இம்மாநிலத்தில், மரபு–சாரா எரிசக்தி ஆதாரங்கள் முனைப்புடன் பெருக்கப்படுவதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த வகையிலான முக்கிய நடவடிக்கையாக, கடல் நீர் வெப்பத்திலிருந்து மின்சக்தி உற்பத்தி செய்வதற்கு அமெரிக்க நிறுவனமான திருவாளர்கள் சீ சோலார் பவர் நிறுவனத்துடன் பரஸ்பர உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. ரூ.800 கோடி மதிப்பீட்டுச் செலவாகக் கூடிய இத்திட்டத்தின் உற்பத்தித் திறன் 100 மெகா வாட் ஆக இருக்கும். நாம் இந்த முயற்சியில் வெற்றியடைந்தால், கடலின் பரந்த ஆதாரத்திலிருந்து குறைந்த செலவில் புதுப்பிக்கத் தக்க மின்சக்தி ஆதாரம் பெறுவதில் ஒரு சாதனையாக அமையும். ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில், ரூ.30 இலட்சம் செலவில், 17 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும். சூரிய வெப்பத்தால் நீரைச் சூடாக்கும் ஏற்பாடுகளை நிறுவுவதற்கும் ஊக்கமளிக்கப்படும்.

61. தமிழ்நாடு மின்வாரியம் எதிர்நோக்குகின்ற கடுமையான நிதி இடர்ப்பாட்டை இம் மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். 1–3–1994 லிருந்து மின் கட்டணம் திருத்தியமைக்கப்பட்ட பின்னருங்கூட, மின்வாரியத்தின் ஈடு செய்யப்படாத நிதிப்பற்றாக்குறை ரூ.300 கோடியாக உள்ளது. இது, மிகவும் கடுமையான நிதி நிலைமையாகும். அரசு ரூ.350 கோடி நிதியுதவி அளித்த போதிலும்கூட இந்நிலை தொடர்ந்து நீடிக்கிறது. இது தவிர, அரசு ரூ.100 கோடி அளவிற்கு வட்டி தள்ளுபடி செய்கிறது . விவசாய பம்பு செட்டுகளுக்கு வழங்கப்படும் மின்சக்திக்கு, யூனிட் ஒன்றுக்கு 50 காசு வசூலிக்க வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது. விவசாய பம்பு செட்டுகள் பயன்படுத்தும் மின்சக்தியின் அளவு ஆண்டுக்கு 16 சதவீதம் அதிகரித்துள்ளது என்பது நமது ஆய்விலிருந்து தெரியவருகிறது. இந்த அளவானது, தொழில் துறையில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு வீதத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாகும். இது, மின் சக்தி கணிசமான அளவிற்கு வீணாகுவதற்கும், தவறாகப் பயன்படுவதற்கும் ஏதுவாகும் என்பதை வெளிப்படுத்துகிறது. மாநில அரசு தனது நிதி நிலையின் காரணமாக தமிழ்நாடு மின் வாரியத்திற்குத் தற்போது அளித்துவரும் ரொக்க ஆதரவுத் தொகையை ரூ.350 கோடிக்கும் மேல் அதிகரிக்க இயலாதுள்ளது. இது, அரசை எதிர்நோக்கியுள்ள இக்கட்டானதொரு நிலையாகும்.

சாலைகளும் சாலைப் போக்குவரத்தும்

62. சாலைகள் குறித்த நிதியொதுக்கீடு 1993–94 ஆம் ஆண்டில் ரூ.110.16 கோடியாக இருந்தது. 1994–95 ஆம் ஆண்டில் ரூ.120.94 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

63. முதல் தடவையாக, 1992–93 ஆம் ஆண்டில், சாலைகள் பராமரிப்பிற்காக ஒன்பதாம் நிதிக் குழு வரையறை செய்த நெறிமுறை அளவுக்கும் அதிகமாகவே நிதியொதுக்கீடு செய்திருந்தோம் என்பதைஇம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு நினைவு கூரலாம். இந்த நெறிமுறைகளை நடப்பு விலை அளவுக்கு உயர்த்தியுள்ளோம். உயர்த்தப்பட்ட இந்நெறிமுறைகளின்படி பராமரிப்புக்காக வரவு–செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது

என்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். 1993–94 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சாலைகள் பராமரிப்பிற்காக ரூ.145 கோடி ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1994–95 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.183 கோடி ஒதுக்கப்படுகிறது.

64. 1991–92 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.150 கோடி ஒதுக்கீட்டில், 5 ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டிய "சிறப்புப் பழுது பார்ப்புத் திட்டம்" ஒன்றைத் தொடங்கியிருந்தோம். நடப்பாண்டு உட்பட இதுவரை இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.95 கோடி ஒதுக்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் இது வரை 6430 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில், இத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.41.46 கோடியாக இருக்கும். வரும் ஆண்டில் 3500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில், தொழிற்சாலை பகுதிகளுக்கு அருகே அமைந்துள்ள சாலைகளில் 430 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் ரூ.5 கோடி செலவில் சிறப்புப் பழுதுப் பார்ப்புப் பணியை மேற்கொள்ளும் பணியும் அடங்கும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளங்களையடுத்து, இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகளை மனத்திற்கொண்டு, சாலைகளைப் பழுதுபார்த்துச் சீரமைக்கும் பணிக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் உயரிய முன்னுரிமை அளித்துள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையைக் கொண்டு, தீவிரப்பராமரிப்புப் பணிகளையும் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளையும் மேற்கொள்ள முடியும்.

65. கடந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 'மக்களுக்குப் பாலங்கள்' திட்டத்தைத் தொடங்குவதாக அறிவித்திருந்தோம். இத்திட்டத்தின் கீழ் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு பாலம் கட்டப்படும். 1993–94 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.10.42 கோடி செலவில் 208 பாலங்கள் கட்டுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள எஞ்சிய 26 பாலங்கள் 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1.30 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்படும். 234 பாலங்களும் 1994–95 இல் கட்டி முடிக்கப்படும்.

66. உலக வங்கியின் உதவியோடு செயற்படுத்துவதற்காக ரூ.880 கோடி நிதி ஒதுக்கீட்டில், புதிய திட்டமொன்றை வகுத்துள்ளோம். இத்திட்டத்தின்கீழ், 528 கிலோமீட்டர் தொலைவுக்கு இரு வரிசைப் போக்குவரத்து வசதியும் ஏற்படுத்தி 1293 கி.மீ. தொலைவுக்கு இரு வரிசைச் சாலைகளை வலுப்படுத்துவதோடு மிகவும் பழுதடைந்து மோசமான நிலையிலுள்ள பாலங்கள் மீண்டும் கட்டப்படும். இத்திட்டத்தின் பயனாக, மாநிலத்திலுள்ள சாலைஅமைப்பின் தரம் முற்றிலுமாக உயரும். இத்திட்டத்திற்கு நிதியுதவியளிக்க உலகவங்கி ஆர்வம் காட்டியுள்ளது. இத்திட்டத்திற்கு விரைவிலேயே உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்குமென நாம் நம்புகிறோம்.

67. நாகப்பட்டினம் – கூடலூர் சாலை, கோயம்புத்தூர் – திண்டுக்கல் சாலை, பெரம்பலூர் – மானாமதுரை சாலை போன்ற போக்குவரத்து நெரிசல் மிகுந்த சில பெரிய சாலைகளில் பம்பாயில் உள்ள அடிப்படை வசதிக் கட்டமைப்புக் கடன்– நிதியுதவிப்பணிகள் நிறுவனத்தின் (ILFS)ஆதரவுடன் நான்கு வரிசைப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த திட்டமிட்டுளோம். இது, சாலை அமைப்பின் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு புதிய முயற்சியாக இருக்கும்.

68. ஊரகச் சாலைகளின் தரத்தை உயர்த்தவும் மிக உயர்ந்த முக்கியத்துவம் அளித்துள்ளோம். 1981 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, ஆயிரத்திற்கும் அதிகமாக மக்கட்தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும், 1994–95 ஆம் ஆண்டில் அனைத்துப் பருவங்களுக்கும் ஏற்ற ஊரகச் சாலை வசதிகள் ஏற்படுத்திக்கொடுப்பது உறுதிப்படுத்தப்படும். 1994–95 ஆம் ஆண்டில் ஊரகச்சாலைத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.18.50 கோடியாக இருக்கும். தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, அங்காடிச் சாலைகள் திட்டத்தின்கீழ், 19 அங்காடி மையப் பகுதிகளில் ரூ. 45.28 கோடி மொத்தச்செலவில் நல்ல சாலைவசதிகள் ஏற்படுத்தப்படும். இது, ஊரகப் பகுதிகளில், 800 கிலோ மீட்டர் நீளமுள்ள நல்ல சாலை அமைய வழி வகுக்கும். 1994–95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்படும். பேருந்து வழித்தடச் சீரமைப்புத் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 13 கோடியாக இருக்கும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 500 கிலோமீட்டர் சாலை சீரமைத்து மேம்படுத்தப்படும். கரும்பு செஸ் நிதித்திட்டத்தின்கீழ் 1994–95 ஆம் ஆண்டில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

69. நகர்ப்பகுதிகளில் காணப்படும் போக்குவரத்து நெரிசல்களைக் குறைக்கவேண்டும். இதற்குப் பெரிய அளவில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், TRAMP பிரிவின் ஒரு பகுதியாக, 10 முக்கியமான நகரங்களில், ரூ. 144.89 கோடி செலவில் 37 பணிகளை மேற்கொண்டுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.27.72 கோடியாக இருக்கும்.

70. சென்னைக்கும் கடலூருக்குமிடையே அமைந்துள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை, சில தொழில் நுட்ப, சுற்றுச்சூழல் மற்றும் நிலந்தச் சிக்கல்களில் சிக்கியுள்ளது. இச்சிக்கல்கள் தீர்க்கப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில் இச்சாலைப் பணியில் நல்ல முன்னேற்றம் இருக்குமென எதிர்பார்க்கிறோம். இச்சாலை மேம்பாட்டு பணிக்காக 1994–95 ஆம் ஆண்டில் ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

71. 1994 பிப்ரவரித் திங்கள் முதல்நாள் முதற்கொண்டு டீசல் விலை திருத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அரசு பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமைதனை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதனால், 1994–95 ஆம் ஆண்டில் பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.60 கோடி இழப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. உடனடியாகப் பேருந்து கட்டணங்களைத் திருத்த இயலாது என்பதால், காலப்போக்கில் இந்த நிலைமையைச் சரிசெய்தாக வேண்டும். திரும்பத் திரும்ப டீசல் விலை உயர்த்தப்படுவதால் ஏற்படுகின்ற நிலைமையைச் சமாளிப்பது மிகவும் கடினமாக உள்ளது. மக்களுக்குப் பேருந்து போக்குவரத்துக் கழகங்கள் திறமையான போக்குவரத்துப் பணியை அளிக்க கடுமையாக முயற்சிகள் செய்து வருகின்ற வேளையில், இவ்விலை உயர்வுகளால் அவற்றின் செயல் திறன் பாதிக்கப்பட்டுள்ளது. விலைகள் திரும்பத் திரும்ப உயர்த்தப்படுவதால் இக்கழகங்களால் பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் போதுமான அளவில் புதிய பேருந்துகள் வாங்கவோ, புதிய பணிகளைத் தொடங்கவோ முடிவதில்லை. டீசல் விலைகள் உயர்த்தப்படும்போது, அதன் உடன் நிகழ்வாக, பேருந்துக் கட்டணங்களையும் உயர்த்துவதற்கு வகை செய்ய வேண்டிய ஒரு நிலைமைச் சென்றடைய வேண்டும்.

சுற்றுச் சூழல்

72. பொருள் நிரல் 21 ன் வரம்பினை மனத்திற் கொண்டு, மாநில செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தைச் செயல்படுத்த, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவியைக் கோரவிருக்கிறோம்.

73. மிக அதிக அளவில் மாசு ஏற்படுத்தி வருகின்ற, 17 தொழில் தொகுதிகளைப் பொறுத்தவரை, சுற்றுச் சூழல் நிலைமையைக் கண்காணிக்கும் பொறுப்பு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பெருமளவில் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டிய 119 தொழில் பிரிவுகள் இனம் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலான தொழில்பிரிவுகள் மாசுபடுத்தாதவை என அறிவிக்கப்படும் வகையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் செய்யப்பட்டுள்ளது. மணலூரில், சுகாதாரக் கேட்டினை உருவாக்கும் கழிவுப் பொருட்களை அகற்றும் முதலாவது பொது வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மணலியில், அவசரகால இடர் உதவி நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது.

74. தோல் பதனிடு தொழிற்சாலைகளினால் மாசு ஏற்படுவதைத் தடுப்பதற்காக, முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ.47.74 கோடி மொத்தச் செலவில், 23 பொதுவான கழிவுப் பொருள் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1994 ஆம் ஆண்டில் 6 நிலையங்கள் அமைக்கும் பணி முடிவுறும்.

75. துணித் துறையில், சாயத் தொழில் பிரிவுகளால் மாசு ஏற்படுவதைத் தடுக்க, 16 பொதுவான கழிவுப் பொருள் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

76. அரசு மேற்கொள்ளவிருக்கின்ற தொழில் சார்ந்த மற்றும் சுகாதாரக் கேட்டினை உண்டாக்கும் கழிவுப் பொருள் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றி, ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் விரிவான ஆய்வு ஒன்றை நடத்தி வருகிறோம். 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அளிக்கப்படவிருக்கின்ற இந்த ஆய்வு பற்றிய அறிக்கையின் அடிப்படையில் விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

77. காவிரி ஆற்றில், மாசு கலப்பதைத் தடுப்பதற்கான திட்டமொன்றைத் தொடங்க நாம் நடவடிக்கை எடுத்து வருவதை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ரூ.332 கோடி செலவாகக்கூடிய விரிவான திட்டம் ஒன்று, நிதியுதவிக்காக ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில், தேசிய நதி செயல் திட்டத்தின் கீழ், 1994–95 ஆம் ஆண்டில் ரூ.2 கோடி செலவில் துவக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும். MINARS திட்டத்தின் கீழ்ப் பெரிய ஆறுகளிலும், ஏரிகளிலும் தண்ணீரின் தரத்தைக் கண்காணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

78. ஒருங்கிணைந்த கடலோரப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுக்குமாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். இத்திட்டத்தை வகுப்பது தொடர்பாக, புகழ் பெற்ற வல்லுநர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் உதவியை நாங்கள் நாடியுள்ளோம். இத்திட்டத்திற்குத் தேவையான வெளிநாட்டு உதவி பெறுவதற்காக, இதை விரைவிலேயே அனுப்பிவைக்கவிருக்கிறோம்.

79. மாநகர நீர்வழிகளைச் சுத்தம் செய்யவும், இவற்றில் மாசு கலப்பதைத் தடுக்கவும் சென்னை மாநகரில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளவும் ரூ. 112.50 கோடி செலவில் திட்டமொன்றை வகுத்துள்ளோம். ஜெர்மனி நாடு இத்திட்டத்திற்கு, நிதி உதவி செய்வது குறித்துப் பரிசீலித்து வருகிறது. இத்திட்டம் குறித்து பல நிறுவனங்கள் விரிவான ஆய்வுகள் நடத்தியுள்ளன. இவற்றில் சேறு அகற்றல் ஆய்வும் அடங்கும். இந்த நீர்வழிகளைச் சீரமைத்து அவற்றைப் பழைய நிலைக்கு மாற்ற பெரும் முயற்சி எடுக்கப்படுவதற்கு உரிய தருணம் இதுவே ஆகும்.

80. நமது கடலோரப் பகுதிகள் கடலரிப்புக்குள்ளாவதைத் தடுப்பதற்கான திட்டமொன்றை உலக சுற்றுச்சூழல் நிதியின் உதவியோடு மேற்கொள்ளவிருக்கிறோம். ரூ. 50 கோடி மதிப்பீட்டுச் செலவாகக்கூடிய இத்திட்டம், சென்னை, கன்னியாகுமரி மாநிலத்தின் ஏனைய கடற்கரைப் பகுதிகள் ஆகிய இடங்களில் நிரந்தர மற்றும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யும்.

நகர்ப்பகுதி மேம்பாடு

81. தமிழ்நாட்டின் நகர்ப்பகுதி மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 34.15 சதவீதமாகும். நகர்ப்புறத்தில் வாழும் மக்கள் தொகை விகிதத்தை வைத்துப் பார்ப்போமேயானால் தமிழ்நாடு, நாட்டில் மூன்றாவது இடத்தில் உள்ளது. நகர்ப்பகுதி நெருக்கடிப் பிரச்சினையைத் தீர்த்து, நகர்ப்பகுதி வாழ் ஏழைஎளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமானால், அதற்குப் பெருமளவில் முதலீடு தேவை. பெருமளவிலான முதலீட்டுத் திட்டத்தை மேற்கொள்ள, தனியார் மூலதனம் உட்பட, அனைத்து மூலதனத்தையும் நாம் பயன்படுத்த வேண்டியுள்ளது.

82. உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும், தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், இதுவரை செயற்படுத்தப்பட்ட மிகப்பெரிய திட்டங்களுள் ஒன்றாகும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு, ரூ.150 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மனைகளும் பணிகளும், குடிசைப்பகுதி மேம்பாடு, போக்குவரத்து மேம்பாடு, நகர்ப்பகுதிப் பேருந்துப் போக்குவரத்து மேம்பாடு, நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளுக்கு நிதியுதவி ஆகியவை இத்திட்டத்தின் முக்கியப் பிரிவுகளாகும். 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எழக்கூடிய தேவைகளை நிறைவு செய்யும் வகையில், ரூ.1000 கோடி ஒதுக்கீட்டுடன்கூடிய இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற எடுத்துக்கொள்ள நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

83. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினால் கிடைக்கக் கூடிய முக்கியமான ஆதாயங்களில் ஒன்று, நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்காகப், புதிய நிதியுதவி ஏற்பாடுகள் உருவாக்கப்படுவதுதான். நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதியுதவி செய்வதற்காக, இத்திட்டத்தின்கீழ், நகராட்சி நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில், நகர்ப்பகுதிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கத் தேவையான நிதியுதவி செய்வதற்காகவும், தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதி–அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடனை, நகராட்சிகள் திருப்பிச் செலுத்துவதில் சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. அரசு, தன் பொறுப்புகளைத் தீர்ப்பதற்காக, இக்கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. நாம், இந்த அம்சங்கள் அனைத்தையும் கருத்தில்கொண்டு, நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளுக்குத் தேவையான நிதியுதவிகளைச் செய்வதற்காகப், பொதுவான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தலாமா என பரிசீலிக்க வேண்டியுள்ளது. இப்பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரைப்பதற்காகக் குழு ஒன்றை அமைக்கவிருக்கிறோம்.

84. நகர்ப்பகுதி ஏழை, எளிய மக்களின் நலனுக்காக ஒருங்கிணைந்த புதிய திட்டம் ஒன்றைத் தொடங்க நாங்கள் கருதியுள்ளோம். நகர்ப்பகுதி ஏழை மக்களுக்கான இம்மாநில ஒருங்கிணைந்த திட்டம், நகர்ப்பகுதி ஏழை எளிய மக்களின் வாழ்க்கை நிலைமைகளை உயர்த்தவும், அவர்களின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் முயற்சிகளை மேற்கொள்ளும். வெவ்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறு பணிகளை ஒன்றாகச் சேர்த்து ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்ற இத்திட்டம் உதவும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் நகர்ப்பகுதியிலுள்ள ஒரு இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும் என்று நாங்கள் நம்புகிறோம்.

சென்னை மாநகர் மேம்பாடு

85. சென்னை மாநகரை, இந்நாட்டின் முதன்மையான பெருநகரமாக உருவாக்கிடும் நோக்கத்துடன், 'எழில்மிகு சென்னை–2000' திட்டம் தொடங்கப்பட்டுள்ளதை, இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இக்கண்ணோட்டத்துடன், விரிவான முதலீட்டுத் திட்டம் ஒன்றை வகுக்கக் கருதியுள்ளோம். 'எழில்மிகு சென்னை–2000' திட்டத்தில், இம்முதலீட்டுத் திட்டம் அடங்கும்.

86. 'எழில்மிகு சென்னை–2000' திட்டத்தின் பிரிவுகளும் 2000 ஆம் ஆண்டுக்கு முன் முடிப்பதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள முதலீடுகளும் வருமாறு –

(ரூபாய் கோடியில்)

*நீர் வழங்கல்–கழிவு நீரகற்றல்	1600
*மின் அனுப்புகை, வழங்கல் ஏற்பாட்டை வலுப்படுத்தலும், மின்சுமை அதிகமாக உள்ள சமயங்களில் கூடுதல் மின் திறனுக்கு வகை செய்தலும்	650
*சாலை வடிவமைப்பு மேம்பாடு, போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தும் தடைகளை அகற்றுதல், புதிய போக்குவரத்து, நிர்வாக ஏற்பாடு	300
*மாநகர நீர் வழிகள் மேம்பாடு உட்பட சுற்றுப்புறத் துப்புரவு	400
*மழை நீர் வடிகால்	75
*வீட்டு வசதி மேம்பாடு	525
*மாநகரப் போக்குவரத்துத் திட்டம்	300
*ஏனைய மாநகர மேம்பாட்டுத் திட்டங்கள்	150
மொத்தம்	4000

87. சென்னையை, 21 ஆம் நூற்றாண்டில், எழில்மிகு சென்னையாக மாற்றுவதற்காக, ரூ.4000 கோடி நிதிஒதுக்கீட்டுடன் 'எழில்மிகு சென்னை–2000 திட்டம்' செயற்படுத்தப்படும். இது, இந்நாட்டில் அனைவராலும் விரும்பப்படுகின்ற இடமாக, சென்னை மாநகரை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட விரிவான திட்டமாகும். புதிய வணிக மையங்கள், நிறுவன அலுவலகங்கள் அமைப்பதற்கு உகந்த இடம் சென்னை மாநகரம் என்ற முடிவுக்கு அனைவரும் வரக்கூடிய வகையில், இம்மாநகரத்தின் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்துவதை உறுதிப்படுத்த நாங்கள் விழைகிறோம். இந்நாட்டின் மாற்று நிதித் தலைநகரமாக, சென்னை விளங்கும் வகையில் இம்மாநகருக்கு வலிவும் பொலிவும் சேர்க்க வேண்டும் என்பதும் எங்களின் நோக்கமாகும்.

88. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் பெரும் முதலீடுகளுக்கு நிதி பெறும் வாயிலாக, பெருநகர் அடிப்படை வசதிக் கழகம் ஒன்றை நிறுவ நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இக்கழகத்திற்கான, மூலதனப்பங்கிற்கு, ஏற்பாடு செய்வது எங்கள் நோக்கமாகும். 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.15 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, மாநில அரசின் பங்காகும். மத்திய அரசின் பங்கையும் சேர்த்து, ரூ.60 கோடி மொத்த மூலதனம் கிடைக்கும். இம்மாநகரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு நிதியுதவி அளிப்பதில் , இது ஒரு பெரிய அளவாகும்.

89. நகராட்சி திடக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்றை நாம் தொடங்கியுள்ளோம். 5 மெகா வாட் திறன் கொண்ட இந்த மின் உற்பத்தி நிலையம், ரூ.16 கோடி செலவில் சென்னைக்கருகிலுள்ள பெருங்குடியில் அமைக்கப்படும். இந்நிலையத்தில் உருண்டைகளாக்கப்பட்ட திடக் கழிவுகள் பயன்படுத்தப்படும். இத் திட்டத்தை, கூட்டுத் துறையில் டிட்கோ நிறுவனம் செயற்படுத்தும். கழிவுப் பொருட்களையும் மின் உற்பத்தியையும் தொடர்படுத்தும் இத் திட்டம், ஒரு பெரிய புதிய முயற்சியாகும்.

வீட்டு வசதி

90. அனைவர்க்கும் வீடு என்பது இவ்வரசின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையாகும். வீட்டுவசதி, கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்புக்கு வகை செய்வதால், மெக்ஸிகோ போன்ற பல நாடுகளில் அங்கீகரித்தவாறு, வீட்டு வசதி ஒரு முக்கியமான பொருளாதாரப் பணியாகும். எனவே, இம்மாநிலத்தில் வீட்டுவசதி மேம்பாட்டுக்கு நாங்கள் அதிக முன்னுரிமை அளித்துள்ளோம்.

91. உண்மையில் தேவைப்படும் வீடுகளின் எண்ணிக்கையும், இதுவரை வழங்கப்பட்ட மொத்த வீட்டுவசதி நிலைமையையும் அறிந்து கொள்ள, நாங்கள் புதிய ஆய்வு ஒன்றைத் தொடங்கியுள்ளோம். இந்த ஆய்வின் அடிப்படையில், வீடுகள், மேம்படுத்தப்பட்ட மனைகள் கிடைப்பதை அதிகரிக்க நீண்டகாலத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நாங்கள் கருதியுள்ளோம். இப்புதிய திட்டச் செயல்முறையின் கீழ், வீட்டுவசதி வாரியம், குடிசைப் பகுதி வாரியம் போன்ற அரசுத் துறை நிறுவனங்கள் மூலம் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் வழங்குவதையும் மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்குவதையும் நாங்கள் ஊக்குவிக்கவும் ஊரக, நகர்ப் பகுதி

வீட்டுவசதியை விரைவுபடுத்துவதற்காகக் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தி, வீட்டு வசதி நிதியுதவி நிறுவனங்கள், தங்கள் பணிகளை இம் மாநிலத்தில் விரிவுபடுத்துவதற்காக அவற்றுக்கு முழு ஆதரவு அளிக்கவும் நாங்கள் கருதியுள்ளோம். வீட்டுவசதி நிதியுதவி தொடர்பான நிலைமை குறிப்பாக, தேசிய வீட்டுவசதி வங்கியிடமிருந்து மறு நிதியுதவி பெறுவது தொடர்பான நிலைமை திருப்திகரமாக இல்லை என்று நான் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். கடன் வழங்கு நிலை சீரமைக்கப்படுவதையும், வீட்டு வசதிப் பிரிவுகளுக்காக வணிக வங்கி முறை மூலமும், ஏனையோருக்கும் போதுமான கடன் கிடைப்பதையும் மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். 1 . 25 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு வசதிக்கு வகை செய்வதே 1994–95ல் நாம் மேற்கொள்ளும் முயற்சியாகும்.

92. 1994–95 ஆம் ஆண்டில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ரூ.200 கோடி செலவில், 20,700 குடியிருப்புகளைக் கட்டும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1994–95 ஆம் ஆண்டில், 750 புதிய குடியிருப்புகள் கட்டும். இதனுடன், வரும் ஆண்டில், 10,000 குடும்பங்களுக்காக குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றையும் மேற்கொள்ளும். ரூ.1 . 5 கோடிசெலவில் "வீடற்றோருக்கு வீடு" திட்டத்தின் கீழ் 900 வீட்டுத் தொகுதிகள் கட்டப்படும். நடைபாதை வசிப்போர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 2,275 குடும்பங்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரப்படும். 1994–95 ஆம் ஆண்டில், குடிசைப் பகுதி மாற்று வாரியம் 4 நகர்ப்பகுதி புதுப்பித்தல் திட்டங்களையும் மேற்கொள்ளும். 1994–95 ஆம் ஆண்டில், 10,000 குடியிருப்புகள் கட்டுவதற்காக, நகர்ப் பகுதி வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதி ஆதரவு அளிக்கும்.

93. வரும் ஆண்டில் பெரிய வீட்டு வசதித் திட்டங்களை எடுத்துக் கொள்ள இயலும் வகையில் கிராம வீட்டு வசதித் திட்டம் வலுவான அடிப்படையில் சீரமைக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். இதற்காகக் கடன் தொகைகள் உரிய நேரத்தில் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. ஒவ்வோராண்டும் அதிக எண்ணிக்கையில் வீடுகளைக் கட்ட இயலும் வகையில், 165 வட்ட வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராம வீட்டு வசதித் திட்டத்தின் செயல்பாட்டினை நாங்கள் மேம்படுத்துவோம். 1994–95 ஆம் ஆண்டில் 30,000 குடியிருப்புகள் கட்ட வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில் 10,000 குடியிருப்புகள் கட்டுவதற்காகக் "கிராமப்பகுதிகளில் வீட்டுவசதி நிலையை உயர்த்தல் (கப்ரா)" என்னும் புதுமையான திட்டத்தைத் தொடர்ந்து நாங்கள் செயற்படுத்துவோம். இத்திட்டத்தின் கீழ் கிராமங்களில் வீடுகளின் நிலை உயர்த்தப்படும்.

94. வரும் ஆண்டில், பெரிய அளவில் வீட்டு வசதிப் பணிக்கு கடன் வழங்குவதற்காகத் தொடக்க நில வள வங்கியின் பணிகளைத் தீவிரப்படுத்த நாங்கள் கருதியுள்ளோம். இதற்குத் தேவையான இசைவையும் நாங்கள் பெற்றுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், கூட்டுறவு நில வள வங்கிப் பணி மூலம் வீட்டு வசதிக்கு நிதி ஆதரவு அளிக்கும் பெரும் திட்டத்தைத் தொடங்க உள்ளோம்.

95.புயல் வெள்ளத்தைத் தொடர்ந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டித் தருவதற்காக மேற் கொள்ளப்பட்ட சிறப்புத் திட்டம் பற்றி இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டத்தின் கீழ் 18,000 வீடுகள் கட்டித் தரப்படும். இத்திட்டத்திற்காக இவ்வரை ரூ.8 . 10 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இத்திட்டத்தின் கீழ் கூடுதல் வீடுகளுக்கு நிதியுதவி அளிப்பது பற்றியும் நாங்கள் பரிசீலித்துள்ளோம். மத்திய அரசிடமிருந்து இசைவு வரப் பெற்ற பின்னர் இத்திட்டத்தைச் செயற்படுத்துவோம்.

கல்வி

96. இந்த வரவு–செலவுத் திட்டத்தில், கல்விக்காக மொத்தம் ரூ.2002 .46 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கிலான செலவினத்தில், 22 . 04 சதவீதம் செலவு ஆகக் கூடிய ஒரே பெரிய துறை , கல்வித் துறையாகும்.

97. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அண்மையில், 1994 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உணர்ச்சிகீளறும் உரையில், மாநிலம் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவரித்துள்ளார். 1998 ஆம் ஆண்டிற்குள் "அனைவருக்கும் கல்வி" என்ற இலக்கை எய்துவதற்குத் தமிழ்நாடு முயற்சி செய்யும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதனையொட்டிக் குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனரா என்பதையும், மிக முக்கியமாக, 14 வயதுவரை அவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடருகிறார்களா என்பதையும் உறுதி செய்வதற்குப் பெரும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இந்த இலக்கை எய்துவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களுக்கு வகைசெய்யும் விதத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

98. தொடக்கக் கல்வி முறையின் தரத்தை உயர்த்துவதற்குப் பின்வரும் முக்கியப் பணிகளை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

* 1994–95 ஆம் ஆண்டிலிருந்து இம் மாநிலம் முழுவதும், குழந்தை முன் பருவப் பாதுகாப்பு – கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துதல்.

*1994 ஆம் ஆண்டு கோடை விடுமுறையில் சிறப்பு முயற்சி மேற்கொள்வதன் மூலம் 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் சேர்வதை உறுதி செய்தல்.

* கோடை விடுமுறையின் போதும், பள்ளி திறந்த பிறகும் அதிக அளவில் குழந்தைகள் பள்ளிப் படிப்பைத் தொடருகிறார்களா என்பதை உறுதி செய்ய சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

*பள்ளியில் பயிலாத 6–14 வயதுத் தொகுதியினருக்கு, பள்ளிசாராக் கல்வி நீட்டிக்கப்படுவதை உறுதி செய்ய, படித்த தன்னார்வத் தொண்டர் பணித் திட்டத்தை வலுப்படுத்துதல்.

* பாடப்புலத்தின் தரத்தை உயர்த்துதல், ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் செயலூக்கம், குறைந்தபட்சக் கல்வி, பள்ளித் திட்டத்தில் பெற்றோர்களின் பங்கு ஆகியவற்றுக்கு வகை செய்தல்.

* அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், அடிப்படை வசதியை மேம்படுத்துதல்.

மேற்சொன்ன முக்கியமான செயல் திட்டங்களில் முழுக் கவனம் செலுத்தப்படும். அதனால், தொடக்கக் கல்வி முறை முழுவதும் வருமாண்டில் நிலை உயர்த்தப்படும்.

99. இம் மாநிலத்தில், தொடக்கப்பள்ளித் திட்டத்தை நிலை உயர்த்துவதற்கு ரூ.1200 கோடி நிதியொதுக்கீட்டுடன்கூடிய விரிவான திட்ட அறிக்கை ஒன்றினை, உலக வங்கியிடம் நாம் அளித்துள்ளோம் என்பதை இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத் திட்ட அறிக்கை தற்போது மத்திய அரசிடம் உள்ளது. இத் திட்டத்தை உலக வங்கிக்கு அனுப்புமாறு நாம் மத்திய அரசை வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளோம். இதற்கிடையில், பெண் கல்வியின் அளவு தேசிய அளவைவிடக் குறைவாக உள்ள மாவட்டங்களில், பெண் கல்வியை மேம்படுத்த பன் மாநிலத் திட்டமொன்றை உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம், தருமபுரி, திருவண்ணாமலை–சம்புவராயர், விழுப்புரம் –இராமசாமிப் படையாட்சியார், தென் ஆர்க்காடு–வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில், செயற்படுத்தப்படும். 5 ஆண்டுக் கால அளவிற்கு, இத்திட்டத்திற்கான நிதியொதுக்கீடு ரூ.120 கோடியாக இருக்கும். இது, தொடக்கப் பள்ளிகளில் பெண் குழந்தைகள் அதிக அளவில் சேர்க்கப்படுவதையும், தொடர்ந்து கல்வி பயிலுவதையும் மேம்படுத்தும் குறிப்பான நோக்கத்துடன் செயற்படுத்தப் படுகிறது. இது இந்த 4 மாவட்டங்களில், தொடக்கப் பள்ளித் திட்டத்தை நிலை உயர்த்துவதற்கான பெரிய புதிய முயற்சியாக இருக்கும்.

100. வரும் ஆண்டில், புதிதாக 766 தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படுவது உறுதி செய்யப்படும் என்பதை அறிந்து இப்பேரவையின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இதன் பின்னர், ஒவ்வொரு பள்ளிக்கும் குறைந்தது ஒரு நிரந்தரக் கட்டிடமாவது கட்டிக் கொடுக்கப்படும். அதே நேரத்தில், வருமாண்டில், கூடுதலாக 750 பள்ளிக் கட்டிடம் கட்டும் பணியையும் நாம், மேற்கொள்ளவிருக்கிறோம். தொடக்கப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் கணிசமான அளவிற்கு மேம்படுத்துவதை இது உறுதிசெய்யும். கல்வித் துறையில், சொத்துக்கள் சரிவரப் பராமரிக்கப்படுவதை உறுதி செய்கிற, உள்ளாட்சி நிதிக் கணக்கு III ன் கீழ், நிலைமையைச் சரிசெய்யுமாறு ஊராட்சி ஒன்றியங்களை நாம் கேட்டுக் கொண்டுள்ளோம். இக்கணக்கின்கீழ் வருமாண்டில், தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களின் சரிவரப் பராமரிப்புக்கானதிட்டமொன்று செயற்படுத்துமாறு பார்த்துக் கொள்ளப்படும்.

101. என்னுடைய சென்ற ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில், தொடக்கப் பள்ளிகளில், குழந்தைகள் கட்டாயமாகச் சேரவேண்டுமென்பதற்கும் தொடர்ந்து கல்வி பயில வேண்டுமென்பதற்கும் வகைசெய்யும் புதிய சட்டத்தைக் கொண்டு வருவோமென்று நான் அறிவித்தேன். இந்த அறிவிப்பு பெரிய அளவில் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. இச்சட்டத்திலுள்ள விதித் துறைகளின் தன்மை குறித்து நாங்கள் விரிவாக விவாதித்துள்ளோம். இப்புதுமையான சட்டம், மாநிலம் முழுவதும் செயற்படுத்தப்படும். தங்கள் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைப்பது, தங்களுடைய உன்னதக் கடமை என்பதைப் பெற்றோர்கள் உணரச் செய்வதே நம்முடைய முயற்சியாக இருக்கும். தண்டனை விதித் துறைகளைப் பயன்படுத்துவதை விட, பேசி இணங்க வைப்பதன் மூலமும் சமுதாய வற்புறுத்தலின் மூலமுமே, இந்தச் சட்டத்தின் விதித் துறைகள் செயற்படுத்தப்படும். மாநிலம் முழுவதிலும் தொடக்கக் கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்கி மாணவர்கள் சேருவதையும் தொடர்ந்து படிப்பதையும் உறுதி செய்வதற்குத் தேவையான நிலைமைகளையும் நாம் ஏற்படுத்தியுள்ளதால், இந்த நிலையில், இச் சட்டத்தை நம்மால் வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதற்கு வகைசெய்யும் சட்டம் ஒன்றை நடப்புக் கூட்டத் தொடரில் நாங்கள் கொண்டுவர இருக்கிறோம். கட்டாயக் கல்விக்கு வகைசெய்யும் புதிய சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு எடுக்கப்பட்ட இந்த அற்புத முயற்சியை, இம்மாமன்றத்தின்

இணைந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் ரூ. 15 இலட்சம் செலவில் முடிக்கப்படும். பின்னர் ஆய்வுகளின் முழுமையான மதிப்பீடு ஒன்று தயாரித்து அளிக்கப்படும்.

சுகாதாரம் – குடும்ப நலம்

115. 1994–95 ஆம் ஆண்டில் சுகாதாரம்– குடும்ப நலன் குறித்த மொத்த நிதி ஒதுக்கீடு, மிக அதிகமாக, ரூ.643 . 14 கோடியாக இருக்கும். மருந்துகள், மருந்துப் பொருள்களுக்கான நிதியொதுக்கம் நடப்பாண்டில் ரூ.75 கோடியிலிருந்து, வரும் ஆண்டில் ரூ.88 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தொடக்க சுகாதாரம், குடும்ப நலன் குறித்த திட்ட ஒதுக்கீடு, 1993–94இல் ரூ.174 . 21 கோடியிலிருந்து, 1994–95இல் ரூ.198 . 95 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தாய்–சேய் நல முகாம்கள் மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. இதுவரை, 1315 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 2 . 11 இலட்சம் மகளிருக்கும், 2 .19 இலட்சம் குழந்தைகளுக்கும் சுகாதர வசதி அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 5 – 15 வயதுத் தொகுதியைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகள் அனைவருக்கும் மருத்துவச் சோதனை செய்வதற்கு வகை செய்யும் "புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பள்ளிச் சுகாதார முகாம்கள்" திட்டத்தை, 1994 ஜுன் திங்களிலிருந்து தொடங்க விருக்கிறோம். உலக வங்கி, யூனிசெப் ஆகியவற்றிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியைக் கொண்டு, "குழந்தையின் உயிர் காத்தல் மற்றும் பாதுகாப்பான தாய்மைப்பேறு" (CSSM) திட்டத்தை நாங்கள் செயற்படுத்துகிறோம். இதுவரை, எட்டு மாவட்டங்களில், இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், 1994–95 ஆம் ஆண்டில் சென்னை, செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர்., கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம்–காயிதே மில்லத் ஆகிய 7 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும். மகளிர்–குழந்தைகளுக்குப் போதுமான சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்திய மக்கள் தொகை திட்டம்-V, ரூ.10 . 26 கோடி முதலீட்டுடன் 15 நகராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், நகர்ப்பகுதி ஏழை, எளிய மக்களுக்கு ஒருங்கிணைந்த மகப்பேறு, குழந்தை சுகாதாரப் பாதுகாப்பு, குடும்ப நலப் பணிகள் ஆகியவற்றிற்கு வகை செய்கிறது.

116. இம்மாநிலத்தில் 1417 தொடக்கச் சுகாதார மையங்கள் உள்ளன. இவை, கிராமங்களின் மூலைமுடுக்குகளில் மருத்துவப்பணி ஆற்றி வருகின்றன. 120 தொடக்கச் சுகாதார மையங்களுக்கான கட்டிடங்கள் 1994–95 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்பதை அறிந்து இம்மான்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வடைவர். இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.7. 21 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.1. 45 கோடி மொத்தச் செலவில், 12 தொடக்கச் சுகாதார மையங்களுக்கு மருந்தகக் கட்டிடங்கள் கட்டும்பணியும் மேற்கொள்ளப்படும்.

117. மகப்பேறு, குழந்தை சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு, அதிகமுன்னுரிமை அளிப்பதை உறுதி செய்வது, இவ்வரசின் முக்கிய முயற்சியாகும். மாநிலத்தில், ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும் புதிதாகப் பிறந்த குழந்தைநல மருத்துவ நிலையம் ஏற்படுத்துவதை உறுதி செய்வதற்காக வரும் ஆண்டில் சிறப்பு திட்டம் ஒன்றைத் தொடங்க, நாங்கள் முடிவு செய்துள்ளோம். முதல் நடவடிக்கையாக, இந்நோக்கத்திற்காக மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகளை ஒதுக்கித் தேவையான சாதனங்களையும், மருத்துவர்களையும் வழங்குவோம். தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் மற்றும் டேனிடா நிதியுதவி பெறும் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு, ரூ.2 . 70 கோடியாக இருக்கும்.

118. தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு வட்டத்திலும், குறைந்தது 32 படுக்கைகளுடன் ஒரு அரசு மருத்துவமனையாவது இருக்கவேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக ,அரசு, திட்டம் ஒன்றைத் தொடங்கியதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டத்தின்கீழ் 11 வட்ட மருத்துவமனைகளில் வார்டுகள் கட்டும் பணியை, நாங்கள் ஏற்கெனவே எடுத்துக் கொண்டுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டம் முடிக்கப்பட்டுவிடும் என்று அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இனி, ஒவ்வொரு வட்டத்திலும் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளாவது கிடைக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

119. விழுப்புரம், அண்ணமயில் மாவட்டத் தலைமையிடமாகியுள்ளது. இம்மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில், 48 படுக்கைகளுடன் புதிய வார்டு ஒன்றைக் கட்டும் பணியை, வரும் ஆண்டில், நாங்கள் எடுத்துக் கொள்ள உள்ளோம். இது ஒவ்வொரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையிலும் குறைந்தது 200 படுக்கை வசதிகள் அளிக்கும் தொடர் திட்டத்தின் ஒரு பகுதியாகும். ரூ.83 . 85 இலட்சம் செலவில், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில், பல்வேறு ஏனைய வசதிகளை வரவு–செலவுத் திட்டத்தில் அளிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

120. தருமபுரி, நாகப்பட்டினம்–காயிதே மில்லத், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் டேனிடா நிதி உதவியுடன், ரூ.89 . 11 கோடி செலவில், சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம், வரும் ஆண்டில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டம், இம்மூன்று மாவட்டங்களில் தொடக்கச் சுகாதார

பாதுகாப்பு முறையின் நிலை உயர்த்துவதற்கு வகை செய்வதுடன் தொடக்க சுகாதாரப் பாதுகாப்பு முறைக்கு ஆதரவளிப்பதுடன், மாநிலம் முழுவதும் இது தொடர்பான சுகாதாரப் பணிகளுக்கு உதவி புரியும்.

121. உலக வங்கியின் நிதியுதவியுடன், மொத்தம் ரூ.64 கோடி ஒதுக்கீட்டுடன் பார்வையின்மைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை விரைவில் தொடங்க உள்ளோம். இத்திட்டம், கி.பி. 2000 ஆவது ஆண்டிற்குள் கண்புரை நோய் இனங்களை 1 . 65 சதவீதத்திலிருந்து 0 . 3 சதவீதமாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நோக்கத்தை எய்த, வட்ட, மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில், 1696 கூடுதல் படுக்கைகளுக்கும், 48 அறுவை சிகிச்சைக் கூடங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் வகை செய்யப்படும்.

122. கொடிய 'எய்ட்ஸ்' நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தப் போதுமான தடுப்பு நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியுள்ளது. இம்மாநிலத்தில் "எய்ட்ஸ்" கட்டுப்பாடு திட்டத்தைச் செயற்படுத்த, தேவையான வசதிகளை ஏற்படுத்தியுள்ளோம். இம் மாநிலத்தில் செயல்பட்டு வரக்கூடிய 88 இரத்த சேமிப்பு வங்கிகளில், பாதுகாப்பான இரத்தம் பெறும் வகையில், 44 இரத்த சேமிப்பு வங்கிகளில், நாங்கள் சாதனங்களை வழங்கியுள்ளோம். வரும் ஆண்டில், மத்திய அரசின் ஆதரவுடன், எஞ்சியுள்ள இரத்த சேமிப்பு வங்கிகள் அனைத்திலும், இச்சாதனங்களை வழங்க நாங்கள், திட்டமிட்டுள்ளோம். அமெரிக்க நாட்டு நிதியுதவியுடன் 'எய்ட்ஸ்' கட்டுப்பாட்டுத் திட்டத்தை புகழ் பெற்ற அரசு சாரா அமைப்பான தொண்டு சுகாதாரப் பணி நிறுவனம் (VHS) மேற்கொள்ளும். இத்திட்டம், மக்கள் தொடர்பு சாதனம் மூலம், பிரச்சாரம் செய்து, இந்நோய் எளிதில் பரவ வாய்ப்புள்ள பிரிவினர்களின் நடத்தையில் மாறுதல் ஏற்படுத்துவதையும், பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

123. உயரளவு பயன்தரக்கூடிய துறைகளில், நம்முடைய அரிதான நிதி ஆதாரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்பது தற்போது தெளிவாகிறது. சமுதாயத்தில் நோயினால் ஏற்படக்கூடிய சுமையைப் பெருமளவு குறைக்கும் திட்டவட்டமான நடவடிக்கைகளில் அரிய நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் அவசியம் பற்றி உலக வங்கி அதன் முந்தைய ஆண்டின் உலக வளர்ச்சி அறிக்கையில், சுட்டிக் காட்டியுள்ளது. கிடைக்கக்கூடியநிதி ஆதாரங்களுக்குள், இறப்பு வீதத்தைப் பெருமளவிற்குக் குறைக்க, தாய்–சேய் நலன், தொழுநோய், மலேரியா, காச நோய் சிகிச்சை மற்றும் 'எய்ட்ஸ்' நோய் தடுப்பு போன்ற துறைகளில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதை நாம் உணர்ந்துள்ளோம். இப்பணிகளில் நாம் உயரளவு கவனஞ் செலுத்த வேண்டும். பெரிய அளவிலான மருத்துவ மனைகளில், புதிய சாதனங்கள் கணிசமான அளவிற்குத் தேவைப்படுகின்றன. அவற்றிற்குக் கட்டிடங்களும் கட்ட வேண்டியுள்ளது. நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, அத்தகைய புதிய வசதிகளுக்குக் கட்டணம் வசூலிக்க வேண்டியுள்ளது. அப்போதுதான் அவை, சுய நிதி ஆதாரத்துடன் செயல்பட இயலும்.

குடிநீர் வழங்கல்

124. மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு இவ்வரசு மிக அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. 1993–94 ஆம் ஆண்டில், குடிநீர் வழங்கல் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 276 . 21 கோடியாக இருந்தது. 1994–95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 387 .72 கோடியாக இருக்கும்.

125. 1992 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததையடுத்துச் சென்னை மக்களை வாட்டிய கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க இவ்வரசு மேற்கொண்ட மிகச் சிறப்பான நடவடிக்கையை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சென்னை மாநகருக்கு தண்ணீர் வழங்குவதை அதிகரிக்கவும் அதனை முறையாகப் பகிர்ந்தளிக்கவும் உறுதி செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததோடு அந்நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஒவ்வொரு வாரமும் நேரடியாகக் கண்காணித்து வந்தார். கடுமையான குடிநீர்ப் பற்றாக் குறையிலிருந்து சென்னை வாழ் மக்களை மீட்பதற்காக செய்த மிகச் சிறந்த பணியை சென்னை மக்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் பாராட்டினர்.

126. சென்னை மீண்டும் இத்தகையதோர் இடர்ப்பாட்டை எதிர்நோக்கக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளார். இம்மாநகருக்கு குடிநீர் வழங்குவதை அதிகரிக்கும் மிகப் பெரிய முதலீட்டிலான திட்டத்தைச் செயற்படுத்த வேண்டிய அவசரத் தேவை குறித்து, அவர் உலக வங்கியின் நிருவாக இயக்குநருக்கும், துணைத் தலைவருக்கும் விளக்கி, இதனை அவர்கள் ஏற்குமாறு செய்துள்ளார். வீராணம் ஏரியிலிருந்து வழங்கப்படும் நீரின் அடிப்படையில் அமையவிருக்கும் சென்னை மாநகரக் குடிநீர் வழங்கல்–துப்புரவு இரண்டாவது திட்டத்தை உலக

மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர். இதுவரும் சந்ததியினருக்கு, நாம் அளிக்கும் ஒரு பெரும் பரிசாகும்.

102. எல்லோருக்கும் எழுத்தறிவிக்கும் இயக்கமான "அறிவொளி இயக்கம்" சென்னை மாநகர் நீங்கலாகத், தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்திற்கு, ரூ.58 . 26 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், மொத்தம் 83 . 08இலட்சம் பேர் பயனடைவர். இந்த இயக்கத்தின் முடிவான கட்டத்தை நாம் நெருங்கிக் கொண்டிருந்தாலும், எழுத்தறிவு இயக்கம் ஒரே நேர முயற்சியில் முடிவடைவதல்ல என்பதை நாம் உணர வேண்டும். உரிய தொடர் எழுத்தறிவு இயக்கத்தின் மூலம் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படவேண்டும். அப்போது தான், அந்தஇயக்கத்தின் பலன்களைத் தக்கவைத்துக் கொள்ள இயலும். புதிதாக எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டவர்களின் ஆர்வத்தில் தொய்வு ஏற்படாமல் தொடரவும் அவர்கள் தங்கள் புதிய திறனைபயன்படுத்திக் கொள்ளவும் இயலும் வகையில் தொடர் எழுத்தறிவு இயக்கம் செயற்படுத்தப் படுவதை உறுதிப்படுத்தியுள்ளோம்.

103. உயர்நிலைப் பள்ளி, மேனிலைப் பள்ளி முறைகளின் நிலை உயர்த்தப்படுவதை உறுதி செய்யவும் நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். வருமாண்டில், 25 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 12 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும். கடந்த ஆண்டு நாங்கள் தொடங்கிய பள்ளி மேம்பாட்டுத் திட்டம், இதற்கு முன்னர் எப்போதும் இருந்திராத அளவிற்குப் பொது மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளது என்பதை அறிந்து இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். ரூ.76 கோடி அளவிற்குப் பொருளாக உதவி கிடைத்துள்ளது. இதேபோன்று, புதிதாகக் கொண்டுவரப்பட்ட பள்ளிப் புரவலர் திட்டத்தின் கீழ், ரூ.4.10 கோடி அளவிற்கு உதவித் தொகை பெறப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து கிடைத்துவரும் பேராதரவு, இடைநிலைப் பள்ளி முறையின் தரத்தை உயர்த்துவதற்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

104. பொதுமக்களிடமிருந்து பெறும் உதவித் தொகையை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்த நாம் முடிவு செய்துள்ளோம். உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களையும் மேனிலைப் பள்ளிக் கட்டிடங்களையும் கூடுதலாகக் கட்டுவதற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், உள்ளூர் உதவித் தொகைகள்மூலம்கிடைக்கும் தொகையையும் இந்நோக்கத்திற்கு பயன்படுத்தப்படும். பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டுவதன் மூலமும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற ஏனைய திட்டங்களிலிருந்து பங்குத் தொகைபெறுவதன் மூலமும் 1994 ஆம் ஆண்டில் ரூ.4 கோடி செலவில் கூடுதலாகக் கட்டிடம் கட்டும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த இயலுமென்று எதிர்பார்க்கிறோம். இடைநிலைப் பள்ளி முறைக்கு உள்ள அடிப்படை வசதிகள் இதனால் கணிசமான அளவிற்குப் பெருகும். பள்ளிகளில் கணினி அறிவியல் மற்றும் படிப்புத்(CLASS) திட்டத்தின்கீழ், நாம் இதுவரை 14 பள்ளிகளைக் கொண்டு வந்துள்ளோம். 1994 ஆம் ஆண்டில், மேலும் 50 பள்ளிகள் இத்திட்டத்தின் கீழ்கொண்டுவரப்படும்.

105. நடப்பாண்டில் தொடங்கப்பட்டுள்ள படித்த தன்னார்வத் தொண்டர் பணித்திட்டம் குறித்து, இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டத்திற்குப் பேராதரவு உள்ளது என்பதையும், இத்திட்டத்தில் பணியாற்ற 1.5 இலட்சம் இளைஞர்கள் திரட்டப்பட்டுள்ளனர் என்பதையும் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல் குடியின் தீமைகளைப்பற்றிப் பிரச்சாரம் செய்தல், பள்ளிசாராக் கல்வியினை அடிமைக்குதல் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்ட மிகப்பெரிய சமூகச் சீர்திருத்த முயற்சியாகும். இத்திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.13 . 80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

106. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இம்மாநிலத்தில், விளையாட்டுகளின் மேம்பாட்டிற்கு அதிக முன்னுரிமை அளித்துள்ளார்கள். மிகக்குறுகிய கால அளவில், அதாவது, ஏழரை மாத கால அளவில் கட்டிமுடிக்கப்பட்ட ஒளிர்கிற ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில், பன்னாட்டு அழைப்பு தடகளப்போட்டிகளும், 33 ஆம் தேசிய தடகளப் போட்டி விளையாட்டுக்களும் நடைபெற்றன. இம்மாநிலத்திலுள்ள விளையாட்டு ஆர்வலர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த ஆர்வமிக்க இப்புதிய முயற்சிகள் குறித்து மகிழ்ச்சியடைகின்றனர். 1995 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள அடுத்த தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெறும். இப்போட்டிகளை மிகச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஏற்ற வகையில் ரூ.20 கோடி செலவில் போட்டி விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளிலுள்ள இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க, சீன நாட்டவர் மேற்கொள்ளும் முறையைப் பின்பற்றி, வரும் ஆண்டில் மேன்மை மிக்க திட்டமொன்றைத் தொடங்கவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்தின்கீழ், மொத்தம் ரூ.4 கோடி செலவில் 388 ஊரக விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப்படும். ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் போட்டி விளையாட்டு மையம் ஒன்று இருக்கும். இவ் விளையாட்டு மையத்தில், பொருத்தமான விளையாட்டுச் சாதன அறையும் 400 மீட்டர் தடகளப் பாதையும் இருக்கும். மேலும், உரியவாறு பயிற்சியளிப்பதற்காகப்

பயிற்சியாளர் ஒருவரும் அம்மையத்தில் இருப்பார். தடகளப் போட்டி விளையாட்டுகளில் பங்கேற்க ஊரக இளைஞர்கள் ஊக்குவிக்கப்படுவர். இது, ஊரகப் பகுதிகளில், விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காகத் துணிவுடன் எடுக்கப்பட்ட ஒரு புதிய முயற்சியாகும். தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான புதிய விளையாட்டு விடுதியொன்றும் வருமாண்டில் தொடங்கப்படும். விளையாட்டு வீரர்கள் தம் திறமையை வளர்த்துக் கொள்ள உயர்வகை வசதிகளுடன் கூடிய இவ்விடுதி உதவும். 1994–95 ஆம் ஆண்டில், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில், மாவட்ட அளவிலான விளையாட்டரங்கங்கள் அமைக்கப்படும்.

107. உயர் கல்விக்கான மாநிலக் குழு ,1993 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு, இக்குழு திட்டங்களைத் தீட்டும். பல்கலைக் கழகங்கள் தங்கள் வசதிகளை, நிலை உயர்த்திக் கொள்ளவும் இது ஆதரவு அளிக்கும். 1994–95 ஆம் ஆண்டில், இராமநாதபுரத்தில் புதிதாக மகளிர் கல்லூரி ஒன்று தொடங்கப்படும். இதற்கென, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.35 . 57இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் தொழில்நுட்ப வல்லுநர் கல்வித் திட்டம் மொத்தம் ரூ.76 கோடி செலவில் செயற்படுத்தப்பட்டுவருகிறது. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதியொதுக்கீடு ரூ.9 கோடியாகும். இது, 55 பல்தொழில் நுட்பப் பயிலகங்களை மேம்படுத்த வகை செய்யும்.

108. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநிலத் திட்டக்குழுக் கூட்டம் ஒன்றில், தரமணிப் பகுதியில் தற்போதுள்ள பல அறிவியல் நிறுவனங்களை ஒன்றாகச் சேர்த்து சென்னையில் அறிவியல் நகரம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. பல்வேறு துறைகளுக்கிடையேயும் பல்வேறு நிறுவனங்களுக்கிடையேயும் தொடர்புகளை ஏற்படுத்துதல், அறிவியல் பரிமாற்றங்களுக்கு ஊக்கமளித்தல், உலக அமைப்புகளோடு அறிவியல் தொடர்புகள் ஏற்படுத்துதல், பெரிய அளவில் அறிவியல் கருத்தரங்குகள் நடத்துவதற்கான வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதே இந்த அறிவியல் நகரம் உருவாக்குவதன் முக்கிய நோக்கமாகும். அறிவியல் நகரம் அமைப்பதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சி–பண்பாடு

109. எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சாவூரில் 1995 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளன்று தொடங்கி மிகப் பெரிய அளவில் நடத்தப்படவிருக்கிறது என்பதை அறிவதில் இம்மான்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடைவர். இம் மாநாடு, 5 நாட்களுக்கு நடத்தப்படும். உலகமெங்கிலும் இருந்து தமிழ் அறிஞர்களும் வல்லுநர்களும் வந்து இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்கவிருக்கிறார்கள். தமிழ் மொழியின் கீர்த்தி மிகு பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் வகையில், மிகப் பிரம்மாண்டமான முறையில் இம் மாநாட்டை நடத்துவதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இம்மாநாட்டை நடத்துவதற்கு, வரவு–செலவுத் திட்டத்தில், தொடக்க நிதியொதுக்கீடாக ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

110. நம்முடைய பாரம்பரியத்தைக் கட்டி காக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, ரூ.61 . 90 இலட்சம் செலவில், தஞ்சாவூர் அரண்மனையைப் பழுது பார்த்துச் சீரமைக்கும் பணி, மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில், ரூ.79 . 80 இலட்சம் செலவில், மதுரை, திருமலை நாயக்கர் மகாலைச் சீரமைக்கும் பணியும் தொடங்கப்படும். இவ்விரு சிறப்புமிக்க நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காகக் குறிப்பிடத் தக்க அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பெரிதும் பாராட்டுவார்கள்.

111. சென்னை அரும்பொருள் காட்சியகத்தில், விலை மதிக்க முடியாத அமராவதி கால அரும் கலைப்பொருட்களைத் தொகுத்து, புதிய பொத்த கலைக்கூடம் ஏற்படுத்துவது பற்றி விரிவான ஆய்வு ஒன்றை நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம். இந்த விரிவான ஆய்வின் அடிப்படையில், இப் புதிய கலைக்கூடத்தை நிறுவுவதற்கான பணி மேற்கொள்ளப்படும்.

112. நாடகக் குழுவினருக்கு ஊக்கமளிக்கும் ஓர் ஏற்பாடாக நாடகக் குழுவினர் நாடகங்களை நடத்துவதற்காகப் பேருந்துப் பயணம் மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு 50 சதவீத பேருந்துக் கட்டணச் சலுகை அளித்துள்ளோம்.

113. நமது குழந்தைகள் அனைவரும், தமிழ் மொழியை ஆர்வமுடன் கற்கச் செய்யும் ஓர் முயற்சியாக, பாலர் பள்ளிகள் அனைத்திலும், நாங்கள், தமிழ்மொழி கற்பதைக் கட்டாயமாக்கியுள்ளோம்.

114. தமிழர்களின் கடல்கடந்த வாணிப வரலாற்றை ஆதாரபூர்வமாக மெய்ப்பிப்பதற்கான முன்னோடித் திட்டம் ஒன்று, கடலாய்வு தேசிய நிறுவனத்துடன்

வங்கி, 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மதிப்பீடு செய்யவுள்ளது. சென்னை மாநகருக்கு, நாளொன்றுக்கு 40 மில்லியன் கேலன் நீர் கொண்டுவரும் ரூ.720 கோடி செலவிலான திட்டத்தை, விரைவில் நாங்கள் தொடங்கவுள்ளோம். வரவு–செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக, 1994–95 ஆம் ஆண்டில் ரூ.110 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நீர் வழங்குவதை விரைவு படுத்துவதற்கான நடவடிக்கையையும் நாங்கள் எடுத்து வருகிறோம். வரவு–செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக 1994–95 ஆம் ஆண்டில் ஒதுக்கப்படும் ரூ.100 கோடியில், ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெறும் பணிக்காக ஆந்திரப் பிரதேச அரசுக்கு ரூ.70 கோடியும், தமிழ்நாட்டில் நடைபெறும் பணிக்காக ரூ.30 கோடியும் அடங்கும். சென்னை குடிநீர் வழங்கல்–துப்புரவு மூன்றாம் திட்டத்தை, உலக வங்கி 1994 ஏப்ரலில் மதிப்பிட உள்ளது. ரூ.751 கோடி செலவு பிடிக்கக்கூடிய இத்திட்டம், சென்னை மாநகரில், கிருஷ்ணா நீரைத் தூய்மைப்படுத்தி வழங்குவதையும், இதனுடன் இணைந்த கழிவு நீரகற்றல் பணியைச் செயற்படுத்துவதையும் உறுதி செய்யும். சென்னை மாநகரின் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவர் என்று நம்பிக்கை தெரிவிக்கிறேன்.

127. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ.322 கோடி செலவில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், 1994 டிசம்பர் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 44 நகரங்களுக்கு குடிநீர் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 14 நகரங்களுக்குக் குறைந்த செலவிலான துப்புரவு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.35 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்ட குடிநீர் வழங்கலைப் பெருக்குவதற்கான திட்டங்களை நிறைவு செய்வதில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டுள்ளதை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இவ்வரசு மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளினால் இத்திட்டங்கள், தற்போது நிறைவுறும் நிலையில் உள்ளன என்பதை இம் மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கோயம்புத்தூருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம், 1994 டிசம்பருக்குள் முடிக்கப்பட்டுவிடும். கோயம்புத்தூர் மாநகராட்சி, மற்றும் 20 நகரங்கள், 523 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு நாளொன்றுக்குக் கூடுதலாக 131.25 மில்லியன் லிட்டர் நீர் வழங்கப்படும். இதன் மூலம் 22.35 இலட்சம் மக்கள் பயனடைவர். மதுரை நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நாளொன்றுக்குக் கூடுதலாக 71 . 6 மில்லியன் லிட்டர் நீர் வழங்க வகை செய்யும். இதன் மூலம் 12 . 8 இலட்சம் மக்கள் பயனடைவர். சேலத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம், முடிவுறும் நிலையிலுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சேலம் நகராட்சி, மற்றும் 11 நகரங்கள், 264 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு நாளொன்றுக்குக் கூடுதலாக 88 மில்லியன் நீர் வழங்கப்படும். இதனால் 12.93 இலட்சம் மக்கள் பயனடைவர். காஞ்சிபுரம், சங்கரன் கோயில் ஆகியவற்றுக்கான குடிநீர் வழங்கல் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை, திருவண்ணாமலை, மணப்பாறை, பொள்ளாச்சி ஆகிய நகராட்சிகளில் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்கள், 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிடும்.

128. இம்மாநிலத்திலுள்ள 101 நகராட்சிகளில், 99 நகராட்சிகளுக்கு அடிப்படை குடிநீர் வழங்கல் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. பத்மனாபபுரம் நகராட்சியைப் பொறுத்தமட்டில், பணிகள் 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். திருத்துறைப்பூண்டி நகராட்சியைப் பொறுத்தமட்டில், திருத்தத் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. 23 நகர்ப்பகுதி பேரூராட்சிகளிலும் 64 கிராமப்பகுதி பேரூராட்சிகளிலும் நடைபெற்றுவரும் திட்டங்கள் 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

129. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்பட்ட ஊரகக் குடியிருப்புகளின் சரியான எண்ணிக்கை தொடர்பாக வேறுபடும் கருத்துக்களும், புள்ளிவிவரங்களும் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சரியான நிலையை உறுதி செய்வதற்காக 1–4–92 ஆம் நாள் நிலவரப்படி ஊரகக் குடிநீர் வழங்கல் நிலை குறித்து விரிவாகப் புதிய ஆய்வு ஒன்றை நாங்கள் மேற்கொண்டோம். இந்த ஆய்வின்படி, 1–1–1994 ஆம் நாளன்று உள்ளவாறு 1239 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்படவில்லை. 1994–95 ஆம் ஆண்டில் இந்த 1239 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதியளிக்க நாங்கள் கருதியுள்ளோம். இதனால், பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரமின்றி இம்மாநிலத்தில் ஒரு குடியிருப்புகூட இருக்காது. இதனுடன், ஓரளவு குடிநீர் வசதி செய்யப்பட்ட 1761 குடியிருப்புகளுக்கும் முழுமையான குடிநீர் வசதிகள் 1994–95 ஆம் ஆண்டில் அளிக்கப்படும்.

130. விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் குறைந்தது ரூ.75 கோடியாவது ஒதுக்குமாறு, 1993–94 ஆம் ஆண்டில் நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தினோம். எனினும், உண்மையில் ரூ.32 . 68 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு, 1994–95 ஆம் ஆண்டு ஒதுக்கீடு சுமார் ரூ.39 கோடி மட்டுமே இருக்கும் என்பது தெரியவருகிறது. 1993–94 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி ஓரளவு அளிக்கப்பட்டுள்ள பெரும்பான்மையான குடியிருப்புகளுக்கு முழுமையான அளவில் குடிநீர் வசதி செய்து கொடுக்க இயலும் வகையில், இந்த ஒதுக்கீட்டை கணிசமான அளவுக்கு உயர்த்திக் குறைந்தது ரூ.50 கோடியாவது ஒதுக்குமாறு நாங்கள் மீண்டும் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளோம்.

131. கோயம்புத்தூர் நகரத்தில் ஒரு பெரிய கழிவுநீர்த் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1995 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். உதகமண்டலம் நகரத்தில் கழிவு நீரகற்றும் திட்டம் ரூ.7 . 61 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பணிகள் விரைவு படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் 1995 செப்டம்பரில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுத் துறை நிறுவனங்களின் நிதியைப் பயன்படுத்தி, கூடுதல் நகரங்களுக்கு இவ் வசதிகளைச் செய்து கொடுக்க இயலுமா என்பது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

132. இராமநாதபுரம் மாவட்டத்தில் நீர் வழங்கலை மேம்படுத்துவதற்காக இவ்வரசு எடுத்த முயற்சிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தொழில்நுட்ப, நிதி வசதி வாய்ப்புகளை விரிவாகப் பரிசீலித்த பிறகு, ரூ.10.75 கோடி செலவில் நரிப்பையூரில் நாளொன்றுக்கு ஒரு மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையம் ஒன்றை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இது, மத்திய அரசின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும்.

மகளிர் மேம்பாடு, குழந்தைநலன், சத்துணவு

133. 1994 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9 ஆம் நாளன்று நடைபெற்ற மகளிர் மாநாட்டை தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மகளிர் குறித்த இவ்வரசின் கொள்கையை அறிவித்துள்ளார். இது, அரசின் கொள்கை நோக்கங்களை விளக்கும் விரிவான ஆவணமாகும். நீதிபதி செங்கோட்டு வேலன் அவர்களின் தலைமையில், மாநில மகளிர் ஆணைக்குழு ஒன்றையும் நாங்கள் அமைத்துள்ளோம்.

134. பயிற்சி மேம்பாடு, நல்ல வேலைவாய்ப்புகள் ஆகிய வழிகளின் மூலமாக, மகளிர் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள உதவி செய்யப்படுமென இவ்வரசின் மகளிர் கொள்கை பற்றிய விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிரிடையே சுய வேலைவாய்ப்பு வசதிகளை மேம்படுத்தவும் நாங்கள் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளோம். மகளிர் குழுக்கள் மூலமாக சுய வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கு ஆதரவு அளிப்பதே நம்முடைய செயல்திட்ட உத்தியாகும். வேளாண்மை வளர்ச்சி–அனைத்து நாடுகள் நிதி ஆதரவுடன் தருமபுரி, சேலம், தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டுள்ள மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களில் இந்த உத்தி நன்கு செயல்பட்டுள்ளது. இத்திட்டம், அண்மையில் மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளை, மகளிர் குழந்தைநல மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில், இத்தோடு தொடர்புடைய திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டமும் அதே குழு அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோன்ற மற்றொரு திட்டத்திற்கு நிதியுதவி வேண்டி ஐரோப்பிய பொருளாதாரக் குழுவை அணுகியுள்ளோம். மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதற்காகப் பல்வேறு முகவரமைப்புகளிடமிருந்து உதவி கிடைக்கும் என நம்புகிறோம். இம்முயற்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, 1994–95 ஆம் ஆண்டில், சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் மூலமாக ஒரு இலட்சம் மகளிர் தங்கள் வருமானங்களைப் பெருக்கிக் கொள்ள உதவி பெறுவது உறுதிப்படுத்தப்படும்.

135. கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில், ரூ. 6 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

136. 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா குழந்தைகள் நலனுக்கான 15 அம்சத்திட்டம், உலகளாவிய பாராட்டுதல்களைப் பெற்றிருப்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத்தகைய திட்டவட்டமான, பயனுள்ள செயல் திட்டத்தைக் கொண்டுவந்த தமிழ்நாடுதான் முதல் இந்திய மாநிலம் என்ற வகையில் இவ்வரசுக்கு யுனிசெஃப் தனது உளமார்ந்த பாராட்டைத் தெரிவித்துள்ளது. இச்செயல் திட்டத்திற்கு வலிவும் பொலிவும் ஊட்டி நாம் 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒரு துணைத்திட்டமாகச் சேர்த்துள்ளோம் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 1994–95 ஆம் ஆண்டில், குழந்தை நலத் துணைத்திட்டமொன்று ரூ.697. 65 கோடி நிதியொதுக்கீட்டுடன் செயற்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இத் துணைத் திட்டத்தின் கூறுகள் வருமாறு:

	நிதியொதுக்கீடு (ரூபாய் கோடியில்)
பாதுகாப்பான மகப்பேற்றிற்கும் பிறந்த குழந்தையின் எடையை 3 கிலோவாக அதிகரிப்பதற்கும் வகை செய்தல்	65 . 86

இத்திட்டத்தின் கீழ், கிராமப் பகுதியில் ஏழ்மை நிலையிலுள்ள ஆதி திராவிடர் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டாம் வகுப்பின் முடிவில் படிப்பை இடையில் நிறுத்திவிடும் நிலையில் உள்ள பெண் குழந்தைக்கு, மூன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் தேர்ச்சி பெறும்போது ரூ.500 சிறப்பு ஊக்க உதவி அளிக்கப்படும். இத்திட்டம் கட்டாயக் கல்வி குறித்து இயற்றப்படவிருக்கும் புதிய சட்டத்துடன் சேர்ந்து ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த ஆதி திராவிடப் பெண் குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் தொடர்ந்து படிக்க பெருமளவில் வகைசெய்யும். இத்திட்டத்திற்கு 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1.5 கோடி செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பெண் குழந்தைகள் குடும்பத்திற்கு வருமானம் ஈட்டித் தருவதால், 5 ஆம் வகுப்பிற்குப்பின்னர் தொடர்ந்து படிக்க அவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. அதனால், வரும் கல்வி ஆண்டில் ஆறாம் வகுப்புக்குச் செல்லக்கூடிய, ஆனால் உதவி எதுவும் கிடைக்காவிடில் ஐந்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தி விடக் கூடிய நிலையிலுள்ள ஊரக ஆதி திராவிட ஏழைப் பெண் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.100 வழங்கும் புதிய திட்டம் ஒன்றை மாநிலம் முழுவதும் தொடங்க உள்ளோம். இத்திட்டம், இக்குழந்தைகளின் வருமானம் ஈட்டும் திறனுக்கு ஒரு மாற்றாகவும் அக்குழந்தைகள் பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்காக அவர்கள் குடும்பத்திற்கு அளிக்கப்படும் ஓர் ஊக்கத் தொகையாகவும் அமையும். ரூ.3 கோடி செலவாகக் கூடிய இத்திட்டத்தின் மூலம், மாநிலம் முழுவதிலுமுள்ள 30,000 ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் பயனடைவர். ஆதி திராவிடர் பெண் குழந்தைகளுக்குக் கல்வியளிக்கும் பிரச்சினையை நேரடியாகச் சமாளிப்பதற்காகத், துணிவுடன் எடுக்கப்பட்ட இப்புதிய நடவடிக்கையை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர்.

146. நிலமற்ற ஆதி திராவிடர்கள், விவசாயம் செய்து தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு, நிலம் வழங்குவதற்காக 1994–95 ஆம் ஆண்டில் புதிய திட்டம் ஒன்றை நாங்கள் தொடங்கவிருக்கிறோம். நிலத்தை மேம்படுத்தி, பயிரிடும் பணியில் சிறந்த தொடர் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்வதற்காக தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இப்புதிய திட்டத்திற்கு ரூ.1 கோடி செலவு ஆகும். இத்திட்டம் 1,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பயன் அளிக்கும்.

பிற்படுத்தப்பட்டோர் நலன்

147. பிற்படுத்தப்பட்டோர் நலனில் கொண்டுள்ள தீவிர அக்கறைதான், கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகத் தற்போது அளிக்கப்பட்டு வருகின்ற இட ஒதுக்கீட்டைப் பாதுகாப்பதற்காக, இவ்வரசு, இம் மாமன்றத்தில் புதியதொரு சட்டம் கொண்டுவர வழிகோலியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இச் சட்டம் குடியரசுத் தலைவரின் இசைவை எதிர் நோக்கியுள்ளது.

148. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கல்வி வாய்ப்புகளை மேம்படுத்த நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக மொத்தம் 804 மாணவரில்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில் 16 புதிய மாணவரில்லங்கள் தொடங்கப்படவுள்ளன. ரூ.3.41 கோடி செலவில், 30 மாணவரில்லக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1.72 கோடி செலவில், மேலும் 12 மாணவரில்லங்கள் கட்டப்படும்.

149. வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி சிறப்பு நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ்ப் பயன் பெறுபவர்க்கான வருமானத் தகுதியளவு, ஆண்டொன்றுக்கு ரூ.6,400/-இலிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

150. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு புதிய ஊக்கம் அளிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டுக்கான திட்டத்திற்கு, இந்நிதிஉதவி ரூ.13 கோடியாக உயர்த்தப்படும். 10,000 பேருக்கு உதவியளிக்கப்படும்.

நெசவாளர் நலன்

151. பருத்தி விலையும் அதன் விளைவாக நூலின் விலையும் வெகுவாக அதிகரித்துள்ளதால் நெசவாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு, இவ்வரசு மத்திய அரசிடம் இது குறித்து எடுத்துரைத்துள்ளது. நம்முடைய தரப்பில், சிட்டம், உருளை நூலைச் சலுகை விலையில் விற்பனை செய்வதற்காக, நான்கு நூல் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஆலைத் துறையைத் தென்னிந்திய நூற்பாலைச் சங்கத்தின் (SIMA) மூலம் அணுகி கைத்தறி நெசவாளர்களுக்குச் சலுகை வீதங்களில் நூல் வழங்க ஆவன செய்திருக்கிறோம். விலையை நிலைப்படுத்துவதற்காகத் தீர்வையில்லா அடிப்படையில் 50,000 டன் விஸ்கோஸ் இழைப் பருத்தியை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு நாங்கள் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளோம். பிரச்சினைகளைத் தீர்த்து, நெசவாளர்களைப் பாதுகாக்க அவசர நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

152. கிராமப் பகுதி வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்பகுதி ஏழை எளிய மக்களுக்கும் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காரணகர்த்தாவாக இருந்துள்ளார். வேட்டி, சேலை வழங்குவதற்காக 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.46 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்திற்குள்ளிருந்து வேட்டி, சேலைகளைப் பெற்று, வழங்குவதற்கு கோ–ஆப் டெக்ஸ் மூலம் செய்யக் கருதியுள்ளதால், இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பணி அளிக்க இத்திட்டம் வகைசெய்யும். இது, ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய அம்சமாகவும் விளங்கும்.

153. நெசவாளர்களின் நலனை மேம்படுத்த, நாம் முக்கிய நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இவ்வரசு அறிமுகப்படுத்தியுள்ள கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை அனைவரும் வரவேற்றுள்ளனர். இத்திட்டத்தில், 22,790 நெசவாளர்கள் சேர்ந்துள்ளனர். மேலும் அதிக நெசவாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப் படுவர். நெசவாளர்கள் வீடுகள்–பணியிடத் திட்டம் 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்தகைய வீடுகள் 1,000 கட்டப்படும். நெசவாளர்களின் குடியிருப்புப் பகுதியை மேம்படுத்துவதற்கு, மற்றுமொரு திட்டமும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதிகளில், ரூ.22.40 இலட்சம் செலவில் 64 துளைக் கிணறுகள் இறக்கப்பட்டுள்ளன.

154. இம் மாநிலத்தில் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்குப் புத்துயிர் அளிக்க, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்

155. புதிய பொருளாதாரக் கொள்கைகள், தொழிற் கட்டமைப்பிற்கும், சீரமைப்பிற்கும் வழிவகுத்திருக்கிறது என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும். எந்த சூழ்நிலையிலும் தொழிலாளர்களின் நலம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளோம். அரசுத் துறை நிறுவனங்களிலுள்ள 3,497 தொழிலாளர்களின் நலனுக்காக ரூ.28.97 கோடி செலவிலான செயற்குறிப்புகளை நாங்கள் அனுப்பியுள்ளோம். விருப்ப ஓய்வு திட்டங்களின்கீழ் ஆகும் செலவை ஈடுசெய்ய, தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து உதவி பெறவும் செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இச் செயற்குறிப்புகளுக்கு விரைவில் அனுமதி வழங்கும்படி நாங்கள்வலியுறுத்துவோம். மூடப்பட்ட 12 தொழிற்சாலைகளில் பணியாற்றும் 8,163 தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.32.65 இலட்சம் அளவிற்கு தீபாவளியின்போது வழங்கப்பட்டுள்ளது.

156. 1993 ஆம் ஆண்டில், தொழில் உறவுநிலை இணக்கமாகவே இருந்தது. வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகளின் காரணமாக மனித உழைப்பு நாட்களின் இழப்பு சென்ற ஆண்டைவிட 15.56 சதவீதம் குறைந்துள்ளது.

157. அமைப்பு ரீதியிலல்லாத தொழிலாளர்களின் நலனுக்கான, சுகாதாரத் திட்டம் ஒன்றைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்திட்டம், தொடக்கச் சுகாதார மையங்கள் மற்றும் வட்ட மருத்துவமனைகள் மூலம் செயல்படுத்தப்படும். அவசியமான மருந்துப் பொருட்களையும், மருந்துகளையும் வழங்கும் இச்செயல் நோக்கத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, அமைப்பு ரீதியிலல்லாத தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு வகைசெய்ய, எடுக்கப்பட்ட ஒட்டுமொத்த முயற்சியின் ஒரு பகுதியே ஆகும். குடும்பக்காப்புப் பொருளீட்டுபவரை இழந்த 50,000 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு ரூ.5000 வீதம் வழங்க இடர் நிவாரணத் திட்டத்தின் கீழ், வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அமைப்பு ரீதியிலல்லாத தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத்தொகை வழங்க, கைவிடப்பட்ட வேளாண்மைத் தொழிலாளர் திட்டத்தை விரிவு படுத்தக் கருதியுள்ளோம். அமைப்பு ரீதியிலல்லாத ஊரகத் தொழிலாளர்களுக்கு நாம் அளித்துவரும் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவர்.

158. பல்வேறு வகைத் தொழில்களுக்குக் குறைந்தளவு ஊதியம் நிர்ணயிக்கும் திட்டத்தின்கீழ்க் குறைந்தளவு ஊதியம் நிர்ணயிக்கும் நடவடிக்கை தொடரப்படும். இதுவரை 67 விதமான பணிகள் குறைந்தளவு ஊதியச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எந்த ஒரு தொழிலிலும் நாள் ஒன்றுக்கு ரூ. 20 க்குக் குறையாது இருக்கும்படி, குறைந்த அளவு ஊதியத்தை அரசு நிர்ணயித்துள்ளது. தேங்காய் உரித்தல், பாலிதின் செய்முறை நுரை மெத்தை (foam) மற்றும் பிளாஸ்டிக் பொருள் தயாரிப்பு, தச்சுத்தொழில், கருமார் தொழில், உணவுப்பொருள் பக்குவப்படுத்தல் துறை ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு முதன் முதலாக, 1993 ஆம் ஆண்டில் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. பீடி சுற்றுதல், முந்திரித் தொழில், கட்டிடம் கட்டுதல், சாலைகள் பராமரிப்பு, செயற்கைக் கல் பட்டை தீட்டும் தொழில், மரவேலைத் தொழில் ஆகியவற்றிற்கு 1993 ஆம் ஆண்டில், குறைந்த அளவு ஊதியத்தை நாங்கள் திருத்தியுள்ளோம். வேளாண்மைத் தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதியம், 1993 இல் திருத்தப்பட்டது. கடல் உணவுத் தொழில்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

159. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறையை நீக்குவதில் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளோம். குழந்தைத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின்கீழ் 1993 ஆம்

தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய நோய்களை முற்றிலுமாக ஒழித்தல்	4 . 57
சிசு மரண வீதத்தை 1000 க்கு 30 என்ற அளவுக்குக் கீழாகக் குறைத்தல்	6 . 00
குழந்தைகளிடையே காணப்படுகிற கடுமையாகவும், ஓரளவு சத்துக் குறைவைக் குறைத்தல்	305 . 21
நுண் ஊட்டச் சத்துக் குறைபாடுகளை முற்றிலுமாக ஒழித்தல்	8 . 08
அனைத்து மருத்துவ மனைகளையும் மகப்பேறு மையங்களையும் மழலை சீராட்டும் மையங்களாக்குதல்	2 . 70
மகளிர், இளம் வயதிலும் அடிக்கடியும் தாய்மையடைவதைத் தடுத்தல்	80 . 03
கட்டாயத் தொடக்கக் கல்வியை பரவலாக்குதல்	81 . 32
மகளிரின் எழுத்தறிவையும் நிலையையும் உயர்த்துதல்	42 . 71
குழந்தை நல மையங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குதலும் சிறந்த சுகாதார வசதிகள் செய்து கொடுத்தலும்	91 . 70
குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக நீக்குதல்.	0 . 13
பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைச் செயற் படுத்தல்	4 . 00
பெண் சிசுக் கொலை என்ற சமூகக் கொடுமையை ஒழித்தல்	0 . 22
குழந்தைப் பருவத்தில் ஏலாமையுறுவதைத் தடுத்தலும் மறுவாழ்வளிக்கும் பொருட்டு தொடக்க நிலையில் கண்டறிதலும்	4 . 87
பிறவி இதய நோய்களைத் தொடக்க நிலையில் கண்டறிதல்	0 . 25
மொத்தம் - குழந்தை நலத்துறைத் திட்டம்	6[illegible]7 . 65

137. குழந்தை உய்விற்கு மட்டுமின்றி ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் வளரவேண்டுமென்பதே தமிழ் நாட்டின் உன்னத முயற்சி என்பதை உறுதி செய்வதற்காக, இவ்வரசு மேற்கொண்டுள்ள மாபெரும் முயற்சியை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர்.

138. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை நலத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. **இத்திட்டத்திற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட இத்திட்டத்தின்கீழ், அளிக்கப்படும் பலன்களாவன:-**

*பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளன்று	ரூ.800 மதிப்புள்ள 2 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று
* பள்ளியில் சேர்ந்தவுடன்	ரூ.250/-
* ஆறாம் வகுப்பில் சேர்ந்தவுடன்	ரூ.500/-
* 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை ஒவ்வோராண்டும் 10 திங்களுக்கு, திங்களொன்றுக்கு ரூ. 50 என்ற வீதத்தில் 4 ஆண்டு களுக்குத் தொகை வழங்கல்	ரூ.2,000/- (4 ஆண்டுகளில் வழங்கத் தக்கது)
* 20 வயது நிறைவடைந்தவுடன்	ரூ.20,000/-

139. இப்புதிய மேம்படுத்தப் பட்ட திட்டம், பெண் குழந்தைக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதே நேரத்தில் குடும்ப நல நடவடிக்கைகளையும் மேம்படுத்தும்.

140. புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர் மதிய சத்துணவுத் திட்டத்திற்கும், அத்துடன் இணைந்து உலக வங்கி நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்திற்கும் 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 312 . 42 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்க, இவ்வாண்டு ரூ.345 . 36 கோடியாக நிதியொதுக்கீடு உயர்த்தப்பட்டுள்ளது. நமது சத்துணவுத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதையேஇது காட்டுகிறது. 1994-95 ஆம் ஆண்டில், 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான விரிவான சத்துணவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும். நம் நாட்டில், 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான விரிவான சத்துணவுத் திட்டம் செயற்படுகின்ற ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். சோயா மாவும், மக்காச் சோள ரவையும் சேர்ப்பதின் மூலம் சத்துணவு மேம்படுத்தப் பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள குழந்தைகளுக்கு உரிய சத்துணவு வழங்கப்படுவதை உறுதி செய்ய எடுக்கப்படுகின்ற அநேக நடவடிக்கைகளை இம் மாமன்றத்தின் உறுப்பினர்கள் உளமாரப் பாராட்டுவர்.

ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலன்

141. ஆதி திராவிடர்களின் சமூகப்-பொருளாதார மேம்பாட்டிற்கான 10 அம்சத் திட்டத்தை இவ்வரசு தொடங்கியுள்ளது. நடப்பாண்டில், இந்த 10 அம்சத் திட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ், நாம் கணிசமான அளவு முன்னேற்றம் எய்தியுள்ளோம் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாம், இத்திட்டத்தை 1994-95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்துவோம். இத்திட்டத்தின் சிறப்புப் பிரிவுகளும் 1994-95 ஆம் ஆண்டிற்கான இலக்குகளும் கீழே விவரிக்கப்பட்டுள்ளனன:-

இனம்	1994-95 ஆம் ஆண்டுத் திட்டம்
பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள்	65,000 குடும்பங்கள்
பாசனக் கிணறுகள் தோண்டும் திட்டம்	1,000 கிணறுகள்
தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்	1,500
தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்று தகுதி பெற்ற வேலைவாய்ப்பற்ற தொழில் நுட்பாளர்களை வேலையில் அமர்த்தல்	500
இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கல்	75,000
ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள்	25,000
குடிநீர் வழங்குதல்	1,500 குடியிருப்புகள்
இணைப்புச் சாலைகள் அமைத்தல்	200 குடியிருப்புகள்
குடியிருப்புகளுக்குத் தெருவிளக்குகள்	ஏற்கனவே அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்பு களிலும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டன.
வீட்டிற்கு ஒரு விளக்கு அமைத்தல்	35,000

142. 10 அம்சத் திட்டத்தின் முனைப்பான செயற்பாடு, ஆதி திராவிடர்- பழங்குடியினரை அனைத்து வகையிலும் மேம்படுத்துவதை உறுதி செய்யும்.

143. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில், **ஆதி திராவிடர் தொழில் முனைவோர்களுக்கு ஊக்கமளிக்க புதிய முதலீட்டுத் திட்டம் ஒன்றை நான் அறிவித்ததை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். தற்சார்புள்ள ஆதி திராவிடத் தொழில் முனைவோர்களை உருவாக்கும் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொன்றிலும் 100 தொழிற் பிரிவுகளுடன் கூடிய இரு தொழிற்பேட்டைகள் கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.** இவ்விரு தொழிற்பேட்டைகளுக்கும் தேவைப்படுகிற நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. நில மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.80 கோடியாகும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இத்திட்டத்திற்கு நிதியுதவி செய்கிறது.** பட்டுப் புழு மேம்பாட்டிற்கான திட்டத்தின் கீழ் மொத்தம் 1097 ஆதி திராவிடர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 1994-95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தி முடிவாக 10000 பேருக்கு நிதியுதவி அளிக்கவும் உத்தேசித்துள்ளோம்.

144. ஆதி திராவிடர் பயனுறுவதற்கான கல்வித் திட்டங்களுக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளித்துள்ளது அனைவரும் நன்கு அறிந்ததே. சிறப்புப் பயிற்சி முகாம்களும், சிறப்புக் கையேடுகள் திட்டமும், மாணவர்களின் செயல் திறனில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. **பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆதி திராவிட மாணவர்களின் சதவீதம் 1991-92 ஆம் ஆண்டில் 57 ஆக இருந்தது, 1992-93 ஆம் ஆண்டில் 70 ஆக உயர்ந்துள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். வரும் ஆண்டில், மொத்தம் ரூ.47.51 இலட்சம் செலவில், ஆதி திராவிட மாணவர்களுக்குப் புதிதாக 20 மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும்.** தற்போதுள்ள மாணவர் இல்லங்களில் 500 கூடுதல் இடங்கள் 1994-95-ல் உருவாக்கப்படும். ஆதி திராவிடர் நல இடை நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.28.31 இலட்சம் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

145. மகளிர் படிப்பறிவு வீதம் மிகவும் குறைவாக உள்ள 4 மாவட்டங்களில், மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தை உலக வங்கியின் நிதியுதவியுடன் தொடங்க உள்ளோம். **இந்நான்கு மாவட்டங்களிலும் உள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த பெண் குழந்தைகளிடையே கல்வியை மேம்படுத்துவதற்காகப் புதிய சிறப்பு ஊக்கத் திட்டத்தைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்.**

இத்திட்டத்தின் கீழ், கிராமப் பகுதியில் ஏழ்மை நிலையிலுள்ள ஆதி திராவிடர் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டாம் வகுப்பின் முடிவில் படிப்பை இடையில் நிறுத்திவிடும் நிலையில் உள்ள பெண் குழந்தைக்கு, மூன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் தேர்ச்சி பெறும்போது ரூ.500 சிறப்பு ஊக்க உதவி அளிக்கப்படும். இத்திட்டம் கட்டாயக் கல்வி குறித்து இயற்றப்படவிருக்கும் புதிய சட்டத்துடன் சேர்ந்து ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த ஆதி திராவிடப் பெண் குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் தொடர்ந்து படிக்க பெருமளவில் வகைசெய்யும். இத்திட்டத்திற்கு 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1. 5 கோடி செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பெண் குழந்தைகள் குடும்பத்திற்கு வருமானம் ஈட்டித் தருவதால், 5 ஆம் வகுப்பிற்குப்பின்னர் தொடர்ந்து படிக்க அவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. அதனால், வரும் கல்வி ஆண்டில் ஆறாம் வகுப்புக்குச் செல்லக்கூடிய, ஆனால் உதவி எதுவும் கிடைக்காவிடில் ஐந்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தி விடக் கூடிய நிலையிலுள்ள ஊரக ஆதி திராவிட ஏழைப் பெண் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.100 வழங்கும் புதிய திட்டம் ஒன்றை மாநிலம் முழுவதும் தொடங்க உள்ளோம். இத்திட்டம், இக்குழந்தைகளின் வருமானம் ஈட்டும் திறனுக்கு ஒரு மாற்றாகவும் அக்குழந்தைகள் பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்காக அவர்கள் குடும்பத்திற்கு அளிக்கப்படும் ஓர் ஊக்கத் தொகையாகவும் அமையும். ரூ.3 கோடி செலவாகக் கூடிய இத்திட்டத்தின் மூலம், மாநிலம் முழுவதிலுமுள்ள 30,000 ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் பயனடைவர். ஆதி திராவிடர் பெண் குழந்தைகளுக்குக் கல்வியளிக்கும் பிரச்சினையை நேரடியாகச் சமாளிப்பதற்காகத், துணிவுடன் எடுக்கப்பட்ட இப்புதிய நடவடிக்கையை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர்.

146. நிலமற்ற ஆதி திராவிடர்கள், விவசாயம் செய்து தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு, நிலம் வழங்குவதற்காக 1994–95 ஆம் ஆண்டில் புதிய திட்டம் ஒன்றை நாங்கள் தொடங்கவிருக்கிறோம். நிலத்தை மேம்படுத்தி, பயிரிடும் பணியில் சிறந்த தொடர் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்வதற்காக தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இப்புதிய திட்டத்திற்கு ரூ.1 கோடி செலவு ஆகும். இத்திட்டம் 1,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பயன் அளிக்கும்.

பிற்படுத்தப்பட்டோர் நலன்

147. பிற்படுத்தப்பட்டோர் நலனில் கொண்டுள்ள தீவிர அக்கறைதான், கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகத் தற்போது அளிக்கப்பட்டு வருகின்ற இட ஒதுக்கீட்டைப் பாதுகாப்பதற்காக, இவ்வரசு, இம் மாமன்றத்தில் புதியதொரு சட்டம் கொண்டுவர வழிகோலியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இச் சட்டம் குடியரசுத் தலைவரின் இசைவை எதிர் நோக்கியுள்ளது.

148. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கல்வி வாய்ப்புகளை மேம்படுத்த நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக மொத்தம் 804 மாணவரில்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில் 16 புதிய மாணவரில்லங்கள் தொடங்கப்படவுள்ளன. ரூ.3 . 41 கோடி செலவில், 30 மாணவரில்லக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1. 72 கோடி செலவில், மேலும் 12 மாணவரில்லங்கள் கட்டப்படும்.

149. வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி சிறப்பு நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ்ப் பயன் பெறுபவர்க்கான வருமானத் தகுதியளவு, ஆண்டொன்றுக்கு ரூ.6,400/-இலிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

150. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு புதிய ஊக்கம் அளிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டுக்கான திட்டத்திற்கு, இந்நிதியுதவி ரூ.13 கோடியாக உயர்த்தப்படும். 10,000 பேருக்கு உதவியளிக்கப்படும்.

நெசவாளர் நலன்

151. பருத்தி விலையும் அதன் விளைவாக நூலின் விலையும் வெகுவாக அதிகரித்துள்ளதால் நெசவாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு, இவ்வரசு மத்திய அரசிடம் இது குறித்து எடுத்துரைத்துள்ளது. நம்முடைய தரப்பில், சிட்டம், உருளை நூலைச் சலுகை விலையில் விற்பனை செய்வதற்காக, நான்கு நூல் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஆலைத் துறையைத் தென்னிந்திய நூற்பாலைச் சங்கத்தின் (SIMA) மூலம் அணுகி கைத்தறி நெசவாளர்களுக்குச் சலுகை வீதங்களில் நூல் வழங்க ஆவன செய்திருக்கிறோம். விலையை நிலைப்படுத்துவதற்காகத் தீர்வையில்லா அடிப்படையில் 50,000 டன் விஸ்கோஸ் இழைப் பருத்தியை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு நாங்கள் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளோம். பிரச்சினைகளைத் தீர்த்து, நெசவாளர்களைப் பாதுகாக்க அவசர நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

152. கிராமப் பகுதி வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்பகுதி ஏழை எளிய மக்களுக்கும் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காரணகர்த்தாவாக இருந்துள்ளார். வேட்டி, சேலை வழங்குவதற்காக 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.46 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்திற்குள்ளிருந்து வேட்டி, சேலைகளைப் பெற்று, வழங்குவதற்கு கோ–ஆப் டெக்ஸ் மூலம் செய்யக் கருதியுள்ளதால், இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பணி அளிக்க இத்திட்டம் வகைசெய்யும். இது, ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய அம்சமாகவும் விளங்கும்.

153. நெசவாளர்களின் நலனை மேம்படுத்த, நாம் முக்கிய நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இவ்வரசு அறிமுகப்படுத்தியுள்ள கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை அனைவரும் வரவேற்றுள்ளனர். இத்திட்டத்தில், 22,790 நெசவாளர்கள் சேர்ந்துள்ளனர். மேலும் அதிக நெசவாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப் படுவர். நெசவாளர்கள் வீடுகள்–பணியிடத் திட்டம் 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்தகைய வீடுகள் 1,000 கட்டப்படும். நெசவாளர்களின் குடியிருப்புப் பகுதியை மேம்படுத்துவதற்கு, மற்றுமொரு திட்டமும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதிகளில், ரூ.22 .40 இலட்சம் செலவில் 64 துளைக் கிணறுகள் இறக்கப்பட்டுள்ளன.

154. இம் மாநிலத்தில் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்குப் புத்துயிர் அளிக்க, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்

155. புதிய பொருளாதாரக் கொள்கைகள், தொழிற் கட்டமைப்பிற்கும், சீரமைப்பிற்கும் வழிவகுத்திருக்கிறது என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும். எந்த சூழ்நிலையிலும் தொழிலாளர்களின் நலம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளோம். அரசுத் துறை நிறுவனங்களிலுள்ள 3,497 தொழிலாளர்களின் நலனுக்காக ரூ.28 . 97 கோடி செலவிலான செயற்குறிப்புகளை நாங்கள் அனுப்பியுள்ளோம். விருப்ப ஓய்வு திட்டங்களின்கீழ் ஆகும் செலவை ஈடுசெய்ய, தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து உதவி பெறவும் செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இச் செயற்குறிப்புகளுக்கு விரைவில் அனுமதி வழங்கும்படி நாங்கள்வலியுறுத்துவோம். மூடப்பட்ட 12 தொழிற்சாலைகளில் பணியாற்றும் 8,163 தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.32 . 65 இலட்சம் அளவிற்கு தீபாவளியின்போது வழங்கப்பட்டுள்ளது.

156. 1993 ஆம் ஆண்டில், தொழில் உறவுநிலை இணக்கமாகவே இருந்தது. வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகளின் காரணமாக மனித உழைப்பு நாட்களின் இழப்பு சென்ற ஆண்டைவிட 15 . 56 சதவீதம் குறைந்துள்ளது.

157. அமைப்பு ரீதியிலல்லாத தொழிலாளர்களின் நலனுக்கான, சுகாதாரத் திட்டம் ஒன்றைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்திட்டம், தொடக்கச் சுகாதார மையங்கள் மற்றும் வட்ட மருத்துவமனைகள் மூலம் செயல்படுத்தப்படும். அவசியமான மருந்துப் பொருட்களையும், மருந்துகளையும் வழங்கும் இச்செயல் நோக்கத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, அமைப்பு ரீதியிலல்லாத தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு வகைசெய்ய, எடுக்கப்பட்ட ஒட்டுமொத்த முயற்சியின் ஒரு பகுதியே ஆகும். குடும்பக்காப்புப் பொருளீட்டுபவரை இழந்த 50,000 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு ரூ.5000 வீதம் வழங்க இடர் நிவாரணத் திட்டத்தின் கீழ், வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அமைப்பு ரீதியிலல்லாத தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத்தொகை வழங்க, கைவிடப்பட்ட வேளாண்மைத் தொழிலாளர் திட்டத்தை விரிவு படுத்தக் கருதியுள்ளோம். அமைப்பு ரீதியில்லாத ஊரகத் தொழிலாளர்களுக்கு நாம் அளித்துவரும் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவர்.

158. பல்வேறு வகைத் தொழில்களுக்குக் குறைந்தளவு ஊதியம் நிர்ணயிக்கும் திட்டத்தின்கீழ் க் குறைந்தளவு ஊதியம் நிர்ணயிக்கும் நடவடிக்கை தொடரப்படும். இதுவரை 67 விதமான பணிகள் குறைந்தளவு ஊதியச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எந்த ஒரு தொழிலிலும் நாள் ஒன்றுக்கு ரூ. 20 க்குக் குறையாது இருக்கும்படி , குறைந்த அளவு ஊதியத்தை அரசு நிர்ணயித்துள்ளது. தேங்காய் உரித்தல், பாலிதின் செய்முறை நுரை மெத்தை (foam) மற்றும் பிளாஸ்டிக் பொருள் தயாரிப்பு, தச்சுத்தொழில், கருமார் தொழில், உணவுப்பொருள் பக்குவப்படுத்தல் துறை ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு முதன் முதலாக, 1993 ஆம் ஆண்டில் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. பீடி சுற்றுதல், முந்திரித் தொழில், கட்டிடம் கட்டுதல், சாலைகள் பராமரிப்பு, செயற்கைக் கல் பட்டை தீட்டும் தொழில், மரவேலைத் தொழில் ஆகியவற்றிற்கு 1993 ஆம் ஆண்டில், குறைந்த அளவு ஊதியத்தை நாங்கள் திருத்தியுள்ளோம். வேளாண்மைத் தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதியம், 1993 இல் திருத்தப்பட்டது. கடல் உணவுத் தொழில்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

159. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறையை நீக்குவதில் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளோம். குழந்தைத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின்கீழ் 1993 ஆம்

ஆண்டில் 44 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறையைக் கட்டுப்படுத்துவதற்கு இது நல்ல பலனை அளித்துள்ளது.

கடன் திட்டம்

160. பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்காக, சுமுகமான கடன் ஏற்பாட்டிற்கு இவ்வரசு எப்போதும் அதிமுக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. பொருளாதாரத்தின் நிதித் துறையில் ஏற்பட்டு வரும் குறிப்பிடத்தக்க மாறுதல்களை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தங்களுடைய பணியைச் செவ்வனே ஆற்றவியலும் வகையில், அவற்றின் மூலதன ஆதார அமைப்பை வலுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

161. வேளாண்மை–ஊரக வளர்ச்சி தேசிய வங்கி (NABARD) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வகுத்த வளவாய்ப்புள்ள இணைப்புத் திட்டங்களின் அடிப்படையில் நாங்கள் மாவட்டக் கடன் திட்டங்களை உருவாக்கியுள்ளோம். கடன் திட்டத்திற்காக மாவட்ட அளவில் நிதிகள் கிடைக்க வகை செய்யும், அதிகாரப் பரவல் முறையில் அமைக்கப்பட்ட மாவட்ட வளர்ச்சித் திட்டத்தின் ஆதரவு கிடைப்பதை உறுதிப் படுத்த முயற்சிகள் மேற் கொண்டுள்ளோம். உள்ளூர்ப் பகுதி திட்டமிடலைக் கடன் வழங்கு ஏற்பாட்டுடன் இணைத்து, அதன் மூலம், இந்த ஏற்பாட்டை மேலும் சிறந்த முறையில் ஒருமுகப் படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

162. 1994–95 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கான கடன் திட்டம் குறைந்தது ரூ.3000 கோடியாக இருக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். குறிப்பாகத் தோட்டக்கலை, சிறு பாசனம் மற்றும் பிற வளர்ச்சித் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டுமென நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம். வேளாண்மைத் துறைக்குஅதிக அளவில் மூலதன முதலீட்டைப் பெறுவதே இவ்வரசின் நோக்கமாகும்.

163. கடந்த ஆண்டில், நாங்கள் வேளாண்மைக்கான நீண்ட காலக் கடன் வழங்கு அமைப்பு முறையை உயிர்ப்பித்துள்ளோம். வேளாண்மை–ஊரக வளர்ச்சி தேசிய வங்கி (NABARD) யின் மறு நிதியுதவியைப் பெறுவதற்கு 1991–92 ஆம் ஆண்டில் 42 தொடக்க நில வள வங்கிகள் தகுதி பெற்றிருந்தன. தற்போது 142 வங்கிகள் தகுதி பெற்றுள்ளன. இந்நிறுவனங்களின் மொத்த கடன்வழங்கு நிலையும், 1991–92 ஆம் ஆண்டில் ரூ.41. 32 கோடியிலிருந்து 1994–95 ஆம் ஆண்டில் ரூ.122.57 கோடியளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கிறோம். தொடக்க நில வள வங்கியின் மூலதன அமைப்பை மேம்படுத்துவதற்கு மேற்கொண்டும் எடுக்கப்பட்டு முயற்சியில், பங்கு மூலதன நிதியுதவிக்காக வேளாண்மை–ஊரக வளர்ச்சி தேசிய வங்கியின் நீண்ட செயல் திட்ட நிதியைப் பெறுவதற்கு நாங்கள் முயற்சி செய்வோம். நடுத்தர–நீண்ட கால வேளாண்மைத் தேவைக்கான கடன் தொகை மேலும் அதிகரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேலை வாய்ப்பு

164. என்னுடைய கடந்த ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில், வேலைவாய்ப்பு வளர்ச்சியைப் பெருக்குவதற்கான திட்டச் செயல்முறைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். முதன்மைத் துறையில், அதிக வளர்ச்சியை ஏற்படுத்துவதில் நாம் வெற்றியடைந்துள்ளோம். உயர் மதிப்புள்ள பயிர்களின் சாகுபடிக்குத் தீவிர ஆதரவளித்து வேளாண்மை அல்லாத பிற துறைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஊரகப் பகுதிகளில், வேளாண்மை அல்லாத பிற துறைகளின் மேம்பாட்டுக்காக, தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து நிதியுதவி பெற்று, ஊரகக் கடன் வழங்குவதற்கான நிதியைத் திரட்டியுள்ளோம். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில், ரூ.220 . 59 கோடி மொத்த நிதியொதுக்கீட்டுடன் செயற்படுத்தப்படும். ஜவஹர் வேலை வாய்ப்பு முனைப்புத் திட்டத்துடன் சேர்ந்து, வருமாண்டில், உருவாக்கப்படவுள்ள மொத்த வேலைவாய்ப்பு 850 இலட்சம் மனித உழைப்பு நாட்களாகும். வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், உறுதியளிக்கப்பட்ட வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 1994–95 ஆம் ஆண்டில் மொத்தத்தில் 150 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும். இவ்வாறாக, 1994–95 ஆம் ஆண்டில் சாதனையளவாக மொத்தம் 10 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும்.

165. ஊரகப் பகுதிகளில் சுய வேலை வாய்ப்பை உருவாக்குவதற்காக நாம் தொடங்கிய ஊரகத் தொழில் துணைத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1993–94 ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது. ஊரகத் தொழில் துணைத் திட்டம், 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு 1.25 இலட்சம் தொழிலாளர்களுக்கு உதவியளிக்கப்படும்.

166. 1992 ஜூன் திங்கள் நிலவரத்துடன் ஒப்பிடுகையில், 1993 ஜூன் திங்கள் இறுதி நிலவரப்படி, வேலை வாய்ப்பகங்களின் நடைமுறைப் பதிவேடுகளில் இடம்பெற்றுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகள் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், பள்ளி இறுதித் தேர்வு தேறியவர்கள் அல்லது அதற்குச் சமமான கல்வித் தகுதி பெற்றவர்கள், பட்டப் படிப்பை முடித்தவர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டில், 1992–93 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்த கூடுதல் நபர்களின் எண்ணிக்கையில் காணப்படும் உயர்வு விதம் குறைந்துள்ளது. இவ்வாறாக, நமது வேலை வாய்ப்பு கொள்கைகள் நல்ல பலனளிக்கத் தொடங்கியுள்ளன என்பது உறுதியாகிறது.

பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 15,000 நபர்களுக்குச் சுய வேலை வாய்ப்புக்கான உதவி அளிக்கப்படும்.

167. வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குச், சமுதாயத்திற்குப் பயன் விளைவிக்கக் கூடிய வேலைகள் வழங்கும் ஒரு நடவடிக்கையாகப், படித்தவர்களுக்கானதன்னார்வப் பணித் திட்டத்தைத் (Educated Volunteer Service Scheme) தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ், 1. 5 இலட்சம் இளைஞர்கள் திரட்டப்பட்டுள்ளனர். அவர்கள், பள்ளி சாராக் கல்விப் பணியிலும், குடியின் தீமைகள் குறித்துப் பிரச்சாரம் செய்வதிலும் பயனுள்ள வகையில் ஈடுபடுத்தப்படுவர்.

அரசு அலுவலர் நலன்

168. அரசு அலுவலர்களின் பணி நிலைமைகளைப் பொறுத்தவரை இந்த அரசு எப்போதும் ஒரு நியாயமான கொள்கையைப் பின்பற்றி வருகிறது. கடந்த ஆண்டு, டிசம்பர் மாதத்தில், அலுவலர்களின் பல கோரிக்கைகள், விரிவாக ஆராயப்பட்டன. கடுமையான நிதி நிலைமை இருந்த போதிலும், அலுவலர்களுக்கு, 1994, ஜனவரி ஒன்றாம் தேதி முதல், இடைக்கால நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/– அளிக்கப்பட்டுள்ளது. ஏனைய அலுவலர் பிரிவுகளுக்கும், உரிய விகிதத்தில் இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த முக்கியமான சலுகைக்கு ஆகும் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.120 கோடியாகும். அரசு அலுவலர்கள், தொழில் வரி செலுத்துவதில் இருந்த இடர்பாடுகள், ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் களையப்பட்டுள்ளன. மாநிலத்தின் வெளியே 400 கி.மீ. வரை செல்வதற்கு, விடுப்புக் காலப் பயணச் சலுகைத் திட்டம் விரிவாக்கப் பட்டுள்ளது.

169. 1993 டிசம்பர் மாதம், அரசு அலுவலர்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் அரசு அலுவலர்களுக்கான மருத்துவப்படி தற்போதுள்ள மாதம் ஒன்றுக்கு ரூ.15/–லிருந்து ரூ.30/– ஆக உயர்த்தப் படுகிறது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.10 கோடியாகும்.

170. 1993ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல், வீட்டு வாடகைப்படி உயர்த்தப் பட்டது. இந்த பெரிய அளவிலான மாற்றத்திற்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு ரூ.33 கோடியாகும். நிலை I (ஏ), I (பி) மற்றும் நிலை II ஆகிய நகரங்களிலிருந்து 32, 16 மற்றும் 8 கி.மீ. சுற்றுவட்டாரத்தில், அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைக்குள் இருக்கும் [illegible] நிலை I (ஏ), I (பி) மற்றும் II ற்கான வீட்டுவாடகைப்படி நீட்டிக்கப்படும். இதன் மூலம் ஒரு நெடு நாளைய கோரிக்கை தீர்வடையும்.

171. வெப்ப ஆடைகள் வாங்குவதற்கான முன் பணம் ரூ.500 லிருந்து ரூ.1000 அல்லது இரண்டு மாத சம்பளம் – இதில் எது குறைவோ, அந்த அளவிற்கு உயர்த்தப்படுகிறது.

172. சம்பள விகிதங்களில், ஊதியம் பெறும், அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தப்படும் எல்லா நேரங்களிலும், தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கும், குறிப்பிட்ட அளவில் ஊதிய உயர்வுகள் அளிக்கப்படும் என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதனால் சத்துணவுத் திட்ட ஊழியர்கள் அடங்கிய சுமார் 3 இலட்சம் ஊழியர்கள் பயன் பெறுவர்.

173. ஓய்வூதியம் பெறுபவர்களின் குறைகள் மற்றும் பணி ஓய்வு சம்பந்தப்பட்ட ஒரு புதிய துறை ஆரம்பிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்நடவடிக்கையின் மூலம் ஓய்வு பெறும் ஊழியர்கள் உரிய நேரத்தில் ஓய்வூதியம் பெற வழி வகை செய்யப்படும்.

174. மாநிலக் கணக்குத் துறை தலைவர் அலுவலகத்துடன் இத்துறை, இணைந்து செயல்படும். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மருத்துவ படியை மாதம் ஒன்றுக்கு ரூ.15 லிருந்து ரூ.30 ஆக உயர்த்த முடிவு செய்துள்ளோம். இது 1.4.1994 முதல் அமலுக்கு வரும். இதனால் ஆகும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.3.5 கோடியாகும்.

இரா. நெடுஞ்செழியன்
நிதி அமைச்சர்.

சென்னை
1994 ஆம் ஆண்டு
மார்ச்சுத் திங்கள் 23 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2025
பங்குனித் திங்கள் 9 ஆம் நாள்.

மாணவர் பக்கம்

அறிவுச்சுடர்

வாஸ்கோடகாமா இந்தியாவில் வந்து இறங்கிய இடம் எது?

கள்ளிக்கோட்டை அல்லது கோழிக்கோடு.

முதன் முதலில் கடல் மூலம் உலகைச் சுற்றி வந்தவர் யார்?

மெகல்லன்.

உலகில் இரண்டாவது பெரிய கண்டம் எது? அதன் பரப்பளவு என்ன?

ஆப்பிரிக்கா, இதன் பரப்பளவு 3,03,23,000 ச.கி.மீ.

இந்தியாவின் தேசிய மலர் எது?

தாமரை.

பிரிட்டிஷ் இந்தியாவின் கடைசி வைசிராய் யார்?

மவுண்ட்பேட்டன்.

குதிரையின் வாழ்க்கை எத்தனை ஆண்டுகள்?

இருபத்தேழு ஆண்டுகள்.

நாயின் வாழ்க்கை எத்தனை ஆண்டுகள்?

பதினேழு ஆண்டுகள்.

இந்தியாவின் பெரிய மிருககாட்சிச் சாலை எங்குள்ளது?

அலிப்பூர்.

உலகில் திராட்சை அதிகம் விளையும் இடம்?

பிரான்ஸ்.

உலகில் நிலக்கடலை அதிகம் விளையும் இடம்?

இந்தியா.

உலகில் சணல் அதிகம் விளையுமிடம்?

இந்தியா.

ஏலச்செடி எத்தனை ஆண்டுகள் பலன் தரும்?

40 ஆண்டுகள்.

மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முறையை முதலில் கண்டுபிடித்தவர்?

மைக்கேல்பாரடே.

வெள்ளி-செம்பு இதில் அதிகமாக மின்சாரம் பாய்வது எதில்?

வெள்ளி.

நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட சண்டையின் பெயர்

வாட்டர்லூ போர்.

பூட்டுகளுக்குப் பெயர் பெற்று விளங்கும் இடம்?

அலிகார்.

இந்தியாவில் கம்பளி உற்பத்தியில் சிறந்து விளங்குமிடம்?

தாரிவால்.

முதலில் ஒலிம்பிக் பந்தயம் எங்கு ஆரம்பிக்கப்பட்டது?

கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பஸ் என்ற இடத்தில்.

உலகில் காப்பி அதிகம் விளையும் நாடு?

பிரேசில்.

உலகில் பருத்தி அதிகம் உற்பத்தியாகும் இடம்?

சீனா.

உலகில் அதிகமாக மீன் பிடிபடும் இடம்?

ஜப்பான்.

உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம்?

வடஆப்பிரிக்காவைச் சார்ந்த சகாராப் பாலைவனமாகும். இதன் மொத்தப் பரப்பு 84 இலட்சம் ச.கி.மீ.

உலக அதிசயமான சீனப் பெருஞ்சுவர் எந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது?

கி.மு. 214-இல்.

இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட முதல் செயற்கைக்கோள்?

ரோகிணி.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் எந்த ஊர்?

தஞ்சாவூர்.

தமிழகத்தில் கோவில் நகரமென்பது?

காஞ்சிபுரம்.

காகிதத்தைக் கண்டு பிடித்தவர்கள் சீனர்கள்.

உலகில் பெரிய கோயில் வாட் டிகனில் உள்ள செயின்ட் பீட்டர் சர்ச்.

உலகில் பெரிய மசூதி - ஜும்மா மசூதி-டில்லி.

உலகில் அதிகத் திரைப்படம் தயாரிக்கும் நாடு - இந்தியா.



உச்சரித்துப் பழகு

-கவிஞர் சி. விநாயகமூர்த்தி

நல்ல நல்ல பாடம்
நாளும் பயிலும் நேரம்
சொல்லின் வேறு பாட்டைச்
சொல்லிச் சொல்லிப் பழகு.

அறம், ஒழுக்கம் காக்கும்
அரம் இரும்பைத் தேய்க்கும்
மறம் கொடுக்கும் வெற்றி
மரம் கொடுக்கும் மழையை.

இலைகள் அசையும் கொடியில்
இழைகள் பொலியும் உடையில்
கலைகள் வளரும் தமிழில்
களைகள் வளரும் வயலில்.

நீலம் மின்னும் வானம்
நீளம் உள்ள தாரும்
காலை நேரம் விடியும்
காளை வண்டி இழுக்கும்.

இறையென் றாலே கடவுள்
இரையென் றாலோ தீனி
கறைகள் என்ப தழுக்கு
கரைகள் நதிக்கு வரம்பு

கறிகள் விற்கும் கடையில்
கரிகள் மிஞ்சும் விறகில்
பறக்கும் சிறகு அலகு
பறவை யாவும் அழகு.

வழியைப் பாதை என்போம்
வளியைக் காற்று என்போம்
மொழியின் வேறு பாட்டில்
பொருளும் மாற்றம் ஆகும்.

தலையும் தளையும் வேறு
தழையும் கூட வேறு
ஒலியின் வேறு பாட்டை
உச்சரித்துப் பழகு.

மன நோயை ஆரம்பத்திலே கண்டுகொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பை நாம் மக்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும்!

அரசு மன நலக் காப்பகம் 200-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை (14.3.1994)

மன நல மருத்துவத் துறையில், இரண்டு நூற்றாண்டுகளாக, ஈடு இணையற்ற சமுதாயத் தொண்டை ஆற்றி வருகின்ற, சென்னை அரசு மன நலக் காப்பகத்தின், 200-வது ஆண்டு விழாவில் பங்கேற்று, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெரு மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இன்று 1800 நோயாளிகள், மருத்துவமனையிலே தங்கி, சிகிச்சை பெறுகின்ற அளவிற்கும்; நாளொன்றுக்கு 500-க்கும் மேற்பட்டவர்களுக்கு, புற நோயாளியாகச் சிகிச்சை தருகின்ற அளவிற்கும்; வளர்ந்துள்ள இந்த மருத்துவமனை, தெற்காசிய நாடுகளில் அமைந்துள்ள, மிகப் பெரிய மன நல மருத்துவமனைகளில், ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

ஆலமரம் போல், ஆயிரம் விழுதுகளைத் தாங்கி வளர்ந்துள்ள, இந்த மருத்துவமனையின் தொடக்கத்தை அறியும்போது, நமக்கு எல்லாம் ஆச்சரியம் ஏற்படும். அது ஒரு மிக எளிமையான துவக்கம். Dr. Vallentine Caunoly என்ற ஆங்கிலேயர், 20 நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெறக் கூடிய அளவில், 1794-ஆம் ஆண்டு துவக்கி வைத்த, மிகச் சிறிய மருத்துவமனை தான், இன்று தெற்காசிய நாடுகளிலேயே, மிகப் பெரிய மன நல மருத்துவமனையாக, விளங்கிக் கொண்டிருக்கிறது என்பது, நமக்கு மிகவும் பெருமை தரக் கூடிய, ஒரு வரலாற்றுச் செய்தியாகும். மன நல மருத்துவச் சேவையில், இது ஒரு மாபெரும் சாதனைச் சரித்திரம் என்பதில் ஐயம் இல்லை!

200 ஆண்டுகள் சேவை என்பது, அதுவும் உலகம் வேகமாக மாறி வருகின்ற இந்தக் கால கட்டத்தில், ஒரு குறிப்பிடத்தக்க முக்கியமான வரலாறு ஆகும். இந்த மாபெரும் விருட்சத்தை வளர்ப்பதற்கு, தங்கள் உடலையும், உயிரையும் காணிக்கையாக்கிய, நல்லவர்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

சமுதாயத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட மனநோய் பிடித்தவர்களுக்கு, சேவை மனப்பான்மையுடன் தொண்டு செய்த, மருத்துவர்களும், செவிலியர்களும், எத்தகைய தியாக மனப்பான்மை உடையவர்களாக இருந்திருக்க வேண்டும், என்பதை நினைத்துப் பார்க்கும்போது, உண்மையில் என் நெஞ்சம் நெகிழ்ச்சி அடைகின்றது. பல தியாக வரலாறுகள், இந்த மருத்துவமனையின் சரித்திரத்தின் பின்னால் மறைந்திருப்பதை, என்னால் நன்கு உணர முடிகிறது. அந்த நல்ல நெஞ்சங்களின் தியாகங்களை, இந்த நேரத்தில் நினைவுகூர்வது, நமது கடமை என்று நான் கருதுகிறேன். அதே தியாக மனப்பான்மையுடன் தான், இந்த மருத்துவமனையின் இன்றைய மருத்துவர்களும், செவிலியர்களும் பணி புரிந்து வருகின்றனர்.

மருத்துவத் துறையிலேயே, மிகுந்த மனித நேயத்துடன், நோயாளிகளைக் கையாள வேண்டிய கட்டாயம், மற்ற மருத்துவப் பிரிவுகளைவிட, இந்த மருத்துவத் துறைக்கு உண்டு. ஏனென்றால்,

இந்த மருத்துவமனையில் சிகிச்சைக்காக வருபவர்கள், ஏற்கெனவே மன நிலை பாதிக்கப்பட்டவர்களாகவும், எந்த ஒரு சாதாரண நிகழ்ச்சியும், அவர்களுடைய மனதை, மேலும் பாதித்து விடுகின்ற சூழ் நிலையில் இருப்பவர்கள் என்பதோடு; என்ன செய்கிறோம் என்கிற சுய உணர்வின்றிச் செயல்படுபவர்களாக வும் இருப்பதால்; அவர்களால் ஏற்படு கின்ற இன்னல்களை எல்லாம், தாய்மைக் குணத்துடன் பொறுத்துக் கொண்டு, செயல்பட வேண்டிய கட்டாயம், இந்தத் துறையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு உண்டு என்பதை அறிவேன். எனவே தான், இந்த மருத்துவப் பிரிவில் பணி புரிய வருபவர்கள், நெஞ்சுரம் மிக்க வர்களாக மட்டுமின்றி, மனித நேயம் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும்.

"If wealth is lost, nothing is lost
If health is lost, something is lost
If character is lost, everything is lost"

என்று ஒரு அறிஞன் குறிப்பிட்டது, என் நினைவிற்கு வருகின்றது. உடல் நலம் குன்றும் போது, ஏதோ சிலவற்றை இழந்து விட்டதாக எடுத்துக் கொள் ளாலும்; மன நலம் குன்றியிருக்கும் போது, நமது அருமையான நற்பண்பு களையும், குணநலன்களையும் இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, "If mental health is lo[st] everything is lost" என்று தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மன நோயினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு, ஒரு சேவை மனப்பான்மை யுடன், மருத்துவத் தொண்டாற்றி வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், இதரப் பணியாளர்கள் அனைவரும், எனது தனிப்பட்ட பாராட்டுக்குரியவர்கள் என் பதைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடை கின்றேன். உங்கள் பணி கடினமானது; ஆனால், புனிதமானது; உங்கள் சேவை விளம்பரம் இல்லாதது; ஆனால், அனை வராலும் விரும்பத்தக்கது. நீங்கள் ஆற்றி வருகின்ற பணி, குடத்தில் இட்ட விளக்காக இருப்பது போல், உங்களுக்குச் சில நேரங்களில் தோன்றலாம். ஆனால், மனித நேயத்துடன் நீங்கள் செயல்படு கின்ற விதத்தால், மற்றவர்கள் பாராட் டைப் பெற்று, குன்றிலிட்ட விளக்காக, பிரகாசித்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்பதை, சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளேன். எனவே, தொடர்ந்து, தொய்வின்றிப் பணியாற்றுங்கள் என்பதே, எனது வேண்டுகோள்.

நமது மூதாதையர்கள் வாழ்ந்த காலங் களிலே, சமூக வாழ்க்கையிலும்; தனி மனித வாழ்க்கையிலும்; பிரச்சினைகள், பிணக்குகள், கவலைகள், மிகவும் குறைவு. அமைதியான சூழ்நிலையில், சமு தாய வாழ்க்கை நடைபெற்றுக் கொண் டிருந்தது. மனிதனுடைய தேவைகளும்; சமுதாயத்தினுடைய அமைப்பும்; மக்க ளின் நற்சிந்தனைகளும்; உடல் நலத்தை மட்டுமின்றி, மன நலத்தையும் காப்பாற்றி வந்தது. அறிவியல்; தொழில் நுட்ப வளர்ச்சி; குடும்ப அமைப்புகளில் மாறு தல்; மாறி வரும் பொருளாதாரச் சித் தாந்தங்கள்; தொலைதொடர்புச் சாதனங் களின் ஆதிக்கம்; ஆகியவை, நமது சமூக வாழ்க்கையை, வெகுவாகப் பாதித் துள்ளன. எனவே, மன நலம் காப் பாற்றப்பட வேண்டிய ஒரு கால கட்டத் தில், நாம் வாழ்ந்து வருகிறோம் என் பதை, யாரும் மறுக்க முடியாது.

மன நல நோய் என்றாலே, மக்கள் மத்தியிலே நிலவி வருகின்ற, தவறான கருத்து மாற வேண்டும். மன நோயால் பாதிப்பு உண்டாவதற்கு, பல நேரங் களில், சுற்றுப்புறச் சூழல்களும்; உற்றா ரும் உறவினரும்; ஏன்? நண்பர்களும் காரணமாக இருக்கிறார்கள் என்பதை யும், நாம் புரிந்து கொள்ளவேண்டும். மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், தங் களைச் சுற்றியுள்ள சமுதாயத்தை, தனது மன நல பாதிப்பின் காரணமாக, புரிந்து கொள்ளவில்லை என்பது, எந்த அளவுக்கு உண்மையோ; அந்த அளவுக்கு, சமுதாயமும் அவர்களைப் புரிந்து கொள்ளவில்லை, என்பதும் உண்மை யாகும். மன நோய் கொண்டவர்களை, கேலிக்குரியவர்களாக ஆக்குவதும்; வெறுத்து ஒதுக்குவதும்; அவர்களின் பிரச்சினைகளை, அதிகப்படுத்தத் தான் உதவுமே தவிர, அவர்களின் நோயைக் குணப்படுத்த உதவாது. மன நோயினால் பிடிக்கப்பட்டவர்களை, ஒரு குழந்தை யைப் போன்று, அனுசரணையாக நடத்தி; அவர்களின் பாதிப்புகளில் இருந்து, தங்களை விடுவித்துக்கொள்ள, உதவ வேண்டுமே தவிர; அவர்களை ஒதுக்கி வைப்பதும்; ஏளனம் செய்வதும்; அறிவு சார்ந்த செயலாக எனக்குத் தோன்றவில்லை. மற்ற நோய்களைப் போல, இதுவும் ஒரு நோய் என்ற அளவிலே தான், மன நோயால் பாதிக் கப்பட்டவர்களைப், பார்க்க வேண்டுமே தவிர; சாதாரண மனிதர்களிடம் இருந்து, மிக வித்தியாசமானவர்கள் என்ற முறை யில், நாம் பார்க்கின்ற பார்வை; அவர்களது நோயின் தன்மையை, அதிகப் படுத்தி விடுகிறது, என்று நான் அஞ்சு கின்றேன்.

கல்வி நிலையில் பெரிய முன்னேற்றம் ஏற்படும்போது, மன நலம் நன்கு பேணப்படுகின்ற சூழ்நிலைகள், உண் டாகும் என்று நம்புகிறேன். எனவே தான், தமிழகத்து மக்கள் அனைவரும், குறைந்த பட்சக் கல்வி அறிவைப் பெற வேண்டும் என்பதற்காகவும், எழுத்தறிவு கல்வியையாவது பெற வேண்டும், என்கின்ற நோக்கத்திலும்; பல திட்டங் களைத் தீட்டி, முனைப்புடன் செயல் படுத்தி வருகின்றோம். மகளிர் எழுத் தறிவு வளர்ச்சிக்கும்; பெண் கல்வி வளர்ச்சிக்கும்; பெண்களின் பொருளா தார, சமூக முன்னேற்றத்திற்கும்; பல திட்டங்களை எங்கள் அரசு, தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றது.

எந்த ஒரு மருத்துவப் பிரச்சினை யானாலும், எங்கள் அரசு, மேலெழுந்த வாரியாக இல்லாமல், நுணுகி ஆராய்ந்து, நடைமுறைக்கு ஏற்ற தீர்வுகளைக் காணும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றது. தொழு நோய்; காச நோய்; கண்பார்வை குறைவைக் கட்டுப்படுத்துதல்; AIDS போன்ற அபாயம் விளைவிக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த, பல திட்டங்களை, முனைப்புடன் தீட்டி, முழுமையாகச் செயல்படுத்தி வருகிறோம்.

பார்வைக் குறைவு நோயைக் கட்டுப் படுத்தும் பொருட்டு, உலக வங்கியின் உதவியுடன், 64 கோடி ரூபாய் செலவில், திட்டம் வகுக்கப்பட்டு வரு கின்றது. அதே போன்று, AIDS நோயைக் கட்டுப்படுத்தும் திட்டத்திற்கு, ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில், திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத், தர்மபுரி ஆகிய மூன்று மாவட்டங்களில், 70 கோடி ரூபாய் செலவில், DANIDA உதவியுடன் நல்வாழ்வுத் திட்டமும்; 45 கோடி ரூபாய் செலவில், ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கும் மேற்பட்ட, 21 நகராட்சி களிலும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளிலும் செயல்படுத் தப்பட உள்ள, India Population Project-V- திட்டமும்; தமிழ்நாட்டை மருத்துவத் துறையில், ஒரு வளர்ச்சி அடைந்த முன்னணி மாநிலமாக உருவாக்கும் என்பதில், எனக்குச் சிறிதளவும் ஐயம் இல்லை.

இந்த இனிய விழாவில், சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில், 2½ கோடி ரூபாய் செலவில், 250 படுக்கைகளுடனும், நவீன வசதி களுடனும், புதிதாக அமைக்கப்பட்ட, 'குழந்தைகள் மருத்துவப் பிரிவை' திறந்து வைத்ததிலும்; இந்த மன நலக் காப்பக வளாகத்தில், ஒரு கோடி ரூபாய் மதிப் பில் அமைய உள்ள, 'இல்லம் புகு முன் இருப்பு மையம்' அதாவது Halfway Home; மற்றும் 'மறுவாழ்வு மற்றும் ஆராய்ச்சி மையம்', அதாவது Rehabilitation and Research Centre; ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டியதிலும், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மையங்களை அமைக்க முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து 25 இலட்சம் ரூபாயை வழங்கி, ஆணை யிட்டுள்ளேன் என்பதையும் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய சமுதாயத்தில் நிலவுகின்ற சூழ்நிலை, குழந்தைகளின் வளர்ச்சியைப் பல விதங்களில் பாதிக்கக் கூடியதாக அமைந்துள்ளது என்பதையும், நான் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் உள்ளேன். வன்முறை கலாச்சாரம்; கற்பனையின்பால் எழுந்த ஆடம்பரம்; பெண்களுக்கு எதிரான கொடுமைகள் குழந்தைகளின் மனதைப் பாதிக்கக் கூடிய நிகழ்ச்சிகள்; திரைப்படங்கள்; செய்தித் தாள்கள்; பருவ இதழ்கள்; தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன் றவை; அதிகமாகி வருவதையும், நாம் மறுக்க முடியாது.

நமது எதிர்காலத் தலைமுறையினர், மிகுந்த ஆற்றல் மிக்கவர்களாகவும்; திடமான மன நலமும், உடல் நலமும் கொண்டவர்களாகவும்; விளங்க வேண்டும் என்றால், இன்றைய மழலைச் செல்வங்கள், நெஞ்சில் உரம் மிக்க, கொள்கை வீரர்களாகவும், வீராங் கனைகளாகவும், வளர்க்கப்பட வேண்டும். நற்கருத்துக்கள் அமையப் பெற்ற இலக் கியங்களையும்; அழகிய நுண் கலை களையும்; நல்ல பழக்க வழக்கங்களையும்; அவர்களுக்குப் போதிப்பது, மிகமிக அவசியம் ஆகும்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது என் கடமை எனக் கருதுகிறேன். எந்த நோயாக இருந்தாலும் அதை ஆரம்பத்திலே கண்டுபிடிக்கப்பட்டால் எளிதில் குணப்படுத்த முடியும். அதைப் போலத் தான் மன நோய்; ஆனால், பெரும் பாலும் இந்த மருத்துவமனையில் சேர்க் கப்படுகின்ற நோயாளிகள், அவர்கள் நோய் மிகவும் முற்றி விட்ட நிலையில் தான் இங்கே அழைத்து வரப்படு கிறார்கள்; அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆகவே, "Mental illness" மன நோயை ஆரம்பத்திலே கண்டுகொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பை நாம் மக்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். ஆரம்ப Stage-ல், Early Symptoms - அறிகுறிகள் எப்படிப்பட்டவையாக இருக்கும் என் பதைப் பற்றி நாம் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். தொலைக்காட்சியிலும், செய்தித்தாள்களிலும், புத்தகங்களின் வாயிலாகவும் நாம் இவற்றை - இந்த அறிவை மக்களுக்குப் புகட்டினால் பெரு மளவில் மன நோயை நாம் கட்டுப்படுத்த லாம்.

கடந்த 2 நூற்றாண்டுகளாக, சிறிய முறையில், மன நல மருத்துவத்தில் மாபெரும் தொண்டாற்றி வரும், சென்னை 'அரசினர் மன நல காப்பகம்', மென்மேலும் பல சிறப்புக்களைப் பெற்று; பிணி அகற்றும் பணியில், பல சாதனை களைப் புரிய வேண்டும் என்ற, எனது பேரவாவினையும், இங்கு பணி புரிந்து வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் அனைத்துப் பிரிவுப் பணியாளர் களுக்கும், மீண்டும் எனது பாராட்டுதல் களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.



The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

எளிமையானவை! நேர்த்தியானவை! மேன்மை மிகுந்தவை! தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

தமிழரசு
1.5.1994 ரூ.3

தொழிலாளி முதலாளி முறையே இருக்கக் கூடாது. வேலை செய்பவர்கள் பங்காளிகளாக அல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பது அடிமைத்தனம்.

- தந்தை பெரியார்

மே நாள் மேலான நாள்!

ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக்கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள், சமதர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும்பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டுத்திட்டம் முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி மே தினம்!

பாட்டாளி மக்களின் விடுதலை விழா மே தினம். பாட்டாளிகள், வாழ்வுக்காக விடுதலைக் காக, உரிமைக்காக, மே தினத்தைக் கொண்டாடு கின்றனர். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது 8 மணி நேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது, மற்ற 8 மணி நேரம் ஓய்வாக இருப்பது இந்தத் திட்டத்தையே மே தினம் எடுத்துக் கூறுகிறது.

பாட்டாளிகளின் போராட்ட முயற்சியின் இடையிலே ஒருநாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால வருங்கால் கணக்கைப் பார்க்கும் திருநாளே இந்த மே நாள்

- பேரறிஞர் அண்ணா

சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் எனும் மூலக் கருத்திற்கு முதலிடம் தாருங்கள்! நம்மைக் காட்டிலும் நலிந்துள்ள நமது உடன் பிறப்புக்களை முன்னேற்றக்கூடிய பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை அமைத்திடுங்கள்! புதுயுகத்தின் ஈட்டி முனைகளாக முன்னோடிகளாக விளங்கிடுவீர்.

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைத் திருநாளாக மே முதல் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிற திருநாள் ஆகும்.

"உழைக்கும் மக்களே, ஒன்று சேர்ந்திடுவீர்! பேதப்படுத்தும் சக்திகளை ஒதுக்கித் தள்ளிடுவீர்! உழைப்பவரே உயர்ந்தவர் எனும் தத்துவத்தை நிலை நாட்டுவீர்! புதிய சமதர்ம, சமத்துவ, சமுதாய அமைப்புக்கு முன்னோடும் சக்தியாகத் தலைமை தாங்கிடுவீர்!" என உழைக்கும் வர்க்கத்தை இருகரங்கூப்பி அழைக்கிறேன்.

- டாக்டர் எம்.ஜி.ஆர்

அண்ணல் அம்பேத்கர்

மாண்புமிகு முதல்வர்

அண்ணல் அம்பேத்கர், ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே மலரும் அதிசய மலர். ஒருவர் மாமேதையாக இருக்கலாம்; போராட்ட வீரராய் இருப்பதில்லை. போராட்ட வீரராய் இருக்கலாம்; பேரறிஞராய்த் திகழ்வ தில்லை. அம்பேத்கர் அவர்கள், போராட்ட வீரராய்த் திகழ்ந்த மாமேதை! அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தந்தை பெரி யாரைப் போன்ற போராட்ட வீரர்!

பேரறிஞர் அண்ணாவைப் போன்ற மாமேதை!

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர் களைப் போன்ற, ஒரு மனிதாபிமானி!

-எனவே தான், அவரைப் போற்றுவதில் வேறு யாரையும் விட நாம் முன் நிற்கின்றோம்.

அவருக்குச் செய்யப்படும் சிறப்பு, அறிவுக்குச் செய்யப்படும் சிறப்பு மட்டுமல்ல; புரட்சிக்கும், போராட்ட உணர்வுக்கும் செய்யப்படுகின்ற சிறப்பு; ஜனநாயகத் தத்துவத்துக்குச் செய்யப் படுகின்ற சிறப்பு; பலகோடித் தாழ்த்தப்பட்ட சகோதர, சகோதரிகளுக்கு, நாம் செய்யும் சிறப்பு!

அந்தச் சிறப்பை, திராவிட இனத்தின் இலட்சிய விளக்கை, கைகளில் ஏந்தியிருக்கிற நான், இன் றைக்குச் செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடை கின்றேன்.

இந்தியாவில் தோன்றிய அரசியல் இயக் கங்கள், சமூக சீர்திருத்த விடுதலை இயக்கங்கள், எத்தனையோ இருந்தாலும், திராவிடப் பாரம் பரியத்திற்கு மட்டுமே - திராவிட இயக்கங்களுக்கு மட்டுமே - மாமேதை அம்பேத்கர் அவர்களின் கொள்கை, நெருக்கமானது.

"1924-இல், தந்தை பெரியார் வைக்கத்தில் நடத்திய, தீண்டாமை ஒழிப்புப் போராட்டம்தான் என்னுள், பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது" என்று, 1927-ஆம் ஆண்டிலேயே, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பிரகடனம் செய்தார். "அம்பேத்கர் அவர்களுக்குச் சமமாக, இந்தியா வில் யாரையும் சொல்ல முடியாது. இன்று மட்டுமல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே, இதை நான் கூறியிருக்கிறேன். 1930-ஆம் ஆண்டு முதலே எனக்கு அவரைத் தெரியும்" என்று, தமிழகம் தந்த தன்மானச் சிங்கம், தந்தை பெரியார் அவர்கள், அறிவுலக மேதை அம்பேத்கர் அவர்களுக்கு, மகுடம் சூட்டி மகிழ்ந்தார்.

வைர வரிகளாக விளங்கும், இந்த இரு வாச கங்களும், அண்ணல் அம்பேத்கர் யார், அவர்க்கும் நமக்கும் உள்ள இலட்சியப் பிணைப்பு என்ன, எப்படிப்பட்டது என்பதைக் காலமெல்லாம் நிலைத்து நின்று கூறப் போகிற, கருத்துக் கரு வூலங்களாகும்.

தெற்கே தந்தை பெரியாரும், வடக்கே டாக்டர் அம்பேத்கரும், தோன்றியிராவிட்டால், தாழ்த்தப் பட்ட மக்களுக்கு நமது சமுதாயத்தில், மீட்சி என்பதே கிடைத்திருக்காது. அப்படிப்பட்ட மாபெரும் தலைவரான, விடுதலை வீரரான, சமூகப் போராட்ட சீலரான, இந்திய அரசியல் சட்டத்தின் சிற்பியான, இந்திய அரசின் முதல் சட்ட அமைச்சரான, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் புகழ், என்றென்றும் வாழ்க, வளர்க என்று வாழ்த்துகிறேன்.

(-14.4.1993 அன்று, சென்னையில் நடை பெற்ற டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நினைவு மண்டபம் அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)

DIPR/273

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

மகிழ்ச்சியான திருநாள்!

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு சிகாகோ நகரில் ஆண்டாண்டுக் காலமாகக் கொத்தடிமையாக உழைத்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் சிந்தித்து ஒன்று கூடிப் போராடி, ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் பணி நேரமாக வரையறுக்கப்பட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, உழைக்கும் வர்க்கம் அடிமை விலங்கை ஒடித்து நொறுக்கி விடுதலை பெற்று, வீறு கொண்டு, எழுந்த நாள் 1889 'மே' முதல் நாள் ஆகும். அந்நாள், ஆண்டுதோறும் 'மே' தினத் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆதிக்க வெறியர்களின் ஆணவத்தை அழித்து, அன்று முழங்கிய உழைப்பவர்களின் உரிமைகீதம் தான் இன்று வாழ்வில் வசந்தமாகப் பல உரிமைகளைத் தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தந்துள்ளது.

சாதி, மதம், இனப்பாகுபாடு இன்றி உலகத்தில் உள்ள அனைத்துத் தரப்புத் தொழிலாளர்களும் ஒன்று கூடி தங்களது உரிமைக்காகப் போராடிப் பெற்ற வெற்றியைக் கொண்டாடும் மகிழ்ச்சியான திருநாள் இந்த 'மே' திருநாளாகும்.

— மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா

இந்த இதழில்

மே நாள் மேலான நாள் !.....2

அண்ணல் அம்பேத்கர்
- மாண்புமிகு முதல்வர்.....3

காவல் துறை நவீனமயமாக்கப்பட்டு மனிதாபிமானமிக்க இயக்கமாக்கப்படும் !
- மாண்புமிகு முதல்வர்.....4

திறம்படச் செயலாற்றும் நீர்ப்பாசனத் துறை
- மாண்புமிகு முதல்வர்.....14

தமிழக அரசின் திட்டங்களுக்கு நபார்டு தலைவர் பாராட்டு !.....15

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய, தொழிலதிபர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அழைப்பு.....16

அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்:.....17

காவல் துறையின் சாதனை.....23

மே நாள், புரட்சித் திருநாள் ! [கவிதை].....24

தலைசிறந்த தொழில் வளர்ச்சிக்குத் தமிழகத்தில் தகுந்த சூழ்நிலைகள் !.....26
- மாண்புமிகு முதல்வர் உரை

மாண்புமிகு முதல்வர், காவல் துறைக்கு 37 ஜீப்களை வழங்கினார்.....31

புதுப்பொலிவு பெறும் திருக்கோயில் திருக்குளங்கள்.....33

டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலர்.....37

நூல்நயம்.....39

பெரியார் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம்.....41

தொல்காப்பியத்தில் அறிவியல் கருத்துக்கள்.....45

திருவள்ளுவர் ஆண்டு: 2025
சித்திரைத் திங்கள்: 18
மலர்:24 இதழ்:21
1.5.1994

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (1)

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல, உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

● எட்டாவது உலகத் தமிழ் மாநாடு வருகின்ற ஜனவரித் திங்களில் சிறப்புற நடைபெறுவதையொட்டி, இதழ்தோறும் ஒரு குறள் இங்கே இடம்பெறும்.

காவல்துறை நவீனமயமாக்கப்பட்டு மனிதாபிமானமிக்க இயக்கமாக்கப்படும்!

தமிழகச் சட்டப்பேரவையில், 25.4.94 அன்று நடந்த, ஆயத்தீர்வை, காவல், தீயணைப்பு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அளித்த பதிலுரை

காவல் துறை
புதிய அறிவிப்புகள்:

காவல் துறை தற்போது எதிர்கொள்ளவேண்டிய பணிச் சுமையையும் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் சவால்களையும் ஆராய்ந்து பார்த்து, காவல் துறை வினைத்திட்பத்தோடும், தொழில் நுணுக்கத்தோடும் செயல்பட்டு, அகில இந்திய அளவில் தலைசிறந்த காவல் துறை என்பதை நிரூபித்து, மக்கள் பணியாற்ற இந்த அரசு பல நவீன திட்டங்களை வகுத்து, விரைந்து செயல்படுத்தி வருகிறது.

காவல் துறையின் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோரிடையே பணி ஆர்வத்தை ஊக்குவித்து, அவர்களுக்குத் தேவையான நவீன ஆயுதங்கள் உபகரணங்கள், தளவாடங்கள் ஆகியவைகளை வழங்கி, அவைகளை இயக்குவதற்குரிய பயிற்சிகளை அளிப்பதற்காகப் பல புதிய திட்டங்களை இந்தப் பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

(1) காவல் பணியில் தகவல் தொடர்பு Telecommunications எத்தகையதொரு முக்கியமான பணியை ஆற்றுகின்றது என்பதை அறிந்துள்ள நாங்கள், தகவல் தொடர்பினைப் பலப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருகிறோம். இந்த ஆண்டு திண்டுக்கல் அண்ணா மாவட்டம் அரங்காணல், நீலகிரி மாவட்டம் துருமுலா, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மாஞ்சோலை, கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிமலை, நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் தகவல் தொடர்பு திருப்பு நிலையங்கள் Repeater Stationகள் அமைக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டும் இன்றி 1378 VHF Wireless Set கருவிகளும் 100 Walkie Talkie கருவிகளும் வழங்கப்படும். 15 மாவட்டங்களுக்கு 2 கணிப்பொறிகள் மூலம் தகவல் அனுப்பும் கருவிகளும், Fax கருவிகளும் வழங்கப்படும். தகவல் தொடர்பினை மேம்படுத்த சென்னையை அடுத்துள்ள St.Thomas Mount, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய மூன்று இடங்களில், மூன்று புதிய தகவல் தொடர்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். சேர்வராயன் மலையில் அமைந்துள்ள தகவல் தொடர்பு நிலையத்தில் பணிபுரியும் காவலர்களின் நலனுக்காகத் தங்கும் அறைகள் கட்டிக்கொடுக்கப்படும். தகவல் தொடர்புக்கென, இந்த நிதியாண்டில் இத்தனைப் பணிகளும் 5.43 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) இது கணிப்பொறிக் காலம் - Computer Age. காவல் துறையில் தேவையான செய்திகளைச் சேகரித்து, உடனுக்குடன் அவற்றை மற்ற பணிகளுக்கு உபயோகப்படுத்தும் வண்ணம் குற்றப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவுகளில் கணிப்பொறி அமைத்து நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. 26 காவல் மாவட்டங்களிலும் Crime Record Bureau என்று அழைக்கப்படும் குற்றப் பதிவுருப் பிரிவுகளில் கணிப்பொறி நிறுவப்படும். காவல் துறைப் பயிற்சிக் கல்லூரியில் கணிப்பொறிப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு தனிப் பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்பதையும், மதுரை, கோயம்புத்தூர், சென்னை, திருச்சி ஆகிய நகரங்களில் அமைந்துள்ள 4 காவல் நிலையங்களில் பரிசோதனைத் திட்டமாகக் கணிப்பொறிகள் அன்றாடப் பணியில் உபயோகப்படுத்தப்படும், குற்றப் புலனாய்வு முறை Computer மூலமாக "அங்குலி" என்ற புதிய கணிப்பொறி மூலமாக நவீனப்படுத்தப்படும் என்பதையும் இப்பணிகள் அனைத்தும் இந்த ஆண்டு 36 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) தமிழகத்தில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி, Wireless Set மற்றும் ஜீப் ஆகிய வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. அந்த வகையில், தொலைபேசி இல்லாத 19 காவல் நிலையங்களுக்கு 6.30 இலட்சம் ரூபாய் செலவில் தொலைபேசி இணைப்புகள் உடனடியாக வழங்கி, தொலைபேசி இல்லாத காவல் நிலையங்களே இல்லை என்ற நிலையினை நாம் அடையப் போகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



நிலையங்களில்' பணி புரிவதற்குக் கூடுதலாக 1600 பெண் காவலர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5.51 கோடி ரூபாய் செலவில் தற்போது ஏற்கெனவே காலியாக உள்ள 1000 காவலர் பணியிடங்கள் உட்பட, புதிதாக உருவாக்கப்படும் 600 காவலர் பணியிடங்களுடன் சேர்த்து மொத்தம் 1600 பெண் காவலர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

(8) பெண்களின் பிரத்யேகப் பிரச்சினைகளைச் சட்டபூர்வமான முறையில் தீர்த்துவைப்பதற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்து, எங்கள் அரசு பெண்களுக்குச் சமுதாயத்தில் இழைக்கப்படும் வரதட்சிணை என்னும் சமுதாயக் கொடுமையை முழுமையாக அகற்ற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் 'வரதட்சணை ஒழிப்புப் பிரிவு' ஒன்று காவல் துறையில் துணைக் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் தலைமையில் அமைக்கப்படும்.

நேரடியாகக் காவல் துறை துணைக் கண்காணிப்பாளராக நியமனம் செய்யப்படும் பெண் அலுவலர்கள் இந்தப் பிரிவின் தலைவர்களாகப் பணியாற்றுவார்கள் என்பதையும், அந்தப் பெண் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் நேரிடையாக மேற்பார்வை இடுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாறிவரும் சமுதாயத்தின் வளர்ந்து வரும் தேவைகளை உணர்ந்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகச் செயல்பட்டு வரும் நமது மாநில அரசு தேவையான பெண் துணைக் கண்காணிப்பாளர்களைத் தமிழ்நாடு தேர்வாணைக் குழுமத்தின் மூலமாகத் தேர்வு செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வருங்காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பெண் துணைக் கண்கண்காணிப்பாளர் எல்லா அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் கண்காணிப்பதோடு வரதட்சணைக் கொடுமையை முழுமையாக அகற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது உண்மையில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

(9) இந்த ஆண்டு செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ள என் பெயரில் அமைந்த நகரிலும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்திலும், புதிதாக இரண்டு காவல் நிலையங்கள் தொடங்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(10) சென்னை மீனம்பாக்கத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா விமான நிலையம், காமராசர் விமான நிலையம் ஆகிய இரண்டு விமான நிலையங்களையும் இணைத்து ஒரு புதிய காவல் மாவட்டம், Separate Police District ஒன்றை உருவாக்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய காவல் மாவட்டத்தில் ஒரு புதிய காவல் நிலையத்தை உருவாக்கி அதற்குரிய அதிகாரங்களை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாவட்டம் அமைப்பதற்கு 60 இலட்சம் ரூபாய் தொடரும் செலவினமும் 14 இலட்சம் ரூபாய் தொடராச் செலவினமும் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(11) சென்னை மாநகரக் காவல் துறையில் பணி புரியும் அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காகக் காவல் துறைக்குச் சொந்தமான 9 ஏக்கர் நிலத்தில் 3000க்கும் மேற்பட்ட குடியிருப்புகளையும், பல்வேறு புதிய வசதிகளையும் கொண்ட சென்னை காவலர் நகர் Police City ஒன்றினை உருவாக்குவது என்று இந்த அரசு கொள்கையளவில் முடிவு எடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல வகையான பலமாடிக் கட்டடங்கள் கொண்ட இந்தக் காவலர் நகரில் பள்ளிக் கூடம், சமூகக் கூடம், விளையாட்டுத் திடல்கள், உடற்பயிற்சிக் கூடம், அஞ்சல் நிலையம், வங்கி, காவலர் கட்டுப்பாட்டு அறை போன்ற எல்லா வசதிகளையும் உருவாக்கித் தருவதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு கட்டடங்களுக்கான வடிவமைப்புகள் தயாரிப்பதற்கு அனைத்து ஆயத்த நடவடிக்கைகளும் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(12) ஒற்றாய்வுப் பிரிவில் Intelligence Special Branch பணியாற்றும் காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோரின் நலனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு மாவட்ட அளவிலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட அரசு வாடகைக் குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்வதற்கு வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அவர்களுக்கு என்று தனியாகக் குடியிருப்புகளைக் கட்டுவதற்குத் தேவையான அரசு நிலங்களைத் தேர்ந்தெடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(13) சென்ற ஆண்டு அறிவிப்புகள் செய்யும்போது ஒவ்வொரு ஆண்டும் 25 உட்கோட்டங்கள் Sub-Divisions புதிதாக உருவாக்கப்படும் என்பதை நான் அறிவித்திருந்தாலும், இந்த ஆண்டு மேலும் 24 உட்கோட்டங்கள் சேர்த்து 49 புதிய உட்கோட்டங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் மூலமாகக் காவல் நிலையங்களை மேற்பார்வையிடும் பணி நன்முறையில் நடைபெறுவதோடு, பதவி உயர்வு பெறாமல் காவல் துறை ஆய்வாளர் அந்தஸ்தில் உள்ள தேக்க நிலையைத் தவிர்ப்பதற்கும் இது உதவும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(14) கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தர்மபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 3.32 இலட்சம் ரூபாய் செலவில் நான்கு புதிய காவல் சுருக்கெழுத்துக் கூடங்கள் Shorthand Bureaus இந்த ஆண்டு அமைக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(15) விடுதலைப் புலிகள் போன்ற போராளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் Q பிரிவின் வேலை பளுவைக் கருத்தில் கொண்டு ஒரு மேலாளர் மற்றும் 5 சிறப்பு உதவியாளர்களைப் புதிதாக நியமிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(16) சென்னைக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள காவல் துறை இயக்குநர் அலுவலகக் கட்டடத்திற்குப் பதிலாக, எழில்மிகு பல மாடிக் கட்டடத்தை, அதே இடத்தில் எழுப்புவதற்கு இந்த அரசு ஏற்கெனவே முடிவு எடுத்து, இயற்கையோடு இயைந்த

(4) ஆவடி அருகே உள்ள வீராபுரத்தில் 68 எக்டேர் நிலப்பரப்பில் 20 கோடி ரூபாய் செலவில் புதிய 'காவல் துறைப் பயிற்சிக் கழகம்' Police Academy ஒன்று நிறுவப்படும். பயங்கரவாத நடவடிக்கைகளையும், அதனோடு தொடர்புடைய பயங்கரவாத நிகழ்வுகளையும் முறியடிக்க, உரிய உயர்ந்த ரகப் பயிற்சியைக் காவல் துறையினருக்கு இந்தப் பயிற்சிக் கழகம் வழங்கும். முதல் கட்டமாக, வாகனம் ஓட்டும் பயிற்சிப் பள்ளி, வெடிகுண்டு கண்டுபிடித்தல் பயிற்சி மையம், மோப்ப நாய்கள் பயிற்சி மையம், பாதுகாப்புப் பணி அளிக்கும் சிறப்புப் பயிற்சிப் பிரிவு, நிர்வாகப் பயிற்சிப் பிரிவு ஆகிய பிரிவுகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(5) நீண்டு விரிந்து கிடக்கின்ற தமிழகத்தின் கடலோரப் பகுதியைப் பாதுகாக்க, அன்னியர்களின் ஊடுருவலைத் தடுக்க, கடலோரங்களில் அயல்நாடுகளுக்குக் கள்ளக் கடத்தலைத் தடுக்க, மீனவர்களின் நலன் காக்க, தமிழக அரசு 12 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தீட்டி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெறாத நிலையிலும், தமிழகத்தின் கடற்கரைப் பாதுகாப்பை மனதில் கொண்டு, இத்திட்டத்தைத் தமிழக அரசு நிறைவேற்ற முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ், 1000 கிலோமீட்டர் நீளத்தில் உள்ள கடற்கரைப் பகுதியில் சோதனைச் சாவடிகளும், ரோந்துப் பணிப் படைகளும் அமைக்கப்பட்டு, கடற்கரைப் பகுதியில் முழுவதுமாக ரோந்துப் பணி மேற்கொள்ளப்படும்.

இதற்கான ஒரு தனி கடற்கரைப் பாதுகாப்புப் படை Coastal Security Group உருவாக்கப்படும். இந்தப் புதிய பாதுகாப்புப் படையில் 300 காவலர்கள், 34 உதவி ஆய்வாளர்கள், 17 ஆய்வாளர்கள் 2 கூடுதல் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் நியமிக்கப்படுவர். அவர்களுக்குத் தேவையான Walkie Talkie கருவிகள், ஊர்திகள், சக்தி வாய்ந்த Binocularகள் ஆகியவை வழங்கப்படும். மேலும் ரோந்துப் பணிகளை மேற்கொள்வதற்காக மட்டும் 300 சைக்கிள்கள், 34 மோட்டார் சைக்கிள்கள், 23 ஜீப்புகள், 2 கார்கள் மற்றும் 4 பேருந்துகள் வழங்கப்படும். 3.48 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டம் இந்த நிதி ஆண்டிலேயே தொடங்கப்படும் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) பெருகிவரும் மக்கள் தொகை, மாறிவரும் பொருளாதாரச் சித்தாந்தங்கள், சென்னை மாநகரக் காவல் பணியினை மேலும் கடினமாக்கிக் கொண்டு வருகின்றன. எனவே, மாநகரக் காவல் துறையைச் சீரமைப்பதில் தமிழக அரசு தனிக்கவனம் செலுத்திவருகிறது. வளர்ந்துவரும் மாநகரத்தின் பல்வேறு காவல் துறைப் பணிகளின் அங்கங்களான போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு, குற்றப் புலனாய்வு, குற்ற நிகழ்வுகள் தடுப்பு மற்றும் பொது அமைதி பராமரித்தல் போன்றவைகளை மேம்படுத்த மாநகரக் காவல் பிரிவைச் சீரமைப்பதற்கு ஒரு திட்டம் தீட்டிச் செயல்படுத்தவுள்ளோம். முதலாவதாக, சென்னை மாநகரத்தை அடுத்துள்ள சில பகுதிகளை, சென்னைக் காவல் துறை ஆணையாளரின் கீழ் கொண்டு வருவதற்குச் சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்படாத இந்தப் பணி எங்களது ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும், புதிதாக மாநகரக் காவல் துறையின் கீழ் இணைக்கப்பட வேண்டிய பகுதிகளை ஆராய்ந்து அறிவிப்பதற்கு, உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ) இவ்வாறு மாற்றி அமைக்கப்படும் மாநகரக் காவல் நிர்வாகத்தில் காவல் துறைத் துணைத் தலைவர் அந்தஸ்தில் இரண்டு இணை ஆணையாளர்கள் Joint Commissioner of Police நியமிக்கப்படுவார்கள் என்பதையும், சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றப் புலனாய்வு ஆகிய பணிகளை அவர்கள் மேற்கொள்வார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ) தற்போதுள்ள 3 சட்டம் ஒழுங்குப் பிரிவுகள் 4 பிரிவுகளாக மாற்றி அமைக்கப்படும்.

இ) பெருகிவரும் மாநகரப் போக்குவரத்துப் பிரச்சினையைச் சமாளிக்க மாநகரப் பிரிவை 2 பிரிவுகளாகப் பிரித்து மேலும் ஒரு புதிய துணை ஆணையாளர் பதவி புதிதாக உருவாக்கப்படும்.

ஈ) காவல் துறை ஆணையாளர் அலுவலகத்தில் நுண்ணறிதல் பிரிவில் தற்போது கூடுதல் துணை ஆணையாளர் அந்தஸ்தில் உள்ள பதவி, துணை ஆணையாளர் அந்தஸ்திற்கு உயர்த்தப்படும்.

உ) குற்றப் புலனாய்வுப் பிரிவில் சரக அளவில் கூடுதலாக இரண்டு உதவி ஆணையாளர் பதவிகள் உருவாக்கப்படும். இந்தப் பதவிகளை உருவாக்குவதில் தமிழக அரசிற்கு 28 இலட்சம் ரூபாய் தொடராச் செலவினமும், 9 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் தொடரும் செலவினமும் ஆகும்.

ஊ) சென்னை மாநகரத்திற்கு வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் சிறப்புப் படை Bomb Disposal Squad ஒன்று பிரத்யேகமாக 8 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சிறப்புப் பிரிவிற்கெனப் பிரத்யேகக் கருவிகள், ஆயுதங்கள், மோப்ப நாய்கள் ஆகியவைகள் வழங்கப்படும்.

எ) சென்னை மாநகரக் காவலுக்குத் தற்போது உபயோகத்தில் உள்ள லாரிகள், பேருந்துகள், ஜீப்புகள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனங்கள் மிகவும் பழையதாகவும், வேகமாகச் செல்வதற்குத் தோதற்றதாகவும் உள்ளன. கவனிப்பாரற்றுக் கிடந்த இத்தகைய 107 பழைய வாகனங்கள் கழிக்கப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக 2.5 கோடி ரூபாய் செலவில் புதிய வாகனங்கள் சென்னை மாநகரக் காவலுக்கென வாங்கி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(7)மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் தமிழகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்ட 'அனைத்து மகளிர் காவல்

(29) சென்னை மாநகரக் காவல் பிரிவில், மோட்டார் வாகனப் பிரிவைக் கண்காணிக்கத் துணை ஆணையாளர் அந்தஸ்தில் ஒரு புதிய பதவி தோற்றுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(30) 7 காவல் துறை சரக அலுவலகங்களில், நிர்வாக நலன் கருதி, காவல் துறைத் துணைத் தலைவர்களுக்கு உதவி புரிவதற்காக நேர்முக உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். பெரியார், நீலகிரி, விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை- சம்புவராயர், இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல்-அண்ணா ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள கண்காணிப்பாளர் பதவிகள் நேர்முக உதவியாளர் அந்தஸ்துக்கு உயர்த்தப்படும் என்பதையும், இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு 1.120 இலட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(31) காவல் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்று மாவட்டங்களில் பணி புரியும் 1,200 அதிரடிப் படையைச் சார்ந்த காவலர்களின் கடின உழைப்பு, துப்பாக்கி சுடும் திறன், கட்டமைப்பான உடல் திறன் ஆகியவற்றைத் தொடர்ந்து பராமரிப்பதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, ஒரு சிறப்புத் தேர்வை நிகழ்த்தி, அதில் தேர்வு பெறுபவர்களுக்கு 500 ரூபாய் மட்டும் சிறப்பு ஊக்கத் தொகையாக ஒரே ஒரு முறை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறை மானியத்தில் நான் இப்போது வெளியிட்ட புதிய அறிவிப்புகளால் அரசுக்கு 26 கோடி ரூபாய் மொத்த செலவாகும் என்பதையும், இதில் ஒவ்வொரு ஆண்டும் தொடர் இனச் செலவாக 14 கோடி ரூபாய் அமைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிவிப்புகளின் வாயிலாக, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடங்கள் 2,017 ஆகும். காவலர் பதவியிலிருந்து காவல் துறைத் துணைத் தலைவர் பதவி வரை கூடுதலாகப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களின் அணிகள்

அடக்கம், பொறுமை, புத்திக்கூர்மை, திறமை, தியாகம், பிறர்நலம் பேணுதல், எளிமை, அழகு இவையே பெண்களின் மொத்த வடிவம்.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

காவல் துறை நவீனமயமாக்கப்பட்டு, மனிதாபிமானமிக்க ஓர் இயக்கமாக மாற்றும் முயற்சிக்கு நாங்கள் இந்த ஆண்டு எடுத்திருக்கும் பல்வேறு கொள்கை முடிவுகள் உறுதுணையாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

முடிவுரை:

எங்கள் அரசைப் பொறுத்தவரையில், எந்தத் தொய்வும் இன்றி தொடர்ந்து மக்கள் நலனுக்காக, மக்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்காகச் செயல்பட வேண்டும் என்கின்ற கொள்கையில் மிகவும் உறுதியாக இருக்கின்றோம். எத்தனைப் பிரச்சினைகள், எத்தனை இடர்ப்பாடுகள், எத்தனை இன்னல்கள் ஏற்பட்டாலும், அவற்றையெல்லாம் எதிர்கொண்டு சந்திக்கின்ற துணிவும் நெஞ்சுரமும் எங்களுக்கு நிறையவே இருக்கிறது. எனவே, ஒவ்வொரு ஆண்டும், இன்னும் நன்றாகச் செயல்பட வேண்டும் என்கின்ற எண்ணத்துடன் நாங்கள் செயல்பட்டு வருகின்றோம்.

காவல், தீயணைப்பு, மாநில ஆயத்தீர்வை ஆகிய மூன்று முக்கியமான துறைகளைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்த கருத்துக்கள் அனைத்தையும், மக்கள் நலம் போற்றும் எங்கள் அரசு, கவனத்தில் கொண்டு, தேவை எழுகின்ற இனங்களில், நிதிநிலைக்கேற்ப, அவற்றிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் என்பதை, உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று, இந்தத் துறைகளில், 'குறைகள்' எனக் கருதி, கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்துமே, உடனடியாக அரசால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றை உடன் களைவதற்கு, உரிய நடவடிக்கைகள் அனைத்தும், சற்றும் தயக்கமின்றி எடுக்கப்படும் என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த நேரத்தில் கள்ளச் சாராயம் முற்றிலுமாக அகற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட தொகுதிகளான பர்கூர் மற்றும் வால்பாறை பற்றி அறிவிக்கும்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதேநேரத்தில் மற்ற பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களும் இதே பேரவையில் பாராட்டினைப் பெற முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றோடு ஒன்று தொடர்புள்ள, இந்த மூன்று துறைகளுமே, வளர்ச்சியுறும் சமுதாயத்தில், அவை எவ்வாறு இயக்கப்படுகின்றனவோ, அதற்கேற்பவே, விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை. இந்தக் கருத்தை எங்களது அரசு நன்கு உணர்ந்துள்ளது.

தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!

- மாக்கவி பாரதி

சட்டம், ஒழுங்கு, மிக நல்ல முறையில் பராமரிக்கப்படும் மாநிலம் தமிழகம். எவ்வகையான இயற்கையின் சீற்றங்கள் ஏற்படினும், அவை உடன் சமாளிக்கப்பட்டு, நிலைமை சீராக்கப்படும் மாநிலம் தமிழகம். மதுவிலக்குத் தொடர்பான குற்றங்கள் மிகக் குறைவாகவே நிகழ்கின்ற மாநிலம் தமிழகம் என்ற முப்பெரும் சிறப்புக்களை, எங்களது அரசு பதவி ஏற்ற பின்னர், ஏறக்குறைய கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து பெற்று வரும் 'தமிழகம்' இத்தனிப் பெரும் சிறப்புக்களை என்றென்றும் பெற்றுத் திகழும்வண்ணம், எங்களது அரசு செயல்படும் என்ற உறுதியை எனது அன்புக்குரிய தமிழகப் பெருமக்களுக்கு, இந்த மாமன்றத்தின் வாயிலாக வழங்கிக் கொள்வதில், நான் மிக்க மனநிறைவு அடைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது எடுத்துரைத்த கருத்துக்களுக்கும், அவர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் நான் வழங்கிய பதிலுரையில் பெரும்பாலும் விளக்கங்கள் கிடைத்திருக்கும் என்று நம்புகின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய சில கருத்துக்களுக்கு, காலத்தின் அருமை கருதி, நான் எனது பதிலுரையில் விளக்கங்களை அளித்திராவிட்டாலும், அவைக்குறிப்பில் பதிவாகியுள்ள அவை அனைத்தையுமே, எங்கள் அரசு கவனமாகப் பரிசீலனை செய்து, தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு, காவல்துறை, மாநில ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்புத்துறை ஆகிய துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளை, நிறைவேற்றித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

கட்டட அமைப்புக்கான வடிவமைப்புப் போட்டிகள் நடத்தப் பெற்று, சிறந்த கட்டுமான அமைப்பு தேர்வு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும், இத்திட்டம் இந்த ஆண்டு தொடங்குவதற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(17) மதுரைச் சரகத்தின் காவல் துறைத் துணைத் தலைவர் DIG of Madurai Range அலுவலகக் கட்டடம் இந்த நிதியாண்டில் 17.50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(18) சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற பல காவல் நிலையங்களுக்கும் கழிப்பிட வசதி பல காலமாகச் செய்து தரப்படவில்லை. அதுபோன்ற, 61 காவல் நிலையங்களுக்கு இந்த நிதியாண்டில், 12 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பிடங்கள் கட்டித் தரப்படும்.

(19) அதேபோன்று, காவல் துறையின் அலுவலகங்களிலும், குடியிருப்புக் கட்டடங்களிலும், அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும் என்பதில், எங்கள் அரசு மிகுந்த கவனம் காட்டி வருகின்றது. 900 குடியிருப்புகள் மற்றும் அலுவலகக் கட்டடங்களுக்குப் பழுது பார்க்கவும், மின் இணைப்பு மற்றும் கழிப்பிடங்கள் கட்டித் தருவதற்கும் 73 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(20) தமிழகக் காவல் துறையின் பண் இசைக் குழு Police Band ஏற்கெனவே பிரசித்தி பெற்றதாக இருந்தாலும், மாவட்டம் மற்றும் மாநில அளவில் மிகச்சிறந்த குழுவாக அவற்றை மாற்றுவதற்குச் சிறப்புப் பயிற்சியும், நவீன இசைக் கருவிகளும், பணி யாளர்களுக்குப் புதிய சீருடைகளும், 74 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணியின் சிறப்பை உயர்த்துவதற்காக, ஒவ்வொரு மாவட்ட

அளவிலும், உதவி ஆய்வாளர் அந்தஸ்தில் Band Master பதவி உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(21) காவல் துறைக்குச் சொந்தமான ஊர்திகளையும், வாகனங்களையும் பராமரிக்கத் தற்போது 2 காவல் துறைச் சரகங்களில் மட்டும் தொழிற் பட்டறைகள் உள்ளன. காவல் துறை வாகனங்களின் பராமரிப்பு சிறப்பான முறையில் மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக மீதமுள்ள எல்லாச் சரகங்களிலும் தொழிற் பட்டறைகள் அமைக்கப்படும். மருத்துவத் துறையில் தற்போது உள்ள தொழிற் பட்டறைக் கருவிகளும் தளவாடங்களும் காவல் துறைக்கு மாற்றம் செய்து தரப்படுவதோடு, கூடுதலாகத் தேவைப்படும் கருவிகள் இத்துறைக்கு வழங்கப்படும்.

(22) காவல் துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் அரசு மருத்துமனைகளில் மட்டுமன்றித் தனியார் மருத்துவமனைகளில்

உயர் மருத்துவச் சிகிச்சை பெற்றுக்கொள்ள காவலர் சிறப்பு மருத்துவ நலத்திட்டம் Medical Insurance Scheme ஒன்றை இந்த நிதியாண்டில் இருந்து எங்கள் அரசு செயல்படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த, காவல் துறை இயக்குநர் கட்டுப் பாட்டில், உருவாக்கப்படும் சிறப்பு நிதிக்குத் தமிழக அரசு தனது பங்காக 50 இலட்சம் ரூபாயை வழங்கும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(23) அரசின் மற்ற துறைகளில் பணி புரிபவர்களுக்கு விடுமுறை கிடைப்பது போல, காவலர்கள் விடுமுறைகளை அனுபவிக்கின்ற வாய்ப்பு இன்றிப் பணியாற்றவேண்டிய சூழ்நிலை உள்ளது. அவ்வாறு பணியாற்றும் காவலர்களுக்குக் கூடுதல் நேர ஊதியமாக, அதாவது, Extra Time Remuneration ஆக 10 ரூபாய் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கூடுதல் நேர ஊதியத்தை 10 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்பதையும், இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 70 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(24) 950 ரூபாய்க்கும் அதிகமாக அடிப்படைச் சம்பளம் பெறுகின்ற அரசு அலுவலர்களுக்கு மட்டுமே Moped வாங்குவதற்குக் கடன் வசதி வழங்கப்படும் என்கிற விதியைக் காவல் துறைக்கு மட்டும் தளர்த்தி, 825 ரூபாய் அடிப்படைச் சம்பளம் பெறும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் Moped வாங்க அரசு கடன் வழங்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(25) காவலர்களின் குடியிருப்புகளில் அனைவருக்குமாகச் சேர்த்து, ஒட்டு மொத்தமாக ஒரே மீட்டர் அடிப்படையில் மின் கட்டணம் வசூலிக்கப்படுவதால், ஒவ்வொரு தடவையும் அதிகமாக மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய ஒரு சூழ்நிலையை மாற்றி அமைக்கவேண்டும் என்று காவலர்களின் குடும்பங்கள் பல

காலமாகக் கோரி வருகின்றார்கள். அவர்களது நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, ஒவ்வொரு காவலரும் அவரவர் தனித்தனியே பயன்படுத்தும் மின் அளவுக்கான குறைந்தபட்ச மின் கட்டணத்தைச் செலுத்தக்கூடிய முறை அமல் செய்யப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 13,932 காவலர்களின் குடும்பங்கள் பயன்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(26) போக்குவரத்துக் காவல் பிரிவில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் அனுதினமும் சாலைகளில் நின்றுகொண்டு, மிக இக்கட்டான சூழ்நிலைகளிலும் பணிபுரிவதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் சிறப்பு ஊதியம், இந்த ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்குத் தற்போது வழங்கப்படும் சிறப்பு ஊதியம் 3 மடங்காகவும், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் துணைக் கண் காணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஊதியம் 2 மடங்காகவும் உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு 15.40 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(27) காவல் பயிற்சி நிலையங்களில் திறமைமிக்கவர்களின் சேவை கிடைக்குமாறு செய்யவும், அவர்களின் பணி ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் அமல்படுத்தப்படும். தற்போது பயிற்சிப் பள்ளிகளில் பணி புரியும் அலுவலர்களுக்கு, அவர்களுடைய அடிப்படை ஊதியத்தில் 15 சதவீதம் சிறப்பு ஊதியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(28) கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஆயுதப் படை பிரிவைச் சார்ந்த கூடுதல் கண்காணிப்பாளர் பதவிகள், துணை ஆணையாளர் பதவிகளாக உயர்த்தப்படும்.

திறம்படச் செயலாற்றும் தீயணைப்புத் துறை

— மாண்புமிகு முதல்வர்

வளரும் சமுதாயத்தின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் அதிகரித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், தீயணைப்புத் துறையில் பணிபுரிபவர்களுக்குப் புதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்; பணியாளர்களின் அமைப்புகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்; பணியாளர்களின் பணி ஆர்வத்தை அதிகப்படுத்த நல்ல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதை எங்கள் அரசு நன்கு உணர்ந்து, கடுமையான நிதி நெருக்கடியிலும், நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அந்த வகையில், இந்த அரசின் சில முடிவுகளை எடுத்துரைக்க விழைகின்றேன்.

தற்போது தீயணைப்புத் துறை இயக்குநர் அலுவலகத்தில் 'தீ கட்டுப்பாட்டு அறை, Control Room இரண்டு பணி முறைகளில் மட்டும் இயங்கி வருவதை, மூன்று பணி முறைகளாக Three Shift System ஆக மாற்றியமைக்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. மூன்று பணி முறைகள் முறையே செயல்படுத்த, கூடுதலாகத் தேவைப்படுகின்ற ஒரு நிலையத் தீயணைப்பு அலுவலர், 4 முன்னணித் தீயணைப்போர், 3 தீயணைப்போர் ஆகியோர் விரைவில் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையில் பணி புரியும் 265 பணியாளர்களுக்கு மட்டுமே குடியிருப்பு வசதி அரசாங்கத்தால் செய்து தரப்பட்டுள்ளது. ஏனைய பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும் என்று சென்ற வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் சென்னை நகரம், பெரம்பலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 3 இடங்களில் கிட்டத்தட்ட 100 குடியிருப்புகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்குடியிருப்புகளைத் தமிழ்நாடு காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் HUDCO நிதி உதவியுடன் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் அமைந்துள்ள 222 தீயணைப்பு நிலையங்களில், 104 தீயணைப்பு நிலையங்கள் மட்டும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் நாமக்கல், செய்யாறு, ஆலங்குடி, கோவில்பட்டி மற்றும் நெல்லிக்குப்பம் ஆகிய 5 இடங்களில் தீயணைப்பு நிலையங்களுக்கான நிரந்தரக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களைவிட, நமது தமிழ்நாடு தீயணைப்புத் துறை திறம்படச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் திட்டங்களுக்கு 'நபார்டு' தலைவர் பாராட்டு

நபார்டு' வங்கியின் தலைவர் திரு பி. கோட்டையா, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை 6.4.1994 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் நாட்டில் விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாடு குறித்து விரிவாகப் பேசப்பட்டது. கிராமப் புறங்களில் கடன் வசதிகளை மீண்டும் நல்ல முறையில் கொண்டு வருவதிலும், விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் கிராமப்புறக் கைவினைஞர்கள் ஆகியோருக்குக் கடன் வழங்குவதிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழக விவசாயிகளுக்குச் சுலபமான முறையில் கடன் வசதி கிடைக்கச் செய்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நபார்டு வங்கியின் தலைவர் வெகுவாகப் பாராட்டினார். *1994-95-ஆம்* ஆண்டுக்கு மாநிலத்தின் ஆண்டுக் கடன் வசதித் திட்டம், ரூ.3,000 கோடிக்கு நபார்டு வங்கி முழு ஒத்துழைப்பு நல்கும் என திரு. கோட்டையா அவர்கள் உறுதியளித்தார்.

1994-95-இல் ஒரு இலட்சம் மகளிருக்குச் சுயவேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்துக்கு நபார்டு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். தமிழ் நாட்டில் தருமபுரி மாவட்டத்திலும் மற்றும் இதர மாவட்டங்களிலும் பெண்கள் சுயதொழில் முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நபார்டு தலைவர் வெகுவாகப் பாராட்டினார். விவசாயம், விவசாயம் சாராத துறைகளில் கிராமப்புற வேலைவாய்ப்புக்கான இந்தத் திட்டத்துக்கு முழு ஒத்துழைப்புத் தருவதாக இவர் உறுதி அளித்தார்.

மாநிலத்தில் தொடக்க வங்கிகளை உறுதிப்படுத்த நீண்ட காலச் செயல்முறை நிதியிலிருந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆதரவு கோரினார். இந்தக் கோரிக்கைக்கு முதலிடம் கொடுத்து பரிசீலிப்பதாக நபார்டு தலைவர் அவர்கள் கூறினார்.

மாநில நெசவாளர்கள் நிலையை உயர்த்த எடுக்கப்பட்டுள்ள சிறப்பான நடவடிக்கைகளை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கினார். மாநிலத்திலுள்ள நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் *1993-94*-இல் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு ரூ.*54.18* கோடிக்கு, கைத்தறித் துணிக்குத் தள்ளுபடி வழங்கப்பட்டதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கூறினார். நெசவாளர்கள் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டத்துக்கு நபார்டு தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டுமென, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

ஒருங்கிணைந்த கடற்கரையோர மேம்பாட்டுத் திட்டத்துக்கு நபார்டு வங்கி நிதிஉதவி அளிக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சந்திப்பின்போது கேட்டுக் கொண்டார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்தக் கோரிக்கை, உரிய முறையில் கவனிக்கப்படும் என்று நபார்டு தலைவர் அவர்கள் உறுதி அளித்தார்.

இராமநாதபுரம் மாவட்டம் பால்க் விரிகுடா பகுதியில் வசிக்கும் மீனவர்கள் மறுவாழ்வுத் திட்டத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டுமெனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். இந்தத் திட்டத்துக்கு முழு ஒத்துழைப்புத் தருவதாக விவசாயம், கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கியின் (நபார்டு) தலைவர் அவர்கள் உறுதி கூறினார்.

அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் சென்ற மாதம் தொடங்கிய நாள்முதல் (16.3.94), 20.4.94-ஆம் நாள் வரை மாண்புமிகு முதல்வர் முதலாக- அமைச்சர் பெருமக்கள் வரை சட்டப் பேரவையில் தத்தம் துறை குறித்து அறிவித்த சில முக்கிய அறிவிப்புகளும், அரசின் ஆக்கப்பணி களும் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன:

★ ஆறாம் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்குத் தென்னங்கன்று வளர்க்கக் கொடுக்கப்படுவது போல்- தென்னை வளராத நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்குத் தேக்கு அல்லது சட்டி மரக்கன்றுகள் வழங்க அரசு ஆவன செய்யும்.

—திரு. கு.ப. கிருஷ்ணன்
(வேளாண்மைத் துறை அமைச்சர்)

★ தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை எப் போதும் சமநிலையானதாக இருந்து வருகிறது; சமச்சீரான பொருளாதாரக் கொள்கையைத்தான் கடைப்பிடித்து வருகிறோம்; எவ்வளவு நிதி நெருக் கடி ஏற்பட்டபோதிலும் நாம் எப்போதும் அதிகப் பற்று (ஓவர் டிராஃப்ட்) வாங்கியதே இல்லை.

—டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்
(நிதியமைச்சர்)

★ மூடப்பட்டுள்ள 56 கிராமிய நூற்பு மையங் களை உடனடியாக நவீனப்படுத்தித் திறக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி
(கதர்-கிராமத் தொழில் துறை அமைச்சர்)

★ 'டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா தொழிலாளர்கள் மறுவாழ்வு நிதி' என்ற பெயரில் மறுவாழ்வு நிதியொன்றினை ஏற்படுத்தி மானிய மாக ஒரு கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது அரசு. நலிந்த தொழிற்சாலை ஆட்குறைப்புக் காரண மாகப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மறு வாழ்வு போன்றவைகளுக்கு மற்றொரு மறுவாழ்வு நிதி ஏற்படுத்துவது குறித்து, அரசு பரிசீலித்து வருகிறது.'

—திரு. அ.மா. பரமசிவன்
(தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)

★ பெரிய பாளையத்தம்மன் அருள்மிகு பவானி யம்மன் திருக்கோயிலில், பக்தர்களுக்குத் தேவை யான வசதிகளைச் செய்து தரும் பொருட்டு ரூ.71 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் வேலைகள் நடந்து வருகின்றன; ஆறுமாத காலத் திற்குள் இந்தப் பணிகள் நிறைவுறும்.

—திரு. டி.வி. நடேசன் பால்ராஜ்
(இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்)

★ தமிழ்நாடு முழுவதும் 5 வயது முதல் 15 வயதுக்கு உட்பட்ட மாணவ மாணவிகளுக்குப் பள்ளிக்கூடங்களில் சுகாதார முகாம்கள் நடத்தப் படும். மருத்துவமனைகளுக்கு மருந்து விநியோக முறை சீராக இருக்க வேண்டும் என்பதற்காக மருந்து வாரியம் முதல்வர் அவர்களால் அமைக்கப் பட்டுள்ளது; இது சென்னையைத் தலைமை இட



தமிழ்நாட்டில் முதலீடு செய்ய, தொழிலதிபர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அழைப்பு

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி குறித்து இந்திய வர்த்தகத் தொழில் சபை கூட்டமைப்புத் தலைவர் திரு கோவிந்த் ஹர் சிங்கானியா தலைமையில் 9 பேர் அடங்கிய குழு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை 7.4.94 அன்று சென்னையில் சந்தித்து ஒரு மணி நேரம் பேசினார்கள்.

சென்னைத் தொழில் வர்த்தகச் சபையின் தலைவர் திரு என். சீனிவாசன், துணைத் தலைவர் திரு என். லட்சுமணன், செயலர் திரு என். கண்ணன் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதை மற்ற மாநிலங்களில் நடத்திய சிறப்பான சாலைக் கண்காட்சி மூலம் விளம்பரப்படுத்தியதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்தக் குழு பாராட்டியது.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்கத் தேவை யான அடிப்படை வசதிகள், அமைதியான தொழில் உறவு, சூழல் மற்றும் ஏராளமான தொழில்நுட்ப நிபுணர்கள் இருப்பதைத் தீவிர மாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்திய வர்த்தகத் தொழில் சங்கத்தின் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

புதிய தொழில் தொழில் தொடங்கத் தேவை யான அடிப்படை வசதிகளில் குறிப்பாக மின் சாரம் கிடைப்பதில் தமிழகம் அதிக கவனம் செலுத்துகிறது என்பதைக் குழுவினரிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார். சாலைகள் மற்றும் துறைமுக மேம்பாடு போன்ற அடிப்படை வசதிகள் மேம்பாட்டில் தனியார் துறையினர் அதிகமாகப் பங்கேற்பதை வரவேற்ப தாக மாண்புமிகு முதல்வர் குறிப்பிட்டார்.

மின்சாரத்தைப் பொருத்தமட்டில், அடுத்த ஆண்டில் தமிழ்நாடு மின் இணைப்பில் 1000 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகச் சேர்க்கப்படும். மேலும், அடுத்த 5 அல்லது 6 ஆண்டுகளில் சுமார் 5 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு, தமிழகம் மின்துறையில் உபரி நிலையை அடைந்துவிடும்.

சோளிங்கநல்லூர் அருகே உருவாக்கப்படும் சென்னைத் தொழில் பூங்கா, சர்வதேச அளவுக்கு அடிப்படை வசதிகளைக் கொண்டதாக இருக்கும் என்பதைக் குழுவினரிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார். சென்னையில் நிரந்தர வர்த்தகக் கண்காட்சி வளாகம் அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இந்தக் கண்காட்சி வளாகம் தனியார் துறையின் முழு ஒத்துழைப் புடன் உருவாக்கப்படும் என்பதையும் குழு வினரிடம் உறுதியளித்தார்.

தென்னக எரிவாயு இணைப்புத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதில் குழு ஆர்வமாக இருக்கிறது. தமிழகத்துக்குத் தேவையான எரிவாயு குறித்து தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து, குழாய் இணைப்புக்கு உரிய தூழாய் பதிப்பு பற்றி ஆலோசனைத் தெரிவிக்கும் என மாண்புமிகு முதல்வர் கூறினார்.

மலேசியாவிலிருந்து எரிவாயு இறக்குமதி வாய்ப்பு குறித்தும் பரிசீலிக்கலாம் என மாண்புமிகு முதல்வர் கருத்து தெரிவித்தார். தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரும் தொழில் அதிபர்களுக்குத் தமிழக அரசு முழு ஒத்துழைப்பை யும் அனைத்து உதவிகளையும் வழங்கும் என குழுவினரிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதி அளித்தார்.

மாகக் கொண்டு இயங்கும். நடப்பு ஆண்டில் 1.34 கோடி குழந்தைகளுக்கு மருத்துவ உதவித் திட்டம் செயல்படுத்தப்படும்.

—திரு. எஸ். முத்துசாமி
(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

★ கூட்டுறவு நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்கு இம்மாதம் (மார்ச்) முதல் தேதியிலிருந்து ரூ.600 என்றிருந்த சம்பளம் ரூ.750 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

—திரு. கா.ப. பட்டாபராமன்
(கூட்டுறவுத்துறை அமைச்சர்)

★ சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மூன்று நகராட்சிகளையும் மாநகராட்சிகள் ஆக்கிட - அரசு கொள்கையளவில் முடிவெடுத்துள்ளது.

—திரு. டி.எம். செல்வகணபதி
(உள்ளாட்சித்துறை அமைச்சர்)

★ நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில், நிலச் சீர்திருத்த வழிப்படி, தனியார்களிடமிருந்து 470 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. இவற்றில் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களின் வழக்கு முடிந்ததும், உபரி நிலம் எடுக்கப்பட்டு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். நிலத்திமிங்கிலங்களின் பினாமி நிலங்களைக் கைப்பற்றி ஏழைகளுக்கு வழங்க 3.10.1991-இல் அரசு நிறைவேற்றிய சட்ட முன் வடிவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் இதுவரை கிடைக்கவில்லை.

—திரு. எஸ்.டி. சோமசுந்தரம்
(வருவாய்த்துறை அமைச்சர்)

★ நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள எல்லாக் கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிப்பதில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது. அதேபோல் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், நோட்டுகள், தென்னங்கீற்று, விறகு ஆகியவற்றின் மீதுபோடப் பட்டுள்ள விற்பனை வரிகளும் நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா

★ தமிழ்நாட்டில் காளான் வளர்ப்புத் தொழிலை ஊக்கப்படுத்தி, அதிகக் காளான் உற்பத்திக்குக் கடனுதவிகள் வழங்க, இந்த ஆண்டுக்கு ரூ.69 இலட்சத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்.

—திரு. கு.ப. கிருஷ்ணன்
(வேளாண்மைத்துறை அமைச்சர்)

★ பொதுமக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் நிறைந்த போக்குவரத்து வசதியினைத் திறமையோடும், தொண்டுள்ளத்துடனும் செய்து கொடுப்பது 19 போக்குவரத்துக் கழகங்களின் குறிக்

மனம்

● மனத்தை அளக்க மனமே கருவி. கூர்ந்து கவனிக்கும் சக்தி நம்மிடம் உண்டு. அதை உட்புறமாகத் திருப்பினால் மனத்தைப் பற்றிய விவரங்கள் நமக்குப் புலனாகும் மனத்தின் ஆற்றல்கள் சிதறிப்போன ஒளிக் கிரணங்கள் போன்றவை. அக்கிரணங்களை ஒன்றுபடச் செய்தால், சுடரொளி கிடைக்கும். இதுவே அறிவு கிடைக்க ஒரே வழி

கோளாகும். 1993-94-ஆம் நிதியாண்டில் ஜனவரி மாதம் வரை ரூ.69.22 கோடி செலவில் 1,125 புதிய பஸ்களைப் போக்குவரத்துக் கழகங்கள் அறிமுகப்படுத்தியுள்ளன. இதில் பழைய பஸ்களுக்குப் பதிலாகப் புதிய பஸ்களை மாற்றிய வகையில் 1011 பஸ்களும், புதிய வழித்தடங்களில் இயக்கப்பட்ட 114 பஸ்களும் அடங்கும். புதிய பஸ்களை அறிமுகப்படுத்தியதன் பயனாக 117 கிராமங்களில் உள்ள சுமார் 1.20 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். அனைத்துக் கோயில்களையும் ஒன்றாக இணைத்து பஸ்களைவிட அரசு பரிசீலித்து வருகிறது.

—திரு. கே.ஏ. செங்கோட்டையன்
(போக்குவரத்துத்துறை அமைச்சர்)

★ வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவதில் முன்னுரிமைதர வேண்டும் என்ற முதல்வர் உத்தரவையடுத்து 1992-93-ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 6 ஆயிரத்து 537 வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், ஜெர்மன் வங்கி உதவியோடு மேலும் 110 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்படும்.

—திரு. எஸ்.டி. சோமசுந்தரம்
(வருவாய்த்துறை அமைச்சர்)

★ தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் ஒரு சவரனுக்கு ரூ.2,400 கடன் வழங்கப்படுகிறது.

—திரு. கா.ப. பட்டாபிராமன்
(கூட்டுறவுத்துறை அமைச்சர்)

★ முதல்வர் ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்தில் இந்த ஆண்டு புதிதாக 20 சொகுசு குளிர் சாதன பஸ்கள் கழிப்பிட வசதியுடன் கட்டி விடப்படும். 15 ஆண்டுகள் விபத்துகளே இல்லாமல் தொடர்ந்து பணிபுரிந்திருந்தால், அந்த ஓட்டுநருக்கும் - ஆண்டு முழுவதும் உயர்ந்தபட்ச வசூல் தொகை ஈட்டிய நடத்துநர்களுக்கும் டாக்டர் புரட்சித்தலைவி விருது வழங்கப்படும்.

—திரு. கே.ஏ. செங்கோட்டையன்
(போக்குவரத்துத்துறை அமைச்சர்)

★ தமிழ்நாட்டில் பத்திரப் பதிவுத் துறையில் முதல்வர் மேற்கொண்ட சிறப்பான நடவடிக்கைகளினால் - இந்த ஆண்டு பத்திரப் பதிவுத் துறை ரூ.470 கோடி என்ற இலக்கை மீறி, ரூ.489 கோடி வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளது. திருச்சி மாவட்டம், செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் ஆகியவை இரண்டாகப் பிரிக்கப்படும்; இதற்காக ஓர் உயர்மட்டக் குழுவை நியமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

—திரு. எஸ்.டி. சோமசுந்தரம்
(வருவாய்த்துறை அமைச்சர்)

★ 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற புரட்சித் தலைவி அரசின் குறிக்கோளை அடைவதில் அரசுத் துறை மற்றும் தனியார் துறையின் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டு, அதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் அரசால் எடுக்கப்படும்; 1994-95-ஆம் ஆண்டில் பொதுத்துறை உதவியால் அபிவிருத்தி செய்யப்படும் வீடுகட்டும் திட்டத்திற்கான முதலீட்டினை ரூ.425.81 கோடிக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

—திரு. எஸ். ரகுபதி
(வீட்டுவசதித்துறை அமைச்சர்)

★ போக்குவரத்துத் துறையின் பணிகளை மேம்படுத்துவதற்காக ரூ.81.23 இலட்சம் அளவிலான, 1994-95-ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டங்களுக்கு டாக்டர் புரட்சித்தலைவி அரசு அனுமதியளித்துள்ளது.

சென்னையில் 69 பெண்களுக்கு மோட்டார் டாக்சி ஓட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 30 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் 4 ஆயிரத்து 596 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 1994-95-இல் ரூ.7 கோடியே 59 இலட்சம் செலவில் 640 குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன.

—திரு. கே.ஏ. செங்கோட்டையன்
(போக்குவரத்துத்துறை அமைச்சர்)

★ தனியார் வசம், பல் மருத்துவக் கல்லூரி அமைக்க அனுமதி கொடுப்பதில்லை என்று அரசு கொள்கை முடிவெடுத்திருக்கிறது.

—திரு. எஸ். முத்துசாமி
(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

★ வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பிக்க ரூ.27 இலட்சத்தைச் செலவிட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்.

—திரு. மு. தென்னவன்
(செய்தித்துறை அமைச்சர்)

★ தரமணியிலிருந்து வில்விவாக்கம் வரை துரித ரயில் திட்டத்தை விரிவாக்கும் பணி அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இதைப் பாதாள ரயில் திட்டம் போல மாற்றுவது குறித்து அரசு தீவிரப் பரிசோதனை செய்து வருகிறது.

—திரு. எஸ். ரகுபதி
(வீட்டுவசதித்துறை அமைச்சர்)

★ சென்னை-குமரி கடற்கரைச் சாலை அமைப்புப் பணி விரைவில் பூர்த்தியடையும். இரு வழிப் பாதை கொண்ட தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு வழிப் பாதைகளாக்கப்படும். சென்னைக்கு, அடுத்த ஆண்டே கிருஷ்ணா நதிநீர் கிடைக்கும். அதற்கான ஏற்பாடுகள் முடியும் தருவாயில் உள்ளன. கிராமச் சாலைகள் மேம்படுத்தப்படும். இந்த ஆண்டும் ஜூன் 12-ஆம் நாள் மேட்டூர் அணை திறந்து விடப்படும்.

—திரு. எஸ். கண்ணப்பன்
(பொதுப்பணித்துறை அமைச்சர்)

★ தமிழக அரசுக்குச் சொந்தமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் 3 கப்பல்கள் சொந்தமாக உள்ளன. மேலும் 13 கப்பல்கள் வாடகைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மூலமாகத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலக்கரி கொண்டு வரப்படுகிறது. அனல்மின் நிலையங்களுக்குக் கடல் வழியாக எடுத்து வரப்படும் நிலக்கரியின் அளவு எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்பதைக் கவனத்தில் கொண்டு புதிதாக 3 சரக்குக் கப்பல்கள் வாங்கப்படும்.

—திரு. கே.ஏ. செங்கோட்டையன்
(போக்குவரத்துத்துறை அமைச்சர்)

மேதினி விழித்தது!

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங் காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டனர். ஆண்டை-அடிமை, உயர்ந்தவன்-தாழ்ந்தவன், மதகுரு-பக்தன், மிராசு-உழவன், பிரபு-பணியாள், முதலாளி-தொழிலாளி இவர்களிடையே ஏற்பட்ட வார்க்கப் போராட்டங்களே உலக வரலாறாகும்.

இந்தப் போராட்டங்களின் வரலாற்றை நன்றாக அலசிப் பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள்-முதலாளிகள் கொடுங்கோன்மை வெகு நாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான் உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினார். அவருடைய தெளிந்த முடிவு, ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது. நலிவுற்ற உள்ளத்தைப் புலியுள்ளமாக்கியது; கசங்கிய கண்கள் கனலைக் கக்கின; மேதினி விழித்தது; மேதினம் பூத்தது!

சூரிய ஒளி மூலம் தெரு விளக்கு



11 வாட்ஸ் சக்தியுள்ள தெருவிளக்கு ஒன்றின் விலை ரூ. 25,000/- நாளொன்றுக்கு மின்சக்தி சேமிப்பு 30 யூனிட்டுகள் தமிழ் நாட்டில் இதுவரை நிறுவப்பட்டுள்ள தெருவிளக்கு எண்ணிக்கை : 984

TEDA

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

தமிழ் நாடு எரி சக்தி வளர்ச்சி நிறுவனம்

'டெம்பிள் டவர்' 25, வடக்கு மாட வீதி,
மைலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி எண் : 74845 & 74846

DIPR/392/D15/94

காவல்துறையின் சாதனைகள்! —மாண்புமிகு முதல்வ

* தமிழ்நாட்டில் முன்பு சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இப்போது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டார்கள். விடுதலைப் புலிகளைத் தமிழ் மண்ணிலிருந்து அப்புறப்படுத்தும் முயற்சியில் சிறப்பான வெற்றியைப் பெற்றிருக்கிறோம். சட்டம்ஒழுங்கைப் பராமரிப்பதில் இது ஒரு சிறந்த சாதனை.

* பஞ்சாப், காஷ்மீர், மற்றும் வடகிழக்கு மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் பயங்கரவாதத் தொந்தரவு மிகவும் குறைவு.

* பெண் காவலர் நிலையங்கள் அமைப்பதில் தமிழகம் வழிகாட்டியாக இருக்கிறது. இது உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது. ஒருவேளை பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் திறக்கப்பட்டதற்கு உந்துதலாகத் தமிழகம் இருந்திருக்கலாம்.

* யானைத் தந்தங்கள் மற்றும் சந்தனக் கொள்ளையன் கொலைகார வீரப்பனின் கூட்டாளிகள் பெரும்பாலும் பிடிக்கப்பட்டு விட்டனர். இப்போது அவன் தனிமைப் படுத்தப்பட்டு மனமொடிந்த நிலையில் உள்ளான் விரைவில் அவனும் பிடிபட்டு விடுவான். அவனைக் கைது செய்யும் பணி விரைவில் நிறைவுறும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

* எங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தனிப்பட்ட முறையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அவர்கள் இந்த நாட்டின் அன்பிற்குரிய தலைவர் ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்துவிட்டார்கள். இந்த நாட்டின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் அவர்கள் ஊறு விளைவிக்கிறார்தள். ஆகவேதான், இதை ஒரு தேசியக் கடமையாகக் கருதி நாங்கள் அவர்களை எதிர்க்கிறோம்.

* அதில் மத்திய அரசு தன்னுடைய பங்கை நிறைவேற்ற வேண்டும் எங்களுக்குத் துணை நிற்கவேண்டும் என்று கேட்கிறோம்.

* எந்த வகையிலும் இது ஒரு தேசிய அளவிலான பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும் கருதப்பட வேண்டும் என்று பலமுறை தெளிவுப்படுத்தியுள்ளேன். ஆனால் மத்திய அரசு திரும்பத்திரும்ப தனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்பது போலவும், இது ஏதோ தமிழக அரசு தன்னுடைய அதிகார வரம்புக்குள்ளே தானே செய்யவேண்டிய பிரச்சினை போலவும், இது ஏதோ தமிழகத்தை மட்டும் பாதிக்கின்ற பிரச்சினை என்பது போலவும் நடந்து கொண்டுள்ளது.

* விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை ஒடுக்குவது என்பது தமிழக அரசின் பொறுப்பு மட்டுமல்ல மத்திய அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஆனால், இப்பிரச்சினையில் நாட்டின் பிரதமர் பேசமாட்டேன் என்கிறார், உள்துறை அமைச்சரோ பொறுப்பைத் தட்டிக்கழிக்கப் பார்க்கிறார். மொத்தத்தில் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு இரட்டை நிலை எடுத்துச் செயல்படுகிறது.

* நாட்டின் பாதுகாப்புடன் இணைந்த ஒரு பிரச்சினையை அவர்கள் அரசியலாக்கப் பார்க்கிறார்கள். மத்திய ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களே நாட்டின் இறையாண்மையைப் பற்றி, இந்த நாட்டைச் சின்னாபின்னமாக்க ஒரு போராளிக் கும்பல் முயல்வதைப் பற்றி அக்கறை காட்டவில்லையென்றால் இந்த நாட்டின் எதிர்காலம் என்னாவது?

* கடற்கரையோரப் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்து, முழு அளவிலான ஒரு பாதுகாப்புத் திட்டம் ஒன்று ரூ.12 கோடி செலவில் வகுக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

* கோவில்களையும் அவற்றின் சொத்துக்களையும், மற்றும் அவற்றின் விலைமதிப்புள்ள பொருட்களையும் பாதுகாப்பதற்காக இவ்வரசு விரைந்து செயல்பட்டு வருகிறது 'கோவில்கள் பாதுகாப்புப்படை' என்ற பெயரில் ஒரு தனிப் படையை இப்பணிக்கெனவே அரசு ஏற்படுத்தியுள்ளது.

— 21.4.94 அன்று சட்டப்பேரவையில் வைத்த காவல்துறை மானியக் கோரிக்கை மற்றும் உரையிலிருந்து.



நம் கடமை!

நம்முடைய உடலும் உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

மூதறிஞர் இராஜாஜி

★ இந்த நிதியாண்டில், நலிவடைந்த ஆலைகளை நவீனப்படுத்த ரூ.3.79 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆலைகளின் மேம்பாட்டிற்காக அரசின் பங்குத்தொகையாக ரூ.5 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் தாமே முன்வந்து ஓய்வுபெறும் வசதிக்காக ரூ.4.75 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. உரிய பருவத்தில், தேவையான அளவிற்குக் குறைந்த விலையில் வாங்கும் பொருட்டுக் கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான நிதி ஆதாரமாக ரூ.2 கோடி அளிக்க முதல்வர் ஆணையிட்டிருக்கிறார்.

—திரு. இ. மதுசூதனன்
(கைத்தறித்துறை அமைச்சர்)

★ பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில், பிள்ளைவாயில் என்ற ஊரில் ரூ.30.90 இலட்சம் செலவில் 150 நரிக்குறவர்களுக்கு வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

—திரு. டி. ஜெயக்குமார்
(மீன்வளத்துறை அமைச்சர்)

★ அடித்தள மக்களின் இதயமாக, இதய வீணையாக அண்ணல் அம்பேத்கர் விளங்குகிறார்; இனி, அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாள் விழா, டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான அரசு சார்பில் கொண்டாடப்படும்.

—திரு. மு. தென்னவன்
(செய்தித்துறை அமைச்சர்)

★ சென்னையில் உச்சநீதி மன்ற ஆயம் ஒன்று அமையும் வரையில் இந்த அரசு விடாது முயற்சிகள் மேற்கொள்ளும். அண்மைக்காலங்களில் இறுதி நீதி வழங்குதலில் பெரும் செலவு வாய்ப்பதுடன் மிகுந்த காலதாமதமும் ஏற்படுகிறது. விரைவான முறையிலும், குறைந்த செலவினத்திலும் ஏழை எளிய மக்களுக்கு நீதி கிடைப்பதற்குரிய வழிவகைகளை இவ்வரசு கண்டறியும்.

—திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி
(சட்டத்துறை அமைச்சர்)

★ சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு நிர்வாக முறைக்கு வகை செய்வதோடு - இவ்வமைப்புகளில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியில் 3-இல் ஒரு பங்கு இடம் மகளிருக்கு ஒதுக்கவும் அரிசனங்கள் மற்றும் பழங்குடியினருக்கு அங்குள்ள மக்கள் தொகைக்கேற்ப இடங்களை ஒதுக்கவும் புதிய பஞ்சாயத்துச் சட்டம் வகைசெய்யும். புதிய ஊராட்சி அமைப்புகளின் பதவிக்காலம் 5-ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்படுகிறது.

— திரு டி.எம். செல்வகணபதி
(உள்ளாட்சித்துறை அமைச்சர்)

★ தென் சென்னையில் அறிவியல் நகரம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. கல்லூரி மாணவர்கள் ஒரு பட்ட வகுப்பில் (முதுநிலை அல்லது இளநிலை) படித்துக் கொண்டிருக்கும் போதே மாலை நேரத்தில் மேலும் ஒரு பட்ட அல்லது பட்டய வகுப்புப் படிக்க அனுமதிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு கிட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெயரில் திறந்தவெளி பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்படும். பின்தங்கிய மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, முதல்வர் பெயரில் சீர்மிகு பள்ளி என்ற பெயரில் மாதிரிப் பள்ளி அமைக்கப்படும்.

—திரு. கே. பொன்னுசாமி
(கல்வித்துறை அமைச்சர்)

★ விடுதலைப்புலிகள் இயக்கத்தின்மீது மத்திய அரசு விதித்துள்ள தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை 20.4.94 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன் மொழிந்தார். விடுதலைப்புலிகள் இயக்கத் தடையை ஏன் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்பதற்கான காரண காரியங்கள் அத்தீர்மானத்தில் விவரிக்கப்பட்டிருந்தன.

★ "அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் விளைவாக நாடு முழுவதும் இனக்கலவரம் ஏற்பட்டபோது, தமிழ்நாடு மட்டும் விதிவிலக்காகப் பொது அமைதி காத்தது. இருப்பினும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வதந்திகளாகப் பரப்பி உணர்வுகளைத் தூண்டி வன்முறைக்கு வித்திட்டு, மக்களின் உயிருக்கும் உடமைக்கும் ஊறு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதை அனைவரும் கண்டிக்க வேண்டும்" என்று 20.4.94 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

★ தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை ஆகிய 3 மாநகராட்சிகள் ஏற்கெனவே உள்ளன. இதுவரை நகராட்சிகளாக இருந்த திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய 3 நகரங்களும் மாநகராட்சிகளாக ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் மாற்றப்பட்டு உள்ளன.

—திரு. டி.எம். செல்வகணபதி
(உள்ளாட்சித்துறை அமைச்சர்)

★ சென்னை மாநகரில் ஏறத்தாழ 24,000 குடும்பங்கள் நடைபாதையில் வசித்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நடைபாதையில் வசிக்கும் அந்தக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.261.80 இலட்சம் செலவில் திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது.

—திரு. எஸ். ரகுபதி
(வீட்டுவசதித்துறை அமைச்சர்)

★ சென்னை அருகே ரூ.10 கோடி செலவில் கடல் நீரிலேயே உலவும் கடல்வாழ் உயிரியல் பூங்கா ஒன்று அமைக்க முதல்வர் திட்டமிட்டு உள்ளார். தனியாருடன் சேர்ந்து கூட்டுத்துறையில் இப்பூங்கா அமைக்கப்படும்.

—திரு. டி. ஜெயக்குமார்
(மீன்வளத்துறை அமைச்சர்)

★ மழை வெள்ளம் பாதித்த பகுதிகளில் நில வரியைத் தள்ளுபடி செய்ய அரசு உத்தரவிட்டு உள்ளது. குறுகிய கால விவசாயக் கடன்களை மத்திய அரசு கடனாக மாற்றவும் அரசு அறிவித்து உள்ளது.

—திரு. எஸ்.டி. சோமசுந்தரம்
(வருவாய்த்துறை அமைச்சர்)

★ எம்.ஜி.ஆர். நெல் அதிக விளைச்சல் செய்யும் விவசாயிகளுக்கு ஜெயலலிதா பொற்பதக்கம் 10 ஆயிரம் ரூபாய் மதிப்பில் ஆண்டுதோறும் வழங்கப்படும். விவசாயிகளுக்கு டீசல் என்ஜின்கள் வாங்க 4 ஆயிரம் ரூபாய் மானியம் வீதம் 2 கோடி ரூபாய் வழங்கப்படும். கந்தர் கோட்டையில் 4 கோடி ரூபாய் செலவில் முந்திரித் தோட்டம் அமைக்கப்படும். பண்ணைக் கழிவுகளை உயிரின உரமாக்கும் பயிற்சி ரூ.30 இலட்சம் செலவில் உழவர் பெருமக்களுக்கு வழங்கப்படும். 70 ஆயிரம் சிறு-குறு விவசாயிகளுக்கு 60 ஆயிரம் எக்டேரில் ஊட்டமேற்றிய தொழு உரம் பயன்படுத்த 1.80 கோடி ரூபாய் வழங்கப்படும்.

—திரு. கு.ப. கிருஷ்ணன்
(வேளாண்மைத்துறை அமைச்சர்)

★ அரசுக்குச் சொந்தமான ஆவின் நிறுவனம், முதன்முறையாக 6 கோடி ரூபாய் ஈட்டியுள்ளது. தமிழ்நாட்டில், கிராமப்புறப் பெண்களின் முன்னேற்றம் கருதி, அனைத்து மகளிர் ஆரம்பப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படும். எதிர்காலத்தில், பஞ்சாயத்துக்கு ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தப்படும்.

—திரு. ஜனார்த்தனன்
(பால்வளத்துறை அமைச்சர்)

~ பூம்புகார் ~

தமிழகத்தில் உள்ள பாரம்பரியம் மிகுந்த கைவினைப்பொருட்கள் முன்னேற்றத்தையும் கைவினைஞர்களின் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றையும் கருத்திற்கொண்டு 'பூம்புகார்' நிறுவனம் 1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தில் 19 விற்பனை நிலையங்கள் மூலம், தமிழகத்தின் தொன்மை வாய்ந்த அரிய கலைப்படைப்புகள் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன. தமிழகத்தில் மட்டுமில்லாமல், திருப்பதி, பெங்களூர், புதுடெல்லி, கல்கத்தா போன்ற பிற மாநிலத்தில் -உள்ள முக்கிய நகரங்களிலும் இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் உள்ளன.

பித்தளை, பஞ்சலோகம், மரச்சிற்பங்கள், கற்களால் ஆன கலைப்பொருட்களைத் தயாரிக்கும் 9 உற்பத்தி நிலையங்களையும் இந்நிறுவனம் நடத்தி வருகிறது. உற்பத்தி நிலையங்களில் கைதேர்ந்த கைவினைஞர்கள் உற்பத்திப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

1973-74-ஆம் ஆண்டு தொடங்கியபொழுது இந்நிறுவனத்தின் விற்பனை ரூ.53 இலட்சம் என்ற அளவில் இருந்தது. இது படிப்படியாக உயர்ந்து 1992-93-இல் ரூ.700.14 இலட்சத்தை எட்டியுள்ளது. இதுபோலவே உற்பத்தியும் ரூ.7.73 இலட்சத்திலிருந்து ரூ.150 இலட்சத்திற்கு 1992-93-ஆம் ஆண்டில் எட்டியுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் ரூ.750 இலட்சம் விற்பனையும் ரூ.160 இலட்சம் உற்பத்தியையும் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம் தனது விற்பனை மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை தவிர தமிழகத்திலும் மற்றும் அண்டை மாநிலங்களிலும் உள்ள திருக்கோயில்களுக்குத் தேவைப்படும் தங்கத்தேர், வெள்ளித்தேர், பித்தளை உண்டியல்கள், பித்தளை மணிகள் மற்றும் வாகனங்களை உற்பத்தி செய்து வழங்கும் சிறப்புப் பணியையும் மேற்கொண்டு வருகிறது.

மே நாள் புரட்சித் திருநாள்!

குனிந்த தலைகள் நிமிர்ந்த நாள்!-ஒரு
கொள்கை முழக்கம் எழுந்தநாள்!
இணைந்த கரங்கள் உயர்ந்த நாள்! - ஓர்
எழுச்சி இயக்கம் பிறந்த நாள்!

உழைக்கும் கரங்கள் உயர்ந்தநாள்! - ஓர்
உரிமை கீதம் பிறந்த நாள்!
துளைக்கும் கவலை தொலைந்தநாள்! - பழந்
துயரக் கதைகள் மறைந்த நாள்!

முதுகு முளைத்தது இன்றுதான் - உயிர்
மூச்சுப் பிறந்தது இன்றுதான்
சிறகு முளைத்தது இன்றுதான் - சுய
சிறைகள் தகர்ந்தது இன்றுதான்.

மேதின நாளொரு காவியம்! - அதில்
மேதினி காண்பது ஜீவியம்!
சாதனை புரட்சியின் காரியம் - எனச்
சாட்சி உரைத்தது வானகம்!

வியர்வையில் வெற்றி மணக்கவும் - புது
வேகக் கவிதைகள் பிறக்கவும்
புயலாய் எழுந்தது மானுடம் - அதைப்
போற்றிப் புகழுக யாவரும்!

கவிஞர் இளந்தேவன்

கோடி செலவில் கூட்டுத்துறையில் தொடங்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். மேலும் கடலூரில் நிலக்கரியைக் கொண்டு இயங்கும், 1000 மெ.வா. மின் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு திட்டத்தையும், நெய்வேலியில் ஒரு 250 மெ.வா. திறன் கொண்ட லிக்னைட் திட்டத்தையும், தனியார் துறையில், ஏற்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளோம். 300 மெ.வா. திறன் கொண்ட எரிவாயுவால் இயங்கும் ஒரு மின்திட்டம் தனியார் துறையில் நாகப்பட்டினத்தில், ஏற்படுத்த ஊக்கம் அளித்து வருகிறோம். நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட இதுபோன்ற மின் நிலையங்கள் வடசென்னையிலும், தூத்துக்குடியிலும் தனியார் துறையின் பொறுப்பில் விடப்படும்.

எதிர்காலத்திற்குத் தேவைப்படும் போதுமான மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கோடு, கூடுதல் மின்சாரம் பெருக்கத்திற்கான திட்டங்களை துணிவோடு நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதை இவற்றால் நீங்கள் காண முடியும். கூடங்குளம் அணுமின்சாரத் திட்டத்தையும், நெய்வேலியில் 3-வது சுரங்கத் திட்டத்தையும் விரைவாகத் தொடங்கும் வகையில் மத்திய அரசு பரிசீலனை செய்யும் என்று நாங்கள் நம்புகின்றோம். கைகா அணு மின்சாரத் திட்டத்தில் நாங்கள் பங்கெடுக்க முடிவு செய்திருக்கிறோம். 10 ஆண்டுகாலத்திற்குள் 5,000 மெ.வா. மின்சாரத்தைக் கூடுதலாகப் பெறமுடியும் என்று உறுதியாக நம்புகிறோம். மின்உற்பத்தித் திட்டத்திற்கு, அதிக முன்னுரிமை வழங்கும் அதே நேரத்தில், மின்விநியோகப் பணிகளின் தரம் பற்றிய பிரச்சினையையும் நாங்கள் ஒதுக்கி விடவில்லை. தமிழ்நாட்டில், மின் விநியோகப் பணியை மேம்படுத்த ஒரு பெரும் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியோடு மேற்கொள்ளவும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

மின்சாரப் பிரச்சினை பற்றி விவாதிக்கின்ற இந்த நேரத்தில் தென் மாநில எரிவாயுத் தொகுப்பு அமைப்பு என்பது, தென்மாநிலங்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திட்டம், திட்டம் என்னும் நிலையிலிருந்து விரைவில், செயலாக்க நிலையை அடைய வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். பாம்பே ஹை (Bombay High) பகுதியில் பெறப்படும் உபரியான எரிவாயுவைக் கொண்டு, தொடக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். ஓமன், அல்லது ஈரானிலிருந்து கடலுக்குக் கீழ், குழாய் மூலம் எரிவாயுவைக் கொண்டுவந்து விநியோகிப்பதே முடிவான தீர்வாக அமையும்.

இத்திட்டத்தைத் தொடங்குவதற்கு தென்மாநிலங்கள் கூட்டாக முதலீடு, செய்யலாம் என்ற யோசனையை நான் தான் முதன்முதலில் கூறினேன். தென் மாநிலங்களில் புதிய தொழில் வளர்ச்சிக்கான முன்னோடித் திட்டமாக, இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை மத்திய அரசு உணர்ந்து கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

இந்தத் தொழில் முதலீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் அமைய வேண்டும் என்றால், போக்குவரத்து வசதிகள் மேம்பட்ட வகையில் இருக்க வேண்டும் என்பது அவசியம். ரூ.880 கோடி செலவில் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தை, நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு குடும்ப நலநிதி உயர்வு

தமிழக அரசு ஊழியர்களில் இறந்தவர்களின் குடும்ப நலநிதி ரூ.40,000-லிருந்து ரூ.60,000-ஆக உயர்த்தி வழங்க தமிழக அரசு ஏற்கெனவே ஆணையிட்டிருப்பதைப் போன்று, தமிழகத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்களுக்கும் குடும்ப நல நிதியை ரூ.60,000-ஆக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையைப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் ஒன்றியங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பி இருந்தனர். அவர்களது கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழக அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் குடும்ப நல நிதித் திட்டத்தைக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் அமல்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி தமிழகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் ஒவ்வொருவரும் ஆண்டிற்குச் செலுத்தும் தவணைத் தொகை ரூ.129-உடன் அவர்கள் பணியாற்றும் சங்கங்கள் ஒவ்வொருவருக்கும் செலுத்தும் தவணைத் தொகை ரூ.129-ஐ சேர்த்து மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு 258 ரூபாய் தவணைத் தொகை செலுத்துவதன் மூலம், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் குடும்ப நல நிதி ஏற்கெனவே வழங்கப்படும் ரூ.40,000-லிருந்து ரூ.60,000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இத்திட்டம் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் பொருந்தும்.

இதற்கான நிதி வசதிக்கு, உலக வங்கியை அணுகியிருக்கிறோம். Infrastructure Leasing and Financial Services Ltd. நிறுவனத்தோடு சேர்ந்து சில முக்கிய வளர்ச்சிப் பணிகளை நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். இத்திட்டத்தை விரைவில் தொடங்குவோம் என்று நம்புகிறோம். நிலக்கரி இறக்குமதி வசதிகளைப் பெருக்கும் நோக்கோடும் அதன் பின்புலத்தை மேம்படுத்தும் நோக்கோடும் கடலூர்த் துறைமுகத்தின் திறனை விரிவான ஆய்வுக்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பெருந்தொழில்களுக்கு! போதிய தண்ணீர் வசதி செய்து தருவது தமிழகத்தில் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. 1995-இல் கிருஷ்ணா நதி நீர்த் திட்டமும், புதிய வீராணம் திட்டமும் நிறைவேற்றப்படும் என்று உறுதியாக நம்புகிறோம். சென்னைப் பெருநகரில், தண்ணீர்ப் பற்றாக்குறையை நிரந்தரமாகத் தீர்க்க, இந்த மாபெரும் திட்டங்கள் உதவும் என்று நான் நம்புகிறேன்.

இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது, சென்னைப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகள், ஏராளமான நிலத்தடி நீரைப் பெற்றுப் பயனடைய முடியும் என்று எதிர்பார்க்கிறோம். கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய நகரங்களுக்கு, தண்ணீர் வசதித் திட்டங்கள், 1994-இல் நிறைவடையும். கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, தொழில்களுக்குப் பயன்படுத்தலாம் என்னும் எனது யோசனை வரவேற்கப்பட்டு, திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, என்பதை இங்குக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வகை முயற்சி இன்னும் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

மணலிப் பகுதியின் தண்ணீர் வசதிக்கு உறுதுணையாக, கூட்டுத் துறையில் கடல்நீரை, நன்னீராக்கும் ஒரு திட்டம் மேற்கொள்ளப்படும். கடந்த காலத்தின் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க, ஒரு பெரும் முதலீட்டுத் திட்டத்தோடு, தமிழகம் இவ்வாறு இத்துறையில் முன்னேறி வருகிறது.

நகர்ப்புற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதில், நாங்கள் சிறப்புக் கவனம் செலுத்துகிறோம். சென்னை நகரைக் கவர்ச்சிகரமான, பெருநகரமாக ஆக்க, 4,000 கோடி ரூபாய் செலவில் 'எழில்மிகு சென்னை 2000' என்னும் திட்டத்தை வடிவமைத்து வருகிறோம். 10 முக்கிய நகரங்களில் அவசியமான நகர்ப்புற அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கு, நாங்கள் முக்கியத்துவம் அளித்துள்ளோம்.

இரண்டாவதாக நான் குறிப்பிட விரும்புகிற, குறிப்பிடத்தக்க ஒன்று தொழில் உறவுச் சூழலாகும். நாங்கள் ஒரு கலாச்சாரத்தை வளர்க்க விரும்புகிறோம். அதன்படி சிறுவடிவாக்குதலும், மறுவடிவமைத்தலும் மட்டுமே இலக்கை அடைய உதவாது. தொழில்நுட்ப மேம்பாட்டுக்காகச் செய்யப்படும் முதலீட்டைத் தொடர்ந்து புதிய வேலை வாய்ப்பு வசதிகளை வளர்ப்பதே இலக்காக இருக்கும். இந்த மாநாடு, குறிப்பிடத்தக்க இனங்களை அடையாளம் காணவும், வேலை வாய்ப்பை உண்டாக்கும் வளர்ச்சியின் மீது தனிக்கவனம் செலுத்தவும் உதவும் என்று நம்புகிறேன். அமைதியான தொழில் உறவை உறுதிப்படுத்த இது மிகவும் அவசியமானதாகும். தொழில் உறவு குறித்த எங்களது அணுகுமுறை பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. எங்கள் மாநிலத்தில், ஆரோக்கியமான தொழில் உறவுக் கலாச்சாரத்தைத் தொடர்ந்து நாங்கள் பேணி வளர்ப்போம்.

மகளிர் மேம்பாட்டுக் கழகங்கள்

○ தமிழ்நாடு உள்ளிட்ட 16 மாநிலங்களில் மகளிர் மேம்பாட்டுக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆந்திர பிரதேசம், பீகார், குஜராத், ஹரியானா, இமாசலப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஜம்மு-காஷ்மீர், ஒரிசா, பஞ்சாப், உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம், சண்டிகார் ஆகியவை இதர மாநிலங்கள் ஆகும். பெண்களுக்கு கடனுதவி அளிப்பது, பயிற்சி, மகளிர் விடுதி கட்டுவது, பெண்களுக்கான நலத்திட்டங்களை அமலாக்குவது ஆகியவை இக்கழகத்தில் செயல்பாடுகளாகும்.

விரைந்து அனுமதி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றி, தொழிலதிபர்கள் என்னுடன் பேசியிருக்கிறார்கள். Guidance என்னும் அமைப்பைத் தொடங்கலாம் என்னும் முயற்சியை எடுத்துள்ளோம். அது சுலபமாக அணுகவும், விரைவாக அனுமதி பெறவும், உதவும் ஒரு வழிகாட்டி அமைப்பாக விளங்கும். Single Window தத்துவத்தின்படி இயங்க வேண்டுமென்று ஏற்கெனவே, நாங்கள் ஆணை பிறப்பித்திருக்கிறோம். இந்த ஆணைகளுக்கு, ஒரு ஸ்திரத்தன்மை விரைவில் வழங்கப்படும். அதே சமயத்தில் தொழில்துறை, எரிசக்தித் துறை, மின்துறை ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய ஓர் இணைப்புக்குழு அமைக்கப்படும். மின் இணைப்புகளை புதிய பயனீட்டாளர்களுக்கு, விரைவாக வழங்குவதை இது உறுதிப்படுத்தும்; கண்காணிக்கும்.

மேலும், இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தும், முயற்சிகளிலும், நாங்கள் துணிந்து முன்னேறியிருக்கிறோம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். திருநெல்வேலிக்கு அருகில் கங்கைகொண்டான், ஈரோட்டுக்கு அருகில் பெருந்துறை, மதுரைக்கு அருகில் நிலக்கோட்டை, தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் ஆகிய இடங்களில் தொழில் வளர்ச்சி மையங்கள் செயல்பட ஆயத்தமாக உள்ளன. சென்னைக் கருகில் ஒரு மாபெரும் தொழில் வளர்ச்சி மையத்தை நிறுவ தற்போது நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். வசதியான இடங்களை வழங்குவது, தமிழ்நாட்டில் ஒரு சிக்கலான விஷயமல்ல.

1992-ஆம் ஆண்டில் நான் வகுத்த மாநிலத் தொழிற்கொள்கை, எங்களது வரிக்கொள்கையையும், சலுகைகளையும் பற்றிய முழு விவரங்களையும் உள்ளடக்கி உள்ளது. தொழில் வளர்ச்சிக்கான உண்மையிலேயே ஒரு கவர்ச்சிகரமான சலுகைத் தொகுப்பைத் தமிழ்நாடு வழங்குகிறது. இந்தச் சலுகைத் தொகுப்பு இந்தியாவில் வழங்கப்படும் சலுகைத் தொகுப்புகளில் மிகச்சிறந்தது என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. முதலில், முதலீட்டு மானியமோ அல்லது வேறு எந்தச் சலுகைகளோ எதுவானாலும், வாக்களித்தபடி வழங்குவதில் வரலாறு படைத்திருக்கிறோம். வரிச் சீரமைப்பில் ஒரு தெளிவான கொள்கையை நாங்கள் அமல்படுத்தியிருக்கிறோம்.



தலைசிறந்த தொழில் வளர்ச்சிக்குத் தமிழகத்தில் தகுந்த சூழ்நிலைகள்

மாண்புமிகு முதல்வர் உரை -

13.4.'94 அன்று, சென்னையில் நடைபெற்ற தென் மண்டலத் தொழில் அதிபர்கள் மாநாட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.

"மாநிலங்கள்: வளர்ச்சிக்கான உக்திகள்" என்பது பற்றிய கருத்தரங்கை ஏற்பாடு செய்ய முயற்சி எடுத்துக் கொண்டமைக்காகத் தென் மண்டல இந்தியத் தொழில் கூட்டமைப்பை நான் வாழ்த்துகிறேன். இந்தியத் தொழில் கூட்டமைப்பு, இந்தியத் தொழில் துறையின் தலைமைசான்ற பிரதிநிதித்துவ அமைப்பாக முன்னோக்கிச் செல்வதை நான் அறிவேன். இந்திய அரசின் தாராளமயமாக்கல் கோட்பாடு எழுந்துள்ள இச்சூழலில், தொழில் வளர்ச்சியில் மாநிலங்களின் பங்கு பற்றி ஆலோசிக்க, தென் மாநிலங்களைச் சேர்ந்த தொழிலதிபர்கள் இங்கு, இன்று வந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

தாராளமயமாக்குதலை, வலியுறுத்தும் புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய சவால்களை உருவாக்கியிருக்கிறது. உரிமங்களும் கட்டுப்பாடுகளும் தேவையில்லை என்பது சீர்திருத்தங்களின் முதற்படி, சுலபமான ஒன்று. விரைவான வளர்ச்சியை வளர்ப்பதற்காக, தக்க சூழலை உருவாக்குவது, இரண்டாவது நிலையும், மிகக்கடினமான நிலையும் ஆகும். மேலும், பெரும்பாலான மக்களுக்கு ஏற்ற வகையில், வளர்ச்சிக்கான முறைகள் அர்த்தமுள்ளவைகளாக அமைய வேண்டும். அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதை விரைவுபடுத்துவது, யாருக்காக உருவாக்கப்பட்டதோ அந்த மக்களை முன்னேற்றத்துக்கான பலன்கள் சென்றடைவதை உறுதிப்படுத்துவது, ஆகிய இரண்டாவது கட்டத்தைப் பொறுத்த வரையில் மாநில அரசுகளுக்கு முக்கியமான பங்குள்ளது.

தொழில் வளர்ச்சி, அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். நம் நாட்டிற்குள்ளேயே புதிய பணிகளை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். வேலை வாய்ப்பில்லாத வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளைச் சமாளிப்பதில், மேற்கத்திய நாடுகள் கூடச் சிரமப்படுகின்றன. வறுமை ஒழிப்பு, உயர்ந்த முன்னுரிமை பெற வேண்டிய இந்தியாவைப் போன்ற ஒரு வளரும் நாட்டில், வளர்ச்சி முறை மூலமாக வேலைவாய்ப்பளிப்பதை, துரிதப்படுத்தும், உத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். எனவே, அதிகப் பணியிடங்களை உருவாக்கிட உதவும் வகையில், உற்பத்தித் திறனை விரைவாக வளர்ப்பதில், கவனம் செலுத்த வேண்டும் என்பது என் கருத்தாகும். இன்று இங்கு கூடியுள்ள தொழில் அதிபர்களை நான் வேண்டிக்கொள்ளுவது என்னவெனில் வேலை வாய்ப்பை, உருவாக்குவதில், ஆக்கபூர்வமான தாக்கம் விரைவில் ஏற்படும் வகையில், வளர்ச்சிக்கான முறைகளை முன்நடத்திச் செல்லவும், அவற்றை மேலும், தகுதியுள்ளவையாக ஆக்கவும், தொழில் அதிபர்கள் முன்வர வேண்டும். புதிய பொருளாதாரக் கோட்பாட்டின் ஒரு பகுதியாக இது அமையாவிட்டால் வளர்ச்சி முறைக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்காது.

தொழில் வளர்ச்சியைப் பேணுவதற்குச் சிறப்பாகச் செயல்படும் ஒரு வலுவான அடிப்படை அமைப்பு ஒரு அவசியமான குறைந்தபட்சத் தேவையாகும். இரண்டாவதாக, தொழிலுக்கும் தொழிலாளர்களுக்கும் நடுவே பரஸ்பர நம்பிக்கையை உருவாக்க, தொழில் உறவுகள் சுமுகமாக அமைய வேண்டும்.

மூன்றாவதாக, அனுமதியளிப்பதும், மேற்பார்வையிடுதலுமாகிய மொத்த அமைப்பும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இதன் மூலமாக [illegible]றையும், தொழில் ரீதியான அணுகுமுறையும் இந்த முறையின் இயல்புகளாக அமையும். கடைசியாக உற்பத்திக்கான சில முதன்மைக் காரணக்கூறுகளை அடைவது சாத்தியமாக்கப்பட வேண்டும். வளர்ச்சிப் போக்கை விரைவுபடுத்துவதில், மாநிலத்தின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமையத் தேவையான நான்கு முக்கியமான பகுதிகள் இவையாகும்.

மாநில அளவில் வளர்ச்சிக்கான வழிமுறையை, நெறிப்படுத்துகின்ற அம்சங்கள் சிலவற்றை தமிழ்நாட்டின் சூழலை மனத்துள் கொண்டு, இப்போது உங்களிடம் விளக்க விரும்புகிறேன். எந்த வளர்ச்சி முறைக்கும், சமூக நல்லுறவும் சட்டம் ஒழுங்கைச் சரிவரப் பராமரித்தலும், அடிப்படைத் தேவைகளாகும். அமைதியை நிலைநாட்டுவதில், தமிழ்நாட்டில் நாங்கள், மிகச்சிறந்த சாதனை படைத்திருக்கிறோம். சட்டம் ஒழுங்கை, மிகச் சிறந்த முறையில் நாங்கள் தொடர்ந்து பராமரிப்போம் என்பதில் எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. இந்த விஷயத்தில் எந்தவிதத் தயக்கமும் இன்றி உங்கள் அனைத்து முதலீடுகளையும் இங்கே செய்யலாம்.

வளமை வாய்ந்த, அடிப்படை வசதிகளை உருவாக்க, தமிழ்நாட்டில் நாங்கள் ஆவன செய்து வருகிறோம். கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாட்டில் உள்ள அடிப்படை வசதியின் தரம், நாட்டிலேயே சிறந்த அடிப்படை வசதிகளின் தரங்களில் ஒன்றாக இருக்கிறது. அடிப்படை வசதிகளைப் பொறுத்தவரையில் அனைத்திந்திய சராசரி அளவாகிய 100 புள்ளிகளுக்கு மாறாக தமிழ்நாட்டின் சராசரி 139 புள்ளிகளாக உள்ளது. மின்சாரம் போக்குவரத்து, தண்ணீர், நகர்ப்புற அடிப்படை வசதி போன்ற அம்சங்களில், நாங்கள் தொடர்ந்து கூடுதல் கவனம் செலுத்துவோம்.

1992-இல் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பைப்பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. மனிதநாட்கள் இழப்பு மேற்கு வங்காளத்திற்கு அடுத்தபடியாக இங்கே உள்ளது, என்று குறிப்பிடப்பட்டது. ஜவுளித் துறையில் ஏற்பட்ட தொடர் வேலை நிறுத்தத்தின் காரணமாக 1992-ல் மனித நாட்கள் இழப்பு கூடுதலாக இருந்தது என்பதையும் 1993-இல் இது சரிசெய்யப்பட்டு விட்டது என்பதையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மின்சாரத்திற்காகத் திட்டமிடுவதென்பது கடந்த காலத்தில், கோழியிலிருந்து முட்டையா? முட்டையிலிருந்து கோழியா? என்பது போன்ற பிரச்சினையாகவே இருந்து வந்திருக்கிறது. தேவைகள் உருவாகும் வரை காத்திருப்பதும், பிறகு அவற்றுக்காக நடவடிக்கை எடுப்பதுமே வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. எப்படிப்பட்ட தேவை எழும் என்பதை எதிர்பார்த்து, புதிய உற்பத்தித் திறனை, உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள நமது மாநிலம் தீர்மானித்திருக்கிறது.

பிரமாண்டமான ஒரு மின் திட்டத்தை தமிழ்நாடு தொடங்கியிருக்கிறது. 1,500 மெ.வா. திறன் கொண்ட ஜெயங்கொண்டம் லிக்னைட் மின்திட்டத்தை, ரூ.7,500

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

வேளாண்மைப் பொறியியல் துறையின் விரைவான பணிகள்:

புதுப்பொலிவு பெறும் திருக்கோவில் திருக்குளங்கள்

தமிழ்நாட்டில் பெரும்பாலும் எல்லாத் திருக்கோவில்களுக்கும் சொந்தமாகத் திருக்குளங்கள் உள்ளன. அவை பல ஆண்டுகளுக்கு முன்பு மழை நீரைத் தேக்கிப் பயன்படுத்தும் நோக்கத்தில் வெட்டப்பட்டன. அவற்றின் வடிவமைப்பு அதில் தேக்கி வைக்கும் நீரின் அளவிற்கு ஏற்பச் சதுரமாகவோ செவ்வக வடிவமாகவோ உள்ளன.

கோவில் குளங்களின் தற்போதைய

இக்கோவில் குளங்கள் தேவையான கவனிப்பின்றி மிகச் சீர்கெட்ட நிலையில் உள்ளன. பல கோவில் குளங்களின் நீர்வரத்து மதகுகள் அடைப்பட்டு மோசமான நிலையில் உள்ளன. நீரினை வெளியேற்ற உள்ள அமைப்புகளும், சரியான நிலையில் இல்லாமையால் குளத்தில், உள்ள நீரை, பெரும்பாலும் தூய்மை அற்ற நிலையில் வெளியேற்ற இயலாமல் உள்ளது. மேலும், கோவில் குளங்களில் நீர்த் தாவர வளர்ச்சி மற்றும் வண்டல் மண் சேர்க்கையால், கோவில் குளங்களின் நீர்ப்பிடிப்புத் திறன் குறைந்துள்ளது. இதனால் நிலத்தின் நீர் உறிஞ்சும் தன்மையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கோவில் குளத்தின் நீரின் தூய்மை பராமரிக்கப்படாததால், கோவிலுக்கு வரும் பயணிகள் கோவில் குளத்தில் புனித நீராட வழிவகையில்லாமல் உள்ளது. மற்றும், கோவில் குளங்களின் படிக்கட்டுகள், பக்கச்சுவர் ஆகியவை பராமரிப்பின்றிச் சிதலமடைந்த நிலையில் உள்ளன.

கோவில் குளங்களின் தற்போதைய சீர்கெட்ட நிலையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகத்தில் உள்ள அனைத்துக் கோவில் குளங்களையும், சீரமைக்க உத்தரவிட்டு உள்ளார். எனவே, முதல் கட்டமாகத் தமிழ்நாட்டில் 370 கோவில் குளங்களை ரூ.400 இலட்சம் செலவில் சீரமைக்கத் திட்டமிட்டு, அதற்கான கருத்துருவிற்கு அரசு ஆணை அளிக்கப்பட்டுள்ளது.

பணியின் குறிக்கோள்கள்

1. கோவில் குளங்களிலிருந்து நம் முன்னோரின் நோக்கத்திற்கு ஏற்ற வகையில் பயன் கிடைக்கச் செய்தல்.
2. கோவில் குளங்களை அவற்றில் முழு கொள்ளளவிற்குக் கொண்டு வருதல்.
3. சுற்றுப்புறச் சூழல் காத்தல்.

சீரமைப்புப் பணிகள்

கோவில் குளங்களின் தற்போதைய மோசமான நிலைகளைப் போக்கிச் சீரமைத்துக் கோவில் குளங்களை அவற்றின் மூல நிலைக்குக் கொண்டுவர கீழே குறிப்பிட்டுள்ள பணிகளைச் செய்வதன் மூலம் இலக்கை அடையலாம்.

1. கோவில் குளங்களின் உள்வரத்துக் கால், மற்றும் நீர் வெளியேற்றும் அமைப்புகளைச் சீர் செய்தல்.
2. கோவில் குளத்தில் உள்ள மக்கள், உயிரினங்களின் நலத்திற்குக்கேடான நீரை வெளியேற்றுதல்.
3. கோவில் குளத்தில் உள்ள களைகள், சகதி ஆகியவற்றை அகற்றித்தூர்எடுத்தல்.
4. கோவில் குளத்தின் அடிப்பரப்பில் களிமண், மற்றும் மணல் பரப்புதல்.
5. கோவில் குளத்தின் படிக்கட்டுகள், மற்றும் பக்கச் சுவர்களைச் சீர் செய்தல்.
6. மீன் வளர்த்தல்.
7. இதர பணிகள்.

எஸ். கிருஷ்ணசாமி
தலைமைப் பொறியாளர்
வேளாண்மைப் பொறியியல் துறை
சென்னை

வரி சீரமைப்புப் பொறுத்தவரை கடந்த இரண்டு நிதிநிலை அறிக்கைகளில் நாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம். வரியமைப்பு, முறையாக வகைப்படுத்தப்பட்டு, மிகதெளிவாக உள்ளது. விற்பனை வரியமைப்பு மிகவும் எளிமைப்படுத்தப்பட்டு, பொதுவான 5 வரி விகிதங்களாக அமைந்துள்ளது கடுமையான நிதிச் சிக்கல்கள் இருந்தபோதிலும், மூலப் பொருட்களுக்காக வழங்கப்படும் சலுகையை, பல்வேறு வகைப் பொருட்களுக்கும் நாங்கள் விரிவாக்கியிருக்கிறோம். நாங்கள் எதிர்நோக்கியுள்ள மிகக்கடுமையான நிதி நெருக்கடிக்கிடையிலும் இந்தச் சீரமைப்பை வழங்கியிருக்கிறோம் என்பதை அன்பு கூர்ந்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எங்களது, வரிச்சீரமைப்புத் தொகுப்பு, எல்லோராலும் பாராட்டப்பட்டுள்ளது. வரிச்சீரமைப்பு முறையை இன்னும் சிறப்பாக்க, நாங்கள் ஆயத்தமாக உள்ளோம்.

தமிழ்நாட்டில், வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்த மோசமான அம்சத்தையும் நான் காணவில்லை. நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் போன்ற சில சட்டங்களும், கட்டுப்பாடுகளும் தொழில் துறையில், வளர்ச்சிக்கு எதிரானவை என்று கருதப்படுவதை, நான் அறிவேன். விரைவான வேலை வாய்ப்பு வளர்ச்சியை, நாம் நிச்சயப்படுத்த முடியுமென்றால், நமது பார்வையில் பழுது இருக்க வாய்ப்பில்லை என்று நான் நினைக்கிறேன். அதேசமயம், தனது சமூகப் பொறுப்பை, எடுத்துக் காட்டாக, சுற்றுச்சூழல் விதிமுறைகளை, அமல்படுத்துவதை, தொழில் துறை, உணர்ந்து செயல்பட வேண்டும். சீரமைப்பு முறையும், தொழில் துறையிடம் ஒரு பண்பட்ட, பொறுப்பு மிக்க செயல்பாட்டை எதிர்பார்க்கிறது.

சென்னைத் தொழில் பூங்கா திட்டத்திற்கு, ஒரு திட்டமான வடிவம் கொடுப்பதற்கு, நாங்கள் விரைந்து முயல்வோம். சென்னைத் தொழிற்பூங்கா நம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும்; உலக நாடுகளின் தொழில் நுட்பத்தையும், முதலீட்டையும், நம் வாசலுக்கு அழைத்துவர உதவும் என்று நான் நம்புகிறேன். இந்திய அரசும், இந்தத் திட்டத்தின் தனிச்சிறப்பைப் பாராட்டி, நாம் கேட்டுள்ள அனைத்து உதவிகளையும் வழங்கும் என்பது என் நம்பிக்கை.

நம் மாநிலத்தில், விரைவான, அர்த்தமுள்ள வளர்ச்சிக்கான முற்போக்கு உத்திகளை உண்டாக்குவது நம்முடைய கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும் என்று கூறி உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

திரு கோத்ரேஜ், திரு. சேஷசாயி ஆகியோர் சில கருத்துக்களை முன்மொழிந்திருக்கிறார்கள். உங்களது அனைத்துக் கருத்துக்களையும், குறிப்பாக, தமிழ்நாடு உள்ளூர்ச்சாதனையாளராக இல்லாமல், உலகளாவிய சாதனையாளராக விளங்க வேண்டும் என்னும் கருத்தை நாங்கள் மனத்தில் கொண்டிருப்போம் என்று உங்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். நமது குறிக்கோளும், விருப்பமும் அதுதான். மண்டலத் தலைமை அலுவலகத்தைப் பஞ்சாபில் அமைக்க, பஞ்சாப் முதலமைச்சர் தாமாக நிதி வழங்கியிருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டது. இந்தியத் தொழில் கூட்டமைப்பு, நிதி நிலையில் பின் தங்கியதில்லை என்பதை அறிந்த போதிலும், மண்டல அலுவலகத்தைச் சென்னையில் ஏற்படுத்த நீங்கள் முன் வருவீர்களானால், நீங்கள் விரும்பும் எந்த உதவியையும் அளிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம் என்று உங்களுக்கு நான் உறுதியளிக்க விரும்புகிறேன். மேலும் தற்போது எவ்வளவு என்று நான் குறிப்பிடாவிட்டாலும், பஞ்சாப் முதலமைச்சர் வழங்கியதைவிட அதிகமாக உங்களுக்கு வழங்குவோம் என்பதையும், நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சிக்கு, குறிப்பாக, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு, விரைவும் உந்தூக்கமும் அளிக்க உதவுகிற முக்கியமான விஷயங்களில் கருத்துச் செலுத்துகின்ற, அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளை நீங்கள் மேற்கொள்வீர்கள் என்னும் என் நம்பிக்கையை இங்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில், இந்தியத் தொழில் கூட்டமைப்பின் மண்டல அலுவலகத்திற்கு, ரூ.25 இலட்சம் தொகையைத் தமிழ்நாடு அரசு வழங்கும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்திற்கு ரூ.79 இலட்சம்: முதல்வர் நிதி ஒதுக்கீடு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம், பழங்குடியினர் மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்திவருகின்றது. அவற்றில் பழங்கடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டமும் அடங்கும்.

தமிழகத்தில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 16 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், மற்றபகுதிகளில் இரண்டு பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் பழங்குடியினர்களுக்கு இன்றியமையாப் பொருட்களை வினியோகிக்கின்றன.

மேலும், அவர்களுக்குப் பல்வேறு கடன்களும் மானியமும் வழங்குகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இக்கூட்டுறவுச் சங்கங்கள், பழங்குடியினர் முன்னேற்றத்திற்கு முனைந்து செயல்படுவதற்கும், பல்வேறு நிதியுதவிகளை வழங்குவதற்கும் 1993-94-ஆம் ஆண்டில் ரூ.79 இலட்சம் தொகையை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

சென்னை மாநகரில் 24 மணி நேரமும் ரோந்துப் பணி:

மாண்புமிகு முதல்வர் காவல் துறைக்கு 37 ஜீப்களை வழங்கினார்

தமிழ்நாடு காவல்துறையினை நவீனப்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 6.4.94 அன்று காலை சென்னை மாநகரக் காவல் துறையின் சார்பாகப் புதியதாகப் பெறப்பட்ட 37 ஜீப்களை, சென்னை மாநகர ரோந்துப் பணியில் ஈடுபடுத்துமுகத்தான் பச்சைக்கொடி அசைத்துத் தொடங்கிவைத்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்றபின்பு எல்லாக் காவல் நிலையங்களுக்கும், ஜீப்களையும், தளவாடங்களையும், தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

24 மணிநேர ரோந்துப் பணியைச் சென்னை மாநகரில் செயல்படுத்த வேண்டுமென்கின்ற எண்ணத்தின் அடிப்படையில், ஒரு புதிய திட்டத்தினை வகுத்துத் தந்தார். தற்போது தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின்கீழ் 37 ஜீப்கள் பயன்படுத்தப்படும். இந்த 37 ஜப்களும் 92 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகரில் இரண்டு காவல்நிலைய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளை ஒரு ரோந்துப் பிரிவு ரோந்து சுற்றி வரும். ஒவ்வொரு ரோந்துக் காவல் வண்டியிலும் ஒரு காவல்துறை உதவி ஆய்வாளரும், ஒரு தலைமைக் காவலரும், ஆயுதம் தாங்கிய சில காவலர்களும் இருப்பார்கள். மூன்று ஷிப்டுகளில் அதாவது 24 மணி நேரமும் செயல்படும் இந்த ரோந்துப் பணிக் காவலர்கள் நகரின் முக்கியமான பகுதிகளில் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுகின்ற சமூகவிரோதிகளைக் கண்காணித்து வருவார்கள்.

இந்த 37 ஜீப்களில் வயல்லெஸ் கருவிகளும், சைரன் மற்றும் எமர்ஜென்சி விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன. எனவே, உடனுக்குடன் தகவல்களை மாநகர மத்தியக் கண்ட்ரோல் நிலையத்திற்குக் கொடுத்து மிகவிரைவில் மேல் நடவடிக்கை எடுக்க இந்த முறை உதவும். ஏற்கெனவே தற்போது பணியிலுள்ள 13 ரோந்து வண்டிகளும் இப்பணியில் உபயோகப்படுத்தப்படும். இந்த முறையின் மூலமாக குற்றநிகழ்வுகளைக் குறைக்கமுடியும். மேலும் அவசரத் தேவைக்குக் காவல் துறையின் சேவை மிகவிரைவில் கிட்டுவதற்கு வழிவகுக்கும்.

இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பச்சைக் கொடியைக் காட்டித் தொடங்கி வைப்பதற்கு முன்பு, மாநகரக் காவல்துறை ஆணையாளர் திரு ஆர். ராஜகோபாலன் அவர்களிடம் இந்த ஜீப்களின் சாவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட் டராமன், உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், காவல்துறை ஒற்றாய்வுப் பிரிவின் தலைவர் திரு ஏ.எக்ஸ். அலெக்சாண்டர், சென்னை மாநகரக் காவல்துறை இணை ஆணையாளர் திரு ஆர்.என். சவானி மற்றும் இதர அலுவலர்கள் பங்குபெற்றார்கள். ●



புதுக்கோட்டை மாவட்டத்தில்

திருக்குளச் சீரமைப்புப் பணிகள்

ஆலயங்கள் சிறக்கவும் ஆன்மீக நெறி தழைக்கவும் அரிய திட்டங்கள் வகுத்து, செயல்படுத்திவரும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திருக்கோயில் திருக்குளங்களைச் சீர்செய்து செம்மைப்படுத்த சிறப்புத் திட்டம் ஒன்றை வகுத்து, செயல்படுத்தி வருகிறார்.

இத்திட்டத்தின் கீழ், புகழ்மிக்க திருக்கோயில்களின் திருக்குளங்களைத் தேர்வு செய்து, குளங்களை ஆழப்படுத்துதல், குளத்தின் கரையைப் பலப்படுத்துதல், சுற்றுச் சுவர் கட்டுதல் - படித்துறைகளைச் சீர் செய்தல், திருக்குளத்திற்கு நீர் கொணரும் வரத்து வாய்க்கால்களைச் செம்மைப்படுத்துதல், திருக்கோயில் திருக்குளத்தையொட்டியுள்ள பகுதிகளில் மரம் வளர்த்து அழகுபடுத்துதல் போன்ற பணிகளை நிறைவேற்ற ஆணை பிறப்பித்துள்ளார்.

நடப்பாண்டில் தமிழ்நாட்டில் 370 திருக்குளங்களை ஆழப்படுத்திட சுமார் 4 கோடி ரூபாய் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

புகழ்மிக்க புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலயத் திருக்குளங்களை அழகுபடுத்தும் பணி ரூ.49 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 26 திருக்கோயில் திருக்குளங்கள் அழகும், புதிய பொலிவும் பெறும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்தின் சிறப்புமிக்க ஆலயம் ஆவுடையார்கோவில் ஆத்மநாதசாமி திருக்கோயில் கருங்கற்களால் வேயப்பட்ட கூரையும், தூண்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களும் காண்போர் கருத்தைக் கவரும் கலைப் பெட்டகம் ஆகும். இத்திருக்கோயில் திருக்குளம் ஒரு காலத்தில் அழகும் சிறப்புவாய்ந்ததாய் இருந்தது. ஆனால், இடைக்காலத்தில் பக்கச் சுவர் படிக் கட்டு இடிந்து நீர்ப்பரப்பு தூர்ந்து சீர்கெட்டுப் போனது. இத்திருக்குளம் சுமார் ரூ.3.5 இலட்சம் செலவில் சீர்செய்யப்பட்டு மீண்டும் பழைய பொலிவினைப் பெற்று உள்ளது.

புதுக்கோட்டை-அறந்தாங்கி சாலையில் 7-வது கல் தொலைவில் அமைந்திருக்கும் சிற்றூர் அழகாம்பாள்புரம் அம்மன் ஆலயம் சுமார் 55 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குலதெய்மாகக் கருதி வழிப்பட்டு வரும் இவ்வாலயம் 300 ஆண்டுக்காலம் தொன்மை. வாய்ந்தது இந்த அம்மன் கோவிலுக்கு எதிர்ப்புறத்தில் 1.32 எக்டேர் பரப்பில் அமைந்துள்ள திருக்குளம் ரூ.1.99 இலட்சம் செலவில் சீர்செய்யப்பட்டு உள்ளது. திருக்குளத்தைச் சுற்றிலும் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் வளர்ந்தோங்குமானால், அப்பகுதி அழகிய பசுஞ்சோலையாகக் காட்சி தரும் என்பதில் ஐயமில்லை.

கோவில் குளத்தின் உள்வரத்துக்கால் மற்றும் நீர் வெளியேற்றும் அமைப்பைச் சரி செய்தல்

கோவில் குளங்களில், நீர் உள்ளே வருவதற்கும் உள்ள நீரை வெளியேற்றுவதற்கும் அமைப்புகள் உள்ளன. சில கோவில் குளங்களில் மேற்படி அமைப்புக்கள் இல்லாமல் இருக்கலாம். மேற்படி அமைப்புகளுக்குத் தேவையான கவனிப்பின்மையால், கோவில் குளங்களில் உரிய நீர் தேங்குவதில்லை. மேலும் கோவில் குளத்திற்கு நீர் வரும் நீர்ப்பிடிப்புப் பகுதியில் ஆதாரமில்லா ஆக்கிரமிப்பினாலும் கோவில் குளத்திற்கு நீர்வரும் வரத்துக்கால் அழிக்கப்பட்டு அதனால் கோவில் குளத்திற்கு உரிய நீர் கிடைப்பதில்லை. இதேபோல, கோவில் குளத்து நீரை தேவையானபோது வெளியேற்ற, நீர் வெளியேற்ற அமைப்புகள் பழுதடைந்துள்ளதால், இப்பணி செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, கோவில் குளத்தின் நீர்வரத்து அமைப்பையும், நீர் வெளியேற்றும் அமைப்பையும் கோவில் குளத்தைப் பயன்படுத்துபவர்களின் ஒத்துழைப்புடன் சீர்செய்வது முக்கிய பணியாகும்.

குளத்து நீரை வெளியேற்றுதல்

அநேகமாக எல்லாக் கோவில் குளங்

திருமயம் தாலுக்காவிலுள்ள இளஞ்சாவூர் முத்துமாரியம்மன் ஆலயம் சுமார் 85 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஆலயம் ஆகும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரால் இவ்வாலயம் கட்டப்பட்ட போதிலும் அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து வழிப்படும் திருத்தலமாக இது விளங்குகின்றது.

சுற்றிலும் வயல்கள் சூழ, ஒருபுறத்தில் பெரிய கண்வாய் ஒன்று அமைய அழகுற அமைந்திருக்கும் இளஞ்சாவூர் ஆலயத்திற்கு அருகாமையில் 1.34 எக்டேர் பரப்புள்ள திருக்குளம் உள்ளது. இந்த திருக்குளம் ரூ.1.80 இலட்சம் செலவில் தூர் எடுக்கப்பட்டு - வரத்து வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டு அழகுபடுத்தப்பட்டு உள்ளன.

வடகாளம் கலியுக மெய்ய அய்யனார் ஆலயம் 300 ஆண்டு காலம் பழமை கொண்டது ஆகும். இவ்வாலயத்தின் மூல ஸ்தானம் நிலமட்டத்திற்கு கீழே இருந்தபோதிலும், மழைக் காலத்திலும் மூலஸ்தானப் பகுதிக்குத் தண்ணீர் வராமல் இருப்பது இத்திருத்தலத்தின் பெருமை ஆகும். இவ்வாலயத்தின் திருக்குளம் ரூ.1.99 இலட்சம் செலவில் சீர் செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது.

வல்லத்திராகோட்டை தர்மர் கோயில் 250 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது. பாரதப் போரின் வரலாற்றுக் காட்சிகள் இங்கு சித்திரிக்கப்பட்டு உள்ளன. 1.24 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இத்திருக்குளம் ரூ.1.50 இலட்சம் செலவில் அழகுபடுத்தப்பட்டுள்ளது.

முத்துப்பட்டிணம் முத்துக்காமாட்சி, அம்மன் ஆலயம் இருநூறு ஆண்டுகால தொன்மை வாய்ந்தது. சுமார் 48 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த அம்மனைக் குலதெய்வமாக கொண்டாடுகிறார்கள். இங்கு எமனுக்காகத் தனி சன்னிதானம் அமைந்திருப்பது சிறப்பு அம்சமாகும். இங்கு 1.24 எக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள திருக்குளம் ரூ.1.89 இலட்சம் செலவில் சீர்செய்யப்பட்டு உள்ளது.

இதைப்போன்று வாராப்பூர் திருக்கோயில் ஊரணி, மணமேல்குடி ஜெகதீஸ்வரர் கோவில் திருக்குளம், நற்பவளக்குடி மெய்ய அய்யனார்கோவில் திருக்குளம், திருமணஞ்சேரி பரமேஸ்வரி கோவில் திருக்குளம், வடவாளம் வெட்டி ஊரணி, அம்புக்கோவில் சிவன்கோவில் திருக்குளம், விசலூர், சிவகாமி அம்மன் குளம் கீழாநிலைக்கோட்டை அரியநாயகி அம்மன் திருக்குளம், பேரையூர் நாகநாத சுவாமி திருக்கோயில் திருக்குளம், கொன்னையூர் பொன்னமராவதி முத்து மாரியம்மன் திருக்கோயில் திருக்குளம், இடையப்பட்டி பிள்ளையார்கோவில் திருக்குளம், தெம்மாவூர் மாரியம்மன் கோவில் திருக்குளம், வேப்பம்பட்டி சுப்ரமணிய சுவாமி கோவில் திருக்குளம், வெண்ணாவல்குடி பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குளம், வயலோகம் சக்தி விநாயகர் கோவில் திருக்குளம், ஏம்பல் முத்தையா சுவாமி கோவில் திருக்குளம் சீர்செய்யும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.'

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தா. சந்திரசேகரன் ஆலயத் திருக்குளங்கள் அழகுபடுத்தும் பணிகளைப் பார்வையிட்டு - அவற்றைச் செம்மைப்படுத்துவதற்குரிய ஆலோசனைகள் வழங்கினார். வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு அகமுடையநம்பி மற்றும் அதிகாரிகளுடன் அழகுப்டுத்தப்பட்டுள்ள திருக்குளங்களைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர், "சீர்பெறும் திருக்குளங்களைச் சுற்றிலும் நிழல்தரும் மரங்களையும், பயன்தரும் செடிகளையும் நட்டு - பசுஞ்சோலைகள் உருவாக்கப்படும். முதற்கட்டமாக 26 குளங்களில் ரூ.49 இலட்சம் செலவில் நடைபெற்று உள்ள இச்சீரிய பணி அரசின் நிதி உதவி பெற்று புகழ்மிக்க புதுக்கோட்டை மாவட்டத்தின் பெருமைமிக்க ஆலய திருக்குளங்கள் அனைத்தும் அழகுப்படுத்தப்படும்'' என்று கூறினார்.

திருக்கோயில் திருக்குளங்களைச் சீர்செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள வேளாண்மைப் பொறியியல்துறையின் செயற்பொறியாளர் திரு அகமுடையநம்பி அவர்களிடம் இப்பணி குறித்துக் கேட்ட போது,

"இத்துறை மண்வளப் பாதுகாப்பு, நில மேம்பாடு, சிறு பாசனத் திட்டப் பணிகள் போன்றவற்றை மட்டுமே இதுவரை நிறைவேற்றிவந்தது. அருள்மிகு திருக்கோயில் திருக்குளங்களைச் சீர்செய்யும் பணி இத்துறையினால் நிறைவேற்றப்படுவது இதுவே முதன் முறையாகும்'' என்று குறிப்பிட்டார்.

ஆலயங்களில் முறையாக வழிபாடு நடத்திட வழிவகுத்து - ஆலய ஊழியர்களின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றி - ஆலய வழிபாட்டிற்குத் தேவையான மலர், இலை, புகை மணக்கும் குச்சிகள் போன்றவற்றைப் பெற்றிட நந்தவனம் திட்டத்தைச் செயல்படுத்தி - ஆலயங்களைப் புதுப்பிக்க நிதி ஒதுக்கி - புதிய ஆலயங்கள் உருவாக்க உதவிபுரிந்து அறநிலையத்துறையின் வரலாற்றின் பொற்காலம் படைத்திடும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அளப்பரிய ஆலயத் தொண்டுக்குத் திருக்கோயில் திருக்குளம் சீரமைக்கும் பணி சீரிய எடுத்துக்காட்டாகும்.

மாநிலம் தழுவிய இந்த மகத்தான பணியில் புதுக்கோட்டை மாவட்டத் திருக்கோயில் திருக்குளங்கள் பெற்ற பயன் குறிப்பிடத்தக்கது.

"ஆகாச கங்கையின்' புனிதத்தைப் பெற்றது என்று போற்றப்படும் திருக்கோயில் திருக்குளங்கள் அழகும் பொலிவும் பெற்று, ஆலயத்திற்கும் - சமுதாயத்திற்கும் பயன்தந்திட அரிய திட்டம் கண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களை தமிழ்கூறும் நல்லுலகமும் எதிர்கால வரலாறும் என்றும் நினைவுகூர்ந்து போற்றும் என்பதில் ஐயமில்லை!

இரெ. மகாலிங்கம்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
புதுக்கோட்டை மாவட்டம்

களிலும் தற்போதுள்ள தண்ணீர் உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பதாக உள்ளது. அத்தகைய தூய்மை அற்ற நீரை வெளியேற்றுவது இன்றியமையாதது. நீரை வெளியேற்ற மனிதச் சக்தியையோ, அல்லது இயந்திரச் சக்தியையோ பயன்படுத்தி வெளியேற்றுதல்.

குளத்தில் உள்ள களைகள் சக்தி ஆகியவற்றை அகற்றித் தூர் எடுத்தல்

கோவில் குளங்கள் பராமரிப்பின்மையால் அவற்றில் களைகள் மற்றும் நீர்த்தாவரங்கள் வளர்ந்துள்ளன. மேலும், குளங்கள் பல ஆண்டுகளாகத் தூர் எடுக்கப்படாமையால், தூர்ந்து அவற்றின் கொள்ளளவு குறைந்து உள்ளன. இவ்வாறு இருப்பால் கோவில் குளங்களினால் சுற்றுவட்டாரப் பகுதியில் நிலத்தடி நீர் உயர வாய்ப்பு குறைந்து உள்ளது. எனவே, கோவில் குளங்களை அவற்றின் மூலக் கொள்ளளவிற்குக் கொணரவும் கோவில் குளங்களின் சுற்று வட்டாரங்களில் நிலத்தடி நீர் ஆதாரம் அதிகரிக்கவும், கோவில் குளங்களில் களைகள் மற்றும் நீர்த்தாவரங்களை அகற்றித் தூர் எடுப்பது இன்றியமையாத பணியாகும்.

களிமண் மற்றும் மணல் பரப்புதல்

கோவில் குளங்களில் தேக்கி வைக்

கப்படும் நீர், தூய்மையானதாக இருக்க வேண்டும். கோவில் குளத்து நீர் தூய்மையாக இருந்தால் தான் கோவில் குளத்தைப் பயன்படுத்துபவர்கள் அதன் முழுப் பலனையும் அடைய முடியும். இவற்றைக் கருத்திற்கொண்டு, கோவில் குளத்தில் அடித்தளத்தில் களிமண், மற்றும் மணல் பரப்பப்படுகிறது.

குளத்தின் படிக்கட்டுக்கள் மற்றும் பக்கச் சுவர்களைச் சீர்செய்தல்

பல ஆண்டுகளாகப் பராமரிப்புப் பணி செயல்படுத்தாமையால் கோவில் குளங்களின் படிகள் பாசி பிடித்து, பக்கச் சுவர்கள் சேதம் அடைந்துள்ளன. கோவில் குளத்தின் பழுதடைந்த படிகள் மற்றும் பக்கச் சுவர்களைச் சீரமைப்பதன் மூலம், கோவில் குளத்தைப் பயமின்றிப் பயன்படுத்தலாம்.

மீன் வளர்த்தல்

கோவில் குளத்து நீரின் தூய்மை காத்திட கோவில் குளங்களில் மீன் வளர்க்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வளர்க்கப்படும் மீன்கள், கோவில் குளத்தில் நீரைத் தூய்மையாக வைத்திருப்பதுடன், கோவிலுக்கு வருமானம் கிடைக்க வழிவகை செய்கிறது.

இதரப் பணிகள்

மேலும், கோவில் குளங்களைச் சுற்றி நந்தவனம் அமைத்து சுற்றுப் புறச் சூழல் காக்கப்படுகிறது. மற்றும், கோவில் குளங்களைச் சுற்றி சுவர் வேலி, கதவுகள், அமைத்து, கோவில் குளங்களைப் பாழ்படுத்துவது தவிர்க்கப்படுகிறது. துணி துவைப்பது, பாத்திரம் தேய்ப்பது, மாடுகள் கழுவுவது ஆகியவைகளைப் பக்தர்கள் தவிர்க்குமாறு வேண்டுகோள் பலகை வைக்கலாம். மீறுபவர்களைத் தண்டிக்க அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கலாம். நீர்வரத்து ஆதாரங்கள் இல்லாத குளங்களில் ஆழ் குழாய்க் கிணறு அமைத்து நீர் நிரப்பத் திட்டமிடலாம்.

1. கோவில் குளத்திற்கு உரிய நீர் கிடைக்கிறது.

2. மிகையான மற்றும் தூய்மை குறைந்த நீரை வெளியேற்ற வழி கிடைக்கிறது.

3. கோவில் குளத்தின் கொள்ளளவு அதிகரிக்கிறது.

4. குளத்தின் படிக்கட்டுக்கள், பக்கச் சுவர்களைச் சீரமைப்பதால், பக்தர்கள் கோவில் குளத்தைப் பயமின்றி முழுமையான அளவில் பயன்படுத்த வழி ஏற்படுகிறது. தெப்பவிழா ஒவ்வொரு ஆண்டும் எடுக்க முடியும்.

5. நந்தவனம் அமைப்பதால், கோவில் வழிபாட்டுக்குரிய மலர்கள் கிடைக்கின்றன. மேலும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்படுகிறது.

6. மீன் வளர்ப்பதால் குளத்து நீர் தூய்மையாவதுடன், கோவிலின் வருவாய்பெருக வழி ஏற்படுகிறது.

7. ஊரக வேலை வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

8. நிலத்தடி நீர் ஆதாரம் பெருகவழி வகுக்கிறது.

கோவில் குளங்களைச் சீரமைக்கும் பணிகள் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

கோவிலின் நிர்வாக அதிகாரி/தக்கார் ஆகியவர்களுடன் சீரமைப்புப் பணி தொடர்பாக விரிவான விவாதம் நடத்தி, பணி மேற்கொள்ளப்படுகிறது. கோவில் குளங்களைச் சீரமைக்கும் பணி ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் செயல்படுத்தப்படுகிறது.

வேலை வாய்ப்புகள் பெருகுதல்

கோவில் குளங்கள் சீரமைக்கும் பணி ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுவதால், கூலிக்கும், கூலியில்லாத செலவினத்திற்கும் 60:40 என்ற சதவிகிதத்தில் செயல்படுத்தப்படுகிறது.

மேற்படி கோவில் குளங்கள் கோவிலுக்குச் சொந்தமானவையாதலால் சீரமைப்புப் பணி முடிவுற்றவுடன், கோவில் குளங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள சீரமைப்புப் பணி விவரங்களைக் கோவில் நிர்வாக அலுவலர் தக்கார் ஆகியவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில், கோவில் குளச் சீரமைப்புப் பணிக்கு 31.12.1993 முடிய ரூ.300.48 இலட்சம் நிதிவிடுவிக்கப்பட்டுள்ளது. 250 பணிகள் தொடங்கப் பெற்று 140 பணிகள் முடிக்கப் பெற்றுள்ளன. மேலும் ரூ.253.864 இலட்சம் செலவிடப்பட்டு, 8.218 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சித்த மருத்துவ மகளிர் விடுதி கட்டித்தர முதல்வர் ஆணை

சென்னை - அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மருத்துவமனையில் அமைந்துள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவம் பயின்றுவரும் மாணவிகள், தாம் தங்குவதற்காக ஒரு விடுதி கட்டித்தர வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்தார்கள்.

சித்த மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவிகளின் நலம் கருதி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 25 இலட்சம் ரூபாயில் 'பெண்கள் தங்கும் விடுதி' ஒன்றினை அமைக்க ஆணை பிறப்பித்துள்ளார். இந்த விடுதிக் கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளதால், கட்டுமானப் பணியை விரைவில் மேற்கொண்டு முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலர்

ஏப்ரல் 14. ஆம் தேதி அம்பேத்கர் பிறந்த நாள். இதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

சமூக நீதிக்காகவும், மனித உரிமைக்காகவும் தளராது உழைத்தவர்; இந்தச் சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்தை உருவாக்கிய சட்ட மேதை; நாட்டின் சமூக, அரசியல் வாழ்வில் தமது அரும் பணியால் தனி முத்திரை பதித்தவர் அவர்தான் பாபா சாகேப் என்று அன்புடன் குறிப்பிடப்படும்' டாக்டர் பீம்ஜி ராவ் அம்பேத்கர்.

"சிந்தனையைத் தூண்டும் அவரது வாழ்க்கை, சமூகத்தில் மனிதர்களிடையே சமத்துவ உறவுகளும் மனிதக் கண்ணியமும் மலர வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்ட அனைவருக்கும் அரிய போதனைகள் நிறைந்ததாக அமைந்தது" அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்களில் ஒருவர் கூறும் இந்த வார்த்தைகள், அவரது இலட்சியங்களையும் சாதனைகளையும் இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றன.

இந்தியாவின் அரசியல் சாசனத்தை உருவாக்குவதில் அவரது பங்குப் பணி மிகப் பெரியது என்பது உலகம் அறிந்த உண்மை. அந்தப் பணியின் அளவைவிட முக்கியமானவை அதன் தன்மையும் தரமும். "மிக அதிகமான மக்களுக்கு மிக அதிகமான நன்மை" என்ற தத்துவத்தை. அடிப்படையாக வைத்து அரசியல் சாசனத்தை அவர் அமைத்தார். நாட்டின் பொது வாழ்வில் அவர் ஆற்றிய மிகப்பெரிய பணி, மக்களிடையே சாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் உயர்வு, தாழ்வு கற்பித்து பாரபட்சம் காட்டுவதை எதிர்த்துநடத்திய நீண்ட நெடும் போராட்டமாகும்.

மும்முனைத் தத்துவம்

டாக்டர் அம்பேத்கர் தமது வாழ்க்கையை இந்தியாவில் சமுகக் கேடுகளை ஒழிப்பதற்கு, முக்கியமாக சாதிவேற்றுமைகளையும், தீண்டாமைக் கொடுமைகளையும் ஒழிப்பதற்கு, முழுமையாக அர்ப்பணித்தார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவை மூன்று முனைகள் என்று அவர் கருதினார். இவற்றில் எந்த ஒன்றையும் மற்றவற்றிலிருந்து பிரித்தால் ஜனநாயகக் கொள்கையின் நோக்கமே தோற்றுப்போகும். சுதந்திரம் இல்லாமல் சமத்துவம் இருக்கமுடியாது, சமத்துவம் இல்லாமல் சுதந்திரம் இருக்க முடியாது. அதேபோல் இவை இரண்டும் இல்லாமல் சகோதரத்துவம் இருக்க முடயாது. சமத்தும் இல்லையென்றால், சுதந்திரம் என்பது ஒரு சிலர், பலர்மீது ஆதிக்கம் செலுத்தும் நிலையாக மாறிவிடும். சுதந்திரம் இல்லாத சமத்துவத்தில் தனி மனிதனின் ஊக்கத்துக்கும் முயற்சிக்கும் இடமில்லாமல் போகும். சகோதரத்துவம் இல்லை என்றால் சுதந்திரமும் சமத்துவமும் இயல்பாக இயங்க முடியாது.

டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கைப் பணிகளில் மிக முக்கியமானதாகக் குறிப்பிடத்தக்க பணி தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக அவர் ஆற்றிய அரும் பணியேயாகும். தாங்கள் எவ்வளவு தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டு, எத்தகைய இழிவான வாழ்க்கை வாழும் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அந்த மக்கள் உணரச் செய்தது அவரது சாதனையாகும். அவர்களின் பலவீனங்களை அவர் எடுத்துக்காட்டியதோடு அவர்கள் ஒற்றுமைப்பட்டு நின்றால் எத்தகைய மாபெரும் சக்தியாக உருவாக முடியும் என்பதையும் உணரச் செய்தார். கல்வியின் அவசியத்தையும், ஒற்றுமையை உருவாக்கும் ஒரு அமைப்பின் முக்கியத்துவத்தையும், தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு அமைதியாகக் கிளர்ச்சி செய்ய வேண்டிய தேவையையும் அவர் வலியுறுத்தினார். சமுகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை பெறுவதற்கு அவர் நடத்திய இயக்கத்துக்கு "கல்வி அமைப்பு, கிளர்ச்சி" என்பதே தாரக மந்திரமாக அமைந்தது.

இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கிய சிற்பி என்ற பெருமைக்குரியவர் பாபா சாகேப். தாராளக் கொள்கை கொண்ட ஜனநாயகத் தத்துவம் இதன் உயிரோட்டமாக அமைந்துள்ளது. இந்தச் சாசனம் உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கியதாக மட்டுமன்றி, அரசின் வெவ்வேறு அமைப்புகளில் எந்த ஒன்றும் வரம்பு மீறிச் செயல் படாமல் மற்ற அமைப்புகள் மூலம் கட்டுப்படுத்தப்படும் ஏற்பாடுகளும், அவற்றின் அதிகாரங்களில் ஒரு சமச்சீர் நிலையைப் பாதுகாக்கும் வழிமுறைகளும் வியக்கத்தக்க முறையில் பின்னிப் பிணைந்த அமைப்பாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. சாதாரண

இந்திய மக்களிடம் உள்ளார்ந்து அமைந்துள்ள விவேக உணர்வில் நம்பிக்கை வைத்து இது உருவாக்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

சமூக நீதி

அரசியல் அமைப்பு முறையின் வெற்றி சமூக அமைப்பையே சார்ந் துள்ளது என்பது டாக்டர் அம்பேத் கரின் கருத்து, "ஜனநாயக முறை யிலான அரசுக்கு, ஜனநாயக முறை யிலான சமூகமே அடிப்படை யாகும்" என்று அவர் கூறுகிறார். ஜனநாயக முறையிலான சமூகம் என்றால் அதில் ஒற்றுமையோ, ஒன்றுபட்ட நோக்கமோ, பொதுநலக் குறிக்கோள்களுக்கு விசுவாசமோ கட்டாயமாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால், இரண்டு முக்கிய விஷயங்கள் அவசியம் இருந்தாக வேண்டும். ஒன்று, அந்தச் சமூகத்தின் மக்கள்

ஒருவருக்குகொருவர் மதிப்பும், சமத்துவ உயர்வும் கொண்டு நடக்கும் மனப்பான்மை, இரண்டா வது அழுத்தமான சமூகத் தடைகள் இல்லாத சமூக அமைப்பு.

அரசியல் சாசனத்தின் ஒருமைத் தன்மை பற்றியும் டாக்டர் அம்பேத் கர் அழுத்தமான கருத்துக் கொண் டிருந்தார். "ஒரு நாடு, ஒரு மதிப்பு என்ற ஜனநாயகத் தத்துவம் அர்த்த முள்ளதாக இருக்க வேண்டு மானால், அரசியல் சாசனத்தின் சட்டங்கள் அரசியல் அமைப்பில் வடிவத்தை வரையறை செய்தால் மட்டும் போதாது சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பின் வடிவத்தையும் அவை வரையறை செய்து கொடுக்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

"மதச்சார்பின்மை" பற்றியும் "சோசலிசம்" பற்றியும், குறிப்பாக அரசியல் சாசனத்தில் இவை இடம் பெற்றுள்ளது பற்றி டாக்டர் அம்பேத்கரின் கருத்துக்கள் இவற் றைப் பற்றி எழும் சந்தேகங்களுக்கு விளக்கமளிப்பனவாக உள்ளன. "மதச் சார்பற்ற அரசு என்றால் மக்களின் மத உணர்வுகளுக்கு மதிப்பளிக்கமாட்டோம் என்று பொருளாகாதுஎன்றுஅவர் கூறினார். மேலும், "மதச் சார்பற்ற அரசு என் றால், இந்த நாடாளுமன்றம் எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் மற்ற வர்கள் மீது திணிக்க முடியாது என்பதே பொருளாகும்" என்று அவர் விளக்கினார்.

பல்வேறு பணிகள்

டாக்டர் அம்பேத்கர் நமது தேசிய வாழ்க்கையில் ஏற்று நடத்திய பணிகள் பல திறப்பட்டவையாகும். அரசியல் சாசன நிபுணர், நாடாளு மன்ற உறுப்பினர், ராஜிய நிபுணர், சிந்தனையாளர், கல்விமான், எழுத் தாளர் என்று பல்வேறு துறைகளில் அவர் சாதனைகள் புரிந்திருக்கிறார். இந்தச் சமூகத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பி, தீண்டாமையை ஒழித்து, நீதியும் நேர்மையும் சமத் துவமும் கொண்டதாக அதைச் சீர்திருத்தி அமைக்க உதவும் வகையில் அதன் சிந்தனையைத் தூண்டி விட்டது அவர் செய்த சிறந்த பணிகளில் ஒன்று.

இந்திய அரசியல் சாசனத்தை நாட்டுக்கு அர்ப்பணத்து வைத்து 1949-நவம்பர் 25 - ஆம் தேதி அவர் பேசுகையில் தீர்க்கதரிசனமாக அவர் கூறிய கருத்து நினைவில் கொள்ளத்தக்கது. "அரசியல் சாச னம் நாட்டின் அரசியல் சுதந்திரத் துக்கு உத்தரவாதம் அளிக்கிறது ஆனால் பொருளாதார சமத் துவத்தை உருவாக்கி, சமூகத்தின் நலிந்த பிரிவு மக்களின் நிலையை உயர்த்துவதற்கு எல்லா முயற்சி களையும் நாம் எடுக்கத் தவறினால் நமது நம்பிக்கை ஒளியாக உள்ள இந்த அரசியல் சாசனத்துக்கே அபாயம் ஏற்படும் நாள் ஒன்று வரக்கூடும்" என்று அவர் எச்சரித்தார். நமது நம்பிக்கை ஒளியான இந்தச் சாசனத்துக்கு எப்போதும் எந்த அபாயமும் வராமல் காப்பாற்றிக்கொள்வது நாட்டின் கோடிக்கணக்கான மக்கள் அனைவரின் கடமையும் பொறுப் பும் ஆகும்.

-பத்திரிகைத் தகவல் அலுவலகம்

உரிமைத் திருநாள்

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைத் திருநாளாக, மே முதல் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிற திருநாள் ஆகும்.

"உழைக்கும் மக்களே, ஒன்று சேர்ந்திடுவீர்! பேதப்படுத்தும் சக்திகளை ஒதுக்கித் தள்ளிடுவீர்! உழைப்பவரே உயர்ந்தவர் எனும் தத்துவத்தை நிலை நாட்டுவீர். புதிய சமதர்ம, சமத்துவ, சமுதாய அமைப்புக்கு முன்னோடும் சக்தியாகத் தலைமை தாங்கிடுவீர்!" என உழைக்கும் வர்க்கத்தை இருகரங்கூப்பி அழைக்கிறேன்.

- டாக்டர் எம்.ஜி.ஆர்

புதிய புதிய நூல்களைப் படிப்பதும், புதிய சிந்தனைகளைத் தூண்டும் வகையில் ஏற்படும் உண்மையான செயலுமே கல்வியின் பயன்.

—டாக்டர் மு.வ.

நூல் நயம்

பார்வை நேரம்

ஆசிரியர்: ராஜ்
வெளியீடு:
சுஜயா பப்ளிகேஷன்ஸ்,
பிளாட் 10, மோபரீஸ் சாலை,
ஆழ்வார் பேட்டை, சென்னை-18.
பக்கம்:159 விலை:ரூ.25/-

வெட்டிவைத்த கரும்புத் துண்டு களாக இனிக்கும் சிறுகதைகளின் தொகுப்பு நூல்தான் இந்தப் 'பார்வை நேரம்'. 'கலி' என்பதில் தொடங்கி, 'அதிர்ஷ்டம்' என்பது வரையிலான இருபது கதைகள் இதில் அடக்கம்.

நூலாசிரியர், எழுத்தையே வருமானக் கருவியாகக் கொண்டிருப்பவர் அல்ல என்பது, ஒவ்வொரு கதையிலும் தெரி கிறது; அதேசமயம்- பாதிக்குப்பாதி உண்மைச் சம்பவங்கள்; மீதியில் படா டோபம் இல்லாத கற்பனை எழுத்தாட்சி இருப்பதை உணர முடிகிறது. ஒரு உதாரணம்-

பார்வையிழந்த ஒருவனின் டெலி போன் பூத் அங்கே வந்து காதலியிடம் பேசும் இளைஞன், அவள் வேறொரு வனைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகக் கூறவே- தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன் என்கிறான். பார்வையிழந்த இளைஞன் எவ்வளவோ ஆறுதல் கூறியும் பொறுக்காத நிலையில்- "அப்படியானால் உன் கண்ணை எனக்குத் தானம் செய்; உன் கிட்னியை இன்னொருவருக்குக் கொடுப்பதாக எழுதி வை" என்கிறான்; வந்தவனோ "சுத்த சுயநலக்காரன் நீ" என்று கூறிவிட்டுப் போய்விடுகிறான். கடைசி யில் தெரிகிறது- டெலிபோனில் அவனிடம் பேசியவள், பார்வை கெடாது இருந்தவரையில் இவனைக் காதலித்தவள் என்பது!

இப்படிக் கதைகள்; சிறுகதைப் பிரியர்கள் அவசியம் படிக்கவே வேண்டிய தொகுப்பு.

—பி.எல்.ஆர்.

அம்பலவன் பழுவூர் நக்கன்

ஆசிரியர்: எஸ். குலசேகரன்
வெளியீடு:
அமிழ்தும் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்-1,
வ.ஆ.அ. மாவட்டம்.
பக்கம்:222 விலை:ரூ.29/-

தாழ்ந்த குலத்தில் பிறந்து, பல்வேறு பொது, சமூகப் பணிகள் மேற்கொண்டு புகழ்பெற்று, சோழர் வரலாற்றில் தனக் கென ஓர் இடம் பிடித்துக் கொண்ட 'அம்பலவன் பழுவூர் நக்கன்' பற்றிய கதை. நீதிக்காகவும், சமூக ஏற்றத் தாழ்வு களை அகற்றவும் போராடும் மாவீரன் அம்பலவன் வரலாறு. அனைவரும் அறிய வேண்டிய ஒன்று.

—குமார்

வாரிசு

ஆசிரியர்: செ. ஞானன்
வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.
பக்கம்:131 விலை:ரூ.18/-

மனிதர்களின் மறு பக்கங்களைச் சொல்லும் சிறுகதைகள். நேர்மையற்ற, ஒழுக்கமற்ற, கட்டுப்பாடற்ற, சௌகரிய வாழ்க்கை வாழுபவர்களின் இயல்புகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

இந்த அவலங்களை அம்பலப்படுத்தும் முறை மிக நாகரிகமாக இருப்பதற்கு நம் பாராட்டுகள்.

—குமார்

கல்விக் கண்

ஆசிரியர்: நாகை தருமன்
வெளியீடு:
கார்த்திக் பதிப்பகம்,
36, ஏ-7, கோவிந்தன் சாலை,
மேற்கு மாம்பலம்,
சென்னை-600 033.
பக்கம்:83 விலை:ரூ.10/-

'ஒளவையின்' பாடல்களுக்கு விளக்கம் தருவன போலமைந்த நீதிக் கதைகள். குழந்தைகள் நூல் என்றாலும் மற்றவர்களும் படித்து மகிழத்தக்க வகையில் சிறப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

பெண்களுக்கேற்ற லாபம் தரும் சிறுதொழில்கள்

ஆசிரியர்: வசந்தி அம்மாள்
வெளியீடு:
மோகன் புத்தக நிலையம்,
4, வள்ளலார் தெரு,
பத்மநாப நகர்,
சூளைமேடு, சென்னை-600 094.
பக்கம்:112 விலை:ரூ.15/-

வெளிவேலைக்குச் செல்லாது வீட்டிலிருக்கும் பெண்களுக்கு, மிகவும் பயன்படத்தக்க 54 சிறுதொழில்களைப் போதிக்கிறது இந்நூல். வியாபாரச் சந்தை யில் வெற்றி பெற வழிகள், சிறுதொழில் செய்யக்கடன் உதவி பெறுதல் போன்ற வழிகளும் கூறப்பட்டுள்ளன. குடும்பப் பெண்களுக்கு மிகவும் பயனுள்ள நூல்.

பாம்புகளின் ரகசிய வாழ்க்கையும் பாம்புக் கடிக்கு முதலுதவியும் மருத்துவமும்

ஆசிரியர்: டாக்டர் எஸ்.என். முரளீதர்
வெளியீடு:
சூடாமணி பிரசுரம்,
36, ஏ-8, கோவிந்தன் சாலை,
மேற்கு மாம்பலம், சென்னை-33
பக்கம்:156 விலை:ரூ.20/-

பாம்பு இனத்தைப் பற்றிய பல அரிய செய்திகளைக் கொண்ட நூல் இது. பாம்புகளின் வகை. பாம்புகளின் இயல்புகள். பாம்பு கடிக்காமல் இருக்க என்ன முன்னெச்சரிக்கை. பாம்பு கடித்து விட்டால் என்ன செய்ய வேண்டும். பாம்பு மருத்துவத்துறைக்கு எந்த அளவு பயன்படுகிறது என்பதை இந்நூல் விளக்குகிறது. இது அனைவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய நூல், கிராமத்து மக்கள், நகரங்களில் தோட்டங் களிடையே வசிப்போர் அனைவரது இல்லங்களிலும் இருக்க வேண்டிய நூல்.

வீடியோப் படம் எடுப்பது எப்படி?

ஆசிரியர்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
வெளியீடு:
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.
பக்கம்:60 விலை:ரூ.20/-

'வீடியோ கவரேஜ்' என்பது இன்று சர்வசாதாரணமாகிவிட்டது. திருமணம் திருவிழா என்றில்லாமல் பொதுவாக எல்லா நிகழ்ச்சிகளிலுமே இந்த வீடியோ இன்ற முக்கியப் பங்கு பெற்று விளங்கு கிறது.

வீடியோப்படம் எடுப்பது பற்றிய எல்லாத் தகவல்களையும், செய்முறை களையும் படங்களுடன் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது. இத்துறை மாணவர்க்கு இது ஒரு நல்ல துணைவனாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

— கிரி.

பாவேந்தர்

பாவலர் இரா. சுப்பிரமணியன்

ஏறிய நெற்றி; கூரிய பார்வை;
படர்ந்த முகத்தில் அடர்ந்த மீசை;
மலைபோல் தோள்கள் மணிபோல் கழுத்து;
வாள்போல் வீச்சு வழங்கிடும் பேச்சு;
தமிழின் பரிசு தமிழ்த்தாய் முரசு
முச்சங்க ஆய்வு முத்தமிழ்த் தோய்வு
அருந்தமிழ் ஊற்று அயன்மொழிக் கூற்று
அகன்ற மார்பு ஆழ்கடல் அறிவு
அரிமா சீற்றம் ஆளுமைத் தோற்றம்
இசையில் புலமை இசைக்கும் வன்மை
பாரதி காத்த பைந்தமிழ் மறவன்
தமிழரின் போர்வாள் தன்மானத் தமிழ்ப்பால்
பெரியார் பெரும்புகழ் பேசும் மணித்தமிழ்
புரட்சிப் பாடல் பொழியும் கார்மழை
கைகால் தேக்கு கடமைப் போக்கு
புயத்தின் பொலிவு பொதுமைப் புத்தகம்
தமிழ்தான் அவனுயிர் தனித்தமிழ் விளைபயிர்
இயற்கை அழகை எழுதிய திருக்கை
கொள்கைத் தமிழரின் குடும்ப விளக்கு
உவமையில் உருவம் உயர்எண்ண அமுதம்
நெருப்பின் சூடு நிலவின் குளிர்ச்சி
அச்சம் என்பது அணுவும் இல்லை
அன்னவன் புகழுக்கு அளவே இல்லை
எண்ணுக அவன்மொழி செல்லுக அவன்வழி!

அவர்கள் 40 ஆயிரம் தன்னார்வலர்களைத் தேர்ந்தெடுத்திட உத்தரவிட்டார்.

எழுத்தறிவிக்கும் பணியானது ஒரு புனிதப் பணியாகும். புனிதப் பணியில் அனைத்து மக்களும் சேர்ந்து செயல்படுதல் அவசியமாகும். 41 இலட்சத்து 90 மையங்கள் ஏற்படுத்துதல், ஒவ்வொரு மையத்திலும் சுமார் 10 பேருக்கு எழுத்தறிவிக்கும் பணியினை நடத்திடல்வேண்டும்.

இப்பணியினைத் தன்னார்வலர்களால்தான் செய்யமுடியும். வயது வித்தியாசம் பாராமல் எழுதப் படிக்கத் தெரிந்த அனைவரும் எழுத்தறிவிக்கும் பணியில் ஈடுபடலாம். முக்கியத் தேவை எழுத்தறிவில் ஆர்வம்தான். எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தொடர்ந்து மையங்களுக்கு வந்து கல்வி கற்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல் மிக அவசியமாகும். முதல் பத்து நாள் வந்து விட்டு, பின்னர் வராமல் போய் விட்டால் திட்டம் தோல்வியுறும். எழுதப்படிக்க வருகின்றவர்களை அன்பாகவும், எழுத்தறிவு பெறுவதினால் ஏற்படும் பெருமைகளையும், பயன்களையும் சிறப்பாக எடுத்துக் கூறி கல்வி கற்கும் மனமாற்றத்தை முடிவில் ஏற்படுத்துதல் வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் தெரிவித்தார்.

நேரடி கற்பிப்போர் மையங்கள் துவக்க விழா, ஜனவரி 7 அன்று பெருந்துறையில் நடைபெற்றது. இச் சமயம் 21 ஆயிரம் மையங்கள் பெரியார் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இம்மாத இறுதிக்குள்ளாக அனைத்து மையங்களும் துவக்கப்பட்டு விடும். மார்ச் 19-ஆம் தேதியன்று அறிவொளி இயக்கம் தகவல் தொடர்புச் சாதனங்கள் என்ற கருத்தரங்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் மாவட்டச் செய்தியாளர்கள், அகில இந்திய வானொலி நிலையத்தினர் கலந்து கொண்டார்கள்.

பெரியார் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அறிவொளி இயக்கத்தை தாராபுரம் கோட்ட அளவில் திட்ட அலுவலர், கூடுதல் ஆட்சியர் திரு ஹர்மந்திர்சிங், இ.ஆ.ப., அவர்களும், ஈரோடு மற்றும் கோபி கோட்டத்திற்குத் தீவிர சுகாதாரத் திட்ட இணை இயக்குநர் திரு எஸ். வேலுசாமி அவர்களும், மண்டல அலுவலர்களாகக் கண்காணிப்புப் பணியினைச் செய்து வருகிறார்கள். 20 ஊராட்சி ஒன்றியங்கள், 5 நகராட்சிப் பகுதிகளில் துணை மாவட்ட ஆட்சித்தலைவர் தகுதியில் உள்ள அரசு அலுவலர்கள் பொறுப் பேற்றுக் கண்காணிப்பார்கள். இவர்கள் தங்கள் துறையின் பணியைச் செய்துமுடித்த பின்னர், அறிவொளிப் பணியினையும் ஆர்வத்துடன் செய்திடுமாறு இவர்கள் கேட்டுக் கொள்ளபப்பட்டுள்ளனர். அறிவொளி மனிதச் சங்கிலி மே 1-ஆம் தேதி மாவட்டம் முழுவதும் நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரியார் மாவட்ட அறிவொளி இயக்க நிர்வாகக் குழுவில் செய்தியாளர்கள் பிரதிநிதிகளையும் நியமித்து, பணியினை மேலும் சிறப்புடன் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேரடியாக கற்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வலர்களுக்கு அரசு சார்பாகச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

ஒன்றிய-நகராட்சி-மாவட்ட அளவில் கற்போர்-கற்பிப்போர் மாநாடுகள் நடத்தப்படவுள்ளன. அனைத்து மகளிர் மாநாடும் நடத்தப் படவுள்ளது. ஏப்ரல் 14-ல் அறிவொளி இயக்க முப்பெரும் விழா நடைபெற்றது. பெரியார் மாவட்டத்தில் தாளவாடி, பர்கூர், குன்றி போன்ற மலைப்பகுதிகளில் மலைவாழ் மக்களும் பிற இனத்தவரும் அதிக அளவில் எழுத்தறிவு அற்றவர்களாக உள்ளார்கள். சில இடங்களில் இவர்கள் பேசும் மொழி கன்னடமாகவும் உள்ளது. எனவே கன்னடம் பேசத் தெரிந்த தன்னார்வலர்களைக் கொண்டு அறிவொளி பணி நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காகத் தனியான பாடத்திட்டமும் உருவாக்கப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் சில நகர்ப்புறங்களில் வாழ்கின்றவர்களில் சிலர், கைத்தறி ஆடை நெய்தல் போன்ற தொழில்களில் தினக்கூலியாகப் பணியாற்றி வருகிறார்கள். பணி முடித்து வீடு திரும்பிய பின், இவர்களுக்குக் கற்பிக்கும் பணி செய்வது சற்றுச் சிரமமாக இருக்கும். எனவே தொழிற்சாலை அதிபர்களுடன் பேசி, உணவு இடைவேளை ஓய்வு நேரத்தில் சிறப்புக் கற்பிக்கும் பணி செய்திடலாம் என்று முடிவெடுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேரடி கற்பிக்கும் மையங்கள் நடைபெறும் இடங்களில் மின்வசதி இல்லாத இடங்களில் பெட்ரோமாக்ஸ் மற்றும் அரிக்கேன் விளக்குகள் வழங்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெரியார் மாவட்ட அறிவொளி இயக்கத்திற்குத் தேவையான எழுது பொருட்கள், அறிவொளி திட்டம் 1, கற்பலகை, கற்பலகைக் குச்சி, சாக்பீஸ், கருள் கரும்பலகை ஆகியவைகள் அனைத்து மையங்களுக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வழங்கப்பட்டுவிட்டன.

அறிவொளிப் பணியானது அனைவரும் இணைந்து செயல்பட வேண்டிய ஒன்று, அனைத்துசாராரும் தன்னார்வத்துடன் செயல்பட்டு பெரியார் மாவட்டத்தில் அறிவொளி பணியைச் சிறப்புடன் செயல்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என்.எஸ். பழனியப்பன், அவர்கள் தெரிவிக்கிறார்.



பழங்குடியினர் நலத்திட்டங்கள்: அரசு மூலம் பெரும் நிதியுதவி

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றில் பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டமும் அடங்கும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் வனப் பிரிவின் கீழ் 1993-94-ஆண்டில் கொல்லிமலை, ஜவ்வாது மலை, சித்தேரி மலை, கல்வராயன் மலை மற்றும் பச்சை மலை ஆகிய பகுதிகளில் சந்தன மரம், புளியமரம், பலாமரம், மூங்கில் மரம், கடுக்காய் மரம், தேக்கு மரம் போன்ற மரவகைக் கன்றுகளை நட்டு காடு வளர்க்கவும்-சாலையோர மரங்களை ஏற்படுத்தவும்-ஏற்கெனவே செயல்படுத்தப் பட்டுவரும் திட்டங்களுக்காகவும், மண்வளப் பாதுகாப்பு மற்றும் நிர்வாகச் செலவு ஆகியவற்றுக்காகவும் மொத்தம் ரூ.149.25 இலட்சம் தொகை ஆதிதிராவிட நலத்துறை மூலம் ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்.

இதன்படி சுமார் 371 எக்டேர் நிலப்பரப்பில், மேலே குறிப்பிட்ட மரக்கன்றுகள் புதியதாக நடப்படும், 45 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலையோர மரங்கள் நடப்படும், இதற்கு ரூ.35 இலட்சம் செலவிடப் படும். சேலம் மாவட்டம் கொல்லி மலை, பச்சை மலை, கல்வராயன் மலை, அருனூத்து மலை ஆகிய பகுதிகளில், ஓடையின் குறுக்கே 4 சிறிய நீர்த் தேக்கங்களும், 2 கசிவு நீர்க் குட்டைகளும் ஏற்படுத்தப் படும். இதற்காக ரூ.2 இலட்சம் செலவிடப்படும். வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், ஏலகிரி மலையில் வனவிலங்குகளின் குடிநீர் தேவைக்காக ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு குளம் அமைக்கப் படும், மீதமுள்ள தொகை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்காகவும், நிர்வாகச் செலவுக்காகவும் பயன்படுத்தப்படும்.

மாணவர் பக்கம்

— பி.வி. கிரி —

அச்சுக் கோக்க உதவிடும்
அற்பு தங்கள் செய்திடும்
மெச்சத் தரும் வேலையை
மேலும் விரைந்து செய்திடும்
— அது என்ன?
— அது என்ன?

கடின மான கணக்கினைக்
கடுதில் போட்டு முடித்திடும்
விடிய விடிய ஓய்வின்றி
விந்தை புரியும் எந்திரம்
— அது என்ன?
— அது என்ன?

பயணச் சீட்டு வழங்கிடும்
பார்க்க அழகாய்த் தோன்றிடும்
துயரம் இன்றிப் பணியினைத்
துரித மாகச் செய்யலாம்
— அது என்ன?
— அது என்ன?

'நினைவில்' எல்லாம் வைத்திடும்
நோயைக் கூட அறிந்திடும்
இனிய இசையைப் பொழிந்திடும்
இதன் பெயரே 'கம்ப்யூட்டர்'!

பிறருக்காக...

◉ உனக்கென எதையும் விரும்பாதே. எல்லாவற்றையும் பிறருக்காகவே செய்.

உழைப்பு

◉ ஓயாமல் உழைத்துக் கொண்டு இரு. ஆனால், அந்த உழைப்பில் ஏதாவது ஒரு இன்பத்தைக் காண்.

உதவி

◉ உலகத்திற்கு உதவி செய்வதன் மூலம், உண்மையில் நமக்குத்தான் உதவி செய்து கொள்கிறோம்.

மனத்தூய்மை

◉ மனம் எவ்வளவு தூய்மையாக இருக்கிறதோ, அவ்வளவு அதை எளிதாக அடக்க முடியும். மனத்தை அடக்க வேண்டுமானால், மனத்தூய்மை வேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்

பொது அறிவு

வெறிநாய்க் கடிக்கு மருந்து கண்டு பிடித்தவர் - லூயி பாஸ்டர்.

பரப்பளவில் பெரிய மாநிலம் எது - உத்திரபிரதேசம்.

இந்தியாவிலுள்ள நீளமான ஆற்றுப் பாலம் - பாட்னாவிலுள்ள மகாத்மா காந்தி பாலம்.

உலகில் யானைகளின் நகரம் என்று அழைக்கப்படுவது - சயாம்.

ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு எது?

பின்லாந்து.

அதிகாலை அமைதி நாடு என்று எந்த நாட்டைச் சொல்கிறோம்?

கொரியா.



அஞ்சல்

◉ உலகிலேயே அதிக அளவு அஞ்சலகங்களைக் கொண்டுள்ள நாடு நம்நாடுதான். அவற்றில் 90 சதவிகித அஞ்சலகங்கள் கிராமப்புறங்களில் உள்ளன. கிராமப்புறங்களில் சராசரியாக 4,728 பேருக்கு ஒரு அஞ்சல் அலுவலகமும், நகரங்களில் சராசரியாக 13,511 பேருக்கு ஒரு அஞ்சல் அலுவலகமும் உள்ளன. செயற்கைக்கோள் மூலம் மணியார்டர் அனுப்பும் முறை சோதனை அடிப்படையில் நான்கு பெருநகரங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது. பின்பு இது 71 மையங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

பெரியார் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம்

கொங்கு நாடு பெரியார்,கோவை, சேலம், தருமபுரி மாவட்டங்களையும், பழனி கரூர் வட்டங்களையும் தன்னகத்தே கொண்டது. கொங்கு நாட்டின் மையப் பகுதியாக விளங்குவது பெரியார் மாவட்டமாகும். பெரியார் மாவட்டம் உருவாக்கப் பட்ட பிறகு தொழில் வளர்ச்சியிலும், விவசாய வளர்ச்சியிலும், வியாபாரத் துறையிலும் முன்னேறி வருகின்றது.

நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணைப்படி, பெரியார் மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சிறுசேமிப்பு ஆலோசனைக்குழுத் துணைத்தலைவர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே பெரியார் மாவட்டம் அனைத்துத் துறைகளிலும் முதன்மையும் வளர்ச்சியும் பெறுதல் வேண்டும் என்று அயராது பணிபுரிந்து வருகின்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தும் திட்டங்கள் தேவையான மக்களுக்கு உரிய காலத்தில் சென்றடைதல் வேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்தி வருகின்றது.

அரசுத் திட்டங்கள் குறித்து, பொதுமக்கள் நன்கு அறிதல் வேண்டும். குறிப்பாக-தாழ்த்தப் பட்ட மக்களும், பெண்களும் இத் திட்டங்கள் குறித்து நன்கு அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். திட்டத்தினால் பயன் பெறுவோர் பங்கு பெற்றால்தான் திட்டம் வெற்றி படையும். ஏழை எளியோர், மகளிர் இத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ள எழுத்தறிவு அவசியமாகும்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள 24 இலட்சம் மக்கள் தொகையில் சுமார் 4½ இலட்சம் மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்காததால் ஏழை எளியோர் மகளிர் பெருமளவில் எழுத்தறிவு பெறவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணையின்படி, பெரியார் மாவட்டத்தில் எழுத்தறிவு இயக்கம் 1993 மார்ச் 14-ஆம் தேதி முதல் துவக்கப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

முதல் ஆறுமாத காலத்திற்குப் பெரியார் மாவட்டத்தில், எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கற்பிக்கும் பணி நடக்கப்படவுள்ளதை அறிவிக்கும் வகையில், பல்வேறு வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சுவரொட்டிகள், சுவரில் எழுதுதல், அறிவொளி பேரணிகள் நடத்துதல், அறிவொளி கலைப்பயணங்ள் நடத்துதல், கிராமங்களில் கலைநிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கலைக்குழுவினர்களுக்கு 5.4.93 முதல் 13.4.94 வரை பயிற்சியளிக்கப்பட்டது. கலைப்பயணம் முதற் கட்டமாக 300 கிராமங்களிலும், இரண்டாவது கட்டமாக 800 கிராமங்களிலும் நடைபெற்றது.

கலைப்பயணத்தின் மூலம் கல்வியின் இன்றியமையாமை கிராமங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. பெரியார் மாவட்டம் முழுவதும் ஒரே நாளில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் பற்றிய கணக்கெடுப்பு 28.11.93 அன்று நடைபெற்றது. இப்பணியில் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலர்கள், மாணவ மாணவியர்கள், பிற நிறுவன அலுவலர்கள், ஆசிரியப் பெருமக்கள் ஆகிய அனைவரும் கலந்துகொண்டு இப்பணியினை மேற்கொண்டார்கள். இக்கணக்கெடுப்புப் பணியானது வீடு வீடாகச் சென்று அறிவொளி தன்னார்வலர்கள் எழுத்தறிவின் அரசியத்தை எடுத்துக் கூறியும் கல்லாமையைப் போக்கிடத் தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விளக்கிடும் நிகழ்ச்சியாக அமைந்தது.

கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட வீடுகளில், என் வீடு அறிவொளி வீடு என்ற நோட்டீசும், ஒட்டப் பட்டது. பெரியார் மாவட்டத்தில் கல்லாதவர்கள் எண்ணிக்கை 4 இலட்சத்து 944 பேர் எனத் தெரிந்தது. இவ்வனைவருக்கும் எழுத்தறிவிக்கும் பணியினைச் சிறப்புடன் செய்திட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப.,



என்.எஸ். பழனியப்பன்
மாவட்ட ஆட்சித் தலைவர்
பெரியார் மாவட்டம்

75 ஆண்டுகளுக்கு முன்னதாகத் தமிழர்களின்
தலைசிறந்த தயாரிப்புகளில்......

75 YEARS
1917 1992

NEW
Perry's
BISCUITS

பெரீஸ்
பிஸ்கட்ஸ்

சுவைகளிலே புதுமைப்புரட்சி!!
தரத்தில் தனி இடம்!
சுவையில் தனி சுகம்!!

OUR DELICIOUS PRODUCTS

Milk Max
Milk Plus
Milk-G
Marie
Mango-Delight
Glucose
Star Trek
Zoological
Gem
Sixer
Krakers
Doller

Coco-Dine
Coco-Plus
Fanta-Plus
Elaicki-Plus
Flower
Nursery
Tiffin

★ OUR SPECIAL VARIETIES ★

COOKIES ● COCONUT TASTE
FANTA DELIGHT ● ORANGE TASTE
MASALA DELIGHT ● MASALA TASTE

MFRS: Sri Pandian Bakers, Usilampatti - 626532
PHONES: 2036, 2236, STD: 04552
TEL:"PERRYS"

தொல்காப்பியத்தில் அறிவியல் கருத்துக்கள்

முனைவர் வ. மாசிலாமணி
இயற்பியல் துறை
அண்ணா பல்கலைக்கழகம்
சென்னை.

தமிழின் முதல் நூல் தொல்காப்பியம். இதற்கு முன்னும் பல நூற்கள் இருந்த தாகச் செய்திகள் உள்ளன வெனினும் அவை கிடைக்கப்பெறவில்லை. இதை இயற்றிய தொல்காப்பியர் முதல் இலக் கணி; தமிழின் முதல் புலவர்; முற்றிய புலவர் - இவரை அடுத்து வந்த திரு வள்ளுவரும் இவரும் தமிழ் இலக்கிய வரிசையில் இருபெரு மேருகளாகத் திகழ் கின்றனர்.

இவருடைய காலம் இடைச்சங்க காலம், கடைச்சங்க காலம் என்று பல்வேறு கருத்துக்கள் இருப்பினும் கிறிஸ்து பிறப்பதற்கு ஓரிரு நூற் றாண்டுகள் முன்னது இவருடைய காலம் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்ட கருத்து. இவர் அகத்தியர் மாணாக் கர் என்றும் ஐந்திரம் அறிந்த தொல் காப்பியன் என்றும் சமஸ்கிருத பாணி னீயம் கற்றவர் என்றும் சொல்வதுண்டு. இத்தகைய குறிப்புகள் தவிர இவருடைய வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள் கிடைத்தில; தேவையுமில்லை. இவ ருடைய நூலே இவருடைய வாழ்க்கைச் செய்தி. (இத்தகைய பாரம்பரியம் தமிழ்ப் புலவர்கள் பலரிடம் இருந்திருக்கிறது).

தொல்காப்பியம் முதல் தமிழ் இலக்கண நூல். இந்நூல் மூன்று அதிகாரங்களாக வும், ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் அதிகாரம் எழுத்து: இதில் தமிழ் எழுத்துக்கள் எவை, அவை பிறக்குமிடம், எழுத்துக்களின் புணர்ச்சி முதலியன பற்றி விரிவான விளக்கம் உள்ளது. அடுத்தது சொல்லதிகாரம்: எழுத்துக்கள் சேர்ந்தோ தனித்து நின்றோ பொருள் தரும் பான்மையை விளக்குவது. இந்த இரு அதிகாரங்களும் இற்றைக்கால மொழியியலார் (Philologist) தோண்டித் தோண்டித் துவள வேண்டிய சுரங்கம்.

நாம் நேரடியாகப் பொருளதிகாரத் திற்குப் போய்விடுவோம். ஓர் இலக்கண நூலில் பொருளதிகாரம் இருப்பது புதுமை. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே முகிழ்த்த புதுமை. ஏனென் றால் ஒரு மொழியின் சொல்லையும் எழுத்தையும் அதன் வழக்காறுகளையும் வரையறுப்பதுதான் இலக்கணியின் தொழில் என்பது மொழியியல் பாரம் பரியம்.

இந்தக் கட்டம் தாண்டி தொல்காப் பியர் ஒருபடி மேலே செல்கிறார். சொல் லும் எழுத்துமாகிய மொழி மனித வாழ்க்கைக்கு ஒரு துணைக் கருவிதான். எந்த ஒரு இலக்கியத்தின் நோக்கமும் மனித வாழ்க்கையின் பலவகைப் பரி மாணத்தை வெவ்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டுவதுதான். எனில், ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை முறை பற்றியும் மரபு பற்றியும் வரையறை செய் தால்தான் அடுத்து வரும் இலக்கிய வரிசைக்கு வழிகாட்டியாக அமைய முடி யும்; அப்போதுதான் ஒரு இலக்கண நூல் முழுமை பெற முடியும் என்பது தொல் காப்பியரின் தேர்ந்த கொள்கை.

இதன் அடிப்படையில் எழுந்த பொருளதிகாரம் மனித குழும வாழ்க்கை முறையை இரண்டாகப் பிரிக்கிறது. ஒன்று அகம்; அடுத்தது புறம். ஒருத்தனும் ஒருத்தியும் கூடிவாழும் காதல் சான்ற வாழக்கை அகம். உள்ளத்தே செறிந்து நின்று புறத்தே உரைக்க இயலாத மென்மையான உணர்வு காதல். செம்புலப் பெயல் நீர்போல அன்புடை நெஞ்சம் தாம் கலத்தல், களவு, கற்பு, ஊடல், கூடல், குழந்தை, குடும்பம் முதலிய அகவாழ்க்கையின் கூறுகள். அகத்தினைத் தவிர்த்த மற்ற அனைத்துச் செயல்பாடுகளும் — வீரம், கொடை, அரசியல் நெறி முதலிய - அனைத்தும் புறத்திணையில் அடங்கும்.

அக, புற வாழ்க்கைக் கூறுகளை ஒவ் வொன்றுக்கும் நிலமும் நேரமும், மரமும் இணைத்து விளக்கியிருப்பது தமிழரின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைக் காட்டுகிறது. உளவியலாரும் (Psychologist), சமூகவியலாரும் ஊன்றி ஆய வேண்டிய பகுதிகள் -இவை.

இந்தப் பொருளதிகாரத்தில்தான் பல்வேறு இடங்களில் ஆழமும் அகல முமான அறிவியற் கருத்துக்கள் விரவி யிருக்கின்றன. அவற்றில் கருத்தூன்று வோம் இனி:

உலகம் என்பது என்ன?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கேட்கப்படும் கேள்வி. நெற்றியடியாகப் பதில் வருகிறது ஆசிரியரிடமிருந்து:

நிலந்தீ நீவளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல் நெறி....
- சூத்.635)

மண், விண், தீ, நீர், காற்று என்று ஐம்பெரும் பூதங்கள் - மூலப்பொருட்கள் - கலந்தும் மயங்கியும் உலகம் உருவாகி உள்ளது. "கலத்தலாவது முத்தும் பவள மும் நீலமும் மாணிக்கமும் விரவினால் போறல்; மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கியொன்றா தல் போறல்" என்பர் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர். (புற நானூற்றில் இதே போன்ற கருத்து வருதல் காண்க). உலகம் ஐம்பெரும் பூதங்களின் மயக்கம் என்ற கருத்து கிரேக்க அறிஞர்கள் பிதாகோரஸிடமும் எம்பிடோக்ளிஸிடமும் (Empedocles) மற்றும் ரிக்வேத முனிவர்களிடமும் இருந் தது என்பதை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும்.

அடுத்து உலகின் பொருளை ஒட்டு மொத்தமாக எடுத்து இருதிணைகளாகப் பிரிக்கிறார். ஒன்று உயர்திணை; மற்றது அஃறிணை. திணையாவது ஒழுக்கம் இந்த ஒழுக்கம் அறிவின் செறிவு; பகுத்தறிவின் பயன். பகுத்தறிவுள்ள மனித இனம் ஒரு குழாம்; மற்றவை அனைத்தும் வேறு குழாம். இந்தப் பகுத்தறிவு எப்படி முகிழ்த் தது? எப்படிப் பரிமளித்தது? படிப்படியாக அறிவு பரிமாணம் (evolution of faculty) அடைந்தது என்கிறார் ஆசிரியர்.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே
ஆறறி வதுவே அவற்றோடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே''
(சூத்: 581)

இந்தச் சூத்திரம் கூறுவதாவது: எல்லாவுயிர்க்கும் அறிவுண்டு; ஆனால் அறிவுத் திறத்தில் பலவகைத் தரம், படிகள் உள்ளன. தொடுபுலன் முதல் அறிவு. இது மிக அடிப்படையானது. அடுத்தது சுவை அறிவு அதன் பின்னது முகர்தல் உணர்வு; நான்காவது கட்புலன் - ஐந்தாவது செவிப்புலன். ஆறாவது மேற்குறித்து ஐந்து புலன்களையும் தொகுத்தும் பகுத்தும் உணரும் மனம்.

அடுத்த சூத்திரம், வங்க உயிரியல் அறிஞர் ஜகதீஸ் சந்திர போசுக்கு எழுதப் பட்டது!

புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

புல்லும் மரமும் ஒரே ஒரு அறிவுடையன. அது தொடுபுலன். வெட்டினால் கொட்டினால் தாவர இனத்திற்கு கண்ணீரும் செந்நீரும் வரும்; தட்டித் தடவியே மரத்தில் ஏறிவிடக் கூடியது கொடி.

நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(573)

சங்கு, நத்தை முதலியவற்றிற்குத் தொடு புலனும் சுவைப் புலனுமாகிய ஈரறிவு மட்டுமே.

சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(574)

எறும்பு, அட்டை முதலியவற்றிற்கு ஊறு, சுவை, நாற்றம் என்னும் மூன்று புலன்கள் மட்டுமே.

நண்டும் தும்பியும் நான் கறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(575)

நண்டு, தும்பி முதலியன ஊறு, சுவை, நாற்றம் ஒளி என்னும் நான்கு புலன்கள் உள்ளன. (இங்கு பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பு என்பது "இந்த குறிப்பிட்ட இனத்தில் (Species) நண்டு, தும்பி போல பலவகை உயிர்கள் உள்ளன" என்று பொருள்).

மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(576)

நாற்கால் விலங்கும் பறவையினமும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தறிவுள்ளன.

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
(577)

அதாவது, அறிவோடு புணர்ந்த - சிந்தனையும் பகுத்தறிவும் செறிந்த - மக்கள் தாமே ஆறறிவுடையவர்கள்; ஆறாவது அறிவாகிய 'மனம்' உடையவர்கள்தாம் மனிதர்கள்.

ஒருசார் விலங்கும் உளமென மொழிப
(578)

ஒரு சில விலங்குகளினங்களும் - குரங்கு, கிளி, யானை முதலியவற்றிற்கு - மனிதனைப் போலவே ஆறறிவுண்டு.

மந்தியினத்திலிருந்து முகிழ்ந்த இனம் மனித இனம் என்று சார்லஸ் டார்வினையும், ஸ்பென்சரையும் போல தொல்காப்பியர் வெளிப்படையாகச் சொல்லவில்லை எனினும், 'Origin of Species' என்ற மாபெரும் அறிவியல் நூலின் வித்துக்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் கால இடைவெளியையும் சுமார் ஐயாயிரம் மைல் தொலைவையும் தாண்டி, தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்தில் தோன்றியுள்ளதை நாம் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

இன்னொரு முக்கிய கருத்து' பல இடங்களில் காப்பியர் 'மொழிப', 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே' என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து அறிவியல் பற்றியும் உலகியல் பற்றியும் ஆய்ந்த ஒரு பாரம்பரியம் தொல்காப்பியர் காலத்திலே இருந்திருக்கிறது என்பது தெளிவு.

உற்று நோக்குதலும் (Observation), பகுத்தலும் (Analysis), தொகுத்தலும் (Synthesis) மூன்றும் அறிவியலின் நிலைகள். இந்த முறைப்பாடு அந்தக் காலத்தில் இருந்து வந்திருப்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு.

புறக்கா ழனவே புல்லெனப் படுமே
அகக்கா ழனவே மரமெனப் படுமே
(630)

வெளிப்புறத்தே வயிரம் பாய்ந்துள்ளவை புல்லெனவும், உள்ளே வயிரம் பாய்ந்தவை அனைத்தும் மரமென்றும் பிரித்துள்ளார்கள்.

இவ்வாறு பலவகையாக உயிர்களைப் பிரித்தும் தொகுத்தும் சொல்லும்போது இந்த உயிர்களின் இயக்கத்திற்கு மூல காரணமே என்ன என்று கேள்வி எழுதல் இயல்பு. தொல்காப்பியர் பதிலாவது:

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்'

அதாவது, 'எல்லா வுயிர்க்கும் இன்ப வேட்கையே உந்து விசை'. இன்ப வேட்கை யின்றேல் அனைத்தும் அசைவற்ற 'ஜடம்'. இந்தக் கருத்தை வ

1995 ஜனவரித் திங்களில் தஞ்சையில் நடைபெறவிருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, அன்னைத் தமிழுக்கு அணிகலன் பூட்டிய அரும்பெரும் புலவர்களை நினைவு கூரும் வகையிலும், தண்டமிழுக்கு அவர்கள் ஆற்றிய தமிழ்ப் பணி குறித்துச் சிறப்புக் கட்டுரைகள், தமிழரசில் இதழுக்கொன்றாக இடம் பெறவிருக்கின்றன. அந்த வகையில், முதல் கட்டுரையாக, ஒல்காப்புகழ் பெற்ற தொல்காப்பியம் குறித்த கட்டுரை இந்த இதழில் சிறப்பிடம் பெறுகின்றது.

இன்றைய அறிவியலுக்கு அன்றே அடித்தளம் அமைத்தவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமன்று, அது உயிரியல் நூலாகவும், மொழியியல் நூலாகவும், வாழ்வியல் நூலாகவும், உளவியல் நூலாகவும் விளங்குகின்றது. அதனை மெய்ப்பிக்கின்றது இக் கட்டுரை:

யுறுத்தி கிரேக்க நாகரீகம் முதல் இன்றைக் காலம் வரை இன்பவியல் சிந்தனையாளர்கள் (hedonist) இருந்து வருகின்றார்கள். இந்தச் சூத்திரத்தைப் போற்றியும் தூற்றியும் கருத்துக்கள் வந்த வண்ணமே இருக்கும். இருக்கட்டும்.

தொல்காப்பியர் காலம் சுமார் கி.மு. முதல் நூற்றாண்டாக இருக்கலாம் என்று முன்னர் சொன்னோம். அந்தக் காலக் கட்டத்தில் நூல் எழுதுவது பற்றி தொல்காப்பியர் போல் ஆழமும் அகலமும் செறிந்த கருத்துக்களை வேறு எந்த மொழியிலாவது, எந்த அறிஞராவது சொல்லியுள்ளார்களா என்பது ஐயமே. நூல் எழுதுதல் என்பது அறிவை நெறிப்படுத்தும் பாங்காகும். பகுத்தறிவும், தொகுப்பறிவும் பண்படுத்தப்படும் களம் நூல். நூல் பற்றிய தொல்காப்பியர் கருத்து நுண்மாண் நுழைபுலம் என்ற வரையறைக்கு எடுத்துக்காட்டு, என்றே சொல்லலாம்.

"உரைபடு நூல் இருவகை நிலைய
முதலும் வழியுமென முதலிய நெறியின"
(639)

அதாவது நூலில் இரண்டுவகை உள்ளன. ஒன்று முதல் நூல்; அடுத்தது வழிநூல்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்"
(640)

அதாவது, வேறு எந்த சிந்தனையும், தொழிலும் இல்லாது, தெளிந்த அறிவுடைய ஒருவர் முனைந்து ஆக்கியது முதல்நூல்.

இன்றைக் காலத்தில் நான்கைந்து ஆண்டுகள் முயன்று ஆராய்ச்சி செய்து 'டாக்டர்' பட்டம் பெறுபவர்களுக்கு இதைவிடச் சிறந்த வரையறை எங்கு கிடைக்கும்? அவர்களின் Thesis - Original work - அதற்குச் சரியான சொல் முதல் நூல். கருமம் சிதையாத அத்தகைய கருத்தாளர்களுக்குப் பொருத்தமான சொல் முனைவர்கள். (இது இன்று வழக்கில் வந்துவிட்டது).

வழி நூல் நான்கு வகைப்படும்: தொகுத்தல், விரித்தல், தொகுத்து விரிவாக விளக்கல், மொழி பெயர்த்தல் என நான்கு வகை. நூல் எந்த வகையாயினும், முதலுக்கும் முடிவுக்கும் மாறுபாடு இருக்கக் கூடாது; தொகுக்கும் போதும் வகைப் படுத்தும் போதும் காரணமும் விளக்கமும் காட்டி அந்த நூலின் உயிர்ப்போடு (spirit of the work) பொருந்தி நுண்மையாக விளக்குதல் வேண்டும்.

இதை விளக்கும் சூத்திரம் இது:

• படிக்கும்போது சோர்வை உண்டாக்காத நூல்கள் அனைத்தும் நல்ல நூல்களே.

—வால்டேர்

நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின்று அகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே
(156)

நூலுக்கு இதைவிட ஒரு தரமான வரையறை கிடைத்தலரிது. மேலும்

ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவோடு நிற்றல்
(650)

வேண்டும் என்கிறார்.

அதாவது ஒரு நூலாசிரியன் ஐயம், குழப்பம் முதலிய நீக்கித் தெளிவான கருத்தைத் துணிவோடு ஆணித்தரமாய்க் கூறல் வேண்டும் என்கிறார்.

ஒரு நூல் எழுதுகையில் கீழ்க்கண்ட குற்றங்களைக் கவனமாக நீக்கிவிடுதல் வேண்டும்.

சிதைவெனப் படுபவை வசையுற நாடிற்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
பொருளில கூறல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியான் இழுக்கக் கூறல்
தன்னால் ஒரு பொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனக்கோள் இன்மை
அன்ன பிறவும் அவற்று விரிவாகும்
(654)

அதாவது, கூறியது கூறல், முன்னுக்குப் பின் முரணாய்க் கூறல், தேவைக்கு அதிகமாய் அல்லது குறைத்துக் கூறல், பயனற்ற பொருள் கூறல், கேட்போருக்கு மயக்கமும் குழப்பமும் வருமாறு கூறல் கேட்போருக்கு 'நாராசமாய்' ஒலிக்கும் இசைக் குறைவு, இழிவான சொற்களைப் பயன்படுத்துதல், மரபுவிட்டுத் தானே ஒன்று புதிதாகப் படைத்துக் கூறல், பிறர் மனம் கொள்ளும்படி உரையாமை முதலிய குறைகள் தவிர்க்கப்பட வேண்டியவை.

இவை தவிர வழிநூலின் கருத்து வெளிப்பாட்டு முறைகளை - அதாவது 'உத்திகளை' - முப்பத்திரண்டு வகைகளாகப் பிரிக்கின்றார். அவற்றில் சில மட்டும் இங்கு சுட்டுவோம். அதிகார முறையாக தொகுத்துக் கூறல், தன் கோட்பாட்டைக் கூறல், முன் உரைத்த முறைமையின்று பிறழாமை, முன்னும் பின்னும் சுட்டிக்காட்டல் (reference within), பிற ஆசிரியர் கருத்தைச் சுட்டி உடன்பட்டும் எதிர்ப்பட்டும் கூறல் (external reference), ஒப்பக் கூறல், உய்த்துணர்ந்து கூறல், அறியாது உடம்படல் முதலியன. இன்றைக்கால முனைவர்கள் அனைவரும் அறியவேண்டிய விதிகள் இவை.

உற்று நோக்கினால், கிரேக்கப் பேரறிஞர் அரிஸ்டாட்டிலுக்கும் தொல்காப்பியருக்கும் சில ஒற்றுமைகள் காணலாம். இருவரும் ஒரு நூறு, இரு நூறு ஆண்டு இடைவெளியில் வாழ்ந்தவர்கள். அரிஸ்டாட்டில் ஒரு மெய்ஞ்ஞானி; தொல்காப்பியர் ஒரு இலக்கணி (Grammarian), எனினும் இரு பேரறிஞர்களும் உலகியலையும் அறிவியலையும் உற்று நோக்கி உலகின் அமைப்புப் பற்றியும், உயிரின் படிப்படியான பரிணாமம் பற்றியும், குடும்ப வாழ்க்கை, அரசியல் போக்கு பற்றியும் நூல் வடித்தல் பற்றியும், நாடகவியல் பற்றியும் தெளிவான கருத்துக்களைக் கூறியுள்ளனர். இரு பேரறிஞர்களும் நுண்மாண் நுழைபுலமும், அகன்ற அறிவும் விரிந்த நோக்கும் உடையவர்கள். எனவே வள்ளுவரை சாக்ரடீஸூக்கு ஒப்பிட்டால் தொல்காப்பியரை அரிஸ்டாட்டிலுக்கு ஒப்பிடுதல் பொருந்தும்.

தொல்காப்பியத்தில் காணப்படும் வரையறைகளும் அறிவு கூர்மையான, விளக்கமான சிந்தனையும் எப்படி வந்திருக்க முடியும்? ஒரு திறம்சான்ற அறிஞர் கூட்டம் மண் பற்றியும் விண் பற்றியும் மானுடம் பற்றியும் உரையாடலும் முறையாடலும் நிகழ்த்தி ஒரு பாரம்பரியம் அக்காலத்தில் உருவாக்கியிருக்க வேண்டும்.

தொல்காப்பியம் ஒரு கொம்புத் தேன். அதில் பல மலர்களின் மணம் வீசுகிறதென்றால் பல அழகிய மலர்க் கூட்டம் மலை உச்சியிலும் மலைச்சாரலிலும் நிறைந்து செறிந்து இருந்திருக்க வேண்டும். அந்த மலர்க் கூட்டத்தின் பெரும்பகுதி நம் கண்ணுக்கும் கைக்கும் எட்டவில்லை என்பது உண்மையாயினும் கொம்புத் தேன் மணமே அவை இருந்ததற்குச் சரியான சான்று.

தமிழரசு
Licence No.TN/MS(C)/PP-33

சிறு சேமிப்பு-உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

இந்திரா விகாஸ் பத்திரம்

சிறப்பு அம்சங்கள்

★ 5½ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது
★ 18.18% சாதாரண வட்டி.
★ பத்திரங்கள் ரூ.200/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/- மதிப்புக்களில் பாதி விலைக்குக் கிடைக்கின்றன.
★ விண்ணப்பம் எதுவும் தேவையில்லை.
★ தனி நபரும், நிறுவனங்களும் முதலீடு செய்யலாம்.
★ ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு மாற்றுவது எளிது.
★ முதலீட்டுக்கு உச்ச வரம்பு இல்லை.
★ பத்திரங்களின் எழுத்துக்கள் அழிந்துவிட்டாலோ அல்லது கிழிந்துவிட்டாலோ நகல் பத்திரம் வழங்கப்படும்.
★ பரிசாகவும் அளிக்கலாம்.

சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விபரங்களுக்கு:
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3, தொலைபேசி: 584440.
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2., தொலைபேசி: 849962
மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சல் அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை
சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை சென்னை - 600 006. தொலைபேசி: 8251784/8251685.

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

DIPR/DIS/94

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

இதழ்தோறும் ஒரு இனிய குறள்!

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் (2)

• தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2025
வைகாசித் திங்கள் - 2
மலர்:24 இதழ்:22
16-5-1994
விலை: ரூ.3

இந்த இதழில்...

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி 150-வது ஆண்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ...	2
மத்திய கூட்டுறவு வங்கியின் சாதனை! ...	8
டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் உரை ...	9
அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள் ...	13
ஊரக விளையாட்டு மையங்கள் ...	17
செய்தி-விளம்பரத் துறை புதிய அறிவிப்புகள் ...	19
அழகிய நினைவுச் சின்னம் ...	21
பெண் சிசுவைக் காப்போம்! (கவிதை) ...	23
குறளின் குரல் ...	24
குடும்ப நலத் திட்டத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் பங்கு ...	27
கால்நடைச் செல்வம் ...	30
ஆவணம் காப்போம்! அறிவை வளர்ப்போம்! ...	33
தமிழ்நாட்டில் பாசன மேலாண்மை ...	37
வள்ளல் பச்சையப்பர் ...	41
வீரமா முனிவர் ...	44



பச்சையப்பன் பல்கலைக்கழகம் உருவாகத் தமிழ்நாடு அரசு உதவும்!

சென்னை பச்சையப்பன் கல்லூரி 150வது ஆண்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

உலகில் உள்ள செல்வங்கள் அனைத்திலும், மிக உயர்ந்த, தலையாய செல்வம், கல்விச் செல்வம் தான் என்பதை, உலகத்திற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணர்த்திய, மாபெரும் பாரம்பரியம் படைத்தவர்கள் நாம். அத்தகைய கல்விச் செல்வத்தை அனைவரும் பெற வேண்டும் பெற்று இன்புற வேண்டும் என்பதற்காகவும், தாம் வாழ்ந்த மண்ணில் வாழும் மக்கள் அனைவரும் கல்வி பயின்று முன்னேற வேண்டும் என்பதற்காகவும் தனது செல்வம் அனைத்தையும் கல்வி வளர்ச்சிக்காக ஈந்து சென்ற வள்ளல் பச்சையப்பர் அவர்களின் நினைவு, இன்று பூத்த நறுமலரின் மணம் போல், நம் நெஞ்சங்களில் எல்லாம் மணம் வீசிக் கொண்டிருக்கிறது.

1842ஆம் ஆண்டு, சென்னை மாநகரத்தில், அவரது கொடையால் உருவாகிய, வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்த பச்சையப்பன் கல்லூரி, 150 ஆண்டு காலக் கல்விப் பணியை, பார் போற்றிடும் வண்ணம் ஆற்றி பல்வேறு துறைகளிலும் சாதனையாளர்களையும், சிந்தனையாளர்களையும் உருவாக்கி தனது 1½நூற்றாண்டுக் காலச் சாதனையை, மன நிறைவுடன், சிங்க நிகர்ப் பார்வையோடு, பார்த்துக் கொண்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது.

வாழையடி வாழையாகக் கல்விப் பணியாற்றி, கல்வி வரலாற்றிலே, ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் பெருமைக்குரிய பச்சையப்பன் கல்லூரிக்கு வருகை தந்து, பெருந்திரளாகக் குழுமியுள்ள உங்கள் அனைவரையும் குறிப்பாக, எதிர்காலச் சிற்பிகளான, எனது அன்புக்குரிய, இளைய சகோதரர்களை எல்லாம் சந்திக்கும்போது, என் மனம் பூரிப்பு அடைகின்றது.

குன்றாத மகிழ்ச்சியோடும், வற்றாத புன்னகையோடும், காட்டாறு போலக் கடுகிச் செல்லும் திறனும், ஆற்றலும் படைத்த என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களைக் காணும்போது, எனது மனம், குதூகலம் அடைவதற்குக் காரணம், எனது பள்ளி நாட்கள், எனது நினைவில் நடை போடத் துவங்கி விட்டன, என்பதுதான். கோடானுகோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தாலும், அப்பழுக்கற்ற மனதோடு, ஆனந்தமாய் வாழ்ந்த அந்த நாட்கள், மீண்டும் கிடைக்குமா? என எண்ணிப் பார்க்கிறேன். என் எண்ணத்திலே மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் வரவழைத்த உங்கள் அத்துணைப் பேரையும் ஒருங்கே காண்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

"வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்" என்று பட்டுக்கோட்டையார் அன்று பாடி வைத்ததற்கு ஏற்ப 40 ஆண்டுக் காலமே இந்தப் பூவுலகில் வாழ்ந்து இருந்தாலும், இந்தச் சமுதாயத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும், தாம் அற வழியில் ஈட்டிய, அனைத்துச் செல்வங்களையும் ஈந்து, ஒரு அறக் கட்டளையை உருவாக்கி, சாதனைச் சரித்திரம் படைத்த, ஒரு நல்லவர் விட்டுச் சென்ற, கல்லூரியின் 150வது ஆண்டு விழாவில் பங்கேற்பதை, நான் உண்மையிலேயே பெருமையாகக் கருதுகிறேன்.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஒரு சிறிய பள்ளியாக, ஒரு சிலர் மட்டுமே பயிலுகின்ற கல்விக் கூடமாகத் தொடங்கப்பட்ட இந்தக் கல்வி வேள்வி இன்று பல கல்வி நிறுவனங்களாக வளர்ந்து, பல்வேறு துறைகளில் ஆயிரக்கணக்கானோர் பயில்கின்ற

பச்சையப்பன் கல்லூரி 150-வது ஆண்டு விழா

சென்னை பச்சையப்பன் கல்லூரியின் 150-வது ஆண்டு விழா 6.5.'94 அன்று அக் கல்லூரி வளாகத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி வளாகத்தில் ஒரு மாநாட்டுப் பந்தலைப்போல பிரம்மாண்டமான பந்தலும் மேடையும் அமைக்கப்பட்டிருந்தன. கல்லூரி முழுவதும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அன்று மாலை சரியாக 5.00 மணிக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விழா மேடைக்கு வருகை புரிந்தார்கள்.

விழாவுக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். பச்சையப்பன் அறக் கட்டளை தலைவர் திரு. வை. பழனிச்சாமி வரவேற்றுப் பேசினார். பச்சையப்பன் கல்லூரி முதல்வர் திரு. ஆ.பு. கமலாகரராவ் கல்லூரி அறிக்கையை வாசித்தார்.

பச்சையப்பன் கல்லூரியில் ரூ.1 கோடியே 71 இலட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கும் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.1 கோடியே 23 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்தும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அவர் பேசும்போது, ''பச்சையப்பன் பல்கலைக் கழகத்தை'' உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும், நாங்கள் அளிப்போம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். "Deemed University- ஆக அறிவிக்கும் அதிகாரம், மத்திய அரசிடம் உள்ளது. எனவே, இந்தக் கல்லூரியை, Deemed University ஆக அறிவிக்க மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்வோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான எல்லா உதவிகளையும் எங்கள் அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''பச்சையப்பன் கல்லூரியின் 150-வது ஆண்டு நினைவு விழாக் கட்டடம் கட்ட நிதி உதவி வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தார்கள். நினைவு விழாக் கட்டடம் கட்ட தமிழக அரசின் சார்பில், 20 இலட்சம் ரூபாயும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 5 இலட்சம் ரூபாயும், மொத்தமாக 25 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கப்படும்'' எனக் குறிப்பிட்டார்.

முன்னதாக பச்சையப்பன் கல்லூரியின் 150 ஆம் ஆண்டு விழா மலரை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, அதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

''வள்ளல் பச்சையப்பன் ஒலிப்பேழையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, அதை மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. க. பொன்னுசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கவிஞர் தங்க. பழனிவேல் எழுதிய ''பார் புகழும் பச்சையப்பர்'' என்ற புத்தகத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெளியிட, அதை கல்லூரி முதல்வர் திரு. கமலாகரராவ் பெற்றுக் கொண்டார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கல்லூரி சார்பிலும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சார்பிலும், பொன்னாடைகள் அளிக்கப்பட்டு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

பச்சையப்பன் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரில் அறக்கட்டளை ஏற்படுத்தப் பட்டுள்ளது. அறக்கட்டளை நிதி ஏழை மாணவர்கள் படிப்புச் செலவுக்குப் பயன்படுத்தப்படும்.

விழாவில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. க.பொன்னுசாமி அவர்களும், மாநில உயர் கல்விக்குழு துணைத் தலைவர் சை.வே. சிட்டிபாபு ஆகியோரும் வாழ்த்திப் பேசினார்கள்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் பெற்றோர்கள் என ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழா முடிவில் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் சி. பழனிவேலு நன்றி நவின்றார்.

என். இளங்கோ

அளவிற்கு, தமிழ்நாட்டில் தனக்கென ஒரு தனியிடத்தைத் தேடிக் கொண்ட கல்வி நிலையமாக, இன்றும் விளங்கி வருவது, தமிழ்கூறும் நல்லுலகமே மகிழ்ச்சி அடைகின்ற, மகத்தான ஒரு சாதனை ஆகும்.

"சுட்டாலும் சங்கு வெண்மை தரும்" என்பது போல, தன் வாழ்நாளில், தான் முழுமையாகப் பெற முடியாத கல்விச் செல்வத்தை, தான் வாழ்ந்த காலத்திலேயே, மக்கள் அனைவரும் அடைய வேண்டும், என்கின்ற ஒரு உன்னதமான எண்ணம், 40 வயதேயான, வள்ளல் பச்சையப்பன் மனதிலே, எப்படி உதித்தது என்று எண்ணிப் பார்த்தால், இன்றும் வியப்பாக இருக்கிறது மலைப்பாக இருக்கிறது, பணம் இருந்தால் மனம் இருக்காது மனம் இருந்தால் பணம் இருக்காது என்று எல்லாம், வெற்று வேதாந்தம் பேசுகின்ற இந்த உலகத்திலே அவர் அறவழியில் ஈட்டிய, அனைத்து செல்வத்தையும் ஒன்று திரட்டி, உருவாக்கி விட்டுச் சென்ற அறக்கட்டளை, கல்வியைப் பெற்று, அறிவுக் கண்களைத் திறந்து கொள்ளத் துடிக்கும், மானிட இனத்திற்கே, ஒரு அறிவுச் சரணாலயம் என்றால், அது மிகையாகாது.

வள்ளல் பச்சையப்பர் அவர்கள், சிறு வயது முதலே, மேலை நாடுகளில், சமூக, பொருளாதார வளர்ச்சி முறைகளை, அவர் வாழ்ந்த காலத்தில், இந்தியாவில் வாழ்ந்து வந்த ஆங்கிலேயர்கள் மூலமாகக் கூர்ந்து கவனித்து இருக்கிறார்.

தான் வாழ்ந்த தமிழ்நாடும், மேலை நாடுகளைப் போல், கல்வியிலும், பொருளாதாரத்திலும், ஓங்கி உயர வேண்டும் என்ற குறிக்கோளை, சின்ன வயதிலேயே, தனது பிஞ்சு மனதில், பதிய வைத்துக் கொண்டார். அந்த உயர்ந்த எண்ணத்திற்கு ஏற்ப, அவர் வாழ்க்கையும் உன்னதமாக அமைந்து இருந்தது.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில், வள்ளல் பச்சையப்பர் அவர்களைப் போல், கல்வியை வளர்ப்பதற்கு என்றே, ஒரு சிலர் தோன்றியதால் தான், தமிழ்நாடு இன்று கல்வியிலே, உயர்ந்து நிற்கின்றது என்றால், அது உண்மையன்றி வேறில்லை.

தமிழ்நாட்டில் கலைகளும், தொழில் கல்வியும், பெருகி உள்ளன. ஆண்களும், பெண்களுமாக, ஆயிரக்கணக்கானோர், அனுதினமும் கல்வி கற்று, வாழ்வில் மேன்மை அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

பச்சையப்பன் அறக்கட்டளையின்கீழ் இயங்கு கின்ற, கல்வி நிறுவனங்களில் பயின்ற மாணவர்கள், இன்று பல துறைகளிலே, தங்களது தனி முத்திரை யைப் பதித்து சீரோடும் சிறப்போடும், நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும், பாடுபட்டு வருகிறார்கள் என்பதை அறியும்போது, என் மனம் ஆனந்தம் அடைகிறது.

அந்தப் புகழ் மிக்க பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரர்களாகிய, என் அன்பிற்குரிய தம்பிகளாகிய நீங்கள், எதிர்காலத்தில், இந்தியா விலேயே, தமிழ்நாடுதான் எல்லாத் துறைகளிலும், அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டி, என்கின்ற ஒரு உன்னதமான நிலையை, உருவாக்குவீர்கள் என்பதில், எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது. ஏனென்றால், இந்தப் பச்சையப்பன் கல்லூரி, ஏதோ ஏட்டுக் கல்வி கற்பிக்கப்படுகின்ற, ஒரு கல்விச் சாலை மட்டுமல்ல. அனுபவப் பாடத்தை, அனுதினமும் மாணவர்களுக்கு ஊட்டி வருகின்ற, ஒரு வாழ்க்கைக் கல்விச் சாலை.

பொது வாழ்க்கையில், புனிதமான எண்ணங் களுடன் ஈடுபடத் தூண்டும், ஒரு அரசியல் போதி மரம் சிந்தனைச் சிற்பிகளை உருவாக்குகின்ற, ஒரு கருத்து உலைக் கூடம் பழமைகளைத் தூக்கி எறிந்து,

புதுமைகளுக்கு வழி விடுவோரின், புனிதப் பயணத்தின் ஆரம்பம் இது. இங்கே ஏட்டுச் சுரைக்காய்க்கு மதிப்பு இல்லை. வாழ்க்கைப் பாடத்திற்குத் தான் மதிப்பு அதிகம் என்பதை, நான் நன்கு அறிவேன். அத்தகைய ஒரு சிறப்பின் காரணமாகத்தான், இந்தக் கல்விச் சாலைகளில் பயின்றவர்கள், சட்டத் துறையிலும், அரசியல் துறையிலும், கல்வித் துறையிலும், நிர்வாகத் துறையிலும் கூர்ந்த மதியோடும், வினை நுட்பத்தோடும், செறிவார்ந்த சிந்தனையோடும், மற்றவர் வியக்கும் ஆற்றலோடும், செவ்வனே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தனது சொல் ஆற்றலாலும், செயலாற்றலாலும், புரட்சிகரமான சிந்தனையாலும், தமிழகத்தைத் தட்டி எழுப்பிய சிந்தனைச் சிற்பி, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், இந்த பச்சையப்பன் கல்லூரி, தமிழகத்திற்குத் தந்த மாபெரும் பரிசு. அவர் வகுத்து சென்ற நெறி முறைகளைக் கடைப்பிடித்து அவரது முற்போக்குச் சிந்தனைகளைச் செயலாக்கிய, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், விட்டுச் சென்ற பாதையில் வெற்றி நடை போட்டு வரும் எங்களுக்கு, திராவிட இயக்கத்தின் வழித் தோன்றல் படித்த ஒரு கல்விச்சாலையில், நின்று கொண்டி ருக்கிறோம் என்பதை எண்ணும்போதே, மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

கல்வி என்பது, வெறும் பட்டங்களைப் பெறு வதற்கும், வேலை வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொள்வதற்கு மட்டுமே, பயன்படுகின்ற பயிற்சி அல்ல. தனி மனிதரின் அறியாமையை அகற்றி, அவனது அறிவாற்றலை வளர்ப்பதும் விரும்பத் தக்க சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தவும், பயன்படுகின்ற ஓர் அரிய சாதனமே, கல்வி ஆகும். ஏட்டுக் கல்வி கற்றோரின், எண்ணிக்கையை மட்டும்



வைத்துக் கொண்டு, முன்னேற்றத்தை அடைந்து விட்டோம் என்று, முடிவு கட்டுபவர்கள் அல்ல நாங்கள். கற்ற கல்வியைப் பயனுடையதாக்கி நாட்டிற்கும் வீட்டிற்கும், நன்மைகளைத் தேடித் தருகின்ற, ஒரு உன்னதமான சூழ்நிலையை அடைவது தான், எங்கள் குறிக்கோள்.

உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, கல்வியின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, உயர் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, Tamil Nadu Council for Higher Education, என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம் என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

கல்வி வளர்ச்சிக்கு, நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நாங்கள் செயல்படுத்தி வருவதால்தான், 1991-92ஆம் ஆண்டில், 1,299 கோடி ரூபாய், என்று இருந்த நிதி ஒதுக்கீடு மூன்று ஆண்டுகளில், அதாவது 1994-95ஆம் ஆண்டில், 2,002 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், கல்வித் துறையின் நிதி ஒதுக்கீடு, 50 சதவீதத்திற்கு மேல், அதாவது 700 கோடி ரூபாய் அளவிற்கு, அதிகரித்துள்ளது என்பதிலிருந்து நாங்கள் கல்வியின் வளர்ச்சியிலும், மக்களின் அறிவு முன்னேற்றத்திலும், கொண்டுள்ள அக்கறை புலனாகும் என்று நம்புகிறேன்.

பெருமைமிக்க கல்வி நிறுவனங்களில், பயிலுகின்ற நல்வாய்ப்பினைப் பெற்றுள்ள, என் அன்புக்குரிய மாணவச் செல்வங்கள் அனைவரையும், நான் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம் நீங்கள் கற்ற கல்வி, உங்களுக்கு மட்டுமின்றி, நீங்கள் வாழும் சமுதாயத் திற்கும், நாட்டிற்கும், பயன் தரும் வண்ணம், நீங்கள் செயலாற்ற வேண்டும் என்பதே ஆகும். இதுவே எனது அன்பு வேண்டுகோள்.

ஓங்கி உயர்ந்ததோர் நாகரிகத்திற்கும், கலாச் சாரத்திற்கும், சொந்தக்காரர்களாகிய நாம் மற்றவர்களுக்கு எந்த விதத்திலும், இளைத்தவர்கள் அல்ல, சளைத்தவர்கள் அல்ல என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டிய, ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

எந்த ஒரு நாட்டின் குடிமக்கள், தங்கள் கடமை களை நிறைவேற்றுவதில், இன்பம் காண்கிறார்களோ அந்த நாடு, வளப்பமுடையதாகவும், எவராலும் வெல்ல முடியாத, மாட்சிமை கொண்டதாகவும் விளங்கும் என்பது, சரித்திரம் காட்டும் உண்மையாகும். இன்றைய இளைய சமுதாயத்தினர், புதிய சமுதாய சிந்தனைகளை முன் நிறுத்தி புதியதோர் உலகம் படைக்க தங்களது பங்கை, சீரிய முறையில் ஆற்ற வேண்டிய ஒரு கடமை, என்றென்றும் உண்டு என்பதை, இந்த நேரத்தில் எடுத்துரைப்பது, எனது கடமை என்று கருதுகிறேன்.

மலை ஏறும் மகளிர்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி

சென்னை ஸ்டெல்லா மேரீஸ் மகளிர் கல்லூரியில் பட்ட வகுப்பு படிக்கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 மாணவிகள் முதன் முறையாக அனைத்து மகளிர் மலை ஏறும் பயிற்சிக்குச் செல்லுவதால், அதற்கு முன்பு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து ஆசி பெற்றார்கள்.

தங்களது பயணத்தைப் பற்றி அறிந்தவுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆளுக்கு 15,000 ரூபாய் வீதம் 5 பேருக்கும் சேர்த்து 75,000 ரூபாயை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக வழங்கியதற்குத் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அவர்களின் பயண விவரத்தையும், எவ்வாறு மலை ஏறும் பணியில் ஈடுபடுவார்கள் என்பது குறித்தும் கேட்டறிந்த, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாணவிகளின் துணிவையும் ஆர்வத்தையும் பாராட்டி, அவர்கள் மேற்கொண்ட பணி சிறப்பாக முடியவேண்டும் என, தனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

அவர்கள் மேற்கொள்ள வேண்டிய இந்தப் பணியில் மேலும் நிதி உதவியோ அல்லது வேறு எவ்விதமான உதவியோ தேவைப்பட்டால் அதையும் ஏற்பாடு செய்வதற்குத் தான் தயாராக இருப்பதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தபோது, மாணவிகள் 5 பேரும் தங்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை போதுமானதாக உள்ளது என்று தெரிவித்தார்கள்.

தமிழ் மக்களின் கலாச்சாரத்தோடு இணைந்து, தமிழ்ச் சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாறி, உயர் கல்வி புகட்டும், உன்னதப் பணியில் ஈடுபட்டுள்ள, பச்சையப்பன் கல்லூரி மென்மேலும் வளர்ச்சி அடைந்து, உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களில், ஒன்றாகத் திகழ்ந்து அதன் புகழும், பெருமையும் பாரெங்கும் பரவ வேண்டும் என்ற எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு என் அன்புக்குரிய மாணவச் செல்வங்களின் எதிர்காலம், ஒளிமயமானதோர் எதிர்காலமாக அமைய வேண்டும், என்ற எனது பெரு விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனது வரவேற்பு உரையில், பச்சையப்பன் அறக்கட்டளையின் தலைவர், திரு. பழனிச்சாமி அவர்கள், இந்த அறக்கட்டளையின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களை இணைத்து, "பச்சையப்பன் பல்கலைக் கழகமாக" அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

"பச்சையப்பன் பல்கலைக் கழகத்தை" உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும், நாங்கள் அளிப்போம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

Deemed University ஆக அறிவிக்கும் அதிகாரம், மத்திய அரசிடம் உள்ளது. எனவே, இந்தக் கல்லூரியை, Deemed University ஆக அறிவிக்க மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்வோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான எல்லா உதவிகளையும் எங்கள் அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சையப்பன் கல்லூரியின் 150வது ஆண்டு நினைவு விழா கட்டடம் கட்ட நிதியுதவி வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தார்கள். நினைவு விழாக் கட்டடம் கட்டத் தமிழக அரசின் சார்பில், 20 இலட்சம் ரூபாயும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 5 இலட்சம் ரூபாயும், மொத்தமாக 25 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கப்படும்" என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் புதிய போச்சம்பள்ளி வட்டம் உதயம்

தாலுக்கா நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த, தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை வட்டங்களை மாற்றியமைக்கவும், புதியதொரு வட்டத்தை உருவாக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது.

அதன்படி, தற்போது கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள போச்சம்பள்ளி, பாரூர், நாகரசம்பட்டி ஆகிய ஃபிர்காக்களையும், ஊத்தங்கரை வட்டத்தில் உள்ள மத்தூர் பிர்காவையும் சேர்த்து போச்சம்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதோர் வட்டம் உதயமாகிறது.

மேற்கண்டவாறு வட்டங்களை மாற்றியமைத்த பின், வட்டங்களில் அடங்கும் ஃபிர்க் காக்கள் பின்வருமாறு:

1. போச்சம்பள்ளி வட்டம்

தலைமையிடம்: போச்சம்பள்ளி

1. போச்சம்பள்ளி
2. பாரூர்
3. நாகரசம்பட்டி
4. மத்தூர்

2. கிருஷ்ணகிரி வட்டம்

தலைமையிடம்: கிருஷ்ணகிரி

1. கிருஷ்ணகிரி
2. ஆலப்பட்டி
3. குருபரப்பள்ளி
4. வேப்பனப்பள்ளி
5. பாலபள்ளி
6. பர்கூர்
7. காவேரிப்பட்டினம்

3. ஊத்தங்கரை வட்டம்

தலைமையிடம்: ஊத்தங்கரை

1. சாமல்பட்டி
2. கல்லாவி
3. ஊத்தங்கரை
4. சிங்காரப்பேட்டை

புதிய வட்டங்கள் பணி தொடங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

முதல்வரின் முத்துக்கள்

இந்தத் தொழில்நுட்ப நாகரிக உலகில் சிறப்பான அளவிற்கும் திறமைக்கும் வழக்கமான கல்வியோடு, தொழிற்பயிற்சியும் சேர்ந்து தரப்பட வேண்டும். நமது சக்தியின் வளர்ச்சிக்கும், தனிநபரின் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் பள்ளிப்படிப்பு மட்டும் போதாது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு திறமை உள்ளது. ஒவ்வொருவருக்கும் தகுதிகளும் குணங்களும் உள்ளன. அவைகளை அர்த்தமுள்ளதாக உபயோகிக்கத் தேவையானது திறமைகளைக் கண்டுபிடித்து, அவைகளுக்கு உயிரூட்டி, அன்றாட வாழ்க்கையிலும், நடைமுறைகளிலும் பயன்படுத்துவதேயாகும்.

pasumpon



பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் :

மத்திய கூட்டுறவு வங்கியின் சாதனை!

இங்குதான் கூட்டுறவுக்கு உயிர் கொடுத்த, இந்தியாவிற்கே வழி காட்டும் மாதிரி கிராமம் குன்றக்குடி உள்ளது. தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் மேலான வழிகாட்டுதலின் பல்வேறு வகைகளில் கூட்டுறவு இங்கே செழித்தோங்கி வளர்கிறது!

ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிந்ததற்குப் பிறகு அரசின் திட்டங்களாலும், அதிகாரிகளின் அரசுப் பணியாலும்; புதிய இம்மாவட்டத்தில் அசுரவளர்ச்சி வரலாற்றாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அந்தச் சாதனைகளின் வரிசையில் மத்தியக் கூட்டுறவு வங்கி முன்னணியில் நிற்கிறது! புரட்சித்தலைவியின் ஆட்சியில் ஒரே ஆண்டில் 11 புதிய வங்கிக்கிளைகளை இந்தச் சிறிய மாவட்டத்தில் துவக்கித் தனது பணியை விரிவுபடுத்தியுள்ளது.

பசும்பொன் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் 295 கூட்டுறவு நிறுவனங்கள் உறுப்பினர்களாக உள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 123, அலுவலர் கூட்டுறவுச் சங்கங்கள் 57, நெசவாளர் சங்கங்கள் 11, நகர வங்கிகள் 3, பிரதம கூட்டுறவுப் பண்டக சாலைகள் 43, விற்பனைச் சங்கம் 2, நிலவள வங்கிகள் 7, ஆடு வளர்ப்புச் சங்கம் 1, பால்வழங்கும் சங்கங்கள் 30, இதர சங்கங்கள் 18 என்று உள்ளன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 1993-94-ஆம் நிதியாண்டில் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடனாக வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டுத் தொகையான ரூ.590 இலட்சத்திற்கும் மேலான ரூ.728.90 இலட்சம் வழங்கியுள்ளது. மத்தியக் காலக் கடனாக ரூ.158 இலட்சம் வழங்கியுள்ளது. நகைக்கடன் ரூ.1907 இலட்சம் வழங்கியுள்ளது. நலிவுற்ற பிரிவினர்களுக்குக் கடன் வழங்க 722.10 இலட்சம் தந்துள்ளது.

31.3.94 வரை இந்த வங்கிகளின் இட்டு வைப்புத்தொகை ரூ.2799.63 இலட்சமாக உயர்ந்து உள்ளது.

மாநில அரசு நபார்டு மூலமாகப் பங்கு மூலதனமாக ரூ.120 இலட்சம் வழங்கியுள்ளது.

புதிய திட்டம்

1. சக்தி சர்க்கரை ஆலையுடன் கூடிய இணைக்கமுறையின் கீழ், சிறிய பாசனங்களுக்கு மத்தியக் காலக் கடன் வழங்க ரூ.83.48 இலட்சங்களுக்கு மறுநிதி வழங்க நபார்டு வங்கிக்கு மத்திய வங்கி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

2. சிறிய பால்பண்ணைகள் நிறுவும் திட்டத்திற்காக 250 யூனிட்டுகளுக்கு ரூ.68.60 இலட்சம் நிதி உதவி கோரி நபார்டு வங்கிக்குத் திட்ட மதிப்பீடு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் மாவட்ட பால் வழங்கும் ஒன்றியத்துடன் இணைக்க முறையுடன் செயல்படுத்தப்படவுள்ளது.

3. நகைக் கடன் வழங்கும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கையை 70 லிருந்து 100 ஆக உயர்த்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. கரும்புப் பயிருக்கு 1993-94-ஆம் ஆண்டில் ரூ.217.59 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இனி வரும் காலத்தில் இத்தொகையை ரூ.400 இலட்சமாக உயர்த்திக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த ஒரே ஆண்டில் தொடங்கப்பட்ட புதிய கிளைகள் போக, புரட்சித்தலைவி ஆட்சியில் மேலும் புதூர், தெ.புதுக்கோட்டை, புலி

யூர், ராம்நகர் ஆகிய இடங்களில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஒரே ஆண்டில் இத்தகைய சாதனைகளைச் செய்து உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கி இதுதான்! இந்த வெற்றிச் சாதனைகளுக்குப் பின்னால் புரட்சித்தலைவியின் செயல்வீரர்கள் இம்மாவட்டத்து மண்ணின் மைந்தர்கள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு கா.ப. பட்டாபிராமன் அவர்களும் விளங்குகிறார்கள் என்றால் அது மிகையல்ல...

ரெ. இராவணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்

தாழ்த்தப்பட்ட இன மக்களுக்குச் சம நீதி சமூகநீதி பெற்றுத் தந்தவர் டாக்டர் அம்பேத்கர்

டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவில்

மாண்புமிகு முதல்வர் உரை

இந்த இனிய விழாவில் பங்கேற்று, 'அறிவுலக மேதை'யாம், 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை', என்று அனைவராலும் போற்றப்படும், தாழ்த்தப்பட்ட இன மக்களின், பாதுகாவலராகத் திகழ்ந்த, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின், திருவுருவ வெண்கலச் சிலையை, சென்னை மாநகரின், ஒரு முக்கியமான சாலைச் சந்திப்பில், இன்று திறந்து வைத்து, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெரு மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

'அண்ணல்' அம்பேத்கர் அவர்கள், 20ஆம் நூற்றாண்டின், இந்திய வரலாற்றைப் பொறுத்த வரையில், சட்டத் துறையில், ஒரு சகாப்தம், அரசியல் அரங்கில், ஒரு புரட்சி அத்தியாயம், சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனையில், ஒரு திருப்புமுனை. அவர் நவீன இந்தியாவை உருவாக்கிய, வரலாற்று நாயகர்களின் வரிசையில், முதலிடத்தைப் பெற்றவர். அழியாப் புகழ் பெற்று, நமது நெஞ்சங்களில் எல்லாம், நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டவர், மாமனிதர் டாக்டர் அம்பேத்கர்!

எப்படி, தமிழ்நாட்டில், தந்தை பெரியார் அவர்களின் வடிவில் தோன்றிய, 'பகுத்தறிவுப் பேரொளி, தூங்கிக் கிடந்த முற்போக்குச் சிந்தனைகளைத் தட்டி எழுப்பி, சிந்தனைத் தடத்தை முன்னேற்றப் பாதையில் திருப்பிவிட்டதோ அதைப் போலவே, அண்ணல் அம்பேத்கர் என்ற உத்தமரின் வடிவில் தோன்றிய, 'அறிவுச் சுடரொளி'; நமது இந்தியத் திருநாட்டையே எழுச்சி கொள்ளச் செய்தது.

'பகுத்தறிவுப் பகலவன்' என்று, பாரெங்கும் போற்றப்பட்ட தந்தை பெரியார், தென்புலத்தில் சமுதாயச் சீர்திருத்தப் பணிகளுக்கு, ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த, அதே கால கட்டத்தில்தான், வடபுலத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள், தாழ்த்தப்பட்ட இன மக்களின் உயர்வுக்காகவும், சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், இந்திய அரசியல் ஏட்டில், ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்துக் கொண்டிருந்தார்.

எவ்வாறு ஒரு தனி மனிதர், தன்னுடைய அறிவின் ஆற்றலாலும், பண்பின் தகைமையாலும், சமுதாய இடர்ப்பாடுகளைப் பின்னுக்குத் தள்ளி, தான் மேற்கொண்ட துறையில், சாதனை படைத்து, வரலாற்று நாயகராக, உயர முடியும் என்பதற்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 'வாழ்க்கை வரலாறு', ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றால், அது மிகையாகாது.

சாதிக் கொடுமையின் வேதனையை, தாமே தமது இளம் பிராயத்தில் அனுபவித்து, அது பிஞ்சு உள்ளங்களில் ஏற்படுத்தும், கொடிய பாதிப்புகளை, முற்றிலுமாக உணர்ந்தவர் தான், டாக்டர் அம்பேத்கர். எந்த

நான்காம் ஆட்டை சொல்லும் செய்தி:

நூல் நயம்

சுவாமி ஐயப்பன் வரலாறு

ஆசிரியர்: மயிலைத் தொண்டன்
வெளியீடு:
மோகன் புத்தக நிலையம்,
4, வள்ளலார் தெரு,
தூளைமேடு, சென்னை-94.

பக்கம்:80 விலை:ரூ.12/-

சபரிமலை ஐயப்பனின் சரிதமும், விரத முறைகளும், வழிபாட்டுப் பாடல்களும் கொண்டது. ஐயப்பப் பக்தர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம்.

—மறைமலை

தேசிய உணர்வை ஊட்டிய பாரதியார்

ஆசிரியர்: மயிலைத் தொண்டன்
வெளியீடு:
மோகன் புத்தக நிலையம்,
4, வள்ளலார் தெரு,
தூளைமேடு, சென்னை-94.

பக்கம்:112 விலை:ரூ.15/-

மகாகவி பாரதியின் மகிமை இந்நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றது. அவரது வாழ்க்கைக் குறிப்போடு, அவரது எண்ணங்கள்- செயல்கள் எல்லாம் எழுத்து வடிவமாக்கப்பட்டுள்ளன. பாரதியின் இறையுணர்வு, சுதந்திர வேட்கை, பெண்மையைப் போற்றியது முதலான கருத்துக்கள், அவரது கவிதை வரிகளோடு காட்டப்பட்டுள்ளன. எளிய நடை. எல்லோரும் படித்துப் பயன் பெறலாம்.

—பி.வி.ஜி.

வீட்டிற்கேற்ற லாபம் தரும் கைத்தொழில்கள்

ஆசிரியர்: சூரியநாத்
வெளியீடு:
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.16/-

'செய்யும் தொழிலே தெய்வம்', அதுவும் குடும்பப் பெண்களுக்கு வீட்டு வேலைகள் போக மீதி நேரத்தில், பல தொழில்களில் ஈடுபட்டு ஓய்வு நேரத்திலும் பொழுதுபோக்காக சம்பாதிக்கத் தான் எத்தனை தொழில்கள்:61 தொழில்களை சுலபமாகச் செய்து சம்பாதிக்க வழி சொல்கிறது இந்நூல், யார் எந்தச் சிறு தொழில் செய்வது? கடனுதவி போன்ற செய்திகளும் உதவியாக உண்டு.

நல்லவர்கள் கெடுவதில்லை

ஆசிரியர்: அரசு மணிமேகலை
வெளியீடு:
சூடாமணி பிரசுரம்,
5, நீலகண்டன் தெரு,
தூளைமேடு, நுங்கம்பாக்கம்,
சென்னை-600 094.

பக்கம்:96 விலை:ரூ.10/-

குழந்தைகள் எந்தச் சூழ்நிலையிலும் கலங்கிவிடாது, விவேகமுடனும், துணிச்சலுடனும் செயலாற்ற வேண்டும். தேச நன்மைக்கு நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும், குழந்தைகள் படிக்கும் நூல்கள் ஒரு மணி நேரம் மட்டும் உதவக் கூடாது, என்றும் எப்போதும் பயன்பட வேண்டும், அத்தகைய நூல்களையே குழந்தைகள் படிக்க வேண்டும், பிறரிடம் மரியாதையோடும் அன்போடும் நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுரைகளை குழந்தைகளுக்கு நல்ல கதைகள் வாயிலாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

வாரிசு

ஆசிரியர்: செ. ஞானன்
வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:131 விலை:ரூ.18/-

மனிதர்களின் மறு பக்கங்களைச் சொல்லும் சிறுகதைகள். நேர்மையற்ற, ஒழுக்கமற்ற, கட்டுப்பாடற்ற, சௌகரிய வாழ்க்கை வாழுபவர்களின் இயல்புகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

இந்த அவலங்களை அம்பலப்படுத்தும் முறை மிக நாகரிகமாக இருப்பதற்கு நம் பாராட்டுகள்.

—குமார்



அருவிக் கரையினிலே...

ஆசிரியர்: சுப. காளிமுத்து
வெளியீடு:
பாண்டியன் பதிப்பகம்,
11/5, சத்யமூர்த்தி அக்ரகாரம்,
நாட்டரசன் கோட்டை-623556

பக்கம்:75 விலை:ரூ.13/-

இச்சிறுகதைத் தொகுப்பில் வரும் நபர்களின் பெயர்கள் அழகானவை. இலக்கிய நடையில் கதை சொல்லியிருப்பது புதுமை. வழக்கமான சிறுகதைத் தொகுப்பிலிருந்து மாறுபட்டது.

'யாதும் ஊரே'

ஆசிரியர்: சித்தார்த்தன்
வெளியீடு:
பண்மொழி பதிப்பகம்,
31, சித்தலப்பாக்கம் 2-ம் சாலை,
சென்னை-600 047.

பக்கம்:272 விலை:ரூ.35/-

நாட்டிய, கூத்துக் கலைஞர்களை மையமாகக் கொண்டு விரியும் கதை காலம் சங்ககாலம். பாணர், கூத்தர், விறலியர் என்று சுற்றிச் சுழலும் இக்கதையில் காதல், மோதல் உண்டு. சம்பவங்கள், அவை நடந்த இடங்கள், காலமாற்றங்கள் ஆகியவை எழுத்தாற்றலால் நம்மை சங்ககால சோழ நாட்டிற்கே அழைத்துச் சென்று விடுகின்றன. அழகிய ஓவியங்கள் கதைக்கு மேலும் சுவை கூட்டுகின்றன.

—குமார்

'மனத்தெளிவைத் தரும் ஆத்ம ஞானம்'

ஆசிரியர்: மயிலைத் தொண்டன்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஒ, பெரியார்பாதை மேற்கு
தூளைமேடு, சென்னை-94.

பக்கம்:112 விலை:ரூ.14/-

தியானம், அதன் சிறப்பு, மேற்கொள்ளும் விதம். அதன் பயன், தியானத்தின் பிரிவுகள், ஆத்ம ஞானம் ஆகியவற்றை விரிவாக எளிமையாக விளக்கும் நூல், ஆத்ம ஞானம் பெற விரும்புவோருக்கு அற்புத வழிகாட்டி.

அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

தமிழ்நாடு அரசு சட்டப்பேரவையில் 20.4.94 முதல் 6.5.94 வரை நடைபெற்ற கூட்டத்தொடரில் இடம்பெற்ற முக்கியச் செய்திகள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

தமிழகக் கடலோரத்தில் தற்போது இயங்கிவரும் 7 கப்பற்படைப் பிரிவுகள் செயல்படவில்லையென்றால், விடுதலைப்புலிகள் எளிதில் தமிழ்நாட்டில் ஊடுருவுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டு விடும். எனவே இந்திய நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கட்டிக் காக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் இந்த 7 கடற்படைப் பிரிவுகளும் தொடர்ந்து தங்கள் பணிகளைச் செயற்படுத்த வேண்டுமென்றும், புதிதாகக் கோரப்பட்டுள்ள 2 கடற்படைப் பிரிவுகளையும் வழங்கி ஆணையிட வேண்டுமென்றும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அவர்களை இந்தப் பேரவையின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் ஜெ. ஜெயலலிதா

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ்நாடு காவல்துறைப் பணியாளர்களுக்கு ரூ.26 கோடி அளவிற்கு அடுக்கடுக்கான சலுகைகளைச் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

[25.4.1994]

தீயணைப்புத் துறையில் பணிபுரிபவர்களுக்காக நடப்பு ஆண்டில் சென்னை நகரம், பெரம்பலூர் நாகப்பட்டினம் ஆகிய 3 இடங்களில் கிட்டத்தட்ட 100 குடியிருப்புகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் ஜெ. ஜெயலலிதா

ஏழைத் தாய்மார்களின் துயரினைத் துடைக்க அவர்கள் வயிற்றில் பால்வார்க்கும்வண்ணம், நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மலிவு விலை மது ஒழிப்புக் கோப்பில்தான் முதலில் கையெழுத்திட்டேன்; முழு மதுவிலக்கே எங்கள் இலட்சியம்.

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் ஜெ. ஜெயலலிதா

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் 2 ஆண்டுகள் நீடிக்கவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தைச் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கொண்டுவந்தார். இத் தீர்மானம், விவாதத்திற்குப் பிறகு முழு வரவேற்புடன் நிறைவேறியது.

[20.4.94]

விவசாயத்திற்குப் போதிய நீர் இருப்பதாலும், விவசாயிகளுக்குப் புரட்சித்தலைவி அரசு பல்வேறு சலுகைகளை வழங்கியிருப்பதாலும் இந்த ஆண்டு

மீனவக் குடும்பத்துக்கு முதல்வர் உதவி

இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த வின்செண்ட் என்பவரின் மகன் ஆரோக்கியராஜ் என்பவர் ஆழ் கடலுக்கு மீன் பிடிக்க 15.11.1989 அன்று சென்றதாகவும், பின்னர் காணாமல் போய் விட்டதாகவும், எனவே, தங்களுக்கு நிவாரண உதவி வழங்கவேண்டும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அவரது குடும்பத்தினர் ஒரு கருணை மனு அனுப்பி யிருந்தார்கள்.

காணாமல் போன திரு. ஆரோக்கியராஜ் அவர்களின் குடும்பம் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவரது குடும்பத்திற்கு 10,000 ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி ஆணையிட்டுள்ளார்.

உணவு தானியங்களின் உற்பத்தி ஒரு கோடி மெட்ரிக் டன்னை எட்டும்.

திரு. கு.ப. கிருஷ்ணன்

— வேளாண்மைத்துறை அமைச்சர்

எந்தக் காரணம்கொண்டும் நிலவரி பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கை கூடாது என்று புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்.

திரு. எஸ்.டி. சோமசுந்தரம்

— வருவாய்த்துறை அமைச்சர்

குளித்தலை பேரூராட்சியில் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் ஒன்று 2.89 ஏக்கர் பரப்பில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. டி.எம். செல்வகணபதி

— உள்ளாட்சித்துறை அமைச்சர்

வழக்கறிஞர்களின் நலநிதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளார். வழக்கறிஞர்கள் இறந்தால், வழக்கறிஞர்கள் நலநிதியிலிருந்து இப்போது ரூ.65 ஆயிரம் தரப்படுகிறது. இதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்துவது குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் இது குறித்து முதல்வர் அவர்கள் முடிவெடுப்பார்.

திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி

—சட்டத்துறை அமைச்சர்

கதர் விற்பனையில், இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடத்தில் இருக்கிறது. கோலாலம்பூரிலும், சிங்கப்பூரிலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய அங்காடிகள் அமைக்க வாரியம் ஆலோசித்து வருகிறது. இதுவரையில் இந்த வாரியம் 11 இலட்சத்து 83 ஆயிரம் கிராமியக் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

திரு. பி.ஈஸ்வரமூர்த்தி

— கதர் கிராமத் தொழில் அமைச்சர்

சிறிய கிராமங்களில் 300 கார்டுகள் மட்டும் உள்ள இடங்களுக்குப் பகுதிநேர ரேஷன் கடைகள் வைக்கப்பட்டுள்ளன. 800 கார்டுகளுக்குக் குறைவாக உள்ள கடைகள் 15 ஆயிரத்து 338 உள்ளன. 500 கார்டுக்கு மேல் இருந்தால் தனிக் கடைகள் திறக்கலாம். குக்கிராமங்களிலும் ரேஷன் கடைகளைத் திறக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார். இதன்மீது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகள் வரப்பெற்ற பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. இராம. வீரப்பன்

— உணவுத்துறை அமைச்சர்

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள், தமிழகத்திற்கு வந்து தொழில்களைத் துவங்க அயல்நாட்டில் உள்ள தூதரகங்கள் மூலம் தகவல்கள் கொடுக்கப்படுகின்றன.

திரு. எம். சின்னசாமி

— தொழில்துறை அமைச்சர்

கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையமும் நடத்தும் பாலகங்களில் 20 சதவிகித பாலகங்களை ஆதிதிராவிடப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு 22.3.94ல் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. டி. ஜனார்த்தனன்,

— பால்வளத்துறை அமைச்சர்

கைத்தறி நெசவாளர்களுக்கு 'ஹட்கோ' உதவியுடன் வீடு கட்டிக் கொடுப்பதைப் போலக் கதர் நெசவாளர்களுக்கும் வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஈஸ்வரமூர்த்தி

— கதர்கிராமத்தொழில் அமைச்சர்

இங்கிலீஷ் கால்வாயைக் கடக்க குற்றாலீசுவரனுக்கு எல்லா உதவியும் செய்யப்படும்!

—மாண்புமிகு முதல்வர்

தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் வரை இடைப்பட்ட கடல் பகுதியைக் கடந்து புதிய சாதனை படைத்த செல்வன் குற்றாலீசுவரன் 27.4.94 அன்று, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து, தனது நீச்சல் அனுபவத்தை எடுத்துக்கூறி ஆசி பெற்றான். அப்போது அவனது குடும்பத்தாரும் உடன் வந்திருந்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தனக்குக் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும் தான், தான் இந்தச் சாதனை புரிவதற்கு அடிப்படையாக அமைந்தது என்றும், நிதியுதவி உட்பட அனைத்து உதவிகளையும் வழங்கிய தமிழக அரசுக்கும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

மேலும், இங்கிலீஷ் கால்வாயைக் கடப்பதற்காகத் தான் மேற்கொள்ளும் முயற்சிக்கு எல்லா உதவிகளையும் வழங்கவேண்டும் என அவன் கோரியபோது; மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவனது எல்லா முயற்சிகளுக்கும் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் அதற்குத் தேவையான பயிற்சியை அவன் தினமும் செய்ய வேண்டும், உடல் நலத்தில் நல்ல அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரையையும் ஆலோசனையையும் வழங்கினார்.

சென்னையில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகமும் எம்.ஜி.ஆரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் ஒலிஒளி காட்சியும் அமைக்கப்படும். சென்னைதரமணியில் 80 ஏக்கர் பரப்பளவில் ரூ.14.93 கோடி ரூபாய் செலவில் சர்வதேசத் தரம் வாய்ந்த திரைப்பட நகர் உருவாகி வருகிறது./ அந்தத் திரைப்பட நகருக்குத் திரையுலக வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுவரும் புரட்சித் தலைவி பெயரால் 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா திரைப்படநகர் என்று பெயர் சூட்டப்படும். பெரியார் வெற்றியை எடுத்துக்காட்டும் வகையில் ஆண்டுதோறும் வைக்கத்தில் அரசு விழா நடத்தப்படும். அமரர் ஜீவா பிறந்த இல்லம் நினைவிடமாக்கப்படும். முத்துராமலிங்கத் தேவரின் பிறந்தநாள் விழா மாநில அளவில் கொண்டாடப்படும். சுதந்திர முழக்கமிட்ட பூலித்தேவனுக்கு அரசு சார்பில் நெல்லைச் சீமையில் விழா நடத்தப்படும். 'ரிபெல்' முத்துராமலிங்க சேதுபதி நினைவாக விழா நடத்தவும் சிலை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. மு. தென்னவன்

—செய்திவிளம்பரத்துறை அமைச்சர்

தமிழ்நாட்டில் உள்ள முக்கியச் சுற்றுலாத் தலங்களை இரயில் மூலம் சென்று பார்த்துவர ஒரு கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகள் கொண்ட சொகுசு ரயில் விட மாண்புமிகு முதல்வர் அவர்கள்

இனமானது, 'கீழ்ச்சாதி' என்றும், தீண்டத் தகாதது என்றும், கொடுமைப் படுத்தப்பட்டதோ அந்த இனத்தவரை மேம்பாடு அடையச் செய்வதே, தமது வாழ் நாள் இலட்சியம், என்ற தூளுரையை, டாக்டர் அம்பேத்கர், தமது சிறு வயதிலேயே மேற்கொண்டதை, இன்றைய இளைய தலைமுறையினர், எந்தக் காரணத்தைக் கொண்டும் மறந்துவிடக் கூடாது.

தாழ்த்தப்பட்ட இன மக்களின் சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்கு, 'இந்திய அரசியல் அமைப்பு'ச் சட்டத்தில், நடைமுறை ரீதியாக, அடிகோலிய டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட இன மக்கள், தங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை வைத்துக் கொண்டு, தாமும் இந்தச் சமுதாயத்தில், ஓர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும், என்ற வேட்கையோடு சமூக இடர்ப்பாடுகளை எதிர்த்துப் போராடி, வெற்றி பெற வேண்டும் என்று, பெரிதும் விரும்பினார்கள். வாய்ப்புகளும், வசதிகளும் இன்றி, வறுமையில் வாடும், தாழ்த்தப்பட்ட இன மக்களை, அறியாமை என்ற இருளில் இருந்து மீட்பதற்காக, வாராது வந்த மாமணி போல, தோன்றிய உத்தமர் தான், டாக்டர் அம்பேத்கர் அவர்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், டாக்டர் அம்பேத்கருடைய முன்னேற்றக் கொள்கைகள், தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோருடைய முற்போக்குச் சிந்தனைகள், செயல்பாடுகள் காரணமாக, மேலும் வலிமை பெற்றுள்ளன என்பதை, கண்கூடாகக் காண முடிகின்றது. அந்த உத்தமத் தலைவர்களின், புனிதப் பாதையில் நடந்து வரும், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள் முதலாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைக் காப்பதற்காக, நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நாள்தோறும் செயல்படுத்தி வருவதையே, என்னுடைய தலையாய கடமையாகக் கொண்டு, இயங்கி வருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் தேர்தல் அறிக்கையில், தாழ்த்தப்பட்ட இன மக்களின் முன்னேற்றத்திற்காக, என்னென்ன செய்ய இருக்கின்றோம், என்பதைக் குறிப்பிட்டு இருந்தோமோ அவற்றை இந்த அரசின், 10 அம்சத் திட்டத்தின் மூலம், நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். தாழ்த்தப்பட்ட இன மக்கள் வறுமையில் இருந்து விடுபட்டு, பொருளாதாரச் சுதந்திரத்தை அடைய, வழிவகை செய்வதோடு, அவர்களுடைய சமூக உரிமைகளும், நலன்களும், என்றென்றும் பாதுகாக்கப்படும் வண்ணம், எங்களது அரசு செயல்பட்டு வருகின்றது.

குறிப்பாக, ஆதிதிராவிடர்களுக்கு என்றே, தனியாகத் தொழிற்பேட்டைகள், இறால் வளர்ப்புப் பண்ணைகள் பட்டுப் புழு வளர்ப்புப் பண்ணைகள், ஆகியவற்றை ஏற்படுத்தி இதற்கு முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள், யாரும் செய்யாத சாதனைகளை, உங்கள் சகோதரியின் தலைமையிலமைந்த இந்த அரசு, செய்து வருகின்றது.

இவை மட்டுமின்றி, தாழ்த்தப்பட்ட இனத்தவரின், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, இலவச வீட்டு மனைகள், வீட்டு வசதி, குடிநீர் வசதி போன்றவற்றை, போர்க் கால அடிப்படையில், எங்களது அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. குறைந்தபட்சம், 'ஒரு நீராதாரமாவது இல்லாத குக்கிராமமோ, ஆதிதிராவிடர் குடியிருப்போ, இருக்கக் கூடாது', என்ற எண்ணத்தின் அடிப்படையில், தற்போது தமிழகம் முழுவதும் உள்ள, ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும், குடிநீர் வசதி, முழுமையாக உருவாக்கித் தரப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் முன்னேற்றத்திற்காக, எங்கள் அரசு ஒவ்வொரு ஆண்டும், கூடுதலாக நிதியை ஒதுக்கி வருகின்றது.

கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

1991.92 ஆம் ஆண்டு, 103 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 1992.93 ஆம் ஆண்டு, 114 கோடி ரூபாயாக உயர்ந்தது. அதேபோன்று, 1993.94 ஆம் ஆண்டு, 135 கோடி ரூபாயாக இருந்த ஒதுக்கீடு 1994.95 ஆம் ஆண்டு, எப்போதும் இல்லாத அளவுக்கு, 151 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலனில், எங்களது அரசு, எத்தகைய ஆத்மார்ந்த அக்கறைக் கொண்டு உள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறும் வகையில், இந்த நிதி ஒதுக்கீடு அமைந்துள்ளது என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில், பெருமிதம் அடைகிறேன்.

அன்றாடம் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும், சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின், பாதுகாவலராக விளங்கி சம நீதி, சம உரிமை, சமூக நீதி ஆகியவற்றை, தாழ்த்தப்பட்ட இனத்தவருக்காகப் போராடிப் பெற்றுத் தந்த, அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையை, இன்று இங்கே திறந்து வைத்ததில், நான் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாநிலம் போற்றும் மாமனிதராம், டாக்டர் அம்பேத்கரின் புகழுக்கும், பெருமைக்கும், மென்மேலும் சிறப்பு சேர்க்கும் வண்ணம், எங்களது அரசு, மக்கள் அரசு, உங்கள் அரசு, தொண்டு மனப்பான்மையுடன் செயல்படும், என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே பெருந்திரளாகக் குழுமியுள்ள உங்கள் அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு, விடைபெறுகின்றேன்.

டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலை திறப்பு விழா

டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலை திறப்பு விழா, 30.4.'94 அன்று காலை சென்னை கோயம்பேடு 100 அடி சாலை சந்திப்பில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாவில் கலந்துகொண்டு, டாக்டர் அம்பேத்கரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து, விழாப் பேருரையாற்றினார்.

இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய சட்ட மேதை டாக்டர் அம்பேத்கருக்குத் தமிழக அரசின் சார்பில் சென்னைக் கோயம்பேடு 100 அடிச் சாலைச் சந்திப்பில் 9 அடி உயர வெண்கலச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடப்பட்டி திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடந்தது.

விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகையில், "மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்டங்கள் தோறும் சென்று மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, மக்களின் கஷ்டங்களை நீக்கி வைப்பதோடு, அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கும் அதிகமாகப் பாதுகாப்பு அளித்து வருகிறார்" என்று கூறினார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் சட்டப் பேரவைத் தலைவர் மற்றும் ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் ஆகியோருக்கு, செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப. அவர்கள் பொன்னாடை அணிவித்தார்.

இந்தியக் குடியரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் தமது சிறப்புரையில், டாக்டர் அம்பேத்கருக்கு அரசுச் சார்பில் சிலை அமைத்ததற்காகத் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி திரு. இரா. முத்தையா அவர்கள் தமது தலைமையுரையில், சமூக நீதி காப்பதில் இந்தியத் துணைக் கண்டத்தில் முன்னணியில் இருப்பவர் நமது முதல்வர் என்று கூறினார்.

பின்னர் மேடையில் இருந்தவாறே மாண்புமிகு முதல்வர் அவர்கள், பட்டனை அழுத்தி, டாக்டர் அம்பேத்கரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார்.

பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழா முடிவில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் இரா. சம்பத் இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவின்றார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், வாரியத் தலைவர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

—ஜெ. சந்திரன்

உத்தரவிட்டுள்ளார். இந்த ரயில் நவம்பர் மாதம் முதல் ஓடும்.

திரு. நாகூர்மீரான்

— சுற்றுலாத்துறை அமைச்சர்

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் பெய்த பெருமழையினால் நீலகிரி மாவட்டத்தில் மரப்பாலம் அருகே ஏற்பட்ட மிகப்பெரிய நிலச்சரிவில் காணாமல் போன 15 நபர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.10 ஆயிரம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

திரு. எஸ்.டி. சோமசுந்தரம்

— வருவாய்த்துறை அமைச்சர்

பட்டுத்தொழில் மூலம் பெண்களுக்குச் சொத்துரிமையை உருவாக்கப் புரட்சித்தலைவி அரசு திட்டமிட்டிருக்கிறது. 1994ஆம் ஆண்டினைப் பட்டுவளர்ச்சி மகளிர் ஆண்டாக அறிவித்துப் பட்டு வளர்ச்சி சார்ந்த தொழில்கள் மூலம் மகளிர் மேம்பாட்டிற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட உள்ளது.

திரு. துரை. ராமசாமி

— ஊரகத் தொழில்துறை அமைச்சர்

ஒரு எக்டேரில் கரும்பு விளைவிப்பதில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. தமிழகத்தில், மேலும் 5 சர்க்கரை ஆலைகளைத் தொடங்க அனுமதிக்குமாறு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

திரு. எம். சின்னசாமி

— தொழில்துறை அமைச்சர்

முதுமலையில் உள்ள வன உயிரினச் சரணாலயத்திற்கும், தேசியப் பூங்காவிற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயர் சூட்டப்படும். சுவாமிமலையில் உள்ள அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், அருள்மிகு துர்க்கையம்மன் ஆலயம் · தருமபுர ஆதீனம், மயிலாடுதுறை உட்பட நான்கு கோயில்களுக்கு யானைகள் வழங்கப்படும். சந்தன மரத்தைத் தேசிய மரமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

திரு. கு. லாரன்ஸ்

— வனத்துறை அமைச்சர்

மருதுபாண்டியர் சிலை, சிறு வயலிலுள்ள நினைவுமண்டபத்தில் விரைவில் வைக்கப்படும்.

திரு. மு. தென்னவன்

— செய்திவிளம்பரத்துறை அமைச்சர்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து 26.4.94 அன்று சட்டப் பேரவையில் 11.35 மணிக்குத் தமது விவாதத்தைத் தொடங்கி 2.10 மணிக்கு முடித்தார். ஆக மொத்தம் 2 மணி 35 நிமிடங்கள் காவல்துறை மானியத்தின்மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளித்தார்!

புகழ்பெற்ற கோயில்களைப் பக்தர்கள், சென்று தரிசித்து வரத் தக்கபடி, புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரில், நவீன வசதியுடன் கூடிய அழகு ரதம் விடப்படும். தமிழகத்திலுள்ள எல்லா முதுநிலைத் திருக்கோயில்களிலும் கட்டணச் சீட்டுகள் வழங்குவதற்கும் உண்டியல் தொகைகளைக் கணக்கிடுவதற்கும் தானியங்கிக் கணிப்பொறிச் சாதனங்கள் நிறுவத் தகுந்த நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

திரு. நடேசன் பால்ராஜ்

— அறநிலையத்துறை அமைச்சர்

பிற்படுத்தப்பட்ட மக்கள் பொருளாதார வளம்பெற, நடப்பு ஆண்டில் பத்தாயிரம் பேருக்குக் கடனுதவி அளிக்கப் புரட்சித்தலைவியின் அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. டி. ஜெயகுமார்

— மீன்வளத்துறை அமைச்சர்

சென்னையில் ஒரு தொழில் பூங்கா ஏற்படுத்தப்படும். இங்கு அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு எல்லா அனுமதிகளையும் வழங்க எல்லா அதிகாரங்களும் கொண்ட சென்னைத் தொழில் பூங்கா ஆணையம் என்ற சட்டபூர்வமான அமைப்பை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். சின்னசாமி

— தொழில்துறை அமைச்சர்

அனைத்துத் தொட்டில் குழந்தைகள் பெயரிலும் தலா ரூ.5 ஆயிரம் ரூபாய் டெபாசிட் செய்யப்படும். புரட்சித்தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் கிடைக்கும் அனைத்துப் பயன்களும் தொட்டில் குழந்தைகளுக்கும் கிடைக்கும்.

திருமதி இந்திரகுமாரி

— சமூகநலத்துறை அமைச்சர்

வெற்றி

• வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் பின்னணியில், அளவற்ற நேர்மையும், அளவற்ற உண்மையும் இருந்தே தீர வேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்

ஊரக விளையாட்டு மையங்கள்

மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதல் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்திய மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், உலக அரங்கில் விளையாட்டுத் துறையில் மிகச் சிறந்த வெற்றிகளைப் பெற்று வரும் சில நாட்டைப் போல, தமிழ்நாட்டிலும் கிராமப் புறங்களில் விளையாட்டு மையங்களைத் தமிழகம் எங்கும் ஏற்படுத்த வேண்டும் என்ற ஓர் ஆலோசனையை வெளியிட்டிருந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களிலும் 'ஊரக விளையாட்டு மையங்களை' ஏற்படுத்த வழிவகை செய்யும் திட்டம் ஒன்றினை அரசுக்கு வழங்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பரிந்துரையைக் கனிவோடு பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அதனை முழுமையாக ஏற்றுக் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊரக விளையாட்டு மையங்களை (Rural Sports Centres) ஏற்படுத்த உரிய ஆணையைப் பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் புதிதாக அமைய இருக்கும் இந்தப் புதிய 'ஊரக விளையாட்டு மையங்கள்' கீழ்க்கண்ட அம்சங்களைக் கொண்டு விளங்கும்:-

ஒவ்வொரு விளையாட்டு ஒன்றியத்திலும் 4 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் இதற்காக தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தில், 'ஊரக விளையாட்டு மையம்' அமைக்கப்படும்.

4 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் ஒரு சேரக் கிடைக்காத ஒன்றியங்களில் அந்தப் பகுதியில் அமைந்துள்ள உயர்நிலைப் பள்ளி/மேல் நிலைப் பள்ளி மைதானத்திலேயே இத்தகைய 'ஊரக விளையாட்டு மையங்கள்' அமையும். இந்த விளையாட்டு மையத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 'ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 50,000 செலவில் சுற்று வேலியும், ஓடு களமும்; விளையாட்டுக் கருவிகளைப் பராமரிக்க ஓர் அறையும், விளையாட்டு வீரர்களுக்கான ஓர் அறையும் இதே திட்டத்தின் கீழ் அமைக்கப்படும். ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையத்திற்கும் அரசு ரூபாய் 10,000 மதிப்புள்ள விளையாட்டுக் கருவிகளை வழங்கும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும் உள்ள மாணவ மாணவியர்களுக்கு அந்தப் பகுதியிலுள்ள பள்ளிகளில் இருந்து 2 உடற் பயிற்சி ஆசிரியர்கள் விளையாட்டுப் பயிற்சியினை வழங்க ஏற்பாடு செய்யப்படும். இந்த அரசு விளையாட்டு மையங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏதுவாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும், தனியார் ஊக்குவிப்பு முறையில் (Sponsorship) ரூபாய் 20,000 அளவிற்கு நிதி திரட்டப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

கிராம அளவில், ஒவ்வொரு ஒன்றியத்திலும் தேர்ந்து எடுக்கப்பட்ட 3 பள்ளிகள் விளையாட்டுப் பயிற்சி மையங்களாகச் செயல்படும். அந்தப் பகுதியிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இருந்தும் விளையாட்டு ஆர்வம் மிக்க மாணவ மாணவியர் குறிப்பிட்ட நாட்களில்/நேரங்களில் வந்து விளையாட்டுப் பயிற்சி பெறுவார்கள். முதல் ஆண்டு இவ்வாறு பயிற்சி பெறும் மாணவ மாணவியரின் எண்ணிக்கையைப் பொறுத்து மாவட்ட அளவிலும் பயிற்சி மையங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அடுத்த ஆண்டு அமைக்கப்படும். இத்தகைய ஊரக விளையாட்டுப் பயிற்சி மையங்கள் நல்ல முறையில் இயங்குவதற்குத் தேவையான பராமரிப்புச் செலவு, இதர வசதிகள் ஆகியவை பொது மக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடை மூலமாகச் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள கிராமப்புற மாணவ மாணவியர் விளையாட்டுத் துறையில் மிகச் சிறந்த பயிற்சியைப் பெற வழிவகுக்கும் இந்த 'ஊரக விளையாட்டுப் பயிற்சி மையங்களை' விரைவில் ஏற்படுத்திச் செயல்படுத்துமாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

செய்தி விளம்பரத்துறை

- புதிய அறிவிப்புகள்

★ இதய தெய்வத்தின் சிந்தனைக்கும்,கலைநுணுக்கத்திற்கும் எடுத்துக்காட்டாகத் திரையுலகின் மணிமகுடமாகச் சென்னைத் தரமணியில் 14.93 கோடி செலவில், 80 ஏக்கர் பரப்பளவில் சர்வ தேசத் தரம் வாய்ந்த திரைப்பட நகர் உருவாகி வருகிறது. அந்தத் திரைப்பட நகருக்குத் திரையுலக வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுவரும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பெயரால் 'ஜெயலலிதா திரைப்பட நகர்' என்று பெயர் சூட்டப்படும்.

★ பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவிடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தைப் போன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிட வளாகத்தில் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் அமைக்கப்படும். மேலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் நிரந்தர ஒலி-ஒளிக் காட்சியும் அங்கு அமைக்கப்படும்.

★ கேரள மாநிலத்தில் வைக்கத்திலே கோவிலுக்குள் நுழையக்கூடாது, தெருவில் நடமாடக்கூடாது, நடந்தால் தீட்டு பட்டால் பாவம், என்று ஒரு குறிப்பிட்ட சமூகத்தை ஒதுக்கி வைத்தார்கள். நாய் நடக்கலாம், கழுதை கனைக்கலாம், எருமை ஓடலாம், பன்றி பவனி வரலாம், ஆடு வரலாம், மாடு வரலாம் ஆனால், ஒரு பஞ்சமன் வரக்கூடாது என்று இருந்த தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து, தந்தை பெரியார் போராடினார்; அதிலே வெற்றி கண்டார்.அதை நினைவுகூரும் வகையிலே ரூ.15 இலட்சம் செலவிலே புரட்சித் தலைவி அவர்களின் சார்பிலே அங்கே ஒரு நினைவகம் எழுப்பப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காலத்தின் தூதுவனாய், அறிவு என்னும் கண் கொடுத்த நாயகனாய், மடமை வேரின் மூலத்தைக் கண்டறிந்து தகர்த்து வீசி முன்டெழுந்த பேர் இடியாய், தமிழன் இந்த ஞாலத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்குப் பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் பெரியாரின் வெற்றியை எடுத்துக்காட்டும் வகையில் வைக்கத்தில் ஆண்டுதோறும் அரசு விழா நடத்தப்படும்.

★ "காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக்கு கூழுமில்லை, பாருக்கு உழைத்தோமடா, பசையற்றுப் போனோமடா, கோடிக்கால் பூதமடா, தொழிலாளி கோபத்தின் ரூபமடா!" என்று வீரக்கனல் எழுப்பும் வகையில் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அமரர் ஜீவா பிறந்த பூதப்பாண்டியில், அவர் பிறந்த இல்லம் அரசின் சார்பில் நினைவிடமாக்கப்படும்.

★ மண்ணருமை, பெண்ணருமை, பொன்னருமை வெறுத்துவிட்டு எண்ணருமைத் தாயகமே என்னுரிமை என்று சொன்ன முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாள் விழா மாநில அளவில் கொண்டாடப்படும்.

செய்தி-திரைப்படத் தொழில் நுட்ப வியல் மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்துக்குப் பதிலளித்து, மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் சட்டப்பேரவையில் ஆற்றிய உரை 29.4.94

★ 'வெள்ளையனே வெளியேறு' என்று நெல்லைச் சீமையில் சுதந்திர முழக்கமிட்ட பூலித்தேவனுக்கு அரசின் சார்பில் விழா நெல்லைச் சீமையில் நடத்தப்படும்.

பெரியார் நினைவகம் - வைக்கம்

★ கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு, பீரங்கியால் சுட்டுக் கொல்லப் பட்ட அழகு முத்துக்கோன் நினைவாக நெல்லைச் சீமையில் அரசு சார்பில் விழா நடத்தப்படும்.

★ 18-ஆம் நூற்றாண்டில் பரங்கியரை எதிர்த்துப் போரிட்டு 24 ஆண்டுகள் வெஞ்சிறையில் வாடிய 'ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி' நினைவாக விழா நடத்த/சிலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ 192 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட இராஜாஜி மண்டபத்தை ரூ.17.97 இலட்சம் செலவில் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ சந்தாதாரர் முகவரிகளை அச்சடிக்கும் பழைய 'பிராட்மா' முறையிலிருந்து, கணினி மூலம் அச்சடிக்க ரூ.1.10 இலட்சம் செலவில் 'தமிழரசு' அச்சகத்திற்குப் புதிய கணினி வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ திரைப்படக் கல்லூரியிலுள்ள நூல் நிலையத்தை ரூ.3 இலட்சம் செலவில் நவீனப்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

★ சென்னையில் கலைவாணர் அரங்க வளாகத்தில் அமைந்துள்ள மாநிலச் செய்தி நிலையத்தை மேம்படுத்தும் வகையில், ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

★ 1994-95-இல் வேலூர், கடலூர் ஆகிய இரு இடங் களிலும் கூடுதலாக அரசுப் பொருட்காட்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ சிறிய நகரங்களில் வாழும் மக்களும் பொருட்காட்சி களைக் காணும் வகையில் தூத்துக்குடி, இராமநாதபுரம், காரைக்குடி, கிருஷ்ணகிரி, திருப்பூர் ஆகிய ஐந்து நகரங்களில் சிறிய அளவிலான பொருட்காட்சிகள் 1994-95-இல் நடத்தப்படும்.

★ பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணை யுடன் அரசின் வளர்ச்சிப் பணிகள், பயன்கள் குறித்து, ஏற்கெனவே சிதம்பரனார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. 1994-95-இல், திண்டுக்கல்-அண்ணா, திருவண்ணாமலை-சம்புவராயர், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியர் ஆகிய 4 மாவட்டங்களில் ரூ.12 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறை

சிறுபாசனத் திட்டத்தில், இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள்

வேளாண்மைப் பொறியியல் துறையில், சிறுபாசனத் திட்டத்தின்கீழ் 1958ஆம் ஆண்டு முதல் குழாய்க் கிணறுகள் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்தும், திறந்தவெளிக் கிணறு களை ஆழப்படுத்தியும் துளையிட்டும் பாசனத் திற்கு நிலத்தடி நீரினை வெளிக்கொணர்வதற்குத் தேவையான இயந்திரங்கள், விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து, வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இந்து ஆதி திராவிட விவசாயிகள் பயன் பெறும் வகையில், 1986 -87ஆம் ஆண்டு முதல் மேற்கண்ட பணிகளுக்குத் தேவையான இயந்திரங்களின் வாடகையில் 50 சதவிகித மானியம் வழங்கப்பட்டு வருகின்றது.

1990 - 91ஆம் ஆண்டில், 1.2.1991 முதல் மேற்கண்ட 50 சதவிகித வாடகை மானியத்துடன், மேலும் 50 சதவிகித மானியம் மேற்காணும் பணிகளுக்கான மூலப் பொருட்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. அவைகளின் விவரம் பின் வருமாறு

1. நில நீர் ஆய்வு செய்யும் கருவிகளின் வாடகை.

2. உத்தேசிக்கப்பட்டுள்ள கிணற்றை அமைக்கும் இடத்திற்கான ஆய்வுக் கட்டணம்.

3. இயந்திரங்களை எடுத்துச் செல்வதற்கானச் செலவு

4. கூலி ஆட்களுக்கான செலவினம் மற்றும் மூலப் பொருட்களானக் கூழாங்கல் போன்ற கிணறு அமைக்கத் தேவையான பொருட்களின் செலவினம்.

5. டீசல் செலவினம்.

6. மின்னியல் ஆய்வுக் கருவிகளுக்கான வாடகை.

7. பைப் செலவினம்.

8. கிணற்றை ஆழப்படுத்தத் தேவையான வெடி மருந்துகளின் செலவினம்.

9. கிணறுகளைத் தூய்மைப்படுத்த ஆகும் செலவினம்.

1991 -92ஆம் ஆண்டில் பயனடைந்த இந்து ஆதி திராவிட விவசாயிகளுக்கு ரூ.5.548 இலட்சங்களும், 1992-93ஆம் ஆண்டில் விடுபட்ட இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.5.968 இலட்சங்களும், 1993-94ஆம் ஆண்டில் பயன்பெற உள்ள இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.45.00 இலட்சங்களும், ஆக மொத்தம் ரூ.56.516 இலட்சங்கள் நடப்பு ஆண்டு (1993- 94) முடிய இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படவுள்ளது.

நடப்பு ஆண்டில், மேற்கண்டவாறு 50 சத விகித மானியத்தினைப் பெற விரும்பும் இந்து ஆதிதிராவிட விவசாயிகள், இத்துறையில் உள்ள இயந்திரப் பிரிவு உபகோட்டங்களை அணுகி உரிய விண்ணப்பத்தினைப் பெற்று, தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து மானியத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

அழகிய நினைவுச் சின்னம்

சு. தங்கவேலு
உதவி இயக்குநர், அரசு அருங்காட்சியகம்

விக்டோரியா மகாராணியின் 50-ஆம் ஆண்டு ஆட்சியினை நினைவுகூரும் வகையில், 1887-ஆம் ஆண்டு சென்னையில் தங்கவிழாக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக் குழு மொத்தம் 13 உறுப்பினர் களைக் கொண்டு இருந்தது. குழு வின் மூன்றில் ஒரு பங்கு உறுப் பினர்களை அரசே நியமிக்க வழி வகை செய்யப்பட்டது. தங்கவிழாக் குழு திரட்டிய நிதிக்குச் சமமான நிதியை அரசே கொடுத்துதவியது.

கைவினைஞர்களுக்கு ஆதரவும், அவர்கள் தயாரித்த பொருட்களுக்கு விற்பனைச் சந்தையும் இல்லாமல் பழங்காலக் கலைத் தொழில்கள் அழிந்து வந்தன. பழங்காலக் கலைத் தொழிலைப் புதுப்பிக்கும் நோக்கத் துடன், 1888-ஆம் ஆண்டு அக்டோபர் 29-இல் விக்டோரியா தொழில்நுட்ப நிறுவனம் தொடங் கப்பட்டது.

விக்டோரியா தொழில்நுட்ப நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றிருந்த காலஞ்சென்ற இராவ்பகதூர் ஆற்காடு தனகோட்டி முதலியார் அவர்கள் அந்நிறுவனத் தில் நூலகம் அமைப்பதற்காக ரூ.20,000 நன்கொடை வழங் கினார். சர் சவாலி இராமசாமி முதலியார், திரு. பால்சன் ஆகி யோருடன் மற்றவர்களும் நிறுவனத் தின் வளர்ச்சிக்கு நன்கொடை தந்து உதவினார்கள். இவ்வாறு உருவாக் கப்பட்ட இந்த நிறுவனத்தின் மூல மாக மற்ற நிறுவனங்களில் கலை மற்றும் விஞ்ஞானம் பயிலும் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகை யும் வழங்கப்பட்டன.

விக்டோரியா மகாராணி இறந் ததை முன்னிட்டு 1901-ஆம் ஆண்டு மார்ச் 5-ந் தேதி பொதுக்



குறளின் குரல்

கவிஞர் சாமி பழனியப்பன்

''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு''

என்னும் குறட்பா. 'செய்நன்றி அறிதல்' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ் வருகிறது. இக்குறட்பாவிற்கு உரையெழுதப் புகுந்த பரிமேலழகர்,

''தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமையினையுடைய தம் ஏழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்'' என்று குறித்தார்.

மேலும், 'எழுமை என்றது வினைப்பயன்' தொடரும் ஏழு பிறப்பினை அது வளையாபதியுட் கண்டது. எழுவகைப் பிறப்பு மேலே உரைத்ததாம். விரைவில் தோன்றத் துடைத்தவர் என்றார்' என்று விரிவுரை சொல்லிக்கொண்டு செல்லுகிறார்.

''ஊர்வ பதினொன்றாம்
ஒன்பது மானுடம் நீர்ப்பறவை நாற்காலோர்
பப்பத்து - சீரிய பந்தமாத் தேவர்
தினா லயன்படைத்த சந்தமில் சீர்த்தா வரநா லைந்து''

என்பதே பரிமேலழகர் எடுத்துக்காட்டும் வளையாபதிச் செய்யுள்.

''தாங்கள் உற்ற துன்பத்தை நீக்கினவரது நண்பை, அப் பிறப்பிலேயன்றி, எழுமையிலும் தோற்றும் பிறப்பெல்லாம் நினைப்பர் சான்றோர் என்றவாறு''

என்கிறார் மணக்குடவர். இந்தக் கருத்தினை அடியொற்றியே பலரும் உரை வகுத்துள்ளனர்.

திருக்குறளில் 'ஏழுபிறப்பு' என்னும் சொல் 62, 107 ஆகிய குறட்பாக்களிலும், 'எழுமை' என்னும் சொல் 126, 398, 538, 835 ஆகிய குறட்பாக்களிலும் இடம்பெற்றுள்ளன. இந்த எழுமை, எழு பிறப்பு என்னும் சொற்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஏழ்வகைப் பிறப்பில் வள்ளுவர்க்கு உறுதியுண்டு என்று வலியுறுத்த முனைவது சரியன்று. அறிவுக்குப் பொருந்துவதுமல்ல.

''விந்து நாதமடி - அகப்பேய்
மெய்யாக வந்ததடி
ஐந்து பெரும்பூதம் - அகப்பேய்
அதனிட மானதடி''

என்றார். அகப் பேய்ச் சித்தர் விந்தும் நாதமும் இணைந்து கரு உண்டாகிறது. நீர், நிலம், தீ, காற்று, வான் என்னும் ஐந்து பூதங்களும் இணைந்து, 'நாதவிந்தால்' ஆன உடம்பினுள் உயிராக ஆகி, அவ் உடம்பை இயக்குகிறது.

அவ்வுடம்பினின்றும் உயிர் வெளியேறியதும் உடம்பின் இயக்கமளிந்துவிடுகிறது. அதுமட்டுமல்ல. உயிர் நீங்கிய பின் அவ்வுடம்பு சவமாகி இயக்கமிழந்து விடுகிறது. மேலும், அவ்வுடம்பு எரிக்கப்பட்டோ, புதைக்கப்பட்டோ கழிந்து விடுகிறது. அவ்வுடம்பினின்றும் வெளியேறிய உயிராகிய ஐம்பெரும் பூதங்களான உயிரின் நிலை என்ன? அது அப்படியே வேறொரு உடம்பினுட் புகுந்து 'பிறவி' எடுக்கிறதா?

நாம் குளத்திலிருந்து ஒரு குடம் நீர் எடுத்து வருகிறோம். அக்குடத்து நீரை மீண்டும் குளத்திலேயே கொண்டு போய்க் கொட்டிவிடுகிறோம். அதன், நாம் முன்பு குளத்தில் கொட்டிய அதே குடத்து நீரை மொள்ள முடியுமா?

நிலக்கரியிலிருந்து வைரம் தயார் செய்யப்படுகிறது. அந்த வைரம் எரிக்கப்பட்டால், அது மீண்டு கரியாகி விடுகிறது. அது வைரம் என்ற சிறப்பிமிகு பெயரையும் இழந்துவிடுகிறது. அப்படியேதான், உடம்பிலிருந்து வெளியேறிய, ஐம்பூதங்களும் வெளியே சூழ்ந்துள்ள ஐந்து பூதங்களோடு கலந்து விடுகின்றன. இதுதானே அறிவியல் உண்மை.

''உடம்பை வளர்க்கும்
உபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த் தேனே''
''உடம்பார் அழியில்
உயிரார் அழிவர்''

என்றார் திருமூலர்.

''கறந்தபால் முலைப்புகா
கடைந்தவெண்ணெய் மேற்புகா
உடைந்துபோன சங்கினோசை
உயிர்களும் உடற்புகா
விரிந்தபூ உதிர்ந்தகாயும்
மீண்டும்போய் மரம்புகா
இறந்தவர் பிறத்தலென்ப
தில்லைஇல்லை இல்லையே''

என்றார் சிவ வாக்கியர்.

மறு பிறப்பையும், ஏழு பிறப்புக்களையும் வற்புறுத்துவது சமயக் கருத்தே தவிர, தனிப் பெரும் புலவரான வள்ளுவர் கருத்தன்று.

எனவே 'ஏழ்' என்பதை எண்ணுப் பொருளில் கொண்டு, பிறப்பு, பிறவி என்பவற்றைத் தலைமுறையாகக் கருதுவதே பொருத்தமும் சிறப்பும் உடையதாகும்.

புதுக்கோட்டையில் எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர்; வயதிலும் அறிவும் பண்பொழுக்கங்களிலும் வளர்ந்தவர். இனிய நண்பர். அவரது தந்தையார், நான் முன்னர்கூறிய பெரியவர் சிறு பிள்ளையாக இருந்தபோதே பெரும் கடனாளியாகிவிட்டாராம். அவர்களுக்கு அப்போதிருந்த சொத்து ஒரு சின்னஞ்சிறு வீடே.

கடன் கொடுத்திருந்த முதியவர், கடனே வசூலிப்பதற்காக வந்திருந்தாராம். கடன்பட்டவர் தன் நிலையை எவ்வளவோ எடுத்துக்கூறி, எப்படியேனும் கடனை விரைவில் தீர்த்துவிடுவதாகச் சொல்லிக்கெஞ்சி, பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டாராம்.

ஆனால், சில நாட்களிலேயே கடன்பட்டவர் திடீரென்று இறந்துவிட்டாராம். கடன் கொடுத்தவர் பதறிப்போய், வீட்டை ஜப்தி செய்யப்போவதாகச் சொன்னாராம். அப்போது சிறுபிள்ளையாக இருந்த நான் முன்னர் கூறிய எனது நண்பர் அவரிடம் சென்று, கண்ணும் கருத்தும் கலங்கி, ''ஐயா! தயவு செய்து கொஞ்சநாள் பொறுத்துக்கொள்ளுங்கள். நான் எப்படியும் உங்கள் கடனைத் தீர்த்துவிடுகிறேன்; நீங்கள்தான் இப்போது காப்பாற்ற வேண்டும்'' என்று கெஞ்சினாராம். கடன் கொடுத்தவரின் மனம் இரங்கியது. மனித உள்ளந்தானே!

விரைவில் கடனும் தீர்க்கப்பட்டது. அது நடந்து பல ஆண்டுகளாயின. எனினும் என் நண்பர், அந்த மனிதரின் பெருந்தன்மையை வாயாரப் பேசிப் புகழ்கிறார். என் நண்பரின் பிள்ளைகளும் கடன் கொடுத்த பெரியவரை இன்றும் நன்றியோடு போற்றிப் பாராட்டுகின்றனர்.

''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு''

என்பது இதுதான். எனவே, எழுமை என்பதை எழு பிறப்பு என்று கொள்ளாமல், பல தலைமுறை என்று பொருள் கொள்வதே பொருத்தமானது.

ஆகவே, வள்ளுவர்க்கு எழு பிறப்பிலும், மறு பிறப்பிலும், நம்பிக்கை உண்டென்று பேசாமல், ஏழு என்ற சொல்லை எண்ணுப் பொருளில் கொண்டு, 'பல தலை முறை' என்று பொருள் காண்பதே வள்ளுவர் உள்ளத்திற்கு இயைந்ததாகும்!



சென்னை மாநகரில் சிறுசேமிப்பு விளம்பர பலூன்

சென்னை மாவட்டத்திற்கு இந்த ஆண்டு (1993-94) அளிக்கப்பட்டுள்ள சிறுசேமிப்பு வசூல் இலக்கு ரூ.150 கோடி. சிறுசேமிப்பு வசூல் இலக்கினை எய்திடும் நோக்குடன் சிறுசேமிப்பு முனைப்பு இயக்கங்கள் பல மேற்கொள்ளப் படுவதில் பலூன் விளம்பரமும் ஒன்றாகும். இப்பலூன் விளம்பரம் சிறுசேமிப்பு இயக்குநரகம் இயங்கிவரும் 5 மாடி கட்டடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளதால் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

வாழ்க்கை

◎ ஒரு விளக்கு எரிகிறதென்றால், எரிவதன் மூலம் ஒவ்வொரு விநாடியும் அது தன்னை அழித்துக் கொள்கிறது. அப்படி அழித்துக் கொள்வதுதான் வாழ்க்கை.

கூட்டம் ஒன்று சென்னையில் ஏற்பாடு செய்யபட்டது. அக் கூட்டத்தில் விக்டோரியா மகா ராணியின் நினைவாக ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவதென்றும் அதற்கு நிதி திரட்டுவதென்றும் தீர்மாணிக் கப்பட்டது. அந்த நினைவுச் சின்னம் அமைக்க அரசு 1902-இல் அரசு அருங்காட்சிய வளாகத்தில் இடம் தந்துதவியது. பின் இந்த முடிவை மாற்றி 1905-இல் எழும்பூரில் ''மால்பரோ இல்லம்'' என்றழைக் கப்பட்ட பழைய கட்டடத்தைக் கொண்ட சுமார் 4.076 ஏக்கர் நிலப்பரப்பை அரசே ரூ.10,000-க்கு வாங்கி நினைவுச் சின்னம் அமைக்க உதவியது. இவைதவிர அரசு கட்டட நிதிக்கு ரூ.75,000 வழங்கியது.

1906-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ந் தேதி வேல்ஸ் நாட்டு இளவரசர் மேதகு ஜார்ஜ் பிரடரிக் ஈனஸ்ட் ஆல்பர்ட் அவர்களால் விக்டோரியா நினைவுக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 1909-ஆம் ஆண்டு நினைவுக் கூடம் கட்டி முடிக்கப்பட்டது. அப்போது அக் கட்டடம் கட்ட ஆன செலவு ரூ.1,51,902, அணா ஒன்றும், பைசா ஏழும் ஆகும். விக்டோரியா தொழில்நுட்ப நிறுவனத்தை வடிவ மைத்தவர் கட்டடக் கலை வல்லுநர் திரு. இர்வின், C.I.E ஆவார்.

பேத்பூர் சிக்கரி, ஆக்ரா, டில்லி ஆகிய இடங்களில் மொகலாய மன்னர்களால் எழுப்பபட்டுள்ள மொகலாயக் கட்டடங்களைப் போன்று இக்கட்டடமும் மொக லாயக் கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட்டது. இக்கட்டடம் முழு வதும் இளஞ்சிவப்பு நிறமுடைய கற் களால் ஒட்டப்பட்டு அழகுப்படுத்தப் பட்டுள்ளது. மேலும், பூவேலைப் பாடுடைய கற்களின் அமைப்பும் வடிவமும் மிகவும் நேர்த்தியாக உள் ளன. கட்டடத்தின் முன்பகுதி மிகவும் நன்கு அலங்கரிக்கப் பட்டுள்ளன. இராவ் சாகிப் T. நம்பெருமாள் செட்டியார் இக்கட்ட டத்தின் ஒப்பந்தக்காரர் ஆவார். சென்னை மாநகரத்தின் அழகுமிகு கட்டடங்களில் ஒன்றான விக்டோரியா நினைவு இல்லம் 1909-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ந் தேதி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஆளுநர் சர் ஆர்தர் லாலே என்பவரால் திறந்து வைக் கப்பட்டது.

இந்த நினைவுச் சின்னம் விக்டோரியா தொழில்நுட்ப நிறு வனத்தின் தலைமையகமாக இருந்து, தொழில்நுட்ப ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் செய்திகளை வழங்கி வந்தன. கலைத் தொழிலையும் அதன்மூலம் தென்னிந்தியக் கலைஞர் களின் திறமையையும் வளர்ப்பதன் மூலம், அவர்களின் முன்னேற்றத்தைப் பேணுவதே இந்த நிறுவனத்தின் குறிக்கோளாக இருந்தது. மேலும், இது நிரந்தரக் கண்காட்சிக் கூடமாக விளங்கியதுடன் கலைப் பொருட் களை விற்பனைச் செய்யும் இடமா கவும் விளங்கியது.

இரண்டாம் உலகப்போரின் போது இந்த நினைவு இல்லம் போர் வீரர்களுக்குத் தேவைப்பட்ட கார ணத்தால், கலைப்பொருட்கள் யாவும் மவுண்ட்ரோடில் இருந்த ''நவாசி'' இல்லத்திற்கு மாற்றப் பட்டது. இந்திய இராணுவச் சட்ட விதி 76-ன்படி சென்னை ஆளுநர் F.W.A. மூரிஸ் அவர்களின் மேற் பார்வையில் சென்னை கேரிஸன் பொறியாளரால் இந்த நினைவுக் கட்டடத்திற்கு மாத வாடகை ரூ.500 என நிர்ணயிக்கப்பட்டு, அவ்வாறே விக்டோரியா தொழில் நுட்ப நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வந்தது.

இராணுவத்தினர் வெளியேறிய பின், கல்வித்துறை துணைச் செயலாளர் திரு. C.O. கூரே, I.C.S. அவர்களைத் தலைவராகவும், அரசு அதிகாரிகள் மற்றும் தனியார் சிலரையும் கொண்ட குழு ஒன்று அருங்காட்சியக வளர்ச்சிப் பணி களுக்கு ஆலோசனை வழங்க 1945-ஆம் ஆண்டு அமைக்கப் பட்டது. இந்தக் குழு ஒரு ஓவியக் காட்சிக்கூடம் அமைக்கவும், அதில் இந்திய ஓவியங்களின் வளர்ச்சி யையும், பழங்கால நவீனகால ஓவியங்கள் மற்றும் பெர்ஷியா, திபேத், சைனா, ஜப்பான் போன்ற நாடுகளின் ஓவியங்களையும் காட்சிக்கு வைக்கப் பரிந்துரை செய்தது.

1951-இல் விக்டோரியா தொழில்நுட்ப நிறுவனத்தில் ஒரு கலைக்கூடம் அமைத்திட அரசு அனுமதி அளித்து அதற்கு வாடகை ரூ.500 நிர்ணயித்தது. அரசின் முடிவிற்கு விக்டோரியா தொழில் நுட்ப நிறுவனமும் இணக்கம் தெரி வித்தது. அதன்பேரில் இக்கட்டடத் திற்குத் ''தேசிய கலைக்கூடம்'' என பெயரிடப்பட்டது. தேசியக் கலைக் கூடம் அமைத்திட ஆலோசனை வழங்க கல்வித்துறைச் செயலாளர் திரு. கே.எம். உன்னிதன், I.C.S. தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டு அதில் டாக்டர் ஜேம்ஸ் கஸின், திரு. டி.பி. ராய் சவுத்திரி மற்றும் டாக்டர் ஐயப்பன் ஆகி யோர் உறுப்பினர்களாக அங்கம் வகித்தனர்.

அருங்காட்சியகத்தில் இருந்த 400 ஓவியங்களில் 54 ஓவியங்கள் தேசிய கலைக்கூடத்தில் காட்சிக்கு வைக்கத்தேர்வுசெய்யப்பட்டன. சில படிமங்கள், உலோக வார்ப்புகள், மரச்சிற்பங்கள், தந்தத்தினால் ஆன பொருட்கள் மற்றும் துணி வகைகள் அருங்காட்சியகத்திலிருந்தும், கலை மற்றும் தொழில்நுட்பப் பள்ளியி லிருந்தும் தேசியக் கலைக்கூடத்திற்கு மாற்றப்பட்டு, காட்சிக்கு வைக்கப் பட்டன.

அருங்காட்சியக நூற்றாண்டு விழாவின்போது தேசியக் கலைக் கூடம் பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்களால் நவம்பர் 27,1951-இல் திறந்து வைக்கப்பட்டு நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. ஜூன் 26, 1965-இல் விக்டோரியா தொழில் நுட்ப நிறுவனத்தின் இந்தக் கட்ட டத்தை அரசு கையகம் செய்தது.

சனவரி 25, 1984-இல் வளர் கலையை மேம்படுத்த தனிக்கட்டடம் அமைக்கப்பட்டு, வளர்கலைக் கூடம் என்று பெயரிடப்பட்டது. எனவே, தேசியக் கலைக்கூடத்தில் மரபுக் கலைப் பொருட்கள் மட்டும் காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பெண்சிசுவைக் காப்போம்

பாவலர். கருமலைத்தமிழாழன்

இருட்டினிலே வாழுகின்றார் பெண்கள் இங்கு
எழுச்சியான முற்போக்கு வளர்ந்த பின்பும்
மருள்நீங்க வழியின்றி அடிமை யாக
மண்டியிடும் கீழ்மைநிலை அகல வில்லை
பெருகிவரும் அறிவியலின் புதுமை யாலே
பெறுகின்ற அறிவினிலே வளர்ச்சி பெற்றும்
...யுள்ள மனதாலே பெண்கள் தம்மை
கூன்நிமிர விட்டிடாமல் குட்டு கின்றார்!

பெற்றவரோ பெண்சிந்தும் கண்ணீர் கண்டு
பெருந்துன்பில் நோவதன்றி வேறென் செய்வர்
புற்றுநோயாய்ப் புரையோடிச் சமுதா யத்தில்
புகுந்திருக்கும் அவலத்தைப் பார்த்தி ருந்தும்
கற்றவரும் கல்லாராய்த் தீமை தன்னை
களைதற்கே என்செய்தார்! சட்டம் ஒன்றால்
குற்றங்கள் புரிவதனைத் தடுக்க ஒல்லும்!
கூடியொன்றாய்ச் செயல்செய்தால் முடிந்தி டாதோ!

வாய்வீரம் பேசுகின்றார் மேடை தோறும்
வார்த்தையிலே சமத்துவத்தை வழங்கு கின்றார்
தாய்க்குலமே இந்தநாட்டைத் தாங்கு கின்ற
தெய்வமென உதட்டாலே வணங்கு கின்றார்
...ாய்ப்பளித்தோம் சரிசமமாய் ஆக்கி விட்டோம்
...வளருகின்ற சமூகத்தில் ஆணும் பெண்ணும்
தோய்ந்தொன்றாய் ஏற்றத்தாழ் வகன்றி வாழ
தொல்லைகளை நீக்கிவிட்டோம் என்றே சொன்னார்!

பெண்சிசுவின் முகம்பார்க்கும் மனமு மின்றி
பிறந்தவுடன் கழுத்துதனை நெறித்து வீட்டின்
அண்டையிலே இருப்போரும் அறியா வண்ணம்
அழுகுடலைப் புதைக்கின்றார் கிராமந் தன்னில்!
கண்ணெதிரில் நடக்கின்ற கயமை தன்னைக்
காணுகின்ற நாமெல்லாம் செய்த தென்ன
விண்ணதிரப் பெண்கள்தம் பெருமை பேசி
விளைகின்ற கொடுமையினைத் தடுத்தோ மில்லை!

மடமையிலே வாழுகின்ற கிராம மக்கள்
மனதினிலே பெண்ணச்சம் மடியச் செய்வோம்
தடம்மாறிச் செய்கின்ற செயல்களைத்
தகுமுறையில் மனத்தெளிவைத் தளிர்க்கச் செய்வோம்
திடமாக பெண்ணடிமை நீங்கு தற்கே
திமிரான ஆண்வர்க்கம் திருந்தச் செய்வோம்
கடமையிது நமக்கின்று கயமை போக்கி
களிவோடு பெண்ஆணும் ஒன்றே என்போம்!

அரசிந்தக் கொடுமையினை அகற்று தற்கே
தொட்டிலொன்று அமைத்துளது தொட்டி லுக்குள்
வரவாக வருகின்ற பெண்கு ழந்தை
வளர்தற்கே காப்பகமும் அமைத்து வாழ
இரக்கத்தைக் காட்டுதல்போல் கருணை உள்ளம்
இருப்போர்கள் தத்தெடுத்துக் காக்க வந்தால்
அரவணைப்பில் தளிர்க்கரங்கள் வளர்ந்து நாளை
அறிஞராகி நாடுதனைக் காப்பர் அன்றோ!





மாம்பழமாம் மாம்பழம்

உலகின் மிக முக்கிய ஆறு பழவகைகளில் மாம்பழமும் ஒன்று. ஆனால், ஏற்றுமதியில் மிக முக்கிய இடத்தை மாம்பழம் வகிக்கின்றது. மாம்பழ உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் 11 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மாம்பழம் பயிரிடப்படுகிறது. ஆண்டு தோறும் 88 இலட்சம் டன் மாம் பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. மாம்பழ உற்பத்தியில் ஆந்திரப்பிர தேசம் முதலிடத்தையும், பயிரிடும் பரப்பில் உத்திரப்பிரதேசம் முதல் இடத்தையும் வகிக்கின்றன.

பீகார், கர்நாடகா, மேற்கு வங்காளம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் மாம்பழத்தை முக்கியப் பயிராகப் பயிரிடுகின்றன.

மாம்பழப் பதத்தைப் பொறுத்து, அதன் ஏற்றுமதி வளம் சார்ந்திருக் கிறது. உலகின் 40 நாடுகளுக்குப் பதப்படுத்தப்பட்ட மாம்பழம் ஏற்று மதி செய்யப்படுகிறது. 1991-92-இல் ரூ.35.46 கோடி அந்நியச் செலாவணி மதிப்புள்ள 23,104 மில்லியன் டன் மாம்பழமும், 1992-93-இல் ரூ.48 கோடி அந் நியச் செலாவணி மதிப்புள்ள 27,000 மில்லியன் டன் மாம் பழமும் ஏற்றுமதி செய்யப்பட்டது. வளைகுடா நாடுகள்தான் அதிக அளவில் மாம்பழத்தை இறக்குமதி செய்கின்றன.

சர்வதேசச் சந்தையில் இந்திய மாம்பழத்திற்கு ஏற்பட்டுள்ள கிராக் கியும், ஏற்றுமதி வளமும், நாட்டில் மாம்பழ உற்பத்திக்கு ஊக்கமளித்து உள்ளன. தரத்தை மேம்படுத்த இது எட்டாவது திட்ட காலத்தில் தோட்டக் கலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் தரமான பழமரக் கன்றுகள் விநியோகிக்கப்படும். மாம்பழ உற்பத்தியை மேம்படுத்த 27,000 எக்டேர் பரப்பளவில் உள்ள பழமையான மாம்பழ மரங்களுக்குப் புத்துயிர் ஊட்டப் படும். தரம் வாய்ந்த அல்போன்ஸோ மாம்பழத்தை வழங்க 1992-93-இல் ரூ.4.40 இலட்சம் சிறப்பு ஒதுக் கீடாக வழங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 11,900 எக்டேர் பரப்பளவில் உள்ள பழைய மாமரங் களுக்குப் புத்துயிர் ஊட்ட ரூ.1.76 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நுகர் வோர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத் தில் பல புதுமையான மாம்பழ வகைகளை இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்து வருகிறது.

மாம்பழம் மற்றும் இதர பழ வகைகள் குறித்து விரிவான ஆராய்ச்சியை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் நடத்தி வருகிறது. பல்வேறு தட்பவெட்பச் சூழலில் உள்ள பல்வேறு மையங் களிடையே நெருக்கமான தொடர்பு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மேலும் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் செய்திகள் 'பரிமாறிக்கொள்ளப்படு கின்றன.

ஒருங்கிணைந்த தோட்டக்கலைத் தொழில் வளர்ச்சியில் தரமான உற்பத்திக்கும், அறுவடைக்குப் பிந் தைய முறை மேம்பாட்டுக்கும் முக் கியத்துவம் அளிக்கப்பட்டு வரு கிறது. பல்வேறு வர்த்தக ஊக்கு விப்புகள் இருந்தபோதிலும், பல் வேறு சிறப்பு மேம்பாட்டு நடை முறைகளை வேளாண் மற்றும் பதன உணவு . மேம்பாட்டு ஏற்றுமதி ஆணையகமும், தேசியத் தோட்டக் கலை வாரியமும் மேற்கொண்டு வருகின்றன.

குடும்ப நலத் திட்டத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் பங்கு

என். ரெங்கநாதன்

இன்றைய இந்திய மக்கள் தொகை 88 கோடியாகும். ஆண்டுக்கு 2.1 சதவிகிதம் அதிகரித்துக் கொண் டிருக்கும் இன்றைய இந்தியாவில் இன்னும் 25 ஆண்டுகளில் அதன் மக்கள் தொகை இரண்டு மடங்காகி விடும். மக்கள் தொகைப் பெருக்கத் தைக் கட்டுப்படுத்தாவிடில் இன்னும் 25 ஆண்டுகளில் இந்தியா பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டி யிருக்கும்.

மக்கள் தொகையை கட்டுப்படுத்து வதன் அவசியம் என்ன? ஏன் கட்டுப்படுத்துகிறோம்? மக்கள் தொகை சீராக இருப்பதால் விளை யும் நன்மைகள் யாவை? என ஆராயும்போது இவற்றைக் கட்டுப் படுத்த உதவும் சாதனம் - மக்கள் தொடர்புடையச் சாதனமாகத்தான் இருக்க முடியும் என்ற நம்பிக்கையில் இன்றைய மாநில, மத்திய அரசுகள் மக்கள் தொடர்பு சாதனங்களின் மூலம் இத்திட்டத்தினை வெற்றிகர மாக நடத்திக் கொண்டு வருகின்றன.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதன் அவசியம்

இன்றைய இந்தியாவில், ஏன், உலகளவிலே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதன் குறிக்கோள் யாது எனப் பார்க்கும்போது, இருக் கும் வளங்களைச் சரியாக நுகர முடி யாத நிலை, ஏழ்மை, பஞ்சம், பிணி(பட்டினி என, தன் ஒரு வயிற்று சோற்றுக்கே; திண்டாடும் நிலமை யைப் போக்கி, அனைவரும் வளத் ...ன் வாழ இந்த மக்கள் தொகைக் ...றைப்பு அவசியம்.

மக்கள் தொகை பற்றிய கல்வி

மக்கள் தொகையைக் கட்டுப் படுத்தி, குடும்ப நலத்தினை மேம் படுத்த போதிக்கப்படும், நடை முறைப்படுத்தும் கல்விக்குக் குடும்ப நலக் கல்வி என்று கூறலாம்.

இன்றுள்ள இந்தப் பெருக்கத் திற்கு ஒவ்வொரு இடத்திற்கும் சென்று போதித்தல் என்பது இய லாத ஒன்று. மக்களிடம் ஜனரஞ்சக மாகப் பரவியுள்ள, மக்கள் அனை வரும் தொடர்பு வைத்துள்ள, மக்க ளால் பயன்படுத்தப்படுகிற சாத ...ங்கள் மூலம் எடுத்துரைக்க வேண் டும். எடுத்துரைத்தல் வாயிலாக மக்கள் மனதைக் கவரவேண்டும்.

மக்கள் தம் பொருளாதார நிலை மையை, அறியாமை நிலைமையை, நாட்டின் நிலைமையை உணர்ந்து, தன்னைத் தானே சீரமைத்துக் கொள்ள தொடர்புச் சாதனங்கள் உதவ வேண்டும். இன்றைய மக்கள் தொகைப் பெருக்கம், அவர்களின் வறுமை, சூழ்நிலை, போதிய கல்வி யின்மை ஆகியவற்றின் மூலம்தான் ஏற்படுகின்றது. எனவே, மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த மக்கள் கல்வியும், மக்கள் தொடர்பு சாதனங்களும் இன்றி யமையாதவையாகும்.

மக்கள் தொடர்பு சாதனங்கள்

மக்களிடம் நயம்பட, தெளிவாக, சிந்தையில் விரைவில் பதியுமாறு



உருவாகும், உருவாக்கப்படும் சாத னமே - தொடர்புச் சாதனம். மக்க ளுடன் தொடர்பு கொண்டு மக்களி டையே மாற்றத்தை விளைவிப்பதில் பெரும்பங்கு வகிப்பவை மக்கள் தொடர்பு சாதனங்களாகும்.

தொலைக்காட்சி, வானொலி, செய்தித் தாட்கள், சுவரொட்டி, திரைப்படங்கள், கண்காட்சி ஆகி யவை மக்கள் தொடர்பு சாதனங் களாகும். இப்படிப்பட்ட சாதங்கள் எப்படி மக்கள் தொகையைக் கட்டுப் படுத்த முடியும்? படித்த மக்களையும், பாமர மக்களையும் எப்படி இந்த இன்றியமையாத திட்டத்தின் கீழ் உள்ளடக்க முடியும் என ஆராய வேண்டும்?

பல்வேறு தொடர்புச் சாதனங்கள் குடும்ப நலத்தை மக்களிடையே பரப்பு வதற்கு மக்கள் தொடர்பு சாதனங்கள் மிகவும் அவசியம்.

பாமர மக்களுக்குச் செய்தித்தாள் மூலம் செய்திகள் சென்றடைய வாய்ப்பில்லை. ஏனெனில், போதிய படிப்பின்மை, இருந்தபோதிலும் குடும்ப நலச் செய்திகள், வண்ண நிறங்களில் தரப்படும் குடும்ப நல விளம்பரங்கள், ஆர்வத்தைத் தூண் டும் தலைப்புகள், படங்கள், ஓவி யங்கள் மக்களை ஈர்க்கின்றன என்று கூறினால் மிகையாகாது.

தொலைக் காட்சிகள் வாங்க இயலாத நிலைமை - ஏனெனில், பணமின்மை; வறுமை; அப்படி யானால் அவர்களுக்கு வானொலி யும், திரைப்படங்களும்தான் முக்கிய வழிகாட்டிகளாக இருக்கமுடியும்.

அநேகமாக, படிக்காத வறுமைக் கோட்டின் கீழ் நிற்கிற, சராசரி கிராமப்புற இந்தியனைச் சென்று அடைகிற சாதனம் திரைப்படம் தான் அவன் தனது துயரங்களுக்கு வடிகாலாக, விடிவெள்ளியாகக் கருதி நேசிப்பது திரைப்படம்தான். காட்சி அமைப்புகளின் வாயிலாக அவன் விரும்புகிற திரைப்படத்தின் மூலமாக அவனுக்குத் தெரிவிக்க வேண்டிய இனிப்புத் தடவிய மாத் திரையாக மாற்றித் தர முடியும்.

திரைப்படங்களின் வாயிலாக குடும்ப நலத் திட்டத்தின் பயன்கள் விளக்கமாக எடுத்துக் கூறப்படு வதால், கதையம்சத்துடன் செய்திகள் கூறப்படுவதால் மக்கள் மனதில்

நன்றாகப் பதிந்து விடுகின்றது. திரைப்படங்கள் பொழுதுபோக்குச் சாதனமாக மட்டுமல்லாது, தற்பொழுது அது ஒரு அத்தியாவசியத் தேவையாக மக்களால் கருதப்படுகின்றது. ஆதலால், குடும்ப நலத் திட்டத்தின் நன்மைகள் மக்கள் மனதில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்.

வானொலி மூலம் அவர்கள் செய்திகள் அனைத்தையும் கேட்பார்களா என்பது ஐயத்திற்குரியது. இப்படிப்பட்ட சமயத்தில் எப்படி மக்கள் கல்வியைப் பரப்ப வேண்டும்? என்பது பிரச்சினைக்குரியது. இந்தப் பிரச்சினைகளுக்கு இடையிலும் நம் மக்களைப் பற்றிக் கூறும் போது ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் செய்தி; "நம் இந்திய மக்கள் தனக்குத் தெரிந்த செய்தியை உலகம் முழுவதுக்கும் எடுத்தியம்பும் நல் இயல்பு உடையவர்கள்". ஆகவே, பரப்ப நினைக்கும் செய்தியை ஒரு மனிதனின் செவிகளிலாவது கேட்கும்படி, நன்றாகச் செவி சாய்க்கும் படி செய்தால், நம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் தெரிந்து விட்டது என திருப்தியில், மகிழ்ச்சியில் திளைக்கலாம். சுவையான நிகழ்ச்சிகளுக்கிடையில் கவனத்தைக் கவருகின்ற வண்ணமாக விளம்பரம் செய்தல் என்பது ஒரு கலை. நல்ல பயன் தரவல்லது. மனதில் நிற்கக் கூடிய விளம்பர வசனங்கள் நல்ல முறையில் கை கொடுக்கும்.

குடும்ப நலக் கல்வியைப் பற்றி தொடர்புச் சாதனங்கள் தெரிவிக்கும்பொழுது நல்ல விளக்கங்களுடன், புரியும் விதத்தில் கொடுக்க வேண்டும். மக்கள் ஆர்வமாய் இருக்கும் நேரத்தில் அவ்வகைச் செய்திகள் சென்றடைய வேண்டும். சுவரொட்டி, சுவர்களில் விளம்பரங்கள், கட்-அவுட் போன்றவை குடும்பநலப் பிரச்சாரப் பணியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இன்றைய இந்திய மகனின் நிலை

இன்றைய அடிப்படைப் பிரச்சினையான ஏழ்மை, வறுமை, பஞ்சம், பிணி, பட்டினி, அறியாமை, வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவற்றிலிருந்து மீட்டு, ஒரு புதிய உலகுக்கு இட்டுச் செல்ல தொடர்புடைய சாதனங்கள் எவ்வாறு பணியாற்ற வேண்டுமெனில்,

முதல் பொருளாக, கருத்தாக, சாதனங்களின் மூலம் மக்களின் பிரச்சினைகள் மக்கள் தொகைப் பெருக்கத்தால் எவ்வாறு உருவாகிறது என்பதை எடுத்துரைக்க வேண்டும். எத்தனையோ கோடி மக்கள் தங்களின் பிரச்சினை என்ன என்பதை அறியாமல் வாழ்கிறார்கள். ஆகவே, மக்கள் அல்லலுற்றிருக்கும் பிரச்சினைகள் யாவை என்பதை எடுத்தியம்புதல் தொடர்புச் சாதனத்தின் முதல் குறிக்கோளாகும்.

இரண்டாவது, இந்தப் பிரச்சினையை அகற்றுவதற்கான வழிமுறைகளையும் உடனுக்குடன் அறிவுறுத்தல் வேண்டும். தகுதி வாய்ந்த தம்பதிகளிடமும், இனித்திருமணம் செய்யப் போகிறவர்களிடம் குடும்ப

நலச் செய்தியைத் தகுதியான நேரத்தில் சென்றடையச் செய்யும் வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, திருமண வயதை உயர்த்த வேண்டுமென்பதை மக்கள் தொடர்பு சாதனங்கள் வாயிலாக இயம்புவதன் மூலம் ஓரளவு மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தடுக்கலாம். தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் திருமண வயதை உயர்த்துவதன் அவசியம், அதனால் ஏற்படும் பயன்கள், சிறுவயது திருமணத்தின் கொடுமைகள் ஆகியவற்றைப் பற்றித் தெளிவான, விரிவான விளக்கங்களை எடுத்துரைக்க வேண்டும்.

இன்னும் பத்து ஆண்டுகளில் மனிதப் பிறப்பு உயர்வு வீதம் குறையவில்லையெனில் மனிதன் பெருந்துயர் அடைய நேரிடும் என்று எடுத்தியம்பி, உயரும் வீதத்தை நிலை நிறுத்தச் செய்ய வேண்டும். இப்படி நிலை நிறுத்த, உலக மக்கள் தொகையைக் குறைக்க "குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை" செயல்படுத்துதல் அவசியம். இவற்றை, எப்படிச் செயல்படுத்துவது என்பது, மக்களின் மன நிலையைப் பொறுத்த நிகழ்ச்சிகளை அமைப்பதைப் பொறுத்து இருக்கும்.

நமது மக்கள் பிறப்பின் வீதத்தினைக் குறைப்பதன் அவசியத்தைப் பற்றி அறிந்திருந்தாலும், எவ்வழியில் கையாள்வது என்பது பற்றிச் சரியான சிந்தனை இல்லாத நிலையில், அறியாத நிலையில் உள்ளார்கள். மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு போதிய விவரங்களை மக்களுக்குக் கொடுப்பதுதான்.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள், குடும்ப நல நிலையங்களை எப்படி அணுகுவது என்பது பற்றித் தெளிவாக விவரிக்க வேண்டும். இந்த நிலையங்களின் பங்கு என்ன என்பது பற்றி இச்சாதனங்கள் தெளிவான முறையில் மக்களைக் கவரும் பாங்கினிலே எடுத்துரைக்க வேண்டும்.

சில புள்ளி விவரங்கள்

1950-51-இல் இந்திய மக்கள் தொகை 361.1 மில்லியனாக இருந்தது. 1990-91 இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி 844.3 மில்லியனாக உயர்து விட்டது. 40 ஆண்டுகளில் இரண்டு மடங்குக்கு மேல் மக்கள் தொகை பெருகிவிட்டது. பிறப்பு விகிதத்தையும், இறப்பு விகிதத்தையும் ஓரளவு கட்டுப்படுத்தியிருந்தாலும் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். பிறப்பு விகிதம் 1950-51-இல் ஆயிரத்துக்கு 39.9 என்ற நிலையில் இருந்தது தற்பொழுது அது 29.9 என்ற நிலைக்குக் குறைந்துவிட்டது. அதே காலத்தில் இறப்பு விகிதம் 27.4 என்ற நிலையில் இருந்து, 9.6 என்ற நிலைக்குக் குறைந்துள்ளது. இதற்குக் காரணம் அரசின் மக்கள் நல்வாழ்வுப் பணிகள்தாம். ஒரு இந்தியனின் சராசரி ஆயுட்காலம் 58 ஆண்டுக்கு உயர்ந்துவிட்டது. மருத்துவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது. 1950-51-இல் பத்தாயிரத்துக்கு 1.7 என்ற நிலையில் இருந்து 1989-90-இல் 4.4 என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. படித்தவர்களின் எண்ணிக்கை இந்தியா குடியரசு நாடாகிய பொழுது நூற்றுக்கு 16.7 என்ற நிலையில் இருந்து தற்பொழுது 52.11 என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. முழு எழுத்தறிவு இயக்கத்தின் வாயிலான படித்தவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயரும் என்று நம்பப்படுகிறது.

ஒப்பிடுதல் என்ற வகையிலே இன்றைய நிலமையை - மோசமான நிலமையை மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சீனாவில் முதல் குழந்தையோடு தன் குடும்பத்தை நடத்திச் செல்வதே போதும் என நினைக்கிறார்கள். இரண்டவாது குழந்தையை இரண்டாம் தரமாக நினைக்கிறார்கள். இவற்றை மக்களுக்குத் தொடர்புடைய சாதனங்களே எடுத்துச் சொல்ல முடியும்.

கூத்து, வில்லுப்பட்டு, நடன நாட்டியங்கள், பேச்சு, பாட்டு, நாடகங்கள், கண்காட்சி முதலியவற்றின் மூலம் 'அளவான குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம்' என்பதை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

எனவே, செய்திகளை அறிய மக்களைப் படிப்பறிவுடையவராக அரசு மாற்ற வேண்டும். 'அறிவொளி இயக்கம்' இப்பணிக்கு பெரிதும் உதவுகின்றது. பிரச்சாரப் பணியை, முனைப்பு இயக்கத்தை தொய்வின்றிச் செய்து வந்தால், இன்னும் பத்து ஆண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். தொடர்புச் சாதனங்கள் மக்களிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. வளமான வாழ்விற்கு அளவான குடும்பம் என்பது உணரப்பட்டு விட்டது. அளவான குடும்பத்தால் வளமான இந்தியாவை எதிர் நோக்குவோம்.

"மக்கள் தொகைக் கல்வி என்பது மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது மட்டுமன்று. மக்கள் தொகைக் கல்வி என்பது தற்போது உள்ள மக்கள் பெருக்கத்தினால் ஏற்படும் தீமைகளை அறிந்து கொண்டு, வரும் காலத்தில் மக்கள் தொகைக் கட்டுப்படுத்தி நாட்டைச் சீர்படுத்தி, வளப்படுத்துவதே ஆகும்."

சென்னை நகரில் கொசு உற்பத்தியைத் தடுக்க மாநகராட்சி தீவிர நடவடிக்கை



சென்னை மாநகரில் உள்ள கூவம், ஓட்டேரி நல்லா நீர்வழிப் பிரிவுகளில் சென்னை மாநகராட்சி பையோலார்விசைட் என்னும் உயிர்க்கொல்லி மருந்தினைத் தெளித்து, கொசு உற்பத்தியைத் தடுக்கத் தீவிர முயற்சி எடுத்து வருகிறது. மேற்கண்ட பணி சோதனை முயற்சியாக மார்ச் 1993 முதல் நடைபெற்று வருகிறது. இந்த உயிர்க் கொல்லி மருந்து தெளித்த இடங்களில் கொசுத் தொல்லை குறைந்துள்ளது.

குறைந்த நீர் உள்ள இடங்களிலும் உயிர்க் கொல்லி மருந்துகளைத் தெளிப்பதற்கு வசதியாகத் தரமணியில் உள்ள ஏ.எம்.எம். முருகப்பச் செட்டியார் ஆய்வு நிலையம் மிகவும் உறுதியான பாலிதீன் குழாய்களைக் கொண்டு கடலில் மீன் பிடிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட மிதப்பானை குறைந்த நீரிலும் செல்வதற்கு வசதியாகத் திருத்தி வடிவமைத்து சென்னை மாநகராட்சிக்கு வழங்கியது. இந்த மிதுப்பானை உபயோகப்படுத்தி தற்பொழுது நீர்வழிப் பிரிவுகளில் உயிர்க்கொல்லி மருந்து தெளிக்கப்படுகிறது. இதனால் நீர்வழிப் பிரிவுகளில் கொசு உற்பத்தி பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மிதப்பானின் உபயோகம் திருப்திகரமாக உள்ளது. இதேபோல் எல்லா நீர்வழிப் பிரிவுகளில் வளரும் ஆகாயத்தாமரைச் செடிகளை அகற்றவும், கொசு உற்பத்தியைத் தடுக்க மருந்து தெளிக்கவும் தருமபுரி மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களிலிருந்து ஒன்பது பரிசல்கள் சென்னை மாநகராட்சி பெற்றுப் பயன்படுத்தி வருகிறது. பரிசல்கள் ஓட்டுவதற்குத் தினசரி ஊதியத்தில் மீன் பிடி படகு ஓட்டத் தெரிந்தவர்களைப் பணியில் அமர்த்தி உள்ளது. மேற்கண்ட தீவிர நடவடிக்கை காரணமாக நீர்வழிப் பிரிவுகளில் கொசு உற்பத்தி மிக அதிக அளவில் குறையும்.

ஒரு சில வசிப்பிடங்களில் கொசுத் தொல்லைக்குக் காரணம் வீட்டில் உள்ள மொட்டை மாடி, சன்சேடு மற்றும் பயன்படாத பொருட்களான டயர், பூந்தொட்டி, பிளாஸ்டிக் பொருட்கள், ஆட்டுக்கல் போன்றவற்றில் தண்ணீர் தேங்க விடுவதுதான். எனவே, உபயோகப்படுத்தாத பொருட்களை அகற்றவேண்டும் என்றும் தேங்கும் தண்ணீரில் வாரம் ஒரு முறை மண்ணெண்ணெய் தெளித்து கொசு உற்பத்தியைத் தடுக்க வேண்டுமென்றும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

கால்நடைச் செல்வம்

நம் நாட்டிலுள்ள கால்நடை வளம், உலகத்திலேயே அதிகமாக உள்ள ஒன்றாகும். இத்துறையில் 30 கோடி மக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடு பட்டுள்ளார்கள். கால்நடை வளர்ப்பு, பழங்காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது. உலகளவில் நம்நாடு, பால் உற்பத்தியில் 2-வது இடத்தையும், முட்டை உற்பத்தியில் 5-வது இடத்தையும், கோழி இறைச்சி உற்பத்தியில் 21-வது இடத்தையும் பெற்றுள்ளது. இந்தியாவில், தமிழ்நாடு பால் உற்பத்தியில் 7-வது இடத்தையும், முட்டை உற்பத்தியில் 2-வது இடத்தையும், கோழி இறைச்சி உற்பத்தியில் 3-வது இடத்தையும் பெற்று இருக்கின்றது.

நம் நாட்டிலுள்ள கால்நடை மற்றும் கோழிகளின் எண்ணிக்கை விவரங்கள் வருமாறு:

மாடுகள்	192 மில்லியன்
எருமை	70 மில்லியன்
செம்மறியாடு	48 மில்லியன்
வெள்ளாடு	95 மில்லியன்
பன்றி	10 மில்லியன்
குதிரை, முயல் மற்றும் ஒட்டகம்	2 மில்லியன்
கோழி	400 மில்லியன்
மீன் உற்பத்தி	3.3 மில்லியன் டன்
மற்றவை	6 மில்லியன்

இவற்றின் மொத்த மதிப்பு சுமார் 51,900/- கோடியாகும்.

1991-92-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, வேளாண்மைத் துறை, கால்நடை மற்றும் மீன் உற்பத்தியின் அளவு, நம்நாட்டின் மொத்த தேசிய உற்பத்தித் திறன் குறியீட்டு அளவின்படி ரூ.1,62,568/- கோடியாகும். இது, மொத்த தேசிய உற்பத்தித் திறனில் 30 சதவீதமாகும். இதில், நம்நாட்டில் பால் உற்பத்தியின் மூலம் மட்டும் ரூ.24,805/- கோடி வருவாய் கிடைக்கின்றது. இறைச்சி உற்பத்தியின் மூலம் ரூ.6,000 கோடியும், முட்டை உற்பத்தியின் மூலம் ரூ.1,500/- கோடியும், மீன் உற்பத்தியின் மூலம் ரூ.6,600 கோடியும், வருமானம் கிடைக்கின்றது. இதைத்தவிர, நம்நாட்டில் கால்நடைகளில் உற்பத்தியாகும் உப பொருட்கள் மற்றும் கழிவுகள் மூலம் ரூ.18,000/- கோடிக்கு வருமானம் கிடைக்கின்றது.

தமிழகத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை வருமாறு:

மாடு	9.32 மில்லியன்
எருமை	3.12 மில்லியன்
செம்மறியாடு	5.87 மில்லியன்
வெள்ளாடு	5.94 மில்லியன்
பன்றி	0.66 மில்லியன்
கோழி	21.5 மில்லியன்
மீன் உற்பத்தி	1.7 மில்லியன் டன்

தமிழ்நாட்டில் பாலின் மூலம், சுமாராக 1,040 கோடியும், முட்டையின் மூலம் ரூ.75 கோடியும், இறைச்சியின் மூலம் ரூ.300 கோடியும், வருமானம் கிடைக்கின்றது.

இவ்வாறு, நாட்டின் வளத்தைப் பெருக்க, பலவகையில் அடிப்படைக் காரணமாக உள்ள கால்நடைவளம் வளர்ந்து வருகின்றது. ஆசிய கண்டத்திலேயே கால்நடை மருத்துவ அறிவியலுக்காக அமைக்கப்பட்டுள்ள முதல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்தான்.

பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத் துறையின் மூலமாக, பண்ணையாளர்களின் பயனுக்காகப் பல வகையில், தொழில்நுட்ப முறைகள் சென்று அடைய திட்டங்கள் அமலாக்கப்பட்டு வருகின்றன. பயிற்சியின் மூலமாகவும், தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாகவும் அன்றாடம் கண்டறியப்படும் கருத்துக்களைப் பண்ணையாளர்களுககுச் சென்று அடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வானொலி வேளாண் பள்ளி மூலமாகப் பல பயிற்சித் திட்டங்கள், நடத்தப்பட்டு வருகின்றன. வேளாண் காடுகள் பயிற்சியும், பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. தெற்கு ஆசியக் கூட்டமைப்பில் உள்ள கால்நடைத் தொழில் துறையில் பணிபுரியும் வல்லுநர்களுக்கும், மற்றும் அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்க இந்திய அரசு, இந்தப் பல்கலைக் கழகத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

ஆடுகளுக்குச் சத்தான தீவனம்!

நம் நாட்டில் 48 மில்லியன் செம்மறியாடுகள் உள்ளன. இதன் மதிப்பு 1500 கோடியாகும். நம் நாட்டில் ஆண்டுதோறும் 5 மில்லியன் டன் ஆட்டிறைச்சி உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் 5.8 மில்லியன் செம்மறி ஆடுகள் உள்ளன. இது இந்தியாவின் மொத்த எண்ணிக்கையில் 12 சதவீதமாகும். தமிழ்நாட்டில் செம்மறியாடுகள் பொதுவாக இறைச்சிக்காக மட்டும் வளர்க்கப் படுகிறது.

ஆடு வளர்ப்பின் மூலம் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக விவசாயிகள் அரும்பாடுபட்டு வாழ்ந்து வருகின்றார்கள். முக்கியமாகச் செம்மறியாடுகள் கிராமப்புறங்களில் மேய்க்கால் புறம்போக்குத் தரிசு நிலங்கள் அறுவடை ஆன நஞ்சை நிலங்கள், ஏரிதண்ணீர்ப் பிடிப்பு எதிர் நிலங்களில் மழையின் காரணமாக வளர்ந்துவரும் புல்லை மேய்ந்து தன்னுடைய வளர்ச்சி யினாலும், இனப்பெருக்கத்தினாலும் விவசாயிக்கு நடமாடும் வங்கியாக, இருந்து வாழ்வு அளித்து வருகின்றன. இந்த மாதிரி மேய்ச்சல் தரைகள் வைகாசி, ஆனி மாதங்களில் கோடை வறட்சியின் காரணமாகவும், தென் மேற்குப் பருவ மழை சரியான நேரத்தில் வராமல் தாமதமாகும் காலங்களில், மேய்ச்சல் தரையில் புல் உலர்ந்து குச்சிகளாகக் காணப்படுகிறது. அவைகளையும் மேய்ந்து தன் உடலை வளர்த்துக் கொண்டு உயிருடன் வாழும் ஆடுகள் உடல் எடை குறைந்தும் நலிவுற்றும் காணப்படுகின்றன. தீவனக் குறைவின் காரணமாகப் பல நோய்கள் தாக்கவும் ஏதுவாகிறது.

இதனால் செம்மறியாட்டை வளர்க்கும் விவசாயிகள் இம்மாதிரிக் காலங்களில் ஏற்படவிருக்கும் நஷ்டத்தைத் தடுப்பதற்காக வேண்டி, அவசர அவசரமாகத் தரகர்களிடம் குறைந்த விலைக்கு ஆடுகளை விற்க நேரிடுகிறது. இந்த மாதிரி விவசாயிகள் மழைக்குப் பிறகு புதிதாக ஆடுகளை வாங்கி மேய்த்துப் பிழைக்கலாம் என்று நினைத்துக் கையிருப்பாகப் பணத்தை வைத்துக் கொண்டு விவரம் இல்லாத செலவுகள் செய்து, ஆடு வாங்க வேண்டிய தருணத்தில் கையிருப்புக் கரைந்து ஆடுகள் வாங்காமல் மீண்டும் வறுமையில் சிக்கித் தவிக்கின்றார்கள். இம்மாதிரியான சூழ்நிலைகளில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நடைமுறையில் இல்லாத விவசாய உபபொருளாக இருந்து கழிவு செய்ய வேண்டிய புளியங்கொட்டையை நல்ல மாற்றுத் தீவனமாகப் பயன்படுத்தலாம். புளியங்கொட்டை மாவுக் கஞ்சி காய்த்து வைத்து அவற்றிலிருந்து நல்ல பலன்களைப் பெறலாம். புளியங்கொட்டை மாவினை ஆட்டுத் தீவனமாகப் பயன்படுத்தி திருப்பத்தூர், வாணியம்பாடி ஆகிய வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் நல்ல பலன் பெற்று வருகிறார்கள்.

இம்மாதிரி முன்னோடி விவசாயிகளை மற்ற விவசாயிகளும் பின்பற்றி நல்ல பலன் அடையலாம். தமிழகத்தில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பாகப்பகுதியில் புளியங் கொட்டை விவசாய உபபொருளாகவும், மலிவாகவும் கிடைக்கிறது. இப்பொருளைத் திருப்பத்தூர் வட்டாரத்தில் புளியங்கொட்டை மாவாக அரைத்து விற்பனைக்குத் தயார் செய்யும் பல அரவை ஆலைகள் உள்ளன.

புளியங்கொட்டை மாவு உலர்த்தப்பட்ட நிலையில் கீழ்க்கண்ட சத்துடன் கிடைக்கிறது

1. புரதச் சத்து 19.8%

2. ஈதரில் கரையும் கொழுப்புத் தொகுதி 4.7%

3. நார்ச்சத்து 2%

4. கொழுப்பில்லாத தொகுதி 70.3%

5. சாம்பல் சத்து 3.1%

6. ஜீரணிக்கூடிய புரதச்சத்து 12.6%

7. ஜீரணிக்கக்கூடிய ஊட்டச் சத்து 63.9%

புளியங்கொட்டை தீவன முறையினால் கிடைக்கும் நன்மைகள்

1. மிகக் கடுமையான வறட்சிக் காலங்களில் புளியங்கொட்டை மாவு தீவனமாக அளித்து உடல் எடை குறையாமல் பார்த்துக் கொள்ளலாம்.

2. குறுகிய காலத்தில் உடல் எடை அதிகமாக்கி, பண்டிகைக் காலங்களில் விற்று நல்ல லாபம் அடையலாம்.

3. இம்மாதிரி தீவனம் பாலூட்டும் தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட குட்டிகளுக்கு, சத்துவாக அளித்தால் வளர்ச்சி விகிதம் அதிகமாகும்.

4. காலத்தே பருவத்திற்கு வந்து சினையுற்று ஆரோக்கியமான குட்டிகளை ஈனும்.

5. அதிகமாகச் சீரணிக்கக்கூடிய புரதச்சத்து உள்ளதால் நோய் எதிர்க்கும் தன்மையுடன் வளமாக வளரும்.

இதுகுறித்து, அருகிலுள்ள கால்நடை மருந்தகம் மற்றும் களப்பணி நிலைய கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி விவரம் தெரிந்து கொள்ளலாம்.

டாக்டர் சித்ரவேல்,
டாக்டர் வீராகவன்,
டாக்டர் இராமானுஜம்
ஆடு வளர்ப்புத் திட்டம்,
கால்நடை மருத்துவமனை வளாகம்,

சிறு சேமிப்பு-உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

செழிப்பான வாழ்விற்கு
இன்றே முதலீடு செய்வீர்

இந்திரா விகாஸ் பத்திரம்

சிறப்பு அம்சங்கள்

★ 5½ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது
★ 18.18% சாதாரண வட்டி.
★ பத்திரங்கள் ரூ.200/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/- மதிப்புக்களில் பாதி விலைக்குக் கிடைக்கின்றன.
★ விண்ணப்பம் எதுவும் தேவையில்லை.
★ தனி நபரும், நிறுவனங்களும் முதலீடு செய்யலாம்.
★ ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு மாற்றுவது எளிது.
★ முதலீட்டுக்கு உச்ச வரம்பு இல்லை.
★ பத்திரங்களின் எழுத்துக்கள் அழிந்துவிட்டாலோ அல்லது கிழிந்துவிட்டாலோ நகல் பத்திரம் வழங்கப்படும்.
★ பரிசாகவும் அளிக்கலாம்.

சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விபரங்களுக்கு:
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3, தொலைபேசி: 584440.
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2., தொலைபேசி: 849962
மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சல் அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை
சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை சென்னை - 600 006. தொலைபேசி: 8251784/8251685.

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

DIPR/9--/DIS/94

ஆவணம் காப்போம்! அறிவை வளர்ப்போம்!



— ஜெ. ஜெயச்சந்திரன்,
உதவி ஆணையர்,
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்,
எழும்பூர், சென்னை8

'ஆவணங்கள்' என்றால் பொதுவாக அரசு ஆவணங்களையே குறிக்கும். அரசு ஆவணங்கள் 'பொது ஆவணங்கள்' (Public Records) என்று அழைக்கப்படுகின்றன. அரசு நிர்வாகப் பணிகள் காரணமாக உருவாக்கப்படும் ஆவணங்கள் பிற்காலத்தில் வரலாற்று ஏடுகளாகக் கருதப்படுகின்றன. இத்தகைய பொது ஆவணங்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் இடமே ஆவணக்காப்பகம்.

இக்காப்பகத்தில் மிகப் பழைய ஆவணமாகக் கருதப்படுவது 1670ஆம் ஆண்டைச் சார்ந்த 'பொதுத்துறை' ஆவணமாகும். இங்கு கிழக்கிந்திய கம்பெனி ஆவணங்கள், கிரௌன் ஆவணங்கள், தலைமைச் செயலக ஆவணங்கள், வருவாய் வாரிய ஆவணங்கள் எனப் பல்வேறு துறைகளுக்குரிய ஆவணங்களும், டச்சு, டேனிஷ், பெர்சியன், மராட்டி, மோடி மற்றும் தமிழ் மொழிகளிலும் ஆவணங்கள் உள்ளன. ஏறக்குறைய கடந்த 320 ஆண்டு ஆவணங்கள் இங்கே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை முந்தைய ஆட்சி, நம் கலை, கலாச்சாரம், அரசியல் சமூகப் பொருளாதார மாற்றங்கள், அரிய திட்டங்கள் போன்ற பல பொருள்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

இந்த ஆவணக்காப்பகம் உருவாக, முன்பு சென்னைக் கவர்னராக இருந்த "வில்லியம் பெண்டிங்" என்பவரே காரணம். 1805இல் இவர் பல்வேறு துறைகளில் உருவாக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆவண மையம் ஒன்றை கோட்டைச் சதுக்கக் கட்டத்தில் துவக்கினார். இதற்காக நீண்ட அனுபவம் பெற்ற முத்தையா என்ற நம் நாட்டவரை முதலில் ஆவணக்காப்பாளராக நியமித்தார். 1908இல் இந்த ஆவணங்கள் அனைத்தையும் கோட்டையிலிருந்து, புதிதாக எழுப்பப்பட்ட எழும்பூர் கட்டடத்திற்கு மாற்றினார்கள். அன்று முதல் கோட்டையிலுள்ள அரசுத் துறைகளுக்கு தினமும் தேவைப்படும் ஆவணங்களை அனுப்புவது, பணி முடிந்ததும் அவற்றைத் திரும்பப்பெறுவது ஆகியவை முக்கியப்பணியாக இங்கு நடைபெறுகிறது.

இங்கு மாற்றப்பட்ட ஆவணங்கள் யாவும் ஆவணப் பாதுகாப்பிற்காகவே உருவாக்கப்பட்ட ஒன்பது மிகப் பெரிய ஆவண அறைகளில் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆவண அறையின் பரப்பளவு சுமார் 4000 சதுர அடியாகும். இவை ஒவ்வொன்றிலும் சுமார் 1,60,000 கன அடி அளவு ஆவணங்களை வைத்து பாதுகாக்கலாம். மூன்று அடுக்குகள் கொண்ட ஒவ்வொரு ஆவண அறையிலும் 350 அடுக்கங்கள் (Racks) உள்ளன. இந்த ஆவண அடுக்கங்கள் துத்தநாகம் பூசப்பட்ட இரும்புத் தகடுகளால் உருவாக்கப்பட்டவை. ஆவண அறையின் தரை கடப்பா கற்களால் உருவாக்கப்பட்டது. சுவர்ப்பகுதி சலவைக் கற்கள் பதிக்கப்பட்டது. ஆவணங்கள் பூச்சிகளால் தாக்கப்படாமல் இருக்கவும், காற்று வசதிக்காகவும், போதிய வெளிச்சத்திற்காகவும் ஒவ்வொரு ஆவண அறையிலும் சுமார் 100 ஜன்னல்கள் உள்ளன. காற்று, வெளிச்சம் போன்றவை தாராளமாகக் கிடைக்குமாறு இவை அமைக்கப்பட்டுள்ளன.

ஆவணங்களை அறிவியல் முறையில் பாதுகாத்து நிர்வகிப்பது இக்காப்பகத்தின் மற்றொரு முக்கிய பணியாகும். ஆவணங்களை நீண்ட காலம் அப்படியே அவற்றின் தன்மை கெடாமல் வைத்திருப்பது மிகவும் கடினமான பணியாகும். சாதாரணமாக 2030 ஆண்டுகளில் பெரும்பாலும் காகிதம் பழுப்படைந்து உளுத்து வீணாகிவிடும் தன்மை படைத்தது. நவீன பாணியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தால் மட்டுமே அவற்றை கெட்டுப்போகாமல் பல ஆண்டுகள் பாதுகாக்க இயலும். இவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு முதலில் ஆவணங்களின் அமிலத்தன்மை போக்கப்படுகிறது. பின்னர் இந்த ஆவணங்களுக்கு, காஷ்மீரிலிருந்து வரவழைக்கப்பட்ட சிப்பான் துணியை இருபுறமும் ஒட்டி அவற்றின் தன்மை மேம்படுத்தப்பட்டு நீண்ட நாள் உபயோகத்திற்குப் பயன்பட செய்யப்படுகிறது. அமெரிக்க முறையான லேமினேஷன் பாணியிலும் ஆவணங்களுக்குப் பாதுகாப்பு தரப்படுகிறது. இதனால் அவற்றை உபயோகிக்கும் காலமும் அதன் தரமும் நீடித்திருக்க வகை செய்யப்படுகின்றன. தவிர, ஆவணங்களில் சேர்ந்துவிடும் மிக நுண்ணிய உயிர்க் கிருமிகள், வெள்ளை அணுக்கள், பாசி, பூஞ்சக்காளான், கால வேறுபாடுகளால் தோன்றும் பல்வேறு கிருமிகள் முதலியவைகளை அழிக்க ஒரு நவீன இயந்திரம் அமெரிக்காவிலிருந்து வாங்கப்பட்டுள்ளது. அதன் பெயர் 'வேக்குவம் ப்யூமிகேஷன் சேம்பர்ஸ்' என்பதாகும். இந்தச் சேம்பரில் உள்காற்றை நீக்கிவிட்டு, ஒரே நேரத்தில் சுமார் 500 ஆவணக்கட்டுகளை அடுக்கிவைத்து இரசாயனப் புகையூட்டம் செய்யப்படுகிறது. இதனை இரண்டொரு நாள் வைத்திருந்து பின்னர் சேம்பரிலிருந்து ஆவணங்கள் திரும்ப எடுக்கப்பெறுகின்றன. இதனால் புழு, பூச்சிகள் அழிக்கப்பட்டு தாட்களின்

மூலங்கள் கெட்டுப்போகாமல், அடிப்படை பாதுகாப்புப் பணிகள் செய்யப்படுகின்றன.

ஆராய்ச்சிப் பணிக்கு உதவுவது இக்காப்பக முக்கியமான வேலைகளில் ஒன்று. இங்கு வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு வரும் மாணவர்கள், பேராசிரியர்கள் போன்றவர்களுக்கு ஆவணங்கள் வழங்கப்படுகின்றன. பட்ட மேற்படிப்பு முடித்து "எம்.பில்.", "பி.எச்டி." போன்ற ஆராய்ச்சி பட்டம் பெறுவதற்காகவும், ஆராய்ச்சி நூல்கள், கட்டுரைகள் எழுதவும் இங்கு பலர் வருகின்றனர். இத்தகைய ஆராய்ச்சியாளர்கள் குறைந்த கட்டணம் செலுத்தியபின் அனுமதி வழங்கப்படுகின்றது. வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கெனத் தனி ஆராய்ச்சிக் கூடம் இக்காப்பகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 30 ஆண்டுகளுக்கு முந்தைய, இரகசியக் கோப்புகள் உட்பட, அனைத்து அரசு ஆவணங்களும் ஆராய்ச்சிக்கு வழங்கப்படுகின்றன. ஆராய்ச்சி மேற்கொள்பவர்களுக்கு தேவைப்படும் மூல ஆவணங்களின் நகல்கள் ஜெராக்ஸ், மைக்ரோபிலிம் போன்ற இயந்திரங்கள் மூலம் வழங்கப் பெறுகின்றன. ஆராய்ச்சிப் பணிக்கு உதவ ஒரு பெரிய நூலகமும் இங்கே உள்ளது.

இக்காப்பகம் பொதுமக்களுக்கும் பயன்படுகிறது என்பது பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை. அதில் ஒன்று அரசு அலுவல் ரீதியாக வெளியிடப்படும் கெசட் (Gazette) இதழ்களில் உள்ள தேவைப்படும் விஷயங்கள், அதாவது பெயர் மாற்றங்கள், நில ஏற்புகள், அரசின் பல்வேறு துறைகள் சார்ந்த அறிக்கைகள், தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளின் முடிவுகள் போன்ற அச்சிடப்பட்ட விவரங்களின் உண்மை நகல்கள் எழுத்துமூலம் கேட்பவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதற்கு சிறிய கட்டணமும் உண்டு. மற்றொன்று தனிப்பட்ட நபர்களுக்காக அவர்கள் கோரும் விவரங்களை ஆவணங்களிலிருந்து அதில் கண்டவாறு நகல்களாக வழங்குகிறோம். இதற்கும் ஆண்டுக்கு இவ்வளவென்று தேடுகட்டணம் வசூலித்து அதன்பின்பு வழங்கப்படுகின்றன. உதாரணமாக இக்காப்பகத்தில் உள்ள இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கிழக்கிந்திய கம்பெனியர்கள் ஆட்சி, ஆட்சியாளர்கள், தனிப்பட்ட அதன் ஊழியர்கள், அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அல்லது அவர்களது பரம்பரைம்பரைகள் பற்றிய பல்வேறு செய்திகளையும் ஆவணங்களிலிருந்து தொகுத்து வழங்கப்படுகின்றன.

வரலாற்று ஆராய்ச்சி ஒன்று இந்த அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இம்மன்றத்தில் மன்றப் பணிகளுள் ஒன்று ஆராய்ச்சியை ஊக்குவிப்பது. பொதுமக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள் போன்ற பல துறையினரும் இக்காப்பகத்திலுள்ள ஆவணங்களைக்கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரை எழுத அது வாய்ப்பளிக்கிறது.

மேலும், ஆவணங்களைப் பொறுத்தமட்டில் பொது ஆவணங்கள் (Public Records) என்றும், தனியார் ஆவணங்கள் (Private Records) என்றும் பிரிக்கலாம். அரசு ஏற்படுத்தும் ஆவணங்கள் பொது ஆவணங்கள் என்றும், தனி மனிதர்களோ, தனியார் நிறுவனங்களோ உருவாக்கும் ஆவணங்கள் தனியார் ஆவணங்கள் என்றும் கருதப்படுகின்றன. தனியார் ஆவணங்களும் நமது பண்டைய பெருமை, கலாச்சாரம் மற்றும் நம் அரசியல் சமூக பொருளாதார அமைப்புகளில் பங்கு இவற்றை எடுத்துக்கூறவல்லன. இதற்கு மண்டல வரலாற்று ஆவண ஆய்வுக்குழு (Regional Committee for Survey of Historical Records) ஒன்று ஆவணங்களைச் சேகரிப்பதற்காக 1948 முதல் இயங்கி வருகிறது. அப்போது டாக்டர் பாலிகா, எம்.பி. பெரியசாமிதூரன், டாக்டர் மு.வ, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, ராஜா சர் முத்தையா செட்டியார், சத்தியநாத அய்யர் போன்றோர் அதன் உறுப்பினர்களாக இருந்தனர்.

இக்குழு தனியார் வசமுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணங்களை வெளிக்கொண்டு வர பெரு முயற்சி செய்து வருகிறது. இக்குழு பெறும் தனியார் ஆவணங்கள் பற்றிய விவ்ரங்களைப் பட்டியலிட்டு (National Register of Private Records) தேசிய தனியார் ஆவணங்கள் பதிவேட்டில் சேர்ப்பதற்காக புதுடில்லியில் உள்ள தேசிய ஆவணக்காப்பகத்திற்கு அவ்வப்போது அனுப்பப்படுகின்றன.

தனியார் ஆவணங்களை வைத்துள்ளவர்கள் தகுந்த முறையில் அவற்றைப் பராமரிப்பதில் தனிக்கவனம் செலுத்தாமையினால் அவை பழுதடைந்து விடுகின்றன. சில காணாமலும் போய் விடுகின்றன. இதனால் அவற்றில் உள்ள அரிய வரலாற்றுச் செய்திகள் முழுமையான அளவில் வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைக்காமல் போகின்றன. எனவே, இத்தகைய ஆவணங்களைத் தனியார்களிடமிருந்து பெறவும், தக்க முறையில் பாதுகாக்கவும், அழிந்து விடாமல் காப்பாற்றவும் அரசு வரலாற்று ஆவண ஆராய்ச்சிக் குழுவை ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவினர் மேற்கொண்டுள்ள பணியை ஊக்குவிக்கும் பொருட்டு தனி நபர்கள் தங்களிடம் உள்ள வரலாற்றுக்குத் துணைபுரியத்தக்க ஆவணங்கள் தங்களிடம் இருக்குமானால் அவற்றைத் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் ஒப்படைக்கலாம். இதற்கு எந்தவிதமான முன்னேற்பாடுகளும் அவசியமில்லை.

ஆவணக்காப்பகம் அதன் ஆரம்ப காலம் முதல் சுமார் 500க்கும் மேற்பட்ட வெளியீடுகளை அவ்வப்போது வெளியிட்டு வந்திருக்கிறது. இவற்றுள் பழைய ஆவணங்களை அப்படியே அச்சிட்டு வெளியிடப்பட்டதே பெரும்பான்மையானவை. 1765ம் ஆண்டு வரையிலான ஆவணங்களை Reprint in extense—அதாவது, உள்ளது உள்ளபடியே என்ற அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளன. அதன்பிறகு அத்தகைய வெளியீடுகள் நிதி பற்றாக்குறையினால் வெளியிடப்படவில்லை. மூல ஆவணங்களை அச்சுப்படியில் பார்த்துக் குறிப்பெழுதுவது ஆராய்ச்சியாளர்களுக்கு எளிய நடைமுறை. ஆனால், 1765க்குப் பிறகு மூல ஆவணங்களையே ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்துகிறார்கள். இதனால் ஆவணங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளன. இது தவிர்க்க இயலாது Selection from the Records என்றும் ஒருவகை வெளியீடுகள் வந்துள்ளன. இவைகள் பெரும்பாலும் மாவட்ட ஆவணங்கள், போர்ட் செயின்ட் ஜார்ஜ் ஆவணங்களில் காணும் முக்கிய பொருட்களை தனித்தனி தலைப்புகளில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. மாவட்ட விவரச்சுவடி (District Gazeteers) தயாரிக்க ஒரு தனிப்பிரிவு அதன் பதிப்பாசிரியர் தலைமையில் இங்கே செயல்பட்டு வருகிறது. இவற்றைத் தவிர்த்து, காலாண்டு இதழாக "ஆவண அமுதம்" என்ற இதழ் கடந்த சில ஆண்டுகளாக வெளியிடப்படுகிறது. இதில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஆவணத்துறைச் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

சென்னையிலுள்ள தலைமை ஆவணக்காப்பகத்தைத் தவிர்த்து, மாவட்டங்களில் 1982 முதல் கிளை ஆவணக்காப்பகங்கள் தோற்றுவிக்கப்பட்டது. கோவை, கடலூர், மதுரை, சேலம், திருச்சி ஆகிய இடங்களில் இக்காப்பகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இவைகள் மாவட்டங்களிலுள்ள அரசு அலுவலகங்களிலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்று, நிர்வாக முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களைப் பெற்று பாதுகாக்கின்றன. ஆராய்ச்சியாளர்களுக்கும் வழங்குகின்றன. ஆவணக்காப்பகங்களின் பயன்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள ஆண்டுதோறும் "ஆவணக் காப்பக வார விழா" எல்லா ஆவணக் காப்பகங்களிலும் கொண்டாடப்படுகிறது.

ஆவணங்களைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பு என்றாலும், பொதுமக்களும் இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வது மிகவும் அவசியம். நமக்கும் நம் சந்ததியினருக்கும் தொடர்பு தருவதே ஆவணங்கள்தான். இப்போது நமது நாகரிகம் கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம் அனைத்திற்கும் காகித வடிவில்தான் விளக்கம் கொடுத்து வைத்திருக்கிறோம். இவற்றை வரும் தலைமுறையினருக்கும் பாதுகாத்துக் கொடுக்கவேண்டியது நமது கடமை. இவற்றை இழந்தால் திரும்பப் பெற இயலாது.

"ஆவணம் காப்போம் அறிவை வளர்ப்போம்"

எஸ்.பி.சி.ஏ. சங்கத்துக்கு மாண்புமிகு முதல்வர் மானிய உதவி!

SPCA (Society for Prevention of Cruelty to Animals) என்னும் சேவை நிறுவனத்திற்குத் தமிழக அரசு இதுவரை ஆண்டு ஒன்றுக்கு 50,000 ரூபாயை மானியமாக வழங்கி வந்தது. SPCA நிறுவனத்தின் செயலாளர் அரசாங்கத்தின் மானியத்தைச் சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்று விலங்கினங்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை நீக்குவதற்காகப் பாடுபடும் இந்தச் சேவை நிறுவனத்திற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ஆண்டு மானியத் தொகை 50,000 ரூபாயை உயர்த்தி, 1994-95ஆம் ஆண்டிற்கு 2 இலட்சம் ரூபாயாக வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்.

எலும்புச் சிதைவு நோயைக் குணப்படுத்த ப்ளோரைடு சிகிச்சை!

''ஆஸ்டியோபரோசிஸ்'' (Osteoporosis) என்னும் எலும்புச் சிதைவு நோயைக் குணப்படுத்தப் 'ப்ளோரைடு' மற்றும் கால்சியம் சிகிச்சை நன்கு பலனளிக்கிறது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்தின் 'சௌத் வெஸ்டர்ன் மெடிக்கல் சென்ட்டர்' மருத்துவமனையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதுபற்றி அண்மையில் ஆய்வு நடத்தினர். தங்கள் ஆய்வு முடிவுகளை 'தி ஆன்னல்ஸ் ஆஃப் இன்டர்னல் மெடிசின்' என்னும் மருத்துவ இதழில் அவர்கள் வெளியிட்டுள்ளனர். சிதைந்த எலும்புக்குப் பதிலாக ஆரோக்கியமான புதிய எலும்பை வளரச் செய்யக்கூடிய சிகிச்சை முறையைத் தங்களால் கண்டுபிடிக்க முடியும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

'ஆஸ்டியோபரோசிஸ்' என்னும் இந்த எலும்புச் சிதைவு நோய் வயதானவர்களையும், மாதவிடாய் நின்றுபோன பெண்களையுமே பெரும்பாலும் தாக்குகிறது. அமெரிக்காவில் மட்டும் இரண்டரை இலட்சம் பேர் இந்த நோயால் தாக்கப்படுகின்றனர். இந்த நோய் கண்டவர்களின் எலும்புகள் முதலில் சிறுத்துப் போய் பின்பு சிதைந்து போகும். இந்த நோய் முற்றினால், எலும்புகள் கட்டுக் குலைந்துபோய் மரணம் நேரிடக்கூடும்.

இந்த நோய் கண்டவர்களுக்குக் கால்சியம் அதிகமாகக் கொடுப்பதன் மூலமும், 'எல்சிடோன்' என்னும் மருந்தைக் கொடுப்பதன் மூலமும் சிகிச்சையளித்து வருகின்றனர். இந்த மருந்துகள் எலும்புச் சிதைவைத் தாமதப்படுத்துமே தவிர, அந்த நோயைத் தடுக்காது. ஆனால், இந்த நோயாளிகளுக்குப் 'ப்ளோரைடு' கொடுப்பதால் அவர்களுக்கு எலும்பு புதிதாகத் துளிர்க்கிறது. இவ்வாறு அந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் மதுரை மாவட்டம் 1992-93-ம் நிதியாண்டில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட திட்டப் பணிகள்

I ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்

வேலையின் விவரம்	எண்ணிக்கை	செலவின மதிப்பீடு (இலட்சத்தில்)
1. ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்	40	8.426
2. சிறு பாலங்கள் கட்டுதல்	3	1.300
3. கழிப்பறைகள் கட்டுதல்	9	0.855
4. தார்ச் சாலைகள் அமைத்தல்	3	8.540
5. மயானச் சாலை அமைத்தல்	6	0.600
6. ஆதிதிராவிடர் காலனிக்கு அணுகு பாதை அமைத்தல்	6	1.200

II. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

குறியீடு	சாதனை எண்ணிக்கை	கடன் (இலட்சத்தில்)	மானியம் (இலட்சத்தில்)	பயனடைந்தோர் விவரம் ஆ.தி.	இதரர்	பெண்
360	382	16.00	11.498	208	174	124

III. சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம்

பயிற்சி விபரம்	பயனடைந்தோர் எண்ணிக்கை
1. கை அச்சு கோர்த்தல்	8
2. சிம்பிள் வயரிங்	4
3. ரேடியோ டி.வி. மெக்கானிசம்	1
4. கம்ப்யூட்டர் பயிற்சி	1
5. ஸ்கிரீன் பிரிண்டிங்	16
மொத்தம்	30

IV. தேசிய சுளாத் திட்டம்

குறியீடு விவரம்		முடிக்கப்பட்டவை
சாதா சுளா	175	175
போர்டபிள் சுளா	175	175

V. மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

குறியீடு	சாதனை	நிதியுதவி (இலட்சத்தில்)
25	25	1.250

VI. பெண்கள், குழந்தைகள் நலம்

திட்ட விவரம்	நிதி ஒதுக்கீடு	சாதனை
1. மகளிர் சங்க கண்வீண் மதிப்பூதியம் தொகை	10,800	10,800
2. மகளிர் பயிற்சி முகாம் நடத்துதல்	1,200	1,200
3. குழந்தைகள் கண்காட்சி நடத்துதல்	200	200
4. மகளிர் சுற்றுலா அழைத்துச் செல்லல்	440	440
5. சமூகக்கல்வி மையங்களுக்கு, நாளிதழ் வாங்குதல்	360	360
மொத்தம்	13,000	13,000

VII. சிறுசேமிப்புத் திட்டம்

குறியீடு	வசூல்செய்து முடிக்கப்பட்டது
155 இலட்சங்கள்	165 இலட்சங்கள்

தமிழ்நாட்டில் பாசன மேலாண்மை

பேராசிரியர் சி.என். பாலசுப்ரமணியன்,
இயக்குநர், பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்,
திருச்சிராப்பள்ளி.

உலகில் உள்ள பாசனம் பெறும் நிலப் பரப்பில் 25 கோடி எக்டேர் நிலப்பரப்பில் முக்கால் பகுதி வளர்ந்து வரும் 22 நாடுகளில் உள்ளது. இந்த நாடுகளில் உள்ள 100 கோடி மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளனர். இந்த நாடுகளின் மேம்பாட்டிற்கு மாபெரும் பாசனத் திட்டங்கள் அமைப்பது எவ்வளவு அவசியமோ, அதே அளவு பாசன வளர்ச்சிக்குத் தேவையான குறைந்த பட்ச தண்ணீரை உரிய நேரத்தில் உரிய இடத்தில் வழங்குவதன் மூலம் பயிர் விளைச்சலைப் பெருக்குவதே [illegible]கும். இவ்வாறு பயிர்களுக்குத் தேவை[illegible]ன தண்ணீர் அளவை அறிய வேண்டுமென்றால், வேளாண்மை, உழவியல் பற்றிய விவரங்கள் தெரிய வேண்டும். தவிர வழங்கப்படும் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பை அறிய மழை, வானியல், நீரளவுகள் பற்றியும் அறிய வேண்டும். இத்தண்ணீரை உரிய காலத்தில், வழியில் எந்த இழப்பும் இன்றி வழங்க மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட கால்வாய்களும், பண்ணை மேம்பாட்டுக் கட்டுமானங்களும் தேவை. இவை எல்லாவற்றையும் விட விவசாயிகளின் கூட்டு முயற்சியும், அக்கூட்டு முயற்சி உருவாக ஏதுவான சமூக-பொருளாதாரச் சூழ்நிலையும் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். இதுபோன்று பல்வேறு அறிவியல் பிரிவுகள் ஒருங்கிணைந்த புதிய அறிவியல் செயல்பாடாகப் பாசன மேலாண்மை கடந்த 10 ஆண்டுகளில் வளர்ந்துள்ளது.

வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், அதன் மூலம் கிராமப்புற வருவாயை உயர்த்தவும், பாசன மேலாண்மைத் தொழில் நுட்பங்களில் பயிற்சி கொடுப்பதற்காக மத்திய அரசின் நீர்வளத்துறை ''நீர்வள மேலாண்மை மற்றும் பயிற்சி''க்கான திட்டத்தை 1983-ஆம் ஆண்டில் தீட்டியது. இத்திட்டத்திற்கு அமெரிக்க அரசின் பன்னாட்டு வளர்ச்சிக்காக நிதி உதவி நிறுவனம் (USAID) உதவியளிக்க முன் வந்தது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களில் 11 பயிற்சி நிலையுங்கள் அமைக்கப் பட்டன.

தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், தமிழக அரசின் தன்னாட்சி நிறுவனமாக 1.4.84-இல் தொடங்கப்பட்டது. இது பாசனத்துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை போன்ற வேளாண்மை வளர்ச்சியில் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும் மற்றும் தமிழகத்தின் விவசாயிகளுக்கும் பாசன மேலாண்மையில் பயிற்சி அளிக்கிறது. விவசாயிகளின் ஒத்துழைப்புடன் பாசன மேலாண்மை நுட்பங்களைச் செயல்படுத்த வகை செய்யும் புதிய செயல் திட்டங்களை நிறைவேற்றுகிறது. வீடியோ, புகைப்படங்கள், புத்தகங்கள் மற்றும் சிறு வெளியீடுகள் வாயிலாகவும் பாசன மேலாண்மைத் தொழில்நுட்பங்களைப் பரவலாக யாவரும் அறிந்து கொள்ள உதவும் பணியில் ஈடுபடுகிறது.

பாசனத்துறையில் அனுபவம் வாய்ந்த தலைமைப் பொறியாளர் ஒருவரை இயக்குநராகக் கொண்டு இந்நிலையம் செயல்படுகிறது. பாசனத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் பணித்துறை, தமிழ்நாடு



அமெரிக்காவில் இந்த ஆண்டு ஜுன் மாதத்தில் நடைபெற் இருக்கும் உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டி, பல விதங்களில் முதன்மை யானதாகும்.

அமெரிக்காவில் உலகக் கோப்பைக் கால் பந்துப் போட்டி நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிக்கான டிக்கெட்கள், இந்தப் போட்டி நடக்க இருப்பதற்குப் பல மாதங்கள் முன்பாகவே விற்றுத் தீர்ந்து போனதும், வரலாற்றிலேயே இது தான் முதல் தடவையாகும். இப்போட்டியின் சில பந்தயங்கள் உள் அரங்கங்களில் (இன்டோர் ஸ்டேடியம்) நடக்கவுள்ளன. இவ்வாறு நடக்க இருப்பதும் இதுவே முதல் தடவையாகும்.

இத்தகவல்களை வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, மற்றும் கரிபியன் நாடுகள் கால் பந்துக் கூட்டமைப்பின் பிரதிநிதி ஸ்காட் கிளேபா என்பவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தகவல் நிலையம் சென்னையில் ஏற்பாடு செய்த "தொலைத் தொடர்பு கருத்தரங்கு" ஒன்றில் பங்கேற்றுப் பேசுகையில் அவர் இத்தகவல்களைத் தெரிவித்தார். சென்னை யிலிருந்து கால்பந்தாட்ட வல்லுநர்கள் கேட்ட கேள்விகளுக்கு, வாஷிங்டனில் இருந்தபடி அவர் பதிலளித்தார்.

வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து அனுபவம் வாய்ந்த வல்லுநர்கள் கொண்ட பேராசிரியர் குழு, இயக்குநரின் கீழ் திறம்படப் பணியாற்றுகிறது. இவர்களைத் தவிர, அண்ணா பல்கலைக்கழகம், அண்ணா மேலாண்மை நிலையம் போன்றவற்றிலிருந்து பாசனம் மற்றும் வேளாண்மைத் துறை வல்லுநர்களின் உதவியையும் அவ்வப்போது இந்நிலையம் பெற்றுக் கொள்கிறது.

வளாகம்

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி நகருக்கு 16 கி.மீ. கிழக்கே துவாக் குடி கிராமத்தில் இந்நிலையம் அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி நகரம் நாட்டின் மற்ற நகரங்களுடன் ரயில், சாலை மற்றும் விமானப் போக்குவரத்துக்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. வட்டாரப் பொறியியல் கல்லூரியிடமிருந்து பெறப்பட்ட 30 ஏக்கர் நிலம் மற்றும் அதற்கு அடுத்து உள்ள பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலம் ஆகியவற்றில் பல்வேறு வசதிகளைக் கொண்ட இந்நிலைய வளாகம் "காவிரி வளாகம்" என அழைக்கப் பெற்று நிறுவப் பெற்றது. இவ்வளாகத்தில் பயிற்சிக் கூடம், ஆய்வுக் கூடம், நூலகம், கலை அரங்கம், வானிலை ஆய்வு நிலையம், கணிப்பொறி மையம், பயிற்சியாளர் தங்கும் விடுதிகள் அலுவலர் குடியிருப்பு முதலியன உள்ளன.

பயிற்சிக் கூடம்

இக்கூடத்தில் 10 பயிற்சி அறைகள் உள்ளன. 48 பேர் அமரும் வசதி படைத்த ஒலி ஒளிக் காட்சி அரங்கும் உள்ளது. பயிற்சிகள் திறம்பட நடத்த உதவும் வீடியோ, திரைப்படம் போன்ற ஒலி ஒளிக் காட்சிகள் காட்டும் கருவிகள் எல்லாப் பயிற்சி அறைகளிலும் உள்ளன.

ஆய்வுக்கூடம்

மண் வள ஆய்வுக் கூடம்

பாசன மேலாண் தொடர்பான நவீனக் கருவிகள் கொண்ட மண்வள ஆய்வு நிலையம் ஒன்று நிறுவப் பெற்று உள்ளது. இக் கூடத்தில் உள்ள கருவிகளில் பெரும்பாலானவை அமெரிக்க நிதி உதவியில் வெளி நாட்டிலிருந்து பெற்றவையாகும்.

பொறியியல் ஆய்வுக்கூடம்

பொறியியல் ஆய்வுக் கூடத்தில் நில மட்டம் அளக்கும் கருவிகள், நீரளவுகள் எடுக்கும் கருவிகள் முதலியன உள்ளன. நீரளவுக் கருவிகளைப் பயன்படுத்தி அளவு எடுக்க வசதியாக மாதிரிக் கால் வாய்களும் உள்ளன.

வானிலை ஆய்வு நிலையம்

தட்ப வெட்ப நிலைகள், மழையளவு போன்ற வானிலை விவரங்களைத் தெரிந்து கொள்ள உதவும் கருவிகள் கொண்ட ஒரு வானிலை ஆய்வு நிலையம் அமைக்கப் பெற்றுள்ளது. நாள்தோறும் வானிலை விவரங்கள் சேகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுகின்றன.

நூலகம்

இந்நிலையத்தின் நூலகத்தில் பாசன மேலாண்மை தொடர்பான ஏராளமான நூல்கள் உள்ளன. பாசன மேலாண்மை சம்பந்தப்பட்ட தேசீய மற்றும் சர்வதேச வெளியீடுகளும், புத்தகங்களும் இந்நூலகத்தில் வரவழைக்கப்படுகின்றன. இந்நூலகத்தில் பாசன மேலாண்மை பற்றிய "வீடியோ" படங்கள் பிரிவு ஒன்றும் உள்ளது.

கணிப்பொறி மையம்

இங்குள்ள கணிப்பொறி மையத்தின் பாசன மேலாண்மைக்குக் கணிப் பொறியைப் பயன்படுத்துவது பற்றி விளக்கும் பாடத் திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் இப்படத் திட்டத்தின் அடிப்படையில் சிறப்புப் பயிற்சியும் வழங்கப்படுகின்றன. தவிர, அனைத்துப் பயிற்சி வகுப்புகளிலும், "பாசன மேலாண்மையில் கணிப் பொறியில் பங்கு" என்பது பற்றி விளக்கப்படுகிறது.

புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா கலையரங்கம்

தேசிய மற்றும் மாநில அளவில் கருத்தரங்குகள், பணியரங்கங்கள், விவசாயிகள் கருத்தரங்குகள் நடத்துவதற்கு வசதியாக ரூ.45 இலட்சம் செலவில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா கலையரங்கம் 29.5.93 அன்று மாண்புமிகு தமிழ்நாடு அரசு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்தத் திறப்பு விழாவில் மாண்புமிகு வேளாண்மைத் துறை, தொழில் துறை மற்றும் கல்வித் துறை அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.



கடமை அடிக்கல்; உரிமை அதன் மீது எழுப்புகின்ற கட்டடம்.

— மூதறிஞர் இராஜாஜி

பயிற்சிகள்

இந்நிலையத்தில் வேளாண்மை வளர்ச்சியில் தொடர்பு கொண்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது புதிய பாசன மேலாண்மை நுட்பங்களையும் அவற்றைச் செயல்படுத்தும் உத்திகளும் விளக்கப்படுகின்றன. வயல்களுக்கு அழைத்துச் சென்று, விவசாயிகளுடன் தொடர்பு கொள்ளச் செய்து, மற்ற நுட்பங்களைச் செயல்படுத்தும் விதம் பற்றி நேர்முகப் பயிற்சி அளிப்பது இந்நிலையத்தின் சிறப்பாகும்.

விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சி தேசீய மற்றும் சர்வதேச வல்லுநர்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது. விவசாயிகளுக்கு அவர்கள் வாழும் கிராமத்திலேயே சென்று செயல் விளக்க முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. களப் பணியாளர்களுக்கும் திருவாரூரில் உள்ள செயல் திட்டப் பிரிவு வளாகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தங்கும் விடுதி

120 பயிற்சியாளர்கள் தங்கும் வகையில் படுக்கை வசதிகள் மற்றும் உணவு விடுதி கொண்ட பயிற்சியாளர் விடுதி ஒன்றும் உள்ளது.

செயல் திட்டம்

காவிரிப் பாசனப் பகுதியின் நடுவில் உள்ள திருவாரூரிலிருந்து இயங்கும் செயல் திட்டப் பிரிவு, இந்நிலையத்தின் முக்கிய அங்கமாகும். இணை இயக்குநர் ஒருவரின் கீழ் பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்கள் குழு ஒன்று செயல்திட்டப் பணியில் ஈடுபட்டுள்ளது. பாசன மேலாண்மை நுட்பங்களையும், புதிய உத்திகளையும் விவசாயிகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்துவதே இப்பிரிவின் பணியாகும். பாசனதாரர் சங்கம் அமைத்து, "குடிமராமத்து" முறையை மீண்டும் செயல்படுத்தி வரும் ஒரு முன்னோடி அமைப்பை உருவாக்கியது செயல் திட்டப் பிரிவின் சாதனை ஆகும்.

தொழில் நுட்ப விரிவாக்கப் பணிகள்

பாசன மேலாண்மைக் கருத்துக்களை மக்களிடையே பரப்பும் பணியில் 'வீடியோ' தயாரிப்பு மற்றும் நூல் வெயியீட்டுப் பிரிவு ஈடுபட்டுள்ளது. கணிப்பொறி உதவியுடன் அச்சிடும் கருவி, 'வீடியோ' தயாரிப்புச் சாதனங்கள், புகைப்படக் கண்காட்சி அமைப்புகள் போன்றவை இப்பிரிவில் உள்ளன. பாசனம் பற்றிய வீடியோ படங்கள், நூல்கள் மற்றும் சிறு வெளியீடுகள் போன்றவை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்படுகின்றன.

பிற பணிகள்:

உலக வங்கி உதவியுடன் செயல்படும் கீழ்கண்ட திட்டங்களில் பயிற்சி நடத்தும் பொறுப்பை இந்நிலையத்திடம் உலக வங்கி ஒப்படைத்துள்ளது.

1. பெரியாறு - வைகை மேம்பாட்டுத் திட்டம்
2. தேசிய நீர் மேலாண்மைத் திட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையிலுள்ள சர்வதேசப் பாசன மேலாண்மை நிலையம் ஆகியவற்றுடன் கூட்டாகப் . பாசன மேலாண்மை நுட்பங்களில் ஆராய்ச்சிப் பணிகளையும் இந்நிலையம் மேற்கொண்டுள்ளது.

மீண்டும் "குடிமராமத்து":

கிராமங்களில் ஏற்கெனவே கிராம சங்கங்கள் பல பொது நோக்கங்களைக் கொண்டு முறைப்படுத்தப்படாமல் வாய்மொழி நெறிகளைப் பின்பற்றிச் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களைப் பாசன நோக்குடன் முறைப்படுத்தி நெறிகளை நியமித்து "கிராமப் பாசனதாரர் சங்கங்களாக" உருவாக்கும் பணியில் இந்நிலையம் தனது செயல் திட்டப் பிரிவினை ஈடுபடுத்தியது. நாகை காயிதேமில்லத் மாவட்டம், திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்ட இந்நிலையத்தின் செயல்திட்டப் பிரிவு, காவிரிப் பாசனக் கடைமடைப் பகுதியில் உள்ள சேத்தியாபுரம் கால்வாய், கங்களாஞ்சேரி கால்வாய் என்ற இரு கால்வாய்களின பாசனப் பகுதியின் மேம்பாடுகளின் ஆய்வுகளை மேற்கொண்டது. அங்கு விவசாயிகளின் ஒத்துழைப்புடன் பல்வேறு சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. வேளாண் உற்பத்தியும் அதிகரித்தது. தொடர்ந்து இப்பணிகள் அருகில் உள்ள மற்ற கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

கிராமப் பகுதிகளில் உள்ள பாசனக் கால்வாய்கள் சரிவரப் பராமரிக்கப் படாததால், தண்ணீர் பாய்வது சிரமமாக இருந்தது. இது குறித்து விவசாயிகளிடம் தங்கள் கிராமத்தில் உள்ள பாசனக் கால்வாய்களைத் தாங்களே பராமரிக்கும் "குடிமராமத்து" முறையைச் சிறு மாற்றங்களுடன் மீண்டும் உருவாக்க ஒரு திட்டம் வழங்கப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு கிராமத்திலும் பாசனதாரர் சங்கம் அமைக்கப்படும். கிராமத்தில் குறிப்பிட்ட வாய்க்கால் பாசனதாரர் அனைவரும் சங்கத்தின் உறுப்பினர்கள். அவர்கள் அனைவரும் தங்கள் நிலப் பரப்பிற்கு ஏற்ப ஏக்கருக்கு ரூ.100/- வீதம் பங்குத் தொகை செலுத்தவேண்டும். இவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தும் நிரந்தர வைப்பு நிதியில் வங்கியில் போடப்படும். பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையமும் ஏக்கருக்கு ரூ.100 வீதம் இந்நிதிக்கு நன்கொடை வழங்கியது. இவ்வாறு சேர்ந்த நிதியில் 75 சதவீதம் ஒரு வைப்பு நிதியாகவும், இதிலிருந்து வரும் வட்டி ஆண்டுதோறும் கால்வாய் பராமரிப்புப் பணிகளுக்கு மட்டும் பயன்படுத்தும் வகையில் விதிகள் அமைக்கப்பட்டன. மீதமுள்ள 25 சதவீதத்திலிருந்து கிடைக்கும் வட்டி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை முதல் வைப்பு நிதியில் சேர்க்கப்படும். இதனால் முதல் வைப்பு நிதி வளர்வதோடு, ஆண்டு தோறும் கிடைக்கும் வட்டியும் கூடுகிறது.

"சலிப்பேரி" கிராமம் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல்கிராமம்.

சலிப்பேரியின் வழி காட்டுதலால் இதுவரை 9 சங்கங்கள் அமைக்கப்பட்டு மொத்தம் 2,770 ஏக்கர் பரப்பிற்கு ரூ.5,54,000 (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்) வைப்பு நிதிகளாக வைக்கப்பட்டுள்ளது. இதனால் கால்வாய்களை எவ்விதச் சிரமமுமின்றி விவசாயிகள் சிறப்பாகப் பராமரிக்கின்றனர். அவர்களுக்குத் தண்ணீரும் இடையூறின்றிக் கிடைக்கிறது. நாகை-காயிதேமில்லத் மாவட்டத்தில் இப்படி உருவான திட்டத்தைக் கண்டபின் தற்போது அரசே முன்வந்து இந்த ஆண்டு ரூ.30 இலட்சத்தை இதுபோன்று தமிழ் நாட்டின் பாசனப் பகுதிகளில் உருவாகும் சங்கங்களுக்கு அரசின் பங்கு நிதியாகத் தர கொள்கை அளவில் ஏற்றுக் கொள்கிறது. தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், இதுபோன்ற சங்கம் அமைப்பது பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி வருகிறது.

நவீன தகவல் தொடர்பு சாதனம்:

காவிரி டெல்டாப் பகுதியில் பொதுப் பணித்துறை தனது கால்வாய் தொலை பேசிச் சாதனத்தைச் செய்தித் தொடர்புச் சாதனமாகப் பயன்படுத்தி வந்தது. இச் சாதனமானது வெள்ளம் மற்றும் புயல் நேரங்களில் அநேகமாகப் பழுதேற்பட்டு, செய்திகளை விரைவாக அனுப்புவது மிகவும் கடினமாகியது. இக்குறையை நீக்க, பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், சுமார் ஒரு கோடி செலவில் அதிக அலை வரிசை தொலைத் தொடர்புச் சாதனத்தைக் காவிரி டெல்டாப் பகுதியில் 133 இடங்களில் நிறுவியுள்ளது. இதனால் வெள்ளம் மற்றும் புயல் வரும் நேரங்களில் தங்கு தடையின்றிச் செய்திகளை அனுப்ப முடிகிறது. தவிர, பயிரிடும் காலத்தில் தண்ணீர் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று பாய்வதைக் கண்காணிக்க முடிவதால், உடனுக்குடன் தண்ணீர் வழங்கலை நேர் செய்ய முடிகிறது.

வானொலி வேளாண்மைப் பள்ளி:

தமிழ்நாடு பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையமும், திருச்சி அகில இந்திய வானொலியும் இணைந்து விவசாயிகள் பயன்பெறும்வண்ணம், 'பாசன மேலாண்மை' என்ற தலைப்பில் 13 பாடங்களை நடத்தியது. பயிரின் நீர்த்தேவை, நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கு நீர் நிர்வாகம், சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள், வறட்சிக் காலங்களில் நீர் மேலாண்மை, நிலத்தடி நீர் நிர்வாகம் போன்ற பாசன மேலாண்மைத் தொழில் நுட்பக் கருத்துக்கள் பயனுள்ள வகையில் எடுத்துக் கூறப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் குறிப்பாக திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, நாகை காயிதேமில்லத் மாவட்ட விவசாயிகள் சுமார் 1800 பேர் வானொலி வேளாண்மைப் பள்ளியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை ஐரோப்பியப் பொருளாதார சமூகம் நிதியுதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் ஏரிகளைப் பழுது பார்த்து கால்வாய்களைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏரிகளைப் பராமரிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபடவேண்டும் என்ற நோக்கத்தில் ஒவ்வொரு ஏரியிலும் ஏரிப் பாசனதாரர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. பாசன சங்க உறுப்பினர்களுக்கு ஏரிகள் பராமரிப்பு, நீர்ப் பங்கீடு, சங்கத்தின் நிர்வாகிகளுக்காக மாநில அளவில் மேலாண்மைப் பயிற்சியும் அளிக்கப் படுகிறது. இதற்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏரிப் பாசனதாரர் சங்கத்திற்குக் குடிமராமத்து நிதி ஏற்படுத்த இதுவரை 3 சங்கத்திற்கு 64,300/- மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழில் வெளியீடுகள்:

பாசன மேலாண்மைத் தொழில் நுட்பம் பரவிட, ஆங்கிலத்திலும், தமிழிலும் புத்தகங்கள் சிறு வெளியீடுகள் ஆகியவற்றை இந்நிலையமே அச்சிட்டு வெளியிடுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு வளர்ச்சிக்கான நிதியுதவி நிறுவனம் ரூபாய் 3 கோடி கடனாகவும், ரூபாய் 2 கோடி மானியமாகவும், மேலும் ரூபாய் 3 கோடி அந்நியச் செலாவணி மானியமாகவும் இந்நிலையத்தை உருவாக்குவதற்கு உதவியது. தமிழக அரசு தனது பங்காக, திட்டக் காலம் முடிய ரூபாய் 4 கோடி முதலீடு செய்தது. அதன் பின் ஆண்டுதோறும் இந்நிறுவனத்திற்கு ரூபாய் 1 கோடி நிதி ஒதுக்குகிறது.

தமிழக அரசு உலக வங்கி உதவியுடன் "நீர்வள ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டம்" ஒன்றை சுமார் ரூபாய் 1400 கோடி செலவில் 1.4.94 முதல் 7 ஆண்டுகளுக்குச் செயல்படுத்த உள்ளது.

இத்திட்டத்தின்படி தமிழ்நாட்டில் உள்ள நீர்வள ஆதாரங்கள் அனைத்தும் விரைவில் ஒரு துறையின் கீழ் வரும். நீர்வளங்களைப் பங்கிடுவது மற்றும் பல்வேறு பணிகளுக்குப் பயன்படுவது போன்றவற்றில் ஒட்டு மொத்தமான நோக்குடன் திட்டங்கள் தீட்டப்படும். பாசன மேலாண்மை, பாசன அமைப்புகளை இயக்குவதிலும் பேணுவதிலும் புதிய அறிவியல் நோக்கு, பாசன அமைப்பின் நிர்வாகத்தில் விவசாயிகளுக்குப் பங்கு போன்றவை இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும். இத்திட்டத்தில் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கு முக்கியப் பங்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 100-க்கு மேற்பட்ட பயிற்சிகளைப் பல்வேறு அலுவலர்களுக்கும் விவசாயிகளுக்கும் அளிக்கும் பொறுப்பு இந்நிலையத்தைச் சார்ந்தது. அதிலும் மிக முக்கியமாகப் பாசனதாரர் சங்கம் அமைப்பதிலும் அவற்றிற்கான விதிமுறைகளை உருவாக்குவதிலும் பாசனதாரர் சங்க நிர்வாகிகளுக்கும் ஏனையோருக்கும் பயிற்சி அளிப்பதிலும் இந்நிலையம் முழுமையாக ஈடுபடும். இதைத் தவிர பாசன மேலாண்மை தொடர்பான "கள" ஆராய்ச்சிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 13 கோடி செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு உலக வங்கி ஒப்புதல் பெறவுள்ளது.

1984-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்நிலையம் 1992-93 வரை 3,700 அலுவலர்களுக்கும், 1260 களப் பணியாளர்களுக்கும், 10576 விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்துள்ளது. பாசன மேலாண்மைப் பயிற்சியில் பிற நிலையங்களுக்கு முன்னோடியாக இந்நிலையம் செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து இதுபோன்ற பயிற்சிகளிலும் வேளாண் பெருமக்களுடன் இணைந்து செயல்படும் திட்டங்களிலும் இந்நிலையம் உற்சாகத்துடன் ஈடுபடும். இந்தப் பயிற்சி நிலையம் மாநில, தேசிய அளவிலான பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதோடல்லாமல், அகில உலக அளவில் கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்படவேண்டும் என்று இந்நிலையத்தின் ஆட்சி மன்றக் குழுத் தலைவரும், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறைச் செயலாளருமான திரு. ஆறுமுகம், இ.ஆ.ப. அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.

பிரார்த்தனை

நமது தாயாகவும் தந்தையாகவும் விளங்கும் இறைவன், நமது பந்த பாசங்களை அறுக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்க.

—சுவாமி விவேகானந்தர்

வள்ளல் பச்சையப்பர்

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றார் ஔவையார்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்றார் வள்ளுவர்.

அழியாச் செல்வமான கல்விக்குத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, அழியாப் புகழைப் பெற்றவர்தான், வள்ளல் பச்சையப்பர்

வள்ளல் பச்சையப்பர் வாழ்க்கை ஏட்டின் சில பக்கங்கள்:

பச்சையப்பர், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், பெரியபாளையத்தில், 1754-ஆம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர், காஞ்சிபுரம் விசுவநாத முதலியார், பூச்சி அம்மாள். பச்சையப்பர் பிறப்பதற்கு முன்பே அவரது தந்தை காலமானார். அப்போது அவர் குடும்பம் பெரும் இன்னலுக்குள்ளானது. தாய், ஐந்தே வயது நிரம்பிய பச்சையப்பரையும், பச்சையப்பரின் இரு சகோதரிகளையும் அழைத்துக் கொண்டு சென்னையை அடைந்தார்.

சென்னையில் சாமி மேஸ்திரி தெருவிலுள்ள ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தார். அந்தக் காலத்தில், ஆங்கில வணிகர்களுக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்தவர் நாராயணப்பிள்ளை. அவரிடம் அடைக்கலம் புகுந்தார் பச்சையப்பரின் தாயார். நாராயணப்பிள்ளை நல்லவர். பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் சிந்தனை உள்ளவர். பச்சையப்பர் கணிதம், ஆங்கிலம், கடிதத் தொடர்பு முதலானவற்றில் தக்க பயிற்சி பெற நாராயணப்பிள்ளை பெரிதும் உதவி புரிந்தார்.

பச்சையப்பர் கல்வியில் கருத்தூன்றிப் படித்தார். ஆங்கிலத்திலும் நல்ல பயிற்சி பெற்றார். முதலில் அவர், ஏற்றுமதி இறக்குமதித் தொழிலில் ஈடுபட்டு, அதில் தம் திறமையைக் காட்டினார். பிறகு நிக்கோலஸ் என்னும் வணிகருக்கு மொழிபெயர்ப்பாளராக அமர்த்தப்பட்டார். கடின உழைப்பு அவரை மேலும் மேலும் உயர்த்தியது.

பச்சையப்பர் கடவுள் பக்தி உள்ளவர். இளம் வயதிலேயே அவர் இறை அன்பரானார். 1774-ஆம் ஆண்டு தமது இருபதாவது வயதில், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் திருமண மண்டபம் கட்ட நன்கொடை வழங்கினார்.

1776-ஆம் ஆண்டில், செங்கல்பட்டு மாவட்டத்தில், கடன் கொடுக்கல் வாங்கல் முதலான கணக்கு வழக்குகளில் வல்லவராக விளங்கினார்.

கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் பல கிராமங்கள் நிலவரித் தொகை செலுத்த வேண்டியிருந்தது. அதைத் தான் செலுத்துவதாகக் கூறி, அதைச் செயல்படுத்தியும் காட்டினார்.

ஆங்கில வணிகர்கள், கர்நாட நவாபுகள் இரு தரப்பினருக்கும் முகவராக இருந்து, தம் திறமையை வெளிப்படுத்தினார்.

பச்சையப்பரின் திறமையை ஆங்கிலேயர் நன்கறிந்தனர். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்குழு உறுப்பினரான ஆர்.ஜே. சல்லிவன் [illegible] முதுநிலை மொழிபெயர்ப்பாளராக இவர் நியமிக்கப்பட்டார்.

1783-ஆம் ஆண்டு, சல்லிவன் படைகளுக்குப் பொருள்கள் வழங்கும் பணியில், அவருக்கு உதவியாளராகப் பொறுப்பேற்றார் பச்சையப்பர்.

எந்த வேலையாக இருந்தாலும், முழு மனதுடன், ஏற்றுத் திறம்படச் செயலாற்றுவதை இயல்பாகவே பெற்றிருந்தார் பச்சையப்பர். சுருங்கச் சொன்னால், ஆங்கிலேயர்களே பாராட்டும் அளவுக்கு அவரது செயல்திறன் இருந்தது.

நாளடைவில், அவர் தஞ்சை மன்னரின் முகவராகப் பணியாற்றினார். அத்துடன் கர்நாடக நவாபின் ஆட்சிக்குட்பட்ட தென்பகுதியிலிருந்த பாளையக்காரர்களுக்கு கணக்கு வழக்குத் தொடர்பான பணிகளில் ஈடுபட்டுப் பெரும்

2/9381

புகழும் பெற்றார்; அத்துடன் பெருஞ் செல்வமும் சேர்த்தார்.

இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட பணிகளில் தம் அறிவையும், செயல் திறனையும் காட்டிக் கடுமையாக உழைத்த தன் காரணமாக, அந்தக் காலத்திலேயே சுமார் 20 இலட்சம் ரூபாய் வரை சேர்த்தார். சென்னை கோமளீஸ்வரன் பேட்டையில் வீடு ஒன்றைக் கட்டினார்.

1787-ஆம் ஆண்டு, தஞ்சை வருவாய்த்துறை ஆணையர் வில்லியம் பெட்ரி என்பவருக்கு பணித்துணைவராக இவர் நியமிக்கப்பட்டார். பச்சையப்பரது திறமை, செல்வாக்கு கண்ட ஆங்கிலேயர் பொறாமையால், அவருக்கெதிராக அரசிடம் புகார் தெரிவித்தனர். ஆனால், விசாரணைக்குப் பிறகு, பச்சையப்பர் நிரபராதி என்று தீர்ப்பாகியது; பச்சையப்பரின் உண்மையான தொண்டு வெற்றி பெற்றது.

பச்சையப்பர் இறை அன்பர் என்று பார்த்தோம். இறைபணி செய்வதில் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார் அவர்.

1791-ஆம் ஆண்டு சென்னை திரும்பினார். சிதம்பரம் சபாநாயகர் கோயிலுக்கு அறக்கட்டளை அமைத்தார் பச்சையப்பர். கோயிலின் கருவறை தூய்மைப்படுத்தப்பட்டது. கீழைக்கோபுர மேற்பகுதி புதுப்பிக்கப்பட்டது. கடவுள் வழிபாட்டுக்கு அன்றாடம் பயன்படும் வகையில் வெள்ளிப் பாத்திரங்களையும் வழங்கினார். ஆனித் திருமஞ்சனத் திருவிழா தொடர்ந்து நடைபெறவும் வழி வகை செய்தார். கோபுரத்தின் நுழை வாயிலில் பச்சையப்பரின் திருவுருவமும், அவருடைய சகோதரி சுப்பம்மாளின் திருவுருவமும் செதுக்கப்பட்டதை இன்றும் பார்க்கலாம்.

1792-இல், மீண்டும் தஞ்சை திரும்பினார் பச்சையப்பர். வழக்கமாகத் தம் பணியைக் கவனித்ததுடன், வங்கிப் பணியையும் கவனித்தார். அந்தச் சமயம் தான் அவருக்குத் திருமணம் நடந்தது. தமது சகோதரியின் மகளை அவர் மணந்து கொண்டார். மகப்பேறில்லாததால், மறுமணம் செய்து கொண்டார். ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையானார்.

அவரது அறப்பணி மேலும் மேலும் தொடர்ந்தது... காலப்போக்கில், அவர் உடல் உருக்குலைந்தது; கும்பகோணம் சென்று சிகிச்சை பெற்றார்.

அந்த நிலையிலும் அவர், தாம் முன்பு எண்ணியிருந்தவாறு சத்திரம் ஒன்றைக் கட்டினார் என்று அறிகிறபோது,

★ இருள் இருள் என்று சொல்லிக் கொண்டு சும்மாயிராதே; ஒரு சிறு மெழுகுவர்த்தியையாவது தேட முயற்சி செய்; உன் வாழ்வு ஒளி மயமானதாகும்.

—கன்ஃபூசியஸ்

"அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்"

என்னும் பாரதியின் பாட்டே நினைவுக்கு வருகிறது.

பச்சையப்பரின் உடல்நிலை மேலும் குன்றியது. இசைமேதை தியாகராசர் முக்தி அடைந்த திருவையாறு எனும் திருத்தலத்தில், 1794-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள், வரையாது வழங்கிய வள்ளல் பச்சையப்பர் இயற்கை எய்தினார்.

அதற்கு முன்னதாக, அதாவது 1794-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 22-ஆம் நாள், கல்விப் பணிக்காகத் தாம் என்னென்ன செய்ய வேண்டும் என்று எண்ணினாரோ, அவற்றையெல்லாம் உயிலாக எழுதி வைத்தார்.

ஆம். அந்நாள் அவர் வாழ்க்கையின் பொன்னாள் ஆகும். உயிர் பிரிவதற்கு முன்பு, தம் உயிர் மூச்சான கொள்கைகளை, இலட்சியங்களை வகுத்துத் தொகுத்துக் கூறினார். அவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தகும் சிறப்பினைப் பெற்றன.

தாம் உயிர் துறப்பதற்கு முன்பாக அதாவது, மார்ச் திங்கள் 24-ஆம் நாள், தம்மை ஆளாக்கிய நாராயணப் பிள்ளைக்கு ஒரு கடிதம் எழுதினார், பச்சையப்பர்.

அந்தக் கடிதத்தில் -

தன் முடிவு நெருங்குகிறது என்றும், தன் விவகாரங்களை நல்லபடி முடித்துத் தருமாறும், ஒவ்வொரு காசும் உரியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்றும் உருக்கமாக எழுதியிருந்தார்.

தனக்கு ஆண் பிள்ளை இல்லை என்கிற குறை அவர் மனத்தில் இருந்திருக்க வேண்டும். அதனால், தாம் பாடுபட்டுத் தேடிச் சேர்த்த செல்வமனைத்தையும் அறப்பணிகளுக்கே எழுதி வைத்தார்.

- திருக்கோயில்களுக்கு,
- சமயச் சார்பான கட்டடங்கள் கட்டுவதற்கு,
- கொடைப் பணிகளுக்கு,
- ஏழை எளிய மக்களுக்கு,
- வடமொழிக் கல்விக் கூடங்களுக்கு,
- பொதுவான அமைப்புகளுக்கு

— இப்படிப் பலவகையில், அவரது செல்வங்கள் பயன்பட, அவர் எழுதி வைத்த உயில் பெரிதும் உதவியது.

1841-இல், உச்ச நீதிமன்றம் ஒரு திட்டத்தை உருவாக்கியது. அதன் விளைவாக, எல்பின்ஸ்டன் பிரபுவின் அரசு விதித்த விதிமுறைகளுக்கு ஏற்ப, பச்சையப்பரின் அறக்கட்டளைகள் அனைத்தையும் நிர்வகிக்க, அறங்காவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

1842-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் சென்னையில், பச்சையப்பர் பெயரால் மையப் பள்ளிக்கூடம் ஒன்று நிறுவப்பட்டது.

1865-ஆம் ஆண்டு, இப்பள்ளி, கோவிந்த நாயக்கர் தொடக்கப்பள்ளி என்னும் பெயரில் அமைந்தது. அப்போது, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியின் முதல் முதல்வராக இருந்து பணியாற்றியவர் திரு பாசில்லவரி என்பவர்.

"ஆசிரியர்களும் மாணவர்களும் தொடர்ந்து பயில வேண்டும்"

— மாண்புமிகு முதல்வர்

பள்ளியிலும் கல்லூரியிலும் ஒருவனுடைய சாதனைகளை வைத்து அவனை மதிப்பிட்டு விடமுடியாது. சிறந்த மாணவர்கள் அனைவரும் பிற்கால வாழ்க்கையில் சிறந்த குடிமகனாகத் திகழ்ந்தது கிடையாது. சிறந்த மாணவர்களாக அல்லாதவர்கள் பிற்காலத்தில் புகழ்மிக்க, மிகவும் மதிக்கத்தக்க குடிமக்களாக வாழ்ந்து காட்டியுள்ளனர். எனவே, பள்ளியை விட்டோ கல்லூரியை விட்டோ செல்லும்போது பெறும் சான்றிதழ்களும் பட்டங்களும், வாழ்நாள் முழுமைக்குமான சான்றிதழ் அல்ல. இது பாடத் திட்டத்திற்கான மதிப்பீடே ஆகும்.

எனவே, ஆசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்களும் தொடர்ந்து பயில வேண்டியது, அத்தியாவசியமாகிறது. விஞ்ஞான முன்னேற்றம் எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும், நம் அறிவு விருத்தியடைந்து கொண்டேயிருப்பதாலும் தொடர்கல்வி மேலும் தேவையாகிறது. மனித சக்திகள் பலவகைப்பட்டவை. அவை சமூகத்தில் மதிப்பு வாய்ந்தவை. ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட திறமைகளைக் கண்டுபிடித்து வளர்க்க வேண்டும். ஒன்றையொன்று சரி செய்கின்ற, ஊக்குவிக்கின்ற விதிகளையும், நடைமுறைகளையும் கலந்து அளிக்கக்கூடிய கல்வியையும் நடைமுறைச் சோதனைகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளையும் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் இதை நாம் செய்யலாம்.

– 'புரட்சித்தலைவியின் முழக்கம்' தொகுதி-1லிருந்து

1880-ஆம் ஆண்டு, டி.எம்.குரிக்ஷானக், முதல்வராயிருந்தபோது, இப்பள்ளி இரண்டாம் நிலைக் கல்லூரி எனும் தகுதி பெற்றது.

1888-ஆம் ஆண்டு, திரு ஜான் ஆதம் முதல்வராயிருந்தபோது, இக்கல்லூரி முதல்நிலைக் கல்லூரி எனும் தகுதிக்கு உயர்ந்தது.

1882-ஆம் ஆண்டு, பச்சையப்பன் கல்லூரியின் பொன் விழா நடந்தது. மேதகு வைசிராய் மார்க்விஸ் ஆஃப்லாண்ட்ஸ்டோன் தலைமையில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1902-ஆம் ஆண்டு, இக்கல்லூரியின் வைர விழா கொண்டாடப்பட்டது.

முதலில் இக்கல்லூரியின் விடுதி, வாடகைக் கட்டடமொன்றில் இயங்கி வந்தது. 1914-இல், சேத்துப்பட்டில் ஆளுநர் பென்ட்லண்ட் பிரபு அவர்கள் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி

1923-இல், இக்கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக மாறியது.

மாணவர் தொகை பெருகப் பெருகப் பழைய கட்டடம் போதுமானதாக இல்லை. ஆகவே, 1939-ஆம் ஆண்டு, டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியாரின் முயற்சியால், சென்னை சேத்துப்பட்டில் புதிய கட்டடத்திற்கான வேலைகள் தொடங்கப்பட்டது.

1942-இல், பச்சையப்பர் அறக்கட்டளையின் நூற்றாண்டு விழா நடந்தது.

விலங்கியல் பட்ட மேல் வகுப்புகளுக்கான தனிக் கட்டடத்தை, துணை வேந்தர் டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்கள் திறந்து வைத்தார்.

1962-இல் வேதியியல் பட்ட மேல் வகுப்புகளுக்கான தனிக் கட்டடத்தை, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் திறந்து வைத்தார்.

5.1.63 அன்று, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள், வள்ளல் பச்சையப்பரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

1963-இல், பகல் நேர மாணவர்க்கான மனமகிழ் மையத்தை, அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் திறந்து வைத்தார்.

1967-இல் பட்ட மேல் வகுப்புகளுக்கான நூலகம் ஒன்றை, அன்றைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கல்லூரியில், மாலை நேர வகுப்புகள் 1971-72 முதல் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு வரலாற்று ஏடுகளைப் புரட்டுகிறபோது, வள்ளல் பச்சையப்பரின் தன்னலமில்லாப் பணியும், கல்விக் கண் திறக்கும் பெருந்தொண்டும் தெற்றெனப் புரிகின்றது.

எளிய குடும்பத்தில் பிறந்து, உழைப்பால் உயர்ந்து, உன்னத நிலையை அடைந்து, கல்விப் பணிக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, தரணிக்கே முன் மாதிரியாக விளங்கிய வள்ளல் பச்சையப்பரின் வழி நடப்போம் எனும் சூளுரை ஏற்போம்!

–பி.வி. கிரி

வீரமாமுனிவர்

டாக்டர் சூ. இன்னாசி
பேராசிரியர் - தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

இத்தாலியத் தமிழர்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுதற்கு முதற் கோடிட்டவர் தமிழகத்தில் பிறந்தவரல்லர்; ஆனால் தமிழராய் வாழ்ந்தவர். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொள்ள வைத்தவர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரல்லர்; ஆனால் அதனைத் தாயாகப் போற்றியவர். இத்தாலியில் பிறந்த அவர், இளமையில் தமிழை அறியாதவர். முப்பதாம் வயதுக்குப் பின் அவர் தமிழகம் வந்தார். முப்பத்தாறு ஆண்டுகட்கு மேல் சமயப்பணி ஆற்றினார். அதற்காகத் தமிழைக் கற்றார். பின்னர் தமிழுக்காகத் தம் அறிவாற்றலைப் பயன்படுத்தினார். எனினும் தம் சமயப்பணிக்கு அவர் குறை வைத்திலர். தம் சமயப் பணியைச் செய்துகொண்டே இருபத்தைந்துக்கு மேற்பட்ட படைப்புகளால் தமிழ்த் தாய்க்குப் பெருமை சேர்த்தார். புத்தம் புதுத்துறைகள் சிலவற்றுக்குக் கால் கோளிட்டார். 'தாமே தமிழ் தமிழே தாம்' எனப் பாராட்டுமளவிற்குச் சிறப்புப் பெற்றார். அவரே 'வீரமாமுனிவர்' எனப் பெயரிய தனிப் பெருந்துறவி. 'கான்ஸ்டண்டைன் ஜோசப் பெஸ்கி' என்னும் இயற்பெயர் கொண்டவர். இயேசு சபைத் துறவியாகத் தமிழகத்தில் பணியாற்றியவர். இன்றமிழ்க் கவிஞராய் ஏற்றம் பெற்றவர். தமிழக வரலாற்றிலேயே பல்துறையிலும் ஆற்றல் சான்ற ஒரே புலவராகப் போற்றப் பெறுபவர்.

காப்பியக் கவிஞர்

கவிதை புனைய அறிந்தோரெல்லாம் காப்பியம்பாட முனைவதில்லை. ஆயிரக் கணக்கான கவிஞருள் ஒரு சிலரே அம் முயற்சியில் ஈடுபடுவர். ஆயினும் தாய் மொழியல்லாப் பிறிதொரு மொழியில் காப்பியம் பாட முற்பட்டோர் வீரமாமுனிவர் தவிர வேறொருவரும் இலர். உலக வரலாற்றிலேயே ஒருவரே அத்தகைய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டவர். அவர் யாத்தளித்த காப்பியமே 'தேம்பாவணி'. 36 படலங்களில் 3,615 பாடல்களாகப் படைத்தளித்தார். இவற்றுக்குள்ளேயே 90 சந்தங்கள் அமைத்துத் தந்தார். தமிழ்க் காப்பியங்களில் இதுவே அதிகமான சந்தங்களைக் கொண்டது. பிற காப்பியங்களை நோக்கச் சில தனித்தன்மைகளை உள்ளடக்கியது; தலைவன் தலைவி

யருக்கிடையே இன்பச் சுவை அமையாமல் பாடப்பட்டது; காப்பியத் தலைவனாம் வளனாரே தூது செல்லுமாறு அமைந்தது; மண்ணுலகில் மட்டுமின்றி விண்ணுலகிலும் தலைவனுக்கு முடிசூட்டு நிகழுமாறு படைக்கப் பட்டது; பல்சமயப் பொதுமைப் பாடல்களாகக் கொள்ளத்தக்க பலவற்றைக் கொண்டது.

"அறக்கடல் நீயே! அருட்கடல்
நீயே! அருங்கரு ணாகரன் நீயே!

திறக்கடல் நீயே! திருக்கடல் நீயே!
திருந்துளம் ஒளிபட ஞான

நிறக்கடல் நீயே! நிகர்கடந் துலகில்
நிலையுநீ! உயிருநீ! நிலைநாள்

பெறக்கடல் நீயே! தாயுநீ!
எனக்குப் பிதாவுநீ! அனைத்துநீ
யன்றோ?"

என்னும் பாடல் அவற்றுள் ஒன்று.

இலக்கியப் பாவலர்

தமிழ் இலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்பது தமிழ்மரபு. அவை யாவை என முதலில் சுட்டிக் காட்டியவர் வீரமாமுனிவர். அவற்றில் சில வகைகளைத் தாமே புனைந்தார். அம்மானை பாடினார். அந்தாதி இயற்றினார். கலம்பகம் தந்தார். கலிப்பா சூட்டினார். பதிகம் பாடினார். வண்ணம் இசைத்தார். மாலை புனைந்தார். கிறித்தவத் திருமறையில் கொண்ட பற்றுறுதியின் காரணமாக உயிர் துறந்த புனிதை கித்தேரியின் வரலாற்றை 1100 கண்ணிகளிலும் 132 விருத்தங்களிலும் பாடியது 'கித்தேரியம்மாள் அம்மானை'. திருக்காவலூரில் தாம் எழுந்தருளுவித்த அடைக்கல அன்னையைத் தலைவியாகக் கொண்டு சிற்றின்பச் செய்தி விரவாமல், 'சமூக உல்லாசம்' என்னும் புதிய துறை ஒன்றைப் புகுத்திப் பாடப்பட்டது. 'திருக்காவலூர்க் கலம்பகம்'. திருமகன் சிலுவைப்பாடுகளை எண்ணிப் புலம்பும் வகையில் நூறு கலித்துறைப் பாக்களால் ஆயது 'அன்னை அழுங்கல் அந்தாதி'. அடைக்கல நாயகியைப் போற்றி 60 கண்ணிகளால் ஆக்கப்பெற்றது 'அடைக்கல மாலை'. அவ்வன்னையைப் புகழ்ந்து பாடப்பெற்றதே 'அடைக்கல நாயகி மேல் வெண்கலிப்பா'. இவ்வாறே 'கருணாம்பரப்பதிகம்' என்னும் பெயரில் பதிகமும் 'வண்ணக் கலைகள்' என்னும் பெயரில் வண்ணமும் பாடியுள்ளார் வீரமாமுனிவர்.

இலக்கண அறிஞர்

தமிழ்மொழியின் இயல்பினை வெளிநாட்டாருக்கு ஐரோப்பிய மொழிகளில் எழுதி உணர்த்த முற்பட்டோர் சிலர். அவருள் வீரமாமுனிவர் குறிப்பிடத்தக்கவர். விரிந்த அளவில் எழுதத்துணிந்த முதல்வர் அவர். அவர் எழுதிய நான்கு இலக்கண நூல்களுள் 'தொன்னூல் விளக்கம்' தமிழில் அமைந்தது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் முந்நூற்றெழுபது நூற்பாக்களுள் அடக்கிக் காட்டியுள்ளது. அதற்கான மூலவுரையையும் அவரே எழுதியுள்ளார். மற்ற மூன்றும் இலத்தீன் மொழியில் எழுதப்பெற்றன. தமிழ்மொழியை செந்தமிழ், கொடுந்தமிழ், 'பேச்சுத் தமிழ்'என இருவகையாகப் பாகுபாடு செய்து இரண்டனுக்கும் தனித்தனியே 'செந்தமிழ் இலக்கணம்', 'கொடுந்தமிழ் இலக்கணம்' என்றவாறு நூல்கள் இயற்றினார். தொன்னூல் விளக்கத்தைச் சுருக்கித் 'திறவுகோல்' - Clavis என்னும் பெயரில் எழுதினார். இது சமயம் பரப்ப வந்த மேனாட்டாருக்காக எழுதப்பெற்றது. வீரமாமுனிவர் முன்னூல்களில் கூறப்படாத சிந்து, வண்ணம் போன்ற இலக்கிய வகைகட்கு இலக்கணம் கூறியிருப்பது அவர்தம் பரந்த நூலறிவையும், நுணுகிய இலக்கண உணர்வினையும் அறிந்துணரத் துணை செய்யும்.

அகராதி முதல்வர்

தமிழ் அகராதித் துறைக்கு முதல்வர் வீரமாமுனிவர். முறையான அகரநிரலுடன் கூடிய தமிழ்முதல் அகராதி அவர் ஆக்கிய 'சதுரகராதியே'. பெயர், பொருள், தொகை, தொடை என நால்வகைப் பகுப்புகளாய் அமைந்த அவ்வகராதியில் பெயரகராதியில் மட்டும் 12, 187 சொற்களுக்குப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. கி.பி. 1732- இல் ஆக்கப்பட்ட இவ்வகராதி கி.பி. 1824 -இல் முழுவதுமாக முதலில் அச்சில் வெளிவந்தது. சதுரகராதி தவிர வேறு இரண்டு அகராதிகளையும் அவர் படைத்துள்ளார். தமிழகத்தில் பணியாற்றிய மேனாட்டுச் சமயத்தொண்டருக்கென அவை படைக்கப் பெற்றன. அவை பேச்சு மொழிக்கெனப் படைக்கப்பெற்ற 'தமிழ்-இலத்தீன் பேச்சுமொழி அகராதி'யும், அத்துடன் இணைந்து காணப்படும் 'போர்ச்சுகீஸ்-இலத்தீன் தமிழ் அகராதி'யும் ஆகும். தற்காலத்தில் தோன்றியுள்ள பிற அகராதிகட்கு எல்லாம் அடிப்படை சதுரகராதி. அவ்வாறே இரு மொழி, பன்மொழி அகராதிகட்கெல்லாம் அடிப்படை தமிழ்-இலத்தீன் பேச்சு மொழி அகராதி. அவ்வகராதியில் ஏறத்தாழ 9000 சொற்களும், போர்த்துகீஸ்-இலத்தீன் தமிழ் அகராதியில் ஏறத்தாழ 4000 சொற்களும் இடம் பெற்றுள்ளன. வீரமாமுனிவரின் பன்மொழியறிவு, தமிழக நாட்டுப்புறத் தொடர்பு, மருத்துவப் புலமை, தமிழ் இலக்கியப் பயிற்சி ஆகியவை இவற்றால் புலப்படும்.

உரைதரு அறிஞர்

இலக்கண நூற்பாக்களின் செய்திகளை எல்லோராலும் எளிதில் புரிந்துகொள்ளத் துணை செய்பவர்கள் உரையாசிரியர்கள். இலக்கண ஆசிரியர்களே அவற்றுக்கான உரைகளையும் எழுதும் வழக்கம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஏற்பட்டது. அவ்வாறு தம் இலக்கணத்திற்குத் தாமே உரையையும் எழுதினார் வீரமாமுனிவர். தொன்னூல் விளக்க உரையில் பத்தொன்பதுக்கும் மேற்பட்ட இலக்கண நூல்களை மேற்கோள் காட்டுகிறார். அவ்வுரையில் ஓர் இடத்தில் திருக்குறளை மேற்கோளாகக் காட்டுங்கால், திருவள்ளுவர் மீது அவர் கொண்டிருந்த அளப்பரிய மதிப்பு புலனாகிறது. "வேதநூல் முதல் எவ்வகை நூலும் கல்லாதுணரவும் சொல்லாதுணர்த்தவும் வல்லவராகி, மெஞ்ஞானத்திருக்கடலாகியவொரு மெய்க்கடவுள் தன் திருவடி மலரே தலைக்கணியெனக் கொண்டேத்தி, இருளிராவிடத்து விளங்கிய ஒரு மீன் போலவும், பாலைச் சுரத்து அரிதலர்ந்த பதுமம் போலவும், மெய்ஞ்ஞானச் சுருதி விளக்காது இருளே மொய்த்த நாட்டின் கண்ணும்

1995 ஜனவரித் திங்களில் தஞ்சையில் நடைபெறவிருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, அன்னைத் தமிழுக்கு அணிகலன் பூட்டிய அரும் பெரும் புலவர்களை நினைவுகூரும் வகையிலும், தண்டமிழுக்கு அவர்கள் ஆற்றிய தமிழ்ப் பணி குறித்தும் சிறப்புக் கட்டுரைகள், தமிழரசில் இதழுக்கொன்றாக இடம் பெறவிருக்கின்றன. அந்த வகையில், முதல் கட்டுரையாக, ஒல்காப்புகழ் பெற்ற தொல்காப்பியம் குறித்த கட்டுரை 1.5.1994 இதழில் இடம் பெற்றது.

இரண்டாவது கட்டுரையாக, 'வீரமாமுனிவர்' இடம் பெறுகிறது. தமிழ் அகராதியின் தந்தை எனப் போற்றப்படும் இவர், 'சதுரகராதி' இயற்றி செகமிசை புகழ்பெற்று விளங்குபவர். உரைநடை வல்லாளர், இலக்கண ஆசிரியர் என்றெல்லாம் போற்றிப் புகழப்படும் வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டு இக்கட்டுரையில் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

அடுத்த இதழில்...

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் எழுதும், 'ஆழ்வார்கள்' குறித்த ஆய்வுக் கட்டுரை இடம்பெறும்.

கடவுள் ஏற்றிய ஞானத் திருவிளக்கு எறிப்பத் தெளிந்து உணர்ந்து ஓங்கும் ஒரு விளக்கென நின்று உயர்ந்த திருவள்ளுவர் உரைத்த பலவற்றொன்றை நான் தெரிந்துரைப்பத்துணிந்தேன்'' என்னும் பகுதி அதனை விளக்கும். வீரமாமுனிவரே இலக்கணத்தோடு உரையும் தரும் மரபிற்கு மூலவராய் இருத்தல் கூடும் என எண்ண இடமிருக்கிறது.

உரைநடை வித்தகர்

தமிழ் உரைநடையில் மறுமலர்ச்சி அண்மைக் காலத்தில் ஏற்பட்டது. பழங்கால உரைநடை, புலவர் பெருமக்கட்கு மட்டுமே விளங்கும். பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் உருவாகிய உரைநடை வளர்ச்சியில் வீரமாமுனிவருக்குப் பெரும் பங்கு உண்டு. தற்கால உரைநடையின் முன்னோடியாக ஆன்றிக் அடிகளாரைச் சுட்டுவர். உரைநடையின் தந்தையெனத் தத்துவபோதகரைக் குறிப்பர். இவர் இருவர்தம் உரைநடைப்போக்கு அக்காலச் சூழலுக்கேற்ப வடசொற்களும் பேச்சு வழக்குகளும் மிகுந்து காணப்படும். அவ்வாறின்றித் தற்காலத் தமிழ் போன்ற நிலையில் 250 ஆண்டுகட்கு முன் எழுதியவர் வீரமாமுனிவர். அதுமட்டுமன்று. எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்பவும், நோக்கத்திற்கேற்பவும், நூலைப் படிப்போருடைய அறிவுத் திறத்திற்கேற்பவும் வெவ்வேறு நிலையில் உரைநடையைக் கையாண்டு வெற்றி பெற்றவர் வீரமாமுனிவர். 'வேத விளக்கம்', 'திருச்சபை பேதகம்', 'பேதகம் மறுத்தல்', லூத்தர் இனத்தியல்பு', 'வேதியர் ஒழுக்கம்', 'பரமார்த்த குரு கதை' ஆகியன அவர் படைத்த உரைநடை நூல்களாகும். தொன்னூல் விளக்க உரை புலவர் பெருமக்களுக்கே உரியது. பரமார்த்த குரு கதை பேச்சு மொழியால் ஆனது. பிறவெல்லாம் தற்காலத் தமிழ் நடையை ஒட்டியது. புணர் மொழிகளைப் பிரித்துப்படித்தால் எல்லோராலும் விளங்கிக் கொள்ளத் தக்கது. வேதியர் ஒழுக்கம் என்னும் நூல் போப்பையரால் பாராட்டப் பெற்றது. இந்நூல்களேயன்றி 'வாமன் சரித்திரம்', 'திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய நிருபம்' போன்றனவும் உரைநடை வடிவில் அமைந்தனவே.

மொழியியல் முனைவர்

மொழியின் இயல்பினை அறிவியற் சிந்தனையோடு அணுகுவதே மொழியியல். அத்துறை இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்தது. ஆயினும் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே இம்மொழியியற் கூறுகளோடு மொழியினை அணுகிய தன்மை வீரமாமுனிவரின் இலக்கண நூல்களால் தெரியவருகிறது. அவர் தம் கொடுந்தமிழ் இலக்கண நூலில், தற்கால விளக்க மொழியியலார் சுட்டுகின்ற ஒலியனியல், உருபனியல், தொடரியல் ஆகியவை மட்டுமன்றி, வரலாற்று மொழியியல், ஒப்பியல் மொழியியல் ஆகியவற்றின் கூறுகளும் அடங்கியுள்ளன. அவ்வாறே தொன்னூல் விளக்க எழுத்ததிகாரமும் மற்ற இலக்கண நெறிகட்கு மாறாக ஒலியனியல் அடிப்படையில் ஓரளவு அமைந்துள்ளது. தற்காலமொழியியலார் சுட்டுகின்ற கலைச்சொற்களைப் பயன்படுத்தவில்லையெனினும் அவற்றின் அடிப்படையிலே செய்திகள் தரப்பட்டுள்ளன. இச்சிந்தனைகளையெல்லாம் 'அறிஞர்கள் தம் நூல்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். ஆதலின் வீரமாமுனிவர் தமிழ் மொழியைத் தற்கால மொழியியல் பார்வையில் நோக்கிய முதல்வர் எனச்சுட்ட இடமுண்டு.

மொழிபெயர்ப்பு மூலவர்

தமிழ் இலக்கியச் சிறப்பை வெளிநாட்டிற்கு எடுத்துக்காட்டிய முதல்வர் வீரமாமுனிவரே. தம் மொழிபெயர்ப்பின் மூலம் திருக்குறளை உலகறியச் செய்தார். அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீனில் மொழிபெயர்த்தார். 'மலர்மிசை ஏகினான்' என்னும் தொடரை வைத்துக் கொண்டு திருவள்ளுவரைச் சமயவாதியாக்கிய நிலைக்கு மாறாக அத்தொடருக்கு 'மலர்களுக்கு அழகினை அளிப்பவர்' என்று பொருள் கூறுகிறார். திருக்குறள் மட்டுமின்றிப் பிற தமிழ் இலக்கியங்களின் செய்யுட்களையும் ஆங்காங்கே இலத்தீனில் தாம் எழுதிய இலக்கண நூல்களில் மேற்கோள்களாகக் கையாளுகிறார். அவற்றுக்கான பொருள்களை இலத்தீன் மொழியில் கூறுவது மொழி பெயர்ப்பைப் போன்றதே. தாம் எழுதிய பரமார்த்த குரு கதையை இலத்தீனிலும் எழுதியுள்ளார். இது சிறுகதையை மொழிபெயர்த்த தன்மையாகும். இவ்வாறே பிற மொழியினின்று தமிழிலும் மொழி பெயர்க்க முனைந்துள்ளார். தாவீதனின் முதல் சங்கீதத்தைச் செய்யுள் வடிவில் செந்தமிழ் இலக்கணத்தில் தமிழில் மொழிபெயர்த்துக் கையாண்டுள்ளார். இவ்வாறு மொழி பெயர்ப்புத் துறையில் முன்னோடியாகவும் வீரமாமுனிவர் விளங்குகிறார்.

சிறுகதை முன்னோடி

தமிழின் மறுமலர்ச்சி சிறுகதை வளர்ச்சியிலும் அடங்கியுள்ளது. சிறுகதையின் தோற்றத்திற்கும் வழிவகுத்தவராக வீரமாமுனிவரைக் கருதுவோர் உண்டு. ''வீரமாமுனிவர் ஊன்றிய 'பரமார்த்த குரு கதை' என்னும் ஆலவிதை வ.வே.சு. ஐயரின் 'மங்கையர்க்கரசியின் காதல்', என்னும் குறுஞ்செடியாக வளர்ந்து இன்று மிகப்பெரிய ஆலமரமாகப் புதுமைப்பித்தன், ரகுநாதன், அழகிரிசாமி, ஜெயகாந்தன் போன்ற முன்னணி எழுத்தாளர்கள் படைப்புக்களென்னும் விழுதுகளைப் பரப்பிப் பரந்து வளர்ந்துள்ளது'' என ஒரு திறனாய்வாளர் கூறுவது ஏற்கத்தக்கதே. உரைநடை வளர்ச்சி சிறுகதை வளர்ச்சிக்கு உரமாகிறது. ஆதலின் உரைநடை வடிவில் தமிழ்நாட்டில் வழங்கி வந்த நாட்டுப்புறக் கதைகளோடு பிற நாட்டுக்கதைகள் சிலவற்றையும் உள்ளடக்கி எட்டுக் கதைகளாகப் பரமார்த்த குரு கதையை எழுதினார். பரமார்த்த குரு அவருடைய சீடர்கள் ஆகியோரின் மடமைச் செயல்களே அவற்றின் கருப்பொருள்கள். கதை மாந்தர்களை உரையாட வைத்து நடப்பியல் நிகழ்ச்சிகளைக் கண்முன் நிறுத்துவது போல் அவற்றைக் காட்டியிருக்கும்போக்கு, சிறுகதைப் போக்கினை ஒத்ததே. தற்காலச் சிறுகதை அளவுக்கு வடிவம் இல்லையெனினும் அக்காலச் சூழலில் அதனைப் படைத்த திறம் அவரைச் சிறுகதை முன்னோடி எனக் காட்டுகிறது.

எள்ளல் நூல் வல்லுநர்

மனிதரிடம் காணப்படும் குறைபாடுகளை நேரிடையாகச் சுட்டிக் காட்டுவது ஒரு முறை. மறைமுகமாகச் சுட்டிக்காட்டித்திருத்த முற்படுவது மற்றொரு முறை. அவ்வாறு சுட்டிக்காட்ட நகைச்சுவை மிகவும் பயன்தரும். அந்நோக்கத்தில் படைக்கப்படுவது எள்ளல் இலக்கியம் (Satire). அவ்வகையில் அமைந்ததாகப் பரமார்த்த குரு கதையைக் கூறுவர். அதற்கு முன் அவ்வகையில் எந்நூலும் தமிழ்மொழியில் வெளி வந்ததாகத் தெரியவில்லை. பாமரரும் படித்தின்புறுமாறு படைக்கப்பட்ட அக்கதைகள் எள்ளல் வகையில் அமைந்ததன் காரணமாக ஐம்பத்து நான்கு மொழிபெயர்ப்புகள் வெளி வந்துள்ளன.

வரலாற்று நூலினர்

தமிழ் இலக்கியப் புதிய வடிவங்களில் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் புதின வகையும் ஒன்றாயிற்று. அவற்றுள் வரலாற்றுப் புதினமும் ஒருவகை. வரலாற்றுப் புதினத்தில் அரசமாந்தர், குரு ஆகியோர் இடம்பெறுவர். தலைமாந்தர் வாழ்விற்குக் குரு துணையாவார். இம்மாந்தர் செய்யுள் வடிவக் காப்பியங்களில் இடம் பெற்றிருப்பினும் உரைநடை வடிவக் கதையாக இடம் பெற்றிலர். வீரமாமுனிவர் படைத்த 'வாமன் சரித்திரம்' அவ்வகை இலக்கியத்தின் தொடக்கம் எனக்கருத இடமுண்டு. தேம்பாவணிக் காப்பியத்தின் ஒரு படலத்தை உரைநடை வடிவாக்கித் தந்திருந்தாலும் அதில் வரும் வாமனும் காப்பியத் தலைவனும் அரசமாந்தர் போன்றும், குரு போன்றும் அமைந்து உள்ளனர். தற்கால வரலாற்றுப் புதினங்களின் அடிப்படையில் அவற்றை நோக்க இயலாது. எனினும் அக்கதை மாந்தர்களும், சரித்திரம் என்ற தலைப்பும் சொல்லும் வரலாற்று உணர்வினைத் தோற்றுவிக்கின்றனர். எனவே வரலாற்றுப் புனிதத்திற்கு வழிகாட்டியாகவும் வீரமாமுனிவர் திகழ்கிறார்.

நாட்டுப்புறவியலாளர்

தமிழகத்தில் பணியாற்றிய மேனாட்டுத் துறவியருள் தமிழகத்தின் பெரும்பான்மைப் பகுதியை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அவரது சமயப்பணி அமைந்தது. ஆதலின் தமிழகக் கிராம மக்களின் வாழ்க்கை முறை, பேச்சுவழக்குகள் ஆகியவற்றை நன்கு அறிந்து நாட்டுப் புறவியலாளராக 'Folklorist' அவர் தோன்றுகிறார். அவரது தேம்பாவணிக் காப்பியத்தில் நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் நிறைந்துள்ளன. புராணவியற் கூறுகள், வீரவியற் கதைகள, விலங்கியற் கதைகள், தேவதைக் கதைக் கூறுகண் கிராமியப் பழமொழிகள், திரும்பத் திரும்ப ஒலிநயப் பாடல்கள் ஆகியவற்றைத் தேம்பாவணியில் காணலாம். கிராமிய மக்களின் வாய்மொழிகளாக வெளிப்படும் உவமைத் தொடர்கள், பழமொழிகள், பேச்சு வழக்குகள் ஆகியவை அவரது தமிழ்-இலத்தீன் பேச்சுமொழி அகராதியில் நிறைந்துள்ளன. நாட்டுப் புறச் செல்வாக்கு அவர்தம் படைப்புகளில் காணப்படும் அடிப்படையில் அவரை ஒரு நாட்டுப்புறவியலாளராகக் கொள்ளலாம்.

பாடநூல் வழிகாட்டி

பழங்காலத் தமிழகக் கல்விமுறை குருகுலக் கல்விமுறை. அக்காலத்தில் அச்சுக்கலை வளரவில்லை. ஏட்டுச் சுவடிகளே பாட நூல்கள். படியெடுப்போர் தவற்றினால் அவற்றுள் ஏற்பட்ட பிழைகள் ஏராளம். இலக்கண, இலக்கியங்களன்றித் தனித்த பாடநூல்கள் அந்நாளில் இல்லை. மொழியைப் பிழையின்றிப் புரிந்து கொள்ளவும் எழுதவும் பாட நூல்கள் துணையாயின. அவ்வகைப் பாட நூல்களைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியவர் வீரமாமுனிவர். தமிழ் கற்க விரும்பிய மேனாட்டாருக்குரிய பாட நூல்களாக எழுதப்பெற்றனவே பரமார்த்த குரு கதையும் வாமன் சரித்திரமும் ஆகும். கடினமான இலக்கண அமைப்புகளைச் சுவையோடு படித்துப் புரிந்து கொள்ளவே நகைச்சுவை இழையோடப் பரமார்த்த குரு கதை படைக்கப்பட்டது. அது பேச்சுத் தமிழ் இலக்கணத்தைப் புரிந்து கொள்ளத் துணையாவது போன்று, செந்தமிழ் அமைப்பைத் தெரிந்து கொள்ளப் பயனாகுமாறு வாமன் சரித்திரம் எழுதப்பெற்றது. இவ்வகையில் பாட நூல்களைத் தமிழகக் கல்விமுறையில் அறிமுகப்படுத்திய பெருமை வீரமாமுனிவரையே சாரும்.

ஆய்வுமுறை நெறிஞர்

தற்காலத்தில் ஆய்வுநூல்களைப் படைக்க முற்படுவோர் சில நெறி முறைகளைப் பின்பற்றுகின்றனர். நூலின்கண் அடங்கியுள்ள செய்திகளைக் குறிப்புத்தலைப்பிட்டு அகர நிரல்படுத்தி நூலின் இறுதியில் கொடுப்பது அம்முறையில் ஒன்று. அதனைப் பொருள் அட்டவணை என்பர். அவ்வட்டவணைமுறை முதன் முதல வீரமாமுனிவரால் அறிமுகப் படுத்தப்பட்டது. தாம். கி.பி. 1728 இல் எழுதிய வேதவிளக்கப் என்னும் நூலின் இறுதியில் இவ்வகைப் பட்டியலைத் தந்துள்ளார். ஆய்வு நூலில் மேற்கோளாக எடுத்தாளப்படுவது, எந்நூலின் எப்பகுதி

★ நெருப்பை நீரால் அணைப்பது போல, மனதில் எழும் கோபத்தைப் புத்தியால் அடக்குபவனே உயர்ந்தவன்.

—இராமாயணம்

★ மக்களைக் காக்கும் தாய் பூமியைக் காட்டிலும் கனமானவள்; தந்தையோ ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தவர்.

—மகாபாரதம்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

இந்த இதழில்...

பத்தாவது நிதிக் கமிஷன் கூட்டம்................ 2

இடைத் தேர்தல் முடிவுகள்........................ 6

குடும்ப நலம் பேணுவோம்!
கவிதை.......................... 9

மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க
ரகுநாத விஜய ரகுநாத
சேதுபதி.. 10

நூல்நயம்.. 12

வைகாசி மாதச் சாகுபடிகள்...................... 13

1400 ஆண்டுகளுக்கு முற்பட்ட
அரிய ஜேஷ்டா சிற்பம்
கண்டுபிடிப்பு.................................... 15

வழிகாட்டும் பெரியார் மாவட்டம்............ 17

செப்புத் திருமேனிகளின் அழிவும்
பாதுகாப்பும்.................................... 19

ஆழ்வார்கள்...................................... 24

கல்வி (கவிதை).................................. 31

உலகை அச்சுறுத்தும் எய்ட்ஸ்.................. 33

சிலம்பாட்டம்.................................... 39

பழ விற்பனையில்
முன்னேற்றம் காண............................ 41

[illegible]றளின் குரல்.................................. 45

மூட்டு வீக்கமும் இதய பாதிப்பும்.............. 47

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (3)

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

தமிழரசு
திருவள்ளுவராண்டு: 2025
வைகாசித் திங்கள்: 18
மலர்: 24 இதழ்: 23
1.6.1994
விலை ரூபாய் மூன்று

அவர்கள் சொன்னார்கள்

★ இலைகளைப் பிய்த்துவிட்டால் மரத்தின் வேரும் காய்ந்துபோகும்; குழந்தைகள் இல்லாவிட்டால் அன்பின் ஊற்றும் வற்றிவிடும்.

—மூதறிஞர் ராஜாஜி

★ நமது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் தூய்மையும் தியாகமும் வீரமும் நிறைந்திருக்க வேண்டும்; அதுதான் வெற்றிகர மான வாழ்வை அமையச் செய்யும்.

—விவேகானந்தர்

★ நல்லது கெட்டதை அனுபவ பூர்வமாகத் தெரிந்துகொண்டு, கெட்டதைத் தவிர்த்து மற்றவர் களுக்கு நல்லது நடக்கும்படி வாழ் வதே ஒழுக்கம் எனப்படும்.

—கீதோபதேசம்

★ எதிலே மீதம் வைத்தாலும் வைக்காவிட்டாலும்- நோய், நெருப்பு, கடன், பகை ஆகியவை களில் மீதம் வைக்கவே கூடாது.

—பெர்னார்டு சப்ரூ

யில் இருந்து எனச் சுட்டுவது ஆய்வு நெறியில் மிகவும் வேண்டப்படுவ தாகும். இவற்றை நடைமுறைப் படுத்தத் தொடங்கியவர் வீரமா முனிவர். சான்றாக விவிலியக் குறிப்பொன்றைத் தம் நூலாகிய பேதகமறுத்தலில் காட்ட முற்படுங் கால், "அருளப்பர் சுவிசேஷத்தின் 18-ஆம் அதிகாரம், 29- ஆம் வசனத்தில்" எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். தம் நூலிலிருந்து மேற்கோள் காட்டும்பொழுது கூட இம்முறையைக் கையாளுகிறார். சான்றாக 'வேதவிளக்கம்' என்னும் நூலிலிருந்து மேற்கோள் காட்டும்பொழுது, "ஆகிலும் இந்த விஷயத்திலே நாம் சொல்லும் தன்மை வேத விளக்கத்தின் 16 ஆம் அதிகாரம் 14 ஆம் பிரிவின் மூன்றாம் நியாயத்தில் காணப்படும்" என்கிறார். இவற்றை நோக்கத் தமிழில் ஆய்வியல் நெறியைப் பின்பற்ற வழிகோலியவர் வீரமாமுனிவர் என உணரலாம்.

தமிழோசை பரப்புநர்

தமிழ்ப் புலவர்களையும், தமிழ் இலக்கியங்களையும் பிறநாட்டாருக்கு விளக்கித் தமிழின் பெருமையைப் பரப்ப முற்பட்டவர் வீரமாமுனிவர். மேற்கோள்களாகத் தம் இலக்கண நூல்களில் முன்னோர் செய்யுள்களை எடுத்தாளுங்கால், அவற்றோடு அச்செய்யுட்களின் ஆசிரியர்களையும், அவர்களைப் பற்றிய விளக்கங் களையும் கூறுகிறார். மேனாட்டா ருக்காக, எழுதிய தமிழ்-இலத்தீன் அகராதியிலும்கூடத் தமிழ்ப் புலவர்கள், தமிழ் நூல்களைச் சுட்டிச் சுருக்க விளக்கங்கள் தந்தது அவர்தம் பெருமைகளை மேனாட்டார் அறிந்து கொள்ள வழிவகுத்தது. தனித்தமிழ் ஆர்வம் வளர்ந்தது இருபதாம் நூற்றாண்டில்தான். ஆனால் அவ்வார்வம் வீரமாமுனிவருக்கே இருந்தது என்பது வியப்பிற்குரியது. தம் இயற்பெயரைத் தமிழில் முதலில் 'தைரிய நாதர்' என மாற்றிக் கொண்டார். காலப்போக்கில் அப்பெயரில் வட மொழிச்சாயல் இருப்பதை அறிந்து அதனையும் மாற்றிப் பின்னர் 'வீரமாமுனிவர்' என அமைத்துக் கொண்டார். எனவே தமிழோசை பரப்புவதிலும் தனித் தமிழ் ஆர்வத்திலும் தமிழ்நாட்டாருக்கும் மேலோங் கித் திகழ்ந்து தாம் ஒரு தமிழராகவே செயலில் காட்டியவர் வீரமாமுனிவர்.

பல்கலை வித்தகர்

இலக்கியங்களை ஒப்பிட்டு நோக்கும் பார்வை தற்காலத்தில் ஒப்பியல் இலக்கியம் என்று தனி ஆய்வாக வளர்ந்துள்ளது. இச் சிந்தனையை வீரமாமுனிவருடைய படைப்புகளில் காணலாம். சான் றாகத் திருவள்ளுவர் பற்றிக் கூறும் பொழுது 'திரு' என்னும் அடை மொழியிட்டு அழைத்தல் பிளாட் டோவை, Divine Plato என அழைப் பதை ஒக்கும் எனச்சுட்டுவார். ஓவியம் வரைவதிலும் விற்பன்னராகத் திகழ்ந் துள்ளார். தாம் போற்றிய தேவ அன்னையின் திருவுருவை ஓவியமாக வரைந்து மணிலாவுக்கு அனுப்பி அதன் அடிப்படையில் திருவுருவச் சிலையை அங்கிருந்து அவர் வர வுழைத்ததாகக் கூறுவர். தமிழ் எழுத்துக்களில் ஏற்பட்டிருந்த வரி வடிவக் குழப்பங்களை நீக்கக் கருதி எழுத்துச் சீர்திருத்தம் செய்து தற் பொழுது வழங்கும் தமிழ் எழுத்து வரி வடிவங்கட்குக் காரணராயினார். மருத்துவத் துறையில் அவருக்கிருந்த அறிவை அவருடைய தமிழ்-இலத்தீன் அகராதியின் வழி நன்குணரலாம். மருத்துவ நூல்களும் அவர் எழுதி யிருத்தல் கூடும். அவை நமக்குக் கிட்டில. தற்பொழுது அவர் பெய ரால் வழங்குவன நம்புவதற்குரியன வல்ல. கிறித்துவ சமயத்தைத் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப மாற்றியமைக்க முற்பட்டவர் அவர். தத்தவ போதகர், இந்தியமயமாக்க முற்பட்டார் என லாம். அவர் வழியில் நின்று தமிழ் மரபிற்கேற்ப அன்னை மரியைத் தமிழ்ப் பெண்ணாக்கி வெற்றி கண்டவர். சமுதாய உணர்விலும் முன்னேற்றத்திலும் அவர் கவனம் செலுத்தினார் என்பதற்குச் சான் றுகள் உண்டு. இவ்வாறு பல்வகையில் தமிழுக்குப் பெருமை சேர்த்துப் பல்கலைச் செல்வராக, நற்றமிழ் வல்லவராக, தமிழ் நாட்டுணர்வு சமுதாய உணர்வு மிக்கவராக வாழ்ந்த வீரமாமுனிவர் பிறப்பால் இத்தாலி யராயினும், வாழ்வால் தமிழர், செய லால் தமிழர், சிந்தனையால் தமிழரே எனத் துணியலாம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.



அட்டை சொல்லும் கட்டுரை

"தமிழ்நாட்டின் கடன் பாக்கியில், மத்திய அரசு 50 சதவீதத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும்!"

பத்தாவது நிதிக் கமிஷன் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் தொடக்கவுரை

பத்தாவது நிதிக் கமிஷனின் கூட்டம் 30.5.94 அன்று தலைமைச் செயலகத்தில் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.45 மணி வரை நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுடனும், மாநில அதிகாரிகளுடனும் கலந்து கொண்டார்கள். பத்தாவது நிதிக் கமிஷன் சார்பில், அதன் தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்களும், அதன் உறுப்பினர்கள் மற்றும் மத்திய அரசின் மூத்த அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 10வது மாடியில் உள்ள புதிய மாநாட்டுக் கருத்தரங்கு கூட்டத்தில், பத்தாவது நிதிக் கமிஷன் தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்களை முதலில் வரவேற்றார். பின்னர் கூட்டம் துவங்கிய பின்பு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 20 நிமிடங்கள் வரை தனது தொடக்க உரையை ஆற்றினார். தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு தொடர்பான பலவேறு பிரச்சினைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அப்போது அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

திரு. கே.சி. பந்த் தலைமையிலான 10வது நிதிக்குழு, கடினமான சூழ்நிலையில் மத்திய மாநில நிதி உறவுகளை மேம்படுத்த எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில், மாநிலங்களுக்கு நிதி வழங்கும் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாடு மிக அதிகமான மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் ஒன்றாகும். மொத்த நிலப்பரப்பில் 4 சதவிகிதம்தான் தமிழ்நாட்டில் உள்ளது. இதில், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 7 சதவிகிதம் மக்கள் வசிக்கிறார்கள். நகர்ப்புற மக்கள் தொகையைப் பொறுத்த மட்டில், நாட்டின் மற்ற மாநிலங்களுடன் சதவிகித அடிப்படையில் ஒப்பிடுகையில் தமிழகம் 3-வது இடத்தில் உள்ளது. இங்கு வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 9.52 சதவிகிதமாகும். இது நாட்டில் அதிகமான சதவிகிதம் கொண்ட மாநிலங்களில் ஒன்றாகும்.

1987-88-இல், மத்திய திட்டக் குழுவின் நிபுணர் குழு கணக்கீட்டின்படி, தமிழ்நாட்டில் 45.13 சதவிகிதம் மக்கள் ஏழைகள். மாநிலத்தின் நீர் ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. தொலை தூரங்களிலிருந்து வரவழைக்கப்படும் நிலக்கரி மற்றும் இரும்பை நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. வளர்ச்சிக்குச் சவால் விடும் இவ்வளவு இடர்ப்பாடுகளிடையும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் நாங்கள் பெருமைப்படும் அளவுக்குச் சாதனை படைத்துள்ளோம்.

1981-91-ஆம் ஆண்டுகளில், கேரளத்துக்கு அடுத்தபடியாகத் தமிழகம் மக்கட்தொகையைக் கட்டுப்படுத்துவதில் சாதனை புரிந்துள்ளது. சமூகத் துறையில் எங்களது சாதனையை எல்லோரும் அறிவார்கள். 1991-92 மற்றும் 1993-94 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி, திட்டக்குழு ஒப்புதல் அளித்த தொகைக்கு மேல் தமிழ்நாடு அரசு திட்டங்களை நிறைவேற்றி சாதனை படைத்தது. ஏழைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் திட்டங்களில் தமிழக அரசு சமரசம் செய்து கொள்ளவில்லை.

நிர்ணயித்த அளவைவிட, பணவீக்கம் உயர்ந்ததால் ஒன்பதாவது நிதிக் கமிஷனின் பரிந்துரைகள் பயனற்றுப் போய் விட்டன. இதன் காரணமாக, மாநிலங்களின் நிதி நிலை பாதிக்கப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை காரணமாக மாநிலங்களின் பொறுப்புகள் அதிகரித்துவிட்டன.

உற்பத்தி வரி வசூலில் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் பங்கு பல ஆண்டுகளாக அதிகரிக்கவில்லை. தற்போதுள்ள 45 சதவிகிதப் பங்கை 60 சதவிகிதமாக உயர்த்த வேண்டும். பற்றாக்குறை மாநிலங்களுக்கென்று கூடுதலாகப் பங்கீடு அளிப்பதை நிறுத்த வேண்டும். உற்பதி வரி வருமானத்தில் முதல 2 ஆண்டுகளில் 52.5 சதவிகிதப் பங்கும், பின்னர் அடுத்த மூன்றாண்டுகளில் 60 சதவிகிதப் பங்கும் மாநிலத்திற்கு அளிக்க முன்வர வேண்டும்.

தொழில் நிறுவனங்களிடம் வசூலிக்கப்படும் வருமான வரியில் கார்ப்பரேஷன் டாக்ஸ 20 சதவிகிதத்தை மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று 10-வது நிதிக்குழு பரிந்துரை செய்யவேண்டும். ஒப்படை வரி வசூலிக்கும் உரிமையை உடனே வழங்க வேண்டும். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி கூடுதல் கலால் வரியில் மாநில அரசுக்குப் பங்கு அளிக்க



வேண்டும்.

தமிழ்நாடு அதிகமாக வருவாய்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையைக் கட்டுப்படுத்த நாங்கள் அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளோம். இதைச் சரிசெய்ய இன்னும் சற்று காலம் ஆகும். அதுவரை தமிழகத்திற்கு நிதியுதவி அளித்து உதவவேண்டும்.

மதுவிலக்கினால் ஏற்பட்டுள்ள நிதி இழப்பை நிதிக் கமிஷன் கணக்கில் கொள்ள வேண்டும். நிதி இழப்பில் குறைந்தபட்சம் 50 சதவிகித்தையாவது ஈடு செய்ய நிதிக் கமிஷன் சிபாரிசு செய்ய வேண்டும்.

பல்வேறு துறைகளில் அளிக்கப்பட்டுவரும் மானியங்களை நிறுத்துவது கடினம். மின்சார உற்பத்திக்காக நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து இரயில், கப்பல், பிறகு திரும்பவும் இரயில் மூலமாக நிலக்கரி கொண்டுவர வேண்டியுள்ளது. இதற்கான போக்குவரத்துச் செலவு அதிகமாக உள்ளது. இதற்கு மானியம் தருவதை மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இருந்தாலும் தமிழ்நாடு மானியத்தினை தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்த மானியத்தினை மத்திய அரசு தொடர்ந்து வழங்க வேண்டும்.

தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள் நாட்டிலேயே சிறந்த சேவையைச் செய்து வருகிறது. குறைந்த கட்டணத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 1993 டிசம்பரில் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. ஆனால் 1994 பிப்ரவரியில் டீசல் விலை உயர்த்தப்பட்டதால் புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இதைச் சரிசெய்ய சற்றுக் கூடுதல் காலமாகும். பொது மக்களுக்காக, மக்களின் நலனுக்காகச் செய்யப்படும், அத்தியாவசியப் பணியில் லாபத்தை எதிர்பார்ப்பது நல்லதல்ல.

மாநிலங்களின் நிர்வாகத்தை நவீனமயமாக்கிட, அதற்கான தேவையை நிதிக்குழு பரிசீலிக்க வேண்டும். பல்வேறு பிரிவுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மொத்தம் ரூபாய் 3,348 கோடி தேவைப்படுகிறது. இதற்கான விபரங்களைத் தெளிவாக அளித்துள்ளோம்.

தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்த தமிழக அரசு சிறப்பு முயற்சிகள் எடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள். இத்திட்டம் ரூ.427 கோடிக்கு வகுக்கப்பட்டுள்ளது. தற்போது சமீபத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, கடலோரப் பாதுகாப்பு, நெடுஞ்சாலை ரோந்து மற்றும் நெடுஞ்சாலைகளில் சோதனைச் சாவடி அமைத்தல் போன்ற பணிகளுக்காக மேற்கொண்டு ரூபாய் 70 கோடி தேவைப்படுகிறது. ஆகையால் காவல் துறையினை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.500 கோடி தேவைப்படுகிறது.

மேலும், காவல் துறையினரின் வீட்டு வசதித் திட்டத்திற்காக ரூ.240 கோடி தேவைப்படுகிறது. பஞ்சாபிலும், காஷ்மீரிலும் உள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் முன்கூட்டியே தடுப்பு நடவடிக்கை எடுப்பது நல்லது என்று வலியுறுத்த விரும்புகிறேன். இத்திட்டங்களுக்கு விசேஷ நிதி உதவி வழங்கவேண்டும்.

தமிழ்நாடு தொடர்ந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு சென்னை மாநகர் கடினமான தண்ணீர்ப் பற்றாக்குறையால் அவதிப்

பட்டது. இதனைச் சரிசெய்யும் வகையில் ஒரு முன்னேற்றத் திட்டத்தினை உருவாக்க வேண்டும். தொடர்ந்து கடல் கரைப் பகுதிகள் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப் பட்டதால், ரூ.2,500 கோடி நிதிகேட்டு உலக வங்கியின் உதவியை நாடினோம். ஆனால், ஆந்திர மராட்டியத்துக்கு உதவியளிக்கப்பட்டபோது, துரதிருஷ்டவசமாக, தமிழகத்திற்குச் சிறப்பு உதவி அளிக்கப்படவில்லை. ஆகையால், மத்திய அரசின் நிதி யுதவியுடன், தேசிய இயற்கைச் சீற்ற நிதி ஒன்றினை அமைக்க வேண்டும். இயற்கைச் சீற்றத்தினால் வெகுவாகப் பாதிக்கப்படும் நிலையில் இந்த நிதி சிறப்பு உதவியாக வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு மத்திய அரசுக்குத் தரவேண்டிய தற்போதைய கடன் பாக்கியில் 50 சதவிகிதத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

பின்னர் திரு. கே.சி. பந்த் அவர்கள், பத்தாவது நிதிக் கமிஷன் Economic Adviser பல்வேறு விஷயங்கள் குறித்து விளக்கங்களை எடுத்துரைத்தார். பின்பு, பத்தாவது நிதிக் கமிஷன் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களுக்கு, தனது பதில்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறினார். அதன் பின்பு, நிதி ஒதுக்கீடு தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பிற்பகல் 1.45 மணியளவில் இந்தக் கூட்டம் நிறைவு பெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பத்தாவது நிதிக் கமிஷன் தலைவர் திரு. கே.சி. பந்த், அதன் உறுப்பினர்கள் ஆகியோருக்கு, தமிழக அரசின் சார்பில், நினைவுப் பரிசுகளை வழங்கினார். அதேபோல், பத்தாவது நிதிக் கமிஷன் அலுவலர்களுக்கும் நினைவுப் பரிசுகளை வழங்கினார். அதே இடத்தில், அவர்களுக்கெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பகல் விருந்து அளித்தார்.

தற்போது தமிழகத்தில் ஒரு மாபெரும் தார்மீகப் போரையே தொடங்கியுள்ளோம். அது, மது என்ற மாய அரக்கனைத் தமிழகத்தின் மண்ணைவிட்டு அடியோடு அப்புறப்படுத்தும் புனிதப்போர், இந்தப் போரில் முன்னணிப்படை வீரர்களாக நிற்பவர்கள் நமது சிறப்புமிக்க காவல் துறையினர். நாட்டின் நலன் காக்கவும், மக்களைப் பேரழிவிலிருந்து பாதுகாக்கவும் தொடங்கப்பட்டுள்ள இந்தப் புனிதப் போரில் நீங்கள் ஒவ்வொருவரும் கர்மவீரர்களாக முழுமனதோடு பங்கேற்றுச் செயல்பட்டு, இந்த அரசுக்கு மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தருவீர்கள் என்று நம்புகின்றேன். இதுவரை நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் கண்டு பூரிப்படைகின்றேன். இப்புனிதப் பணி தொடரட்டும் -தமிழக ஏழை எளிய மக்கள் முழுமையாக இத்தீமையிலிருந்து விலகட்டும். இப்பணியினை நிறைவேற்றுவதற்கு உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், வசதிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதி அளிக்கின்றேன்.

இன்று பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையே கனத்த மனதுடன் நமது காவலர்கள் பணிபுரிகின்றார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களது வாழ்க்கையை வளமடையச் செய்து, அமைதியான மனதுடன் அவர்களது கடமைகளை ஆற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவது, உள்துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும் என்னுடைய கடமையாகும். நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களை அரவணைத்துப் பாதுகாப்பது இந்த அரசின் கொள்கையுமாகும். அந்த அடிப்படையில், உங்களுக்கு என் இதயத்தில் ஓர் உயர்ந்த இடம் அளித்துள்ளேன். உங்களது உயர்விற்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டுள்ளேன். அவற்றை விரைவில் செயல்படுத்தவும் இருக்கின்றேன் என்று மட்டும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.

இடைத்தேர்தல் முடிவு விவரம்



பெருந்துறைத் தொகுதி

வாக்குப் பதிவு நடைபெற்ற நாள்	: 26.5.1994
வாக்குகள் எண்ணப்பட்ட நாள்	: 28.5.1994
சட்டப்பேரவைத் தொகுதி-எண்	: பெருந்துறை 119
மொத்த வாக்குகள் எண்ணிக்கை	: 1,69,417
பதிவான வாக்குகள்	: 1,22,318
செல்லுபடியான வாக்குகள்	: 1,20,443
செல்லாத வாக்குகள்	: 1,875

வெற்றி பெற்றவர்
திரு. பி. பெரியசாமி (அ.இ.அ.தி.மு.க.)

பெற்ற வாக்குகள் : 55,730

வேட்பாளர் பெயர்	கட்சிவிவரம்	பெற்ற வாக்குகள்
திரு.வாளர்கள்...		
[illegible]ந்தோனிசாமி, எம்.	இந்திய குடியரசுக்கட்சி	13
ஆறுமுகம், என்.கே.	சுயேச்சை	29
இளங்கார்த்தி, இ.கே.	பா.ஜ.க.	754
கணேசன், கே.	சுயே.	76
கந்தசாமி கே.	சுயே.	50
கந்தசாமி, வி.எம்.	சுயே.	23,452
கருத்தபாண்டியன், டி.	சுயே.	51
காந்தி, சி.	இ.தே.கா.	12,371
கிர்ராமக்காரர் கிரிரத்தி ஆனந்தர், ஜி.	சுயே.	41
சதாசிவம், எம்.எஸ்.	சுயே.	14
[illegible]முவேல்ராஜ், ஜி.	சுயே.	63
சின்னதுரை, பி.	சுயே.	88
சின்னபொன்னு வாத்தியார், வி.எம்.	சுயே.	170
சுப்பிரமணியம் வி.எம்.	அ.ம.இ.	1969
செல்வகுமார் பிரபு எல்.	சுயே.	276
தாமு, ஏ.	சுயே.	172
துரைசாமி, ஓ.சி.	சுயே.	267
நல்லசாமி கவுண்டர், கே.எஸ்.	சுயே.	112
நல்லப்பன். டி.கே.	சி.பி.ஐ.	20,449
நாகூர் மீரான் பீர் முகமது, யு.	சுயே.	58
நாச்சிமுத்து, சி.	பா.ம.க.	1,895
டாக்டர் பத்மராஜன், கே.	சுயே.	58
பழனிசாமி, ஓ.சி.	சுயே.	78
பழனிசாமி, ஆர்.	சுயே.	108
பாலசுப்பிரமணியம், எஸ்.	சுயே.	505
பெரியசாமி, பி.	அ.இ.அ.தி.மு.க	55,730
பெருமாள், ஏ.	சுயே.	142
மகேந்திரன், பி.	சுயே.	188
மணி, கே.எம்.	சுயே.	361
முத்துசாமி, கே.	சுயே.	26
முனிராஜ், எம்.	எம்.ஜி.ஆர்.மு.க.	15
ராமசாமி, என்.	சுயே.	28
ராஜன், சி.	சுயே.	446
ராஜா, ஆர்.	சுயே.	35
வரதராஜ், டி.	சுயே.	17
வீரப்ப கவுண்டர், வி.டி.ஆர்.	சுயே.	77
வெள்ளிங்கிரி, கே.ஏ.	சுயே.	238
ஜெயராஜ், கே.எம்.	சுயே.	21

மயிலாப்பூர் தொகுதி

வாக்குப் பதிவு நடைபெற்ற நாள்	:	26.5.1994
வாக்குகள் எண்ணப்பட்ட நாள்	:	28.5.1994
சட்டப்பேரவைத் தொகுதி-எண்	:	மயிலாப்பூர் 13
மொத்த வாக்குகள் எணணிக்கை	:	1,88,193
பதிவான வாக்குகள்	:	1,05,955
செல்லுபடியான வாக்குகள்	:	1,04,947
செல்லாத வாக்குகள்	:	1,008

வெற்றி பெற்றவர்
திரு. வி. பாலசுப்பிரமணியன்
(அ.இ.அ.தி.மு.க.)

பெற்ற வாக்குகள் : 40,756

வேட்பாளர் பெயர்	கட்சிவிவரம்	பெற்ற வாக்குகள்
திருவாளர்கள்...		
அந்தோணி எட்வர்டு	சுயேச்சை	18
அப்பன் எம்.ஆர்.	சுயே.	1,766
டாக்டர் அமான்கான்	சுயே.	21
அரிகிருஷ்ணன். பி.	சுயே.	11
அருள்மணி. எம்	சுயே.	4
ஆனந்தன். எஸ்.	சுயே.	4
இரமேஷ் எம்.சி.	சுயே.	40
இராமஜெயம் என்.பி.	தி.மு.க.	35,021
இராயப்பன். எம்.	சுயே.	23
இராஜகோபாலன். என்.	சுயே.	149
இனாஸ். ஏ.கே.	சுயே.	10
இனியதயாளன். ஜி.	சுயே.	23
உமர்ஹுதாப் கே.ஏ.	சுயே.	12
கணேஷ் கண்ணன் எம்.எஸ்.,	சுயே.	9
கலையரசன் எம்.	சுயே.	20
கிருஷ்ண மூர்த்தி எஸ்.பி.,	சுயே.	26
கீழ்நாமக்காரர் கிரிதாத்தி ஆனந்தர் ஜி.	சுயே.	42
கீர்த்திவாசன் டி.வி.	சுயே.	24
குமரேசன்மணி கே.	சுயே.	36
குமார் டி.எஸ்.	சுயே.	3
குமார் வி.	சுயே.	17
சக்திவேல் ஜி.	சுயே.	7
சந்திரன் டி.	சுயே.	43
சிவகுமார் பி.	சுயே.	233
சிவசங்கர் டி.ஜே.	சுயே.	45
சுந்தர்ராமன் எஸ்.	சுயே.	15
சுந்தர்ராஜன் பி.	சுயே.	910
சுப்பிரமணி எஸ்.பி.	சுயே.	13
சூர்யமூர்த்தி ஆர்.என்.	சுயே.	9
செல்வம் எம்.	சுயே.	6
செல்வராஜ் எஸ்.	பா.ம.க	564
ஞானவேலு ஆர்.	சுயே.	37
தண்டபாணி எம்.	சுயே.	33
தருமன்பத்தர் கே.	சுயே.	24
தாணு எஸ்.	சுயே.	10,471
தியாகராஜன் வி.	சுயே.	75
தியாகராஜன் ஆர்.	இ.தே.கா.	12,436
தீனன் ஐ.	சுயே.	10
நடராசன் எஸ்.	சுயே.	11
நாகூர்மீரான் பீர்முகமது யு.	சுயே.	15
டாக்டர் நிர்மலா அருள் பிரகாஷ்	சுயே.	119
பங்காருசாமி கே.	சுயே.	33
டாக்டர் பத்மராஜன் கே.	சுயே.	10
பரமசிவம் பி.	சுயே.	71
பால்நாடார் பி.	சுயே.	54
பாலசுப்பிரமணியன் வி.	*அ.இ. அ.தி.மு.க.*	*40,756*
புனிதவேலு எம்.	சுயே.	13
பெருமாள் ஏ.	சுயே.	10
மல்லிகாம்மாள் எம்.	சுயே.	12
மழைமேனி பாண்டியன் எஸ்.	சுயே.	56
மன்மதன் எம்.	சுயே.	29
மனக்சந்த் நகார்	சுயே.	11
முருகேசன் யாதவ் ஆர்.	சுயே.	20
ரகுபதி டி.	ஜனதா	1,030
மயிலை ரவி எஸ்.	சுயே.	158
ராமலிங்கம் ஆர்.	சுயே.	24
ராஜூ சி.	சுயே.	18
லோகநாதன் (எ) வையகத்தரசு ஆர்.	சுயே.	8
வரததேசிகன் ஓ.ஏ.,	சுயே.	7
வரதராஜ் டி.	சுயே.	9
வள்ளிவேலன் எஸ்.	சுயே.	15
வாசு டி.	சுயே.	111
வின்செண்ட் ஜோஸ் வி.	சுயே.	10
வீரப்ப கவுண்டர் வி.டி.ஆர்.	சுயே.	8
ஜார்ஜ் (எ) ஜார்ஜ்புஷ்	சுயே.	2[illegible]
ஜகத்ஜோதி	சுயே.	13
ஜெயச்சந்திரநாயக்கர் டி.	சுயே.	8
ஹனீபா எம்.	சுயே.	19

பூத்துவரும் இளமையிலே புதுமையுறும் காதல்
புனிதமுற ஈன்றோர்கள் பொருத்தமுள்ள பருவம்
காத்திருந்து திருமணமே செய்திடுதல் குடும்பம்
காதலது தம்பதிகள் உள்ளமதில் மலர்ந்து
நேத்திரம்போல் மழலைகளை உலகிடையில் படைத்து
நெஞ்சமது மகிழ்ந்திடுதல் குடும்பநலம் ஆகும்;
மாத்திறமை உற்றிட கல்வி, கலை ஊட்டி
மாப்புகழை மக்கள்பெறல் இல்லறத்தின் சிறப்பாம்
மன்னர்களின் காலத்திலே உன்னதமாய் வாழ்ந்த
மகிமையிலே மாந்தரெல்லாம் வாழ்ந்திடுதல் அறிவே
வென்றிடுவர் படைக்களத்தே வீரமகன் போன்று
வேண்டுகின்ற வகையில் வெற்றி விடுத்திடுதல் வேண்டும்
பன்றியைப்போல் குட்டிகளைப் படைத்திடுதல் அருமை
கன்னியரும் காளையரும் காதல்முறை தழுவி
கற்புடனே குடும்பநலம் பேணிடுதல் உயர்வே
தூக்கணாங் குருவியைப்போல் கூடுகட்டி மாற்றார்
துன்பத்திற்குப் பலியாகா தூய்மையுடன் வாழ்தல்
நோக்கமது உயர்ந்தநிலை நுண்ணறிவு படைத்து
நூதனமாய் குடும்பநலம் பேணுதலே முறையாம்;
சாக்கடையில் உதித்துநெளி புழுக்களைப்போல் மனிதன்
சரித்திரத்தில் இடம்பெறுதல் பிறந்தும்பிற வாமை
பூக்களிலே மணமிகுந்த பூவினைப்போல் உலகம்
போற்றிடவே வாழ்ந்திடுதல் பொன்னேட்டின் புகழாம்.
ஆறுகுளம் வழிந்தோடும் நீரைப்பயன் கொள்ள
அணைபோட்டுத் தேக்கியதில் அழகுபயன் பெறல்போல்
கூறுகின்ற இல்லறத்தின் குடும்பநலம் ஓங்க
குடிகளெல்லாம் அரசாங்க கொள்கைபற்றல் வேண்டும்
மாறுபடா அடக்கத்துடன் மனிதஇனம் உயர்ந்த
மகத்துவத்தை எய்திடல் குடும்பநலத் திட்டம்
ஏறுகின்ற இமயமதில் உச்சியினை அடைந்த
இறவாத புகழனைத்தும் எய்தல்இல்வாழ், அழகே.

மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி

- சிவ. இரவீந்திரன்

இந்தியச் சுதந்திரப் போராட்டப்பேரியக்கத்திற்கு முதன் முதலில் விடுதலை விதையினை ஊன்றி கண்ணீரும் செந்நீரும் விட்டு வளர்த்து இன்று மிகப் பெரு விருட்சமாக வளர்ந்தோங்க வழிவகுத்து அதற்கு மூலகாரண கர்த்தாவாக இருந்தவர்தான் முகவை மறவர் சீமையின் இறுதி மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியவர்கள் (1762-1809).

1857-ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகத்திற்கு எழுபது ஆண்டுகட்கு முன்பே ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்ட மறுத்த மாமன்னர் இவர்.

தமிழக அரசால் பேணிக் காக்கப்பட்டு வரும் அரிய ஆவணங்கள், மாவட்ட மான்யுவல்கள், இராணுவ ஆலோசனைத் தொகுப்புகளும் குறிப்பேடுகளும், வருவாய்த்துறை ஆலோசனைத் தொகுப்புக் கோப்புகள், இரகசிய ஆலோசனைத் தொகுப்புகள், பொதுத் தொடர்பு மற்றும் போர்டு ஆலோசனைத் தொகுப்புக்கள் இராணுவ நாட்டாட்சி கடிதத் தொகுப்புக்கள், மற்றும் வருவாய் அரசியல் சம்பந்தமான தீர்வேடுகள் ஆகியவற்றை மூன்றாண்டுகள் தீர்க்கமாக நுணுகி ஆராய்ந்து வரலாற்று ஆய்வாளர், முன்னாள் தாசில்தார் டாக்டர் எஸ்.எம். கமால் டி.லிட்., அவர்கள் 'விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' என்ற உண்மை வரலாற்று நூலினை அழகு மிளிர் தமிழில் யாத்து அளித்துள்ளார்.

மறவர் சீமை மன்னர்களின் கொடி வழிப் பட்டியலின்படி 16வது மன்னர்தான் இந்த ரிபெல் மத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியவர்கள். இவரே இராமநாதபுரம் முகவை மறவீர் சீமையினை தன்னாட்சி செய்த இறுதி மாமன்னரும் ஆவார்.

வாணிகம் செய்ய வந்து வஞ்சக வலை விரித்த வெள்ளைப் பரங்கிக் கும்பினிக் கூட்டத்தை ஆணி வேரோடு பிடுங்கியெறிய வீரக் கங்கணம் பூண்டு வீறு கொண்டு எழுந்தவர்தான் ரிபெல் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி மன்னர். இந்த உன்னத மகாபுருடன், வீரத்தியாகி மறவர் குல வேந்தர் திலகம் நயவஞ்சக பாதகர்களால் தம் வாழ்நாளில் பாதியை - 24 ஆண்டுகள் திருச்சி, சென்னை கோட்டை சிறைகளில் அரச போகத்தைத் துறந்து வெஞ்சிறை வாசத்தில கழித்து தம் இன்னுயிர் நீத்தார்.

அந்நியப் பிரிட்டிஷாரின் ஆதிக்க வெறியையும், அடக்கு முறைகளையும் கண்டு அஞ்சாமல் அவனுக்குத் துணை நின்ற ஆற்காட்டு நவாபின் ஆணைக்கும் அடிபணியாமல் ஆங்கிலேயருக்கு முதன் முதலில் தென் தமிழகத்தில் கப்பம் கட்ட மறுத்து ஆங்கிலேயரின் ஒவ்வொரு கட்டளையையும் துச்சமென மதித்து, இலட்சியம் பண்ணாமல், பாம்பன் நீர் வழியிலேயே அவர்களுக்குப் படிப்பினையைப் புகட்டி, அந்நியப் பரங்கியருக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் பீரங்கித் தொழிற்சாலையினை இரகசியமாகத் தொடங்க ஆயத்தம் அனைத்தும் மேற்கொண்டவர் இம்மாமன்னர்.

தமது உடல், பொருள், ஆவி தன்னலம் அனைத்தும் நாட்டிற்குக் காணிக்கையாக அர்ப்பணித்து, விடுதலைப் போர் வேள்வியில் தன்னை விறகாக்கிக் கொண்டவர் தான் "வீரத்தியாக வேந்தர் திலகம் ரிபெல் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியவர்கள்".

இம்மாமன்னரின் ஆட்சிக் காலத்தில் நிலச் சீர்திருத்தம், நியாய உணர்வுடனும் பரந்த மனப்பான்மையுடனும் தமிழகத்திலேயே முதல் முதலாக மேல் நாட்டுக் கல்விக்கு வித்திட்டு பேராதரவு அளித்து முகவையில் 'சுவாரிட்ஸ்' பள்ளியைத் தொடங்கியதும், ஜவ்வாதுப் புலவர் மற்றும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து தமிழை வளர்த்த பெருமை, வடமொழி வித்தகர்கட்கும் வாழ்க்கைச் சுமையினை நீக்கிய பெருமை, ஏழை எளியோருக்கும், உடல் ஊன முற்றோருக்கும் ஊன்று கோலாக விளங்கிய பெருமை, இறை உணர்வுடன் ஆலயங்களும் அன்ன சத்திரங்களும், ஏற்படுத்தியது - இராமேஸ்வரம் கோயிலின் உலகப் புகழ் பெற்ற மூன்றாம் பிரகாரத்தை முழுமையுறக் கட்டி முடித்தது - மத வேறுபாடின்றி மானியங்கள் வழங்கியது - வாணிகத் துறையில் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகம் குறிப்பாக கைத்தறி நெசவு, மஸ்லின், பட்டு போன்ற துணி வகைகளுக்கும் 18 ஆம் நூற்றாண்டில் கடற் பொருட்களுக்கும் அயல் நாட்டுச் சந்தையினை ஏற்படுத்திக் கொண்டது சுங்க வரித்துறையிலே பாம்பன் நீர் வழியில் வரிசைக் கிரம முறையினை உலகிற்கு வகுத்துக் கொடுத்ததாகக் கூறிக் கொள்ளும் வெள்ளைப் பரங்கியருக்கு 'வேலியே பயிரை மேயக் கூடாது', 'கற்றபின் நிற்க அதற்குத் தக' 'சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும்' என்ற படிப்பினைகளையூட்டியது - முதல் முதலில் பெரியாறு அணைக்கு ஆய்வு மேற்கொண்டு அடித்தளமிட்டது போன்றவற்றை 'விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' என்ற நூலின் வாயிலாக படித்தறிகிறோம்.

"பதினெட்டாம் நூற்றாண்டில், பரங்கியரை எதிர்த்துப் போரிட்டு, 24 ஆண்டுகள் வெஞ்சிறையில் வாடிய 'ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி' நினைவாக விழா நடத்த - சிலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது" என்று மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் மானியக் கோரிக்கைமீது நடந்த விவாதத்துக்குப் பதிலளித்து சட்டப் பேரவையில் உரையாற்றினார். அதனடிப்படையில் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

அந்நியர்கள் நம் மண்ணில், முதன் முதலில் காலெடுத்து வைத்துக்கட்டிய இக்கோட்டையின் கொத்தளத்தில், நம் விடுதலைக் கொடி இன்று பட்டொளி வீசிப் பறப்பது, நம் சுதந்திரத்தின் மகிமையை உலகுக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில், அதற்கு வித்திட்டவர்களின் தியாகங்களைப் பெருமையோடு நினைவுகூர்வது நம் கடமையாகும். இந்த விடுதலைதான் இந்தியாவை ஒரே நாடாக்க உதவியது; அடிமை இந்தியனைச் சுதந்திர மனிதனாக அரியாசனத்தில் அமர்த்தியது.

எனவே, தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிர், உடல் உடமைகளை ஈந்த பல்லாயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் எனது வீர வணக்கத்தை அஞ்சலியாக்குகின்றேன்.

- புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.

களை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கேப்டான் மருந்துடன் கலந்து நேர்த்தி செய்ய வேண்டும். விதைகளின் முளைப்புத் திறனை அதிகரிக்கவும், வீரிய நாற்றுகளைப் பெறவும், விதைகளை முதலில் சுமார் 12 மணி நேரம் நீரில் ஊறவைத்து, பின் 10 பிபிஎம் 1 கிராம் 100 லிட்டர் நீரில் ஜிப்ரலிக் அமிலத்தில் 2 மணி நேரம் ஊறவைத்து விதைக்க வேண்டும்.

நாற்றுக்களைப் பாலித்தீன் பைகளில் உற்பத்தி செய்ய, சம அளவு தொழு உரம், மணல், செம்மண் கலந்து பைகளில் நிரப்ப வேண்டும். ஒரு பைக்கு 5 விதைகள் வீதம் அரை சென்டிமீட்டர் ஆழத்தில் ஊன்ற வேண்டும். நிழற்பாங்கான இடத்தில் பைகளை அடுக்கி பராமரிக்க வேண்டும். பூவாளி கொண்டு நீர் ஊற்ற வேண்டும். விதை நட்டதிலிருந்து 50 நாட்களில் நாற்றுக்களை நடவு செய்யலாம்.

வாழை

வாழைக்கு முதல் உரமிட ஏற்ற தருணம் இது. கன்று நட்ட 3வது மாதத்தில் இடவேண்டிய உர அளவு:

நஞ்சை வாழை

கிராம்/மரம் ஒன்றிற்கு

	தழை	மணி	சாம்பல்
நேந்திரன் இரகத்திற்கு	03	51	50
ரஸ்தாளிக்கு	70	50	130
பூவன், ரொபஸ்டா இரகங்களுக்கு	50	50	130

தோட்டக்கால் வாழை

நேந்திரன் இரகத்திற்கு	50	90	100
மற்ற இரகங்களுக்கு	30	35	110

கன்றிலிருந்து 45 செ.மீ. தூரத்தில் 10 செ.மீ. ஆழத்தில் கன்றைச் சுற்றிக் கிண்ணம் பறித்து உரமிட வேண்டும்.

சாமந்தி நடவு செய்யும் முறை

நிலம் வளமான வடிகால் வசதியுள்ள மண். மார்ச் ஏப்ரல் பங்குனி மாதம் 3,4 முறை உழுது, ஏக்கருக்கு 20 டன் தொழு உரம் அல்லது குப்பை உரமிட வேண்டும். நடவு முறை முந்தைய பயிரின் வேர் செடிகளை நடவுக்குப் பயன்படுத்த வேண்டும். பார்களில் நடுமுன் செடிகளின் வேர்களை செரசான் மருந்தில் 10 கிராம் மருந்தை 10 லிட்டர் நீரில் நனைத்து நடவும். இடைவெளி வரிசையில் 30 செ.மீ. செடிக்கு செடி 30 செ.மீ. ஏக்கருக்குத் தேவையான வேர் செடிகள் 44,000 நட்ட 20 நாட்கள் கழித்து பாடுவாசிகள் நடவு செய்யலாம்.

முல்லை, மல்லிகை மலர்கள்

ஜாதிமல்லி, முல்லை, குண்டு மல்லி ஆகிய பூக்கள், சித்திரை

வைகாசி மாதங்களில் பூக்க ஆரம்பிக்கும். பூக்களை மலர்வதற்கு முன் காலை நேரத்தில் பறிக்க வேண்டும். வாசனை எண்ணெய் தயாரிப்பதற்கு மலர்ந்த பூக்களை காலை 9.00 மணிக்குள் எடுக்க வேண்டும்.



கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத் தொடர்பானவை பற்றி ஆலோசனைகள் அல்லது அறிவுரைகள் பெற விரும்பினால் நேரிலோ அஞ்சல் வழியாகவோ கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

தகவல் தொடர்பு நிலையம்
விரிவாக்கக் கல்வி இயக்ககம்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை - 600007.

1,400 ஆண்டுகளுக்கு முற்பட்ட அரிய ஜேஷ்டா சிற்பம் கண்டுபிடிப்பு!

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், செஞ்சி வட்டம் ஒலக்கூரில் கி.பி. 6-7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அரியதொரு ஜேஷ்டா சிற்பத்தைத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருளாய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது.

தொல்பொருளாய்வுத் துறையின் இயக்குநர் திரு. நடன. காசிநாதன் மற்றும் பூண்டி அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு. துளசிராமன், ஓய்வு பெற்ற தமிழாசிரியர் முத்து எத்திராசன் ஆகியோர் இப்பகுதியில் தொல்லியல் மேற்பரப்பாய்வு மேற்கொண்டபோது இவ்வரிய சிற்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

தமிழகத்தில் கொற்றவை வழிபாடும் ஜேஷ்டை வழிபாடும் பழங்காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. கொற்றவை போர்க் கடவுளாகவும், ஜேஷ்டை நீர்க் கடவுளாகவும் வழிபடப்பட்டிருக்கின்றனர். சக்தியின் பண்டைய திருக்கோலங்களான இவை, காலப்போக்கில் மறைந்து விட்டன. பிற்காலத்தே தோன்றிய சப்தமாதர் வழிபாட்டினால் ஜேஷ்டை வழிபாடும், காளி வழிபாட்டினால் கொற்றவை வழிபாடும் அருகி மறைந்து விட்டன.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை ஜேஷ்டையை 'முதியள்' என்றும், முருகனின் அறுபடை வீட்டைப் பற்றி விரிவாக விளக்கிடும் திருமுருகாற்றுப்படை 'பழையோள்' என்றும் குறிப்பிடுகின்றன. கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஜடில பராந்தக நெடுஞ்சடையன் என்னும் பாண்டிய மன்னனுடைய திருப்பரங்குன்றக் கல்வெட்டு, திருப்பரங்குன்றத்தில் நக்கன் கொற்றி என்பவள் எடுப்பித்த துர்க்கை மற்றும் ஜேஷ்டை கோயில்களைப் பற்றித் தெரிவிக்கிறது. இன்றும் அந்த ஜேஷ்டை சிற்பம் இக்கோயிலில் உள்ளது. கி.பி. 8ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் இராஜசிம்மன் காஞ்சியில் எடுப்பித்த கைலாசநாதர் கோயிலில், அபயவரத முத்திரை காட்டி, அமர்ந்த கோலத்தில் அருள் பாலிக்கும் மிக அழகிய ஜேஷ்டை சிற்பம் உள்ளது. அடுத்து செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள வேலஞ்சேரி என்ற ஊரில் கண்டறியப்பட்ட தொகுதிச் சிற்பங்களுள் ஜேஷ்டையின் சிற்பமும் உள்ளது. இத்தொகுதிச் சிற்பங்களின் காலம் கி.பி. 6-7ஆம் நூற்றாண்டாகும்.

இலக்குமியின் (ஸ்ரீதேவி) தமக்கையான ஜேஷ்டை அலக்குமி (துர்தேவதை) என்று கருதப்படுகிறது. இத்தெய்வம் திருக்குறளில் 'தவ்வை' என்றும் 'மாமுகடி' என்றும் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில் கிடைக்கக் கூடிய ஜேஷ்டை பற்றிய மிகப்பழமையான இலக்கியக் குறிப்பு இதுதான்.

தற்போது மேல் ஒலக்கூரில் கிடைத்துள்ள சிற்பம் பல வகையிலும் முக்கியத்துவமும், சிறப்பும் பெறுகின்றது.

பொதுவாக ஜேஷ்டையின் அருகில் காணப்படும் அவள் மகன் குளிகனுடைய முகம் நந்தி முகமாகக் காட்டப்பட்டிருக்கும். அது போலன்றி இச்சிற்பத்தில் குளிகனுடைய முகம் மனித முகமாகக் காட்டப்பட்டுள்ளது.



'கன்னித்தமிழ் கவிதை பாடுவோம்'

ஆசிரியர்: முனைவர் புரட்சிதாசன்

வெளியீடு: பாண்டியன் பாசறை
17, வடக்கு போக்கு சாலை
தியாகராயர்நகர்,
சென்னை600 017

பக்கம்194 **விலை ரூ.40**

தமிழ் ஆர்வலர்களுக்குப் புதுக்கவிதை மீதான காதல் மெலிந்து, மரபுக் கவிதை புனைகிற ஆவல் பலப்பட்டு வருகிற காலம் இது.

இந்நாளில், பலரும் யாப்பிலக்கணம் படித்து, அதன் நெருடல்களை உணரத் தவிப்பதுண்டு. அத்தகைய இன்னல் நீக்கி, கவிதை இலக்கணத்தை எளிமையும் இனிமையும் கொண்டதாகத் தாமே உருவாக்கி இந்த நூல் மூலம் படைத்துள்ளார் ஆசிரியர்.

ஓர் நூலாசிரியர் தாமே நூல் எழுதி, தாமே அதற்கான உரையும் எழுதி, அவற்றுக்குத் தேவையான மேற்கோள்களையும் எழுதி அண்மைக் காலத்தில் வெளிவரும் முதனூலாக இந்தக் 'கன்னித்தமிழ் கவிதை பாடுவோம்' நூல் திகழ்கிறது.

தமிழ் வளர்ச்சிக்கு, தமிழ் காக்கப் பாடுபடுவோர் வளர்ச்சிக்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

— 'இந்திரன்'

'சுற்றுப்புறச் சூழலில் மாசுபாடுகள்'

ஆசிரியர்: கவியழகன்

வெளியீடு: கார்த்திக் பதிப்பகம்
36, A7, கோவிந்தன் சாலை
மேற்கு மாம்பலம்
சென்னை600 033

பக்கம்144 **விலை ரூ.200**

இன்று உலகம் திணறிக் கொண்டிருப்பது சுற்றுப்புறச் சூழல் மாசுபாடுகளால்தான். இதனையே கருவாகக் கொண்டு கதைகள் எழுதப்பட்டுள்ளன. காலத்திற்கு ஏற்ற, சுற்றுச் சூழலைப்பாதுகாக்க, தேவையான கதைகள்தாம் இவை.

எல்லா நிலை மாணவர்களும் படித்துப் பயன்பெறும்வகையில் எளிமையாக எழுதப்பட்டுள்ளது.

— குமாரசாமி

'சுடர்விழிகள்'

ஆசிரியர்: கவிஞர் இளமாறன்

வெளியீடு: மலர்க்கொடி பதிப்பகம்
ஜெ.43, பாரதிதாசன் சாலை
திருநகர், சென்னை600 083

பக்கம்128 **விலை ரூ.15**

இந்நூல் இளவேனில் தொடங்கிக் காலத்தின் குரல் வரையுள்ள பல கட்டி வெல்லக் கவிதைகளின் தொகுப்பு. பல மரபுக் கவிதைகள், சில சந்தக் கவிதைகள், எல்லாவற்றிலுமே இனிய எளிய சொல்லாட்சி.

சாதி, மதம், இனம், மொழி, நாடு கடந்து மனிதநேயச் சிறகுகளால் உலகை வலம்வர விரும்பும் நூலாசிரியரின் நோக்கம் கவிதைகளில் பளிச்சிடுகிறது.

"தினந்தோறும் சமுதாயச்
சாக்க டைக்குள்
திணறுகிற மனிதகுலம்
மீள்வ தற்கும்
தனதுநிலை உணராமல்
வாழ்க்கை யோரம்
தத்தளிப்போர் தெளிவுபெற
வைப்ப தற்கும்
கனலாகி என்கவிதை
கருத்தை வீசும்
காலத்தின் குரலாகி
நாளை பேசும்!"

என்றெழுதியிருக்கிறார் கவிஞர். அதேபோல், இயற்கையை, காதலை, சமுதாய இழிவுச் சாடலை, மொழிநலத்தை பொதுத் தொண்டின் மேன்மையை, பெண்கள் முன்னேற்றத்தை எழுச்சி மயமான கவிதை எண்ணத்திலெல்லாம் கடைபரப்பியிருக்கிறார் நூலாசிரியர். படித்துப் பயன்பெறலாம்.

— ராஜா

'பட்டுப் பூச்சி வளர்த்துப் பணம் சம்பாதிப்பது எப்படி?

ஆசிரியர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்
த.பெ. எண்: 1447
4, தணிகாசலம் சாலை,
தியாகராயநகர்,
சென்னை 600 026

விலை: ரூ.13 **பக்கம்: 93**

பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழிலை மேற்கொள்ள விரும்புவோர்க்குப் பயனுள்ள நூல்.

பட்டுப் பூச்சி வளர்த்தல், அதற்கு ஏற்படும் நோய்கள், அவற்றைப் போக்கும் மருந்துகள், இத் தொழிலுக்குக் கிடைக்கும் அரசின் உதவிகள், பட்டு நூல் தயாரிப்பு, இதற்கான உதவிகள் என பல விரிவான விளக்கங்கள் இந்நூலில் உள்ளன.

'கந்த குமரன்'

ஆசிரியர்: கோ. பாண்டியன்

வெளியீடு: உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டி தெரு
மண்ணடி, சென்னை1

பக்கம்136 **விலை ரூ.16**

சோழ அரசர்களின் ஆட்சிக் காலத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட கதை. இக்கதையில் வரும் மாந்தர்கள் பலர் கதை நடந்த காலத்தில் வாழ்ந்து மறைந்தவர்கள்தான் என்பது கதையின் இறுதியில் ஆதாரத்தோடு விளக்கப்பட்டிருக்கிறது.

சோழ நாட்டின் தலைநகர் சீரும், சிறப்புமாக எப்படி எழுகிறது என்பது (பக்கம் 87) ஆச்சரியமான பட்டியல்.

- குமார்

வளரும் வேளாண்மை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

வைகாசி மாதச் சாகுபடிக் குறிப்புகள்

நெல்

வைகாசியில் வாய்கூடும் தோடை' என்பது உழவியல் பழமொழி. கோடையின் வெப்பம் உச்ச கட்டத்தை அடையும். அதேசமயம் தென்மேற்குப் பருவக்காற்றும், மழையும் ஆரம்ப கட்டத்தில் இருக்கும். வெப்பம், காற்று மற்றும் மழை ஆகியவற்றின் கூட்டுக் கலவையின் தட்பவெப்ப நிலையே குறுவைச் சாகுபடியின் அதிக மகசூலுக்குக் காரணமாகும்.

குறுவைகார்பட்டத்திற்கேற்ற இரகங்கள்

மாநில அளவில், பொதுவாக இப்பட்டத்தில் ஆடுதுறை 36, ஆடுதுறை 37, அம்பை 16 பரிந்துரை மற்றும் அம்பை 18 போன்ற இரகங்கள் செய்யப்படுகின்றன. முன் குறுவைப் பட்டத்தில் ஐ.ஆர். 50 பரிந்துரை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், திருப்பதி சாரம், 1, டி.கே.எம். 9 மற்றும் ஐ.ஆர். 64 போன்ற இரகங்களையும் சாகுபடி செய்யலாம். கோவை, பெரியார் மாவட்டங்களில் கோ.37 இரகமும் சாகுபடி செய்யப்படுகிறது.

குறுவை நாற்றங்கால் நிலம் பராமரிப்பு

நாற்றங்கால் பகுதி நீர் நிலைக்குச் சமீபமாக இருத்தல் வேண்டும். வண்டல் களி மணல் கலந்த இருமண்பாடு கொண்ட நிலம் மிகவும் நல்லது. ஒரு எக்டேருக்கு 20 சென்ட நிலம் தேவைப்படும். இந்த நிலப்பரப்பிற்குச் சுமார், நன்றாக மக்கிய தொழு உரம் கம்போஸ்ட் ஒரு டன் இட்டு இரண்டறக் கலக்க உழுதுவிட வேண்டும். பதமான ஈரத்தில் நாற்றங்கால் பகுதியை அவ்வப்பொழுது உழவு செய்து களையைக் கட்டுப்படுத்த வேண்டும். நாற்றங்கால் வயலின் வரப்புகளைச் சீராக அண்டை வெட்டி, எடுத்துக் கட்டி பூசி மெழுகிவிட வேண்டும். நாற்றங்கால் வயலில் நீரைக்கட்டி 23 நாட்கள் கழித்து சேற்று உழவு செய்ய வேண்டும். தொழு உரம் போடாத நிலையில், எருக்கலை, கொழிஞ்சி மற்றும் தண்டு முற்றாத, அடர்ந்த தழைகளைக் கொண்ட நெய்வேலிக் காட்டாமணி போன்ற தழை உரங்களை இட்டு மடக்கி உழவேண்டும். சேற்றில் சுமார் 1015 நாட்கள் மக்கவிட்டால் தழை உரம் நன்றாக அழுகிவிடும்.

நாற்றங்காலைக் காயவிடாமல் சுமார் 2 செ.மீ. நீர் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். குறுவை நாற்றுக்களை 20-25வது நாளில் பறித்து நடவு செய்யும் சூழ்நிலையில் இருந்தால் 20 சென்ட் நாற்றங்காலுக்கு 40 கிலோ டி.ஏ.பி. உரத்தைக் கடைசி சேற்றுழவில் இடவேண்டும். அல்லது 16 கிலோ யூரியா மற்றும் 120 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும். 25 நாட்கள் கழித்து நாற்றுபறிக்கும் சூழ்நிலை இருப்பின் இரசாயன உரத்தை அடி உரமாக இடாமல், நாற்றுப்பறிப்பதற்கு சுமார் 10 நாட்களுக்கு முன்பு டி.ஏ.பி. உரத்தை மேலுரமாக இட வேண்டும். நாற்றங்கால் பரப்பில், எட்டடிக்கு ஒரு பட்டம் அமைத்துக் கொள்ள வேண்டும். வடிகால் வசதிக்கும், களை எடுப்பதற்கும் மற்றும் உரம் பூச்சி மருந்து இடுவதற்கும், இப்பட்ட அமைப்பு முறை எளிதாக இருக்கும். நாற்றங்கால் மேற்பரப்பு, மேடுபள்ளம் இல்லாமல் கண்ணாடி மேற்பரப்பு போல் சமமாக இருக்கவேண்டும். தண்ணீரும் சுமார் 23 செ.மீ அளவில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். முளைகட்டிய குறுவை விதை நெல் பரவுவதற்கு முன் மேற்கூறிய நாற்றங்கால் நிலப் பராமரிப்பு முறைகளைச் சீராகவும் முறையாகவும் கையாள வேண்டும்.

பப்பாளி

சமீபகாலமாக, தமிழகத்தில் பரவலாகப் பயிரிடப்படும் பழப் பயிர் பப்பாளி, பப்பாளியில் நாற்றங்கால் இட தகுந்த தருணம் இது.

பப்பாளி விதைகளை விதைக்குமுன் விதை நேர்த்தி செய்வது அவசியம். பூஞ்சாள நோய்களிலிருந்து பாதுகாக்க, விதை

நார்த் தொழில் மூலம் அந்நியச் செலாவணி

தேங்காய் நார்த் தொழில் தற்போது ஏற்றுமதியின் மூலம் புதிய வள ஆதாரத்தை நோக்கி சென்று கொண்டுள்ளது. உலக நார் வாத்தகத்தில் இந்தியாவின் பங்கு 30 சதவீதமாகும். ஏற்றுமதி, ரூபாயிலும், மதிப்பிலும் அதிகரித்துள்ளது. 1990-91-இல் ரூ.48 கோடியாக இருந்த நார் ஏற்றுமதி 1991-92-இல் ரூ.74 கோடியாகவும், 1992-93-இல் ரூ.96 கோடியாகவும் அதிகரித்தது. எட்டாவது திட்டகால இறுதியில் ஏற்றுமதி ரூ.100 கோடியை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரியமாக நடந்துவரும் இக்குடிசைத் தொழிலில் சுமார் 5.5 இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் பகுதி நேரத் தொழிலாக இதை எடுத்துக் கொண்டுள்ளனர். கேரளா, தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரா, கோவா, ஒரிசா, அசாம், அந்தமான் நிக்கோபார், இலட்சத்தீவுகள் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலயூனியன் பிரதேசங்களில் இத்தொழில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

இந்தியா, வெள்ளை மற்றும் பழுப்பு நிற இழைகளை உற்பத்தி செய்கிறது. இதில் வெள்ளை இழைகளுக்கே வாங்குபவர்கள் முன்னுரிமை அளிக்கின்றனர். பழுப்பு நிற இழை, இயந்திரம் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. பழுப்பு நிற இழைத் துறையின் வளர்ச்சி கடந்த சில காலமாக அதிகரித்து வந்துள்ளது. தேங்காய் பயிரிடும் பரப்பும் தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

தேங்காய் சிரட்டையை அதிக அளவில் பயன்படுத்துவதற்கு எட்டாவது திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது.

புதிய யூனிட்டுகளை அமைப்பதற்கும், தற்போது உள்ள யூனிட்டுகளைப் புதுப்பிக்கவும் அரசு நிதியுதவியை அளித்து வருகிறது. அதிக லாபம் பெற கூட்டுறவு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1991-92-இல் கேரளா, ஆந்திரா, கர்நாடகம் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களில் உள்ள யூனிட்டுகளுக்கு ரூ.22.56 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

நார் உற்பத்தியைப் பன்முகப்படுத்தவும், குறைந்த செலவிலான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தவும் தீவிர ஆராய்ச்சியினை களவூர் மற்றும் பெங்களூரில் உள்ள ஆராய்ச்சி மையங்கள் மேற்கொண்டுள்ளன.

மதிப்பு கூட்டிய நார்ப் பொருட்களின் உற்பத்திக்கு ஆறு பயிற்சி நிலையங்கள் பயிற்சி அளித்து வருகின்றன. சிறு உற்பத்தியாளர்களுக்கு நார் வாரியம் பொது வசதி மையங்கள் மூலம் தொழில்நுட்ப உதவியை அளிக்கிறது. மாதிரி நார் கிராமத் திட்டம், தறி வழங்கும் திட்டம் ஆகிய ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்தினையும் அரசு மேற்கொண்டுள்ளது.

-பத்திரிகைத் தகவல் அலுவலகம்

முதற் சிறப்பு. அடுத்து ஜேஷ்டையின் வலதுபுறம் சிறிய அளவில் குளிகனின் உருவம் காட்டப்படும். மாறாக இங்கு அவனுடைய உருவம் இடப்புறத்தில், குறிப்பாக உருவில் தாய்ச் சிற்பத்திற்குச் சமமான அளவில் செதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அது போன்றே வலப்புறத்தில் காட்டப்படவேண்டிய ஜேஷ்டையின் மகள் மாந்தி இடப்புறத்தில் தாயின் தோள் மீது சாய்ந்து கொண்டுள்ளது போன்று காட்டப்பட்டுள்ளது நோக்கத்தக்கது. ஜேஷ்டையின் தோள்களுக்கு மேல் காக்கைக் கொடியும், துடைப்பமும் காட்டப்பட்டுள்ளன. ஜேஷ்டை காலைத் தொங்கவிட்ட நிலையிலன்றிக் கால்களை மடித்து லலிதாசனம் போன்று வைத்துள்ளது இச்சிற்பத்தில் அடுத்துக் குறிப்பிட வேண்டிய அம்சமாகும். காதுகளில் குண்டலமும், கழுத்தணியும் அணிந்து, பருத்த தனங்களுடனும், பெருத்த வயிற்றுடனும் இச்சிற்பம் காணப்படுகிறது. வலக்கை வலது தொடையின் அருகில் தொங்கவிட்டும், இடக்கை இடது தொடையின் மீது வைத்துள்ள நிலையிலும் காணப்படுகின்றன. மாந்தன் தன் கையில் கதையைப் பிடித்தவாறு கால்களை மடக்கி அமர்ந்துள்ளான். ஒரு மீட்டர் உயரமும் ஒன்றரை மீட்டர் அகலமும் உடைய பலகைக் கல்லில் இச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

ஊரகச் சுகாதாரத் திட்டம்:

வழிகாட்டும் பெரியார் மாவட்டம்

பண்டித ஜவகர்லால் நேரு ஒருமுறை இப்படியாகக் கருத்து தெரிவித்தார்: "கழிவறையைப் பயன்படுத்தும் வசதி இந்திய நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் எப்போது கிடைக்கிறதோ, அன்றுதான் நமது நாடு முன்னேற்றத்தின் உச்ச கட்டத்தை அடைந்ததாக நான் கருதுவேன்"

இந்தக் கருத்தை வளர்ச்சிக்கு அளவுகோலாக் கொண்டால், தமிழ்நாட்டிலுள்ள பெரியார் மாவட்டத்தை நாட்டில் உள்ள மிக முன்னேறிய பகுதிகளில் ஒன்றென எளிதாகக் கூறிவிடலாம். ஏனென்றால், இந்த மாவட்டத்தின் ஊரகப் பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளில் சுமார் 40 ஆயிரம் கழிவறைகள் கட்டப்பட்டிருப்பதோடு இவை அனைத்தும் உபயோகத்திலும் இருக்கின்றன.

1988-89இல் ஐ.நா.வில் யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் பெரியார் மாவட்டத்தில் தொடங்கப்பட்ட தீவிரச் சுகாதாரத் திட்டமே இந்த மகத்தான முன்னேற்றத்திற்குக் காரணமாகும். இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்குக்காரணமாக இருந்த பல்வேறு விஷயங்கள், நாடு முழுவதும் உள்ளவர்கள் பார்த்து, கற்றுக்கொள்ளக்கூடிய நல்ல மாதிரியாகத் திகழ்கின்றன.

கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள், திறந்த வெளியில் மலம் கழிப்பதால், தண்ணீரும் காற்றும் தூய்மைக்கேடுற்று, அதன் விளைவாக அப்பகுதி மக்கள் காலரா, வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை போன்ற பல்வேறு நோய்களால் தாக்கப்படுவது யாவரும் அறிந்த ஒன்று. மனிதக் கழிவைப் பாதுகாப்பான முறையில் அகற்றினால்தான் நமது கிராம மக்கள் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ முடியும். பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரை, தீவிரச் சுகாதாரத் திட்டம் தொடங்கப்பட்ட சமயத்தில் கிராமப்பகுதிகளில் இருந்த சுமார் மூன்றரை இலட்சம் வீடுகளில் 50 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே கழிவறை வசதி இருந்தது. மற்றவர்கள் திறந்தவெளியில்தான் மலம் கழித்து வந்தனர். இவர்களுக்குக் கழிவறை வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 35,000 வீடுகளில் கழிவறைகளைக் கட்டுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களில் 1,000 கழிவறைகளையும், சத்துணவு மையங்களில் 625 கழிவறைகளையும் கட்ட முடிவெடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தண்ணீர் செலுத்தி சுத்தம் செய்யக்கூடிய கழிவறைகளை ஒவ்வொரு வீட்டிலும் கட்ட வேண்டியதன் அவசியம் பற்றி கிராம மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக ஒரு தீவிர இயக்கம் தொடங்கப்பட்டது.

ஒவ்வொரு வீட்டிலும் கழிவறை கட்டுவதென்றால் அதற்கு நிறைய இடம் தேவைப்படும் என்றும், தினமும் ஏகப்பட்ட தண்ணீர் செலவிட வேண்டுமென்றும் கிராம மக்கள் நினைத்ததோடு இத்தகைய கழிவறைகளில் துர்நாற்றம் வீசுமென்றும், இவற்றைக் கட்ட மிகுந்த செலவு பிடிக்குமென்றும் தவறாகக் கருதிக்



கொண்டிருந்தனர். அவர்களது ஐயங்களைப் போக்குவதற்காக நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் ஊராட்சி உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும், பத்திரிகைகளின் உதவியையும் மாவட்ட நிர்வாகம் நாடியது. தண்ணீரைப் பயன்படுத்தும் கழிவறைகள் வாயிலாக மனிதக் கழிவை வெளியேற்ற வேண்டியதன் அவசியம் பற்றி மக்களுக்கு எடுத்துரைப்பதில் ஊர் நல ஊழியர்கள், சமூகத் தொண்டர்கள், மகளிர் மற்றும் இளைஞர் மன்ற உறுப்பினர்களும் பயனுள்ள வகையில் தொண்டாற்றினர். இவர்கள் வீடு வீடாகச் சென்று கழிவறைகள் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்தனர். புத்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன, இந்த இயக்கத்தில் பங்கேற்ற தொண்டர்களுக்காகப் பயிற்சி முகாம்களும் நடத்தப்பட்டன.

ஒவ்வொரு வீட்டிலும் கழிவறை இருக்க வேண்டியதன் அவசியத்தை, கிராம மக்கள் உணர்ந்துகொண்டவுடன் அவற்றைக் கட்டிக்கொடுக்கும் பணி துவங்கியது. இலவசமாகக் கட்டிக்கொடுத்தால், அவர்கள் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. ஆகவே, தண்ணீரைப் பயன்படுத்தும் கழிவறைகளை ஒவ்வொரு வீட்டிலும் 800 ரூபாய் செலவில் அமைக்க மாவட்ட நிர்வாகம் தொடங்கியபோது, வீட்டுக்காரர்கள் 160 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. மீதித் தொகையை, மத்தியமாநில அரசுகளும், யூனிசெப் நிறுவனமும் வழங்குகின்றன. சில ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தக் கழிவறைகளின் வடிவமைப்பில் சில மாற்றங்களைச் செய்ததால், கட்டுமான செலவு 1,600 ரூபாயாக அதிகரித்தது.

> உபதேசங்களில் எறும்பு செய்யும் உபதேசமே மிகச் சிறந்தது என்பேன். காரணம், அது உழைப்பதைத் தவிர வேறு எதுவும் செய்வது இல்லை.
>
> -பெஞ்சமின் பிராங்க்ளின்

வருங்காலத்தில் இவற்றின் கட்டுமானச் செலவு 2,300 ரூபாயாக இருக்கும். எளிய முறையிலான இந்தக் கழிவறைகளைக் கட்டுவதற்கு உள்ளூர் கட்டடத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. தொடக்கத்தில் தலைவர்களும், புதுமை விரும்பிகளும்தான் தங்கள் வீடுகளில் இத்தகைய கழிவறைகளைக் கட்டிக்கொள்ள முன்வந்தனர். இக்கழிவறைகள் நன்கு இயங்குவதைக் கண்ட எல்லாத் தரப்பு கிராம மக்களும் தத்தம் வீட்டிலும், இவற்றைக் கட்டிக்கொடுக்குமாறு அரசாங்கத்தை அணுகினர். பெரியார் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் தீவிர சுகாதாரத் திட்டத்தின் ஓர் பகுதியாக, கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களிலும், குறைந்த செலவிலான கழிவறைகள் கட்டப்படுகின்றன. யூனிசெப் நிறுவனம் உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றோடு பள்ளிக்கூடங்களில் பெற்றோர்ஆசிரியர் சங்கங்களும் இவற்றுக்கான செலவைப் பகிர்ந்துகொள்கின்றன. இதுவரை இந்த வட்டத்தில் 740க்கும் மேற்பட்ட கழிவறைகள் கிராமப்புறப் பள்ளிக்கூடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. மனிதக் கழிவை மனிதனே தோளில் சுமந்து செல்லும் கேவலமான பழக்கத்தை ஒழிக்க தீவிரச் சுகாதாரத் திட்டம் பெரிய அளவில் உதவியிருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கும். பெரியார் மாவட்டக் கிராமப்புறங்களில் தண்ணீரைப் பயன்படுத்தும் கழிவறைகளை தத்தம் வீடுகளில் கட்டிக்கொள்ளுமாறு கிராம மக்களுக்கு எடுத்துரைத்த இயக்கத்தின்போது, மனிதக் கழிவை மனிதனே சுமந்து செல்லும் பணி எவ்வளவு இழிவானது என்பதும், அதனால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளும் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இப்போது இம்மாவட்டத்தில் உள்ள 61 நகரப் பஞ்சாயத்துக்களிலும் மனிதக் கழிவை மனிதனே அகற்றும் இழிவான பழக்கம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டதாக அம்மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன் கூறுகிறார். மாவட்டத்தின் ஊராட்சிகளிலும் இந்தப் பழக்கம் இப்போது அறவே இல்லை.

மொடக்குறிச்சி வட்டம் சுவாமிநாதபுரம் கிராமத்தில் உள்ள 64 ஆதிதிராவிடர் இல்லங்கள் அனைத்திலும் தீவிரச் சுகாதாரத் திட்டத்தின்கீழ் கழிவறைகள் கட்டப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். பெரியார் மாவட்டத்தில் தீவிரச் சுகாதாரத் திட்டத்தின் வெற்றியை நேரில் கண்டு அறிவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வளர்ச்சித் துறை அதிகாரிகளும், யூனிசெப், ஸ்வீடன் நாட்டு ஸிடா அமைப்பு ஆகியவற்றின் அதிகாரிகளும் வந்து போகின்றனர். இந்தச் சுகாதாரத் திட்டம் இந்தியாவில் மட்டுமன்றி வளரும் நாடுகள் அனைத்திலும் செயல்படுத்துவதற்கு ஏற்ற நல்ல முன்மாதிரியாகும் என்று அவர்கள் பாராட்டுகின்றனர்.

செப்புத் திருமேனிகளின் அழிவும் பாதுகாப்பும்

டாக்டர் வே. ஜெயராஜ்
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை

செப்புத் தொழில்நுட்பங்கள் இரும்புக்காலத்திற்கு முன்னரே சமீப கிழக்கு நாடுகளில் சுமார் கி.மு.3000 ஆண்டுவாக்கில் உருவாகியுள்ளன. மொகஞ்சோதாரோவில் அகழ்ந் தெடுக்கப்பட்ட 'நடனமாது'வின் வெங்கலச் சிற்பத்திலிருந்து இந்தியாவிலும் சிற்ப வார்ப்பு முறை கி.மு.2500க்கு முன்னரே நடைமுறையில் இருந்துள்ளது தெரிகிறது.

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் புதைகுழியில் கிடைத்த 'பெண் தெய்வ' வெங்கலச் சிற்பம் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் வெங்கலச் சிற்ப வார்ப்பு முறை வழக்கில் இருந்ததை நிரூபிக்கிறது. பெரியார் மாவட்டம் கொடுமணலில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத் துறை நடத்திய அகழாய்வில் கிடைத்த முணிக்கற்கள் பதிக்கப்பட்ட வெங்கலப் புலி உருவம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் தொழில் நுட்பத்தைத் தெரிவிக்கிறது. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள அமராவதி புத்தரின் பஞ்சலோகத் திருமேனி கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்தது. பல்லவர் காலத்தில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை சிற்பங்களின் வார்ப்பு முறை சிறப்பாகச் செயல்பட்டிருந்தாலும் மிகக் குறைந்த அளவிலே இருந்தாலும் கூட, அக்காலத் தொழில் நுட்பத்தை விளக்கும் கருவிகளாக அவை நிலவுகின்றன. அதனைத் தொடர்ந்து பாண்டியர் காலத்திலும் இத்தொழில்நுட்பம் நிலவி இருந்தாலும் மிகக் குறைவான செப்புத் திருமேனிகளே உள்ளன. ஆனால் சோழர் காலத்தில்தான் கி.பி. 9 முதல் 13ஆம் நூற்றாண்டு வரை இக்கலை உன்னத நிலை அடைந்தது! இன்று புதையலாகக் கிடைக்கும் பஞ்சலோகச் சிற்பங்களும் பணிமுற்றுப் பெறாத சிற்பங்களும் சோழர்களின் கலைமாட்சியை விளம்புவதோடல்லாமல் செயல்முறையினையும் விளக்குகின்றன. பிற்காலத்தில் விஜயநகர மன்னர்கள் இக்கலையில் நாட்டமுடையவர்களாக இருந்தாலும், இக்காலச் செப்புத் திருமேனிகளின் மாட்சி சோழர்கால மாட்சியுடன் ஒப்பிடத்தக்கவை அல்ல.

சென்னை அருங்காட்சியகத்திலுள்ள ஆயிரக்கணக்கான செப்புத் திருமேனிகள் இந்தியப் புதையல் சட்டத்தின் கீழ் பெறப்பட்டதாகும். பெரும்பாலானவை தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தென் ஆர்க்காடு, ஆகிய மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். இத்திருமேனிகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்து அவை கெட்டி வார்ப்பு முறையில் செய்யப்பட்டவை என்று கண்டறியப் பட்டுள்ளன. இந்தப் பாரம்பரிய வார்ப்பு முறை இன்றும் கூட தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலை போன்ற இடங்களில் நிலவி வருகிறது. தமிழகத்தில் இன்றும் நிலவி வரும் இவ்வார்ப்பு முறை யாவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த வார்ப்பு முறையாகும்.

பஞ்சலோகம்

பொதுவாக 'வெங்கலம்' என்பது செம்பும் 75- 80 சதவிகிதம் வெள்ளீயமும் 25 -20 சதவிகிதம் கலந்த ஒரு உலோகக் கலவை ஆகும். பண்டைய செப்புத் திருமேனிகள் செம்பு, வெள்ளீயம், காரீயம், வெள்ளி, தங்கம் ஆகிய ஐந்து உலோகங்கள் கலந்த 'பஞ்சலோகக்' கலவையில் செய்யப்பட்டதாகப் பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் இக்கட்டுரை ஆசிரியர் ஆய்வு செய்துள்ள நூற்றுக் கணக்கான இவ்விதச் சிற்பங்களில் செம்பு, வெள்ளீயம், காரியம், துத்தநாகம், இரும்பு ஆகியவைதான் கலந்துள்ளன. தங்கம், வெள்ளி மிகமிகக் குறைந்த அளவில் 0.1 சதவிகிதத்துக்கு கீழ் உள்ளன. இது சிற்பங்களின் புனித தன்மைக்காகவே கலக்கப்பட்டதாக இருக்கலாம். சில சிற்பங்களில் தங்க முலாம் பூசப் பட்டுள்ளது ஆனால் அவை பொன் சிற்பங்கள் அல்ல.

தென்னிந்திய செப்புத் திருமேனி

வெங்கல நோயினால் பாதிக்கப்பட்ட தேவி சிற்பம்

இம்மையம் திருவாரூரில் உள்ளது. இம்மையத்தில் சுமார் 1300 சிற்பங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு மையங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

> **மனம்** ஒருவனுடைய மனம் தூய்மையாய் இல்லாவிட்டால், பணமோ, குணமோ, வலிமையோ, வனப்போ, அவனுக்குப் பயன்படாது.
>
> -அரிஸ்டாடில்

இந்தியப் புதைபொருள் சட்டம், 1878

பூமிக்குள்ளிருந்து கிடைக்கும் பத்து ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள அரும்பொருட்களைக் கண்டெடுப்பவர், அவை பற்றிய தகவலை தன்னால் முடிந்த வரை உடனடியாக அந்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கு எழுத்து மூலம் கீழ்க்கண்ட குறிப்புகளுடன் தெரிவிக்க வேண்டும்.

அ. அரும்பொருட்களின் தன்மை, தோராய மதிப்பு

ஆ. அரும்பொருட்கள் கிடைத்த இடம்

இ. அரும்பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட நாள் உடனடியாக அரும்பொருட்கள் சமீபத்திலுள்ள கருவூலத்திலோ அல்லது மாவட்ட ஆட்சியர் அரும்பொருட்களின் பாதுகாப்புக்குத் தகுதியானது என்று கருதும் இடத்திலோ அவற்றைப் பாதுகாக்கவேண்டும். விசாரணைக்குப் பின்பு அருங்காட்சியகங்களின் இயக்குநரின் உதவியுடன் அதன் மதிப்பினை மாவட்ட ஆட்சியர் உறுதி செய்து அருங்காட்சியகத்தில் பாதுகாக்கக் கொடுக்கப்படும்.

அருங்காட்சியகத்தில் பாதுகாக்கத் தகுதியற்றது என்று அருங்காட்சியகங்களின் இயக்குநர் கருதினால் தஞ்சாவூர் கலைக்கூடம் அல்லது பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் அருங்காட்சியகங்களின் இயக்குநரால் தொடர்பு கொள்ளப்பட்டு அவரது பரிந்துரையின்படி மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கீடு செய்யப்படும். அரும்பொருளைக் கண்டுபிடித்தவருக்கும் நிலச் சொந்தகாரருக்கும் ஈட்டுத் தொகை அரும்பொருளின் மதிப்புடன் 20 சதவிகிதம் சேர்த்து கண்டெடுத்தவருக்கு 60. சதவிகிதமும், நிலச் சொந்தக்காரருக்கு 40 சதவிகிதமும் வழங்கப்படும். உரிமை கோரப்படாத அரும்பொருட்களும் நீதித்துறையால் கைப்பற்றப்பட்ட உரிமைகோரப்படாத அரும்பொருட்களும் அருங்காட்சியகத் துறைக்கு வழங்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

அரும்பொருட்கள் (ஏற்றுமதிக் கட்டுப்பாடு) சட்டம், 1947

அரும்பொருட்களை ஏற்றுமதி செய்வதில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவர இந்திய மைய அரசு அரும்பொருட்கள் ஏற்றுமதிக் கட்டுப்பாடு சட்டம், 1947-ஐக் கொண்டு வந்தது. இச்சட்டப்படி நாணயம், சிற்பம், சுவடிகள், கல்வெட்டு, மற்றும் பிற கலைப்பொருட்கள், கலை வேலைப்பாடுகள், பழங்காலத்திலுள்ள அரசியல், நடைமுறை, ஆடைகள், வழிபாடு, இலக்கியம், கைத்தொழில், கலை, அறிவியல் விளக்கும் சகல பொருட்கள், நூற்றாண்டுக்கு மேற்பட்ட எப்பொருளையும் அரும்பொருளாகக் கருதி மைய அரசு அரசிதழில் வெளிவரும் பொருட்கள், ஆகியவற்றை ஏற்றுமதி செய்ய முடியாது. ஒவ்வொரு மாநிலத்திலும் நூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்ட எவ்விதக் கலைப் பொருளையும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுக் குழுவின் ஒப்புதல் பெற்ற பின்னரே வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய இயலும்.

தனியார் தங்களது சொத்து என்று கருதும் நூற்றாண்டுக்கு மேற்பட்ட செப்புத் திருமேனிகளை உரிய புகைப்படங்களுடன் தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

பல்வேறு சட்டங்கள் இருப்பினும் நமது கலைச் செல்வங்களைப் பல்வேறு முறைகளில் நாம் இழந்து வருகிறோம்.

சிலைத் திருட்டுத் தடுப்பு

செப்புத் திருமேனிகள் கோயில்களிலிருந்து திருடப்பட்டு சிதைவைத் தடுக்க தமிழ்நாடு அரசு காவல்துறைக் கண்காணிப்பாளர் சிறப்புப் பிரிவு ஒருவரை நியமித்து செப்புத் திருமேனிகள் திருட்டைத் தவிர்த்து வருகிறது. பத்தூர் நடராஜர் என்ற செப்புத் திருமேனி திருடப்பட்டு, பம்பாய்க்கும் தொடர்ந்து அமெரிக்கா தேசத்திற்கும் பின்னர் இங்கிலாந்து தேசத்திற்கும் சட்டவிரோதமாகக் கடத்தப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடியதன் விளைவாகத் திரும்பவும் பத்தூர் நடராஜர் செப்புத் திருமேனியை நாம் பெற்றுள்ளது நமக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

சிற்பங்களைச் சிதைத்தல்

தமிழ்நாட்டில் பழங்காலச் செப்புத் திருமேனிகளில் தங்கம் பெருமளவில் கலந்துள்ளது என்ற கருத்தே பெரும்பாலும் செப்புத் திருமேனிகள் திருடப்பட்டு சில பகுதிகள் உடைக்கப்படுவதற்குக் காரணமாகும். திருடப்பட்ட சிற்பத்தின் சில பகுதிகள் உடைக்கப்பட்டு, தங்கம் இருக்கிறதா என்று சோதிக்கப்பட்டு தங்கம் இல்லையென்றால் அவை திருடியவர்களால் தூக்கி எறியப்படுகின்றன. இப்படிப்பட்ட சிற்பங்களும் பெருமளவில் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டு அருங்காட்சியகங்களில் அடைக்கலம் புகுகின்றன.

பழங்காலச் செப்புத் திருமேனிகளின் போலிகள்

வெளிநாடுகளில் தமிழகப் பழங்காலச் செப்புத் திருமேனிகளுக்கு மோகம் இருப்பதால் பழங்காலச் செப்புத் திருமேனிகள் போன்று போலிச் செப்புத் திருமேனிகள் செய்யப்பட்டு அவை பூமியில் புதைக்கப்பட்டோ அல்லது வேதிய முறையிலோ பழமையானவையாக மாற்றப்பட்டு அதிக விலையில் விற்கப்படுகின்றன. சில வேளைகளில் வல்லுநர்கள் கூட ஏமாற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விதச் சூழ்நிலைகளில் வேதியப் பாதுகாப்பு வல்லுநர்கள் உதவக்கூடும். ஒரு சிற்பத்தை ஆதாரமாகக் கொண்டு வடிக்கப்பட்ட புதிய சிற்பம் ஆதாரச் சிற்பத்தை விட சிறியதாகவே இருக்கும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டு பூமிக்கு அடியில் கிடைத்த செப்புத் திருமேனிகள்

பெரும்பாலும் பசுங்களிப்பு பூசப்பட்டதுபோல் பார்ப்பதற்கு நேர்த்தியாக இருக்கும். இதனை 'இளம் பசுங்களிப்பு' (பேட்டினா) என்று வல்லுநர்கள் அழைப்பர். இது செப்புத் திருமேனி நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பூமியில் புதையுண்டதால் உருவாகிய காரத்தன்மையுடைய கார்பனேட் ஆகும். இதனை செயற்கையாக உருவாக்குவது கடினம். அதனை வல்லுநர்கள் எளிதில் இனங்கண்டுகொள்ள முடியும்.

அறிவியல் நடவடிக்கைகள்

செப்புத் திருமேனிகளை இனங்கண்டுகொள்ள பல்வேறு அறிவியல் முறைகள் உள்ளன. பல்வேறு கோணங்களில் புகைப்படமெடுத்து அளவுகள், எடை ஆகியவற்றுடன் அருங்காட்சியகங்களில் செப்புத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு முறைகளில் பாதிப்பு ஏதுமின்றி உலோகப் பகுதிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, கலந்துள்ள உலோகங்களின் அளவுகள் பதிவு செய்யப்படுகின்றன. ஒருவேளை செப்புத் திருமேனி திருடப்பட்டு புதிய சிற்பமாக வடிக்கப்படுமாயின் சிற்பத்தின் குறிப்பிட்ட இடத்தில் கிடைக்கப்பட்ட உலோகங்களின் கலப்பு விகிதம் கண்டுபிடிக்கப்பட்ட சிற்பத்தில் மாறுபடுமாயின் அது போலியை உறுதிப்படுத்தும். உலோக உட்புறக் கூறுகளை வெளிப்படுத்தும் முறைகளும் உதவக்கூடும். மனிதனுக்கு மனிதன் கைரேகைகளில் வித்தியாசம் காண்பது போல உலோகங்களின் உறைநிலைகளில் சிற்பங்களின் உட்பகுதி வித்தியாசப்படும். இவை ஆதாரச் சிற்பத்திலிருந்து போலி சிற்பத்தைக் காட்டிவிடும். 'ஹாலோ கிராமி' என்று சொல்லக்கூடிய எக்ஸ்ரே ஒளிப்படமுறையும் போலிகளை இனங்கண்டு கொள்ள உதவும்.

> **வாழ்க்கை**
>
> வாழ்க்கை என்பது ஊஞ்சலில் உட்கார்ந்து ஊசலாடுவது அல்ல; புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது.
>
> -காண்டேகர்

சென்னை அரசு அருங்காட்சியக வேதிப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம் :

1851-இல் உருவாக்கப்பட்ட சென்னை அருங்காட்சியகத்தில் அதிக அளவில் புதையலாகக் கிடைத்த செப்புத் திருமேனிகளைப் பாதுகாக்க அங்கு 1930-இல் வேதியப் பாதுகாப்பு ஆய்வகம் ஒன்று உருவாக்கப்பட்டது. அவ்வாய்வகம் தொடக்கத்திலிருந்தே பாதுகாப்புப் பணியோடு ஆராய்ச்சிப் பணிகள் செய்து வருகிறது. இந்த ஆய்வகம் செப்புத் திருமேனிகளைப் பாதுகாப்பதுடன் எவ்வாறு போலிகளை இனங்கண்டுகொள்வது, எம்முறையில் அவை செய்யப்பட்டன போன்றவற்றை ஆராய்ச்சி வழிகண்டறிந்து ஆயிரக்கணக்கான செப்புத் திருமேனிகளைப் பாதுகாத்து வருகின்றன.

தமிழ்நாட்டில் பாரம்பரிய செப்புத் திருமேனிகளின் வார்ப்பு முறை அழியாமல் இருக்க அருங்காட்சியகங்கள் அவற்றைப் பேணிக்காக்கின்றன. அது மட்டுமின்றி, பல்வேறு அரசுத்துறைகள் கலைஞர்கள் இனங்கண்டு வார்ப்புக் கலை அழியாமல் பாதுகாக்க ஊக்கமளித்து அம்முறையில் செய்யப்பட்ட செப்புத் திருமேனிகளை வாங்கி அவர்களுக்கு வாழ்வளிக்கின்றன. தஞ்சை மாவட்டம் சுவாமிமலையில் பல்வேறு பாரம்பரிய வார்ப்புக் கலைஞர்கள் இன்றும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அருங்காட்சியகங்கள், கலைக்கூடங்கள் செப்புத் திருமேனிகளின் வழியாகச் சிறப்புமிக்க நமது பாரம்பரிய மேன்மைகளை விளக்கி நிற்கின்றன. பழம்பெருமை படைத்த செப்புத் திருமேனிகளை இளம் தலைமுறையினர்க்கு எவ்விதத்திலும் அழியாமல் காக்க உதவிடுவோம்.



புகை உயிருக்குப் பகை. புகையின் மூலப்பொருள் புகையிலை. புகையிலைப் பழக்கத்தினால் இந்தியாவில் தினமும் சுமார் 2,000 பேர் இறக்கின்றனர். ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 10 இலட்சம் பேர் இதனால் இறக்கின்றனர். உலகில் ஆண்டுதோறும் 30 இலட்சம் பேர் புகையிலைப் பழக்கத்தினால் மரணமடைகின்றனர். 2020-ஆம் ஆண்டில் இவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியாக உயரும்.

இந்தியாவில் 15 வயதுக்கு மேற்பட்ட 14.2 கோடி ஆண்களும், 7.2 கோடி பெண்களும் புகையிலைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மொத்த ஆண்களில் பாதிப் பேரும், பெண்களில் ஐந்தில் ஒரு பங்கினரும், புகையிலைப் பழக்கம் உடையவர்கள். 2000-மாவது ஆண்டில், புகையிலைப் பழக்கத்தினால் 2.4 இலட்சம் பேருக்குப் புற்றுநோய் ஏற்படும்.

90 சதவிகிதத் தொண்டைப் புற்றுநோய் புகையிலைப் பழக்கத்தினால்தான் உண்டாகிறது. நெஞ்சுவலி ஏற்படக் காரணமாக அமைவது புகையிலைப் பழக்கம். நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்ட 57 இலட்சம் பேர்களில் 26 இலட்சம் பேருக்குப் புகையிலைப் பழக்கத்தினால் இந்த நோய் ஏற்படுகிறது.

புகையிலைத் தொழிலினால் 30 முதல் 40 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதோடு, ரூ.1078 கோடி வருவாயும் கிடைக்கிறது. ஆனால், புகையிலைப் பழக்கத்தினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை குணமாக்க ரூ.2,394 கோடி தேவைப்படுகிறது. வரவு எட்டணா செலவு பத்தணா என்பது போலல்லவா இது இருக்கிறது!

கட்டி வார்ப்பு முறையில் வார்ப்பிலிருந்து எடுக்கப்பட்ட சோழர்கால நடராஜர் சிற்பம்

களில் செம்பு அதிகமாக உள்ளதால அவற்றைச் செப்புத் திருமேனிகள்' என்று அழைக்கப்படுகின்றன. வெள்ளீயம் இவ்உலோகக் கலவைக்குக் கடினத்தன்மையும் செதுக்குவதற்கேற்றத் தன்மையும் கிடைப்பதற்காகவே செம்புடன் சேர்க் கப்பட்டுள்ளது. காரியம் இவ்வுலோக உருக்குக் கலவையை வார்ப்பில் ஊற்றும்போது நன்கு வழிந்தோடு வதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது. இரும்பு, துத்தநாகம் போன்ற பிற உலோகங்கள் உலோகக் கலவை யிலுள்ள அழுக்குகளாகும். அக்காலத் தில் திட்டவட்டமான அளவில் உலோகங்களை இக்காலத் தொழிற் சாலைகளில் செய்வது போல சேர்த்து சிற்பங்கள் செய்யவில்லை. ஏனெனில், ஒரே இடத்தில் புதைய லாகக் கிடைத்த சிற்பங்களின் உலோக விகிதத்தில் மாற்றங்கள் உள்ளன. ஒரே சிற்பத்தின் பல பகுதிகளில் ஒரே விகிதாச்சாரத்தில் உலோகங்கள் இல்லை. எனினும், செப்புத் திருமேனிகளில் காணப்படும் உலோகங்களின் அளவினைக் கொண்டு உலோகங்களை வகைப் படுத்தலாம்.

பெருங் கூட்டுப் பொருட்கள் 2 சதவிகிதத்திற்கு மேல் செம்பு, வெள்ளீயம், காரியம், துத்தநாகம்.

சிறுங் கூட்டுப் பொருட்கள் 0.1 சதவிகிதம் முதல் 2 சதவிகிதம் வரை இரும்பு, நிக்கல், ஆர்சனிக், ஆண்டிமணி.

அடையாள உலோகங்கள் 0.1 சதவிகிதத்திற்குக் கீழ் பிஸ்மத், காட்மியம், வெள்ளி, தங்கம்.

சிற்ப வார்ப்பு முறைகள்.

கட்டி வார்ப்பு முறை (மெழுகு இழத்தல் முறை,) 'வெற்றிட வார்ப்பு முறை' என்ற இரண்டு முறைகளில் சிற்பங்கள் பண்டைத் தமிழகத்தில் வார்க்கப்பட்டன. எனினும் ம்தல் முறையே பெருமளவில் செயல் படுத்தப்பட்டது. கி.பி. முதலாம் நூற்றாண்டில் கூட வெற்றிட வார்ப்பு முறையில் செப்புத் திருமேனிகள் வார்க்கப்பட்டுள்ளன.

கட்டி வார்ப்பு முறை

மெழுகு உருவத்தைப் பயன் படுத்தி மெழுகு இருந்த இடத்தில் உலோகக் கலவை நிரப்பும்படியாக மெழுகை உருக்கி வெளியேற்றி சிற்பம் செய்வதாலும் வெற்றிடம் ஏதுமின்றி கட்டியான உருவம் கிடைப்பதாலும் இம்முறை 'கட்டி வார்ப்பு முறை' என்று அழைக் கப்படுகிறது. இம்முறையில் தேவை யான உருவம் மெழுகினால் செய்யப் பட்டு அதற்கு மேல் 'புற்றுமண்' ணாலான மெல்லிய பூச்சு பூசி உலரவைத்து மறுபடியும் தேவையான அளவு மண் மெழுகு உருவத்தின் மீது பூசப்படும். இவ்வுருவம் நிழலில் மட்டும் உலர்த்தப்படுகிறது. நன்கு உலர்ந்த பின் சுமார் 80 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலையில் மெழுகு உருக்கப்பட்டு அகற்றப்படும். இப்போது கிடைப்பது கழிமண் வார்ப்பு ஆகும்.

இவ்வார்ப்பு உலோக உருக்குக் கலவை ஊற்றுவதற்கான வாய் வெளியே தெரியும் வண்ணம் புதைக்கப்படும். கைகள் மற்றும் அதிக வேலைப்பாடுடைய பகுதியில் உலோக உருக்குக் கலவை நன்கு சேரும் வண்ணம் இணைப்புக் குழாய்களும் செய்யப்பட்டிருக்கும். இப்போது உருகிய உலோகக் கலவை சிறிது சிறிதாக ஊற்றப்படும். வார்ப்பு முழுவதும் நிறைந்ததும் இயற்கை யாகவே குளிரவைக்கப்படும்.

இக்கட்டுரை ஆசிரியரால் பழங் கால சிற்பங்களின் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டபோது அவை கழிமண் வார்ப்புகளில் மிகமிக மெதுவாக குளிரவைக்கப்பட்டது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நன்கு குளிர்ந்த பின் வார்ப்பு வெளியே எடுக் கப்பட்டு கழிமண் பகுதி உடைக் கப்பட்டு சிற்பம் வெளிக்கொணரப் படும். ஒரே வார்ப்பில் செய்ய முடியாதவை தனியாகச் செய்து ஒட்ட வைக்கப்படும். இவ்விதமாகப் பெறப் பட்ட சிற்பம் சிற்பக் கலைஞரால் உளி, அரம் போன்ற கருவிகளால் வெட்டியும் தேய்த்தும் கலை வேலைப்பாடுகள் செய்யப்பட்டு

பின்னர் கடற்கரை மணல் கொண்டு தேய்த்து மெருகேற்றப்படும். இம் முறையில் ஒரு வார்ப்பு கொண்டு ஒரே ஒரு உருவம் தான் செய்ய இயலும். எனவே, எல்லாவிதத்திலும் ஒற்றுமையான இரண்டு சிற்பங்களை உருவாக்கவே முடியாது. சோழர் காலச் சிற்பங்கள் அனைத்தும் இம்முறையில் செய்யப்பட்டவை யாகவே உள்ளன.

வெற்றிட வார்ப்பு முறை

உட்பக்கம் வெற்றிடமாகவோ அல்லது வேறு பொருட்களாலும் நிரப்பப்பட்டு மேற்பகுதி மட்டும் வெங்கலத்தால் வார்ப்பதால் இம் முறை 'வெற்றிட வார்ப்பு ம்றை' எனப்படும். இம்முறையில் செய்யப் படும் சிற்பங்கள் கட்டி வார்ப்பு முறையில் செய்யப்படும் சிற்பங்களைக் காட்டிலும் எடை குறைவாக இருக்கும். இவ்வித வார்ப்பு முறையில் செய்யப்பட்ட உருவங்கள் மிகக் குறைவே. முதலில் கழிமண்ணால் வேண்டிய உருவம் செய்யப்படும். பின்னர் மெழுகினை கயிறு போன்று திரித்து அவ் வுருவத்தின் மீது இடைவெளியின்றி சுறறப்படும். மெழுகுக் கயிறு மண் உருவத்தின் மீது இடைவெளியின்றித் தேய்த்துப் பரப்பப்படும். வேலைப் பாடுகள் மெழுகு கொண்டே உருவாக்கப்படும்.

உருக்கிய உலோகக் கலவை உருவத்தின் எல்லாப் பகுதியையும் அடைவதற்கு எளிதாக இருக்க மெழுகினால் இணைப்புகள் உருவாக் கப்படும். இந்த இணைப்புகள் உள்ளிட்ட அனைத்து மெழுகுப் பகுதியின் மேலும் மெல்லிய புற்றுமண் கலவை பூசப்படும். நிழலில் உலர்த்தப்பட்ட பின்னர், இந்த வார்ப்பு சூடாக்கப்பட்டு மெழுகு வெளியேற்றப்படும். இவ்வார்ப்பு பூமியினுள் புதைக்கப்பட்டு உருகிய உலோகக் கலவை ஊற்றப்பட்டு இயற்கையாகக் குளிர வைக்கப்படும். பின்னர் தேவையற்ற இணைப்புப் பகுதிகள் போன்ற உலோகப் பகுதிகள் அகற்றப்பட்டு உலோகக் கலைஞரால் உளி, அரம் போன்ற வற்றால் வேலைப்பாடுகள் அமைக் கப்பட்டு கடல் மணணால் மெருகேற்றப்படும். இம்முறையிலும் ஒரு வார்ப்பிலிருந்து ஒரு சிற்பம் மட்டுமே உருவாக்க முடியும். சோழர் காலத்தில் குத்துவிளக்குகள் இம் முறையில் ஒரே வார்ப்பாகச் செய்யப் பட்டன. கழிமண்ணுக்குப் பதிலாக இரும்புக் கம்பிகள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

சிலை திருடுவோரிடமிருந்து பாதுகாக்க

இந்தியப் புதையல் சட்டம், 1878 மற்றும் அரும்பொருட்கள் ஏற்றுமதி கட்டுப்பாடு சட்டம், 1947 ஆகியவை இவ்வித விலைமதிப்பற்ற கலைச் செல்வங்களைப் பாதுகாக்க இந்திய மைய அரசால் இயற்றப்பட்ட சட்டங் களாகும். இச்சட்டங்கள் கலைக் கூடங்கள் அருங்காட்சியகங்கள் ஆகிய இடங்களில் சிற்பங்களைப் பாதுகாக்க உதவிபுரிகின்றன. தமிழகக் கோயில்களிலுள்ள வெங்கலச் சிற்பங் களைத் திருட்டுகளிலிருந்து பாது காக்க தமிழ்நாடு அரசு சிலைப் பாதுகாப்பு மையங்களை உருவாக்கி பாதுகாக்க நடவடிக்கை எடுத்து கோயில்களில் தகுந்த பாதுகாப்பு மையங்களை உருவாக்கி பாதுகாக்க நடவடிக்கை எடுத்து கோயில்களில் தகுந்த பாதுகாப்பு இல்லாமலும் வழிபாட்டில் இல்லாமலும் உள்ள சிற்பங்களைப் பாதுகாத்து வருகிறது.

வெற்றிட வார்ப்பு முறையில் செய்யப்பட்ட நாகப்பட்டினம் புத்தர் சிற்பம்

ஆழ்வார்கள்

1995 ஜனவரி எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

பேராசிரியர்
டாக்டர்
ந. சுப்புரெட்டியார்

எம்பெருமானுடைய திருக்கண்களாகிய அமுத வெள்ளத்தில் ஆழ்ந்திருப்பவர் என்னும் காரணத்தினால் 'ஆழ்வார்கள்' என்ற திருநாமம் பெற்றனர். இந்த ஆழ்வார்கள் பதின்மர். இதனால் பதின்மர் செந்தமிழ், என்ற திவ்விய கவிப்பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அவர்களின் திருவாக்கும் எழுந்தது. இப்பதின்மர்: பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசைபிரான், நம்மாழ்வார், குலசேகப் பெருமாள், பட்டர்பிரான் பெரியாழ்வார், தொண்டரடிப் பொடிகள், திருப்பாணாழ்வார், கலியன், திருமங்கையாழ்வார் என்பர். நம்மாழ்வார் திருவடிகளான மதுர கவிகளையும் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான கோதையையும் சேர்த்து 'ஆழ்வார்கள்' பன்னிருவர் என்று கூறுவதும் உண்டு.

முதலாழ்வார்கள் மூவர்

1. பொய்கையாழ்வார்

இவர் காஞ்சி சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதியின் வடபுறத்திலுள்ள பொற்றாமரைப் பொய்கையில் பூத்ததொரு நற்றாமரை மலரில் ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் திருவவதரித்தார். இவருடைய பெருமையைக் கண்ட அனைவரும் இவரைத் தேவிற் சிறந்த திருமாலின் பாஞ்சசன்னியம் என்னும் திருச்சங்கின் அம்சமாக அறுதியிட்டனர். பொய்கையில் அவதரித்தது காரணமாகப் 'பொய்கையாழ்வார்' என்ற திருநாமம் பெற்றார்.

2. பூதத்தாழ்வார்

மாமல்லபுரம் என வழங்கும் திருக்கடல் மல்லையில் குருக்கத்திப் பந்தரில் ஒரு குருக்கத்தி மலரில் ஐப்பசித் திங்கள் அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தார். வடமொழியில் '(பூ சத்தாயாம்)' என்ற தாது வடிவாகப் பிறந்தது 'பூதம்' என்ற சொல். இது சத்தைப் பெற்றது என்று பொருள்படும். எம்பெருமானின் திருக்குணங்களை அனுபவித்தே சத்தைப் பெற்றார் என்னும் காரணம் பற்றியே பூதத்தாழ்வார் என்ற திரு நாமத்தால் வழங்கப்பெற்றார். இவரை திருமாலின் கௌமோதகி என்ற கதையின் அம்சமாகக் கருதுவர் வைணவப் பெருமக்கள்.

3. பேயாழ்வார்

சென்னை திருவல்லிக்கேணி என்னும் திவ்விய தேசத்திற்குத் தெற்கிலுள்ள மயிலாப்பூரில் ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில் திருக்கிணற்றில் உண்டானதொரு செவ்வல்லி மலரில், ஐப்பசித் திங்கள் சதய நட்சத்திரத்தில் திருமாலின் நந்தகம் என்ற வாளின் கூறாக அவதரித்தார். இவர் ஒப்புயர்வற்ற பகவத் பத்தியையுடையவராய், பார்ப்பவர்கள் கண்ணில் இவர் பேய்ப்பிடித்தவர் என்னும்படி நெஞ்சழிந்து கண் கழன்று அழுதும் சிரித்தும் தொழுதும் எழுந்தாடியும் மகிழ்ந்து பாடியும் அலறியுமே பொழுது போக்கிக் கொண்டிருந்தமையால் பேயாழ்வார் என்ற திருநாமம் பெற்றவர்.

இந்த மூவரும் பார்ப்பனர் என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை.

இம்மூவருக்கும் வைகுந்த நாதனின் திருவாணையால் சேனை முதலியார் தனித்தனியே பஞ்ச சமஸ்காரம் செய்து வைத்துத் திருமந்திரப் பொருளையும் உபதேசித்ததாக வரலாறு. ஒருநாள் இருந்த இடத்தில் மற்றொரு நாள் இராமல் ஒடித்திரியும் யோகியர்களாய் இருந்த இவர்கள், தம்மிலும் ஒருவரையொருவர் அறியாமல் தனித் தனியே சஞ்சாரம் செய்து கொண்டிருந்தவர்கள். இவர்கள் மூவரையும் ஓரிடத்தில் சேர்த்து ஆட்கொண்டு இவர்கள் முகமாக உலகத்தை உய்விக்க என்ற திருவுள்ளங்கொண்ட எம்பெருமான், இவர்களைத் திருக்கோவலூரில் மிருகண்டு என்பாரின் திருமாளிகையில் உள்ள இடைகழியில் சந்திக்க வைத்து அவர்களை நெருக்கிக் காட்சி நல்கினான். அப்பொழுதுதான் திவ்வியப்பிரபந்தம் பிறந்தது. மூவரும் அருளிச் செய்தவை முதல் மூன்று திருவந்தாதிகள்.

திருக்கோவலூர் நிகழ்ச்சிக்குப் பிறகு இவர்கள் மூவரும் திருக்

1. பொய்கையாழ்வார்

கோவலூர் ஆயனாரைத் தொழுது விடைபெற்றுக் காண்டு நெடுங்காலம் திருப்பதிகள் தோறும் சென்று மங்களாசாசனம் செய்து யோக பலத்தால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்திருந்து வையகத்தை வாழ்வித்தனர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. ஆனால் இவருக்குப் பின்னர்த் தோன்றிய ஆழ்வார்களுள் ஒருவராவது இவர்களைச் சந்தித்ததாகச் சான்றுகள் இல்லை.

4. திருமழிசையாழ்வார்

பார்க்கவர் என்ற முனிவருக்கும் தேவமாது கனகாங்கிக்கும் திருமழிசையில் சுதர்சனம் என்ற திருவாழியின் அம்சமாகத் தைத்திங்கள் மக நட்சத்திரத்தில் பிறந்தவர். பிரப்பந் தொழில்புரியும் திருவாளன், அவன் துணைவி பங்கயச்செல்வி இவர்களால் வளர்க்கப் பெற்றவர். இளமையில் தம் தந்தையின் குலத்தொழிலான கூடை முடைதல் போன்ற தொழிலில் ஈடுபட்டிருந்தார். தக்க வயது வந்ததும் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு எத்தனையோ நாடுகளிலும் சஞ்சாரம் செய்து ஒரு சித்தராகின்றார். எல்லாப் பொருளுக்கும் தலைமையான பரத்துவம் எது என்பது பற்றி ஆராய்ந்தார். உலகாயதம் பௌத்தம், சமணம் முதலிய அவைதிக சமயங்களுள்ளும், மாயாவாதம், சைவம் முதலான வைதிக சமயங்களிலும் ஒவ்வொன்றிலும் தனித்தனியே புகுந்து ஆராய்ந்து அவற்றிற்குரிய சாத்திர நூல்களைக் கற்றுத் தெளிந்து அவற்றிலுள்ள குறைபாடுகளைக் கண்டார். புதிய சமயத்திற்கு மாறிக்கொண்டே வந்தார். பேயாழ்வாரின் தொடர்பினால் வைணவ சமயத்திற்கு மாறினார். அவரால் பக்திசாரர் என்ற புதிய திரு நாமமும் சூட்டப் பெறுகின்றார். திருக்குடந்தையில் தம் இறுதி நாட்களைக் கழித்து 1 திருச்சந்த விருத்தம் 2 நான்முகன் திருவந்தாதி என்ற இரு பிரபந்தங்களை அருளிச் செய்கின்றார். இத்திருப்பதியிலேயே பல ஆண்டுகள் வாழ்ந்திருந்து திருநாட்டுக்கு எழுந்தருளினார். பின் வந்த ஆழ்வார்கள் இவரைச் சந்தித்தமைக்குச் சான்றுகள் இல்லை.

5. நம்மாழ்வார்

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநகரி எனப்படும் திருக்குருகூரில் வைகாசி விசாகத்தில் பகவானது அம்சமும், கௌத்துவத்தின் அம்சமும் சேனை முதலியார் (விஸ்வக்சேனர்) அம்சமும் கூடிய ஒரு திருக்குமாரர் அவதரிக்கின்றார். தந்தையார் காரியார், தாயார் உடைய நங்கையார், திருக்குறுங்குடி நம்பியின் திருவருளால் அவதரித்ததாகச் சொல்வர். குழந்தை பிறந்த நாள் தொட்டு அழுதாற்றதல், பால்பருகல் முதலான மக்கள் இயல்பு ஒன்றுமின்றியும் வாட்டம் சிறிதும் இல்லாதும் பரிபூரணராக இருந்தது. உலகிலுள்ள ஏனைய குழந்தைகளின் இயல்புக்கு மாறாக இருந்தமையால் பெற்றோர் சூட்டிய பெயர் மாறன் என்பது. வகுளாபரணர், சடகோபர், பராங்குசர் என்ற வேறு திரு நாமங்களும் உண்டு.

பெற்றோர் குழந்தையைத் திருக்குருகூரில் உள்ள திருக்கோவிலுக்கு எடுத்துச் சென்று பொலிந்து நின்ற பெருமானைச் சேவிக்கச் செய்தனர். பிறகு அக்குழந்தை அத்திருக்கோவிலிலுள்ள புளியமரத்தடியில் சென்று அமர்ந்தது. ஆழ்வாராகிய குழந்தை எழுந்தருளியிருந்த காரணத்தால் அந்தப் புளியமரத்தைத் திருப் புளியாழ்வார் என்று வழங்கலாயினர். இவரை ஆதிசேடன் அம்சமாகக் கருதுவர் வைணவப் பெருமக்கள். பெற்றோர்களும் திருப்புளியாழ்வார் அடியிலேயே குழந்தையைக் கிடத்தி வளர்த்து ஓம்பி வரலாயினர். குழந்தையும் பதினாறாண்டு வரையில் கண்விழித்துப் பார்த்தல், பேசுதல் முதலிய செயல்கள் ஒன்றுமின்றி இறைவனையே நினைத்தவண்ணம் அமர்ந்திருந்தது. பரமபதநாதன் நியமனப்படி சேனை முதலியார் தனிமையில் எழுந்தருளி இவருக்குத் திருவிலச்சினை செய்து எல்லாவித மந்திரார்த்தங்களையும் உபதேசித்தருளினார். திருமாலின், திருவவதாரம் என்று கருதும் அளவுக்கு வீறுபாடுடைய இந்த ஆழ்வார், பல காரணங்களால் ஆழ்வார்களின் தலைவராகக் கருதப்பெற்றவர்.

இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் 1. திருவிருத்தம், 2. திருவாசிரியம், 3. பெரிய திருவந்தாதி, 4

2. பூதத்தாழ்வார்

திருவாய்மொழி என்ற நான்கு. இவர் 35 திருநட்சத்திரம் வாழ்ந்திருந்து திருநாடு அலங்கரித்தனர்.

6. மதுரகவியாழ்வார்

திருக் குருகூருக்கு இரண்டுகல் தொலை விலுள்ள திருக்கோளூர் என்ற திவ்விய தேசத்தில் நம்மாழ்வார் அவதரித்த சில ஆண்டுகட்கு முன்னதாக அவதரித்தவர் மதுரகவிகள். பிறந்தநாள் சித்திரைத் திங்கள் சித்திரை நட்சத்திரம். பார்ப்பனக் குலத்தவர். வடமொழி தென்மொழி நூல்களையும், சாத்திரங்களையும் கற்றுத்துறைபோய வித்தகர். வடநாட்டுத் திருத்தலப் பயணத்தை மேற்கொண்ட இவர், அயோத்தி முதலிய தலங்களைச் சேவித்துக் கொண்டு பரிசுத்த பூமியாகிய அயோத்தியில் சில காலம் வாழ்ந்துவரலாயினர்.

அக்காலத்தில் ஒருநாள் இரவில் இவர் திருக்கோளூர் எம்பெருமானைத் தென்திசை நோக்கித் தொழுதார். அத்திசையில் ஒரு திவ்வியமான பேரொளியைக் கண்டு வியப்புற்றார். பல நாட்கள் நடந்து திருக்குருகூரை அடைந்தார். அவ்வூரை அடைந்ததும் அந்த ஒளி காணப்பெறவில்லை. ஊர்மக்கள் மூலம் திருப்புளியாழ்வாரின் அடியில் எழுந்தருளியிருந்த சடகோபரை அறிந்து, அவரையே தன் ஞானாசிரியராக ஏற்றுக் கொண்டு அவர் மூலம் தத்துவம், இதம், புருஷோத்தம் ஆகியவற்றின் இயல்புகளையெல்லாம் அறிந்து தெளிந்தார்.

பகவத் பக்தியினும் பாகவத பக்தியே சிறந்தது என்ற உண்மையைக் கடைப்பிடித்துத் தம் ஞானாசிரியர் விஷயமாகக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற பிரபந்தத்தை அருளினார். தம் ஞானாசிரியர் திருநாடு அலங்கரித்த பின்னரும் இவர் குருகூரிலே இருந்துகொண்டு தம் ஆசிரியர் பெருமைகளை வெளியிட்டுக் கொண்டும் சில காலம் எழுந்தருளியிருந்து பின்பு சிந்தையும் மொழியும் செல்லா நிலைத்தான பேரின்பப்பெருவீட்டை அடைந்தவர்.

4. திருமழிசையாழ்வார்

5. நம்மாழ்வார்

7. குலசேகராழ்வார்

கேரள மாநிலத்தில் கோழிக்கோடு என்ற இராஜதானியில் திருவஞ்சிக் களம் என்ற ஊரில் அரச வம்சத்தில் திருவவதரித்தார். தந்தையார் திடவிருதன் என்னும் அரசன், தாயார் அரசமாதேவி நாதநாயகி. பிறந்தநாள் மாசித்திங்கள் புனர்பூச நட்சத்திரத்திரம். இவரை திருமாலின் திருமார்பிலுள்ள கௌத்துவ மணியின் அவதாரமாகக் கொள்வர். இவருக்குப் பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் 'குலசேகரன்' என்பது. திடவிருதனுக்குப் பிறகு குலசேகரன் பல்லாண்டுகள் நல்லாட்சி செய்து நற்புகழ் பெற்றார். இவருக்கு ஆசைக்கு ஒரு மகளும், ஆஸ்திக்கு ஒரு மகனும் என்ற பழமொழிப்படி இளை என்ற மகளும், திடவிரதன் என்ற மகனும் பிறந்தனர்.

முழுமுதல் கடவுள் யார் என்ற விசாரத்தில் ஈடுபட்டார் குலசேகரன். கமலக்கண்ணனின் திருவருளால் நாராயணனே முழுமுதற் கடவுள் என்ற உண்மை அவாது ஞானக் கண்ணுக்குப் புலனாயிற்று. தெளிவாகவும் விளக்கம் அடைந்தது திருமாலின் விபவாவதாரங்களில் இராமகிருஷ்ணாவதாரங்களிடத்தும் அர்ச்சாவதாரத்தில் திருவரங்கம், திருவேங்கடம், திருவத்துவச்சோடு ஆகிய திவ்விய தேசத்து எம்பெருமானின்களிடத்தும் பக்திப் பெருங்காதல் கொண்டிருந்தார். இராமனிடத்தில் ஈடுபாட்டினால் அவன் பெயராகிய 'பெருமாள்' இவர் பெயருடன் சேர்ந்து 'குலசேகரப்பெருமாள்' என்ற திருநாமத்துடன் வழங்கப் பெற்றார். இவருடைய அருளிச் செயல் 'பெருமாள் திருமொழி' என்பது. இவர் 67 ஆண்டுகள் பூவுலகில் வாழ்ந்து பரமபதம் அடைந்தவர்.

3. பேயாழ்வார்

8. பெரியாழ்வார்

தென்தமிழ்நாட்டில் காமராசர் மாவட்டத்தில் சிரிவில்லிபுத்தூரில் ஒரு திவ்விய தேசம். இந்தத் திருத்தலத்தில் பார்ப்பனர் மரபில் வேயர் குலத்தில் அவதரித்தவர், பெரியாழ்வார். தந்தையார் முகுந்த பட்டர். தாயார் பதுமவள்ளி அம்மை. பிறந்த திருநட்சத்திரம் ஆனி-சுவாதி. இவர் தந்தையார் இவருக்கு இட்ட பிள்ளைத் திருநாமம் விஷ்ணு சித்தர். இவரைக் கருடாம்சமாக அவதரித்தவர் என்று வைணவ உலகம் கருதும். நந்தவன கைங்கரியத்தை மேற்கொண்டு பலவிதமான பூமாலைகள் தொடுத்து அத்திருத்தலத்து எம்பெருமான் வடபத்திரசாயிக்கு (ஆலிலைப் பள்ளியானுக்கு)ச் சாத்தி மகிழ்வார். பாண்டியன் அரசவையில் பரத்துவ நிர்ணயம் செய்து பொற்கிழி பெற்ற பெருமை இவருக்கு உண்டு. பாண்டிய மன்னன் இவருக்குப் பட்டர்பிரான் என்ற விருதை அளித்துப் பாராட்டுகின்றான். பட்டத்து யானையின்மீது ஏற்றி பவனி வரச் செய்கிறான். மகனுடைய விழாவைக் காணவரும் பெற்றோர் போல பரமபதநாதன் பெரிய திருவாழி திருச்சங்குடன் பிராட்டியார் சமேதராய் ஆகாயத்தில் காட்சி அளிக்கின்றான். "எம்பெருமானின் சேர்த்தியழகு (லாவண்யம்) இருள்தருமா இவ்வுலகில் வந்து நிற்கின்றதே, பாவிகளின் கண்ணெச்சில் பட்டு எம்பெருமானுக்கு என்ன தீங்கு நேரிடுமோ?" என்று அஞ்சியவர் போல் யானைக்கழுத்தின் மேல் கிடக்கும் மணியையே கைத்தாளமாகக்கொண்டு பாடத் தொடங்குகின்றார். பாடி முடிக்கின்றார். இப்பிரபந்தம் மதுரை கூடலழகர் விஷயமாக ஏற்பட்டதாகப் பெரியோர் பணிப்பர். இவர் பாடியருளிய பாசுரங்கள் யாவும் 'பெரியாழ்வார் திருமொழி' என்ற பெயரில் முதலாயிரத்தில் சேர்க்கப் பெற்றுள்ளன. இவர் எண்பத்தைந்து திருநட்சத்திரங்கள் வாழ்ந்ததாக, குரு பரம்பரைகளால் அறிய முடிகின்றது. இவர் பரமபதித்தது சிரிவில்லிப் புத்தூரில்.

9. ஆண்டாள்

இவள் பிறப்பு வினோதமானது. பெரியாழ்வார் திருத்துழாய் பாத்தியமைத்தற்பொருட்டுக் களைக்கொட்டு கொண்டு நந்தவனத்தைக் கொத்துகையில் கொத்திய நிலத்தடியில் சீதேவி-பூதேவியின் அம்சமாக ஒரு பெண் மகவு கிடைத்தது. கிடைத்த நாள் ஆடிமாதம் பூர நட்சத்திரம். மக்கட்பேறு வாய்க்கப்பெறாத ஆழ்வாருக்கு இக்குழந்தை 'இறைவன் அருளிய செல்வமாகத்' தோன்றியது. இவரும் இவருடைய மனைவி விரஜையும் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர். கோதை என்பது இவர்கள் குழந்தைக்கு இட்ட பிள்ளைத்திருநாமம். குழந்தையின் விளையாட்டு விருப்பம், இலட்சியம், எல்லாம் பக்திமயமாகவே இருந்தன. கோதைக்கு ஆழ்வாரே கல்வி கற்றுத்தந்தார். இவருக்குக் கவிதை பாடும் ஆற்றலும் இருந்தது. கற்பனைக் கண்ணும் வாய்க்கப்பெற்றவளாக இருந்தாள்.

யுவதியாக வளர்ந்த பிறகு, கோதையின் காதல் பக்திக் காதலாக வளர்ந்தது.

'கோல்தேடி ஓடும்
கொழுந்ததே போன்றதே
மால்தேடி ஓடும் மனம்'

என்ற நம்மாழ்வாரின் அநுபவம் இவளுக்கு ஏற்பட்டு விட்டது. புருடோத்தமனான வேணு கோபால்தான் தான் படரவேண்டிய கொள்கொம்பு என்பதை உணர்ந்தாள். வடபத்திர சாயிக்குத் தன் தந்தையார் தொடுத்த மாலைகளைத் தான் அணிந்து பார்த்துக் கொள்வதால், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்ற திரு நாமமும் பெற்றாள்.

இவள் திருவரங்கப் பெருமானை மணந்ததாக வரலாறு. பெரிய பெருமானின் முன்மண்டபத்தில் இவளை நிறுத்திப் பெருமானைச் சேவிக்கச் செய்தனர். இவளும் அரவப் படுக்கையின் மீதேறி பெரிய பெருமாளின் திருமேனியில் கலந்து அவரை என்றும் பிரியாதிருக்கும் நிலையை அடைந்தாள்.

இவள் அருளிய பிரபந்தங்கள் 1 திருப்பாவை 2 நாச்சியார் திருமொழி என்ற இரண்டு. இவை முதலாயிரத்தில் பெரியாழ்வார் திருமொழியை அடுத்து இடம் பெற்றுள்ளன.

10. திருப்பாணாழ்வார்

இவர் சோழவளநாட்டில் திருவரங்கத்திற்கு அருகில் காவிரியின் தென் கரையிலுள்ள உறையூரில் பாணர் குலத்தில் திருவவதரித்தவர். இவரைத் திருமாலின் ஸ்ரீவத்ச அம்சமாகக் கொள்வர், வைணவப் பெருமக்கள். பிறந்தநாள் கார்த்திகை மாதம் உரோகிணி நட்சத்திரம். இவரை வேதாந்த தேசிகர் 'பாண் பெருமாள்' என்று சிறப்பித்துப் பேசுவர்.

இவர் பிறப்பே விநோதமானது. இவரைப் பெற்றெடுத்த தாய் தகப்பன் யாவரெனத் தெரிந்து கொள்ள இயலவில்லை. ஓர் அந்தணப் பெருமகன் கழனியிலே நெற்பயிர்க்கதிர்களுக்கிடையே கண்டெடுத்த குழந்தையே பாண்பெருமாள்.

6. குலசேகராழ்வார்

7. பெரியாழ்வார்

இக்குழந்தையை அவ்வூரில் பாணர் குலத்தில் பிறந்தான் ஒருவன் கண்டு, தன் நல்வினைப் பயன் என மகிழ்ந்து, இல்லத்திற்கு எடுத்துச் சென்று ஆவின்பால் போன்ற சத்துவகுண உணவையே கொடுத்து வளர்த்து வந்தான். வளர்ப்புத்தந்தை இவருக்கு என்ன பெயர் இட்டான் என்பது கூட அறியக்கூடவில்லை. அரங்கன் புகழை யாழ் கொண்டு பாடுவதையே பொழுது போக்காகக் கொண்டிருந்தமையால், அக்காலத்து மக்கள் 'பாணன்' என்றே இவரை வழங்கி வந்தனர்.

அக்காலச் சமுக நிலைப்படி, இவர் மனம் தாழ்வுணர்ச்சியால் பீடிக்கப் பெற்றிருந்தது. அரங்கன் திருக் கோயிலில் அடியிடுவதற்கு இவர் மனம் துணியவில்லை. ஆகவே காவிரியின் தென் கரையிலிருந்த வண்ணம் யாழும் கையுமாக நின்றுகொண்டு நம்பெருமானைத் திசை நோக்கித் தொழுவதை அன்றாட வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அரங்கனுக்குக் கைங்கரியம் செய்து வைத்த லோக சாரங்க மாமுனிவர் தமக்கு இறைவன் கனவில் தெரிவித்த வண்ணம் பாணரைத் தம் திருத்தோளில் ஏற்றிக் கொண்டு அரங்கன் சந்நிதியை அடைந்தார். இதனால் இவருக்கு 'முனிவாகனர்' என்ற திருப்பெயரும் வழங்கலாயிற்று. முனிவாகனர் அரங்கனது, திருமேனியை அடிமுதல் முடிவரை கண்குளிர சேவித்தார். அத்திருமேனியில் ஆழங்கால் பட்டு அதன் அழகை அனுபவித்து அந்த அனுபவத்திற்குப் போக்கு வீடாகப் பத்துப்பாசுரங்கள் கொண்ட 'அமல னாதிபிரான்' என்ற திவ்வியப் பிர பந்தத்தை அருளிச் செய்தார். இந்தப் பிரபந்தம் முதலாயிரத்தில் சேர்க்கப் பெற்றுள்ளது பத்துப்பாசுரங்களையும் பாடிப் பரவி உவப்போடு நிற்கையில் பெரியபெருமாளும் அவரை அங்கீ கரிக்க அவரும் அனைவரும் காண அப்பிரானது திருவடிகளில் மறைந்து இரும்புண்ட நீராயினார். இவர் இப்பூவுலகில் வாழ்ந்திருந்த காலம் ஐம்பது திருநட்சத்திரம் என்பர்.

11. தொண்டரடிப் பொடிகள்

சோழ நாட்டில் திருப்புள்ளம் பூதங்குடி என்னும் திவ்விய தேசத்திற்கு அருகில் சுமார் ஒன்றரை கி.மீ. தொலைவில் உள்ள திரு மண்டங்குடியில் அவதரித்தவர். பிறந்தநாள் மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரம். இவரைத் திருமாலின் வைஜயந்தி என்னும் வனமாலையின் அம்சமாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். தந்தையார் வேதவி சாரதர் என்ற முன்குடுமிப் பார்ப்பனர். தாயார் பெயர் அறியக்கூடவில்லை. இவருக்குத் தந்தையார் இட்ட பெயர் விப்ரநாராயணர் என்பது. தந்தை யாரிடமே கல்வி கற்றார். வேதசாத்திரங்களிலும் பயிற்சி பெற் றார். சேனை முதலியார் வைகுண்டத் தினின்றும் எழுந்தருளி அவருக்குப் பஞ்சசம்ஸ்காரம் செய்தார்.

திருஅரங்கம் சென்று அரங்க நாதனுக்கு மலர்த்தொண்டு புரிந்து வந்தார். இவர் அமைத்த நந்தவனம் இன்றும் உள்ளது. எப்படியோ தேவதேவி என்ற விலைமாதின் வலையில் சிக்கினார். பின்னர் பொருளில்லாத ஆழ்வாரை அவள் கைவிட்டாள். எம்பெருமான் மனித வடிவம்கொண்டு விப்ரநாராயண ருக்குத் தெரியாமல் ஒரு பொன் வட்டிலை விப்ரநாராயணர் தந்ததாகச் சொல்லி தேவதேவியிடம் சேர்த்தார். அடுத்தநாள் சந்நிதியிலுள்ள பொன் வட்டில் மறைந்த செய்தி எங்கும் பரவியது. தேவ தேவியின் வீட்டிலிருப்ப தாக வேலைக்காரி மூலம் அறிந்த அரச காவலர்கள் விப்ரநாராயணர் சிறையிலிடப் பெற்றார். கனவில் உண்மையை அறிந்த அரசன் நாராயணரை விடுவித்தான். பின்னர் இறைத் தொண்டில் மூழ்கி 'தொண் டரடிப் பொடிகள்' என்ற திருநாமம் பெற்றார்.

இவர் அருளிச்செய்த பிரபந் தங்கள் 1 திருமாலை 2 திருப்பள்ளி எழுச்சி என்ற இரண்டு. இவை முதலாயிரத்தில் சேர்க்கப் பெற்றுள் ளன.

12. திருமங்கையாழ்வார்

சோழவள நாட்டில் திருநகரிக்கு அருகிலுள்ள திருக்குறையலூரில் கள்ளர் மரபில் அவதரித்தார். அவதரித்த நாள் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம். இவரைத் திருமாலின் சாரிங்கம் என்ற வில்லின் அம்சமாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். பிறந்த குழந்தை நீலநிறமாக இருந்தமையால் நீலன் என்ற பெயரால் வழங்கப் பெற்றார். பெற்றோர் இட்ட பிள்ளைத்திருநாமம் கலியன் என்பது. தந்தையார் சோழ

8. ஆண்டாள்

9. தொண்டரடிப் பொடியாழ்வார்

10. திருப்பாணாழ்வார்

11. திருமங்கையாழ்வார்

12. மதுரகவியாழ்வார்

வேந்தனின் தானைத்தலைவர். இதனால் பிறந்த குடிக்கேற்ப இளமையிலேயே ஆயுதப்பயிற்சி பெற்று அதில் நன்கு தேர்ச்சி அடைந்தார்.

தந்தையாருக்குப் பிறகு ஆலநாட்டின் தலைவராகவும் சோழ மன்னனின் சேனைத் தலைவராகவும் விளங்கினார். அரச விரோதிகளுடன் திறமையாகப் போரிட்டு வாகை சூடியதால் 'பரகாலன்' என்ற புகழ்ப்பெயரும்வந்தடைந்தது. இவரது திறமையை நன்கு அறிந்த சோழமன்னன் அவரைத் திருமங்கை நாட்டுக்குச் சிற்றரசராக்கினான். தன் ஆட்சியில் இவர் அமைத்துக்கொண்ட அமைச்சரவையில் நீர்மேல் நடப்பான். நிழலில் ஒதுங்குவான். தாள் ஊதுவான், தோலாவழக்கன் என்ற நால்வர் இருந்தார்.

'அண்ணன் கோயில்' என வழங்கும் திருவெள்ளக்குளம் என்னும் திருப்பதியில் மருத்துவர் ஒருவர் மகளாகிய 'குமுதவல்லி'யை மணக்க விரும்பி அவர்போட்ட 1. திருவிலச்சினையையும், பன்னிரு திருமண்காப்பும் உடையவராக வேண்டும். 2. நாடோறும் ஓராண்டுக் காலம் 1008 திருமாலடியாருக்கு அமுது செய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தமும் பிரசாதமும் உண்ணல் என்ற இரண்டு நிபந்தனைகளையும் நிறைவேற்றி அவளைத் திருமணம் செய்துகொண்டார். ததியாராதனைத் திட்டத்தில் திறைப் பொருளும் கரைந்தது. அரசன் தந்திரமாக இவரைப் பிடித்து சிறையிலடைத்தான். காஞ்சி வரதராசர் திருவருளால் வேகவதியாற்றங்கரையில் கிடைத்த நிதியால் திறை செலுத்தி எஞ்சிய பொருளைத் ததியாராதனைக்கு வைத்துக் கொண்டார். அரசன் இவர் பெருமையை அறிந்த பல மரியாதை களைச் செய்தான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னரும் ததியாராதனை தொடர்ந்தது. மீண்டும் பொருள் முட்டுப்பாடு ஏற்பட்டது. தம் அமைச்சர்களுடன் மாறுவேடம் பூண்டு, கொள்ளையடித்து, பொருள் திரட்டி தொண்டை நடத்தி வந்தார். ஒருநாள் வயலாளி மணவாளன் ஓர் அந்தணன் கோலம் பூண்டு, தன் மனைவியுடன் பல அணிகளையும் தரித்துக்கொண்டு தன்னையே வழிபறிக்குமாறு செய் தான். மங்கை மன்னன் அவனை வழிமறித்து அவர்களை வழிப்பறி செய்தார். திருமந்திரத்தைப் பெற்றார். அந்தணன் அணிந்திருந்த மோதிரத் தையும் தம் பல்லால் கடித்து வாங்கினார். (சரணாகதி ஆகிவிட்டது) இவற்றால் மன்னனிடம் தத்துவ ஞானச்சுடர் பொங்கி எழுந்தது. திருமங்கையாழ்வாராகிவிடுகின்றனர். தம்முடைய மகிழ்ச்சிப் பெருக்கு கவிதைகளாக மலர்கின்றது. முதல் கவி 'வாடினேன் வாடி' என்பது. தொடர்ந்து இப்பதிகத்தை முற்றுவிக் கின்றார்.

பின்னர் திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார். திருமந்திரம் பிறந்த பத்ரி முதல் வடக்கு திருக்குறுங்குடி தெற்கு வரையில், 86 தலங்களைச் சேவிக்கின்றார். அந்தந்த எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்கின்றார். இவர்தம் அருளிச் செயல்கள் 1 பெரிய திருமொழி 2 திருக்குறுந்தாண்டகம் 3 திருநெடுந் தாண்டகம் 4 திருவெழுக்கூற்றிருக்கை 5 சிறிய திருமடல் 6 பெரிய திருமடல் என்பவையாகும்.

திருமங்கையாழ்வார் மிகவும் ஈடுபாடு கொண்ட எம்பெருமான் திருக்குறுங்குடி நம்பி. இப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்குறுங் குடியில்தான் ஆழ்வார் தம் துணைவி குமுதவல்லியுடன் எழுந்தருளு கின்றார்.

இங்ஙனம் ஆழ்வார்களின் வரலாறுகள் சுருக்கமாக எழுதப் பெற்றன. வரலாற்று முறை மேற்கொள்ளப்பெறவில்லை. விரி வான முழு விவரங்களை வேண்டுவோர் 1 சடகோபன் செந்தமிழ், 2. பரகாலன் பைந்தமிழ், 3. விட்டு சித்தன் விரித்த பைந்தமிழ், 4. ஆழ்வார்களின் ஆவி அமுது என்ற இந்த ஆசிரியரின் நான்கு நூல்களில் கண்டு தெளியலாம்.

தமிழரசு (அரசு ஏடு)

உங்கள் வீடு தேடி வர வேண்டுமா?

உடனே சந்தாதாரராகச் சேருங்கள்!

ஆண்டுச் சந்தா: (தமிழ்) ... ரூ. 72
ஆங்கிலப் பதிப்பு ... ரூ. 36

தமிழரசில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!

உள்ளே முழுப் பக்கம் ... ரூ.2000
உள்ளே அரைப் பக்கம் ... ரூ.1000

விவரங்கட்கு:

உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

கல்வி

கவிஞர் முருகுவண்ணன்





அறிவினைக் கூட்டித் தரும்! கல்வி
அன்பைப் பெருக்கித் தரும்!
அறத்தை வகுத்துச் சொல்லும்! தன்
நலம் கழித்து அருளைத் தரும்!
ஆற்றல் மிகுத்ததுவாம்! நல்ல
அறிவியல் பல்கலையாம்
ஆற்றலில் கல்வியைப் போல் - உலகில்
ஆற்றல்வே றில்லையென்பார்!
இரக்க மனம் வளர்க்கும் கல்வி
ஈகையைச் செய்ய வைக்கும்!
உரம் மிக்க உள்ளம் தரும்! கல்வி
உழைத்திட ஊக்கம் தரும்
'எண்', 'எழுத்' தென்பதுவாம்! கல்வி
இரு கண்ணைப் போன்றதுவாம்!
எண்ணமும் சொல் செயலும் ஒன்றாய்
இருப்பதும் கல்வியாம்
ஏற்றம் தருவதுவாம்! என்றும்
நம்துணை யாவதுவாம்!
ஏற்கும் நமை உலகம் கல்வி,
கற்றோராய் நாம் இருந்தால்!
ஐயம் அகற்றிடுவோம் கல்வி
அனைவர்க்கும் வாய்ப்பதுவாம்!
செய்யுள் நிறைந்ததுவாம்! கல்வி
செல்வக்களஞ்சியமாம்!
ஒருமையின் கற்பதுவாம்! கல்வி
ஓதி யுணர்வதுவாம்!
அருட்செல்வம் கல்வியேதான்! ஔவியம்
அற்றதும் அதொன்றுதான்.

சிறு சேமிப்பு-உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

செழிப்பான வாழ்விற்கு
இன்றே முதலீடு செய்வீர்

இந்திரா விகாஸ் பத்திரம்

சிறப்பு அம்சங்கள்

- ★ 5½ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது
- ★ 18.18% சாதாரண வட்டி.
- ★ பத்திரங்கள் ரூ.200/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/- மதிப்புக்களில் பாதி விலைக்குக் கிடைக்கின்றன.
- ★ விண்ணப்பம் எதுவும் தேவையில்லை.
- ★ தனி நபரும், நிறுவனங்களும் முதலீடு செய்யலாம்.
- ★ ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு மாற்றுவது எளிது.
- ★ முதலீட்டுக்கு உச்ச வரம்பு இல்லை.
- ★ பத்திரங்களின் எழுத்துக்கள் அழிந்துவிட்டாலோ அல்லது கிழிந்துவிட்டாலோ நகல் பத்திரம் வழங்கப்படும்.
- ★ பரிசாகவும் அளிக்கலாம்.

சேமிப்புப் பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விபரங்களுக்கு:
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3, தொலைபேசி: 584440.
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2., தொலைபேசி: 849962
மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சல் அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை
சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை சென்னை - 600 006. தொலைபேசி: 8251784/8251685.

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

DIPR/94/DIS/94

உலகை அச்சுறுத்தும் எய்ட்ஸ்

டாக்டர் அ. மதனகோபால்
தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையம், சென்னை.

இவரைப் பற்றி...

திருச்சி மாவட்டம் மணப்பாறையில் பிறந்த இவர், குக்கிராமங்களில் தாமே விரும்பி, மருத்துவ அலுவலராகப் பணிபுரிந்தவர். 1977 முதல் 1983 வரை தஞ்சை மாவட்ட மருத்துவர்கள் சங்கச் செயலாளராகச் செயல்பட்டவர்.

'கிராமத்தில் டாக்டர்கள்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதி அனைவராலும் பாராட்டப்பட்டவர். உலக அபாயங்களைப் பற்றி அறிந்து, தம் பங்கிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்கிற கருத்தில் 'சுற்றுச்சூழல் அபாய நிலை' என்ற நூலை எழுதியவர்.

தற்போது உலகை உலுக்கி வரும் நோய்களில், 'எய்ட்ஸ்' தலைமையிடம் வகிக்கின்றது. அந்த நோய் குறித்தும் அதைத் தடுப்பது பற்றியும் எழுதிய ஆய்வுக் கட்டுரையே இது. 'எய்ட்ஸ் தி டெர்மினேட்டர்' என்ற ஆங்கிலக் கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளார் இவர்.

எய்ட்ஸ் என்றால் என்ன ?

எய்ட்ஸ் நோய் உலகெங்கும் வேகமாய் பரவி வருகிறது. இந்நோய் இல்லாத நாடே இல்லை எனலாம். நாட்டுக்கு நாடு பலவிதக் காரணங்களால் இந்நோய் தோற்றுகிறது. உடலின் எதிர்ப்புச் சக்தி தரும் ஒருவகை வெள்ளை அணுக்களை ஏமாற்றி – எச்ஐவி வைரஸ் அதே போல் இரசாயன அமைப்பைப் பெற்று – இரத்தத்தில் சென்று, பிறகு அந்த எதிர்ப்புச் சக்தி தரும் செல்களை விரைவில் அழித்து வெற்றிக் கொடி நாட்டும். இதனால் நோய் பீடிக்கப்பட்டவர், தனது நோய்த் தடுப்பு சக்தியை முழுவதும் இழந்து விடுவர். திறந்த வீட்டில் திருடன் நுழைவது போல் பல்வேறு நோய்கள் எளிதில் தாக்கிட இறந்துபடும் சோகம் சூழும்.

ஆரம்ப நாட்களில் அமெரிக்காவின் புகழ்மிக்க நடிகரும் தலை சிறந்த நடிகை எலிஸபெத் டெய்லரின் கணவருமான "மார்லன் பிராண்டோ" அவர்கள் இந்நோயால் இறந்ததால் பெரும்பீதி ஏற்பட்டது. இறந்தவரின் உடலைக் கூடத் தொடமாட்டார்கள். அவர்கள் உடை மற்றும் உபயோகப்படுத்திய பொருட்களையெல்லாம் எரித்தும் புதைத்தும் வந்தனர். எரித்தால்கூட கிருமிகள் சாகவில்லை என்றும் கொசு, மூட்டைப்பூச்சி கடித்தாலும் மற்றவர்களுக்குப் பரப்பும் என்ற தவறான கருத்து நிலவியது. மருத்துவமனைகளில் சேர்ப்பதற்கும் சிகிச்சையளிக்கவும் அஞ்சினார்கள். ஏன்! மறுத்தே வந்தனர். வீட்டிலும் வெளியிலும் கருணையின்றி ஒதுக்கப்பட்டனர். இப்படி எச்.ஐ.வி.1, எச்.ஐ.வி.2 என அமெரிக்க, பிரஞ்சு விஞ்ஞானிகள் இந்த எய்ட்ஸ் நோய் வைரஸ் கிருமிகளைக் கண்டுபிடித்தனர்.

ஆப்பிரிக்காவின் ஒருவகை பச்சைக் குரங்கிலிருந்து மனிதர்களுக்குப் பரவியது என்றும் அமெரிக்காவின் 'ஹிப்டுகள்' ஓரினச் சேர்க்கை, முறையற்ற செக்ஸ் பழக்கமுடையவர்கள் வாயிலாக மற்றவர்களுக்குப் பரவியது எனவும் கருதப்பட்டது. 1981இல் தான் நோய் தெரியும்படி உணரப்பட்டது. இந்தியாவில் 1985இல் 65 நோயாளிகளே இருந்தனர். 1991 இல் 102 ஆகி 1992 செப்டம்பரில் 258 ஆக ஆனது. தற்போது 520 நோயாளிகள் உள்ளனர்.

இந்த வைரஸ் மனிதனை மூன்று வகையில் பாதிக்கிறது :

1. இரத்தத்தில் கலந்திருக்கும், ஆனால், நோயின் அறிகுறிகள் இருக்காது. நோயிடைக் காயமான 6 மாதத்திலிருந்து ஐந்தாண்டுக்குள் நோயைத்தரும்.

2. இரத்ததில் கலந்த உடன் நோய் ஏற்படுத்தி விரைவில் ஆளைக் கொன்றுவிடும்.

3. செயல்தான் மிகவும் ஆபத்தானது. அதாவது இரத்தத்தில் கலந்திருக்கும் ஆனால், பாதிக்கப்பட்டவருக்கு நோய் வராது. பிறகு மற்றவர்களுக்குப் பரப்பும் தன்மையான நோய் பரப்பும் களமாக 'Carrier' இருந்து மறைமுகமாக

எண்ணற்றவர்களுக்கு நோயைப் பரப்பி பெரும் மனித இழப்பை ஏற்படுத்துகிறது.

தற்போது பலவகை ஆராய்ச்சிகள் வெற்றிதரும் சிகிச்சை என அறிவிப்புகள் இன்னும் நம்பிக்கையளிக்காத நிலையில்தான் உள்ளது. தடுப்பூசி கண்டுபிடிப்பது அரிதாக உள்ளது. மருந்துகள் சக்தி வாய்ந்திருந்தால் வேறுவகையில் தன் அமைப்பை மாற்றி எச்.டி.வி.3 என்றபடி வீரிய வகையாக உற்பத்தியாகிறது. எனவே, தடுப்பதைத் தவிர வேறு வழியில்லை எனும் நிலை உலகம் முழுவதும் நிலவுகிறது. இந்நோய் மனித இனத்தை உடனே பெரும் அளவில் கொன்றுவிடும் எனும் உண்மையைப் புரிந்து தன் பணியென அனைவரும் செயல்பட்டால் எந்தச் சிரமமுமின்றி இந்நோயைச் சுலபமாக உலகை விட்டே விரட்டலாம்.

இந்திய அளவில் கடைபிடிக்க வேண்டிய தடுப்பு முறைகள் :

அதிக ஆபத்துமிக்கவர்களான High-Risk விலைமாதர்களை எதிர்கால நலம் வேண்டி வேறு வழியில் வாழ்க்கையமைக்க அனைத்தும் செய்து அரசு உதவவேண்டும். இரத்தப் பரிசோதனை செய்து, நோய் தென்பட்டால் அவர்களை இறுதிவரை கவனித்து தனியாக வைத்து உதவவேண்டும். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை எல்லாம் அழைத்து நிலைமைகளை எதிர்கால நன்மையின் அவசியத்தை அறிவித்து அவர்களுக்கும் நிவாரண உதவிகள் செய்து சீர்படுத்த வேண்டும். பணத்தாசை பிடித்து தவறு செய்யும் யாராக இருந்தாலும் தண்டிக்க வேண்டும். இடைப்பட்ட காலத்தில் தொடர்பு கொள்ள வரும் ஆண்களைக் கட்டாயமாக 'நிரோத்' உறை அணியும்படி கல்வியறிவு புகட்டி அணிந்திட முன்வரும்படிச் செய்திடல்வேண்டும். இப்பணிக்கு மிகமிக முன்னுரிமையளித்து இலஞ்சம் பெறும் எவரும் விட்டுவைக்கப்படக் கூடாது. மனிதர்களைக் கொல்லும் நோயைத் தடுப்பது நாகரிகமான செயல் என்று மனதிலேயே அனைவரும் எண்ண வேண்டும். இதில் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் கொலைபாதகச் செயல் செய்பவர் என வெட்கித் தலை குனியும்படி தண்டனையளிக்க வேண்டும். இந்தப் பிரிவினர்களை நன்றாகக் கல்வியறிவு புகட்டி ஒத்துழைக்கும்படி செய்துவிட்டால் அதிக அளவு நோய் வராமல் தடுத்து விடலாம். மற்ற காரணங்களால் நோய் வருவது குறைவான விழுக்காடே. சில சமூகப் பிரிவினரிடம் கட்டுப்பாடற்ற உறவு நிலவுவதால் அவர்களுக்கும் கல்வியறிவு புகட்டி 'நிரோத்' உறை அணிவதை ஏற்கும்படி செய்யவேண்டும். அனைவரும் ஒத்த கருத்தோடு முயற்சித்தால் இதற்காக ஆகும் செலவு குறையும். இன்னுயிர் இழப்புகளும் குறையும்.

வறுமையும் ஒழுக்கமற்ற பழக்கமுமே இந்நிலைக்குக் காரணம். இந்தத் தொழில் நடக்கும் பகுதிகளில் தன்னார்வச் சேவையாளர்கள் சிறப்பாகத் தங்கள் தடுப்புக் கல்விப் பணியைச் செய்வது சாலச் சிறந்தது. இந்தப்பணியைப் போர்க்கால அடிப்படையில் அனைத்துச் சார்பினரும் செய்திட முன்வர வேண்டும். காவல்துறையினரும் உண்மையாக நாட்டின் பேராபத்தைக் கருதி மற்ற பணிகளில் காட்டும் தொய்வைக் காட்டாமல் நேர்மையை ஒரு அத்தியாவசியக் கடமையாக இந்தப் பணிக்கு உதவினால் கண்டிப்பாக மற்ற நாடுகளுக்கு இந்தியா ஒரு முன் மாதிரியாக விளங்கும்.

இரண்டாவது நிலை தடுப்பு வகை, உடலில் குத்தப்படும் ஊசிமூலம் பரவுவதைத் தடுக்கும் பணியேயாகும். சாதாரணமாக காது குத்துதல், மூக்கு குத்துதல், பச்சைக் குத்திக்கொள்ளுதல் போன்ற செயல்களைக் கூடத் தகுந்த பாதுகாப்பு முறைகளை அனுசரிக்கக் கற்றுத்தர வேண்டும். ஒருமுறை உபயோகித்த இவற்றை நீக்கிவிடலாம் அல்லது கொதிக்கும் வெப்பநிலையில் கிருமிநாசினி செய்ய வேண்டும். தலையில் மொட்டையடிக்கும் போதும் இரத்தக் கசிவு ஏற்படுதவதால் உபயோகித்து எறிந்துவிடும் பிளேடுகளை உபயோகப்படுத்துதல் பலன் தரும். மற்றும் மருத்துவமனைகளில் உபயோகித்து கழித்துவிடும் ஊசிகளையே 'Disposable Syringe and Needles' உபயோகிப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். பல் மருத்துவர்களும் இந்த முறையை அனுசரிப்பது அவசியம். புள்ளிவிவரப்படி இந்த வகையினர் மூலம் நோய் பவவுவது எளிதாக ஏற்படுகின்றது. இன்றைய மருத்துவ முன்னேற்றத்தில் உறுப்புகள் மாற்று அறுவைச் சிகிச்சை, செயற்கை இனவிருத்திக்கு விந்து அளிப்பவர்கள், முதலானோர்களாலும் எய்ட்ஸ் பரவும் வாய்ப்புள்ளது. இந்த வகையினர் இரத்தம், உறுப்புகள், விந்துகளையும் சோதனை செய்த பிறகே உபயோகப்படுத்த வேண்டும். எனவே, மருத்துவத்துறையினரின் தலையாய பணியாக இதைக் கடைப்பிடித்தால் இந்நோய் வருவதை எளிதில் தடுத்து விடலாம்.

மூன்றாவது முக்கியமானதும், கட்டாயமாகச் சரிப்படுத்த வேண்டிய ஒரு குறைபாடு உள்ள செயல் இரத்த வங்கிகளின் செயல்பாடே. தற்போது இந்தியாவில் செக்ஸ் முறைகேடுகளால் வரும் எய்ட்ஸ்க்கு அடுத்த காரணம் இரத்தம் செலுத்தும் நடவடிக்கையால் தான் எனத் தெரியவருகிறது. அதற்குக் காரணம் இரத்த வங்கிகள் எய்ட்ஸ் சோதனைக்கு உண்மையான முக்கியத்துவம் கொடுக்காததும், தேவையான சோதனை உபகரணங்கள் இன்மையும் ஆகும். அரசாங்கமும் தவறு நடப்பதை கடுமையான குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுக்காதிருப்பது. பணம் சம்பாதிக்கும் இந்த இரத்த வங்கி உரிமையாளர்கள் மனிதக் கொடுமையை நீக்கும் பணியில் நேர்மையாக இருக்கவேண்டும் என்ற மனநிலை இல்லாது இருப்பதும் ஒருவகைக் குற்றமே! இந்தக் குறைபாட்டைக் கண்டிப்பாக நீக்க வேண்டும். இரத்தம் கொடுப்பதற்கு உறவினர்களே முன்வந்தால் இந்த வகையில் நோய் பரவுவது குறையும்.

இங்கிலாந்து நாட்டில் ஹீமோப்பிலியா எனும் ஒருவகை பிறவி இரத்தக் கசிவு குறைபாடு நோய்க்கு பேக்டர் VIII எனும் இரத்த அணுப்பொருளை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து செலுத்தியதால் அநேகம் பேர் எய்ட்ஸ் நோய் ஏற்க வேண்டிய நிலை வந்தது என்று 'மடில் செக்ஸ்' மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ரிச்சர்டு டெட்டர் கூறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. வெளிநாடுகளிலிருந்து இரத்தமோ



இரத்தப் பொருளோ பெறக்கூடாது என்று சட்டம் செய்யவேண்டும். வெளிநாட்டிலிருந்து நம்நாட்டிற்கு வருபவர்களை 'எய்ட்ஸ்' நோயற்றவர் என்ற சான்றிதழ் பெற்றுவர விசா சட்டத் திருத்தம் செய்ய வேண்டும்.

நான்காவதும் இறுதியான காரணமுமான தடுப்புப் பணி, போதை மருந்துக்கு அடிமையானவர்கள் நரம்பில் போட்டுக் கொள்ளும் ஊசியால் நோய் பரவுகிறது என்பதைப் பொறுத்தது. போதை மருந்து கடத்துபவர்களையும், விற்பவர்களையும் முழு முயற்சி எடுத்து தடுத்துவிட்டால் மற்றவை சரியாகிவிடும்.

இந்தப் பணியில் எவர் தலையிட்டாலும் அதிகத் தண்டனைபெறும்படி கடுமையான சட்டமியற்ற வேண்டும். போதை மருந்து உபயோகிப்பவர்களை போதை நீக்க சிகிச்சை நிலையங்கள் அதிக அளவில் அமைத்து 'எய்ட்ஸ்' நீக்கப் பணிக்கான நிதியை வைத்து இலவசமாகச் சிகிச்சையளிக்க வேண்டும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் போதை மருந்தின் ஆபத்தை இளைஞர்களுக்கு அறிவித்துக்கொண்டே இருக்க வேண்டும். மேலை நாடுகளின் செக்ஸ் முறைகேடுகளை 'புளுபிலிம்' மூலம் நம் நாட்டில் உள்ளவர்கள் பார்ப்பதால் அதே போன்ற முறைகேடுகளை அனுசரித்து நோய்க்குள்ளாக நேரிடுகிறார்கள். இதையும் கல்வியறிவு புகட்டித் தடுக்கவேண்டும்.

இந்திய அளவில் இந்தக் காரணங்களால்தான் இந் நோய் பரவிடும் வாய்ப்புள்ளது.

எய்ட்ஸ் பெருகி வரும் நிலை

இரண்டாயிரமாவது ஆண்டில் இந்தியாவில் உலகில் உள்ள 'எய்ட்ஸ்' நோயாளிகளில் 25 சதவிகித நோயாளிகள் இருப்பார்கள் எனக் கணித்துள்ளனர். அதாவது 15 மில்லியன் எச்.ஐ.வி. கிருமிகள் இரத்தத்தில் காணப்படுபவர்கள் இருப்பார்கள் என்கிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம், அதிக மக்கட்பெருக்கம், சுகாதாரமற்ற சூழ்நிலைகளும், நடவடிக்கையும், வெப்ப நோய்களான காசநோய், டைபாய்டு மற்றும் மலேரியா போன்ற நோய்கள் உண்டாவதாலும் என்கிறார்கள்.

உலகமுழுவதும் இரண்டாயிரமாவது ஆண்டில் 110 மில்லியன் நபர்கள் இரத்தத்தில் இந்நோய்க் கிருமிகளின் ஊடுருவலுக்கு ஆளாகி இருப்பார்கள் என்றும்,

மேலும் 10 மில்லியன் குழந்தைகளின் இரத்தத்திலும் கிருமிகள் இருக்கும் என்று உலகின் தொற்றுநோயியல் அறிவியலாளர்கள் 30 பேர்கள் அறிவித்துள்ளார்கள்.

இவர்களில் எத்தனைப்பேர் நோய் பெறுவார்கள், பரப்பும் களமாக இருப்பார்கள் என்று கூறவில்லை. அதாவது நோய் பரவும் தன்மை பன்மடங்காகும் என்பது தெரிய வருகிறது. அதற்குள் ஏதாவது நோய் தீர்க்கும் முறை கண்டுபிடித்தால் தப்பலாம்.

இந்த வைரஸ்கள் வெளியில் 10 நிமிடத்திற்கு மேல் உயிர் வாழாது. பிளீச்சிங் பவுடர் தெளித்துவைத்தால் கூட இக்கிருமிகள் இறந்துவிடும். கை,கால்களை சோப்புபோட்டு கழுவினாலும் சிறிது தடுப்பு உண்டாகும்.

இறுதியாக இந்நோய் தடுக்கும் பணியினை ஒவ்வொரு இந்தியனும் நாகரிகச் சமூகத்தை அமைக்கும்பணி நாம் அனைவரும் ஏதாவது ஒரு வகையில் நம் சந்ததியினர் இந்நோய்க்கு ஆளாகாதிருக்கவும் அதனால், இறப்புகள் ஏற்படாது தடுக்கவும் இப்போதிருந்தே செயல்பட வேண்டும். இல்லையேல் உலகளவில் இறப்புகளின் காரணத்திற்கு 'எய்ட்ஸ்' தான் முதலிடம் வகிக்கும். இலட்சோப இலட்ச சாவுகளுக்கு இயற்கையளிக்கும் தண்டனை போல் அமைந்துவிடும். இப்போதே நாம் விழித்துக்கொள்வது நல்லதல்லவா? தற்போது 250 நபருக்கு ஒருவர் உலகளவில் நோயாளியாக உள்ளனர்.

செயற்கை இரத்தம் வருகிறது!

தற்போது செயற்கை இரத்தம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சிகாகோ நகரில் உள்ள 'நார்த் பீல்டு லெபாரட்டரிஸ்' நிறுவனமும், சுவீடன் நாட்டு நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து இந்த செயற்கை இரத்த உற்பத்தியைச் செய்திட ஒப்பந்தம் செய்துள்ளது. இந்தச் செயற்கை இரத்தமானது அனைத்துப் பிரிவு இரத்தவகையினருக்கும் எவ்வித ஆபத்துமின்றி செலுத்த இயலும் எனக் கூறுகின்றனர்.

இந்தக் கண்டுபிடிப்பால் மருத்துவத் துறைக்கு மாபெரும் பெருமை கிட்டப்போகிறது. காரணம், இரத்தம் செலுத்தினால்தான் பிழைக்கமுடியும் என்ற நிலையில் உள்ளவர்களுக்கு அதேவகையில் ஏற்கக்கூடிய இரத்தம் கிடைப்பது சில நேரங்களில் இல்லாமல் போய் உயிருக்கே ஆபத்தான நிலை ஏற்படுகிறது. சரியாக ஏற்புடையதா என்ற சோதனை செய்யாமல் போவதாலும், ஆபத்து விளைகிறது. மற்றும் தற்போதைய உலக அபாய நோயான எய்ட்ஸ் பரப்புவதற்கும் இரத்தம் செலுத்துவது ஒரு காரணமாக உள்ளது.

இவையெல்லாம் இதனால் நீங்கிட வாய்ப்புள்ளது. இந்த இரத்தம் உற்பத்தி செய்யப்பட்டு உலக நாடுகள் அனைத்தும் பயன்படுத்திக்கொள்ளும் காலத்திற்குள் இந்நோய் அதிகம்பேரைப் பாதித்துவிடும் என்ற அச்சம் உள்ளது.

நோய்த் தடுப்பு வேக்ஸின் ஆராய்ச்சிகள்

எய்ட்ஸ் வைரஸ் பல்வேறு நாடுகளிலும் சிறுசிறு மாற்றங்களுடன் இருப்பதால் அவற்றை அந்நாட்டு பெயருடன் வகைப்படுத்துகின்றனர். இந்திய வகை சி Indian Strain C, American Strain V பிரேசில் வகை என பலவகை வைரஸ்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

நோய்த் தடுப்பு மருந்து ஆராய்ச்சிகளும் மிகமிக முன்னுரிமை கொடுக்கப்பட்டு பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகிறது. பிரான்ஸ் நாட்டின் டாக்டர் ஜீன்கிளாடு செர்மான் (Dr. Jean Claud Cherman) என்பவர் ஓர் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர். அவர் கூறுவதெல்லாம் எய்ட்ஸ் வைரஸ் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பது மிகவும் சிரமமாக உள்ளது. ஒருவகை வைரஸை வைத்து தடுப்பு மருந்து உற்பத்தி செய்வது வீண் வேலை. ஏழுவகைகளுக்கு மேல் உள்ள அளவில் வைரஸ்களை தேர்ந்தெடுத்து அவற்றை வளர் பெருக்கம் செய்து தயாரிக்க முயற்சித்து வருகிறோம் என்கிறார்.

இந்தக் கிருமிகளை 1988-இல் பிரித்துக் காட்டிய டாக்டர் ஜீன் கிளாடு செர்மான் (Dr. Jean Glaud Cherman டாக்டா பர்ரே சின்னௌஸி (Dr. Barre Slnioussi) மற்றும் டாக்டா லுக் மண்டேக்னிர் (Dr. Luc Montagnier) ஆகியோர்கள் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு உவமானம் வைத்துக் கூறும்போது பத்தாண்டுகளுக்கு முன்பு இந்த எச்.ஐ.வி. வைரஸ் வியாதி ஒரு சைக்கிள் போல் இருந்ததாகவும் இன்று அதுவே ஒரு கார் போலப் பெரிதாக உள்ளது என்கிறார்கள். ஏழுவகைப் பிரிவுகளாகத் தனித்தன்மை கொண்டுள்ளதாம். மனித சக்தியை எதிர்ப்பதில் அந்த கிருமிகள் மாபெரும் சக்தியாக விளங்குகிறது. அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் தொழில் நுட்பக் கூடத்தின் தலைவர் பேட்ரிக் லியோனார்டு (Patric Leonard) கூறுகின்ற அறிவுரை மிகமிக ஏற்புடையதாக உள்ளது. அவ்வாறு செயல்படுவது மிக்க அவசியமும் அவசரமுமானது. தடுப்பு மருந்துகள் வரை காத்திருக்காது விரைவில் குறைந்த செலவில் இரத்த சோதனை முறைகளைக் கண்டுபிடிக்க ஆவன செய்வதும் நல்ல கல்வி, கலந்துரையாடல் மூலம் நோய் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார்.

தற்போது மேலை நாடுகளில் எய்ட்ஸ் வைரஸ் வெள்ளை அணுக்களின் குரோமோசோம்களைத் தாக்கு முன்பு உள்ள நிலையில் அதன் பெருக்கத்தைத் தடுத்து நிறுத்தும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை 1. (AZT) ஏ.இஸட்.டி. எனும் அஸிடோ தைமிடின், 2. டைடீ ஆக்ஸிஇனோஸின் (Dideoxyinosine) 3. பைரிடினோன் (Phyridinone) ஏ.இஸட்.டி. என்னும் மருந்து ஒரு நபருக்கு ஓர் ஆண்டுக்கு பதினைந்தாயிரம் முதல் பதினெட்டாயிரம் டாலர்கள் செலவு பிடிப்பதாகும்.

எய்ட்ஸ்

உலகில் கிட்டத்தட்ட ஒரு கோடி மக்கள் எய்ட்ஸ் தாக்குதலுக்கு ஆளாகி உள்ளனர். இவர்களில் 10 இலட்சம் பேர் சிறாரும், 30 இலட்சம் மகளிரும் அடங்குவர். அடுத்த நூற்றாண்டு ஆரம்பத்தில் 12 கோடி மக்கள் உலகெங்கும் எய்ட்ஸ் தாக்குதலுக்கு ஆளாகக் கூடும் என்பது அதிர்ச்சியூட்டும் தகவலாகும்.

ஆண்டுதோறும் டிசம்பர் 1ம் தேதி உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்தியாவில் 15 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்களில் 70 இலட்சம் பேர் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதற்காகப்பெரியம்மை வைரஸ், போலியோ வைரஸ் போன்ற வகைகளையும் ஈடுபடுத்தி முயற்சித்து வருகின்றார்களாம். நோய்த்தடுப்பு வேக்ஸின் என்றும் (Prophylactic) Vaccine இருவகை வேக்ஸின்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. உலகச் சுகாதார நிறுவனமும் தாய்லாந்து ஜி.பி.120, உகாண்டா ஜி.பி.41 (Thailand gp 120, Uganda gp 41) என்ற நோய்க் குறைப்பு வேக்ஸின்களைச் சோதனை செய்து வருகிறது என்று எய்ட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவின் இயக்குநர் டாக்டர் கே.பி. சர்மா (Dr. K.B. Sharma) கூறுகிறார்.

நோய் குறைக்கும் மருந்துகள்

இவைமட்டுமல்லாமல், நோய் மேலும் பரவாது தடுக்கும் மருந்துகளும் வளர்ந்த நாடுகளில் விற்கப் பட்டுவருகின்றன. நம் இந்திய மருத்துவத்திலும் எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தும் மருந்துகள் உள்ளன என்று கூறிவருகிறார்கள். அதற்கான ஆராய்ச்சிகளும், விலங்குகள் மற்றும் மனிதர்களின் உடலில் பரிட்சார்த்தமாக சோதனை செய்கிறார்கள். சென்னை மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சி அறிஞர் டாக்டர் எஸ்.பி. தியாகராஜன் என்பவரும் சென்னை மருத்துவக் கல்லூரி நுண்ணுயிரியல் (Microbiology) துறைப் பேராசிரியரும் துறைத் தலைவருமான டாக்டர் திருமதி சுனிதா சாலமன் என்பவரும் இப்பணிகளை ஆற்றி வருகிறார்கள். இதற்கென லண்டனில் செயிண்ட் தாமஸ் மருத்துவமனையில் தங்கி 12 நோயாளிகளுக்கு நம் நாட்டு மூலிகை மருந்துகளின் உபயோகம் பற்றி சோதனை செய்யும் பணியை டாக்டர் சுனிதா அவர்கள் ஏற்றுள்ளார்கள். தற்போது இந்தியாவில் 13 வகை மூலிகைச் செடிகள் எய்ட்ஸ் வைரஸ் கிருமிகளைத் தடுக்கும் குணம் கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதுதவிர சீனாவில் மூலிகையிலிருந்து ஜி.எல்.க்யூ 223 (GLQ 223) என்ற மருந்து உபயோகப்படுத்துவதாகக் கூறுகின்றனர். இந்தியாவின் ஆயுர்வேத திரிகுணதேவ் (Ayurved Thriguna Dev) என்பவர் தங்கம் மற்றும் வைரப்பொடிகளை வைத்து 1. ஹீரக் ரசாயனா, (Hirak Rasayana) 2. சர்வேஷ்வர் பார்பட்டி (Sarveshvar Parpati) என்ற மருந்துகளால் குணப்படுத்த இயலும் என்கிறார். மரபியல் நுட்பமுறைப்படி செயற்கை சி.டி.4 என்ற மருந்து விலங்குகளுக்குச் சோதனை செய்ததில் வெற்றிகரமாக உள்ளது எனக் கண்டுள்ளனர். திருமதி சித்ரா சோமன் என்ற கேரளப் பெண் கணவனால் எய்ட்ஸ் பீடிக்கப்பட்டு திருவனந்தபுரத்தில் நான்கு பாட்டில் ஆயுர்வேதக் கலவை மருந்தை நாற்பத்தைந்து நாட்கள் சாப்பிட்டு இரத்தத்திலேயே இல்லாமல் போய் விட்டது என்கிறார்.

பம்பாய் ஒரு பாவ நகரம்!

இந்தியாவில் இந்நோய் பரவிட சிகரமான இடமாக உள்ளது பம்பாய் மாநகரமே! இதனால் இதை ஒரு 'பாவ நகரம்' என்றே பெயரிட்டுள்ளனர். ஏன் தெரியுமா? உலகின் எய்ட்ஸ் நோயாளிகளாக 15 நிமிடத்திற்கு 400 பேர்கள் வருகிறார்கள். இதில் ஒருவர் பம்பாயிலிருந்து வருகிறார். மேலும் பம்பாய் மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை வெளிநோயாளி பிரிவில் 996 பேர்களில் 6 பேர் எய்ட்ஸ் நோயாளிகளென்றும் . மருத்துவ வெளிநோயாளிப் பிரிவில் 2406 பேர்களில் 28 பேர் எய்ட்ஸ் நோயாளிகளென்றும் பம்பாய் நகரில் உள்ள எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சி நிலைய திட்ட இயக்குநர் டாக்டர் கோர்ஹெட் பாவ்ரி எச்சரிக்கை செய்து கூறுகிறார். சிகப்பு விளக்குப் பகுதியில் மட்டும் மணிக்கு 3,4 நபர்கள் இந்நோய்க்கு ஆளாகிறார்கள் என்று வருந்திக் கூறுகிறார்.

ஆற்றவேண்டிய அவசரப்பணி

அரசியல் தலைவர்களுள் அறிஞர்களும், சமூகத்தொண்டு நிறுவனர்களும் தொழில் அதிபர்களும் மருத்துவத்துறை நிபுணர்களும் வேறு பணிகளைச் சிறிது குறைத்துக் கொண்டு நாட்டின் பல்வேறு சிவப்பு விளக்குப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இந்தத் தொழிலை விட்டு வேறு தொழில் செய்வதற்கு முதலில் வழிவகைகளைச் செய்து தந்துவிட்டு அவர்களுக்குப் பிறகு நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வு பற்றி கலந்துரையாடல் செய்து தடுக்க அனைத்து முயற்சிகளும் எடுக்க வேண்டும். அவர்களோடு போராட வேண்டும். அவர்கள் மனம் மாறும்படி நல்லவை செய்து அன்புடன் ஆதரித்து பொருளாதார உதவி முன்னுரிமை அளித்து அரசுப்பணியில் வேலை கொடுத்து பல்வேறு நாடுகளின் உதவி பெற்று அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் உதவி செய்யவேண்டும். நடத்துபவர்கள், நடுத்தரகர்கள், ஈடுபட்டிருக்கும் பெண்கள், ஆண்கள் அனைவரும் நன்கு பராமரிக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் அனைத்து நகரங்களிலும் உள்ள விலைமாதர்கள் உறைவிடங்களில் முதலில் இப்பணியை இந்த நாட்டு மக்களை அநியாயமாக நல்ல நாட்டு வருமானத்திற்கு உதவிடும் வயதில் உள்ள இளைஞர் சமுதாயத்தை வீணே இழந்துவிடாமல் இருக்க உதவும் பணியென்று அறிவுப்பூர்வமாகச் சிந்தித்து ஒரு வினாடி கூடத் தாமதிக்காமல் நல்லோர்கள் செயல்பட வேண்டும். கட்சிப் பூசல்கள், மதச் சண்டைகள், பதவிப் போட்டிகள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையெல்லாம் நீக்கி வைத்துவிட்டு, முழு நேரமும் மும்முரமாக ஈடுபட்டால்தான் இந்தியா பிழைக்கும், நாம் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டுமானால், இந்தப் பணியை தகுதியானால், விரும்புபவர்கள், வேறு மாநிலத்தவர்கள் அனைவரையும் வரவழைத்து காலை முதல் இரவு வரை வீடுவீடாக தெருத்தெருவாக ஊர் முழுவதும் அவர்களின் செயல்பாடு இருந்தால் தான் உடலுறவுத் தொழிலில் உள்ளவர்கள் அதன் ஆபத்தை

உணருவார்கள். இல்லாவிடில் இறக்கும் வரை 'பணம்' சம்பாதிக்க விரும்புவார்களே தவிர, மற்றவர்களின் அறிவுரைகளை முற்றும் ஏற்க மாட்டார்கள்.

உலகின் பேராபத்துக்கள்

உலக அபாயங்களில் முதலாவ தான அணுப்போரை ஓரளவு கட்டுப்படுத்தி விட்டான் மனிதன். இரண்டாவதான சுற்றுச்சூழல் அபாயத்தை அறியத் தொடங்கி அதையும் ஓரளவு மாற்றி வருகிறான். மனிதனின் குணமான இயற்கையை ஆட்சி செய்யும் நிலை தற்கொலைக்குச் சமம் என அறிந்துள்ளான். இவை இரண்டும் பலம் வாய்ந்தவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அணுப்போர் கருவிகளை வடிவமைத்திருக்கலாம். தான் செய்வதால் ஒன்றும் கேடுவிளையாது என்று எண்ணி சுற்றுச் சூழலைக் கெடுத்தவன் தற்போது திருந்தி வருகிறான். எய்ட்ஸ் பற்றி அவ்வாறு கருதமுடியவில்லை. மனிதனின் திமிர்பிடித்த இயற்கைக்கு ஒவ்வாத ஒழுக்கமற்ற உடலுறவுப் பழக்கத்தால் தேவையற்ற போதை மருந்து பழக்கத்தால் இப்படியொரு உலக மனித குலத்துக்கே ஆபத்தைத் தரக்கூடிய வைரஸ் கிருமிகளை அவன் எவ்வளவு முயன்றும் அடக்க முடியாத, இதுவரை மருத்துவ உலகம் கண்டிராத சாதனைக் கிருமியின் பழிவாங்கும் செயலைப்பற்றிய கதை நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அனைத்திந்திய மருத்துவ விஞ்ஞான நிலையத்தின் (AIIMS) பேராசிரியர் ஏ.என்.மால்வியாவின் கற்பனைக் கதை.

மனிதனின் முரட்டுத்தனத்தைத் தாளாது அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க எண்ணி எச்.ஐ.வி. வைரஸ் இறைவனிடம் சென்றதாம். இறைவா நீங்கள் உருவாக்கிய இந்த அழகிய உலகைப் பல வகைகளில் மனிதன் அழித்து வருகிறான் என்றது. தனது அபிமானமான படைப்பேயாயினும் இந்த வைரஸ் கூற்றுக்குச் செவி சாய்த்து– ஆம், அவர்கள் என்னை மதிக்கவில்லையென்றாலும் உனக்கெப்படி நான் உதவி முடியும்? என்றார் இறைவன். அதற்கு எய்ட்ஸ் வைரஸ் நான் ஒரு சிறந்த திட்டம் வகுத்துள்ளேன். அதன்படி உலகில் உள்ள மனிதர்கள் அனைவரின் உடலிலும் புகுந்து நன்கு பெருகி அவர்களின் எதிர்ப்பு தரும் செல்களையெல்லாம் அழித்து விடுவது என்றாலும் அதில் ஒரு முட்டுக்கட்டை உள்ளது அதுதான் மனிதனின் அபரிமிதமான அறிவு. அதைவைத்து அவன் என்னைத் தடுத்து கொன்றுவிடுவான் என்றது வைரஸ். கடவுளோ சிரித்துக் கொண்டே முட்டாள் வைரஸே இதற்காகவா அஞ்சுகிறாய், மனிதனிடம் உள்ள மூன்று குறைபாடுகள் உனக்குத் தெரியாதா? இரத்தம், செக்ஸ், இறப்பு முதலியவற்றால் நீ எளிதில் வெல்வாய் என்றதும் எச்.ஐ.வி. வைரஸ் காலந்தாழ்த்தாது பணியைத் தொடர்ந்தது. மனிதன் இரத்தத்தை விற்று உடலுறவை விலைக்கு வாங்கி இறப்பை ஏற்றான். போதை ஊசி மருந்துகளாலும் அவனை மகிழ்வித்து எய்ட்ஸ் வைரஸ் தன் வஞ்சத்தைத் தீர்த்தது. மற்ற நாடுகளைக் காட்டிலும் வளரும் நாடுகளில் இந்த எய்ட்ஸ் வைரஸ்க்கு வெள்ளித்தட்டில் வரவேற்பு கிடைத்ததாம் என்று இயற்கை, மனிதன் செய்யும் பாவத்திற்கு மரண தண்டனையளிக்கிறதென்கிறார் டாக்டர் மால்வியா.

இரத்தத் தேவை மிகமிக அதிகம்

இரத்தம் செலுத்துவதால் நோய் பரவுவதற்குக் காரணம் குறைந்த செலவில் சுலபமாக அறியக்கூடிய சோதனை முறைகள் இந்தியாவில் இல்லை. சிறப்பு முறையில் சோதனை செய்ய வேண்டிய எலிசா Elisa மற்றும் வெஸ்ட்டர்ன் பிளாட் (Western Blot) சோதனைகள் தான் உள்ளது. இவற்றுக்கு ரூ.110 மற்றும் ரூ.700 ஒவ்வொரு சோதனைக்கும் முறையே செலவாகிறது. தற்போது பம்பாயில் ஆர்.டி.டி. (Rapid Test Device) எனும் எய்ட்ஸ் கிருமி கண்டறியும் மலிவு வகைச் சாதனம் கண்டுபிடித்துள்ளார்கள். விரைவில் விநியோகத்திற்கு வரும் வாய்ப்புள்ளது. எனினும், ஐம்பது மில்லியன் யூனிட்டுகள் இரத்தத் தேவைக்கு 1.9 மில்லியன் யூனிட்டுகளே கிடைக்கின்ற நிலையில் எப்படி நேர்மையாகச் செயல்படுவார்களென்று டாட்டா மெமோரியல் இரத்த வங்கியின் தலைமை டாக்டர் Z.S. பருச்சா வினா தொடுக்கின்றார்.

பேருதவிக்குத் தகுதியானவர்கள்

எனவே, சமுதாயத்தில் நல்ல வருமானம் உள்ள புகழ்மிக்க நடிகர்கள், விளையாட்டு வீரர்கள், தர்மமாக எண்ணாது எதிர்கால மனிதக்காப்பு உதவியென்று, பண உதவி செய்தாலன்றி நம்மை நாம் காத்துக் கொள்ளாது போகும் நிலை வரும். நோய் வாய்ப்பட்டவரை அனைவரும் தாராளமாகப் பொருள் உதவி செய்து பிறருக்குப் பரவாது தடுக்கும் கடமையாற்ற வேண்டும். டென்னீஸ் வீரர் திரு ஆர்தர் ஆஷே, நடிகை எலிஸபெத் டெய்லர், கூடைப்பந்து வீரர் மேஜிக் ஜான்ஸன் மற்றும் பல புகழ்மிக்கவர்கள் இதற்கெனப் பெரும் பொருள் சேர்த்து உதவி வருகிறார்கள்.

திரு ஆர்தர் ஆஷே அவர்கள் கூறுவது மனதை நெகிழ வைக்கிறது.
"எய்ட்ஸை அழியுங்கள், ஆனால், எய்ட்ஸால் அவதியுறுபவர்களை அழிக்காதீர்கள்"
வேல்ஸ் நாட்டு இளவரசி டயானா அவர்கள் பல்வேறு பாப் இசைப் பாடகர்களை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து கோடான கோடி ரூபாய் வசூல் செய்து இந்த நோய்த் தடுப்பிற்கு உதவுகிறார். சிம்பொனி ஆப் ஹோப் என்ற இசை நிகழ்ச்சியைப் பாடகர் திரு டேவிட் போவி (David Bowie) மற்றும் ஜியார்ஜ் மைக்கேல் (George Michale) கே.டி. லெய்ங் (K.D. Laing) போன்றோர் நடத்தினர்.

எனவே, இதுதான் கடமையாற்றும் தருணம் என்று இந்த ஆண்டை நிர்ணயம் செய்துள்ளனர். எனவே, மற்றைய சுகாதாரப்பணி செய்யும் களப்பணியாளர்கள், மன்றங்கள், பல அமைப்புகளின் தலைவர்கள், மற்றும் அங்கத்தினர்களெல்லாம் 'எய்ட்ஸ் தடுப்புச் சங்கம்' என்று ஒன்றாக இணைந்து எங்கெங்கு வேண்டுமோ, அங்கு முதலில் செயல்படுக! இந்தப் பணிதான் வருங்கால இந்தியாவின் கரங்களை வலுப்படுத்தும் பணி இனிமேலாவது மனிதத்தன்மை மேலோங்கி நல்லொழுக்கம் பேணி முறையற்ற எதையும் செய்யாது வாழக் கற்றுக்கொள்வோம்! முனைந்து செயல்பட்டால் முடியாதது இல்லை!

உண்மை

உண்மையே உள்ளத் தூய்மையை
உண்டாக்கும்; உள்ளத் தூய்மையே
ஒழுக்கத்தின் உயிர் நாடி.
-மகாவீரர்

சிலம்பாட்டம்

ஞா. ஸ்டீபன், எம்.ஃபில்.,
நாட்டார் வழக்காற்றியல் மையம்,
தூய சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை

தமிழகம் முழுவதிலும் பரவலாகக் காணப்படும் தற்காப்புக் கலைகளுள் (Martial Arts) ஒன்று சிலம்பாட்டம் ஆகும். சிலம்பாட்டம், நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார், குமரி மாவட்டங்களில் பெரு வழக்காக உள்ளது. கையிலுள்ள கம்பை வீசி, ஒலியெழுப்பும் ஒரு வகையான விளையாட்டே சிலம்பாட்டம். இது வீரத்தின் அடிப்படையில் எழுந்த விளையாட்டாகும். கோயில் திருவிழாக்கள், திருமணம், பூப்புச் சடங்கு, வரவேற்பு நிகழ்ச்சிகள், இறப்பு, பஜனை, பட்டாபிஷேகம், சிலம்பாட்டப் போட்டி போன்ற சூழல்களில் சிலம்பாட்டம் நிகழ்த்தப் படுகிறது.

சிலம்பாட்டம் தற்காப்புக் கலையாக இருப்பினும், அது நிகழ்த்தப்படும் சமூகச் சூழல்களில் நிகழ்த்தப்படும் பிற கலைகளைப் போன்று பார்த்து இரசிப்பதற்குரிய கலையாகவும் காட்சியளிக்கிறது. இவ்வடிப்படையில் சிலம்பாட்டம் இருவகைப்படும். ஒன்று அலங்காரக் கலை; மற்றொன்று தற்பாதுகாப்புக்கலை. திருவிழாக்கள், சடங்கு போன்ற சூழல்களில் பார்வையாளர்களை மகிழ்விக்கும் நோக்குடன் நிகழ்த்தப் படுவதால் இக்கலை மெருகூட்டப்பட்டு இசைப்பின்னணியுடன், பல்வேறு ஒப்பனைகளுடன் நிகழ்த்தப்படுகிறது. தற்காப்புச் சூழல்களில் ஒப்பனைகள் இல்லாமல் எதிர்த் தாக்குதலை ஈடுகட்டும் வண்ணம் அமைகிறது. இவ்விருவகைச் சூழல்களிலும் இதன் நிகழ்த்தும் முறை வெவ்வேறானவை.

இக்கலை நிகழ்த்தப்படும் சூழலைப் பொறுத்தே அதன் நிகழ்த்தும் முறை அமையும். இக்கலையை நிகழ்த்துவதில் 'கம்பு' மிக இன்றியமையாதது. நிகழ்த்துதலில் பயன்படுத்தப்படும் கம்பின் அளவை அடிப்படையாகக் கொண்டு இக்கலையை இரண்டாகப் பகுப்பர். ஒன்று நெடுங்கம்பு, மற்றொன்று குறுங்கம்பு ஆகும். ஆளுயர அல்லது 6 அடி நீளமுள்ள கம்பு நிகழ்த்துதலுக்குப் பயன்படுத்தப் படுவதாயின் அது நெடுங்கம்பு என்றும், 4 அடி நீளமுள்ள கம்பு பயன்படுத்தப்படுவதாயின் அது குறுங்கம்பு என்றும் அழைப்பர். கம்பின் நீளம் ஆட்டத்திற்கு மிக இன்றியமையாதது என்பர். கம்பின் நீளம் குறைவாக இருப்பின் தற்பாதுகாப்பிற்கு ஏற்றது என்றும் நீளம் மிகுதியாக இருப்பின் அலங்கார ஆட்டத்திற்கு ஏற்றது என்றும் கூறுவர்.

சிலம்பாட்டம் பெரும்பாலும் செண்டை, மத்தளம் போன்ற வாத்தியங்களின் இசைப்பின்னணியில் நிகழும், ஆட்டக்களம் வட்ட வடிவில் அமைந்திருக்கும். நிகழ்த்துநர்கள் ஆசானின் காலைத்தொட்டுக் கும்பிட்டு ஆட்டத்தைத் தொடங்குவர். இவ்வாட்டத்தில் 12 அடவுகள் உண்டு என்பர். ஆசான் மாணவர்களுக்கு இவ் அடவுகளைக் கற்றுக் கொடுக்கும் போது இது முன்னடவு என்று அழைக்கப்படும். மாணவன் தான்



கற்ற அடவை ஆசானின் முன் நிகழ்த்தும் முறை ஆசானுக்கு ஆசான் வேறுபடும். அடவுகளைக் கற்றபின் ஒவ்வொருவரும் தமது நுட்பங் களையும் அழகியல் உணர்வுகளையும் சேர்த்து நிகழ்த்துவர். எனவே, இக்கலையில் பல்வேறு மரபுவழியான பிரிவினர் உள்ளனர். சான்றாக குமரி மாவட்டத்தில் கூடல்வழி, சாமிவழி, பீமன்வழி, நடுவூர்க்கரைவழி என நான்கு வகைகள் உள்ளன. இதில் நடுவூர்க் கரை ஆசான் வழி புகழ் பெற்றது. இவ்வாசானின் மாண வர்கள் மரபுவழியாக அவ்வாசானின் நிகழ்த்தும் முறையைப் பின்பற்றி வருகின்றனர். இதனைப் போன்றே ஒவ்வொரு பகுதியிலும் புகழ்பெற்ற, தனித்தன்மை வாய்ந்த மரபு வழியான ஆசான்வழி முறைகள் உள்ளன. இவ்வழி முறைகள் குறித்து ஓலைச் சுவடிகளும் கிடைக்கப் பெறுகின்றன.

சிலம்பாட்டம் நிகழ்த்துவதில் 'அடவு' என்ற சொல் மிக இறியமையாததாகக் கருதப்படும். 'அடவு' என்பது குறிப்பிட்ட ஓர் உத்தி முறையில் நிகழ்த்தும் முறையைக் குறிப்பதாகும். ஓர் அடவு என்பது பல்வேறு பிரிவுகளைக் கொண்டது. இப்பிரிவுகள் அனைத்தையும் நிகழ்த் தினால்தான் ஓர் அடவு முழுமை பெறும். பொதுவாகச் சிலம்பாட்டத் தில் ஒத்தைச்சுவடு, பிரிவுச்சுவடு, ரெட்டு வீச்சு, ஆயுத முறை, பூட்டுப் பிரிவு, மடு, கிரமம், எடுத்தெறிதல், நெடுங்கம்படி, குறுதடி போன்ற முறைமைகள் இடம்பெறும். சிலம் பாட்டத்தில் ஆட்டமுறையையும், அடவுகளையும் விளக்குவது கடின மாகும். பெரும்பான்மையான ஆட்ட முறைகளை, அவற்றைச் செய்யும் முறையில் மட்டுமே சுட்டிக்காட்ட இயலும். எனவேதான் இக்கலையைக் கற்றுக்கொடுப்பதிலும் நீண்ட நாள் செய்முறைப் பயிற்சி மிக இன்றியமை யாததாகக் கருதப்படுகிறது.

சிலம்பாட்டத்தில் சாதித் தொடர் பான ஆதிக்க முண்டு./குறிப்பிட்ட சாதியினர் தங்களைப் பிற சாதி யினரின் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ள இக்கலையில் தேர்ந்த பயிற்சி பெறுகின்றனர். வேற்றுச் சாதியினர்க்கு அவர்கள் இக்கலையைக் கற்றுக் கொடுப்பதில் தயக்கம் காட்டுவர். சான்றாக நாடார் சாதியினரிடம் காணப்படும் 'சைலத்' தைக் குறிப்பிடலாம். இதனைப் போன்றே ஆசான்களும் தங்கள் மாணவர்கள், தங்களை விட உயர்ந்துவிடக் கூடாது அல்லது தங்களையே எதிர்த்துவிடக் கூடாது என்பதற்காக எல்லா அடவுகளையும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்ப தில்லை. சில அடவுகளை இரகசிய மாகப் பாதுகாத்துக் கொள்வர். இதனால் இன்று பல அடவுகள் நிகழ்த்தும் முறை அறியப்படாமல் உள்ளன.

சிலம்பாட்டம் நமது பண்பாட்டில் வளர்ந்த சிறந்த உடற் பயிற்சி மற்றும் தற்பாதுகாப்புக் கலையாகும். சமூகச் சூழல்களில் அது பொழுதுபோக்குக் கலையாகவும், தன்னை வளர்த்துக் கொண்ட பன்முகப்பரிமாணம் கொண்ட கலையாகவும் திகழ்கிறது. இருப்பினும் இக்கலைக்குத் தகுந்த ஊக்குதல்கள் இன்மையால் இக்கலை வழக்கிழந்து வருகிறது. தற்காலச் சூழலில் இந்நிலையைப் பயன்படுத் தும் பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. உடற்பயிற்சிக் கல்லூரியினர், பாது காப்புத் துறை, நிகழ்த்துதல் சார்ந்த பிறகலைகள் போன்றவற்றில் இக் கலையை நவீனப்படுத்திப் பயன் படுத்தலாம். கராத்தே குங்பு போன்ற மேலைநாட்டுக் கலைகள் தற் காலத்தில் நமது பண்பாட்டில் வேகமாகப் பரவி வருவதால், நமது பண்பாட்டில் மலர்ந்த இக்கலை மேலும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. எனவே இக்கலையை நவீனப் படுத்தும் முயற்சியும் வளர்த் தெடுக்கும் முயற்சியும் இக்கலைக்குத் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

– நன்றி: இளைஞர் கலைவிழா மலர்

கலை! மனித மனத்தின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடு! உள்ளத்து உணர்வுகளின் பிரதிபலிப்பு! தான் வாழ்வதோடு, தன்னைப் படைத்தவனையும் வாழவைக்கும் வல்லமையுடையது கலை! அது காலத்தால் அழியாதது! கால, தேச வர்த்தமானங்களைக் கடந்து, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தும், நம் ஆன்மாவோடு உறவாடும் ஆற்றல் பெற்றது.

உலகத்தில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு, நம் தாய் மொழியாகிய தமிழுக்கு உண்டு. ஏனெனில், தமிழ் மொழி மட்டும்தான் இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஆயிரக்கணக்கான இயற்றமிழ் விற்பன்னர்கள், இசைத்தமிழ் வேந்தர்கள். நாடகத் தமிழ் வல்லுநர்கள் ஆகியோரின் கூட்டுப்படையாக முத்தமிழ் விளங்குகிறது. இதுவே, நம் அன்னைத் தமிழின் தனிச் சிறப்பாக, தரணி எல்லாம் போற்றப்படுகிறது.

தமிழ் வளர வேண்டுமென்றால், முத்தமிழ்க் கலைகள் உயர வேண்டுமென்றால், மலர்ந்து வரும் தமிழ் அறிஞர்களும், கலை மேதைகளும் போற்றப்பட வேண்டும். போற்றுதலும், போற்றப்படுதலும்தான், மனித சமுதாயத்தின் உயர்வுக்குக் காரணமான, இரு முக்கிய உந்து சக்திகள் என்பது உலகியல் உண்மை.

பழவிற்பனையில் முன்னேற்றம் காண...

எம்.அருணா சேரலாதன்,
துணைப் பேராசிரியர்
உணவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை3.

பழங்கள் மிக அதிக அளவில் உயிர்ச் சத்துக்கள், தாது உப்புகள் மற்றும் நார்ச்சத்து கொண்டவை. ஆதலால் அவை ஒரு உன்னத உயர்ந்த உணவாகக் கருதப் படுகின்றன. நமது உணவில் நல்ல மணம், நிறம் மற்றும் சுவையை அவை அளிக்கின்றன. மேலும் பழங்கள் நாம் உடல் நலத்துடன் விளங்கவும் சத்துப் பற்றாக்குறை நோய்களைத் தவிர்க்கவும் மிகவும் அவசியமான ஒரு நல் உணவாகும்.

நம் இந்திய மருத்துவ ஆராய்ச் சிக் குழு அதாவது ICMRன் பரிந் துரைப்படி நாம் அன்றாடம் குறைந்தது 30 கிராம் பழங்களை உண்ண வேண்டும். ஆனால், ஒரு சராசரி இந்தியன் சுமார் 4 கிராம் பழம்தான் உண்ணுகிறான் என உணவியல் ஆராய்ச்சிகள் காட்டு கின்றன. இதைச் சீர் செய்ய பழங்கள் குறைந்த விலையில் அதிக அளவில் கிட்டும் நிலை உருவாக வேண்டும்.

பழ உற்பத்தி உலகளவில் நன்கு அதிகரித்துள்ளது. நம் இந்திய நாட்டிலும் ஆண்டுதோறும் சாகுபடி முறையில் நல்ல முன்னேற்றங்கள் மற்றும் நல்ல வகைகள் கண்டு பிடிக்கப்பட்டதால், உற்பத்தி நன்கு அதிகரித்துள்ளது. முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தில் பழச் சாகுபடிக்கு 11.2 இலட்சம் எக்டேர் பரப்பளவு பயன்படுத்தப்பட்டது. ஆனால், இன்று இது 33 இலட்சம் எக்டேராக உயர்ந்துள்ளது. அது போல பழச்சாகுபடி மகசூல் 1950 ஆம் ஆண்டில் 282 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இருப் பினும் இதில் 25 முதல் 30 சதம் வரை அறுவடைக்குப்பின் தேவை யான வசதிகள் இல்லாததால் வீணடிக்கப்படுகிறது. இப்பெரும் சேதத்தைத் தவிர்த்தாலே நம் நாட்டில் பழங்களின் விலை குறைந்து, கிட்டும் அளவும் அதிகரித்துப் பயன்பெறலாம்.

பழங்களைப் பறித்தவுடன் அவற்றைப் பேணிப் பாதுகாத்து சிறந்த சேமிப்பு முறை தேர்ந் தெடுத்து விவசாயிகள் தங்கள் உற்பத்தியின் முழுப்பயனைப் பெற முயற்சி செய்ய வேண்டும். இவ் வாறு பழங்களைப் பாதுகாப்பத னால் பல பயன்கள் உண்டு. பழங்களின் சத்துக்கள் பாதுகாக்கப் படுகிறது. ஆண்டு முழுவதும் பழங்கள் கிடைக்க வழி வகுக்கிறது. வேலை வாய்ப்புத் திறனை எற்படுத்துகிறது. வருமானத்தை அதிகரிக்கிறது. மேலும் நல்ல தரமுள்ள பழங்கள் ஏற்றுமதிக்கு உகந்தவையாகின்றன. ஆக நாட்டின் வருமானத்தை உயர்த்தி வளமான வாழ்விற்கு வழி வகுக்கிறது.

பழங்கள் வீணாவதற்குக் கார ணங்கள் பல உண்டு. முக்கியக் காரணம் பழத்தின் வடிவ அமைப்பு, அதிக நீர்ச்சத்து, மற்றும் மென்மையான தன்மையாகும். எனவே, அறுவடைக்குப் பின் பழங்கள் எளிதில் வாடி வதங்கி, அழுகிவிடுகின்றன. அதிக நீர்ச்சத்து உள்ளதால், ஏற்ற தட்பவெட்ப நிலை மற்றும் சுற்றுப்புறச் சூழல் இல்லாவிடில் பழங்கள் வறண்டு, வாடிவிடும். அல்லது அதிகமாகப் பழுத்து மிகவும் குழைந்துவிடும். பூஞ்சாளம் மற்றும் நுண்கிருமி களால் மிகவும் சேதம் ஏற்படுகிறது. பழங்கள் அழுகுவதற்கு முக்கியக் காரணம் ஆல்டர்னேரியா, பாட்ரை டீஸ், பெனிசீலியம் போன்ற பூஞ்சாளம் மற்றும் எர்வீனியா, சுடோமாணஸ் போன்ற பாக்டீரி யாக்கள் ஆகும்.

இவ்வாறு சேதம் அடையாமல் பழங்களைப் பாதுகாக்க அறுவடை முதல் விற்பனை வரை பாதுகாக்க வேண்டும். பழங்களைப் பறித்த வுடன் அடிபடாமல் சேகரித்து, நன்றாகப் 'பாக்' செய்து, சிறந்த போக்குவரத்து முறையில் எடுத்துச் சென்று சேமிப்புக் கிடங்கில் பழத திற்கு ஏற்ற தட்பவெட்ப நிலையில் பாதுகாக்க வேண்டும்.

பழங்களைப் பாதுகாக்க கடைப் பிடிக்க வேண்டிய முதல் நட



TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

குறளின் குரல்

- கவிஞர் சாமி பழனியப்பன்

***"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு" 338***

என்பது நிலையாமை என்னும் அதிகாரத்தில் உள்ள ஒரு குறட்பா. இதற்கு உரையெழுதப் புகுந்த பரிமேலழகர்-

"முன் றனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுள்ளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோந்தன்மைத்து உடம்பிற்கும் உயிருக்கும் உளதாய நட்பு" என்றார்.

புள் என்னும் சொல், பொது வாகப் பறவை என்னும் பொருள் படுவதாயினும் நம் நாட்டில் 'புள்' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற ஒருவிதப் பறவை உண்டு என்றும், அது முட்டையைவிட்டு வெளியே வரும்போதே பறந்து செல்லும் இயல்புடையது என்றும் பறவை நூல் வல்லுநர் கூறியுள்ளனர்.

புள்ளும் உட்கரு முட்டையும் ஒரே காலத்தில் தோன்றின. இணைந்தே தோன்றின - புள் வெளியேறும் போது, உடல் தோன்றிய முட்டை உடைந்து தனித்துக் கிடந்து சிதைகிறது. அதுபோல உயிர் வெளியேறியதும் உடம்பு தனித்துக் கிடந்து அழிகிறது-'அழிக்கப்படுகிறது' முட்டையினின்றும் வெளியேறிய புள் மீண்டும் அம் முட்டைக்குள் வந்து நுழைவதில்லை. நுழைய முடியாது. அதுபோலவே, மனித உடம் பினின்றும் வெளியேறிய உயிரும் மீண்டும் அந்த உடம்பினுள் வந்து நுழைவதில்லை. "இறந்தவர் பிழைத்த தென்ப தில்லை இல்லை இல்லையே".

'குடம்பை தனித்தொழிய' என்ற குறட்பா வாயிலாக நாம் இவ்வளவு உண்மைகளையும் உணர்கிறோம். எனவே, 'குடம்பை' என்பதற்கு, 'முட்டை' என்று பொருள் கொள்ளுவதே முறையானது - சரியானது - வள்ளுவர் கருத்துக்கு ஒத்ததாகும்.

இனி அடுத்த குறட்பா-

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" (339)

என்பது. இந்தக் குறட்பாவிற்கும் பரிமேலழகர் கூறுகிற கருத்துரையும், சிறப்புரையும் பின்வருமாறு:

"ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோ டொக்கும். அதன் பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோ டொக்கும். உறங்குதலும் விழித்தலும் உயிர்களுக்கு இயல்பாய் கடிதின் மாறி மாறி வருகின்றாற்போல் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலை பெற்றவாறறிவித்ததற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது.

இனி இதே குறட்பாவிற்கு மணக்குடவர் எழுதும் உரையும் நயமும் பின்வருமாறு:

**'உறங்குவதனோடு ஒக்கும் சாக்காடு உறங்கி
விழிப்பதனோடு ஒக்கும் பிறப்பு'**

"இது, போன உயிர் மீண்டும் பிறக்கும் என்பதூஉம், இறத்தலும் பிறத்தலும் உறங்குதலும் விழித்தலும் போல மாறிமாறி வரூஉம் என்பதூஉம் கூறிற்று"

ஆம். 'குடம்பை தனித் தொழிய' என்ற குறட்பா வாயிலாக மறு பிறப்பு இல்லை என்னும் உண்மையான அருமையான உவமை ஒன்றின் மூலம் வலியுறுத்திச் சொன்ன வள்ளுவர், 'உறங்குவது போலும் சாக்காடு' என்ற அடுத்த குறட்பா வாயிலாக மறு பிறப்பு உண்டு என்று வலியுறுத்துவதாகக் கருத முடியுமா? முதற் குறளுக்கும் அடுத்த குறளுக்கும் இடையே இத்தகைய முரண்பாடா? வள்ளுவத்தில் கொள்கைக் குழப்பமா? இந்தக் கொள்கைக் குழப்பத் திற்குக் காரணம் யார்? இந்தக் கேள்விகள் எழத்தான் செய்யும்.

முதலாவதாக, நாம் மேலே குறிப்பிட்ட இரு குறட்பாக்களுமே 'நிலையாமை' என்னும் அதிகாரத் தலைப்பின் கீழ்தான் வந்திருக்கின்றன என்ற உண்மையை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

'அஞ்சுவ தஞ்சாமை பேதமை' என்றும், 'அச்சம் கீழ்களது ஆச்சாரம்' என்றும் கூறி, அச்சம் மனித ஆச்சாரமல்ல கீழ்களது விலங்குகளது ஆச்சாரம் என்று விளக்கிய வள்ளுவரைப் போல உலகத்தில் ஒரு பேரறிஞனை நாம் காண முடியாது. இப்படி, மனித சமுதாயத்தினைப் புலை அச்சத்தினின்றும் விடுவித்து, வாழ் நாளில் இயன்றவரை அறத்தினைச் செய்திட வலியுறுத்துவதே வள்ளுவரின் நோக்கம். 'நிலையாமை' என்ற அதிகாரமே அரண் செய்வதேயாம்.

உலகப் புகழ்பெற்ற இலக்கியப் பேரறிஞன் பேகன் என்பார், 'குழந்தைகள் இரவைக் கண்டு அஞ்சுவது போல மனிதர்கள் சாவுக்காக அஞ்சுகிறார்கள்' என்றார்.

வடிக்கை அவற்றைத் தக்க தருணத்தில் அறுவடை செய்வ தாகும். ஒவ்வொரு பழத்திற்கு அறுவடை செய்ய வேண்டிய நாளை அதன் அளவு, நிறம், மணம், பூவிலிருந்து பழமாகும் வரை நாட்கணக்கு ஆகியவை கொண்டு நிர்ணயிக்கலாம். சில பழங்கள் காயாகவும் சில மரத்திலேயே பழுத்தும் பறிக்கப்படுகின்றன. அறு வடை எப்போதும் குளுமையான காலை நேரங்களில் செய்ய வேண்டும். வெய்யில் அதிகம் இருக்கும்போது செய்தால் பழங்கள் சூட்டினால் வாடிக் கெட்டுவிடும். விடியற்காலையில் அறுவடை செய்ய வேண்டும். அடிபட்டால் நுண்கிருமிகள் நுழைந்து சேதம் விளைவிக்க ஒரு நுழைவாயில் ஆகிறது. மேலும் பழங்களை அறுவடை செய்தவுடன் அதன் வெப்பத்தைக் குறைக்கச் சிறிது நேரம் ஆறவிடவேண்டும். இவ்வாறு செய்வதால் பழங்களின் நீர்ச்சத்து குறையாமல், நெடுநாட்கள் பசுமை யாக இருக்கும். காற்றோட்டமாக நிழலில் பழங்களை வைத்தல், தண்ணீரில் கழுவுதல் அல்லது குளிர்ச் சாதனப் பெட்டியில் வைத்தல் போன்ற முறைகள் மூலம் பழங்களின் வெப்பத்தைக் குறைக் கலாம்.

அடுத்து, பழங்களைத் தரம் பிரித்தல் மிகவும் முக்கியமான ஒரு செயலாகும். அடிபட்ட பழங்கள், அழுகியவை, அளவில் சின்னவை ஆகியவற்றைப் பிரித்தெடுத்து நல்ல தரமுள்ள பழங்களை மட்டுமே விற்பனைக்கு அனுப்ப வேண்டும்.

பழங்கள் எளிதில் கெட்டுவிடும் தன்மை உடையன. பாடுபட்டு உற்பத்தி செய்த கனிகள் உழவர் களுக்கு நல்ல பயன் தர பழத்திற்கு ஏற்ற பாதுகாப்பு முறைகளைத் தேர்ந்தெடுத்து சேதத்தைத் தடுக்க லாம்.

வெப்பம் அதிகமுள்ள தமிழ் நாடு போன்ற மாநிலங்களில் பழங்கள் விரைவில் பழுத்து, வறண்டு, அழுகி அல்லது கெட்டு விடும். 'வாக்ஸ்' அல்லது இமல்ஸன் கோட்டிங் கொடுப்பதால் இதைத் தவிர்க்கலாம். வாக்ஸ் இமல் ஸன்கள் காய்கறிகளில் உள்ள பசைப் பொருட்கள், கரும்பு மற்றும் மெழுகு கொண்டு தயாரிக்கப்பட்டு கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. 'வாக்ஸால் டபிள்யூ' மற்றும் 'வாக்ஸால் ஓ' என பெயருள்ள கலவைகளைப் பழங் களின் மேல் தெளித்து அல்லது பழங்களை இமல்ஸனில் முக்கி எடுப்பது கனிக்குப் பாதுகாப்பு ஈந்து மேல்சட்டைபோல் அமை கின்றன. இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் குளிர்ச்சாதன வசதிகள் குறைவு. இந்நிலையில் இமல்ஸன் கோட்டிங் பழங்களின் ஆயுளை பெருக்கித் தரத்தை உயர்த்துகிறது.

இம்முறை குறைந்த செலவுள்ள ஒரு சிறந்த முறையாகத் திகழ்கிறது. சிம்லாவிலிருந்து ஆப்பிள்கள் இந்தியா முழுவதும் கிடைக்க வாக்ஸ் கோட்டிங்தான் கைகொடுக் கிறது. ஜிபரிலிக் அமிலத்தைப் பழங்களின் மேல் தெளித்தல் அல்லது நனைத்தல் மூலமும் பழங்கள் விரைவில் பழுப்பதைத் தவிர்த்து தாமதித்து கனியக் கைகொடுக்கிறது.

திராட்சை, வாழை, ஆரஞ்சு, போன்ற பழங்களை இரசாயன பாதுகாப்பான் கொண்டு பாது காக்கலாம். குளோரின், சல்பர் டை ஆக்சைட், போராக்ஸ், சோடியம் கார்பனேட் டைகுளோரான், காப் டான், தைரம், தையா பேன்டஜால் போன்றவை பழங்களில் அறு வடைக்குபின் நோய்க்கட்டுப்படுத்த உதவுகின்றன. அண்மையில் தையா பேன்ட்ஜால் எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற பழங்களில் உபயோகித்து பலர் நல்ல பலன் கண்டுள்ளனர்.

சுமார் 55 சென்டிகிரேட் உள்ள சூடு நீரில் பழங்களை 5 நிமிடம் முக்கி எடுப்பதன் மூலம் மாம் பழத்தில் 60 முதல் 70 சதம் சேதத்தைக் குறைக்கலாம். பப்பாளி மற்றும் தக்காளியிலும் இம்முறை நல்ல நிறத்துடன் ஒரே சீராகப் பழங்கள் பழுக்க உதவுகிறது.

அண்மையில் பழங்கள் அதிகம் விளையும் தோப்புகள் மற்றும் தோட்டங்களில் குறைந்த செலவில் பழச் சேமிப்புக் கிடங்குகள் கட்டு வதன் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டு உள்ளது. நான்கு பக்க மும் இரண்டு செங்கல் சுவருடன் கொண்ட தொட்டி போன்ற வடிவமைப்பு கொண்டு சேமிப்புக் கிடங்குகள் அண்மையில் ஆராயப் பட்டன. இரண்டு சுவர்களுக்கு இடையே ஆற்று மணல் நிரப்பி தண்ணீர் அன்றாடம் தெளிக்கப் படுகிறது. தொட்டியில் பழங்களை கொட்டி மேலே ஈரமான சாக்குத் துணியால் மூடப்படுகிறது. தொட்டி யின் நான்கு சுவர்களும் மேலே யுள்ள சணல் துணியும் ஈரப் பசையால் குளுமையாக இருக் கின்றன. எனவே, குளிர்ச் சாதனப் பெட்டி போல் குறைந்த வெப்பத்தில் பழங்கள் வாடாமல் குறைந்த செலவில் மின்செலவு மில்லாமல் பாதுகாக்கலாம். இவை 'இவாப்போ கூலிங் சேம்பர்' என அழைக்கப்படுகின்றன. விவ சாயிகள் தங்களிடம் உள்ள பழத்தின் அளவுக்கு ஏற்றவாறு இத்தொட்டிகளை அமைத்துப் பயனடையலாம்.

பழங்களைக் குறைந்த வெப் பத்தில் குளிர்ச் சாதனப் பெட்டிகள் அல்லது கிடங்குகளில் சேமிப்பது மிகவும் சிறந்த முறையாகும். குறைந்த வெப்ப நிலையில் பழங் களைச் சேமித்து வைப்பதால் அவற்றில் ஏற்படும் இரசாயன மாறுதல்கள் தடைப்பட்டு நீண்ட நாட்கள் அவை கெடாமல் பாது காப்பாக இருக்க ஏதுவாகிறது.

அறுவடைக்குப் பின் பழங்களை நன்முறையில் ஓரிடத்திலிருந்து மற் றொரு இடத்துக்கு அனுப்பி விற் பனை செய்து முழுப் பயனடைய மிகவும் தேவையானவை சிறந்த 'பாக்கிங்' பொருட்கள் பழங்களைக் கெடாமல் அதற்கு ஏற்ற முறையில் பாக் செய்து விற்பனைக்கு அனுப் பினால் பழங்கள் பசுமையாக நல்ல தரத்துடன் நெடு நாட்கள் கெடாதிருக்கும். மரப்பெட்டிகள், அட்டைப் பெட்டிகள், பிளாஸ்டிக் டிரேகள், சாக்குகள் போன்ற வற்றைப் பயன்படுத்தலாம். போக்கு வரத்தின் போது பழங்கள் அடிபடாமல் இருக்க வைக்கோல், காகிதத் துண்டுகள், உலர்ந்த இலைகள் போன்றவற்றைப் பயன் படுத்தலாம்.

பாலிதீன் பைகளில் 'பாக்' செய்து விற்பனை செய்யும் முறை தற்போது முக்கியத்துவம் பெற்று வருகிறது. அரை கிலோ அல்லது ஒரு கிலோ எடை கொள்ளும் பாலிதீன் பைகளில் விற்பனைக்கு முன் பாக் செய்து அனுப்புவது பயணத்தில் விளையும் சேதத்தைத் தவிர்த்து விற்பனையை எளி தாக்குகிறது. பாலிதீன் பைகளில் துளையிட்டுப் பழங்களைப் 'பாக்' செய்து சீல் செய்யும் போது அளவான காற்றோட்டத்தினால் பழங்களின் ஆயுள் கூடுகிறது.

ஆரஞ்சு

பப்பாளி

'சாவு ஓர் உறக்கம்; மறதி' என்றார் வோர்ட்ஸ் ஓர்த் என்ற பெரும்புலவன். 'நாளும் நாம் சாகின்றோமால் நமக்கு நாம் அழாததென்னே?' என்றார் வளையாபதி ஆசிரியர். 'அஞ்சுவதியா தொன்று மில்லை; அஞ்ச வருவது மில்லை' என்றார் அப்பரடிகள்.

இவ்வாறெல்லாம் பலவாறாகப் பாடி, மக்களிடத்தே தோன்றிய அச்சப் பேயை விரட்டி அடித்திட முயன்ற அறிஞர் பெருமக்கள் ஏராளம் ஏராளம்.

மரணத்தை எண்ணி மக்கள் அஞ்சக்கூடாது அச்சத்தை அவர்கள் உள்ளத்தினின்றும் விரட்டியடிக்க வேண்டும் என்பதே அந்த மேதைகளின் பொதுவான கருத்து.

பொதுவாக, எண்ணங்களின் எழுச்சியும் கூடப் பிறப்பிறப்பின்பாற் பட்டவையே. இந்தப் பேருண்மையை நாம் உணர்ந்து ஏற்றுக் கொண்டால், நாம் நமது வாழ்வில் எத்தனையோ முறை பிறந்திருக்கிறோம் என்பதை உணரலாம்.

எனவே, மேற்கூறியவற்றையெல்லாம் நன்றாக நினைவில் வைத்துக் கொண்டு, "உறங்குவது போலும் சாக்காடு" என்ற குறட்பாவிற்கு உரை காண முற்பட்டால்,

"உலகில் பிறப்பும் இறப்பும் இயல்பாக நடைபெறுகின்றன. சாவைக் கண்டு அஞ்ச வேண்டிய தில்லை" என்ற தெளிவான முடிவிற்கே வருவோம்.

அவ்வாறின்றி மேலே நாம் எடுத்துக் காட்டிய குறட்பாவின் மூலம், வள்ளுவர் மறுபிறப்பை உணர்த்துகிறார். ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று கொண்டு, முன்னுக்குப் பின் வள்ளுவர் முரண்படுகிறார் என்று கருதுவதும் கூறியதும் சரியன்று. வள்ளுவத்தில் முரண் இல்லை. வள்ளுவத்தைத் தெளிந்து உணராமல் உரை காணுவோர் உள்ளத்தில் தான் முரண்!

தமிழ்ச் சிந்தனையாளர்

'உலகத்தின் முதல் மனிதன் தமிழன்! முதல் தாய்மொழி தமிழ்! முதல் பண்பாடு தமிழ்ப் பண்பாடு! முதல் நாகரிகம் தமிழ் நாகரிகம்! அந்தப் பெருமைமிகு தமிழ் இனத்தின் தலையாய நூல் திருக்குறள்! இருபது நூற்றாண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டது. இந்த நூற்றாண்டுகளுக்கும் உரியதாக விளங்க முடியுமென்றால், இனிவரும் நூற்றாண்டுகளுக்கும் ஏற்றது என்றால், அந்த ஒப்பிலாச் சிந்தனைச் செறிவை என்னவென்று சொல்வது?

ஓர் உயர்ந்த இலக்கியத்தின் அடையாளம், அது அறிஞர்கள் அனைவராலும் ஏற்கக் கூடியதாக மட்டும் இருந்தால் போதாது சாதாரண மக்களாலும் புரிந்துகொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். இந்தத் தத்துவத்தை உண்மையாக்கும் ஒரே நூல், திருக்குறள் ஆகும். அளவிலே சிறியது நடையிலே எளியது ஆற்றலிலே அரியது, என்ற பெருமைக்கு ஒரே எடுத்துக்காட்டு திருக்குறள். அந்தத் திருமறையை நமக்குத் தந்த சீரிய சிந்தனையாளர், திருவள்ளுவர்.

தமிழ்நாடு புகழ் கண்டதற்கு, ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் வான்புகழ் கொண்டதற்கு ஒரே காரணம், வள்ளுவர்! 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடினார். கவிஞர்கள் வார்த்தைகளைச் செதுக்கிச் செதுக்கி எழுதுகிறவர்கள்.

வள்ளுவனைத் தமிழ்நாடு ஊருக்குத் தரவில்லை ஒரு நாட்டுக்குத் தரவில்லை ஓர் இனத்துக்குத் தரவில்லை ஒரு மொழிக்குத் தரவில்லை உலகுக்கே தந்தது என்று உணர்ந்து உணர்த்தினார் பாரதியார்.

'திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவொளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது' என்று தீர்ப்புக் கூறினார் தந்தை பெரியார்.

There hardly exists in the literature of the world a collection of maxims in which, we find so much lofty wisdom.

அதாவது, 'உலக இலக்கியம் எதனினும், இவ்வளவு உயரிய ஞானத்தை உள்ளடக்கிய அறவுரைத் தொகுப்பு அமைந்ததில்லை' என்கிறார் ஆல்பிரட் சுவிட்சர்.

மன்னருக்கு நீதி சொன்னவர்கள், சின்னவருக்குச் சொன்னதில்லை. எளியோருக்குச் சட்டமியற்றியவர்கள், வலியோருக்கு அதை வகுத்ததில்லை. இந்த மரபை, 2,000 ஆண்டுகளுக்கு முன்னே, ஒரு தமிழ்ச் சிந்தனையாளர் உடைத்திருக்கிறார் என்றால், அது தமிழர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும். அரசருக்கு, அமைச்சருக்கு, மக்களுக்கு, ஆசிரியருக்கு, மாணவருக்கு, தலைவருக்கு, தொண்டருக்கு, இல்லறத்தாருக்கு, துறவறத்தாருக்கு, பெற்றோருக்கு, பிள்ளைகளுக்கு, ஆடவருக்கு, பெண்டிருக்கு என்று எல்லோருக்கும் வாழும் வழியையும், நெறியையும் வகுத்துக் கொடுத்தவர், வள்ளுவர். அவர் ஓர் யுகத்துக்குரியவரல்லர் எல்லாக் காலத்துக்கும் ஏற்றவர்.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.



(Rheumatic Fever)

மூட்டுவீக்கமும் இதயபாதிப்பும்

டாக்டர் எம். தனபால், எம்.டி., டி.எம்.,

எப்போதும் இன்முகத்தோடும் சுறுசுறுப்போடும் துள்ளித்திரிகின்ற இளம் சிறுவர்களின் மூட்டுகளைத் தாக்கி இருதயத்தையும் பாதிக்கச் செய்து, வாழ்வில் ஒரு நிலையான சோகத்தை உருவாக்கக் கூடிய மூட்டுவாத ஜுரத்தைப் பற்றிய முக்கியச் செய்திகளை அவசியம் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஐந்து வயது முதல் 12 வயது வரை உள்ள சிறுவர்களைத் தாக்குகின்ற இந்தக் கொடிய வியாதி, ஒருவிதக் கிருமியினாலேயே ஏற்படுவதாகும்.

சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் தொண்டைக் கம்மல் போன்ற நோய்களை சரிவரக் கவனியாமல் விட்டுவிடுவது தொண்டைக் கமறலை உண்டாக்கும். Bhalinolytic Streptococci என்னும் கிருமி, அடிக்கடி தாக்குதல் நடத்தி, இரத்தத்தோடு கலந்து விடுகிறது. இவ்வாறு கலந்த அக்கிருமியானது குழந்தைகளின் மூட்டுகளுக்கு மேலே இருக்கும் ஒரு மெல்லிய ஜவ்வைத் தாக்குகிறது.

இந்தக் கிருமியின் தாக்குதலும், அதன் வரவால் உடலில் ஏற்படும் இரசாயன மாற்றங்களும் சேர்ந்து, இருதயத்தைப் பாதிக்கிறது.

இதயத்திலும் மூட்டுகளிலும் உள்ள மெல்லிய ஜவ்வு போன்ற Connection tissue என்னும் தசைநார்களின் ஒரே விதத் தன்மையைக் கொண்டிருப்பதால், மூட்டுகள் தாக்கப்படும் போதே இருதயத்தின் வால்வுகளும் தாக்கப்படுகின்றன.

இருதயம் பாதிப்பது எப்படி?

இருதயத்தில் மொத்தம் 4 வால்வுகள் இருக்கின்றன. இதில், இடதுபக்கத்தில் உள்ளது Mitral Valve என்னும் ஈரிதழ் வால்வு. நுரையீரலிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட இரத்தம், இதன் வழியாகத்தான் உடலின் எல்லாப் பாகங்களுக்கும் இரத்தத்தை Pump செய்து அனுப்பக்கூடிய மிக முக்கியமான இடதுபக்க இருதய அறைக்கு (Left ventricle) செல்ல வேண்டும்.

இந்த வால்வானது பாதிக்கப்பட்டால், சுத்தம் செய்யப்பட்ட இரத்தம், உடலின் பல்வேறு பாகங்களுக்கும் செல்வதில் தேக்கம் ஏற்பட்டுவிடும். இந்த நிலை உண்டானால் இரத்தம் சரியான ஓட்டமில்லாமல் ஆங்காங்கே தேங்கி நின்று, நுரையீரலும் அதன்பின் வயிறு. கைகால் போன்ற பாகங்களிலும் வீக்கம் உண்டாகி குழந்தைகள் சளித்தொல்லை, மூச்சுத் திணறல், மார்பு வலி போன்ற கொடுமையான துன்பங்களுக்கு ஆளாகிவிடுவார்கள்.

மூன்று வகையான பாதிப்புகள்

குழந்தைகளுக்கு இப்படி ஏற்படுகின்ற பாதிப்புகளை மூன்று வகையாக நாம் பிரிக்கலாம்.

1. மூட்டுவாத ஜுரம் (Rheumatic Fever) மூட்டுகளையும், இருதயத்தையும் பாதிக்கின்றபோது, மேலே நாம் குறிப்பிட்ட கிருமியின் ஆதிக்கம் அதிகமாக இருந்தால், மூட்டுகளும் இருதயமும் ஒரு சேரப் பாதிக்கும். இதனால் இருதயத்தின் வால்வுகளும், தசை நார்களும் மிகவும் சீர்கேடு அடைந்துவிடும்.

2. மூட்டுகள் பாதிக்கப்படும் போது, இருதயப் பாதிப்பு உடனடியாக வெளியே தெரியும் என்பதில்லை. ஆனால் அப்படியொரு நிலை உண்டாகி, சில ஆண்டுகள் நீறுபூத்த நெருப்பு போல் இருந்து, அதனால் இருதயத்தின் வால்வுகள் சுருங்கி, நாளடைவில் இரத்த ஓட்டம் தடைப்படும். அப்போதுதான் அதன் மோசமான விளைவுகள் உணரப்படும். இது இரண்டாவது நிலை.

இப்படி உடனே வெளியே தெரியாத நிலைமை இருப்பதால் தான் 'ரொமாட்டிக் பீவர்' என்கிற மூட்டுவாத ஜுரத்திற்கு முழுமையாக ஆளான அவர்களிடம் "உங்களுக்கு இதற்கு முன் மூட்டு வலி வந்ததுண்டா?" என்று கேட்டால், "இல்லை" என்று உடனே பதில் சொல்லிவிடுவார்கள்.

ஏனென்றால், மூட்டுகளைப் பாதித்த சுவடு தெரியாமலே இருதயப் பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள்

இந்த வகையினர். இவர்களுக்கு சிறுவயதில் ஏற்படும் மூட்டு வீக்க ஜுரத்தை சாதாரணமானதுதான் என்று அவர்கள் அலட்சியப் படுத்தியவர்களாக இருப்பார்கள்.

மூன்றாவது நிலைக்கு ஆளானவர்களை கொஞ்சம் அதிர்ஷ்டசாலிகள் என்றே கூறலாம். ஏன் தெரியுமா? இந்தக் கிருமியின் ஆதிக்கம் சற்றுக் குறைவாக இருப்பதால், மூட்டுகளை மட்டும் தாக்கி, இருதய பாதிப்பு ஏற்படாமல் நூலிழையில் தப்பியவர்கள் இவர்கள்.

இருதயத்தின் பாதிப்புகள்

முன் சொல்லப்பட்டது போல, இருதயத்தில் உள்ள 4 வால்வுகளில் பெரும்பாலும் இடது பக்கம் உள்ள Mitral Valve என்ற ஈரிதழ் வால்வுகளையும், இருதயத்திலிருந்து உடலின் பல்வேறு பாகங்களுக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் மகாதமனியில் உள்ள Aotric Valve என்னும் மிக முக்கிய வால்வையும் மிக மோசமாக இந்தக் கிருமி தாக்குகிறது.

உடலின் பல்வேறு பாகங்களிலிருந்து இருதயத்தின் வழியாகச் சுத்தப்படுத்தப்படுவதற்காக நுரையீரலுக்குச் செல்லும் இரத்தம் Tricustid, Pulmonary ஆகிய வால்வுகளின் வழியாகத்தான் செல்ல வேண்டும். இதில் அசுத்த இரத்தத்தைக் கண்காணிக்கும் இந்த Tricustid Valve என்ற மூவிதழ் வால்வும், நுரையீரலுக்கு எடுத்துச் செல்லும் Pulmonary Artery என்கிற இரத்த நாளமும் இதனால் பாதிக்கப்படுகின்றன.

முன்பு நாம் குறிப்பிட்டது போல, ஈரிதழ், மூவிதழ் வால்வுகளின் சுருக்கங்கள், மகாதமனியில் உள்ள அயோட்ரிக் வால்வின் முடக்கம் – அதனால் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவை மட்டுமல்லாமல், அக்கிருமியின் ஆவேச நிலையினால் வால்வுகள் பழுதடைந்து, இரத்த ஓட்டம் பின்னோக்கிக் கசியும் மிக மோசமான நிலைமையும் ஏற்படுவது உண்டு. இதனால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மூச்சுத் திணறல், நெஞ்சு வலி, கை கால் வீக்கமெல்லாம் ஏற்பட்டு படுக்கையாகக் கிடக்கவும் நேரிடக்கூடும்.

இவர்களை எப்படிக் குணப் படுத்துவது?

'ரொமாட்டிக் பீவர்' தாக்கினாலே, அடுத்து இதய பாதிப்பு ஏற்படுவது நிச்சயம். ஆகவே, நோய் வருமுன் எச்சரிக்கையாக இருந்தால்தான் இந்தக் கொடுமைகளிலிருந்தெல்லாம் தப்பிக்க முடியும்.

ஒருவர் அந்நோய்க்கு ஆட்பட்டால், மருந்துகளைக் கொடுத்து மூச்சுத் திணறல், நெஞ்சுவலி போன்றவைகளைக் குணப்படுத்தி, அவரை ஓரளவுக்குச் சீராக்கிவிட முடியும். ஆனால் ஒன்று, முடங்கிய வால்வையும், சுருக்கமான வால்வுகளையும் அறுவைச் சிகிச்சை மூலம்தான் குணப்படுத்த முடியும்.

கிருமிகளால், வால்வுகள் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டு, இரத்தக் கசிவு ஏற்படும் நிலைக்குப் போய் விட்டால் Open Heart Surgery செய்தாக வேண்டும். ஆகவே, வருமுன் காப்பது ஒன்றுதான் இக்கொடுமையிலிருந்து மீளும் வழியாகும்.

வருமுன் காப்பது எப்படி?

குழந்தைகளுக்குத் தொண்டைக் கமறலோ, தொண்டைப் புண்ணோ ஏற்பட்டால் அதைச் சாதாரணமாக எண்ணிவிடாமல், உடனடி நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்.

வீடுகள் காற்றோட்டமின்றி நெருக்கடியாக இருப்பதும், சுகாதாரமற்ற சந்தடி மிகுந்த வாழ்க்கையும் இந்த வியாதிக்குப் பெரும் வரவேற்பளிப்பதாகும். ஆகவே சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும்.

'பட்டகாலிலே படும்' என்றோர் பழமொழி உண்டல்லவா? அதே போல, இந்நோய் கண்டோர், மீண்டும் மீண்டும் இக்கிருமிகளின் தாக்குதலுக்கு ஆளாக நேரிடலாம்.

ஆகையால் 'ரொமாடிக் பீவருக்கு' ஆட்பட்டோர் மேற்கூறிய 3 நிலைமைகளில் எந்த நிலைமையினர் ஆனாலும் சரி; அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோர் என்றாலும் சரி, மூட்டுவலி ஏற்பட்டு இருதயப் பாதிப்பிற்கு ஆளானவர் அனைவருமே பென்சிலின் தடுப்பு மருந்தை 21 நாட்களுக்கு ஒரு முறை வாழ்நாள் முழுதும் கண்டிப்பாகப் போட்டுக்கொண்டே ஆகவேண்டும்.

3வது நிலையில் சொல்லப் பட்டது போல, இதய பாதிப்பின்றி மூட்டுவலி மட்டுமே உள்ளோர், 40 வயது வரை பென்சிலின் தடுப்பு ஊசியை 21 நாட்களுக்கு ஒரு முறை போட்டுக்கொள்ள வேண்டும்.

'அலர்ஜி' என்றால் என்ன செய்யலாம்?

சில பேருக்கு பென்சிலின் அலர்ஜி ஏற்படக்கூடும். அப்படிப் பட்டவர்கள் அஞ்சத் தேவையில்லை. 'எரித்ரோமைசின் சல்பா டயசின்' போன்ற மருந்துகளை எடுத்துக் கொள்ளலாம்.

இந்த நோய் வராதிருக்கவும், வந்தபின் நீக்கவுமான மருந்துகள் பற்றி நாடெங்கும் இன்னும் மருத்துவ ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன, வந்த பின் தொல்லைப் படுவதைவிட வருமுன் காப்பதே நல்லது. மூட்டுவீக்கமும் இதய பாதிப்பும் வராதிருக்க விரும்பு வோர் யாரானாலும் சரி, அவர்கள் ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழலில் தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டே ஆக வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதிகிராப்ட்
கிடைக்கும்

DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2025
ஆனித் திங்கள் 2, 17
மலர்: 25 இதழ்: 1
16.6.94–1.7.94
விலை ரூபாய் ஆறு

25-ஆவது ஆண்டில் 'தமிழரசு'

'தமிழரசு' 25-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப்பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்க்ள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரைகள், கவிதைகள் என இப்படிப் பல் வேறு பயனுள்ள எழுத்தோவியங் களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாகத் தமிழரசு விளங்கி வருகிறது. ஆம். படிக்க - பயன்பெற - பாதுகாக்கத் தக்க வகையிலே மிக்க கவனத்துடன் தயாரிக்கப் படுகிறது.

'தமிழரசு' இதழுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சந்தா தாரர்கள், முகவர்கள், விளம்பர தாரர்கள் அனைவருக்கும் எங் களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

ஆசிரியர்.

தமிழ்நாடு அரசின் மூன்றாண்டுச் சாதனைகளை விளக்கும் சிறப்புக் கட்டுரைகள்

ஏற்றங் கொண்ட எழில் மிகு ஆட்சி!

மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழக ஆட்சிப்பொறுப்பை ஏற்று, மூன்று ஆண்டுகள் முறையான நல்லாட்சியை முடித்துவிட்டு, 24.6.94ஆம் நாளன்று, நலம்மிகு நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்கள்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏராளமான நலன்களையும், பலன்களையும், நல்வாழ்வுக்கான வசதிகளையும், வாய்ப்புக்களையும் பெற்றுள்ள ஏழை எளிய மக்களும், பாட்டாளித் தொழிலாளி மக்களும், நலிந்த நடுத்தரவகுப்பு மக்களும், இந்த ஆட்சியை உளமாரப் பாராட்டி மகிழ்கிறார்கள். வாயாரப் போற்றிப் புகழ்கிறார்கள். இந்த ஆட்சியைப் பாராட்ட வேண்டியவர்கள் பாராட்டுகிறார்கள் - வாழ்த்த வேண்டியவர்கள் வாழ்த்துகிறார்கள் - போற்றிப் புகழ வேண்டியவர்கள் புகழ்கிறார்கள் என்பது நமக்கெல்லாம் மன நிறைவு அளிப்பதாகும்.

ஆட்சியாளர்களிலெல்லாம் உயர்ந்த ஆட்சியாளராய், ஒளி வீசும் விளக்குப்போல் விளங்குபவர் யார் என்பதை விளக்க வந்த வள்ளுவப் பெருந்தகையார், நன்கொடை வழங்குதல், முக மலர்ச்சியோடு இனியவற்றைக் கூறுதல், செங்கோல் ஆட்சி செலுத்துதல், தளர்வுற்ற குடிகளைப் பாதுகாத்தல் ஆகிய இந்த நான்கு பண்புகளையும் உடையவரே ஆவார் என்று வலியுறுத்துகிறார்.

கொடை அளி செங்கோல் குடி
ஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி.'

- என்பது குறள்.

வள்ளுவப் பெருந்தகையார் கூறியுள்ள இலக்கணத்திற்கு

ஏற்பதான், தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், ஏழைஎளிய மக்கள் இன்புற்றுவாழ, நன்கொடைகளையும், நல உதவிகளையும் அளித்து வருகிறார்கள். குறையிரந்து வருவோர்க்கு முக மலர்ச்சியோடு இனியவற்றைக் கூறி, அவர்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்து வருகிறார்கள் செங்கோல் ஆட்சியைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்தி வருகிறார்கள்; நலிவுற்று, மிகவும் தளர்ந்து காணப்படும் குடி மக்களுக்குத் தக்கப் பாதுகாப்பினை அளித்து வருகிறார்கள். இவற்றையெல்லாம் நடுநிலையில் நின்று காணும் நல்லவர்கள் அனைவரும் ஏற்றிப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த சனநாயகக் கொள்கைகோட்பாடுகளையும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனிதப் பண்போடு கூடிய ஆக்க நிறைவான திட்டங்களையும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற மூன்றாண்டுக்காலமாக நிறைவேற்றி, அவற்றில் மெச்சத்தகுந்த வெற்றிகளைப் பெற்று வருகிறார்கள்.

சென்ற மூன்றாண்டுக் காலத்திற்கு முன்பு, சீர்கெட்டுச் சிதைந்து, சின்னாபின்னமாகிக் கிடந்த தமிழகத்தை ஒழுங்குபடுத்தி, சட்டம்-அமைதி-ஒற்றுமை ஆகியவற்றை நிலைநாட்டி வருவதில், தொடர்ந்து கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆளுகையின் கீழ்த், தமிழகம் சமூக முன்னேற்றத் துறையிலும், பொருளாதார மேம்பாட்டுத்துறையிலும் ஒட்டுமொத்த வளர்ச்சியினைப் பெற்றுத் தனிச்சிறப்பை எய்தியுள்ளது.

இன்றைய நிலையில், தமிழகம், அமைதி- ஆக்கம்- நல்வளர்ச்சி- நல்லிணக்கம் ஆகியவற்றைப் பொறுத்து, இந்தியப் பாலை வனத்திற்கிடையே ஒரு பூஞ்சோலையாகத் திகழ்கின்றது என்று கூறினால், அது மிகையாகாது.

தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கில், சென்ற மூன்று ஆண்டுக்காலத்தில் வரவுகளின் போக்கு மற்றும் செலவுகளின் போக்கு ஆகியவை எப்படி இருந்து வருகின்றன என்பதைக் கூர்ந்து கவனித்தால், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆளுகையின் கீழ் எப்படிப்பட்ட வளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, ரூ.5,088 கோடியாக இருந்த வரவினங்கள், இப்பொழுது ரூ.7,844 கோடியாக உயர்ந்துள்ளன. அதே நிலையில், ரூ.5,641 கோடியாக இருந்த செலவினங்கள் இன்றைய நிலையில், ரூ.9,084 கோடியாக மிகுந்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுக் காலத்திற்குப்பிறகு, வருவாய்க் கணக்கில் வரவுகள் மட்டும் ரூ.2,756க்குக் கூடுதலாக உயர்ந்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுக்காலத்திற்குப் பிறகு, மக்களின் நலங்கருதிச் செய்யப்படும் செலவினங்கள் ரூ.3,443 கோடிக்குக் கூடுதலாக ஆகியிருக்கின்றன.

ரூ.1,454 கோடியாக இருந்தவந்த பொதுவான பணிகள், இன்றைய நிலையில் ரூ.2,696 கோடியாகவும், ரூ.2,492 கோடியாக இருந்துவந்த சமூகப்பணிகள், இப்பொழுது ரூ.3,728 கோடியாகவும், ரூ.1,587 கோடியாக இருந்துவந்த பொருளாதாரப் பணிகள், இப்பொழுது ரூ.2,510 கோடியாகவும், ரூ.108 கோடியாக இருந்துவந்த உதவிமானியங்கள், இன்றைய நிலையில் ரூ.150 கோடியாக்வும், உயர்ந்திருப்பதிலிருந்து தமிழக ஆட்சியின் வளர்ச்சியை எவரும் தெளிவாகக் கண்டு கொள்ள முடியும்.

மூலதனக் கணக்கை எடுத்துக் கொண்டால், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ரூ.223 கோடியாக இருந்தது. இப்பொழுது ரூ.423 கோடிக்கு வளர்ந்துள்ளதை அறியலாம்.

■ திறமைக்கும் நேர்மைக்கும் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் லஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் எடுத்துக் காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே எனும் பெயர் எடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுத் திட்டச் செலவுக் கணக்கை ஆராய்ந்து பார்த்தால், ரூ.1,591 கோடியாக இருந்தது, மூன்று ஆண்டுக்காலத்திற்குப் பிறகு இப்பொழுது ரூ.2,750 கோடியாக உயர்ந்துள்ளதைக் காணலாம். 1992-93ஆம் ஆண்டில், சிறப்புவகையின் கீழ் வராத 15 மாநிலங்களில், 8 மாநிலங்களால் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை நிறைவேற்றி வைக்க முடியவில்லை. ஆனால் தமிழ்நாடோ, ஏற்பளிக்கப்பட்ட ரூ.1,766 கோடி திட்ட ஒதுக்கீட்டை முடித்ததோடல்லாமல், ரூ.1,935 கோடி திட்ட ஒதுக்கீட்டுக்கு, அதாவது ரூ.169 கோடி கூடுதல் ஒதுக்கீட்டளவிற்கு வகை செய்து தனிச்சிறப்புடன் திகழ்ந்து வருகிறது.

இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு, 100க்கு 100 விழுக்காடு அளவிற்குமேல் நிறைவேற்றி, அகில இந்தியாவிலுள்ள மாநிலங்களில், முதல் மாநிலமாகப் பெயர்பெற்று விளங்குகிறது என்பது பெருமைக்குரிய ஒரு செய்தியாகும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1,284 கோடி இப்பொழுது ரூ.1,968 கோடியாக உயர்ந்துள்ளது. மருத்துவத்துறைக்கு முன்பு ரூ.391 கோடி இப்பொழுது ரூ.620 கோடி. ஆதிதிராவிடர் பழங்குடியினர் துறைக்கு முன்பு ரூ.132 கோடி. இப்பொழுது ரூ.215 கோடி. வேளாண்மைத்துறைக்கு முன்பு ரூ.359 கோடி இப்பொழுது ரூ.583 கோடி. சமூகப்பாதுகாப்புத் துறைக்கு முன்பு ரூ.141 கோடி. இப்பொழுது ரூ.219 கோடி. காவல்துறைக்கு முன்பே ரூ.213 கோடி. இப்பொழுது ரூ.367 கோடி. இப்படியாக ஒவ்வொரு துறையிலும் கணிசமான அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டிருப்பதைப் புள்ளிவிவரங்கள் மூலம் தெள்ளத் தெளிவாக உணரலாம்.

தமிழ்நாட்டை வளமிக்க வளர்ச்சி வழியில் மேலும் இட்டுச் செல்ல, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையிலான அரசு மீது மக்கள் நம்பிக்கை வைத்துப் பேராதரவு தந்து வருகின்றனர். அந்த நம்பிக்கை பொய்க்காத வகையில், இந்த அரசு செயல்பட்டுவருகிறது. இனியும் தொடர்ந்து செயல்பட்டுவரும்.

தமிழ்நாட்டில், சட்டம், ஒழுங்கு, அமைதி, நல்லிணக்கம் அகியவை நல்லமுறையில் நிலை நாட்டப் பட்டுள்ளன. விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், ஏழை எளிய மக்களின் நிலையை உயர்த்தி, அதனைப் பாதுகாத்து வருகின்றன.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தமது ஆட்சிப் பயணத்தில் சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்கொள்ளவேண்டியிருந்தது, என்றாலும், அவற்றையெல்லாம் அவர்கள் தமது சிந்தனை ஆற்றல் திறன், செயலாற்றல் திறன், பண்பாட்டுத்திறன், செய்து முடிக்கும் திறன் ஆகியவற்றால் தவிடுபொடியாக்கிவிட்டுச், சாதனைகள் பலவற்றிலும் வெற்றி பெற்று விளங்குகிறார்கள் என்பதைக் கடந்த மூன்று ஆண்டுக்கால ஆட்சி காட்டிக் கொண்டிருக்கிறது.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் புகழ்வாழ்க! அவரது ஆட்சிக்கரம் வலிவு பெறுக! அவரது தொண்டுகள் என்றும் வெல்க! ●

உங்களுக்காகப் பணியாற்றுவதே என் கடமை!

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா

தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும், விளக்கேற்றி வைப்பதே என் குறிக்கோள் என்று சூளுரை எடுத்துத்தான், முதலமைச்சர் நாற்காலியில் நான் அமர்ந்தேன். அந்த என் இலட்சியம் நிறைவேறும் நாள் வரை, ஓயாது ஒழியாது உங்களுக்காக உழைத்துக்கொண்டே இருப்பேன்.

இந்த என் இலட்சியப் பயணத்திற்கு எதிராக, எத்தனை எத்தனை இடையூறுகள் வந்தாலும், புற்றீசல் போல, புல்லுருவிகளால், இன்னல்கள் தோற்றுவிக்கப்பட்டாலும், மக்கள் சக்தியின் துணை கொண்டு, அவற்றை வீழ்த்திக் காட்டுவதோடு, விரட்டி அடிக்கவும் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தமிழகம் இன்றைக்கு ஆக்கபூர்வமான திட்டங்களை, ஆய்ந்து தீட்டி, அருஞ்செயல்கள் புரிந்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, முன்னேற்றப்பாதையில் வெற்றி நடைபோடுகிறது என்றால், அது மிகையாகாது.

எத்தனைத் திட்டங்கள், எந்த அளவு செம்மையுடன் தீட்டப்பட்டாலும், இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில், இதன் ஜீவ நாடியாக உள்ள கிராமங்களுக்கு, அதன் பலன் சென்றடைந்தால்தான், உண்மையான வளர்ச்சியை நாம் அடைய முடியும் என்றார் அண்ணல் காந்தி அடிகள். அவரது வாக்கில் நம்பிக்கை கொண்ட அரசாக, நம்முடைய அரசு திகழும் காரணத்தால் தான், வேறெந்த மாநில அரசும் தீட்டாத, தன்னிறைவுத் திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தி உள்ளோம்.

நம்முடைய திட்டத்தின் பயனாக, சின்னச் சின்னக் குக் கிராமங்கள் கூட, இன்று அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற முடிந்துள்ளது. இந்தியாவிலேயே, கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை, சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம், தமிழ்நாடு தான் என்று, மைய அரசே பாராட்டி உள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்நாட்டு மக்கள் யாராக இருந்தாலும், எல்லோரும் எனக்கு ஒன்றுதான். அவர்கள் ஒவ்வொருவரும் என் அன்பிற்குரிய சகோதரர்கள் தான், சகோதரிகள் தான் இதில் எவ்வித மாற்றமும், எப்போதும் இருக்காது.

எங்கள் பாதையும் பயணமும், சத்திய சோதனைகள் பலவற்றை வென்ற அண்ணாவுடையன! புரட்சித்தலைவருடையன! அந்தத் திராவிட தீபங்கள் காட்டும் ஒளி வழியே, வீறுநடை பயின்று, வெற்றி பெறுவோம்!

நீதித்துறையில் மறுமலர்ச்சி தமிழகத்தின் தனிச்சிறப்பு!

மாண்புமிகு சட்ட அமைச்சர்
திரு கே.ஏ. கிருஷ்ணசாமி

நீதி நிர்வாகம் மற்றும் சிறைத் துறையில் மூன்று ஆண்டுகளில் பல முனைப்பான புதிய திட்டங்கள், எண்ணிலடங்கா நிர்வாகச் சீர்திருத்தங்கள் எனப் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குவது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியின் மாட்சி என்றால் அது மிகையாகாது.

"தாமதப்படுத்தப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்கு ஒப்பாகும்" என்பதைக் கருத்தில் கொண்டு ஏழை எளிய, பாமர மக்களுக்கு விரைவில் நீதி கிடைக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்று –

காலத்திற்கு ஒவ்வாத சட்டங்களை மாற்றவும், அல்லது திருத்தி அமைக்கும் வகையிலும் அரசுக்குத் தக்க அறிவுரைகளை வழங்குவதற்காகச் 'சட்ட ஆணையம்' (Law Commission) ஒன்றை அமைத்துள்ளார்கள். மைய அரசு அமைத்துள்ளதைப் போல தமிழகத்தில் இவ்வாணையம் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி வி. இராமசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

வழக்குகளில் தேக்கம்

டெல்லி உச்ச நீதிமன்றத்திலும், சென்னை உயர் நீதிமன்றத்திலும் நிலுவையிலிருக்கும் அரசு

வழக்குகளில் விரைவில் தீர்வு காணும் வகையில் அரசுக்கும் அரசு வழக்கறிஞர்களுக்கும் இடையே "ஒருங்கிணைப்பு நிறுவனமாக- Directorate of Litigation என்ற ஒரு அமைப்பினை மீண்டும் உருவாக்கத் தலைமை வழக்கறிஞர் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோல், மாவட்டங்களில் உள்ள பல்வேறு சட்ட அதிகாரிகளின் பணிகளை ஒருங்கிணைத்து, சீரமைத்து வழக்குகளைத் துரிதப்படுத்த 'Directorate of Prosecution' என்ற அமைப்பை ஏற்படுத்தவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து, உள்துறை இணைச் செயலாளர் அவர்களைத் தனி அதிகாரியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு முழுமையாகச் செயல்படும் வண்ணம் இயக்குநர் ஒருவரை நியமிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சட்டக் கல்வி

சட்டக் கல்வியை மேம்படுத்தவும், இக்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு உள்ள பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்கவும், வளர்ந்து வரும் சட்டக் கல்வித்துறையின் மாணவ மாணவியர் 6020 பேர்களுக்குப் புதிய விடிவெள்ளியாகத் தோன்றியுள்ளதுதான், "தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம்".

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு ஆகிய துறைகளில் உள்ளதுபோல், மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப, பெருகி வரும் தேவைகளுக்கேற்ப, சட்டக் கல்வித்துறையையும் மேம்படுத்துவது அவசியம் என்பதை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் முழு முயற்சியால் தொடங்கப்பட்டுள்ளதுதான் தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம் ஆகும்.

இதற்காகத் தனி அதிகாரி ஒருவரை நியமித்து, நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி, அடிப்படைத் தேவைகள், நிதி வசதி, பணியாளர்கள் என அனைத்து வகைக்கும் தேவையான விவர அறிக்கையைத் தனி அதிகாரி அரசுக்கு அளித்தபின், உரிய பல்கலைக் கழகச் சட்டம் உருவாக வகை செய்யப்படும்.



பெருகிவரும் தேவைக்கேற்ப, சட்டக் கல்வி பயில வரும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அதற்கேற்ப சென்னை, திருச்சி, கோவை ஆகிய சட்டக் கல்லூரிகளின் இடங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. திருச்சி சட்டக் கல்லூரிக்கு ரூ.1.25 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிய சட்டங்களை உருவாக்கவும், தேங்கியுள்ள வழக்குகளை விரைவில் தீர்க்கவும், சட்டக் கல்வியை மேம்படுத்தவும் ஆகிய இந்த மூன்று முனைகளிலும், மூன்றாண்டுகளில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் தமிழகத்தை உயர்த்தியவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி என்றால் அது மிகையாகாது.

சட்டக் கல்வித்துறை, வழக்குகள் தீர்வு மட்டுமல்லாமல், நீதி நிர்வாகத்தின் மற்றொரு அங்கமாகிய நீதிமன்றம், சிறைகள் ஆகிய இரு பிரிவுகளும் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

இதன் வெளியீடாகத்தான், சென்ற மூன்றாண்டுகளில் 37 நீதிமன்றங்கள் 'தொழிலாளர் நீதிமன்றம்', 'தனிச் சிறப்பு நீதிமன்றம்' 'குற்றவியல் நீதிமன்றம்' மற்றும் 'சிவில் நீதிமன்றம்' என்று பல்வேறு வகைகளின் கீழ் திறக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, நீதித்துறை என்பது இதுவரை திட்டம் சாராப் பிரிவில் இருந்ததை (Non Plan Scheme) 'திட்டப் பிரிவில்' (Plan Scheme) சேர்த்த பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களையே சாரும்.

இதன்மூலம், இத்துறைக்கு 1993-94 இல் ரூ.3 கோடியே 84 இலட்சமும், 1994-95 இல் ரூ. 6 கோடியே 52 இலட்சமும் செலவிட ஒதுக்கப்பட்டுள்ளது. இது, நீதி நிர்வாகத் துறையின் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசின் பொற்காலச் சாதனையின் மைல் கல் என்றால் அது மிகையாகாது.

புதிய மாவட்டங்கள் தோன்றும்போது, மாவட்ட நிர்வாகமும் சீரமைக்கப்படுகின்றன. ஆனால், இந்த அடிப்படையில், மாவட்டங்களில் நீதி நிர்வாகம், சீரமைப்பதில் காலதாமதம் இருந்து வந்தது. இதனைக் களைந்து, மாவட்டங்கள் பிரிக்கப்படும்போது, மாவட்ட நிர்வாகமும் (Revenue Administration), நீதி நிர்வாகமும் (Judicial Administration) ஒரே, சமயத்தில் சீரமைக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களில் தனித்துச் செயல்பட வேண்டுமென்ற கொள்கை முடிவு எடுத்த பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அரசிற்கே உரியதாகும்.

இதற்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில், தென்னார்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் இரண்டிற்கும் நீதி நிர்வாகமும் தனியே செயல்படும் வகையில், விழுப்புரத்தில் மாவட்டத் தலைமை நீதிமன்றமும் (District and Sessions Court) மற்றும் தலைமைக் குற்றவியல் நீதிமன்றமும் (Chief Judicial Magistrate Court) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் இல்லாத மாவட்டங்களான நாகப்பட்டினம் காயிதேமில்லத், திருவண்ணாமலை சம்புவராயர், மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களின் தலைநகர்களில் நாகை, திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் நடப்பு நிதியாண்டில் தொடங்கப்பட உள்ளன.

சென்னை நகர நீதிமன்றக் கூடுதல் கட்டடம், தருமபுரி, ஒசூர், ஆகிய இடங்களில் குற்றவியல் நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள், திண்டுக்கல், செங்கற்பட்டு, சேலம், கோவை, திருவள்ளூர், அரியலூர், விழுப்புரம், குழித்துறை, செங்கம், பட்டுக்கோட்டை, திருச்செங்கோடு, உசிலம்பட்டி, திண்டிவனம், மணப்பாறை, சிவகங்கை, விருதுநகர், ஈரோடு, திருச்சி, ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் நீதிபதிகள் குடியிருப்புகள் ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

நீதிமன்றங்களுக்குப் புத்தகங்கள், நவீன 'பேக்ஸ்' இயந்திரம், 'ஜெராக்ஸ்' இயந்திரம், நீதிபதிகளுக்குப் புதிய கார்கள், ஜெனரேட்டர் ஆகியவை வாங்க ரூபாய் ஒரு கோடி செலவிடப்

பட்டுள்ளது.

குறிப்பாக, சென்னை நகரில் ரூ.7 கோடி செலவில் நீதிபதிகள் குடியிருப்புகள் கட்டவும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு ஆணையிட்டுள்ளது.

நீதித்துறையில் பணியாற்றும் நீதிபதிகளில் இருந்து பணியாளர்கள் வரை உள்ள அனைவரின் நலன் காக்கும் வகையில் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசு பல்வேறு சலுகைகள் அளித்துள்ளது. சான்றாக, நீதிபதிகளுக்கு ஓய்வுபெறும் வயது வரம்பை 60 ஆகவும், விடுப்பு நாட்கள் சலுகை, கூடுதல் பணியிடங்கள் ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இலவசச் சட்ட உதவி

நீதி என்பது வசதியானவர்களுக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய ஒன்று என்பதல்ல; ஏழை, எளிய, பாமர மக்களுக்கும் சம உரிமை அதில் உண்டு என்பதை மெய்ப்பிக்க, மாவட்டந்தோறும், 'இலவசச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுக்கள்' சிறப்பாகச் செயல்படுகின்றன. இதற்கு உறுதுணையாக வளர்ச்சிக்கு அடித்தளமாக உறுதியான அமைப்பாக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வாண்டு ரூபாய் ஒரு கோடி வழங்கினார்கள்.

சிறைத்துறை

சிறை என்பது குற்றவாளிகளின் கூடாரமல்ல. சந்தர்ப்பச் சூழ்நிலையால் தடுமாறிப் போனவர்களைத் திருத்தி, புதிய மனிதர்களாக மாற்றியனுப்பும் சீர்திருத்த அமைப்பு என்ற முறையில் சிறைகள் அமைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சிறைச்சாலைகளில் நவீன வசதிகளையும், அங்குள்ள தொழிற் கூடங்களில் பணிபுரிவோருக்கு ஊதிய உயர்வுகளையும், பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு படிப்போருக்கு உரிய உதவிகளையும் தந்து சிறைவாசிகளாக இருப்பவர்களும் மனிதர்கள்தான் என்ற நிலையில் அவர்களைப் புதியவர்களாக்கி வெளியுலகிற்கு அனுப்ப இவ்வரசு எடுத்துள்ள மனிதாபிமான நடவடிக்கைகள் பலப்பல உள்ளன.

சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட கைதிகளுக்கு உதவி செய்வதற்காகச் சிறைத் துறைக்குத் தற்போது அளிக்கப்படும் ஒதுக்கீடான ரூபாய் ஒரு இலட்சம் 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் ரூ.10 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மாவட்ட ஆட்சியாளர்கள் வழியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்றும், விடுதலை ஆகும் கைதிகளுக்கு வழங்கப்படும் பண உதவி இணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் IRDP வழங்கப்படுவது போல கடன் தொகையாக வழங்க அரசு முடிவு எடுத்துள்ளது.

குற்றமிழைப்பவர்கள் உணர்ந்து திருந்தி வாழ வாய்ப்பளித்து, சமூகத்தில் சமமாக வாழ வகைசெய்யும் வண்ணம், 'தண்டனைக் குறைப்பு' என்ற வகையில் 1992-இல் 713 பேர்களும், 1993-இல் 629 பேர்களும், 1994-இல் 802 பேர்களும், ஆக சென்ற மூன்றாண்டுகளில் 2144 பேர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதுதவிர, இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக, சென்ற மூன்றாண்டுகளில், சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து இதுவரை யாரும் செய்யாதவகையில், ஆயுள் தண்டனை பெற்ற 12 ஆண்டுகள் சிறைவாசம் முடித்த கைதிகளின் குடும்பங்களில் ஒளியேற்றி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், 1992-இல் 209 பேர்களும், 1993-இல் 134 பேர்களும், 1994-இல் 169 பேர்களும், பெண் சிறைக் கைதிகள் 84 பேர்களும், ஆக மொத்தம் 596 பேர்களை முன் விடுதலை செய்துள்ளார்கள். இது ஒரு மகத்தான சாதனையாகும்.

சிறை நிருவாகத்தினை மேம்படுத்தும் மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ் 1987-90-ஆம் ஆண்டுகளில் ரூ.653.47 இலட்சத்திற்கான திட்டங்களைத் தீட்டி அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனை நிறைவேற்ற மத்திய அரசு 100 சத மானியம் என்ற வகையில், ரூ.224.17 இலட்சமும், 50:50 இணை மானியம் என்ற வகையில் ரூ.207.83 இலட்சமும் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தில் மாநில அரசின் பங்கு ரூ.207.83 இலட்சம் ஆகும். இதன்கீழ் கைதிகளின் பாதுகாப்பு, மருத்துவவசதி, அடிப்படை வசதிகள், பயிற்சி ஆகியவை அளிப்பதற்காகத் தமிழக அரசு இத்திட்டங்களின் மீது ஒப்புதலளித்தது.

இந்த மத்திய நிதியுதவியின் கீழ், முக்கியக் கட்டடங்கள், ஆம்புலன்ஸ் வேன்கள் வாங்குதல், சுற்றுச்சுவர் கட்டுதல், இசிஜி வசதி, பைனாகுலர்கள் வாங்குதல், கணினி வசதி ஆகியவற்றிற்கு வகை செய்யப்படும்.

ஆக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய மக்கள் நல அரசு சென்ற மூன்றாண்டுகளில், நீதி நிர்வாகம், சிறைகள், சட்டக் கல்வி ஆகிய மூன்று துறைகளில் முத்தான சாதனைகள் பலப்பல புரிந்துள்ளது என்பதற்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுக்கள், பல்வேறு நடைமுறைகள் உள்ளன என்பதே இத்துறையின் வெற்றிச் சின்னமாக விளங்கி, பல்லாண்டுகள் நிலைத்து நிற்கும் சாதனைச் செல்வி டாக்டர் முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் வெற்றி மகுடத்தில் மாணிக்கக் கல்லாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

வளமான தமிழ்நாட்டில் வருவாய்த் துறை சாதனைகள்

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம்

தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் இந்த மூன்றாண்டுகள் 'பொற்காலம்' என்று போற்றத்தக்கதாகும். காரணம் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அரிய தலைமையிலான அற்புத ஆட்சி மலர்ந்து மூன்றாண்டுக் காலமாகிறது.

முத்தான இந்த மூன்றாண்டுக் காலத்தில், வளமார்ந்த தமிழ்நாட்டின் அரசுப் பொறுப்பேற்றுள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சீரிய தலைமையிலான வருவாய்த் துறையின் ஆக்கபூர்வப் பணிகள் -அதிசயிக்கத்தக்க சாதனைகள் அளவிடற்கரியனவாகும். அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்திற்கு அரசு அங்கீகாரம் அளிக்கப்பட்டு உள்ளது.

கிராம உதவியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போலவே பணியில் இருக்கும் போதே இறந்த கிராம உதவியாளர் குடும்பங்களுக்குக் குடும்ப நல நிதி ரூ.60,000 வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

கிராம ஊழியர்கள் இறந்த அன்றே, அவர்களது ஈமக்கிரியைக்காக ரூ.2,000 வழங்க வட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கிராம உதவியாளர் பணிக்குப் பெண்களையும் நியமனம் செய்யலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

கிராம உதவியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் ரூ.200 லிருந்து ரூ.300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கிராம உதவியாளர்கள் ஊதிய உயர்வு அளிக்கப்படவேண்டுமென எழுப்பிய கோரிக்கையை ஏற்று, அவர்களுக்குத் தற்போது மாதமொன்றுக்கு வழங்கப்படும் ரூ.612 தொகுப்பூதியத்தை 1.7.92 முதல் ரூ.712 எனவும் 1.1.93 முதல் ரூ.745 மற்றும் அகவிலைப்படியாக ரூ.80 ஆக மொத்தம் ரூ.825 எனவும் உயர்த்தி வழங்க டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1.7.93 முதல் அடிப்படை ஊதியத்துடன் 9 சதவிகித அகவிலைப் படியும் கிராம உதவியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

முழுநேர ஊழியர்களாக மாற்ற வேண்டும் என எழுப்பிய கிராம ஊழியர்களின் கோரிக்கையைப் பரிசிலனை செய்து அரசுக்கு அறிக்கை அனுப்புவதற்காகக் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இரண்டாம் பகுதித் திட்டம் 1991-92.

வருவாய்த்துறை கட்டடங்கள்

நான்கு வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.8 இலட்சத்திற்கு, நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது/:

காங்கேயம் வட்டம் ... பெரியார் மாவட்டம்

பொன்னாகரம் வட்டம் ... தருமபுரி மாவட்டம்

கந்தர்வக்கோட்டை வட்டம் – புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் ஏர்க்காடு வட்டம் ... சேலம் மாவட்டம்.

பரமத்தி வேலூர், ராதாபுரம் ஆகிய ஊர்களில், இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்ட ரூ.85 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

பரமக்குடி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் ரூ.33 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலேதான்,

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் குடியிருபபு மாளிகை முகாம் அலுவலகம் கட்ட ரூ.22.39 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

மாவட்டங்களைச் சீரமைத்தல் மாவட்ட வருவாய்த் நிர்வாகம்

மாவட்ட நிர்வாகத்தை மேலும் செவ்வனே செயல்படுத்துவதற்கும், பொதுமக்கள் குறைகளைக் கவனிப்பதற்கும் நலத் திட்டங்களைக் காலதாமதமின்றிச் செயல்படுத்துவதற்கும் பெரிய மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் ஆகியவற்றை அரசு படிப்படியாகச் சீரமைத்து வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்ட தஞ்சாவூர் மாவட்டம் என்றும், நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 18.10.1991 முதல் செயல்படுகிறது. மேலும் தற்பொழுது தென்னார்க்காடு மாவட்டத்தைப் பிரித்தமைத்து, கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட 'தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டமும், விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டமும் 15.9.1993 முதல் செயல்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டம், உசிலம் பட்டி மற்றும் திருமங்கலம் வட்டங்களைத் திருத்தியமைத்து, பேரையூர் என்று புதிய வட்டம் 25.9.93 முதல் செயல்படுகிறது.

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மற்றும் ஊத்தங்கரை வட்டங்களைத் திருத்தியமைத்து போச்சம்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களின் குறைகளைத் துரிதமாகக் களைவதற்கும் வருவாய்த் துறையின் இயந்திரம் மேலும் செம்மையாகச் செயல்படவும், தற்போதுள்ள 172 வருவாய் வட்டங்களின் கீழ், 360 மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு மண்டலத் துணை வட்டாட்சியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

இதன் பயனாகப் பொதுமக்கள் தங்களது பல கோரிக்கைகள் உதாரணமாக வருமானச் சான்றிதழ், குடியுரிமை மற்றும் சாதிச் சான்றிதழ்கள் வழங்குதல் பிறப்பு இறப்புச் சான்றுகள் வழங்குதல் போன்றவைகள் பெறுவதற்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்லவேண்டிய அவசியமில்லாமல், மண்டலத் துணை வட்டாட்சியர் அவர்களிடமிருந்தே பெறுவதற்கு ஏதுவாகின்றது. இதனால் பொது மக்களுக்குக் காலம் மற்றும் பொருட்செலவும் விரயமாவது மிக அதிகமான அளவில் குறைக்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.60 இலட்சத்திற்கு அரசு 7.7.93-இல் ஆணையிட்டுள்ளது.

கோயம்புத்தூர் (வடக்கு), கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் ஆகிய இடங்களில் புதிய வட்ட அலுவலகங்கள் கட்ட ரூ.168 இலட்சத்திற்கு அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியதில், ரூ.40 இலட்சம் தற்போது நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

மலைப்பகுதிகளில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 25 குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு ரூ.50 இலட்சத்திற்கு அரசு நிர்வாக ஒப்பளிப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பணியாளர்களும், பொதுமக்களும் பயன்படுத்துவதற்காக அனைத்து வட்ட அலுவலகங்களிலும் கழிவறைகளைக் கட்டுவதற்காக ரூ.23 இலட்சத்திற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தருமபுரி, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நான்கு வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட தலா ரூ.9.20 இலட்சம் வீதம் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டு உள்ளது.

தமிழ்நாட்டில் கரையோரப் பகுதிகளில் உள்ள மாவட்டங்கள் புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் மிகவும் அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகின்றன. அதுவுமில்லாமல் கிராமங்களில் உள்ள பெரும்பான்மையான வீடுகள் கூரை வீடுகளாக உள்ளன. சென்னை நகரிலும் இந்த மாதிரியான குடிசைகள் அதிகமாக உள்ளன. ஆகையால் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மேற்படி இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணத் தொகைகளைப் பெற்று பட்டுவாடா செய்ய மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

மேற்படி இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளைச் சீரமைப்பதற்காக, முழுமையாகப் பாதிக்கப் பட்ட குடிசைகளுக்குத் தலா ரூ.500-ம், பகுதியாக பாதிக்கப் பட்ட குடிசைகளுக்கு தலா ரூ.250 உயர்த்தியும் வழங்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிவாரணத் தொகை சென்னை நகரில் முறையே, தலா ரூ.600-ம் ரூ.300-மாக வழங்கப்படுகின்றது. இதுதவிர ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி அல்லது லுங்கி மற்றும் ஒரு சேலை இலவசமாக வழங்கப் படுகின்றன.

இயற்கைச் சீற்றத்தினால் மரணமடைந்தவர் குடும்பத் தலைவராகவும் குடும்பத்தில் பொருளீட்டுபவராகவும் இருப்பினும், இல்லாவிட்டாலும் அவரது குடும்பத்திற்கு முன்பெல்லாம் கருணைத் தொகையாக ரூ.2000

வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் ரூ.10,000ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இறந்தவர் குழந்தையாக இருப்பினும்கூட இத்தொகை வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது மழை மற்றும் வெள்ளத்தினால் முழுமையாகச் சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு ரூ.500 வழங்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வீடு இழந்தவர்களுக்கு ரூ.5,000 வழங்கிட ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களுக்கு அவர்களது வீடுகளை மீண்டும் புதுப்பித்துக் கட்டிக் கொள்ள 10,000 வீடுகளுக்கு அனுமதி வழங்கியிருப்பதுடன், ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.15,000 வீதம் வழங்கிட உத்தரவிட்டுள்ளது. இதில் 70 சதவிகிதம் கடனாகவும் மீதமுள்ள 30 சதவிகிதம் அரசு ஊக்குதவியாக வழங்குவது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

முதியோர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசு 1.4.62 முதல் முதியோர் உதவித் தொகைத் திட்டம் ஒன்றினைக் கொண்டு வந்து அமலாக்கியது. உற்றார் உறவினர், ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், முதியோர் உதவித்தொகை தவிர ஆதரவற்ற ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவை, ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற இளம் பெண்கள் போன்ற இனங்களின் கீழும் இத்திட்டத்தினை, பின்பு, மாநில அரசு விரிவாக்கியது.

தற்போது 1.2.92 முதல், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் இந்த அரசு, ஆதரவற்ற ஏழை எளிய மக்களின் நிலை அறிந்தும், தற்போது நிலவி வரும் விலைவாசி உயர்வினையும், நலிந்தோர் நலன்களையும் மனதில் கொண்டும், இந்த உதவித் தொகையினை ரூ.50லிருந்து ரூ.75 வீதம் உயர்த்தியுள்ளது. இந்த உதவித் தொகையின் உயர்வு, முந்தைய உயர்வுகளைக் காட்டிலும், கூடுதலாகச் செய்தது, அரசின் சமூக நல அக்கறையைக் காட்டுகிறது.

இந்த உதவித் தொகை தவிர, ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகை தினங்களில் உதவித் தொகை பெறுபவர்களுக்கு இலவசமாகக் கைத்தறி ஜனதா வேட்டியும், சேலையும் வழங்குவதுடன், நாள்தோறும் மதிய உணவு, இலவசமாகச் சத்துணவுக் கூடங்களில் வழங்கியும், ஆதரவற்ற இந்த முதியோர் மற்றும் மேலே கண்ட நபர்களுக்கு, இலவச அரிசி அளித்தும் ஆதரவு அளித்துக் கொண்டு வருகின்றது இந்த அரசு. முதியோர் உதவித் திட்டத்தின் கீழ் இலவச அரிசி வழங்கும் திட்டம் மே 89-ஆம் ஆண்டில் கைவிடப் பட்டு இருந்ததை, இந்த அரசு செப்டம்பர் 91 முதல் திரும்பவும் செயலாக்கியுள்ளது. இந்த முறையில், இந்த அரசு ஆதரவற்றவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு எந்த வகையில் அளித்து வருகின்றது என அறியலாம்.

பாதிக்கப்பட்ட ஆதரவற்றவர்கள் நேரடியாக, வட்டாட்சியரை அணுகி, தங்களது குறைகளைத் தீர்த்துக் கொள்ளவும், முதியோர் உதவித் தொகை, காலதாமதமின்றி உடன் பெறவும், வழி வகுக்கப்பட்டுள்ளது.

12.5.92 நாளன்று முதியோர் உதவித் தொகை பெறுபவர்

விண்ணபங்களின் காத்திருப்போர் பட்டியலினால் ஏற்படும் கால தாமதங்களைக் களையும் பொருட்டு, ஒட்டு மொத்தமாக ஆண்டு தொடக்கத்தில் முன் பாகவே ஒட்டுமொத்த எண்ணிக்கையில் இடங்கள் அளித்து 1992-93-ஆண்டுக்கு, ஏற்கெனவே 30,000 இடங்களை ஒப்பளிப்பு அளித்து உத்தரவிட்டுள்ளது. இந்த இடங்கள் யாவும் முன்னதாகவே அந்தந்த மாவட்டங்களுக்குத் தேவைக்கேற்பப் பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறை மூலம், இந்த அரசு, உதவித் தொகை உரியவர்களுக்கு கிடைக்க, தாமதம் ஏற்படாமல் தவிர்க்கிறது.

இதுநாள் வரை இந்த முதியோர் உதவித் தொகை பெறுபவர்களின் முகவரிக்கு அஞ்சல் வழியாக மணியார்டர் மூலம் அனுப்பப்பட்டது. இதற்கான பண அஞ்சல் கமிஷன் தொகையும் மாநில அரசே ஏற்றுக் கொண்டது. ஆனால், இனி புதிய மின் அணு இயந்திரம் மூலம் மணியார்டர் பாரங்கள் பூர்த்தி செய்து அனுப்பும் திட்டத்தினை உடன் அமல்படுத்த அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. இதிலிருந்து, நலிந்தோர் நலன் காக்கவும், துயர் துடைக்கவும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்தப் பொன்னான அரசு, எவ்வளவு கவனம் கொண்டுள்ளது என அறியலாம்.

விபத்து நிவாரணத் திட்டம்

தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது விபத்தினால் இறக்க நேரிடும் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பத்துக்கு நிதியுதவி வழங்குவதற்காக, அரசு ஒருங்கிணைந்த 'விபத்து நிவாரணத் திட்டம்' ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின்கீழ், தற்போது 42 இன ஏழைத் தொழிலாளர்கள் பயன்பெறுகின்றனர்.

கீழ்க்கண்ட புது இனங்கள் இந்த ஆட்சிக் காலத்தில்தான் சேர்க்கப் பட்டுள்ளன-

மலைகளிலுள்ள மரங்கள் மற்றும் பாறைகளில் ஏறி கல்பாசம், கடுக்காய் மற்றும் தேன் போன்ற வனப் பொருள்களைச் சேகரம் செய்யும் தொழிலாளர்கள் (கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இல்லாதவர்கள் மட்டும்).

தனியார் லாரி, டிரக் மற்றும் வேன்களில் பணி புரியும் கிளீனர்கள் போன்ற தொழிலாளர்கள்.

முழு நேர வேலையாகப் பிளம்பர் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நபர்கள்.

விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோருக்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. தொழிலில் ஈடுபட்டிருக்கையில் இறக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்கள் குடும்பத்திற்கு ரூ.10,000, ரூ.7,000 மற்றும் ரூ.5,000, என இறப்பிற்கும், அங்கங்கள் இழப்பிற்கும் ஏற்ப வழங்கப்படுகிறது.

பொது மக்கள் குறை தீர்க்கும் பிரிவு

பொதுமக்கள் குறைகளைக் கேட்டறிந்து அவற்றிற்குத் தீர்வு காணப் பல வழிகள் இருப்பினும், பொதுமக்களின் குறைகளைக் கவனித்து அதனை உடனுக்குடன் தீர்ப்பதே அரசின் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு அப் பணியைச் சிறந்த முறையில் நிறைவேற்றவும், அதில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாகச் செயலாற்றவேண்டிய நோக்கத்துடனும் மாண்புமிகு முதல்வரின் உத்தரவின்படி ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலும் ஒரு தனித் துணை ஆட்சியர் நியமிக்கப்பட்டனர்.

தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நல நிவாரணத் திட்டம்

குடும்பக் காப்புப் பொருளீட்டுபவர்கள் இறந்தால் அன்னாரின் வருமானத்தை இழந்து தவிக்கும் ஏழைக் குடும்பத்திற்குத் தனி உதவி செய்யும் வகையில் ரூ.2000 வீதம் நிவாரணம் வழங்க தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நல நிவாரணத் திட்டம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. பின்னர் இந் நிவாரணத் தொகையினை ரூ.3,000-ஆகவும் பிறகு 5,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 14,811 குடும்பங்களுக்கு பயன் பெற்று ரூ.2,80,22,000 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.3 கோடி பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் இது ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டது. 1990-91-ஆம் ஆண்டு 22,904 குடும்பங்களுக்கு, ரூ.6,87,66,000 நிவாரணத் தொகை வழங்கிப் பயனடையச் செய்துள்ளது.

1991-92-ஆம் ஆண்டு ரூ.6,96,56,000 நிவாரணத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டு 28,566 குடும்பங்களுக்கு ரூ.8,48,96,000 நிவாரணத் தொகை வழங்கப் பட்டது.

1993-94-ஆம் ஆண்டில் 34,260 குடும்பங்களுக்கு, ரூ.15,62,00,000 நிவாரணத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகைக்கு இலவசப் புடவை, வேட்டி வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில், முதல் முதலாக 1992-ஆம் ஆண்டுதான், பொங்கல் பண்டிகைக்கு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடிசைவாசிகளுக்கு இலவசமாகப் புடவை வேட்டி வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தில் 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் பயன் பெற்றனர். இதன் அடிப்படையில் 1993-ஆம் ஆண்டுக்கும் 60,66,503 புடவைகள் 60,56,709 வேட்டிகள் வழங்கப்பட்டன. முழுமையாக கோ-ஆப்டெக்ஸ் மூலமாகவே வழங்க டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால அரசில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், இயற்கையின் சீற்றம் அதிகமாக இருந்ததால் கூடுதலாக 15 இலட்சம் சேலைகளும் வழங்க ஆணையிடப்பட்டது. இதன்படி 1994 பொங்கல் பண்டிகைக்கு 62,98,701 சேலைகளும், 62,67,405 வேட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. பொங்கல் பண்டிகைக்கு இலவசப் புடவை மற்றும் வேட்டி வழங்கும் திட்டத்திற்குக் கீழ்க்கண்டுள்ளபடி செலவினம் செய்யப்பட்டுள்ளது:

1992-ஆம் ஆண்டிற்கு ரூ.38.34 கோடி

1993-ஆம் ஆண்டிற்கு ரூ.45.00 கோடி

1994-ஆம் ஆண்டிற்கு ரூ.47.00 கோடி

நில அளவை மற்றும் பதிவுருக்கள்

தமிழ்நாட்டில், நில அளவைப் பதிவுருக்கள் கட்டுமானம், 1923-ஆம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைச் சட்டம் 8 என்ற தனிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சந்தேகத்திற்கோ, குழப்பத்திற்கோ இடமற்ற வகையில் நில உடைமைகள் புலத்தில் அடையாளம் காணப்பட்டு, புலத்தின் சரியான இலக்கும் அதன் பரப்பளவும் வரையறுக்கப்படுகின்றன. விற்பனை, பாகப் பிரிவினை, உரிமை வழி மாற்றம் மூலம் அன்றாடம் ஏற்பட்டு வரும் பதிவு மாற்றங்களைக் கிராம ஆவணங்களில் மேற்கொண்டும், நில அளவைக் கட்டுமானத்தைப் பராமரித்தும் வருவதுடன், தேவைக்கேற்ப, விவசாய நிலங்கள் மற்றும் நகர்ப்புறங்களிலும் நில அளவைப்பணி மேற்கொள்கிறது.

நிலச்சீர் திருத்தத்திற்கும், விவசாயப் பொருளாதார வளர்ச்சிக்கும் நில உடைமைகள் மேம்பாடு ஓர் அடிப்படைத் தேவையாகும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு கீழ்க்கண்ட திட்டங்கள் இம்மாநிலத்தில் அமல் செய்யப் பட்டு வருகின்றன:

1. நத்தம் நில அளவை மற்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது பிற இனங்களில் உபயோகப் படுத்தப்படும் விவசாய நிலங்களை அளத்தல்:

2. நகரியம், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை செய்தல்.

3. மலைக்கிராமங்கள் அளவை செய்தல்.

☐ மக்களாட்சிச் சிறப்புக் கொண்ட இந்திய நாடு, என்றென்றும் இதே புகழோடு திகழவேண்டுமெனில் நமக்குள் போட்டி பொறாமைகளை விலக்கி, வேதனைகளை வளர்ப்பதைத் தவிர்த்து, ஒற்றுமை உணர்வோடு, ஒருமைப்பாட்டைப் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமையாகும்.

நத்தம் அளவை

இத்திட்டப்பணி சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மாநிலத்தின் இதர மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தினால் பயனடைந்தோர் தனது குடியிருப்பு உரிமைகளைப் பெறுவதோடன்றி, வங்கிக் கடன் போன்ற சலுகைகளையும் பெறவும் வாய்ப்புள்ளது. இப்பணி இம்மாநிலத்தில் 167 வட்டங்களில் 16,800 கிராமங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதுவரை 162 வட்டங்களில் 16,428 கிராமங்களை உள்ளடக்கி, 4,168 ச.கி.மீ. பரப்பில் பணி எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 4,141 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

நகர அளவை

3 மாநகராட்சிகள் மற்றும் 106 நகராட்சிகளையும் உள்ளடக்கி சுமார் 2,300 ச.கி.மீ பரப்பில் பணிமேற்கொள்ள வேண்டி உள்ளது. 1,239 ச.கி.மீ. பரப்பை உள்ளடக்கி 3 மாநகராட்சி மற்றும் 67 நகராட்சிகளில் பணி இதுவரை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவற்றுள் மொத்தம் 929 ச.கி.மீ. பரப்பு அளவைப் பணி இதுவரை முடிக்கப்பட்டுள்ளது.

மலைக்கிராம அளவைப் பணி

பின்தங்கிய பகுதி மக்களாகிய ஆதிவாசிகள் நல வாழ்வுத் திட்டமாக மலைக்கிராம அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் சமன் பகுதிகளில் உள்ள நில உடைமைகளுக்கு இணையாக மலைப்பகுதிகளில் உள்ள நில உடைமையாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட நில உடைமைகள் கொணரப்படுகிறது. மேலும், மலைவாழ் மக்களால் இதுகாறும் செய்து வந்த சிவஜமா சாகுபடியினை ஒழுங்குபடுத்த வகை செய்கிறது.

இப்பணி ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, கொல்லிமலை, அரநூத்து மலை, பச்சமலை மற்றும் ஆனைமலை ஆகிய ஆறு மலைகளில் 904 ச.கி.மீ. பரப்பை உள்ளடக்கி 66 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 859 ச.கி.மீ. பரப்பில் அளவைப்பணி முடிக்கப்பட்டு உள்ளது.

பட்டா பதிவுப் புத்தகம் திட்டம்

பட்டா பதிவுப் புத்தகத் திட்டம் முதல் கட்டமாக 1.4.93 முதல் இம்மாநிலத்தில், ஆறு மாவட்டங்களில் (வடஆர்க்காடு-அம்பேத்கார் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சிதம்பரனார் மாவட்டங்கள்) செயல்படுத்தப்படுகிறது. இப்புத்தகம் எவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளதோ, அவர் பெயருக்கு அந்நிலத்தின் உரிமைக்கு ஒரு சான்றாகவும், அவருக்குச் சொந்தமான நிலத்தின் விவரங்களுடன் அதனில் குறிக்

3

கப்பட்ட வில்லங்கச் சான்று ஆவணமாகவும் பயன்படுகிறது.

நிலப்பதிவுருக்கள் கணினி மயமாக்குதல்

நிலப்பதிவுருக்கள் மேம்படுத்துதல் மூலம் மாவட்ட நிர்வாகத்தை நவீனமாக்கும் தொடர் திட்டத்தின் ஒரு பகுதியாக சேலம் மாவட்டத்தில் நிலப்பதிவுருக்களை கணினிமயமாக்கும் ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென 20 கணினிப் பொறிகள் ரூ.25 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட 9 கிராம கணக்குகளும் மற்றும் 15 வட்டப் பதிவேடுகளும் கணினி மயமாக்கப்படுகிறன. இதற்கான விவர வகைப்பாட்டுப் பணிகள் சென்னை, அரசு புள்ளி சேகரிப்பு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. சேலம் மாவட்டத்தில் 56 கிராமங்களுக்குக் கம்ப்யூட்டர் மூலம் உத்தேசப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாகத் திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் எல்லா மாவட்டங்களும் இத்திட்டத்தின்கீழ் கொணரப்படவுள்ளன.

வருவாய்ப் பதிவேடுகள் பதிதலும், பராமரித்தலும் கவனமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய அரசு நிதி உதவி

வருவாய் நிர்வாகம், மற்றும் நில உடைமைப் பதிவுருக்களை மேம்படுத்த மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், நவீன கருவிகள் வாங்கவும், பயிற்சி உள்ளமைப்புக்களை வலுப்படுத்தவும், 1990-91-ஆண்டிற்கு ரூ.200 இலட்சமும், 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.187.97 இலட்சமும் 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ.125.76 இலட்சமும் மைய அரசு ஒதுக்கியுள்ளது. இதனில் 50 சதவிகிதம் மாநில அரசு ஏற்றுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நவீன உபகரணங்களாகிய இ.டி.எம். தியோடலைட் பிளைண். பேப்பர் காப்பியர், லாமினேட்டிங் மெஷின், மைக்ரோ ஆப்டிக் தியோடலைட், ஆடியோ விஷுவல்ஸ்கிரைப்பிங் கருவிகள், கார்ட்டோகிராப்பிக் கருவிகள் மற்றும் மினி பஸ் போன்றவை வாங்கப்பட்டு, மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன்பொருட்டு இதுவரை சுமார் 223 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

பணியாளர்கள் மாற்றுப்பணி அமர்த்தல்

இத்துறையில் திட்டப்பணி செயலாக்கத்திற்கெனத் தொகுப்பூதியப் பணியாளர்கள் உள்ளிட்ட சிறப்புப் பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பணியாளர்கள் திட்டப்பணியில் பல ஆண்டுகள் பணி முடித்து வேறு பணிகளில் நியமனம் செய்வதற்கான வயது வரம்பு கடந்த நிலையில் உள்ளனர். இவர்களது நிலையை மனிதாபிமான கண்ணோட்டத்தில் அணுகிய டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் இந்தப் புனித அரசு, இவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளில் மாற்றுப்பணி வழங்கத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்து உள்ளது. அதன்படி 5,015 தொகுப்பூதியப் பணியாளர்கள் காலச் சம்பள ஏற்றுமுறை விகிதத்தில் கீழ்க்கண்டவாறு பணி அமர்த்தப்பட்டுள்ளனர்:

1. நில அளவைத்துறையில் ஏற்பட்ட காலியிடங்கள் 4060.
2. பிற துறைகளில் பணி அமர்த்தப்பட்டவர்கள் 955.

எஞ்சியுள்ள தொகுப்பூதியப் பணியாளர்கள் அனைவரும் பிற துறைகளில் ஏற்படும் காலி இடங்களில் அமர்த்தப்பட வேண்டும் என அரசு மீண்டும் உத்தரவிட்டுள்ளது.

வேளாண்மை வருமான வரி

வேளாண்மை வருமான வரி விதிப்பு தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், மராட்டியம், மேற்கு வங்காளம், அஸ்ஸாம் மற்றும் திரிபுரா ஆகிய ஏழு மாநிலங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 1955-ஆம் ஆண்டில் வேளாண்மை வருமானவரி விதிப்புச் சட்டம் அமல் படுத்தப்பட்டு, மலைத் தோட்டப் பயிர்களில் இருந்து பெறப்படும் வருமானத்திற்கு மட்டுமே வரி விதிப்பு செயல்படுத்தப்பட்டது. பின்னர் 1958-ஆம் ஆண்டில் சட்டம் திருத்தப்பட்டு மலைத் தோட்டம் அல்லாத பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கும் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அச்சட்டப்படி, சிறு விவசாயிகட்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான் மலைத் தோட்டமல்லாத பயிர்கள் மீது வேளாண்மை வருமானவரி விதிப்பு 1.4.92 முதல் முழுமையாகக் கைவிடப்பட்டது.

எட்டு ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்போர் மட்டுமே 1.4.92 முதல் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிவிதிப்புச் சட்டம் 1955-ன் கீழ் வரிவிதிப்பு செய்யப்படுகின்றனர். இணக்க முறை வரிவிதிப்பு 9 சாதாரண ஏக்கர் முதல் 50 சாதாரண ஏக்கர் வரை அனுமதிக்கப்படுகிறது.

அனுபவம் என்பது தேர்வு இல்லாத பாடம், அனுபவம் என்பது பாடம் கற்கும் பொழுதே வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் கல்வி முறையாகும்.

வரிவிதிப்பாண்டு 1992-93- முதல் சுயவரிவிதிப்புக்கும், முன்னதாக வரிசெலுத்தும் முறைக்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

பலவிதமான தோட்டப்பயிர்களில் பயன்தரு ஆயுட்காலத்தில் அடிப்படையில் அப்பயிர்களைத் திரும்பவும் நடுவதற்காகும் செலவினங்களுக்கான வருமானக் கழிவின் வீதங்கள் விவசாய வருமானவரிச் சட்டம் பிரிவு 5ஏ-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. தேயிலைக்கு மொத்தப் பரப்பில் 25 சதவிகிதமும், இரப்பருக்கு 3.33 சதவிகிதமும், ஏலக்காய்க்கு 10 சதவிகிதமும் அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நடைமுறை முதலீட்டினை வட்டிச் செலவினம் வருமானத்தின் 25 சதவிகிதத்தில் 9 சதவிகிதம் என்று இருந்ததை மாற்றி, வட்டிச் செலவினம் முழுவதுமாக வருமானக் கழிவிற்கு அனுமதிக்குமாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது போனஸ், சேமநலநிதி, பணிக்கொடை மற்றும் தொழிலாளர்களுக்குத் தரப்படும் இதரச் சலுகைகளுக்கான செலவினம் அனுமதிப்பதில் உள்ள சில அம்சங்கள் வருமானவரிச் சட்டம் 1961-ல் உள்ளது போன்று இருக்குமாறு சட்டத் திருத்தம் 1994-95 வரிவிதிப்பு ஆண்டு முதல் அமலுக்குக் கொண்டுவர 1994-95-ஆம் ஆண்டில் பட்ஜெட் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை வருமானவரி உச்சவரம்பு, 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ. 10,000ல் இருந்து ரூ. 22,000 வரையிலும் 1993-94-ஆம் ஆண்டு முதல் ரூ.22,000-லிருந்து ரூ.28,000 வரையுலுமாக உயர்த்தப்பட்டு உள்ளது. வேளாண்மை வருமான வரிதாரர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

இவ்வாறாகப் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆட்சிக் காலத் தமிழகத்தில், வருவாய்த் துறைப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு உள்ளன.

வளரும் தமிழகத்தில் மலரும் புதிய மாவட்டம்!

'கண்ணியத்தின் மறுபெயர் காயிதே மில்லத்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழப்பட்ட, இந்திய இஸ்லாமிய இனத்தின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான, பெருந்தகை முகமது இமாயில் அவர்களின் நினைவினை என்றும் பசுமையாகப் போற்றிடும் வகையில் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த முடிவின்படி, சீர்மிகு கடற்கரை நகரான இந் நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண், 'நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தை தொடங்கி வைப்பதில் மெத்தப் பெருமையும் பூரிப்பும் கொள்கிறேன்.

சோழ வளநாடென்னும் தஞ்சைத் தரணி மகிழ்ச்சி பொங்க, ஆனந்த வெள்ளத்தில் குதூகலிக்கும் இந் நன்னாளில், அலை கடலெனத் திரண்டுள்ள உங்கள் அனைவரையும் காணுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கரிகால் சோழனும், ராஜ ராஜ சோழனும் பிறந்த மண், காவிரி அன்னை காலங்காலமாக ஓடி வளப்படுத்திய கழனிகளின் சொர்க்கம் கவிச் சக்கரவர்த்தி கம்பனும், கற்புக்கரசி கண்ணகியும் பிறந்த பூமி உலகையே வசப்படுத்தும் இசையும், பாடலும், நடனமும் தோன்றிய இடம் மக்களாட்சித் தத்துவத்திற்கு முதல் முதல் வழிகாட்டிய குடவோலை முறையையும், உள்ளாட்சி நிர்வாக அமைப்பையும் நமக்கு அறிமுகப்படுத்திய நாடு என்ற சிறப்பினை எல்லாம் பெற்ற பண்டைய சோழ நாட்டின் ஒரு பகுதிதான், இன்று புதிய மாவட்டமாக அமைகிறது.

அண்ணல் காந்தியடிகளின் அன்பைப் பெற்ற தில்லையாடி வள்ளியம்மையின் புகழும் பெருமையும், இம்மண்ணின் தியாகப் பெருமையை எடுத்துக்காட்டுவனவாகும். இந்திய நாட்டின் விடுதலை வரலாற்றில், உப்பு சத்தியாக்கிரகம் நடந்த சிறப்பு பெறும் இடங்கள் இரண்டு ஆகும். அவற்றில் ஒன்று வடநாட்டில் உள்ள தண்டி ஆகும். மற்றொன்று இம்மாவட்டத்தில் இடம்பெறும் வேதாரண்யம் என்ற பெருமையும் இப்பகுதிக்கு உண்டு.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இன்றைய இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவரே, இம்மாவட்டத்தில் பிறந்தவர் என்ற சிறப்பையும் பெற்றிருக்கின்றோம். இவ்வாறு இம்மாவட்டத்திற்கு நானும் உரிமை கொண்டாடக் காரணம், எனது மூதாதையர்கள் பிறந்து வளர்ந்தது இதே சோழ மண்டலத்தில் உள்ள ஸ்ரீரங்கம் ஆகும்.

பல்வேறு சிறப்புகளின் தொகுப்புத்தான் தஞ்சை மாவட்டம் ஆகும். இன்று புதிதாக அமையும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், உலகப்புகழ் பெற்ற திருத்தலங்களையும் தன்னகத்தே கொண்ட சீர்மிகு மாவட்டம் ஆகும். இந்துக்கள் பெரிதும் விரும்பும் சிக்கல் சிங்கார வேலன் திருக்கோயிலும், இஸ்லாமியர்கள் மனங்கவர்ந்த நாகூர் தர்காவும், கிறிஸ்தவர்கள் போற்றிப் புகழும் வேளாங்கண்ணி ஆலயமும், இங்கே அமைந்திருந்தாலும், அவை அனைத்தும் மத வேறுபாடின்றி அனைவரும் வழிபடும் ஸ்தலங்களாகத் திகழுவது நமது வரலாற்றின் மத ஒற்றுமைக் கொள்கைகளுக்கு ஒரு சீரிய எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி – 1-லிருந்து

உணவுத்துறையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அரசின் மூன்றாண்டுச் சாதனைகள்

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு இராம வீரப்பன்

சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது, வரி வசூல் செய்வது, அதை நிர்வகிப்பது இவைகள் மட்டுமே அரசின் கடமையாக இருந்த காலம் மாறி, குடிமக்களுக்குத் தேவையான இன்றியமையா உணவுப் பொருட்களை வழங்குவதும் அரசின் கடமைகளில் ஒன்று என்ற அவசியம் உலக மகாயுத்தம் முடிந்த பிறகு ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாய் எழுந்தது. மக்கள் நலம் பேணும் அரசுகள் உணவுப் பங்கீட்டு என்னும் திட்டத்தை அமல்படுத்தத் துவங்கின.

தமிழ்நாடு அரசு பொதுமக்களுக்குத் தேவையான இன்றியமையா உணவுப் பொருட்களை வழங்குவதைத் தனது தலையாய கடமைகளில் ஒன்று எனக்கருதி, அரசின் நுகர் பொருள் வழங்கு துறை மூலமாக வழங்கி வந்தது. ஆண்டுதோறும் வழங்கப்படுகிற உணவுப் பொருட்களின் அளவு அதிகமாகி வந்ததைக் கருத்திற்கொண்டு, 1972 -ஆம் ஆண்டு இப்பணியைச் சிறப்பாக நிர்வாகம் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்ற வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்டு பொது விநியோக முறை மூலம் இன்றிமையாப் பொருட்களை, பொதுமக்களுக்கு வழங்கும் பணி இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த மூன்றாண்டுகளில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு, இக்கழகத்தின் மூலம்

உணவுத்துறையில் புரட்சிகரமான செயல் திட்டங்களை மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தியுள்ளது. நீண்டகாலமாக ஏகபோக நெல் கொள்முதல், தேவையின் நெருக்கடியை எண்ணி, அரசால் செய்யப்பட்டு வந்தது. நெல் அரிசி நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டது. பின்னர், நெருக்கடி குறைந்த போதும், மாநிலம் முழுவதும் சுதந்திரமான நெல் அரிசி போக்குவரத்து தடை செய்யப்பட்ட நிலை நீடித்து, மக்கள், வியாபாரிகள், விவசாயிகள் ஆகிய முத்தரப்பினரும், ஏதோ ஒரு வகையில் குறை கூறும் நிலை இருந்தது. மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சென்ற ஆண்டு துணிவோடு நடவடிக்கை எடுத்து, இணைக் கொள்முதல் எனும் திட்டத்தினைச் செயல்படுத்தி, தமிழகம் முழுவதும் நெல் அரிசி தங்கு தடையின்றி எடுத்துச் செல்லவும் வழி வகுத்துத் தந்தார்க்ள்.

தமிழ்நாட்டில், மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்குப் பிறகு உணவுப் பிரச்சினையில் இது போன்று துணிந்து கொள்கை முடிவெடுத்து, மக்கள் நலம் பேணும் வகையில் நடவடிக்கை எடுத்தது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசின் சிறப்புமிக்க சார்தனையாகும். இதனால் விவசாயிகள் விரும்புகிற விலைக்கு உற்பத்தி செய்த நெல்லை விற்கவும், மாநிலம் முழுவதும் சீரான நெல், அரிசி நடமாட்டம் இருக்கவும், மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி வெளிச் சந்தையில் கிடைக்கவும், தனி நபர்கள் பதுக்கி வைத்து கொள்ளை லாபம் பெறும் முறை ஒழிக்கப்படவும் வழி ஏற்பட்டது. இது ஒரு மாபெரும் உணவுத் துறைப் புரட்சியாகும்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசுதான் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகம் மூலம் 1992-93ஆம் ஆண்டில் உச்ச அளவான 18 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளது.

பொது விநியோகத் திட்டத்தில் அரிசி விலை, மற்ற மாநிலங்களில் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்தபோதும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில்தான் தமிழகத்தில் குறைந்த விலையில், மற்ற மாநிலங்களைப் போல் அல்லாது, எவ்வித வருமான வரம்பும் இன்றி, 1.5 கோடி குடும்ப அட்டைகளுக்கு அரிசி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க

சாதனையாகும். இதற்காக ஆண்டிற்குத் தற்போது ரூ.400 கோடி மானியமாகத் தமிழக அரசு வழங்கி வருகிறது.

இதன் மூலம் தமிழக மக்களுக்கு மாநிலம் முழுவதும் எவ்விதத் தட்டுப்பாடுமின்றிச் . சீராகவும், குறைந்த விலையிலும் அரிசி கிடைக்கச் செய்துள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சாதனையை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் உள்ள 23 நவீன அரிசி ஆலைகளின் தரத்தை உயர்த்தி, நல்ல தரமான அரிசி அரவை செய்யப்பட டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இருபத்தைந்து ஆண்டுகளாக நடைபெறாமல் – இப்பொழுதான் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் போளூரில் உள்ள அரிசி ஆலை ரூ.52 இலட்சம் செலவிலும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள அம்மன்பேட்டை அரிசி ஆலை ரூ.3.18 கோடி செலவிலும் நவீனமாக்கப்பட்டு, அரவைத்திறனும், அரிசியின் தரமும் உயர்த்தப்பட உள்ளன. குறைந்த விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் அரிசியின் தரத்தை உயர்த்திட, தொழில் நுணுக்கங்களை மேம்படுத்தி தொடர் அவியல் முறையை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பொது விநியோக முறை சீர்படுத்தப்பட்டு தவறிழைக்கும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதுமுள்ள சுமார் 22,000 நிய்யாய விலைக் கடைகள் திறம்பட இயங்கி, மக்களுக்குத் தேவையான இன்றியஷமயாப் பொருட்களை முறையாக வழங்கிட அர்சு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்

கழகம்தான் மிகப் பெரும் அளவில், ஆண்டுக்குச் சுமார் ரூ.1,500 கோடி அளவுக்கு உணவுப் பொருள் வணிக நடவடிக்கையில் ஈடுபட்டு, தமிழகம் முழுவதும் உள்ள 1.50 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்குப் பணியாற்றி வருகிறது.

விவசாயிகளின் நலன் காக்கும் வகையில், சென்ற ஆண்டு 25% வரை ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்திட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும் தமிழகத்தில், சில பகுதிகளில் கடந்த ஆண்டு ஏற்பட்ட புயல், பெரும் மழை காரணமாகச் சேதமுற்ற நெல்லையும், இதுவரை எப்போதுமே இல்லாத வகையில் 3 வது ரகம் எனப் புதிதாக வகைப்படுத்தி, அதனையும் விவசாயிகளிடமிருந்து அரசு கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு நஷ்டமும் துன்பமும் ஏற்படாவண்ணம் அவர்களைக் காத்தவர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆவார். இதனால் விவசாயிகளுக்கு ஏற்படவிருந்த பெரும் இழப்பு தவிர்க்கப்பட்டது.

கொள்முதல் விநியோகம், விலைக்கட்டுப்பாடு ஆகிய மூன்று முக்கியமான உணவுத்துறையின் நடவடிக்கைகளைக் கடந்த மூன்று ஆண்டுகளில் மிகவும் திருப்திகரமாகவும் வெற்றிகரமாகவும் நடைமுறைப்படுத்தி மக்களின் நலன் காத்து வருவது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசின் அரும்பெரும் சாதனையாகும்.

கடந்த 10 ஆண்டுகளாக, குடும்ப அட்டைகளில் மாற்றம் செய்யாததால், புதிய குடும்பங்கள் இடமாற்றம் ஏற்பட்ட குடும்பங்களுக்கு, குடும்ப அட்டைகள் வழங்காததால் ஏற்பட்ட இடர்ப்பாடுகளை நீக்கி சுமார் 27 லட்சம் குடும்பங்களுக்குப் புதிதாகக் கடந்த ஆண்டில் குடும்ப அட்டைகள் தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டு, தற்போது 1 கோடியே 50 லட்சம் குடும்ப அட்டைகளுக்கு 22,000 நியாய விலைக்கடைகள் மூலம் இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது நியாயவிலைக் கடைகளில் மைதா, ரவை

ஆகியவை பாலீத்தின் பைகளில் நிரப்பப்பட்டு கிலோ ஒன்றுக்கு முறையே ரூ.6.50, ரூ.6.60 என்ற விலையில் வழங்கப்பட்டு வருகிறது. வெளிச்சந்தையில் இந்த மைதா ரவை கிலோ ஒன்றுக்கு ரூபாய் ஒன்பது முதல் பன்னிரண்டரை வரை விற்கப்பட்டு வருகிறது. இவ்வளவு குறைந்த விலையில் கோதுமைப் பொருட்கள் விற்கப்படுவது இதுதான் முதல் முறை.

ஆண்டு ஒன்றுக்கு அரிசி 18,75,825 டன், சர்க்கரை 3,11,000 டன். கோதுமை - கோதுமைப் பொருட்கள் 1,53,000 டன், மண்ணெணெய் 8,55,761 கிலோ லிட்டர், ஆகியவைகளை நுகர் பொருள் வாணிபக்கழகம் நுகர் பொருள் வழங்குத்துறை, பொது விநியோகத் திட்டத்திற்காக வழங்கி வருகிறது. இந்தியாவிலேயே, பொது விநியோக முறை இவ்வளவு பெரும் அளவில் அரசின் கட்டுப்பாட்டில் செயல் படுத்தப்படுவது தமிழகத்தில் மட்டும்தான். பொது விநியோக முறையைச் சிறப்பாகச் செயல் படுத்தி வரும் மாநிலங்களில் தமிழகம் தலைசிறந்த மாநிலமாகத் திகழ்ந்து வருவது, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரிசின் சாதனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்..

பொது விநியோகத்திட்டம் தவிர, தமிழகத்தின் சிறப்பான திட்டமான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கும், ஆண்டு ஒன்றுக்கு ரூ.130 கோடி மதிப்புள்ள அரிசி, பருப்பு, எண்ணெணெய், சோயாமாவு போன்ற பொருட்களைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கி வருகிறது.

தமிழ்நர்டு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் பணிகளுக்காக, கடந்த மூன்றாண்டுகளில் 27,500 மெ.டன் கொள்ளவு கொண்ட 15 புதிய கிடங்குகள் ரூ. 3.85 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 72 நிரந்தர நேரடிக் கொள்முதல் நிலையங்கள் ரூ. 2.85 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

☐ தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காகவும், நியாயத்திற்காகவும் ஜனநாயக முறையில் நாங்கள் கடைசிவரை போராடுவோம்!

நுகர்வோர் பாதுகாப்பு:

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதிகளின் தலைமையில் நுகர்வோர் வழக்குகளைச் சிறப்பாகத் தீர்வு செய்கின்றன. மாநில அளவில் ஒரு குறை தீர்க்கும் ஆணையம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் இயங்கி வருகிறது. குறை தீர்க்கும் மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் தங்களுக்கு ஏற்படும் ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளவும் நுகர்வோர் நலச் சங்கங்கள் அவர்களுக்குள்ள பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவும் 1992-இல் கோயம்புத்தூரிலும், 1993-இல் மதுரையிலும் மாநில அளவில் இரு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இதுபோன்ற ஒரு கருத்தரங்கம் திருச்சியில் இந்த ஆண்டு நடைபெற உள்ளது.

நுகர்வோர் நலச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளில், ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 50000 வழங்கப்பட்டு உள்ளது. நடப்பு ஆண்டில் இது ரூபாய் 2.5 லட்சமாக உயர்த்தப்பட்டு உள்ளது. இதுதவிர, சிறந்த பணியாற்றும் நுகர்வோர் இயக்கச் செயல் வீரர்களுக்கு அரசு பரிசுகள் வழங்கி வருகிறது. கிராமங்களில் கருத்தரங்குகள் நடத்துதல், கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி, பாடத்திட்டங்களில் நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய குறிப்புகள் போன்ற நடவடிக்கைகளையும் மாநில அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தில் நுகர்வோர் பாதுகாப்பு மன்றங்களும், தமிழக நுகர்வோர் பாதுகாப்புத் துறையும் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருவதாக, தேசிய நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தின் தலைவர் நீதி அரசர் திரு. பாலகிருஷ்ண எராடி அவர்கள் பாராட்டியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மூலமாகப் பெறப்படும் மனுக்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 1.7.1991 முதல் 31.5.94 முடிய 3,136 மனுக்கள் பெறப்பட்டன. இவற்றின் மீது நடவடிக்கை மேற்கொண்டு 31.5.94 முடிய 1,876 இனங்களில் மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்றும், 842 இனங்களில் மனுதாரர்களின் கோரிக்கையை நிராகரித்தும் முடிவு செய்யப்பட்டன. மீதமுள்ள 418 இனங்களை முடிவு செய்ய நடிவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'மண்தினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற மூதுரைக்கிணங்க மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் கீழ் சிறப்பாக இயங்கி வரும் தமிழக அரசு பொது மக்களுக்கு உயிர் காக்கும் உணவினை அளிப்பதில் பாராட்டப்படுகின்ற வகையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மக்கள் நல்வாழ்வுத் துறையின் மகத்தான பணிகள்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி

மருந்துகளையும் அவற்றைப் பயன்படுத்துவதையும் குறித்த அறிவியல் ஆராய்ச்சி, மிகவும் கொடிய நோய்களை விரைவில் கண்டறிய உதவுகிறது. அதன் மூலம் அறிவியல் மருந்தியலின் நோய் தீர்க்கும் அம்சம் எளிமைப் படுத்தப்பட்டு உள்ளது. மருத்துவச் சாதனங்களில் கணினிகளும் மின்னணு முறைகளும் அறிமுகப் படுத்தப்பட்டு அவை பெரும் புரட்சிகரமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. தற்போது மருத்துவச் சிகிச்சையைச் சிறந்த முறையில் அளிப்பதற்காகப் பல தனியார் மருத்துவ நிறுவனங்கள் விலை உயர்ந்த நவீன சாதனங்களை அறிமுகப்படுத்தி வருகின்றன. இந்தப் பெரும் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில், அரசு, சிறந்த முறையில் மருத்துவப் பணிகளை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், சுகாதாரத் துறைக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டை ஒவ்வோர் ஆண்டும் உயர்த்தி வந்துள்ளது. சுகாதார–குடும்பநலத் துறைக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில், 1990-91-இல் ரூபாய் 343.09 கோடி, 1991-92-இல் ரூபாய் 410.83 கோடி, 1992-93-இல் ரூபாய் 469.23 கோடி, 1993-94-இல் ரூபாய் 557.70 கோடி, மற்றும் 1994-95-இல் ரூபாய் 618.02 கோடி, ஒதுக்கப்பட்டது.

புதிய திட்டப்பணிகள்

1992-93-ஆம் ஆண்டில் ரூ.7.29 கோடி செலவில் 50 புதிய பணிகளை இத்துறை செயல்படுத்தி உள்ளது. மேலும் 1993-94-இல் ரூபாய் 8.44 கோடி செலவில் 61 புதிய திட்டப்பணிகளுக்கான ஆணைகளை இத்துறை வெளியிட்டுள்ளது. நடப்பு ஆண்டுக்கான 1994-95-இல், ரூபாய் 9.05 கோடி, செலவில் 54 புதிய பணிகளை தொடர நிதிநிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.



டாக்டர் புரட்சித்தலைவி மருத்துவ நலத்திட்டம்

18.1.92 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத் திட்டத்தை' ஆரம்பித்து வைத்தார்கள். இந்தத் திட்டத்தின்படி கிராமப்பகுதிகளில் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள துணை நிலை மையங்களில் ஒவ்வொரு முகாம் நடத்தப்பட்டது. தவிர, இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டமையால், முகாம்களுக்கு வந்த பொதுமக்களுக்கு நலவாழ்வு பற்றிய கல்வி கிடைக்கப்பெற்றது. மொத்தமாக 9226 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

நடைபெற்ற முகாம்களின் விவரங்கள் பின்வருமாறு:

1. நடைபெற்ற மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை .. 9226, 2. மருத்துவ முகாமுக்கு வருகை புரிந்தவர்களின் எண்ணிக்கை .. 51,64,641, 3. இம்முகாமினால் மருத்துவமனைக்கு சோதனைக்காக அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை .. 1,85,400

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம்

குழந்தைகள் நோயினால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவினருக்கு (அதாவது மகளிர், குழந்தைகள்) மருத்துவச் சோதனையை மேற்கொண்டு சிகிச்சையளிக்கும் அரும்பெரும் திட்டத்தை, தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

12.3.1993-ஆம் நாள் முதற் கொண்டு மாவட்ட மருத்துவ மையத்தில், அமைந்துள்ள ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஒரு முகாம் வீதம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த முகாமில் பின்வரும் சிகிச்சைகளை அளிப்பதற்கான மருத்துவ வல்லுநர்களின் விவரம் பின்வருமாறு:

பொது மருத்துவ சிகிச்சை .. 1, பொது அறுவை சிகிச்சை .. 1, மகளிர் நோயியல் மகப்பேறு சிகிச்சை .. 5, குழந்தைகள் சிகிச்சை .. 5, பல்நோய்ச் சிகிச்சை .. 1, பால்வினை நோய் நிபுணர் .. 1

மேற்கொண்டும், தொடர்ந்து சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் சிறப்பு மருத்துவச் சிகிச்சை முகாம்களுக்கு அனுப்பி

வைக்கப்படுகின்றனர். அம் முகாம்கள் அருகிலுள்ள வட்ட மருத்துவமனைகள்தலைமையிட மருத்துவமனைகள்மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பச் சுகாதார நிலைய முகாம்களிலிருந்து, சிறப்புச் சிகிச்சை அளிப்பதற்காக அனுப்பப்படும் நோயாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட ஒரு நாளில் சிறப்பு மருத்துவச் சிகிச்சை முகாம்களை நடத்தி வருகிறது.

இதுவரையில் (27.5.1994) வரை மாநிலம் முழுவதும் 1362 அடிப்படை சுகாதார முகாம்கள் (ஆரம்பச் சுகாதார நிலையம்) நடத்தப்பட்டன. இந்த முகாம்கள் வாயிலாக 2,16,537 பெண்களும், 2,23,436 சிறுவர்களும் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

நடமாடும் மருத்துவமனை

வட ஆர்க்காடு அம்பேத்கர், தருமபுரி, சேலம், திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமப்புற மக்களுக்கு மருத்துவ அறுவைச் சிகிச்சையளிப்புதற்காக 4.6.1993 லிருந்து 4.7.1993 வரையிலான ஒரு மாதத்திற்கு ஜோலார்ப்பேட்டை ரயில்வே சந்திப்பில் தென்னக இரயில்வே, பம்பாய் இம்பாக்ட் இந்திய பவுண்டேஷன் அமைப்பு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடமாடும் மருத்துவமனை என்ற புதுமையான திட்டமொன்றை அரசு செயல்படுத்தியது. இதன் மூலம் 4386 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர்.

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளம்பிள்ளை வாதத்தடுப்பு அறுவைச் சிகிச்சை முகாம்கள்

1988-89-லிருந்து இம்மாநிலத்தில் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இளம்பிள்ளை வாதச் சிகிச்சைத் திட்டத்தை, இயலாமையுற்றோருக்கான புது வாழ்வுத் திட்டத்துறை செயல்படுத்தியது. நமது மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 182 வளர்ச்சி வட்டாரங்கள், நான்கு கட்டங்களில் படிப்படியாக இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் ஐந்தாவது கட்டப்பணி 42 வட்டாரங்களில் 1993-94-இல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஐந்தாவது கட்டப் பணியைச் செயல்படுத்துவதற்குரிய செலவிற்கு அரசு சமூகநலன் சத்துணவுத் திட்டத்துறையில் ரூ.85.15 இலட்சம் அனுமதித்தது.

மருந்துகள் வாங்க நிதிநிலை அறிக்கையில் அதிக நிதி ஒதுக்கம்

1990-91-ஆம் ஆண்டில் மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்

களுக்கான நிதியொதுக்கம் ரூ.38.78 கோடி. ஆனால் 1993-94-இல் ரூ.75 கோடியாக உயர்த்தப்பட்டது. இது 1990-91-ஆம் ஆண்டைக் காட்டிலும் ஏறக்குறைய இரு மடங்காகும். மற்றும் 1994-95-ஆம் ஆண்டில் ரூ.88 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதி

“ஏழை மக்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட மருத்துவத் திட்டம்” என்றொரு புதிய திட்டம் 1992-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ.5,000 உதவித்தொகை ரூ.15,000 - 20,000-மாக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஜூலை 91 முதல் 15.5.94 முடிய ரூ.1.45 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

குடும்பநலத் திட்டம்

1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 5.56 கோடி ஆகும். பத்தாண்டு பிறப்பு வீதம் 14.94 சதவிகிதம் ஆகும். நாட்டிலேயே இது இரண்டாவது குறைவான மக்கள் தொகை வீதமாகும். தமிழ்நாடும் கேரளாவும் மட்டுமே தேசிய இலக்கை அதாவது நிகரப் பிறப்பு வீதம் ஒன்று என்னும் இலக்கை எய்திவிட்டன. அதாவது பிறப்பு வீதம் 1000 க்கு 21, இறப்பு வீதம் 1000-க்கு 9 என்னும் இலக்குகளை இவை எய்திவிட்டன. 1983-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட தேசிய சுகாதாரக் கொள்கை இந்நாட்டில் கி.பி. 2000-ஆம் ஆண்டில் எய்தக்கூடிய மக்கள் தொகைக் கணக்கு குறித்த சில குறிக்கோள்களை வரையறுத்தது.

தேசிய சுகாதாரக் கொள்கையில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க சாதனை அடைந்திருக்கிறது. கி.பி. 2000 ஆண்டில் உத்தேச தேசிய பிறப்பு வீதம் 1000-க்கு 21 என்று நிர்ணயம் செய்யப்பட்டது. தமிழக அரசு இப்போதே 20.7/1000 என்ற நிலையை எட்டியிருக்கிறது. இதைப்போலவே கி.பி. 2000 இல் 1000-க்கு 60-க்கு குறைவாக என நிர்ணயம் செய்யப்பட்ட தேசிய குழந்தை இறப்பு இலக்கினை தமிழக அரசு இப்போதே 57/1000 என்ற நிலையை அடைந்து சாதனை புரிந்திருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 4.11.93 அன்று நடைபெற்ற மாநில குடும்பநலத் திட்டக்குழுக் கூட்டத்தில் தமிழ்நாட்டிற்கு கி.பி.2000 ஆண்டில் பின்வரும் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு வீதம் 1000 பேருக்கு 15 பேர்

குழந்தை இறப்பு வீதம் 1000 பிரசவங்களுக்கு 30-க்குக் குறைவாக.

மருத்துவமனைகளில் நிகழும் மகப்பேறுகளின் எண்ணிக்கை அளவு 90 சதவிகிதம்.

குடும்ப நலத்திட்டத்தின்கீழ் 1993-94 இல் 3,50,000 என இலக்கு நிர்ணயிக்கப்பட்ட கருத்தடை அறுவைச் சிகிச்சையில் 31.3.1994 வரை 3,52,057 எய்தி தமிழக அரசு சாதனை படைத்திருக்கிறது.

தங்கப்பதக்கம் பரிசுத் திட்டம்

தாய்மார்களைக் கவரும் வகையில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்கின்றவர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூன்று மாதங்களுக்கொரு முறை பரிசுச்சீட்டுக் குலுக்கல் மூலம் தங்கப்பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் கருத்தடை செய்து கொண்ட தாய்மார்கள் இருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 3.750 கிராம் எடை கொண்ட தங்க நகைகள் வழங்கப்படுகின்றன.

கிராமச் சுகாதாரச் செவிலியருக்கு அரை சவரன் தங்கம்

இரு குழந்தைகள் மட்டுமே போதும் என்கிற குடும்பக் கட்டுப்பாட்டுக் கோட்பாடு அளவை வரையறுத்துக் கொள்கின்றவர்களுக்குச் சம்பந்தப்பட்ட கிராம சுகாதாரச் செவிலியர் பணிபுரியும் பகுதியில் ஓராண்டுக் காலத்தில் அப்பகுதியிலுள்ள தம்பதியர்களுக்கு மூன்றாவது குழந்தை எதுவும் பிறக்காமலிருந்தால் அரசு அக்கிராமச் செவிலியருக்கு அரை சவரன் தங்கம் வழங்குகிறது.

பெண் குழந்தைகளுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா திட்டம்

அரசு பெண் குழந்தைகளுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா திட்டம் என்கிற திட்டம் ஒன்றை 1.4.92 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருந்து ஆண் குழந்தையில்லாத ஏழைக் குடும்பத்தினர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் அவர்களுக்கு ரூ.2,000 வழங்கப்படும். இத்தொகை ஒரு நிதியில் முதலீடு செய்யப்பட்டு, அந்தப் பெண் குழந்தைகளுக்கு அவர்களது தொடக்கக்கல்வி, நடுநிலைக் கல்வி, உயர் மேல்நிலைக் கல்வியை முடிப்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு அத்தொகை குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை வழங்கப்படும். அப்பெண் குழந்தை 20 வயது அடைகிற போது, தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு அல்லது உயர் கல்வியைத் தொடருவதற்கு ஒட்டுமொத்தத் தொகையாக ரூ.10,000 வழங்கப்படும். இத்திட்டம் 1.4.1992-ஆம் நாளுக்குப் பின்னர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தம்பதியர்களுக்குப் பொருந்தும்.

பின்னர், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒட்டு மொத்தத் தொகையை 11.11.1993 ஆம் நாளன்று, ரூ.20,000 ஆக அதிகரித்தோடு பெண் குழந்தையின் முதல் பிறந்தநாளில் தங்க மோதிரம் ஒன்றும் பரிசளிக்கப்படும் என்று அறிவித்தார்.

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளங்குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம்

சென்னை எழும்பூர் அரசினர் குழந்தைகள் மருத்துவமனையில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக இருதய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி 1993-94-இல் இத்திட்டம் தொடங்கப்பட்டது. 1993-94-இல் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25 இலட்சம் இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டது. மேலும் 1994-95-ஆம் ஆண்டிற்கு ரூ.25 இலட்சம் நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பள்ளிச் சுகாதார முகாம்கள்

அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 5-15 வயதுத் தொகுதியில் உள்ள சிறார்கள் அனைவருக்கும் மருத்துவச் சோதனை செய்து, சத்துணவு குறைவு காரணமாக ஏற்படும் தோல், பல், கண்பார்வை குறைவு, இருதயக்கோளாறு போன்றவற்றை தொடக்கத்திலேயே தடுத்தல் ஆகும். அச்செலவினங்களுக்காக ரூ.33.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1994 ஜூலை முதல் செயல்பட உள்ளது.

தடுப்பூசி போடும் திட்டம்

எல்லோருக்கும் நோய்த் தடுப்பூசி போடும் திட்டத்தின் கீழ் கருவுற்ற தாய்மார்கள் அனைவருக்கும் 100 சதவிகிதம் இசிவு நோய்த் தடுப்பூசி இருமுறை போடப்படுகிற நோக்கத்துடனும், கைக்குழந்தைகளுக்குக் காசநோய் தடுப்புக்காக 100 சதவிகிதம் பி.சி.ஜி. தடுப்பூசி ஒரு முறையும், தட்டம்மை, தடுப்பு மருந்து ஒரு முறையும், (தொண்டை அடைப்பான், கக்குவான் இசிவு நோய் ஆகிய மூன்று நோய்களைத் தடுப்பதற்கான) முத்தடுப்பூசி மூன்று முறையும், இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு சொட்டு மருந்தும் கொடுக்கப்படுகிற நோக்கத்துடனும் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. தற்போது இத்திட்டம் சிசு உயிர் பிழைத்தல் தாய்மைப் பாதுகாப்பு நலத்திட்டத்தின் ஒரு பகுதியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. நோய்த் தடுப்பூசி போடும் திட்டத்தின் கீழ் 1993-94-இல் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டம்

மருத்துவக் கல்வித்துறையில் 1993-ஆம் ஆண்டில் மாநில எய்ட்ஸ் தடுப்புத் திட்டப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் 88 அரசு இரத்த சேமிப்பு வங்கிகளும், 61 தனியார்

தமிழகப் போக்குவரத்துத் துறையின் முத்தான மூன்றாண்டுகள்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன்

முத்தான முன்றாண்டுகள் ! சத்தான சாதனை படைத்த ஆண்டுகள்! சங்க கால மூவேந்தர்களின் சாதனைகள் என்று சரித்திரத்திலே படித்திருக்கிறோம், விரல் விட்டு எண்ணக்கூடிய அவையெல்லாம் அன்னையின் பொற்கால ஆட்சியில் பூத்த புரட்சிச் சாதனைகளில் ஒரு துளியே! பொங்கிவரும் கடல் அலையாய், வண்ணமிகு வாடா மலர்களாய் அன்னை அவர்கள் படைத்ததிட்ட சாதனைகள் அவனி வியக்கும் சாதனைகளாக உள்ளன.



இந்தியத் துணைக்கண்டத்தில் எத்தனை எத்தனையோ மாநிலங்கள்!அவற்றில், இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் தமிழகம் பெற்றுள்ள நிலையான ஆட்சி, அமைதியான ஆட்சி, சரித்திரம் காணா ஆட்சி சாதனை படைத்த ஆட்சி எங்கேயும் இல்லை.

நாட்டு மக்கள் வாட்டம் போக்கிட நாளெல்லாம் நல்ல திட்டம் தீட்டும் அன்னையின் ஆட்சி செயல்படும்போது பிற மாநிலங்களிலோ அன்றாடம் ஆட்டம் காணும் ஆட்சிகளே அமைந்துள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்திலே இதற்குமுன்னரும் ஓரிரு மாநிலங்களில் பெண் முதல்வர்கள் இருந்ததுண்டு. ஆனால், என்றென்றும் மக்கள் மனதிலே நிலையாக நின்று இருபதாம் நுற்றாண்டின் இணையற்ற முதல்வராகவும் இருபத்தோராம் நுற்றாண்டிலும் நிரந்தர முதல்வராகவும் மக்களால் அங்கிகரிக்கப்பட்ட 6 கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வம், காலம் காலமாய் தமிழ்த்தாய் தவமிருந்து பெற்ற தன்னேரிலாத் தலைவி நமது இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர்புரட்சித் தலைவி அவர்களே. காரணம் அவர்தான் கடந்த மூன்றாண்டுகளில் மூன்று தலைமுறைகளிலே சாதிக்க இயலாத சாதனைகளை சாதித்துக் காட்டி இருக்கிறார்கள். எந்தத் துறையிலும் இங்கே ஏற்றம்! நேற்றிருந்ததைவிட இன்று ஒரு மாற்றம் ; அதுவும் முன்னேற்றம்! என்று ஆரவாரம் ஏதுமில்லாமல் அமைதிப் புரட்சியைச் செய்து வந்துள்ளார்கள்.

மூன்றாண்டுகள் அவர்தம் ஆட்சியில் பூத்த புரட்சி மலர்கள் ஏராளம். மாற்றார் மருட்சி கொள்ளும் அளவுக்கு நாள் தோறும் அவரது சாதனைகள் பல்கிப் பெருகுவதால்தான் இது வரை எதிர்க் கட்சிகளாக இருந்தவர்கள் எல்லாம் கூட உதிரிக் கட்சிகளாக மாறி வருகின்றனர்.

எந்தத் துறையை நோக்கினாலும் மாபெரும் முன்னேற்றம்! இதற்குக் காரணம் இதயதெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் வழிகாட்டுதலும் திட்டங்களுமே ஆகும்.

அந்த வகையில், அவர்தம் ஆணைப்படிச் செயலாற்றி வரும் போக்குவரத்துத்துறையில் கடந்த 3 ஆண்டுகளில் அடைந்துள்ள சாதனைகள் அனைத்தையும் இங்கே பட்டியலிட்டுக் காட்டுவதைப் போக்குவரத்துத்துறையின் அமைச்சர் என்ற முறையில் நான் விரும்பினாலும் இந்த இதழில் உள்ள இடப்பற்றாக்குறை காரணமாகச் சிலவற்றை மட்டுமே இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகப் போக்குவரத்துத் துறை இந்தியத் துணைகண்டத்திற்கே இன்றைய தினம் ஒரு எடுத்துக்காட்டாக, ஒரு முன் மாதிரியாக இருந்து வருகிறது. திறமையான நிர்வாகம், வியத்தகு வள்ர்ச்சி, மக்கள் சேவையில் மகத்தான ஈடுபாடு குறைந்த கட்டணத்தில் நிறைந்த வசதிகளோடு பேருந்து இயக்கம் என்று அனைத்துக் கோணங்களிலும் சாதனை படைத்து வரும் போக்குவரத்துத்துறை, உலக வங்கியின் பாராட்டுதலையும், மைய அரசின் திட்டக் குழுவின் பாராட்டுதலையும் அண்மையில் பெற்றுள்ளது என்றால், அதற்கு முழு முதல் காரணம் நம்மையெல்லாம் வழி நடத்திச் செல்லும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முதலமைச்சராம் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களேயாவார்

1991-ஜுன் திங்கள் அன்னை அவர்கள் அரியணை ஏறிய பின்னர் அடுத்த ஆண்டே பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரால் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்றைத் காஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கிவைத்தார்கள்.

அதற்கு அடுத்த ஆண்டுகளில் மேலும் மூன்று புதிய போக்குவரத்துக் கழகங்களைத் துவக்கி வைத்து, வண்ணமிகு எழிற்கோலம் கொண்ட எண்ணற்ற பேருந்துகளை தமிழகம் முழுவதும் இயக்கியுள்ளார்கள்.

விடுதலை உணர்வை மக்களுக்கு ஊட்டிய வான்புகழ் பெற்ற "மகாகவி பாரதியார் பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகம்" மலையரசியாம் உதகையைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே தாழ்த்தப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரு நம்பிக் கைச்சுடராய், அரசியலமைப்பை உருவாக்கித் தந்த அற்புதத் தலைவர்களில் முதன்மையாக விளங்கியவரான டாக்டர் அம்பேத்கர் பெயரில் தமிழகத்தின் தலைநகரிலேயே ஒரு போக்குவரத்துக் கழகம்.

மாநிலங்களுக்கு இடையே அமைதிப் புறாவாய், அழகிய தேராய் அன்றாடம் இயக்கப்படும் பேருந்துகளைக் கொண்டு அன்னையின் பெயரால் "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்".

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புகழ் தமிழகத்தில் எல்லைகளையெல்லாம் விஞ்சியது. அவரது புகழுக்கேற்பவே அக்கழகத்தின் பேருந்துகள் எல்லாம் தனித் தன்மை வாய்ந்தவையாகும். புத்தம் புதிய பேருந்துகள்! கண்ணைப் பறிக்கும் வண்ண எழிற்கோலம் கொண்ட இக்கழகப் பேருந்துகள் இந்தியத் துணைக்கண்டத்திலேயே ஏன் ஆசியா கண்டத்திலேயே வேறு எந்த அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் பெற்றிராத வசதிகளோடு இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சொகுசுப் பயணத்திற்கேற்ற சாய்வு இருக்கைகள் பயணத்தின் போதே பருகிட சுவை நீர் பானங்கள் சூப் வகைகள்! இரவு

நேரப் பயணத்தை இனிதாக்க ஆடியோ வீடியோ வசதிகள் அதுமட்டுமல்ல அலுப்பற்ற பயணத்தை அளிக்க குளிர்சாதன வசதிபெற்ற பேருந்துகள். விரைவிலேயே கழிப்பறை வசதி பொருத்திய பேருந்துகளும் இக் கழகத்தால் இயக்கப்பட உள்ளன. இவ்வாறு வேறு யாரும் எப் போதும் எண்ணிப்பார்க்காத வசதிகளை வழங்கி வழிப் பயணத்தை நெஞ்சை விட்டு நீங்காத ஒன்றாக ஆக்கிய பெருமை நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களையே சாரும்.

அதுமட்டுமல்ல; மக்கள் தமிழகத்தில் மூலை முடுக்கெல்லாம் சென்று வரவும் , காடு கழனிகளைப் பயிரிட்டு நாடு வாழ உணவுப் பொருட்களை விளைவிக்கும் கிராம மக்கள் நகர்ப்புறத்திற்கு நாள்தோறும் வந்து போகவும் வசதியாய் 1000 மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமத்திற்கும் பேருந்து வசதி செய்து கொடுத்தது.

தி.மு.க. ஆட்சியின்போது 10% டீசல் வெட்டைக் காரணமாக்கி கிராமப்புறங்களுக்குச் சென்று வந்த 1000க்கும் மேற்பட்ட பேருந்துகளை நிறுத்திய நிலைமையை அடியோடு மாற்றி அனைத்துப் பேருந்துகளையும் இயக்கியது

ஆண்டுதோறும் மைய அரசு ரெயில் கட்டணத்தை அபரிமிதமாக உயர்த்திய நிலையிலும்,கடந்த 4 ஆண்டுகளில் மட்டுமே மைய அரசு டீசல் விலையை சுமார் 55 சதவீதம் கூட்டிய நிலையிலும், பேருந்து இயக்கத்திற்குத் தேவையான டயர், டியூப், மசகு எண்ணெய், உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் விலையை மிக அதிகமாக ஏற்றிய நிலையிலும் பிற மாநிலங்களெல்லாம் பேருந்து இயக்கச் செலவை அடிப்படையாகக்

இரத்த சேமிப்பு வங்கிகளும் உள்ளன. இம்மாநிலத்திலுள்ள 88 இரத்தச் சேமிப்பு வங்கிகளில் பாதுகாப்பான இரத்தம் பெறும் வகையில், 44 இரத்தச் சேமிப்பு வங்கிகளில் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் மத்திய அரசின் ஆதரவுடன் எஞ்சியுள்ள இரத்த சேமிப்பு வங்கிகள் அனைத்திலும் இச்சாதனங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அமெரிக்க நாட்டு நிதி உதவியுடன் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தை புகழ்பெற்ற அரசு சாரா அமைப்பான தொண்டு சுகாதாரப் பணி நிறுவனம் (வி.எச்.எஸ்.) மேற்கொள்ளும். இவற்றில் 13 மண்டல இரத்தச் சோதனை நிலையங்கள் என்று பெயரிடப்பட்டு இங்கு எச்.ஐ.வி. தொற்று நோய் கிருமிகளைக் கண்டறிய எலிசா ரீடர் சாதனம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 37 மருத்துவமனைகளிலும் 9 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 4 கண்காணிப்பு இல்லங்களிலும் பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. பால்வினை வியாதியின் மூலம் எச்.ஐ.வி. தொற்றுநோய் ஏற்படவும், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு தொற்றுவதற்கு வாய்ப்பும் உள்ள காரணத்தால் பால்வினை நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் ஐயத்திற்குரியவர்கள் எச்.ஐ.வி. தொற்றுநோய் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். உடலுறவின் மூலம் எச்.ஐ.வி. நோய்க் கிருமிகள் தொற்றுவததைத் தடுக்க பாதுகாப்பு உறைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இத்தகைய தவறான உடலுறவில் ஈடுபடுபவர்களுக்கிடையே உயவுத்தன்மை கொண்ட காப்புறைகளை அரசு சாரா நிறுவனங்கள் மூலம் இலவசமாக வழங்க அரசு முயன்று வருகிறது. தொலைபேசி மூலம் ஆலோசனை நல்கப்படுகிறது. 1993 டிசம்பர் வரையில் 5,62,501 பேர்கள் சோதனை செய்யப்பட்டு 4520 பேர்களுக்கு (0.80 சதவிகிதம் எச்.ஐ.வி.) பாஸிட்டிவ் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

காச நோய்த் தடுப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் காசநோயாளிகள் உள்ளனர். அவர்களில் நான்கில் ஒரு பங்கினர் அதாவது 2.5 இலட்சம் பேர்களால் நோய் பரவக்கூடிய நிலையுள்ளது. காசநோய் உள்ளதா என்பதைக் கண்டறிந்து அந்நோய் இருந்தால் உரிய மருந்துகள் அளிப்பதற்கான இலவச மருத்துவ வசதிகள் அரசு மருத்துவமனைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அனைத்திலும் உள்ளன. இந்நோய்க்காக அவசர தீவிரச் சிகிச்சை செய்திட காச நோயாளிகளுக்கெனத் தனிப்படுக்கை வசதிப் பிரிவுகள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. இம்மாநிலத்தில், காசநோயாளி நலம் பேண் மருத்துவமனைகள், காச நோய் மருத்துவமனைகள் பத்து உள்ளன. அவற்றில் காசநோய்ச் சிகிச்சைக்காக மொத்தம் 3630 படுக்கை வசதிகள் உள்ளன.

1994-95-இல் காசநோய்த் தடுப்புப் பணிகளுக்காக மொத்த நிதி ஒதுக்கிடு ரூ.4.9 கோடியாகும்.

தொழுநோய் மிக அதிகமாகக் காணப்படும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். கி.பி. 2000 ஆம் ஆண்டிற்குள் தொழுநோயை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தொழுநோயாளிகளை விரைவில் குணப்படுத்துவதற்காக முன்னர் அளிக்கப்பட்டு வந்த ஒரே மருந்தில் நோய் தீர்க்கும் சிகிச்சை முறைக்குப் பதிலாக பல்வகை மருத்துவச் சிகிச்சை முறையில் டேப்கோன் மாத்திரையுடன் லேம்ப்ரேன் மற்றும் ரிப்பேர்பிசின் என்னும் மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன.

பார்வையின்மைத் தடுப்புக்கான தேசியத் திட்டம்

தேசிய சுகாதாரக் கொள்கையில் பார்வையின்மையைத் தடுக்கும் தேசியத் திட்டத்தின் குறிக்கோள் இந்தியாவில் கி.பி. 2000 த்தில், கண் பார்வையற்றோர் எண்ணிக்கையை 1000 பேர்களுக்கு 14 பேர் என்ற வீதத்திலிருந்து 1000 பேர்களுக்கு 3 என்ற வீதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்பதாகும். தமிழ்நாட்டில் பார்வையற்றோரின் எண்ணிக்கை விகிதாச்சார அளவு 1.65 ஆகும்.

மேற்குறிப்பிட்ட திட்டப்பணிகளுக்காக 1994-95-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.76 கோடி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவக் கல்லூரி, மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில், கண் சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. இம்மாநிலத்தில் மொத்தம் 8 மாநில நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவுகளும், 7 மாவட்ட நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவுகளும், இயங்கி வருகின்றன. ஒவ்வோராண்டும் இம்மாநிலம் இந்திய அரசு நிர்ணயித்துள்ள இலக்கிற்கு அதிகமாகவே சாதனை நிகழ்த்தியுள்ளது. இந்த இலக்குகளை எய்துவதில் மாநிலதிலுள்ள தொண்டு நிறுவனங்கள் உறுதுணையாகச் செயல்படுகின்றன. இம்மாநிலத்திலுள்ள 22 மாவட்டங்களிலுமே மாவட்டப் பார்வையின்மைக் கட்டுப்பாட்டுச் சங்கம் அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அதன் தலைவராகச் செயல்பட்டு வருகிறார். கண் சிகிச்சை முகாம்கள் நடத்துவதற்காக இந்திய அரசு 19 மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ரூ.300 இலட்சம் ஒதுக்கிடு செய்துள்ளது. எஞ்சிய மாவட்டங்களுக்கும் மத்திய அரசின் நிதி உதவியினைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உலக வங்கியின் உதவியுடன் ரூ.64 கோடி செலவில் பார்வையின்மைக் கட்டுப்பாட்டுக்காக புதிய திட்டம் ஒன்று விரைவில் தொடங்கப்படவுள்ளது. அண்மையில் உலக வங்கி அதிதாரிகளுடன் ஒப்பந்தமொன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

சில புதிய பதவிகளை ஏற்படுத்துதல்

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனை அல்லாத பிற மருத்துவமனை ஆகியவற்றில் மருத்துவ வசதிகளை அதிகரிக்கவும், நிருவாகத்தின் தரத்தை மேம்படுத்தவும் அரசு நான்காண்டுத் திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது. அதற்கிணங்க கடந்த மூன்றாண்டுகளில் 564 முதுநிலை சிவில் மருத்துவர், 1,281 சிவில் மருத்துவர் மற்றும் 1,212 முதுநிலை உதவி மருத்துவர் பதவிகள் ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது.

1994-95-ஆம் ஆண்டுக்கு 188 முதுநிலை, சிவில் மருத்துவர் பதவிகளையும், 427 சிவில் மருத்துவர் பதவிகளையும் 404 முதுநிலை உதவி மருத்துவர் பதவிகளையும் ஏற்படுத்த அரசு அனுமதியளிக்கக் கருதியுள்ளது.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காகக் கட்டடம் கட்டுதல்

'அட்கோ' நிறுவனத்தில் கடன் உதவியுடன் 120 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. பின்னர் அட்கோ நிறுவனம் மேற்படி பணிக்குக் கடன் வழங்க மறுத்துவிட்டது. தற்போது அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக 1994-95-ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ.7.21 கோடி ஒதுக்கக் கருதியுள்ளது.

டேனிடா சுகாதார நலத்திட்டம்

சேலம், தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராமப்புற மக்களுடைய குறிப்பாக மகளிர் சிறார்களின் நல வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் 'டேனிடா' உதவியுடனான மக்கள் நலவாழ்வு குறித்த தமிழ்நாடு பகுதித்திட்டம் 1981-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொது மக்களின் ஆதரவோடு 410 சுகாதார துணை நிலைய கட்டடங்கள் தொடங்கப்பட்டு தற்பொழுது 259 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதற்காக ரூ.369 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 605 சுகாதாரத் துணை நிலையங்களுக்கும், 70 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் ரூ.188.17 இலட்சம்செலவில் தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

சமுதாய மக்கள் ஆதரவுடன் கூடிய சுகாதார நிலையங்கள் கட்டுவதை ஊக்குவிக்க 'நமது செல்வம்' மற்றும் தாய்மார்கள் பாதுகாப்பாக குழந்தைகள் ஈன்றெடுக்கவும் குழந்தைகள் உயிர் பிழைக்கவும் முக்கியத்துவம் கொடுத்து 'அன்புள்ள அம்மா' என்ற வீடியோ திரைப்படமும் தயாரிக்கப்பட்டுள்ளது. சமுதாயக் கல்விக்காக ரூ.39.70 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. சுகாதாரத் துணை நிலையங்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் சமுதாய நல நிலையங்கள் ஆகியவற்றை நல்ல நிலையில் வைத்திருக்க அவற்றை அவ்வப்பொழுது பழுதுபார்க்க ரூ.173.39 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்ராயன் மலைகளில் வாழும் பழங்குடியினருக்கு விரிவான சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைச் செயலாக்க பத்து சுகாதார துணை நிலையங்களும், சுகாதார மேற்பார்வையாளர்கள் (பெண்கள்) குடியிருப்புக்கான நான்கு கட்டடங்கள் ரூ.46.46 இலட்சத்தில் கட்டப்பட்டது. கரியலூரில் ரூ.82.50 இலட்சத்தில் 12 படுக்கைகள் கொண்ட சமுதாய சுகாதார நிலையம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இன்றியமையாத மருந்துப் பொருட்கள் சரிசமமாகவும் எளிதாகவும் கிடைப்பதற்கு உறுதி செய்யும் பொருட்டு கடலூரிலும், சேலத்திலும் மருந்துப் பொருள்கள் கிடங்குகள் இரண்டு ரூ.27.21 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

விழுப்புரத்தில் ரூ.34 இலட்சம் செலவில் மருந்து பொருள் கிடங்கு ஒன்று கட்டப்படவுள்ளது. 5 வயதிற்குக் கீழ் உள்ள குழந்தைகளின் இசிவு நோயைத் தடுக்க 1542 துணை சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வழங்கப்படுகிறது. இதற்கு ரூ.46.23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5

சென்னை மாநகரிலும், சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் உலக வங்கியின் உதவியுடன் 1988-லிருந்து இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5 செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1992 செப்டம்பரிலிருந்து மேலும் இரு மாநகராட்சிகளிலும் ஆறு நகராட்சிகளிலும் இத்திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. குடிசை வாழ் மக்களின் நலனுக்காகவும் குறைந்த வருவாய்த் தொகுதியினரின் நலனுக்காகவும் 1993 ஏப்ரலிலிருந்து இத்திட்டம் மேலும் பதினைந்து நகராட்சிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய மக்கள் தொகைத்திட்டம் 5, தமிழ்நாட்டு நகர்ப்பகுதிகளிலுள்ள சுமார் ஒரு கோடி மக்களை உள்ளடக்கியதாகும். தேசிய நகர்ப்பகுதிச் சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக மகப்பேறு சிறார் நலன் குடும்ப நலனுக்கு அமைப்பு ரீதியிலான பணி வசதி செய்து கொடுக்கப்படுவதைச் சீரமைப்பதற்குரிய, மத்திய அரசின் கொள்கைகள் திட்டங்களைச் செயல்படுத்த உதவுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்கு 1988 செப்டம்பரிலிருந்து ஏழாண்டு கால அளவிற்கு மூலதனச் செலவிற்கு ரூ.69.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5-ன் கீழ் 240 சுகாதார மையங்கள் ஒரே சீரான பணியாளரமைப்புடன் அதாவது ஒவ்வொரு மையத்திலும் மருத்துவ அதிகாரி ஒருவர், சுகாதாரப் பார்வையாளர் ஒருவர் கணக்கிடுபவர் ஒருவர் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் (பெண்) நால்வர், பெண் உதவியாளர் ஒருவர் ஆகியோருடன் செயல்பட்டு வருகின்றன. இவை, சென்னை மாநகரிலும் மூன்று மாநகராட்சிகளிலும், இருபத்தொன்பது நகராட்சிகளிலும் பணிகள் மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்றன. திட்ட உடன்பாட்டில் வகை செய்யப்பட்டிருந்தவாறு, சில சுகாதார மையங்களைச் செயல்படுத்த இத்திட்டத்தின்கீழ், 244 தனியார் தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

கைத்தறித் துறையின் சாதனைகள்

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்
திரு. இ. மதுசூதனன்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் கைத்தறித்துறையின் வளர்ச்சி அபரிமிதமான ஒன்று.

கைத்தறித்துறையைப் பொறுத்த வரை இந்தியாவில் எந்த ஒரு மாநிலமும் இந்த அளவில் செயல் படவில்லை. அதேபோல் தமிழகம் பல தலைவர்களைச் சந்தித்துள்ளது. அந்தத் தலைவர்களில் தலைசிறந்த முதல்வராக நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் திகழ்ந்து வருகிறார்.

சமத்துவச் சமுதாயம் காண்பதில் அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயல்படும் முதல்வர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் கைத்தறித்துறை அளப்பரிய சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருகிறது.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாட்டம் போக்கிய வள்ளலார் வழியில் தமிழக முதல்வர் செயல்பட்டு- நெசவாளர் பெருமக்களின் வாட்டம் போக்கி வாழ்வில் ஏற்றமடையச் செய்து வருகிறார்.

இருள் சூழ்ந்த தமிழகத்து நெசவாளப் பெருமக்களின் வாழ்வில் ஒளி ஏற்றிய அந்த ஒப்பற்ற தலைவியின் ஆட்சியில் கைத்தறித் துறையின் காலம் பொற்காலமாகும்.

அந்தப் பொற்கால ஆட்சியின் சாதனைகளுக்குச் சர்ன்று பகர்வது சாலப்பொருத்தமாகும்.

1992-ஆம் ஆண்டு முதல் பொங்கல் திருநாளை முன்னிட்டு 120 லட்சம் நிலமற்ற ஏழை

விவசாயிகள் மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்களுக்கு ரூ.42 கோடி செலவில் இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கப்பட்டன. அதேபோல், 1993-94-ஆம் ஆண்டுகளிலும் வழங்கப்பட்டது. இதன் மூலம் சமுதாய மறுமலர்ச்சியைத் தந்தவர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

முக்கியச் சங்கங்கள்

வளர்ந்து வரும் ஆலைகள் மற்றும் விசைத்தறிகளினால் ஏற்பட்டு வரும் பலத்த போட்டியின் நிமித்தம் கைத்தறித் துணி விற்பனைக்கு ஏற்படக்கூடிய பாதிப்பினைத் தடுக்கும் வகையில் முக்கியக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகியவைகள் மூலம் விற்பனையாகும் துணிகளுக்கு 1992- ஆம் ஆண்டு முதல் ஆண்டு ஒன்றுக்குச் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டு வந்த ரூ.40 கோடி, 1994-ஆம் ஆண்டுகளில் 54.18 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்பு

இந்த மாநிலத்தில் 89 விழுக்காடு நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணரப்பட்டுள்ளனர். இக்கூட்டுறவுச் சங்கங்களில் 1992- 93- ஆம் ஆண்டில் செயல்பாட்டிலிருந்து சுமார் 56 விழுக்காடு சங்கங்கள் லாபத்தில் இயங்குகிறது. ஜனதா துணி உற்பத்தித் திட்டமானது கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து தொழில் வாய்ப்பு அளிக்கவும், கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு மலிவு விலையில் துணிகள் கிடைக்கவும் கைத்தறித் துறைக்கென ஜனதா துணித் திட்டத்தின் கீழ் மானியமாக ரூ.9.60 கோடி தொகையினை வழங்கியுள்ளது.

வளர்ச்சி மையங்கள்

1993-94- ஆம் ஆண்டிலிருந்து 1996-97-ஆம் ஆண்டு வரையுள்ள வரும் நான்கு ஆண்டுகளில் கைத்தறி நெசவாளர்கள் மிகுந்து காணப்படும் பகுதியில் 303 கைத்தறி வளர்ச்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளன. ஒருங்கிணைந்த கைத்தறி கிராம மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டமானது 1991- 92-ஆம் ஆண்டிலிருந்து எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள விளாகம் கிராமம் மற்றும் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள புதுப்பேட்டை கிராமம் ஆகிய இரண்டு கிராமங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

மேற்படி கிராமங்களின் மேம்பாட்டிற்காகவும், நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காகவும் ரூ.28.42 இலட்சம் மற்றும் ரூ.31.26

இலட்சம் செலவினத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் மொத்தம் 101.75 லட்சம் செலவில் இத்திட்டமானது திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள அம்மாபாளையம், பெரியார் மாவட்டத்திலுள்ள கருக்கு பாளையம் மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள இடங்கன்ன சாலை திருச்சி மாவட்டதிலுள்ள கே. பிச்சாம்பட்டி ஆகிய மேலும் நான்கு கிராமங்களில் செயல் படுத்தப்படவுள்ளது.

நெசவாளர்களுக்கு ஓய்வூதியம்

தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நெசவாளரின் ஆயுள், காப்பு செய்யப்பட்டு, நெசவாளர்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகதத்திற்குச் சந்தாத் தொகையாக ஆண்டு ஒன்றிற்குத் தலா ரூ.75 வீதம் அரசு செலுத்தி வருகிறது. 31.3.93இல் 1,13,956 நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் சந்தாத் தொகைக்காக 1993- 94 -ஆம் ஆண்டிற்கு ரூ. 76,58,355 ஐ ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு அரசு செலுத்தியுள்ளது. மேலும், 1.7.93 முதலல் கோ-ஆப்டெக்ஸ் தன் பங்காக மறைந்த உறுப்பினரின் வாரிசுதாரருக்கு ரூ.3,000 வழங்குகிறது. 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ.3.58 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1993- 94-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 6,776 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மறைந்த நெசவாளர்களின் வாரிசுகளான 77 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். 28.2.94 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தில் 28,335 உறுப்பினர்கள் உள்ளனர்.

நெசவாளர்களின் வீட்டுவசதி மற்றும் தொழில்கூடத் திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டில் 600 தறிக்கூடத்துடன் இணைந்த வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு அவைகள் கட்டப்பட்டு வருகின்றன. 1994-95-ஆம் ஆண்டில் 1,000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறப்பாக ஏற்பாடு செய்யப்படும் கண்காட்சியில் விற்பனை செய்வதற்கெனத் "தேசிய வடிவமைப்புகளைச் சேகரித்துப் பயன்படுத்தும் திட்டம்" என்ற புதிய திட்டமானது 1994-95-ஆம் ஆண்டில் ரூ.450 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு ரூ.28.22



இலட்சத்தை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலும், கோவை மாவட்டத்தில் கண்ணம்பாளையத்திலும் இரு விசைத்தறி பணி மையங்களை நிறுவ முறையே ரூ.14.11 இலட்சம் வீதம் நிதியுதவி அளித்துள்ளது.

கூட்டுறவு அமைப்பின் கீழ் வராத தனியார் துறையிலுள்ள நெசவாளர்களின் வளர்ச்சிக்கு 1994-95ஆம் ஆண்டில் ரூ.450 இலட்சம் கைத்தறி வளர்ச்சிக் கழகம் கடனாக வழங்க உத்தேசித்துள்ளது.

நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகள் நவீனப்படுத்துதல்

நிதி நெருக்கடியின் காரணமாக சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிய போதிலும் சில இயந்திரங்களை நவீனப்படுத்தப்பட வேண்டிய பணிகள் குறிப்பிட்ட நேரத்தில் செய்யவில்லை. இதன் காரணமாக, கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தித் திறனும், தரமும் படிப்படியாகக் குறைய ஆரம்பித்து தொடர்ந்து நட்டத்தில் இயங்குகிறது.

எனவே, உற்பத்தியையும், தரத்தையும் அதிகரித்து நட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு புரட்சித் தலைவியின் அரசு முதன்முறையாக நவீனப்படுத்துவதற்காக ரூ.2.5 கோடி, ரூ.7.25 கோடி, ரூ.3.79 கோடி என கடந்த இரண்டு ஆண்டுகளில் மூன்று கட்டங்களில் வழங்கி நலிந்த ஆலைகளை வளப்படுத்தியுள்ளது. புரட்சித்தலைவியின் அருட்கொடையால் இவ்வாலைகளின் உற்பத்தித் திறனும், தரமும் படிப்படியாக முன்னேறி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நெசவாளர் நலத்திட்டங்கள்

நெசவாளர்கள் வாழ்க்கையில் ஒளி ஏற்றிய உத்தமத் தலைவி டாக்டர் புரட்சித்தலைவியின் தீவிர முயற்சியால் நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் முன்னர் வழங்கப்பட்டு வந்த காப்புறுதித் தொகை

5

கொண்டு பேருந்துக் கட்டணங்களை ஆண்டுதோறும் திருத்தி அமைத்த நிலையிலும் சமுதாயத்தின் அடித்தளத்து மக்களே அதிகமாகப் பயன்படுத்தும் பேருந்துகளில் கட்டணத்தை உயர்த்துவதைத் தள்ளிப் போட்டு, இரண்டு முறை மட்டுமே சிறிதளவு உயர்த்தி, இன்னமும் இந்தியத் துணைக்கண்டத்திலேயே மிகக் குறைந்த கட்டணத்தில் மிக அதிக வசதிகளுடன் பேருந்துகளை இயக்கும் துறை தமிழக அரசின் போக்குவரத்துத் துறையே என்று சாதனையைப் படைத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, விரைந்து செல்ல விரும்பும் பயணிகளுடைய நலனுக்காக மிகக் குறைந்த கூடுதல் கட்டணத்தோடு "ஜெ, ஜெஜெ, ஆர் மற்றும் ஆர்ஆர்., எல்.எஸ்.எஸ்., பாயிண்ட் டு பாயிண்ட் என்னும் புதிய விரைவு சர்வீஸ்களை இயக்கியதும் அவரது கூர்த்துக் கருவூலத்திலிருந்து சிதறிய சில சிந்தனைகளின் விளைவே ஆகும்.

தமிழகத்தில் உள்ள 19 அரசுப் போக்குவரத்துக் கழகங்களும், தங்களின் 15,024 பேருந்துகள் மூலம், நாள் ஒன்றுக்கு 1,59 கோடி மக்களைச் சுமந்து செல்கின்றன.

இவற்றில் நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை ... 7,306

புறநகர்ப் பேருந்துகளின் எண்ணிக்கை ... 5,787

மலைப்பாதைப் பேருந்துகளின் எண்ணிக்கை (விரைவு மற்றும் ஸ்பேர்) ... 1,884

கடந்த 3 ஆண்டுகளில் மட்டுமே புதிதாக விடப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை:

92	1981
1992-93	2282
1993-94	1771

மேலும் கடந்த 4 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட புதிய வழித்தடங்கள்:

1990-91	216
1991-92	413
1992-93	446
1993-94	244

■ தினந்தோறும் பல்வேறு பிரச்சினைகளால் பரிதவிக்கும் சாதாரண மக்களின் பாதுகாப்பிற்கு, இந்த அரசு ஓடோடி வந்து உதவும்!

பணியாளர்கள் எண்ணிக்கையில் வளர்ச்சி:

1991-92	1,00,562
1992-93	1,05,419
1993-94	1,12,310

நாள் ஒன்றுக்குப் பேருந்துகள் அனைத்தும் 51.67 இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்கு மக்களைச் சுமந்து சென்று இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரு நாளைக்கு ஒரு பேருந்து மிகப் பெரிய சாதனை அளவான 1,200 பயணிகளை ஏற்றிச் செல்லும் சாதனையை எட்டியுள்ளது.

இக்கழகங்களின் மொத்தப் பணியாளர்களான 1.20 இலட்சம் பேரும் இரவு பகல் பாராமல் செயல்படுவதன் காரணமாகவே தமிழக மக்கள் மட்டுமே எல்லா நேரங்களிலும் பேருந்து வசதி பெறும் சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

அதிக லாபம் தராத வழித்தடங்களே பெரும்பான்மையாக இருந்தும் மக்கள் சேவையை மட்டுமே மனதில் கொண்டு செயல்படும் இக்கழகப் பேருந்துகள் ஒரு நாளைக்குச் சராசரி 395 கிலோ மீட்டர் பயணம் செய்து சரித்திரச் சாதனை படைத்து உள்ளன.

பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது மிகக் குறைந்த வயதுடைய அதாவது பெரும்பாலும் புதிய பேருந்துகளையே இயக்குவதன் மூலமும் சிறந்த நிர்வாகத் திறமை காரணமாகவும் நம்மையெல்லாம் வழிநடத்திச் செல்லும் அன்னை அவர்களின் வழிகாட்டுதல் காரணமாகவும் இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநில அரசுகளும் பெறாத அளவுக்கு கடந்த 2 ஆண்டுகளில் மட்டுமே 21 விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்று போக்குவரத்துத்துறை, சரித்திரம் படைத்துள்ளது.

ஆண்டுக்கு 582.72 கோடி பயணிகளை ஏற்றிச் செல்லும் தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே சாதனை அளவை எட்டியுள்ளன.

இத்தகைய செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கும் தொழிலாளர் பெருமக்களின் நலன் கருதி இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்கும் – ஏன் ஆசிய கண்டத்திற்குமே ஒரு புதுமைத் தாயாக இருந்து, புரட்சித் தலைவியாக இருந்து கடந்த 1992 செப்டம்பர் திங்கள் முதல், பணியிலிருந்து ஓய்வுபெறும் போக்குவரத்துக் கழகத் தொழிலாளிக்கு 3வது சலுகையாக ஓய்வுக்காலச் சேமநல நிதித் திட்டம் என்ற ஒன்றை உருவாக்கி வாழ்வின் வயோதிகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகத் தொழிலாளி மாதந்தோறும் ஓய்வூதியம் பெறும் உன்னத நிலையை உருவாக்கியுள்ளது உலகமே வியக்கும் ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல, பணிக்காலத்தில் இறக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் அரசு ஊழியர் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் அளவுக்கு ரூ.60,000 வழங்கியதும் அவர்களின் பிள்ளைகள் படிப்பதற்காக உள்ள பெருந்துறை மருத்துவக்கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளோடு புதியதாக மூன்று பாலிடெக்னிக்குகளை உருவாக்கியதும் இந்த ஆண்டு நர்சிங் கல்லூரி தொடங்க

இருப்பதும், பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை அதிகரித்து அளித்ததும், பல கோடி ரூபாய் அளவுக்குப் போக்குவரத்து ஊழியர்களுக்கு ஊதிய ஒப்பந்தம் மூலமாகவும் சலுகைகள் மூலமாகவும் அளித்ததுவும், 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பயணச் சலுகைகளையும் 8ஆம் வகுப்புக்குமேல் கல்லூரி வரை பயிலும் மாணவர்களுக்குச் சலுகைக் கட்டண வசதியையும் விடுதலைப் போராட்ட வீரர்கள், செய்தியாளர்கள், மொழிப்போர் மற்றும் எல்லைப் போரில் பங்கேற்றோர், நாடகக் கலைஞர்கள் ஆகியோருக்கும் உடல் ஊனமுற்றோர்களுக்கும் சலுகைக் கட்டண இலவசக் கட்டண வசதி அளித்ததும் அவரது தாயுள்ளத்திற்கு ஒரு சான்றாகும்.

இவ்வாறு ஆண்டுக்கு ரூ.30 கோடி அளவுக்கு மாணவர்களுக்கு இலவசப் பயணம் அளிப்பதன் மூலமாக இழப்பை ஏற்றும், ஏறியுள்ள டீசல் விலையையொட்டிக் கட்டணத்தை ஏற்றாமலும், மக்களின் சேவையையே மகேசன் பணியாகக் கொண்டு இந்தியத் துணைக் கண்டத்திலே குறைந்த கட்டணத்திலேயே பேருந்துகளை இயக்கும் புதுமையைச் செய்துவரும் புரட்சித் தலைவி அவர்களின சாதனைகள் பார் அறியாச் சாதனைகளாகும்.

இவ்வாறு போக்குவரத்துக் கழகங்கள் ஈட்டியுள்ள சாதனைகளையும் ஆற்றிவரும் பணிகளையும் முழுமையாகப் பட்டியல் போட்டால் அதுவே ஒரு சாதனை மலராக அமையும் என்பதால், போக்குவரத்துத் துறையோடு இணைந்துள்ள பிறவற்றையும் பற்றிய சில குறிப்புகளை இங்கே வெளியிட விரும்புகிறேன்.

மோட்டார் வாகனச் சட்டத்தை அமல்படுத்தும் போக்குவரத்துத் துறை தமிழகத்தில் அரசுக்கு கணிசமான வருவாயை ஈட்டித் தருவதோடு, தனியார் துறை பேருந்துகளைத் தவிர்த்த ஆம்னி பேருந்துகளை இயக்குவோர், மேக்சி பேருந்துகளை இயக்குவோர்—பயணிப் பேருந்துகளைப் போல் தங்கள் வாகனங்களை இயக்கி அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பைத் தடுக்கவும், வாகனங்களின் பராமரிப்பு, தகுதியைச் சரிபார்த்தல், புகைக்கட்டுப்பாடு, வரி ஏய்ப்பு ஆகிய துறைகளில் சிறப்பான பணியை ஆற்றி வருகிறது.

மேலும் இத்துறை ஓட்டுநர், நடத்துநர் போன்ற உரிமங்களை வழங்குவதில் முறைகேடுகள் நடவாமல் தடுக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் கடுமையான சோதனைக்குப் பின்னரே ஓட்டுநருக்கான உரிமங்களை வழங்கும் முறையையும் அதனையும் காலதாமதமின்றி வழங்கும் முறையையும் உறுதி செய்துள்ளது.

தகுதியுள்ள ஓட்டுநர்கள் மூலம் தமிழகத்தில் விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் இயங்கும் சாலைப் போக்குவரத்து நிறுவனம் கும்மிடிப்பூண்டியிலும் மற்றும் போக்குவ்ரத்துக் கழகத் தலைமையிடங்களிலும் ஓட்டுநர் மையம் அமைத்து முறையான பயிற்சி அளித்து ஆயிரக்கணக்கான ஓட்டுநர்களை உருவாக்கி கடந்த 2 ஆண்டுளில் மேற்கொள்ளப்பட்டு உள்ள முயற்சி இந்தியாவில் வேறு எங்கேயும் இல்லாத ஒன்றாகும்.

சென்னையில் அண்ணாசாலையில் விபத்துக்களைக் குறைக்கவும் நெரிசலைத் தவிர்க்கவும் 4 வழிப்பாதை உருவாக்கியது பிற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாகும்.

போக்குவரத்துத்துறையோடு தொடர்புடைய துறைமுகத் துறை மூலம் தமிழகத்தில் உள்ள சிறு துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும் வாணிகத்தை அதிகரிக்கவும் "மெரைன் போர்டு" என்ற அமைப்பை உருவாக்க குஜராத் மாநிலத்தில் உள்ள நடைமுறையைக் கண்டு வரச் செய்து இங்கேயும் சிறு துறைமுகங்களை மேம்பாடு செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சியும் மூன்றாண்டுக் காலச் சாதனைகளில் ஒன்றாகும்.

அதுமட்டுமல்ல; பூம்புகார் கப்பல் கழகத்தின் மூலம் தமிழக மின்வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்குக் கிழக்குக் கடற்கரையோரமாக நிலக்கரி கொண்டு வரும் பணியையும் போக்குவரத்துத்துறை மேற்கொண்டுள்ளது.

தொடங்கப்பட்ட நாளிலிருந்து லாபத்தை ஈட்டிவரும் இக்கழகம் தங்கு தடையற்ற நிலக்கரி தமிழகத்திற்கு வந்து சேருவதற்குத் துணையாக இருக்கிறது என்பதோடு, தனியார் ஒத்துழைப்போடு புதிய நிறுவனம் ஒன்றை உருவாக்கி சிறப்பான முறையில் நிலக்கரியைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் மூன்றாண்டுக் காலச் சிந்தனை மற்றும் சாதனைகளில் ஒன்றாகும்.

இறுதியாக, போக்குவரத்துக் கழகங்களின் உதவியோடும், அவற்றிற்குத் தேவைப்படும் நிதித் தேவைகளைப் பெற்றுத் தரவும் உருவாக்கப்பட்ட போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் பொதுமக்களிடமிருந்தும் பொது நிறுவனங்களிடமிருந்தும் வைப்பு நிதியைப் பெறுவதில் அதிக அக்கறையும் தீவிரத்தையும் காட்டியதன் விளைவாக இந்த ஆண்டு ஜூன் திங்களில் உள்ளபடி அதன் வைப்புத் தொகை ரூ.265 கோடியை எட்டியிருப்பதும் ஒரு இமாலயச் சாதனையாகும்.

இவ்வாறு சாதனைகளையே சரித்திரமாக்கிவரும் சத்தியத் தாயின் உத்தமப் புதல்வி 6 கோடி தமிழ் நெஞ்சங்களிலும் நீங்காமல் நிலைத்து நிற்கும் புரட்சித்தலைவி அவர்கள் - தமிழகத்திற்கு மேலும் வளம் சேர்க்கவும் நலம் சேர்க்கவும், அவரது அனைத்து முயற்சிகளுக்கும் நாமும் துணை நிற்போம், தோள் கொடுப்போம் என்று கூறி முடிக்கிறேன்.

ரூபாய் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பருவநிலையைப் பொறுத்த மட்டில் சென்ற ஆண்டு, தமிழ்நாட்டில் பெரும்பாலான நீர்த்தேக்கங்கள், நல்ல நீர்வரத்தைப் பெற்று விவசாயம் பொதுவாகத் திருப்தியுடன் நடைபெற்றது.

முத்தமிழ் அன்னையின் முத்தான ஆட்சியில் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று நீர்த்தேக்கங்களும், முழு அளவில் நிரம்பி, குடிநீர்த் தட்டுப்பாடின்றி, தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

அணைப் பாதுகாப்பு உறுதி செய்தல் மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் தேசிய பொருளாதரத்தை அபிவிருத்தி செய்ய, தமிழ்நாட்டில் கட்டப்பட்டுள்ள அணைகளின் பாதுகாப்புப் பிரிவினைப் பலப்படுத்தவும், அணைப் பகுதிகளில் உள்ள அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்தவும், அணைகளைச் சீராக்கவும், உலக வங்கி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

அணைகளில் அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

பரம்பிக்குளம் மற்றும் ஆழியாறு திட்டத்தின் கீழ் பரம்பிக்குளம் கால்வாய் III பிரிவு, III Zone ஆழியாறு ஊட்டுக்கால்வாய் பொள்ளாச்சிக் கால்வாய் 'பி' மற்றும் பிரிவுப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. புதிய நான்கு மண்டல முறையின் கீழ், முதல் மண்டலத்திற்கு 27.4.94 அன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

ஐரோப்பியப் பொருளாதாரக் குழு உதவியுடன் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் 1989 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 150 ஏரிகளையும் 80 முன்னாள் ஜமீன் ஏரிகளையும் நவீனப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 22,380 எக்டேர் நிலப்பகுதியில் கூடுதல் பாசன வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்புச் சிறுபாசனம் மற்றும் ஏரிகளில் தூர்வாரிச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ், 81 பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் 500 எக்டேர் நிலப்பரப்பு கூடுதல் பாசன வசதிபெறும்.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்க ஆந்திர மாநிலத்தில் பாயும் கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீரைக் கொண்டு வர 1983-ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய மதிப்பீட்டுத்தொகை ரூ.13,500 இலட்சம் ஆகும். டிசம்பர் 1993 முடிய இதுவரை ஆன மொத்த செலவு ரூ.9163 இலட்சம். 1994-95-ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 3018 இலட்சம் ஆகும்.

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை

புரட்சித்தலைவி அவர்களின் புகழ்மிக்க ஆட்சியில், 52,100 கி.மீ. நீளமுள்ள அரசுச் சாலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சிக் காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் 3000 கி.மீ. நீளமுள்ள அரசுச் சாலைகள் மட்டுமே புதுப்பிக்கப்பட்டன. ஜூன் 1991-க்குப் பிறகு கடந்த மூன்றாண்டுக் காலத்தில் 13,171 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டன.

பழுதடைந்துள்ள அரசுச் சாலைப் பகுதிகளை ரூ.150 கோடி மூலதனத்தில் ஐந்தாண்டுகளில் சீர்செய்வதற்கான புதிய சிறப்புச் சீரமைப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, கடந்த மூன்றாண்டுகளில் 6,430 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டன.

தொழிற்சாலைப் பகுதிகளில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள அரசு சாலைகளில் பழுதடைந்த பகுதிகளைச் சீரமைப்பதற்கான திட்டம் 1992-93-இல் தொடங்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 586 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டன.



☐ இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையினையும் பேணிக் காப்போம்! இழந்த நம் உரிமைகள் அனைத்தையும் விரைந்து மீட்போம்!

ஜூன் 1991-க்குப் பிறகு கடந்த மூன்றாண்டுகளில் 238 பெரிய - சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 503 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன.

ஜூன் 1991 முதல், கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் ரூ.40.38 கோடி மதிப்பில் 296 பாலங்கள் கட்டிடவும், 122 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் அரசு ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.

தனியார் முகமைகளால் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அரசுச் சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் பாலங்களைத் திரும்பக் கட்டுதல், சுங்கவரி மூலம் அப்பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையைத் திரும்பப் பெறுவது எனும் கோட்பாடு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

ஊட்டியில் 11.11.93 இல் ஏற்பட்ட மிகப்பெரிய நிலச்சரிவில் துண்டிக்கப்பட்ட 1.20 கி.மீ. நீளமுள்ள சாலைப்பகுதி 107 நாட்களில் சரிசெய்யப்பட்டு, போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது.

சென்னை நெல்லூர் - கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் கொசஸ்தலை ஆற்றுப் பாலத்தில் 16.11.93 இல் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பகுதிகளுக்கு ரூ.196 இலட்சங்கள் செலவில் ஐம்பதே நாட்களில் பெய்லி பாலம் அமைத்து போக்குவரத்து 3.2.94-இல் அனுமதிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில் ரூ.60.55 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் ரூ.50.39 கோடி மதிப்பிலான 15 பணிகளுக்கு நிர்வாக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருச்சியில் மூன்று இரயில்வே மேம்பாலங்கள், மதுரை தத்தநேரி ராஜா மில் சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம், சென்னையில் உள்வட்டச் சாலை அகலப்படுத்தும் பணிகள் ஆகியவை ரூ.21.80 கோடி மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மின் துறையின் சாதனைகள்

கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும் மற்றும் அனைத்துத் துறையினருக்கும் மின்சாரத்தில் பயன்கள் கிட்டும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் 1957-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

இன்றைய நிலை

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இன்றைய மின் நிறுவு திறன் 6,158 மெ.வாட் ஆகும். இதில் புனல் 1947.75 மெ.வா., அனல் 2,340 மெ.வா., எரிவாயு 10 மெ.வா., காற்றாலை 19.355 மெ.வா. மற்றும் மத்திய அரசின் மின் நிலையப் பங்கு 1841 மெ.வா. அடங்கும்.

மின்சாரக் கட்டமைப்பின் மின் உச்சத்தேவை அதிக அளவான 3,960 மெ.வாட்டை எட்டியுள்ளது. மின்சாரக் கட்டமைப்பின் அன்றாட மின்சக்தி நாளொன்றுக்கு, முன் எப்பொழும் இருந்திராத உயர் அளவான 86 மில்லியன் யூனிட்டுகளை 24.3.94 அன்று எட்டியுள்ளது.

மின்வெட்டு அடியோடு நீக்கப்பட்டது

இவ்வரசு பதவிப் பொறுப்பை ஏற்றபோது உயரழுத்த தொழிற்சாலைகள் மின் சக்தியைப் பயன்படுத்துவதில் 25 சதவிகித வெட்டும், மின் தேவையில் 30 சதவிகித வெட்டும் அமலில் இருந்தது. இவ்வரசின் பல்வேறு திட்டங்களினால் தமிழகத்தில் அனல் மற்றும் புனல் மின் நிலையங்களின் செயல்பாடு கணிசமான அளவிற்கு உயர்ந்ததால் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கான மின்வெட்டு 26.3.92 அன்று முதல் அடியோடு நீக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மின் நிலைமை சிறப்பாகவும், மின் வெட்டே இல்லாமலும் இருக்கிறது.

கூடுதல் மின் உற்பத்தித் திறன்

இவ்வரசு பதவி ஏற்றபின், 228.02 மெ.வா. கூடுதல் மின் உற்பத்தித் திறன் அனல் 210 மெ.வா., எரிவாயு 10 மெ.வா., புனல் 2.75 மெ.வா. மற்றும் காற்றாலை 5.27 மெ.வா. சேர்க்கப்பட்டுள்ளது.

மின் உற்பத்தி அதிகரிப்பு

1992 ஜூலை முதல் 1993 ஜூன் வரை நம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் மைய அரசிடமிருந்து வாங்கப்பட்ட மின்சாரம் 25,376 மில்லியன் யூனிட்டுகளாகும். இது 1990 ஜூலை முதல் 1991 ஜூன் வரை உற்பத்தி செய்யப்பட்ட மற்றும், மைய அரசிடமிருந்து வாங்கப்பட்ட மின்சார அளவான 21,300 மில்லியன் யூனிட்டுகளைவிட 19.1 சதவிகிதம் அதிகமாகும்.

பெற்ற சிறப்பு விருதுகள்

1991-ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் சிறப்பு விருதைத் தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஆறாவது முறையாகப் பெற்று உள்ளது. மேட்டூர் அனல் மின் நிலையம் 1992-93-ஆம் ஆண்டில் முதன் முறையாக உற்பத்தித் திறனுக்கான பரிசைப் பெற்று உள்ளது. மேலும் இம்மின்

ரூ.10,000லிருந்து ரூ.15,000மாக உயர்த்தப்பட்டுள்ளது.

நெசவாளர்களின் கூலியில் ரூபாய்க்கு 3 காசு வீதம் அளிக்கப்பட்ட அரசின் பங்கு கடந்த ஆண்டு முதல் ரூபாய்க்கு 4 காசுகளாக உயர்த்தப்பட்டதன் மூலம் நெசவாளர்கள் இன்னல் போக்கி, இன்பம் தழைத்திட இவ்வரசு பாடுபட்டு வருகிறது.

நாட்டிலேயே முதன்முதலாக குடும்ப ஓய்வூதியத் திட்டம் நெசவாளர்களுக்குத் தமிழ் நாட்டில்தான்- புரட்சித்தலைவியின் ஆட்சியில் தான்- அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள் 58 வயதிற்குள் இறந்துவிட்டால் உறுப்பினர் குடும்பத்திற்கு 10 ஆண்டுகளுக்கு மாதம் ரூ.250 குடும்ப ஓய்வூதியமாக இந்த அரசு வழங்குகிறது. ஆதரவற்ற குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வாழ வழிகண்டுள்ளார் புரட்சித்தலைவி அவர்கள்.

கடந்த 3 ஆண்டுகளில் 2,600 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டி கூட்டுறவுச் சங்க நெசவாளர் உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ளன.

நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்குத் தமிழக அரசு வீடு ஒன்றுக்கு ரூ.5,000 மானியம் அளிக்கிறது.

மாறிவரும் நுகர்வோரின் தேவைகளுக்கேற்பப் புதிய புதிய துணி வடிவமைப்புகள் உடனுக்குடன் அதிகச் செலவின்றி வழங்கும் பொருட்டு ரூ.20 இலட்சம் செலவில் கம்ப்யூட்டர் வடிவமைப்பு ஒன்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது.

புதிய வடிவமைப்பின் மூலம் கைத்தறி நெசவாளர்களின் திறனை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு ரூ.5,000 முதல் 15,000 வரை வழங்கிய வள்ளல் புரட்சித் தலைவியின் புகழ் மகுடத்தில் மற்றுமொரு வைரக்கல் தான் இத் திட்டம்.

நெசவாளர் வாழ்வில் ஒளியேற்றிட...

வேளாண்மைத் தொழிலுக்கு அடுத்து, நமது மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு; அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை வழங்குகிற பெருமை, நெசவுத் தொழிலுக்குத்தான் உண்டு.

தொன்மை வாய்ந்த இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையான சகோதரர்களும், சகோதரிகளும், இன்று ஏழ்மையிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கின்றனர் என்ற உண்மையை, நான் நன்கு அறிவேன். அதனால்தான், தமிழகத்திலுள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, முழு முயற்சியுடன் எங்கள் அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி, அவர்களது வாழ்க்கையில் ஒளியேற்றி வருகிறது.

உடுத்தித் தெரிந்துகொள்ள வேண்டிய இந்தத் துறையின் பெருமைகளோடு, படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவைகளும் பல உண்டு. மாறிவரும் காலத்திற்கு ஏற்றவாறும், பொருந்துவதாகவும், தங்கள் தயாரிப்புகளை மாற்றிக்கொண்டால் தான், எதிர்காணும் தொழில் போட்டிகளில், கைத்தறி நெசவாளர்கள் வெற்றி காண முடியும் என்பதை, நெசவாளப் பெருங்குடி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவேதான், நெசவாளர்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் புதிய ரகங்களைத் தயார் செய்யவும் உதவும் வகையில், நவீன யுக்திகளைக் கையாள, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளோம். அவர்களுடைய தறியில் சிறு மாறுதல்கள் செய்து, உற்பத்தித் திறனையும், தரத்தையும் உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துறை மேலும் கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும், உற்பத்தியாளர்களின் மேம்பாட்டிற்காகவும் கைத்தறித் துறையின் வளர்ச்சிக்காகவும் செயல்பட்டு வந்த அனைத்து திட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

காலமாற்றத்திற்கேற்ப, கருத்துக்கள் மாறுபடும். அதேபோல் செயல்திறனும், சிந்தனையும் மாறுபடும் என்ற பேரறிஞர் அண்ணாவின் வார்த்தைக்கேற்ப, புதிய சிந்தனையுடன் செயல்படும் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் நெசவாளர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி தொடரும். மங்களம் கொழிக்கும்.

பொதுப்பணித் துறையின் பொன்னான சாதனைகள்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின், கடந்த மூன்றாண்டுக் கால ஆட்சியில், முத்தான பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. துறைதோறும் நிறைவேற்றப்பட்டுவரும் பாங்கான பணிகள், பல மாநிலத்தவரால் பாராட்டப்படுவதைக் காண்கிறோம்.

'செயற்கரும் செயல் செய்தல் வேண்டும்
பெறற்கரும் புகழ்பெறுதல் வேண்டும்'

என்ற கவிதை வரிகளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள். அவரது நல்லாட்சியில் இந்த மூன்றாண்டுக் காலத்தில் பொதுப் பணித் துறை புரிந்த அற்புதச் சாதனைகளின் விவரம் வருமாறு:



பாசனத் துறையின் சாதனைகள்

தமிழ்நாட்டில், சுமார் ரூ.343 இலட்சம் மதிப்பீட்டில், 19 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நீர்வள ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம், தமிழகத்தில் நீர்வளத்தைத் திட்டமிட்டுப் பெருக்குவதற்கும், பாசன ஆதாரங்களை நவீனப்படுத்துவதற்கும், உலக வங்கி உதவியுடன் ரூ.950 கோடி செலவில் வேலைகள் தொடங்கப்பட உள்ளன.

காவிரி கழிமுக நீர்ப்பகுதியில், தற்போது உள்ள வடிகால் ஆறுகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை மொத்தம் உள்ள 1022 வடிகால் திட்டங்களில், 431 வடிகால் திட்டங்கள் மேம்படுத்தப்பட்டு விட்டன. 1994-95 ஆம் ஆண்டுக்கு இந்த வடிகால் திட்டங்களுக்கு ரூ.55.47 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

வட சென்னை, கன்னியாகுமரி, சிதம்பரனார் மாவட்டங்களில், கடல் அரிப்பைத் தடுத்து, சுவர்கள் கட்டும் பணி எடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. 1994-95-ஆம் ஆண்டிற்கு, இப்பணிக்காக ரூ.61.15 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், உலக வங்கி நிதி ஆதாரத்துடன் ரூ.74 கோடி செலவில், 7 திட்டங்கள் சாத்தனூர், தாமிரபரணி, கோதையாறு, அமராவதி, கம்பம் நதிப் பள்ளத்தாக்கு, சேத்துயா தோப்பு, மருதாநதி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 4 திட்டங்கள் சாத்தனூர், அமராவதி, கம்பம் நதிப்பள்ளத்தாக்கு மருதாநதி முடியும் தறுவாயில் உள்ளன.

மேலும், 12 திட்டங்களில் நீர்ப் பங்கீட்டுத் திட்டத்தை மேம்படுத்தும் பணிக்காக, உலக வங்கி உதவியுடன் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட உள்ளன.

வேளாண்மை மேம்படுத்தும் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் பொதுப்பணித் துறை பாசனப் பிரிவில், வெள்ளத்தினால், சேதமடைந்துள்ள 319 பணிகள், ரூ.10 கோடி செலவில், செப்பனிட புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலான அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்ட முன்னேற்ற அறிக்கை உலக வங்கி ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் பெய்த பெருமழையின் காரணமாகவும், புயலினாலும் பெரும் சேதம் அடைந்த நீர்ப்பாசன ஆதாரங்கள் உடனுக்குடன் போர்க்கால அடிப்படையில், செப்பனிடப்பட்டு நீர்ப்பாசனம் தட்டுப்பாடின்றி நடைபெற வழிவகைகள் செய்யப்பட்டன. இதற்காக, ரூ. [illegible] செலவில், தற்காலிக [illegible] பணிகள், செய்யப்பட்டுள்ளன [illegible] அனைத்து நீர் ஆதார நிலைகளில் சேதங்களையும் முழு அளவில் நிரந்தரமாகச் செப்பனி[illegible] பணிக்கு, மேலும் சுமார் [illegible]

நிலையம் 1993-94-ஆம் ஆண்டில் உற்பத்தித் திறனுக்கான பரிசைத் தொடர்ச்சியாக இரண்டாவது முறை பெறத் தகுதி பெற்றுள்ளது. எண்ணூர் மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களில் எண்ணெய் பயன்படுத்தும் அளவு குறைக்கப்பட்டதாலும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் துணை இயந்திரங்களின் மின்பயனீட்டளவு குறைக்கப்பட்டதாலும் 1992-ஆம் ஆண்டு இம்மின் நிலையங்கள் மத்திய அரசின் ஊக்கப் பரிசைப் பெற்றுள்ளன. காற்றாலைகள் மூலம் அதிக அளவில் மின்சக்தி உற்பத்தி செய்த தனிச் சிறப்பு, தமிழ்நாட்டைச் சேரும். இதனால் தொடர்ந்து நான்காம் முறையாக 1993-94-ஆம் ஆண்டில் சிறப்பு விருதைத் தமிழ்நாடு மின்வாரியம் பெறவுள்ளது.

மின்விசை செலுத்துதல் மற்றும் மின் பகிர்வில் சாதனைகள்

சீரான மின் விநியோகத்திற்காகக் கடந்த மூன்றாண்டுகளில் 97 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. அதே காலத்தில் 1184 கி.மீ. நீள புதிய மிகு உயர் அழுத்த மின்பாதைகள் மின்விசையூட்டப்பட்டன. மேலும் ஏற்கெனவே செயல்பட்டுவரும் 211 துணை மின் நிலையங்களில், 1818 எம்.வி.ஏ. கூடுதல் மின்மாற்றங்கள் நிறுவப்பட்டன.

புதிய மின் இணைப்புகள்

கடந்த மூன்றாண்டுகளில் 11,91,496 புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. இவற்றில் 41,069 உயர்மின் அழுத்த மற்றும் தாழ்மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்குப் புதிய மின் இணைப்பு கொடுத்ததும் அடங்கும்.

புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்

எட்டாவது மற்றும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் கீழ்க்கண்ட மின் உற்பத்தித் திட்டங்கள் முடிவுற அனைத்துப் பணிகளும் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

		உற்பத்தித் திறன் மெ.வா.
அ)	எட்டாவது திட்டம் (1992-97)	
1.	வடசென்னை அனல் மின்திட்டம் முதல் கட்டம்	630
2.	பேசின்பாலம் எரிவாயு சுழலி மின் திட்டம்	120
3.	சாத்தனூர் புனல் மின் திட்டம்	7.5
4.	கீழ்பவானி வடகரைக் கால்வாய் புனல் மின் திட்டம்	8
5.	காற்றாலைகள் தனியார் துறையில் 80 மெ.வா. உட்பட	100
	மொத்தம்	865.5
ஆ	ஒன்பதாவது திட்டம் (1997-2002)	
6.	பைக்காரா இறுதிநிலைப் புனல் மின் திட்டம்	150
7.	பார்சன் பள்ளத்தாக்குப் புனல் மின் திட்டம்	30
	மொத்தம்	180

திட்டச் செலவுகள்

1991-94-இல் மொத்த மூலதனச் செலவு ரூ.677.99 கோடியாகும். இத்தொகை இதுவரை எந்த ஆண்டும் எட்டாத அதிகபட்ச அளவாகும். 1994-95-ஆம் ஆண்டு மின்துறையில் மொத்த திட்ட ஒதுக்கீடு ரூ.805.18 கோடியாகும்.

விவசாயிகளுக்கான சிறப்புச் சுய நிதியுதவித் திட்டம்

கட்டுப்படுத்தப்பட்ட நிதி ஆதாரங்களைக் கவனத்திற்கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் 40,000 புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. 1992-ஆம் ஆண்டிடு விவசாய மின் இணைப்புகள் வழங்க ஒரு சிறப்புச் சுய நிதியுதவித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுதும் தொடர்கிறது. இத் திட்டத்தின் கீழ் ரூ.25,000 அல்லது மின் இணைப்புக்காகும் மொத்தச் செலவுத் தொகையைச் செலுத்தும் விண்ணப்பதாரர் மின் இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை பெறுகிறார். 1994 'மே' மாத இறுதி வரை, 5375 பம்பு செட்டுகள் இத்திட்டத்தின் கீழ் இதுவரை மின் இணைப்பு பெற்றுள்ளன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தெரு விளக்குகள்

1994 மே மாதம் முடிய 1,07,418 கூடுதல் தெரு விளக்குகளுக்குச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு கொடுக்கப் பட்டுள்ளது.

மின் கம்பித் தொடரில் ஏற்படும் இழப்பு

மின் தொடரில் ஏற்படும் இழப்பைக் குறைக்கவும், மின் வழங்கல் அமைப்பில் மின் அழுத்த நிலையைச் சீராக்கவும் வாரியம் 252 எம்.வி.ஏ.ஆர். மொத்தத் திறன் அளவுள்ள ஷண்ட் கெபாஸிட்டர்கள் நிறுவி உள்ளது. மேலும் 63 எம்.வி.ஏ.ஆர் அளவுக்கு ஷண்ட் கெபாஸிட்டர்கள் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 22 நகரங்களுக்கான மின் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

வாரியம் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக 1993-94-ஆம் ஆண்டில் இம்மாநிலத்தின் மின் கம்பித் தொடரில் ஏற்படும் மின் இழப்பு 17.25 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

பகுத்தறிவு

பகுத்தறிவின் எல்லை பொதுவுடைமை
ஆகும். பிறருக்குத் தொல்லை தராத
வாழ்வே ஒழுக்க வாழ்வாகும்

-தந்தை பெரியார்

எட்டாம் திட்ட ஆண்டின் முடிவில் கம்பித் தொடரில் ஏற்படும் மின் இழப்பை 15.1 சதவிகிதமாகக் குறைக்க வாரியம் திட்டம் ஒன்றை வரைந்துள்ளது.

மின் உற்பத்தியில் தனியார் துறையினரின் பங்கு

மின் உற்பத்திக்குப் பெரும் அளவில் மூலதன முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு மின் உற்பத்தித் துறையில் தனியார் துறையினரைப் பங்கு பெறச் செய்வது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது. கீழ்க்கண்ட திட்டங்களைத் தனியார் துறையிடம் ஒப்படைக்க அரசு அனுமதித்துள்ளது:



திட்டம்	நிறுவு திறன் (மெ.வா.)
நெய்வேலி பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டம்	250
கடலூர் அனல் மின் திட்டம்	1000
ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டம்	1500
பிள்ளைப்பெருமாள் நல்லூர் வாயுச்சுழலி மின் திட்டம்	200
தூத்துக்குடி அனல் மின் திட்டம் 4 ஆம் நிலை	500
குலசேகரப்பட்டினம் பெருங்கடல் அனல் ஆற்றல் மின் உற்பத்தித் திட்டம்	100
திருமுட்டம் பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டம்	250
மொத்தம்	3800

புதிய திட்டங்கள்:

தென்னக எரி வாயு மின் தொகுப்புத் திட்டம்

தென்னக எரிவாயு மின் தொகுப்புத் திட்டம் விரைவில் முடிக்கப்பட வேண்டுமெனில், தென்னக மாநிலங்களில் ஒன்று சேர்ந்து நிதி பங்கேற்பு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார். மத்திய அரசு கொள்கை அளவில் தென்னக எரிவாயு மின் தொகுப்புத் திட்டத்தினைச் செயலாக்கிட ஒப்புதல் அளித்துள்ளது. தமிழகத்திற்கு 800 மெகாவாட் திறன் கொண்ட மின் திட்டங்கள் கோயம்புத்தூர் சேலம் அல்லது தருமபுரி மாவட்டங்களில் அமைப்பதற்குத் தேவைப்படும் எரிவாயு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசுத் திட்டங்கள்:

டீசல் என்ஜின் மின் நிலையங்கள்

சமயநல்லூர் (மதுரை மாவட்டம்), சாமல்பட்டி (தருமபுரி மாவட்டம்), ஆரணி (திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்) மற்றும் சென்னையில் மின் உச்சத் தேவைகளை ஈடுசெய்வதற்காகத் தமிழ்நாடு மின்சார வாரியம் 100 மெ.வா. டீசல் என்ஜின் மின் உற்பத்திச் சாதனங்களை நிறுவ உத்தேசித்துள்ளது.

சூரிய ஒளியிலிருந்து மின்சாரம்

மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ள சுயத்தாறு காற்றாலைப் பண்ணை வடிவில் 15 கி.வாட் சூரிய ஒளிக்கலங்களை அமைத்திட, தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டம் 1994-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இணை மின் உற்பத்தி

சர்க்கரை ஆலைகளிலும் இரசாயனத், தொழிற்சாலைகளிலும், இணை மின் உற்பத்தி செய்வதற்குத் தமிழக அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. சேத்தியாத்தோப்பு மற்றும் செய்யாறு

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஒவ்வொன்றும் 7.5 மெ.வா. திறன் கொண்ட மின் உற்பத்திச் சாதனங்கள் இயக்கப்பட்டு, அதில் உற்பத்தி செய்யும் மின்சாரம் மின்கட்டமைப்பிற்கு வழங்கப் படுகிறது.

தொழில் நிறுவனங்களுக்குச் சலுகைகள்

அ. புதிய தொழில் கொள்கைக் கிணங்க, புதிய உயர்மின் அழுத்தத் தொழிற்சாலைகள் செலுத்தும் மின் கட்டணத்தில் முதலாண்டில் 40 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டில் 30 சதவிகிதமும் மற்றும் மூன்றாம் ஆண்டில் 20 சத விகிதமும் சலுகைகள் வழங்கப்படு கின்றன.

ஆ: சிப்காட் வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மற்றும் முற்றி லும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழில் நிறுவனங் களுக்கு முன்னுரிமையில் மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

இ. புதிய தொழிற்சாலை உரிமையாளர்கள் மின் இணைப் புப் பெறுவதற்கான மதிப்பீட்டுத் தொகையினை முழுவதுமாகச் செலுத்த முன்வருவார்களே யானால் அப்புதிய தொழில் பிரிவுகளுக்கு மூன்று மாதக் காலத்திற்குள் மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

ஈ. தொழிற்சாலைகளுக்குக் குறைந்த அழுத்த மின்சாரம் வழங்குவதற்கான மின் சுமை உச்ச வரம்பு 130 குதிரைத் திறனிலிருந்து 150 குதிரைத் திறனாக உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் மின் விநியோகச் சீரமைப்புத் திட்டம்

சென்னைப் பெருநகர் மின் விநியோகத்தைச் சீரமைத்து மேம்படுத்தும் வண்ணம் 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத் தப்பட்டு வருகிறது. இத்திட்டத் தின் சிறப்பு அம்சங்களாக மின் விநியோகப் பிரிவில் முதன் முறையாக 230 கிலோ வோல்ட் மின் தொடர் புதைவடம் அமைத்தல், 230 கிலோ வோல்ட் வாயுக் கோப்புத் துணைமின் நிலையம் அமைத்தல், மின் விநியோகத்தைச் சீராகக் கண் காணிக்க ஒரு நவீன கட்டுப்பாடு நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டம் 1995-96-இல் முடிவடையும்.

இவ்வாறாகப் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக்காலப் பொதுப்பணித் துறைச் சாதனைகள், அளவிடற்கரியவை.

மாநகராட்சி விளையாட்டரங்கில் செயற்கை இழை களம்

சென்னை எழும்பூரில் உள்ள, மேயர் இராதாகிருஷ்ணன் மாநகராட்சி விளையாட்டரங் கத்தில் ரூ.1.75 கோடி செலவில் செயற்கை இழை களம் (Astro turf) ஒன்றினை உடன் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். பொதுவாக, சர்வதேச ஹாக்கி விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் செயற்கை இழை களத்திலேயே நடத்தப்படுகின்றன. இதுபோன்ற உலக அளவிலான ஹாக்கி போட்டிகள் சென்னையில் நடத்துவதற்கு உரிய வசதிகள் இதுவரை இல்லாமல் இருந்தன.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையின்படி, தற்போது சென்னை நகரில் அமையவிருக்கும் புதிய செயற்கை இழை ஹாக்கி களம், தமிழ்நாட்டிலுள்ள ஹாக்கி ரசிகர்களின் நீண்ட கால விருப்பத்தை நிறைவு செய்யும் வண்ணம் அமையும். மேலும், வருகின்ற 1995-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சென்னையில் நடைபெறவிருக்கும் தெற்கு ஆசிய பெடரேசன் (South Asia Federation) விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான சர்வதேசத் தரம் வாய்ந்த விளையாட்டு அர்ங்க வசதிகள் சென்னையில் அமைய வேண்டியதன் அவசியத்தைப் பூர்த்தி செய்யும் வண்ணமும் இந்தப் புதிய வசதி திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிப் பாதையில் வீட்டுவசதித் துறை

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்
திரு எஸ். ரகுபதி

ஒரு ஆட்சியின் மாட்சியை அகிலத்திற்கும் காட்டும் அற்புதச் சாதனைகள் பல. எல்லோர்க்கும் கல்வி, எல்லோர்க்கும் மருத்துவ வசதி, எங்கு நோக்கினும் தொழில் வளம் இருட்டை விரட்டும் மின்வசதி, வேளாண்மைத் துறை யில் வியத்தகு முன்னேற்றங்கள்! இப்படி, துறைதோறும் நாம் பதிக்கும் சாதனை முத்திரைகள் தான் ஒரு சரித்திரச் சகாப்தத்தை உருவாக்குகின்றது.

புரட்சித்தலைவியின் பொற்கால ஆட்சியைச் சரித்திரச் சகாப்தம் என்று வரலாறு வாழ்த்துகிறது என்றால் நாட்டுமக்கள் நலன் கருதி அவர்கள் திட்டிய அரிய திட்டங் களும் அதைச் செயல்படுத்திய திறமும்தான் காரணம்.

ஆட்சிக் கோபுரத்தின் அழகு மணி மாடங்களைப் போன்றது மற்ற துறைகள் என்றால், அஸ்தி வாரம் போன்றதுதான் வீட்டு வசதித் துறை. ஒரு மனிதன் எவ்வளவுதான் அற்புதங்களை வெளியில் படைத்தாலும், அவன் தங்குவதற்குத் தகுந்த வீடு இல்லை யென்றால் அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏது? எண்ணத்தில் எழுச்சி ஏது? இதை உணர்ந்துதான் 'எல்லோர்க்கும் வீடு' என்ற இனிய இலட்சியத்தை அடிநாதமாகக் கொண்டு, தமிழக அரசின் வீட்டு வசதித் துறை விரைந்து செயல் பட்டு வெற்றிப் பாதையில் அகில இந்திய அளவிலேயே முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. அந்த முன்னேற்றத்தின் பயனால் அகில இந்திய அளவில் பெற்ற முதல் பரிசையும் நம் தங்கத் தலைவியின் தாமரைத் திருவடிகளுக்கும் காணிக்கையாக்கி மகிழ்ந்திருக் கிறோம்.

புரட்சித்தலைவி ஆட்சிப் பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் தானா முடிந்திருக்கின்றன? முன்னூறு ஆண்டுக்காலச் சாதனையை நாடு பெற்றிருக்கிறதே! அந்த ஆற்றல் அரசியின் அற்புத வழிகாட்டலில் பிறதுறைகள் ஆட்சிக்குப் பெருமை சேர்ப்பதுபோல் வீட்டுவசதித் துறையும் கடந்த மூன்று ஆண்டு களில் பல வெற்றிச் சுவடுகளைப் பதித்து வந்திருக்கிறது. சுவடுகள் பதிந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறேன் சுகமான அனுபவங் களையும் அதன் அடிப்படையில் சாதித்த சாதனைகளையும் உங் களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

மக்கள் வாழ்வை வளப்படுத்தும் மகா நதியைப் போன்றது வீட்டு வசதித் துறை. இதில் 'திரிவேணி' சங்கமமும் உண்டு. இந்த மகா நதியிலிருந்து பிரிந்து சென்று வளமூட்டும் மகத்தான கிளை நதிகளும் உண்டு. ஆம்! தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங் கங்கள் ஆகிய மூன்று முகமை களும் சேர்ந்த திரிவேணிச் சங் கமம் தானே வீட்டு வசதித் துறை! சென்னை நகரைச் செழுமைப் படுத்தும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நாட்டின் பிற பகுதிகளை வளப்படுத்தும் நகர மேம்பாட்டுத் திட்டம் போன் றவை கிளை நதிகளைப் போன்ற தாகும்.

இதோ, கடந்த மூன்றாண்டு களில் வீட்டு வசதித் துறை படைத்த சாதனைகள் பதித்த முத்திரைகள்! 1991-92ஆம் ஆண்டில் ரூ.245.07 கோடி செலவில் 81,828 வீடுகளும், 1992-93ஆம் ஆண்டில் ரூ.255.02 கோடி செலவில் 82,992 வீடுகளும், 1993-94ஆம் ஆண்டில் 1,04,800 வீடுகளும் அந்த முகமைகளால் கட்டப்பட்டு மேம்படுத்தப்பட்டு ரூ.347.85 கோடி அதற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற முகமைகளால் ஆற்றப்பட்டுள்ள நிதி மற்றும் செயல்பாட்டுச் சாதனைகள் பலப் பல.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

1991-94ஆம் ஆண்டுகளில், குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு ரூ.271.15 கோடி செலவில் 24,000 வீடுகள் இவ் வாரியத்தால் கட்டப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதியை ஊக்குவிக்கும் பொருட்டு, 1991-ஆம் ஆண்டு முதல் நடப்பு ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் உயரிய திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. 1991-94-ஆம் ஆண்டுகளில்,

"அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்" என்ற புதிய அமைப்பை ஏற்படுத்தி அதில் மைய மற்றும் மாநில அரசின் மூலதனப் பங்குத்தொகையாக ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்காக ரூ.15 கோடி ஏற்கெனவே வழங்கப் பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு தவிர, இந்தப் புதிய அமைப்பிற்கு, அரசின் பங்குத்தொகையாக சென்னையில் முக்கியப் பகுதி களில் உள்ள அரசு நிலங்களை ஒப்படைப்பதற்காக கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிறுவனம், நிதி நிறுவனங் களிடமிருந்து நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக இந்நிலங்களை அடிப்படை மூலதனமாகக் கருத இயலும்.

புதிய திட்டங்கள்

1993-94ஆம் ஆண்டில் புதிய திட்டமாக வெளிவட்டச் சாலை ஒன்றை உருவாக்கிட அரசு அனுமதித்துள்ளது. வண்டலூர் மற்றும் மீஞ்சூருக்கு இடையில் உள்ள 58 கிலோ மீட்டர் பிரதான சாலை "கட்டு இயங்கு மற்றும் மாற்றல்" அடிப்படையில் தனியார் முதலீடு மூலம் அமைக்கப்பட உள்ளது. இந்தச் சாலையில் முறைப்படுத்தப்பட்ட உத்தேசத் தடம் தயாரிக்கப்பட்டு, முடிவிற் காகத் தொடர்புடைய நிறுவனங் களுடன் கலந்து ஆலோசிக்கப் பட்டு வருகிறது.

மாதவரம் பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்து மிடத்தை வெற்றிகரமாக முடித்த தும், மற்றொரு புதி திட்டமான பீர்க்கன்கரணையில் (ஜி.எஸ்.டி. ரோடு) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் உருவாக்கப்படவுள்ள பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டதிற்குண்டான இரண்டு மாற்றுத் திட்டங்களைப் பொதுப் பணித்துறை மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்காக முன்னரே அனுப்பப்பட்டுள்ளது.

சாத்தங்காட்டில் அமைய உள்ள மரம் மற்றும் இரும்புக் கழிவுகள் மொத்த அங்காடி வளர்ச்சித் திட்டத்தையும் அரசு அனுமதித் துள்ளது. மேலும், 1994-95ஆம் ஆண்டில் புதிய திட்டமாகக் கோயம்பேட்டில் சென்னையில் வெளியூர் பேருந்து நிறுத்துமிடம் அமைக்க அரசு அனுமதியளித் துள்ளது.

நகர் ஊரமைப்பு இயக்ககம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மேம்பாட்டிற்காக மத்திய அரசு உதவியுடன் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினைச் செயல் படுத்துவதில் நகர் ஊரமைப்புத் துறை ஒரு முன்னோடி நிறுவன மாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 23 நகரங்களில் 107 திட்டப்பணிகள் ரூ.2683 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, ரூ.760 இலட்சம் உள்ளாட்சி நிறுவனங் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 40 திட்டப்பணிகள் முடிக்கப்பெற்று பயன்பாட்டிற்குக் கொணரப்பட்டுள்ளது.

இத்துறை 1991-92ஆம் ஆண்டில் 12 முழுமைத் திட்டங்களையும், 1992-93ஆம் ஆண்டில் 12 முழுமைத் திட்டங்களையும், 1993-94ஆம் ஆண்டில் 20 முழுமைத் திட்டங்களையும் தயாரித்து முடித்துள்ளது. 1994 – 95ஆம் ஆண்டில் மேலும் 20 முழுமைத் திட்டங்களைத் தயாரித்து முடிக்க உள்ளது. அவ்வாறே 1991-92ஆம் ஆண்டில் 40 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள், 1992-93ஆம் ஆண்டில் 40 விரிவு அபிவிருத்தித் திட் டங்கள், 1993-94-ஆம் ஆண்டில் 100 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் இத்துறையினால் தயாரிக்கப் பட்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டில், மேலும் 100 விரிவு அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்துறை பல்வேறு நகரங்களுக் கான போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங் களைத் தயாரிக்கப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. 1991-92ஆம் ஆண்டில் 4 நகரங் களுக்கான திட்டங்களும், 1992-93ஆம் ஆண்டில் 4 நகரங் களுக்கும், 1993-94ஆம் ஆண்டில் மேலும் 4 நகரங்களுக்கும் போக்கு வரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1994-95ஆம் ஆண்டில், மேலும் 4 நகரங்களுக் கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்படும்.

எல்லோர்க்கும் வீடு என்ற இலட்சியப் பாதையில் வீறுநடைபோடும் வீட்டுவசதித் துறை, கடந்த மூன்றாண்டுகளில் பதித்த வெற்றி முத்திரைகளில் சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டினேன். இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு வீடு கிடைக்கும் வரையில் இத்துறையின் தூய பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

'காணி நிலம் வேண்டும்' என்று பராசக்தியிடம் வரம் கேட்ட பாரதியார், அந்தக் காணி நிலத்தில் ஓர் மாளிகை கட்டித்தர வேண்டும் என்றும் வேண்டினார். அன்னை பராசக்தியின் அருள்வடிவாய் இன்று நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார் நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள். அன்று பராசக்தியிடம் பாரதி கேட்டார். இன்று, நாட்டு மக்கள் கேட்கா மலேயே அவர்கள் தேவையறிந்து இனிய இல்லங்களை ஒதுக்கீடு செய்து இல்லங்கள்தோறும் இன்ப ஒளி வீசவும், நாட்டு மக்களின் உள்ளங்கள்தோறும் உவகை பெருகிடவும் புரட்சித்தலைவியின் புனித அரசு, விரைந்து செயல்பட்டு வெற்றிச் சரித்திரம் படைத்து வருகிறது.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்றார் பாவேந்தர். குடும்பம் நல்லதாக இருக்கவேண்டுமென்றால் குடி யிருக்கும் வீடும் நல்லதாக இருக்க வேண்டும் அல்லவா? தமிழ்த்திரு நாட்டின் அனைத்துக் குடும்பங்களுமே பல்கலைக் கழகங்களாகப் பரிணமிக்க, இந்த நாடு செய்த நற்றவப் பயனாய் நம்மை ஆண்டுகொண்டிருக்கும் புரட்சித்தலைவியின் புனிதப் பயணம் தொடரட்டும்! புது மைகள் நாளும் மலரட்டும்!

சிறுதொழில் துறையில் சிறப்பான சாதனைகள்

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
திரு துரை ராமசாமி

குறைந்த அளவு முதலீடு, ஆனால் பெரும் அளவில் வேலை வாய்ப்பு அளிப்பது சிறுதொழில் துறையின் சிறப்பு அம்சமாகும். சிறுதொழில்கள் குறித்த வெற்றி கரமான கொள்கைகளை வகுப்ப தன் மூலமாகவே விரைவான தொழில்மயமாக்கல் சாத்தியம் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது இந்த அரசு.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1992 ஆம் ஆண்டுக்கான தொழிற் கொள்கை யில், புதிய தனித்தன்மை வாய்ந்த கருத்துக்களையும் நடவடிக்கை களையும் அறிவித்துள்ளார். இதில் சிறுதொழில் துறைக்குக் கணிச மான அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வரசு சிறுதொழில்களுக்கும், ஊரகத் தொழில்களுக்கும் பல ஊக்க உதவிகளையும் சலுகைகளையும் அறிவித்துள்ளது. சிறுதொழில்கள் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்காக 1993 ஜூலைத் திங்களில் சிறுதொழில் துறை என ஒரு தனித்துறையே உருவாக்கப் பட்டுள்ளது.

அரசு பொதுத்துறை நிறுவனங் களும், வாரியங்களும் சிறு தொழில் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை உரிய நேரத்தில் செலுத்துவதைக் கண்காணிக்க, கண் காணிப்பு அமைப்பை ஏற்படுத்துதல்

பொருட்கள் வழங்கப்பட்ட திலிருந்து 30 நாட்களுக்குள் அவற் றுக்கான பட்டிகளுக்குத் தொகை களைக் கொடுத்துத் தீர்க்க வேண்டும் என்று அரசு 19.2.92-இல் மாநிலப் பொதுப்பணித் துறை நிறுவனங்களுக்கும் சட்டப் படி யான வாரியங்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளது. இதனைக் கண் காணிக்க சிறு தொழில் துறையின் செயலாளர் தலைமையில் அமைக் கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் முயற்சியால், 196 சிறுதொழில் நிறு வனங்கள் மொத்தம் நிலுவையாக இருந்த ரூ.1095.30 இலட்சத்தில் ரூ.1066.66 இலட்சத்தை வசூலிக்க முடிந்தது.

மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கு அதிக மூலதன மானியம் வழங்குதல்

தமிழ்நாட்டில் பின்தங்கிய 76 வட்டங்களில் அமைக்கப் பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு ரூ.15 இலட்சம் என்ற உயரளவுக்கு உட்பட்டு 15 சதவிகித மூலதன மானியம் என்றிருப்பதற்குப் பதி லாக, அதிக அளவு உதவியாக மிகவும் பின்தங்கிய 32 வட்டங் களில் ரூ.20 இலட்சம் என்ற உயரளவுக்குட்பட்டு, 20 சதவிகித மூலதன மானியம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பின் தங்கிய வட்டங்களாக மேலும் 6 வட்டங்களை அதிகரித்து ஆணை யிடப்பட்டுள்ளது.

வேடத்துக்குளத்திலுள்ள பின்ன லாடைத் தொழிற்பேட்டைகளுக்கு மாநில மூலதன உதவித் தொகை வசதியை நீட்டித்தல்:

தற்போது மூலதன முதலீட்டு உதவித்தொகை பெற்று வரும் 82 வட்டங்களில் உள்ள சிறுதொழில் நிறுவனங்கள் பெறும் அதே அளவு மூலதன மானியம் அரசு நிறுவனங்களால் மேம்படுத்தப் பட்ட அனைத்துத் தொழில் வளாகங்கள், கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த திருப்பூர் அருகிலுள்ள முதலிப்பாளையம் பின்னலாடைத் தொழிற்பிரிவு களுக்கான தனியார் தொழிற் பேட்டைகளும் பெறுகின்றன. சிட்கோ நிறுவனம் உருவாக்கிய வேடத்துக்குளத்திலுள்ள பின்ன லாடைத் தொழிற்பேட்டைகளுக் கும் பின்தங்கிய வட்டத்திலுள்ள தொழில் நிறுவனங்கள் பெறும் இம்மூலதன மானியம், தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், இவ்வுதவித் தொகை யினைச் சிறுதொழில் நிறு வனங்கள் பயன்பெறும் வகையில் அவை உருவாகும் ஒவ்வொரு நிலையிலும் படிப்படியாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 39 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.90 கோடி செலவில் 9,144 வீடுகள் கட்டு வதற்குப் பணிகள் தொடங் கப்பட்டுள்ளன. இத்திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வசிக்கும் மக்களுக்கு வீடுகள் வழங்கப்படும் வகையில் அமைக்கப்படும் ஓர் உன்னதத் திட்டமாகும். இரண்டாவது கட்டமாக, நடப்பாண்டில் (1994-95) 10,300 வீடுகள் உருவாக்கும் வகையில் ரூ.43 கோடி செலவில் மேலும் 29 நகரங்கள் இத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அரசின் முக்கிய நோக்க மாகும். 1991-94ஆம் ஆண்டுகளில் எல்லாவித இயற்கைச் சீற்றங் களால் ஏற்படும் இன்னல்களைத் தாங்கும் வகையில் ரூ.30 கோடி செலவில் குடிசை வாழ் மக்கள் பயன்பெறும் வகையில் 10,927 குடியிருப்புகள் கட்டப்பட்டுள் ளன. இது தவிர, 1991-94ஆம் ஆண்டுகளில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், குடிசைப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு 29,508 குடும்பங்கள் பயன்பெறும் வகையில், ரூ.9.78 கோடி செலவிடப்பட்டுள்ளது.

விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கட்டப்பட்டுள்ளன. ஏழைகள் வாழ்வில் இன்ப ஒளியேற்றும் அரசு இது என்பதைக் குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் கோடிட்டுக் காட்டும்.

வீட்டுவசதிக் கூட்டுறவு சங்கங்கள்

கூட்டுறவு வீட்டுவசதிப் பிரிவின் கீழ் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவுச் சங்கங் களிலும் முதன்மை நிறுவனமாக இயங்கி வருகின்றது என்பது அகில இந்திய அளவில் நம் ஆட்சியின் மாட்சிக்குக் கிடைத்த அங்கீகார

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஒருங்கிணைந்த திட்டம் அமல் நடத்தப்படவேண்டும் என்பது எனது கருத்து ஆகும். இதுதான் இப்போதைய நமது தேவையாகும்.

குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப நலத் தகவல்கள் எல்லா மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த உறுதியான திட்டமும், செயல் அளவிலான நடவடிக்கைகளும் தேவை. தேசிய மக்கள் தொகைக் கொள்கையை இதற்காகப் புதுப்பிக்க வேண்டும்.

தேசிய அளவில் இது குறித்து அனைத்துத் தரப்பினரும் விவாதித்து முடிவெடுக்க வேண்டும். மத்திய மாநில அரசுகள் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.

மாகும்.

1991-94ஆம் ஆண்டுகளில் இந்த இணையம், கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டங்களின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு ரூ.370 கோடி கடனாக வழங்கியுள்ளது என்பது குறிப் பிடத்தக்கது. 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை, இந்த இணையத்தால் வழங்கப் பட்ட கடன் தொகை ரூ.594 கோடியாகும். எனவே, கடந்த மூன்றாண்டுகளில் அதாவது 1991-94ஆம் ஆண்டுகளில் வழங்கப் பட்ட கடனுதவியானது, கடந்த 32 ஆண்டுகளில் —அதாவது 1959ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரை இவ்விணையத்தால் வழங் கப்பட்ட கடன் தொகையில் 62 விழுக்காடு ஆகும் என்பது

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1991-94ஆம் ஆண்டுகளில் 40,536 வீட்டு மனைகள் ரூ.129.82 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன. நலிவுற்றோர் நலன் நாடும் அரசு இது என்பதால், இதில் 50 சதவிகிதம் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு ஊழியர்களுக்கு வீடுகள் வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கருத்தில் கொண்டு 1991-94ஆம் ஆண்டுகளில் 23.42 கோடி செலவில் 2372 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

குடிசை வாழ் மக்களின் நலத் தினைக் கருத்தில் கொள்ளுவதே குடிசைவாழ் மக்களுக்கு அடிப் படை வசதிகள் அளிக்கப் படுகின்றன. இத் திட்டத்தின்கீழ், 1991-94ஆம் ஆண்டுகளில் ரூ.5.87 கோடி செலவிடப்பட்டு 35,800 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. நடைபாதைவாசிகளுக்கு மறு வாழ்வு அளிக்கும் வகையில் ரூ.2.32 கோடி செலவிடப்பட்டு 1996 நடைபாதைவாசிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. பாதை யையே வீடாகக் கருதியவர் களுக்கும் பாங்கான வீடுகள் கட்டித் தந்துள்ளது புரட்சித் தலைவியின் புனித ஆட்சி.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கான திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ரூ.11.06 கோடி செலவில் 8,830 குடியிருப்புகள்

குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கடந்த 32 ஆண்டுகள் நாட்டை ஆண்ட வர்கள் சாதிக்காத சாதனையை, மூன்றே ஆண்டுகளில் புரட்சித் தலைவி அவர்கள் சாதித்துள்ளார் என்பதற்கு இதுவும் ஓர் சான்றா கும். இந்த அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாகக் கிராமப் புறங்களில் வீட்டுவசதியை மேம் படுத்துவதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1991-92ஆம் ஆண்டு முதல் 30.6.94 வரை ரூ.10 கோடி செலவில் 40,000 குடும்பங்கள் பயனடைந் துள்ளன.

1991 -92ஆம் ஆண்டில் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் ரூ.111.38 கோடி செலவில் 42,350 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதைப் போன்று, 1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.117.02 கோடி செலவில் 43,016 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1993-94ஆம் ஆண்டில் (30.6.94 முடிய) 53,822 வீடுகள் 144.90 கோடி செலவில் கிராமப்புற மற்றும் நகர்ப் புறங்களில் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 'வீடு இல்லார் இல்லை' என்னும் விந்தைக் காட்சியைக் காணவே புரட்சித் தலைவியின் அரசு இவ்வாறு விரைந்து செயல்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னை மாநகரின் சீரான வளர்ச்சிக்கு ரூ.50 கோடி செலவில் 'கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி' ரூ.6 கோடி செலவில் மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம், ரூ.17 கோடி செலவில் சாத்தங்காடு இரும்புமற்றும் எஃகு அங்காடி ஆகிய திட்டங்களை சென்னை நகரத்தின் நெரிசலைக் குறைக்கும் பொருட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம், மொத்த விற்பனைச் சந்தையாகிய அழுகும் பொருட்கள், உணவு தானியங்கள், துணி வியாபாரம் போன்றவை களை மத்திய விற்பனைப் பகுதியாகிய ஜார்ஜ் டவுனிலிருந்து கோயம்பேட்டிற்கு இடமாற்றம் செய்யும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, மலர் அங்காடி இந்த வளாகத்தில் முடிவடைந்து உள்ளது. காய்கறி அங்காடி வளாகம் முடிவுறும் தறுவாயிலும், கனி வகை அங்காடி வளாகத்தில் வேலைகள் எடுத்துக் கொள்ளப் பட்டு, 1994ஆம் ஆண்டின் மத்தியில் முடிவு பெறுமென உத் தேசிக்கப் பட்டுள்ளது. தானிய வகை அங்காடிகளின் விரிவான திட்டமானது தொடக்க நிலையில் உள்ளது. மாதவரம் பேருந்து மற்றும் சரக்கு வண்டி நிறுத்து மிடம் சென்னை நகரத்துக்கு வடகிழக்கில் சுமார் 66 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூபாய் ஆறு கோடி செலவில் அமைக்கப்பட்டு 1992-93ஆம் ஆண்டில் முடிக்கப் பட்டுள்ளது.

சென்னை மாநகரின் மையப் பகுதியில் வியாபார வட்டார நெரிசலைத் தவிர்க்க சாத்தங் காட்டில் 70 ஏக்கர் நிலப்பரப்பில் மரம், இருப்பு உதிரி மற்றும் சரக்கு உந்து முனையம் அமைக்க உத் தேசிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி யில் மர அங்காடிகள், இரும்பு உதிரி அங்காடிகள் தவிர மணலியில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளின் வசதிக்காகச் சரக்கு உந்து நிறுத்த ஒரு வளாக மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.16.70 கோடியாகும். இந்நிலம் அரசு நிலமாகையால் நில உரிமை மாற்றம் செய்யப் பட்டு, 1994-95-ஆம் ஆண்டில் முடிவுறும் என எதிர்ப்பார்க்கப் படுகிறது.

1991-94ஆம் ஆண்டுகளில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி, மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம், சாத்தங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடி ஆகிய திட்டங்களுக்காக ரூ.27.60 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மாபெருநகரத் திட்டம்

தேசிய நகராண்மைக் குழுமம், அனைத்திந்திய அளவில் தேர்வு செய்த ஆறு நகரங்களில் சென்னை யையும் "மாபெரு நகரத்தில்" சேர்த்து, மத்திய அரசு உதவியுடன் செயலாக்கத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 1993-96ஆம் ஆண்டிற்குள் சென்னைப் பெரு நகர் வளர்ச்சிக்குழுமம் ரூ.887 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் தீட்ட உத்தேசித்துள்ளது. சென்னைப் பெருநகரப் பகுதியில் உள்ள பல்வேறு முகமைகளால் செயல்படுத்தப்படும் பொதுச் சேவைத் திட்டங்கள், முதலீடு திரும்பப்பெறும் திட்டங்கள் மற்றும் ஆதாயம் ஈட்டித்தரும் திட்டங்கள் ஆகியவை இத் திட்டத்தில் அடங்கும்.

இத்திட்டத்தை முன்னின்று நடத்துவதற்குப் "பெருநகர்

உயர் அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்பிரிவு களுக்கு இணையாக, குறைந்த அழுத்த மின்சக்திப் பிரிவு களுக்கும் உயர்த்தப்பட்ட வீதத்தில் சலுகை வழங்குதல்:

வணிக உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குக் குறைந்த மின் அழுத்தப் பிரிவுகளுக்கு 30 சதவிகித, 20 சதவிகிதம், 10 சதவிகிதம் என்ற நற்போதைய அளவிலிருந்து 40 சதவிகிதம், 30 சதவிகிதம், 20 சதவிகிதம் என்ற அளவிற்கு இச்சலுகையினை அதி கரித்து அரசு ஆணை பிறப்பித் துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மின்னணுவியல் தொழில் வளாகங்களுக்கு விற்பனை வரி தள்ளுபடித் திட்டத்தை நீட்டித்தல்:

மிகவும் பின்தங்கிய 32 வட்டங்களிலும் புதுக்கோட்டை, கடலூர், மானாமதுரை ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் தொழில் வளாகங்களிலும் உள்ள புதிய தொழிற்பிரிவுகளும் கணிச மான அளவிற்கு விரிவுபடுத்தப் பட்ட தொழிற்பிரிவுகளும் 5 ஆண்டுக்காலத்திற்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து முழு தள்ளுபடி (அல்லது 9 ஆண்டுக் காலத்திற்கு விற்பனை வரி ஒத்திவைப்பு) பெறத் தகுதியுடை யனவாகும். இப்பயன் தற்போது திருவான்மியூரிலுள்ள டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டைக்கும், செங்கல் பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத் திலுள்ள சோழிங்க நல்லூர் மின்னணுவியல் நகருக்கும் நீட்டிக் கப்பட்டுள்ளது.

தற்காலிக, நிரந்தரப் பதிவிற்காக எளிமையாக்கப் பட்ட திருத்த வடிவங்கள்:

தற்காலிக, நிரந்தரப் பதிவிற்கு விண்ணப்பிக்க எளிமையாக்கப் பட்ட ஒரு பக்க அளவுள்ள திருத் தப்பட்ட படிவம் ஒன்றை அரசு அறிமுகம் செய்துள்ளது.

சிறுதொழில் தொடங்குவதில் கடந்த மூன்றாண்டுகளில் தொடர் சாதனை எட்டப்பட்டுள்ளது. 1991-92-இல் 1,38,404 ஆக இருந்த நிரந்தரப் பதவுபெற்ற தொழிற் பிரிவுகள் 1993-94-இல் 1,78,114 ஆக உயர்ந்துள்ளது. இதே போல 1991-92-இல் 2906.48 கோடியாக இருந்த முதலீட்டுத் தொகை 1993-94-இல் 3972.27 கோடியாக உயர்ந்துள்ளது.

குறைந்த அழுத்த மின்சக்தியின் பணிச்சுமை அதிகரித்தல்

சிறுதொழில் நிறுவனங்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை ஏற்று குறைந்த அழுத்த மின் வழங்குதலின் கீழ் அனுமதிக்கப் படும் வரையறையை, தமிழ்நாடு மின்சார வாரியம், 1993 நவம்பரி லிருந்து 130 குதிரைத்திறனிலிருந்து 150 குதிரைத் திறனாக உயர்த்தி யுள்ளது.

ஒரே இடத்தில் அனைத்து நடைமுறைகளையும் செய்து கொடுக்கும் அதிகார மன்றம்

நமது மாநிலத்தில் தற்போது நடைமுறையிலுள்ள 'சட்டங்கள், விதிகளின்கீழ் அமைக்கப் பட்டுள்ள பல்வேறு அதிகார மன்றங்களின் ஒப்புதல் பெறும் நடைமுறையினை விரைவுபடுத் தும் நோக்கத்துடன் நமது மாநிலத்தில் மாவட்ட அளவில் ஒரே இடத்தில் அனைத்து நடைமுறை மேற்கொள்ளும் குழுவும் நேரடி அனுமதி வழங்கல் முறையும் நடைமுறையில் இருந்து வருகின்றது. சிறுதொழில் தொடங் குவதற்கு இந்த அதிகார மன்றங் களின் அனுமதி முன் தேவை யாகும். ஆலோசனை வழங்கும் இக்குழுவிற்கு வசதியாக அதிகாரம் வழங்கும் செயற் குறிப்பும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

மிகச் சிறுதொழில் பிரிவுகளின் பிரச்சினைகளை நீக்குவதற்கு அமைக்கப்பட்ட குழு

மிகச் சிறிய தொழில்கள் பிரிவுகட்கு இன்றியமையாத தேவையான உரிய காலத்தில் போதுமான நிதி வசதி கிடைக்க வழிசெய்யும் வகையில் தொழில் கூட்டுறவு வங்கிகளை திருத்திய மைப்பதென்று அரசு தீர்மானித் துள்ளது.

தொழில் முனைவர்களாகும் பெண்களுக்கான சிறப்புத் திட்டம்

அனைத்துப் புதிய தொழிற் பேட்டைகளிலும் தொழில் முனை வர்களாகும் பெண்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு செய்யவும், 30 சதவிகிதத்திற்கு மேல் பெண்கள் பணி அமர்த்தப் பட்டுள்ள புதிய தொழிற்பிரிவு களுக்குச் சிறப்பு மானியம் 5 சதவிகிதம் வழங்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பெண்களுக்கான சிறப்புத் தொழில் முனைவர் மேம்பாட்டுத் திட்டம்

பெண்களுக்கான தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் ரூபாய் 10 இலட்சத்தில் 765 நபர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி, 1993-94-இல் 800 நபர்களுக்கு ரூபாய் 12 இலட்சத்தில் பயிற்சி அளித்து சாதனை படைக்கப் பட்டது.

1991-92-இல் பயிற்சி பெற்றவர் களில் 225 பெண்கள் ஏற்கெனவே தொழில் தொடங்கிவிட்டனர். 1992-93-இல் பயிற்சி பெற்றவர் களில் 686 பேர்களுக்குத் தொழில் தொடங்க நிதியுதவி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 394 பேர்களுக்குத் தொகை வழங்க அனுமதி கிடைத்து விட்டது.

1993-94-ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சம் செலவில் 300 ஆதி திராவிடர்பழங்குடியினருக்குப் பயிற்சியளிக்க தொழில்முனைவர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டு மாநிலம் முழுவதிலும் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

தொழில் கூட்டுறவு அமைப்புகள்

கூட்டுறவு முறையில் அல்லது கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் உதவி கிடைக்கச் செய்தல் ஆகிய வழிகளில், தேயிலை, சவ்வரிசி, தீப்பெட்டி, தென்னை நார்த் தொழில் போன்ற வேறுபல தொழில்களை மேம்படுத்துவதே அரசின் அறிவிக்கப்பட்ட கொள் கையாகும்.

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் (SEEUY)

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமான இது 1983-84-ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப் பட்டு வருகிறது. 25 சதவிகித உதவித்தொகையுடன் நபருக்கு 35,000 ரூபாய் வரை நிதி உதவி வழங்கிட வங்கிகட்கு விண்ணப் பங்கள் பரிந்துரை செய்யப்படு கின்றன. சென்னை மாநகர் நீங்கலாக ஏனைய பகுதிகளில் நிறைவேற்றப்படுகின்ற இத்திட்டம், 10-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்துள்ள 18 முதல் 35 வயது வரையிலுள்ளவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

பிரதமரின் 'ரோஸ்கர் யோஜனா' வேலை வாய்ப்புத் திட்டம்

படித்த வேலையற்ற இளைஞர் களுக்காகப் பிரதமரின் 'ரோஸ்கர் யோஜனா' என்ற வேலை வாய்ப்புத் திட்டம் 2.10.1993 முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தொழில்கள் சேவை நிலையங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அமைப்பதன் மூலம் சுயவேலை வாய்ப்பு முயற்சிகளை மேற் கொள்ள இத்திட்டம் வழிவகை செய்கிறது. தனிநபர்களின் நேர்வில் ரூபாய் ஒரு இலட்சம் வரையில் செலவாகக்கூடிய பணித் திட்டங்களுக்கும் கூட்டா கச் சேர்ந்து நபர் ஒருவரின் பங்கு ரூபாய் ஒரு இலட்சமாகவோ அல்லது அதற்குக் குறைவாகவோ இருக்கும் பணித் திட்டங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக் கப்படும்.

கைவினைத் தொழிற்பிரிவுகள்

கைவினைத் தொழிற்பிரிவுகளின் வளர்ச்சிக்காக மாவட்டத் தொழில் மையங்கள், கைத் தொழில் வல்லுநர்கள், கைவினை ஞர்களை ஆய்வு நடத்தி தெரிவு செய்கின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் இத்துறையில் எய்திய சாதனை வருமாறு:

1991-92-இல் 7822 சாதனைகள் எய்தப்பட்டு, 17,698 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. 1992-93-இல் இந்தச் சாதனை 7936 ஆக உயர்ந்து 19,741 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் தூண்டுதலாகப் பணியாற்ற வேண்டும் என்பதனையும் இம் மாநிலத்தின் பின்தங்கிய பகுதி களிலும் போதிய அளவு தொழில் வளர்ச்சி எய்தப்பெறாத பகுதி களிலும் சிறுதொழில்கள் தொடங்கவேண்டும் என்பதையும், திட்டவட்டமான நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் அரசால் அமைக்கப்பட்டது. கடந்த காலங்களில் கிடைத்த அனுபவம் காரணமாக இப்பணியினைச் செம்மையாகவும் அரசு சார்பில் பல திட்டங்களைச் செயலாக்கி யும் வருகிறது.

திற்கு 580 மெ.டன் எடை அள விற்கு வார்ப்பிரும்புச் சிறப்புப் பாகங்களை வழங்கியது.

மேலும், ரூ.1.21 கோடி மதிப்புடைய தண்ணீர்த் தொட்டி களையும், அதைத் தாங்கும் உருக்குச் சாதனங்களையும் கட்டமைத்து வழங்கியது.

உ. தமிழ்நாடு முழுவதற்கும் ரூ.4 கோடி மதிப்புடைய ஆழ்கிணறு கைப்பம்புகளையும், உதிரிப் பாகங்களையும் வழங்கியது.

ஊ. தமிழ்நாடு மின் வாரியத் திற்கு மின்னிணைப்புப் பொருட்கள் வழங்கியது.

எ. ஹெச்.எம்.டி. இண்டர் நேஷனல் நிறுவனத்தின் மூலம் இந்தோனேஷியா, குவையத், கட்டார், உகாண்டா, சவூதி அரேபியா, மலேசியா, நேப்பாளம் போன்ற பல்வேறு நாடுகளுக்குப் பத்து பவர் ஹாக்சா எச்.எஸ்.20 மற்றும் எச்.எஸ்30 எந்திரங்களை ஏற்றுமதி செய்தது. 'யுனிசெப்' நிறுவனத்தின் மூலம் உகாண்டா நாட்டிற்கு ரூ.29 இலட்சம் மதிப்புடைய ஆழ்கிணறுக் கைப்பம்பு உதிரிப் பாகங்களும் கருவிகளும் வழங்கப்பட்டன.

1993-94-ஆம் ஆண்டில் எய்திய சாதனை

அ. சென்னை மாநகராட்சிக்கு ரூ.4 கோடி மதிப்புடைய மேசை, நாற்காலி போன்ற மரச் சாமான்கள், தெரு விளக்குக் கம்பங்கள், டெஸ்க்குகள் முதலிய வையும், ஏனைய சாதனங்களும் வழங்கப்பட்டன,

ஆ. மாவட்ட ஆட்சியருக்கும், குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு ஆழ் கிணறுக் கைப்பம்புகளும், பம்பு உதிரிப் பாகங்களும் வழங்கப் பட்டன.

இ. தமிழ்நாடு மின் வாரியத் திடம் பெற்ற ரூ.950 இலட்சம் மதிப்புடைய 3100 மெ.டன் எடையுள்ள கோபுரப் பாகங்கள் கட்டமைத்து அதில் 2000 டன் துத்தநாகம் பூசப்பட்ட மின் அனுப்புகைக் கோபுரப் பாகங்கள் 1993-94-ஆம் ஆண்டில் வழங்கப் பட்டன.

மேலும், மின்னிணைப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன.

ஈ. 'யுனிசெப்' நிறுவனத்திற்கு ரூ.104 இலட்சம் பெறுமானமுள்ள குழாய்களும், உதிரிப்பாகங்களும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

தமிழ்நாடு தோல் பொருள் வளர்ச்சி நிறுவனம் 'டால்கோ' ரூ.10 கோடி அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், 1983 மார்ச்சில் ஓர் அரசு நிறுவனமாக அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தோல் தொழிலை மேம்படுத் துவதே இதன் நோக்கமாகும்.

சிறிய அளவில் தோல் பதனிடுவோருக்கு நிதியுதவி

சிறிய அளவில் தோல் பதனிடுவோருக்கு, நியாய விலையில் இரசாயனப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட பசைப்பொருள் (Wattle extract) ஆகியவை போன்ற பொருட்களை வழங்குவதற்காக திண்டுக்கல், ஈரோடு, பேரணாம் பட்டு, திருச்சி, வாணியம்பாடி, இராணிப்பேட்டை ஆகிய இடங் களில் டால்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான பொருட்கள் வங்கிகள் செயல்பட்டு வரு கின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் இதன் செயல்பாடு குறித்த விவரங்கள் வருமாறு

ஆண்டு	விற்பனை
ரூபாய்	இலட்சத்தில்
1991-92	86.62
1992-93	239.45
1993-94	257.82

பகுத்தறிவு

மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள்

-தந்தை பெரியார்

காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பில் ஈடு பட்டுள்ள சிறு கைத்திறப் பணி யாளர்களுக்கு நிதியுதவி

கைத்திறப் பணியாளர்களுக்கு உதவி புரிவதற்காக, பெரம்பூரில் செயல்பட்டுவரும் கொள்முதல் மையம் கடந்த மூன்றாண்டுகளில் கைத்திறப் பணியாளர்களிட மிருந்து வாங்கிய தோல் பொருட்களில் மதிப்பு விவரங்கள் வருமாறு:

ஆண்டு	பொருட்களின் மதிப்பு
	ரூபாய் இலட்சத்தில்
1991-92	1019
1992-93	17.68
1993-94	24.88

விற்பனைக் காட்சி அறைகள், பொருட்காட்சிகள் ஆகியவற்றில் செய்யப்பட்ட விற்பனை மதிப்பு, நிறுவனங்களுக்குச் செய்யப்பட்ட விற்பனை மதிப்பு ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு:

ஆண்டு	விற்பனை
	ரூபாய் இலட்சத்தில்
1991-92	37.05
1992-93	50.77
1993-94	48.26

கழிவு நீரைக் கட்டுப்படுத்து வதில் தோல் பதனிடுத் தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி அளித்தல்

தோல் பதனிடும் தொழிற் சாலைகள் வெளியேற்றும் கழிவு நீரால் தமிழ்நாட்டில் சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுவதைத் தடுப்பதற்காக 'டால்கோ' உதவி யுடன் கழிவுநீர் சுத்திகரிப்புக்கென பொதுவான சுத்திகரிப்பு நிலை யங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. 'டால்கோ' உதவி பெற்ற நிறு

வனங்கள் மூலம் வாணியம்பாடி, இராணிப்பேட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு, திண்டுக்கல், திருச்சி ஆகிய இடங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற் படுத்தப்பட்டு வருகின்றன.

இலவசமாகக் காலணிகள் வழங்கும் திட்டம்

பள்ளி செல்லும் குழந்தை களுக்கும், கிராமப்புறங்களில் பணிக்குச் செல்லும் மகளிருக்கும் இலவசமாகக் காலணி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் மைய அமைப்பாக 'டால்கோ' நியமிக்கப்பட்டுள்ளது. 'டால்கோ' வின் பங்காக 10 இலட்சம் இணை காலணிகளையும், 3 இலட்சம் இணை காலணிகள் தயாரிப்ப தற்கான மூலப்பொருட்களையும் 1993-94-ஆம் ஆண்டில் அளித் துள்ளது.

'டால்கோ'வின் ஆதாயம் இழப்புக் கணக்கு விவரங்கள்

'டால்கோ' கடந்த மூன்றாண்டுகளில் செய்த விற்பனை ஈட்டிய ஆதாயம் பற்றிய விவரங்கள் வருமாறு:

1991-92-இல் ரூ.993.18 இலட்சமாக இருந்த டால்கோவின் விற்பனை 1992-93-இல் ரூ.1018.88 இலட்சமாக உயர்ந்தது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

கடந்த மூன்றாண்டுகளில் இக்கழகத்தின் முக்கியப் பணிகளான அதாவது தொழில் நிதியுதவிக்காக அனுமதித்த தொகை, வழங்கிய தொகை, நிதியுதவி பெற்றவர்களிடமிருந்து வசூலித்தத் தொகை ஆகியவற்றில் காணப்பட்ட முன்னேற்றம் பற்றிய விவரங்கள் வருமாறு:

1991-92-இல் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொழில் நிதியுதவியாக அனுமதித்தத் தொகை ரூபாய் 236.09 கோடி. இதில் ரூபாய் 161.53 கோடி வழங்கப்பட்டு 110.22 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது. 1993-94-இல் இக்கழகம் அனுமதித்த 312 கோடி ரூபாயில் 198.52 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, இதில் 187.12 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது.

விற்பனைவரி செலுத்துவோருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அதனிடமிருந்து நிதியுதவி பெறுகின்ற தொழில் நிறுவனங்களுக்கு வட்டியில்லா விற்பனைவரிக் கடனை விற்பனை வரி தள்ளுபடியை விற்பனை வரியைத் தள்ளிவைப்பதற்கான சலுகைகளைப் பயன்படுத்தும் வகையில் சிறுதொழில் நிறுவனங் களுக்கு தகுதிச் சான்றிதழை 1.4.91-ஆம் நாளிலிருந்து வழங்க அதிகாரம் பெற்றுள்ளது. இப் பணியில் கடந்த மூன்றாண்டுகால செயல்பாடு பற்றிய விவரங்கள் வருமாறு:

1991-92-இல் இக்கழகம் 67 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.10.90 கோடி தொகையில் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கியது. 1993-94-இல் 132 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 28.71 கோடி தொகையில் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு சாதனை படைத்தது.

செயல்படுத்தப்பட்டு வருகின்ற புதிய திட்டங்கள்

1993 ஜனவரி திங்களில் சட்டமன்றப் பேரவையில் தொழிற்கொள்கை பற்றி உரை நிகழ்த்தியபோது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தபடி, ஓட்டல்கள், மருத்துவமனைகள் உட்பட தற்போதுள்ள சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்பிரிவு களை விரிவுபடுத்த, நவீனப்படுத்த, பணிகளைப் பலதிறப்படுத்த குறைந்த அளவாக 5 இலட்சம் ரூபாயிலிருந்து அதிக அளவாக 250 இலட்சம் ரூபாய் வரை நிதியுதவி அளிப்பதற்காக, இக்கழகம் ஒப்பந்த உரிமை நிதியுதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 1993-94-ஆம் ஆண்டில் நமது அரசு 10 தொழில் நிறுவனங்களுக்கு 440.40 இலட்சம் ரூபாய்க்கு அனுமதியளித்துள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் பெறுவோருக்கும் கழகத்திற்குமிடையே தோழமை உறவு நிலவுவதற்கான நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, கடன்பெறுவோர் ஒவ்வொருவருக்கும் கடன் நிருவாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுகிறார். மாதத்திற்கு ஒரு முறையாவது தொழில் நிறுவனத்தைப் பார்வையிட்டு, கழகப் பிரதிநிதியாகச் செயல் பட்டு அவற்றின் பிரச்சினை களைத் தீர்த்து வைப்பதுடன், அத்தொழில் நிறுவனங்களில் எந்த பிரச்சினையும் தொடக்க நிலை யில் இருக்கும்போதே கழகத்திற்கு அதுபற்றி எச்சரிக்கை விடுக்கிறார்.

பட்டு வளர்ச்சித் துறை

சமுதாயத்தில் நலிந்த பிரி வினருக்குக் கூடுதல் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற் காகக் கிராமப் புறங்களில் கிராமத் தொழில்களையும், சிறுதொழில்

■ எங்கள் பயணம் தொடர் கிறது; பணிகள் துரிதப்படுத்தப் படுகின்றன. எதிர்ப்பட்ட மிரட்டல்களையும் உருட்டல் களையும் தவிடுபொடியாக்கித் தகர்த்து எறிந்துதான் கழக ஆட்சி மக்களாட்சியாக மலர்ந்திருக் கிறது.



சிட்கோ வளர்ச்சிப் பணிகள்

சிறுதொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளை உருவாக்குதல்

அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய பல்வேறு அளவுகளில் தொழிற்கூடங்கள் மற்றும் சீர்செய்த மனைகள் வழங்குவது, இந்நிறுவனத்தின் மிக முக்கியமான பணியாகும். பல்வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்து மேலும் தேவை குறித்த ஆய்வினை மேற்கொண்டும், அவற்றில் தொழில் வளர்ச்சி மையங்களை மேப்படுத்துகிறது. தற்போது புதிய திட்டமாகத் தனியார் தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்கள் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது.

புரட்சித்தலைவி மின் அணுவியல் தொழில் வளாகம்

கிண்டி தொழிற்பேட்டையில் மின் அணுவியல் தொழிற் பிரிவுகளை மட்டுமே அமைப்பதற்காக ஐந்து ஏக்கர் நிலத்தில் மூன்று பலமாடிக் கட்டடங்களில் ஒவ்வொன்றும் 1000 ச.அடி அளவுள்ள 120 பிரிவுகள் அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டு 40 பிரிவுகள் கொண்ட தொழில் வளாகங்கள் இரண்டு தொகுதி (I - II) கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இதற்குரிய மொத்த திட்டச் செலவு சுமார் ரூ.4.50 கோடி ஆகும். 8000 பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெறுவர். இதில் 50 சதவிகிதத் தொழில் நுட்பத் தகுதி பெற்ற மகளிர் பயன் பெறுவர்.

ஆயத்த ஆடைகள் தயாரிப்புத் தொழில் வளாகம், கிண்டி.

கிண்டித் தொழிற்பேட்டையில் சுமார் 1.50 ஏக்கர் பரப்பில், ஆயத்த ஆடைகள் தயாரிப்பு வளாகம் கட்டும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஒவ்வொரு மாடியிலும் 16 பிரிவுகள் இருக்கும். நான்கு மாடிகள் கொண்ட கட்டடமாகும் இந்த வளாகம். மொத்தம் 64 பிரிவுகள் கொண்ட இக் இக்கட்டடம் கட்டும் பணி 1994 செப்டம்பருக்குள் முடிக்கப் படும். மொத்த திட்டச்செலவு ரூ.3.80 கோடி ஆகும். 4000 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளிக்கும்.

உயர் தொழில் நுட்பத் தொழிற்பேட்டைகள் திட்டம்

'சிட்கோ' நிறுவனம் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'அயல்நாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதி' யிலிருந்து 'யென் கடன்வசதி' யைப் பெற்று திருப்பூரில் பின்னலாடைத் தயாரிப்புத் திட்டத்தைச் செயலாக்குவதைப் பொறுத்தவரை வெளிநாட்டிலிருந்து எந்திரங்களை இறக்குமதி செய்யும் பணி முடிக்கப்பட்டு 1994-95-இல் இப்பிரிவுகள் உற்பத்திப் பணியைத் தொடங்கும்.

சென்னை அருகில் பதப்படுத்தப் பட்ட உணவு தயாரிப்பு, மோட்டார் வண்டி துணைப் பாகங்கள் தயாரிப்பு ஆகிய இரு திட்டங்களுக்கான ஆரம்பப் பணி 1994-95-இல் முடிக்கப்படும்.

ஏற்றுமதி

தமிழ்நாடு அரசின் பரிந்துரையின் அடிப்படையில், 'சிட்கோ' நிறுவனத்தை ஒரு ஏற்றுமதி இல்லமாக, மத்திய அரசு அங்கீகரித்துள்ளது. சிறுதொழில் நிறுவனங்கள் அவற்றின் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் உதவி செய்வதே இதன் நோக்கமாகும்.

தொழிற்பேட்டைத் திட்டங்கள்

தொழிற்பேட்டைகளை அமைக்க

புதிய இடங்களைக் கண்டறிய அமைக்கப்பட்ட தொழிற்பேட்டைத் திட்டப் பிரிவு எய்திய கடந்த மூன்றாண்டுக்கால மற்றும் நடப்பாண்டுச் சாதனைகளாக, 1991-92-இல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டைகள் 4 ஆகும். 1993-94-இல் இதன் எண்ணக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குரிய உதவித் திட்டம்

சிட்கோ நிறுவனம் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவி செய்யும் திட்டத்தின்கீழ் அரசுத் துறைகளும், நிறுவனங்கள் வெளியிடும் ஒப்ப அறிவிப்புகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்பி அவற்றிடமிருந்து தேவைக்குறிப்புகளைப் பெற்று அவை சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது.

தவணைக் கொள்முதல் வாடகைத் திட்டம்

சிட்கோ நிறுவனம், 1993 – ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து, எந்திரங்களைத் தவணைக் கொள்முதல் முறையில் வாங்கும் திட்டத்தையும், சாதனங்களை வாடகைக்கு விடும் திட்டத்தையும் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. இந்தியச் சிறுதொழில் வளர்ச்சி வங்கி SIDBI சிட்கோ நிறுவனத்திற்கு இதற்கெனக் குறித்த காலக் கடனாக ரூ.100 இலட்சம் வழங்கியுள்ளது.

'சிட்கோ'வின் ஒட்டுமொத்த சாதனை

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் சிட்கோ நிறுவனத்தின் சாதனை, சிறப்பாகவும், வியக்கத்தக்கதாகவும் உள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.108.92 கோடியாக இருந்த இதன் விற்பனைத் தொகை 1992-93-ஆம் ஆண்டில் ரூ.115.70 கோடியாக உயர்ந்து, 1993-94-ஆம் ஆண்டில் ரூ.200 கோடியைத் தாண்டியது. 1993-94-ஆம் ஆண்டில் இதன் சாதனை ரூ.261.67 கோடியாகும்.

> **தொண்டு**
>
> உங்களுக்குத் தொண்டு புரிவதைவிடப் பெரியதோர் அறம் இல்லை.
>
> -சுவாமி விவேகானந்தர்

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்:

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் (டான்சி) 1991-92-ஆம் ஆண்டுச் சாதனை

டான்சி நிறுவனம் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் ஏற்படுத்தப்பட்ட 64 சிறுதொழில் பிரிவுகளைத் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு 1965-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

1991-ஆம் ஆண்டு அக்டோபரில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் டான்சியின் செயல்பாட்டையும், பிரச்சினைகளையும் ஆய்வு செய்து, இந்நிறுவனத்தின் செயல்பாட்டை மேம்படுத்த ஆணைகள் பிறப்பித்தார். டான்சி நிறுவனம் கீழ்க்கண்ட முக்கியமான பணி ஆணைகளை நிறைவேற்றியது.

மாநிலம் முழுவதற்கும், ரூ.370 இலட்சம் மதிப்புடைய ஆழ் கிணறு, [illegible]புகளும், உதிரிப் பாகங்களும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு 17,000 வாக்குப் பெட்டிகள் வழங்கப் பட்டன.

நுண்ணலைத் திட்டம், தொலைத் தொடர்புத் துறை இயக்குநருக்கு 2081 மெ.டன் எடையுள்ள துத்தநாகம் பூசப் பட்ட தாங்கு உருக்குக் கோபுரங்கள் கட்டமைத்து வழங்கப் பட்டன.

மேற்கு இரயில்வே துறைக்கு 330 மெடன் எடையுள்ளகோபுரக் கட்டுமானங்கள் வழங்கப்பட்டன.

சென்னை-பெருநகர் இரயில்வே துறைக்குத் துத்தநாகம் பூசப்பட்ட 532 மெ.டன் எடையுள்ள கட்டுமானங்கள் கட்டமைத்து வழங்கப் பட்டன.

பெங்களூர் ஐ.டி.ஐ. நிறுவனத்திற்கு 45 மெ.டன் எடையுள்ள நுண்ணலைக் கோபுரங்கள் நிறுவப்பட்டன.

ஹெச்.எம்.டி. இண்டர்நேஷனல் நிறுவனத்தின் மூலம் அல்ஜீரியா நாட்டிற்கு எழுபத்தெட்டு எச்.எஸ்.30 பவர் ஹாக்சா எந்திரங்களையும், ஐந்து எச்.எஸ்.20 பவர் ஹாக்சா எந்திரங்களையும் ஏற்றுமதி செய்தது.

1992-93-ஆம் ஆண்டில் எய்திய சாதனை

அரசு எடுத்த தீவிர நடவடிக்கையினால் டான்சி நிறுவனத்தின் செயல்பாடு மேம்பாடு அடைந்து, 1991-92-இல் ரூ967.21 இலட்சமாக இருந்த இந்நிறுவனத்தின் இழப்பு, ரூ.1992-93-ஆம் ஆண்டில் ரூ.240.12 இலட்சமாகக் குறைந்தது.

அ. சென்னைத் தொலைத் தொடர்பு நுண்ணலைத் திட்டத் துறைக்கு 1360 மெ.டன் எடையுள்ள தாங்கு நுண்ணலைக் கோபுரங்கள் கட்டமைத்து வழங்கப்பட்டன. மேலும் ஆண்டனா பொருத்துச் சாதனங்களும் கம்பங்களும் கட்டமைத்து வழங்கப்பட்டன.

ஆ. வட சென்னை அனல்மின் நிலையத்திற்குக் 1741 மெ.டன் எடையுள்ள உருக்குக் கட்டுமானப் பணிகளைக் கட்டமைத்து வழங்கி நிறுவியது.

இ. தென்னக இரயில்வேக்கு 250 மெ.டன் எடையுள்ள நுண்ணலைக் கோபுரப் பாகங்கள் கட்டமைத்து வழங்கப்பட்டது.

ஈ. தமிழ்நாடு வடிகால் வாரியத்

அளப்பரியன.

கூரிய தொலைநோக்கு,

மிகச் சரியான திட்டமிடல்,

உழவர் சமுதாயத்தின்பால் மாறாப் பற்று ஆகியவையே

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்

வேளாண் துறையில் விளைவித்துள்ள சாதனைகளுக்கு விதைநெல்லாகும்.

வேளாண் துறையைப் பொறுத்தவரை-

இயற்கைச் சீற்றங்கள்,

இறையாண்மையைக் காக்கத் தவறிய எதிரிகள் கொடுத்த இன்னல்கள்,

அனைத்தையும் கடந்து-

இல்லையென்ற சொல்லைத் தமிழகத்தே இல்லையென்று ஆக்கி-

உணவுப்பொருள் உற்பத்தியில் மாநிலம் உயர்ந்து நிற்பது மகத்தான சாதனை!

1991-ஆம் ஆண்டுக்கு முன்,

60 இலட்சம் மெடன் அளவாகத் தேங்கிநின்ற அரிசி உற்பத்தி

70 இலட்சம் என முதல் ஆண்டும், மறு ஆண்டு 74 இலட்சம் எனவும்,

மூன்று ஆண்டுகளில் 84.50 இலட்சம் மெடன்னாக உயர்ந்து நிற்கிறது.

90.45 இலட்சம் மெடன்னாக இருந்த மொத்த உணவு

தானிய உற்பத்தியும்

புரட்சித்தலைவி அவர்களது அரசு தந்த திட்டங்கள்

மற்றும் ஊக்கத்தால்

படிப்படியாக உயர்ந்து,

சாதனை அளவாக

103 இலட்சம் மெடன்னாகச் சரித்திரம் படைத்திருக்கிறது.

உற்பத்தி மட்டுமல்லாது, உற்பத்தித் திறனையும் கூட்டி

இந்திய வேளாண் அரங்கில்

தமிழகம் தலைநிமிர்ந்து நிற்பது

டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில்தான்!

இந்திய அளவில் அரிசி உற்பத்தித் திறனில் தமிழகம்

'நான்கு' என்ற நிலையிலிருந்து

இரண்டாவது நிலைக்கு உயர்ந்திருப்பது பெருமைக்குரியது.

கரும்பு உற்பத்தித் திறன்,

எண்ணெய்வித்து மற்றும் சிறு தானியங்கள் ஆகியவற்றில்

இந்திய அளவில் முதல் இடத்தில் இருப்பது

எண்ணி எண்ணி மகிழக்கூடியது.

92-93ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட

'எண்ணெய்ப் பனைச் சாகுபடித்' திட்டத்தின் கீழ் இதுவரை

☐ காவிரி நதிநீர்ப் பிரச்சினை, தமிழ் நாட்டின் ஒவ்வொரு தனிமனிதனின் பிரச்சினை ஆகும்.

'காஸ்டாரிக்கா'விலிருந்து 7 இலட்சம் முளைவிட்ட பனங்கன்றுகள்

இறக்குமதி செய்யப்பட்டு,

நமது மாநிலப் பண்ணைகளில் வளர்த்து,

93-94-இல் 1,671 எக்டர் நிலப்பரப்பில்

எண்ணெய்ப்பனைச் சாகுபடி செய்யப்பட்டது.

94-95-இல் 2,000 எக்டர் நிலப்பரப்பில்

சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு

முனைப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக மக்களுக்கும் வேளாண் சமூகத்திற்கும்

டாக்டர் புரட்சித்தலைவியின் அருட்கொடையாகும் இத்திட்டம்.

திட்டங்களும் தொழில்நுட்பங்களும் நிலங்களைச்

சென்றடைய

வேளாண் மகளிர்க்குப் பயிற்சி அளித்தலே

நிலையான பயன்தரும் என்று கருதி,

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்

வேளாண்மையோடு, வேளாண் பெண்டிர்

முன்னேற்றத்திற்காக

'பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தைச்'

செயல்படுத்தி உள்ளார்கள்.

இதில் ஒரு இலட்சம் பண்ணை மகளிர் பயிற்சி

பெறுகின்றார்கள்.

மொத்தம் 28.735 கோடி ரூபாய் செலவில்

செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தினால்

பயன்பெற்ற மகளிர்,

தான் பெற்ற பயிற்சியைப்

பிற பண்ணை மகளிரொடு பகிர்ந்துகொள்ளும் போது

நவீன தொழில்நுட்பங்களும்,

சிறந்த திட்டமிடுதலும்,

சரியான நிர்வாகமும்

வயல் வரை சென்று தமிழகத்தை வளமாக்கும் என்பது திண்ணம்.

இதுவே புரட்சித்தலைவி அவர்களது எண்ணம்!

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது',

'ஆளுமைக்கு அடித்தளம் ஆரம்பக் கல்வி'

என்பதனை உணர்ந்த இதயதெய்வம் டாக்டர்

புரட்சித்தலைவி அவர்கள்

பள்ளிச் சிறார்களின் கவனத்தை வேளாண்மையின்பால்

ஈர்க்கவும்,

பசுமையை வளர்க்கவும்,

சுற்றுச் சூழல் காக்கப்படவும்,

'புரட்சித்தலைவி தென்னை வளர்ப்புத் திட்டத்தை'

92-93-இல் அறிமுகப்படுத்தினார்கள்.

ரூபாய் 15 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ்

96,800 தென்னங்கன்றுகள்

ஆறாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கு

இலவசமாக வழங்கப்பட்டன.

93-94-இல் 1.50 இலட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

94-95-இல் 4,00,000 தென்னங்கன்றுகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இன்னும் ஈராண்டுகளில்

மாணாக்கர்களின் மனதில் மட்டுமல்லாது

தென்னை உற்பத்தியிலும் இது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது

உள்ளங்கை நெல்லிக்கனி.

மனங்களோடு நிலங்களையும் பண்படுத்த,

'நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டு அடங்கல் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ்

வ.உ.சிதம்பரனார் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களில்



களையும் ஊக்குவிப்பதே இந்த அரசின் முக்கியக் கொள்கை யாகும். பின்வரும் தனித் தன்மை களினால் பட்டு வளர்ச்சி மேம் பாடு குறித்து அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது:

1. குறைந்த முதலீடு.

2. அதிக வேலைவாய்ப்பு உண் டாக்கும் திறன்.

3. வருவாயைப் பகிர்ந்தளித்தல்.

4. ஊரக வளர்ச்சி.

5. அதிக அளவில் பெண்களை ஈடுபடுத்துதல்.

6. நகர்புற நாட்டம் குறைக்கப் படுகிறது.

7. அந்நியச் செலாவணியை ஈட்டுதல்.

பட்டு வளர்ச்சித் துறையின் நடவடிக்கைகளில் பின்வருவன வும் அடங்கும்:

1. உயர்ரக முசுக்கட்டைச் செடி வகைகளை • நடுவதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல், அதிக உற்பத்தியின் மூலம் வருவாயை அதிகரித்தல்.

2. முசுக்கட்டைச் சாகுபடி பட்டுப்புழு வளர்ச்சி மற்றும் பட்டு நூல் நூற்பு ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்.

3. பட்டுப்புழு வளர்ப்பிற்குத் தேவையான சாதனங்களை வாங்குதல் மற்றும் பட்டுப்புழு வளர்க்கும் புழு வளர்ப்பு மனைகளைக் கட்டுதல் ஆகிய வற்றிற்கு உதவி செய்தல்.

4. பட்டுப்புழுக் கூட்டின் உற்பத்தியினை அதிகரிக்க பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உத வியை வழங்குதல், பட்டுப் புழுக் களுக்கு உண்டாகும் நோயைக் கட்டுப்படுத்தி அறுவடை பழு தடைவதைத் தவிர்த்தல்.

5. நல்ல தரம் வாய்ந்த நோயற்ற பட்டுப்புழு முட்டைகளை விநியோகிக்க உதவி செய்தல்.

6. தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைகளில் பட்டுநூல் நூற்பதை அதிகரித்தல்.

ஏல முறை விற்பனையை அமல்படுத்துவதன் மூலம் பட்டுப்புழுக் கூடுகள் மற்றும் பட்டு நூல் ஆகியவற்றிற்கு நியாயமான விலை கிடைக்க வழிவகை செய்தல். 1979-ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் துறை தனியாக ஏற்படுத்தப்பட்ட பின்னர், இத்துறையில் சிறந்ததொரு முறையான மற்றும் நிலையான வளர்ச்சியை எய்துவதற்காகப் பல கூடுதல் அடிப்படை வசதிகளான விதைப் பண்ணைகள், பட்டு வித்தகம், பட்டுக்கூடு அங்காடிகள், தொழில் நுட்பப் பயிற்சி மையங்கள், பட்டு பரிமாற்றகம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இத்தொழில் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகளின் வளர்ச்சியை விரைவுபடுத்த கூடுதல் நிதி திரட்டும் பொருட்டு உலக வங்கி, சுவிஸ் மேம்பாட்டு நிறுவனம், பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி நிறுவனம், ஃபோர்டு பவுண்டேஷன், பன்னாட்டுத் தொழிலாளர் நல நிறுவனம் போன்ற பல்வேறு வெளி முகவரமைப்புகளிடமிருந்து நிதியுதவி பெற்று பல திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப் பட்டன. குறிப்பிட்ட பகுதி களிலுள்ள பிரச்சினைகளைச் சமாளிக்கும் பொருட்டும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகுதியினருக்கு அதிக வருவாய் ஈட்டித் தரவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம் பாட்டுத் திட்டங்கள், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மைத் துறையின் வியத்தகு சாதனை!

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
திரு கு.ப. கிருஷ்ணன்

வரலாற்றின் பொன்னேடுகளில் வைர வரிகளாய் மிளிர்ந்து
தொடர்ந்து கொண்டிருக்கிறது,
புதுயுகம் படைக்க வந்த புரட்சித்தலைவி அவர்களது ஆட்சி!
ஒட்டு மொத்த மக்களின் உற்சாகம் ததும்பும் ஆதரவோடு
முடிவின்றித் தொடரவிருக்கும்
புரட்சித்தலைவி அவர்களது ஆட்சியின் முதல்
மூன்றாண்டுகள்
இனிதே நிறைந்திருக்கின்றன.
கால யாத்திரையின் நெடும்பயணத்தில்
'சாதனைகளைப் படைத்தவர்களே நினைவில்
நிறைந்திருப்பவர்' என்பது
வரலாற்று உண்மை மட்டுமல்ல; வாழ்க்கையின்
நிதர்சனமும் ஆகும்!
துறைதோறும், தினந்தோறும், புதிது புதிதாய்-
பெருமை நிறைவாய்ச்-
சாதனைச் சரித்திரம் நிகழ்த்திவரும் புரட்சித்தலைவி
அவர்களது புகழ்
புவியினில் என்றென்றும் பேசப்பட,
இம் முதல் மூன்றாண்டுக் காலத்தில்
வித்தூன்றப்பட்டுள்ளது என்பது
உண்மையன்றோ?
தனித் தனியாய்த்-தீவுகளாய்த்-திட்டங்கள் இருந்து விடாமல்,
ஒட்டுமொத்த மக்கள் நலம்,
உற்பத்திப் பெருக்கம்,
சுயச் சார்பு முதலியன இணைந்த தொலைநோக்கும்,
துல்லியமும்,
செயலாக்கத் திறனும்,
சோர்வுறா உழைப்பும்
புரட்சித்தலைவி அவர்களது ஆட்சியின் மாட்சிக்கு
அடிப்படை.
அதனடிப்படையில்-
சரித்திரத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் சாதனைகளைத்
தமிழகத்தில் நிகழ்த்திவரும்
டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான அரசு
கடந்த மூன்று ஆண்டுகளில் நிகழ்த்தியுள்ள சாதனைகள்
போற்றிப் பெருமைப்படத் தக்கவை.
குறிப்பாக,
வேளாண் துறையில் விளைவித்துள்ள சாதனைகள்

வளம் குன்றிய 17,500 எக்டர் நிலத்தை வளமாக்கும் பணி
ரூபாய் 625 இலட்சம் செலவில்
மூன்று ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
இதுபோன்று ரூபாய் 75 இலட்சம் செலவில்
தமிழகத்தின் எட்டு மாவட்டங்களில்
91-92-இல் செயல்படுத்தப்பட்ட 'கறம்பு நில மேம்பாட்டுத் திட்டம்'
தொடர்ந்து செயலாக்கப்பெற்று
இதுவரை 25,814 எக்டர் நிலப்பரப்பு
சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட்டு உள்ளது.
இத்தனைத் திட்டங்களும் ஒருபுறம் செயல்பட்டுக் கொண்டிருக்க
புயலும் வெள்ளமும் நம்மை
மறுபுறம் சீண்டிப் பார்த்தன.
1991 நவம்பரில் புயலால் பாதிக்கப்பட்டபோது
0.06 இலட்சம் எக்டர் பரப்பில் இருந்த பயிர்கள்
முற்றிலுமாக அழிந்தன.
1.28 இலட்சம் எக்டர் பரப்பில் இருந்த பயிர்களில்
ஒரு பகுதி சேதமடைந்தது.
உழவர் துயர் கண்ட உன்னதத் தாய்
புரட்சித்தலைவி அவர்கள்
போர்க்கால அடிப்படையில் உழவர்க்கு உதவிடப் பணித்து,
ரூபாய் 9.336 கோடியைத் தாராளமாக ஒதுக்கினார்.
தொடர்ந்து,
1992 நவம்பர் இரண்டாம் வாரத்தில் தாக்கிய புயல் மற்றும் வெள்ளம் காரணமாகக்
கடலோர மாவட்டங்களில் உள்ள
2.3 இலட்சம் எக்டர் பரப்பிலிருந்த பயிர்களுக்குப்
பெருத்த சேதம் விளைந்தது.
இதனால் ஏற்பட்ட இழப்பு
ஈடு செய்யப்பட

தாயுள்ளங்கொண்ட புரட்சித்தலைவி அவர்கள்
ரூபாய் 86.55 இலட்சம் அனுமதித்து
ஏறத்தாழ ஒரு இலட்சம் தமிழக விவசாயிகளின் வயிற்றில்
பால் வார்த்தார்கள்.
இதனைப் போன்றே
1993 நவம்பர் மற்றும் டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தாலும் புயலாலும்
2.13 எக்டர் பரப்பு பாதிக்கப்பட்டது.
நிவாரண நடவடிக்கைகளுக்காக ரூபாய் 1,294.272 இலட்சம்
டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால்
அனுமதிக்கப்பட்டதால்,
வீழ்ந்த உழவர்தம் விழிநீர்த் துடைக்கப்பட்டு
வேளாண் பணிகள் மீண்டும் விரைந்து நடக்க
வழிவகை செய்யப்பட்டது.
வேளாண் பயிர்கள் விளைக்கும் விளைவோடு
தோட்டக்கலைப் பயிர்களும் சேர்ந்தால்
சேரா வளங்கள் நாட்டில் இல்லை என்றுணர்ந்த
டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்
தோட்டக்கலை மேம்பாட்டிற்குத்
தனிக் கவனம் செலுத்தினார்கள்.
பசுமை நிறைக்க
பாரினில் தமிழகம் சிறக்க
தரிசு நில மேம்பாடு தவிர்க்க இயலாதது என்பதால்,
'தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்'
தமிழகத்தில் தனிச் சிறப்போடு செயல்படுத்தப்பட்டு,
தோட்டக்கலைத் தரிசு நிலங்கள்
பசுமை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது.
விளைபொருள் உற்பத்தியில் சாதனை புரியப்பட்டது.
1991-92-ஆம் ஆண்டில் 31.5 இலட்சம் மெட்ன்னாக இருந்த
பழங்கள் உற்பத்தி

93-94-இல் 35 இலட்சம் மெட்ன்னாக உயர்த்தப்பட்டது.
1991-92-இல் 74.27 இலட்சம் மெட்ன்னாக இருந்த
மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி
93-94இல் 77.68 இலட்சம் மெட்ன்னாக உயர்த்தப்பட்டது.
சாகுபடிப் பரப்பும் கணிசமாக உயர்ந்தது.
களையிழந்த கோயில்களைக் கலை மிளரச் செய்த
டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்
ஆகம நியமங்களோடு, ஆலய விருட்சங்களும் செழிக்க
வேண்டும் என விரும்பி,
திருக்கோயில் நந்தவனம் அமைக்கும் திட்டத்தைச்
செயல்படுத்தினார்கள்.
திட்டத் துவக்கத்தில் இருந்து
தேர்ந்தெடுக்கப்பட்ட 66 திருத்தலங்களில்
பெரும்பான்மையான தலங்களில்
நந்தவனப் பணி முடியப்பெற்று
அழகுக்கு அழகு சேர்த்துக் கொண்டிருக்கின்றன.
மற்ற திருத்தலங்களிலும் பணி நிறைவுறும் நிலையில் உள்ளது.
நிலத்தைப் பண்படுத்தல், மனத்தைத் திடப்படுத்தல்
ஆகியவற்றோடு
நீர் நிர்வாகம் சிறப்பாக இருந்தால்தான்
வேளாண்மை சிறக்கும் என்பதால்
வேளாண் பொறியியல் துறையின் மூலமாக அரசு
பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.
சிறப்புத் தன்னிறைவு திட்டம்,
ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம்
உழவர்களின் ஒத்துழைப்போடு
நீர் நிர்வாகப் பணிகள்,
சிக்கனமாக நீரைப் பயன்படுத்தும் திட்டங்கள்
செயலாக்கம் பெற்று

சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளன.
இதனைக் கருத்திற்கொண்டு,
நுண் பாசன முறைக்கு முக்கியத்துவம் அளித்து
சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனத்திற்காக
92-93-ஆம் ஆண்டு ரூபாய் 187.50 இலட்சம்
உதவித்தொகையாக
வழங்கப்பட்டது.
இதனால் 7,500 எக்டர் பரப்பு பாசன வசதி பெற்றது.
93-94-இல் ரூபாய் 195 இலட்சம் உதவித்தொகை
வழங்கப்பட்டு
தரிசு நிலங்களில் தோட்டக்கலைப் பயிர்கள் விளைவிக்க

1993 ஆம் ஆண்டு கால்நடைப் பராமரிப்புத்துறை நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அகில இந்தியக் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சி 21.9.93 முதல் 27.9.93 வரை நடத்தப்பட்டன. கண்காட்சித் தொடக்க விழாவில் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பறவைகளுக்குத் தொற்று நோய்த் தடுப்பு ஊசி மருந்தை வெளியிட்டார்கள்.

இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் வெளியிடப்பட்ட கோழியினத் தடுப்பூசித் திட்டத்தின் கீழ் 42,000 தடுப்பூசி அலகுகள் தயாரிக்கப்பட்டு கோழிகளுக்குப் போடப்பட்டது.

பால்வளத்துறை

இத்துறை, அத்துறை என்று இல்லாது எத்துறையிலும் தனது பொன் முத்திரை பதித்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவியின் ஆட்சியிலே பால்வளத்துறை புரிந்திட்ட சாதனைகளைப் பட்டியல் போட்டுச் சொல்லலாம்.

எத்திசையிலும் புகழ் பரப்பி, ஏற்றமிகு ஆட்சி புரிந்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆசிகளோடு இன்றைக்கு ஏறத்தாழ 21 இலட்சம் விவசாயப் பெருமக்கள் பால் பண்ணைத் துறையில் பயன்பெறும் வகையில் ஈடுபட்டு வருகிறார்கள். பாலுக்குத் தட்டுப்பாடு என்பதே பழங்கதை ஆகிப் போய்விட்டது. ஒரு பக்கம் உற்பத்தியாளர் மனம் மகிழும் வண்ணமும், இன்னொரு பக்கம் பால் நுகர்வோர் முழு மன நிறைவு அடையவும் பால் பெருக்கத் திட்டங்கள் தமிழ்நாட்டில் எல்லோரும் பாராட்டும் வண்ணம் இனிதே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பால் கொள்முதல்

1993-94 ஆம் ஆண்டு வாக்கில் பால் கொள்முதலில் ஒரு உத்வேகம் உண்டாயிற்று. 1991-92-இல் பால் கொள்முதல் நாள் ஒன்றுக்கு

11.36 இலட்சம் லிட்டர் ஆகவும் 1992-93 ஆம் ஆண்டு நாள் ஒன்றுக்கு 11.83 இலட்சம் லிட்டர் ஆகவும் உயர்ந்தது. புரட்சித் தலைவியின் வழிகாட்டுதலோடு கிராமப் புறங்களிலே விரிவான முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டும் உற்பத்தியாளர் மனதிலே நம்பிக்கை தோற்றுவித்தும், பால் கொள்முதல் பணப் பட்டுவாடாவை விரைவுபடுத்தியும், நல்ல கொள்முதல் விலையைக் கொடுத்தும், புதிய கால்நடைகளை இத்துறையில் மேலும் வருவதற்கு ஏற்பாடு செய்தும், பால் பெருக்குத் துறை வலிமைப்படுத்தப்பட்டு கூட்டுறவுப் பால் பண்ணைத் துறையின் கொள்முதல் 1993-94-ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 14.34 இலட்சம் லிட்டராக உயர்ந்தது. தமிழகத்தின் வரலாற்றிலேயே இல்லாத வகையில் இன்று பால் கொள்முதல் நாள் ஒன்றுக்கு 17 இலட்சம் லிட்டராக உயர்ந்து உள்ளது என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஒப்புயர்வற்ற ஆட்சித் திறமைக்குச் சான்றாக அமைகிறது.

பால் விற்பனை

பால் பெருக்குப் பணியில் ஏற்பட்ட சிறப்பான முன்னேற்றம் காரணமாக விற்பனைத் துறையிலும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியிலே புதிய சாதனையை நிகழ்த்தி வருகிறது. 1992-93 ஆம் ஆண்டில் சராசரி விற்பனை நாள் ஒன்றுக்கு 12.31 இலட்சம் லிட்டராக இருந்தது. இதை இந்த ஆண்டு சராசரி நாள் ஒன்றுக்கு 12.73 இலட்சம் லிட்டராக விரிவடைந்து இருக்கிறது. பால் விற்பனை இன்றைய தேதியில் நாள் ஒன்றுக்கு 13.36 இலட்சம் ஆக இருக்கிறது.

கொள்முதல் விலை மற்றும் விற்பனை விலை

பால் உற்பத்திக்கு, நல்ல கொள்முதல் விலை தேவை என்பதை உணர்ந்த இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் 1.5.92 மற்றும் 1.5.93 முதல் பால் கொள்முதல் விலையை உயர்த்தி பால் உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்தார்கள். நகர்ப்புற மக்களின் நலன்களை மனதில் கொண்டு இந்த அரசு கொள்முதல் விலையை இரண்டு முறை உயர்த்தியும் விற்பனை விலையை ஒரு முறைதான் 1.7.93 முதல் உயர்த்தியது. பாலிதின் பைகளில் லிட்டருக்கு ரூ.7 ஆகவும், தானியங்கி விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் பால் லிட்டர் ரூ.7.50 ஆகவும் இன்று விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில், பால் விற்பனை விலை இன்றைக்கும் தமிழ்நாட்டில் மிகக் குறைவு என்பது குறிப்பிடத் தக்கது.

பால் பொருட்கள்

ஆவின் பால் பொருட்கள் விற்பனை புது டெல்லியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆமதாபாத், டில்லி, பம்பாய், கல்கத்தா, பெங்களூர், ஐதராபாத், ஜோத்பூர் மற்றும் அந்தமான், போர்ட்பிளேயர் ஆகிய இடங்களில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்ய முகவர்கள் நியமிக்கப்பட்டனர். ஆவின் பால் பொருட்களுக்குத் தனி மதிப்பும் வரவேற்பும் எங்கும் தரப்படுகின்றன.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டம்

ரூபாய் 88.25 கோடி மூலதனத்தில் மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு, இது தமிழ்நாடு எங்கிலும் பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் கூட்டுறவுத் துறையில் புதிய கால்நடைகளைக் கொணரவும், புதிய கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கவும் பால் குளிரூட்டும் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகளைப் பெருக்கவும், சென்னை மற்றும் மாவட்டங்களில் பால் விற்பனையை வலுவாக்கவும் வகை செய்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில் நாள் ஒன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய பதன ஆலை ஒன்று 24.08 கோடி மூலதனத்தில் உருவாகி வருகிறது.

பெரியார் மாவட்டம் ஈரோட்டில் நாள் ஒன்றுக்கு 30 டன் பால் பொடி தயாரிக்கும் ஆலை ஒன்று ரூ.9 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த ஜூலை 1993 முதல் செயல்படத் தொடங்கி உள்ளது. பால் குளிரூட்டும் நிலையமும் அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையமும் விரிவாக்கப்பட்டுள்ளன. பால் பதன ஆலையின் திறன் 1 இலட்சம் லிட்டரிலிருந்து 1.50 இலட்சம் லிட்டர் கொண்டதாக உயர்த்தப்பட்டுள்ளது.

திருச்சியில் நாள் ஒன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டர் பக்குவப் படுத்தும் பால் பதன ஆலை ஒன்று துரிதமாகக் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. விழுப்புரத்தில் உள்ள பால் பண்ணை நாள் ஒன்றுக்கு 0.50 இலட்சம் லிட்டர் திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டு ஏப்ரல் 1994 முதல் செயல்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பால் குளிரூட்டும் திறன் கொண்ட குளிரூட்டும் நிலையம் ஒன்று செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் உள்ள சானூரிலும், மற்றொன்று வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள கோடக்கல்லிலும் உருவாகி வருகிறது. மூன்றாவது பால் பெருக்குத் திட்ட முடிவில் இப்போது இருக்கும் பால் பக்குவப்படுத்தும் வசதிகள் நாள் ஒன்றுக்கு 16.88 இலட்சம் லிட்டரில் இருந்து 26.87 இலட்சம் லிட்டராக உயர இருக்கிறது.

அதேபோல் குளிரூட்டும் வசதிகள் நாள் ஒன்றுக்கு 7.34 இலட்சம் லிட்டரிலிருந்து 11•0.6 இலட்சம் லிட்டராக உயர இருக்கிறது.

பால் பெருக்குத் திட்டம் அமலில் இல்லாத திருநெல்வேலி-கட்டபொம்மன், காமராசர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பால்வளத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டங்களின் கீழ் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து ஒரு இலட்சம் லிட்டர் ஆக திருநெல்வேலியில் பண்ணை விரிவாக்கம் செய்யப்படுகிறது. மேலும், ஸ்ரீவில்லிப்புத்தூரில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் பக்குவப்படுத்தும் திறன் கொண்ட பதன ஆலை ஒன்று அமைக்கப்பட உள்ளது.

பால் உற்பத்தியில் கடந்த மூன்று ஆண்டுகளில் திருப்திகரமான முன்னேற்றம் கண்டு, பால் பெருக்குப் பணிகள் தெளிவான இலக்கை நோக்கிச் செல்கின்றன. மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின் முடிவில், தமிழகம் பால் பெருக்குத் துறையில் மேலும் புதிய கட்டத்தை அடையும் என பெரிதும் நம்புகிறோம். இதுவரை நட்டத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையம் இவ்வாண்டு 6 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது, நமது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் தான் என்பதை எண்ணி நாம் பெருமைப்படுகிறோம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் மூன்றாண்டுச் சாதனைகள்

கல்வி, ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை நன்கு விளக்கமாகப் பரப்பி அதன் மூலம் கால்நடை, கோழியினம் மற்றும் மீன்வளத் துறைகளில் உற்பத்தியை அதிகரித்து, மக்களின் ஊட்டச் சத்து உணவுகளைப் பூர்த்தி செய்யவும், அவற்றிலிருந்து பெறும் வருவாயை அதிகரித்து, உழவர்களை மேம்பாடு அடையச் செய்வதுடன், தமிழ்நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தவும், தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.

இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, இப்பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகிய மூன்று கல்லூரிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவை தவிர நிறைய ஆராய்ச்சி நிலையங்கள், பால் பண்ணைகள், இனப்பெருக்க ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகம், கல்வி ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் மிகவும் தீவிரம் காட்டி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடம், நூலகம், ஆய்வகம் ஆகியவை ரூ.2.70 கோடி செலவில் கட்ட, மாண்புமிகு முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நிறைவேறி வருகின்றன.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய வழிகாட்டுதலுடன் கால்நடைப் பராமரிப்புத்துறை, பால்வளத் துறை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் திட்டங்கள் பலவும் துரிதமாக நிறைவேற்றப்பட்டு தமிழகம் பெருமைமிகு பீடுநடை போடுவதைக் காண்கிறோம்.

ஆண்டுகள் மூன்றில்
ஆயிரம் ஆயிரம்
சாதனை படைத்துச்
சமூக உரிமை காக்கும்
இதய தெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவி
அவர்களின்
பொற்கால ஆட்சியில்
தொடர்ந்து புதுப்புதுச்
சகாப்தம் படைப்போம்!

–ஜே. பீர்மைதீன்
உறுப்பினர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

69 சதவிகித இடஒதுக்கீடு குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை 25.6.94 அன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார்.

படமும் செய்தியும்

69 சதவிகித இடஒதுக்கீடு குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பல்வேறு கட்சிக் குழுவினருடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை 25.6.94 அன்று புதுடெல்லியில் சந்தித்தார்.

படமும் செய்தியும்

தமிழ்நாட்டில், கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 69 சதம் இடஒதுக்கீடு தொடரவேண்டும்; இதுபற்றிய தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையிலும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சமூகநீதி கிடைப்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை என்பதை மத்திய அரசுக்கு உணர்த்துகின்ற வகையிலும் 17.6.94 வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நாடெங்கும் முழு கடையடைப்பு பொது வேலைநிறுத்தம் மேற்கொள்ளுவது என்று தமிழ்நாடு அரசு சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். அதன்பேரில் நடைபெற்ற 'பந்த்' நாளன்று காணப்பட்ட சென்னை மாநகரக் காட்சிகளின் புகைப்படங்களே இங்கே இடம்பெற்றுள்ளன.



ஏதுவாகி
1,325 எக்டர் பயன்பெற்றது.
அரசு வழங்கும் திட்டங்கள், நிதியுதவிகள்,
இடுபொருட்கள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள்
மற்றும் விளைபொருட்களை நெறிப்படுத்தி
உழவர்களிடம் முறையாகப் போய்ச் சேர
அரசு பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது.
இன்பத் தமிழ்நாட்டில்
இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களது
முதல் மூன்றாண்டு ஆட்சியிலே
முத்துக்கள் முத்தாய்ப்புச் சாதனைகள்
ஒளிர்கின்றன வளர்கின்றன.
உழவர், விற்பனையாளர், வேளாண் அலுவலர்கள் என
எல்லாத் தரப்பும் மகிழ்வும் பயனும் பெறத்தக்க



எண்ணற்ற திட்டங்களும் செயல்பாடுகளும்
நாளும் பூத்து நல்லாட்சி மணக்கிறது!
வேளாண் துறையில் முதன்மை!
வீறுகொண்ட தமிழகம்
வேறு பல துறைகளிலும் சிறப்புறச் சீரிய தலைமை!
மூன்றாண்டுகளிலேயே பூவுலகு போற்றும்
சாதனைச் சிகரங்களை
எட்டியுள்ளது புரட்சித்தலைவி அவர்களது ஆட்சி.
வளமான தமிழகம் உருவாக
வாஞ்சைமிகு நம் முதல்வர் அவர்களின் சீரிய தலைமையும்
திறமிகு வழிகாட்டுதலும் தொடர
வான், நிலம், வையகத்து மக்கள் என
யாவருமே விழைகின்றார்.
வளர்க நல்லாட்சி!
ஓங்குக புரட்சித்தலைவி அவர்கள் புகழ்!!

பால்வளத் துறையின் பாங்கான பணிகள்

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்
திரு டி. ஜனார்த்தனன்

இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் கடந்த மூன்று ஆண்டு ஆட்சியில் பல துறைகளிலும் சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கால்நடைப் பராமரிப்புத்துறை, பால்வளத் துறை மற்றும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் ஆகிய துறைகள் இந்நாட்டின் கவனத்தை ஈர்க்கும் சாதனைகள் பல படைத்துள்ளன. அவற்றில் சிலவற்றைச் சுருக்கமாக இங்கு குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் நிலமற்ற தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் 2254 ஆட்டு அலகுகள் வாங்க ரூ.120.75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல் பசுங் கன்றுகள் வாங்க ரூ.160.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் மருத்துவப் பரிசோதனை நிலையம் மற்றும் தேவையான மருந்து ஆகியவை வழங்க ரூ.22.17 இலட்சம் கடந்த மூன்று ஆண்டுகளில் செலவிடப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கால்நடைகளின் அபிவிருத்திக்காக 123 முரா பொலி எருமைகளும் 124 முரா பொலி காளைகளும் வாங்க ரூ.29 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்திக்குத் தீவன அபிவிருத்தி இன்றியமையாதது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.1.80 இலட்சத்திற்குத் தீவன விதைகள் வாங்கப்பட்டுள்ளன. இதுதவிர ஓசூர் கால்நடைப் பண்ணையில் தீவனத் தயாரிப்புகளுக்கு ரூ.8 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மலைப்பகுதி விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக, 335 கறவை மாடுகள் மற்றும் 374 ஆட்டு அலகுகள் வாங்க ரூ.63.93 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதியில் கால்நடைப் பராமரிப்புப் பணி முன்னேற்றத்திற்காக இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மற்றும் நோய்ப் புலனாய்வு மையத்திற்காக ரூ.13.46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஓசூர் கால்நடைப் பண்ணையில் காங்கேயம் இனக் கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. உறைவிந்து மூலம் செயற்கைக் கருத்தறித்தல் முறையைப் பயன்படுத்தி கடந்த மூன்று ஆண்டுகளில் 20 இலட்சம் கன்றுகள் ஈன்றப்பட்டுள்ளன.

வெறி நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மையங்களில் 28,076 நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குக் கால்நடை மருத்துவ வசதி கிடைப்பதற்காக, தமிழ்நாட்டில் 41 கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. 20 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. கால்நடை நோய்ப் புலனாய்வுக்காக 3 கூடுதல் பரிசோதனை மையங்களும், கோழி நோய்ப் புலனாய்வுக்காக, சேலம் மாவட்டம் ஆண்டலூர் கேட் என்னுமிடத்தில் ஒரு பரிசோதனை மையமும் திறக்கபட்டுள்ளன. சைதாபேட்டையில் உள்ள கால்நடை மருத்துவமனை பல்நோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கால்நடைகளின் தொற்று நோய்த் தடுப்புக்காக 7.10 இலட்சம் மருந்து ஊசிகள் போடப்பட்டுள்ளன. இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்படும் தடுப்பு மருந்தூசிகளைப் பல்வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல குளிரூட்டு வேன் ஒன்று ரூ.14 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வீடு தேடிச் சென்று கால்நடைகளுக்கு மருத்துவ வசதியளிக்க, தமிழ்நாட்டில் 386 நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் ரூ.1.25 கோடி செலவில் இயங்கி வருகின்றன.

வணிகவரித்துறையின் மூன்று ஆண்டுச் சாதனைகள்

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி

வண்ணத்தில், எழுத்தில், சிந்தனையில் புதிய புரட்சிகரமான திட்டங்கள் தெளிவாக்கிடும் வல்லமை படைத்தவர் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அரசின் வருமானத்தின் 'ஊற்றுக்கண்' வணிகவரித் துறையாகும். இத்துறை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் நிருவாகத்தின் கீழ் இருந்தபொழுது புதிய பொலிவும், செயல் உத்வேகமும் பெற்றது. மக்கள் நலம், வறியோர், எளியோர் வாழ்வு ஏற்றம் இவை நம் புரட்சித் தலைவியின் இலட்சியங்கள் ஆகும்.

இந்நலத் திட்டங்களை நிறைவேற்ற நிதி தேவை. அரசின் வருவாயைப் பெருக்குவதில் வணிகவரித்துறை கடந்த மூன்று ஆண்டுகளாகச் செய்து வரும் சாதனைகளைப் பட்டியலிட்டுக் காட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1992- 93 ஆம் ஆண்டுநிதிநிலை அறிக்கையில், குங்குமம், கண்மை, கோதுமை, கணிப்பொறி சாஃப்ட்வேர், தங்கத்தாலி, (இணைப்புகளுடன் எட்டு கிராமிற்கு மிகாமல்) போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. மேலும், அதே நிதியாண்டில், கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரிக்குறைப்புச் செய்யப்பட்டதும் குறிப்பிடத் தக்கது:

நெய் மற்றும் பால் பொருட்கள் (வாணிபக் குறியீட்டுச் சட்டத்தின்

கீழ் பதிவு இடாதது). குச்சிக்கிழங்கு, சிப்சுகள், மாவு, சேமியா, போலி நகைகள், லாமினேட் செய்யப் பட்ட சாக்குப் பைகள், சில மளிகைப் பொருட்கள், வாடகைச் சீருந்து, பதனிடப்பட்ட தோல் உரிவைகள், வெந்தியம், கிராம்பு முதலியன. தமிழ்நாடு ஜாரி நிறுவனத்திலிருந்து விற்கப்படும் ஜாரிகளுக்குக் கொள்முதல் வரி நீக்கமும் செய்யப்பட்டுள்ளது.

1992-93-இல் அனுமதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

விருதுநகர் வணிகவரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப் பட்டு, புதிதாக சிவகாசியைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி ஆணையரின் தலைமையில் சிவகாசி வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

சென்னை செயலாக்கப் பிரிவில் சுற்றும் படைகளைப் பலப் படுத்தும் நோக்குடன் இரண்டு புதிய துணை வணிகவரி அலுவலர் பணியிடங்களும் ஐந்து புதிய உதவி வணிகவரி அலுவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப் பட்டன.

கோவை (தெற்கு) மற்றும் கோவை (வடக்கு) வணிகவரி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புதியதாக உதவி ஆணையரின் தலைமையில் ஒரு வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது. வணிகவரி மாவட்டங்கள் கோவை சரகம் 1 (தெற்கு) கோவை சரகம் 2 (வடக்கு), கோவை 3 (புதியது) எனப் பெயரிடப்பட்டது.

வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களைப் பலப்படுத்தும் நோக்குடன் துணை வணிகவரி அலுவலர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வந்த பத்து வரிவிதிப்பு வட்ட அலுவல கங்களுக்கு, பத்து வணிகவரி அலுவலர் பணியிடங்கள் வழங்கப் பட்டு அவை வணிகவரி அலுவலர் அலுவலகங்களாக உயர்த்தப் பட்டன.

மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களில் பணிப்புநிலைவைச் சீர்படுத்தி, மேல்முறையீடுகளை விரைந்து முடிக்கும் நோக்குடன் சென்னையில் கூடுதலாக ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது.

1993-94-ஆம் ஆண்டுச் சாதனைகள்

1993- 94 ஆம் ஆண்டு அறிக்கை 12.3.1993 அன்று தாக்கல் செய்யப்பட்டதில் விற்பனை வரிவிதிப்பதில் கீழ்க்கண்ட வரிக் குறைப்பு/சலுகைகளை அரசு

அறிவித்துள்ளது:

முன்னர் அமலில் இருந்த 17 வரிவிகிதங்கள், 9 வரிவிகிதங் களாகக் குறைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பொருட்கள் 5 வரி விகிதங்களில் கொண்டுவரப் பட்டன. வரிவிகித வாரியாகப் பொருட்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டன.

சாமான்ய மக்களால் பயன் படுத்தப்படும் பெரும்பான்மை யான பொருட்களின் மீதான வரிவிகிதம குறைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, காப்பிக் கொட்டை, மண்ணெண்ணெய், தாவர எண்ணெய்கள், மஞ்சள், மிளகாய், தனியா, சிகைக்காய், புளி, மிளகு, வெல்லம், கோதுமைப் பொருட்கள் கையினால் தயாரிக் கப்பட்ட சோப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதம் குறைக்கப் பட்டுள்ளன.

இதே போன்று மருந்துவகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள், உலர் மின்கலங்கள் ஆகிய உபயோகப் பொருட்களின் மீதான வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளன.

தொழில்துறைப் பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் கச்சா திரைப்படச்சுருள், எலக்ட் ரோட்ஸ், மற்றும் உருளைகள் மீதான விற்பனை வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளன

ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் விற்பனைத் தொகை இல்லாத அனைத்து வணிகர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 60,000 வணிகர்களுக்கும் மேலாகப் பயன்பெறுகின்றனர்.

பொதுவாக, ஒரு சில தனியே குறிப்பிட்ட இனங்களைத் தவிர துணைப் பொருட்கள், உதிரிகள், கூட்டு உறுப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதமும், அவற்றின் மூலப் பொருட்களுக்கான வரி விகிதத்திற்கு இணையாக அமைத்திட வழிவகை செய்யப் பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான உற்பத்திச் செலவை மேலும் குறைக்கும் வகையில் ஒருசில பெட்ரோலியம் சம்பந்தப்பட்ட பொருட்கள் தவிர (எரிசாராயம், நாப்தா, மினரல் ஆயில், மசகு எண்ணெய், (கிரீஸ்) அனைத்து வாயு (கேஸ்) உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவைப்பட்ட அனைத்து மூலப் பொருட்களுக்கும் பிரிவு 3(3)ன் கீழ் விதிக்கப்படும் 3 சதவிகிதச் சலுகை வரி, விற்பனைப் பொருட்களுக்கான பேக்கிங் பொருட்கள், பெயர் வில்லைகள் மற்றும் பயன்படு பொருட்கள் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

பணி ஒப்பந்தங்கள் மற்றும் குத்தகை மீதான வ்ரிவிதிப்பு தொடர்பாக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத் தீர்ப்புக் கிணங்க வரிவிதிக்கும் முறை மாற்றியமைக்கப்படுகிறது. ஏற் கெனவே, வரிவிகித்ககப்பட்ட பொருட்கள் மீது மீண்டும் வரி விதிக்கப்படமாட்டாது. மேலும், கட்டடப்பணி ஒப்பந்ததாரர் களுக்கு இணக்க முறையில் இரண்டு சதவிகித வரி செலுத்தும் முறை அமலாக்கப்பட்டுள்ளது.

சுயவரிவிதிப்புமுறை 68,000 வணிகர்கள் பயன்பெறும் வகை யில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ரூபாய் 75,000 வரை விற்பனைத் தொகையுள்ள அனைத்து வணிக வரிகளுக்கும், வணிகராகப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1992-93ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட வரித்தொகை யான ரூ.3,016.89 கோடி ரூபாயை விட, கடந்த 1993-94ஆம் நிதி யாண்டில் 382.40 கோடி ரூபாய் அதிகமாக, அதாவது ரூ.3,399.29 கோடி ரூபாய் வசூல் செய்து இத்துறை சாதனை படைத் துள்ளது.

வணிகவரித்துறையின் பணியினை மேம்படுத்தும் வகை யில் 1993-94ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் ஆவாரம்பாளையம் மற்றும் சேலம் கோட்டத்தில் அரிசிப்பாளையம் ஆகிய இரண்டு புதிய வரிவிதிப்பு வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சென்னையில் புதிய வணிகவரி சரகம், அதாவது 11-வது சரகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விற்பனைவரி மேல்முறையீட்டு வழக்குகளை முடிக்கும் பணி யினைத் துரிதப்படுத்தும் வகையில் இரண்டு மேல்முறையீட்டுத் துணை ஆணையர் பதவியினை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது.

செயலாக்கப் பிரிவின் பணி யினை மேம்படுத்தும் வகையில் 1993-94ஆம் ஆண்டில் கனியூர் (கருமத்தப்பட்டி) வெளிவழி மற்றும் பள்ளிபாளையம் ஆகிய இரண்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டிலிருந்து பாண்டிச்சேரி மற்றும் காரைக் காலுக்கும், மேலும் அந்த மாநிலத்



திலிருந்து தமிழ்நாட்டிற்கும் எடுத்துச் செல்லப்படும் பொருட்களைத் தணிக்கை செய்வதற்காகப் பாண்டிச்சேரியைச் சுற்றி 8 சோதனைச் சாவடிகளும், மற்றும் காரைக்காலைச் சுற்றி 3 சோதனைச் சாவடிகளும் அமைத்திட அரசு சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. இது செயலாக்கப் பிரிவின் பணியினைத் துரிதப் படுத்துமென எதிர்பார்க்கப் படுகிறது.

மேலும், 1993-94ஆம் ஆண்டில் திருவள்ளூர், பூவிருந்தவல்லி, செங்கை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட கூடுதல் சுழற்படைகள் அமைக்கப் பட்டுள்ளன.

வணிகவரித்துறை அலுவலகங்களை அரசின் சொந்தக் கட்டடங்களில் அமர்த்தி பணியின் தொடர்ச்சியாக வாணியம்பாடியிலும், ஆரணியிலும் உள்ள வணிகவரி கட்டடங்களுக்குத் தலா ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டவும், பன்னாரியில் உள்ள சோதனைச் சாவடிக்கு ரூ.3.70 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக் கட்டடம் கட்டவும் 1993-இல் அனுமதி அளிக்கப்பட்டு கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

காலந்தள்ளி வரி செலுத்தும் சலுகை உட்பட, பல்வேறு விற்பனை வரிச் சலுகைகள் தொழிலகங்களுக்கு இவ்வரசு வழங்கி வருவது தெரிந்ததே. இவ்வகையில், 1993-94ஆம் ஆண்டில் ரூ.85.76 கோடி வரியினைக் காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகையாகத் தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காலந்தள்ளி வரிசெலுத்தும் திட்டத்தின் கீழ் தொழிலகங்கள் ஒதுக்கி வைக்கும் வரித்தொகையினைத் தொழிலகங்களின் வருமானமாகக் கணக்கில் கொண்டு, வருமான வரியினர் வரிவிதிக்க முயற்சித்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மக்கள் அரசு அவ்வகைத் தொகை வரியாகச் செலுத்தப்பட்டதாகக் கருதி, அதைத் தொழிலகங்களுக்குக் கடனாக அளித்ததாகக் கொள்ளும் வகையில் ஆணை பிறப்பித்து, மேற்படி தொகையின் மீது வருமான வரி விதிப்பைத் தடுத்து, பல நலிந்த தொழிலகங்களைக் காத்து வருகிறது.

1994-95ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சில பொருட்களுக்கு வரிவிதித்து, சட்டப் பேரவையில் இவ்வரசு அறிவித்திருந்தாலும், மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும்- அதைக் கருத்திற் கொள்ளாமல் பல பொருட்களுக்குப் பூரண வரிவிலக்கு அறிவித்துள்ளது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் கீழமைந்த மக்களரசு தான்.

உதாரணமாகப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்கள், தென்னங்கீற்று, விறகு போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வணிகர் நல வாரியம்

வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக உள்ளார். இவ்வாரியத்தின் மூலம் நலிவுற்ற வணிகர்களின் குடும்பத்திற்கு இவ்வரசு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. உதாரணமாக, வணிகர்களின் குடும்பத்தில் பொருளீட்டும் நபர் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு, இவ்வாரியம் செயல்படுத்தும் 'குடும்ப நலத் திட்டத்தின்' மூலம் வழங்கப்படும் உதவித் தொகையான ரூ.5,000த்தை ரூ.10,000மாக உயர்த்தி உள்ளது. மேலும், நலிவுற்ற வணிகர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் தொகையினை ரூ.1,500லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தி வணிகப் பெருமக்களின் குழந்தைகளின் வாழ்வில் கல்வி ஒளி ஏற்றி வைத்துள்ள பெருமை இவ்வரசையே சாரும்.

கணிப்பொறி மையம்

வணிகவரித்துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும், நிர்வாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்து, தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக்கொள்ள, கணிப்பொறி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. உயர்மட்ட விற்பனைவரிச் சீராய்வுக்குழு தனது அறிக்கையில் அதிவேகமாக வளர்ந்துவரும் வியாபாரத் துறைக்கு ஈடுகொடுக்கவும், பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்புச் செய்வோரை உறுதியுடன் சமாளிக்கவும், காலதாமதம் செய்யாமல் வணிகவரிகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கும் முறையைக் கணிப்பொறி மயமாக்குதல் மூலம் செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தது. அதனடிப்படையில் தற்போதுள்ள கணிப்பொறி மையத்தின் அமைப்பை மேம்படுத்துவதற்காக ரூபாய் 35 இலட்சங்கள் அனுமதித்து, துறையின் வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளது இவ்வரசு. புள்ளி விவரத்தொகுப்பு மற்றும் தகவல்கள் வெளிப்படுத்தும் முறையைப் படிப்படியாகப் பரவலாக்கும் பொருட்டு, முதல் கட்டமாகக் கோவை, திருச்சி மற்றும் மதுரைக் கோட்டங்களில் கணிப்பொறிகள் அமைக்க இவ்வரசு உத்தேசித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

□ **சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி 'இந்தியா எங்கள் நாடு' என்னும் ஒற்றுமை உணர்வைப் பேணுதல், தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும்.**

தொழில் துறையில் அரசின் சாதனைகள்

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்துவரும் ஆக்கமும், ஊக்கமும் தொழில் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இந்தியத் தொழில் துறை வரைபடத்தில் தமிழகம் தனிப்பெரும் இடத்தைப்பெற கடந்த 3 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முயற்சிகள் புரட்சித்தலைவி அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழல்களில் 1991 ஆம் ஆண்டானது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. நிதி, வர்த்தகம் மற்றும் தொழில் ஆகியவற்றின் கொள்கைகளை மறு ஆய்வு செய்யும் வகையில் ஒரு முயற்சி நாட்டின் வெவ்வேறு பொருளாதார மண்டலங்களில் மேற்கொள்ளப் பட்டது. எனவே, நாட்டிலுள்ள இயற்கை வளங்களையும், நிதி ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு தொழில் துறையின் வேகமான வளர்ச்சிக்கான புதுமையான கொள்கைகளை உருவாக்குவது இந்த அரசு ஆட்சி அமைக்கும் தருணத்தில் முக்கியப் பணியாக இருந்தது.

1992 ஜனவரியில் புதிய தொழில் கொள்கை அறிவிக்கப் பட்டது. புதிய தொழில் கொள்கையின் ஒரு பகுதியாக புதிய தொழில்கள் தொடங்குவதற்கும், தற்போதுள்ள தொழில்களை விரிவாக்கம் செய்வதற்கும் பயனுடைய ஊக்குதவித் தொகுப்புத் திட்டம் அளிக்கப் பட்டுள்ளது. மாநிலத்தில் புதிய தொழில்களைத் தொடங்குவதற்குச் சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதையும் அரசால் வழங்கப்படும் பல்வேறு ஊக்குதவிகளைப் பரவலாக விளம்பரப்படுத்துவது மட்டுமின்றி அச்சலுகைகள் தொழில் பிரிவுகளுக்கு விரைவாக அடைவதை உறுதி செய்தவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாடு

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) இராணிப்பேட்டை, ஓசூர், கும்மிடிப்பூண்டி மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் தொழில் வளாகங்களை ஏற்கெனவே வெற்றிகரமாக அமைத்துள்ளது. மேலும் கும்மிடிப்பூண்டி, கடலூர் மற்றும் ஓசூரிலுள்ள தொழில் வளாகங்களை விரிவாக்கம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

புதிய தொழில் கொள்கைக் கிணங்க தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டில் கவனம் செலுத்த, தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) என்ற புதிய நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. பெரியார் மாவட்டம் பெருந்துறையில் ஒன்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கைகொண்டானில் ஒன்றுமாக இரு புதிய வளர்ச்சி மையங்களை நிறுவும் பணியை மத்திய அரசு பொறுப்பேற்குத் திட்டத்தின் கீழ் `டாசிட்' நிறுவனம் மேற்கொண்டுள்ளது. முக்கிய ஏற்றுமதி நகரமாகிய திருப்பூரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி அவற்றைத் தரம் மேம்படுத்தும் திட்டமொன்றையும் 'டாசிட்' நிறுவனம் மேற்கொண்டுள்ளது. டாசிட் நிறுவனம் தருமபுரி மாவட்டம் பர்கூரில் வளர்ச்சி மையம் அமைக்கும் திட்டத்தையும், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டையில் வேளாண்மை

தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் தொகுப்பிற்கு வழங்கப் பட்டுள்ளது. புதிய கொள்கைக் கிணங்க, இரண்டு தனியார் துறை ஆலைகள் இணை மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்க உத்தேசித்துள்ளது. ரூ.18 கோடி மொத்த செலவில் மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி மற்றும் அரூரிலுள்ள மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளன. சர்க்கரைத் தொழிலில் இணை மின் உற்பத்தி நிலையங்களைத் திட்டமிட்டு அமைப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டங்களில் மத்திய அரசு ஏற்கெனவே அனுமதி அளித்த இரு சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சுரங்கம் மற்றும் கனிமங்கள்

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) தருமபுரி மாவட்டம் மாதப்பள்ளியில் கிரானைட் தளக்கற்கள் தயாரிக்கும் தொழிற் சாலை ஒன்றையும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் சிவகங்கையில் கிரா பைட் பயன்பாட்டுத் தொழிற் சாலை ஒன்றையும் தொடங்கி யுள்ளது. கிரானைட் தளக்கற்கள் தயாரிப்புத் தொழிற்சாலையில் வணிக ரீதியிலான உற்பத்தி நவம்பர் 1993-இல் தொடங்கப் பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.1000 கோடி மொத்த முதலீடு கொண்ட பல துணைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற் சாலைகள் தொடங்க வாய்ப் புள்ளது. இந்த கிராபைட் பயன்பாட்டுத் தொழிற்சாலை மற்றும் சுரங்கங்களின் மூலம் 250 பேர்கள் நேரடியாகவும் மற்றும் 250 பேர்கள் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புப் பெறுவர். தருமபுரி மாவட்டத்தில் ஏராள மாகக் கிடைக்கும் மாலிப்டி னத்தை வெட்டியெடுக்கும் திட்டத்தையும் டாமின் தொடங்கியுள்ளது.



சிறந்த திரைப்படங்களைத் தேர்வு செய்யக் குழு அமைப்பு

ஆண்டுதோறும் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர் நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் கலைத்துறை வித்தகர்களைத் தேர்வு செய்து விருதுகள் வழங்கி சிறப்பிக்கும் நோக்கத்துடன் மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் 1993ஆம் ஆண்டிற்கான விருதுகளுக்குத் தகுதியுடைய திரைப்படங்கள் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்து செய்து அரசுக்குப் பரிந்துரைப்பதற்கென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். பிரதாப்சிங் அவர்கள் தலைமையில் ஒரு தேர்வுக் குழுவை நியமித்து ஆணையிட்டுள்ளார்கள்.

இந்தத் தேர்வுக்குழுவில் திரு. எம்.எஸ்.விஸ்வநாதன், திரு. எம்.ஏ. திருமுகம், திரு. என். பாலகிருஷ்ணன், சிரிப்பு நடிகர் திரு. சி.கே. நாகேஷ், திரு. கே.சங்கர், டாக்டர் பானுமதி ராமகிருஷ்ணா, திருமதி வாணி ஜெயராம், கவிஞர் முத்துராமலிங்கம், திருமதி மஞ்சுளா ரமேஷ், திரு. வியட்நாம் வீடு சுந்தரம், டான்ஸ் மாஸ்டர் சுந்தரம், திரு. மோகன் காந்திராம், தமிழக அரசின் செய்தித்துறை இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நியமித்துள்ள இந்தத் தேர்வுக் குழு 1993ஆம் ஆண்டு வெளியான தமிழ்த் திரைப்படங்களை ஆராய்ந்து விருதுக்குரிய திரைப்படங்கள் நடிகர், நடிகையர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள், கலை வித்தகர்கள் ஆகியோர்களைத் தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

சமூக நலத்துறையின் சிறப்பான பணிகள்

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி

"பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த
வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே
பெண்
இளைப்பில்லை காண்"

என்ற தேசிய கவி பாரதியாரின் கனவினை நனவாக்கும் விதத்தில் 4.5 கோடி தமிழக மக்களால் ஒருமித்த மனத்துடன் தேர்ந்தெடுக் கப்பட்ட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், நாட்டின் வளர்ச்சி-பெண்கள், குழந்தைகள், ஊன முற்றோர் ஆகியோரின் நலத்தை யும் முன்னேற்றத்தையுமே வெகு வாகச் சார்ந்துள்ளது என்ற உண்மையை முழுமையாக உணர்ந்து அவர்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக ஒல்லும் வகையெல்லாம் உதவி செய்வது என உறுதி பூண்டு அவர்களுக்கு நீண்ட காலப் பயன்தரக் கூடிய பல புதிய திட்டங்களை ஆட்சிப் பொறுப்பேற்று 3 ஆண்டுகளில் செயல்படுத்தியுள்ளார்.

- பெண் சிசுவையைத் தடுப்ப தற்காக "தொட்டில் குழந் தைத் திட்டம்" ஏற்படுத்தி அதன் மூலம் பெண் குழந்தை களைப் பெற்று அரசே அவர்களைப் பேணுகிறது. இதன் மூலம் இதுவரை 75 பெண் குழந்தைகள் அரசால் காப்பாற்றப்பட்டு தற்போது நம் நாடு மற்றும் மேலை நாடுகளில் குழந்தைகள் இல் லாத தம்பதியருக்குத் தத்து கொடுக்கப்படுகிறது. இந்தியா விலேயே இத்தகைய திட்டம் தமிழ்நாட்டில் மட்டும் தான் செயல்படுத்தப்படுகிறது. உலக அரங்கில் பல ஏடுகள் இத் திட்டத்தைப் போற்றியுள்ளன.
- பெண் சிசுவதையைத் தடுக் கவும், குடும்பக் கட்டுப் பாட்டினை ஊக்குவிக்கவும் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந் தைப் பாதுகாப்புத் திட்டம் 1.4.92 முதல் தொடங்கப்பட்டு பெண் குழந்தைகளது படிப்பு மற்றும் திருமணச் செலவு வரை ஆகும் தொகையைப் பெறும் வகையில் அவர்கள் பெயரில் ரூ.5000-க்கு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ஸ்வீடன் நாட்டுச் 'சிடா' உதவியுடன் 1.7.93 முதல் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., நீலகிரி மற்றும் 'புதுக் கோட்டையில் ரூ.46 கோடி செலவில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத் தில் அளிக்கப்படும் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- பல்வேறு திருமணத் திட் டங்களின்கீழ் நிதியுதவி பெறுவதற்கு வரையறுக் கப்பட்ட ஆண்டு வருமான வரம்பைச் சீர்படுத்தி ரூ.12,000 என ஆக்கப்பட்டுள் ளது.
- ஊரக வளர்ச்சி ஆணை யாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஊரகப் பகுதியிலுள்ள பள்ளிகளின் சத்துணவு மையங்கள் சமூக நலத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.
- சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் அமைப்பாளர் களின் மதிப்பூதியம் கணிசமாக உயர்த்தப்பட்டதுடன் அவர் களுக்குப் பொங்கல் பரிசாக ரூ.500 வழங்கப்பட்டுள்ளது.
- சத்துணவுத் திட்டம் செயல் படுவதைக் கண்காணிக்க மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட உயர் மட்டக் குழுவினை அரசு மீண்டும் அமைத்துள்ளது.
- பொதுமக்கள் நன்கொடை உதவியுடன் சத்துணவு மையக் கட்டடங்களைச் சீர மைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 5,000 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்

சார்ந்த தொழில் வளாகத்தை உருவாக்கும் திட்டத்தையும் மேற்கொண்டுள்ளது. மேலும் சென்னைக்கு அருகில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய அளவிலான ஒரு புதிய வளர்ச்சி மையத்தை அமைக்க உத்தேசித்துள்ளது.

மெகா முதலீடுகள்

முதலமைச்சர் அவர்களின் சோர்வுறா முயற்சிகளின் பயனாக, சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் ரூ.2000 கோடி செலவில், 'அரோ செம்' என்ற நறுமணப் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலை அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. துணைப் பொருள் தயாரிக்கும் பல தொழில்களை மேம்படுத்துவதற்கு அடிப்படையாகவும், சுமார் 70,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் இது வகை செய்யும்.

ஜெயங்கொண்ட சோழபுரத்தில், கூட்டுத்துறையில் ரூ.7,000 கோடியில் மிகப்பெரிய அளவிலான நிலக்கரி வெட்டும் பிரிவும், மின் உற்பத்தி திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தமிழ்நாட்டில் கிடைக்கும் நிலக்கரியைப் பயன்படுத்தி முடிவில் 1500 மெ.வா. மின் உற்பத்திக்கு வகைசெய்யும்.

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டத்தைச் செயல்படுத்த அவசியமான பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுக்கத் தனியார் துறைக்கு அனுமதி அளிக்கும் வகையில் நிலக்கரி நாட்டுடமையாக்கல் சட்டத்தைத் திருத்தி அமைக்குமாறு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேற்கண்ட சட்டத்துக்குத் தகுந்த திருத்தமும் இப்போது செய்யப்பட்டுள்ளது. இந்த மின்திட்டத்திற்கு அயல்நாட்டு முதலீடு மேம்பாட்டு வாரியம் 'கொள்கை அளவில்' அனுமதி அளித்துள்ளது.

செங்கல்பட்டு-எம்.ஜி ஆர். மாவட்டத்திலுள்ள சோளிங்கநல்லூர் மற்றும் பள்ளிக்கரணை கிராமங்களில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பில் "சென்னைத் தொழில் பூங்கா" ஒன்றினைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே சிறந்த அடிப்படை வசதிகளுக்கு இணையான வசதிகளையும், மத்திய அரசின் தற்போதைய தாராளமயமாக்கப்பட்ட கொள்கைகட்குட்பட்டு ஊக்குதவிகளையும் இப்பூங்கா வழங்கும். இத்திட்டத்தைச் செயல்படுத்த "சென்னைத் தொழில் பூங்கா" என்ற நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கூட்டுத் தொழில் முனைவரை மாநில அரசு விரைவில் தெரிந்தெடுக்கும்.

செங்கல்பட்டு-எம்.ஜி ஆர். மாவட்டம் கும்மிடி பூண்டியில் சுமார் ரூ.20 கோடி முதலீட்டுடன் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஒன்றினை அமைப்பதற்கான செயற்குறிப்பு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

புதிய முதலீடுகளை ஊக்குவித்தல்

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) ரூ.10,831 கோடி மொத்த முதலீடு கொண்ட 42 புதிய திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதைப் போல, தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்தின் (எல்காட்) ரூ.141 கோடி மொத்த முதலீடு கொண்ட 17 புதிய திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

ரூ.27,231 கோடி முதலீடு கொண்ட மின் திட்டங்கள் உள்ளிட்ட ரூ.43,910 கோடி முதலீடு கொண்ட திட்டச் செயற்குறிப்புகள் தமிழ்நாட்டில் பெறப்பட்டுள்ளன என்பது மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும். மற்ற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து தொழில் முனைவர்களை ஈர்க்கும் திறன் இம்மாநிலத்திற்குள்ளது என்பது



■ விஞ்ஞான வசதிகளைக் கிராமங்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டியுள்ளது காலத்தின் கட்டாயம்.

குறிப்பிடத்தக்க செய்தியாகும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ.2,376.87 கோடி முதலீடு கொண்ட இத்தகைய 24 திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ரூ.1,288 கோடி முதலீடு கொண்ட 9 திட்டங்கள் முடிவாக அனுமதியளிக்கும் நிலையிலுள்ளன. 24 திட்டங்களுக்கான செயற்குறிப்புகள் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ரூ.700 கோடி முதலீடு கொண்ட தூத்துக்குடி காப்பர் ஸ்மெல்ட்டர் திட்டத்திற்கு சமீபத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழில் முனைவர்களின் கனவுகளை நனவாக்கும் (Dream Destination) மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது என்பதைத் தான் மேற்கூறியவை தெளிவு படுத்துகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (டி.என்.பி.எல்.) ரூ.525 கோடி மதிப்பீட்டுச் செலவில் அதன் விரிவாக்கத் திட்டப் பணிகளைத் தொடங்கியுள்ளது. இந்நிறுவனம் இந்தியாவிலேயே மிகப்பெரிய, அதாவது ரூ.50 கோடி செலவில் 15 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட காற்றாலை மின் திட்டத்தை திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் தேவர்குளம் மற்றும் பெருங்குடி கிராமங்களில் அமைத்துள்ளது. உற்பத்தி செய்யப்படும் மின் சக்தி தமிழ்நாடு மின் வாரியத்தின் மின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

நேரடிக் கடன் உதவி

1991 லிருந்து தமிழ்நாடு மாநிலத் தொழில் 'முன்னேற்ற நிறுவனம் சிப்காட்) 205 தொழில் பிரிவுகளுக்கு 194 கோடி ரூபாய் கடன்களை வழங்க அனுமதியளித்துள்ளது. 1994 - 95 ஆம் ஆண்டில் ரூ.60 கோடி கடனாக வழங்கக் கருதப்பட்டுள்ளது. இதனால் ரூ.230 கோடி வரையில் முதலீடு பெருகும் என்றும், 5550 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியில் மறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியளவு குறைக்கப்பட்டபோதிலும் சிப்காட் நிறுவனத்தின் கடன் வழங்கும் திட்டங்களில் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்-(கைடன்ஸ்)

புதிய தொழில் கொள்கையின் கீழ் முதலீட்டாளர்கள் ஆவதற்கு விழையும் அனைவரும் தொடர்பு கொள்ளக்கூடிய ஒருமுனை மையமாகத் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. அரசின் கொள்கைகள், நடைமுறைகள், ஊக்கச் சலுகைகள் மற்றும் உதவித் தொகைகள் போன்ற தொழில்களுக்குச் சம்பந்தப்பட்ட தகவல்களைக் கணிப்பொறித் தகவல் தொகுப்பு ஏற்பாடுகள் (Floppy Diskettes) வடிவில் கைடன்ஸ் கொண்டு வந்துள்ளது. மேலும், கைடன்ஸ், இந்திய வெளிநாட்டு வணிகம் மற்றும் தமிழ்நாட்டில் ஏற்றுமதி வாய்ப்புகள், வளர்ச்சிக்கு முக்கிய தொழில்கள் போன்ற தகவல்களை பயனுள்ள முகவர்களுடன் கணினி அடிப்படையிலான தகவல் தொடர்பு ஏற்பாடுகள் மூலம் கொண்டுவந்துள்ளது. மாநிலத்தில் நேரடி வெளிநாட்டு முதலீடு, மற்றும் அயல்நாடு வாழ் இந்தியர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கவனிக்கும் முகவரமைப்பாக (Nodal Agency) கைடன்ஸை அரசு அறிவித்துள்ளது. பன்னாட்டுத் தகவல் மையங்களுடன் நேரடி தொடர்பினை ஏற்படுத்த CD ROM கையகராதி தேடல் வசதிகளை கைடன்ஸ் அமைத்துள்ளது. தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்க பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற மாநகரங்களிலும் மற்றும் துபாய், அபுதாபி, பஹ்ரைன் ஆகிய வெளிநாட்டு மாநகரங்களிலும் தொழில் மேம்பாட்டிற்கான கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. தொழில் மேம்பாட்டிற்கான கருத்தரங்கின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டை புதிய முதலீடுகள் செய்வதற்குகந்த மாநிலமென்பதை விளக்கமாக எடுத்துக்காட்டும் ஒரு விளம்பர முகாமை நடத்த கைடன்ஸ் உத்தேசித்துள்ளது.

சர்க்கரைத் தொழில்

தஞ்சாவூர், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி, திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சர்க்கரை ஆலை வீதம் ஐந்து புதிய சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்துவதற்கு உரிமம் கோரி செயற்குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் தொடங்கப்பட்டு 37 இலட்சம் யூனிட் மின் சக்தி

ளன. 2,661 கட்டடங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

■ உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் - II ரூ.350 கோடி செலவில் தொடங்கப்பட்டு நன்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

■ நீதிபதி திரு. செங்கோட்டு வேலன் அவர்கள் தலைமையில், மாநில மகளிர் ஆணைக் குழு ஒன்றையும் இந்த அரசு அமைத்துள்ளது.

■ இந்தியாவிலேயே இதுவரை மகளிர் மேம்பாட்டுக்கான கொள்கை விளக்கம் எந்த மாநிலத்திலும் வெளியிடப் படவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழக மேம்பாட்டுக்கான இவ்வரசின் கொள்கை விளக்கம்"தொலைநோக்குத் திட்டம் 2000" ஒன்றை புகழ்பெற்ற சமூக சேவகி அன்னை தெரசா அவர்கள் வெளியிட்டார். இது அரசின் கொள்கை நோக்கங்களை விளக்கும் விரிவான ஆவணமாகும்.

■ 1993-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா குழந்தைகள் நல 15 அம்சத் திட்டம்" உலகளாவிய பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இத்தகைய திட்டவட்டமான பயனுள்ள செயல்திட்டத்தைக் கொண்டு வந்த தமிழ்நாடு தான், முதல் இந்திய மாநிலம் என்ற வகையில் இவ்வரசுக்கு 'யூனிசெப்' தனது உளமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துள்ளது. இந்தத் திட்டம் ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப்பணி அலுவலர் திரு. டிவி. அந்தோணி அவர்களை மாநில ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2000 ஆண்டில் மாவட்ட அளவில், குழந்தைகள் பிரச்சினைகள் ஏதும் இல்லை என்ற இலக்கினை எட்டும் நோக்கத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

■ சேவையில்லங்கள், ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ.90-லிருந்து ரூ.120 ஆகவும், சேவை இல்லங்களில் உள்ள பெரியவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ.120லிருந்து ரூ.150ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

■ திருநெல்வேலி, வேலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் ஆகிய இடங்களில் ஆதரவற்ற குழந்தைகளுக்கான பராமரிப்பு இல்லங்கள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

■ இன்னும் குழந்தைகள் நலன், மகளிர் நலன் ஆகியோருக்கான பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

வனத்துறையின் விரைவான பணிகள்

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கு. லாரன்ஸ்



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தாம் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து உலகமே போற்றும் ஒப்பற்ற திட்டங்களைத் தீட்டி, அதனைப் பாங்குடன் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், புரட்சித்தலைவி அவர்களின் சிந்தனையில் உதித்த பல திட்டங்கள், பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகவும், இந்தியாவிலேயே தமிழகம் முன்னணியாகவும் விளங்குவதற்கு அடிப்படையாக அமைந்து வருகின்றன.

இத[illegible] மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்[illegible]யின் கீழ், வனத்துறை வளமான பல ப[illegible] வருகின்றது.

காடுவளர்ப்புப் பணிகளில் மலைப்பகுதிகளிலும் சமவெளிப்பகுதிகளிலும் காடுகள் தரம் இழந்து வருவதை ஈடு செய்யும் நோக்குடன் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் ஏழை மக்களின் விறகு, தீவனம் மற்றும் சிறுமரங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம் உள்ளூர் மக்களின் வருவாயைப் பெருக்க உதவுகின்றன. மலைப்பகுதிகளில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு வனவள மேம்பாட்டுப் பணிகள் மக்களின் ஈடுபாட்டுடன் ஒருங்கிணைக்கப்பட்டு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் நிலப்பரப்பு 1,30,057 சதுர கிலோ மீட்டர். அதில் 22,699 சதுர கிலோ மீட்டர் காடுகள் அமைந்துள்ளன. இது மொத்த நிலப்பரப்பில் 17.45 விழுக்காடாகும். இந்திய வனக் கொள்கை 1988-ன்படி புவியின் பரப்பளவில் 33 விழுக்காடு குறைந்தபட்சம் காடுகளாக அமைந்து இருக்க வேண்டுமென வகுத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட வனப்பரப்புகள் தவிர்த்து தீவிரச் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வனப்பரப்புகட்கு வெளியே சமுதாய நிலங்களில் 3,00,000 எக்டேர் பரப்பளவில் வளம் மிகுந்த காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. இந்தச் சமூகக் காடுகள் நிலப்பரப்பில் 2.3 விழுக்காடாக அமைந்துள்ளது.

1991-92, 1992-93 மற்றும் 1993-94-ஆம் ஆண்டுகளில் சாதனைகள்:

திட்டப்பணிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு மத்திய மாநிலத் திட்டங்களுக்கென, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டச் சாதனை அளவாக ரூ.138.17 கோடிக்கு எதிராக ரூ.222 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் காடு வளர்ப்புப் பணி 1,80,000 எக்டர் பரப்பளவில் நிறைவு செய்யப்பட்டதற்கு எதிராக, எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2,20,000 எக்டர் பரப்பில் காடு வளர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு திட்டச் செயலாக்கம்

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலப்பரப்பில் போதிய அளவு வனப்பரப்பை அதிகரிக்கும் இலக்கை எய்த காடுவளர்ப்பு,மண்வளம் பாதுகாப்பு போன்ற பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் உயிரினச் சூழல் சமநிலை பாதுகாக்கப்படும். வனப்பரப்புக்குள்ளேயும் வெளியேயும் பசுமைச் சூழலை மேம்படுத்தி வற்றாத வன வளச்செல்வங்களை அதிகரித்து மக்களின் விறகு, தீவனம், சிறுமரம் போன்ற இதர வனப் பொருட்கள் தேவை மற்றும் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்கள் தேவையும் நிறைவு செய்யப்படும்.

இந்த முதல் மூன்று ஆண்டுகளில் 1,52,500 எக்டர் பரப்பளவில் காடு வளர்ப்பு மற்றும் இதர அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள ரூ.151.20 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இருபது அம்சத் திட்டம்

இருபது அம்சத் திட்டத்தின்படி (அம்சம்16), 3,175 இலட்சம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு, 2,57,700

எக்டர் பரப்பளவில் காடு வளர்ப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசு நிர்ணயித்த இலக்குகள் விஞ்சப்பட்டன.

வான்வழி விதைத்தெளிப்பு மூலமாக உயிரினச் சூழல் மேம்படுத்துதல்

தரம் தாழ்ந்த காடுகளை மேம்படுத்துவதற்கான 46,500 எக்டர் பரப்பளவில் வான் வழி மூலம் விதைத் தெளிப்பு மேற்கொள்ளப்பட்டது.

சமுதாய நிலங்களில் காடு வளர்ப்பு

சுவீடன் பன்னாட்டு நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், சமுதாய நிலங்களில் தரிசு நிலங்கள், குளக் கரைகள், புறம்போக்கு நிலங்கள் போன்றவற்றில் விறகு, தீவனம், சிறுமரங்கள் வளத்தைப். பெருக்க மூன்று ஆண்டுகளில் 50,750 எக்டர் பரப்பளவில் தொகுப்புத் தோட்டம் வளர்க்கப்பட்டு மக்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. இந்த மரத்தொகுப்புகளை வளர்க்க ரூ.68.53 கோடி முதலீடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் இத்திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஐந்து கோட்டங்களும் மூன்று ஆராய்ச்சிப் பிரிவுகளும் வன வள அபிவிருத்தி மற்றும் நீர்வள அபிவிருத்திக்கென, தரமான விதைகள் உற்பத்தி, மண்வளப் பொறியியல் பணிகள், காடுவளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1993-94-ஆம் ஆண்டுவரை 8,200 எக்டர் பரப்பில் ரூ.846 இலட்சம் முதலீட்டில் நிறைவு செய்யப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்- கால்நடைப் பராமரிப்பு இனத்தின் கீழ் தீவன வளர்ப்புத் திட்டம் ஒன்று வனத்துறையால் ரூ.377 இலட்சம் நிதி அளவில் 6,100 எக்டர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

டானிடா உதவி பெறும் மருந்துச் செடிகள்

தமிழ்நாட்டில் மருந்துச் செடிகளின் வளத்தைப் பெருக்க 1993-94-ஆம் ஆண்டில் டானிடா நிதியுதவியுடன் மருந்துச் செடிகள் வளர்க்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 11 இடங்களில் இத்திட்டத்தின் கீழ் மருந்துச் செடிகள் பாது காக்கப்பட்டு உற்பத்தி பெருக்கப்படும்.

இந்த மருந்துச் செடிகள் பாதுகாப்புத் திட்டம் உள்ளூர் மக்கள் நலப் பாரம்பரியத்தை மீண்டும் வலுப்படுத்தும் அமைப்பின் (Foundation for Revitalisation of Local Health Tradition) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

ஆராய்ச்சி விரிவாக்கம்

வனத்துறைத் தலைவரின் (ஆராய்ச்சி) பொறுப்பின் கீழ், வண்டலூரில் மாநில ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு அடிப்படைத் தேவை மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கு என இந்த மூன்று ஆண்டுகளில் ரூ.86 இலட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக விரிவாக்கம்

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 3,000 எக்டர் பரப்பளவில் உயர் விளைச்சல் தரும் பதியன் கன்று தேயிலை வளர்க்கும் திட்டம் ஒன்று ரூ.60 கோடி நிதி இலக்குடன் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

இந்த ஆண்டுகளில் 1,260 எக்டர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. கோத்தகிரி, நெல்லியாளம் பகுதிகளில் ரூ.6 கோடி செலவில் மேலும் இரண்டு தேயிலைத் தொழிற்சாலை கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இக்கழகம் ரூ.235.90 இலட்சம் மதிப்புள்ள 513 டன்கள் தேயிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் - கூழ்மர வளத்தைப் பெருக்குதல்

இக்கழகம் ரூ.85 கோடி நிதி இலக்குடன் 30,000 எக்டர் பரப்பளவில் கூழ்மரத் தோட்டங்கள் வளர்க்கும் திட்டம் 1991-92-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் ஆறு ஆண்டுகளில் நிறைவு செய்யப்படும். இதில் முதல் மூன்று ஆண்டுகளில் 14,900 எக்டர் பரப்பளவில் தோட்டம் வளர்க்கப்பட்டுள்ளது.

சந்தன மர வளத்தைப் பாதுகாத்தல்

சந்தன மரக் குற்றங்கள் 7,445 எண்ணிக்கை கண்டுபிடிக்கப்பட்டு 2,160 டன்கள் சந்தனக் கட்டைகளும், 1,870 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட சந்தன மரங்களின் மதிப்பு ரூ.3,763 இலட்சம். சந்தன மரக் குற்றவாளிகள் 410 பேர் குண்டர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். மொத்த குற்றவாளிகள் 16,309 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வனச் செல்வங்கள் பாதுகாப்பு

வனச்செல்வங்களின் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தவும், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள் மற்றும் சமூக விரோதிகளை எதிர்த்துச் சமாளிக்க உதவியாக அவர்கட்கு அரசு நவீன ஆயுதங்கள், வாகனங்கள், படைக்கலன்கள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன.

பொருள்	ஜூன் 91-இல் இருப்பு	3 ஆண்டு களில் வாங்கப் பட்டவை	மொத்தம்
1. வாகனங்கள்	320	179	499
2. நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள் போன்றவை	57	173	230
3. படைக்கலன்கள்	319	168	487

சேலம் மற்றும் வேலூருக்கு நாய்ப்படைகள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

காடுகளிலிருந்து திருட்டுத்தனமாக விறகு மரம் எடுத்துச் செல்வதைத் தடுக்க 8 இடங்களில் விறகு மர டிப்போக்கள் தொடங்கப்பட்டுள்ளன.

அட்டவணை மரக்குற்றங்களில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களைக் கைப்பற்றி கையகப்படுத்த, திருத்தப்பட்ட வனச்சட்டத்தின்படி 1.10.1992 முதல் "நியமன அலுவலர்களை" நியமிக்க வகை செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது.

சிறப்பு நீதிமன்றங்கள்

சந்தனமரம் மற்றும் இதர அட்டவணை மர வனக்குற்றங்கள் மாவட்ட நீதிமன்றம் மற்றும் இதர நீதிமன்றங்களில் ஆண்டுக்கணக்காக நிலுவையிலுள்ளன. இதுபோன்று நிலுவையிலுள்ள வனக் குற்றங்களைத் துரிதமாக முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் முதல் கட்டமாகத் திருப்பத்தூரில் ஒரு சிறப்பு நீதிமன்றம் மார்ச் 1992-இல் தொடங்கி செயல்பட்டு வருகிறது. சேலத்திற்கு மற்றொரு நீதிமன்றம் அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டு விரைவில் தொடங்க உள்ளது.

தலைமையிடத்தில் ஒரு அதிரடிப்படை

வனக்குற்றவாளிகளின் கடத்தல் செயல்களைத் தடுக்கும் நோக்குடன் ஒரு துணை வனப்பாதுகாவலர் இ.வ.ப. நிலை, தகுந்த பாதுகாப்பு மற்றும் இதரப் பணியாளர்களுடன் ஒரு அதிரடிப்படைத் தலைமையிடத்தில் முதன்மை வனத்துறைத் தலைவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.

மனித வள மேம்பாடு

வனத்துறையின் பாதுகாப்புப் பணியாளர்களின் நல்லொழுக்கத்தை மேம்படுத்தி ஊக்குவிப்பதற்காக, பாதுகாப்புப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.20ஐ இடர் ஏற்புப் படியாக வழங்க அரசு அனுமதியளித்துள்ளது.

வனச்சரகர்கள், வனவர்கள், வனக்காப்பாளர்கள், வனக்காவலர்கள் வரையிலான பதவித் தரத்திலுள்ள 50 வன அலுவலர்களுக்கு விருதுகளும், வெகுமதிகளும் வழங்குவதற்கான செயற்குறிப்புக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

வன அலுவலர்களுக்கும் தகவல் அளிப்பவர்களுக்கும் (வெகுமதியாக) ஊக்கத்தொகையாக ரூ.17.74 இலட்சம் வழங்கப்பட்டது.

பிறப்புரிமை

சமத்துவம் என்பது எவரும் கருணை காரணமாக இடும் பிச்சை அல்ல; அது அனைவருடைய பிறப்புரிமை.

-தந்தை பெரியார்

புதிய திட்டங்கள் செயல்படுத்துதல்

1. ரூ.20 இலட்சத்தில், காடுவளர்ப்பு வனப்பரப்பை அதிகரித்தல், தரம் தாழ்ந்த மலைப்பகுதிகளில் கையினால் விதை தெளித்தல்.

2. ரூ.10 இலட்சத்தில், பல்வேறு பஞ்சாயத்துகளிலும் தனியார் நிலங்களில் சமூகக் காடு வளர்ப்பு.

3. ரூ.7 இலட்சத்தில், ஆற்றுப்படுகை அபிவிருத்தி, பாலார், பெண்ணையார், காவேரி, கோதையார், கெடிலம் போன்ற நதிகளில் மரம் வளர்த்து நேர்ப்படுத்துதல்.

1993-94

1. ரூ.6 இலட்சத்தில், வனப்பாதுகாப்புச் சந்தன மரம் மற்றும் இதரக் குற்றங்களைத் தடுக்க சென்னையில் ஒரு அதிரடிப்படை நியமித்தல்.

2. ரூ.3 இலட்சத்தில், தரம் தாழ்ந்த காடுகளின் மலை இடுக்குகளில் 12,000 இடங்களில் மரக்கன்றுகள் வளர்த்தல்.

வனத்துறை இவ்வாறாகச் சுற்றுச்சூழல் சுருதியுடன் இணைந்து தேவையானவர்கட்குப் பகிர்ந்து அளிக்கும் முற்போக்குச் சிந்தனையுடன் மேம்பாட்டுப் பணிகளைத் துரிதப்படுத்தி ஒருங்கிணைந்து செயல்படுத்துவன் மூலம், இயற்கைச் சூழல் தரத்தை மீட்கவும் அதனை உயிரினங்கள் வாழத் தகுதியானதாக்கவும் தொடர்ந்து முயன்று வருகிறது.

நம் நாட்டின் மொத்த நிலப்பரப்பின் மூன்றில் ஒரு பகுதி வனப்பரப்பாக இருக்க வேண்டுமென்பது தேசிய வனக் கொள்கையாகும். இந்நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு நம் வனத்துறை பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய நெறிமுறைகளின் கீழ், தமிழ்நாடு மாநில வனத்துறை அனைத்து உயிர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மக்களின் ஆதரவையும் ஈடுபாட்டையும் பெற்று வனங்களைப் பாதுகாக்கவும், வனச் செல்வங்களை மேம்படுத்தவும், அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. எனவே, நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனப் பரப்பாக இருக்க வேண்டுமென்ற தேசிய இலக்கினை நாம் விரைவில் எய்துவோம் என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

செய்தித்துறையின் சீர்மிகு பணிகள்

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன்

மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசின் திட்டங்களையும், அவற்றின் செயல்பாடுகளையும் மக்களுக்குத் தெரிய வைத்து, அதன் முழுப்பயன்களும் அவர்களுக்குக் கிடைக்கச் செய்திட வேண்டும் என்னும் தலையாய கொள்கையை செயல்படுத்தி வருவது செய்தி-மக்கள் தொடர்புத்துறை ஆகும்.

சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் வாழுகின்ற அனைத்து மக்களின் ஒட்டுமொத்த நலன்களை மேலோங்கச் செய்திடவும், தமிழகத்தின் தன்னுரிமையை நிலைநாட்டவும் உயிர் கொடுத்துப் பாடுபட்டு வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் நல்லாட்சியில் 'செயல்படுத்தப்படும் ஆற்றல்மிகு திட்டங்களையும், அதனால் விளையும் அளப்பரிய நன்மைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லி பயன்பெறச் செய்வதில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை அரும் பணி ஆற்றி வருகிறது.

சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் திகழ்ந்து, மக்களின் வாழ்க்கை முறைகளை நெறிப்படுத்துவதில் பேரறிஞர் அண்ணாவும், டாக்டர் புரட்சித்தலைவரும் அவர்களைத் தொடர்ந்து மிகவும் சீரிய முறையில் டாக்டர் புரட்சித் தலைவியும் கைக்கொண்ட கருவியான திரைப்படத் துறையை மேம்படுத்த ரூ.14.93 கோடி செலவில் தரமணியில் எழில்மிகு திரைப்பட நகரம் உருவாக்கப் பட்டுள்ளது.



இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனையின் வெளிப்பாடாக, அவரது கலை நுணுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக, திரையுலகின் மணிமகுடம் எனப் போற்றும் வகையில் சர்வதேசத் தரத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இத் திரைப்பட நகருக்கு, திரையுலக வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு வரும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெயரால், 'ஜெயலலிதா திரைப் பட நகர்' என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.

எழில்மிகு 'ஜெயலலிதா திரைப்பட நகரில்' உட்புற, வெளிப்புறப் படப்பிடிப்பு நடத்திட அனைத்து வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. உட்புறப் படப்பிடிப்பு நடத்த, குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்பு நிலையமும், நீதிமன்றம், காவல் நிலையம் முதலியனவும் அமைக்கப்பட்டுள்ளன.

வெளிப்புறப் படப்பிடிப்பு மேற்கொள்ள கிராமியச் சூழல், நகர்ப்புறம், கோவில் மற்றும் மொகலாயத் தோட்டம், இத்தாலியத் தோட்டம், ஜப்பானியத் தோட்டம், இங்கிலாந்து புல் வெளிகள் போன்றவையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை தவிர, குழந்தைகளின் பொழுது போக்குக்காக, கணினி மூலம் இயங்கும் படம், இராட்டினம், டோரா டோரா, குதிக்கும் பலூன் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், குளிர்சாதன வசதியோடு கூடிய ஒரு முன்னோட்டக் காட்சித் திரையரங்கு ஒன்றும், திறந்தவெளித் திரையரங்கு ஒன்றும் இடம் பெற்றுள்ளன. திரைப்படத் துறையினரின் பொழுதுபோக்கிற்காகக் குளிர் சாதன வசதியுடன் கூடிய குடியிருப்புகள், நீருக்கடியில் படப்பிடிப்பு நடத்துவதற்குரிய நீச்சல் குளம், உணவு விடுதி ஆகியவையும், வெளிப்புற விளையாட்டு வசதிகளுடன் கூடிய ஒரு பொழுதுபோக்குச் சங்கமும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

திரைப்பட மற்றும் வீடியோ சம்பந்தப்பட்ட மாணவர்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் வகையில் திரைப்பட ஆவணக் காப்பகம், வீடியோ நூலகம் மற்றும் நூல் நிலையமும் அமைக்கப்பட்டு வருகின்றன.

விரைவிலே திறப்பு விழா



நடைபெறும் நிலையில் அனைத்துப் பணிகளும் முடிந்த நிலையில் இருக்கும் 'ஜெயலலிதா திரைப்பட நகர்' இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டமாகும். 'ஜெயலலிதா திரைப்பட நகர்' தொடங்கப்பட இருப்பதை இந்தியாவில் இருப்பவர்கள் மட்டுமல்லாது, அனைத்துலக திரைப்பட வல்லுநர்களும், வீடியோ நிபுணர்களும் ஆவலாக எதிர்நோக்கி இருக்கிறார்கள் என்றால் அது மிகையல்ல.

சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில் நுட்பப் பணியாளர்களை ஊக்குவித்து உற்சாகமளிக்கும் வகையில் பரிசுகளும், விருதுகளும் வழங்கி வருகிறது தமிழக அரசு.

தமிழகம் காக்க வந்த தலைமகன் பேரறிஞர் அண்ணா, சமுதாயக் கேடுகளை நெருப்பு வார்த்தைச் சாட்டையால் அடித்த புரட்சிக்கவி பாரதிதாசன், திரையுலகப் பெருமை காத்த இராஜா சாண்டோ, பாரத ரத்னா டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பெயராலே கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகளைத் தமிழக அரசு வழங்கி வருகிறது.

மேம்பட்ட கலை இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டுகோல்- பண்பட்ட பண்பாட்டின் சிறப்புக்கு வித்து- திரைப்படத் துறை அழியாமல் காக்கும் அன்னைக் கரத்திற்கு சொந்தக்காரர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெயரால் 'ஜெயலலிதா விருது' என்னும் சிறப்பு விருது புதிதாக ஏற்படுத்தப்பட்டு, திரைப்படத் துறையில் நீண்டகாலம் சிறந்த முறையில் தொண்டாற்றிய கலை வித்தகர்களுக்கு, அவர்களின் சேவையைப் பாராட்டித் தமிழக அரசு இவ்விருதுகளை வழங்குகிறது.

சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்குப் பரிசாக முதற்பரிசு ரூ.1,25,000, இரண்டாவது பரிசு ரூ.75,000, மூன்றாவது பரிசு ரூ.50,000, சிறப்புப் பரிசு ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்கப்படுகின்றது.

குறைந்த செலவில் சமுதாய நோக்குடன் கூடிய நல்ல தரமான திரைப்படங்கள்தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நோக்குடன் மான்யத்தை தமிழக அரசு ரூ.3 இலட்சம் ஆக உயர்த்தி 75 திரைப் படங்களுக்கு ரூ.225 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், திரைப்படத் துறையினருக்கும், திரைப்படக் கலைஞர் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்களின் குழந்தைகளுக்கும் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்தில் சேர சலுகைகள் வழங்கியும், படப்பிடிப்பு நடத்த ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறையைக் கொண்டு வந்தும், வீடியோ திருட்டுக்களைத் தடுக்கவும், கேபிள் டி.வி. முறைப்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் உள்ளார் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

எவரும் எதிர்பாராத வகையில், தமிழ்நாட்டின் திரைப்படத் தொழிலே நசிந்துபோகுமோ, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வேலை வாய்ப்பு இழந்து தவிக்க

நேருமோ என்று அனைவரும் அஞ்சும் வகையில், 1993-ஆம் ஆண்டில் மாபெரும் சிக்கல் ஏற்பட்டபோது, ஆறு மணி நேரத்திற்குத் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி 14 அம்சத் திட்டங்களை அறிவித்து, சிக்கல் தீர்த்து வைத்தவர் டாக்டர் புரட்சித்தலைவி.

தியாகத் தலைவர்கள் நினைவு போற்றல்

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீளாத் துயில் கொண்டிருக்கும் இடத்தை, சீர்மிகு நினைவகமாக தாமரை இதழ்கள் கவிழ்ந்து தண்மை சேர்ப்பது போல, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களே மாற்றி வடிவமைத்துத் தொடங்கி வைத்தார்கள். அதுமட்டுமல்ல; புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை, அவர்தம் சீரிய கருத்துக்களை, செம்மை மிகு சாதனைகளை விளக்கும் காட்சிகள் கொண்ட ஒலி -ஒளிக் காட்சி நடத்த டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், பேரறிஞர் அண்ணா அவர்களது நினைவிடத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகம் போன்றே புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவக வளாகத்தில் எம்.ஜி.ஆர் அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.

கேரள மாநிலத்தில் வைக்கத்திலே "கோவிலுக்குள் நுழையக் கூடாது; தெருவில் நடமாடக் கூடாது; நடந்தால் தீட்டு; பட்டால் பாவம்" என்று ஒரு குறிப்பிட்ட சமூகத்தை ஒதுக்கி வைத்தார்கள். நாய் நடக்கலாம், கழுதை கனைக்கலாம், எருமை ஓடலாம், பன்றி பவனி வரலாம், ஆடு வரலாம், மாடு வரலாம், ஆனால், ஒரு பஞ்சமன் வரக் கூடாது என்று இருந்த தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து, தந்தை பெரியார் போராடினார்; அதிலே வெற்றி கண்டார். அதை நினைவுகூரும் வகையிலே ரூ.15 இலட்சம் செலவிலே புரட்சித் தலைவி அவர்களின் சார்பிலே

அங்கே ஒரு நினைவகம் எழுப்பப் பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காலத்தின் தூதுவனாய், அறிவு என்னும் கண் கொடுத்த நாயகனாய், மடமை வேரின் மூலத்தைக் கண்டறிந்து தகர்த்து வீசிட மூண்டெழுந்த பேர் இடியாய், தமிழன் இந்த ஞாலத்தில் தலை நிமிர்ந்து வாழ்வதற்குப் பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் வெற்றியை எடுத்துக் காட்டும் வகையில் வைக்கத்தில் ஆண்டுதோறும் அரசு விழா நடத்தப்படும்.

நாட்டு நடப்பிலும், சமுதாய அமைப்பிலும் திருப்புமுனையாக அமைந்த சரித்திர நிகழ்ச்சிகள் பற்றியும் அதற்கு அடிப்படையாக இருந்த மாபெரும் தலைவர்கள் பற்றியும் எடுத்துச் சொல்ல இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள டாக்டர் அம்பேத்கர், சர்.பிட்டி தியாகராயர், பாவேந்தர் பாரதிதாசன், காயிதேமில்லத், பெருந்தலைவர் காமராஜர், வ.உ.சிதம்பரனார், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், மூதறிஞர் இராஜாஜி, மகாகவி பாரதியார், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், கவியரசு கண்ணதாசன், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் ஆகிய பெருந் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை அனைத்து மாவட்டங்களிலும் அழகுற நடத்திக் கொண்டிருக்கிறது தமிழக அரசு. அது மட்டுமின்றி, விடுதலை நாள், தேசிய மறு சமர்ப்பண நாள், தேசிய ஒருமைப்பாடு வாரம், மனித உரிமை நாள் ஆகிய விழாக்களையும் அரசு நடத்தி வருகிறது.

மகாகவி பாரதியார் வாழ்ந்த திருவல்லிக்கேணி இல்லம் ரூ.5.79 இலட்சம் செலவில் கையகப்படுத்தப்பட்டு ரூ.5 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு, அவரது புகழ் கூறும் நினைவிடமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 9 அடி உயர வெண்கலச் சிலையை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் ரூ.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. மேலும் அங்கு அவரது வெண்கலச் சிலை ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் பொன்விழா ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் கிண்டி காந்தி மண்டபத்தில் ரூ.3 இலட்சம் செலவில் உருவாக்கப் பட்ட நினைவுத்தூணை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்துவைத்தார்கள்.

இதுமட்டுமின்றி, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது நல்லாட்சி எதிர்வரும் ஆண்டில் இன்னும் பல புதிய திட்டங்களைச் செயல் படுத்த உள்ளது.

"காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக்குக் கூழுமில்லை, பாழுக்கு உழைத்தோமடா, பசையற்றுப் போனோமடா, கோடிக்கால் பூதமடா, தொழி

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

செழிப்பான வாழ்விற்கு
இன்றே முதலீடு செய்வீர்

கிசான் விகாஸ் பத்திரம்

உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை

ஆண்டுகள்	தொகை
2½ ஆண்டுகளில்	ரூ.1,310/-
3 ஆண்டுகளில்	ரூ.1,420/-
3½ ஆண்டுகளில்	ரூ.1,500/-
4 ஆண்டுகளில்	ரூ.1,620/-
4½ ஆண்டுகளில்	ரூ.1,730/-
5 ஆண்டுகளில்	ரூ.1,860/-
5½ ஆண்டுகளில்	ரூ.2000/-

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

2%

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பிரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை
சயர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006.
தொலைபேசி: 8251784/8251685.

DIPR/519/DIS/94

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

ல் உலக அரங்கில் ஓங்கும் தமிழகம்

மாண்புமிகு கல்வி அமைச்சர்
பராசிரியர் திரு க. பொன்னுசாமி

இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் இன்று இணையிலாப் புகழுடன் விளங்கும் மனித நேய மாமணி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலம், தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுவரும் பொற்காலமாகும்.

காட்சிக்கு எளியராய்க் கடுஞ்சொல் கூறா மாட்சிமை உடையராய்த் தமிழகத்தின் ஆட்சிக்கு அழகு சேர்க்கும் அற்புதமாய் விளங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தாம் ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று ஆண்டுக் காலத்தில், ஏழை எளியவர்கள் எல்லாம் ஏற்றம் பெறும் வகையில் – பல்வேறு துறைகளிலும் படைத்துள்ள சாதனைகள் மூலம், "உன்னத இமயம் போல ஓங்கிடும் கீர்த்தி எய்தி" உயர்ந்து விளங்குகிறார்கள் என்பதனை உறுதியுடன் தெரிவிப்பதில் உவகை அடைகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த அளவில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கடந்த மூன்றாண்டுகளில் நிகழ்த்தியுள்ள சாதனைகள், இதுவரை வரலாறு காணாதவையாகும்.

நிதி ஒதுக்கீட்டைப் பாருங்கள்!

1991-92 இல் நிதி ஒதுக்கீடு ரூ.1299 கோடி.

1994-95 இல் நிதி ஒதுக்கீடு ரூ.2002 கோடி.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நிலையில் அதாவது 1991-92 இல் கல்வித்துறையில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.1299 கோடியாகும். கடந்த மூன்றாண்டுகளில் ஏறத்தாழ ரூ.803 கோடி அதாவது 62 சதவிகிதம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து மிகப் பெரிய சாதனை செய்துள்ளார்கள். இதன் மூலம் தமிழகக் கல்வி மேம்பாட்டில் தமக்குள்ள ஆர்வத்தினையும், ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்ளைச் சார்ந்த குழந்தைகள் எல்லாம் தரமான கல்வியைத் தடையின்றிப் பெற வேண்டும் என்பதில் தமக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டையும் புலப்படுத்தியுள்ளார்கள், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

இந்தியாவுக்கே வழிகாட்டும் தமிழகத்தின் தொடக்கக் கல்வி

அகிலம் புகழும் அன்னை தெரசா அவர்கள் அண்மையில் சென்னை வந்தபோது, புரட்சித் தலைவி அவர்களின் இல்லம் தேடிச் சென்று அவர்களைப் பாராட்டிய புதுமைத் திட்டம் "முதலமைச்சரின் 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம்" ஆகும்.

இந்தியாவுக்கே வழிகாட்டும் இம்முன்னோடித் திட்டம், மனித ஆற்றல் முழுமையையும் குழந்தைப் பருவம் முதல் ஒருங்கே சீராகப் பேணி வளர்த்திட மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சீரிய திட்டமாகும். இதன் 8-வது அம்சம் "குறைந்தது 5-வது வகுப்புவரை குழந்தைகள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும் என்பது சட்டமாக்கப்படும்" என்பதாகும். இதன்படி "தொடக்கக் கல்வி" எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி' எனச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்படிச் சட்டமாக்கும் முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம்தான் என்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். இது தகுந்த முறையில் பெற்றோர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு வலியுறுத்தப்படும்.

பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்ந்து பயில வகை செய்யப்பட வேண்டும் என்பது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசின் உயரிய குறிக்கோள் ஆகும். இதை நிறைவேற்றும் வகையில், 6-14 வயதுடைய குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும் பணியும், பள்ளிப் படிப்பை இடையில் விடும்

லாளி கோபத்தின் ரூபமடா!"- என்று வீரக்கனல் எழுப்பும் வகையில் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அமரர் ஜீவா பிறந்த பூதப்பாண்டியில் அவர் பிறந்த இல்லம் அரசின் சார்பில் நினைவிடமாக்கப்படும்.

கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு, பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அழகுமுத்துக் கோன் நினைவாக நெல்லைச் சீமையில் அரசு சார்பில் விழா நடத்தப்படும்.

18 -ஆம் நூற்றாண்டில் பரங்கியரை எதிர்த்துப் போரிட்டு 24 ஆண்டுகள் வெஞ்சிறையில் வாடிய 'ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி' நினைவாக விழா நடத்தி சிலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மண்ணருமை, பெண்ணருமை, பொன்னருமை வெறுத்துவிட்டு, 'என்னருமைத் தாயகமே என் உரிமை' என்று சொன்ன முத்து ராமலிங்கத் தேவரின் பிறந்தநாள் விழா மாநில அளவில் கொண்டாடப்பட உள்ளது.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களின் நினைவாக அவர் பிறந்த ஊரான பட்டுக்கோட்டையில் எழில்மிகு நினைவகம் அமைக்கப்பட உள்ளது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவாக நாமக்கல் நகரில் அவர் வாழ்ந்த இல்லம் நினைவிடமாக்கப்பட உள்ளது.

உரிமைப் போரில் முன்னின்று தமிழினத்தின் மானம் காத்த மருது சகோதரர்கள் நினைவாக திருப்பத்தூரில் நினைவிடமும் சிலையும் அமைக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று போராடி உண்ணாநோன்பிருந்து உயிர் விட்ட தியாகி சங்கரலிங்கனார் சிலை சென்னை மாநகரில் திறந்து வைக்கப்பட உள்ளது.

தமிழ்த்தென்றல் திருவி.க. அவர்



களின் நினைவாகவும், விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் நினைவாகவும், தாழ்த்தப்பட்ட இனத்து மக்களின் மேம்பாட்டுக்குப் பாடுபட்ட சென்னை நகர முன்னாள் மேயர் சிவராஜ் நினைவாகவும் சென்னை நகரில் சிலை அமைக்கப்பட உள்ளது.

சென்னை வண்ணாரப்பேட்டையிலுள்ள சர்.பிட்டி.தியாகராயர் அவர்களின் சமாதி அமைந்துள்ள இடம் அரசு நினைவிடமாக ஆக்கப்படும்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள வ.வே. சுப்பிரமணியம் அவர்களின் நினைவில்லம் ரூ.1,25,000 செலவில் பழுதுநீக்கி மேம்படுத்தப்பட உள்ளது.

உலகப் பொதுமறை தந்து, வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகைக்கு கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையை அடுத்துள்ள சிறிய பாறை மீது 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை ரூ.3.60 கோடி செலவில் நிறுவப்படவுள்ளது.

செப்பனிடுதல் - சீர்படுத்துதல்

192 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட இராஜாஜி மண்டபத்தை ரூ.17.97 இலட்சம் செலவில் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தனியார் பத்திரிகைகளைவிட கவர்ச்சியான அட்டையுடன், எளிய கருத்துக்களுடன் அரசு நலத்திட்டச் செய்திகளை வெளியிட்டு வருகின்றது "தமிழரசு".

சந்தாதாரர் முகவரிகளை அச்சடிக்கும் பழைய 'பிராட்மா' முறையிலிருந்து கணினி மூலம் அச்சடிக்க ரூ.1.10 இலட்சம் செலவில் 'தமிழரசு' அச்சகத்திற்குப் புதிய கணினி வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரைப்படக் கல்லூரியிலுள்ள நூல் நிலையத்தை ரூ.3 இலட்சம் செலவில் நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையில் கலைவாணர் அரங்க வளாகத்தில் அமைந்துள்ள மாநிலச் செய்தி நிலையத்தை மேம்படுத்தும் வகையில், ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொருட்காட்சிகள்

1994- 95-இல் வேலூர், கடலூர் ஆகிய இரு இடங்களிலும் கூடுதலாக அரசுப் பொருட்காட்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறிய நகரங்களில் வாழும் மக்களும் பொருட்காட்சிகளைக் காணும் வகையில் தூத்துக்குடி, இராமநாதபுரம், காரைக்குடி, கிருஷ்ணகிரி, திருப்பூர் ஆகிய ஐந்து நகரங்களில் சிறிய அளவிலான பொருட்காட்சிகள் 1994- 95-ல் நடத்தப்படும்.

பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் அரசின் வளர்ச்சிப் பணிகள், பலன்கள் குறித்து, ஏற்கெனவே சிதம்பரனார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பல்துறைப் பணி விளக்க முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. மேலும் 4 மாவட்டங்களில் ரூ.12 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

திரைப்படப் பிரிவு

இந்தியாவிலேயே மாநில அரசால் நடத்தப்படும் ஒரே நிறுவனமான தமிழ்நாடு அரசின்

கிடைத்தற்கரிய செல்வம்!

கலை உலகில் ஈடுபட்டிருப்போர் பெரிதும் எதிர்நோக்குவது, வெறும் பணமும், பொருளும் ஈட்டுவது மட்டுமல்ல. அவர்கள் தேடும் செல்வம் ஓரளவு தான் திருப்தியையும், மகிழ்ச்சியையும் அளிக்கும். ஆனால், உண்மையான வெற்றியால் தங்களது கலைப்படைப்புகள், மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, மதிக்கப்பட்டு, பாராட்டினைப் பெறும்போதுதான், அதனை கிடைத்தற்கரிய செல்வமாகத் திரை உலகக் கலைஞர்கள் கருதுகின்றார்கள்.

அந்த வகையில் மாநிலத் 'திரைப்பட விருதுகள்' பெறும் ஒவ்வொரு வரும், அவர்கள் நடிகர்களானாலும் சரி, நடிகையரானாலும் சரி, அல்லது தொழில்நுட்ப வல்லுநர்களானாலும் சரி, இந்த விருதுகளை, தங்களது கலைத் திறமைகளுக்கு அளிக்கப்படும் மாபெரும் அங்கீகாரமாகக் கருதுகிறார்கள். இதனைப் பெறும்பொழுது பெருமை கொள்கிறார்கள். இத் துறையில் மேலும் பல சாதனைகள் புரிய ஊக்குவிக்கும் தூண்டுகோலாக இதை நம்புகிறார்கள். அதனால்தான், இந்தத் திரைப்பட விருதுகள் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று, தமிழ்த் திரைப்படத் துறையைச் சார்ந்த அனைவருமே பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். விரும்புகிறார்கள்.

அந்த வகையில் இன்று நீங்கள் பெறுகிற ஒவ்வொரு பரிசிலும், உங்கள் சகோதரியின் பாசமும் இழையோடியிருக்கிறது

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-விருந்து.

திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிலையம் திரைத் துறையின் பல்வேறு பிரிவிலும் புதிய புதிய கலைஞர்களை உருவாக்கி வருகிறது.

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, மாநிலம் முழுவதிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், அரசின் மக்கள் நலத்திட்டங்களையும் படமாக்கி, செய்தி மலர் வெளியிட்டும், விளக்கப் படங்கள் தயாரித்து அளித்தும் மக்கள் கண்டு ரசித்து அதே நேரத்தில் சிந்தனைத் தெளிவும் பெறத்தக்க வகையில் ·வெளியிட்டு வருகின்றது

பத்திரிகையாளர் நலன்

செய்தித்துறையின் தோளோடு தோள் சேர்ந்து பணி செய்யும் பத்திரிகையாளர்களை மறக்கவில்லை இவ்வரசு. சென்னைப் பத்திரிகையாளர் சொந்த வீடு கட்டிக்கொள்ள ரூ.20 இலட்சம் அரசு மானியத்துடன் 5.5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. செய்தியாளர்கள் வீடு கட்டிக்கொள்ள அரசு மானியமாக வீடொன்றிற்கு ரூ.40 ஆயிரம் வீதம் ரூ.50 இலட்சம் வரை வழங்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள நலிவுற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.500-ஆக உயர்த்தப்பட்டு உள்ளது.

சிறப்பு வெளியீடுகள்

அரசின் செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்க தமிழிலும் ஆங்கிலத்திலும் 'தமிழரசு' இதழை வெளியிட்டு வருகிறோம். மேலும், பல்வேறு நிகழ்ச்சிகளில் டாக்டர் புரட்சித்தலைவி ஆற்றிய சீர்மிகு உரைகளைத் தொகுத்து 'புரட்சித் தலைவியின் முழக்கம்' எனத் தமிழிலும், 'Jayalalitha speaks' என்று ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. இந்தச் சிறப்பு வெளியீடு, காலங்கள் பல கடந்தாலும் புகழ் மங்காது மறையாது நிற்கும் வகையில் அரியதொரு தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

இயற்கை இன்னல்களை எதிர்த்து வெற்றி கண்டும், செயற்கை அல்லல்களைத் தூசு எனத்துடைத்தெறிந்தும் மக்கள் தொண்டு ஒன்றே எம் பணி என அயராது அல்லும் பகலும் பாடுபட்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றி வரும் அளப்பரிய பணிகளின் ஒரு சிறு துளியே மேலே சொல்லப்பட்ட சாதனைகள். அன்புக்குரிய அன்னையாம், ஆற்றல்மிகு தலைவியாம், போற்றுதலுக்கு உரிய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் நல்லாட்சியில் தமிழகம் இன்னும் பல கோடி நன்மை பெறும் என்பது உறுதி.

போக்கைத் தடுக்கும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பயனாகக் கடந்த மூன்றாண்டுகளில் 6.33 இலட்சம் குழந்தைகள் கூடுதலாகத் தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

6-14 வயதுடைய குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்படுதவதில் இந்தியாவில் தமிழகமே முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும்-

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்.

இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்.

இலவசச் சீருடைத் திட்டம்.

இலவசக் காலணி வழங்கும் திட்டம்.

பள்ளி செல்லும் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்.

முதல் வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசக் கல் பலகைகள் வழங்கும் திட்டம்.

முதலிய நலத் திட்டங்களுடன் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் மூன்றாண்டுக்கால அரசினால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மிக முக்கியக் காரணங்கள் ஆகும்.

■ ஒரு கி.மீ. இடைவெளியில் ஒரு தொடக்கப் பள்ளியேனும் அமைக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில் கூடுதலாக 464 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

■ 2678 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

■ தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் பெண் ஆசிரியைகளே நியமனம் செய்யப்படுகின்றனர்.

■ 74 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

■ கட்டட வசதி இல்லாத பள்ளிகளுக்கு இரண்டு அறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டித் தரப்படுகின்றன.

நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துதல்

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவியல் சிந்தனை மிகுந்தவர்கள். தமிழக மாணவர்கள் அறிவியல் திறனுடன் வளரவேண்டும் எனும் நோக்கத்தில் அறிவியல் கல்வியை மேம்படுத்தி வருகிறார்கள்.

- முதலாம் கட்டமாக 1159 நடுநிலைப் பள்ளிகளுக்கு 19.08 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

- இரண்டாம் கட்டமாக 1151 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.13.24 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

- மூன்றாம் கட்டமாக 328 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.3284 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- எஞ்சியுள்ள 2002 நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் பெட்டகங்கள் வழங்கிட ரூ.40.04 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய முயற்சியின் விளைவாக உலக வங்கித் திட்டத்தின் மூலம் கிடைக்கும் ரூ.120 கோடி நிதி உதவியில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் தமிழகத்தில் 4 மாவட்டங்களில் செயல்படுத்தப் படவிருக்கிறது.

இத்திட்டம் தருமபுரி, விழுப்புரம் ராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில், ஊரகப் பகுதிகளில் தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்திடப் பயன்படும்.

இத்திட்டத்தின் செயலாக்கம் காரணமாக, தமிழகத்தில் தொடக்கக் கல்வி மேலும் செழித்து தழைத்து விளங்கும்.

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கல்வி

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் 338 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 225 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தியுள்ளது.

இவற்றின் மூலம் குழந்தைகள் நெடுந்தொலைவு சென்று கல்வி கற்கும் சிரமம் நீக்கப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக 326 இடைநிலைப் பணியிடங்களும் 209 பட்டதாரி-தமிழாசிரியர் பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டுப் பாட போதனையில் முன்னேற்றம் கண்டு உள்ளது.

மகளிர் கல்வி

மகளிர் கல்வி என்பது சமூக ரீதியில் ஒரு சிறப்பான அம்சமாகும். மேல்நிலைக் கல்வி வரை மாணவிகள் தடையின்றிப் படிக்க பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் 8-ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்குத் திருமண நிதி உதவி வழங்கப்படுகிறது. பள்ளிகளில் அதிக அளவில் ஆதி திராவிட மாணவியர்களைச் சேர்க்கும் தலைமையாசிரியர்களுக்கு ஊக்கப்பரிசு வழங்கும் புரட்சித்தலைவி அவர்களின் இத்திட்டத்தினால் ஆதி திராவிட மாணவியரின் பள்ளிச் சேர்க்கை அதிகரித்துள்ளது.

கிராமப்புற மாணவர்களின் அறிவுத் திறன் மேம்பாட்டுத் திட்டம்

கிராமப்புறங்களில் வாழும் மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் 1991-92 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் 100 மாணவ மாணவியர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000 வீதம் ஊக்கத் தொகையாக 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை நான்காண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதி மாணவர்களின் சீரான அறிவு வளர்ச்சி கருதி, புரட்சித்தலைவி அரசு மேற்கொண்டுள்ள சீரிய திட்டமிது.

எல்லாப் புத்தகங்களையும்விடச் சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தை விட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

தொழிற் கல்விக்கு உயர் மட்டக் குழு

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வியைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துதல், தற்கால இயல்புகளுக்கு ஏற்பப் பாடத் திட்டத்தைத் திருத்தி அமைத்தல், தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சியளித்தல் போன்றவற்றை ஆய்ந்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்கிட உயர்மட்டக்குழு ஒன்று புரட்சித்தலைவி அவர்களின் ஆலோசனைப்படி அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு வழங்கும் பரிந்துரைகள் அடிப்படையில் தொழிற்கல்வி விரிவாகச் செயல்படுத்தப்படும்.

அறிவியல் கல்வி

அறிவியல் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு ரூ.12.13 கோடி செலவில் 3302 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

கட்டட வசதிகள்

உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கட்டட வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.75 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்விப் புரவலர் திட்டம்

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைகள் படி, தமிழகக் கல்வி வளர்ச்சிப் பணிகளில் பொதுமக்களின் ஈடுபாட்டை ஈர்க்கும் வகையில், ரூ.1000 வீதம் நன்கொடை வழங்கும் கொடையாளர்களைத் திரட்டும் பள்ளிக் கல்விப் புரவலர்த் திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் ரூ.3.37 கோடி சேமிக்கப்பட்டு, இத்தொகையின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, அந்தந்தப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்

பள்ளிக்கூடங்கள், மக்களின் நல நிலையம் என்பதை அவர்கள் உணரும் வகையில் நடத்தப்படும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம், பள்ளிகளின் வளர்ச்சிக்காகக் கட்டடமாக, இருக்கைகளாக, அறிவியல் கூடப் பொருள்களாக, நிலமாக, விளையாட்டுப் பொருள்களாக, இன்ன பிறவாக அறச் சிந்தனை வாய்ந்தவர்களிடமிருந்து நன்கொடைப் பொருள்கள் திரட்டப்பட்டுள்ளன. இப்பொருள்கள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள பள்ளிகளில் கற்பித்தல், கற்றல் பணிகள் சிறப்பாக நடைபெற உதவி வருகின்றன.

இவ்வகையில் கடந்த ஆண்டில் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் பள்ளிகளுக்குக் கிடைத்துள்ளன.

இத்தகைய மாநாடுகள் தமிழகக் கல்வி வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடத் தூண்டுகின்றன.

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி

தமிழகத்தில் ஆசிரியர் கல்வியை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட இவ்வியக்ககத்தின் கீழ், 14 மாவட்டங்களில் மாவட்டக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறு

வனங்கள் செயல்பட்டு வந்தன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசு அமைந்தபின் மேலும் 7 மாவட்டங்களுக்குப் புதிதாக இந்த நிறுவனங்கள் அமைக்கப்பட்டு தற்போது 21 மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள், ஆசிரியர்களுக்கு அவ்வப்போது புத்தொளிப் பயிற்சிகளை வழங்கிக் கற்பித்தல் முறைகளில் மேம்பாடுகளைப் புகுத்தி வருகிறது.

புரட்சித்தலைவி சீர்மிகு உயர் பள்ளிகள்

கிராமப் புறங்களில் வாழும் வறுமை நிலையில் உள்ள சிறந்த மாணவர்கள் பயன்பெறும் வகையில் "புரட்சித்தலைவி சீர்மிகு உயர் பள்ளி" எனும் பெயரில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இலவச விடுதி வசதியுடன் உடனுறைப் பள்ளிகள் அமைக்க புரட்சித்தலைவி அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி பர்கூரில் கடந்த ஆண்டு முதல் முன்னோடிப் பள்ளியாக முதலில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பள்ளிகள் பிற மாவட்டங்களிலும் படிப்படியாக நிறுவப்படவிருக்கின்றன.

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம்

தமிழ்நாடு எழுத்தறிவில் இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்கள் வரிசையில் இரண்டாம் இடம் பெற்றுச் சிறந்து விளங்குகிறது.

தமிழகத்தில் வாழும் எழுத்தறிவு இல்லாத மக்கள் எல்லோருக்கும் எழுத்தறிவு நல்கும் அறிவொளி இயக்கப் பணிகள் தமிழகத்தின் 18 மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. புரட்சித்தலைவி அவர்கள் அரசின் தீவிர நடவடிக்கைகள் காரணமாகப் புதுக்கோட்டை, காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்கள் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களாக வளர்ச்சி பெற்றுள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் இத்திட்டம் தீவிரமாய்ச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995 இறுதிக்குள் இத்திட்டம் மாநிலம் முழுவதும் நிறைவேற்றப்பட்டு 'தமிழகம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலம்' எனும் சிறப்பைப் பெறும்.

அறிவொளித் தொடர் கல்வித் திட்டம்

எழுத்தறிவு பெற்றவர்கள் தொடர்ந்து கற்ற எழுத்தறிவினை வளர்த்துக் கொள்ள உதவும் வகையில் அறிவொளித் தொடர்க் கல்வித் திட்டமும் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டம்

பள்ளிப் படிப்பை இடையில் விட்ட, பள்ளிக்கே செல்லாத 6-14 வயதுடைய குழந்தைகள் கல்வி பெற்றுத் திரும்பவும் பள்ளிக் கல்வியைத் தொடர வாய்ப்பளிக்கும், இத்திட்டம் 1.5 இலட்சம் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். இதன் மூலம் 15 இலட்சம் பேர் பயன்பெறுவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கல்லூரிக் கல்வி

பெண்கள் முன்னேற்றத்தில் தீவிர கவனம் செலுத்தும் புரட்சித்தலைவி அவர்களின் அரசு, கல்லூரிக் கல்வியில் பெண்களுக்கு அதிக முன்னுரிமை வழங்குவதில் பெரிதும் நாட்டம் கொண்டு உள்ளது.

பெண்களுக்கெனத் தனியே கல்லூரிகள் இல்லாத இடங்களில் உள்ள ஆடவர் கல்லூரிகளில் 30 சதவிகிதத்திற்குக் குறையாமல் மாணவிகள் சேர்க்கப்படுகின்றனர்.

கடுமையான நிதி நெருக்கடிகளுக்கிடையிலும், புரட்சித்தலைவி அவர்கள் தருமபுரி மாவட்டம் பர்கூரில் புதிய மகளிர் கல்லூரி ஒன்றைத் தமிழ்நாடு அரசின் சார்பில் ஏற்படுத்தி உள்ளார்கள். வேலை வாய்ப்புக்கு வழிகாட்டும் பாடப்பிரிவுகள் இக்கல்லூரியில் கற்பிக்கப்படுகின்றன.

மேலும், இவ்வாண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.35.57 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு முன்னுரிமையுடைய பாடப்பிரிவுகளுடன் மேலும், ஒரு மகளிர் கல்லூரியைத் தொடங்கவும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு திட்டமிட்டுள்ளது.

சுயநிதிக் கல்லூரிகள்

அரசின் நிதி நெருக்கடி காரணமாக, புதிதாகக் கல்லூரிகள்

■ கல்வி கற்பது என்பது வெறும் அறிவைப் பெற்று, ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை, முழுவதுமாக உணர்ந்துகொண்டு சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான் கல்வி.

****

■ கல்விதான் எத்தனையோ ஏழைக் குடும்பங்களில் ஒளியேற்றி, அவர்களுக்கு வாழ வழி காட்டியுள்ளது. அந்த அடிப்படையில்தான் இன்று கல்விக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறது எங்கள் அரசு.

அரசின் சார்பில் தொடங்குவதில் மிகுந்த சிரமம் உள்ளது. இதன் காரணமாக 1993-94 இல் 14 அரசு உதவி பெறாத கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், ஓர் உதவி பெறாத உடற்கல்விக் கல்லூரியையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

மாநில அளவிலும், தேசிய அளவிலும், உயர்கல்வி ஒருங்கிணைப்புக்காக 'தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்' டாக்டர் புரட்சித்தலைவி அரசினால், அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. பல்கலைக் கழகங்களுக்கிடையே இணக்கமான உறவை ஏற்படுத்தவும், பாடத்திட்டங்கள், பயிற்சி முறைகள், தேர்வு முறைகளில் தேவையான மாற்றங்களைப் புகுத்தவும், உயர்கல்வி மன்றம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

தொழில்நுட்பக் கல்வி

அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டு வருவதால் தொழில் வாய்ப்புகள் பெருகிவரும் இந்நாளில், தொழில்நுட்பக் கல்வியறிவு, செறிவுடன் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் புரட்சித்தலைவி அவர்களின் அரசு பாடுபட்டு வருகிறது.

பர்கூரில், 1994-95 இல் புதிய அரசு பொறியியல் கல்லூரி ஒன்றை நிறுவிட தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் அமைந்துள்ள 55 தொழில்நுட்பப் பயிலகங்கள் பயன்பெறும் வகையில், ரூ.76 கோடி உலக வங்கியிலிருந்து கடன்பெற ஏற்பளித்து நிதியுதவி பெற்றுள்ளது. மாணவ மாணவியரின் பயிற்சித் திறனை மேம்படுத்தும் வகையில் புதிய இயந்திரங்கள், தளவாடங்கள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், 40 புதிய பட்டயப் படிப்பு மற்றும் 12 பட்டய மேற்படிப்பு வகுப்புகள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டன. பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும், தொழில்நுட்ப இயக்கத்திலும் கணினி வசதிகள் படிப்படியாகச் செய்து தரப்படுகிறது. இத்திட்டத்திற்குப் புரட்சித்தலைவி அரசு ரூ.15 கோடி நிதியுதவி செய்துள்ளது.

கோவை அரசினர் பொறியியல் கல்லூரியில் ஆய்வகக் கட்டடங்கள் கட்ட ரூ.6 இலட்சம் தற்காலிகமாக ஒதுக்கியுள்ளது.

தமிழகத்தில் தொழில்நுட்பக் கல்வியறிவு பெருக மேலும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விளையாட்டு மற்றும் இளைஞர் பணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழகத்தில் மிகப் பெரிய சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

தமிழக இளைஞர்களிடையே விளையாட்டுத் திறன்களை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. இந்த அரசு. ரூ.40 கோடி செலவில் பிரமிக்கத் தக்க வகையில் சர்வதேச அளவுக்குச் சமமாகக் கட்டி முடிக்கப்பட்ட நேரு விளையாட்டரங்கம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் சாதனைக்கு மகுடம் வைத்தது போலாகும்.

நேரு விளையாட்டரங்கில் செயற்கை இழை ஓடு பாதையமைத்துப் பன்னாட்டுத் தடகளப் போட்டியை முன்னின்று நடத்திச் சாதனை செய்துள்ளது தமிழ்நாடு அரசு.

1995-இல் சென்னையில் தெற்காசியக் கூட்டமைப்பின் போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

• பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், மிதிவண்டி விளையாட்டரங்கங்கள் நவீன ஹாக்கி செயற்கைப் புல்பாதை, சென்னை நுங்கம்பாக்கத்தில் பன்னாட்டரங்க அளவில் ஒரு டென்னிஸ் விளையாட்டரங்கம் ஆகியவை கட்டப்படவிருக்கின்றன.

சர்வதேசப் போட்டிகளில் வெற்றிபெற்ற 21 தமிழக விளையாட்டு வீரர்களுக்கு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் அர்ச்சுனா, துரோணாச்சாரியார் விருதுகள் அரசு சார்பில் வழங்கப்பட்டுள்ளன.

அடுக்குமாடி வீடு அல்லது வீட்டு மனை பரிசு

இனிப் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெறும் விளையாட்டு வீரர்களுக்கு வீட்டுவசதி வாரிய உயர்வருவாய் பிரிவினருக்கான அடுக்கு மாடி வீடோ, வீட்டு மனையோ பரிசாக வழங்க புரட்சித்தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது.

ஊக்கப் பரிசாக மாணவர்களுக்கு மதிப்பெண்கள்

விளையாட்டின் கவனம் செலுத்தும் மாணவர்கள் கல்வி முன்னேற்றத்தில் பின்தங்கிவிடக் கூடாது எனும் எண்ணத்தில் அவர்களுக்கு, அவர்கள் ஈட்டும் வெற்றிகளின் அடிப்படையில் கூடுதல் மதிப்பெண்கள் ஒவ்வொரு பாடத்திலும் வழங்க வகைசெய்யும் சிறப்பான ஆணை ஒன்றை மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

இது, விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள மாணவ, மாணவியருக்குப் புரட்சித்தலைவி அவர்கள் அரசு அளித்துள்ள ஊக்கப் பரிசாகும். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இப்படி ஒவ்வொரு வகையிலும் தாம் நோக்கும் இடமெல்லாம் ஆக்கம், நீக்கமறப் பல்கிப் பெருக வேண்டும் எனும் வேட்கையுடன் எல்லோர்க்கும் எல்லாப் பிரிவினர்களுக்கும் ஊக்கம் தந்து, தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உறுதியாக அதே நேரத்தில் விரைவாக வழி வகுத்துக் கொடுக்கிறார்கள். அதனால்தான் சாதனைச் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறது புரட்சித் தலைவி அவர்களின் புகழ்பரப்பும் தமிழக அரசு.

எனவேதான், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரும் அன்புடன் இன்று, 'இதய தெய்வம்' என்றும், தமிழக நலன் காப்பதில் அவர்கள் காட்டும் அக்கறையையும் ஆர்வத்தையும் உணர்த்தும் வகையில், 'தமிழகக் காவல் தெய்வம்' என்றும் போற்றிப் புகழ்கிறார்கள். இத்தகைய சிறப்புகளுக்கு உறைவிடமாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய சிந்தனைகளால் சாதனைகள் படைத்துவரும் தமிழ்நாடு, 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மிகச் சிறந்த மாநிலம் எனும் பெருமையைப் பெறும் என்பதுடன் உலக ' அரங்கிலும் ஓங்கி நிற்கும் என்று உளமார நம்புகிறேன்.

மனித சிந்தனைகளில் பெரிய முன்னேற்றங்கள் பல்கலைக் கழகங்கள் மூலம் ஏற்பட்டுள்ளன. விஞ்ஞானங்களிலும் அதன் பல்வேறு கிளைகளிலும் புதிய ஆராய்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புகள், பல்கலைக் கழகங்கள் மூலமாக நடைபெற்று விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்கள் பல்கலைக் கழகத்திலிருந்துதான் தொடங்கியிருக்கின்றன.

கற்றுக் கொடுப்பதும், தகவல்களைத் தருவதும் சிக்கலான வாழ்க்கை முறைகளுக்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள சிறப்பான திறமைகளையும் அறிவாற்றல்களையும் மாணவர்க்கு வழங்குவதும் மட்டும் பல்கலைக் கழகத்தின் நோக்கமல்ல. மாறிவரும் மக்களின் தேவைகளுக்கேற்ற அம்சங்களைக் கல்வி முறை கொண்டிருக்க வேண்டுமென்பது உண்மைதான். ஆனாலும் பல்கலைக் கழகங்கள் மனிதப் பண்புகளை வலியுறுத்தி, மனித நலத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்பதே என் கருத்து. பல்கலைக் கழக மாணவர்கள் பாடத்தை மட்டும் படிப்பதில்லை. தன் வாழ்க்கையில் என்றும் நினைவுகூரத்தக்க பருவத்தில், உயரிய, உன்னதப் பண்புகளால் கவரப்பட்டு மாணவர் குறிப்பிடத்தக்க ஒருவராகிறார். மனித அறிவு வளர்ச்சியையும், சிந்தனைகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுவதன் மூலமும் உள்ளத்தோடு உள்ளம் உராய்ந்து கருத்துப் பரிவர்த்தனை செய்துகொள்ளுவதன் மூலமும் பக்குவம் பெற்ற மனிதராக உருவாக மாணவரிடத்தில் இப்பண்புகள் கிரியா ஊக்கியாகச் செயல்படுகின்றன. பல்கலைக் கழகம் ஆன்மாக்களின் நட்புக்கூடமாக - சத்தியத்தை நாடுவோரின் சங்கமாக அமைய வேண்டும். தற்கால வாழ்க்கைச் சூழ்நிலையில் எவ்வளவுதான் அவசியமாக இருந்தாலும் பொருளைப் பெறுவதையும் வாழ்க்கை வசதிகளைப் பெறுவதையும்விட மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் வாழ்க்கையில் இருக்கின்றன என்பதை நம்புபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அகிலத்துத் தீமைகளை அகற்ற அளவில்லாத ஆவல், பெருந்தன்மைமிக்க ஒரு நெஞ்சம், பரந்துபட்ட பார்வை இவற்றைப் பெறவும் தன்னலமற்ற, ஒருபால் கோடாத வழியிலே இலட்சியங்களைத் தொடரவும் பல்கலைக் கழகம் மாணவருக்கு உதவ வேண்டும்.

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.

தொழிலாளர் நலம்

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
திரு மேலூர் ஏ.எம். பரமசிவம்

நம்பி வாக்களித்த நாட்டு மக்கள் இல்லந்தோறும் ஒளிவிளக்கேற்றுவதே தமது குறிக்கோளாகக் கொண்டு நல்லாட்சி நடத்தி வருகிறார் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்; இந்த மூன்றாண்டுக்காலமுத்தான ஆட்சியில் தமிழ்நாடு பெற்றுள்ள வளமும் நலமும் ஏராளம். புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழகத் தொழிலாளர் நலம் பாதுகாக்கப் பட்டிருக்கிறது; வேலைவாய்ப்புகள் பெருகியுள்ளன.

1991-ஆம் ஆண்டில் 13039 தொழிற் தகராறுகளும், 1992ஆம் ஆண்டில் 10113 தொழிற் தகராறுகளும் தவிர்க்கப்பட்டன. 1993ஆம் ஆண்டில் 8834 தொழிற் தகராறுகள் நேரடிப்பேச்சு வார்த்தை மூலம் சுமுகமாகத் தீர்க்கப் பட்டுள்ளது.

திருப்பூரிலுள்ள பனியன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சுமார் 1,00,000 தொழிலாளர்களின் சம்பளம் உள்ளிட்ட இதரப் பிரச்சினைகள் 9.8.93 அன்று டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் முயற்சியால் சுமுகமாகத் தீர்த்து வைக்கப் பட்டது.

1991-ஆம் ஆண்டில் மனித இழப்பு நாட்கள் 72,78,969 ஆகவும். 1992-ஆம் ஆண்டில் மனித இழப்பு நாட்கள் 28,68,472 ஆகவும் இருந்தது; ஆனால் 1993-ஆம் ஆண்டில் மனித இழப்பு நாட்கள் 24,22,103 ஆகக் குறைந்துள்ளது.

இந்த அரசு 1993-ஆம் ஆண்டில் தேங்காய் உரித்தல், பாலிதீன் பிளாஸ்டிக் தயாரிப்பு, தச்சு வேலை மற்றும் கருமான் வேலை மற்றும் உணவு பதப்படுத்துதல் ஆகிய நான்கு தொழில்களுக்கு முதல் முறைக்கான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்துள்ளது.

1994-ஆம் ஆண்டில் கடல் உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு முதல் முறையாகக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்து அரசு ஆணை பிறப்பிக்க உள்ளது. பட்டு கைத்தறி நெசவுத் தொழில், தையல் தொழில் மருத்துவமனைத் தொழில் மற்றும் கைத்தறித் தொழில் (பருத்தி) ஆகிய நான்கு தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்து ஆணை பிறப்பித்துள்ளது. இன்னமும் தோட்டத் தொழில், வனத் தொழில், உள்ளிட்ட 14 தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை விரைவில் மறு நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்க உள்ளது.

முக்கிய நகரங்களில் தொழிலாளர் துறை அலுவலகங்கள் எல்லாம் ஒரே கட்டடத்தில் இருக்க வேண்டும், அவ்வாறு இருந்தால்தான் தொழிலாளர்கள் இடர்ப்பாடு இல்லாமல் அலுவலர்களை அணுகமுடியும் என்ற தொழிற்சங்கங்களின் நீண்ட காலகோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த் அரசு கோவையில் ரூ.60 இலட்சம் செலவில் கட்டடம் கட்டி அது முடியும் தறுவாயில் இருக்கிறது.

1993-ஆம் ஆண்டு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 12 மூடப்பட்ட ஆலையிலுள்ள 8163 தொழிலாளர்களுக்கு ரூ.32,65,200 வழங்கப்பட்டது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம், என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கையைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும், புரட்சித்தலைவி அரசு, கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல் படுத்த உள்ளது.

கட்டடத் தொழிலாளர்களுக்கு நலத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் குழந்தைப் பராமரிப்பு இல்லம், பெண்களுக்குப் பேறுகாலச் சலுகை, விபத்துக் காப்பீட்டுத் திட்டம், வைப்பு நிதித் திட்டம், ஓய்வூதியத் திட்டம் ஆகியவை அடங்கும். முதற்கட்டமாக, சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் செயல்படுத்தப்படும். 1982-ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழில் (பன் முறைப்படுத்துதல் மற்றும் வேலை நிபந்தனைகள்) சட்டத்தின் கீழ் விரைவில் வாரியம் அமைக்கப்பட்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான தமிழக அரசின், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் மூன்றாண்டுச் சாதனைகள்

தமிழக அரசின் தொழிற் சாலைகள் ஆய்வகத்துறை கடந்த மூன்றாண்டுகளில் 5,601 தொழிற் சாலைகள், தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து 31.12.93 முடிய 2,05,899 தொழிற் சாலைகள், தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் இயங்கி வருவதோடு, இதன் மூலமாக 9,72,975 தொழிலாளர்கள் பணியாற்றி, தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் பயனடைந்து வருகிறார்கள்.

விளையாட்டுப் போட்டிகள்

தொழிலாளர்களும் அவர்களது குழந்தைகளும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறந்த விளையாட்டு வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் வரவேண்டும் என்பதற்காக, வாரியம் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. இவ்விளையாட்டுப் போட்டிகள், முதலில் மாவட்ட அளவிலும், இறுதியாக மாநில அளவிலும் நடைபெறுகின்றன. வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தொழிலாளர்கள் தங்கும் ஓய்வு இல்லங்கள்

தொழிலாளர்கள் சுற்றுலா செல்லும்போது தங்குவதற்கு ஏதுவாக, சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில், "ஜவகர்லால் நேரு ஓய்வு இல்லம்", குற்றாலத்தில் "திரு.வி.க.இல்லம்" மற்றும் வால்பாறையில் "சிங்காரவேலர் ஓய்வு இல்லம்" ஆகியவை கட்டப்பட்டுள்ளன. இவற்றில் தங்குவதற்குத் தொழிலாளர்களிடம் குறைந்த அளவு வாடகையே வசூல் செய்யப்படுகின்றது. இவை தவிர, சென்னையில், தொழில்' தகராறு வழக்குகளுக்காக வரும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியாக, ஜீவா இல்லம் கட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை பயிற்சிப் பிரிவுின் கடந்த மூன்று ஆண்டுச் சாதனைகள் விவரம் வருமாறு:

நிருவாகத்தை முனைப்பூட்டுவதற்கும் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்களின் நிருவாகம் பணிப் பளுவைக் குறைத்துப் பயிற்சியில் அதிகக்கவனம் செலுத்தி பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும், 6 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் நிருவாக அலுவல் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.

கோயம்புத்தூர், அரியலூர், நாகர்கோயில் தொழிற் பயிற்சி நிலையங்களில் குடிதண்ணீர் வழங்குதல் தொடர்ந்து ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது. இதனால் அடிக்கடி பயிற்சியாளர்களிடையே அமைதிக் குலைவும் ஏற்பட்டு வந்தது. இந்த இன்றியமையாத அடிப்படை வசதியை ஏற்படுத்தும் பொருட்டு, சம்பந்தப்பட்ட நகராட்சிகள் மூலம் குடிநீர் இணைப்புகள் ரூ.8 இலட்சம் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ரூ.14 இலட்சம் செலவில் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குப் புதுக் கருவிகளும் தளவாடங்களும் வாங்கித் தரப்பட்டன.

ரூ.6 இலட்சம் செலவில் பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மரச்சாமான்கள் வாங்கித் தரப்பட்டன.

தண்ணீர் தேவையினைச் சந்திக்க ஆழ்குழாய்க் கிணறுகள் ரூ.2 இலட்சம் செலவில் ஓசூர் மற்றும் கடலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அமைக்கப்பட்டது.

ரூ.2.5 இலட்சம் செலவில் 9 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குக் கூடுதல் பம்பு செட் நிறுவப்பட்டது.

தருமபுரி, அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது ரூ 44 இலட்சம் செலவில் நிரந்தரக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

செங்கல்பட்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்களுக்கு வகுப்புகள் நடத்தப் போதிய வகுப்பறைகள் இல்லாமலிருந்தது. எனவே, ரூ.2.5 இலட்சம் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டன.

பெண்கள் வேலை வாய்ப்பினை மேம்படுத்தும் வகையில் 'ஸ்கிரீன் பிரிண்டிங்' மற்றும் 'எக்ஸ்போர்ட் கார்மெண்ட் டெய்லரிங்' ஆகிய தொழிற் பிரிவுகளில் குறுகிய காலப் பயிற்சித் திட்டம் ஈரோடு மற்றும் கிண்டி (மகளிர்) அரசினர்

****

அன்பில் நம்பிக்கை வை. அது துயரில் கொண்டுபோய் விட்டாலும் பரவாயில்லை. இதயக் கதவுகளை மட்டும் மூடிவிடாதே.

தாகூர்

****

தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.7.44 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமீப காலத்தில் பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் அதிக அளவில் வளர்ச்சியடைந்துள்ளதால் பிளாஸ்டிக் தொடர்பான தொழிற் பிரிவுகளில் வேலை வாய்ப்புகள் அதிகம் உள்ளது. எனவே, 'பிளாஸ்டிக் பிராசசின் ஆபரேட்டர்' என்ற புதிய தொழிற் பிரிவு கடலூர் மற்றும் சேலம் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.12 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதியுதவியில் வாழ்வியல் பயிற்சித்திட்டத்தின் மூன்றாண்டுக் காலச் சாதனைகள்

1990- 91 முதல் 1994- 95 வரை ஐந்து ஆண்டுகளின் குறியீட்டு நிதியாக இத்திட்டத்திற்கு ரூ.21.74 கோடி ஒதுக்கப்பட்டது. இப்பொழுது அது ரூ.33.30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உலக வங்கித் திறன் மேம்பாட்டுத் திட்டச்செலவினை மாநில அரசும், மத்திய அரசும் ஏற்கின்றன.

சமுதாயத்தில் மகளிர் நிலை உயர்த்தப்பட வேண்டும் என்னும் அரசின் சீரிய கொள்கையின் அடிப்படையில் தொடங்கப்பட்ட 5 புதிய மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒன்று மதுரையிலும் மற்றொன்று அம்பத்தூரிலும் இத்திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டன. இதன் மூலம் 144 பயிற்சியாளர்கள் பயன் பெற்றுள்ளனர். இயந்திரங்கள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 31 அரசினர் தொழிற் பயிற்சி

கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்குப் புதிய பெயர்

தமிழகத்தில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்காகக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூரிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குச் 'சாமியப்பா' கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும், மதுரையில் உள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குப் "பாண்டியநாடு" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும், திருநெல்வேலியில் உள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "மேடைத்தளவாய் குமாரசுவாமி" கூட்டுறவு நிலையமென்றும், கோயம்புத்தூரிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "இராமலிங்கம்" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும், சேலத்திலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "நாச்சியப்பா" கூட்டுறவுப் பயிற்சி நிலையமென்றும் ஏற்கெனவே பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வருகின்றது.

காஞ்சிபுரம், கடலூர் மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்குப் பெயரிட்டு அழைக்கப்படாமல், அந்தந்த ஊரின் பெயரே அப்பயிற்சி நிலையங்களுக்குப் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வந்தது.

இந்த மூன்று கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்கும் பெயரிடப்படவேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் காஞ்சிபுரம் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குப் "பேரறிஞர் அண்ணா" அவர்களின் பெயரையும், கடலூர் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "டாக்டர் எம்.ஜி.ஆர்" அவர்களின் பெயரையும், சாத்தூர் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குத் "தியாகி சங்கரலிங்கனார்" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் ஒப்புதலுடன் பெயர் சூட்டப்படுமென்று, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள் சட்டமன்றத்தில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையினைத் தாக்கல் செய்து உரையாற்றியபோது தெரிவித்தார்கள்.

இந்த அறிவிப்பினையொட்டி காஞ்சிபுரம் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குப் "பேரறிஞர் அண்ணா" கூட்டுறவுப் பயிற்சி நிலையமென்றும், கடலூர் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு "டாக்டர் எம்.ஜி.ஆர்" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும், சாத்தூர் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்குத் "தியாகி சங்கரலிங்கனார்" கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்றும் பெயர் சூட்டித் தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

நிலையங்களில் 19 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பழைய வழக்கொழிந்த இயந்திரங்கள் சென்ற மூன்றாண்டுகளில் நவீனப்படுத்தப் பட்டது. மேலும் ஏழு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் 1994-ஆம் ஆண்டில் மேற்படி திட்டப்படி நவீனப்படுத்தப்பட உள்ளது. இதற்கென ரூ.552.61 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் தற்போது 10 தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகம் செய்யப்பட்டன. மேலும் 6 தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆகஸ்ட் 1994 முதல் புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப் படவிருக்கின்றன. சென்ற மூன்றாண்டில் 923 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

உலகவங்கி செயல்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டம் புதிய தொழிற் பிரிவுகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் 225 பயிற்சியாளர்கள் தொழிற்சாலைப் பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

செயல்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இரசாயனத் தொழிற் பிரிவுகளுக்கென இராணிப்பேட்டையில் ஒன்றும், உணவகம் மற்றும் உணவாக்கத் தொழிற் பிரிவுகளுக்கென அம்பத்தூரில் ஒன்றும் ஆக இரு அடிப்படைப் பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 24 பயிற்சியாளர்கள் இரசாயனத் தொழிற் பிரிவுப் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் நான்கு தொடர் அறிவுரை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதில் 6223 தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன மூலம் கடந்த 1991 -92, 1992- 93 டிசம்பர் முடிய அயல் நாட்டிற்கு அனுப்பப்பட்டவர்கள் விவரம்:

பஹ்ரின் 1, அமெரிக்கா 9, ஐக்கிய அரபுக் குடியிருப்பு 11, லிபியா 1, ஓமென் 4, ஜோர்டான் 1, சவூதி அரேபியா 290, கட்டார் 2, குவைத் 166, சிங்கப்பூர் 17, மலேசியா 11, மாலே 1,

இத்தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பேற்ற முத்தமிழன்னை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் மூன்றாண்டுக் காலச் சீரிய ஆட்சி இவ்வாறு தீட்டிச் செயல்படுத்தி வரும் திட்டங்கள் இவைமட்டுமல்ல; இன்னும் ஏராளம் ஏராளம்!

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் உரிமத்தினைப் புதுப்பித்தலுக்குப் பதிலாக, முதல் உரிமத்தினையோ அல்லது புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமத்தையோ ஓராண்டு முதல் ஐந்தாண்டு வரை உரிமம் பெற்றுக்கொள்ளத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதிக வேலைப்பளு காரணமாக, மிகை நேர வேலை பார்க்க ஆண் தொழிலாளர்களுக்கு விதிவிலக்கு ஓராண்டுக்குப் பதில், தொடர்ச்சியாக மூன்று ஆண்டுக்கு அளிக்கப்படுகிறது.

தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் கையாளுதல், செயல்படுத்துதல் ஏற்றிச் செல்லுதல், சேமித்து வைத்தல் போன்ற பணிகளில் பாதுகாப்பு முறைகளைப் புற்றி தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்க்காகப் பயிற்சி நிலையம் 2.4.93 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையம் 934 தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில், புரட்சித்தலைவியின் பொற்கால ஆட்சி மலர்ந்த கடந்த மூன்று ஆண்டுகளின் சாதனை

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகளைத் துத்துக்குடி, வேலூர், ஈரோடு மற்றும் உதகமண்டலம் ஆகிய நான்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஏற்படுத்த அரசு ஆணையிட்டது. இதன் மூலம் உடல் ஊனமுற்றோர் பணியில் அமர்வதற்குச் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தொழில் நெறி வழிகாட்டும் பணியினைச் செய்வதற்கென, சேலம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில் நெறி வழிகாட்டும் இரண்டு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையம் ஒன்று கடலூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கான கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 23,001 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்குப் பயிற்சி தமிழ்நாடெங்கிலும் வேலைவாய்ப்புத் துறையின் மூலமாக அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பயிற்சி வகுப்பும் சுமார் 21 நாட்கள் நடைபெற்றது. மேற்காணும் பயிற்சிக்கு இதுவரை ரூ.94.81 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் ஆகிய புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்ட காரணமாகத் திருவண்ணாமலை மற்றும் விழுப்புரத்தில் புதிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

சுயவேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்களிடத்தில் சுய வேலைவாய்ப்பினை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வேலூர், மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தனியாக "சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவு" ஒன்று செயல்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இப்பிரிவுகளின் சாதனை பின்வருமாறு:

சுயவேலைவாய்ப்பு தொடங்கக் கடனுதவி அளிக்கப்பட்டவர்கள் 980 பேர்.

அளிக்கப்பட்ட தொகை ரூ.1.69 கோடி

ஐடிஐ. / ஐ.எஸ்.சி. சான்றிதழ் பெற்று வேலைவாய்ப்பு. அலுவலகங்களில் பதிவு செய்தவர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு துவங்க, கடந்த மூன்றாண்டுகளில் பயனடைந்தவர்கள் விவரம் பின்வருமாறு:

கடனுதவி அளிக்கப்பட்டவர்கள் 69 பேர், அளிக்கப்பட்ட தொகை ரூ. 5,88300, அளிக்கப்பட்ட மானியத்தொகை ரூ.1,26,800.

பணியில் அமர்த்தப்பட்டோர்

1991ஆம் ஆண்டு முதல் 1993 வரையான காலகட்டத்தில் 91,678 நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்கள் 29,255 பேர்;

ஆதிதிராவிடர் 25,141 பேர் பழங்குடியினர் 753 பேர்ஆவர்.

வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம்

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் வேலை கிடைக்காமல் காத்திருந்தோருக்குக் கடந்த 3 ஆண்டுகளில் 1991 முதல் 1993 வரை ரூ 24,69,65,759 வேலை வாய்ப்பு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

1991 முதல் 1993 வரையிலான காலத்தில் 12 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டர் மூலம் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டம் கீழ்க்கண்ட இடங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது:

வரிசை எண்களும் பகுதியின்பெயரும், மாவட்டம் இட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாள் விவரம்:

1. கடப்பேரி, மெட்ராஸ் எக்ஸ்போர்ட் ப்ராசசிங் ஜோன் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாள் 1.9.93

2. கே.ஜி.சாவடி மற்றும் நலக்கரை கோயம்புத்துர், புறநகர் கோயம்புத்தூர் மாவட்டம் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாள்1.12.93

ஓசூரில் ரூ.1,732 கோடி திட்ட மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட ஈட்டுறுதித் தொழிலாளர்கள் மருத்துவமனையின் கட்டடம் முடியும் தறுவாயில் உள்ளது. கருவிகள் மற்றும் மரச் சாமான்கள் வாங்க ரூ.42.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1992-93-ஆம் நிதியாண்டின் சாதனைகள்:

திட்ட விரிவாக்கமும், புதிய மருந்தகத் தொடக்கமும்

மறைமலைநகர் சென்னை மண்டலம் புதிய மருந்தகமும் மறைமலை நகர் மற்றும் கூடுவாஞ்சேரிப் பகுதிகளிலில் உள்ள காப்பீடு செய்யப்பட்ட 2000 நபருக்கும் அதிகமானவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வகையில் 2 மருத்துவர் வகை மருந்தகம் 1992-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது.



பெண்ணின் பெருமை.

பெண்ணின் பெருமை உணர்ந்த உலகமே நாகரிக உலகம் எனப்படும். பெண்ணின் பெருமை உணர்ந்து நடப்பது நாகரிகத்தை வளர்ப்பதாகும்.

-தமிழ்த் தென்றல் திரு.வி.க.

பூவிருந்தவல்லி சென்னை மண்டலம் அரசுத் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம்

பூவிருந்தவல்லி ஒரு மருத்துவர் வகை அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்குவதற்கு மருத்துவ ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக 1943-ஆம் ஆண்டு தொழிலாளர் ஈட்டுறுதிச்சட்டத்தின் விதி 3 (1)ன் கீழ் மைய அரசின் முறையான அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

கும்மிடிப்பூண்டி சென்னை மண்டலம் தொழிலாளர் ஈட்டுறுதி ம்ருந்தகம்

கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட்டில் 2 மருத்துவர்வகை மருத்துவமனை தொடங்குவதற்காக மருத்துவ ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன. 1948-ஆம் ஆண்டு தொழிலாளர் ஈட்டுறுதிச் சட்டத்தின் விதி 3 (1)ன்கீழ் மைய அரசின் முறையான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் மதுரை மண்டல ஆரல்வாய்மொழி சிறிய அரசினர் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்குதல்.

740 ஈட்டுறுதி செய்த நபர்கள் பயன்பெறும் வகையில், ஆரல்வாய்மொழியில் ஒரு மருத்துவர் வகை அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க ஆணை வெளி யிடப்பட்டது. இந்த மருந்தகம் 15.10.93 முதல் செயல்பட்டு வருகிறது.

புரட்சித்தலைவி ஆட்சியில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிலப் பயிற்ச்சிக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் பற்றிய விவரம் வருமாறு:

அரசு அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பயிற்சிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம், வாரியத்தால் வழங்கப்படுகின்றன.

பொறியியல், மருத்துவம், சட்டப்படிப்பு உதவித் தொகை

தொழிலாளர்களின் மகன்கள் / மகள்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித்தொகை வழங்கப்படுகிறது:

பொறியியல் (பட்டம்) ரூ.1200.

மருத்துவக் கல்வி (பட்டம்) ரூ.1200.

சட்டக் கல்வி (பட்டம்) ரூ.1200.

வேளாண்மைக் கல்வி (பட்டம்) ரூ.1200.

பொறியியல் கல்வி (டிப்ளமோ) ரூ.720.

மருத்துவக் கல்வி (டிப்ளமோ) ரூ.720.

புத்தகம் வாங்க உதவித் தொகை

உயர்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு முதல் கல்லூரி வரை படிக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்க உதவித் தொகை வழங்கப்படுகிறது.

கூட்டுறவுத் துறையின் பொற்காலச் சாதனை

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. கா.ப. பட்டாபிராமன்

கூட்டுறவு என்பது ஒரு அரசின் கொள்கையோ அல்லது இலட்சியமோ மட்டுமல்ல, அது மனித சமுதாயத்தின் தார்மீகப் பிணைப்பு நல்லுறவுகளின் சங்கமம்.

EACH FOR ALL; ALL FOR EACH;

'ஒவ்வொருவரும் எல்லோருக்காக எல்லோரும் ஒவ்வொருக்காக! இதுதான் கூட்டுறவின் ஒட்டுமொத்த சித்தாந்தம்.

Co-operation is the powerful instrument without which, nothing can be achieved in man's life.

"கூட்டுறவு என்பது மனித வாழ்வின் மிகச் சக்தி வாய்ந்த சாதனம். அஃதில்லாமல் மனித வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது". இவ்வைர வரிகள், தடுமாறுகிற தலைவர்கள், தடம் மாறுகிற தலைவர்கள், இடம் மாறுகிற தலைவர்கள் என்று முரண்பட்டுக் கிடக்கின்ற தலைவர்களின் கூட்டத்தில் இலட்சிய நோக்கத்தோடும், நாட்டுக்கு நலம் பயக்க வேண்டுமென்ற ஒரே கொள்கையோடும் ஆட்சி நடத்தும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனையில் உதிர்ந்த சீரிய கருத்து மலர்கள்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா கூட அடிக்கடி அழகுத் தமிழில் சொல்லுவார் 'தம்பி, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்று. இதன்மூலம் கூட்டுறவின் இலக்கணத்தையே நாட்டு மக்களுக்கு உணர்த்தினார்.

"கரைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?

பேரெதிர்ப்பால், பகையால், வஞ்சத்தால்

உண்மைதான் ஊனம் ஆமோ?"

என்ற தத்துவத்தின் இலக்கணமாகத் திகழும் புரட்சித் தலைவி அவர்கள், "ஒரு கை தட்டினால் சத்தம் வராது இரு கைகளின் கூட்டுறவே ஓசையின் எழுச்சி" என்றார்.

ஊர் கூடி அல்லவா தேர் இழுக்கவேண்டும்? இது தமிழகத்தில் பண்டைக்காலத்திலிருந்தே வழக்கில் இருக்கும் பழமொழி.

"கூடித் தொழில் செய்தோர் கொள்ளை இலாபம் பெற்றார்

வாடிடும் பேதத்தால் வாய்ப்ப துண்டோ தோழர்களே!

நாடிய ஓர் தொழில், நாட்டார் பலர் சேர்ந்தால்

கேடில்லை, நன்மை கிடைக்கு மன்றோ தோழர்களே!

சிறு முதலால் இலாபம் சிறிதாகும் ஆயிரம்பேர்

உறுமுதலால் இலாபம் உயருமன்றோ தோழர்களே!

அறுபதுபேர் ஆக்கும் அதனை ஒருவன்

பெறுவதுதான் சாத்தியமோ பேசிடுவீர் தோழர்களே!

பற்பல பேர் சேர்க்கை பலம் சேர்க்கும் செய்தொழிலில்

முற்போக்கும் உண்டாகும் முன்னிடுவீர் தோழர்களே!

வாடித் தொழிலின்றி வறுமையால் சாவதெல்லாம்

கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே!

கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் இன்றுவரை

மூடிய தொழிற்சாலை முக்கோடி தோழர்களே!

கூடைமுறம் கட்டுநரும், கூடித் தொழில் செய்யின்

தேடி வரும் இலாபம் சிறப்பு வரும் தோழர்களே!"

என்ற கூட்டுறவுக் கொள்கை முழக்கம் செய்தார் பாவேந்தர் பாரதிதாசன்.

உண்மையை மறைத்து, நரம்பில்லாத நாக்கினால் வரம்பில்லாமல் வசைபாடும் நயவஞ்சர்களுக்கு நெருப்புப் பிழம்பாய்த் திகழும் தமிழக முதல்வர் அவர்கள் 7.2.1994 நாளன்று புதுக் கோட்டையில் நடைபெற்ற அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், "எங்களுடைய கொள்கைகளிலும், இலட்சியங்களிலும் எங்களுக்குக் கிட்டப் பார்வையும் இல்லை தூரப் பார்வையும் இல்லை. தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் விரைந்து முன்னேற்ற வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வைதான் உண்டு" என்றார்கள் அந்தத் தொலைநோக்குப் பார்வைக்கு அடித்தளம் அமைப்பது கூட்டுறவுத் துறை.

இந்தியப் பெருநாட்டிலேயே கூட்டுறவுத் துறையில் முன்னணியில் நிற்பது இன்றைய தமிழகம் தான். வளர்த்த கடா மார்பிலே பாயும் என்ற நன்றி கொன்ற இன்றைய அரசியல் உலகில் குறிப்பாக தமிழ்நாட்டு அரசியலில் தன்னுடைய அபூர்வ அறிவாற்றலை அறிந்து, தன்னை அரசியலில் வளர்த்து ஆளாக்கிய, தன் அரசியல் ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருப்பெயரால் போக்குவரத்துக் கழகம் -

அவர் பெயரால் சத்துணவுத் திட்டம்-

அவருக்கு உலகம் வியக்கும் நினைவிடம் - இல்லை, இல்லை நினைவாலயம் -

தலைநகரில் அவரது திருவுருவச் சிலை –

சட்டமன்றத்திலே அவரது திருவுருவப்படம் அதுவும் அண்ணாவைப் பின்பற்றிச் செல்வதைப் போல,

இவைகள் மட்டும் போதாது என்று, அந்த மாமனிதர் பெயரால் இன்று தமிழகத்தில் சமூக நீதி காக்கும் வீராங்கனையாகக் காட்சியளிக்கும் புரட்சித் தலைவி அவர்களால் திருப்பெயரிடப் பட்ட செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் தான்

அ. 1904-ஆம் ஆண்டில் திரூர் என்ற சிறு கிராமத்தில் முதன் முதலில் கிராமக் கூட்டுறவுக் கடன் வங்கி (Credit Cooperative Rural Bank) உருவாக்கப்பட்டது என்பது தமிழகத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்ச்சி.

ஆ. அதேபோல் 1904-ஆம் ஆண்டில் முதன்முதலில் சென்னை நகரில் டி.யு.சி.எஸ். என்ற அழைக்கப்படும் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் உருவானது.

இ. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் கூட்டுறவுத்துறை பல முன்னோடிச் சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது.

ஈ. 8.10.1904-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில்தான், பெரிய காஞ்சிபுரம் நகரக் கூட்டுறவு வங்கி என்ற முதல் நகரக் கூட்டுறவு வங்கி அமைக்கப்பட்டது.

உ. அப்படியே தலைமைக் கூட்டுறவு வங்கி என்பது தமிழகத்திலேயே சென்னையில்தான் 1905 -இல் உருவாக்கப்பட்டது.

ஊ. 19.10.1905-இல் சென்னை மத்திய நகர வங்கி அமைக்கப் பட்டது.

எ. 1913-இல் முதல் மத்தியக் கூட்டுறவு வங்கி மதுரையில் அமைக்கப்பட்டது.

ஏ. அனைத்திற்கும் மேலாக, கூட்டுறவாளர்களின் முதல் மாநாடு 1909-ஆம் ஆண்டில் தான் அன்றைய செங்கல்பட்டு மாவட்டமும், இன்றைய செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டமுமான காஞ்சிபுரத்தில், கல்வி வள்ளல் பச்சையப்பன் பள்ளியில் நடைபெற்றது.

ஐ. முதல் கூட்டுறவு அச்சகம், சென்னைக் கூட்டுறவு அச்சகம்,



என்ற பெயரில் 1991-இல் சென்னையில் அமைக்கப்பட்டது.

பராக்கிரமத்தால், படை பலத்தால், பக்க பலத்தால் வந்த இராவணனைத் தோல்வியால், தலை குனிந்து நிலம் பார்க்கச் செய்த இராமச்சந்திரன் தான் பெண் வடிவம் பூண்டு தாய்க் கோலத்தில் தனி அரசியாக நின்று இன்று தமிழகத்தை ஆட்சி செய்யும் தனிப்பெரும் முதலமைச்சர் அவர்கள், இதுவரை உலக சனநாயக அரசியல் வரலாற்றில் எங்கும் கண்டிராத, ஆனால் எவரும் பிரமிக்கத் தக்க வகையில் தமிழக மக்களின் ஏகோபித்த நல்லாதரவுடனும் ஆசியுடனும் 24.7.1991 அன்று முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால், கூட்டுறவுத் துறையில் அரிய பெரிய பல திட்டங்களைத் தமிழகத்துக்குத் தந்து, அளப்பரிய சாதனைகளைக் கூட்டுறவில் படைத்து, உலக அரங்கிற்கே ஒரு ஒப்பற்ற வழிகாட்டியாகத் திகழ்கிறார்கள்.

புதிய புரட்சிகரமான தொழில் கொள்கையை உருவாக்கி தமிழகத்தில் தொழில் வளத்தைப் பெருக்கவும், வேளாண்மை வளத்தைப் பெருக்கவும், ஏழை எளியோர் வாழ்வில் வசதியற்றோர் ஆகியோரிடம் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடச் செய்யப் புரட்சித்தலைவி அவர்களின் அயராத உழைப்பு தமிழகத்துக்கே ஒரு அரிய படைப்பாய் கடந்த மூன்று ஆண்டுகளாய்த் திகழ்வதைப் போற்றிப் பாராட்டாதவர் எவரும் இலர். புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கின்ற திட்டங்கள் அனைத்தும், தமிழக மக்களுக்கு நிரந்தரமான வாழ்வளிக்கும் வகையில், வறுமையை விரட்டி, வளமான வாழ்வை உருவாக்கி இந்திய உபகண்டத்திற்கே வழிகாட்டியாகவும் திகழ்ந்து வருகின்றன.

புதிய மாவட்டங்களில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் 1984-ஆம் ஆண்டு ஜூலையில் இராமநாதபுரம்,

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் ஆகிய மூன்று மாவட்டங்களாகப் பிரித்துப் பல ஆண்டுகளாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் புதிய மாவட்டங்களுக்கு உருவாக்கப்படாத நிலையில், ஆட்சித் துறையில் பல அதிசயங்களை நிகழ்த்தி வரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியின் கீழ் 2.9.93-இல் காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய இரு மாவட்டங்களுக்கும் தனித்தனியே மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உருவாக்கப்பட்டு, தொடங்கப்பட்டு, விவசாயிகளுக்குத் திறம்படச் சேவை புரிந்து வருகின்றன.

மேலும், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் உடனடியாக ஏற்படுத்தப் படவேண்டுமென எதையும் நன்றே செய் அதையும் இன்றே செய் என்ற கருத்தினை ஆழமாகக் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை வழங்கியதற்கேற்ப, வெகுவிரைவில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களிலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தோற்றுவிக்கப்பட உள்ளன.

விவசாயக் கடன்

தமிழகத்தில் விவசாயிகட்கு 1991-92-இல் குறுகிய காலக் கடனாக ரூ.278.52 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.44.71 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.41.71 கோடியும், நகைக் கடனாக ரூ.843.70 கோடியும் வழங்கப் பட்டது.

1992-93-இல் குறுகிய காலக் கடனாக ரூ.340.86 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.45.75 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.64.21 கோடியும், நகைக் கடனாக ரூ.1080.28 கோடியும் வழங்கப் பட்டது.

1993-94-இல் குறுகிய காலக் கடனாக ரூ.439.54 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.52.65 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.112.70 கோடியும், நகைக் கடனாக ரூ.1363.00 கோடியும் வழங்கப் பட்டுள்ளது.

எதிலும் முன்னேற்றம் எங்கும் முன்னேற்றம் என்று ஆட்சி நடத்தும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆற்றல் மிகு ஆட்சியில் 1994-95-இல் குறுகிய காலக் கடனாக ரூ.370.00 கோடி இலக்காக இருந்தாலும், திறன்மிக்க இவ்வாட்சியில் ரூ.450.00 கோடி அளவிற்கு வழங்கப்படும். மத்தியக் காலக் கடனாக ரூ.55 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.53

கோடியும், நகைக் கடனாக ரூ.1300 கோடியும் நடப்பு நிதியாண்டில் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

உடனடிக் கடன் வழங்கும் திட்டம்

ஓட்டு முறையில் நம்பிக்கை இழந்தவர்கள், வேட்டு முறையில் கலகம் நடத்தலாமா? என்று வேவு பார்த்துக் கொண்டிருப்பவர்கள், மக்களை நம்பாமல் மனுக்களை நம்பிக் கொண்டிருப்பவர்கள் தலை குனியும் வகையில் மக்கள் குரலே மகேசன் குரல் என்ற அண்ணாவின் மணிமொழிக்கேற்ப அரசு நடத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் தான், கூட்டுறவுத் துறையில் கடன் வழங்கும் முறையை எளிதாக்கவும், கடன் தவணை தவறிய உறுப்பினர்களுக்குப் பயிர்க்கடன்களைத் துரிதமாக வழங்கி உறுதிப்படுத்தியும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உடனடியாகக் கடன் வழங்கும் திட்டம் என்ற 'பச்சை வண்ண அட்டை முறை' அறிவிக்கப்பட்டு வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் வேளாண் பெருங்குடி மக்கள் இன்று மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திய வேளாண் பெருங்குடி மக்களுக்கு அவர்கள் கேட்கும் புதிய கடன்களை உரிய காலத்தில் பச்சை வண்ண அட்டையைக் காட்டிய மாத்திரத்தில் உடனடியாக வழங்குகின்ற இந்தத் திட்டத்தின் கீழ் பலன் பெற்று வரும் விவசாயிகளின் எண்ணிக்கை அளவிட முடியாது.

இத்திட்டத்தின் கீழ் 1992-93-இல் 1,24,607 நபர்களுக்கு ரூ.57.75 கோடியும், 1993-94- இல் 2,95,426 நபர்களுக்கு ரூ.167.74 கோடியும் வள்ளலின் வாரிசு ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளது. 1994-95-இல் 3,50,000 பேர்களுக்கு ரூ.175.00 கோடி இந்த பச்சை வண்ண அட்டை திட்டத்தின் கீழ் வழங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டு உள்ளேன்.

விவசாயக் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் தமிழ்நாட்டில் வெகுவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 1991-92- ஆம் ஆண்டில் கடன் வசூல் நிலுவை 34.6 விழுக்காடாக இருந்தது. 1992-93-ஆம் ஆண்டில் 23.9 விழுக்காடாகக் குறைந்துள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வசூல் நிலுவை 1991-92-இல் 41.04 விழுக்காடு நிலுவையிலிருந்து. 1992-93-இல் கடன் வசூல் நிலுவை 31.08 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதுகூட தமிழக தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் விருப்பப்படிக் கடன் பெற்றவர்கள் தாமாக முன்வந்து திருப்பிச் செலுத்தியது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இதைத் தான் 'நபார்டு' எனப்படும் விவசாய வளர்ச்சி மற்றும் ஊரக மேம்பாட்டுத் தேசிய வங்கியின் தலைவர் திரு. கோட்டையா அவர்கள் 5.4.94-இல் சென்னைக்கு வருகை புரிந்தபொழுது சொன்னார். States such as Tamil Nadu has logged good performance in advances and recovery rates even without elected bodies.

அதாவது விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதிலும் சரி, கொடுத்த கடனைத் திருப்பி வசூல் செய்வதிலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களில் மக்களாட்சி நிர்வாகம் இல்லாத நிலையிலும் கூட தமிழ்நாட்டின் செயல்திறன் பாராட்டுதற்குரியதெனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். இதுபோலவே, அண்மையில் தமிழகம் வந்த அண்டையிலுள்ள ஆந்திரக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், கர்நாடகக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் மனம் திறந்து தமிழக முதல்வரைப் பாராட்டிச் சென்றனர்.

வட்டி போனஸ் திட்டம்

பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தாத விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மீண்டும் புதிய கடன்களை வழங்க இயலாத நிலை இருந்த நிலையை மாற்றி மக்களை மக்குகளாக நினைத்துக் கொண்டு, வம்புரைகளை, வசை மாரிகளைப் பொழிந்து கொண்டிருக்கும் வகையற்றோர் மத்தியில் எதையும் தாங்கும் இதயத்தோடு பீடு நடைபோடும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் தான், போனஸ் திட்டம் என்கிற ஒரு புதிய திட்டத்தை அவர்களுடைய அறிவு சூட்சமத்தைப் பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள்.

■ பரந்த எல்லைகள் கொண்ட நம் இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில், நாம் விரும்பாமலேயே நமக்குள் தோன்றுகிற பிரச்சினைகள் ஏராளம் உள்ளன. மாநிலங்களிடையே இப்படிப் பட்ட பிரச்சினைகள் ஏற்படும் போது நியாயமும், நியாயத்தின் அடிப்படையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தான் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும்.

தவணை வட்டி, அபராத வட்டி ஆகியவைகளைத் தள்ளுபடி செய்ததன் மூலமாக, 58.73 கோடி ரூபாயைப் போனசாக வழங்கி சுமார் 4.48 இலட்சம் விவசாயிகள் பலன் பெற்றிருக்கிறார்கள்.

நலிந்த பிரிவினருக்குக் கடன் வசதி

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின்படி வழங்கப்படுகின்ற மொத்த குறுகிய காலக் கடன்களை 20 விழுக்காடு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது 5 ஏக்கர் அல்லது அதற்கும் குறைந்த நஞ்சை அல்லது புஞ்சை நிலத்தை வைத்திருப்பவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கடன் வழங்கப்படவேண்டுமென்கிற அரிய திட்டத்தை இந்த நாட்டிற்கு அறிவித்து தமிழக முதலமைச்சர் அவர்கள், வாழ்வில் நலிந்தவர்களுக்கெல்லாம் வாழ்வு அளிக்கிறார்கள்.

அந்தவகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தமிழகத்திலுள்ள நலிந்த பிரிவினர்களுக்கு, குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடனாக 1992 -93- இல் ரூ.251.91 கோடியும், 1993 -94- இல் ரூ.320.50 கோடியும் வழங்கியுள்ளது. இதைப்போலவே 1994-95-இல் ரூ.353.50 கோடி வழங்கப்படவிருக்கிறது.

ஆதிதிராவிடர்கட்குக் கடன் திட்டம்

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு மாத்திரம் குறுகிய காலக் கடன் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.34.54 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.11.26 கோடியும், 1993-94-இல் குறுகிய காலக் கடனாக ரூ.44.54 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.13.00 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 1994 -95இல்குறுகியகாலக் கடனாக ரூ.58.50 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ.13.20 கோடியும் வழங்கப்பட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆதிதிராவிடர் குடும்பத்தில் ஒருவரை, கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக்குதல்

ஆதிதிராவிட வகுப்பினரின் குடும்பத்தில் ஒருவரை, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக ஆக்கும் நோக்கத்துடன் புரட்சித் தலைவியின் அரசு 1991-92-ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிட விவசாயிகளை அதிகளவில் கூட்டுறவில் சேர்க்கும் திட்டம் தீட்டி, ஒவ்வொரு ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த நபர் ஒருவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குப் பங்குத் தொகை ரூ.100ஐ அரசு மானியமாக வழங்கி வருகிறது. இதுவரை இத்தகைய புரட்சிகரமான திட்டத்தில் தமிழகத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 85,032 ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் உறுப்பினராகச் சேர்ந்திருக்கிறார்கள். இந்தவகையில் 1991-92- இல் ரூ.20 இலட்சமும் 1992-93- இல் ரூ.20 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ.250 வழங்கி அவர்களின் பங்குத் தொகையைப் பெருக்கி, கடன்பெற இவ்வரசால் வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்த வகையில் 1993-94-இல் 8000 பேருக்கு ரூ.20 இலட்சம் புரட்சித் தலைவியின் அரசு வழங்கியுள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் 8000 பேருக்கு ரூ.200 இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தேவையின் அடிப்படையில் சிறு வியாபாரங்கள்

சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவி புரிய அதிகபட்சமாக ரூ.500 வரை தேவையின் அடிப்படையில் கடன் வழங்கும் திட்டத்தில் 1992-93- இல் மொத்தம் 55,200 பேருக்கு ரூ.18.42 கோடியும் 1993-94-இல் மொத்தம் 38,893 பேருக்கு ரூ.4 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. அதில் பெண்கட்கு மட்டும் 1992-93-இல் 23,248 பேருக்கு ரூ.3.74 கோடியும், 1993-94 இல் 24,417 பேருக்கு ரூ.2.18 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1994-95-இல் இக்கடன் திட்டத்தில் அதிகபட்சத் தொகை ரூ.500லிருந்து ரூ.750 வரை நபர் ஒன்றுக்குக் கடன் வழங்க புரட்சித் தலைவி அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நகரக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கும் பணிகள்

தமிழகத்தில் நகர்ப்புறங்களில் 129 நகரக் கூட்டுறவு வங்கிகள் பாங்கோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த 129 நகரக் கூட்டுறவு வங்கிகள் 1991-92- இல் ரூ.410·86 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.284.15 கோடி நகைக் கடன்களையும், 1992-93-இல் ரூ.451.81 கோடி பல்வேறு கடன்களையும் ரூ.317.58 கோடி நகைக் கடனையும், 1993-94-இல் ரூ.480.97 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.367.36 கோடி நகைக் கடனையும் வழங்கியுள்ளது. 1994-95-இல் நகைக் கடன் ரூ.350 கோடியும், பண்ணை சாராத் தொழில் கடன் ரூ.20 கோடியும் வழக்கம்போல் பல்வேறு வகையான கடன்களும் வழங்கப்படவுள்ளன.

மத்தியக் கூட்டுறவு வங்கியில் பெண்கள் கிளைகள்

பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க, மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் ஒரு கிளையும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 16 கிளைகளும் தற்பொழுது பெண்களால் நடத்தப்பட்டு வருகிறது. 1994-95-ஆம் ஆண்டில் 5 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பெண்களால் நடத்தப்படும் கிளைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் ஆணைக்கேற்ப கன்னியாகுமரியில் வடசேரியிலும், கும்பகோணத்தில் கொறநாடு, திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல் என்.ஜி.ஓ., காலனி தஞ்சாவூரில் நெற்களங்கம் மற்றும் காஞ்சிபுரம் நகரத்திலும் உருவாக்கப்படவிருக்கிறது.

பொது விநியோகத் திட்டம்

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்டமானது 126 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 75 முதன்மைச் சங்கங்கள் மற்றும் 4,915 இணைப்புச் சங்கங்கள் வழியாகவும், 20,912 நியாயவிலைக் கடைகள் மூலமும் செயல்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டம் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.75.00 கோடி அளவிற்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் பாமாயில் விநியோகம் செய்யப்படுகின்றது. இதில், நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப்பகுதிகளில் 4,384 நியாயவிலைக் கடைகளும், கிராமப்புறங்களில் 16,528 நியாயவிலைக் கடைகளும் இயங்கி வருகின்றன.

இந்தியாவில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சில்லறை வியாபாரம் செய்யும் அமைப்பை, பெருமளவில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தும் ஒரே மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 1992 -93- ஆம்ஆண்டில் ரூ.901.43 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்களும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ.902.23 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்களும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

கண்காணிப்புக் குழுக்கள்

நியாயவிலைக் கடைகளிலுள்ள குறைகளையும், சிக்கல்களையும் தீர்க்கும்வண்ணம் அனைத்து மாவட்ட , மற்றும் வட்டங்களில் நியாயவிலைக் கடையளவில் கண்காணிப்புக் குழுக்களும், மாவட்டளவில் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவும் சேவை புரிகின்றன. கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் செயல்பாட்டில் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் காணப்படுமாயின், இதுதொடர்பான புகார்களை முறையே மாவட்டங்களிலுள்ள வட்ட வழங்கல் அலுவலர்களிடமும், சென்னை நகரமாயின், சென்னையிலுள்ள உதவி ஆணையாளர்களிடமும், விழிப்புக் கமிட்டி உறுப்பினர்கள் தெரிவிக்கவேண்டும். விழிப்புக் குழுக்களின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட எல்லைக்குள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளினால் பெறப்படும் அத்தியாவசியப் பொருட்கள் குறிப்பிட்டுள்ள தரத்தில் உள்ளனவா? எனச் சரிபார்க்கலாம். அவ்வாறு இல்லையெனில் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லலாம். மேலும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நியாயவினலக் கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கட்டுப்பாட்டுப் பொருட்களின் அளவு முழுவதும் வந்து சேர்ந்துள்ளனவா? என்பதையும் சரிபார்க்கவேண்டும்.

இதுபற்றி மண்டல இணைப் பதிவாளர்களின் கீழ் பணிபுரியும் அலுவலர்களைக் கொண்டு நியாயவிலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்ய 'சிறப்புப் பறக்கும் படைகள்' அமைக்கப்பட்டு செயல் புரிகின்றன.

மலைப்பகுதிகளில் நடமாடும் நியாயவிலைக் கடைகள்

மலைப்பகுதிகளில் மற்றும் அணுக முடியாத இடங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மலைவாழ் மக்களின் மேன்மைக்காக நடமாடும் நியாயவிலைக் கடைகளை நடத்தக் கூண்டு உந்துகள் வாங்க அரசு நிதியுதவி செய்து வருகிறது. 18 கூட்டுறவு சங்கங்களுக்கு 19 கூண்டு உந்துகள் வாங்க ரூ.59.50 இலட்சங்கள் இதுவரை அரசு ஒப்பளித்துள்ளது. இக்கூண்டு உந்துகள் மலைப்பகுதி மற்றும் மலைவாழ் பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் நடமாடும் நியாயவிலைக் கடைகளாக செயல்பட்டு வருகின்றன.

■ வினை விதைத்தவர்கள் இன்று வினையை அறுவடை செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் தினை விதைத்தோம், எனவே, அதை நாட்டு மக்களுக்கான நல்ல திட்டங்களாக அறுவடை செய்து படைத்துக் கொண்டிருக்கிறோம்.

நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களின் சம்பளம்

நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குறைவாகச் சம்பளம் தருவதால் தவறுகள் நடந்து வருகின்றதென்று சொல்லப்படுகின்ற நிலையை மாற்ற டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு தீர்க்கமாக ஆராய்ந்து 1.3.92 முதல் ரூ.350 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தியும், 1.3.93இல் மேலும் ரூ.100 உயர்த்தி ஒவ்வொருவருக்கும் சம்பளம் ரூ.600 ஆகக் கொடுக்கப்பட்டது. அதுவும் 1.4.94 முதல் ரூ.750 ஆக டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் உயர்த்தப்பட்டிருக்கிறது. 25 மாதங்களில் ரூ.400 என்ற அளவில் ஊதிய உயர்வாகக் கொடுக்கும் வகையில் கூட்டுறவுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.5 கோடி அளவில் கூடுதல் செலவாகும். இது தவிர, கருணைத் தொகையாக இந்தாண்டுப் பொங்கலுக்கு ரூ.200 வழங்கிட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள்.

கூட்டுறவுத் துறையில் தொழிற்பயிற்சி நிலையங்கள்

மாண்புமிகு புரட்சித்தலைவி

அவர்களுடைய ஆணைக்கேற்ப, தருமபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களில் துணி, வெட்டுதல் மற்றும் தையற் கலை ஆடை தயாரிக்கும் கலை, கணிப்பொறிப் பயிற்சி, மின்சாரப் பணியாளர் ஆகிய பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கு இலவசமாகத், தங்கும் வசதியும, இலவசமாகப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த நான்கு பயிற்சி வகுப்புகளிலும் 1993-94-ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டையில் 111 மாணவர்களும், பர்கூரில் 111 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இதே முறையில் பயிற்சி நடைபெறவிருக்கிறது. இதன் மூலமாகச் சுயவேலை வாய்ப்புப் பெருக்கத் திட்டத்திலும், புரட்சித்தலைவி ஆட்சி பெரும் பங்காற்றுகிறது எனப் பெருமிதம் கொள்ளலாம்.

இந்தப் பயிற்சிக் கேந்திரங்களை நடத்துவதற்குக் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.150 இலட்சம் வழங்கிட, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்குப் புரட்சித்தலைவி அவர்கள் அனுமதி அளித்துள்ளார். இதற்கான செலவினங்களுக்காக ரூ.125 இலட்சத்திற்குக் குவிப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்தத் தொகையை முதலீடு செய்யும் வகையில் கிடைக்கின்ற வட்டித் தொகையைக் கொண்டு இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களும் நடத்தப்பெற்று வருகின்றன. பர்கூரில் உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையத்திற்கு 5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, ரூ.70.00 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டுகின்ற பணியும் தொடங்கி முடியும் தறுவாயில் உள்ளது.

குறை தீர்க்கும் அமைப்பு

கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளிலுள்ள குறைகளைக் கேட்டு அந்தக் குறைகளை உடனடியாகப் போக்குவதற்காக, மாவட்டளவில் ஒரு குறை கேட்கும் அமைப்பு ஒன்றினை உருவாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளதையொட்டி, அதற்குரிய அரசு ஆணை வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதல்வர் தொழில் கடன் திட்டம்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் தொழிற் கடன் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டு /வாழ்வில் நலிவுற்றோருக்குத் தொழில் தொடங்குவதற்காக நகரக் கூட்டுறவு வங்கியின் மூலம் கடன் மிக எளிதில் கிடைக்க வழிவகை காணப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 1992-93- இல் 1,42,447 பேருக்கு ரூ.68.23 கோடியும், 1993-94-இல் 1,89,492 பேருக்கு ரூ.83.72 கோடியும் கடன்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

நடப்பு நிதியாண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் 2 இலட்சம் பேருக்குத் தொழில் தொடங்குவதற்குக் கடன் வழங்கப்படவிருக்கிறது. இதில் 1992-93- இல் 62,980 பெண்கட்கு ரூ.23.05 கோடியும், 1993-94- இல் 1,00,707 பெண்கட்கு ரூ.38.67 கோடியும் தொழில் தொடங்கக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

'லேம்ப்' எனப்படும் மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் தற்போது 18 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்-லேம்ப் சங்கங்கள் 75,754 உறுப்பினர்களுடன் செயல்படுகின்றன. தற்போது இந்தச் சங்கம் வட்டியில்லாக் கடன்களைப் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு வழங்கி வருகின்றன. புரட்சித் தலைவியின் அரசு 1991-92-இல் ரூ.91.50 இலட்சம், 1992-93-இல் ரூ.78.28 இலட்சம், 1993-94-இல் ரூ.79.11 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 1994-95-இல் ரூ.78.99 இலட்சம் மானியம் வழங்க உத்தேசித்துள்ளது.

விவசாய விளைபொருட்கள் விற்பனை

மாநிலம் முழுவதும் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தங்களுடைய உறுப்பினர்களுக்கு விவசாய விளைப்பொருட்களை நியாயமான முறையில் விற்பனை செய்ய உதவியுள்ளது. 1991-92- இல் ரூ.325.39 கோடி, 1992-93- இல் ரூ.389.48 கோடி, 1993-94- இல், ரூ.428.32 கோடி மதிப்புள்ள விவசாய விளைப்பொருட்களை விற்பனை செய்யவும் தகுந்த நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

விவசாய இடுபொருள் விநியோகம்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகட்கு 1991-92- இல் ரூ.168.04 கோடியும், 1992-93- இல், ரூ194.64 கோடியும், 1993-94- இல் ரூ.169.63 கோடி மதிப்புள்ள வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

நுகர்பொருள் விற்பனை

கூட்டுறவு மூலம் 1991-92- இல் ரூ.1267.35 கோடியும், 1992-93- இல் ரூ.1236.10 கோடியும், 1993-94-இல் ரூ.1400.10 கோடி மதிப்புள்ள நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டப் பணிகள் காமராசர் மாவட்டம், தென் ஆர்க்காடு- வள்ளலார் மாவட்டம் மற்றும் விழுப்புரம் -இராமசாமி படையாட்சியார் மாவட்டம் உட்படக் கடந்த சில ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் காமராசர் மாவட்டத்தில் ரூ.862.51 இலட்சம் மதிப்பீட்டிலும், தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம்- இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் ரூ.1508.207 இலட்சம் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 1993-94-இல் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. மேலும் திருவண்ணாமலை சம்புவராயர் தருமபுரி மாவட்டங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். படிப்படியாக இத் திட்டம் இராமநாதபுரம், பெரியார், புதுக்கோட்டை, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கூட்டுறவுப் பயிற்சி

தமிழ்நாட்டில் 9 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் தத்துவமும் வரலாறும், கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவுத் தணிக்கை, கூட்டுவுக் கணக்கியல், கூட்டுறவு வங்கியியல், கூட்டுறவு மேலாண்மை, கூட்டுறவுக் கடன், கடனற்ற கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய எட்டுப் பாடங்களைப் பட்டயப் பயிற்சிக்கும், அஞ்சல் வழிப் பயிற்சிக்கும் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

1992-93- இல் 3000 பேர் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கும், 3336 பேர் அஞ்சல் வழிக் கூட்டுறவுப் பயிற்சிக்கும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். 1993-94- ஆம் ஆண்டில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியினை அதிக அளவில் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பெருகின்ற வகையில் 4336 பேர் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கும், 5274 பேர் அஞ்சல் வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

வானொலி கூட்டுறவுக் கல்விக் கூடம்

பள்ளிப் பருவத்திலேயே வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர் அனைத்துத் துறைகளிலும் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அக்கறை கொண்டவர்கள் என்பதை நாடு அறியும். மாணவப் பருவத்திலேயே கூட்டுறவுப் பற்றிய அடிப்படை கருத்துக்களைக் கற்பிக்க வேண்டுமென்ற அடிப்படையில் திருச்சி வானொலி மூலம் 15.1.94 முதல் 31.3.94 வரை கூட்டுறவுப் பாடம் கற்பிக்கப்பட்டது.

14,000 மாணவர்கள் இப்பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டார்கள். 12 பாடங்கள் பற்றி தினம் 5 முதல் 7 நிமிடம் வரை நடத்தப்பட்டது.

பாடம் முடிந்த பின்னர் தேர்வு நடத்தப்பட்டுள்ளது. வானொலி மூலம் கேள்விகள் ஒலிப்பரப்பப்பட்டன. பதில் தபால் மூலம் பெறப்பட்டு 28 தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவருக்குப் பரிசுகள் வழங்கப்படும். 1994-95-ஆம் ஆண்டில் இத்திட்டம் மற்ற வானொலி நிலையங்கள் மூலமும் செயல்படுத்தப்படும்.

கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்களுக்குக் கட்டடங்கள் கட்டும் பணி:

கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறையைச்சார்ந்த நிறுவனங்கள் அனைத்திற்குமான கட்டுமானப் பணிகளுக்கெனப் பிரத்தியேகமாக மாநிலம் முழுமைக்குமாகக் கண்காணிப்புப் பொறியாளர் (கட்டுமானம்) நியமிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கட்டடங்கள் கட்டும் பணிகள் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக்கேற்ப மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 1991-92-இல் 121 வேலைகள் ரூ.6.92 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றன. 1992-93- இல் 140 வேலைகள் ரூ6.38 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றன. இவற்றில் 139 வேலைகள் முடிவுற்றன. 1993-94- இல் 120 வேலைகள் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 1994-95-ஆம் ஆண்டில் 150 வேலைகள் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ளன.

பல்வேறு ஆக்கப் பூர்வமான பணிகளைக் கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் மேலான அரிவுரைகளோடும், ஆணைகளோடும், கூட்டுறவுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதைத் தமிழகத்து மக்கள் மிகவும் நன்றாக அறிவார்கள், தமிழகத்து மக்கள் மேலும் பல பயன்களைப் பெறுகின்ற வகையில் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் நிறைவேற்றப்படவிருக்கின்றன.

தேவை அடிப்படையிலான கடன்களை அதிகரித்தலும், இக்கடன் தொகைகளுக்கு வசூலிக்கப்படும் வட்டி வீதங்களைக் குறைத்தலும்

தற்போது சிறு வணிகர்கள், பெட்டிக்கடை வியாபாரிகள் போன்றவர்களுக்குத் தேவை அடிப்படையினான கடன்களை மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வருகின்றன. இத்தகைய கடன்களைப் பெரும்பாலும் பெண்களுக்கு வழங்கப்படுகின்றன. தற்போது இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகை அளவான 500 ரூபாயை 750 ரூபாயாக அதிகரிக்கவும், அதற்காக வசூலிக்கப்படும் வட்டி வீதத்தை 16 சதவிகிதத்திலிருந்து 14 சதவிகிதமாகக் குறைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

நகைக் கடன் தொகைக்கான உயர் அளவுக் கடன் தொகையை அதிகரித்தல்

கடன் நிவாரணச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து முறையான நிதி நிறுவனங்கள் அல்லாதவை கடன் வழங்குவதைக் குறைத்துக் கொண்டன.

பாதையில் பளிங்குக்கற்கள் பதித்தல், வாகனங்கள் நிறுத்தும் பகுதிகளை மேம்படுத்துதல், அழகிய கைப்பிடிகள் கொண்ட அடைப்புகள் அமைத்தல் ஆகிய பணிகள் தற்போது விரைவான முறையில் நடைபெற்று வருகின்றன.

ரூ.45 லட்சம் செலவில் ஐந்து உயர் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டு மெரினா கடற்கரைப் பகுதி ஒளியூட்டப்பட்டுள்ளது.

காமராஜர் சாலையை ரூ.5.00 கோடி செலவில் சிமெண்ட் கான்கிரிட் சாலையாக மாற்றும் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

ரூ.68 இலட்சம் செலவில் எலியட்ஸ் கடற்கரையை அழகுபடுத்தும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

மெரினா கடற்கரையிலுள்ள நீச்சல் குளம் ரூ.60 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்பட்டு பொதுமக்கள் தற்போது பயன்படுத்தி வருகிறார்கள்.

மதுரை மாநகராட்சி

தமிழகத்தில் சென்னை மாநகரத்திற்கு அடுத்தப்படியாக உள்ள பெரிய நகரம் மதுரை மாநகர் ஆகும். சுற்றுலா மற்றும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த இந்நகரில் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது மதுரை மாநகராட்சியின் தலையாய கடமையாகும். ரூ.602.00 இலட்சம் செலவில்190 கி,மீ. நீளச்சாலைகள் தார்ச்சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளது. ரூ.80.86 இலட்சம் செலவில் புதிய பள்ளிக் கட்டடங்கள் மற்றும் மகப்பேறு மருத்துவமனை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதேபோன்று ரூ.79.67 இலட்சம் செலவில் மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நகரில் சாலைகளின் சந்திப்புகளில் ஒளி உமிழும் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கத் திட்டமிட்டு, ரூ.33.78 இலட்சம் செலவில் 1289 விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று நகரின் விரிவாக்கப் பகுதிகளில் 2027 குழல் விளக்குகள் ரூ.17.98 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. நகரின் மையப் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் ஏற்கெனவே இருந்த பெரியார் பேருந்து நிலையத்தைச் சீரமைக்கும் பணியுடன், புதிய பேருந்து நிலையங்கள் ஆரப்பாளையம் மற்றும் பழங்காநத்தம் பகுதிகளில் துவக்கப்பட்டன. கீழ்க்கண்டவாறு பேருந்து நிலைய அபிவிருத்திக்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டு முடிக்கப்பட்டன.

■ எந்த வசதியும் தொட முடியாத தொலைதூரத்தில் உள்ள கிராமங்களில் தேவையான வசதிகளைப் பெருக்குவதும், அங்குள்ள கிராம மக்களுக்கு வாழ்வு வளங்களை உருவாக்கி வழங்குவதும் எங்களது அரசின் தலையாய கடமை ஆகும்.

பெரியார் பேருந்து நிலையம்	30.00 இலட்சம்
பழங்காநத்தம்	29.00 இலட்சம்
ஆரப்பாளையம்	12.00 இலட்சம்
அண்ணா பேருந்து நிலையம்	5.00 இலட்சம்

இதுதவிர மேலூர் சாலையில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்கும் பணி ரூ.20 கோடி செலவில் திட்டமிடப்பட்டு 21.10.93 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பேருந்து நிலைய முதல் கட்டப் பணிகள் விரைவாகத் தற்போது நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதோடு பொழுதுபோக்கு அம்சத்தையும் மேம்படுத்தும் வண்ணம் 1993-94-இல் 22 பூங்காக்கள் ரூ.23.30 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டன. இது தவிர சிறுவர்களுக்கெனப் பிரத்தியேகமாக ரூ.40 இலட்சம் செலவில் ராஜாஜி பூங்கா மேம்படுத்தப்பட்டு, தற்போது பணி முடிவடையும் நிலையில் உள்ளது. மாநகராட்சி பணிகளைத் துரிதமாகச் செய்யவும், வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்தவும் சொத்து வரி வசூலிக்கும் பொருட்டு வெளியிடப்படும், கேட்பு அறிவிப்புகள் துரிதப்படுத்த ரூ.29 இலட்சம் செலவில் கணிப்பொறி மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி

கோவை மாநகராட்சியில் சுமார் 614.00 கி.மீ. நீளச் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. 1993- 94-ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 601 இலட்சத்தில் சாலைகள் பராமரிப்பு பணி நடைபெற்றுள்ளது. ரூ.802 இலட்சம் செலவில் புதிய பள்ளிக்கட்டடங்கள், தாய்சேய் நல விடுதி கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மாநகராட்சிக்குச் சொந்தமான தாய்சேய் நல விடுதிக்கட்டடங்கள் ரூ.90 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பழமை வாய்ந்த 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட விக்டோரியா டவுன்ஹால் கட்டடம் ரூ.8.50 இலட்சம் செலவில் நவீன இருக்கை வசதி மற்றும் பொது மக்கள் உபயோகத்திற்குப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியின் வருவாயைப் பெருக்க நவீன மயமான மின்னணு பளுதூக்கிப் பாலம் மேட்டுப்பாளையம் ரோடு மாநகராட்சிப் பணிமனை அருகில் ரூ.8.50 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. வ.உ.சி.பூங்கா ரூ.10 இலட்சம் செலவில் கூடுதல் வசதிகளுடன் நவீனமாக்கப்பட்டது. ரூ20 இலட்சம் செலவில் நகரப் பேருந்து நிலையம் முறையே மிதிவண்டி நிலையம் மற்றும் பயணிகள் அமர்வதற்கு நாற்காலிகள் பொருத்தப்பட்டுள்ளன.

ரூ.15 இலட்சம் செலவில் மாநகராட்சி மத்தியப்பேருந்து நிலையத்தில் ஆஸ்பால்டிக் கான்கிரீட் சாலைகள் அமைத்தும், சுவர்க் கடிகாரங்கள் அமைத்தும் மற்றும் சாலையோரப் பூங்காக்கள் அமைத்தும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் இம்மாநகராட்சியில் மின் விநியோகம் பகுதியில் 8,695 தெரு விளக்குகளும், இம்மாநகராட்சி மின்துறையாலும் சேர்க்கப்பட்ட பகுதியில் [illegible]91 தெரு விளக்குகளும் மின் வாரியத்தாலும் பராமரிக்கப்படுகின்றது. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள நலிவடைந்த நகர்ப்புற மக்களுக்கு 25 சதவித மானியத் தொகையுடன் கூடிய கடன் தொகை சிறு தொழில்கள் தொடங்க வங்கிகள் மூலம் 525 நபர்களுக்கு ரூ.12.86 இலட்சம் மானியமாகவும் ரூ.51.06 இலட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சிகள்:

சேலம், திருச்சி, மற்றும் திருநெல்வேலி நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்தி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கூத்தாநல்லூர் நகரப்பஞ்சாயத்து [illegible]4.94 முதல் நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. உசிலம் [illegible]டி, குளித்தலை மற்றும் வந்த[illegible]சி நகரப் பஞ்சாயத்துகளை நகராட்சியாக உயர்த்த முன்னிலை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நகராட்சிகள், மாநகராட்சிகளின் முக்கிய வருமானம் சொத்து வரியேயாகும். அனைத்து நகராட்சிகளும், நகரியங்களும் 1.10.93 முதல் சொத்துவரியைத் திருத்தியமைக்கப்பட்ட சொத்துவரியினால் கிடைக்கும் கூடுதல் வருமானம் கொண்டு தங்கள் பணிகளை நல்ல முறையில் செயல்படுத்த வழி வகுக்கும்.

[illegible]4.92-லிருந்து தொழில்வரியைத் திருத்தியமைப்பதற்கான சட்டத்தைச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.மாதம் ஒன்றுக்கு ரூ.1500/ க்குக் கீழ் ஊதியம் பெறும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சாலைகளை மேம்படுத்துவதற்குப் பாதிகடன் மற்றும் பாதி மானியம் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் நகராட்சிகளுக்கு ரூ.150. 00 இலட்சம் மான்யமும் ரூ.150. 00 இலட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

சாலை மேம்பாடு முழுகடன் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் 49 நகராட்சிகளுக்கு ரூ.130 இலட்சம் கடனாக அளிக்கப்பட்டுள்ளது.

சிறப்புத் திட்டத்தின்கீழ் 1993-94-ஆம் ஆண்டிற்குச் சாலை பழுது பார்ப்பதற்கு 63 நகராட்சிகளுக்கு ரூ.300 இலட்சம் மானியம் தரப்பட்டுள்ளது.

ஹட்கோ கடன், மைய அரசு மான்யம், நகராட்சிகளின் பங்குத் தொகை ஆகிய ஆதாரங்களைக் கொண்டு 1991 ஜூன் முதல் இன்று வரை "குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டத்தின்" கீழ் ரூ.18.90 கோடி செலவில் 68,633 தனியார் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் நிகழ்த்தியுள்ள சாதனை விவரங்கள் பின்வருமாறு:

அ) நகர்ப்புறங்களில் நலிவுற்ற மக்களுக்குச் சிறு தொழில் மூலம் சுய வேலைவாய்ப்புக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் 45,186 நபர்களுக்குச் சிறு தொழில்கள் நிறுவ ரூ.755.45 இலட்சம் மானியமும் ரூ.2,240.76 இலட்சம் வங்கிக் கடனுதவியும் அளிக்கப்பட்டுள்ளது.

ஆ) பொதுப்பணிகளைச் செய்வதன் மூலம் நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டத்தின்கீழ் 18.04 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ரூ.985.75 இலட்சம் செலவில் 3,908 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

இ) குடியிருப்பு மேம்பாட்டின் மூலம் வேலைவாய்ப்பினை அளித்தல் என்னும் திட்டத்தின் கீழ் 31.3.94 வரை, 83,768 குடியிருப்புகள் மேம்படுத்தப்பட்டு 53.30 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின் கீழ் பயிற்சி முடித்தவர்களும், பயிற்சி பெறுபவர்களும் சேர்த்து மொத்த எண்ணிக்கை 7,991 ஆகும்.

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து உதவிபெற்ற 59 நகராட்சிக்கும், 3 மாநகராட்சிக்கும் மொத்தம் ரூ.116.10 கோடி அளவிளான வருவாய் தரத்தக்க மற்றும் பல்வேறு திட்டங்களைச் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொண்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14.4.1971 அன்று தோற்றுவிக்கப்பட்டது. அது இத்தனை ஆண்டுக் காலங்களில், குடிநீர் வடிகால் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகளை ஏற்றல், திட்டங்களை வடிவமைத்தல், திட்டங்களைச் செயலாக்குதல்

தன்னம்பிக்கை

மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாட்டையவேண்டுமானால், தன்னம்பிக்கை! உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.

வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களின் கோரப்பிடியில் அவசரக் கடன் தேவைகளைச் சமாளிக்கவும், மாநிலம் முழுவதிலும் உள்ள கடன் கூட்டுறவுச் சங்கங்கள், நகைக்கடன்களை அடமானத்தின் பேரில் வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நகைகளை அடமானம் வைப்பதன் பேரில் தற்போது ஒருவருக்கு வழங்கப்படும் உயரளவுக் கடன் தொகை ரூ.25,000. ஒரு சவரனுக்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ.2,200 ஆகும். வழங்கப்படும் உயரளவுக் கடன் தொகையை ரூ.40,000 ஆகவும், ஒரு சவரனுக்கு வழங்கப்படும் கடன் தொகையை ரூ.2,400 ஆகவும் அதிகரிக்கப் படுகிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்புப் பெட்டகங்களை அமைத்தல்

கிராமப்புற மக்களுக்கு நகைக் கடன் வழங்க, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை ஊக்குவிக்கும்பொருட்டு மற்றும் திருடர்கள் அணுக முடியாத வகையில் நகைகள் பாதுகாப்பாக வைப்பதற்காகப் பெட்டகங்கள் 1994-95-இல் தெரிந்தெடுக்கப்பட்ட 450 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.225 இலட்சம் கூட்டுறவு வளர்ச்சி நிதிகளிலிருந்தும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி நிதியிலிருந்தும் நடப்பாண்டில் மானியமாக ஒதுக்கப்படும்.

மேலும், 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் அரசு நிதியிலிருந்து 150 தெரிந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ.30 இலட்சம் கடனாக வழங்க வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே 1993-94-இல் வரை இத்திட்டத்தின் கீழ் ரூ.100.95 இலட்சம் கடனாக 895 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

எனவே, 1994-95-ஆம் ஆண்டில் தெரிந்தெடுக்கப்பட்ட 450 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படவுள்ள ரூ.225 இலட்சம் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி நிதியிலிருந்தும் நடப்பாண்டில் மானியமாக ஒதுக்கீடு செய்யப் படும்.

கூட்டுறவுத் துறை நடத்தக் கருதியுள்ள மாநில, மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகள்

தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சி விளையாட்டுத் துறையில் ஒரு பொற்காலமாகும். தடகளப் போட்டிகளுக்கும், உடல் திற விளையாட்டுகளுக்கும் ஊக்கமளிப்பதற்காக மாநில அரசு அண்மையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த அணுகுமுறைக்கு இணங்க, அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் சுமார் 47,067 பணியாளர்களும் பங்கேற்பதற்காக ஒவ்வோராண்டும் மாநில அளவிலான தடகளப் போட்டிகளை நடத்தவும், சிறந்த விளையாட்டு அணியினருக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரில் சிறந்த வேலைப்பாடுகள் அடங்கிய சுழற்கோப்பை ஒன்று வழங்கப் படும்.

கூட்டுறவுக் கோட்பாடுகளை விளக்குகின்ற திரைப் படங்களைத் தயாரித்தல்

கூட்டுறவு இயக்கம் அடித்தள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு மாபெரும் இயக்கமாகும். கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு வளர்ச்சி தற்போது கூட்டுறவு இயக்கம் சமுதாயத்திற்கு ஆற்றுகின்ற மகத்தான சேவை குறித்தும் விளக்குகின்ற 15 நிமிடங்கள், 30 நிமிடங்கள் கால அளவுடைய இரண்டு திரைப்படங்களைத் தயாரிப்பதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் அதனுடைய பிரச்சார விளம்பர நடவடிக்கைகளை மேலும் முடுக்கி விடக் கருதியுள்ளது. இத்திரைப் படங்கள் அந்தத் துறையில் பிரபலமாக உள்ள வல்லுநர்களின் மூலம் தயாரிக்கலாம். அவை அண்மை ஆண்டுகளில் கூட்டுறவினால் அடைந்த வெற்றிகளைப் பற்றிய சில விவரங்களை விளக்குவதாக இருக்கும்.

நியாயவிலைக் கடைகளுக்கு விளிம்புத் தொகையை அதிகரித்தல்

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் நட்டத்தில் இயக்கும் நிலையினைத் தவிர்க்க, கிராம நியாயவிலைக் கடைகளுக்கு 1993-94- ஆம் ஆண்டில் ரூ.1260 இலட்சங்கள் மானியமாக அரசு ஒப்பளித்துள்ளது. நியாயவிலைப் பொருட்கள் வழங்கும் முதன்மை மற்றும் இணைப்புச் சங்கங்களுக்கு இதுவரை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கும் அரிசியைப் பொறுத்தமட்டில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.10 வீதம் விளிம்புத் தொகையாகக் கிடைத்து வந்தது. டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அறிவுரைக்கு ஏற்ப நியாயவிலைக் கடைகள் நட்டத்தில் இயங்கும் நிலையை தடுக்கும் வண்ணம் 1994-95-ஆம் ஆண்டில் இந்த விளிம்புத் தொகை இருமடங்காக அதாவது குவிண்டாலுக்கு ரூ.20 ஆக உயர்த்தப்படும்.

பார்புகழும் சாதனைகளைக் கூட்டுறவுத் துறை நாள்தோறும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் உருவாக்கி வருகிறது. கூட்டுறவே நாட்டுயர்வு என்கிற சித்தாந்தம் தமிழகத்தில் இன்றைய தினம் வளர்ந்தோங்கி உள்ளது என்பது வெள்ளிடையாகும்.

ஏற்றமிகு நகராட்சி நிர்வாகமும்,வளமிகு வாழ்வளிக்கும் குடிநீர்த் திட்டங்களும்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு டி.எம். செல்வகணபதி



வரலாறு காணாத வகையில் தமிழக மக்களின் பேராதரவைப் பெற்று,நமது இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்றாண்டுகள் முடிவுற்றுள்ளன. என்றுமுள செந்தமிழில் இனிமையும் ஏற்றமிகு ஆட்சித் திறனும் அறிவாற்றலும் கொண்டு தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றப் பாதையில் நடத்தி, நல்லாட்சி செலுத்தும் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் தமிழகம் இமயம் போல் கீர்த்திபெற்று வருகிறது. இந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தின் தன்மானத்தை உயர்த்தி, இந்திய அளவில் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் காணச்செய்துள்ளார், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்.

அரசியல் சாதுரியமும், தொலைநோக்குப் பார்வையும் மக்களின் நலனே கருத்தாகக் கொண்ட பொதுநல நோக்கமும் கொண்ட புரட்சித்தலைவி அவர்களின் ஒப்பற்ற தலைமையின்கீழ் இயங்கும் தமிழக அரசு, இந்த மூன்றாண்டுகளில் ஆற்றிய அளப்பரிய சாதனைகளை எண்ணிப் பெருமிதம் கொள்ள இயலும். பல்வேறு துறைகளில் வியத்தகு முன்னேற்றம் எய்தியுள்ளது போன்றே நகராட்சி நிர்வாகத்திலும் குடிநீர் வழங்கு துறையிலும் எழுச்சிமிகு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

அவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்க சாத்னைகள் பின்வருமாறு:

(1) அரசியல் அமைப்பு 74 வது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கு இணங்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், சென்னை, மதுரை,கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டங்களில் தகுந்த திருத்தங்கள் கொண்டுவரப் பெற்றுள்ளன.

(2) இதுவரை பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் இயங்கி வந்த பேரூராட்சிகள் நகராட்சிகள் சட்டம் 1920-ன் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

(3) 1.06.1994- லிருந்து திருச்சி திருநெல்வேலி மற்றும் சேலம் நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

(4) சென்னையில் நிலவிய கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு, 1993 ஆகஸ்ட் திங்கள் "புதிய வீராணம்" திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

எழில்மிகு சென்னை

சென்னை மாநகரத்தில் திட்டமிட்ட மேம்பாட்டுப் பணிகளுக்காக ஐந்து ஆண்டுகளில் ரூ.1250 கோடி செலவில் அமல்படுத்துவதற்கான "எழில்மிகு சென்னை2000" என்னும் பெருந்திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டை ரூ.1250 கோடியிலிருந்து ரூ,4000 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி சென்னை மாநகராட்சியின் திட்டப் பணிகளுக்கான மதிப்பீடும் ரூ.135 கோடியிலிருந்து ரூ.435 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

"எழில்மிகு சென்னை 2000" திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி செயல்படுத்த வேண்டிய பணிகள் மும்முரமாகத் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மூலதனச்செலவுப் பணிகளுக்காக, சென்னை மாநகராட்சிக்கு 1990- 91-ல் செலவிட்ட தொகை ரூ.26.96 கோடி மட்டுமே ஆகும். ஆனால் 1994-95-இல் இச்செலவு ரூ.143 கோடி அளவுக்கு அதிகரித்து உள்ளது.

சென்னை மாநகராட்சியின் வருவாய் 1990- 91-ல் ரூ.79 கோடியாக இருந்தது. 1993- 94-இல் ரூ.189.00 கோடியாக அதிகரித்து உள்ளது. நடப்பு நிதி ஆண்டில் (1994-95) வருவாய் ரூ.204.00 கோடியாக அதிகரிக்கும்.

மெரினா மற்றும் எலியட்ஸ் கடற்கரை மேம்பாடு

உலகிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரை என்று பெயர் பெற்றது நம் மெரினா கடற்கரை. ஒரு கோடி ரூபாய் செலவில் மெரினா கடற்கரையில் உழைப்பாளர் சிலையிலிருந்து கலங்கரை விளக்கம் வரை உள்ள நடை

ஆகிய பணிகளில் சிறப்பான முன்னேற்றம் எய்தியுள்ளது. இவ்வாரியம், விமானத்திலிருந்து ஆய்வுசெய்து வரைபடம் தயாரித்தல் தொலையுணர்வு போன்ற வகைகளில் குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிவதில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி வருகிறது. வாரியம் ஏற்றுக்கொண்ட பெரு முயற்சியின் காரணமாக, இம்மாநிலத்தின் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் முற்றிலுமாகக் குடிநீர் வழங்குவது என்னும் குறிக்கோளை நோக்கி தமிழகம் சீராக முன்னேறிச் செல்கிறது.

இந்திய அரசின் கோட்பாடுகளுக்கிணங்க 1992-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் படி, குடிநீர் வசதிப்பெறாத 1,216 குடியிருப்புகளுக்கும் விரைவில் குடி நீர் வசதி செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளைப் பொறுத்த வரை கடந்த மூன்று ஆண்டுகளில் 11,679 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்தம் ரூ.228.12 கோடி செலவில் குடிநீர் வசதி செய்யப்பட்டது. இதனால் 74.78 இலட்சம் மக்கள் பயன்பெற்றனர்.

நகரப்பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்களின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் ரூ.86.63 கோடி செலவில் 36 நகரங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டது. பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 13.31 இலட்சமாகும்.

தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல்லை ஆதாரமாகக் கொண்டு 2 நகராட்சிகள் 14 பேரூராட்சிகள் மற்றும் 4,152 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.400 கோடி மதிப்பீட்டில் சுமார் 26 இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

திருச்சி நகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.36.76 கோடி செலவில் 6 இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், சேலம் மற்றும் கோவை வடிகால் திட்டங்களுக்காக ரூ.3.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் பழனி நகராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், வீரபாண்டி பேரூராட்சிக் குடிநீர்த் திட்டம் மற்றும் இனாம் கரூர் பேரூராட்சிக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.12.376 கோடிக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப் பட்டு திட்டங்கள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சுமார் 9000 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல் துப்புரவுத் திட்டத்திற்கு வகை செய்தல் ஆகிய திட்டப் பணிகளுக்காக ரூ.530 கோடி மதிப்பீட்டில் ஒரு செயல் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் உதவியைப் பெறுவதற்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேறும்போது சுமார் [illegible] இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர் ஆதாரங்கள் இல்லாத பகுதிகளில், ரூ.53 கோடி மதிப்பீட்டில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி, குடிநீர் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

சென்னை மாநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுப் பணிகள் திட்டத்தட்ட 39 இலட்சம் மக்களின் தேவையை நிறைவு செய்வதற்காக, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இவ்வாரியம் இரண்டு முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அவை யாவன:

1. சென்னை குடிநீர் வழங்கல் துப்புரவுத் திட்டம்.

2. கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம் பணிகளின்கீழ் நீர் கொணர்ந்து வழங்கல் திட்டம்.

புதிய நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கும் பணிகள் தொடர்பாகக் கொடுதலையாற்றின் குறுக்கே இரண்டு தடுப்பணைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

குடிநீர் விநியோக அமைப்பிலுள்ள பழைய அடைப்பு ஏற்பட்ட குடிநீர் முதன்மைக் குழாய்த் தொடர் படிப்படியாக மாற்றப் பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் 101 கி.மீ. நீளத்திற்குப் புதிய குடிநீர் முதன்மைக் குழாய்கள் அமைக்கப்பட்டன. மேலும் 169 கி.மீ. நீளத்திற்குப் பழைய அடைப்பு ஏற்பட்ட குடிநீர் முதன்மைக் குழாய்கள் மாற்றப்பட்டன.

கடந்த மூன்று ஆண்டுகளில் திருவான்மியூர், வில்லிவாக்கம் மற்றும் சாலிக்கிராமம் ஆகிய பகுதிகளுக்குக் கழிவு நீரகற்று வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், விருகம்பாக்கம், கொளத்தூர் மற்றும் வேளச்சேரி ஆகிய பகுதிகளுக்குக் கழிவு நீரகற்று வசதிப் பணி நடைபெற்று வருகிறது. கோயம்பேடு, கானகம் மற்றும் தரமணி ஆகிய பகுதிகளில் கழிவு நீரகற்று வசதிப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். கடந்த மூன்று ஆண்டுகளில் 389 கி.மீ. நீளத்திற்குக் கழிவு நீரகற்று முதன்மைக் குழாய்கள் அமைக்கப்பட்டன.

சென்னைக் குடிநீர் வாரியம், ஜப்பானிய நிதியுதவியுடன் சென்னை நகரில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றுக் குழாய்களின் தரத்தினை மேம்படுத்தவும், தொழிற்சாலைகளுக்கு நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்கவும் ரூ.572.09 கோடி மதிப்பீட்டிலான திட்டம் விரைவில் அமல்படுத்தபடவுள்ளது.

சென்னைக் குடிநீர் வழங்கல்

1992-இல் வடகிழக்குப் பருவ மழையின்மையால் சென்னை மாநகரத்தில் 1993ல் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. இக்குடிநீர் தட்டுப்பாட்டினைச் சமாளிக்க, கூடுதலாக 2,664 பம்புகள் சென்னை மாநகரத்தின் பல்வேறு பகுதிகளில் போடப் பட்டன. தினசரி 370 தண்ணீர் லாரிகளும், 486 டிராக்டர்களும் அமர்த்தி மாநகரிலுள்ள 7,005 நீர்த்தொட்டிகளில் குடிநீர் நிரப் பப்பட்டன. மேலும் நெய்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலிருந்தும் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவந்து விநியோகம் செய்யப்பட்டு பிரச்சினை சமாளிக்கப்பட்டது. 1.4.94லிருந்து தினசரி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டம்

சென்னை நகரத்திற்குக் கிருஷ்ணா குடிநீர் 1995 ஜூன் முதல் வழங்க வேண்டும் என்று அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உலக வங்கி உதவியுடன் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நிறைவேற்ற இருக்கிறது. குடிநீர் வழங்கும் வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் 1991-92-இல் தொடங்கப்பட்டு நல்ல முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது.

புதிய வீராணம் திட்டம்

சென்னையில் நிலவிய கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசு 1993 ஆகஸ்டு திங்களில் "புதிய வீராணம்" திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீர், தற்போதுள்ள வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு வழங்கப் படும். உலக வங்கி இப்பெருந் திட்டத்திற்கு நிதியுதவியளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. வீராணம் ஏரியிலிருந்து கொண்டுவரப்படும் நீர் தற்போதுள்ள குடிநீர்ப் பகிர்வு முறை அமைப்பின் மூலம் வழங் கப்படும். இத்திட்டம் 1996 மார்ச் திங்களில் நிறைவுபெறும்.

ஒவ்வொரு நாளும் முன்னேற்றம்தான்!

பொருளாதார வளர்ச்சிப் பணிகளிலும் சரி; தொழில் வளர்ச்சித்
திட்டங்களிலும் சரி; தமிழகத்திற்கு இனி தேக்க நிலை எப்போதும் இருக்காது
என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி ஒவ்வொரு
நாளும் முன்னேற்றம்தான் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் கூற விரும்பு
கின்றேன்.

எத்தனைத் திட்டங்கள், எந்த அளவு செம்மையுடன் தீட்டப்பட்டாலும்,
இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில், இதன் ஜீவ நாடியாக உள்ள கிராமங்
களுக்கு, அதன் பலன் சென்றடைந்தால்தான், உண்மையான வளர்ச்சியை
நாம் அடைய முடியும் என்றார் அண்ணல் காந்தி அடிகள். அவரது வாக்கில்
நம்பிக்கை கொண்ட அரசாக, நம்முடைய அரசு திகழும் காரணத்தால் தான்,
வேறெந்த மாநில அரசும் தீட்டாத, தன்னிறைவுத் திட்டத்தைத் தீட்டிச்
செயல்படுத்தியுள்ளோம்.

நம்முடைய திட்டத்தின் பயனாக, சின்னச் சின்னக் குக் கிராமங்கள் கூட,
இன்று அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற முடிந்துள்ளது. இந்தியா
விலேயே, கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை, சிறப்பாக நிறைவேற்றியுள்ள
மாநிலம், தமிழ்நாடுதான் என்று, மைய அரசே பாராட்டியுள்ளது என்பதைச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.

ஆதிதிராவிடர் வாழ்வில் மறுமலர்ச்சி!

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன்

1991 ஜூன் திங்களில் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப் பேற்ற தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்படக் கூடிய நல்ல பல திட்டங்களைத் தீட்டி மின்னல் வேகத்தில் அத் திட்டங்களை நிறைவேற்றி தமிழக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து, இதயதெய்வத்தின் ஆட்சியின் பெருமையை வெளிக்காட்டும் வண்ணம் நடைபெற்ற இடைத் தேர்தல்கள் அனைத்திலும் எதிரி களைப் புறமுதுகிட்டோடும் வண்ணம் மக்கள் செல்வாக்கை யும் பெற்று, என்றும் எங்களின் தலைவி, என்றும் எங்களின் முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவிதான் என்பதைத் தமிழகத் திலுள்ளோர் மட்டுமல்லாது, அகில இந்தியாவே அறியும் வண்ணம் மக்கள் தங்களின் எண்ணங்களை வெளிப் படுத்தியதன் வாயிலாக மக்கள் சக்தியின் மாபெரும் சக்திதான் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

கடந்த மூன்று ஆண்டுகாலப் பொற்கால ஆட்சிக்கு மக்களால் அளிக்கப்பட்ட நற்சான்றுதான் சமீபத்தில் கிடைத்த இடைத் தேர்தல்களின் வெற்றிகள் ஆகும். சிங்கத்தை எதிர்த்து நிற்க எவருமுண்டோ இவ்வுலகில், அதுபோல் எங்கள் தலைவியின் தலைமைக்கு நிகர் எவருமில்லை என்பதைத்தான் தமிழக மக்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். இத்தகைய வெற்றிக்குக் காரணம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் மூன் றாண்டுக் காலம் அறநெறி நின்று புரிந்த செங்கோலாட்சிதான்.

எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்திடல் வேண்டும், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற உன்னத கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தீட்டிய திட்டங்கள், பலவற்றினால், பல்லாண்டுக் காலமாகச் சமுதாயத்தின் அடித்தளத்திற்குத் தள்ளப்பட்டு, வறுமையில் வாடிய ஆதிதிராவிட, ஏழை எளிய மக்கள் வாழ்வில் முன்னேற்றம் கண்டு சமுதாயத்தில் மற்றவர்களோடு சம அந்தஸ்து பெறும் அளவுக்கு அவர்தம் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தின் 5.6 கோடி மக்கள் தொகையில் ஐந்தின் ஒரு பங்கு ஆகிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க் கைத் தரம் உயரவும், அடிப்படை வசதிகளைப் பெருக்கித் தரவும் பல்வேறு நல்ல திட்டங்களைத் தீட்டி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் சிறப்புடன் செயல்படுத்தி வரு கிறது தமிழ்நாடு அரசு.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கு பல்வேறு திட்டங்கள் உருவாக்கப் பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தாலும் அம்மக்கள் வாழ்வில் சீரிய முன்னேற்றம் காண கல்வி தான் அடிப்படைத் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்து அம் மக்களின் கல்வி மேம் பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்தி அதன் மூலம் அவர்கள் பொருளாதார மேம்பாடும் சமு தாயத்தில் சம அந்தஸ்தும் பெறும் பொருட்டு இவ்வரசு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

கல்வித் துறையின் கீழ் இயங்கி வருகின்ற கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பயிலும் ஆதி

திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்க்கு இலவசக் கல்வி, உதவித்தொகை, ஊக்கப் பரிசுகள், இலவசப் பாடப்புத்த கங்கள், சீருடை போன்ற பல்வேறு வசதிகள் தொடர்ந்து வழங்கப் பட்டு வருகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள சலுகைகள் தவிர, இத்துறையில் நேரடி நிர்வாகத்தில் 1225 பள்ளிகள் மற்றும் 952 விடுதிகள் இயங்கி வருகின்றன. பள்ளி மற்றும் விடுதி மாணவ, மாணவியரின் கல்வித்தரம் உயர பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளையும் இவ்வரசு எடுத்துள்ளன.

இப்பள்ளிகளில் 2.58 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இவ்விடுதிகளில் 71,690 மாணவ, மாணவிகள் தங்கி பயின்று வருகின்றனர்.

பள்ளிகளின் நிலையை உயர்த்துதல்

ஆதி திராவிடர் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி, 1992-93-ஆம் ஆண்டில் 2 நடுநிலைப் பள்ளிகள உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. அதேபோல் 1993-94-ஆம் ஆண்டில் 13 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளி களாகவும், 3 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த் தப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவி யரின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு இந்த அரசு பலமுனைத் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது. இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரையும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் வெற்றி பெறச் செய்ய சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த மூன்றாண்டுகளாக அரசுப் பொதுத் தேர்வுக்கு இணையாக இத்துறையின் மூலம் ஒரு முன்னோடிப் பொதுத் தேர்வு நடத்தப்பட்டு விடைத் தாள்கள் மைய மதிப்பீட்டு முறையில் (Central Valuation) திருத்தப்பட்டு மாணவர்களின் திறன் ஆய்வு செய்யப்பட்டது. குறைவான மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியருக்கு அந்தந்தப் பாடங்களில் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வாராந்திரத் தேர்வுகள் நடத்தப்பட்டன. மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு "சிறப்பு வழிகாட்டிகள்" அச்சிடப்பட்டு 22,600க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்க்கு உரிய நேரத்தில் இலவசமாக வழங்கப்பட்டது.

இத்திட்டம் சராசரி மாணவனும் எளிதாகத் தேர்வுக்குத் தயார்

செய்து கொள்ளப் பெரிதும் உதவியிருக்கிறது. இதன் காரணமாக ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் தேர்வு விகிதம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

1991- 92 ஆம் ஆண்டு 10- ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் இத்துறை பள்ளிகளில் ஒட்டு மொத்த சராசரி வெற்றி விழுக்காடு 34 சதவிகிதத்திலிருந்து 57 சதவிகித மாக உயர்ந்துள்ளது. இது மேலும் உயர்ந்து 1992-93இல் 70 விழுக் காட்டினை எட்டியுள்ளது.

12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் இத்துறைப் பள்ளிகளில் ஒட்டு மொத்த சராசரி வெற்றி விழுக்காடு 1991-92-ஆம் ஆண்டில், 38 சதவிகிதத்திலிருந்து 59 சத விகிதமாக உயர்ந்தது. 1992-93-ஆம் ஆண்டில் இது 62 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களில் கல்வி அறிவைப் பெருக்கவும், இவர்களது சிந்தனைகள் செயல் பாடுகளைச் செம்மைப்படுத்தவும் பள்ளிப்பாடங்களை ஒட்டிய புத்தகங்கள் மட்டுமல்லாத அறிவு வளர்ச்சிக்கு உகந்த நூல்கள் பலவும் கொண்ட நூல் நிலையங்களை 1991-92-ஆம் ஆண்டு ரூ.12.33 இலட்சம் செலவில் இத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து மாணவ, மாணவியர் விடுதிகளிலும் இந்த அரசு அமைத்துள்ளது. புதிதாகத் திறக்கப்படும் விடுதிகள் அனைத்திலும் இந்த வசதிகள் செய்து தரப்படுகின்றன.

தங்கள் வீடுகளில் போதிய வசதியற்ற நிலையில் இருந்து கல்வி கற்று வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியருக்கு உதவும் வகையில் 1991-92- மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் கூடுதலாக 3,500 மாணவர்கள் பயன்பெறும் வகையில் மேலும் 70 புதிய விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1993-94ஆம் ஆண்டில் மேலும் 20 விடுதிகள் திறக்கப்பட்டு அவற்றின் மூலம் 1000 மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

1994-95ஆம் ஆண்டில் மேலும் 20 மாணவ, மாணவியரில்லங்கள் திறக்கப்பட உள்ளன. இதன் மூலம் 1000 மாணவ மாணவியர்கள் கூடுதலாகச் சேர்க்கப்படுவர். அவற்றுள் பெரும் பகுதி மாண வியர் விடுதிகளாக அமையும்.

அதுமட்டுமின்றி, ஏற்கெனவே இயங்கி வருகின்ற விடுதிகளில் 1991-92 , 1992-93-ஆம் மற்றும் 1993-94-ஆம் ஆண்டில் கூடுதலாக 3000 மாணவ மாணவியர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 1994-95ஆம் ஆண்டில் மேலும் 500 மாண வர்கள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ள இவ்வரசு முடிவெடுத் துள்ளது.

இத்துறையின் கீழ் இயங்கும் எல்லா மாணவ, மாணவியர் விடுதிகளுக்கும் படிப்படியாகச் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்ற சீரிய நோக்குடன்

இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு ரூ.8.30 கோடி செலவில் 34 புதிய விடுதிக் கட்டடங்கள் கட்ட உத்தரவிடப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

நடப்பு நிதியாண்டில் ரூ.3 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படவுள்ளன. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.4.70 கோடி செலவில் 27 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு 1994-95-ஆம் நிதியாண்டில் ரூ.1.73 கோடி செலவில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

கல்வித்துறையின் கீழ் இயங்கி வருகின்ற நிறுவனங்களில் பயிலும், மாணவ, மாணவியருக்கு 1991-92-ஆம் நிதியாண்டில் ரூ.14 கோடி மற்றும் 1992-93ஆம் ஆண்டில் ரூ.15.31 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1993-94ஆம் ஆண்டில் ரூ.18.07 கோடி உதவித் தொகையாக எட்டு இலட்சம் பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1990-91இல் வழங்கப்பட்டதை விட 1991-92-ஆம் ஆண்டில் ரூ.2 கோடியும் மற்றும் 1991-92-இல் வழங்கப்பட்டதை விட 1992-93-ஆம் ஆண்டில் ரூ.1.31 கோடியும் அதிகம் வழங்கப்பட்டுள்ளது. 1992-93ஆம் ஆண்டை விட 1993-94ஆம் ஆண்டில் சுமார் 3 கோடி ரூபாய் அதிகம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் எட்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

சமூக பொருளாதார முன்னேற்றம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பிற சமூகத்தினர்க்கு இணையாக அனைத்து அடிப்படை வசதிகளையும் விரைவாகப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடும், பொருளாதாரத்தில் அவர்கள் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடும் நமது முதல்வர், மாண்புமிகு

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே 10 அம்சத் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் ஓர் அம்சமாக ஐந்து ஆண்டுகளில் 3.5 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டு உதவிகளை வழங்க வேண்டும். 1991-92, 1992-93 மற்றும் 1993-94ஆம் ஆண்டில் 2.46 இலட்சம் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. 1994-95ஆம் ஆண்டில் 65,000 பேர் பயனடைவர்.

அடுத்து, ஏழை ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்களுக்கு 10,000 பாசனக் கிணறுகள் வெட்டிக் கொடுக்கவும், அக்கிணறுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கவும், எடுக்கப்பட்ட முடிவிற்கேற்ப இதுவரை 11,235 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 1000 கிணறுகள் வெட்டப்படும்.

ஆதிதிராவிடர் தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் 5 ஆயிரம் பேருக்குத் தொழில் தொடங்க நிதியுதவிகள் செய்யப்படும் என்ற இலக்கினைத் தொடர்ந்து, 1993-94ஆம் ஆண்டு வரை 3,227 பேர்கள் டிராக்டர், லாரி, டாக்சி, ஆட்டோ ரிக்ஷா உரிமையாளர்களாகவும், ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், பின்னலாடைகள் தயாரிக்கும் ஆலைகள் போன்றவற்றின் உரிமையாளர்களாகவும் இன்று உருவெடுத்துள்ளனர். 1994-95-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் 1,500 நபர்கள் பயனடைய வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மற்றும் ஐ.டி.ஐ. பயிற்சி பெற்ற ஆதிதிராவிட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து உதவும் வகையில் அவர்களுக்குக் கூடுதல் பயிற்சி அளிப்பதற்காகத் தக்க அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

மேலும், 5 ஆண்டுக் காலத்தில் 4 இலட்சம் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது இலக்கினைத் தொடர்ந்து 1993-94 முடிய 5.32 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 75,000 குடும்பங்களுக்கு இலவசமாக வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த 5 ஆண்டுக் காலத்தில் 3 இலட்சம் கான்கிரிட் வீடுகள் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு கட்டித்தர வேண்டுமென்ற முடிவிற்கேற்ப, 1993-94ஆம் ஆண்டு வரை 83,158 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் மதிப்பினை ரூ.19,200 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. 1994-95ல் 25,000 வீடுகள் கட்டித் தரப்படும்.

குடிநீர் வசதியைப் பொறுத்த வரை ஒரு குடிநீர் வசதிகள்கூட இல்லாத ஆதிதிராவிடர் குடியிருப்புகளே தமிழ்நாட்டில் ஏதும் இல்லை என்ற நிலை இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின் உருவாக்கப்பட்டுள்ளது. சென்ற 1993-94ஆம் ஆண்டில் 1,571 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. இவ்வாண்டில் 1,500 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் சென்ற 1993-94ஆம் ஆண்டில் 30,000 வீடுகளுக்கு "ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு" திட்டத்தின்கீழ் மின்விளக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு 35,000 வீடுகளுக்கு மின்விளக்கு அளிக்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு கணிப்பொறிப் பயிற்சி, ஆகாய விமானம் பராமரிப்புப் பயிற்சி, இராணுவம் மற்றும் காவல் துறையில் சேரப் பயிற்சி, தொலைபேசி, டெலக்ஸ் இயக்கப் பயிற்சி, தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி போன்ற பணிகளில் சேர இவர்களுக்கென ஒரு பயிற்சி நிலையம் இயங்கி வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தில் 60 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை இந்த நிலையத்தில் பயிற்சி பெற்ற 63 நபர்கள் இப்பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகளுக்குத் தேவையான பாதை வசதி, இடுகாடு மற்றும் இடுகாட்டிற்குச் செல்லும் பாதை வசதி போன்றவைகளும் செய்து தரப்படுகின்றன. சென்ற மூன்று ஆண்டுகளில் இதற்கு ரூ.101.68 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு நிதியாண்டில் இதற்கு ரூ.51.23 இலட்சம் செலவிடப்படும்.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் சமுதாயக் கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1991-92-இல் 4 கூடங்களும், 1992-93-இல் 3 கூடங்களும், 1993-94-இல் 3 கூடங்களும் கட்டப்பட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென ரூ.36.21 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் இத்திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் செலவிடப்படும்.

ஆதிதிராவிடர் வாழ்வு வளம்பெற, ஒளிபெற பாடுபட்ட அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவாக ஒரு நினைவு மண்டபம் சென்னையில் கட்ட இவ்வரசு ரூ.5 கோடி அனுமதியளித்துள்ளது.

பழங்குடியினர் நலம்

1991ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 5.74 இலட்சம் பழங்குடியினர் வசிக்கின்றனர்.

பழங்குடியின மக்களின் ஒட்டு மொத்தமான முன்னேற்றத்திற்கு கல்வியே அடிப்படையானது என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு இம்மக்களுக்கு 218 உண்டுறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இதில் 14,000க்கு மேற்பட்ட பழங்குடியின மாணவ, மாணவியர் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.

இவர்களின் கல்வி நிலை உயர புதிய உண்டுறைவிடப் பள்ளிகள் திறக்கும் திட்டத்தின் கீழ் 1991-92ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்தில் உள்ள குட்டையூர் மற்றும் காக்காயனூர் என்ற சிற்றூர்களிலும், 1992-93இல் அதே மாவட்டத்தில் சோழகணை என்ற சிற்றூரிலும் உண்டுறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் 150 பழங்குடியின மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

1993-94-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு உண்டுறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு மேலும் ஒரு உண்டுறைவிடப் பள்ளி திறக்கப்படும்.

போதிய வசதிகள் கூடிய பள்ளி மற்றும் இல்லக் கட்டடங்கள் கட்டும் நோக்குடன் இந்த அரசு 1991-92இல் 8 உண்டுறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.36 இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் 1991-92-இல் பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதிகளில் 8 புதிய பள்ளிகள் திறப்பதற்கு அடிப்படைத்தேவையான கட்டடங்கள் கட்ட ரூ.40 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் 7 பள்ளிகள் திறப்பதற்கு ரூ.49 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கியுள்ளது.

மாணவர் விடுதிகளுக்குத் தேவையான புதிய கட்டடங்கள் கட்டும் திட்டத்தின் கீழ் இவ்வரசு 1992-93ஆம் ஆண்டு ரூ.80.35 இலட்சம் செலவில் 4 மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கியுள்ளது.

1991-92-இல் மலை வாழ் மக்கள் முன்னேற்றத் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.15.76 கோடி ரூபாய் செலவில் பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக ஆடு வளர்ப்பு, பால் மாடுகள் வளர்ப்பு போன்ற பல மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 1992-93-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.17.11 கோடி இம்மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகச் செலவிடப்பட்டுள்ளது. 1993-94இல் இத்திட்டத்தின் கீழ் ரூ.22.48 கோடி செலவிட வகை செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ.28.33 கோடி செலவிடப்படும். சென்ற மூன்று ஆண்டுகளில் 27,591 பழங்குடியினர் குடும்பங்கள், பொருளாதார மேம்பாடடைய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு 9,000 குடும்பங்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்படும்.

இவ்வரசு பொறுப்பேற்றதும் பண்டைய பழங்குடியினர் மற்றும் சிதறி வாழும் பழங்குடியின மக்கள் வாழ்வு ஒளிபெறச் சிறப்புத்

திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இலவசமாகக் கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், பொதி சுமக்கும் மட்டக்குதிரைகள் மற்றும் உழவு மாடுகள் போன்றவை வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1992-93 வரை 1,683 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இதற்கென ரூ.81.68 இலட்சம் மட்டும் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 315 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.47.31 இலட்சம் செலவில் 315 வீடுகள் கட்டித் தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 1993-94-ஆம் ஆண்டில் ரூ.83.33 இலட்சம் செலவில் 317 பழங்குடியினக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தரவும், ரூ.32.06 செலவில் 490 குடும்பங்களுக்கு ஆடுகள், கறவை மாடுகள் வாங்கி வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இவர்களின் நலனைப் பேணிக்காக்க 1994-95ஆம் ஆண்டில் ரூ.94.26 இலட்சம் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு இவர்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்துக் கொண்டே வருகிறது. குறிப்பாக, இவர்கள் கல்வி முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் நிதி கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. இது 1990-91இல் ரூ.50.02 கோடியாக இருந்தது. இது இன்று வளர்ந்து ரூ.95.94 கோடியை எட்டியுள்ளது. இத்துறைக்கான மொத்த ஒதுக்கீட்டைப் பொருத்தவரை 1990 – 91ஆம் ஆண்டில் ரூ.87.05 கோடியாக இருந்தது. இது உயர்ந்து வளர்ந்து இந்த ஆண்டு ரூ.161.40 கோடியை எட்டியுள்ளது. இது இந்த அரசு இம்மக்கள்பால் கொண்டுள்ள அக்கறைக்குச் சான்றளிக்கும். இப்பணி தொடரும்-வளரும்.

ஏழை பெண் குழந்தைகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகை உதவி

நடப்பு ஆண்டிலிருந்து 2-ஆம் வகுப்புடன் இடையில் படிப்பை



நிறுத்திவிடும் ஏழ்மை நிலையிலுள்ள கிராமப்புற ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்கு 3ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் தேர்வு பெறும்போது ரூ.500 ஒட்டுமொத்த சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்க வகைசெய்யும் ஒரு திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டம் தேசிய அளவில் பெண்கள் கல்வி விகிதம் குறைவாக உள்ள மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை சம்புவராயர், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், தென்னார்க்காடு வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

மேலும், ஏழ்மையின் காரணமாக ஆதிதிராவிடப் பெண் குழந்தைகள் தங்கள் குடும்பத்திற்கு வருவாய் ஈட்டித்தரும் சொத்து எனப் பெற்றோர்களால் கருதப்பட்டு இக்குழந்தைகள் 5ஆம் வகுப்பிற்கு மேல் படிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையைப் போக்கி, இந்தப் பெண் குழந்தைகள் 6ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயில ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வழங்கும் ஒரு புரட்சிகரமான வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை மாநில முழுமைக்கும் செயல்படுத்தவும் நமது மாண்புமிகு முதல்வர் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் 30,000 ஏழை ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் பயனடைவர் என்றும், இதற்கு ரூ.3 கோடி செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

முப்பெரும் பொருளாதாரத் திட்டங்கள்

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், பனியன் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்துதல், இறால் வளர்ப்புப் பண்ணைகள் உருவாக்குதல், பட்டுப்புழு வளர்த்தல் ஆகிய முப்பெரும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களையும் அறிவித்துள்ளார்கள்.

அதன்படி கோவை மாவட்டம், திருப்பூர் மாவட்டம், முதலிப்பாளையத்தின் ஒரு பனியன் தொழிற்பேட்டை நிறுவும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. இங்கு ஒரு ஏக்கர் ரூ.70,000 என்ற விலையில் 95.93 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. நிலத்தைச் சமப்படுத்தவும், உட்புறச் சாலைகள் போடவும் ரூ.50,19,600 வழங்கப்பட்டுள்ளது. 7 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்கு ரூ.8.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தண்ணீர்த்தொட்டி கட்டவும், நீர் இறைக்க மோட்டார் பம்ப் அறை கட்டவும் ரூ.8.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், நல்லகவுண்டன் பாளையம் கிராமத்தில் அமையவிருக்கும் தொழிற்பேட்டைக்கு 116.04 ஏக்கர் நிலம் உடமை மற்றும் உரிமை மாற்றம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலத்தைச் சமப்படுத்தவும், உட்புறச் சாலைகள் ஏற்படுத்தவும் ரூ.74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 4 ஆழ்துளைக் கிணறுகள் எடுக்க ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் 50 சதவிகிதத்திற்கு மேல் தற்போது செய்துமுடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியப் பணிகளும் துரிதமாக முடிக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, கூடிய விரைவில் உற்பத்தியைத் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இறால் வளர்ப்புப் பண்ணைகள் சென்னை, கன்னியாகுமரி நீங்கலாக எட்டுக் கடலோர மாவட்டங்களில் 1,000 எக்டேர் பரப்பில் ஏற்படுத்தப்படும்.

இதுவரை நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் 51.34 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நபார்டு நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது. நபார்டு வரைமுறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 30,000 இறால் சினை முட்டைகளுடன் ஒரு பண்ணை அமைக்க ரூ.1.5 இலட்சம் ஆகிறது. இதற்கு தொடர்பாக NSFDC ரூ.2 கோடி நிதியுதவி அளிக்க கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்தையும் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம்

இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி நீலகிரி நீங்கலாக எஞ்சிய இருபது மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்படும். இதில் பயனடைவோர் 6,000 ஆதிதிராவிடர் நிலம் வைத்துள்ளவர்களாகவும், 4,000 ஆதிதிராவிடர் நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர்களாகவும் இருப்பர். இத்திட்டம் ஏற்கெனவே செயல்படத் தொடங்கிவிட்டது. முசுக்கொட்டை மரக்கன்றுகள் நடவும் பயனாளிக்குப் பயிற்சி அளிக்கவும் ரூ.18 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர்களுக்கு நிலம் விலைக்கு வாங்கித் தரவும், பட்டுக்கூடு சேகரித்தல், முறுக்கேற்றுதல் போன்றவற்றிற்கு மையங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்கு ரூ.14 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 3,209 நிலம் வைத்துள்ள பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பிற பொருளாதார உதவித் திட்டங்கள்

'தாட்கோ' நிறுவனம் மூலம் எண்ணற்ற பொருளாதாரக் கடன் உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சிறப்பு நடவடிக்கையாக நடப்பு ஆண்டில் தாட்கோ நிறுவனம் மூலம் மாவட்டத் தலைமையிடங்கள், நகராட்சி, பேரூராட்சி ஆகிய பகுதிகளில் 'புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா வணிக வளாகங்கள்' என்ற பெயரில் 30 வணிக வளாகங்கள் ஏற்படுத்தப்படும். ஒரு வணிக வளாகத்திற்கு 10 கடைகள் வீதம் 300 கடைகள் கட்டி ஆதிதிராவிடப் பயனாளிகளுக்கு வாடகைக்கு விடப்படும். இதற்காக ஒரு கடைக்கு ரூ.50,000 வீதம் மொத்தம் ரூ.1.50 கோடி செலவாகும்.

அதேபோல் கிராமப்புற இளைஞர்களுக்குத் தாட்கோ நிறுவனத்தின் நேரடிப்பார்வையில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி அளிக்க மாவட்டந்தோறும் 2000 சதுர அடி தளப்பரப்பில் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்படும். இப்பயிற்சி மையங்களில் பயனாளிகளுக்குத் தங்கும் இடவசதியும் செய்து கொடுக்கப்படும். ஒரு பயிற்சி மையம் ஏற்படுத்த கட்டடப் பணிக்காக ரூ.6 இலட்சமும், கருவிகள், மூலப்பொருட்கள் பயிற்சி உதவித்தொகை போன்றவற்றிற்காக ரூ.2 இலட்சமும் ஆக ரூ.8 இலட்சம் வீதம் 23 பயிற்சி மையங்கள் ஏற்படுத்த ரூ.1.84 கோடி செலவாகும். நிலமற்ற 1000 ஏழை ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.1 கோடி செலவில் நிலம் கொடுத்து, அந்நிலம் சரியாகச் சீர்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுகிறதா என்பதைத் தொண்டு நிறுவனங்கள் மூலம் உறுதி செய்து நடைமுறைப்படுத்தத்தக்க வகையில் ஒரு திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாலையோரங்களில் அமர்ந்து வெய்யில் என்றும், மழை என்றும் பாராது, காலணிகள் தைத்து விற்று தங்களது பிழைப்பை நடத்தி வருகின்ற ஏழை அருந்ததிய மக்களுக்கு 100 சதவிகித மானியத்துடன் ரூ.10,000 மதிப்பீட்டில் இலவசமாக ஒரு பணிக்கூடமும், ஒரு தோல் தைக்கும் தையல் இயந்திரமும் வழங்க வகை செய்யும் திட்டம் ஏற்கெனவே செயலில் இருந்து வருகிறது. இந்தப் பணிக்கூடங்கள் மூலம் இம்மக்கள் காலணிகள் செய்யும் பணியில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு மனநிறைவு கொள்ளும் வகையில் வருவாய் ஈட்டி வருவதைக் கண்டறிந்து, 1993-94-ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த 2,000 காலணிப் பணிக்கூடங்களை ரூ.2 கோடி செலவில் செய்து, அதற்குரிய தையல் இயந்திரங்கள் மற்றும் பிற கருவிகளுடன் இந்தக் காலணிப் பணிக்கூடங்கள் விநியோகிக்கப்படும்.

தமிழ்நாட்டில், பழங்குடி மக்கள் 13 பகுதிகளில் ஆங்காங்கே பரவலாக வசிக்கின்றனர். பழங்குடியினர் அதிகமாக வாழும் 9 இடங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் (I.T.D.P) செயல்படுத்தப்படுகின்றன.

பழங்குடியினர் உதவித் திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஆடு வளர்ப்பு மற்றும் கறவை மாடுகள் வாங்க உதவித் தொகை, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்படுகின்றன. கறவை மாடுகள் ஒன்றிற்கு ரூ.4,750 வீதம் இரண்டு மாடுகள் வாங்க 50 சதவிகிதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. கல்வராயன் மலைப் பகுதியில் வாழும் பழங்குடியினருக்கு இது 75 சதவிகித உதவியாக வழங்கப்படுகிறது. அதேபோன்று ரூ.10,000 செலவில் ஆடுகள் வாங்க 50 சதவிகித உதவித்தொகை வழங்கப்படுகிறது. கல்வராயன் மலைப்பகுதிப் பழங்குடியினருக்கு 75 சதவிகித உதவித்தொகை வழங்கப்படுகிறது.

டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு மணிமண்டபம்

பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கருக்கு நூற்றாண்டு மணிமண்டபம் கட்ட சென்னையின் மையப்பகுதியில் 5 ஏக்கர் நிலத்தையும் ஒதுக்கி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மனித நேயத்தின் மணிமகுடம்



மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்

திரு டி. ஜெயக்குமார்

மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்ற அரசுதான் மக்கள் சக்தி வாய்ந்த அரசாக அமையும். இதன் அடிப்படையில்தான் ஆசியக் கண்டத்தின் அற்புதத் தலைவியாகத் திகழும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழக மக்களின் ஒட்டுமொத்தமான அன்பையும் ஆதரவையும் பெற்று மக்கள் சக்தியாக இருந்து வருவதோடு, மக்கள் விரும்பும் மக்களாட்சியை மூன்று ஆண்டுகளாக நடத்தி மகத்தான சாதனைகளைப் புரிந்துவருகிறார். இந்த மகத்தான சாதனைகளின் உயிரோட்டமாய் அமைந்திருப்பது, இதயதெய்வத் திடம் இருக்கும் மனிதநேயம் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

மனிதநேயமும் மக்கள் சக்தியும் ஒருங்கே கொண்ட இணையற்ற தலைவியாகத் திகழும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஏழைகளின் வாழ்வில் விடிவெள்ளியாகவும், அவர்களது குடும்பத்தின் குலவிளக்காகவும் இருந்து உழைத்து வருவதால்தான் ஏழைகள் தங்கள் துயரங்களை மறந்து சிரிப்புடன் வாழ்ந்து வருகின்றனர். சமுதாயத்தில் மேடுபள்ளங்கள் இருப்பது தவிர்க்க முடியாததாக இருப்பினும், மேடுகளைப் பள்ளங்களாக்காமல், பள்ளங்களை மேடுகளாக்க வேண்டும் என்ற உன்னத எண்ணத்துடன் செயல்பட்டுவரும் சமூக நீதிகாக்கும் வீராங்கனையாகத் திகழ்ந்து வருகிறார்.

இந்திய நாட்டிலேயே பிற்பட்டவர்க்கும், மிகவும் பிற்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டோர்க்கும், உரி சலுகைகளைத் தந்து கல்வி நிறுவனங்களிலு வேலைவாய்ப்புகளிலும் 69 சதவிகித இட ஒது கிட்டைத் தொடர்ந்து செயல்படுத்திட அ நடவடிக்கைகளையும் அவ்வப்போது எடுத்து செயல்பட்டு வருவதோடு, இதற்கென தனிச்சட்டத்தை நிறைவேற்றி ஆதிதிராவிட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோ பாதுகாப்பை உறுதிபடுத்திட, இதுவரையில் எந் அரசும் சாதிக்காத அளவிற்குப் பிற்பட்ட, மிகவு பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்க அனைத்து வகையிலும் மேம்பாடு அடைய கல் ஒன்றுதான் ஆதாயம் எனக் கண்டறிந்து, இலவச கல்வியை அளித்து வருவதோடு, மாணவ மாணவிய தங்கி படிப்பதற்கேற்ப 804 விடுதிகள் இயங் வருகின்றன. மேலும் இவ்விடுதிகளில் தங்கிப் பயிலு மாணவமாணவியர்க்கு இலவச உணவு, இலவச புத்தகங்கள், இலவச் சீருடைகள் போன் சலுகைகளை அளித்து வருவதோடு, பொது றிவை வளர்த்துக்கொள்ள ஒவ்வொரு விடுதிகளிலும் சிறி நூலக வசதிகளை ஏற்படுத்தியுள்ளார். தொழில் சார்ந்த தொழிற் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

பெண்களுக்கு என்று தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி கைவினைப் பொருட்கள், ஊறுகாய், ஜாம் போன்றவற்றைத் தயாரிக்கப் பயிற் அளிக்கப்படுகின்றன. அகில இந்தியப் பணிகளுக்காகத் தனிப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுவதோடு, பெற்றோரின் வருமான வரம்பிற்கும் விலக்களிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தொழில் செய்ய

இராணுவ வீரரின் மனைவிக்கு அரசுப் பள்ளியில் வேலை!

திருமதி ஏ. விஜயலட்சுமி என்பவர் தனது கணவரான திரு. கே. அருள், இந்திய இராணுவத்தின் ஹவில்தாராகப் பணிபுரிகிறார் என்றும், அவர் இலங்கையில் இந்திய இராணுவம் மேற்கொண்ட அமைதிப்பணியிலும், பின்னர் பஞ்சாபில் தீவிர வாதிகளை அடக்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கும் போது, காயமுற்று தற்போது மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார் என்றும், தனது குடும்பத்தின் ஏழ்மை நிலையினைச் சுட்டிக் காட்டி, தான் இடைநிலை ஆசிரியர் பயிற்சித் தகுதி பெற்றுள்ள காரணத்தால், [illegible] அரசுப் பள்ளி ஏதேனும் ஒன்றில் இடைநிலை [illegible]ரியர் பணி கோரி, மாண்புமிகு தமிழக முதல்வர் [illegible]ட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர் [illegible]ருக்குக் கருணை மனு ஒன்றினை அனுப்பி வைத் [illegible]ருந்தார்.

திருமதி விஜயலட்சுமியின் கருணை மனுவினை [illegible]னிவோடு பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதல்வர் [illegible]ட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், [illegible]ருமதி விஜயலட்சுமியின் ஏழ்மை நிலையைக் [illegible]ருத்தில் கொண்டு, அவரது கோரிக்கையைச் சிறப்பு [illegible]னமாகக் கருதி, அவருக்கு அரசுப் பள்ளியில் [illegible]டைநிலை ஆசிரியர் பணி நியமனம் உடன் [illegible]ழங்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்.

[illegible]றைந்த வட்டியில் கடனுதவி அளிக்கப்படுகின்றன. [illegible]னவர்களின் நல்வாழ்விற்கெனச் சிறப்புமிக்க பொருளாதாரத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. கடலில் தொழில் செய்யும்போது எதிர்பாராதவிதமாக இறந்துவிட்டால் இறந்த மீனவ குடும்பத்துக்கு ரூ.50,000 நிவாரணத்தொகை வழங்க ஏற்பாடு செய்துள்ளார். சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், தொழில் செய்யும் மாதங்களில் மாதம் ரூ.45 வசூலிக்கப்பட்டு, தொழில் செய்யாத 4 மாதக் காலத்தில் மாதத்துக்கு ரூ.270 வழங்கப்படுகிறது.

கடல் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. மீன்பிடித் துறைமுகங்களில் அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகின்றன. வலைகள், மீன்பிடிப் படகுகள், விசைப்படகுகள் வாங்க 20 சதவிகித மானியம் வழங்கப்படுகின்றன. இதுபோன்ற ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு மீனவர்கள் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றப்பட்டுள்ளது. இதே முனைப்புடன் அனைத்துத் துறைகளிலும் மக்கள் நலங்காக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதால்தான், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியை நல்லாட்சி என்றும், சிறப்பான ஆட்சி என்றும், சான்றோர்களும், தமிழக மக்களும், அண்டை நாட்டினரும், உலக அரங்கில் முற்போக்கான நாடுகளும் புகழ்ந்து கூறுகின்றனர்.

ஆதரவற்ற நிலையில் இருந்த திராவிடப் பாரம்பரியக் குழந்தைகளுக்கு அன்னையாய் வந்து, அருள்வடிவாய் நின்று காத்திடும் தெய்வமாய்த் திகழும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், அகில இந்திய அண்ணா தி.மு.கழகத்தின் காவல் தெய்வமாகவும், கோடானுகோடி ஏழை மக்களின் நடமாடும் தெய்வமாகவும் இருந்து வருகிறார். அத்துடன் மனிதநேயம் கொண்ட ஒப்பற்ற தலைவியாகவும் துலங்குகிறார். இதனால்தான் தமிழகம் அமைதிப் பூங்காவாக மாறியதோடு, தமிழ் மண்ணின் பெருமைகளையும் திரும்பப் பெற்றுள்ளது.

கற்பூரம் தன்னைத்தானே உருக்கிக்கொண்டு எரிவதால்தான் கற்பூரதீபத்தில் தெய்வத்தையே காண முடிகிறது. மெழுகுவர்த்தி தன்னைத்தானே உருக்கிக்கொண்டு எரிவதால்தான் நிலையான ஒளிவெள்ளம் வீசுகிறது. சான்றோர்கள் தன்நலம் கருதாது தங்களைத் தாங்களே வருத்திக் கொண்டு பிறருக்காக உழைப்பதால்தான் மற்றவர்களின் வாழ்வில் ஒளி பிறக்கின்றது. பொதுவாக மனிதனைத்தவிர, உலகில் அனைத்து உயிர்களும் பிறருக்காகவே வாழ்கின்றன. மனிதகுலத்தில் ஒரு சிலர் மட்டும் தனக்காக வாழாமல் மற்றவர்களின் நல்வாழ்விற்காக வளவாழ்விற்காக வாழ்வதையே தங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுள்ளனர்.

இந்த வரிசையில் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இருந்து, தனக்காக வாழாமல் தன்னுயிருக்கு ஆபத்து இருப்பதை அறிந்தும் மக்களுக்காக, மக்கள் நலனுக்காக, அல்லும் பகலும் உழைத்து வருவதால்தான் மக்கள் சக்தி அனைத்தும் அவர் பின்னால் திரண்டு நிற்கின்றது. இந்த மாபெரும் மக்கள் சக்தியைப் பொதுத் தேர்தலிலும், அண்மையிலே நடந்துமுடிந்த இடைத்தேர்தல்களிலும் நாம் கண்டுகொண்டோம். எத்தனைத் தடைகள் வந்தாலும் அத்தடைகளைச் சந்தித்து, சமாளித்து வெற்றிபெற்று, வீரவரலாற்றைப் படைத்து வருவதோடு சமூக நீதியைக் காத்து மனித நேயத்தின் மணிமகுடமாக மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் திகழ்ந்து வருகிறார்.

வாழ்க எங்கள் புரட்சித்தலைவி! ஓங்குக அவரது புகழ்!

இந்து அறநிலையத்துறையின் இணையிலா
சாதனைகள்

மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர்
திரு. வெ. நடேசன் பால்ராஜ்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது நம் ஆன்றோர் வாக்கு. கோயில் இருந்தால் மட்டும் போதுமா? அவை சரியாக நிர்வகிக்கப் படவேண்டும்; பராமரிக்கப்பட வேண்டும் என்பதில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளார்கள். எனவே, மாநில அளவில் திருக்கோயில் நிர்வாக வாரியமும் மாவட்ட அளவில் 19 மாவட்டக் குழுக்களும் அமைத்து அறங்காவலர்களையும் நியமித்துள்ளார்கள்.

பண்டைய புராதனக் கோயில்கள் பல கவனிப்பாரற்று ஒரு கால பூஜைக்குக் கூட வழியின்றி இருந்த நிலையைக் கண்ணுற்று வருந்திய மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், அனைத்து திருக்கோயில்களிலும் நித்திய பூஜை நடைபெற வேண்டும் எனக்கருதி ரூ.25,000 வைப்பு நிதித் திட்டத்தை அறிவித்தார்கள். இதன்மூலம் 2,500 திருக்கோயில்கள் பயன்பெறவுள்ளன. ரூ.7 கோடி திட்டத்தின் கீழ் ஒரு கால பூஜைக்கு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.3,500 வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் 1,353 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

ஆலய மேம்பாட்டுத் திட்டம் ரூ.5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து ஒரு கால பூஜை நடைபெற 1991-92-இல் 547 திருக்கோயில்

களுக்கு 13.67 இலட்சமும், 1992-93-இல் 265 திருக்கோயில்களுக்கு 9.27 இலட்சமும், 1993-94-இல் 581 திருக்கோயில்களுக்கு 20.33 இலட்சமும் வழங்க மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஆலயங்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கண்ணும் கருத்துமாக உள்ளார்கள். சென்ற மூன்றாண்டுகளில் 221 திருக்கோயில்களில் திருப்பணிகள் நிறைவுபெற்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. ஆலய மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து கிராமப்புற திருக்கோயில்கள் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 1991-92-இல் 66 திருக்கோயில்களுக்கு ரூ.16.50 இலட்சமும், 1992-93-இல் 95 திருக்கோயில்களுக்கு ரூ.23.15 இலட்சமும், 1993-94இல் 88 திருக்கோயில்களுக்கு ரூ.22 இலட்சமும் வழங்க புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இப்பொழுது 2[illegible] திருக்கோயில்களுக்கு ரூ.5 கோ[illegible] செலவில் திருப்பணி செய்[illegible] ஆணைபிறப்பித்து உள்ளார்க[illegible] நெல்லை கட்டபொம்மன் மற்று[illegible] சிதம்பரனார் மாவட்டங்களி[illegible] உள்ள நவத் திருப்பதி என்[illegible] வைணவத்திருத்தலங்களில் 24[illegible] இலட்சம் செலவில் திருப்ப[illegible] செய்யவும், நவ கைலாசம் என்னு[illegible] 9 சைவத் திருக்கோயில்களி[illegible] ரூ.250 இலட்சம் செலவில் திரு[illegible] பணி செய்யவும் ஆணை பிறப்பி[illegible]துள்ளார்கள்.

திருக்கோயில்களும் அதன் சுற்றுப்புறங்களும் சுத்தமாகப் பராமரிக்கப்பட வேண்டும் என[illegible] இதயதெய்வம் டாக்டர் புரட்சி[illegible] தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத் திருக்கோயில்களில் சுத்தமாகப் பராமரிக்கப்படும் ஆலய ஊழியர்களுக்கும் கேடயம் வழங்கிப் பாராட்டலாம் என ஆணையிட்டுள்ளார்கள்.

திருக்கோயில்களில் நடைபெறும் பூஜைகளும் திருப்பணிகளும் ஆகம விதிகளுக்குட்பட்டே நடக்க வேண்டும் என ஆன்மீக மக்கள் விரும்புகிறார்கள். மக்களின் எண்ணத்தை ஈடேற்றும் பொருட்டு தமிழகத்தில் முதன்முறையாக வேதாகமக் கல்லூரி நிறுவ திருச்சி அருகே உள்ள கம்பரசன்பேட்டையில் 25 ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டு - வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அர்ச்சகர்களுக்குப் புத்தொளிப் பயிற்சித் திட்டத்திற்கு ரூ.8 இலட்சம் நிதி மாற்றம் [illegible]யப்பட்டு 10 இடங்களில் [illegible]ச்சி அளிக்க, மாண்புமிகு [illegible]தெய்வம் டாக்டர் புரட்சித் [illegible]வி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

[illegible] வாழ்ந்தால் கோடி நன்மை. [illegible] பிரார்த்தனை செய்தால் இன்னும் எத்தனையோ நன்மைகள். எனவேதான், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அனைத்துக் கோயில்களிலும் மாலையில் ஒரே நேரத்தில் [illegible]மும் "ஜெப யோகம்" என்னும் [illegible]டுப் பிரார்த்தனை செய்ய [illegible]ணையிட்டு எண்ணுபவை [illegible]லாம் உயர்வாக இருக்க வழி [illegible]துள்ளார்கள்.

[illegible]வுளே இல்லை என்று [illegible]களின் மனதில் விஷத்தை [illegible] வளர்த்து வந்தனர் சிலர். [illegible] காரணமாகக் [illegible]ல்களில் சிலைத் திருட்டும் [illegible]ம் நடந்து வந்தன. 20 [illegible]டுகளுக்கு முன்பு களவு போன புகழ் பெற்ற பத்தூர் அருள்மிகு நடராஜர் சிலை மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டு புரட்சித்தலைவியின் ஆணைப்படி ரூ.7 இலட்சம் செலவில் குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது. திருவாரூரில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு ரூ.9 இலட்சம் செலவில் குளிர் சாதன வசதியும் செய்யப்பட்டுள்ளது. 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் 3000 முன்னாள் இராணுவத்தினர் கொண்ட கோயில் பாதுகாப்புப்படை ஒன்று கடந்த மூன்று ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ளது. அதோடு 337 திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்த புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாண்டு பிப்ரவரி மாதம் சிலைத் திருட்டுகளில் ஈடுபட்டு இருந்த சோலைமலை என்பவரையும் அவனது கூட்டாளிகளையும் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இதன்மூலம் சிலைத்திருட்டுக்கள் பெருமளவு குறைந்துள்ளன.

தமிழகத்துப் பெரிய திருக்கோயில்களில் நித்திய பூஜைகளைக் கட்டளைதாரர்களைக் கொண்டே நடத்த முடியும். எனவே, ஆன்மீகப் பெருமக்களை அணுகிக் கட்டளைகளை ஏற்று நடத்தக் கோரவும், திருக்கோயில்களில் இதனால் கிடைக்கும் பிற வருமானங்களைக்கொண்டு சுற்றியுள்ள சிறிய மற்றும் வருமானமில்லாத கோயில்களைப் பராமரிக்க இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் யாத்ரிகர்களும் பக்தர்களும் மதுரை மற்றும் தஞ்சை போன்ற புராதன நகர்களிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள திருக்கோயில்களுக்கு வந்தவண்ணம் உள்ளனர். இவர்கள் வழிகாட்டிகள் என்று கூறிக்கொள்பவர்களாலும், தனியார் ஊர்தி ஓட்டுநர்களாலும் ஏமாற்றப்படுகின்றனர். எனவே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மதுரை மற்றும் தஞ்சையை மையமாகக் கொண்டு, அவற்றைச் சுற்றியுள்ள அனைத்துத் திருத்தலங்களுக்கும் ஒரே நாளில் சென்று வர சிற்றுண்டி மற்றும் கழிப்பிட வசதிகளுடன் கூடிய அழகு உலா ரதங்கள் விட ஆணையிட்டுள்ளார்கள்.

இறை பணி செய்வதுடன் இறைவனுக்குப் பணி செய்பவர்களுக்கும் நலத்திட்டங்களை இந்த அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தி வந்துள்ளது. ஓதுவார்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியத்தை ரூ.300 ஆக உயர்த்தியும், வேதபாராயணம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பாடுவோர் மற்றும் அறையர் சேவை செய்வோர்க்கும் ஓய்வுபெற்ற தகுதி வாய்ந்த அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியும் இந்த அரசு சாதனை படைத்துள்ளது.

இறையுணர்வு இருந்தால் அன்பும், பணிவும், நாட்டுப்பற்றும் தானாகவே வந்து சேரும். கடந்த மூன்று ஆண்டுகளாகத் தெய்வீக ஆட்சி நடைபெறும் காரணத்தினால், தமிழகம் இந்தத் திசையில் வீறு நடைபோடுகிறது.



இந்தியச் சுற்றுலாவில் தமிழ்நாட்டின் தனிப்பெருமை!

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர்மீரான்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் தமிழ்நாடு மேலும், மேலும் பல பெருமைகளைப் பெற்று வருகிறது. தமிழகத்தின் சுற்றுலாப் பெருமையைத் தரணிக்கே உணர்த்திடும் உன்னதப்பணியில் சுற்றுலாத் துறை சிறப்பாகப் பாடுபட்டு வருகிறது. ஆற்றல்மிகு முதல்வர் அவர்களின் தலைமையில், தமிழகத்தைச் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமியாக மாற்றும் பணி மென்மேலும் சிறப்புடன் உயர்ந்துவருகிறது.

இந்தியக் கலாச்சாரத்தின் மிகப் பழம்பெரும் ஓர் அரணாகத் தமிழகம் விளங்குகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு சிறப்புகளை வெளி மாநிலங்களுக்கும், வெளிநாட்டவருக்கும் அறிமுகப்படுத்தும் பணியில் சுற்றுலா முக்கியப் பங்கு வகிக்கிறது. காலத்தால் அழியாத கட்டடக்கலை, சிற்பங்கள், ஓவியங்கள், இயல், இசை, நாட்டியம், கைவினைப் பொருட்கள், கிராமப்புறக் கலைகள், திருவிழாக்கள் முதலானவை தமிழ்நாட்டில் பாரம்பரியங்களாகும். தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரக் கூடியவை, உயர்வும், சிறப்பும் ஒருங்கே கொண்ட பழமை வாய்ந்த கோவில்கள், அழகிய கடற்கரைகள், அமைதி தவழும் மலைவாழிடங்கள், வளம் மிக்க வனச் செல்வங்கள், வன விலங்குகள் ஆகியவையாகும்.

தமிழ்நாடு, சுற்றுலாப் பயணியர் அதிக எண்ணிக்கையில் வருகை தருகின்ற ஒரு முக்கிய மாநிலமாகும். 1992-ஆம் ஆண்டு 4.01

இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளும், 131 இலட்சம் உள் நாட்டுப் பயணிகளும் இங்கே வருகை புரிந்தனர். 1993 ஆம் ஆண்டு 4.41 இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளும், 138 இலட்சம் உள் நாட்டுப் பயணிகளும் வருகை புரிந்தனர். ஆண்டுக்கு, ஆண்டு உயர்ந்து வரும் இந்தப் புள்ளி விவரத்தை அடிப்படையாகக் கொண்டு முறையாகவும், கவனமாகவும் திட்டமிடப்பட்டுப் பணிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சுற்றுலா மையங்களுக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிக எண்ணிக்கையில் ஈர்ப்பது மிக முக்கியம்.

அதன் வழியே அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டுவதற்கு இது ஓர் சிறந்த உறுதியான வழியாகும். முறையாகவும், கவனமாகவும், சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் அங்கு நீண்ட நாட்கள் தங்கவும், அவர்கள் மீண்டும், மீண்டும் அங்கு வருகை தரவும் ஊக்கமளிப்பதாக இது இருக்கும். இதுவே மாநில அரசின் முக்கிய நோக்கமாகும்.

செல்லும் இடமெங்கும் வசதியான தங்குமிடங்கள், உணவு விடுதிகள் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுள்ள சுற்றுலாக்கள், படகுக் குழாம் இதுபோல் இன்னும் பல்வேறு வசதிகளைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வழங்குகிறது. அழகிய கடற்கரை, பிரமிப்பூட்டும் மலைத் தொடர்கள், விண்ணைமுட்டும் கோபுரங்கள், வனப்புமிக்க வன விலங்குச் சரணாலயங்கள் சென்று வர, கண்டுமகிழ வசதியான சிறப்புச் சுற்றுலாத் திட்டத்தைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அனைத்துச் சுற்றுலாப் பயணிகளும் பாராட்டும் வகையில் சிறப்பாக நடத்திவருகிறது.

தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில், தமிழகத்தின் தொன்மையான கலாச்சாரப் பெருமை, கூடுதல் சிறப்புப் பெற்றிருக்கிறது. இவருடைய சீர்மிகு ஆட்சிக் காலத்தில் 'சுற்றுலா' என்பது வளர்ச்சியும், எழுச்சியும் பெற்று சாதனைகளைக் கொண்டு விளங்குகிறது.

அனைத்துச் சலுகைகளும், மானியங்களும் இதரப் பயன்களுடன் கூடிய ஒரு தொழிலாகச் சுற்றுலாத்துறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

மாமல்லபுரம், தரங்கம்பாடி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் சிறப்புச் சுற்றுலா மையங்களாக அறிவிக்கப்பட்டு, இங்கு சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு ஊக்க வசதிகள் வழங்கப்பட உள்ளது.

தொன்மைக் கலாச்சாரப் பெருமைகொண்ட எல்லா நகரங்களும் பழம்பெரும் கலாச்சார நகரங்களாக அங்கீகரிக்கப்பட்டு, சிறப்புப் பகுதி வளர்ச்சிக் குழுமத்தின் மேற்பார்வையில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு உள்ளன.

சாகச விளையாட்டுச் சுற்றுலா (Adventure Tourism), புனல் விளையாட்டு (Water Sports), மலைவெளியில் நடைப்பயணம் (Trekking) ஆகியவற்றை மேலும் ஊக்குவித்தல்-மேம்படுத்துதல்.

கலாச்சாரச் சுற்றுலா வளர்ச்சியில் (Cultural Tourism) சிறப்புக் கவனம்.

தமிழக மக்களின் விருந்தோம்பல் பண்பை அறியச் செய்யும் வகையில் தங்கும் விருந்தினர் திட்டம் (Paying Guest Accommodation.)

மேலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென மத்திய அரசு நிதியுதவியுடன் கீழ்க்கண்ட சுற்றுலாத் திட்டங்கள் இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட உள்ளன:

இடங்கள்	அனுமதிக்கப்பட்டுள்ள தொகை (ரூபாய் இலட்சத்தில்)
பெரம்பலூரில் சுற்றுலா விடுதி	23.97
நாமக்கல்லில் சுற்றுலா விடுதி	23.25
விருதுநகரில் சுற்றுலா விடுதி	28.78
கிருஷ்ணகிரியில் சுற்றுலா வளாகம்	33.54
குற்றாலத்தில் சுற்றுலா விடுதி	30.00
சமயபுரத்தில் யாத்ரிகர் விடுதி	39.92
சேலத்தில் சுற்றுலா வளாகம்	33.21
கும்பகோணத்தில் சுற்றுலா வளாகம்	39.97
பழனியில் சுற்றுலா விடுதி	22.73
திருநெல்வேலியில் சுற்றுலா வளாகம்	39.93
தமிழகத்தில் சிறப்பு இரயிலுக்கான பெட்டிகளை நவீனப்படுத்த	48.00
முட்டுக்காடு மற்றும் பழவேற்காடு ஏரிக்கு உரிய படகுகள் வாங்குதல்	14.93

இவையெல்லாம் சுற்றுலாவின் வளர்ச்சி மற்றும் எழுச்சிமிகு சாதனைகளின் ஒரு சில துளிகள் ஆகும். வெளிநாட்டுச் சுற்றுலா முகவர்கள், திட்டமிட்ட தொகுப்புச் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த முறையில் முன்னதாகவே ஏற்பாடு செய்ய இயலும் வகையில், தமிழ்நாட்டில் பண்பாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்த, பின் வரும் விழாக்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்படுகின்றன:

குன்னூரில் தேநீர் மற்றும் சுற்றுலா விழா - சனவரி.

முக்கியச் சுற்றுலா மையங்களில் பொங்கல் விழா - சனவரி.

மாமல்லபுரத்தில் நாட்டிய விழா சனவரி, பிப்ரவரி.

சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா - பிப்ரவரி, மார்ச்.

மதுரையில் சித்திரைத் திருவிழா, சுற்றுலா கலைவிழா - ஏப்ரல், மே.

உதகை, கொடைக்கானல், ஏர்க்காடு, ஏலகிரி ஏனைய மலைவாழிடங்களில் கோடை விழா - மே.

கிருஷ்ணகிரியில் மாங்கனி விழா - ஜூன்.

குற்றாலத்தில் சாரல் விழா - ஜூலை, ஆகஸ்ட்.

முக்கியச் சுற்றுலா மையங்களில் உலகச் சுற்றுலா தின விழா - செப்டம்பர்.

இவை தவிர, வரும் கோடை காலத்தில் முதுமலையில் 'யானைகள் திருவிழா' கன்னியாகுமரியில் 'குமரிமுனைத் திரு

விழா'வும் நடத்தக் கருதப் பட்டுள்ளது.

தமிழகத்தின் 'அரண்மனை இரயில்' (Palace on Wheels)என்னும் சொகுசு இரயில் விடும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தச் சொகுசு இரயில் சென்னைக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையே முக்கியச் சுற்றுலா மையங்களான சிதம்பரம், தரங்கம்பாடி, பூம்புகார், வேளாங்கண்ணி, நாகூர், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ' மண்டபம் ஆகிய ஊர்களை உள்ளடக்கிச் செல்லும். இந்த இரயில் இந்த ஆண்டு இறுதியில் ஓடத் தொடங்கும். இவ்வகையான புதிய சுற்றுலாக் கொள்கை, இம்முக்கியமான கூறுகளைக் கருத்தில் கொண்டு இம்மாநிலத்தில் சுற்றுலா மேம்பாட்டுக்கான விரிவான முனைப்புத் திட்டங்களுக்கு வகை செய்கிறது. மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்ப, சுற்றுலா மேம்பாட்டில் தனியார் துறையையும் ஈடுபடுத்துவதற்கும், சுற்றுலா வாய்ப்புள்ள பகுதியை மேம்படுத்தும் அணுகுமுறையைப் பின்படுத்தவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் 'சுற்றுலா' வளர்ச்சியும், எழுச்சியும் பெற்று புதிய பல சாதனைகளைப் படைத்து வருகிறது என்பது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!

இதற்காகத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு மத்தியக் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஒரு சிறப்புக் கேடயம் வழங்கவுள்ளது. கடந்த 33 ஆண்டுகளாகக் கிடைக்கப் பெறாத இந்த ஏற்றமிகு சிறப்பு, புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்திற்குக் கிடைத்துள்ளது என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

பனைத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இக்கைவினைஞர்களை உயர்த்தும் பொருட்டு "தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம்" என்ற தனி வாரியம் 1994-லிருந்து அமைக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் மூன்றாண்டு ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதர் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி, விற்பனை, வேலை வாய்ப்பு அளித்தல் ஆகியவற்றில் மிகப் பெரும் சாதனை புரிந்துள்ளது.

	உற்பத்தி		மொத்தம்	விற்பனை		மொத்தம்	
ஆண்டு	கதர்	கிராமத் தொழில் பொருட்கள்		கதர்	கிராமத் தொழில் பொருட்கள்		வேலை வாய்ப்பு பெற்றுள்ளோர் இலட்சம் பேர்
	(ரூபாய் இலட்சத்தில்)						
1991-92	2280	27041	29321	2895	29565	32460	10.83
1992-93	2650	29871	32521	2834	31862	34696	11.83
1993-94	3700	33000	36700	3850	37500	41350	12.88
1994-95 (இலக்கு)	4040	34000	38040	4190	38500	42690	14.18

கடந்த மூன்று ஆண்டுகளில் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அடைந்துள்ள முன்னேற்றத்தினைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாக அறியலாம்:

புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மிக வேகமாக முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை மேற்காணும் புள்ளி விவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் மட்டும் 3,50,000 கிராமப்புற ஏழை எளிய மக்களுக்குக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய தேதியில் மொத்த வேலை வாய்ப்பு பெற்ற 12.88 இலட்சம் பேரில், மகளிர் மட்டும் 4,85,000 பேர் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் தமிழ்நாடு உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்த இடத்தையும், கிராமத் தொழில் பொருள் உற்பத்தியில் மகாராஷ்டிரம், உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது.

வாரியக் கட்டமைப்பிலும், திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றுவதிலும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலத்தையும் விட முன்னணி வகிக்கிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

219381

கோ-ஆப்டெக்ஸ்

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

கைவினைப்பொருட்கள், கதர்த் துறையின் மூன்றாண்டுச் சாதனை



மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திரு பி. ஈஸ்வரமூர்த்தி

துறைதோறும் துறைதோறும் சாதனைச் சரித்திரம் படைத்து வருவது, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சி. கடந்த 3 ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் பற்பல. அந்த வகையில் கதர் கிராமத் தொழில் வாரியத்தில் ஏற்படுத்தப்பட்ட சாதனைகள் வருமாறு:

* வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல்,
* உள்ளூரிலேயே கிடைக்கும் வசதிகளைப் பயன் படுத்தி விற்பனை செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்,
* மக்களிடத்தில் தற்சார்பு நிலையை ஏற்படுத்தி சமுதாய விழிப்புணர்வை வளர்த்தல்.

ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்பட்டு வருகிறது. கிராமத் தொழில்களாக;

1. கனிமப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்;
2. வனப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்;
3. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்; உணவுப் பொருள் தயாரிப்புத் தொழில்கள்;
4. பாலிமல் மற்றும் இரசாயனத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள்;
5. பொறியியல் மற்றும் மரபு சாரா எரிசக்தி;
6. துணித் தொழில்;
7. சேவைத் தொழில்கள்;

ஆகியவை அறிவிக்கப்பட்டு வாரியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன.

தற்போது 10,000 மக்கள் தொகை கொண்ட பகுதியில் வாழ்கின்ற கைவினைஞர் ஒருவர் ரூ.15,000 வரை முதலீடு செய்து மின் சக்தியைப் பயன்படுத்தி அல்லது பயன்படுத்தாமல், தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கலாம். இக்கிராமத் தொழில்கள் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் வரம்புக்குள் வரும்.

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்ட 96 கிராமத் தொழில்களில், 59 கிராமத் தொழில்களையும் மற்றும் கதர் தொழில்களையும் மூன்று பிரிவாக வகைப்படுத்தி பின்வருமாறு வாரியம் செயல்படுத்துகிறது:

வாரியத்தின் சொந்தத் தொழில் பிரிவுகள் - 1284.

வாரியம் பதிவு செய்த தொழில் கூட்டுறவு அமைப்புகள் - 1876.

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளிக்கும் உதவி போன்று நிதியுதவி அளிக்கப்பெற்ற கைவினைஞர்கள் - 82,045.

1994-95-ஆம் ஆண்டில் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.340.00 மற்றும் ரூ.385.00 கோடிக்கு உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் வாரியம் 1.20 இலட்சம் நபர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டு முழுநேரப் பருவகாலப் பகுதிநேர வேலை வாய்ப்பினை 1.30 இலட்சம் நபர்களுக்கு வழங்கிட வாரியம் திட்டமிட்டுள்ளது.

1994-95ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின்கீழ் பின்வரும் இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப் படவுள்ளன:

	ரூபாய் இலட்சத்தில்	பயனீட்டாளர்கள் எண்ணிக்கை
1. 500 கதர் நெசவாளர்களுக்கு நவீன தறிகள் வழங்குதல்	7.50	500
2. 300 பட்டு கதர் நெசவாளர்களுக்கு ஜாக்குவார்ட் பெட்டிகள் வழங்குதல்	3.60	300
மொத்தம்	11.10	800

கதர்த் திட்டங்கள், உண்ணா எண்ணெய், சோப்புத் தொழில் ஆகியவை வாரியத்தின் தொழில் அலகுகள் மூலம் செயல்படுத்தபடுகின்றன. பனைவெல்லம், பனங்கற்கண்டு, பழுப்புச் சர்க்கரை, பருப்பு மற்றும் தானிய வகைகள், தும்பு, சுண்ணாம்பு, பிரம்பு, மூங்கில் ஆகிய தொழில்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனியார் மூலமாகச் செயல்படுத்தப் படுகின்றன. ஏனைய அனைத்துத் தொழில்களும் வாரியத்தின் தொழில் அலகுகள், தொழிற் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனியார் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் (1991-92-லிருந்து 1993-94-முடிய) இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 3,50,000 (1,40,000) பெண்கள் உட்பட கிராமப்புற ஏழை எளிய மக்களுக்குக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய தேதியில் மொத்த வேலை வாய்ப்பு பெற்ற 12,88,000 பேரில் மகளிர் மட்டும் 4,85,000 பேர் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

வாரியக் கட்டமைப்பிலும், திட்டங்களை செம்மையாக நிறைவேற்றுவதிலும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலத்தையும் விட முன்னணி வகிக்கிறது. இந்த வகையில் இந்தியாவிலுள்ள கதர் கிராமத் தொழில் வாரியங்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மட்டும்தான் 'ஏ' கிரேடு பெற்று முதல் இடத்தை வகிக்கிறது என மத்திய அரசின் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஆய்வு செய்து, தேர்வு செய்து அறிவித்துள்ளது. வேறு எந்த மாநிலமும் 'ஏ' கிரேடு பெறவில்லை.



தமிழ்நாடு
மற்றும் வரலாற்று